
சங்க
இலக்கியம்

டாக்டர் இ. சுந்தரமூர்த்தி
எம்.ஏ., பிஎச்.டி., டிப்.மானிடவியல்
தமிழ்த்துறை
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை 600005

சங்க இலக்கியம்

Dr. E. SUNDARAMOORTHY
M.A., Ph.D., Dip.Anthrop.,
Dept. of Tamil
University Annexe
Marina Madras 600005

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

பாகனேரி த. வை. ஒ. தமிழ்ச்சங்க வெளியீடு: 23.2.76.

எட்டுத்தொகையுள்

ஒன்றாகிய

அகநானூறு

டாக்டர் இ. சுந்தரமூர்த்தி..
எம்.ஏ.,பிஎச்.டி.,டிப்.மானிடவியல்.,
தமிழ்த்துறை
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை 600005

நாவலர் திரு ந மு வேங்கடசாமி நாட்டார்
கரந்தைக் கவியரசு ரா வேங்கடாசலம் பிள்ளை
இவர்களால் எழுதப்பெற்ற

பதவுரை விளக்கவுரைகளுடன்

☆

பாகனேரி
வெ பெரி பழ மு காசிவிசுவநாதன் செட்டியார்
அவர்களால் வெளியிடப்பெற்றது

☆

கிடைக்குமிடம்:
திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி-6. :: சென்னை-1
1968

© பாகனேரி தனவைசிய இளைஞர் சங்கம்

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
PUBLISHING SOCIETY, TINNEVELLY, LIMITED.

Reprints: 1961; Feb 1965;
March 1968

O31,1B7
K8

Appar Achakam, Madras-1.

உள்ளுறை

	பக்கம்
களிற்றியானை நிரை	௧—௨௮௦
மணிமிடை பவளம்	௧—௫௪௮
நித்திலக் கோவை	௧—௨௨௯

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible] [illegible]

[illegible] [illegible]

[illegible] [illegible]

பாகனேரி த. வை. இளைஞர் தமிழ்ச்சங்க வெளியீடு - கக

எட்டுத் தொகையுள்

ஒன்றாகிய

அகநானூறு

களிற்றியானை நிரை

திரு நாவலர், ந. மு. வேங்கடசாமி நாட்டார்,
கரந்தைக் கவியரசு, ரா. வேங்கடாசலம்பிள்ளை
இவர்களால் எழுதப்பெற்ற

பதவுரை விளக்கவுரைகளுடன்

பாகனேரி
வெ. பெரி. பழ. மு. காசிவிசுவநாதன் செட்டியார்
அவர்களால் வெளியிடப்பெற்றது.

கிடைக்குமிடம் :

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்
திருநெல்வேலி - 6. 1968 சென்னை-1.

© 1968 வெ பெரி பழ மு காசிவிசுவநாதன் செட்டியார்

Ed I Oct 1945
Reprints: Nov 1947;
Mar 1954; Sep 1957; Dec 1962; Feb 1968.

O 31, 1B7
K8

AHANANURU

Appar Achakam, Madras-1.

பாகனேரித் தமிழ்ப் புரவலர்

வெ. பெரி. பழ. மு. காசிவிசுவநாதன் செட்டியார்

பதிப்புரை

அகத்தே நிகழும் இன்பம் 'அகப்பொருள்' எனப்படும். அகப் பொருள் நூல்கள் தமிழிற் பல உள்ளன. ஆயினும், 'அகம்' என்றே பெயரமைந்த பழைய இலக்கியநூல் இப்போது ஒன்றே உள்ளது. அதுதான் 'அகநானூறு' என்பது.

கடைச்சங்க காலத்தின் எட்டுத்தொகை நூல்களுள் அகநானூறும் ஒன்று. நானூறு அகவற் பாட்டுக்களால் ஆனது; புலவர் பலரால் இயற்றப்பட்டு, மதுரை உப்பூரிகுடிகிழார் மகனார் உருத்திரசன்மரால் தொகுக்கப்பட்டது.

அகநானூறு மூன்று பகுதிகளாக உள்ளது. முதல் நூற்றிருபது பாட்டுக்கள் 'களிற்றியானை நிரை' எனப்படும். அடுத்த நூற்றெண்பது பாட்டுக்கள் 'மணிமிடை பவளம்' எனப்படும். கடைசி நூறு பாட்டுக்கள் 'நித்திலக் கோவை' எனப்படும்.

இந் நூலுக்குப் பழைய உரை ஒன்று உண்டு. அது, முதல் ௯0 - பாட்டுகட்கு மட்டும் குறிப்புரையாக இருக்கின்றது. அடுத்து ௭0 - பாட்டுகட்கு அகநானூற்றின் முதற் பதிப்பாசிரியரான திரு. வே. இராசகோபால ஐயங்கார் உரை எழுதியிருக்கின்றார். ஆதலால் நூல் முழுமைக்கும் ஒரே வகையாகத் தெள்ளிய உரையொன்று எழுதி வெளிவரவேண்டிய இன்றியமையாமை இந் நூலுக்கு நெடுங்காலமாக இருந்து வந்தது.

அக் குறையினை நீக்கும்பொருட்டு, இப்போது தஞ்சை நாவலர் திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்களும், கரந்தைக் கவியரசு, ரா. வேங்கடாசலம் பிள்ளையவர்களும் சேர்ந்து இந்நூல் முழுமைக்கும் உரையெழுதி வருகின்றனர். நூலும் விரைந்து அச்சாகி வருகின்றது.

செய்யுட்களைப் பதம் பிரித்து, முதலில் தெளிவாகத் தலைப்புக் கொடுத்துப், பின்பு பொருள் செல்லும் நெறிக்கு ஏற்ப முறைப் படுத்திப் பதவுரை கண்டு அதன்மேல் முடிபும் விளக்கவுரையும் எழுதி உள்ளுறை புலப்படுத்தி, மேற்கோள் இடங்களை விளக்கி, உரிய அடிக்குறிப்புக்களுடன் இவ்வுரை தெளிந்து செல்கின்றது.

பல்கலைக் கழகத்தின் 'வித்துவான்' தேர்வுக்கு இந்நூலின் 'களிற்றியானை நிரை' என்னும் முதற் பகுதி பாடமாக இருத்தலின் இப்போது அதுமட்டும் உரையுடன் ஒரு தனிப்புத்தகமாக வெளியிடப் பெறுகின்றது. இறுதியிற், பாட்டு முதற்குறிப்பும், புலவர்கள் பெயர் வரிசையும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மாணவர் பயன்படுத்திக்கொள்வாராக. அகநானூறு முழுப் புத்தகமாக வெளிவரும்போது நூல் வரலாறு, உரை வரலாறு, அரும்பொருட் குறிப்பு முதலிய பிற குறிப்புக்களும் சேர்க்கப்பெறும்.

திருவள்ளுவர் யாண்டு
௧௯௭௬ ஐப்பசி
25-10-1945

மு. காசிவிசுவநாதன்.

மூன்றும் பதிப்புரை

" இன்பம்அக மாகும்இஃ தின்றேல் பொருளறமும்
மன்பதைக்கிங் கெய்தா மதி."

முன்குறித்தபடி களிற்றியானைநிரை, மணிமிடை பவளம், நித்திலக் கோவை ஆகிய மூன்றும் தஞ்சை நாவலர், திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்களும் கரந்தைக் கவியரசு, ரா. வேங்கடாசலம் பிள்ளையவர் களும் சேர்ந்து எழுதி உதவிய உரையுடன் தனித்தனிப் புத்தகமாக வெளிவந்துள்ளன.

இப்பொழுது அம் மூன்றனுள் ஒன்ருகிய இக் களிற்றியானை நிரை மூன்ரும் பதிப்பாக வெளிவருகின்றது. விரைவில் நூல் முழுமை யும் ஒரே புத்தகமாக வெளிவரும். அப்பொழுது, நூல் வரலாறு உரை வரலாறு அரும்பொருட் குறிப்பு முதலியன சேர்க்கப்பெறும்.

திருவள்ளுவர் யாண்டு கக௮கு
பங்குனி ௭-ஆம் நாள்
20-3-54

மு. காசிவிசுவநாதன்.

அகநானூறு களிற்றியானை நிரை

பாட்டு முதற்குறிப்பு அகரவரிசை

பாட்டு	பக்க எண்
அகலறை மலர்ந்த	௨௪௪
அணங்குடை நெடுவரை	௫௯
அம்மவாழி	௨௩௯
அயத்துவளர் பைஞ்சாய்	௧௪௮
அரக்கத்தன்ன	௪௧
அரிபெய் சிலம்பி	௨0
அருளன்றாக	௧௭௮
அரையுற்றமைந்த	௨௩௪
அழியாவிழவின்	௨௯௯
அழிவில் உள்ளம்	௧௧௫
அளிநிலைபொருஅ	௧௭
அறியாய்வாழி	௧௨௯
அன்றவண் ஒழிந்த	௫௨
அன்னாய்...நம்படப்பை	௧௯௨
அன்னாய்...நின்மகள்	௧௧௭
அன்னை அறியினும்	௨௫௪
ஆடமைக்குயின்ற	௧௯௩
ஆய்நலந்தொலைந்த	௧௧௫
ஆள்வழக்கற்ற	௧௨௫
இம்மையுலகத்	௧௫௬
இருங்கழிமுதலை	௧0
இருள்கிழிப்பதுபோல்	௧௭௨
இன்னிசை உருமொடு	௧௪0
ஈயற்புற்றத்	௨௬
ஈன்றுபுறந்தந்த	௮௮
உழுந்து தலைப்பெய்த	௨00
உளைமான் துப்பின்	௨௩௮
உள்ளாங்குவத்தல்	௨௫௭
உன்னங்கொள்கை	௧௫௪
எம்வெங்காமம்	௪௩
எரியகைந்தன்ன தாமரைப் பழனத்து	௨௪௬
எரியகைந்தன்ன தாமரை யிடையிடை	௨௬௧
ஒழித்தது பழித்த	௯௮
கடல்பாடவிந்து	௧௨௨
கடல் முகந்து கொண்ட	௧0௬
கள்ளியங்காட்ட	௨௨௯
களையும் இடனால்	௫௨
கறங்குவெள் அருவி	௨௭௩
காய்ந்து செலற்கனலி	௧௩௩
கார்விரிகொன்றை	௧
கானல் மாலை	௧0௧
கிளியும் பந்தும்	௧௨0
கூன்முள்முள்ளிக்	௯௮
கூனல் எண்கின்	௨௫௧
கேள்கேடுன்றவும்	௨௧௬
கேளாய் எல்லதோழி	௨௯௫
கேளாய்வாழியோ	௧௫0
கொடுந்தாள்முதலை	௧௮௯
கொடுந்திமிற்பரதவர்	௧௯௭
கொடுவரி இரும்புலி	௭௧
கொல்வினைப்பொலிந்த	௨௯
கோழிலைவாழை	௭
சிறுகரும்பிடவின்	௮௯
சிறுபைந்தூவி	௧௩௭
சேற்றுநிலைமுனைஇய	௧௧௨
தண்கயத் தமன்ற	௧௪௨
தன்கடற் பிறந்த	௩௮
தீந்தயிர் கடைந்த	௨0௫
தெறுகதிர் ஞாயிறு	௨0௮
தேம்படுசிமய	௨௧௧
தொடங்குவினை தவிரா	௭௫
தோட்பதன் அமைத்த	௧௮௮
நகையாகின்றே	௧௩௫
நறவுண்மண்டை	௨௨௩
நன்றல்காலையும்	௨௯௨
நன்னுதல்பசப்பவும் ஆன்வி	௧௮௩
நன்னுதல்பசப்பவும் பெருந் தோள்	௧௧௯
நனந்தலைக்கானத்	௧௮௫
நாயுடைமுதுநீர்	௪௫
நாளுலா எழுந்த	௧௯௧
நிழலறுநனந்தலை	௨௪0
நிறைந்தோர்த் தேரும்	௧௯௧
நீசெலவயர	௨௪௭
நீர்நிறம்கரப்ப	௫௪
நுதலுந்தோளும்	௨௭௫

பாட்டு	பக்க எண்
நெடுங்கயிறு	௭௮
நெடுங்கரை	௬௬
நெடுமலையடுக்கம்	௨௧௪
நெடுவேள்மார்பின்	௨௭௭
நெருநல் எல்லை	௮௧
நெருப்பெனச்சிவந்த	௮௦
நோற்றோர்மன்ற	௧௪௯
பகுவாய்வராஅல்	௧௦
பல்விதழ்மென்மலர்	௨௫௨
பனிவரைநிவந்த	௨௨௮
பின்னொடுமுடித்த	௧௭௪
புணர்ந்தோர்புன்கண்	௨௫௦
பெருங்கடற்பரப்பில்	௧௪௪
பெருநீர் அழுவத்	௫௪
பைபயப்பசந்தன்று	௨௨௧
மண்கண்குளிர்ப்ப	௬௨
மண்கனைமுழவொடு	௧௮௧
மழைபெயற்கலித்த	௧௦௪
மலைமிசைக்குலைஇய	௧௯௭
மறந்தவண் அமையார்	௯௩
மனையிள நொச்சி	௫௬
முதைச்சுவல்	௨௦௬
முல்லைவைந்நுனை	௧௩

பாட்டு	பக்க எண்
முலைமுகஞ்செய்தன	௨௨
மூத்தோரன்ன	௨௧௦
மெய்யில்தீரா	௭௩
மௌவலொடுமலர்ந்த	௨௭௧
யாயே கண்ணினும்	௩௬
யானெவன் செய்கோ	௧௬௦
வண்டுபடத்ததைந்த	௫
வந்துவினை முடித்தனன்	௧௦௮
வலஞ்சுரிமரா அத்து	௧௯௫
வலந்தவள்ளி	௧௨௬
வளங்கெழுதிருநகர்	௪௮
வாடல் உழிஞ்சில்	௧௧௦
வாள்வரிவயமான்	௨௩௨
வான்கடற்பரப்பில்	௩௨
வானம்ஊர்ந்த	௩௪
விரியிணர்வேங்கை	௯௫
விருந்தின்மன்னர்	௧௩௧
விளங்குபகல் உதவிய	௨௧௨
வினை நன்றாதல்	௮௪
வினை வலம்படுத்த	௧௭௬
வேந்துவினை முடித்த	௨௪௨
வேளாப்பார்ப்பான்	௬௪
வைகுபுலர்விடியல்	௧௦௩

ஆசிரியர் பெயர்

அகரவரிசை

(எண் - செய்யுளெண்)

அந்தி யிளங்கீரனார்	71
அம்மூவனார்	10
அள்ளூர் நன்முல்லையார்	46
ஆலம்பேரிச் சாத்தனார்	47, 81
ஆர்க்காடு கிழார் மகனார் வெள்ளைக் கண்ணத்தனார்	64
ஆலங்குடி வங்கனார்	106
ஆலூர் மூலங்கிழார்	24
ஈழத்துப் பூதன் தேவனார்	82
உமட்டூர்கிழார் மகனார் பரங்கொற்றனார்	69
உலோச்சனார்	20, 100
ஊட்டியார்	63
எயினந்தை மகனார் இளங்கீரனார்	3
எருமை வெளியனார்	73
எருமை வெளியனார் மகனார் கடலனார்	72
ஒக்கூர் மாசாத்தனார்	14
ஓரோடோகத்துக் கந்தரத்தனார்	23, 95
ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன்	25
ஔவையார்	10
கடுந்தொடைக் காவினார்	109
கபிலர்	2, 12, 18, 42, 82, 118
கயமனார்	7, 17
கருவூர்க் கண்ணம்புல்லனார்	63
கருவூர்ப் பூதஞ் சேந்தனார்	50
கல்லாடனார்	9, 83, 113
காட்டூர் கிழார் மகனார் கண்ணனார்	85
காவன்முல்லைப் பூதரத்தனார்	21
காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக் கண்ணனார்	107
காவிரிப்பூம்பட்டினத்துச் செங்கண்ணனார்	103
குன்றியனார்	40, 41
குடவாயிற் கீரத்தனார்	35, 44, 60, 79, 119
குறுங்குடி மருதனார்	4
சாகலாசனார்	16
சீத்தலைச் சாத்தனார்	53
செல்லூர்க் கோசிகன் கண்ணனார்	66
தங்கால் முடக்கொற்றனார்	48
தங்காற் பொற்கொல்லனார்	108
தாயங் கண்ணனார்	105
நக்கீரனார்	57, 120
நக்கீரனார் (கணக்காயனார் மகனார் நக்கீரனார்)	93
நக்கீரனார் (மதுரை நக்கீரர்)	36, 78
நல்லாவூர் கிழார்	86
நல்வெள்ளியார்	32
நன்பலூர்ச் சிறுமேதாவியார்	94
நெய்தற் சாய்த்துய்த்த ஆவூர் கிழார்	112
நொச்சி நியமங்கிழார்	52
நோய்பாடியார்	67
பரணர்	6, 62, 76, 116
பாண்டியன் அறிவுடை நம்பி	28
பாண்டியன் கானப் பேரெயில் தந்த உக்கிரப் பெருவழுதி	26
பாலைபாடிய பெருங் கடுங்கோ	5, 98, 111
பெருங்குன்றூர் கிழார்	8
பெருந்தலைச் சாத்தனார்	13
பெருந்தேவனார்	51
பொருந்தில் இளங்கீரனார்	19
போந்தைப் பசலையார்	110
மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார்	33
மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்	56
மதுரை இளம்பாலாசிரியன் சேந்தங் கூத்தன்	102
மதுரை எழுத்தாளன்	84
மதுரைக் கணக்காயனார்	27

மதுரைக் கவுணியன் பூதத்தனார் 74
மதுரைக் காஞ்சிப் புலவர் 83
மதுரைச் செங்கண்ணனார் 39
மதுரைத் தமிழ்க் கூத்தனார் கடுவன் மள்ளனார் 70
மதுரைப் பண்ட வாணிகன் இளந்தேவனார் 58
மதுரைப் பாலாசிரியர் நற்றாமனார் 92
மதுரைப் பேராலவாயர் 87
மதுரைப் போத்தனார் 75
மதுரை மருத னிளநாகனார் 34, 59, 77, 90, 104
மதுரை யாசிரியர் நல்லந்துவனார் 43
மருங்கூர் கிழார் பெருங்கண்ணனார் 80
மருதம்பாடிய இளங்கடுங்கோ 96
மாமூலனார் 1, 15, 31, 55, 61, 65, 91, 97, 101, 115
மாற்றூர் கிழார் மகனார் கொற்றங் கொற்றனார் 54
முடங்கிக் கிடந்த நெடுஞ்சேரலாதன் 30
வடம வண்ணக்கன் பேரி சாத்தனார் 38
வண்ணப்புறக் கந்தரத்தனார் 49
விற்றூற்று மூதெயினனார் 37
வெள்ளாடியனார் 29
வெள்ளி வீதியார் 45
வெறிபாடிய காமக் கண்ணியார் 22, 98
.... 114
.... 117

அகநானூறு

மூலமும் உரையும்

கடவுள் வாழ்த்து

கார்விரி கொன்றைப் பொன்னேர் புதுமலர்த்
தாரன் மாலையன் மலைந்த[1] கண்ணியன்
மார்பி னஃதே மையில் நுண்ஞாண்
நுதல திமையா நாட்டம் இகலட்டுக்
கையது கணிச்சியொடு மழுவே மூவாய்
வேலும் உண்டத் தோலா தோற்கே
ஊர்ந்த தேறே சேர்ந்தோள் உமையே
செவ்வா னன்ன மேனி அவ்வான்
இலங்குபிறை அன்ன விலங்குவால் வையெயிற்
றெரியகைந் தன்ன அவிர்ந்துவிளங்கு புரிசடை
முதிராத் திங்களொடு சுடருஞ் சென்னி
மூவா அமரரும் முனிவரும் பிறரும்
யாவரும் அறியாத் தொன்முறை மரபின்
வரிகிளர் வயமான் உரிவை தைஇய
யாழ்கெழு மணிமிடற் றந்தணன்
தாவில் தாள்நிழல் தவிர்ந்தன்றால் உலகே.

—பாரதம் பாடிய பெருந்தேவனார்.

(சொற்பொருள்) ௮—௧௫. செவ்வான் அன்ன மேனி - சிவந்த வானை யொத்த திருமேனியினையும், அ வான் இலங்கு பிறை அன்ன விலங்கு வால் வை எயிற்று - அவ்வானில் விளங்கும் பிறையை யொத்த வளைந்த வெள்ளிய கூரிய எயிற்றினையும், எரி அகைந்தன்ன அவிர்ந்து விளங்கு புரிசடை முதிராத் திங்களொடு சுடரும் சென்னி - நெருப்புக் கப்புவிட் டெரிந்தா லொத்த விட்டு விளங்கும் முறுக்குண்ட சடை இளம்பிறையுடன் ஒளிரும் சென்னியினையுமுடைய, மூவா அமரரும் முனிவரும் பிறரும் யாவரும் அறியா - மூப்புறாத தேவரும் முனிவரும் ஏனோரும் ஆகிய யாவரும் அறியாத, தொல்முறை மரபின் -

---

(பாடம்) 1. ததைந்த.

பழைமையாகிய தன்மையையுடைய, வரிகிளர்வயமான் உரிவை தைஇய-கோடுகள் விளங்கும் வலிய புலியின் தோலை யுடுத்த, யாழ் கெழு மணி மிடற்று - மறையிசை பொருந்திய நீலமணிபோலும் திருமிடற்றனை யுடைய, அந்தணன் - அந்தணனாகிய சிவபிரான் ;

௧—௨. கார்விரி கொன்றைப் பொன் நேர் புதுமலர் - கார்காலத்தில் விரியும் பொன்னை யொத்த கொன்றையின் புதிய மலர்களாலாய, தாரன் மாலையன் மலைந்த கண்ணியன் - தாரினை யுடையன் மாலையினை யுடையன் சூடிய கண்ணியை யுடையன் ;

௩—௭. மார்பினஃதே மைஇல் நுண்ஞாண் - அவன் மார்பின் கண்ணது குற்றமற்ற நுண்ணிய பூணூலாகும், நுதலது இமையா நாட்டம்-அவன் நெற்றியினிடத்தது இமைத்தலில்லாத கண், கையது இகல் அட்டு கணிச்சியொடு மழு-கையினிடத்தது பகைவரைக்கொன்று குந்தாலியுடன் விளங்கும் மழுப்படை, அ தோலாதோற்கு - அந்தத் தோல்வி இல்லாதாற்கு, மூவாய் வேலும் உண்டு - மூன்று தலையினை யுடைய சூலப்படையும் உண்டு, ஊர்ந்தது ஏறு - அவன் ஏறி நடாத்தியது ஆனேறு, சேர்ந்தோள் உமையே - அவனது ஒரு கூற்றில் உறைபவள் உமை யாவள் ;

௧௪. தா இல் தாள் நிழல்-(அன்ன தன்மையனாகிய இறைவனது) அழிதலில்லாத திருவடி நிழலில், உலகு தவிர்ந்தன்று - உலகம் தங்கிற்று (ஆகலின் உலகிற்கு இடையூறில்லை என்க).

(முடிபு) மணிமிடற்று அந்தணன் தாரன் மாலையன் கண்ணியன் ; அவன் மார்பினஃது ஞாண், நுதலது நாட்டம், கையது மழு ; அவற்கு வேலு முண்டு ; அவன் ஊர்ந்தது ஏறு; அவனைச் சேர்ந்தோள் உமை; அவன் தாள் நிழல் உலகம் தவிர்ந்தன்று.

மேனியினையும் எயிற்றையும் சென்னியையும் உடைய அந்தணன் எனவும், தொன்முறை மரபின் அந்தணன் எனவும், உரிவை தைஇய அந்தணன் எனவும், மிடற்று அந்தணன் எனவும் தனித்தனி கூட்டுக.

(விளக்கவுரை) யாழ் என்றது ஆகுபெயரால் மறையிசையைக் குறிக்கும் ; அன்றி யாழிசையுடன் பாடும் மிடற்றினையுடையன் என்னலுமாம் ; [1]"எம்மிறை நல் வீணை வாசிக்குமே" என்றார் திருநாவுக்கரையரும். தாரன் முதலியவற்றில், தாரும் கண்ணியும் சிறப்பியல்பாக முறையே மார்பிலும் சென்னியிலும் அணிவன ; மாலை அழகிற்கு மார்பில் அணிவது. பொன் ஏர் எனப் பிரித்தலுமாம். மார்பினஃது: ஆய்தம் விரித்தல். கணிச்சியொடு விளங்கும் மழு வென்க. தவிர்தல் - தங்குதல். மேனி முதலியவற்றைக் கூறினார், அவ்வுருவைத் தியானம் பண்ணுக என்றற்கு.

(மேற்கோள்) "இசை திரிந் திசைப்பினும்"[2] என்னும் சூத்திர வுரையில், 'சொல்லொடு சொல் தொடர்புபடும் வாய்பாட்டாற் செறுட

---

1. திருநாவுக். தேவாரம். 2. தொல். பொருளியல்: ௧.

ராது பிறிதொரு வாய்பாட்டாற்றொடுப்பினும் பொருட்டொடர்பு உண்டாயிற் பொருள் இயையும் வழி அசைச்சொற்கள் திரியாது நின்ற நிலையே பொருள்படும்' என்று கூறி அதற்கு இச் செய்யுளை எடுத்துக் காட்டி, 'இதற்குக் கொன்றையா லமைந்த தாரினனாய் மாலையனாய கண்ணியனாய் நுண்ஞாண் மார்பினனாய் இமையா நாட்டத்து நுதலினனாய்க் கணிச்சி மழுவு மூவாய்வேலும் ஏந்திய கையினனாய் யாவர்க்குந் தோலா தோனுமாய் ஏற்றினையு மூர்ந்து உமையாளையுஞ் சேர்ந்த செவ்வானன்ன மேனியையும் பிறைபோன்ற எயிற்றினையும் எரி போன்ற சடையினையும் திங்களொடு சுடருஞ் சென்னியையு முடையனாய் மூவா அமரர் முதலிய யாவருமறியாத் தொன்முறை மரபினனாய்ப் புலியதளையுமுடுத்த, யாழ்கெழு மணிமிடற் றந்தணனது சிவானுபூதியிற் பேருலகம் தங்கிற்று எனப் பொருள் உரைக்குங் காலத்து அதன் கண் இடைக்கிடந்த சொற்கள் முன்னொடு பின் வாய்பாடுகள் சேராவன்றே; அவ்வழி அவ்வாய்பாட்டாற் போந்த பொருளுரைப்பச் சேர்ந்தவாறும் இசைதிரிந் திசைத்தவாறும் அவை தத்தம் நிலையிற் குலையாமை நின்று பொருள்பட்டவாறுங் கண்டு கொள்க,' என்றுரைத்தனர், இளம்பூரணர். 'வாழ்த்தியல் வகையே நாற்பாற்கு முரித்தே'[1] என்னும் சூத்திரவுரையில், இச்செய்யுளை எடுத்துக் காட்டி, இஃது உலகிற்குப் பயன்பட வாழ்த்தியது என்றார், பேராசிரியர்.

---

1. தொல். செய்யு: ௧௦௧.

[illegible]

முதலாவது

களிற்றியானை நிரை

1. பாலை

[பிரிவிடை யாற்ருளாய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.]

வண்டுபடத் ததைந்த கண்ணி யொண்கழல்
உருவக் குதிரை மழவர் ஓட்டிய
முருகன் நற்போர் நெடுவே ளாவி
அறுகோட் டியானைப் பொதினி யாங்கண்
சிறுகா ரோடன் பயினொடு சேர்த்திய
கற்போற் பிரியலம் என்ற சொற்றும்
மறந்தனர் கொல்லோ தோழி சிறந்த
வேய்மருள் பணைத்தோள் நெகிழச் சேய்நாட்டுப்
பொலங்கல வெறுக்கை தருமார் நிலம்பக
அழல்போல் வெங்கதிர் பைதறத் தெறுதலின்
நிழல்தேய்ந் துலறிய மரத்த அறைகாய்
பறுநீர்ப் பைஞ்சுனை ஆமறப் புலர்தலின்
உகுநெற் பொரியும் வெம்மைய யாவரும்
வழங்குநர் இன்மையின் வௌவுநர் மடியச்
சுரம்புல் லென்ற ஆற்ற அலங்குசினை
நாரின் முருங்கை நவிரல் வான்பூச்
சூரலங் கடுவளி எடுப்ப ஆருற்
றுடைதிரைப் பிதிர்வில் பொங்கிமுன்
கடல்போல் தோன்றல காடிறந் தோரே.

— மாமூலனார்.

(சொ - ள்) எ—சு. தோழி—, சேய்நாட்டு - சேய்மைக்கண் ணுள்ள நாட்டினின்று, பொலம் கல வெறுக்கை தருமார்-பொன்னணி முதலாய செல்வங்களை ஈட்டிவரவேண்டி, சிறந்த வேய்மருள் பணைத் தோள் நெகிழ - சிறந்த மூங்கிலை யொத்த பரிய தோள் மெலியுமாறு (விட்டுப் பிரிந்து),

௩—௧௧. நிலம் பக - நிலம் பிளக்குமாறு, அழல்போல் வெங் கதிர் - தீயைப் போன்று வெப்ப மிக்க ஞாயிற்றின் கதிர், பைது அற தெறுதலின் - பசுமையறக் காய்தலின், நிழல் தேய்ந்து உலறிய மரத்த- நிழல் சுருங்க வற்றிய மரங்களையுடைய, அறை காய்பு - பாறைகள் கொதித்து, அறுநீர் பைஞ் சுனை - நீர் அற்ற பசிய சுனைகளிலும், ஆம் அறப் புலர்தலின் - ஈரம் இல்லையாம்படி காய்தலின், உகு நெல் பொரி யும் வெம்மைய - அங்குச் சொரியும் நெல்லும் பொரியும் வெம்மையை உடைய, யாவரும் வழங்குநர் இன்மையின் - வழிச் செல்வார் யாவரும் இன்மையின், வௌவுநர் மடிய-ஆறலைப்போரும் வறுமையால் மெலிய, சுரம் புல்லென்ற ஆற்ற-சுரம் பொலிவற்ற நெறியினையுடைய, அலங்கு சினை நார் இல் முருங்கை நவிரல் வான்பூ-அசையுங் கிளையினையுடைய நார் இல்லாத முருங்கையின் குலைந்த வெள்ளிய பூக்கள், சூரல் கடு வளி எடுப்ப-கடிய சூறவளியாகிய காற்று வாரி வீச, ஆர் உற்று- ஆர்த்தலுற்று, உடைதிரைப் பிதிர்வில் பொங்கி - உடைந்த திரையின் துளிகளைப்போலப் பரந்து கிடத்தலின், முன் கடல்போல் தோன்றல- கடலின் கரையகம் போலத் தோன்றுதலையுடைய, காடு இறந்தோர்- காட்டினைக் கடந்தேகிய நம் தலைவர்,

௧—௭. வண்டுபட ததைந்த கண்ணி - வண்டுகள் மொய்த்திட மலர்ந்த பூக்களாலாய கண்ணியினையும், ஒள் கழல் - ஒள்ளிய கழலினை யும் உடைய, உருவ குதிரை மழவர் ஓட்டிய - அஞ்சத்தக்க குதிரை களையுடைய மழவரை வென்றோட்டிய, முருகன் நற்போர் - முருகனைப் போன்ற நல்ல போர்வெற்றியினையுடைய, நெடுவேள் ஆவி - பெருமை யுடைய வேளாகிய ஆவி என்பானது, அறுகோட்டு யானை - அறுத்துத் திருத்திய கோட்டினையுடைய யானைகளையுடைய, பொதினி ஆங்கண் - பொதினி மலையாகிய அவ்விடத்திருந்த, சிறு காரோடன் பயினொடு சேர்த்திய கல்போல் பிரியலம் என்ற சொல் தாம் - சிறியனாகிய சாணைக் கல் செய்வோன் அரக்கொடு சேர்த்தியற்றிய கல்லைப்போலப் பிரியேம் என்று கூறிய சொல்லை, மறந்தனர் கொல் - மறந்துவிட்டனரோ?

(முடிபு) தோழி, சேய்நாட்டு வெறுக்கை தருமார் தோள் நெகிழக் காடிறந் தோர், பிரியலம் என்ற சொல் மறந்தனரோ?

மரத்த, வெம்மைய, ஆற்ற, தோன்றல ஆகிய காடு எனவும், தருமார் இறந் தோர் எனவும் கூட்டுக.

(வி - ரை.) வண்டுபட - பட: காரணப் பொருட்டு; காரியப் பொருட்டும் ஆம். ததைந்த - சிதறின எனலும் ஆம். வண்டு படத் ததைந்த என்பது சினைக்கு ஏற்ற அடை. உரு - உருவ என ஈறுதிரிந் தது; அழகிய குதிரை என்னலுமாம். மழவர் ஓட்டிய: உயர்திணை மருங்கின் இரண்டனுருபு தொக்கு வந்தது. ஓட்டிய ஆவி எனவும், பொதினி யாங்கண் சொல்லிய சொல் எனவும் கூட்டுக. அறுகு ஓட்டு எனப் பிரித்துச் சிங்கத்தை வென்ற எனலுமாம். பொதினி - ஆவியின்

மலை; பழனி, 'நெடுவே ளாவி, பொன்னுடை நெடுநகர்ப் பொதினி' (61) எனவும், 'சிறு காரோடன் பயினொடு சேர்த்திய கற்போல்' (356) எனவும் பின்னர் வருவன அறியற் பாலன.

(மே - ள்.) 'முதல் கரு உரிப்பொருள்'[1] என்னுஞ் சூத்திரவுரையில் இச் செய்யுளை எடுத்துக்காட்டி, பாலைக்கு முதலுங் கருவும் வந்து முதற் பொருளாற் சிறப்பெய்தி முடிந்தது என்றார். நச்.

---

2. குறிஞ்சி

[பகற்குறிக்கட் செறிப்பறிவுறீஇத் தோழி வரைவு கடாயது.]

கோழிலை வாழைக் கோண்மிகு[2] பெருங்குலை
ஊழுறு தீங்கனி உண்ணுநர்த் தடுத்த
சாரற் பலவின் சுளையொ டூழ்படு
பாறை நெடுஞ்சுனை விளைந்த தேறல்
அறியா துண்ட கடுவன் அயலது
கறிவளர் சாந்தம் ஏறல்செல் லாது
நறுவீ அடுக்கத்து மகிழ்ந்துகண் படுக்கும்
குறியா இன்பம் எளிதின் நின்மலைப்
பல்வேறு விலங்கும் எய்து நாட
குறித்த இன்பம் நினக்கெவன் அரிய
வெறுத்த வேஎர் வேய்புரை[3] பணைத்தோள்
நிறுப்ப நில்லா நெஞ்சமொடு நின்மாட்
டிவளும் இனைய ளாயின் தந்தை
அருங்கடிக் காவலர் சோர்பதன் ஒற்றிக்
கங்குல் வருதலும் உரியை பைம்புதல்
வேங்கையும் ஒள்ளிணர் விரிந்தன
நெடுவெண் திங்களும் ஊர்கொண் டன்றே.

—கபிலர்.

(சொ - ள்.) க—க. கோழ் இலை வாழைக் கோள் மிகு பெருங் குலை ஊழ்உறு தீங்கனி - வளவிய இலைகளையுடைய வாழையின் காய்த்தல் மிக்க பெரிய குலையிலுள்ள முதிர்ச்சியுற்ற இனிய கனியாலும், உண்ணுநர்த் தடுத்த சாரற் பலவின் ஊழ்படு சுளையொடு-தம்மை

---

1. தொல். அகத்: க
(பாடம்) 2. கோண் முதிர். 3. வேய்மருள்.

உண்போரைப் பிறவற்றை யுண்ணாமல் தடுத்த பக்கமலையிலுள்ள பலாவின் முற்றிய சுளையாலும், பாறை நெடுஞ்சுனை விளைந்த தேறல்-பாறையிடத்து நெடிய சுனையில் உண்டாகிய தேனை, அறியாது உண்ட கடுவன் - தேனென் றறியாதே உண்ட ஆண்குரங்கு, அயலது - அச்சுனையின் பக்கத்ததாகிய, கறிவளர் சாந்தம் ஏறல் செல்லாது - மிளகுக்கொடி படர்ந்த சந்தனமரத்தில் ஏறமாட்டாது, நறு வீ அடுக்கத்து மகிழ்ந்து கண்படுக்கும் குறியா இன்பம் - நறிய பூக்களாலாய படுக்கையிற் களிப்புற்று உறங்கும் எதிர்பாராத இன்பத்தை, நின்மலைப் பல் வேறு விலங்கும் - நினது மலையிலுள்ள பலவகை விலங்குகளும், எளிதின் எய்தும் நாட - எளிதாக அடையும் நாடனே!,

க0. குறித்த இன்பம் நினக்கு எவன் அரிய - நீ குறித்து முயலும் இன்பங்கள் நினக்கு எங்ஙனம் அரியனவாகும்?

கக—உ. வெறுத்த ஏஎர் - மிக்க அழகினையுடைய, வேய் புரை பணைத்தோள் இவளும் - மூங்கிலை யொத்த பருத்த தோளினையுடைய இவளும், நிறுப்ப நில்லா நெஞ்சமொடு நின்மாட்டு இனையள் ஆயின் - நிறுத்தவும் நில்லாது ஓடும் நெஞ்சினளாய் நின்னிடத்தே இத்தகைய காதலுடையளாயின், தந்தை அருங்கடிக் காவலர் சோர் பதன் ஒற்றிக் கங்குல் வருதலும் உரியை - இனி நீ இவள் தந்தையின் அரிய காத்தற்றொழிலையுடைய காவலாளர் சோர்வுற்றிருக்குஞ் செவ்வியை மறைய உணர்ந்து இரவில் வருவதற்கும் உரியை ;

கங—எ. பைம்புதல் வேங்கையும் ஒள் இணர் விரிந்தன - அன்றியும் பசிய புதர் சூழ்ந்த வேங்கை மரங்களும் ஒள்ளிய பூங்கொத்துக்கள் விரியப் பெற்றன; நெடுவெண் திங்களும் ஊர் கொண்டன்று - மிக்க வெண்மையையுடைய திங்களும் நிரம்புதலுற்றது.

(முடிபு) நாடனே, குறித்த இன்பம் நினக்கு எங்ஙனம் அரியன; இவளும் இனையளாயின் கங்குல் வருதலும் உரியை; வேங்கையும் இணர் விரிந்தன; திங்களும் ஊர் கொண்டன்று.

(வி - ரை.) சுளையொடு-சுளையால், ஒடுவைக் கனியொடுங் கூட்டுக. கனியாலும் சுளையாலும் விளைந்த ஊழ்படுதேறல் என்றுமாம்; ஊழ்படு-முறைமைப்பட்ட. உண்ணுநர்த் தடுத்த என்னும் அடை கனிக்கும் பொருந்தும். வாழைக் கனியையும் பலவின் சுளையையும் உண்டு, அவற்றால் விளைந்த தேறலையும் அறியாது மாந்திய கடுவன் என்றுரைத்தலும் பொருந்தும். அறியாதுண்டல் - நீர்வேட்கையால் இதனைத் தேறலென் றறியாது நீரென்றுண்டல். சாந்தம் ஏறாது என்றது மரமாயிற் சந்தனமே ஆண்டுள்ளதென்னுங் குறிப்பிற்று. வீஅடுக்கம் - பூப்படுக்கை. குறியா இன்பம் - சிந்தனையும் முயற்சியுமின்றி வந்த இன்பம். கடுவனெய்திய குறியா வின்பத்தை அதுவேயன்றி வேறு பல் விலங்கும் எய்தும் நாடென்க. எய்துமென்னும் பெயரெச்சம் இடப்பெயர் கொண்டது. விலங்குமென்னும் உம்மை இழிவு சிறப்பு. வெறுத்

தல் - செறிதல், மிகுதல். எரியினையுடைய தோள் என்க. நிறுப்ப-கின்ற நிலையினின்று அழியாமல் நிறுத்தவும்.

கங்குல் வருதலு முரியை - பகற்குறியே யன்றி இரவுக்குறியில் வருதற்கு முரியை. வேங்கையும் விரிந்தன என்றது. தினைப்புனம் அறுத்துத் தலைவி இற்செறிக்கப்பட்டாள் என்றபடி; என்னை? வேங்கை மலருங்காலம் தினைமுற்றி அறுக்குங் காலமாகலின். இதனாற் பகற்குறி மறுத்ததாம். காவலர் சோர்பத னொற்றி என்பதனால் இரவுக்குறியருமை கூறி அதுவும் மறுத்ததாம். இரண்டிற்கும் உடம்படுவாள் போன்று இரண்டினையும் மறுத்துத் தோழி வரைவுகடாயினவாறு.

நெடுவெண்டிங்கள் என்பதற்கு நெடும்பொழுது ஒளி செய்யும் நிறைமதி யெனப் பொருள்கொண்டு, ஊர்கொண்டன்று என்பதற்குக் குறைவின்றி வட்டமாக ஒளி பரந்தது என்றுரைத்தலுமாம். திங்கள் நிரம்புதலுற்றது என்றமையால் திருமணத்திற்குரிய நாளாதலும், கோதுமலர் வரைய முற்படுவர் என்பதும் புலப்படுத்தி, விரைவில் வரைந்து கொள்ளுமாறு தூண்டியவாறாயிற்று.

வேங்கை மலர்தலும் மணஞ்செய்யுநாள் குறித்தலாகக் கோடலும் அமையும். உம்மை யெச்சத்திற்கு முடிவு கூறும் [1]சூத்திரவுரையிற் சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் "வேங்கையும்...ஊர் கொண்டன்றே" என்பதில், இணர் விரிதலும் ஊர் கோடலும் மணஞ்செயுங் காலங்குறித்தலின் அவை ஒரு வினைப்பாற்படும் என்றுரைத்து, அவ்வும்மை எச்சவும்மையாதற் கிழுக்கின்மை தெரித்தமை அறியற்பாலது.

களிற்றியானை நிரையின் குறிப்புரையாசிரியர் 'நெடுவெண்டிங்களென்றார்; ஆதித்தனுக்கு மேலாகலான்' எனக் கூறியது பௌராணிக மதம்.

[2]"மையார் கதலி வனத்து வருக்கைப் பழம் விழுதேன்
எய்யா தயின்றிள மந்திகள் சோரு மிருஞ்சிலம்பா
மொய்யா ரரியதெ னம்பலத் தான்மதி யூர்கொள் வெற்பின்
மொய்யார் வளரிள வேங்கைபொன் மாலையின் முன்னினவே"

என்னும் திருச்சிற்றம்பலக்கோவைச் செய்யுளும், அதனுரையும் இச்செய்யுளின் கருத்துக்களைக் கொண்டு இயன்றிருப்பது அறிந்து இன்புறற்பாலது.

(உள்ளுறை) கடுவனனது தேனை அறியாது நுகர்ந்து, பின்பு தன்றொழிலாகிய மரமேறலு மாட்டாது, பிறிதோரிடத்திற் செல்லவு மாட்டாது, அயலதாகிய சந்தன மரத்தின் நிழலிற் பூமேலே உறங்குகின்றாற்போல, நீயும்இக் களவொழுக்கமாகிய இன்பம் நுகர்ந்து, நினது தொழிலாகிய அறநெறியையும் தப்பி, இக் களவினை நீக்கி வரையவு மாட்டாது, இக் களவொழுக்கமாகிய இன்பத்திலே மயங்கா நின்றாய் என்றவாறு.

1. தொல். எச்ச: ௩0.　　2. திருச்சிற்: உகஉ.

(மே - ள்.) "நாற்றமும் தோற்றமும்"[1] என்னும் சூத்திர வுரையில் இச்செய்யுளை எடுத்துக் காட்டி, "விலங்கும் எய்தும் நாட" என்று அந் நாட்டினை இறப்பக் கூறி, இந் நாடுடைமையிற், 'குறித்த இன்பம் நினக் கெவனரிய' என வரைதல்வேண்டியவாறும், வேங்கை விரிந்ததனால் தினையறுத்தலின் இற்செறிப்புக் கூறியவாறும், 'கங்குல் வருதலு மரியை' எனப் பகற்குறி மறுத்து இரவுக் குறி நேர்வாள்போற் கூறி 'நெடுவெண்டிங்களு மூர்கொண் டன்றே' என்று அதனையும் மறுத்து வரைதற்கு நல்ல நாளெனக் கூறி வரைவு கடாயவாறுங் காண்க" என்றார், நச்.

---

3. பாலை

[முன்னொரு காலத்து நெஞ்சினாற் பொருள் வலிக்கப்பட்டுப் பிரிந்து இடைச் சுரத்தினின்று அவள் நலம் நயந்து மீளலுற்ற நெஞ்சினைக் கழறிப் போய்ப் பொருள் முடித்து வந்த தலைமகன், பின்னும் பொருள் வலிக்கப்பட்ட நெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்கியது.]

இருங்கழி முதலை மேஎந்தோல் அன்ன
கருங்கால் ஓமைக் காண்பின் பெருஞ்சினைக்
கடியுடை நனந்தலை ஈன்றிளைப் பட்ட
கொடுவாய்ப் பேடைக் கல்கிரை தரீஇய
மான்றுவேட் டெழுந்த செஞ்செவி எருவை
வான்தோய் சிமைய விறல்வரைக் கவாஅன்
துளங்குநடை மரையா வலம்படத் தொலைச்சி
ஒண்செங் குருதி உவறியுண் டருந்துபு
புலவுப்புலி துறந்த கலவுக்கழி கடுமுடை
கொள்ளை மாந்தரின் ஆனாது கவரும்
புல்லிலை மராஅத்த[2] அகன்சே ணத்தம்
தலந்தரல் உள்ளமொடு கழியக் காட்டிப்
பின்னின்று துரக்கும் நெஞ்சம் நின்வாய்
வாய்போற் பொய்ம்மொழி எவ்வமென் களைமா
கவிரித ழன்ன காண்பின் செவ்வாய்
அந்தீங் கிளவி ஆயிழை மடந்தை
கொடுங்குழைக் கமர்த்த நோக்கம்
நெடுஞ்சே ணாரிடை விலங்கு ஞான்றே.

—எயினந்தை மகனார் இளங்கீரனார்.

---

1. தொல். களவு: உங. (பாடம்) 2. புல்லிலை யாஅத்த.

(சொ - ள்.) க—கக. இருங் கழி முதலை மேஎம் தோல் அன்ன - பெரிய உப்பங்கழியிலுள்ள முதலைபிடத்துப் பொருந்திய தோலை யொத்த, கருங்கால் ஓமை காண்பு இன் பெருஞ்சினை - கரிய அடியினை யுடைய ஓமை மரத்தின் காண்டற்கினிய பெரிய கிளையின், கடியுடை நனந்தலை - காவலையுடைய அகன்ற இடத்தில், ஈன்று இளைப்பட்ட கொடுவாய்ப் பேடைக்கு - ஈன்று காவற்பட்ட வளைந்த வாயினையுடைய தன் பேடைக்கு, அல்கு இரை தரீஇய - மிக்க இரையைக் கொணர்ந்து தரும்பொருட்டு, மான்று வேட்டு எழுந்த செஞ்செவி எருவை - மயங்கி இரையை விரும்பி எழுந்த சிவந்த செவியினையுடைய எருவைச் சேவலானது, வான்தோய் சிமைய விறல் வரைக் கவான் - வானை அளாவிய உச்சியினையுடைய சிறப்பு வாய்ந்த மலையின் சாரலில், துளங்கு நடை மரையா வலம்படத் தொலைச்சி-அசைந்த நடையையுடைய மரையாவை வலப்பக்கத்தே வீழக்கொன்று வீழ்த்தி, ஒண் செங் குருதி உவறி உண்டு அருந்துபு-அதன் ஒள்ளிய சிவந்த குருதியை ஊற்றியுண்டு ஆர்ந்து, புலவுப் புலி துறந்த - புலால்நாறும் புலி கைவிட்டுப் போன, கலவுக்கழி கடு முடை-மூட்டுவாய் கழிந்த மிக்க முடை வீசும் புலாலை, கொள்ளை மாந்தரின் ஆனாது கவரும் - கொள்ளை புரியும் மாந்தரைப் போல விடாது கவர்ந்து செல்லும் (இடமாகிய), புல் இலை மராஅத்த அகன்சேண் அத்தம் - புல்லிய இலைகளையுடைய மராமரங்களைக் கொண்ட அகன்ற நெடிய நெறியில்;

கஉ—கங. கலம் தரல் உள்ளமொடு கழியக் காட்டிப் பின்னின்று துரக்கும் நெஞ்சம் - அணிகலன் நகை ஈட்டி வரும் எண்ணத்தாலே கடந்து செல்வதாகக் காட்டி எம்மைப் பின்னின்று தூண்டும் நெஞ்சமே!

கச—கஅ. கவிர் இதழ் அன்ன காண்பு இன் செவ்வாய் - முருக்கம் பூவினையொத்த காண்டற்கு இனிய சிவந்த வாயினையும், அம் தீம் கிளவி - அழகிய இனிய மொழியினையும், ஆய் இழை - ஆய்ந்த அணியினையுமுடைய, மடந்தை-நம் தலைவியது, கொடுங்குழைக்கு அமர்த்த நோக்கம் - வளைந்த குழையோடு மாறுபட்ட நோக்கமானது, நெடுஞ்சேண் ஆர் இடை விலங்கும் ஞான்று-மிக நீண்ட அரிய சுரத்திடத்தே தோன்றித் தடுக்கும் அன்று;

கக—கஎ. நின் வாய் வாய்போற் பொய்ம்மொழி எம் எவ்வம் என் களைமா - நின் வாயினது மெய்போலும் பொய்ம்மொழி எமது துன்பத்தை எங்ஙனம் போக்குவதாகும்?

(முடிபு) அகன் சேண் அத்தம் கலம் தரல் உள்ளமொடு பின்னின்று துரக்கும் நெஞ்சமே! ஆயிழை மடந்தை நோக்கம் ஆரிடை விலங்கும் ஞான்று நின் பொய்ம் மொழி எவ்வம் என் களைமா?

புலி கவான் மரையா தொலைச்சி உண்டு துறந்த கடுமுடை எனவும், பேடைக்கு இரை தரீஇய எழுந்த எருவை கடுமுடை கவரும் அத்தம் எனவும் இயையும்.

(வி - ரை.) மேவும் என்பது மேஎம் எனத் திரிந்தது. உயரத்தால் ஏறவொண்ணாமை பற்றிக் கடியுடை நனந்தலை யென்றார். ஈன்ற பேடை பிறிதிடத்திற் செல்லலாகாமையின் 'இளைப்பட்ட' என்று கூறப்பட்டது. பின்னரும் 'பருந்திளைப் படூஉம்'[1] என இங்ஙனம் வருதல் காண்க. இளைப்பட்ட-வலைப்பட்ட என்பாருமுளர். அல்கு இரை எனற்கு வைத்திருந்து உண்ணும் இரை என்றும், இராப்பொழுது உண்ணும் இரை யென்றும் கூறுதலும் பொருந்தும். எருவை - பருந்தின் ஒருவகை. விறல் வரை - தன் பெருமையால் பிற மலையை வென்ற வெற்றியை யுடைய மலை எனலுமாம். கவான் - பக்க மலை. மரை ஆ - ஒருவகை மான். புலி பிற விலங்கினை வலப் பக்கத்தே வீழ்த்தி உண்ணும் இயல்பின தென்பது சான்றோர் செய்யுட்கள் பலவற்றான் அறியப்படுவது. உவறி - இஃது ஊற்றி என மருவி வழங்குகின்றது. விறைந்து எனப் பொருள்படும் ஆர்ந்து என்பது அருந்துபு என்றாயிற்று. கலவு - மூட்டுவாய். முடை: ஆகு பெயர். மராஅ - ஆச்சாமரம்; மராஅம் எனப் பிரித்து வெண்கடம்பு எனலுமாம். நெஞ்சம்: அண்மைவிளி. 'சின்வாய்' என்றது நெஞ்சினை உறுப்புடையது போலவும், வாய்போற் பொய்ம்மொழி என்றதனால் முன் மறுத்தமை கூறுதலின், மறுத்துரைப்பது போலவும் கூறினர். இது 'நோயு மின்பமும்'[2] என்னும் சூத்திரத்து 'உறுப்புடையது போல் உணர்வுடையதுபோல் - மறுத்துரைப்பதுபோல் நெஞ்சொடு புணர்த்தும்' எனவும் போந்த வழுவமைதியால்; பின்னரும் ஆண்டாண்டு இங்ஙனம் வருதல் இவ் விதியின்பாற்படும் என்க. செவ்வாய் முதலியன விலங்கும் என்றது, முன் தலைவியின் உரு வெளிப்பட்டுத் தடுத்தமை கருதியாகும். களையுமாறு என்பது களைமா எனத் திரிந்தது. குழைக்கு-குழையொடு: வேற்றுமை மயக்கம்.

(மே - ள்.) இச் செய்யுளில் 'பின்னின்று...களைமா' என்பதனை, மறுத்துரைப்பதுபோல நெஞ்சினை இளிவரல் பற்றிக் கூறியது என்றார், நச்.

'இன்பத்தை வெறுத்தல்'[3] என்னுஞ் சூத்திர வுரையில், எதிர்பெய்து பரிதல் என்பதற்கு 'அந்தீங் கிளவி...ஞான்றே' என்பதனை எடுத்துக் காட்டினர், பேரா.

---

1. அகம்: உச. 2. தொல். பொருளியல்: உ.
3. தொல். மெய்ப்: உஉ.

4. முல்லை

[தோழி தலைமகளைப் பருவங் காட்டி வற்புறுத்தியது.]

முல்லை வைந்நுனை[1] தோன்ற இல்லமொடு
பைங்காற் கொன்றை மென்பிணி அவிழ
இரும்பு திரித்தன்ன மாயிரு மருப்பிற்
பரலவல் அடைய இரலை தெறிப்ப
மலர்ந்த ஞாலம் புலம்புபுறக் கொடுப்பக்
கருவி வானம் கதழுறை சிதறிக்
கார்செய் தன்றே கவின்பெறு கானம்
குரங்குளைப் பொலிந்த கொய்சுவற் புரவி
நரம்பார்த் தன்ன[2] வாங்குவள் பரியப்
பூத்த பொங்கர்த் துணையோடு வதிந்த
தாதுண் பறவை பேதுறல் அஞ்சி
மணிநா ஆர்த்த[3] மாண்வினைத் தேரன்
உவக்காண்[4] தோன்றும் குறும்பொறை நாடன்
கறங்கிசை விழவின் உறந்தைக் குணாது
நெடும்பெருங் குன்றத் தமன்ற காந்தட்
போதவிழ் அலரின் நாறும்
ஆய்தொடி அரிவைநின் மாணலம் படர்ந்தே.

—குறுங்குடி மருதனார்.

(சொ - ள்.) கஎ. ஆய்தொடி அரிவை - ஆராய்ந்த வளையினையுடைய அரிவையே!'

க—எ. முல்லை வை நுனை தோன்ற - முல்லையினது கூரிய நுனியையுடைய அரும்புகள் தோன்றவும், இல்லமொடு பைங்கால் கொன்றை மென்பிணி அவிழ - தேற்றாமரத்தின் முகையொடு பசிய அடியினையுடைய கொன்றைமரத்தின் முகைகள் மெல்லிய கட்டு நெகிழ்ந்து விரியவும், இரும்பு திரித்தன்ன மா இரு மருப்பிற் பரல் அவல் அடைய இரலை தெறிப்ப - இரும்பை முறுக்கிவிட்டாற் போலும் கரிய பெரிய கொம்பினையுடைய ஆண் மான்கள் பரல்களையுடைய பள்ளங்களிலெல்லாம் துள்ளிக் குதிக்கவும், மலர்ந்த ஞாலம் புலம்பு புறக் கொடுப்ப - அகன்ற காடுறை யுலகில் நீரில்லாத வருத்தம் விட்டொழியவும், கருவி வானம் கதழ் உறை சிதறி கவின் பெறுகானம் கார் செய்தன்று - மின் முதலியவற்றின் தொகுதியையுடைய மேகம்

(பாடம்) 1. வைந்நுதி. 2. நரம்பார்ப்பன்ன. 3. யாத்த. 4. உதுக்காண்.

விரைந்து விழும் துளிகளைச் சிதறி அழகிய அக் காட்டினைக் கார்ப் பருவம் செய்தது;

கடு—எ. குறும் பொறை நாடன் - குறிய மலைகளையுடைய நாட்டினையுடைய தலைவன், கறங்கு இசை விழவின் உறந்தைக் குணாது - ஆரவாரிக்கும் ஒலி பொருந்திய விழவினையுடைய உறையூர்க்குக் கீழ்பாலுள்ளதாகிய, நெடும் பெருங் குன்றத்து - நீண்ட பெரிய மலையின் கண்ணே, அமன்ற காந்தள் போதுஅவிழ் அலரின் நாறும் நின் மாண்கலம் படர்ந்து - நெருங்கிய காந்தளின் போது விரிந்த மலரென நாறும் நினது சிறந்த அழகினை நினைந்து;

அ—கடு. குரங்கு உளை பொலிந்த கொய் சுவல்புரவி - வளைந்த தலையாட்டத்தாற் பொலிந்த கொய்த பிடரிமயிரினையுடைய குதிரைகள், வாங்கு வள் பரிய - இழுக்கும் கடிவாளம் நெகிழ (விரைந்து ஓட), பூத்த பொங்கர் துணையொடு வதிந்த - பூத்த சோலையில் பெடையொடு தங்கும், நரம்பு ஆர்த்தன்ன தாது உண் பறவை - யாழின் நரம்பு ஒலித்தாலொத்த ஒலியினையுடைய தேனை யுண்ணும் வண்டுகள், பேதுறல் அஞ்சி - மயங்குமென அஞ்சி, மணிநா ஆர்த்த மாண் வினைத் தேரன் - மணிகளின் நாவை ஒலியாமற் கட்டிய மாண்புற்ற தொழிலமைந்த தேரினை யுடையனாய், உவக்காண் தோன்றும் - உவ்விடத்தே தோன்றும்.

(முடிபு) அரிவை! கானம் கார்செய்தன்று; குறும்பொறை நாடன் மாண் நலம் படர்ந்து தேரனாய் உவக்காண் தோன்றும்.

தோன்ற, அவிழ, தெறிப்ப, புறக்கொடுப்ப, வானம் உறை சிதறிக் கானத்தைக் கார் செய்தன்று என்க. மருப்பின் இரலை எனவும், அவலிடையத் தெறிப்ப எனவும், நரம்பார்த்தன்ன பறவை எனவும், புரவி வள்பரிய (விரைதலால்) அஞ்சி மணி நா ஆர்த்த எனவும், நாடன் நலம் படர்ந்து தோன்றும் எனவும் கொண்டு கூட்டுக.

(வி - ரை.) 'நுனை' என்றது நுனையையுடைய மொட்டை. இல்லம் கொன்றை என்பன அவற்றின் சினையாகிய அரும்பை யுணர்த்தின்றன. மாயிரு: யகர வுடம்படு மெய் பெற்றது, 'கிளந்தவல்ல'[1] என்னும் அதிகாரப் புறனடையாற் கொள்க. குரங்கல் - வளைதல்; 'கிளைவிரி கரும்பின் கணைக்கால் வான்பூ - மாரியங் குருகி னீரிய குரங்க' (உகூ) எனப் பின்னரும் வந்துளது. 'குரங்கமை யுடுத்த மரம் பயில் அடுக்கத்து'[2] என்றார் இளங்கோவடிகளும். புரவியினது வாங்கு வள், நரம்பார்த்தன்ன பரிய எனக் கொண்டு கூட்டினர் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும்; வார், நரம்பு போலச் சிறிது ஒலிக்கும் என்பதும், அதனை ஆர்த்திலன் என்பதும் அவர் தம் கருத்தாகும். அஞ்சி: அருள் காரணமாகத் தோன்றும் அச்சம். துணையொடு வதியும் வண்டு பிரிந்து வருந்துதற்கும் அஞ்சுவான் தலைவனாகலின் அவன் நின்னைப் பிரிந்திருக்க ஒருப்படான் என்பது குறிப்பு.

1. தொல். குற்றிய: எஅ.   2. சிலப். கo: கறிஎ.

தாதுண் என்ற அடையால் பறவை வண்டாயிற்று. உவக்காண் - உவ்விடத்தே, உங்கே. 'உவக்கா ணெங் காதலர்'[1] என்புழி, உவக்காண் என்பதற்கு, 'உங்கே' எனப் பொருளும், 'ஒட்டி நின்ற இடைச் சொல்' என இலக்கணமும் பரிமேலழகர் எழுதினமை காண்க. குன்றம் - சிராப்பள்ளி மலை.

(மே - ள்.) செய்யுள் உறுப்பினுள் ஒன்றாகிய, நோக்கு[2] என்பதற்குப் பேராசிரியர் இச் செய்யுளை எடுத்துக் காட்டித் தம் நுண் மாண் நுழைபுலந் தோன்றக் கூறியிருக்கும் உரை ஈண்டு அறிந் தின்புறற் பாலது. இனி 'அடிநிலை காறும்' என்றதனாற் செய்யுள் முழுவதும் எவ்வகை யுறுப்புங் கூட்டி நோக்கி யுணருமாறுங் கூறுதும்; முல்லை யென்பது முதலாகக் கானம் என்பதீறாக நாற்சொல் லியலான் யாப்பு வழிப்பட்டதாயினும் பருவங் காட்டி வற்புறுக்கும் தோழி பருவந் தொடங்கிய துணையே காண் என்று வற்புறுத்தினாளென்பது நோக்கி யுணர வைத்தான்; 'உவக்காண் தோன்றுங் குறும்பொறை நாடன்' என்னுந் துணையும் தலைமகனது காதன்மிகுதி கூறி வற்புறுத்தினாளென்பது நோக்கி யுணர வைத்தான்; ஒழிந்த அடி நிலைகாறும் பிரிந்த காலம் அணித்தெனக் கூறி வற்புறுத்தினா ளென்பது நோக்கி யுணர வைத்தான் எனப்படும்; என்னை?

முல்லை யென்னாது 'வைந்நுனை' என்றதனான் அவை அரும்பியது அணித்தென்பது பெறப்பட்டது; சின்னாள் கழியின் வைந்நுனை யாகாது மெல்லென்னு மாகலின். இல்லமும் கொன்றையும் மெல் லென்ற பிணி யவிழ்ந்தன வென்றான், முல்லைக்கொடி கரிந்த துணை அவை முதல் கெடாது, முல்லை யரும்பிய காலத்து மலர்ந்தமையின். இரலை மருப்பினை இரும்பு திரித்தன்ன மருப்பு என்றதூஉம், நீர் தோய்ந்தும் வெயிலுழந்த வெப்பம் தணிந்தில; இரும்பு முறுக்கி விட்ட வழி வெப்பம் மாறா (விட்ட) வாறு போல வெம்பா நின்றன இன்னும் என்றவாறு. 'பரலவ லடைய இரலை தெறிப்ப' எனவே, பரல்படு குழி தோறும் தெளிந்து நின்ற நீர்க்கு விருந்தின வாகலாற் பலகாலும் நீர் பருகியும் அப் பரலவலினது அடைகரை விடாது துள்ளுகின்றனவென அதுவும் பருவந் தொடங்கினமை கூறியவாறாயிற்று. 'கருவி வானங் கதழுறை சிதறி' என்பதூஉம் பலவுறுப்புங் குறைபடாது தொக்கு நின்றன மேகம் தமது வீக்கத்திடைக் காற்றெறியப்படுதலின் விரைந்து துளி சிதறின வென் றவற்றையும் புதுமை கூறினான். எனவே இவை யெல்லாம் பருவந் தொடங்கி யணித்தென்றமையின், வற்புறுத்தற்கு இலேசாயிற்று. 'குரங்குளைப் பொலிந்த கொய்சுவற் புரவி' என்பது, கொய்யாத உளை பல்கியும் கொய்த உளை பலகாலும் கொய்ய வேண்டு தலுமுடைய குதிரை யென்றவாறு; எனவே தனது மனப்புகழ்ச்சி கூறியவாறு. அத்துணை மிகுதியுடைய குதிரை பூட்டின வாரொலி

---

1. குறள்: ககொ௲. 2. தொல். செய்: ௪0௪.

விலக்காது மணியொலி விலக்கி வாராநின்றான், அங்ஙனம் மாட்சிமைப் பட்ட மான் தேரனாதலான் என்றவாறு. அதற்கென்னை காரண மெனின், 'துணையொடு வதியும் தாதுண் பறவை' எனவே, பிரிவஞ்சி யென்றவாறு. மணிநாவொலி கேட்பின் வண்டு வெருவு மாகலின் அது கேளாமை மணி நாவினை யியங்காமை யாப்பித்த மாண் வினைத் தேரனாகி வாரா நின்றானென இவையெல்லாம் தலைமகள் வன்புறைக் கேதுவாயின. 'கறங்கிசை விழவி னுறந்தைக் குணாது, நெடும்பெருங் குன்றத் தமன்ற காந்தள்' தெய்வமலை யாகலான்; அதனுள் அமன்ற காந்தளைத் தெய்வப் பூவெனக் கூறி, அவை போதவிழ்ந்தாற் போல அவர் புணர்ந்த காலத்துப் புதுமணம் கமழ்ந்த நின் கைத்தொடிகள் அவை அரியவாகிப் பிரிந்த காலத்துப் போன்று வடிவொத்து மணங் குறைபட்ட துணையேயால் அவர் பிரிந்து செய்த தன்மையின் என இதுவும் வன்புறைக்கே உறுப்பாயிற்று. இவ்வாறே பலவும் நோக்கி யுணர்தற்குக் கருவியாகிய 'சொல்லும் பொருளும் எல்லாம் மாத்திரை முதலா வடிநிலை காறும்' என அடங்கக் கூறி நோக்குதற்குக் காரணம் நோக்கென்றான் என்பது.

"மங்கை நல்லவர் கண்ணும் மனமும் போன்று"[1] என்னும் சிந்தாமணிச் செய்யுள் உரையில், நச்சினார்க்கினியர் வண்டிற்குச் செவியறிவு உண்டெனக் கூறிப் 'பூத்த...தேரன்' என்னும் இச் செய்யுட் பகுதியை எடுத்துக் காட்டினர்.

'ஏனோர் மருங்கினும்'[2] என்னும் சூத்திர உரையில் இச் செய்யுளை யெடுத்துக் காட்டி, 'இதனுள் முல்லைக்குரித்தாகிய நிலமும் காலமும் கருப்பொருளும் இருத்தலாகிய உரிப்பொருளும் வந்தவாறு கண்டு கொள்க' எனவும், 'முதல் கரு உரிப் பொருள்'[3] என்னுஞ் சூத்திர வுரையில் இதனை எடுத்துக் காட்டி, 'முல்லைக்கு முதலும் கருவும் வந்து, உரிப் பொருளாற் சிறப்பெய்தி முடிந்தது' எனவும் முறையே கூறுவர், இளம். நச். 'குரங்குளை...பரிய' என்பதனையும், 'இரும்பு...தெறிப்ப' என்பதனையும், மொழிமாற்றுப் பொருள்களுக்கு[4] உதாரணம் காட்டினர், நச்.

---

1. சீவக: அகஉ. 2. தொல். அகத்: உ௪.
3. தொல். அகத்: க. 4. தொல். எச்ச: கஉ.

5. பாலை

[பொருள்வயிற் பிரியக் கருதிய தலைமகன் தன்னெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்கியது.]

அளிநிலை பொறாஅ தமரிய முகத்தள்
விளிநிலை கேளாள் தமியள்[1] மென்மெல
நலமிகு சேவடி நிலம்வடுக் கொளாஅக்
குறுக வந்துதன் கூரெயிறு தோன்ற
வறிதகத் தெழுந்த வாயல் முறுவலள்
கண்ணிய துணரா அளவை யொண்ணுதல்
வினைதலைப் படுதல் செல்லா நினைவுடன்
முளிந்த ஓமை முதையலங் காட்டுப்
பளிங்கத் தன்ன பல்காய் நெல்லி
மோட்டிரும் பாறை ஈட்டுவட் டேய்ப்ப
உதிர்வன படூஉம் கதிர்தெறு கவாஅன்
மாய்த்த போல மழுகுநுனை தோற்றிப்
பாத்தி யன்ன குடுமிக் கூர்ங்கல்
விரனுதி சிதைக்கும் நிரைநிலை அதர
பரன்முரம் பாகிய பயமில் கானம்
இறப்ப எண்ணுதி ராயின் அறத்தா
றன்றென மொழிந்த தொன்றுபடு கிளவி
அன்ன வாக என்னுநள் போல
முன்னம் காட்டி முகத்தின் உரையா
ஓவச் செய்தியின் ஒன்றுநினைந் தேற்றிப்
பாவை மாய்த்த பனிநீர் நோக்கமொ
டாகத் தொடுக்கிய புதல்வன் புன்றலைத்
தூநீர் பயந்த துணையமை பிணையல்
மோயினள் உயிர்த்த காலை மாமலர்
மணியுரு இழந்த அணியழி தோற்றம்
கண்டே கடிந்தனம் செலவே ஒண்டொடி
உழையம் ஆகவும் இனைவோள்
பிழையலள் மாதோ பிரிதும்நாம் எனினே.

—பாலை பாடிய பெருங்கடுங்கோ.

(பாடம்) 1. கொள்ளாள் தமியள்.

(சொ - ள்.) க—எ. (நெஞ்சே!) ஒள் நுதல் - ஒளி பொருந்திய நெற்றியினளாகிய நம் தலைவி, அளிநிலை பொறாது அமரிய முகத்தள் - நாம் அளிசெய்யும் நிலையினைப் பொறாமல் மாறுபட்ட முகத்தினளாய், விளிநிலை கேளாள் - நாம் அழைத்தலைக் கேளாமலே, தமியள் - நாண் முதலியவற்றைத் துறந்தனளாய், மென்மெல நலம் மிகுசேவடி நிலம் வடுக்கொளா குறுக வந்து - மென்மலச் செல்லும் இயல்பினவாய நன்மை மிக்க சிவந்த அடியால் நிலத்தில் சுவடு தோன்ற அண்மையில் வந்து, கூர் எயிறு தோன்ற வறிது அகத்து எழுந்த வாய் அல்முறுவலள் - தனது கூரிய பற்கள் தோன்றச் சிறிதே தன்னிடத்தெழுந்த மெய்ம்மை யல்லாத முறுவலுடையளாகி, கண்ணியது உணரா அளவை - யாம் எண்ணியதை உணரும் முன்பே, வினை தலைப்படுதல் செல்லா நினைவுடன் - நாம் பொருள்வயிற் பிரிதலை உடன்படாத எண்ணத்துடன்,

அ—கக. முளிந்த ஓமை முதையல் காட்டு நெல்லி பளிங்கத்து அன்ன பல் காய் - காய்ந்த ஓமைமரங்களையுடைய முதிய காட்டில் நெல்லியினது பளிங்கு போன்ற பல காய்கள், மோடு இரும் பாறை ஈட்டு வட்டு ஏய்ப்ப உதிர்வன படூஉம் - உயர்ந்த பெரிய பாறைகளில் சிறுர் விளையாடற்கு ஈட்டி வைத்திருக்கும் வட்டுக்களைப் போல உதிர்ந்து கிடக்கும், கதிர் தெறு கவான் - ஞாயிற்றின் கதிர்கள் காயும் பக்க மலைகளில், பாத்தி அன்ன குடுமி கூர் கல் - பகுத்து வைத்தாலொத்த தலையினையுடைய கூரிய கற்கள், மாய்த்தபோல மழுகு நுனை தோற்றி - தீட்டப்பட்டன போலத் தேய்ந்த கூர்முனையைத் தோற்றுவித்து, விரல்நுதி சிதைக்கும் நிரை நிலை அதர - வழிச்செல்வார் விரலின் முனையைச் சிதைக்கும் கல்லொழுங்குபட்ட நிலைமையையுடைய வழிகளைக் கொண்ட, பரல் முரம்பு ஆகிய பயம் இல் கானம் - பரற் கற்களையுடைய மேட்டு நிலமாகிய வளனற்ற காட்டினை, இறப்ப எண்ணுதிர் ஆயின் - கடந்து செல்ல எண்ணுவீராயின்,

கஉ—உக. அறத்தாறு அன்று என மொழிந்த தொன்றுபடு கிளவி - (காதலுடையாரை விட்டுப் பிரிதல்) அறநெறி அன்றெனக் கூறிய பழைமை பொருந்திய சொல், அன்ன ஆக என்னுநள்போல - அங்ஙனம் சொல்லிய அளவில் கழிக என்று கூறுவாள் போல, முன்னம் காட்டி முகத்தின் உரையா - அக் குறிப்பினை முகக் குறிப்பான் உரைத்துக் காட்டி, ஓவச் செய்தியின் ஒன்று நினைந்து ஏற்றி - ஓவியம் வாளாது நிற்பதுபோல் நின்று நமக்கு உடன்படாமையை நினைந்து துணிந்து, பாவை மாய்த்த பனி நீர் நோக்கமொடு - தனது கண்ணின் பாவையை மறைத்து நிற்கும் நடுக்கத்தைச் செய்யும் நீரையுடைய பார்வையுடன், ஆகத்து ஒடுக்கிய புதல்வன் புல்தலை தூ நீர் பயந்த துணை அமை பிணையல் மோயினள் உயிர்த்த காலை - தனது மார்பில் அடக்கிய புதல்வனது புல்லிய தலையிலுள்ள தூய நீர் தந்த இணைப்

பூக்களால் தொடுத்த செங்கழுநீர் மாலையை மோந்து பெருமூச்சு எய்திய காலத்தே, மாமலர் மணி உரு இழந்த அணி அழி தோற்றம் கண்டு - அச் சிறந்த மலர் பவளம் போலும் உருவினை யிழந்த பொலிவற்ற காட்சியைக் கண்டு, கடிந்தனம் செலவே - போதலைத் தவிர்ந்தோமன்றே;

உகூ—அ. ஒண் தொடி உழையம் ஆகவும் இனைவோள் பிரிதும் நாம் எனினே பிழையலள் - ஒள்ளிய தொடியினளான இவள் நாம் அண்மையில் இருக்கவும் அவ்வாறு வருந்தும் இயல்பினள் பிரிவோமாயின் உயிர் உய்ந்திராள். (ஆகலின் நாம் செல்லுமாறு எங்ஙனம்?)

(முடிபு) ஒண்ணுதல் அளி நிலை பொருது ஆரிய முகத்தளாய், செல்லா நினைவுடன். கானம் இறப்ப என்னுநிராயி,ர், கிளவி அ.ர்னவாக என்னுநள்போல முகத்திற் காட்டி, ஒன்று நினைந்தேற்றி, புதல்வன் புன்றலைப் பிணையல் மோயினள் உயிர்த்த காலை, அணி யழி தோற்றம் கண்டு நாம் பிரிதும் எனின் பிழையலள் என்று செலவு கடிந்தனம்.

முகத்தள் கேளாள் வந்து முறுவலள் உணரா அளவை செல்லாநினைவுடன் எனவும் காட்டு நெல்லி பாறை படூஉம் கவான் கூர்ங்கல் சிதைக்கும் அதர கானம் எனவும் கூட்டுக.

(வி - ரை.) அளிநிலை பொருமையை, "முள்ளுறழ் முளையெயிற் றமிழ்தூறுந் தீநீரைக், கள்ளினு மகிழ்செயு மெனவுரைத்து மமையாரென், னொள்ளிழை திருத்துவர் காதலர் மற்றவர், உள்ளுவ தெவன்கொ லறியே னென்னும்"[1] என்பது முதலியவற்றால் அறிக. "பிரிவஞ்சும் புன்க ணுடைத்தாற் புணர்வு"[2] என்புழிப் பரிமேலழகரும் பிரிவச்சத்திற்கு இக் கலியின் பகுதியை எடுத்துக் காட்டினர். கொளா - கொண்டு; இதனைக் கொள்ள வெனத் திரிக்க; கொள்ள வென்றே பாடங் கோடலுமாம். வறிது - சிறிது; உரிச்சொல். வாய்மையற்ற நகையாவது உள்ளத்தொடு பொருந்தாத நகை. முதையலங்காடு என்பதில் அம்மும், பளிங்கத்தன்ன என்பதில் அத்தும் சாரியைகள். அறத்தா றன்றென மொழிந்த தொன்றுபடு கிளவி என்பதற்கு, காதலுடையாரைப் பிரிதல் அறநெறி யன்றாகலின், நின்னைப் பிரியேன் என்று, இயற்கைப் புணர்ச்சிக் காலத்து நீவிர் கூறிய சொல் என விரித்துரைத்துக் கொள்க. ஏற்றி - ஏற்றம் என்னும் உரியடியாகப் பிறந்த வினையெச்சம்; 'கானலஞ் சேர்ப்பன் கொடுமையேற்றி'[3] என்பது காண்க; எற்றி எனப் பாடங் கொள்வாரும் உளர். மோயினள் வினையெச்சமுற்று; 'வினையெஞ்சு கிளவியும் வேறு பல்குறிய'[4] என்னும் சூத்திர உரையில், சேனாவரையர் மோயினள் என்பதற்கு வினையெச்சம் முற்றுச் சொல்லது திரிபாய் வந்ததென்றும், நச்சினார்க்

1. கலி. பாலை ௩.
2. குறள்: ௧௧௫௨.
3. குறுந்: ௧௭௬.
4. தொல். எச்: ௬௧.

ஒளியர் வினையெச்சப் படர்க்கைத் தெரிநிலை முற்று என்றும் இலக்கணம் கூறினர். மணி - ஈண்டுப் பவளம். கடிந்தனம் செலவு என்றது பண்டொருகால் போக்கு ஒழிந்ததனைக் குறித்தது. இது, "செலவிடையழுங்கல் செல்லாமையன்றே, வன்புறை குறித்தல் தவிர்ச்சியாகும்"[1] என்னும் விதியால் வற்புறுத்திப் பிரிதற்குத் தலைவன் செலவழுங்கியதாம் என்க.

(மே - ள்.) 'கரணத்தி னமைந்து'[2] என்னும் சூத்திர வுரையில் 'கை விடின் அச்சமும்' என்பதற்கு இளம்பூரணர் இச் செய்யுளை எடுத்துக் காட்டினர். 'செலவிடை யழுங்கல்'[3] என்னும் சூத்திர வுரையில், 'மணியுரு...பிரிது நாமெனினே' என்னும் பகுதியைப் பேராசிரியர் எடுத்துக்காட்டி, இது வன்புறை குறித்துச் செலவழுங்குதலிற் பாலையாயிற்று என்றார்.

---

6. மருதம்

[பரத்தையிற் பிரிந்து வந்த தலைமகற்குக் கிழத்தி கூறியது]

அரிபெய் சிலம்பி னாம்பலந் தொடலை
அரம்போ ழவ்வளைப் பொலிந்த முன்கை
இழையணி பணைத்தோ ளையை தந்தை
மழைவளந் தரூஉ மாவண் தித்தன்
பிண்ட நெல்லின் உறந்தை யாங்கண்
கழைநிலை பெறாஅக் காவிரி நீத்தங்
குழைமாண் ஒள்ளிழை நீவெய் யோளொடு
வேழ வெண்புணை தழீஇப் பூழியர்
கயநா டியானையின் முகனமர்ந் தாஅங்
கேந்தெழில் ஆகத்துப் பூந்தார் குழைய
நெருநல் ஆடினை புனலே இன்றுவந்
தாக வனமுலை யரும்பிய சுணங்கின்
மாசில் கற்பின் புதல்வன் தாயென
மாயப் பொய்ம்மொழி சாயினை பயிற்றியெம்
முதுமை யெள்ளலஃ தமைகுந் தில்ல
சுடர்ப்பூந் தாமரை நீர்முதிர் பழனத்
தந்தூம்பு வள்ளை யாய்கொடி மயக்கி

---

1. தொல். கற்பு: ௪௪. 2. தொல். கற்பு: ௫.
3. தொல். கற்பு: ௪௪.

வாளை மேய்ந்த வள்ளெயிற்று நீர்நாய்
முள்ளரைப் பிரம்பின் மூதரிற் செறியும்
உ0. பல்வேள் மத்தி கழாஅ ரன்னவெம்
இளமை சென்று தவத்தொல் லஃதே
இனிமையெவன் செய்வது பொய்ம்மொழி யெமக்கே.

—பரணர்.

(சொ - ள்.) க—சு. அரி பெய் சிலம்பின் - பரல்கள் இடப்பெற்ற சிலம்பினையும், ஆம்பல் அம் தொடலை - ஆம்பல் மலராலாகிய அழகிய மாலையினையும், அரம் போழ் அவ்வளை பொலிந்த முன்கை - அரத்தாற் பிளக்கப்பெற்ற அழகிய வளைகளாற் பொலிந்த முன்கையினையும், இழை அணி பணை தோள் - அணிகலன் அணிந்த மூங்கிலையொத்த தோளினையும் உடைய, ஐயை தந்தை - ஐயை என்பாளுக்குத் தந்தையாகிய, மழைவளம் தரும் மாவண் தித்தன்-மழைவளம் போலத் தரும் பெரிய வண்மையையுடைய தித்தனது, பிண்டம் நெல்லின் உறந்தை ஆங்கண் - நெற் குவியல்களையுடைய உறையூராய அவ்விடத்தே, கழை நிலை பெருக் காவிரி நீத்தம் - ஓடக்கோலும் நிலைத்தலில்லாத காவிரியின் நீர்ப் பெருக்கில்,

எ—கக. குழை மாண் ஒள் இழை நீ வெய்யோளொடு - குழை முதலாகிய மாண்புறும் ஒளி பொருந்திய அணிகளையுடைய நின்னால் விரும்பப்பட்ட பரத்தையொடு, வேழம் வெண்புணை தழீஇ - வேழக் கரும்பாலாகிய வெள்ளிய தெப்பத்தினைக் கொண்டு, பூழியர் கயம் நாடு யானையின் முகன் அமர்ந்து ஆங்கு - அவ்விடத்துப் பூழி நாட்டாரது குளத்தினை நாடிச் சென்று விளையாடும் களிறும் பிடியும் போல முக மலர்ச்சியுற்று, ஏந்து எழில் ஆகத்துப் பூ தார் குழைய-உயர்ந்த அழகிய மார்பிலுள்ள மலர்மாலை அழகுகெட, நெருநல் ஆடினை புனலே - நேற்றுப் புனலாடினை,

கக—கு. இன்று வந்து - இன்று இங்கு வந்து, ஆகம் வனம் முலை அரும்பிய சுணங்கின் - மார்பிலுள்ள அழகிய முலையில் தோன்றிய தேமலையும், மாசு இல் கற்பின் - குற்றமற்ற கற்பினையுமுடைய, புதல்வன் தாய் என - என் புதல்வன் தாயே என்று, மாயப் பொய்மொழி சாயினை பயிற்றி-வஞ்சனை பொருந்திய பொய்ம்மொழியினை வணங்கிப் பலகாலும் கூறி, எம் முதுமை எள்ளல் - எம் முதுமை நிலையினை இகழாதேகொள், அஃது அமைகும் - அம் முதுமைக்கு நாங்கள் அமைவோம்,

கக—உ0. சுடர் பூ தாமரை நீர் முதிர் பழனத்து - ஒளிபொருந்திய தாமரைப் பூக்களையுடைய நீர்மிக்க வயலில், அம் தூம்பு வள்ளை ஆய் கொடி மயக்கி - அழகிய உட்டுளையுடைய வள்ளையினது மெல்லிய கொடிகளை உழக்கி, வாளை மேய்ந்த வள் எயிற்று நீர் நாய் - வாளை மீன்

களைத் தின்ற கூரிய பற்களையுடைய நீர்நாய், முள் அரைப் பிரம்பின் மூது அரில் செறியும் - முட்கள் பொருந்திய தண்டினையுடைய பிரம்பினது பழைய தூறுகளில் தங்கி யிருக்கும் (இடங்களையுடைய), பல் வேல் மத்தி கழாஅர் அன்ன - பல வேற்படையினையுடைய மத்தியென்பானது கழாஅர் என்னும் ஊரினை யொத்த,

உ0—உக. எம் இளமை சென்று தவ தொல்லஃது-எமது இளமை கழிந்து மிகப் பழைதாயிற்று,

உஉ. பொய்மொழி எமக்கு இனிமை எவன் செய்வது-இனி நின் பொய்ம்மொழி எங்கட்கு இனிமை செய்வதென்பது எங்ஙனம் ஆகும்?

(முடிபு) காவிரி நீத்தத்து நெருநல் புனல் ஆடினை; இன்று வந்து சுணங்கினையும் கற்பினையுமுடைய புதல்வன் தாயெனப் பொய்ம்மொழி பயிற்றி எம்முதுமை எள்ளல்; அஃது அமைகும்: எம் இளமை சென்று தவத்தொல்லது; நின் பொய்ம்மொழி எமக்கு இனிமை செய்வது என்னை?

சிலம்பினையும் தொடலையினையும் முல்கையினையும் தோளினையு முடைய ஐயை எனவும், நீர்நாய் முதரிற் செறியுங் கழார் எனவும் இயையும்.

(வி - ரை.) ஐயையது கற்பின் சிறப்பு நோக்கி, ஐயை தந்தை என்றார். மழை வளந் தரூஉம் என்பதற்கு மழையாகிய வளத்தினைத் தரும் எனக் கொண்டு, தித்தனது செங்கோன்மை கூறிற்று எனலுமாம்; மழை வளம் தரும் ஐயை என்றியைத்தலும் பொருந்தும். வேழக் கோலைப் புணையாகக் கொண்டு புனலாடுதல் 'கொடுங்கோல் வேழத்துப் புணை துணையாகப், புனலாடு கேண்மை' (கஅசு) எனவும், யானை போலப் புணை தழுவிப் புனலாடுதல், தார்பூங் களிற்றிற் றலைப்புணை தழீஇ...காவிரிக்கோடு தோய் மலிர்நிறை யாடியோரே' (கசுஉ) எனவும் 'மைந்துமலி களிற்றிற் றலைப்புணை தழீஇ...நீர் பெயர்ந்தாடிய' (உகசு) எனவும் பின்னரும் வருதல் காண்க. யானை யெனவே பிடியும் அடங்கிற்று. ஆங்கு: அசை. புதல்வன் தாய் என்றது கொண்டு, முதுமை எள்ளல் என்றாள். நெருநல் பரத்தையுடன் புனலாடினவன் இன்று வந்து சுணங்கினையும் கற்பினையும் பாராட்டுதலின் அதனை மாயப் பொய்ம்மொழி யென்றாள். பயிற்றல் - பலகாற் சொல்லல். அஃது அமைகும் என்பதற்கு நீ செய்கின்ற பரத்தமைக்கு யாம் அமைவேம் என்றுமாம். தில்: விழைவின்கண் வந்தது; அசையுமாம். அரில் - தூறு; பிணக்கம். தொல்லஃது: ஆய்தம் விரித்தல்.

(உ - றை.) "நீர் நாய் வாளைக்குக் காவலாகிய வள்ளையினது நிலையை நெகிழ்த்து, இழிந்ததாகிய வாளையை நுகர்ந்து, பிரம்பாகிய முதிய தூற்றிலே தங்கினாற் போல, நீயும் பரத்தையர்க்குக் காவலாகிய தாய் முதலாயினாரது நிலைமையை நெகிழ்த்துக் குலமகளிரல்லாத விலை மகளிரை நுகர்ந்து, முன்பு நுமக்குண்டாகிய எங்கள் பழைமையைப்

பற்ற, ஒரு பயன் கருதாது தங்குதல் மாத்திரத்திற்கு எம்மில்லில் வந்தீரென்றுளாம்."

(மே - ள்.) "வைகுறு விடியல்"[1] என்னும் சூத்திர வுரையில் இச் செய்யுளை இத் துறைக்கே காட்டி, இஃது இளவேனில் வந்தது என்றும், 'மெய்ப்பெயர் மருங்கின் வைத்தனர் வழியே'[2] என்னும் சூத்திரத்து, புறத்திணையாற் கொண்ட மெய்ப் பெயரிடம் பற்றி அகத்திணைப் பொருள் நிகழவும் பெறும் எனக்கூறி, 'அரிபெய் சிலம்பின்' என்னும் அகப்பாட்டினுள் தித்தன் எனப் பாட்டுடைத்தலைவன் பெயரும், பிண்ட நெல்லின் என நாடும், உறந்தை என ஊரும், காவிரி யாடினை என யாறுங் கூறிப் பின்னர் அகப்பொருள் நிகழ்ந்தவாறுங் கொள்க என்றும், 'நிகழ்தகை மருங்கின்'[3] என்னும் சூத்திரத்து 'ஆகவனமுலை...சாயினை பயிற்றி' என்பது புலவிக்கண் தலைவன் புகழ்ந்தது என்றும் உரைத்தனர், நச். "மூப்பே பிணியே"[4] என்னும் சூத்திரத்து 'மாயப் பொய்ம் மொழி...தில்ல' என்பதனைத் தன்கட் டோன்றிய மூப்புப் பொருளாக இளிவரல் பிறந்தது என்பதற்கு எடுத்துக் காட்டினர், பேரா.

---

7. பாலை

[மகட் போக்கிய செவிலித்தாய் சுரத்திடைப் பின்சென்று நவ்விப் பிணைக் கண்டு சொல்லியது.]

முலைமுகஞ் செய்தன முள்ளெயி றிலங்கின
தலைமுடி சான்ற தண்டழை யுடையை
அலமரல் ஆயமோ டியாங்கணும் படாஅல்
மூப்புடை முதுபதி தாக்கணங் குடைய
காப்பும் பூண்டிசின் கடையும் போகலை
பேதை அல்லை மேதையங் குறுமகள்
பெதும்பைப் பருவத் தொதுங்கினை புறத்தென
ஒண்சுடர் நல்லில் அருங்கடி நீவித்
தன்சிதை வறிதல் அஞ்சி இன்சிலை
ஏறுடை இனத்த நாறுயிர் நவ்வி
வலைகாண் பிணையிற் போகி ஈங்கோர்
தொலைவில் வெள்வேல் விடலையொ டென்மகள்
இச்சுரம் படர்தந் தோளே ஆயிடை
அத்தக் கள்வர் ஆதொழு அறுத்தெனப்
பிற்படு பூசலின் வழிவழி யோடி

---

1. தொல். அகத்: அ 2. தொல். புறத்: கஉ.
3. தொல். பொருளியல்: கச. 4. தொல். மெய்: ௫.

மெய்த்தலைப் [1]படுதல் செய்யேன் இத்தலை
நின்னொடு வினவல் கேளாய் பொன்னொடு
புலிப்பல் கோத்த புலம்புமணித் தாலி
ஒலிக்குழைச் செயலை உடைமாண் அல்குல்
ஆய்சுளைப் பலவின் மேய்கலை உதிர்த்த
துய்த்தலை வெண்காழ் பெறூஉங்
கற்கெழு சிறுகுடிக் கானவன் மகளே.

—கயமனார்.

(சொ - ள்) க—கо. இன் சிலை ஏறு உடை இனத்த - இனிய முழக்கங்கொண்ட ஆண்மானாகிய இனத்தினையுடைய, நாறு உயிர் நவ்வி-உயிர்ப்புத் தோன்றும் இளைய மானே!

க—எ. (என் மகளை நோக்கி யான்), மேதை அம் குறுமகள்-அறிவினையுடைய இளைய மகளே! முலை முகஞ் செய்தன - நினக்கு முலைகள் அரும்பின, முள் எயிறு இலங்கின - (விழுந்தெழுந்த) கூரிய பற்கள் ஒளி கொண்டன, தலை முடி சான்ற - கூந்தல் முடித்தல் அமைந்தன, தண் தழை உடையை - தண்ணிய தழையுடை கொண்டனை (ஆதலின்), அலமரல் ஆயமொடு யாங்கணும் படாஅல் - சுழன்று திரியும் நின் ஆயத்தாருடன் எங்கணும் போகற்க, மூப்புடை முதுபதி தாக்கு அணங்கு உடைய - தொன்மை வாய்ந்த இந்தப் பதியின் இடங்கள் தாக்கி வருத்தும் தெய்வங்களை யுடையன, காப்பும் பூண்டிசின் - (இவற்றால்) நீ காவலும் எய்தினை, கடையும் போகலை - இனி நீ நம் வாயிலகத்தும் போகற்பாலை யல்லை, பேதை அல்லை - நீ பேதைப் பருவத்தினை யல்லை, பெதும்பைப் பருவத்து புறத்து ஒதுங்கினை என - இப் பெதும்பைப் பருவத்து நீ புறத்துப் போனாய் என்னை என்று நான் கூற (அது கேட்டு),

கஎ—உஉ. பொன்னொடு புலிப்பல் கோத்த புலம்புமணித் தாலி - பொன்னாலியன்ற புலிப்பல்லொடு கோக்கப்பெற்ற தனி மணித்தாலியினையும், ஒலி குழை செயலை உடை மாண் அல்குல்-தழைத்த அசோகந்தளிராலாய தழையுடையால் மாண்புறும் அல்குலினையும் உடைய, பலவின் ஆய் சுளை மேய் கலை உதிர்த்த - பலாவினது சிறந்த சுளைகளை உண்ணும் முசுக்கலைகளால் உதிர்க்கப்பெற்ற, துய்தலை வெண் காழ் பெறூஉம் - தலையில் ஆர்க்கினையுடைய வெள்ளிய பலா வித்துக்கள் எங்கணும் கொள்ளக்கிடக்கும், கல்கெழு சிறுகுடிக் கானவன் மகள் மலையிடத்தே பொருந்திய சிறு குடியை யுடைய கானவன் மகளாகிய என் மகள்,

---

(பாடம்) 1. படுதல் செல்லேன்.

அ—க. தன் சிதைவு அறிதல் அஞ்சி - தனது குற்றத்தினை நான் அறிந்தமைக்கு அஞ்சி, ஒண்சுடர் நல்இல் அருங்கடி நீவி - மிக்க ஒளி பொருந்திய எங்கள் நல்ல இல்லின் அரிய காவலைக் கடந்து.

கக—ங. வலை காண் பிணையின் போகி - வலையினை முன்னர்க் காணும் பெண் மான் அதனைத் தப்பி யோடுமாறு (விரைந்து) சென்று, தொலைவு இல் வெள்வேல் ஓர் விடலையொடு - தோற்றல் இல்லாத வெள்ளிய வேலினையுடைய ஒரு தலைவனொடு, இச் சுரம் ஈங்கு படர்தந் தோள் - இச் சுரத்தே இந் நெறியில் சென்றனள்,

கங—சு. அ இடை - அப்பொழுதே, அத்தக் கள்வர் ஆ தொழு அறுத்தென - அருஞ்சுரத்துக் கள்வர் ஆக்களைத் தொழுவினின்றுங் கொண்டகன்றனராக, பின் படு பூசலின் வழிவழி ஓடி - அவர்கள் பின் சென்று செய்யும் போரினைப்போலப் பின்னே பின்னே (தொடர்ந்து செல்லுமிடங்களி லெல்லாம் ஓடி, மெய்த் தலைப்படுதல் செய்யேன் - அவள் மேனியை அணுகப் பெற்றிலேன்.

கசு—எ. இத்தலை நின்னொடு வினவல் கேளாய் - இவ்விடத்து நின்னொடு வினவுகின்றதை விரும்பிக் கேட்டு (அவர்கள் செல்லும்நெறி யினைக் கூறுவாயாக)

(முடிபு) நவ்வி! யான் என் மகளை நோக்கி, பேதையர்லை; முகஞ் செய்தன, இலங்கின, சான்ற. உடையை, அணங்குடைய, ஆதலாற் காப்பும் பூண்டிசின், படாஅல். இனி யாங்கனும் போகலை எனவும், பெதும்பைப் பருவத்து ஒதுங்கினை புறத்தெனவும் கூற, அக் கானவன்மகள் ஆகிய என் மகள் அஞ்சி. நீவி, போகி, விடலையொடு ஈங்குப் படர்தந்தோள்; வழிவழி யோடி மெய்த்தலைப்படுதல் செய்யேன் இத்தலை நின்னொடு வினவல் கேளாய்:(அவர்கள் செல்லும் நெறி கூறுவாயாக.)

தாலியினையும் அல்குலினையும் உடைய கானவன் மகள் எனவும், கானவன் மகளாகிய என் மகள் எனவும் கூட்டுக.

(வி. ரை) இச் செய்யுளின் துறை கூறிய நச்சினார்க்கினியர், இது கானவன் மகளைக் கண்டு கூறியதுமாம் என, 'எஞ்சியோர்க்கும்'[1] என்னும் சூத்திரத்துக் கூறலின், 'பொன்னொடு...கானவன் மகளே' எனு மிச் செய்யுட் பகுதியை, செவிலி தான் கானகத்தே கண்டதொரு மகளை விளித்துக் கூறியதாகக் கோடலுமாம்: அங்ஙனம் கொள்ளின் 'இன்சிலை...போகி' என்ற பகுதியை, 'இன்சிலை ஏறுடையினத்த வலை காண் நாறுயிர் நவ்விப் பிணையிற் போகி' எனக் கூட்டி யுரைத்துப் போகிப் படர்தந்தோள் என முடிக்க. 'மூப்பு' என முன்வந் தமையின், 'முதுபதி' பதியென்னும் பெயர் மாத்திரையே யாகும். சின்: அசை. நவ்வியின் இனிய குரலைப் பாராட்டுவாள் இன்சிலை என்றாள். வெப்பம் தாங்கலாற்றாது உயிர்த்திடும் இளமைச் செவ்வியினதாதல், நாறுயிர்

1. தொல். அகத்: சஉ.

நவ்வி என்றதனாற் குறிக்கப்பட்டது. வலையைச் செம்மைக்கண் கண்டதொரு பிணை அதனை அணுகாது விலகியோடி மறைவது போல், தனது இற் செறிப்பினைக் கண்டஞ்சிக் கழிந்தனள் என்றாள். நாறுதல்-தோன்றுதல். உயிர் - உயிர்ப்பு. அத்தக் கள்வர் என்றது வெட்சி மறவரை. பிற்படு பூசல் - பின்னே தொடர்ந்து சென்று மீட்கும் கரந்தையாரின் போர். அவள் கானக மகளாதலின் இனக்கும் ஓர் அடைவு உண்டு; ஆதலின் கூறுவாயாக என்றாள். பூசலின்; இன்: ஒப்பு.

(மே - ள்.) தலைவி கூற்று நிகழ்த்துமாறு கூறும் 'மறைந்தவற் காண்டல்'[1] என்னும் சூத்திரத்துத் 'தமர் தற் காத்த காரண மருங்கினும்' என்னும் பகுதிக்கு, இச் செய்யுளையும் எடுத்துக் காட்டி (தலைவி தோற்றப் பொலிவு கண்டு தமர் அவளை வெளியிற் செல்லாது காத்தனர் என்பார்) 'என்றன தோற்றப் பொலிவாற் காத்தன' என்றும், 'எஞ்சியோர்க்கும்'[2] என்ற சூத்திரத்துச் செவிலிக்கும் கூற்று உண்டு எனக் கூறி, 'முலைமுகஞ் செய்தன முள்ளெயி றிலங்கின' என்னும் அகப்பாட்டு, 'மகட்போக்கிய செவிலித்தாய் சுரத்திடைப் பின்சென்று நவ்விப் பிணையைக் கண்டு சொற்றது; செவிலி கானவர் மகளைக்கண்டு கூறியதுமாம்' என்றும் கூறுவர், நச். 'மரபே தானும்'[3] என்ற சூத்திரத்துப் 'புலிப்பற் கோத்த...அல்குல்' எனும் இச் செய்யுட் பகுதியைக் காட்டி 'என்பது பருவத்திற்கேற்ற அணி கூறியது' என்பர், பேரா.

---

8. குறிஞ்சி

[தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழிக்குச் சொல்லுவாளாய்த் தலைமகள் சொல்லியது.]

ஈயற் புற்றத் தீர்ம்புறத் திருத்த
குரும்பி வல்சிப் பெருங்கை யேற்றை
தூங்குதோல் துதிய வள்ளுகிர் கதுவலின்
பாம்புமதன் அழியும் பானாட் கங்குலும்
அரிய அல்லமன் இகுளை பெரிய
கேழல் அட்ட பேழ்வா யேற்றை
பலாவமல் அடுக்கம் புலவ ஈர்க்கும்
கழைநரல் சிலம்பின் ஆங்கண் வழையொடு
வாழை யோங்கிய தாழ்கண் அசும்பில்
படுகடுங் களிற்றின் வருத்தஞ் சோலிய

1. தொல். கள: ௨௦. 2. தொல். அகத்: ௪௨.
3. தொல். செய்: ௮௦.

பிடிபடி முறக்கிய பெருமரப் பூசல்
விண்டோய் விடரகத் தியம்பும் அவர்நாட்
டெண்ணரும் பிறங்கல் மானதர் மயங்காது
மின்னுவிடச் சிறிய ஒதுங்கி மென்மெலத்
துளிதலைத் தலைஇய மணியே ரைம்பால்
சிறுபுறம் புதைய வாரிக் குரல்பிழியூஉ
நெறிகெட விலங்கிய நீயிர் இச்சுரம்
அறிதலும் அறிதிரோ என்னுநர்ப் பெறினே.

—பெருங்குன்றூர் கிழார்.

(சொ - ள்.) ம—கஉ. இகுளை-தோழியே!, பெரிய கேழல் அட்ட பேழ் வாய் ஏற்றை - பெரிய ஆண் பன்றியினைக் கொன்ற பிளந்த வாயினையுடைய புலியேறு, பலா அமல் அடுக்கம் - பலாமரங்கள் செறிந்த பக்கமலைகளில், புலவு ஈர்க்கும் - புலால் நாற அதனை இழுத்துச் செல்லும் இடமாகிய,கழை நரல் சிலம்பின் ஆங்கண் - மூங்கில்கள் ஒலிக்கும் மலையாய அவ்விடத்து, வழையொடுவாழை ஓங்கிய தாழ்கண் அசும்பில் - சுரபுன்னையோடு வாழை ஓங்கி வளர்ந்த தாழ்ந்த இடத்தை யுடைய நீர் அருக் குழியில், படுகடுங் களிற்றின் வருத்தம் சொலிய - அகப்பட்ட கடிய களிற்றின் வருத்தத்தினை நீக்கற்கு, பிடிபடி முறக்கிய பெருமரப் பூசல் - அதன் பெண் யானை அக் களிறு ஏறுதற்குப் படியாகப் பெரிய மரத்தினை முறித்திட்ட ஓசை,விண்தோய் விடரகத்து இயம்பும் அவர் நாட்டு - வான் அளாவிய மலைமுழையின்கண் சென்றொலிக்கும் நம் தலைவர் நாட்டில்,

கங—ச. எண் அரும் பிறங்கல் மான் அதர் மயங்காது மின்னு விடச் சிறிய மென்மெல ஒதுங்கி - எண்ணற்கரிய குன்றுகளின் பக்கமாகச் செல்லும் மான்களின் நெறிகளில் மயங்கித் திரியாது மின்னல் வழிகாட்டச் சிறுகச் சிறுக மெத்தென நடந்து,

க—ச சுயல் புற்றத்து ஈர்ம் புறத்து இறுத்த குரும்பி வல்சி பெருங் கைஏற்றை-சுயல்களை யுடைய புற்றின் குளிர்ந்தமேற்புறத்தே தங்கிய புற்றாஞ்சோறாகிய இரையினையுடைய பெரிய கையினையுடைய ஆண்கரடியின், தூங்கு தோல் துதிய வள் உகிர் கதுவலின்-தொங்கும் தோல் உறைக்குள் பொருந்தியிருக்கும் கூரிய நகம் பற்றிக் கொள்வதால், பாம்பு மதன் அழியும் பானாள் கங்குலும் - பாம்பு தனது வலிமை யற்றொழியும் பாதிராளிரவும் (செல்லுதல்),

கரு—அ. துளி தலைத் தலைஇய மணி ஏர் ஐம்பால் - மழைத் துளியைத் தன்னிடத்தே கொண்ட நீலமணிபோன்ற அழகிய கூந்தலை,

(பாடம்) 1. மழையே ரைம்பால்.

சிறுபுறம் புதைய வாரி குரல் பிழியூஉ - பிடரிமறையப் பின்னே கோதி அம் மயிர்த்தொகுதியைப் பிழிந்து விட்டு, நெறி கெட விலங்கிய இச் சுரம் நீயிர் அறிதலும் அறிதிரோ என்னுநர்ப் பெறின் - வழிகள்செல்ல முடியாதபடி பின்னிக்கிடக்கும் இச்சுரத்தின் நெறியினை நீவிர் முன்பு அறிதலும் செய்வீரோ என்று பரிவுற்று வினவுவாரைப் பெறின்,

இ. அரிய அல்ல மன் - நமக்கு அரியன அல்லவாம்; (அந்தோ அது பெற்றிலோமே!)

(முடிபு) இகுளை! அவர் நாட்டு மென்மெல ஒதுங்கிப் பழுஉக்கதூறும் (செல்லல்), வினவுவார்ப் பெறின் அரிய அல்லமன்.

ஏற்றை ஈர்க்கும் ஆங்கண் அசும்பில் படுகளிறு என்க.

(வி - ரை.) 'ஏற்றை' என்பது, "ஆற்றலொடு புணர்ந்த ஆண்பாற் கெல்லாம், ஏற்றைக் கிளவி யுரித்தென மொழிப"[1] என்பதனால், கரடி புலி முதலியவற்றின் ஆணினைக் குறிப்பதொரு மரபுப் பெயராகும். துறு - உறை. புலர என்றே பாடங்கொண்டு புலால் நாறஎனலுமாம். அறிதலு மறிதிரோ - இங்ஙனம் வினை யிரட்டிக்குங்கால் பின்னது 'செய்தல்' என்னும் பொதுவினையாகக் கொள்ளப்படும்; அறிதலும் அறிதியோ பாக[2] என்பதும் காண்க. பிறங்கல் பிறங்குகல் என்பதன் விகாரமாம். மின்னுவிட - மின் வழிவிட. ஒதுங்கி - ஒதுங்க எனத் திரித்தலுமாம். மணியேர் ஐம்பால்: ஏர், உவம உருபுமாம்.

(உ - ரை.) 'சுயற்புற்றத்து...மதனழியும்' என்பதற்கு "ஏற்றை யானது பாம்பை வருத்தவேண்டும் என்னும் கருத்தில்லைபாயினும், அது தன் காரியம் செய்யவே வள்ளுகிர் படுதலாகிய அவ்வளவிற்குப் பாம்பு வலியழிந்தாற்போல, அவர் நம்மை வருத்தவேண்டும் என்னும் கருத்தில்லையாயிருக்கவே, தமது காரியமாகிய களவின்பத்திலே ஒழுகவே, ஆறின்னுமை ஊறின்னுமை முதலாகிய இவ்வளவிற்கே நாம் வருந்தும்படியாய் விட்டது" என்றும், 'பெரிய கேழலட்ட...புலர வீர்க்கும்' என்பதற்கு, "புலியானது தான் நுகர்தற் பொருட்டுக் கேழலை யட்டுப் பழ நாற்றத்தையுடைய பலாவம லடுக்கம் புலர ஈர்த் தாற்போல, அவரும் இன்பந் துய்த்தற்பொருட்டு வந்து நம்மைக் கூடி, அக்கூட்டத்தாலே புகழ்ச்சியை யுடைத்தாகிய நம் குடியை இகழ்ச்சி யுடைத்தாம்படி பண்ணினர்" என்றும், 'வாழையொடு...விடரகத்தியம் பும்' என்பதற்கு "வாழை நுகர வந்த யானை அதன் அயலாகிய அசும் பின் குழியிலே விழுந்ததாகப் பின்பு அக்குழியினின்றும் ஏறமாட்டாது வாழையாகிய உணவையும் இழந்துழிப்,பிடிஅஃது ஏறுதற்குப் படியாக மரம் முறிக்கின்ற ஓசை விண்தோய் விடரகத்து இயம் பினாற்போல, அவரும் நமது நலம் நுகர வந்து களவொழுக்கமாகிய குழியிலே விழுந்து, இக்களவொழுக்கமாகிய இதனை விட்டு வரையவு மாட்டாது,

1. தொல். மரபு; ௩௪.   2. நற்: ௪0௬:

நமது காவ லருமையால் இக்களவொழுக்கினை நுகரவுமாட்டாது துயரப்படுகின்றுழி, அறத்தொடு நிலை முதலாகிய இவற்றால் மகளிராகிய நாமே வரையமுயலும் வழி, அம்முயற்சியானே ஊரெல்லாம் அறியும் படி பண்ணினர்'' என்றும் கூறுவர், குறிப்புரைகாரர்.

(மே - ள்.) 'அறக்கழிவுடையன'[1] என்னும் சூத்திரத்து, இச் செய்யுளுள் 'பாம்பு மதன்...இருளை' என்ற பகுதியைக் காட்டி, இதனுள், தலைவி செல்வாமென்றது, சிறைப்புறமாக வரைவு கடாயது பொருட்பயன் தருதலின், அறக்கழிவுடையதேனும் அமைந்தது என்றனர். நச். 'மாட்டும் எச்சமும்'[2] என்னுஞ் சூத்திரத்து உரையில், இச் செய்யுளுள் முதலும் கருவும் முறை பிறழ வாராமையின், இதனைத் துறைவகையின்றி வந்தது என்பர், பேரா.

---

9. பாலை

[வினைமுற்றி மீண்ட தலைமகன் தேர்ப்பாகன் கேட்பச் சொல்லியது.]

கோல்வினைப் பொலிந்த கூர்ங்குறும் புழுகின்*
வில்லோர் தூணி வீங்கப் பெய்த
அப்புநுனை ஏய்ப்ப அரும்பிய இருப்பைச்
சேப்படர் அன்ன செங்குழை அகந்தோ
றிழுதின் அன்ன தீம்புழல் துய்வாய்
உழுதுகாண் துளைய வாகி ஆர்கழல்
பாலி வானிற் காலொடு பாறித்
துப்பின் அன்ன செங்கோட் டியவின்
நெய்த்தோர் மீமிசை நிணத்திற் பரிக்கும்
அத்த நண்ணிய அங்குடிச் சீறூர்க்
கோடுநுண் ஓதி மகளிர் ஓக்கிய
தொடிமாண் உலக்கைத் தூண்டுரற் பாணி
நெடுமால் வரைய குடிஞையோ டிரட்டுங்
குன்றுபின் ஒழியப் போகி உரந்துரந்து
ஞாயிறு படினும் ஊர்சேய்த் தெனாது
துனைபரி துரக்கும் துஞ்சாச் செலவின்
எம்மினும் விரைந்துவல் லெய்திப் பன்மாண்

---

1. தொல். பொருளியல்: உச. 2. தொல். செய்:- உகக.
(பாடம்) 3. குறும்பெஃகின்.

ஓங்கிய நல்லில் ஒருசிறை நிலைஇப்
பாங்கர்ப் பல்லி படுதோறும் பரவிக்
கன்றுபுகு மாலை நின்றோள் எய்திக்
கைகவியாச் சென்று கண்புதையாக் குறுகிப்
பிடிக்கை அன்ன பின்னகந் தீண்டித்
தொடிக்கை தைவரத் தோய்ந்தன்று கொல்லோ
நாணொடு மிடைந்த கற்பின் வாள்நுதல்
அந்தீங் கிளவிக் குறுமகள்
மென்றோள் பெறநசைஇச்[1] சென்ற என் நெஞ்சே.

—கல்லாடனார்.

(சொ - ள்.) ௧—௧௦. கொல் வினைப் பொலிந்த - கொற்றொழிலாற் சிறந்த, கூர் குறு புழுகின் - கூரிய குறிய புழுகெனப் பெயரிய, வில்லோர் தூணி வீங்கப் பெய்த - வில்வீரர் அம்புக் கூட்டில் மிகப் பெய்திருக்கும், அப்பு நுனி ஏய்ப்ப - குப்பி நுனியை ஒப்ப, அரும்பிய இருப்பை - அரும்பிய இருப்பையது, செப்பு அடர் அன்ன - செப்புத் தகட்டை யொத்த, செங்குழை அகம்தொறும் - சிவந்த தளிர்களினிடந் தொறும், இழுதின் அன்ன தீம்புழல் துய்வாய் - நெய்யை யொத்த இனிய துளையுள்ள பூக்கள், ஆர் கழல்பு - ஆர்க்குக் கழன்று, உழுது காண் துளையவாகி - காம்பினை நீக்கிக் காணத்தக்க துளையினையுடைய வாய், ஆலி வானிற் காலொடு பாறி - வானினின்று விழும் பனிக்கட்டி போலக் காற்றாற் சிதறுண்டு, துப்பின் அன்ன செங்கோட்டு இயவின் - பவளம் போன்ற சிவந்த மேடாகிய வழிகளில், நெய்த்தோர் மீமிசை நிணத்தில் பரிக்கும் - குருதிமீ துள்ள கொழுப் பெனப் பரக்கும், அத்தம் நண்ணிய அம் குடிச் சீறூர் - சுரத்திலே பொருந்திய அழகிய குடிகளையுடைய சிற்றூர்க் கண்ணே,

௧௧—௨. கொடு நுண் ஓதி மகளிர் ஓக்கிய தொடிமாண் உலக்கை தூண்டு உரல் பாணி - வளைந்த நுண்ணிய கூந்தலினையுடைய பெண்டிர்கள் உயர்த்த பூண்மாண்ட உலக்கையாற் குற்றும் உரலினின்றெழும் ஒலி.

௧௩—௪. நெடுமால் வரைய குடிஞையோடு இரட்டும் குன்று - நெடிய பெரிய பக்க மலையிலுள்ள ஆந்தை யொலியொடு மாறி மாறி ஒலிக்கும் குன்றுகள், பின் ஒழியப் போகி - பின்னே ஒழிய முன்னே போய்,

௧௪—௭. ஞாயிறு படினும் ஊர் சேய்த்து எனாது - ஞாயிறு மறைந்திடினும் ஊர் சேய்மையிடத்தது என்று கூறி யொழியாது, துனைபரி

(பாடம்) 1. மென்றோள் நசைஇ.

உரம் துரந்து - விரைந்து செல்லும் குதிரைகளை வலியாற் செலுத்தி, துரக்கும் - மேலும் மேலும் முடுக்குகின்ற, துஞ்சாச் செலவின்-மடிதல் இல்லாத போக்கினையுடைய, எம்மினும் - எம்மைக் காட்டினும்.

உச—சு. நாணொடு மிடைந்த கற்பின் - நாணொடு செறிந்த கற்பினையும், வாள் நுதல் - ஒள்ளிய நெற்றியினையும், அம் தீங் கிளவி - அழகிய இனிய சொல்லினையுமுடைய, குறு மகள் - இளையோளது, மெல் தோள் பெற நசைஇ சென்ற - மெல்லிய தோளை அடைதற்கு விரும்பிச்சென்ற, என் நெஞ்சு - என் நெஞ்சம்.

கஎ. விரைந்து வல் எய்தி - மிக விரைந்து சென்று.

கஎ—உந. பல் மாண் ஓங்கிய நல்இல் - பல கட்டுக்களால் மாண்புற உயர்ந்த நல்ல இல்லில், ஒரு சிறை நிலைஇ - ஓரிடத்தே நின்று, பாங்கர் பல்லி படுதொறும் பரவி - நற்பக்கத்தே பல்லி ஒலிக்குந்தோறும் அதனைப் போற்றி, கன்று புகு மாலை நின்றோள் எய்தி - ஆன் கன்றுகள் இல்லிற்கு வந்துறும் மாலைக் காலத்தே நின்றவளை அடைந்து, கை கவியாச் சென்று குறுகி கண் புதையா-கையைக் கவித்துச் சென்று குறுகிக் கண்ணைப் புதைத்து, பிடிக்கை அன்ன பின்னகந் தீண்டி - பெண் யானையின் கையை ஒத்த பின்னின கூந்தலைத் தீண்டி, தொடிக் கை தைவர தோய்ந்தன்று கொல் - அவளது தொடியணிந்த கை பொருந்தத் தழுவியது கொல்லோ!

(முடிபு) சீறார் உரற் பாணி இரட்டும் குன்று ஒழியப் போகித் துஞ்சாச் செலவின் எம்மினும் எம் நெஞ்சு விரைந்து சென்று மாலை நின்றோள் எய்திக் குறுகித் தோய்ந்தன்று கொல்.

(வி - ரை.) புழுகின் அப்பு எனக் கூட்டி, புழுகாகிய அப்பு என்க. புழுகு - அம்பின் தலையிற் செறிக்கும் குப்பி; இது மல்லிகை மொட்டு எனவும் படும். துய்வாய் - துய்யைத் தன்னிடத்தேயுடைய பூ; துய் - பஞ்சு. இழுதின்னன்ன பூ எனவும் தீம் பூ எனவும் இயையும். ஆலி வானின் என்பதனை வானின் ஆலி என மாறுக. ஆலி - நீர்க்கட்டி; ஆலம் - நீர். காலொடு - காலால். துப்பின் அன்ன : சாரியை நிற்க உருபு தொக்கது. பரித்தல் - ஈண்டுப் பரத்தல். பாணி - உலக்கையாற் குற்றும்பொழுது பாடும் வள்ளைப்பாட்டுமாம். இரட்டுதல் - மாறியொலித்தல். வல் விரைந்து என மாறுக. பல்லி சொல்லுந்தொறும் பரவுதல் உலக வழக்கு. கன்று புகுதல் மாலைக்கு அடை. தன் வருகையைக் காண விருப்புற்றுத் தலைவி இங்ஙனம் நிற்பள் எனத் தலைவன், பாவிக்கின்றான். எம்மினும் நெஞ்சு வல்விரைந்தெய்தி என்றது, தலைவன் தலைவியைக் காண்டற்கு விரையும் விதுப்புத் தோன்றநின்றது. நெஞ்சு எய்திக் கை கவியாச் சென்று குறுகித் தீண்டித் தோய்ந்தன்று என்பது, 'நோயும் இன்பமும்'[1] என்னும் சூத்திரத்து

1. . தொல். பொருளியல்: உ.

உறுப்புடையதுபோல் .... நெஞ்சொடு புணர்த்தும்' என்பதனுல் அமைந்த வழுவமைதி யாகும்.

(மே - ள்.) 'நோயு மின்பமும்'[1] என்னுஞ் சூத்திர வுரையில் 'கை கவியாச் சென்று......என்னெஞ்சு' 'இஃது உறுப்புடையது போல் உவந்துரைத்தது' என்று நச்சினர்க்கினியரும், 'மரபே தானும்'[2] என்னுஞ் சூத்திர உரையில் இச் செய்யுளை எடுத்துக் காட்டி, 'என்றவழி, குறிஞ்சிக்கும் முல்லைக்கும் ஏற்ற பொருள் தத்தம் மரபிற்றுய்ப் பலவும் வந்தன கண்டுகொள்க' என்று பேராசிரியரும் கூறினர்.

---

10. நெய்தல்

[இரவுக்குறிவந்து தலைமகளைக் கண்ணுற்று நீங்கும் தலைமகனை எதிர்ப்பட்டு நின்று தோழி சொல்லியது.]

வான்கடற் பரப்பில் தூவற் கேதிரிய
மீன்கண் டன்ன மெல்லரும் பூழ்த்த
முடவுமுதிர் புன்னைத் தடவுநிலை மாச்சினைப்
புள்ளிறை கூறும் மெல்லம் புலம்ப
நெய்தல் உண்கண் பைதல கலுழப்
பிரிதல் எண்ணினை யாயின் நன்றும்
அரிதுதுற் றனை[3] யாற் பெரும உரிதினிற்
கொண்டாங்குப் பெயர்தல் வேண்டுங் கொண்டலொடு
குரூஉத்திரைப் புணரி உடைதரும் எக்கர்ப்
பழந்திமில் கொன்ற[4] புதுவலைப் பரதவர்
மோட்டுமணல் அடைகரைக் கோட்டுமீன் கொண்டி
மணங்கமழ் பாக்கத்துப் பகுக்கும்
வளங்கெழு தொண்டி யன்ன இவள் நலனே.

—அம்மூவனார்.

(சொ - ள்.) க—ச. வான் கடல் பரப்பில் தூவற்கு எதிரிய- பெரிய கடற்பரப்பில் எழும் திரைத் திவலைகளை ஏற்றுக் கொண்ட, மீன் கண்டன்ன - விண்மீனைக் கண்டாலொத்த, மெல் அரும்பு ஊழ்த்த - மெல்லிய அரும்புகள் மலர்ந்த, முடவு முதிர் புன்னை - முடம் பட்ட முதிர்ந்த புன்னைமரத்தின், தடவுநிலை மாசினை - பெரிய நிலையை

1. தொல். பொருளி : உ. 2. தொல். செய் : ௮0.
(பாடம்) 3. அரிதுற்றனை. 4. பழந்திமில் சென்ற.

யுடைப் கரிய சினையில், புள் இறைகூரும் மெல் அம் புலம்ப - புட்கள் மிகத் தங்கியிருக்கும் மென்னிலமாகிய கடற்கரைக்குத் தலைவனே!,

எ. பெரும - பெருமானே!,

௬—எ. நெய்தல் உண்கண் பைதல கலுழ - நெய்தற் பூவை ஒத்த மையுண்ட இவள் கண்கள் வருந்தினவாய் அழ, பிரிதல் எண்ணினை யாயின் - இவளைப் பிரிந்து செல்லுதலை நினைத்தாயாயின், நன்றும் அரிது துற்றனை - பெரிதும் அரியதனை மேற்கொள்வாயாயினை,

எ—கக. கொண்டலொடு குரூஉ திரைப் புணரி உடைதரும் எக்கர் - கீழ்காற்றால் விளக்கம் பொருந்திய கடலின் அலைகள் உடைக்கும் மணல் மேட்டிற் (கிடக்கும்), பழந்திமில் கொன்ற புதுவலைப் பரதவர் - பழைய படகின் சிதைவு போக்கிப் புதுக்கிய புதிய வலையினை யுடைய பரதவர்கள், மோட்டு மணல் அடைகரை கோட்டுமீன் கொண்டி - உயர்ந்த மணலையுடைய அடைகரையில் வந்து கிடக்கும் சுறுமீனின் கொள்ளையினை, மணம் கமழ் பாக்கத்துப் பகுக்கும் - மணம் நாறுகின்ற பாக்கத்தின்கண் பலர்க்கும் பகுத்துக் கொடுக்கும், வளம். கெழு தொண்டி அன்ன இவள் நலன் - வளம் மிக்க தொண்டி என்னும் பட்டினத்தை யொத்த இவளது அழகு, உரிதினில் கொண்டு ஆங்குப் பெயர்தல் வேண்டும் - இவட்கே உரித்தாக நின்னூர்க்கு வரைந்து கொண்டு போதல் வேண்டும்.

(முடிபு) புலம்ப! பெரும! பிரிதல் எண்ணினையாயின் அரிது துற்றனை; தொண்டி அன்ன இவள் நலன், உரிதினில் கொண்டு ஆங்குப் பெயர்தல் வேண்டும்.

(வி - ரை.) எதிரிய ஊழ்த்த புன்னை என்க. தாவற்கு - தாவலை: வேற்றுமை மயக்கம். மாச்சினை : மா - கரிய எனலுமாம். பைதல் : வினையெச்சமுற்று. கொண்டி - கொள்ளப்பட்டவை. பாக்கம் - பரதவர் சேரி. தொண்டி என்பதொரு பதி சோழநாட்டுக் கடற்கரைக்கண் ணிருப்பினும், இவ்வாசிரியர் பிற இடங்களில் சேரனுடைய தொண்டி, மாந்தை என்பனவற்றைப் பாடியிருத்தலின், இங்குக் குறித்த தொண்டியும் சேரர் கடற்கரைப் பட்டினமாகிய தொண்டியே யாதல் வேண்டும். [1]'தோளும் கூந்தலும் பல பாராட்டி, வாழ்த லொல்லுமோ மற்றே செங்கோற் குட்டுவன் தொண்டி யன்ன, எற்கண்டு நயந்துநீ நல்காக் காலே' என்பது காண்க. நலம் இவட்கு உரித்தாக வரைந்துகொண்டு போகவேண்டும் என்றது; அன்றாயின் இவள் இறந்துபடுவள் என்பது தோன்றக் கூறியபடி.

(உ - ரை.) 'பழந்திமில்......கொண்டி' என்பதற்குப் "பரதவர் தாம் அழிவு கோத்த திமிலானும் பண்ணின வலையானும் தமது தொழி

1. ஐங் : கஎஅ.

லாகிய வேட்டைமேற் செல்லாது தேடாமல் வந்த இழிந்த கருமீனை அகப்படுத்து, அதனை அழித்துக் கூறுவைத்து எல்லாரையும் அழைத்தாற்போல, நீயிரும் நுமக்கு உறுதியாக ஆக்கிக்கொள்ளப்பட்ட நன்மைகளான் நுமக்கு ஒழுக்கமாகிய நல்வழியின் ஒழுகாது, கண்டோ ரிகழ்ந்த களவொழுக்கிலே ஒழுகி, இக் களவினைப் பரப்பிப் பலரும் அலர் கூறும்படி பண்ணுகின்றீர்'' என்பர், குறிப்புரைகாரர்.

———

11. பாலை

[தலைமகன் பொருள்வயிற் பிரிந்தவிடத்து ஆற்றாளாய தலைமகள் வேறுபாடு கண்டு ஆற்றாளாய தோழிக்குத் தலைமகள் ஆற்றுவல் என்பது படச் சொல்லியது.]

வானம் ஊர்ந்த வயங்கொளி மண்டிலம்
நெருப்பெனச் சிவந்த உருப்பவிர் அம்காட்
டிலையில மலர்ந்த முகையில் இலவம்
கலிகொள் ஆயம் மலிபுதொகு பெடுத்த
அஞ்சுடர் நெடுங்கொடி பொற்பத் தோன்றிக்
கயந்துகள் ஆகிய பயந்தபு கானம்
எம்மொடு கழிந்தன ராயின் கம்மென
வம்புவிரித் தன்ன பொங்குமணற் கான்யாற்றுப்
படுசினை தாழ்ந்த பயிலிணர் எக்கர்
மெய்புகு வன்ன கைகவர் முயக்கம்
அவரும் பெறுகுவர் மன்னே நயவர
நீர்வார் நிகர்மலர் கடுப்ப ஓமறந்
தறுகுள நிறைக்குந போல அல்கலும்
அழுதன் மேவல வாகிப்
பழிதீர் கண்ணும் படுகுவ மன்னே.

—ஔவையார்.

(சொ - ள்.) க—எ. வானம் ஊர்ந்த வயங்கு ஒளி மண்டிலம்-வானில் ஊர்ந்தேகும் விளங்கும் ஒளியினதாகிய ஞாயிற்று மண்டிலம், நெருப்பெனச் சிவந்த உருப்பு அவிர் அம் காட்டு - தீ யெனச் சினந்தெரித்த வெப்பம் விளங்கும் காட்டகத்தே, இலை இல மலர்ந்த முகை இல் இலவம் - இலையிலவாய் மலர்ந்துள அரும்பில்லாத இலவம் பூக்கள், கலிகொள் ஆயம் மலிபு தொகுபு எடுத்த - ஆரவாரத்தைக் கொண்ட

மகளிர் கூட்டம் ஈகிழ்ந்து கூடி எடுத்த, அம் சுடர் நெடுங்கொடி பொற்பத் தோன்றி - அழகிய கார்த்திகைவிளக்கின் நெடிய ஒழுங்கு போலத் தோன்ற, கயம் துகள் ஆகிய பயம் தபு கானம் - குளங்கள் நீரற்றுத் துகள்பட்டிருக்கும் வளம் தப்பிய காட்டில், கம்மென எம்மொடு கழிந்தனராயின் - நம் தலைவர் விரைவாக நம்மை உடன்கொண்டு கழிந்தனராயின்,

அ—கக. வம்பு விரித்த அன்ன பொங்கு மணல் கான்யாற்று - கச்சினை விரித்துப் பரப்பி வைத்தாலன்ன விளங்கும் மணல் மிக்க காட்டாற்றினது, பயில் இணர்படு சினை தாழ்ந்த எக்கர் - மிக்க பூங் கொத்துக்களையுடைய பெரிய கிளைகள் தாழ்ந்துள மணல் மேட்டில், மெய் புகுவு அன்ன - மெய்கள் ஒன்றின் ஒன்று புகுவதை ஒத்த, கை கவர் முயக்கம் - கைவிரும்பும் முயக்கத்தினை, நயவர அவரும் பெறுகு வர்மன் - அன்பு தோன்ற அவரும் அடைவர்,

கஉ—கூ. பழி தீர் கண்ணும் - எமது குற்றமற்ற கண்களும், நீர் வார் நிகர் மலர் கடுப்ப - நீர் சொரியும் ஒளி பொருந்திய மலரையொப்ப, ஓ மறந்து - ஒழிதலின்றி, அறு குளம் நிறைக்குந போல - நீரற்ற குளத்தினைப் பெருக்கும் மடை போல, அல்கலும் அழுதல் மேவல ஆகிப் படுகுவ மன் - நாளும் அழுதலைப் பொருந்தாவாகித் துயிலப்பெறும்.

(முடிபு) (நம் தலைவர்) கானம் எம்மொடு கழிந்தனராயின், முயக்கம் அவரும் பெறுகுவர்; (நம்) கண்ணும் படுகுவ.

(வி - ரை.) இலவம் - இலவம் பூ. தோன்றி - தோன்ற எனத் திரிக்க. கம்மென - விரைய, தேய வழக்கு. 'கம்மென வெழுதரு பெரும்படை'[1] என்பதூஉங் காண்க. கார்த்திகைத் திங்களின் கார்த்திகை நாளில் இல்லந்தோறும் வரிசையாக விளக்குகளை ஏற்றிவைத்து விழா அயர்தல், சங்கச் செய்யுட்கள் பலவற்றிற் கூறப் பெறுதலின், தமிழ்நாட்டில் பண்டு தொட்டு இவ் வழக்கம் இருந்து வருவதென்பது பெற்றாம்; "அம்ம வாழி தோழி கைம்மிக"[2] என்னும் பாட்டினுள் கார்த்திகை விழாக் கொண்டாடும் முறைமையும், "எல்வளை ஞெகிழச் சாஅய்"[3] என்னும் பாட்டினுள், "பெருவிழா விளக்கம் போலப் பல வுடன், இலையில மலர்ந்த இலவமொடு" என இவ்வுவமையும் இந்நூலுட் பின்னர் வருவதுங் காண்க. எம்மொடு கழிந்தனராயின், கண்ணும் அழுதல் மேவலவாகிப் படுகுவ என எதிர்வுபற்றிக் கூறலின், ஆற்றுவல் என்பது படச் சொல்லியதென்னும் துறையாயிற்று. மன் கழிவின்கண் வந்தது எனக் கொள்ளின், ஆற்றாது இரங்குதல் நிகழ்ந்ததாம். நச்சினார்க்கினியர் இதனைப் [4]'பாலைக்கண் இரங்கல் நிகழ்ந்ததற்கு எடுத்துக் காட்டியவாறும் காண்க.

---

1. புறம் : உகஉ.
2. அகம் : கசக.
3. அகம் : கஅ௬.
4. தொல். அகத் : கூ.

(மே - ள்.) 'உரிப்பொருளல்லன மயங்கவும் பெறுமே'[1] என்னும் சூத்திரவுரைக்கண், "வான மூர்ந்த......அம்காட்டு" எனக் காடுறையுலகத்துப் பாலை வந்தது" என்றும், 'தொண்டுதலைக் கழியினும்'[2] என்னும் சூத்திரவுரைக்கண் 'வானமூர்ந்த' என்னும் அகப்பாட்டினுள் 'மெய்புகு வன்ன......மன்னே' எனக் கூறி அழுதல் மேவாவாய்க் கண்ணும் துயிலுமென இரக்கம் மீக்கூறியவாறும் உணர்க' என்றும் உரைத்தனர், நச்.

---

12. குறிஞ்சி

[பகற்குறி வாராநின்ற தலைமகன் தோழியாற் செறிப்பறிவுறுக்கப்பட்டு, இரவுக்குறி வாரா வரைவல் என்றாற்கு, அதுவும் மறுத்து வரைவு கடாயது.]

யாயே கண்ணினும் கடுங்கா தலளே
எந்தையும் நிலனுறப் பொரு அன் சீறடிசிவப்ப
எவனில குறுமகள் இயங்குதி என்னும்
யாமே, பிரிவின் றியைந்த துவரா நட்பின்
இருதலைப் புள்ளின் ஓருயி ரம்மே
ஏனலங் காவலர் ஆனு தார்த்தொறுங்
கிளிவிளி பயிற்றும் வெளிலாடு பெருஞ்சினை
விழுக்கோட் பலவின் பழுப்பயன் கொண்மார்
குறவர் ஊன்றிய குரம்பை புதைய
வேங்கை தாஅய தேம்பாய் தோற்றம்
புலிசெத்து வெரீஇய புகர்முக வேழம்
மழைபடு சிலம்பிற் கழைபடப் பெயரும்
நல்வரை நாட நீவரின்
மெல்லியல் ஓருந் தான்வா ழலளே.

—கபிலர்

(சொ - ள்.) க—ரு. யாயே கண்ணினும் கடுங் காதலள் - எம் தாய் தன் கண்ணினும் இவள்பால் மிக்க காதலுடையாள், எந்தையும் நிலன் உறப் பொரு அன் - எம் தந்தையும் (இவள் எங்கேனும் செல்வது காணின்) நிலத்தே இவள் அடி பொருந்தி நடக்கப் பொறாதவனாகி, இல குறுமகள் - ஏடி ! இளைய மகளே !, சீறடி சிவப்ப - நின் சிறிய அடி சிவப்புற, எவன் இயங்குதி என்னும் - என் செயச் செல்கின்றாய் என்று

---

1. தொல். அகத் : கரு. 2. தொல். அகத் : கஉ.

கூறும், யாமே - யாங்களும், பிரிவு இன்று இயைந்த துவரா நட்பின் - பிரிதலில்லாது கூடிய உவர்த்தலில்லாத நட்பினால், இருதலைப் புள்ளின் ஓர் உயிரம் - இருதலைப் பறவையைப் போல இரண்டு உடற்கு ஓர் உயிரினம் ஆவேம்.

க—கச. ஏனல் அம் காவலர் ஆனாது ஆர்த்தொறும் - தினைப் புனம் காக்கும் மகளிர் ஓயாது ஆர்க்குந்தோறும், கிளி விளி பயிற்றும் வெளில்ஆடு பெருஞ்சினை - கிளிகள் தம் இனத்தை அழைக்கும் அணில் ஆடும் பெரிய கிளைகளில், விழுக்கோள் பலவின் பழுப்பயன் கொண்மார் - பெரிய காய்களைக் கொண்ட பலாமரத்தின் பழமாய பயனைக் கொள்ளுதற்கு, குறவர் ஊன்றிய குரம்பை புதைய - குறவர்கள் நாட்டிய குடிசை மறைய, வேங்கை தாய தேம்பாய் தோற்றம் - தேன் ஒழுகும் வேங்கைப் பூக்கள் பரந்த தோற்றத்தை, புலி செத்து வெரீஇய புகர்முக வேழம் - புலியென்று கருதி அஞ்சிய புள்ளிகள் பொருந்திய முகத்தினையுடைய யானை, மழைபடு சிலம்பில் கழைபடப் பெயரும் - மேகம் பொருந்திய பக்கமலையிலுள்ள மூங்கில்கள் முறிபடப் பெயர்ந்து செல்லும், நல் வரை நாட - நல்ல மலை பொருந்திய நாடனே, நீ வரின் - நீ இரவுக்குறி வரின், மெல்லியல் வாழலள் - மென்மைத் தன்மை வாய்ந்த இத் தலைவி உயிர்வாழ்ந்திராள்.

(முடிபு) வரை நாட! யாய் காதலள்; எந்தை எவன் இயங்குதி என்னும்; யாம் ஓர் உயிரம்; நீ வரின் மெல்லியல் வாழலள்.

கிளி விளிபயிற்றும் நல்வரை எனவும், வேழம் பெயரும் நல்வரை எனவும் கூட்டுக.

(வி - ரை.) தோழியானவள், யாய் காதலள்; எந்தை எவன் இயங்குதி யென்னும் என்பவற்றால் இற்செறிப்பினையும், யாம் ஒருயிரம் என்பதனால் தலைவி யெய்தும் வருத்தத்தினைத் தான் நன்கு அறியுமாற்றினையும், நீ வரின் மெல்லியல் வாழலள் என்பதனால் இரவுக்குறியின் ஏதம் அஞ்சுதலையும் அறிவுறுத்து வரைவு கடாயினளாம் என்க. இல - ஏடி: விளிப்பெயர். கிளி விளி பயிற்றும் என்றது, கிளியோப்பும் மகளிர் குரலைக் கிளியின் குரலெனக் கருதிப் புனத்திலுள்ள கிளிகள் தம் இனத்தை அழைத்தலைச் செய்யும் என்றபடியாம்; "[1]கொடிச்சியின்குரல் கிளிசெத் தடுக்கத்துப், பைங்குர லேனற் படர்தருங் கிளி" எனக் கபிலர் கூறுமாறுங் காண்க. இனி, காவலர் குறவர் எனக் கொண்டு அவர்கள் மரத்தின் சினைமீதிருந்து ஆர்க்குந்தோறும் கிளிகள் ஒலித்தலைச் செய்யும் என்று உரைத்தலுமாம். வெளில் - அணில். கோள் - காய்; காய்த்தலுமாம். பழுப்பயன் - பழுத்த பழமுமாம். குரம்பையில் வேங்கைமலர் பரந்த தோற்றத்தைப் புலியெனக் கருதி வேழம் அஞ்சிற்று என்னும் இக் கருத்து "[2]நறமனை வேங்கையின் பூப்

க. ஐங்குறு: உ௮௯:   2. திருச்சிற்: ௬௬.

பயில் பாறையை நாக நண்ணி, மறமனே வேங்கை யெனநனி யஞ்சுமஞ் சார்சிலம்பா" எனத் திருச்சிற்றம்பலக் கோவையாரினும் வருதல் அறி யற்பாலது. தேம் - தேன். ஒரும், தான் என்பன அசைகள்.

(உ - றை.) யானையானது வெருவத் தகாத குரம்பையை வெரு வத்தக்க புலியென்று கருதித் தனக் குணவாகிய கழை முறியப் பாயும் என்பது, வெருவத் தகாத எங்கள் தமரை வெருவி வரைய முயலாது நீ திரிதலின், யாங்கள் இறந்துபடும்படியாயிற்று என்றபடியாம்.

(மே - ள்.) 'பொழுதும் ஆறும்'[1] என்னும் சூத்திரத்து, 'நல் வரை......வாழலள்' என்னும் இச் செய்யுட் பகுதியைக் காட்டி, 'என் பது இரவும் பகலும் வாரலென்றது, வரைதல் வேட்கைப் பொருள தாய வழுவமைதி' என்றனர், நச்.

'முட்டு வயிற் கழறல்'[2] என்னும் சூத்திரத்து, வரைந்தெய்துங் கூட்டத்திற்கு ஏதுவாகிய மெய்ப்பாடுகளுள் ஒன்றாகிய அவன் புணர்வு மறுத்தல் என்பதற்கு, 'நல்வரை நாட...வாழலள்' என்ற பகுதியை எடுத்துக்காட்டி, "என்பது தலைமகள் குறிப்பினைத் தோழி கூறியதாக லான், இஃது அவன் புணர்வு மறுத்தல் எனப்படும். இஃது 'ஒன்றித் தோன்றும் தோழி மேன'[3] என்னும் இலக்கணத்தாற் றோழி குறிப்பா யினும், தலைமகள் குறிப்பெனவே படும் என்பது கொள்க" என் றுரைத்தனர், பேரா.

---

13. பாலை

[பொருள்வயிற் பிரியலுற்ற தலைமகனைத் தோழி செலவழுங்கு வித்தது; உடம்பட்டதூஉமாம்.]

[4]தன்கடற் பிறந்த முத்தின் ஆரமும்
முனைதிரை கொடுக்குந் துப்பின் தன்மலைத்
தெறலரும் மரபின் கடவுட் பேணிக்
குறவர் தந்த சந்தின் ஆரமும்
இருபே ராரமும் எழில்பெற அணியும்
திருவீழ் மார்பின் தென்னவன் மறவன்
குழியிற் கொண்ட மராஅ யானை
மொழியின் உணர்த்துஞ் சிறுவரை யல்லது
வரைநிலை யின்றி இரவலர்க் கீயும்
வள்வாய் அம்பிற் கோடைப் பொருநன்

1. தொல். பொருளி: க௬. 2. தொல். மெய்ப்: உக.
3. தொல். அகத்: ௬க. (பாடம்) 4. தன்கடல்.

பண்ணி தைஇய பயங்கெழு வேள்வியின்
விழுமிது நிகழ்வ தாயினுந் தெற்கேர்பு
கழிமழை பொழிந்த பொழுதுகொள் அமையத்துச்
சாய லின்துணை இவட்பிரிந் துறையின்
நோயின் றாக செய்பொருள் வயிற்பட
மாசில் தூமடி விரிந்த சேக்கைக்
கவவின் புன்மைக் கழிக வளவயல்
அழனுதி யன்ன தோகை ஈன்ற
கழனி நெல்லின் கவைமுதல் அலங்கல்
நிரம்பகன் செறுவில் வரம்பணையாத் துயல்வரப்
புலம்பொடு வந்த பொழுதுகொள் வாடை
இலங்குபூங் கரும்பி னேர்கழை இருந்த
வெண்குருகு நரல வீசும்
நுண்பல் துவலைய தண்பனி நாளே.

—பெருந்தலைச் சாத்தனார்.

(சொ - ள்.) க—கஉ. தன் கடல் பிறந்த முத்தின் ஆரமும் - தனது தென்கடலில் தோன்றிய முத்தாகிய ஆரமும், முனை நிறை கொடுக்கும் துப்பின் - பகைவர் திறைகொடுக்கும் வலிமையையுடைய தான, தன்மலைத் தெறல் அரும் மரபின் கடவுள் பேணி - தனது பொதியில்மலையில் உள்ள அடியார்களைத் துன்புறுத்தலில்லாத முருக வேளை வழிபட்டு, குறவர் தந்த சந்தின் ஆரமும் - குறவர்கள் கொண்டு வந்து தரும் சந்தனமாகிய ஆரமும்ஆய, இருபேர் ஆரமும் - இவ்விரு பெரிய ஆரங்களையும், எழில் பெற அணியும் - அழகுற அணியும், திரு வீழ் மார்பின் தென்னவன் மறவன் - இலக்குமி விரும்பும் மார்பினை யுடைய பாண்டியனது படைத்தலைவனும், குழியிற்கொண்ட மராஅ யானை - பயம்பில் பிடித்த பழகாத யானைகளை, மொழியின் உணர்த்தும் சிறுவரை அல்லது - உரிய மொழிகளால் தொழிலை அறிவிக்கும் சிறு பொழுதல்லது, வரைநிலை இன்றி - தனக்கெனச் சிறிதும் வரைந்து கொள்ளும் நிலைமையின்றி, இரவலர்க்கு ஈயும் - இரவலர்களுக்கு வழங் கும், வள்வாய் அம்பின் கோடைப்பொருநன் - கூர்மை வாய்ந்த அம் பினையுடைய கோடைக்குத் தலைவனுமாகிய, பண்ணி தைஇய பயம் கெழு வேள்வியின் - பண்ணி என்பான் செய்த பயன் மிக்க களவேள்வி யைப் போல, விழுமிது நிகழ்வதாயினும் - நீர் தேடிவரும் பொருளாற் சிறந்த பயன் நிகழுமாயினும்,

கஎ—உச. வளவயல் அழல்நுதி அன்ன - வளம் மிக்க வயலில் தீயின் கொழுந்தினை யொத்த, தோகை ஈன்ற - தோடுகளை ஈன்ற,

கழனி நெல்லின் கவை முதல் அலங்கல் - வயல் நெல்லின் பலவாகக் கிளைத்த முதலிலிருந்து தோன்றிய நெற்கதிர், வரம்பு அகன் செறுவில் - வரம்பிய அகன்ற வயலினிடத்து, வரம்பு அணையாத் துயல்வர - வரப்புக்களை அணையாகக் கொண்டு கிடந்து அலைய, புலம்பெரடு வந்த பொழுதுகொள் வாடை - தனிமைத் துன்பினைக் கொண்டு வரும் பனிக் காலத் தன்மை கொண்ட வாடைக் காற்று, இலங்கு பூங்கரும்பின் ஏர் கழை இருந்த - விளங்கும் பூக்களையுடைய கரும்பின் ஓங்கின தண்டின் மீதிருந்த, வெண்குருகு நரல வீசும் - வெண்ணுரை ஒலிக்கும்படி வீசுகின்ற, நுண் பல் துவலைய தண்பனி நாள் - நுண்ணிய பலவாகிய துளிகளைக் கொண்ட தண்ணிய பனிக்காலத்தே.

௧௨—௪. தெற்கு ஏர்பு கழி மழை பொழிந்த - (மேகங்கள்) தெற்கே எழுந்துபோய் மிக்க மழையைப் பொழியும், பொழுதுகொள் அமையத்து - மழைக்காலத் தன்மை வாய்ந்திடும் கூதிர்காலத்திற்கு, சாயல் இன் துணை இவள் - இனிய துணையாகிய மென்மை வாய்ந்த இவளை, பிரிந்து உறையின் - பிரிந்துபோய் வேற்றுநாட்டுத் தங்குவீராயின்,

௧௫—௭. வயிற்பட மாசுஇல் தூ மடி விரிந்த - தக்க இடத்தே குற்றமற்ற தூய அறுவை விரிக்கப்பெற்ற, சேக்கை கவவு இன்பு உருமைக் கழிக - படுக்கைக்கண் முயங்கும் இன்பம் உருமல் (அப்பனி நாள்) கழியினும் கழிக. செய்பொருள் நோய் இன்று ஆக - நீ தேடுகின்ற பொருட்கு எக்குறையும் நேரா தொழிவதாக.

(முடிபு) தலைவி பண்ணி நைஇய வேள்வியின் விழுமிது நிகழ்வதாயினும், கூதிர்ப் பொழுதிற்குத் துணையாய இவளைத் தண்பனி நாளில் பிரிந்துறையின், அப்பனி நாள் கவவு இன்புருமைக் கழிக; செய்பொருள் நோயின்றாக.

(வி - ரை) இருபெராரமும் அணியும் தென்னவன் மறவனும் இரவலர்க்கு யானை ஈயும் கோடைப் பொருநனுமாய பண்ணி என்றும், வயலில் நெல்லின் அலங்கல் துயல்வர வந்த வாடை, குருகு நரலவீசும் பனிநாள் என்றும் கூட்டுக. முத்தின், சங்கின் என்புழி, இன் சாரியை அல்வழிக்கண் வந்தன. பிறரால் தெறுதலரிய கடவுள் என்றுமாம். அணியும் மறவன் என்க; அணியும் தென்னவன் என்றுமாம். மொழி - யானைக்குத் தொழில் அறிவிக்கும் குறிப்பு மொழிகள். கோடை - கோட்டூர் என்பர் குறிப்புரையாசிரியர். வாடை வீசலின், மேகம் தெற்கு ஏர்பு என்றார். பொழுது கொள் அமையம் - கூதிர்ப்பொழுது. செய்பொருள் நோயின்றாக என்றது, அதற்கு இடையூறு உண்டாம் என்னும் கருத்தால். இடையூறுவது தலைவி தலைவனைப் பிரித்து உயிர் வாழாமையானுவது. அணையா - அணைந்து என்றுமாம்.

---

14. முல்லை

[பாணன் தனக்குப் பாங்காயினர் கேட்பச் சொல்லியது.]

அரக்கத் தன்ன செந்நிலப் பெருவழிக்
காயாஞ் செம்மல் தாஅய்ப் பலவுடன்
ஈயன் மூதாய் வரிப்பப் பவளமொடு
மணிமிடைந் தன்ன குன்றங் கவைஇய
அங்காட் டாரிடை மடப்பிணை தழீஇத்
திரிமருப் பிரலை புல்லருந் துகள
முல்லை வியன்புலம் பரப்பிக் கோவலர்
குறும்பொறை மருங்கின் நறும்பூ வயரப்
பதவுமேயல் அருந்து மதவுநடை நல்லான்
வீங்குமாண் செருத்தல் தீம்பால் பிலிற்றக்
கன்றுபயிர் குரல மன்றுநிறை புகுதரு
மாலையும் உள்ளா ராயிற் காலை
யாங்கா குவங்கொல் பாண வென்ற
மனையோள் சொல்லெதிர் சொல்லல் செல்லேன்
செவ்வழி நல்யாழ் இசையினென் பையெனக்
கடவுள் வாழ்த்திப் பையுள் மெய்ந்நிறுத்
தவர்திறஞ் செல்வேன் கண்டனென் யானே
விடுவிசைக் குதிரை விலங்குபரி முடுகக்
கல்பொரு திரங்கும் பல்லார் நேமிக்
கார்மழை முழக்கிசை கடுக்கும்
முனைநல் லூரன் புனைநெடுந் தேரே.

— ஒக்கூர் மாசாத்தனார்.

(சொ - ள்.) ௧—௪. அரக்கத்து அன்ன செந்நிலப் பெருவழி - செவ்வரக்கினை யொத்த சிவந்த நிலத்திற் செல்லும் பெரு நெறியில், காயா செம்மல் தாஅய் - காயாவின் வாடிய பூக்கள் பரவிக்கிடக்க, ஈயல் மூதாய் பல உடன் வரிப்ப - தம்பலப் பூச்சிகள் பலவும் ஒருங்கே வரிவரியாக ஊர்ந்து செல்ல, பவளமொடு மணி மிடைந்தன்ன குன்றம் கவைஇய - (அவை) பவளத்தொடு நீலமணி நெருங்கி யிருந்தா லொக்கும் குன்றம் சூழ்ந்த, அம் காட்டு ஆர் இடை - காட்டின் அகத்தே அரிய இடங்களில், மடப்பிணை தழீஇ - மடப்பத்தையுடைய பெண் மானைத் தழுவி, திரிமருப்பு இரலை - திரித்து விட்டால் போன்ற கொம்பினையுடைய ஆண்மான், புல் அருந்து உகள - புல்லை அருந்தித்

தாவிச் செல்ல, முல்லை வியன்புலம் பரப்பி - (ஆனினங்களை) அகன்ற முல்லை நிலத்திலே பரவி மேயவிட்டு, கோவலர் குறும்பொறை மருங்கின் நறும்பூ அயர - ஆயர்கள் சிறிய குன்றுகளிடத்தே நறிய பூக்களை மாலையாகக் கட்டி மகிழ்ந்திருக்க, பதவு மேயல் அருந்து மதவு நடை நல்ஆன் - அறுகம் புல்லாய உணவினை அருந்திய வலிய நடையினையுடைய நல்ல ஆனினங்கள், வீங்கு மாண் செருத்தல் - பருத்த மாண்புற்ற மடி, தீம்பால் பிலிற்ற - இனிய பாலைச் சொரிய, கன்று பயிர் குரல மன்று நிறை புகுதரும் - கன்றை நினைந்து அழைக்கும் குரலினவாய் மன்றுகளில் நிறையச் செல்லும், மாலையும் உள்ளாராயின் - இம் மாலைக் காலத்தும் நம் தலைவர் நம்மை நினைத்து வாராராயின்,

கஉ—ச. காலை யாங்கு ஆகுவம் கொல் பாண என்ற - பாணனே இக்காலத்து யாங்கள் எங்ஙனம் உறுவேம் என்று கூறிய, மனையோள் சொல் எதிர் சொல்லல் செல்லேன் - தலைவியின் சொல்லிற்கு மறுமொழி கூற இயலாதவனாகி,

கரு—எ. செவ்வழி நல்யாழ் இசையினென் பையென - யாழில் நல்ல செவ்வழிப்பண்ணை மெல்லெலன இசைத்து, கடவுள் வாழ்த்தி - கடவுளை வாழ்த்தி, பையுள் மெய் நிறுத்தி - துயரினைக்கொண்ட மெய்யினனாய், அவர் திறம் செல்வேன் யான் - அவர்மாட்டுச் செல்வேனாகிய யான்,

க அ—உக. விடு விசைக் குதிரை - தூண்டப்பெறும் வேகங்கொண்ட குதிரையின், விலங்கு பரி முடுக-எதிர்ப்படுமவற்றை விலங்கி முன் செல்லும் செலவு மிக, கல் பொருது இரங்கும் பல் ஆர் நேமி - கற்களில் மோதி ஒலிக்கும் பல ஆரங்கால்களையுடைய உருளையின் ஒலி, கார் மழை முழக்கிசை கடுக்கும் - கார்காலத்து மழையின் இடி முழக்கினை ஒக்கும், முனைநல்லூரன் புனைநெடுந்தேர் - முனையாகிய நல்ல ஊரிடத்தானாகிய தலைவனுடைய அணிசெயப்பெற்ற நீண்ட தேரினை,

உஉ. கண்டனென் - கண்டேன்.

(முடிபு) 'பாண! எம் தலைவர், மாலையும் உள்ளாராயின், காலை யாங்காகுவம்' என்ற (தலைவி) சொல்லெதிர் செல்லேன் கடவுள் வாழ்த்தி, அவர் திறம் செல்வேன் முனை நல்லூரன் நெடுந்தேர் கண்டனென்; (எனப் பாணன் பாங்காயினர்க்குக் கூறினன்.)

இரலை உகள, கோவலர், நறும்பூ அயர, நல்லான் புகுதரு மாலை என்க.

(வி - ரை.) அரக்கத்தன்ன : அத்துச்சாரியை. காயாஞ் செம்மல் என மெலிமிக்கது, [1]'யாமரக்கிளவி' என்னும் சூத்திரத்து இலேசாற் கொள்க. காயாஞ் செம்மலுக்கு நீல மணியும், ஈயல் மூதாய்க்குப் பவளமும் உவமையாம் ; எதிர் நிரனிறை. ஈயல் மூதாய் - தம்பலப்

1. தொல். எழுத்: உஉச.

பூச்சி; இந்திரகோபம். புல்லருந்து - புல்லை அருந்தி. நிறை-நிறைய. காலை - காலம். செவ்வழி - முல்லைப்பண். முனை - பகைப்புலம்.

(மே - ள்.) [1]'நிலம் பெயர்ந்துறைதல்' என்னும் சூத்திரத்துப் பாணர்க்குக் கூற்று நிகழ்வதற்கு இச் செய்யுளை எடுத்துக் காட்டினர், நச்.

[2]'மனையோள் கிளவியும்' என்னுஞ் சூத்திரத்து, 'மாலையும்...... பாண' என்னும் இச்செய்யுட் பகுதியை, பாணன் கேட்பத் தலைவி கூற்று வந்ததற்கு எடுத்துக் காட்டினர், பேரா.

---

15. பாலை

[மகட் போக்கிய தாய் சொல்லியது.]

எம்வெங் காமம் இயைவ தாயின்
மெய்ம்மலி பெரும்பூட் செம்மற் கோசர்
கொம்மையம் பசுங்காய்க் குடுமி விளைந்த
பாக லார்கைப் பறைக்கண் பீலித்
தோகைக் காவின் துளுநாட் டன்ன
வறுங்கை வம்பலர்த் தாங்கும் பண்பிற்
செறிந்த சேரிச் செம்மல் மூதூர்
அறிந்த மாக்கட் டாகுக தில்ல
தோழி மாரும் யானும் புலம்பச்
சூழி யானைச் சுடர்ப்பூண் நன்னன்
பாழி அன்ன கடியுடை வியன்நகர்ச்
செறிந்த காப்பிகந் தவனொடு போகி
அத்த இருப்பை ஆர்கழல் புதுப்பூத்
துய்த்த வாய துகள்நிலம் பரக்கக்
கொன்றை யஞ்சினைக் குழற்பழங் கொழுதி
வன்கை யெண்கின் வயநிரை பரக்கும்
இன்துணைப் படர்ந்த கொள்கையொ டோராங்குக்
குன்ற வேயில் திரண்டஎன்
மென்றோள் அஞ்ஞை சென்ற ஆறே.　　—மாமூலனார்.

(சொ - ள்.) கூ—கக. தோழிமாரும் யானும் புலம்ப - தன் தோழிமாரும் யானும் தனிமையான் வருந்த, சூழி யானைச் சுடர்ப்பூண்

---

1. தொல். கற்பு: உஅ.　　2. தொல். செய்யு: ககக.

நன்னன் பாழி அன்ன - முகபடாம் அணிந்த யானையினையும் ஒளிவிடும் அணியினையும் உடைய நன்னனது பாழி என்னும் பதியை ஒத்த, கடி யுடை வியன் நகர் செறிந்த காப்பு இகந்து - காவல் மிக்க தந்தையது பெரிய மனையின் மிக்க காவலைத் தாண்டி, அவனொடு போகி - தலைவ னொடு புறப்பட்டு, இன்துணைப் படர்ந்த கொள்கையொடு ஒராங்கு - தன் இனிய துணைவனை நினைந்த கொள்கையால் ஒருங்குகூடி, குன்றத்து வேயின் திரண்ட மெல் தோள் என் அஞ்ஞை சென்ற - குன்றத்து மூங்கில்போலத் திரண்ட மெல்லிய தோளையுடைய என் அன்னை சென்றடைந்ததும், அத்தம் இருப்பை ஆர் கழல் புது பூ - அருஞ்சுரத் தில் உள்ள இருப்பை மரத்தின் ஆர்க்குக் கழன்ற புதிய பூக்களை, துய்த்த வாய் - தின்ற வாயினவாய், துகள் நிலம் பரக்க - நிலத்திலே தூளி பரக்கச் சென்று, கொன்றை அம்சினை குழல் பழம் கொழுதி - கொன்றையினது அழகிய கிளைகளிலுள்ள குழல்போலும் பழத்தைக் கொழுதி, வன் கை எண்கின் வயநிரை பரக்கும்-வலிய கையினையுடைய கரடிகளின் வலிய கூட்டம் பரந்து செல்வதுமாய, ஆறு - நெறி.

க—அ. எம் வெம் காமம் இயைவதாயின் - எமது மிக்க விருப்பம் கைகூடுவதாயின், மெய் வலி பெரும்பூண் செம்மல் கோசர் - மெய்ம் மொழியாற்சிறந்த பெரிய அணிகளையுடைய தலைமைகொண்ட கோசர் களது, குடுமி கொம்மை அம் பசுங்காய் விளைந்த பாகல் ஆர்கை - ஆர்க்கினைத் தலையிலுடைய திரண்ட பசிய காய் முற்றின பாகற்பழத் தைத் தின்னுதலுடைய, பறைக் கண் பீலித் தோகைக் காவின் - பறை போல வட்டமான கண்களைக் கொண்ட தோகைகளையுடைய மயில்கள் மிக்க சோலைகளையுடைய, துளுநாட்டு அன்ன-துளுநாட்டை யொத்த, வறுங்கை வம்பலர் தாங்கும் பண்பின் - பொருளின்றி வரும் புதியர் களைப் புரக்கும் நற்பண்பினையுடைய, செறிந்த சேரி செம்மல் மூதூர் அறிந்த மாக்கட்டு ஆகுக - நெருங்கிய சேரிகளைக் கொண்ட தலைமை வாய்ந்திருக்கும் மூதிய ஊர்களில் முகமறிந்த மக்களை உடையது ஆகுக.

(முடிபு) எம் வெங்காமம் இயைவதாயின் அவனொடுபோகி என் அஞ்ஞை சென்ற ஆறு, துளு நாட்டன்ன செம்மல் மூதூரில் அறிந்த மாக்கட்டு ஆகுக.

கோசர் துளு நாடு என்க. அஞ்ஞை சென்ற ஆறு, வயநிரை பரக்கும் ஆறு எனத் தனித்தனி கூட்டுக.

(வி - ரை.) கோசர் மெய்ம்மையிற் சிறந்தவர் என்பது, 'ஒன்று மொழிக் கோசர்'[1] எனவும், 'வாய்மொழி நிலைஇய சேண்விளங்கு நல் லிசை, வளங்கெழு கோசர்'[2] எனவும் வருவனவற்றான் அறியப்படும். இனி, மெய்ம்மலி என்பதற்கு உடம்பிலே நிறைந்த எனலுமாம். பீலி- தோகை, சிறை. தோகை-மயில். தில் - விழைவு. பாழி-நன்னனது ஊர். கொன்றைப் பழத்தினைத் துருவித் துளைத்துக் குழலாகக்கொள்

1. அகம்: ககசு. 2. அகம்: உ0௫.

ளுதல் உண்டாகலின், குழற்பழம் என்றார். அஞ்ஞை - அன்னை. செவிலி, தலைவியை அருமை பாராட்டி அஞ்ஞை என்றாள்.

(உ - றை.) 'கரடி ஆர்கழல் புதுப்பூவை நுகர்ந்த வாயையுடைய வாய் அதிலே நிறைந்து, கொன்றைப் பழத்தைக் கோதினாற்போல, அவளும் தலைவனோடும் கூடிய இன்பத்திலே நிறைந்த செருக்கிலே' கூடி வளர்ந்த தோழிமாரையும், பெற்று வளர்த்த என்னையும் புறக் கணித்துப் போனாள்' என்பது.

---

16. மருதம்

[பரத்தையர் சேரியினின்றும் வந்த தலைமகன் யாரையும் அறி யேன் என்றாற்குத் தலைமகள் சொல்லியது.]

நாயுடை முதுநீர்க் கலித்த தாமரைத்
தாதின் அல்லி அயலிதழ் புரையும்
மாசில் அங்கை மணிமருள் அவ்வாய்
நாவோடு நவிலா நகைபடு தீஞ்சொல்
யாவரும் விழையும் பொலந்தொடிப் புதல்வனைத்
தேர்வழங்கு தெருவில் தமியோற் கண்டே
கூரெயிற் றரிவை குறுகினள் யாவரும்
காணுநர் இன்மையின் செத்தனள் பேணிப்
பொலங்கலஞ் சுமந்த பூண்தாங் கிளமுலை
வருக மாளஎன் னுயிரெனப் பெரிதுவந்து
கொண்டனள் நின்றோள் கண்டுநிலைச் செல்லேன்
மாசில் குறுமகள் எவன்பே துற்றனை
நீயுந் தாயை இவற்கென யான்தன்
கரைய வந்து விரைவனென் கவைஇக்
களவுடம் படுநரில் கவிழ்ந்துநிலங் கிளையா
நாணி நின்றோள் நிலைகண் டியானும்
பேணினென் அல்லனோ மகிழ்ந வானத்
தணங்கருங் கடவு ளன்னோள் நின்
மகன்தா யாதல் புரைவதாங் கெனவே.

—சாகலாசனார்.

(சொ - ள்.) கஎ. மகிழ்ந - தலைவனே!,

க—ஓ. நாயுடை முது நீர் கலித்த தாமரைத் தாதின் அல்லி அயல் இதழ் புரையும்-நீர்நாய்களையுடைய பழைய நீரில் தழைத்த தாமரையின்

பூந்தாதாகிய அல்லியின் அடுத்த இதழினை யொத்த, மாசு இல் அங்கை மணி மருள் அவ்வாய் - குற்றமில்லாத அகங்கையினையும் பவளம் போன்ற அழகிய வாயினையும், நாவொடு நவிலா நகை படு தீஞ்சொல்- நாவாற் பயின்று பேசப்படாத கேட்டார்க்கு மகிழ்ச்சியைத் தரும் இனிய குதலைச் சொற்களையும் உடைய, யாவரும் விழையும் பொலம் தொடிப் புதல்வனை - கண்டார் அனைவரும் விரும்பும் பொற்றொடி யணிந்த புதல்வனை,

சு—கக. பொலம் கலம் சுமந்த-பொற்கலன்களைத் தாங்கிய, கூர் எயிற்று அரிவை - கூரிய பற்களையுடைய நின் பரத்தை, தேர் வழங்கு தெருவில் தமியோன் கண்டு - அவன் சிறுதேர் ஓட்டிக் கொண் டிருந்த தெருவில் தனியனாய் நிற்பக் கண்டு, செத்தனள் பேணி - நின் ஒப்புமை கருதிப் போற்றி, யாவரும் காணுநர் இன்மையின் - யாருங் காண்போர் இன்மையின், குறுகினள் - குறுகி, பெரிது உவந்து - மிக மகிழ்ந்து, வருக என் உயிரென - என் உயிரே வருவாயாக என, பூண் தாங்கு இளமுலை கொண்டனள் நின்றோள் கண்டு - பூண்களை யணிந்த இளமுலைகளில் அணைத்துக்கொண்டு நின்றவளைக் கண்டு,

கக—ச நிலைச் செல்லேன் - நின்ற நிலையினின்று மீளேனாய், விரைவனென் வந்து கவைஇ - விரைந்து வந்து அவளை அணைத்து, மாசில் குறுமகள் - குற்றமற்ற இளைய மகளே, எவன் பேதுற்றனை - ஏன் மயங்கினை, நீயும் தாயை இவற்கு என-இவனுக்கு நீயும் ஒருதாயல் லையோ என்று, யான் தன் கரைய - யான் அவளிடம் கூற,

கடு—சு. களவு உடம்படுநரில் கவிழ்ந்து - தாம் செய்த களவைக் (கண்டுகொண்டார் முன்) உடன்பட்டு நிற்பார்போல முகம் கவிழ்ந்து, நிலம் கிளையா நாணி நின்றோள் நிலை கண்டு - நிலத்தைக் கால்விரலாற் கிறி நாணி நின்ற அவள் தன் நிலையினைக் கண்டு,

கசு—கூ. வானத்து அணங்கு அருங் கடவுள் அன்னோள் - வானத் தின் அரிய தெய்வமாகிய அருந்ததி போன்றாள், நின் மகன் தாயாதல் புரைவது எனவே - நின் மகனுக்குத் தாயாதல் ஒக்கும் என எண்ணி, யானும் பேணினென் அல்லனோ - யானும் அவளை விரும்பினேன் அல்லனோ?

(முடிபு) மகிழ்ந! கூர் எயிற்றரிவை, புதல்வனைக் கண்டு கொண்டனள் நின்றோட் கண்டு, வந்து கவைஇ, நீயும் தாயை இவற்கென யான் கரைய, நாணி நின்றோள் நிலைகண்டு, நின்மகன் தாயாதல் புரைவது எனவே பேணினென் அல்லனோ?

அரிவை குறுகினள் பேணி முலை (யிடத்துக்) கொண்டனள் நின்றோள் எனவும், யான் விரைவனென் வந்து கவைஇக் கரைய எனவும் கூட்டுக.

(வி - ரை.) அல்லி என்றது ஈண்டுத் தாதினை உணர்த்திற்று. அவிரிதழ் என்னும் பாடத்திற்கு அல்லியாகிய இதழென இருபெய

ரொட்டாகக் கொள்க; அல்லி - அகவிதழ். மணி - பவளம். நகைபடு தீஞ்சொல் என்பதற்கு, நகையைத் தோற்றுவிக்கும் திருந்தாத சொல் என்றுமாம்; இஃது இளமை பொருளாகத் தோன்றிய நகையாம். பகை வரும் உட்பட யாவரும் விழையும் என்றாள்; 'செறுநரும் விழையும் செயிர்தீர் காட்சிச் சிறுவர்' என (66) இந் நாலுட் பின்னர் வருதலுங் காண்க. தலைவனது தேர் செல்லும் தெரு, என்றுமாம்; தலைவன் பரத்தைவயின் தேரூர்ந்து செல்வான் ஆகலின். செத்து-கருதி; ஒப்புமாம். பொலங்கலஞ் சுமந்த பூண் தாங்கு இளமுலை என்றது, தலைவனை வயமாக்கும் அவளது இளமை கருதிக் கூறியது. மாள: அசை; புதல்வனை உயிரென்றது, காதல் பற்றியது. தாயை; 'ஐ'முன்னிலைக்கண் வந்தது. எப்பொழுதும் நின்னையே உள்ளத்துக் கொண்டிருப்பாள் என எள்ளுவாளாய் அருந்ததியன்னாள் என்றாள். இனி, அணங்கு அருங் கடவுள் என்பதற்குப் பிறரை வருத்துகின்ற எய்தற்கு அரிய தெய்வமகள் என்றுமாம்.

(மே - வி.) 'அவனறிவு ஆற்ற'[1] என்னும் சூத்திரத்து 'காமக் கிழத்தி தன்மகத் தழீஇ ஏமுறு விளையாட் டிறுதிக்கண்' தலைவி கூற்று நிகழ்வதற்கு, இச்செய்யுளையும், அச் சூத்திரத்து 'அவன் வயிற்பிரிப்பினும் என்பதற்கு 'நின்மகன் றாயாதல்' என்னும் இச்செய்யுட் பகுதியையும், 'கற்பு வழிப்பட்டவள்'[2] என்னும்சூத்திரத்து, தலைவி பரத்தையை ஏத்துதல் வழுவமைதியாம் என்பதற்கு 'நாணி...புரைவதாங் கெனவே' என்னும் இச் செய்யுட் பகுதியையும் உதாரணம் காட்டினர், நச்.

"எள்ளலிளமை"[3] என்னும் சூத்திரத்து, 'நாவொடு நவிலா நகை' என்பது, பிறர் இளமை பொருளாக நகை பிறந்தது என்றும், 'பெருமையுஞ் சிறுமையும்'[4] என்னும் சூத்திரத்து, 'களவுடம் படுநரிற் கவிழ்ந்து நிலங் கிளையா' என்பது நகை யென்னும் மெய்ப்பாடு பற்றிய உவமம் என்றும், சிறுமை பற்றி வந்ததென்றும், 'உவமப் பொருளை'[5] என்னும் சூத்திரத்து, களவுடம்படுநர்க்குள்ள வேறுபாடு உலகத்து அடிப்படவந்த வழக்காதலான் அஃது ஏதுவாக அறிந்து கொள்ளப் படுவதாயிற்று என்றும் கூறுவர், பேரா.

---

1. தொல். கற்: ௯. 2. தொல். பொருளி: ௩௧.
3. தொல். மெய்ப்: ௪. 4. தொல். உவம: ௧௧.
5. தொல். உவம: ௨௧

17. பாலை

[மகட்போக்கிய செவிலித்தாய் சொல்லியது.]

வளங்கெழு திருநகர்ப் பந்துசிறி தெறியினும்
இளந்துணை யாயமொடு கழங்குட னாடினும்
உயங்கின் றன்னையென் மெய்யென் றசைஇ
மயங்குவியர் பொறித்த நுதலள் தண்ணென
முயங்கினள் வதியும் மன்னே இனியே
தொடிமாண் சுற்றமும் எம்மும் உள்ளாள்
நெடுமொழித் தந்தை அருங்கடி நீவி
நொதும லாளன் நெஞ்சறப் பெற்றஎன்
சிறுமுதுக் குறைவி சிலம்பார் சீறடி
வல்லகோல் செல்லத் தாமே கல்லென
ஊரெழுந் தன்ன உருகெழு செலவின்
நீரி லத்தத் தாரிடை மடுத்த
கொடுங்கோ லுமணர் பகடுதெழி தெள்விளி
நெடும்பெருங் குன்றத் திமிழ்கொள இயம்புங்
கடுங்கதிர் திருகிய வேய்பயில் பிறங்கல்
பெருங்களி றுரிஞ்சிய மண்ணரை யாஅத்
தருஞ்சுரக் கவலைய அதர்படு மருங்கின்
நீளரை இலவத் தூழ்கழி பன்மலர்
விழவுத் தலைக்கொண்ட பழவிறல் மூதூர்
நெய்யுமிழ் சுடரில் கால்பொரச் சில்கி
வைகுறு மீனில் தோன்றும்
மைபடு மாமலை விளங்கிய சுரனே.

—கயமனார்.

(சொ - ள்.) ௧—௫. வளம்கெழு திருநகர் - செல்வம் பொருந்திய அழகிய மனையின்கண்ணே, பந்து சிறிது எறியினும் - சிறிது பொழுது பந்து எறிந்து ஆடினும், இளந்துணை ஆயமொடு - தன்னையொத்த இளையராய ஆயத்தாரோடு, கழங்கு உடன் ஆடினும் - ஒருங்கிருந்து கழங்கு ஆடினும், அன்னை என் மெய் உயங்கின்று என்று அசைஇ - அன்னையே! என் உடல் வருந்திற்று என்று கூறித் தளர்ந்து, மயங்கு வியர் பொறித்த நுதலள் - செறியும் வியர்வு அரும்பிய நெற்றியினளாய், தண்ணென முயங்கினள் வதியும் - (என்உடல்) தண்ணென்று குளிர என்னைத் தழுவி அமர்வள் (முன்பு), மன் - அந்தோ அது கழிந்ததே!

௭—௯. இனி - இப்பொழுது, தொடிமாண் சுற்றமும் எம்மும் உள்ளாள் - தொடியையுடைய சிறந்த ஆயத்தாரையும் எம்மையும் நினையாளாய், நெடுமொழித் தந்தை அருங்கடி நீவி - மிக்க புகழையுடைய தன் தந்தையினது அரிய காவலினைக் கடந்து சென்று;

௧௦—௨௨. கல் என ஊர் எழுந்தன்ன உருகெழு செலவின் - கல்லென்னும் ஒலியுடன் ஓர் ஊரே எழுந்து செல்வதொக்கும் அச்சம் மிக்க செல்கையையுடைய, கொடுங்கோல் உமணர் - கொடிய கோல்களையுடைய உப்புவாணிகர், நீர்இல் அத்தத்து ஆரிடை - நீரற்ற காட்டின் அரிய இடங்களிலே, மடுத்த பகடு தெழி தெள்விளி - தடையுறும் கடாக்களை உரப்பியோட்டும் தெள்ளிய ஒலிகள், நெடும் பெருகுன்றத்து இமிழ் கொள இயம்பும் - நெடிய பெரிய மலையில் எதிரொலி உண்டாக வந்திசைப்பதும், கடுங்கதிர் திருகிய வேய்பயில் பிறங்கல் - கடுமை மிக்க ஞாயிற்றின் கதிர்கள் முறுகிய மூங்கில் அடர்ந்த பக்கமலைகளையுடையதும், பெருகளிறு உரிஞ்சிய மண் அரை யாத்து - பெரிய களிறுகள் உரிஞ்சியதால் சேற்று மண்ணைப் பொருந்திய அடியினையுடைய யா மரங்களையுடைய; அருஞ் சுரக் கவலைய அதர்படு மருங்கின் - அரிய சுரத்தே கவர்த்த நெறிகள் பொருந்திய பக்கங்களில், நீள் அரை இலவத்து ஊழ்கழி பல் மலர் - நீண்ட அடியினையுடைய இலவ மரத்தின் முதிர்ச்சி மிக்க பலவாய பூக்கள், விழவு தலைக் கொண்ட பழவிறல் மூதூர் - விழாக்களைத் தன்னிடத்தே கொண்ட பழைய வெற்றியைக் கொண்ட மூதிய ஊரில், நெய் உமிழ் சுடரில் - நெய்யைப் பெய்த விளக்கின் சுடர் விழுவதுபோல விழும்படி, கால்பொரச் சில்கி - காற்றுப் பொருதலால் எஞ்சியவை சிலவாகி, வைகுறு மீனில் தோன்றும் - விடிகின்ற காலத்து மீன்போலச் சிலவாய்த் தோன்றுவதுமாகிய, மை படு மாமலை விலங்கிய சுரன்-மேகங்கள் பொருந்திய பெரிய மலைகள் குறுக்கிட்டு நிற்கும் சுரநெறியினில்;

௮-௧௦. செல்ல - செல்லுதற்கு, ஏதுமலாளன் நெஞ்சு அறப் பெற்ற - ஏதிலாளனது நெஞ்சு தனக்கே யுரித்தாகப் பெற்ற, என் சிறு மூதுக்குறைவி - எனது சிறிய மூதறிவுடையவளது, சிலம்பு ஆர் சீறடி தாம் - சிலம்பு பொருந்திய சிறிய அடிகள், வல்லகொல் - வல்லுநவோ?

(முடிபு) சிறு முதுக் குறைவியாய என் மகள், முன்பு பந்து சிறிது எறியினும் கழங்கு ஆடினும் அசைவு முயங்கினோள் வதியும். இனி, அவள் சிலம்பு ஆர் சீறடி தந்தை அருங்கடி நீவி, மலை விலங்கிய சுரன் செல்ல வல்லகொல்.

உருகெழு செலவின் உமணர் எனவும், ஆரிடை மடுத்த பகடு எனவும் கூட்டுக. தெள்விளி இயம்பும் மலை எனவும், பிறங்கலையுடைய மலையெனவும், பன்மலர் சில்கித் தோன்றும் மலையெனவும் இயையும்.

(வி - ரை.) மன் கழிவின்கண் வந்தது. நெடுமொழி - புகழ்; வஞ்சினமுமாம். அறப் பெறுதல் - உரித்தாகப் பெறுதல்; 'தன்னுயிர் தானறப் பெற்றானை' (௨௬௮) என்றார் திருவள்ளுவரும். சிறுமுதுக் குறைவி - இளமையிலே அறிவு முதிர்ந்தவள்; 'சிறுமுதுக் குறைவிக்குச் சிறுமையுஞ் செய்தேன்'[1] என்றார் இளங்கோவடிகளும். உடனர் கூட்டத்து மிதுநியைக் குறித்தற்கு ஊனேரழுந்தன்ன என்றார். ஆரிடை - ஏற்றிழிவுடைய இடங்கள். இமிழ்கொள - இனிமை பொருந்த என்றுமாம். களிறு, மாரிக்காலத்து உண்டான சேறு உலர்ந்து விறுவிறுத்த உடலை உரிஞ்சுதலால் யாமரம் மண்ணையுடைய அரையாயிற்று. விடிகின்ற காலத்து, மீன்கள் பல மறையச் சிலவே தோன்றுமாகலின், வைகுறு மீனிற்றோன்றுமென்றார்.

---

18. குறிஞ்சி

[தோழி இரவு வருவானைப் பகல் வாவென்றது.]

நீர்நிறம் கரப்ப ஊழுறு புதிர்ந்து
பூமலர் கஞலிய கடுவரற் கான்யாற்றுக்
கராஅந் துஞ்சுங் கல்லுயர் மழிசுழி
மராஅ யானை மதந்தப ஒற்றி
உராஅ ஈர்க்கும் உட்குவரு நீத்தங்
கடுங்கட் பன்றியின் நடுங்காது துறந்து
நாம அருந்துறைப் பேர்தந் தியாமத்
தீங்கும் வருபவோ ஓங்கல் வெற்ப
ஒருநாள் விழுமம் உறினும் வழிநாள்
வாழ்குவள் அல்லளென் தோழி யாவதும்
ஊறில் வழிகளும் பயில வழங்குநர்
நீடின் றாக இழுக்குவர் அதனால்
உலமரல் வருத்தம் உறுதுமெம் படப்பைக்
கோடுந்தேன் இழைத்த கோடுயர் நெடுவரைப்
பழந்தூங்கு நளிப்பில் காந்தளம் பொதும்பில்
பகனீ வரினும் புணா தவை அகன்மலை
வாங்கமைக் கண்ணிடை கடுப்பயாய்
ஓம்பினள் எடுத்த தடமென் தோளே.

—கபிலர்.

---

1. சிலப் : ௧௧ : ௬௮.

(சொ - ள்.) ௮. ஓங்கல் வெற்ப - உயர்ந்த மலையையுடைய தலைவனே.

௧—௫. நீர் நிறம் கரப்ப ஊழ் உறுபு உதிர்ந்து பூமலர் கஞலிய கடுவரல் கான்யாற்று - நீரின் நிறம் மறைய முதிர்புற்று உதிர்ந்து அழகிய மலர்கள் நெருங்கிய நீர் கடுகி வருதலையுடைய காட்டாற்றில், கரா அம் துஞ்சும் கல் உயர் மறிசுழி - முதலை தங்கும் உயர்ந்த கல்லில் மோதி மீளும் சுழிகளையுடையதும், மராஅ யானை மதம் தப ஒற்றி உராஅ ஈர்க்கும் உட்குவரு நீத்தம் - இனத்தோடு மருவாத களிற்றி யானையை அதன் மதம் கெட மோதி வலியுற்று இழுத்தலின் அச்சம் தோன்றுவதுமாகிய வெள்ளத்தினை;

௬—௮. கடுங்கண் பன்றியின் நடுங்காது துறந்து-அஞ்சாமையை யுடைய பன்றியைப்போல நடுங்குதலின்றிக் கடந்து ஏறி, நாம் அருந் துறை பேர்தந்து யாமத்து ஈங்கும் வருபவோ - (அணங்கு உறைதலின்) அச்சம் தரும் அரிய துறையினைத் தாண்டி நள்ளிரவில் இத்தகைய இடத்தும் மக்கள் வருவாருளரோ;

௯—௧0. ஒரு நாள் விழுமம் உறினும் வழிநாள் என்தோழி வாழ் குவள் அல்லள் - ஒருநாள் நீ துன்பம் உறினும் பின்னுள் என் தோழி உயிர்வாழ்வாள் அல்லள்;

௧0 ௨. யாவதும் ஊறு இல் வழிகளும் பயில வழங்குநர் நீடு இன்றாக இழக்குவர்-இடையூறு சிறிதும் இல்லாத வழிகளிலும் அங்குப் பலகாலும் போய் வருவார் நீடுதல் இலையாகத் தவறு எய்துவர்;

௧௨—௩. அதனால் உலமரல் வருத்தம் உறுதும் - அதனால் யாங் கள் மனம் சுழலும் வருத்தத்தினை யடைவோம்;

௧௩—௮. அகல்மலை வாங்கு அமைக்கண் இடை கடுப்ப - அகன்ற மலையிலுள்ள வளைந்த மூங்கிலின் கணுக்கட்கு நடுவான இடத்தை யொக்க, யாய் ஓம்பினள் எடுத்த தடமென் தோள் - யாய் போற்றி வளர்த்த தலைவியின் பெரிய மென்மை வாய்ந்த தோளை, எம்படப்பை - எம் தோட்டத்தினை யடுத்துள்ள, கொடு தேன் இழைத்த - வட்டமாகிய தேனிறால் வைக்கப்பெற்ற, கோடு உயர் நெடு வரை - சிமையம் உயர்ந்த நீண்ட மலைக்கண், பழம் தூங்கு நளிப்பில் - பழங்கள் தொங்கு கின்ற மரச்செறிவினுள், காந்தள் அம் பொதும்பில் - காந்தளினுடைய புதரிடத்து, பகல் நீ வரினும் புணர்குவை - பகற்கண் நீ வரினும் பொருந்துவை.

(முடிபு) வெற்ப! கான்யாற்று நீத்தம் நடுங்காது துறந்து யாமத்து ஈங்கும் வருபவோ; என்தோழி வாழ்குவள் அல்லள்; ஊறில் வழிகளும் வழங்குநர் இழுக்குவர்; அதனால் வருத்தமுறுதும்; தடமென்றோள் காந்தளம் பொதும்பிற் பகல் வரினும் பெறுகுவை.

கான்யாற்றுச் சுழியையுடைய நீத்தம் எனவும், யானையையுடைய நீத்தம் எனவும் இயையும்.

(வி - ரை.) உராஅ - அலைய என்றுமாம். நாம : நாம் என்னும் உரிச்சொல் ஈறு திரிந்தது. பேர்தந்து - பேர்ந்து. ஈங்கு - தன்மைக் கண் வந்தது. அன்றோ வாழாள் என்றது வழிநாள் வாழாள் என்றது, அறிவது பின்னுளிலாகலின். யாய் - செவிலி.

'கொடுந்தேன்......பொதும்பின்' என்றமையால், இரவுக்குறி விலக்கிப் பகற்குறி உடன்பட்டாள் போலக் கூறினும், தேன் அழிக்க வருவாராலும், பழமெடுக்க வருவாராலும், பூப்பறிக்க வருவாராலும் பகற்குறியும் அரிதாம் என்று குறிப்பால் மறுத்தாளாம்.

(மே - ள்.) 'பொழுதும் ஆறும்'[1] என்னும் சூத்திரத்து, 'அவனூறஞ்சல்' என்றதற்கு, 'ஒரு நாள் விழுமமுறினும் வழிநாள், வாழ்குவ ளல்லள் என்றோழி' என்னும் பகுதியை எடுத்துக் காட்டினர். நச்.

19. பாலை

[நெஞ்சினாற் பொருள் வலிக்கப்பட்டுப் பிரிந்த தலைமகன் தலைமகள் நலன் நயந்து உள்ளிய நெஞ்சினைக் கழறியது.]

அன்றவண் ஒழிந்தன்றும் இலையே வந்துநனி
வருந்தினை வாழியென் நெஞ்சே பருந்திருந்
துயாவிளி பயிற்றும் யாவுயர் நனந்தலை
உருள்துடி மதுளியின் பொருள்தேரிந் திசைக்குங்
கடுங்குரற் குடிஞைய நெடும்பெருங் குன்றம்
எம்மோ டிறத்தலும் செல்லாய் பின்னின்
றொழியச் சூழ்ந்தனை யாயின் தவிராது
செல்லினிச் சிறக்கநின் னுள்ளம் வல்லே
மறவல் ஓம்புமதி எம்மே நறவின்
சேயிதழ் அனைய வாகிக் குவளை
மாயிதழ் புரையும் மலிர்கோள் ஈரிமை
உள்ளகங் கனல உள்ளுதோ றுலறிப்
பழங்கண் கொண்ட[2] கதழ்ந்துவீழ் அவிரறல்
வெய்ய உகுதர வெரீஇப் பையெனச்
சில்வளை சோரிந்த மெல்லிறை முன்கை
பூவீ கொடியிற் புல்லெனப் போகி
அடர்செய் ஆயகல் சுடர்துணை யாக
இயங்காது வதிந்தநங் காதலி
உயங்குசாய் சிறுபுறம் முயங்கிய பின்னே.

—பொருந்தில் இளங்கீரனார்.

1. தொல். பொருளியல் : ௧௧. (பாடம்) 2. கவிழ்ந்து

(சொ - ள்.) க—உ. என் நெஞ்சே வாழி—, அன்று அவண் ஒழிந்தன்றும் இலை-நாம் புறப்படும் அன்று யான் வாரேன் என்று கூறி நம் மனையில் தங்கிவிட்டாயு மல்லை, வந்து நனி வருந்தினை-இத்துணையும் வந்து மிகவும் வருத்தமுற்றாய்;

உ—௬. பருந்து இருந்து உயா விளி பயிற்றும்-பருந்து தங்கி வழிச்செல்வோர் வருத்தத்தை யடையும் ஓசையைப் பலகாலும் செய்யும், யா உயர் நனந்தலை-யா மரங்கள் உயர்ந்த அகன்ற இடங்களில், உருள் துடி மகுளியின்-(கடிப்பு) உருள்கின்ற இழுகு பறையின் ஓசையைப்போல, பொருள் தெரிந்து இசைக்கும்-பொருள் தெரிய ஒலிக்கும், கடுங்குரல் குடிஞைய-கடிய குரலையுடைய ஆந்தைகளையுடைய, நெடும் பெருங் குன்றம்-நீண்ட பெரிய குன்றத்தை, எம்மொடு இறத்தலும் செல்லாய்-எம்மொடு தொடர்ந்து கடத்தலும் செய்யாய்;

௬—அ. பின் நின்று ஒழியச் சூழ்ந்தனை யாயின்-பின்னே நின்று ஒழியக் கருதினையாயின், தவிராது செல் இனி வல்லே-தடையின்றி இப்பொழுதே விரைந்து செல்வாயாக, சிறக்க நின் உள்ளம்-நின் உள்ளத்தெண்ணம் சிறப்பதாக;

௯—கக. குவளை மா இதழ் புரையும்-முன் குவளையினது கரிய இதழை யொக்கும், மலிர்கொள் ஈர் இமை-நீர் மிகுதல் கொண்ட குளிர்ந்த கண்களின் இமை, நறவின் சேயிதழ் அனையவாகி-பின்பு நறவம்பூவின் சிவந்த இதழ் அனையவாகி, உள்ளகம் கனல-உள்ளம் கொதித்தலாலே, உள்ளுதோறு உலறி-நினையுந்தோறும் வற்றி, பழங்கண் கொண்ட கதழ்ந்து வீழ் அவிர் அறல்-துன்பங் கொளற்கு ஏதுவான விரைந்து விழும் விளங்கும் அறல்நீர், வெய்ய உகுதர-வெப்பங் கொண்டவாய்ச் சொரிய, வெரீஇ-அஞ்சி, சில் வளை சொரிந்த மெல் இறை முன்கை-சில வளைகளும் சொரியப்பெற்ற மெல்லிய சந்தினையுடைய முன்கையுடையாளும், பூவீ கொடியிற் புல்லெனப் பையெனப் போகி-பூக்கள் ஒழியப்பெற்ற கொடிபோலப் பொலிவற மெல்லெனச் சென்று, அடர் செய் ஆய் அகல் சுடர் துணையாக-பொற்றகட்டா லியன்ற அழகிய அகலிடத்துத் தான் ஏற்றிய விளக்கே துணையாக, உயங்காது வதிந்த நம் காதலி-எங்கணும் இயங்க வலியற்று ஓரிடத்தே தங்கியுள்ளவளுமாகிய நம் காதலியின், உயங்கு சாய் சிறுபுறம் முயங்கிய பின்-வருந்தி மெலிந்த பிடரினைத் தழுவிய பின்;

௧. மறவல் ஓம்புமதி எம்மே-எம்மை மறத்தலை நீக்குவாயாக.

(முடிபு) நெஞ்சே! அன்று ஒழிந்தன்றுமிலை; வந்து நனி வருந்தினை; குன்றம் எம்மோடிறத்தலும் செல்லாய்; ஒழியச் சூழ்ந்தனையாயின் செல் இனி; நின் உள்ளம் சிறக்க; நம் காதலி சிறுபுறம் முயங்கிய பின்னே எம்மை மறவல் ஓம்புமதி.

(வி - ரை.) மகுளி-ஓசை. மகுளியின் என ஒப்பு உரைத்தது ஓசை மாத்திரம் கருதி; பொருள் தெரிதல் குடிஞை ஓசைக்கே உள்

ளது. தெரிந்து - தெரிய எனத் திரிக்க. பொருள் தெரிய இசைத்தல், குத்திப்புதை என்பதொரு பொருள் தெரிய இசைத்தல் என்பர். இனி, பொருள் - போவார் காரியமுமாம்; ஆந்தையின் குரல் போவார் காரியத்தை உணர்த்தும் நிமித்தமாதலின். உள்ளம் - நெஞ்சினது உள்ளம். நறவின் சேயிதழைச் செவ்வரிக்கு உவமையாகவும், குவளையைக் கண்வடிவிற்கு உவமையாகவும் கூறுவாரும் உளர். கொண்ட-கொள்ளுதற்கு ஏதுவான. குறிப்புரைகாரர் விரைந்து விழுகின்ற எனப்பொருள் செய்திருத்தலின் 'கதழ்ந்து வீழ்' என்பதே அவர்கொண்ட பாடமாகும். 'கவிழ்ந்து' எனும் பாடத்திற்குக் 'கலங்கி' என்க. அறல் - அற்று விழுகின்ற நீர். வெரீஇ - பிறர் காண்பரென அஞ்சி. வளை பலவும் முன்பே கழன்றொழிந்தன என்பான் சில்வளை சொரிந்த என்றான். முன்கையையுடைய காதலி, வறிந்த காதலி எனக் கூட்டுக. மறைய நின்று பின்னே தழுவுதலான், சிறுபுறம் முயங்கிய என்றான். முயங்கியபின் என்றது முயங்குக எனக் கூறியவாறுமாயிற்று.

(மே - ள்.) [1]'புணர்தல் பிரிதல்' என்னுஞ் சூத்திரத்து இச் செய்யுளைக் காட்டி, 'இது மறவலோம்புமதி யெனப்பிரிவு கூறிற்று' என்றும், [2]'நோயு மின்பமும்', என்னுஞ் சூத்திரத்து, 'கைகவியாச் சென்று... நெஞ்சே' என்பது, நெஞ்சினை உறுப்புடையதுபோல் உவந்துரைத்தது என்றும், 'வருந்தினை வாழியென் நெஞ்சே...சிறக்க நின்னுள்ளம்' என்பது, நெஞ்சினை அறிவுடையதுபோல் அழுகை பற்றிக் கூறியது என்றும் கூறினர், நச்.

---

20. நெய்தல்

[பகற்குறி வந்த தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி தலைமகட்குச் சொல்லுவாளாய்த் தலைமகன் கேட்பச் சொல்லியது.]

பெருநீர் அழுவத் தெந்தை தந்த
கொழுமீன் உணங்கல் படுபுள் ஓப்பி
எக்கர்ப் புன்னை இன்னிழல் அசைஇச்
செக்கர் ஞெண்டின் குண்டளை கெண்டி
ஞாழல் ஓங்குசினைத் தொடுத்த கொடுங்கழித்
தாழை வீழ்கயிற் றூசல் தூங்கிக்
கொண்டல் இடுமணல் குரவை முனையின்
வெண்டலைப் புணரி ஆயமோ டாடி
மணிப்பூம் பைந்தழை தைஇ யணித்தகப்
பல்பூங் கானல் அல்கினம் வருதல்

1. தொல். அகத்: ௪௪. 2. தொல். பொருளியல்: ௨.

கவ்வை நல்லணங்குற்ற இவ்வூர்க்
கொடிதறி பெண்டிர் சொற்கொண் டன்னை
கடிகொண் டனளே தோழி பெருந்துறை
எல்லையும் இரவும் என்னாது கல்லென
வலவன் ஆய்ந்த வண்பரி
நிலவுமணல் கொட்குமோர் தேருண் டெனவே.

—உலோச்சனார்.

(செ - ள்.) ௧௩. தோழி—,

௧—௧௦. எக்கர்ப் புன்னை இன்னிழல் அசைஇ - கடற்கரைக்கண் மணல் மேட்டிலுள்ள புன்னையின் இனிய நிழலில் தங்கி, பெருநீர் அழுவத்து-கடற்பரப்பினின்று, எந்தை தந்த கொழுமீன் உணங்கல் படுபுள் ஓப்பி - நம் தந்தை தந்த கொழுமையாகிய மீனின் வற்றலைக் கவரவரும் பறவைகளை அகற்றியும், செக்கர் ஞெண்டின் குண்டு அளை கெண்டி-சிவந்த நண்டின் ஆழமான வளைகளைத் தோண்டியும், கொடுங் கழி தாழை வீழ்கயிற்று ஊசல் ஓங்கு சினைத் தொடுத்த ஊசல் தூங்கி - வளைந்த கழியிலுள்ள தாழை விழுதாலாய கயிற்றால் புலிநகக் கொன்றையின் உயர்ந்த கிளையில் கட்டித்தொங்கவிட்ட ஊசலில் ஆடியும், கொண்டல் இடுமணல் குரவை முனையின் - கீழ்க்காற்றுக் குவித்த மணலில் குரவையாடி (யும்இவை) வெறுப்பின், வெண்டலைப் புணரி ஆயமொடு ஆடி- வெள்ளிய தலையையுடைய கடல்நீரில் ஆயத்தாரோடு விளையாடி, மணி பூ பைந்தழை அணித்தகைஇ-அழகிய பூக்களோடு மேவிய பசிய தழையுடையினை அழகு பொருந்த உடுத்திக் கொண்டும், பல் பூ கானல் அல்கினம் வருதல் - (இங்ஙன மெல்லாம்) பல பூக்களையும் உடைய கடற்கரைச் சோலையில் நாம் தலைவரொடு தங்கி வருதலைப்பற்றி;

௧௧—௧௬. இவ்வூர் - இவ்வூரில், கவ்வை நல் அணங்கு உற்ற-அலர் கூறலாகிய நற்பேய் பிடித்திருக்கும், கொடிது அறி பெண்டிர் சொற் கொண்டு - கொடுமை கூறலே அறியும் பெண்டிர் கூறும் சொல்லைக் கேட்டு, அன்னை - நம் அன்னை, பெரும் துறை - பெரிய துறையகத்து, எல்லையும் இரவும் என்னாது - பகலும் இரவும் என்றில்லாது, வலவன் ஆய்ந்த வண்பரி - பாகன் ஆய்ந்து கொண்ட அழகுமிக்க குதிரை பூட்டப்பெற்று, நிலவு மணல் கல் என கொட்கும் ஓர் தேர் உண்டு எனவே - நிலாப்போன்ற மணலில் கல்லென்னும் ஒலியுடன் சுழன்று திரியும் ஒரு தேர் உண்டு என்று எண்ணி கடிகொண்டனள் - இல்லின் கண் காவற்படுத்தினள்; (என் செய்வாம்.)

(பாடம்) 1. பொருந்தில் இளங்கீரனார்.

(முடிபு) தோழி, நாம் பல்பூங்கானல் தலைவனொடு அளைஇ, ஓப்பிக், கொண்டித் துஞ்சி, ஆடி, முன்னையின் நைதி, அல்கினம் வருதலைப் பற்றி அன்னை பெண்டிர் கூறும் சொற்கொண்டு பெருந்துறையிடத்துக் கொட்கும் தேர் உண்டு எனவே நம்மைக் கடி கொண்டனள்; (என் செய்வாம்.)

(வி - ரை.) *கொழுமீன்-ஒருவகை மீனுமாம். குரவையை வெறுப் பின் புணரி யாடியும் என்றுமாம். அணங்கு-ஈண்டுப் பேய்; நல் அணங்கு என்றது இகழ்ச்சிக் குறிப்பு.*

(மே - ள்.) [1]'மறைந்தவற் காண்டல்' என்னுஞ் சூத்திரத்து, பிறர் கூற்றால் தமர் தற்காத்தமைக்கு இச் செய்யுளையும், [2]'தேரும் யானையும்' என்னுஞ் சூத்திரத்து, தலைவன் தேரூர்ந்து வருதற்கு, 'இலவுமணற் கொட்குமோர் தேருண் டெனவே' என்பதனையும் எடுத்துக் காட்டினர், நச்.

---

21. பாலை

[பொருள் வயிக்கப்பட்டுப் பிரிந்த தலைமகன் இடைச்சுரத்து நின்று மீளலுற்ற நெஞ்சினைக் கழறியது.]

மனையிள நொச்சி மௌவல் வான்முகைத்
துணைநிரைத் தன்ன மாவீழ் வெண்பல்
அவ்வயிற் றகன்ற அல்குல் தைஇத்
தாழ்மென் கூந்தல் தடமென் பணைத்தோள்
மடந்தை மாணலம் புலம்பச் சேய்நாட்டுச்
செல்லல் என்றியான் சொல்லவும் ஒல்லாய்
வினைநயந் தமைந்தனை ஆயின் மனைநகப்
பல்வேறு வெறுக்கை தருகம் வல்லே
எழுவினி வாழியென் நெஞ்சே புரியிணர்
மெல்லவிழ் அஞ்சினை புலம்ப வல்லோன்
கோடறை கோம்பின் வீயுகத் தீண்டி
மராஅ மலைத்த மணவாய்த் தென்றல்
சுரஞ்செல் மள்ளர் சுரியல் தூற்றும்
என்றூழ் நின்ற புன்தலை வைப்பிற்
பருந்திளைப் படூஉம் பாறுதலை ஓமை
இருங்கல் விடரகத் தீன்றிளைப் பட்ட
மென்புனிற் றம்பிணவு பசித்தெனப் பைங்கண்

---

1. தொல். களவு: ௨௦. 2. தொல். பொருளியல்: ௧௮.

செந்நாய் ஏற்றை கேழல் தாக்க
இரியற் பிணவல் தீண்டலின் பரீஇச்
செங்காய் உதிர்ந்த பைங்குலை ஈந்தின்
பரல்மண் சுவல முரணிலம் உடைத்த
வல்வாய்க் கணிச்சிக் கூழார் கூவலர்
ஊறு நீட்ட உவலைக் கூவல்
வெண்கோடு நயந்த அன்பில் கானவர்
இகழ்ந்தியங் கியவின் அகழ்ந்த குழிசெத்
திருங்களிற் றினநிரை தூர்க்கும்
பெருங்கல் அத்தம் விலங்கிய காடே.

—காவன் முல்லைப் பூதனர்·

(சொ - ள்.) க—சு. மனை இள நொச்சி - மனைப் படப்பையில் உள்ள இளைய நொச்சியிற் படர்ந்த, மா வீழ் மௌவல் வால்முகை - வண்டுகள் விரும்பும் முல்லையின் வெள்ளிய அரும்புகளில், துனை நிரைத்தன்ன - ஒத்தனவற்றை நிரைத்து வைத்தாலொத்த, வெண்பல் - வெள்ளிய பற்களையும், அவ்வயிற்று - அழகிய வயிற்றினையும், அகன்ற அல்குல் - பரந்த அல்குலினையும், தைஇ தாழ் மெல் கூந்தல் - ஒப்பனை செய்யப்பெற்றுத் தாழ்ந்து தொங்கும் மெல்லிய கூந்தலினையும், தட மென் பணைத் தோள் - பெரிய மென்மை வாய்ந்த மூங்கிலையொத்த தோளினையும் (உடைய), மடந்தை மாண நலம் புலம்ப-நம் தலைவியின் மாண்புறும் அழகு கெட, சேய் நாட்டுச் செல்லல் என்று - சேய்மைக் கண்ணதாகிய நாட்டிற்குச் செல்லாதே என்று, யான் சொல்லவும் ஒல்லாய் - அவ்விடத்தே யான் கூறவும் அதற்குப் பொருந்தாயாய்;

எ—கூ. வினை நயந்து அமைந்தனை யாயின் - அவ் வினையை விரும்பி அமைந்து போந்தா யாகலின், மனை நக பல்வேறு வெறுக்கை தருகம் - நம் தலைவி மகிழப் பலவேறு வகையினவாய செல்வங்களை ஈட்டித் தருவோம்;

க—கச. புரி இணர் மெல் அவிழ் அம் சினை புலம்ப-வலம்புரிந்த பூங்கொத்துக்கள் மெல்லென மலர்கின்ற அழகிய கொம்புகள் அப் பூக்களை யிழந்து தனிமையுற, வல்லோன் கோடு அறை கொம்பின் - பூக்கொள்ள வல்லோன் மரக் கொம்பினை அடித்து அசைக்கும் கோல் போல, மராஅம் வீ உகத் தீண்டி அலைத்த மணவாய்த் தென்றல் - மரா மரத்தை மலர்கள் உதிரத் தாக்கி அலைக்கும் மணத்தைத் தன்னிடத்துடைய தென்றல்; சுரம் செல் மள்ளர் சுரியல் தூற்றும் - சுரநெறியிற் செல்லும் வீரர்களது குழன்ற மயிரில் அம்மலர்களைச் சொரியும், என்றூழ் நின்ற புன்தலை வைப்பில்-வெம்மை நிலைபெற்ற புல்லிய இடத்தை யுடைய ஊர்களில்;

கஎ—உக. பருந்து இளைப்படும் பாறு தலை ஓமை - பருந்து ஈன்று காவற்படும் சிதறிய தலையினவாய ஓமை மரங்களையுடைய, இருங்கல் விடரகத்து - பெரிய மலையின் முழைஞ்சினிடத்து, ஈன்று இளைப்பட்ட - ஈன்று காவற்பட்ட, மென் புனிற்று அம் பிணவு பசித்தென - மென்மையும் ஈன்ற அண்மையும் உடைய அழகிய பெண் நாய் பசித்ததாக, பைங்கட் செந்நாய் ஏற்றை-பசிய கண்களையுடைய செந்நாய் ஏறு, கேழல் தாக்க-ஆண் பன்றியினைத் தாக்க, இரியல் பிணவல் தீண்டலின் - அது கண்டு அஞ்சியோடும் பெண்பன்றி மோதிச் செல்லுதலின், பைங்குலை ஈந்தின் பரீஇ உதிர்ந்த செங்காய் பரல்- பசிய குலைகளையுடைய ஈந்தினின்றும் அறுபட்டு உதிர்ந்த செங்காய்களின் வித்துக்களுடன் கூடிய, மண் சுவல முரண் நிலம் - மண் மேடாகிய வன்னிலத்தை, உடைத்த - உடைத்திட்ட, வல் வாய்க் கணிச்சி - வலிய வாயினையுடைய குந்தாலியை யுடைய, கூழ் ஆர் கூவலர்-கூழினை யுண்ணும் கிணறு வெட்டுவோர், ஊறாது இட்ட உவலைக் கூவல் - அகழ்ந்து பார்த்தும் நீர் ஊறாமையின் விட்டேகிய தழை மூடிய கிணறுகளை;

உச—எ. இருங் களிற்று இனநிரை - பெரிய களிற்றினமாகிய கூட்டம், வெண்கோடு நயந்த அன்புஇல் கானவர் - தமது வெள்ளிய கொம்பினைக் கவர விரும்பிய இரக்கமற்ற வேடர்கள், இகழ்ந்து இயங்கு இயவின்-தீங்கில்லை என்று நினைத்துக் கருத்தின்றிச் செல்லும் நெறிகளில், அகழ்ந்த குழி செத்து - தங்களை அகப்படுத்த அகழ்ந்து மறைத்த குழிகளாகக் கருதி, தூர்க்கும் - அவற்றைத் தூர்க்கும், பெருங்கல் அத்தம் விலங்கிய காடு - பெரிய கற்களையுடைய நெறிகள் குறுக்கிடும் இக்காட்டிற் சேறற்கு (ஈண்டு நின்றும் மீளாது);

க. இனி வல்லே எழு - இப்பொழுது விரைந்து எழுந்து என் பின்னே வருவாயாக.

(முடிபு) நெஞ்சே! மடந்தை நலம் புலம்ப, சேய் நாட்டுச் செல்லல் என்று யான் சொல்லவும், ஒல்லாது அமைந்து போந்தனையாகலின் மனை நகவெறுக்கை தருகம்; ஈண்டு நின்றும் மீளாது, காட்டிற் சேறற்கு இப்பொழுது எழுவாயாக.

தென்றல் தூற்றும் வைப்பின் காடு எனவும் உவலைக் கூவலைக்களிற்றின நிரை தூர்க்கும் காடு எனவுங் இயையும்.

(வி - ரை.) பிணவு பசித்தெனச் செந்நாயேற்றை, கேழல் தாக்கப் பிணவல் தீண்டலின் பரீஇ உதிர்ந்த ஈந்தின் பரலையுடைய மட்சுவலாகிய வன்னிலத்தில் கூவலர் உடைத்த கூவல் என்க.

மனைப் படப்பையில் நொச்சியின்கண் மௌவல் படர்ந்திருத்தல், 'மயிலடி யிலைய மாக்குரல் நொச்சி, மனைநடு மௌவலொடு ஊழ்முகை யவிழ' என்னும் நற்றிணை (ககரு)ச் செய்யுளானும், 'மனையிள நொச்சி மௌவல் வான்முகை' (உக) 'மனைய, தாழ்வி னொச்சி சூழ்வன மலரும்,

மௌவல் மாச்சினை' (௨௧) என்னும் இந்நூற் செய்யுட்களானும் அறியப்படும். அமைந்தனை யாயின் - அமைந்து போந்தனையாயின் என விரிக்க. மனை நக - இல்லம் பொலிய என்றுமாம். கோடு அலை கொம்பு - பூ உதிர்க்கும் கொம்பு; அது தென்றலுக்கு உவமை. சுரியல் - சுருண்ட தலைமயிர். ஈன்றணிமைபற்றிப் புறத்தே செல்லலாகாமையின் ஈரிடத்தும் இளைப்பட்ட என்றார்.

[1]'பன்றி புல்வாய் நாயென மூன்றும், ஒன்றிய வென்ப பிணவென் பெயர்க்கொடை,' [2]'பிணவ லெனினு மவற்றின் மேற்றே' என்னும் சூத்திரங்களால், 'பிணவு' எனவும் 'பிணவல்' எனவும் வந்தன. களிறு தாம் இகழ்ந்து இயங்கு இயவில் கானவர் அகழ்ந்த குழி என்க.

---

23. குறிஞ்சி

[(1) வரைவிடை வைத்துப் பிரிந்த காலத்துத் தலைமகன் ஆற்றாளாகத் தோழி தலைமகனை இயற்பழிப்பத் தலைமகள் இயற்பட மொழிந்தது.

(2) தலைமகன் இரவுக்குறி வந்து சிறைப்புறத்தானாகத் தோழியாற் சொல்லெடுக்கப்பட்டுத் தலைமகள் சொல்லியதூஉமாம்].

அணங்குடை நெடுவரை யுச்சியின் இழிதருங்
கணங்கொள் அருவிக் கான்கெழு நாடன்
மணங்கமழ் வியன்மார் பணங்கிய செல்லல்
இதுவென அறியா மறுவரற் பொழுதில்
படியோர்த் தேய்த்த பல்புகழ்த் தடக்கை
நெடுவேட் பேணத் தணிகுவள் இவளென
முதுவாய்ப் பெண்டிர் அதுவாய் கூறக்
களநன் கிழைத்துக் கண்ணி சூட்டி
வளநகர் சிலம்பப் பாடிப் பலிகொடுத்
துருவச் செந்தினை குருதியோடு தூஉய்
முருகாற்றுப் படுத்த உருகெழு நடுநாள்
ஆர நாற அருவிடர்த் ததைந்த
சாரற் பல்பூ வண்டுபடச் சூடிக்
களிற்றிரை தேரிய பார்வல் ஒதுக்கின்
ஒளித்தியங்கு மரபின் வயப்புலி போல

1. தொல். மர: ௩௮. 2. தொல். மர: ௩௧.

நன்மனை நெடுநகர்க் காவலர் அறியாமைத்
தன்னசை உள்ளத்து நந்நசை வாய்ப்ப
இன்னுயிர் குழைய முயங்குதோறும் மெய்ம்மலிந்து
நக்கனென் அல்லனோ யானே எய்த்த
நோய்தணி காதலர் வரவீண்
டேதில் வேலற் குலந்தமை கண்டே.

—வெறிபாடிய காமக் கண்ணியார்.

(சொ - ள்.) க—ச. அணங்குடை நெடுவரை உச்சியின் இழி தரும் கணம் கொள் அருவிக் கான் கெழு நாடன் - தெய்வமுடைய நீண்ட மலையுச்சியினின்று விழும் கூட்டமாய அருவிகளையுடைய காடு பொருந்திய நாட்டையுடைய நம் தலைவனது, மணம் கமழ் வியன்மார்பு அணங்கிய செல்லல் இது என அறியா மறுவரல் பொழுதில் - மணம் கமழும் அகன்ற மார்பு வருத்திய வருத்தத்தை இதனாலுண்டாயதென்று அறியாத கலக்கமுற்ற காலத்தே;

ரு—கக. படியோர்த் தேய்த்த பல்புகழ் தடக்கை நெடுவேள் பேணத் தணிகுவள் இவள் என - வணங்காரைத் தேய்த்தொழித்த பலவகைப் புகழ்களைக் கொண்ட பெரியகையினையுடைய நெடுவேளைப் போற்றின் இவள் துயர் தணியப் பெறுகுவள் என்று, முதுவாய்ப் பெண்டிர் அது வாய் கூற-அறிவு வாய்த்தலையுடைய பெண்டிர் அதனை மெய்யாகக் கூற, களம் நன்கு இழைத்துக் கண்ணி சூட்டி-வெறியாடுங் களம் நன்கு அமைத்து (வேலிற்குக்) கண்ணி சூட்டி, வளநகர் சிலம்பப் பாடிப் பலிகொடுத்து - வளம் பொருந்திய கோயிலில் ஒலியுண்டாகப் பாடிப் பலிகொடுத்து, உருவச் செந்தினை குருதியொடு தூஉய் - அழகிய செந்தினையைக் குருதியுடன் கலந்து தூவி, முருகு ஆற்றுப் படுத்த உருகெழு நடுநாள் - முருகனை வரவழைத்த அச்சம் பொருந்திய நடு இரவில்;

கஉ—உக. ஆரம்நாற - சந்தனம் மணம் வீச, சாரல் அருவிடர்த் ததைந்த பல்பூ வண்டுபடச் சூடி-பக்க மலையில் உள்ள அரிய முழைஞ்சுகளிற் செறிந்த பல பூக்களை வண்டு மொய்த்திடச் சூடியும், களிற்று இரை தெரீஇய பார்வல் ஒதுக்கின் ஒளித்து இயங்கும் மரபின் வயப் புலிபோல - களிறாகிய இரையைத் தெரிதற் பொருட்டு ஒதுங்கிய பார்வையொடு மறைந்துஇயங்கும் இயல்பினையுடைய வலிய புலியினைப் போல, நல்மனை நெடுநகர்க் காவலர் அறியாமை - நமது நல்ல மனையின் கண்ணுள்ள நெடிய இல்லின் காவலாளரும் அறியாவண்ணம், எய்த்த நோய்தணி காதலர் வர - நாம் மெலிதற்கு ஏதுவாய இந்நோயைத் தணித்தற்குரிய நம் காதலர் வந்து, தன்நசை நம் உள்ளத்து நசை வாய்ப்ப - தன்னை நச்சுதலையுடை நம் உள்ளத்தின் விருப்பம்

நிறைவேறும்படி, இன் உயிர் குழைய முயங்குதோறும் - இனிய உயிர் குழையும்படி முயங்குந்தோறும், ஈண்டு ஏதில் வேலற்கு உலந்தமை கண்டு - இங்கு நமர் யாதும் இயைபில்லாத வேலனுக்கு அழிந்தமை கண்டு, யான் மெய்மலிந்து நக்கனென் அல்லனோ - யான் உடல் பூரித்துச் சிரித்தேன் அல்லனோ?

(முடிபு) நாடன் மார்பு அணங்கிய செல்லல் அரியாப் பொழுதில், நெடுவேட் பேணத் தணிகுவன் இவளென முதுவாய்ப் பெண்டிர் கூற, முருகாற்றுப்படுத்த நடுநாள், வயப்புலிபோலக் காதலர் வர, நசைவாய்ப்ப முயங்குதோறும் வேலற் குலந்தமை கண்டு, நக்கனெனல்லனோ?

(வி - ரை.) மறுவரல் - சுழற்சி. படியோர் - வணங்கார்; ஆவது வயிற்று, பிரதியோர் என்னும் சொல்லின் சிதைவுமாம். பல்புகழ் - வென்றி கொடை முதலாயவற்றால் வரும் புகழ். முதுவாய் : முது - அறிவு. அது வாயாக: வாய் - உண்மை. முருகனை ஆற்றுப்படுத்தல், [1]'குருதிச் செந்தினை பரப்பிக் குறமகள், முருகிய நிறுத்து முரணின ரூட்க, முருகாற்றுப்படுத்த வுருகெழு வியனகர்' என இவ்வாறே திருமுருகாற்றுப்படையிலும் வருதல் காண்க. புலி களிற்றிரையினைப் பெறுதற்குப் பதுங்கி மறைந்து வருதல் போலத் தலைவன் தலைவியைப் பெறுதற்கு மறைந்து வந்தான் என்க.

1. வெறியெடுத்துத் தீராத வழியில், அஃதியாராலே வந்ததென்றயிராதபடி வரையவந்த பேருதவியினரைப் பொல்லாங்கு சொல்லக் கடவையோ எனத் தலைவி இயற்பட மொழிந்தாள் என்க.

2. ஈண்டும் தலைவி இயற்பட மொழிந்தாளாயினும் வெறியாட்டு நிகழ்ச்சியைத் தலைவற்கு வெளிப்படுத்தி விரைந்து வரையத் தூண்டுதல் பயனாகும். வெறியாட்டினை அழகுபெறக் கூறும் இச்செய்யுளைப்பாடிய சிறப்புப்பற்றி இவர் வெறிபாடிய காமக் கண்ணியார் என வழங்கப் பட்டார்.

(மே - ள்.) [2]'மறைந்தவற் காண்டல்' என்னும் தலைவி கூற்று நிகழ்த்துமாறு கூறுஞ் சூத்திரத்தே 'பழிதீர் முறுவல் சிறிதே தோற்றல்' என்பதற்கு இச் செய்யுளை எடுத்துக்காட்டி 'இதனுட் பழிதீர அவன் வந்து உயிர் தளிர்ப்ப முயங்க, நக்கனில்லையைத் தோழிக்குத் தலைவி கூறியவாறு காண்க' என்பர், நச்.

[3]'பிறப்பே குடிமை' என்னும் சூத்திரத்து, 'தன்னசை யுள்ளத்து, நந்நசை வாய்ப்ப' என்பது 'இருவர் உணர்வும் ஒத்தவாறு' எனவும், [4]'வினைபயன் மெய்யுரு' என்னுஞ் சூத்திரத்து 'களிற்றிரை........வயப் புலி போல' என்புழி, பார்வ லொதுக்கமாகிய வினை பண்பெனப்

1. முரு. உ௪௨ - உ௪௪.　　2. தொல். களவு: உ०.
3. தொல். மெய்ப்: உ௫.　　4. தொல். உவமம்: ௪.

படாது. என்னை? பண்பென்பது குறிப்பின்றி நிகழும் குணமாகலின் எனவும், பார்வலொதுக்க மெனப்பட்ட வினைப்பகுதியாற் பிழையாமற் கோடற்குப் பார்வலொதுக்கினின்ற னென்பதும் பிறர்க்கஞ்சிப் பார்வலொதுங்குகின்றானல்ல னென்பதுஞ் சொல்லி, அவன் தலைமைக்கேற்ற உவமையாதலின், அது பொருட்டோற்றமாயிற்று எனவும் கூறினர், பேரா.

---

23. பாலை

[தலைமகன் பிரிவின்கண் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.]

மண்கண் குளிர்ப்ப வீசித் தண்பெயல்
பாடுலந் தன்றே பறைக்குரல் எழிலி
புதன்மிசைத் தளவின் இதன்முட் செந்நனை
நெருங்குகுலைப் பிடவமோடு ஒருங்குபிணி அவிழக்
காடே கம்மென் றன்றே யவல
கோடுடைந் தன்ன கோடற் பைம்பயிர்ப்
பதவின் பாவை முனைஇ மதவுநடை
அண்ணல் இரலை அமர்பிணை தழீஇத்
தண்ணறல் பருகித் தாழ்ந்துபட் டனவே
அனையகொல் வாழி தோழி மனைய
தாழ்வின் நொச்சி சூழ்வன மலரும்
மௌவல் மாச்சினை காட்டி
அவ்வள வென்றார் ஆண்டுச்செய் பொருளே.

—ஒரோடோகத்துக் கந்தரத்தனார்.

(சொ - ள்.) ௧௦. தோழி வாழி-,

௧—௨. பறை குரல் எழிலி - முழவின் குரல் போன்ற ஒலியினையுடைய மேகம், மண்கண் குளிர்ப்ப - மண்ணினிடமெல்லாம் குளிர, தண்பெயல் வீசி - குளிர்ந்த மழையைப் பெய்து, பாடு உலந்தன்றே - ஒலி யடங்கிற்று;

௩—௫. புதல் மிசை தளவின் இதல் முள் செந்நனை - புதரின் மீது படர்ந்த செம் முல்லையினது சிவல் முள்ளைப் போன்ற சிவந்த அரும்பு, நெருங்கு குலை பிடவமொடு ஒருங்கு பிணி அவிழ - நெருங்கிய குலையினையுடைய பிடாவின் அரும்புடன் ஒருங்கு பிணிப்பு விரிந்து மலர, காடு கம் என்றன்றே - காடு கம்மென்று மணம் வீசுகின்றது.

௭—௯. அவல கோடு உடைந்தன்ன தோடல் பைம் பயிர் - பள்ளங்களிலுள்ள சங்கு உடைந்தாற்போன்ற வெண்கோடலது பசிய பயிரோடு, பதவின் பாவை முனைஇ - அறுகங் கிழங்கைத் தின்று தெவிட்டுதலின் வெறுத்து, மதவு நடை அண்ணல் இரலை அமர் பிணை தழீஇ - செருக்கிய நடையினையும் தலைமையினையுமுடைய ஆண்மான் விரும்பிய பெண்மானைத் தழுவி, தண் அறல் பருகித் தாழ்ந்துபட்டனவே - குளிர்ந்த நீரைப் பருகி ஓரிடத்தே சேர்ந்து தங்கிவிட்டன;

௧0—௧௨. மனைய தாழ்வின் நொச்சி சூழ்வன மலரும் மௌவல் மாச்சினை காட்டி - மனையிடத்துள்ள முல்லை சூழ்ந்து மலரும் இடமாகிய குறிய நொச்சியது கரிய சினையைக் காட்டி, ஆண்டுச் செய்பொருள் - தாம் வேற்று நாட்டிருந்து பொருள் ஈட்டுங் காலத்தெல்லை, அ அளவு என்றார் - அம் மௌவல் பூக்கத் தொடங்கும் அக்காலத்தெல்லையே என்றாரன்றே, அனைய கொல் - இக்காலம் அவ்வளவிற்றோ, அதனைத் தாண்டி நிற்பதொன்றோ கூறுவாயாக!.

(முடிபு) தோழி வாழி. எழிலி மண் தணிர்ப்பப் பெயல் வீசிப்பாடு உலந்தன்று; தளவின் நனை பிடவமொடு பிணி யவிழக் காடு கம்மென்றன்று; இரலைபிணை தழீஇத் தண்ணறல் பருகித் தாழ்ந்து பட்டன: மௌவல் சூழ்வன மலரும் நொச்சி மாச்சினை காட்டி, ஆண்டுச் செய்பொருள் அவ்வளவென்றார்: அனையகொல்!

(வி - ரை) இதல் - சிவல்; கவுதாரியுமாம். கம் - மணங்கமழ் குறிப்பு. அறுகு, இஞ்சி முதலியவற்றின் கிழங்கைப் பாவை என்றல் மரபு; [1]'செய்யாப் பாவை' என்புழி, இஞ்சிக் கிழங்கைப்பாவை என்றல் மரபென நச்சினார்க்கினியர் கூறியதுங் காண்க. கோடற் பைம்பயிர் - கோடலைக் கிளையாகவுடைய வரகு முதலிய பயிர்களுமாம். அனைய கொல் என்பதற்கு (தலைவன் குறித்த காலங் கடந்தமை கூறுவாளாய்) பொருள் அங்ஙனம் சிறந்ததொன்றோ என்றாள் எனவுமாம்.

(மே - ள்.) [2]'ஏனைப் பிரிவும் அவ்வயி னிலையும்' என்னும் சூத்திரத்து, இச் செய்யுளை எடுத்துக்காட்டி, இது பொருட் பிரிவின்கண் கார்குறித்து (வருவ லென்றமையின்) ஆறு திங்கள் இடையிட்டது என்று கூறினர், நச்.

---

1. மலைபடு: ௧௨௫. 2. தொல். கற்பு: ௪௯.

24. முல்லை

[(1) தலைமகன் பருவங்கண்டு சொல்லியது. (2) வினை முற்றும் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியதூஉமாம்.]

வேளாப் பார்ப்பான் வாளரந் துமித்த
வளை[1] களைந் தொழிந்த கொழுந்தி னன்ன
தளைபிணி அவிழாச் சுரிமுகப் பகன்றை
சிதரலந் துவலை தூவலின் மலருந்
தைஇ நின்ற தண்பெயற் கடைநாள்
வயங்குகதிர் கரந்த வாடை வைகறை
விசும்புரி வதுபோல் வியலிடத் தொழுகி
மங்குல் மாமழை தென்புலம் படரும்
பனியிருங் கங்குலுந் தமியள் நீந்தித்
தம்மூ ரோளே நன்னுதல் யாமே
கடிமதிற் கதவம் பாய்தலின் தொடிபிளந்து
நுதிமுகம்[2] மழுகிய மண்ணைவெண் கோட்டுச்
சிறுகண் யானை நெடுநா ஒண்மணி
கழிப்பிணிக் கறைத்தோல் பொழி[3] கணை யுதைப்புத்
[4]தழங்குரல் முரசமொடு முழங்கும் யாமத்துக்
கழித்துறை செறியா வாளுடை யெறுழ்த்தோள்
இரவுத்துயில் மடிந்த தானை
உரவுச்சின வேந்தன் பாசறை யேமே.

—ஆவூர் மூலங் கிழார்.

(சொ - ள்.) க—ரு. வேளாப் பார்ப்பான் - யாகம் பண்ணாத பார்ப்பான், வாள் அரம் துமித்த - கூரிய அரத்தால் அறுத்தெடுத்த, வளை களைந்து ஒழிந்த - வளைகள் போக எஞ்சிய, கொழுந்தின் அன்ன - சங்கின் தலையைப்போன்ற, தளை பிணி அவிழாச் சுரிமுகப் பகன்றை - கட்டுண்ட பிணிப்பு விரியாத சுரிந்த முகத்தினையுடைய பகன்றையின் அரும்புகள், சிதரல் அம் துவலை தூவலின் மலரும் - சிதறுகின்ற அழகிய மழைத்துளிகள் வீசுதலால் மலரும் (காலமாகிய), தண் பெயல் நின்ற தைஇ கடைநாள் - குளிர்ந்த பெயல் நின்ற தைத் திங்களாகிய முன்பனியின் கடை நாளில்;

(பாடம்) 1. களைந்தொழித்த. 2. மருங்கிய மொண்ணை.
3. கணையுதைப்ப. 4. தழங்குரல் முரசமொடு மயங்கும்.

௯. வயங்கு கதிர் கரந்த வாடை வைகறை - எழுகின்ற ஞாயிறு மறைந்திருக்கும் வாடையுடன் கூடிய விடியற்காலையில்;

௮—௯௦. மங்குல் மா மழை - இருண்ட பெரிய மழை, விசும்பு உரிவதுபோல் - விசும்பு தோலுரிவதுபோல, வியல் இடத்து ஒழுகி - அகன்ற வானிடத்தே யியங்கி, தென்புலம் படரும் - தென்றிசைக்கண் போய்ச் சேரும், பனி இருங் கங்குலும் - பனியுடன் கூடிய கரிய கங்குலின் வெள்ளத்தையும், நன்னுதல் தமியள் நீங்கித் தம் ஊரோளே - சிறந்த நெற்றியினளாய நம் தலைவி தனியளாய் நீந்தித் தமது ஊரின் கண் உள்ளாள்;

௯௦—௮. யாமே - யாம், கடி மதில் கதவம் பாய்தலின் - காவலையுடைய மதிற் கதவினைப் பாய்தலினால், தொடிபிளந்து நுதி மழுகிய மண்ணை வெண் கோட்டுச் சிறுகண் யானை - பூண் பிளக்கப் பட்டுக் கூரிய முனை மழுங்கிய மொட்டையான வெள்ளிய கோட்டினையும் சிறிய கண்ணினையுமுடைய யானையின், நெடு நா ஒண் மணி - நீண்ட நாவினையுடைய ஒளி பொருந்திய மணியின் ஓசையும், கழிப்பிணிக் கறைத்தோல் பொழிகணை யுதைப்பு - கழிகளுடன் பிணிக்கப்பட்ட கரிய தோலாகிய கேடகத்துப்பொழியும் அம்புகள் தைத்தலால் எழும் ஓசையும், தழங்குகுரல் முரசமொடு முழங்கும் யாமத்து - முழங்கும் ஓசையினையுடைய முரசொலியுடன் சேர்ந்தொலிக்கும் நள்ளிரவில், கழித்து உறைசெறியா - உறையினின்றும் உருவி மீண்டும் உள்ளிடாத, வாள் உடை எறுழ்த் தோள் - வாளினைக் கோத்த வலிய தோளினையுடையவனும், இரவுத் துயில் மடிந்த தானை - இரவில் அயர்ந்து தூங்கும் சேனைகளைக் கொண்டவனுமாகிய, உரவு சினவேந்தன் பாசறையேம் - மிக்க சினம் பொருந்திய வேந்தனது பாசறையின்கண் உள்ளேம்; (என் செய்வாம்.)

(முடிபு) பகன்றை தூவலின் மலரும் தை நின்ற கடைநாள் மழை தென்புலம் படரும் கங்குலும் நன்னுதல் தமியள் நீந்தித் தம் ஊரோள்; யாம், யானை மணி யோசையும் கணையுதைப்பின் ஓசையும் முரசமொடு முழங்கும் யாமத்துத் தோளினையும் தானையையுமுடைய வேந்தன் பாசறையேம், (என் செய்வாம்.)

(வி - ரை.) வேளாப் பார்ப்பான் வாளரம் துமித்த வளை என்றமையால், வேள்வி செய்யாமையான் தாழ்நிலை யடைந்த பார்ப்பனர்க்குச் சங்கறுக்கை முதலிய தொழில்கள் உளவென்பது பெறப்பட்டது. கொழுந்து - சங்கின் தலை; தண் பெயல் நின்ற தை கடைநாள் என மாறுக. கங்குலும்: உம்மை சிறப்பு. 'விசும்புரிவதுபோல்' என இவ்வாசிரியர் உவமம் கூறியது பாராட்டற்குரியது; இஃது இல் பொருளுவமை. வாளுடை வேந்தன் - எனவும், தோளையும் தானையையும் உடைய வேந்தன் எனவும் கூட்டுதலும் ஆம். இரவுத் துயில் மடிந்த தானை என்றது, பலநாளும் துயிலின்றிப் போர் செய்து வினைமுற்றுங் காலைத் துயின்ற தானை என்றபடி. குறித்த பருவம் வந்தும் சென்று

தலைவியைக் கூடாது ஈண்டு இருக்கின்றேமே எனத் தலைவன் இரங்கிக் கூறினான்.

(மே - ள்.) ¹'கிழவி நிலையே' என்னும் சூத்திரத்து, தலைமகள் பாசறைக்கண் கிழவி நிலையுரைத்துப் புலம்பல், வென்றிக்காலத்தே விளங்கித் தோன்றும் என்பதற்கும், ²'வேந்துறு தொழிலே' என்னுஞ் சூத்திரத்துப் பகைவயிற் பிரிவு யாண்டினதகம் ஆம் என்பதற்கும் இச்செய்யுளை எடுத்துக் காட்டினர், நச்.

---

25. பாலை

[பருவங் கண்டழிந்த தலைமகளைத் தோழி வற்புறுத்தியது.]

நெடுங்கரைக் கான்யாற்றுக் கடும்புனல் சாஅய்
அவிரறல் கொண்ட விரவுமணல் அகன்துறைத்
தண்கயம் நண்ணிய பொழில்தொறுங் காஞ்சிப்
பைந்தா தணிந்த போதுமலி எக்கர்
வதுவை நாற்றம் புதுவது கஞல
மாநனை கொழுதிய மணிநிற இருங்குயில்
படுநா விளியா னடுநின் றல்கலும்
உரைப்ப போல ஊழ்கொள்பு கூவ
இனச்சிதர் உகுத்த இலவத் தாங்கண்
சினைப்பூங் கோங்கின் நுண்தாது பகர்நர்
பவளச் செப்பில் பொன்சொரிந் தன்ன
இகழுநர் இகழா இளநா ளமையஞ்
செய்தோர் மன்ற குறியென நீநின்
பைத லுண்கண் பனிவார் புறைப்ப
வாரா மையின் புலந்த நெஞ்சமொடு
நோவல் குறுமகள் நோயியரேன் உயிரென
மெல்லிய இனிய கூறி வல்லே
வருவர் வாழி தோழி பொருநர்
செல்சமங் கடந்த வில்கெழு தடக்கைப்
பொதியிற் செல்வன் பொலந்தேர்த் திதியன்
இன்னிசை யியத்திற் கறங்கும்
கன்மிசை அருவிய காடிறந் தோரே.

—ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன்.

---

1. தொல். கற்பு: ௪௬. 2. தொல். கற்பு: ௪௮.

(சொ - ள்.) கஅ. தோழி வாழி—,

க—கஉ. நெடுங்கரைக் கான்யாற்றுக் கடும்புனல் சாஅய் - நீண்ட கரையினைக் கொண்ட காட்டாற்றின் வேகம் மிக்க நீர் அற்றொழிய, அவிர் அறல் கொண்ட விரவு மணல் அகல் துறை தண்கயம் நண்ணிய பொழில்தொறும் - விளங்கும் அறலாந் தன்மை கொண்ட விரவிய மணலையுடைய அகன்ற துறையிடத்துள்ள குளிர்ந்த மடுக்கள் பொருந்திய பொழிலிடங்களி லெல்லாம், காஞ்சிப் பசுந் தாது அணிந்த போது மலி எக்கர் - காஞ்சி மரத்தினது அழகிய தாதுக்களைக் கொண்ட பூக்கள் மிக உதிர்ந்துள மணல்மேடுகள், வதுவை நாற்றம் புதுவது கஞல - புதிய மணநாற்றம் மிகா நிற்க, மாநனை கொழுதிய மணிநிற இருங்குயில் - மாவின் தாதினைக் கோதிய நீலமணி நிறத்தினை யொத்த கரிய குயில், படு நா விளியால் நடு நின்று அல்கலும் உரைப்ப போல ஊழ்கொள்பு கூவ - ஒலிக்கும் தனது நாவின் கூவுதலால் நடுநிலைமேவி நாள்தோறும் சில கூறுவன போல முறைகொண்டு கூவ, இனசிதர் சினைபூ கோங்கின் இலவத்து ஆங்கண் உகுத்த நுண்தாது-கூட்டமாகிய வண்டுகள் பூக்கள் நிறைந்த கிளைகளையுடைய கோங்கமரத்தின் மீதிருந்து இலவம் பூக்களாய அவ்விடத்து உதிர்த்த நுண்ணிய தாதுக்கள், பகர்நர் பவளச் செப்பிற் பொன் சொரிந்தன்ன-பொன் விற்போர் பவளச் சிமிழில் பொற் பொடியைச் சொரிந்து வைத்தாலன்னதாக, இகழுநர் இகழா இளநாள் அமையம் - பிரிவால் எய்தும் துயர்களைப் புறக்கணித்துப் பிரிவோரும் அங்ஙனம் இகழ்ந்து பிரியவொண்ணாத இவ்விளவேனிற் காலத்தை யன்றோ?

கங—கசு. செய்தோர் மன்ற குறி என - தாம் மீண்டு வருங்காலமாக உறுதியாகக் குறித்தல் செய்தார் என்று கூறி, நீ நின் பைதல் உண்கண் பனி வார்பு உறைப்ப - நீ நினது நோதலையுடைய மையுண் கண்கள் நீர் வடிந்து சொரிந்துகொண்டிருக்க, வாராமையின் புலந்த நெஞ்சமொடு நோவல் - தலைவர் வாராமையால் வெறுத்த நெஞ்சுடன் வருந்தற்க;

கஅ—உஉ. பொருநர் செல்சமம் கடந்த வில் கெழு தடக்கை - போர்புரியும் பகைவர் எதிர்ந்துவரும் போரினை வென்றொழித்த வில்லினைக் கொண்ட பெரிய கையினையுடையானும், பொதியில் செல்வன் பொலம் தேர் திதியன் - பொதியில் மலைக்குரிய செல்வனும் பொன்னாலாய தேரினையுடையானுமாகிய திதியன் என்பானது, இன்னிசை இயத்திற் கறங்கும் கல்மிசை அருவிய காடு இறந்தோர்-இனிய வெற்றி முரசுபோல ஒலிக்கும் மலையுச்சியினின்றும் விழும் அருவிகளையுடைய காடுகளைத் தாண்டிப் பொருளீட்டச் சென்றோராய நம் தலைவர்;

கசு—அ. குறுமகள் நோயியர் என் உயிரென - இளையாளே, (நின்னை இங்ஙனம் துயருறச் செய்த) என் உயிர் வருந்துவதாக என்றூற்

போலும், மெல்லிய இனிய கூறி - மென்மை வாய்ந்த இனிய சொற்களைக் கூறிக்கொண்டு, வல்லே வருவர் - விரைந்து வந்துறுவர்.

(முடிபு) தோழி, வாழி, இகழுநர் இகழா இளநாளமையம் குறி செய்தோர் என, வாராமையின் புலந்த நெஞ்சமொடு கண் பனி வார்பு உரைப்ப நோவல் : காடிறந்தோர், குறுமகள் நோயியர் என் உயிரென இனிய கூறி வல்லே வருவர்.

(வி - ரை.) எக்கர் வதுவை நாற்றம் கஞல, குயில் கூவ, தாது பொன் சொரிந்தன்னவாகலின் இகழுநர் இகழா இளநாளமையம் என்க. சாஅய் - சாய எனத் திரிக்க. அறல் - நீர் வற்றிய காலத்து மணல் அற்றற்றிருப்பது. இளவேனிற் பொழுதிலே ஆடவரும் மகளிரும் சோலைகளிலுள்ள எக்கரில் இன்பவிளையாட்டு நிகழ்த்துவராகலின் வதுவை நாற்றம் கஞல என்றார். துணை கொள்பு கூவுதலாவது பேடை கூவச் சேவல் கூவுதல். குயில் நடுநின்று உரைப்ப போல என்பதனை, [1]'ஆடினி ரெல்லாம் உருவிலான் றன்னாணை, கூடுமி னென்று குயில் சாற்ற' என்பதனால் அறிக. அடுநின்று எனப் பிரித்து வருத்தாநின்று என்று உரைத்தலுமாம். சிதர்-வண்டு. கஞல, கூவ எனும் எச்சங்கள் இகழாத என்னும் வேறு வினைகொண்டு முடிந்தன. இளநாளென்றார் இளவேனிலை. குறுமகள் என்றது தோழி தலைமகளை விளித்ததுமாம். என்னுயிர் நோவதாக வென்று நீ நோவாதே என்றுரைத்துப் பின், காடிறந்தோர் என்னுயிர் நோவதாக என மெல்லிய இனிய கூறி வருவரென வேறறுத்து உரைத்தலுமாம்.

---

26. மருதம்

[தலைமகன் தோழியை வாயில் வேண்டி, அவளால் தான் வாயில் பெறாது ஆற்றாமையே வாயிலாகப் புக்குக் [2]கூடியவன் நீக்கத்துக்கண் புக்க தோழிக்குத் தலைமகள் சொல்லியது.]

[3]கூன்முள் முள்ளிக் குவிகுலைக் கழன்ற
மீன்முள் ளன்ன வெண்கால் மாமலர்
பொய்தல் மகளிர் விழவணிக் கூட்டும்
அவ்வயின் நண்ணிய வளங்கே ழூரனைப்
புலத்தல் கூடுமோ தோழி அல்கல்
பெருங்கதவு பொருத யானை மருப்பின்
இரும்புசெய் தொடியி னேர வாகி
மாக்கண் அடைஇய மார்பகம் பொருந்தி
முயங்கல் விடாஅல் இவையென மயங்கி

---

1. சிலப். வேனிற்காதை இறுதி வெண்பா.
(பாடம்) 2. கூடிய தலைமகன். 3. கூர்முள்.

யானும் என்னவும் ஒல்லார் தாமற்
றிவைபா ராட்டிய பருவமு முளவே, இனியே,
புதல்வற் றடுத்த பாலொடு தடைஇத்
திதலை அணிந்த தேங்கோள் மென்முலை
[1]நறுஞ்சாந் தணிந்த கேழ்கிளர் அகலம்
வீங்க முயங்கல் யாம்வேண் டினமே
தீம்பால் படுதல் தாமஞ் சினரே, ஆயிடைக்
கவவுக்கை நெகிழ்ந்தமை போற்றி மதவுநடைச்
செவிலி கையென் புதல்வனை நோக்கி
நல்லோர்க் கொத்தனிர் நீயிர் இஃதோ
செல்வற் கொத்தனம் யாமென மெல்லவென்
மகன்வயிற் பெயர்தந் தேனே அதுகண்
டியாமுங் காதலம் அவற்கெனச் சாஅய்ச்
சிறுபுறங் கவையின னாக [2]உறுபெயல்
தண்துளிக் கேற்ற பலவுழு செஞ்செய்
மண்போல் நெகிழ்ந்தவற் கலுழ்ந்தே
நெஞ்சறை போகிய அறிவி னேற்கே.

—பாண்டியன் கானப் பேரெயில் தந்த உக்கிரப் பெருவழுதி.

(சொ - ள்.) க—கக. தாம் - நம் தலைவர்தாம், பெருங் கதவு பொருத யானை மருப்பின் இரும்பு செய் தொடியின் ஏர ஆகி - பெரிய மதிற் கதவினைப் பாய்ந்து பிளந்த யானையின் கோடுகளிற் பொருந்திய இரும்பினாற் செய்யப்பெற்ற பூணின் அழகினையுடையவாகி, மா கண் இவை - கரிய கண்களையுடைய இவை, மார்பு அகம் அடைய பொருந்தி முயங்கல் விடாஅல் என - தம் மார்பகம் அழுந்தப் பொருந்தி முயங்குதலை விலக்கற்க என்று கூறி, யான் மயங்கி ஓம் என்னவும் ஒல்லார் மற்று இவை பாராட்டிய பருவமும் உள - யான் வருந்தி ஒழிவீராக எனவும் தாம் அதற்குப் பொருந்தாராகிப் பின்னும் இவைகளைப் பாராட்டிய காலங்களும் உள்ளன ;

கக—௬. இனி - இப்பொழுதோ, புதல்வன் தடுத்த பாலொடு தடைஇ - புதல்வன் உள்ளத்தைப் பிறிதிற் செல்லாது தடுத்துக்கொண்ட பாலாற் சரிந்து, திதலை அணிந்த தேம்கொள் மென்முலை - தேமலையணிந்த இனிமைகொண்ட மெல்லிய முலைகள், நறும் சாந்து அணிந்த கேழ் கிளர் அகலம் - அவரது நறிய சந்தனம் அணியப்பெற்ற நன்னிறம் விளங்கும் மார்பில், வீங்க முயங்கல் யாம் வேண்டினம் - விம்ம முயங்கு

(பாடம்) 1. நறுஞ்சாந்து புலர்ந்த. 2. இகு பெயல்.

தலை யாம் விரும்பினேம் ஆகவும்; நீம்பால் படுதல் தாம் அஞ்சினரே-தமது மார்பில் இனிய பால் படுதலை அவர் அஞ்சினர்;

கசு—உக. ஆயிடை கவவு கை நெகிழ்ந்தமை போற்றி - அவ்விடத்து (முன்பு) அணைத்தலை விடாத அவர் கைகள் (இன்று) நெகிழ்ந்தமை கண்டு, செவிலி கை மதவுநடை என் புதல்வனை நோக்கி-செவிலியின் கையிலிருந்த மெல்லிய நடையினையுடைய என் புதல்வனை நோக்கி, நல்லோர்க்கு ஒத்தனிர் நீயிர் - நீயிர் நும் அழகிய பரத்தைமார்க்குப் பொருந்தியவர் ஆவீர், இஃதோ செல்வர்க்கு ஒத்தனம் யாம் என-இதோ இந்தச் செல்வனுக்கு நாங்கள் பொருந்தியவர்கள் ஆவோம் என்றுகூறி, மெல்ல என் மகன் வயின் பெயர்தந்தேன் - மெல்லென என் மகனிடத்துச் சென்றேன்;

உக—உ. அதுகண்டு யாமும் காதலம் அவற்கு என-அது கண்டு தலைவர் அச் செல்வன்பால் யாமும் காதலுடையேம் என்று கூறி, சாஅய் சிறுபுறம் கவையினனாக - பணிந்து எனது முதுகினை அணைத்துக் கொண்டனராக;

உஉ—௫. உறுபெயல் தண்துளிக்கு ஏற்ற - மிக்க பெயலாய குளிர்ந்த மழையை ஏற்றுக்கொண்ட, பல உழு செஞ்செய் மண்போல். பல முறையும் உழுதிட்ட செம்மையாகிய செய்யின் மண்போல, நெஞ்சு நெகிழ்ந்து கலுழ்ந்து-என் நெஞ்சம் நெகிழ்ந்து கலங்கி;

௫. அல்கல் - இரவில்;

உ௫—சு. அவன் அறை போகிய அறிவினேற்கு - அவர்பால் என்னை வஞ்சித்துச் சென்ற அறிவினேனாகிய எனக்கு;

க—௫. கூன்முள் முள்ளி குவிகுலை கழன்ற - வளைந்த முள்ளினையுடைய நீர்முள்ளியது குவிந்த குலைகளினின்று வீழ்ந்த, மீன்முள் அன்ன வெண்கால் மாமலர் - மீனினது முள்ளினை யொத்த வெள்ளிய காம்பினையுடைய கரிய மலர்களை, பொய்தல் மகளிர் விழவு அணி கூட்டும் - விளையாட்டு மகளிர் தாம் செய்யும் விழாவிற்கு அழகு செய்வனவாகச் சேர்க்கும், அவ் வயல் நண்ணிய வளம் கெழு ஊரனைப் புலத்தல் கூடுமோ - அழகிய வயல்கள் பொருந்திய வளமிக்க ஊரனாகிய தலைவனைப் புலத்தல் பொருந்துமோ (இதற்கு யான் என்செய்வேன்!)

(முடிபு) தோழி! தாம் மார்பகம் பொருந்தி, முயங்கல் விடால் என்று கூறி, யாம் ஓவும் என்னவும் ஒல்லார், இவர் பாராட்டிய பருவமும் உள; இனி நீம்பால் படுதல் தாம் அஞ்சினரே: ஆயிடை என் புதல்வனை நோக்கி, நல்லோர்க்கொத்தனிர் நீயிர்; இஃதோ செல்வற் கொத்தனம் யாமென மகன் வயிற் பெயர்தந்தேன்; அதுகண்டு யாமும் காதலம் அவற்கெனச் சாஅய்க் கவையினனாக, அவன் கண்டு நெகிழ்ந்து கலுழ்ந்து நெஞ்சறை போகிய அறிவினேற்கு ஊரனைப் புலத்தல் கூடுமோ.

அல்கல் நெஞ்சறை போகிய என்க.

(வி. ரை) கூர்முள் என்னும் பாடத்திற்குக் கூரிய முள்ளென உரைக்க. ஓம்: ஒவும் என்பதன் இடைக்குறை; செய்யும் என்னும் முற்று முன்னிலைக்கண் வந்தது. தேம்கொள் - இடங்கொண்ட என்றுமாம். இந்த என்பது இஃதோ எனத் திரிந்தது.

(உ - றை.) 'முள்ளியின் பக்கலிலே தோற்றி வாழும் பூ, அதனை விட்டுப் பிறர்க்குப் பயன் பட்டாற்போல, நம்முடன் பிறந்த நெஞ்சு அவருடன் ஏகுகையாயிற்று. அவருடைய வதுவை விழவிற்கும் உட லாய்த் திரியாவின்றால் புலத்தல் கூடுமோ என்க' என்பது குறிப்புரை

(மே - ள்.) [1]'அருண்முந்துறுத்த' என்னும் சூத்திரத்துத் தலைவி யின் அருண்முந்துறுத்த அன்புபொதி கிளவிக்கும் பணிந்த மொழிக் கும் இதிலுள்ள 'மண் போல் நெகிழ்ந்து' 'இவை பாராட்டிய பருவமு முள' 'நெஞ்சறை போகிய அறிவினேற்கு' என்பவற்றையும், [2]'தன் வயிற் கரத்தல்' என்னுஞ் சூத்திரத்துத் தலைவி மடன் அழிதற்கு, 'கவவுக்கை...பெயர்தந்தேனே' என்றதனையும் காட்டினர், நச்.

[3]'வினையுயிர் மெலிதல்' என்னும் சூத்திரத்துப் பாராட்டெடுத்தல் முதலிய பன்னிரு நிமித்தமுமின்றி ஆற்றாமை நிமித்தமாகக் கற்பினுட் புணர்ச்சி நிகழ்ந்ததற்கு, 'தண்டுளிக்கேற்ற......அறிவினேற்கே' என் பதனையும், [4]'தெய்வ மஞ்சல்' என்னும் சூத்திரத்து, 'மறைந்தவை யுரைத்தல்' என்பதற்கு, 'முயங்கல் விடாஅல்...அஞ்சினரே' என்பதனை யும் எடுத்துக் காட்டினர், பேரா.

---

27. பாலை

[செலவுணர்ந்து வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.]

கோடுவரி இரும்புலி [5]தயங்க நெடுவரை
ஆடுகழை இருவெதிர் கோடைக் கோல்குந்
கானங் கடிய வென்னார் நாமழ
நின்றதில் பொருட்பிணிச் சென்றிவண் தருமார்
ரு செல்ப என்ப என்போய் நல்ல
மடவை மன்ற நீயே வடவயின்
வேங்கடம் பயந்த வெண்கோட் டியானை
மறப்போர்ப் பாண்டியர் அறத்திற் காக்குங்

1. தொல். கற்பி: ௨0. 2. தொல். பொருளியல்: கக.
3. தொல். மெய்ப்: ௨0. 4. தொல். மெய்ப்: ௨௪.
(பாடம்) 5. தயங்கு.

கோற்கையம் பெருந்துறை முத்தின் அன்ன
நகைப்பொலிந் திலங்கும் எயிறுகெழு துவர்வாய்
தகைப்பத் தங்கலர் ஆயினும் இகப்ப
யாங்ஙனம் விடுமோ மற்றே தேம்படத்
தெண்ணீர்க் கேற்ற திரள்காற் குவளைப்
பெருந்தகை சிதைத்தும் அமையாப் பருந்துபட
வேந்தமர்க் கடந்த வென்றி நல்வேல்
குருதியொடு துயல்வந் தன்னநின்
அரிவே யுண்கண் அமர்த்த நோக்கே.

—மதுரைக் கணக்காயனார்.

(ப-ரை.) க—சு. கொடுவரி இரும்புலி தயங்க - வளைந்த கோடுகளையுடைய பெரிய புலி வெளிப்பட்டுத் தோன்ற, நெடுவரை ஆடு கழை இரு வெதிர் கோடைக்கு ஒல்கும் கானம் - நீண்ட மலையில் அசையும் தண்டினையுடைய வலிய மூங்கில்கள் மேல்காற்றினால் தளர்ந்து வளையும் காட்டு நெறி, கடிய என்றார் - கொடிதென்று என்றாராய், நாம் அழ - நாம் (பிரிந்து) அழுதிருக்க, நின்றது இல் பொருட்பிணி சென்று இவண் தருமார் செல்ப என்ப என்போய் - ஓரிடத்தும் நிலைபெறுவதில்லாத பொருட் பற்றினால் பிரிந்து சென்று அதனை இங்கு ஈட்டிவரச் சுரம் செல்வர் என ஊரார் கூறுவர் என்று சொல்லும் தலைவியே, நீ மன்ற நல்ல மடவை - நீ உறுதியாக நல்ல மடமையை யுடையை;

சு—கக. வடவயின் வேங்கடம் பயந்த வெண் கோட்டு யானை மறப்போர்ப் பாண்டியர் அறத்தின் காக்கும் கொற்கை அம் பெருந் துறை முத்தின் அன்ன - வடதிசைக்கண் வேங்கடமலைப் பக்கத்தி லுள்ள அரசர் திறையாகக் கொடுத்த வெள்ளிய கோட்டினையுடைய யானைகளையுடைய வீரம் பொருந்திய போரில் வல்ல பாண்டியர்கள் அறநெறி வழாது காக்கும் அழகிய கொற்கைப் பெருந்துறையில் பெறும் முத்துக்களைப் போன்ற, நகைப் பொலிந்து இலங்கும் எயிறு கெழு துவர்வாய் - முறுவலாற் சிறந்து விளங்கும் பற்கள் பொருந்திய பவளம் போன்ற நின்வாய், தகைப்பத் தங்கலர் ஆயினும் - தடுத்தலால் தடைப்பட்டுத் தங்காராயினும்;

கஉ—எ. தேம்பட தெள் நீர்க்கு ஏற்ற திரள் கால் குவளைப் பெருந்தகை சிதைத்தும் அமையா - தேன் உண்டாகத் தெளிந்த நீரினை ஏற்ற திரண்ட தண்டினையுடைய குவளைப்பூவின் சிறந்த அழகினை வென்று கெடுத்தும் அமையாமல், பருந்துபட வேந்து அமர்க் கடந்த வென்றி நல்வேல் குருதியொடு துயல்வந்தன்ன - பருந்துகள் வந்து சூழ அரசர் தம் போர்களை வென்ற வெற்றி பொருந்திய நல்ல

வேல் இரத்தம் தோய்ந்து பிறழ்வது போன்ற, நின் அரி வேய் உண் கண் அமர்த்த நோக்கு - நினது செவ்வரி பொருந்திய மை யுண்ட கண்ணின் மாறுபட்ட பார்வை;

கக—ட். இகப்ப யாங்ஙனம் விடுமோ - அவரை எங்ஙனம் கடந்தேக விட்டுவிடும்? (விடாது காண்.)

(முடிபு) தோழி, நம் தலைவர் கானம் கடிய என்னார், நாம் அழ, நின்றது இல் பொருட்பிணிச் சென்று இவண் தருமார், செல்ப என்ப; எல்போய், நீ மடவை மன்ற; துவர்வாய் தகைப்பத் தங்கலராயினும், நின் உண்கண் அமர்த்த நோக்கு இகப்ப யாங்ஙனம் விடும்? விடாதுகாண்.

(வி - ரை.) புதருட் கிடந்த புலி வெளிப்பட மூங்கில் அசையும் என்க. கடியவென்னார் தருமார் நாம் அழச் செல்வர் என்றார் என்று கூட்டுக. நின்றது - நிலைபெறு. வேங்கடம் பயந்த யானை என்றது அம் மலையையுடைய அரசர் திறையாகத் தந்த யானை என்றவாறு. யானையையுடைய பாண்டியர் எனவும், போரினில் வல்ல பாண்டியர் எனவும் இயையும். பாண்டியர் போரிலே தறுகண்மையும் நாடு காத்தலின் தண்ணளியும் உடையரென்பார், மறப்போர்ப் பாண்டியர் அறத்திற் காக்கும் என்றார். பாண்டியர் காக்கும் கொற்கை; பாண்டியர் நாடு காத்தற்கு இடனாகிய கொற்கை எனலுமாம். துவர்வாய் தகைப்பத் தங்கலராயினும் என்றது, அது தகைத்தல் கொண்டே போக்கொழிவர் என்பது தோன்ற நின்றது. கோடைக்கு ஒல்கும் என்பதனை மூன்றன் உருபாகவும், தெண்ணீர்க்கு ஏற்ற என்பதனை இரண்டனுருபாகவும் விரித்துரைக்க. அமையா என்னும் எதிர்மறை யெச்சம் துயில்வந்தன்ன என்னும் குறிப்பு வினைகொண்டு முடிந்தது. வேந்து, வேத்தென விகாரமாயிற்று. அமர்த்த நோக்கு - பொருந்திய நோக்குமாம்.

---

28. குறிஞ்சி

[தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகட்குச் சொல்லுவாளாய்த் தோழி சொல்லியது. இது பகலே சிறைப்புறம்.]

மெய்யில் தீரா மேவரு காமமொ
டெய்யா யாயினும் உரைப்பல் தோழி
கொய்யா முன்னும் குரல்வார்பு தினையே உரை
அருவி ஆன்ற பைங்கால் தோறும்
இருவி தோன்றின பலவே நீயே
முருகுமுரண் கொள்ளும் தேம்பாய் கண்ணிப் உரை
பரியல் காயொடு பன்மலைப் படரும்

வேட்டுவற் பெறலோ டமைந்தனை யாழநின்
பூக்கெழு தொடலை [1]நுடங்க வெழுந்தெழுந்து
கிள்ளைத் தெள்விளி யிடையிடை பயிற்றி
ஆங்காங் கொழுகா யாயின் அன்னை
சிறுகிளி கடிதல் தேற்றாள் இவளெனப்
பிறர்த்தந்து நிறுக்குவ ளாயின்
உறற்கரி தாகுமவன் மலர்ந்த மார்பே.

—பாண்டியன் அறிவுடை நம்பி.

(சொ - ள்.) உ. தோழி—,

க—உ. மெய்யில் தீரா மேவரு காமமொடு - ஒருவர் மெய்யினின்றும் ஒருவர் மெய் நீங்காதவாறு பொருந்திய காமத்தால், எய்யாய் ஆயினும் உரைப்பல்-நீ அறியாய் ஆயினும் (அதனால் வரும் ஏதத்தினை) நான் உரைப்பேன் கேட்பாயாக;

ங—அ. அருவி ஆன்ற பைங்கால் தோறும் - நீர் இல்லையான பசிய முதல்தோறும், தினை குரல் வார்பு - தினை கதிர் முதிரப் பெற்று, கொய்யா முன்னும் - கொய்வதன் முன்னும், பல இருவி தோன்றின - பலவும் தட்டைகளாகத் தோன்றின, நீயே - நீதான், முருகு முரண் கொள்ளும் தேம் பாய் கண்ணி - வேறுபட்ட பல மணங்களும் கமழும் தேன் ஒழுகும் கண்ணியையுடையனை, பரியல் நாயொடு பன்மலை படரும் வேட்டுவற் பெறலொடு அமைந்தனை - விரைந்தோடும் நாய்களுடன் பல மலைகளையுங் கடந்து செல்லும் வேட்டுவனை எய்துமளவில் அமைந்தனை;

அ—கக. நின் பூ கெழு தொடலை நுடங்க எழுந்தெழுந்து - நின் பூக்கள் பொருந்திய மாலை யசைய அடிக்கடி எழுந்து சென்று, கிள்ளைத் தெள் விளிஇடைஇடை பயிற்றி - கிளிகளை ஓட்டும் தெளிந்த ஓசைகளை இடையிடையே (பலகாலும்) எழுப்பி, ஆங்கு ஆங்கு ஒழுகாய் ஆயின் - அங்கங்கே சென்று வாராதொழியின்;

கக—ங. அன்னை இவள் சிறுகிளி கடிதல் தேற்றாள் என - நம் அன்னை சிறிய கிளியை இவள் ஓட்டுதலை யறியாளென எண்ணி, பிறர்த் தந்து நிறுக்குவள் ஆயின் - தினை காத்தற்குப் பிறரைக் கொணர்ந்து நிறுத்துவாளாயின்;

கச. அவன் மலர்ந்த மார்பு உறற்கு அரிது ஆகும் - தலைவனது பரந்த மார்பு பின் நீ அடைதற் கரியதாகும்.

(முடிபு) தோழி! காமத்தால் நீ எய்யாயாயினும் உரைப்பல் தினை கொய்யா முன்னும் பைங்கால்தோறும் இருவி பல தோன்றின, நீயே வேட்டுவற் பெறலோ

(பாடம்) 1. நுடங்க எழுந்து.

டமைந்தனை; நின் தொடலை நுடங்க எழுந்து விளி பயிற்றி ஒழுகாயாயின், அன்னை கிளி கடிதல் தேற்றாளெனப் பிறர்த்தந்து நிறுக்குவளாயின், அவன் மார்பு உறற் கரிதாம்.

(வி - ரை.) தினை குரல் வார்பு கொய்யா மூன்றும் பைங்கால் தோறும் இருவி தோன்றின என்க. அருவி - அருவி நீர்: ஆன்ற - அகன்ற; இல்லையான. இருவி—கதிர் ஒழிந்த தட்டை. மாறுபட்ட பல பூக்களால் பல நாற்றமா யிருத்தலின் முருகு முரண்கொள்ளு மென்றார். கண்ணியை யுடைய வேட்டுவன், படரும் வேட்டுவன் என்க. தலைவனையே நினைந்து காத்தலைக் கைவிடுத்தமையின் கிளிகள் கவர இருவியாயின. இடை இடை - அவற்றின் ஓசைக்கு இடை யிடையே எனலுமாம்; இரண்டோசைகட்கும் வேற்றுமையில்லை என்றபடி. ஆங்காங்கு - அப்படி அப்படியே என்றுமாம். கிளியோட்டு வது போன்று நடித்தலுஞ் செய்யாயாயின் என்றவாறு.

(மே - வ.) [1]'ஏற்றமும் தோற்றமும்' என்னுஞ் சூத்திரத்து இச் செய்யுளை எடுத்துக்காட்டி, இது வரையும் பருவம் அன்றெனக் கூறியது என்பர், நச்.

---

29. பாலை

[வினைமுற்றி மீண்ட தலைமகன் எம்மையும் நினைத்தறிதிரோ என்ற தலைமகட்குச் சொல்லியது.]

தொடங்குவினை தவிரா அசைவில் நோன்தாள்
கிடந்துயிர் மறுகுவ தாயினும் இடம்படின்
வீழ்களிறு மிசையாப் புலியினுஞ் சிறந்த
தாழ்வில் உள்ளம் தலைத்தலைச் சிறப்பச்
செய்வினைக் ககன்ற காலை எஃகுற்
றிருவே றாகிய தெரிதகு வனப்பின்
மாவின் நறுவடி போலக் காண்தோறும்
மேவல் தண்டா மகிழ்நோக் குண்கண்
நினையாது கழிந்த வைகல் எனையதூஉம்
வாழலென் யானெனத் தேற்றிப் பன்மாண்
தாழக் கூறிய தகைசால் நன்மொழி
மறந்தனிர் போறிர் எம்மெனச் சிறந்தநின்
எயிறுகெழு துவர்வாய் இன்னகை அழுங்க
வினவல் ஆனாப் புனையிழை கேளினி

1. தொல். கள : உக

வெம்மை தண்டா எரியுகு பறந்தலைக்
கொம்மை வாடிய இயவுள் யானை
நீர்மருங் கழியாது தேர்மருங் கோடி
அறுநீர் அம்பியின் நெறிமுதல் உணங்கும்
உள்ளுநர்ப் பனிக்கும் ஊக்கரும் கடத்திடை
எள்ளல் நோனாப் பொருள்தரல் விருப்பொடு
நாணுத்தளை யாக வைகி மாண்வினைக்
குடம்பாண் டொழிந்தமை அல்லதை
மடங்கெழு நெஞ்சம் நின்னுழை யதுவே.

[1]—வெள்ளாடியனார்

(சொ - ள்.) க—கக. எஃகு உற்று இரு வேறு ஆகிய தெரிதகு வனப்பின் மாவின் நறுவடி போல - கத்தியால் அறுக்கப்பெற்று இரு பிளவாகிய விளங்கும் வனப்பினையுடைய மாவின் நறிய வடுப்போல, காண்தொறும் மேவல் தண்டா மகிழ்நோக்கு உண்கண் - காணுந்தொறும் களிப்பு மேவுதல் குறையாத பார்வையினையுடைய மையுண்ட கண்களை, வினையாது கழிந்த வைகல் - வினையாது ஒழிந்த நாளில், எனையதூஉம் வாழலென் யான் எனத் தேற்றி - யான் சிறிதும் உயிர் தரித்திரேன் எனத் தெளிவித்த, பல் மாண் தாழக் கூறிய தகைசால் நல்மொழி - பல மாண்புகளும் தாழ்ந்திடக் கூறிய அழகுமிக்க நல்ல மொழியை;

க—சு. தொடங்கு வினை தவிரா அசைவு இல் நோன்தாள் - தான் தொடங்கிய வினையைக் கைவிடாத தளர்ச்சியில்லாத வலிய முயற்சியினையுடையதும், கிடந்து உயிர் மறுகுவதாயினும் இடம்படின் வீழ் களிறு மிசையா - பட்டினி கிடந்து உயிர் வருந்துவதாயினும் தான் வீழ்த்திய களிறு இடப்பக்கம் வீழின் அதனைத் தின்னாததுமாகிய, புலியினும் சிறந்த தாழ்வு இல் உள்ளம் தலைத்தலை சிறப்ப - புலியைக் காட்டினும் மேம்பட்ட என்றும் தளர்தலில்லாத ஊக்கம் மேன்மேல் மிக, செய்வினைக்கு அகன்ற காலை - பொருளீட்டும் வினைக்குப் பிரிந்து அகன்ற காலத்தே;

கஉ—ச. மறந்தனிர் போறிர் எம் என - எம்மிடத்து மறந்து விட்டீர்போலும் என்று, சிறந்த நின் எயிறு கெழு துவர்வாய் இன் நகை அழுங்க - சிறந்த நின்பற்கள் விளங்கும் பவளம் போன்ற வாயின் இனிய நகைகெட, வினவல் ஆனாப் புனையிழை - வினவுதல் நீங்காத அழகிய அணிகளை யுடையவளே, இனிகேள் - இப்பொழுது யான் கூறுவதைக் கேட்பாயாக;

(பாடம்) 1. வெண்வட்டியார். வேளாவட்டனன்.

கசி—க. வெம்மை தண்டா எரி உகு பறந்தலை - வெப்பம் குறையாத எரிபரந்த பாழிடத்தே, கொம்மை வாடிய இயவுள் யானை - பெருமை யொழிந்த வழிச்செல்லும் யானை, நீர் மருங்கு அறியாது தேர் மருங்கு ஓடி - நீருள்ள இடம் அறியாமல் பேய்த்தேர் தோன்றும் இடமெல்லாம் ஓடி, அறுநீர் அம்பியின் நெறிமுதல் உணங்கும் - நீரற்ற ஆற்றிற் கிடக்கும் ஓடம்போல வழியிடத்து வருந்திக் கிடக்கும், உள்ளுநர்ப் பனிக்கும் - நினைப்போரை வருத்தும், ஊக்கு அரும் கடத்திடை - ஊக்கம் ஒழியும் காட்டினிடத்திலே;

உ0—௫. எள்ளல் நோனாப் பொருள் தரல் விருப்பொடு - பிறர் இகழ்தலைப் பொறாத பொருள் ஈட்டி வரும் விருப்பத்துடன், நாணுத் தளையாக வைகி - தொடங்கிய வினையை முடிக்கவேண்டுமென்னும் மானமே தளையாகக் கட்டுண்டிருந்து, மாண் வினைக்கு - மாண்புற்ற வினையின் பொருட்டு, உடம்பு ஆண்டு ஒழிந்தமை அல்லதை - என் உடம்பு ஆங்குப் பிரிந்து நின்றதல்லது, மடம்கெழு நெஞ்சம் நின் உழையதுவே - அறியாமையுடைய என் நெஞ்சம் நின்கண்ணதே யாகும்; (இதனை யறியாமையின் இங்ஙனம் வினவுகின்றனை.)

(முடிபு) உன்கண் நினையாது கழிந்த வைகல் வாழலென் யானென நேற்றிக் கூறிய நன்மொழியை, புலியினுஞ் சிறந்த தாழ்வில் உள்ளம் சிறப்பச் செய்வினைக்கு அகன்றகாலை எம்மிடத்து மறந்தனிர் போறிர் என, இன் நகை அழுங்க வினவல் ஆனாப் புனையிழை கேள் இனி; உள்ளுநர்ப் பனிக்கும் அருங்கடத்திடைப் பொருள்தரல் விருப்பொடு வைகி உடம்பு ஆண்டு ஒழிந்ததை அல்லதை நெஞ்சம் நின்னுழையதுவே.

(வி - ரை.) நோன்றாட் புலியெனவும் மிசையாப் புலி யெனவும் தனித்தனி இயையும். இடம் வீழ்ந்ததனை உண்ணாத புலியினும் சிறந்த ஊக்கம் என்னும் இக் கருத்தினை, [1]'கடுங்கட் கேழல் இடம்பட வீழ்ந்தென, அன்றவ ணுண்ணா தாகி வழிநாட், பெருமலை விடரகம் புலம்ப வேட்டெழுந், திருங்களிற் றொருத்த லல்வலம் படுக்கும், புலிபசித் தன்ன மெலிவி லுள்ளத், துரனுடை யாளர்' என்பதனான் அறிக. (எஃகு) உற்று - உறுதலால். தெரிதகு - ஆராயத்தக்க எனவும், பன் மாண் - பலமுறை எனவும், இயவுள்-தலைமைஎனவும் உரைத்தலுமாம். யானை ஓடி உணங்கும் கடம் என்க. நெஞ்சினை, மடங்கெழு நெஞ்சு என்றது தலைவியிடத்திருந்தும் தன் ஆற்றாமையை அறிவித்திலது என்று.

(மே - ள்.) [2]'கரணத்தி னமைந்து' என்னுஞ் சூத்திரத்து. மறந்திர் போலும் என்ற மனையோள் எழுறு கிளவிக்குத் தலைவன் எதிர் கூறிய தாகும் இச் செய்யுள் என்றனர், நச்.

---

1. புறம் : ககO. 2. தொல். கற்பு : ௯.

30. நெய்தல்

[பகற்குறி வந்த தலைமகற்குத் தோழி சொல்லியது.]

நெடுங்கயிறு வலந்த குறுங்கண் அவ்வலைக்
கடல்பா டழிய இனமீன் முகந்து
துணைபுணர் உவகையர் பரத மாக்கள்
இளையரும் முதியரும் கிளையுடன் துவன்றி
உப்போய் உமணர் அருந்துறை போக்கும்
ஒழுகை நோன்பக டொப்பக் குழீஇ
அயிர்திணி அடைகரை ஒலிப்ப வாங்கிப்
பெருங்களந் தொகுத்த உழவர் போல
இரந்தோர் வறுங்கலம் மல்க வீசிப்
பாடுபல அமைத்துக் கொள்ளை சாற்றிக்
கோடுயர் திணிமணல் துஞ்சுந் துறைவ
பெருமை என்பது கெடுமோ ஒருநாள்
மண்ணா முத்தம் அரும்பிய புன்னைத்
தண்ணறுங் கானல் வந்துநம்
வண்ணம் எவனோ என்றனிர் செலினே.

—முடங்கிக் கிடந்த நெடுஞ்சேரலாதன்.

(சொ - ள்.) க—கக. நெடுங் கயிறு வலந்த குறுங்கண் அவ்வலை - நெடிய கயிறு கட்டப்பெற்ற குறிய கண்களையுடைய அழகிய வலையில், கடல் பாடு அழிய இனமீன் முகந்து - கடலின் பெருமை குன்ற இனமாகிய மீன்களை முகந்து, துணை புணர் உவகையர் பரத மாக்கள் இளையரும் முதியரும் கிளையுடன் துவன்றி - துணையுடன் கூடிய மகிழ்ச்சியுடையராய் இளையரும் முதியருமாய நுளையர்கள் சுற்றத்துடன் நெருங்கி, உப்புஒய் உமணர் அருந்துறை போக்கும் ஒழுகை நோன் பகடு ஒப்பக் குழீஇ - உப்பினைச் செலுத்தும் உப்பு வாணிகர் அரிய துறைகளிற் செலுத்தும் சகடுகளிற் பூட்டப்பெற்ற வலிய எருதுகளையொப்பக் கூடி, அயிர் திணி அடைகரை ஒலிப்ப வாங்கி - நுண்மணல் செறிந்த பக்கத்துள்ள கரையில் ஆரவாரம் பெருக இழுத்து, பெருங் களம் தொகுத்த உழவர் போல - பெரிய களத்திலே நெல்லைத் தொகுத்த உழவர்களைப் போன்று, இரந்தோர் வறுங் கலம் மல்க வீசி - தம்மிடம் வந்து இரந்தோர்களுடைய வறிய கலன்கள் நிறைய அம் மீன்களைச் சொரிந்து, பாடு பல அமைத்துக் கொள்ளை சாற்றி - எஞ்சியவற்றைப் பல கூறுகளாகச் செய்து விலைகூறி விற்று, கோடு உயர் திணி மணல் துஞ்சும் துறைவ - கரை உயர்ந்த திண்ணிய மணற் பரப்பில் தூங்கும் துறைவனே;

கஉ—ரு. ஒருநாள், மண்ணா முத்தம் அரும்பிய புன்னைத் தண் நறுங்கானல் வந்து - தூய்மை செய்யப்பெறாத முத்துக்கள் அரும்பி யிருக்கும் புன்னைமரங்களையுடைய தண்ணிய நறிய கடற்கரைச் சோலையில் வந்து, நும் வண்ணம் எவனோ என்றனிர் செலின் - நுங்கள் மேனியின் வண்ணம் எத்தகையதோ என்று வினவிச் செல்லின்;

கசு. பெருமை என்பது கெடுமோ - நின்பெருமை என்பது கெட்டுப்போமோ?

(முடிபு) பரத மாக்கள் கிளையுடன் துவன்றிப் பகடோப்பக் குழீஇ அடைகரை ஒலிப்ப வாங்கி உழவர் போல வறுங்கலம் மல்க வீசிக் கொள்ளை சாற்றி மணலிற்றுஞ்சும் துறைவ! ஒருநாள் கானல் வந்து, நும் வண்ணம் எவனோ என்றனிர் செலின் பெருமை என்பது கெடுமோ?

(வி - ரை.) இனமீன்; இனம் - வகை; கூட்டமுமாம். தொகுத்த வற்றை வறுங்கலம் மல்க வீசுதல் என்னும் தொழில் பற்றியதாகலின், உழவர்போல என்றது தொழில்உவமம். பாடு - கூறு. பெருமை என்பது, நீர் பெருமை என்று நினைக்கும் அது. மண்ணா முத்தம் - கழுவப்படாத முத்து; என்றது, புன்னை யரும்பு; இது வெளிப்படை. 'வண்ணம் எவனோ என்றனிர் செலினே' என்றது, வண்ணம் அழிவு படுதலைக் குறித்தற்கு.

(உ - றை.) 'பெருங்கடலுட் சிக்கிக் கிடக்கின்ற மீனை நுளையர் அதனினின்றும் நீக்கி உயிர் செகுத்துக் கண்டாரெல்லார்க்குங் கூறு வைத்துப் பரப்பிப் பின்பு உயிர் வருத்தினோமென்னும் இரக்கமின்றி மணற்குன்றிலே உறங்கினாற் போல, பெருங்குலத்துப் பிறந்தஇவளை, நீயிர் நும் வசமாக நீக்கி வருத்தி, வேறுபாட்டான் 'எல்லாரும் இவளைச் சூழும்படி அலராக்கிப் பின்பு நீர் துயரமின்றி உறங்குகின்றீர் என்றவாறு.'

(மே - ள்.) [1]'நாற்றமும் தோற்றமும்' என்னும் சூத்திரத்து 'வந்த கிழவனை மாயஞ்செப்பிப் பொறுத்த காரணம் குறித்த காலையும்' என்ற பகுதிக்கு, இச்செய்யுளை உதாரணமாகக் காட்டி, இதனால், 'தம்மால் இடையூறெய்தி வருந்துகின்றாளை ஒரு நாள் வந்திலரென மாயஞ் செப் பியவாறும், நீர் வாராமையின் வண்ணம் வேறுபடுமென ஏற்றுக்கோடு மெனக் காரணங் கூறியவாறும் காண்க; தம்மேல் தவறின்றாகக் கூறுங் காலத்து இது கூறுவர் என்றதற்குக் குறித்த காலை என்றார்' என் றுரைத்தனர், நச்.

———

1. தொல். களவு: உ௩.

31. பாலை

[பிரிவிடை ஆற்றாளாயினளென்று பிறர் சொல்லக் கேட்டு வேறுபட்ட தலைமகள் தோழிக்குச் சொல்லியது.]

நெருப்பெனச் சிவந்த உருப்பவிர் மண்டிலம்
புலங்கடை மடங்கத் தெறுதலின் ஞொள்கி
நிலம்புடை பெயர்வ தன்றுகொல் இன்றென
மன்னுயிர் மடிந்த மழைமா றமையத்
திலையில வோங்கிய நிலையுயர் யாஅத்து
மேற்கவட் டிருந்த பார்ப்பினங் கட்குக்
கல்லுடைக் குறும்பின் வயவர் வில்லிட
நிணவரிக் குறைந்த நிறத்த வதர்தோறுங்
கணவிர மாலை யிடூஉக்கழிந் தன்ன
புண்ணுமிழ் குருதி பரிப்பக் கிடந்தோர்
கண்ணுமிழ் கழுகின் கானம் நீந்திச்
சென்றார் என்பிலர் தோழி வென்றியொடு
வில்லலைத் துண்ணும் வல்லாண் வாழ்க்கைத்
தமிழ்கெழு மூவர் காக்கும்
மொழிபெயர் தேஎத்த பன்மலை இறந்தே.

—மாமூலனார்.

(சொ - ள்.) ௧௨. தோழி - தோழியே;

௧—௪. நெருப்பு எனச் சிவந்த - தீயைப் போன்று சினந்தெழுந்த, உருப்பு அவிர் மண்டிலம் - வெம்மை விளங்கும் ஞாயிறு, புலம் கடை மடங்கத் தெறுதலின் - விளைநிலத்திடத்தேயுள்ள பயிர்கள் தீய்ந்தொழிய அழித்தலின், இன்று நிலம் ஞொள்கிப் புடை பெயர்வது அன்றுகொல் என - இன்று நிலவுலகம் குறைவுற்று நிலைபெயரும் காலம் அன்றோ என்று சொல்லும்படி, மன்னுயிர் மடிந்த மழை மாறு அமையத்து - நிலைபெறும் உயிர்கள் மடிதற் கேதுவாகிய மழை பெய்யா தொழிந்த இக் காலத்திலே;

௫—௧௧. இலைஇல ஓங்கிய உயர்நிலை யாஅத்து - இலைகள் இலவாகி மிக ஓங்கிய நிலையையுடைய யாமரத்தின், மேற்கவட்டு இருந்த பார்ப்பு இனங்கட்கு - மேலுள்ள கிளைகளிலிருந்த பார்ப்புக்களுக்கு, கல்லுடைக் குறும்பின் வயவர் வில்லிட - கற்களையுடைய சீறூரில் உள்ள மறவர்கள் வில்லால் அம்பினை எய்தலால், குறைந்த நிறத்த அதர்தொறும் - பொலிவற்ற நிறத்தினையுடைய வழிதோறும், கணவிரமாலை யிடூஉக் கழிந்தன்ன - செவ்வலரி மாலை இடப்பட்டு இறந்து

கிடந்தாலொப்ப, கிண வரி-கிண ஒழுங்கும், புண் உமிழ் குருதி பரிப்பக் கிடந்தோர் - புண் சொரியும் குருதியும் தம்மைச் சூழக் கிடந்தோரது, கண் உமிழ்-கண்ணைக் கவர்ந்து சென்று உமிழ்ந்து கொடுக்கும், கழுகின் கானம் நீந்தி - கழுகுகளையுடைய காட்டைத் தாண்டி;

கஉ—கு. வில் அலைத்து வென்றியொடு உண்ணும் வல்லாண் வாழ்க்கை - விற்போரில் பகைவர்களை அழித்து அவ் வெற்றியாலெய்தும் திறைப் பொருள்களைத் துய்க்கும் வலிய ஆண்மை பொருந்திய வாழ்க்கையினையுடைய, தமிழ்கெழு மூவர் காக்கும் - தமிழ் நாட்டினையாளும் மூவராலும் காக்கப்பெறும், மொழிபெயர் தேஎத்த பன்மலை யிறந்து - வேற்று மொழியினையுடைய தேயங்களிலுள்ள பல மலைகளையுங் கடந்து, சென்றோர் என்பு இலர்-தலைவர் சென்றோர் என்று கூறுதல் இலர்; (இவள் பிரிவாற்றாது வருந்துகின்றாளென்று என்னையே குறை கூறுகின்றனர்.[1])

(முடிபு) தோழி! மண்டிலம் தெறுதலின், மன்னுயிர் மடிந்த அமையத்து, யாஅத்து மேற்கவட்டிருந்த பார்ப்பினங்கட்கு (உணவாகக்) குருதி பரிப்பக் கிடந்தோரது கண்களைக் கொண்டு சென்று உமிழும் கழுதுகளையுடைய கானம் நீந்திப் பன்மலையிறந்து தலைவர் சென்றோர் என்பு இலர்; அமையத்துச் சென்றோர் என்க.

(வி - ரை.) புலக்கடை, புலங்கடையென விகாரமாயிற்று. நிலம் புடை பெயர்வது-உலகம் அழியும் ஊழிக்காலம்; [2]'நிலம் புடை பெயர்வதாயினும்' எனப் புறநானூற்றில் வருவதுங் காண்க. இல: குறிப்பு முற்று எச்சமாயிற்று. பார்ப்பு பறப்பவற்றின் இளமைப் பெயர். நிணவரியும் குருதியும் பரிப்பக் கிடந்தோர் என்க. கழுகின் கானம், உருபும் பொருளும் தொக்கன. என்பு - என்றல்; தொழிற் பெயர். மூவர் காக்கும் தமிழ்மொழியின் வேறாய மொழி வழங்கும் தேயம் என்றுமாம்.

---

32. குறிஞ்சி

[(1) பின்னின்ற தலைமகற்குக் குறைநேர்ந்த தோழி தலைமகட்குக் குறை நயப்பக் கூறியது. (2) தோழிக்குத் தலைமகள் சொற்றதூஉமாம்.]

நெருநல் எல்லை யேனல் தோன்றித்
திருமணி ஒளிர்வரும் பூணன் வந்து
புரவலன் போலுந் தோற்றம் உறழ்கொள
இரவன் மாக்களிற் பணிமொழி பயிற்றிச்
சிறுதினைப் படுகிளி கடீஇயர் பன்மாண்

---

1. 'பசந்தாள்' திருக்குறள், ககஅஅ. 2. புறம்: கூ. அ.—6.

குளிர்கோள் தட்டை மதனில புடையாச்
சூரர மகளிரின் நின்ற நீமற்
றியாரை யோவெம் அணங்கியோய் உண்கெனச்
சிறுபுறங் கவையின னாக அதற்கொண்
டிகுபெயல் மண்ணின் ஞெகிழ்பஞ ருற்றவென்
உள்ளவன் அறிதல் அஞ்சி உள்ளில்
கடிய கூறிக் கைபிணி விடாஅ
வெரூஉமான் பிணையின் ஒரீஇ நின்ற
என்னுரத் தகைமையில் பெயர்த்துப்பிறி தென்வயிற்
சொல்ல வல்லிற்றும் இலனே அல்லாந்
தினந்தீர் களிற்றிற் பெயர்ந்தோன் இன்றுந்
தோலாவா றில்லை தோழிநாம் சென்மோ
சாயிறைப் பணைத்தோட் கிழமை தனக்கே
மாசின் றாதலும் அறியான் ஏசற்
றென்குறைப் புறனிலை முயலும்
அண்க ணாளனை நகுகம் யாமே.

—[1]நல்வெள்ளியார்.

(சொ - ள்.) க—க. திரு மணி ஒளிர்வரும் பூணன் - அழகிய மணி விளங்கும் பூணினையுடையான் ஒருவன், நெருநல் எல்லை ஏனல் வந்து தோன்றி - நேற்றைப் பொழுது தினைப்புனத்தின்கண் வந்து தோன்றி, புரவலன் போலும் தோற்றம் உறழ்கொள - அரசன் போலும் தனது தோற்றத்துடன் மாறுபட, இரவல் மாக்களிற் பணிமொழி பயிற்றி - இரத்தல் செய்யும் மக்களைப் போலப் பணிந்த மொழிகளைப் பலகாற் சொல்லி, சிறுதினைப் படுகிளி கடீஇயர் - சிறிய தினையிற் பொருந்தும் கிளிகளைக் கடியுமாறு, குளிர்கொள் தட்டை மதன் இல பல் மாண் புடையா - குளிருடன் கூடிய தட்டையாய கிளிகடி கருவிகள் வலியில்லாதன கொண்டு பல முறையும் புடைத்து, சூர் அர மகளிரின் நின்ற நீ - சூரரமகளிர் போல நின்ற நீ, யாரையோ - யாரோ, எம் அணங்கியோய் - எம்மை வருத்தினவளே, உண்கு என - நின்னை நுகர்வேன் என்று கூறி, சிறுபுறம் கவையினன் ஆக - எனது பிடரியினை அணைத்துக் கொண்டானாக;

க—கச. அதற்கொண்டு - அவ்வுரைக் கருத்தினை மனத்திற் கொண்டு, இகுபெயல் மண்ணின் - மழை பெய்யப் பெற்ற மண்போல, ஞெகிழ்பு அஞர் உற்ற என் உள் அவன் அறிதல் அஞ்சி - நெகிழ்ந்து வருந்திய என் உள்ளத்து நிலையினை அவன் அறிதலை அஞ்சி, உள் இல்

(பாடம்) 1. நல்லொளியார்.

கடிய கூறிக் கைபிணி விடாஅ-மனத்தொடு படாத கடிய சொற்களைக் கூறி அவன் கையை அகற்றி, வெரூஉம் மான் பிணையின் ஒரீஇ நின்ற-அச்சமுறும் பெண்மானைப்போல் விலகிநின்ற, என் உரத் தகைமையில்-எனது வன்மையைக் கண்டு (கூசி), பெயர்த்து - தன் காதலை உள்ள டக்கிக் கொண்டு;

கச—எ. பிறிது என் வயின் சொல்ல வல்லிற்றும் இலன் - பிறிதொரு சொல்லும் என்னிடம் கூற வலியற்றவனாகி, அல்லாந்து-வருந்தி, இனம் தீர் களிற்றின் பெயர்ந்தோன் - தன் இனத்தினின்றும் நீங்கும் களிற்றைப்போல் மீண்டான், இன்றும் தோலா ஆறு இல்லை - அவன் இன்றும் வந்து நமக்குத் தோலாதிருத்தல் இல்லை;

கஅ—உக. சாய்இறைப் பணைத்தோட் கிழமை - நமது வளைந்த சந்தினையுடைய பெரிய தோளின் உரிமை, தனக்கே மாசு இன்று ஆதலும் அறியான் - தனக்கே குற்றமின்றி யுளதாதலையும் அறியானாய், ஏசற்று - வருந்தி, என் குறைப் புறனிலை முயலும் - என்னால் அடையலாம் காரியத்திற்கு என்னை இரந்து பின்னிற்றற்கு முயலும், கண் அன் ஆளனை யாம் நகுகம் - நம்முன் வந்துறும் அத் தலைவனைப் பழித்து மகிழ்வோம்;

உஉ. தோழி நாம் சென்மோ - தோழி நாம் செல்லுவோமாக:

(முடிபு) தோழி! பூணன் வந்து பணிமொழி பயிற்றி எம் அணங்கியோய்! நீ யாரையோ உண்கெனக் கவையினனாக கைபிணி விடாஅ ஒரீஇ நின்ற என் உரத் தகைமையின் சொல்ல வல்லிற்று மிலன் பெயர்ந்தோன் இன்றும் தோலாவாறில்லை; அன்கணாளனை நகுகம் நாம் சென்மோ.

(வி - ரை.) 'புரவலன் போலும் தோற்றம் உறழ்கொள, இரவன் மாக்களிற் பணிமொழி பயிற்றி' என்னும் இக் கருத்து, 'ஒன்று இரப்பான்போல் எளிவந்தும் சொல்லும், உலகம், புரப்பான் போல்வதோர் மதுகையு முடையன்' எனக் கலியுள்ளும் வருவது காண்க. குளிர் - கிளிகடி கருவியுள் ஒன்று; [2]"தழலும் தட்டையும் குளிரும் பிறவும்: கிளிகடி மரபின' என்றார் பிறரும். குளிர், சரமும் ஆம். மதனில என்ற நொய்ம்மையால் மகளிர் நொய்ம்மை கூறப்பட்டது. உண்கு - நுகர்வேன். உள் அறிதல் - உள்ள நெகிழ்ச்சியை அறிதல். உள்ளில் கடிய கூறி என்றது, உள்ளத்தில் அன்புவைத்தே புறத்தே கடுமொழி போற் றோன்றக் கூறி என்றபடி. இன்றும் தோலாவாறில்லை யென்றது, அவன் இன்றும் வந்து நம் கருத்தினை யறியாது திரும்பிச் செல்வான் என்றவாறு. புறனிலை - பின்னிற்றல், தாழ்ந்து நிற்றல். கண் அன்னாளனை எனக் கூட்டுக. தலைவியின் உள்ளக் கருத்தினை அறிதற்குத் தோழி தனது சிறுபுறம் கவையினனாக எனப் படைத்து மொழிந்து, அவன் குறையினைத் தலைவி விரும்பி ஏற்றுக்

1. குறிஞ்சிக் கலி: கக. 2. குறிஞ்சிப் பாட்டு: சஉ-ச.

கொள்ளவேண்டுமென்பாள், அண்கணாளனை நகுகம் சென்மோ என்றாள் என்க. இச்செய்யுள் தலைமகள் கூற்றெனின், தோழிக்கு அறத்தொடு நிற்றலாகும்.

(மே-ள்.) [1]'அறக்கழி வுடையன' என்னுஞ் சூத்திரத்து 'சிறுபுறங் கவையினனாக...கைபிணி விடாஅ' என்பதனைத் தலைவி மறை புலப்படுத்தல் வேண்டி, தன்னை அவன் நயந்தான் போலத் தோழி கூறிய வழுவமைதிக்கு எடுத்துக் காட்டினர், நச்.

---

33. பாலை

[தலைமகன் இடைச்சுரத்துத் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.]

வினைநன் றாதல் வெறுப்பக் காட்டி
மனைமாண் கற்பின் வாணுதல் ஒழியக்
கவைமுறி இழந்த செந்நிலை யாஅத்து
ஒன்றோங் குயர்சினை இருந்த வன்பறை
வீளைப் பருந்தின் கோள்வல் சேவல்
வளைவாய்ப் பேடை வருதிறம் பயிரும்
இளிதேர் தீங்குரல் இசைக்கும் அத்தம்
செலவருங் குரைய என்னாது சென்றவண்
மலர்பா டான்ற மையெழில் மழைக்கண்
தெளியா நோக்கம் உள்ளினை உளிவாய்
[2]வெம்பரல் அதர குன்றுபல நீந்தி
யாமே எமியம் ஆக நீயே
ஒழியச் சூழ்ந்தனை யாயின் முனாஅது
வெல்போர் வானவன் கொல்லி மீமிசை
நுணங்கமை புரையும் வணங்கிறைப் பணைத்தோள்
வரியணி அல்குல் வாலெயிற் றோள்வயின்
பிரியா யாயின் நன்றுமன் தில்ல
அன்றுநம் மறியா யாயினும் இன்றுநம்
செய்வினை ஆற்றுற விலங்கின்
எய்துவை அல்லையோ பிறர்நகு பொருளே.

—மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார்.

---

1. தொல். பொருளியல்: ௨௪.

(பாடம்) 2. வெம்பர ருஅய.

(சொ - ள்.) க—உ. நெஞ்சே-, வினை நன்று ஆதல் வெறுப்பக் காட்டி-பொருள் ஈட்டும் வினை அறம் முதலிய பயந்து நன்றாதலை மிக எடுத்துரைத்து, மாண் கற்பின் வாள் நுதல் மனை ஒழிய - மாண்புற்ற கற்பினையுடைய ஒள்ளிய நெற்றியினை யுடைய நம் தலைவி மனையில் இருப்ப ;

ங—எ. முறி இழந்த கவை செங்கிலை யாஅத்து-தளிர்கள் இழந்த கிளைகளையுடைய செவ்விய நிலையினையுடைய யா மரத்தில், ஒன்று ஓங்கு உயர் சினை இருந்த - கப்பின்றி ஒன்றாக மிக உயர்ந்துள கிளையிலிருந்த, வன் பறை வீளை ஞோள் வல் பருந்தின் சேவல் - வலிய பறத்தலையுடைய சிள்ளென்று ஒலி செய்யும் இரை கொள்ள வல்ல பருந்தினது சேவல், வளை வாய்ப் பேடை வருதிறம் பயிரும் - வளைந்த வாயினையுடைய தனது பேடை தன்பால் வரும் பரிசு அழைக்கும், இளி தேர் தீம் குரல் இசைக்கும் அத்தம் - இளியெனும் இசைபோன்ற இனிய குரல் ஒலித்துக்கொண்டிருக்கும் அரிய சுர நெறிகள் ;

அ—கக. செலவு அருங்குரைய என்னாது சென்று - செல்லுதற் கரியவென அதுபோதே கூறாது இத்துணையும் போந்து, அவள் மலர் பாடு ஆன்ற மை எழில் மழைக் கண் - தலைவியது மலர் தன் பெருமை இழத்தற்குக் காரணமான மையுண்ட அழகிய குளிர்ந்த கண்ணின், தெளியா நோக்கம் உள்ளினை-மயங்கிய நோக்கத்தினை நினைத்து, உளி வாய் வெம்பரல் அதர குன்று பல நீந்தி-உளியின் வாய்போன்று கூரிய வெவ்விய பரல்கள் பொருந்திய நெறிகளையுடைய குன்றுகள் பலவற்றைக் கடந்து வந்தும், யாமே எமியம் ஆக-யாம் தமியேம் ஆக, நீயே ஒழியச் சூழ்ந்தனையாயின்-நீ எம்மை விட்டு நீங்கிப் பிரிந்தேகக் கருதினையாயின் ;

கஉ—எ. வெல்போர் வானவன் மூதூர் கொல்லி மீமிசை - போர் வெல்லும் சேரனது பழையதாகிய கொல்லிமலையின் உச்சியில் உள்ள, நுணங்கு அமை புரையும் வணங்கு இறைப் பணைத்தோள்-சிறிய மூங்கிலை யொத்த வளைந்த முன்கையினை யுடைய பெரிய தோளினையும், வரி அணி அல்குல்-இதலையை அணிந்த அல்குலினையும், வால் எயிற்றோள் வயின்-வெள்ளிய எயிற்றினையுமுடைய தலைவியிடத்திருந்து, பிரியாயாயின் நன்று மன் - பிரியாதிருப்பாயாயின் நன்றாகும் ; அது செய்திலையே ;

கஅ—உ0. அன்று நம் அறியாய் ஆயினும் - பிரிகின்ற அன்று நம் இயல்பினை அறிந்து கொள்ளாய் ஆயினும், இன்று நம் செய்வினை ஆற்று உற விலங்கின் - இன்று நமது செய்யப்படும் இவ்வினையினை இந்த இடைநெறியில் உற்ற அளவில் விலக்குவையாயின், பிறர் நகுபொருள் எய்துவை அல்லையோ - பிறர் சிரிக்கத்தக்க இகழ்ச்சியை அடைவாய் அல்லையோ ?

(முடிபு) நெஞ்சே! வினை நன்றுதல் வெறுப்பக் காட்டி, மனைவாழுநர், ஒழிய, அத்தம் செலவு அருங்குரைய என்றுய செய்ந்று, அவள் நோக்கம் உள்ளினை ஒழியச் சூழ்ந்தனையாயின், வாளெயிற்றோள்வயின் (அன்றே) பிரியாயாயின் நன்று, மன்; இன்று நம் செய்வினை ஆற்றுற விலங்கின், பிறர் நகுபொருள் எய்துவை யல்லையோ.

(வி-ரை.) காட்டிச் சென்று ஒழியச் சூழ்ந்தனையாயின் என்க. மனை ஒழிய எனவும், பயிருங்குரல் எனவும், முறுஅது கொல்லி எனவும் இயையும். இளி-சட்ச சுரம், குரல் மத்திமம் ஆகலின் என்க. மெத்தெனப் பேடையை அழைத்தலின் மந்த சுரம் ஆயிற்று. சென்று என்றது போந்து என்றபடி. தில்: அசை; ஈறு திரிந்தது. யாமே நீயே என்னும் ஏகாரம் பிரிநிலை.

---

34. முல்லை

[வினைமுற்றிய தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.]

சிறுகரும் பிடவின் வெண்டலைக் குறும்புதல்
கண்ணியின் மலரும் தண்ணறும் புறவில்
தோடுதோற் கானவன் கவைபொறுத் தன்ன
இருதிரி மருப்பின் அண்ணல் இரலை
சேறியிலைப் பதவின் செங்கோல் மென்குரல்
மறியாடு மருங்கின் மடப்பிணை யருத்தித்
தெள்ளறல் தழீஇய வார்மணல் அடைகரை
மெல்கிடு கவுள துஞ்சுபுறங் காக்கும்
பெருந்தகைக் குடைந்த நெஞ்சம் ஏமுறச்
செல்க தேரே நல்வலம் பெறுந
புசைகோல் மெல்விரற் பெருந்தோட் புலைத்தி
துறைவிட் டன்ன தூமயி ரெகினம்
துணையோடு திளைக்கும் காப்புடை வரைப்பில்
செந்தார்ப் பைங்கிளி முன்கை யேந்தி
இனறுவரல் உரைமோ சென்சினோர் திறத்தென
இல்லவர் அறிதல் அஞ்சி மெல்லென
மழலை இன்சொல் பயிற்றும்
நாணுடை அரிவை மாணலம் பெறவே.

—மதுரை மருதன் இளநாகனார்.

(சொ - ள்.) க—க. சிறு கரும் பிடவின் - சிறிய கரிய பிடாவின், வெண்தலை குறும் புதல் - வெள்ளிய உச்சியினையுடைய குறிய புதர், கண்ணியின் மலரும் - மாலை போல மலரும், தண் நறும் புறவில் - குளிர்ந்த நறிய முல்லை நிலத்தில், தொடுதோல் கானவன் - செருப்பு அணிந்த தாளையுடைய வேட்டுவன், கவைபொறுத்தன்ன - கவைக் கோலைச் சுமந்தாலொத்த, இரு திரி மருப்பின் - பெரிய முறுக்குடைய கோட்டினையுடைய, அண்ணல் இரலை-பெருமை தங்கிய ஆண்மான்கள், செறி இலைப் பதவின் செங்கோல் மென்குரல் - நெருங்கிய இலைகளை யுடைய அறுகினது சிறந்த தண்டினோடு மெல்லிய கொத்துக்களை, மறி ஆடு மருங்கின் மடப்பிணை அருத்தி - மறிவிளையாடும் பக்கத்தினை யுடைய இளைய பெண்யானை அருந்தச் செய்து, தெள் அறல் தழீஇய வார்மணல் அடைகரை - தெளிந்த அறல்நீர் தழுவிச் செல்லும் நெடிய மணல் சார்ந்த கரைகளில், மெல்கிடு கவுள - அசைவிடும் கவுளினை யுடையவாய், துஞ்சு புறம் காக்கும்-அவை துயிலும் இடத்தைக் காவல் செய்திருக்கும், பெரும்தகைக்கு உடைந்த நெஞ்சம் ஏமுற - பெருந் தன்மையினைக் கண்டு அவை போலத் தலையளி செய்திலமே என்று தளர்ந்த நெஞ்சம் இன்பம் அடையவும்;

கக—அ. பசைகொல் மெல்விரல் - ஆடைகளிலே தோய்க்துள்ள கஞ்சிப் பசையினைக் கரைத்து விடும் மெல்லிய விரல்களையும், பெருந் தோள் புலைத்தி - பெரிய தோள்களையும் உடைய ஆடை ஒலிப்பவள், துறைவிட்டன்ன - அக் கஞ்சிப் பசையினைத் துறையில் அலசி விடுவது போன்ற, தூ மயிர் எகினம்- தூய மயிரினையுடைய அன்னங்கள், துணை யொடு திளைக்கும்-தம் பெடைகளுடன் விளையாடி மகிழும், காப்புடை வரைப்பின் - காவல் பொருந்திய மனை எல்லைக்குள், செம்தார்ப் பைங் கிளி - சிவந்த மாலை யணிந்தது போன்ற கழுத்தினையுடைய பசிய கிளியினை, முன் கை ஏந்தி - தனது முன் கையில் ஏந்தி, இல்லவர் அறிதல் அஞ்சி - இல்லில் உள்ளார் அறிந்து விடுவரோ என அஞ்சி, மெல்லென - மென்மையாக, சென்றிசினோர் திறத்து இன்று வரல் உரைமோ என - நம்மைப் பிரிந்து சென்ற தலைவர் திறத்து ஒன்று உரைப்பையாயின் அவர் இன்று வருவார் என உரைப்பாய் என்று, மழலை இன் சொல் பயிற்றும்-மழலையாகிய இனிய சொற்களைப் பயில் வித்திருக்கும், நாண் உடை அரிவை மாண் நலம் பெற - நாணம் மிக்க நம் தலைவியது மாண்புற்ற நலத்தினை அடையவும்;

கo. நல் வலம் பெறுந செல்க தேரே - தேரைச் செலுத்தும் நற்றிறம் வாய்ந்த பாகனே! நம் தேர் விரைந்து செல்வதாக.

(முடிபு) நல்வலம் பெறுந! நெஞ்சம் ஏமுற அரிவை மாணலம் பெறச் செல்க தேர்.

இரலை புறவில் பிணை அருத்தித் துஞ்சு புறங்காக்கும் பெருந்தகை எனவும், வரைப் பில் கிளி முன்கை யேந்தி இன்று வரல் உரைமோ என இன்சொற் பயிற்றும் அரிவை எனவும் இயையும்.

(வி - ரை.) பூவினால் வெண்டலையாயிற்று. கவை - புதர்களை ஒடுக்குதற்குக் கொண்ட கவைக்கோல். மறியாடுமருங்கின் மடப்பிணை-சூலுற்ற பிணையுமாம். பெருந்தகைக்கு - பெருந்தகைமையால். செல்க-செலுத்துக எனப் பிறவினையுமாம். தார்-கழுத்தின் இரேகை. சென்றிசினோர் திறத்து உரைக்கில் என ஒரு சொல் வருவிக்க. இல்லவர் அறிதல் அஞ்சி மெல்லெனச் சொல்லுதலின் நாணுடையாள் ஆயிற்று. [1]'உயிரினுஞ் சிறந்தன்று நாண்' என்பவாகலின் நாணுடை அரிவை என்பாராயினர். தலைவன் தன்னை இங்கே இரலையும் பிணையும் வருத்துகின்றன என்பதும், அவளை அங்கே அன்னமும் துணையும் வருத்துவன என்பதும் புலப்படக் கூறினான்.

(மே - ள்.) [2]'கரணத்தி னமைந்து' என்னுஞ் சூத்திரத்துப் பாகரிடத்தும் தலைவன் கூற்று நிகழும் என்பதற்கு, 'செல்க தேரே நல்வலம் பெறுந' என்பதனைக் காட்டினர், நச்.

---

35. பாலை

[மகட் போக்கிய நற்றாய் தெய்வத்திற்குப் பராஅயது.]

ஈன்று புறந்தந்த எம்மும் உள்ளாள்
வான்தோய் இஞ்சி நன்னகர் புலம்பத்
தனிமணி இரட்டும் தாளுடைக் கடிகை
நுழைநுதி நெடுவேற் குறும்படை மழவர்
முனையாத் தந்து முரம்பின் வீழ்த்த
வில்லேர் வாழ்க்கை விழுத்தொடை மறவர்
வல்லாண் பதுக்கைக் கடவுட் பேண்மார்
நடுகற் பீலி சூட்டித் துடிப்படுத்துத்[3]
தோப்பிக் கள்ளொடு துரூஉப்பலி கொடுக்கும்
போக்கருங் கவலைய புலவுநா றருஞ்சுரம்
துணிந்துபிறள் ஆயினள் ஆயினும் அணிந்தணிந்
தார்வ நெஞ்சமோ டாய்நலன் அளைஇத்தன்
மார்புதுணை யாகத் துயிற்றுக தில்ல
துஞ்சா முழவின் கோவற் கோமான்
நெடுந்தேர்க் காரி கொடுங்கால் முன்றுறைப்
பெண்ணையம் பேரியாற்று நுண்ணறல் கடுக்கும்

---

1. தொல். கள: ௨௨. 2. தொல். கற்பு: ௫.
(பாடம்) 3. துடிபடுத்து, துடிப்படத்.

நெறியிருங் கதுப்பினென் பேதைக்
கறியாத் தேஎத் தாற்றிய துணையே.

—அம்மூவனார்.

(சொ - ள்.) க—உ. வான்தோய் இஞ்சி - வான் அளாவிய மதிலை யுடைய, நல் நகர் புலம்ப - நன்றாகிய மனை தனிமையுற, ஈன்று புறந் தந்த எம்மும் உள்ளாள் - பெற்றுப் பாதுகாத்த எம்மையும் நினையா ளாய்;

ங—கக. தனி மணி இரட்டும் - ஒப்பற்ற மணி மாறி மாறி யொலிப்பதும், தாளுடைக் கடிகை நுழைநுதி - கடையாணியிட்ட காம்பினையும் கூரிய முனையையும் உடையதுமாய, நெடுவேல்-நெடிய வேலையுடைய, குறும்படை மழவர் - கோட்டை மழவராகிய, முனை ஆதந்து - வெட்சியார் போர்முனையில் வென்று ஆக்களை மீட்டு, முரம் பின் வீழ்த்த - அவ் வெட்சியாரை மேட்டு நிலத்தே வீழ்த்திய, வில் ஏர் வாழ்க்கை - வில்லையே ஏராகக்கொண்டு வாழும் வாழ்க்கையினை யுடைய, விழுத்தொடை மறவர் - சிறந்த அம்பினையுடைய கரந்தை வீரர்கள், வல்லாண் பதுக்கைக் கடவுள் பேண்மார் - தங்கள் வலிய ஆண்மையாலிட்ட பதுக்கைக் கண்ணுள்ள கடவுளை வழிபடற்கு, நடுகல் பீலி சூட்டி - அந் நடு கல்லில் மயிற்றோகைகளைச் சூட்டி, துடி படுத்து - துடியை அடித்து, தோப்பிக் கள்ளொடு - நெல்லாலாக்கிய கள்ளொடு, துருஉப் பலி கொடுக்கும் - செம்மறிக் குட்டியைப் பலி கொடுக்கும், போக்கு அரும் கவலைய - வழிப்போதற்கு இயலாத கவர்த்த வழிகளை யுடைய, புலவு நாறு அருஞ்சுரம் - புலால் வீசும் அரிய சுரநெறியில், துணிந்து பிறள் ஆயினள் ஆயினும் - செல்லத் துணிந்து பிறளொருத்தி யாக ஆயினள் எனினும்;

கச—அ. துஞ்சர முழவின் கோவல் கோமான் - முழவொலி யறாத திருக்கோவலூர்க்குத் தலைவனாகிய, நெடுந்தேர்க் காரி கொடுங் கால் முன்றுறை - நெடிய தேரினையுடைய காரியின் கொடுங்கால் என்னும் ஊரினிடத்தே முன்றுறையில் உள்ள, பெண்ணை அம் பேர் யாற்று நுண் அறல் கடுக்கும் - அழகிய பெரிய பெண்ணையாற்றின் நுண்ணிய கருமணலை யொக்கும், நெறி இரும் கதுப்பின் என் பேதைக்கு - நெளிந்த கரிய கூந்தலையுடைய என் மகட்கு, அறியாத் தேஎத்து ஆற்றிய துணை - அவளை யறிவார் பிறர் இல்லாத நாட்டிலே அவளைச் செலுத்திப்போம் துணைவன்;

கக—ங. அணிந்து அணிந்து ஆர்வ நெஞ்சமொடு - அன்பு மிக்க உள்ளத்தோடு அவளைப் பலகாலும் அணிவித்து, ஆய் நலன் அளைஇ - அவளது அழகிய நலனைத் துய்த்து, தன் மார்பு துணையாகத் துயிற்றுக - தனது மார்பு பற்றுக்கோடாகத் துயில்விப்பானாக.

(முடிபு) ஈன்றுபுறந்தந்த எம்மும் உள்ளாள், நசை புலம்ப, அருஞ்சுரம் துணிந்து பிறள் ஆயினள் ஆயினும், என் பேதைக்கு அரியாத் தேயத்து ஆற்றிய துணை, அணிந் தணிந்து ஆய்நலன் அளைஇத்தன் மார்பு துணையாகத் துயிற்றுக தில்ல.

(வி - ரை.) எம்மும் என்னும் உம்மை ஆயத்தினையும் பந்து கழங்கு முதலியவற்றையும் தழுவி நின்றது. சிறந்த நகர் எனினும் இவளொருத்தியின்றி விளக்கம் ஒழிந்தது என்றவாறு. குறும்படை - கோட்டை; குறும்பை அடைந்த என்றுமாம்; குறும்பு-சிற்றரண். மழவர் - வெட்சி வீரர் எனக்கொண்டு, அவரது முனையிடத்து ஆ எனலுமாம். பதுக்கைக் கடவுள் - பதுக்கையிடத்துக் கல்லில் உறையும் கடவுள். விழுத்தொடை - தப்பாத அம்பென்றும், துன்பஞ் செய்யும் அம்பென்றுமாம். துணிந்து என்றது சுரம்போதற் கருமையையும், பிறளாயினள் என்றது தம்மை மறந்து செல்லுதற் கருமையையும் புலப்படுப்பனவாம். தில்: விழைவுப் பொருட்டு. பெண்ணையாற்று முன்றுறை யென்க. துணை - தலைவன்; துணையாவான் அவனே என்னும் குறிப்பிற்றுமாம்.

(மே - ள்.) [1]'தன்னு மவனும்' என்னும் சூத்திரத்துத் தலைவன் தலைவிபால் மிகவும் அன்பு செய்கவென்று நற்றாய் தெய்வத்தைப் பராவியதற்கு இச் செய்யுளை எடுத்துக் காட்டினர், நச்.

இச்சூத்திரத்து இச் செய்யுளை எடுத்துக்காட்டி, இது செவிலி தெய்வம் பராஅயது என்பர், இளம்.

---

36. மருதம்

[தலைமகள் பரத்தையிற் பிரிந்து வந்த தலைமகனொடு புலந்து சொல்லியது.]

பகுவாய் வராஅல் பல்வரி இரும்போத்துக்
கொடுவாய் இரும்பின் கோளிரை துற்றி
ஆம்பல் மெல்லடை கிழியக் குவளைக்
கூம்புவிடு பன்மலர் சிதையப் பாய்ந்தெழுந்
தரில்படு வள்ளை ஆய்கொடி மயக்கித்
தூண்டில் வேட்டுவன் வாங்க வாராது
கயிறிடு கதச்சேப் போல மதமிக்கு
நாட்கயம் உழக்கும் பூக்கேழ் ஊர
வருபுனல் வையை வார்மணல் அகன்றுறைத்
திருமரு தோங்கிய விரிமலர்க் காவின்
நறும்பல் கூந்தற் குறுந்தொடி மடந்தையொடு

---

1. தொல். அகத்: கக.

வதுவை அயர்ந்தனை யென்ப அலரே
கோய்சுவற் புரவிக் கொடித்தேர்ச் செழியன்
ஆலங் கானத் தகன்றலை சிவப்பச்
சேரல் செம்பியன் சினங்கெழு திதியன்
போர்வல் யானைப் பொலம்பூண் எழினி
நாரரி நறவின் எருமை யூரன்
தேங்கமழ் அகலத்துப் புலர்ந்த சாந்தின்
இருங்கோ வேண்மான் இயல்தேர்ப் பொருநனென்
றெழுவர் நல்வலம் அடங்க ஒருபகல்
முரசொடு வெண்குடை அகப்படுத் துரைசெலக்
கொன்றுகளம் வேட்ட ஞான்றை
வென்றிகொள் வீரர் ஆர்ப்பினும் பெரிதே.

—மதுரை நக்கீரர்.

(சொ - ள்.) க—அ. பகுவாய் - பிளந்த வாயினையும், பல்வரி - பல வரிகளையுமுடைய, வராஅல் இரும்போத்து - பெரிய வராற் போத்து, கொடுவாய் இரும்பின் கோள் இரை துற்றி - வளைந்த வாயினையுடைய தூண்டிலிலுள்ள தனக்குக் கூற்றமாகிய இரையினை விழுங்கி, ஆம்பல் மெல்லடை கிழிய எழுந்து - ஆம்பலது மெல்லிய இலை கிழிய மேலெழுந்தும், குவளைக் கூம்புவிடு பன்மலர் சிதையப் பாய்ந்து - குவளையின் அரும்பு மலர்ந்த பல மலர்களும் சிதையும்படி பக்கத்தே பாய்ந்தும், அரில்படு வள்ளை ஆய்கொடி மயக்கி - பிணக்கம் மேவிய அழகிய வள்ளைக் கொடியினைக் கலக்கியும், தூண்டில் வேட்டுவன் வாங்க வாராது - தூண்டிலிட்ட வேட்டுவன் இழுக்கவும் வாராமல், கயிறு இடு கதச் சேப் போல - கயிறிட்டுப் பிடிக்கும் சினம் மிக்க ஏறு போல, மதம் மிக்கு நாட்கயம் உழக்கும் பூக்கேழ் ஊர - செருக்கு மிக்கு விடியற்காலத்தே குளங்களைக் கலக்கும் பூக்கள் பொருந்திய ஊரனே !;

௯—உக. புனல் வரு வையை வார் மணல் அகன்றுறை - என்றும் நீர் வற்றாது வரும் வையையின் மிக்க மணல் பொருந்திய அகன்ற துறையைச் சார்ந்த, திரு மருது ஓங்கிய விரிமலர்க் காவின் - அழகிய மருதமரம் ஓங்கிய விரிந்த மலர்களையுடைய சோலையில், நறும்பல் கூந்தல் குறுந்தொடி மடந்தையொடு - நன்மணமுடைய மிக்க கூந்தலையும் குறிய வளையல்களையும் உடைய பரத்தையை, வதுவை அயர்ந்தனை என்ப - மணஞ்செய்து கொண்டனை யென்று ஊரார் கூறுவர்; அலர் - அவ்வலர், கொய்சுவல் புரவிக் கொடித் தேர்ச் செழியன் - கொய்த பிடரி மயிரினையுடைய குதிரைகள் பூண்ட கொடி எடுத்த தேரினையுடைய பாண்டியன் நெடுஞ்செழியன், ஆலங்கானத்து அகன்தலை

சிவப்ப - தலையாலங்கானம் என்ற ஊரின் அகன்ற இடமெல்லாம் செங்நிறமடைய, சேரல் செம்பியன் சினம் கெழு திதியன் - சேரன் சோழன் சினம் மிக்க திதியன், போர்வல் யானைப் பொலம்பூண் எழினி - போரில் வலிய யானைகளையுடைய பொற்பூண் அணிந்த எழினி, நார் அரி நறவின் எருமையூரன் - பன்னாடையால் அரிக்கப் பெற்ற கள்ளினையுடைய எருமையூர்க்குத் தலைவன், தேம் கமழ் அகலத்துப் புலர்ந்த சாந்தின் இருங்கோ வேண்மான் - தேன் மணங் கமழும் மார்பிலே பூசிப் புலர்ந்த சந்தனத்தையுடைய இருங்கோ வேண்மான், இயல்தேர்ப் பொருநன் என்று - செவ்விதின் இயன்ற தேரினையுடைய பொருநன் என்று கூறப்பட்ட, எழுவர் நல்வலம் அடங்க - எழுவரது சிறந்த வெற்றிகள் சாய்ந்தொழிய, ஒரு பகல்-ஒரு பகலிலே, முரசொடு வெண்குடை அகப்படுத்து - அவர்தம் முரசுகளுடன் வெண் குடைகளைப் பற்றிக்கொண்டு, உரை செல - தன் புகழுரை எங்கும் பரவ, கொன்று களம் வேட்ட ஞான்றை - அவர் தம் படைகளைக் கொன்று களவேள்வி செய்த காலத்து, வென்றிகொள் வீரர் ஆர்ப்பினும் பெரிது - வெற்றியடைந்த வீரர்கள் ஆர்த்த ஆரவாரத்திலும் பெரிதாக உள்ளது.

(முடிபு) ஊர! வையை அகன்றுறைக் காவில், மடந்தையொடு வதுவை அயர்ந்தனை யென்ப; அலர், செழியன் எழுவர் நல்வலம் அடங்கக் கொன்று களம் வேட்ட ஞான்றை வீரர் ஆர்ப்பினும் பெரிது.

வாளை போத்து துற்றி, கிழியா ழுந்து, சினையப் பாய்ந்து, மயக்கி, வாங்கவாராது உழக்கும் எனவும், செழியன் அகன்றலை சிவப்ப எழுவர் நல்வலம் அடங்க அகப்படுத்துக் கொன்று களம் வேட்ட எனவும் இயையும்.

(வி - ரை.) கோள் - கொள்ளப்பட்ட என்றுமாம். இரும்பு - தூண்டில் முள். கூடற்பதியில் மருதமரம் உயர்ந்த காவினையுடைய வையையாற்றின் துறையானது, திருமருதந்துறையெனச் சான்றோர் பலராலும் பாராட்டிக் கூறப்பெறும்: [1]'திருமருத நீர்ப்பூந்துறை,' 'தீம்புனல் வையைத் திருமருத முன்றுறை,' 'திருமருத முன்றுறை முற்றங் குறுகி,' எனப் பரிபாடலிலும், [2]'வருபுனல் வையைமருதோங்கு முன்றுறை' எனச் சிலப்பதிகாரத்திலும் வருதல் காண்க. பகைவரது முரசுங் குடையும் போரில் பற்றிக்கொள்ளல், வெற்றிக்கு அடையாளமாகும். 'சினங்கெழு வேந்தரை. அருஞ்சமம் சிதையத் தாக்கி முரசமொடு, ஒருங்ககப் படேஎ னாயின்' என இந்நெடுஞ்செழியனே வஞ்சினங் கூறுதல் காண்க.

(உ - ரை.) 'வேட்டுவன் தூண்டிலிற் கோத்த இரையை இலையின் கீழ்க் கிடந்த வாளை நுகர்ந்து, தூண்டிற் றுவக்கு விடாது இலை கிழிய எழுந்து குவளைப் பூ மூறியப் பாய்ந்து அக் குவளையைச் சூழ்ந்த வள்ளையை மயக்கி, நாட்காலத்தே எல்லாருங் காணக் கயத்தை உழக்கு

1. பரி. எ: அ௩, ௧௧: ௩௦; உ௨: ௬௩. 2. சிலப். ௧௪: எ௨,

இன்றுற்போல, நின் பாணனுடைய நெஞ்சு வலியதாய்ப் புறம்பு மெல்லிதா யிருக்கின்ற இன்சொல்லாலே, அப் பரத்தை நலத்தை நுகர்ந்து, அப் பரத்தையர் தாய்மார் நெஞ்சு வருந்த அவ்விடத்தை விடாத அன்புடனே போந்து, நாங்கள் நுமது நிறங்கண்டு வருந்த இங்கே வந்து, குவளை மலர் சூழ்ந்த வள்ளைபோலும் எங்கள் சுற்றத்தார் மயங்க, அவர்களை வருத்தி, ஊரை யெல்லாம் இப்படி எல்லாரு மறியக் கலக்குவா னொருவ னல்லையோ' என்றவாறு' என்பர் குறிப்புரைகாரர்.

(மே - ள்.) [1]'பெற்ற பெருமை' [2]'நீர்வாழ் சாதியுள்' என்னும் சூத்திரங்களின் உரையில், நீர்வாழ் சாதியுள் 'போத்து' எனும் சொல் வந்ததற்கு, 'பகுவாய் வராஅற் பல்வரி யிரும்போத்து' என்பதனை எடுத்துக் காட்டினர், பேரா.

---

37. பாலை

[(1) தலைமகள் தோழிக்கு வன்புறை எதிரழிந்து சொல்லியது. (2) பிரிவுணர்த்திய தோழி சொல்லியதூஉமாம்.]

மறந்தவண் அமையார் ஆயினும் கறங்கிசைக்
கங்குல் ஓதைக் கலிமகிழ் உழவர்
பொங்கழி முகந்த தாவில் நுண்துகள்
மங்குல் வானின் மாதிரம் மறைப்ப
வைகுபுலர் விடியல் வைபெயர்த் தாட்டித்
தொழிற்செருக் கனந்தர் வீட எழிற்றகை
வளையோடு சிலைஇய வண்டளிர் மாஅத்துக்
கிளிபோல் காய கிளைத்துணர் வடித்துப்
புளிப்பதன் அமைத்த புதுக்குட மலிர்நிறை
வெயில்வெரி நிறுத்த பயிலிதழ்ப் பசுங்குடைக்
கயமண்டு பகட்டிற் பருகிக் காண்வரக்
கொள்ளொடு பயறு பால்விரைஇ வெள்ளிக்
கோல்வரைந் தன்ன வாலவிழ் மிதவை
வாங்குகை தடுத்த பின்றை ஓங்கிய
பருதியங் குப்பை சுற்றிப் பகல்செல
மருத மரநிழல் எருதொடு வதியும்
காமர் வேனில் மன்னிது
மாணலம் நுகருந் துணையுடை யோர்க்கே.

—விற்றூற்றுமூதெயினனார்.

1, 2. தொல். மரபு: சுக; சஉ.

(சொ - ள்.) கஅ. (தோழி), "மாண் நலம் நுகரும் துணையுடையோர்க்கு - மாண்புற்ற நலத்தினைத் துய்க்கும் துணையினைப் பிரியாதார்க்கு!

க—எ. கறங்கு இசைக் கங்குல் ஓதை - ஒலிக்கும் ஒலியினையுடைய வைகறையில் ஆள் அழைக்கும் ஆரவாரத்தையுடைய, கலிமகிழ் உழவர் - மிக்க களிப்புற்ற உழவர், வைகு புலர் விடியல் வை பெயர்த்து ஆட்டி - இரவில் தங்கிய இருள் புலர்கின்ற அவ்விடியலில், வைக்கோலைப் பிரித்துக் கடாவிட்டு அலைத்தெடுத்து, பொங்கழி முகந்த தா இல் நுண் துகள் - தூற்றுப் பொலியினின்றும் முகந்த வலியற்ற நுண்ணிய கூளங்கள், மங்குல் வானின் மாதிரம் மறைப்ப - இருண்ட மேகம் போலத் திசையெங்கும் மறைப்பத் தூற்றி, தொழில் செருக்கு அனந்தர் வீட - தொழிற் செருக்கால் வந்த மயக்கம் ஒழிய, வளியொடு சினைஇய எழில் தகை வண் தளிர் மாஅத்து - தென்றற் காற்றினால் கிளைத்த அழகின் மேன்மையுற்ற வளம் பொருந்திய தளிர்களையுடைய மாமரத்தில், கிளிபோல் காய - கிளிபோன்ற வடிவினையுடைய காய்களைக் கொண்ட, கிளைத்துணர் வடித்து - கிளைக் கொத்துக்களிலிருந்து அவற்றைக் கிள்ளி எடுத்து, புளிப்பதன் அமைத்த புதுக்குடம் மலிர் நிறை - அவற்றொடு புளிக்கும் பதனைச் சேர்த்தாக்கிய புதுக்குடங்களில் மிகப் பெய்த சாரங்களை, வெயில் வெரிந் நிறுத்த பயில் இதழ் பசுங்குடை - வெயிலினிடத்துப் பின்புறம் தோன்ற வைத்துப் பதத்தி லெடுத்த மிக்க இதழ்களையுடைய பசிய குடைகளால், கயம் மண்டு பகட்டிற் பருகி - குளத்தில் மண்டிய கடாக்களைப் போலக் குடித்து, கொள்ளொடு பயறு பால் விரைஇ - கொள்ளும் பயறும் அழகு பொருந்தப் பாலுடன் கலந்து ஆக்கிய, வெள்ளிக்கோல் வரைந்தன்ன வால்அவிழ் மிதவை - வெள்ளிக் கம்பியை ஒரளவாக நறுக்கி வைத்தாற் போன்ற வெள்ளிய அவிழ்க் கஞ்சியை, வாங்கு கை தடுத்த பின்றை - வளைத்துண்ட கை போதும் எனத் தடுத்த பின்னர், ஓங்கிய பருதி அம் குப்பை சுற்றி - வட்டமாய் உயர்ந்த ஞாயிறு போன்ற அழகிய நெற்குவியலை நெற்கூடாக்கிச் சுற்றி, பகல் செல - ஞாயிற்றின் வெப்பம் அகல, மருதமர நிழல் எருதொடு வதியும் - மருதமரத்தின் நிழலில் தம் எருதுகளோடு தங்கியிருக்கும், காமர் வேனில் இது - அழகிய வேனிற் காலம் இதுவாகும், மன் - அது கழிந்ததே, மறந்து அவண் அமையாராயினும் - நம் தலைவர் நம்மை மறந்து அங்கே தங்கியிராராயினும் (அதனால் நாம் பெற்றது என்?)

(முடிபு) தோழி! துணையுடையோர்க்கு இது காமர்வேனில் மன், நம் தலைவர் மறந்து அவண் அமையாராயினும் (அதனால் நாம் பெற்றது என்னை?)

உழவர் விடியலில் வைபெயர்த்தாட்டி, துகள்மாதிரம் மறைப்பத் தூற்றி, அனந்தர் வீட மலிர்நிறை பருகி, மிதவை தடுத்த பின்றை சுற்றி எருதொடு, வதியும் வேனில் என்றியையும்.

(வி - ரை.) கறங்கிசை - அநுகரணம். வளியொடு - வளியால். மாஅத்து - மாமரத்தில்; அத்து: சாரியை. கிளிபோலும் மாங்காய் உளதென்பதனை, [1]'ஊடுமென் சிறுகிளி யுணர்ப்பவன் முகம்போலப்,... கடிகயத் தாமரை கமழ்முகை கரைமாவின், வடி தீண்ட வாய்விடூஉம் வயலணி நல்லூர'எனவும், [2]'கோங்கலர் சேர்ந்த மாங்கனி தன்னைப், பாங்குற விருந்த பல்பொறி மஞ்ஞையைச்' செம்பொற் றட்டிற் றீம்பா லேந்திப், பைங்கிளி யூட்டுமோர் பாவையாமென்று' எனவும் பிற சான்றோர்கள் உவமை கூறியவாற்றானு முணர்க. கிளிமூக்கு மாங்காய் என்னும் வழக்கு உளது. வடித்து - உறந்து. புளிப் பதன்-புளிப்பை யுடைய மாதுளங்காய் முதலிய சில் பதம். இனி, புளிக்கும் செவ்வி யுண்டாக்கப்பெற்ற என்றுமாம். நிறை - ஊறின சாரம்: ஆகுபெயர். விரைஇ ·ஆக்கிய என ஒருசொல் வருவித்துரைக்க. மிதவை - கூழ். வாங்கு கை தடுத்த என்றது, வேண்டுமளவு உண்ட என்றபடி. எரு தொடு வறியும்என்றது, அவர்கள் இயல்பு கூறியபடி.

(மே - ள்.) [3]'உரிப் பொருளல்லன மயங்கவும் பெறுமே' என்னுஞ் சூத்திரத்து, உம்மையாற் றழுவிய பாலை தீம்புனலுலகத்து மயங்கி வந்தது இச் செய்யுள் என்றார், நச்.

---

38. குறிஞ்சி

[(1) தோழி தலைமகன் குறை கூறியது. (2) பகலே சிறைப்புறமாகத் தோழி தலைமகட்குச் சொல்லுவாளாய்த் தலைமகன் கேட்பச் சொல்லியதூஉமாம். (3) தோழி குறிபெயர்த்திட்டுச் சொல்லியதூஉமாம்.]

விரியிணர் வேங்கை வண்டுபடு கண்ணியன்
தெரிஇதழ்க் குவளைத் தேம்பாய் தாரன்
அஞ்சிலை யிடவ தாக வெஞ்சேலற்
கணைவலந் தெரிந்து துணைபடர்ந் துள்ளி
வருதல் வாய்வது வான்தோய் வெற்பன்
வந்தன னாயின் அந்தளிர்ச் செயலைத்
தாழ்வில் ஓங்குசினைத் தொடுத்த வீழ்கயிற்
றூசல் மாறிய மருங்கும் பாய்புடன்
ஆடா மையிற் கலுழ்பில தேறி
நீடிதழ் தலைஇய கவின்பெறு நீலம்
கண்ணென மலர்ந்த சுனையும் வண்பறை

---

1. மருதக்கலி: எ. 2. மணி. கூ: கஎ-எ0.
3. தொல். அகத்: கட.

மடக்கிளி எடுத்தல் செல்லாத் தடக்குரற்
குலவுப்பொறை இறுத்த கோற்றலை இருவி
கொய்தொழி புனமும் நோக்கி நெடிதுநினைந்து
பைதலன் பெயரலன்[1] கொல்லோ ஐதேய்
கயவெள் ளருவி சூடிய உயர்வரைக்
கூஉங்கண் அஃதெம் மூரென
ஆங்கதை யறிவுறல் மறந்திசின் யானே.

—வடம வண்ணக்கன் பேரிசாத்தனார்.

(செ. - ள்.) க—ரு. வான் தோய் வெற்பன் - வானளாவிய மலையையுடைய நம் தலைவன், விரி இணர் வேங்கை வண்டு படு கண்ணியன் - விரிந்த கொத்துக்களையுடைய வேங்கைப் பூவினாலாய வண்டுகள் மொய்க்கும் கண்ணியையுடையனாய், தெரி இதழ்க்குவளைத் தேம்பாய் தாரன் - ஆய்ந்தெடுத்த இதழ்களையுடைய குவளைப் பூவினாலாய தேன்பாயும் தாரையுடையனாய், அம் சிலை இடவதாக - அழகிய வில் இடப்பக்கத்திருப்ப, வெம் செலல் கணை வலம் தெரிந்து - கடிய செலவினையுடைய வலியமைந்த அம்புகளை ஆராய்ந்தெடுத்துக் கொண்டு, துணை படர்ந்து உள்ளி - தலைவி நினைந்து வருந்த, வருதல் வாய்வது - இங்கு வருதல் மெய்ம்மை;

சு—அ. வந்தனன் ஆயின்-அங்ஙனம் வரின், அம் தளிர்ச்செயலை-அழகிய தளிர்களையுடைய அசோகினது, தாழ்வு இல் ஓங்கு சினைத் தொடுத்த- தாழ்தல் இல்லாது ஓங்கியகிளையில் தொடுத்த, வீழ்கயிற்று ஊசல் மாறிய மருங்கும் - தொங்கும் கயிற்றினாலாய ஊசல் இல்லாதொழிந்த இடத்தையும்;

அ—கரு. பாய்வு உடன் ஆடாமையின் கலுழ்பு இல தேறி-ஒருங்கு பாய்ந்து விளையாடாமையின் கலங்குதல் இலவாய்த் தெளிந்து, நீடு இதழ் தலைஇய கவின்பெறு நீலம்-நீடிய இதழ்கள் பொருந்திய அழகிய நீலப்பூக்கள், கண்என மலர்ந்த சுனையும்-கண்போல மலர்ந்த சுனையையும், வண்பறை மடக்கிளி-அழகிய சிறகினையுடைய இளைய கிளி, எடுத்தல் செல்லாத் தடக்குரல் குலவுப்பொறை - தூக்கிச்செல்ல இயலாத பெரிய கதிராகிய வளைந்த பாரத்தை, இறுத்த கோல் தலை இருவி - முறித்த கோலாகிய தலையையுடைய தட்டைகள் பொருந்திய, கொய்து ஒழி புனமும் நோக்கி-கொய் தொழிந்த வறும் புனத்தையும் நோக்கி, நெடிது நினைந்து பைதலன் பெயரலன் கொல்லோ - நீள நினைந்து துன்புற்றவனாய்ப் பெயரலாகாது வருந்துவன் அன்றே;

கசு—அ. கயவெள் அருவி சூடிய உயர்வரை - சுனையினின்றும் வரும் வெள்ளியஅருவிகளை உச்சியிற் கொண்ட உயர்ந்த மலையில்,

(பாடம்) 1. பெயர்வன்.

கூஉம் கண்ணது எம் ஊரென - கூப்பிடு தூரத்திலுள்ளதே எம் ஊரென, ஆங்கு அதை அறிவுறல் யான் மறந்திசின் - அத் தலைவனைப் பிரிந்தவிடத்து அதனை அறிவுறுத்தலை யான் மறந்தேன், ஐ தேய்கு - அதனால் அழகு கெடுவேனாக.

(முடிபு) வான்றோய் வெற்பன் வருதல் வாய்வது; வந்தனனாயின் ஊசல் மாறிய மருங்கும் நீலம் மலர்ந்த சுனையும் கொய்தொழி புனமும் நோக்கி நெடிது நினைந்து பைதலன் பெயரலன் கொல்லோ; யான் ஆங்குக் கூவுங் கண்ணஃது எம் ஊரென அதை அறிவுறல் மறந்திசின்; ஐ தேய்கு.

வெற்பன் கன்னியன் தாரனுப் சிலை இடவதாகத் துணை தெரிந்து, உள்ள வருதல் வாய்வது என்க.

(வி - ரை.) சங்கச் செய்யுட்களில் வேங்கைமலரில் வண்டு படு மெனக் கூறியிருக்கவும், திவாகர பிங்கல நிகண்டுகள், 'சண்பகமும் வேங்கையும் வண்டுணா மலர் மரம்' எனக் கூறுதல் ஆராய்தற்குரியது. துணை - தலைவி, முன்னிலை, உள்ளி-உள்ள எனத் திரிக்க. தலைவியை நினைந்து எனப் பொருள் கொள்ளின், துணைப்படர்ந்து என்று பாடங் கொள்ளுதல் வேண்டும். தேறி என்னும் எச்சம் மலர்ந்த என்னும் பிறவினை கொண்டு முடிந்தது. கதிர்த்தலை கழிந்ததென்பார் கோற் றலை என்றார். இருவியையுடைய புனம் எனக் கூட்டுக. கொய்தொழி புனம் என்றது புனம் என்னும் பெயரளவாய் நின்றது. பெயரலன் கொல்லோ, பெயரமாட்டானாய் என்றுரைத்தலுமாம். கூஉங்கண் ணஃது, விரித்தல் விகாரம். அது எனத் திரிந்தது; அது-அதனை, அறி வுறல்: ஈண்டுப் பிறவினை.

இச் செய்யுட்குக் குறிக்கப் பெற்றுள்ள கருத்துக்கள் மூன்றும் தோழி கூற்றாகவுள்ளன. நச்சினார்க்கினியர் கருத்தின்படி இச் செய்யுள் தலைவி கூற்றாகின்றது.

(மே - ள்.) [1]'மறைந்தவற் காண்டல்' என்னும் சூத்திரத்து 'தன் குறி தள்ளிய தெருளாக்காலை, வந்தனன் பெயர்ந்த வறுங்கள நோக்கித் தன்பிழைப் பாகத் தழீஇத் தேறல்' என்பதற்கு இச் செய்யுளை எடுத் துக் காட்டி, இதனுள் ஊசன் மாறுதலும் புனமும் தன் குறி தள்ளிய இடன்; மறந்திசின் என்றது தெருளாக்காலை; கூஉங் கண்ணது ஊரென உணர்த்தாமையின் இடையீடு படுவதன்றி அவன்கண் தவ றுண்டோவெனத் தன்பிழைப்பாகத் தழீஇயினாள் என்றுரைத்து, இது சிறைப்புறமாக வரைவு கடாயது என்றும், [2]'அவன் வரம் பிறத்தல்' என்னும் சூத்திரத்து, இச் செய்யுள் தலைவி களஞ் சுட்டியதாகும் என் றும் கூறினர், நச்.

---

1. தொல். களவு: உ௦. 2. தொல். களவு: உக.

39. பாலை

[பொருண் முற்றிய தலைமகன் தலைமகளைக் கண்டு சொல்லியது.]

ஒழித்தது பழித்த நெஞ்சமொடு வழிப்படர்ந்
துள்ளியும் அறிதிரோ எம்மென யாழநின்
முள்ளெயிற்றுத் துவர்வாய் முறுவல் அழுங்க
நோய்முந் துறுத்து நொதுமல் மொழியனின்
ஆய்நல மறப்பெனோ மற்றே சேணிகந்து
ஒலிகழை பிசைந்த ஞெலிசொரி யொண்பொறி
படுஞெமல் புதையப் பொத்தி நெடுநிலை
முளிபுல் மீமிசை வளிசுழற் றுறாஅக்
காடுகவர் பெருந்தீ யோடுவயின் ஓடலின்
அதர்கெடுத் தலறிய சாத்தொ டொராங்கு
மதர்புலி வெரீஇய மையல் வேழத்
தினந்தலை மயங்கிய நனந்தலைப் பெருங்காட்டு
ஞான்றுதோன் றவிர்சுடர் மான்றற் பட்டெனக்
கட்படர் ஓதி நிற்படர்ந் துள்ளி
அருஞ்செல வாற்றா ஆரிடை ஞெரேரெனப்
பரந்துபடு பாயல் நவ்வி பட்டென
இலங்குவளை செறியா இகுத்த நோக்கமொடு
நிலங்கிளை நினைவினை நின்ற நிற்கண்
டின்னகை யினைய மாகவும் எம்வயின்
ஊடல் யாங்குவந் தன்றென யாழநின்
கோடேந்து புருவமொடு குவவுநுதல் நீவி
நறுங்கதுப் புளரிய நன்ன ரமையத்து
வறுங்கை காட்டிய வாயல் கனவின்
ஏற்றேக் கற்ற உலமரல்
போற்றா யாகலின் புலத்தியால் எம்மே.

—மதுரைச் செங்கண்ணனார்.

(சொ - ள்.) கச. கள் படர் ஓதி - வண்டு படியுங் கூந்தலையுடையவளே!,

க—௪. ஒழித்தது பழித்த நெஞ்சமொடு - பெண்கட்குத் துயர் புரியலாகாது என்று முன்னோர் ஒழித்த கொள்கையைப் பழித்த உள்ளமோடு, வழிப் படர்ந்து - நெடுவழிச் சென்று, உள்ளியும் அறிதிரோ எம்மென - எம்மை நினைத்தும் அறிந்தீரோ என, நின் முள்

எயிற்றுத் துவர்வாய் முறுவல் அழுங்க - நினது முட்போன்ற கூரிய பற்களையுடைய பவளம் போன்ற வாயின் நகை அழிய, நோய் மூழ்த்து-நோயைத் தோற்றுவித்து, பொதுமல் மொழியல்-உண்மைக்குப் புறம்பானதொன்றை மொழியாதே, நின் ஆய் நலம் மறப்பெனோ மற்று-ஆராயப்படும் நினது அழகினை மறப்பேனோ, மறந்திலேன்;

ஓ—௧௩. சேண் இகந்து - நெடுந்தூரம் தாண்டி, ஒலி கழை பிசைந்த ஞெலி சொரி ஒண் பொறி - தழைத்த மூங்கில் ஒன்றோடொன்று உரசித் தேய்வதால் அம் மூங்கில் சொரியும் ஒள்ளிய தீப் பொறி, படுஞெமல் புதையப் பொத்தி-மிக்க சருகுகள் மறையும்படி மூள, நெடுநிலை முளி புல் மீமிசை வளி சுழற்றுறுஅ-நெடிய இடத்துள்ள உலர்ந்த வாகம் புல் மீது காற்றானது சுழற்றிப் பரவச் செய்ய, காடு கவர் பெருந் தீ ஓடுவயின் ஓடலின் - காட்டைக் கவரும் பெரிய தீயானது காற்றுச் சென்ற விடமெல்லாம் பரத்தலின், அதர் கெடுத்து அலறிய சாத்தொடு - நெறியினைக் கைவிட்டலறிய வாணிகச் சாத்தரொடு, ஓராங்கு-ஒரு பெற்றியே, மதர் புலி வெரீஇய மையல் வேழத்து இனம் - செருக்குற்ற புலியினைக் கண்டு அஞ்சிய மயக்கம் பொருந்திய யானைக் கூட்டம், தலைமயங்கிய நனந்தலைப் பெருங்காட்டு-பலவிடத்தும் திரிதலுற்ற அகன்ற இடத்தையுடைய பெரிய காட்டகத்தே, ஞான்று தோன்று அவிர் சுடர் மான்றுற் பட்டென-(மாலையில் மறையுங் காலத்துத்) தாழ்ந்து தோன்றும் ஞாயிறு மயங்கி மறைந்திட்டதாக;

௧௪—௨௬. நிற் படர்ந்து உள்ளி - நின்னை நினைந்து நினைந்து, அருஞ் செலவு ஆற்றா ஆரிடை - அரிது சென்ற அச் செலவும் இயலாதொழிந்த அரிய வழியில், ஞெரேரெனப்-பொதுக்கென, பரந்து படு பாயல்-பரந்து கண்படும் பாயற்கண்ணே, நவ்வி பட்டென - பெண் மானைக் கண்டாலொத்த, இலங்கு வளை செறியா - விளங்குகின்ற வளை கழன்று விழுவதனை மேலே ஏற்றுச் செறித்து, இருத்த நோக்கமொடு-தாழ்ந்த நோக்கத்துடனே, நிலம் கிளை நினைவினை நின்றநிற்கண்டு-நிலத்தைக் காலாற் கிறும் வருத்த முடையையாய் நின்ற நின்னைக் (கனவிற்), கண்டு, இன் நகை - இனிய நகையினை யுடையாய்!, இனையமாகவும்-யாம் இங்ஙனம் வருந்தியிருப்பவும், எம்வயின் ஊடல் யாங்கு வந்தன்று என-எம்மிடத்து நீ ஊடல் செய்தல் எங்ஙனம் வந்தது எனச் சொல்லி, நின் கோடு ஏந்து புருவமொடு குவவு நுதல் நீவி-நினது பக்கம் உயர்ந்த புருவத்துடன் திரண்டு சிறுகிய நெற்றியினைத் துடைத்து, நறுங் கதுப்பு உளரிய நன்னர் அமையத்து - மணம் பொருந்திய கூந்தலைக் கோதிய நல்ல பொழுதிலே, வறுங்கை காட்டிய வாய் அல் கனவின்-வெறுங்கையாக்கிய அப் பொய்க் கனவிடத்தே, ஏற்று ஏக்கற்ற உலமரல் - துயிலையேற்று நின்னைக் காணாது ஏக்கற்ற வருத்தத்தினை, போற்றாய் ஆகலின் - நீ அறிவிற் கொள்ளாயாகலின், புலத்தியால் எம்மே-எம்மைப் புலக்கின்றாய்.

(முடிபு) கட்படர் ஓதி எம் உள்ளியும் அறிதிரோவென, முறவல் அழுங்க, நோய் முந்துறத்து, நொதுமல் மொழியல், நின் ஆய் நலம் மறப்பெனோ? பெருங் காட்டு அவிர்சுடர் பட்டென, நிற்படர்ந்துள்ளி செலவாற்ரு ஆரிடைப்பாயல், நின்னோடு நின்ற நிற்கண்டு இனியமாகவும் ஊடல் யாங்கு வந்தன்றெனா. நீவி, உரிய அமையத்து, வாயல் கனவின் உலமரல் போற்றுயாகலின் எம்மைப் புலந்தி.

(வி - ரை.) ஒழித்தது பழித்தல்-இரவலர்க்கு இடுதற்குப் பொருளின்றி அவரை அகற்றியதனைப் பழித்தல் என்றுமாம். ஆய் நலம்-ஆயத்தாரால் ஆராயப்படும் அழகு. மற்று: வினைமாற்று. ஞெலி-தீக்கடை கோல்; ஈண்டு மூங்கிலை ஞெலியென்றார். ஞெமல்-சருகு. பொத்தி-பொத்த. மூளிபுல்-மூங்கிலுமாம். சுழற்றுரு-சுழற்றி; இதனைச் சுழற்ற எனத்திரிக்க. ஓடலின் அலறிய சாத்தொடு எனவும், சாத்தொடு ஞெரேரெனக் கண்படு பாயற் கண்ணே எனவும், நவ்வி பட்டென இகுத்த நோக்கமொடு எனவும் இயைக்க. ஞான்று தோன்று - தொங்குவது போலத் தோன்றும். மான்றால்; ஆல்: அசை. கட்படர், கள்-வண்டு. ஞெரேரென - ஒலிக்குறிப்புமாம். பரத்தல் - வேண்டியபடி கிடத்தல். படுபாயல் - கண்படு பாயல். ஓதி, இன்னகை: விளிகள். என-என்று கூறி, யென ஒருசொல் வருவிக்க. யாழ இரண்டும் அசை. கனவிற் கண்டமையின் நன்னர் அமையம் ஆயிற்று. வறுங்கை காட்டுதல், ஒன்று உளது போலப் பிடித்துப் பின் வறுங்கை காட்டுதல் வழக்கு. ஈண்டுப் புணர்ச்சிபோல இருந்து பொய் படுத்திய கனவு. வாய் அல்-உண்மையல்லாத. ஏற்று - துயிலெற்று. துயிலெற்றமையின் கனவு பொய்யாயிற்று.

(மே - ள்.) [1]'கரணத்தி னமைந்து' என்னும் சூத்திரத்து, 'சென்ற தேஎத்து உழப்புநனி விளக்கி, இன்றிச் சென்ற தன்னிலை கிளப்பினும்' என்னும் பகுதியில், இச் செய்யுளைக் காட்டி, இதனுள் 'வறுங்கை காட்டிய வாயல் கனவின்' என நனவின்றிச் சென்றவற்றைத் தலைவன் கூறியவாறு காண்க என்றார், நச்.

[2]'கனவு முரித்தா லவ்விடத் தான' என்னும் சூத்திரத்து, காமம் இடையீடுபட்டுழித் தலைவனும் தலைவியும் கனக் காண்டலும் உரித்து எனக் கூறித் தலைவன் கனக் காண்டற்கு இச் செய்யுளை எடுத்துக் காட்டினர், இளம்.

---

1. தொல். கற்பு: ௫. 2. தொல். பொருள்: ௩.

40. நெய்தல்

[தலைமகன் பொருள்வயிற் பிரிந்தவழிக் கிழத்தி தோழிக்குச் சொல்லியது.]

கானல் மாலைக் கழிப்பூக் கூம்ப
நீனிறப் பெருங்கடல் பாடெழுந் தொலிப்ப
மீனார் குருகின் மென்பறைத் தொழுதி
குவையிரும் புன்னைக் குடம்பை சேர
அசைவண் டார்க்கும் அல்குறு காலைத்
தாழை தளரத் தூங்கி[1] மாலை
அழிதக வந்த கொண்டலொடு கழிபடர்க்
காமர் நெஞ்சம் கையறு பினையத்
துயரஞ் செய்துநம் அருளா ராயினும்
அறாஅ லியரோ அவருடைக் கேண்மை
அளியின் மையின் அவணுறை[2] முனைஇ
வாரற்க தில்ல தோழி கழனி
வெண்ணெல் அரிநர் பின்றைத் ததும்புந்
தண்ணுமை வெரீஇய தடந்தாள் நாரை
செறிமடை வயிரிற் பிளிற்றிப் பெண்ணை
அகமடற் சேக்குந் துறைவன்
இன்றுயின் மார்பிற் சென்றஎன் நெஞ்சே.

—குன்றியனார்.

(சொ - ள்) கஉ. தோழி—;

க—ரு. கானல் மாலைக் கழிப் பூக் கூம்ப-கடற்கரைச் சோலையை அடுத்த கழியில் வரிசையாகவுள்ள பூக்கள் குவியவும், நீல் நிறப் பெரும் கடல் பாடு எழுந்து ஒலிப்ப-நீல நிறத்தையுடைய பெரிய கடல் ஒலி மிக்கு ஒலிக்கவும், மீன் ஆர் குருகின் மென்பறைத் தொழுதி - மீனை புண்ணும் மெல்லிய சிறகினையுடைய பறவைக் கூட்டம், குவை இரும் புன்னைக் குடம்பை சேர - திரட்சி பொருந்திய பெரிய புன்னைமரத்தினுள்ள கூடுகளிற் சேரவும், அசைவண்டு ஆர்க்கும் - அசைகின்ற வண்டுகள் ஒலிக்கும், அல்குறு காலை-எல்லாம் தம் பதிகளிலே சென்று தங்குங் காலமாகிய, மாலை-மாலைப்பொழுதிலே, தாழை தளரத் தூங்கி-தாழைகள் தளர்ந்திட அசைந்து; அழிதக வந்த கொண்டலொடு-பிரிந்திருப்பார் வருந்த வந்த கீழ்காற்றினால், கழி படர்க் காமர் நெஞ்சம் கையறுபு இனைய - மிக்க துன்பங் கொண்ட அழகிய நெஞ்சம்

(பாடம்) 1. தூக்கி. 2. அவணுறைவு.

செயலற்று வருந்த, துயரஞ் செய்து நம் அருளாராயினும் - நமக்குப் பிரிதற் றுன்பினைச் செய்து (மீண்டு வந்து) நம்மை அருளாராயினும்;

௧0. அருவியர் அவருடைக் கேண்மை - அவரது நட்பு நமக்கு ஒழியாதிருப்பதாக;

௧௧—௭. கழனி வெண்நெல் அரிநர் பின்றைத் ததும்பும்-வயல்களில் வெண்ணெல்லை அரிவோரது பின்பு நின்றொலிக்கும், தண்ணுமை வெரீஇய தடந் தாள் நாரை - பறை ஒலியினைக் கேட்டஞ்சிய நீண்ட கால்களையுடைய நாரை, செறிமடைவயிரிற் பிளிற்றி - செறிந்த மூட்டு வாயினையுடைய கொம்புபோல் ஒலித்து, பெண்ணை அகமடல் சேக்கும் துறைவன் - பனைமரத்தின் மடலகத்தே தங்கும் கடற்றுறையுடைய தலைவனது, இன்துயில் மார்பில் சென்ற என் நெஞ்சு - இனிய துயிற்குரிய மார்பின் பொருட்டுச் சென்ற என் நெஞ்சு, அளியின்மையின் அவண் உறை முனைஇ-அவர் அளி செய்திலரென்று அங்கே தங்குதலை வெறுத்து, வாரற்க தில்ல - இங்கு வாராதிருப்பதாக.

(முடிபு) தோழி! மாலைக் கொண்டலால் நெஞ்சம் இனைய, (தலைவர்) துயரஞ் செய்து அருளாராயினும் அவருடைக் கேண்மை அருவியர்; துறைவன் மார்பிற் சென்ற என் நெஞ்சு வாரற்க.

கூம்ப, ஒலிப்ப, சேர, ஆர்க்கும் காலையாய மாலை எனவும்; தூங்கிவந்த கொண்டல் எனவும் இயையும்.

(வி - ரை.) நீல்: கடைக்குறை. அசை வண்டு-நீர்ப் பூக்களிலும் கோட்டுப் பூக்களிலும் தடுமாறுகின்ற வண்டு. நம் - நம்மை. உறை-உறைதல்: முதனிலைத் தொழிற்பெயர். வாரற்க என்றது இங்கு வந்தால் என்னொடு கிடந்து துயருறு மென்றவாறு. தில் - விழைவு, அசையுமாம்.

(உ - றை.) 'வெண்ணெல் அரிநர் தங் காரியஞ் செய்யப் பறை கொட்டுவிக்க, நாரை வேற்று நிலத்ததாகிய பெண்ணையிலே சென்று தங்கித் தான் வாழுமிடமாகிய மருதநிலத்தை மறந்தாற்போலத் தங் காரியஞ் செய்ய நம்மைப் பிரிவார் இல்லைப் பிரிந்த வழி நம்முடைய நெஞ்சு நம்மைவிட்டுத் தனக்கு அந்நியமாகிய அவர் மார்பிலே சென்றது என்றவாறு' என்பது குறிப்புரை.

(மே - ள்.) [1]'முதல்கரு வுரிப்பொருள்' என்னுஞ் சூத்திரத்து, நெய்தற்கு முதலும் கருவும் உரியும் வந்ததற்கு இச் செய்யுளை எடுத்துக் காட்டினர் இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும்.

[2]'வைகுறு விடியல்' என்னுஞ் சூத்திரத்து, நெய்தற்கு மாலையும் வந்தமைக்கு இச் செய்யுளை எடுத்துக் காட்டினர், நச்.

---

1. தொல். அகத் : ௩.   2. தொல். அகத்:௮.

41. பாலை

[தலைமகன் பொருள்வயிற் பிரிந்தவிடத்துக் கிழத்தியை நினைந்து சொல்லியது.]

வைகுபுலர் விடியல் மைபுலம் பரப்பக்
கருநனை அவிழ்ந்த ஊழுறு முருக்கின்
எரிமருள் பூஞ்சினை இனச்சிதர் ஆர்ப்ப
நெடுநெல் அடைச்சிய கழனியேர் புகுத்துக்
குடுமிக் கட்டிய படப்பையொடு மிளிர
அரிகால் போழ்ந்த தெரிபகட் டுழவர்
ஓதைத் தெள்விளி புலந்தோறும் பரப்பக்
கோழிணர் எதிரிய மரத்த கவினிக்
காடணி கொண்ட காண்டகு பொழுதின்
நாம்பிரி புலம்பின் நலஞ்செலச் சாஅய்
நம்பிரி பறியா நலனொடு சிறந்த
நற்றோள் நெகிழ வருந்தினள் கொல்லோ
மென்சிறை வண்டின் தண்கமழ் பூந்துணர்
தாதின் துவலை தளிர்வார்ந் தன்ன
அங்கலுழ் மாமை கிளைஇய
நுண்பல் தித்தி மாஅ யோளே.

—[1] குன்றியனார்

(சொ - ள்.) ௧௩—௬. மென்சிறை வண்டின்-மெல்லிய சிறகினையுடைய வண்டுகளையுடைய, தண் கமழ் பூந்துணர்-குளிர்ச்சியையுடைய மணக்கும் பூங்கொத்துக்களிலுள்ள, தாதின் துவலை - தாதுடன் கூடிய தேன்துளி, தளிர் வார்ந்தன்ன - தளிரில் ஒழுகியதுபோலும், அம் கலுழ் மாமை கிளைஇய - அழகு ஒழுகும் மாமை நிறத்தில் கிளைத்துத் தோன்றும், நுண்பல் தித்தி-சிறிய பல தேமற் புள்ளிகளையுடைய, மாயோள்-நம் கிழத்தி;

௧—௯. வைகு புலர் விடியல் - தங்கிய இருள் புலர்ந்திடும் விடியற் காலத்தில், மை புலம் பரப்ப - எருமைகள் நிலத்தே பரந்து செல்ல, முருக்கின் கருநனை அவிழ்ந்த - முருக்க மரத்தின் பெரிய அரும்புகள் முறுக்கு நெகிழ்ந்த, எரி மருள் ஊழ் உறு பூஞ்சினை - நெருப்பை ஒத்த மலர்ந்த பூக்களையுடைய கிளைகளில், இனச் சிதர் ஆர்ப்ப - கூட்டமாய வண்டுகள் ஒலிக்க, நெடு நெல் அடைச்சிய கழனி ஏர் - நெடிய நெற்பயிரினை நட்ட கழனியிலுள்ள ஏர்களை, குடுமிக் கட்டிய படப்பையொடு

(பாடம்) 1. சேரமானந்தையர்.

புகுத்து - தலைகுவிந்த கட்டிகளையுடைய தோட்டத்தில் சேர்த்து, மிளிர-மண் பிறழும்படி, அரிகால் போழ்ந்த - அரிதாளையுடைய நிலத்தைப் பிளந்து உழுத, தெரிபகட்டு உழவர் - ஆராய்ந்த எருதுகளைக் கொண்ட உழவர்களது, ஓதைத் தெள்விளி-ஏர் ஓட்டும் ஓசையாகிய தெளிந்த ஒலி, புலந்தொறும் பரப்ப - இடந்தோறும் பரக்க, கவினிக் கோழ் இணர் எதிரிய மரத்த - அழகுற்றுச் செழிய பூங்கொத்துக்கள் தோன்றிய மரங்களையுடைய, காடு அணி கொண்ட-காடு அழகுபெற்ற, காண்தகு பொழுதில்-காட்சி பொருந்திய இக் காலத்தில் ;

௧0—௨. நம் பிரிபு அறியா நலனொடு சிறந்த நற்றோள்-நம் பிரிவு என்பதே அறியாமல் இயற்கை யழகினோடுகூடி மிகச் சிறப்புற்றிருந்த தனது நல்ல தோள்கள், நாம் பிரி புலம்பின் - இப்போது நாம் பிரிந்திட்ட தனிமையால், நலம் செலச் சாஅய் நெகிழ-அவ்வியற்கை யழகு கெட மிகவும் மெலிந்து நெகிழ்ந்திடலால், வருந்தினள் கொல்லோ - வருந்தினளோ ?

(முடிபு) மாயோளாகிய நம் கிழத்தி, காடணி கொண்ட காண்டகு பொழுதில், தனது நற்றோள் நலஞ்செலச் சாஅய் நெகிழ வருந்தினள் கொல்லோ ?

மைபுலம் பரப்ப, சிதர் ஆர்ப்ப, தெள்விளி பரப்ப, காடணி கொண்ட பொழுது என்க.

(வி - ரை.) விடியலும் எருமையும் பாலைக்கண் மயங்கி வந்தன. படப்பையொடு - படப்பையில். அரிகால் - புன்செய்ப் பயிர்களை அரிந்த தாள்.

(மே - ள்.) [1]'ஒன்றாத் தமரினும்' என்னுஞ் சூத்திரத்து, இச் செய்யுள் 'பகைவயிற் பிரியும் தலைமகன் கூற்று' எனவும்,......இவ்வாறு வருவன குறித்த பருவம் பிழைத்துழி என்று கொள்க' எனவும் கூறினர் ; இளம்.

---

42. குறிஞ்சி

[தலைமகன் வரைவு மலிந்தமை தோழி தலைமகட்குச் சொல்லியது.]

மலிபெயற் கலித்த மாரிப் பீத்திகத்துக்
கோயலரு நிலைய[2] பெயலேர் மணமுகைச்
செவ்வெரி நுறமுங் கொழுங்கடை மழைக்கண்
தளிரேர் மேனி மாஅ யோயே
காடுவறங் கூர நாஞ்சில் துஞ்சக்

1. தொல். அகத்: ௪௪. (பாடம்) 2. கிலைஇய.

கோடை நீடிய பைதறு காலைக்
குன்றுகண் டன்ன கோட்ட யாவையுஞ்
சென்றுசேக் கல்லாப்[1] புள்ள உள்ளில்
என்றூழ் வியன்குளம் நிறைய வீசிப்
பெரும்பெயல் பொழிந்த ஏம வைகறைப்
பல்லோ ருவந்த உவகை எல்லாம்
என்னுட் பெய்தந் தற்றே சேணிடை
ஓங்கித் தோன்று முயர்வரை
வான்றோய் வெற்பன் வந்த மாறே.

—கபிலர்.

(சொ - ள்.) க—ச. மலி பெயல் கலித்த - மிக்க பெயலாலே தழைத்த, மாரிப் பித்திகத்து - மாரிக்காலத்துப் பூப்பதாய பித்திகத்தின், கொயல் அரும் நிலைய - மிகுதியால் கொய்தல் இயலா நிலைமையை யுடைய, பெயல் ஏர் மண முகை - மழைக்கு எழுச்சி பெற்ற மணம் தங்கிய அரும்பின், செவ் வெரிந் உறழும் - சிவந்த பின்புறத்தை ஒக்கும், கொழுங்கடை மழைக்கண் - வளவிய கடையினையுடைய குளிர்ந்த கண்ணினையும், தளிர் ஏர் மேனி - தளிரை யொத்த அழகிய மேனியையும் உடைய, மாஅயோயே - மாமை நிறத்தை யுடையவளே!,

கஉ—ச. சேண் இடை ஓங்கித் தோன்றும் - நெடுந்தூரத்தே உயர்ந்து தோன்றும், உயர்வரை - உயர்ந்த பக்கமலைகளையுடைய, வான் தோய் வெற்பன் - வானளாவிய பெருமலையை யுடைய தலைவன், வந்த மாறே - வரைவு மலிந்து வந்தமையானே (அது கண்ட என் மகிழ்ச்சி);

ரு—சு. நாடுவறங்கூர நாஞ்சில் துஞ்ச - மழை பெய்யாமையால் நாட்டில் வறுமை மிகக் கலப்பை தொழிலற்று ஒழிய, கோடை நீடிய பைது அற காலை - கோடை நீண்ட பசுமையற்ற காலத்தே;

எ—அ. குன்று கண்டன்ன கோட்ட - குன்றங்களைக் கண்டாற் போலும் பெரிய கரைகளை யுடையனவும், சென்று சேக்கல்லாப் புள்ள - நீரின்மையின் பறவைகள் வந்து தங்குதலில்லாதனவும், உள் இல் என்றூழ் வியன் குளம் யாவையும் - உள்ளே நீர் இல்லாதனவும் வெப்பம் மிக்கனவுமாகிய பெரிய குளங்களெல்லாம்;

௯—கஉ. நிறைய வீசிப் பெரும் பெயல் பொழிந்த - நிறையும்படி உதவிப் பெரிய மழை பொழிந்து விட்ட, ஏம வைகறை - இன்பம் மிக்க விடியற்காலத்தே, பல்லோர் உவந்த உவகை யெல்லாம் - அதனைக் கண்ட பல்லோரும் மகிழ்ந்த மகிழ்ச்சியை யெல்லாம், என்னுட் பெய்தந்தற்றே - ஒரு சேர என்னுள்ளே பெய்து வைத்தாற் போலும்.

(பாடம்) 1. சேர்கல்லா.

(முடிபு) மாயோய்! வெற்பன் வந்த மாறே, (என் மகிழ்ச்சி) பெரும் பெயல் பொழிந்த ஏம வைகறை, பல்லோர் உவந்த உவகை யெல்லாம் என்னுட் பெய்தந் தற்று.

(வி - ரை.) பித்திகம், மாரிக்காலத்தே தழைத்து அக் காலத்து அந்தியில் மலர்வது; அதன் மலரின் புறம் சிவப்பாயிருத்தலின் செவ் வரி படர்ந்த கண்ணிற்கு உவமை; இதுவே பிச்சி என்று வழங்கப் பெறுவது. மின் மழைக்கண்ணும் தளிர் மேனியும் வேறுபட்டு வருந் தாமல் வரைவொடு வந்தார் என்பது குறிக்கத் தோழி தலைவியை அங்ஙனம் விளித்தனள். வந்தமையால் எழுந்த மகிழ்ச்சி என எழுவாய் வருவித்து முடிக்கப்பட்டது.

சென்று சேக்கல்லாப் புள்ள-சென்று தங்காத பறவைகளையுடைய; பறவைகள் சென்று தங்காத என்றபடி; இது கேடில்லாதவன் என்ப தனை, இல்லாத கேட்டையுடையவன் என்பது போல நின்றது. [1]"'அருங்கேடன்' என்பதனைச், 'சென்று சேக்கல்லாப் புள்ள வுள்ளில், என்றூழ் வியன்குளம்' என்பது போலக் கொள்க" எனப் பரிமேலழகர் உரைத்ததுங் காண்க. சேக்கல் - தங்கல். கோட்ட, புள்ள, குளம் என்க. வரை - மூங்கிலுமாம். மாறு: மூன்றும் வேற்றுமைப் பொருள் படுவதோர் இடைச்சொல்; [2]'அனையை யாகன் மாறே' என்பதுபோல.

---

43. பாலை

[தலைமகன் பொருள் கடைக்கூட்டிய நெஞ்சிற்குச் சொல்லியது.]

கடல்முகந்து கொண்ட கமஞ்சூல் மாமழை
சுடர்நிமிர் மின்னொடு வலனேர் பிரங்கி
என்றூழ் உழந்த புன்றலை மடப்பிடி
கைமாய் நீத்தங் களிற்றொடு படீஇய
நிலனும் விசும்பும் நீரியைந் தொன்றிக்
குறுநீர்க் கன்னல் எண்ணுநர் அல்லது
கதிர்மருங் கறியா தஞ்சுவரப் பாஅய்த்
தளிமயங் கின்றே [3]தண்குரல் எழிலி, யாமே,
கோய்யகை முல்லை காலொடு மயங்கி
மையிருங் கான நாறு நறுநுதற்
பல்லிருங் கூந்தல் மெல்லியல் மடந்தை

---

1. குறள்: ௨௧௦. 2. புறம்: ௪.
(பாடம்) 3. இன்குரல்.

கல்லெழில் ஆகஞ் சேர்ந்தனம் என்றும்
அளியரோ வளியர் தாமே அளியின்
றேதில் பொருட்பிணிப் போகித்தம்
௧௫ இன்றுணைப் பிரியும் மடமை யோரே.

—மதுரையாசிரியர் நல்லந்துவனார்.

(சொ - ர்.) ௧—அ. தண் குரல் எழிலி - தண்ணிய முழக்கத்தைக் கொண்ட மேகங்கள் பெய்யும் கார்காலமானது, கடல் முகந்து கொண்ட கமஞ்சூல் மாமழை - கடலின் நீரை முகந்து நிறைந்த சூலினையுடைய கரிய மேகம், சுடர் நிமிர் மின்னொடு வலன் ஏர்பு இரங்கி-ஒளி மிக்க மின்னலுடன் வலமாக எழுந்துசென்று ஒலித்து, என்றூழ் உழந்த புன்றலை மடப்பிடி - ஞாயிற்றின் வெம்மையால் வருந்திய புற்கென்ற தலையினையுடைய இளைய பெண் யானை, கைமாய் நீத்தம் களிற்றொடு படீஇய - மேலே உயர்த்திய தன் கையும் மறையத்தக்க ஆழ்ந்த வெள்ளத்தில் களிற்றுடன் படிந்து விளையாட, நிலனும் விசும்பும் நீர் இயைந்து ஒன்றி-நிலத்திலும் வானிலும் மழைக்கால் நீர் பொருந்திச் சேர்ந்திட, குறுநீர்க் கன்னல் எண்ணுநர் அல்லது-குறிய நீரையுடைய நாழிகை வட்டிலால் நாழிகை அளந்து கூறுவார் கூறலின்றி, கதிர் மருங்கு அறியாது அஞ்சுவர-ஞாயிறு உள்ள இடம் இதுவென அறியப் படாமையின் உலகம் அஞ்சுதலடைய, பாஅய் தளி மயங்கின்று-எங்கும் பரந்து பெய்யும் மழையொடு பொருந்தியது ;

அ—௧௨. யாமே-நாம், கொய் அகை முல்லை காலொடு மயங்கி - கொய்யப்படும் தழைத்த முல்லை காற்றால் மயங்குதலின், மை யிருங் கானம் நாறும் நறு நுதல்-கரிய பெரிய காடு நாறுவதென்ன நாறும் நறிய நுதலினையும், பல்இருங்கூந்தல் - பல வகை முடி சான்ற கரிய கூந்தலினையும், மெல்லியல் - மென்மைத் தன்மையினையும் உடைய, மடந்தை நல் எழில் ஆகம் சேர்ந்தனம் - நம் தலைவியின் நல்ல அழகுடைய ஆகத்தினைப் பிரியாதிருக்கின்றோம் ;

௧௨—௫. அளி இன்று - இரக்க மின்றி, ஏதில் பொருட்பிணிப் போகி-அயலதாகிய பொருளீட்டும் பற்றுக்கொண்டு பிரிந்து சென்று, தம் இன்துணைப் பிரியும் மடமையோர் - தம்முடைய இனிய துணைவியைப் பிரியும் மடமையை யுடையோர், என்றும் அளியரோ அளியர் - எஞ்ஞான்றும் மிகவும் இரங்கத்தக்கார்.

(முடிபு) எழிலி, மழை ஏர்பு இரங்கிப் பாஅய்ப் (பெய்யும்) தளியொடு மயங்கின்று ; யாம் மடந்தை ஆகம் சேர்ந்தனம் ; துணைப் பிரியும் மடமையோர் அளியரோ அளியர்.

(வி - ரை.) பெய்யும் தளியென ஒரு சொல் வருவித்துரைக்க. ஒன்ற, அஞ்சுவர என்னும் செயவெ னெச்சங்கள் பெய்யும் என வரு

வித்த பெயரெச்ச வினைகொண்டு முடியும். மழை - மேகம். கைமாய் நீத்தம்; கை - நீர் ஆழம் காட்டுவார் கையுமாம். ஒன்றி - ஒன்ற எனத் திரிக்க. கன்னல் - நாழிகை வட்டில், நாழிகையுமாம். தளி - மழை, தண் குரல் எழிலி என்பது ஆகுபெயரால் கார்காலத்தை யுணர்த்திற்று. கொய் முல்லை, அகை முல்லை என்க. அகைத்தல் - தழைத்தல்; இளைத்தலுமாம். காலொடு - காலால். மயங்குதல் - நெருங்குதல். அளியரோ அளியர் என்னும் அடுக்கு மிகுதி பற்றியது. கழைமாய் என்பது பாடமாயின் ஓடக் கோல் மறையும் நீத்தம் என்க.

---

44. முல்லை

[வினைமுற்றி மீளும் தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.]

வந்துவினை முடித்தனன் வேந்தனும் பகைவரும்
தந்திறை கொடுத்துத் தமரா யினரே
முரண்செறிந் திருந்த தானை இரண்டும்
ஒன்றெனா[1] அறைந்தன பணையே நின்தேர்
முன்னியங் கூர்தி பின்னிலை யீயாது
ஊர்க பாக ஒருவினை கழிய
நன்னன் ஏற்றை நறும்பூண் அத்தி
துன்னருங் கடுந்திறற் கங்கன் கட்டி
பொன்னணி வல்விற் புன்றுறை யென்றாங்
கன்றவர் குழீஇய அளப்பருங் கட்டூர்ப்
பருந்துபடப் பண்ணிப் பழையன் பட்டெனக்
கண்டது நோனான் ஆகித் திண்டேர்க்
கணையன் அகப்படக் கழுமலந் தந்த
பிணையலங் கண்ணிப் பெரும்பூட் சென்னி
அழும்பில் அன்ன அறாஅ யாணர்ப்
பழம்பல் நெல்லின் பல்குடிப் பரவைப்
பொங்கடி படிகயம் மண்டிய பசுமிளைத்
தண்குட வாயில் அன்னோள்
பண்புடை ஆகத் தின்துயில் பெறவே.

—[2]குடவாயிற் கீரத்தனார்.

(பாடம்) 1. ஓர்ந்தன படையே.
2. உறையூர்ச் சல்லியங் குமரனார்.

(சொ - ள்.) க - ச. வேந்தனும் வந்து வினை முடித்தனன் - நம் அரசனும் போர்முனையில் எய்தி வினையை வெற்றியுற ஆக்கினன், பகைவரும் தம் திறை கொடுத்துத் தமர் ஆயினர் - பகைவரும் தாம் கொடுக்கக் கடவ திறையைக் கொடுத்து நம் அரசனுக்குச் சுற்றமாயினர், முரண் செறிந்திருந்த தானை யிரண்டும் - முன்பு மாறுபாடு மிக்கிருந்த இரு சேனைகளும், ஒன்றென - ஒரே சேனையாக, பணை அறைந்தன - முரசறையப்பட்டன.

கக. பழையன் - பழையன் என்பான்;

எ—கக. நன்னன் ஏற்றை நறும்பூண் அத்தி - நன்னனும் ஏற்றையும் நல்ல பூணினை யணிந்த அத்தியும், துன் அரும் கடுந்திறல் கங்கன் கட்டி - பகைவர் நெருங்கற்கரிய மிக்க வலி பொருந்திய கங்கனும் கட்டியும், வல்வில் பொன்அணி புன்றுறை - வலிய வில்லினையுடைய பொன்னணி யணிந்த புன்றுறையும், என்று அவர் - என்று கூறப்பட்ட அவர்கள், அன்று குழீஇய - முன்பு கூடிப் பொருதற்கு நின்ற, அளப்பு அரும் கட்டூர் - அளத்தற்கரிய சிறப்பு வாய்ந்த பாசறைக் கண்ணே, பருந்துபடப் பண்ணி - பருந்து சுற்றும்படி போர் செய்து, பட்டென - பின்பு இறந்தானாக;

கஉ—ச. கண்டு அது நோனான் ஆகி - அதனைக் கண்டு பொறானாகி, திண் தேர்க் கணையன் அகப்பட - வலிய தேரினையுடைய கணையன் உட்பட, கழுமலம் தந்த - கழுமலம் என்னும் ஊரைக் கைப்பற்றிய, பிணையல் அம் கண்ணிப் பெரும்பூண் சென்னி - கட்டிய கண்ணியினை யுடைய பெரும்பூட் சென்னி என்பானது.

கரு—கூ. அழும்பில் அன்ன - அழும்பில் என்னும் ஊரினை யொத்த, அறாஅ யாணர் - நீங்காத புது வருவாயை யுடையதும், பழம் பல் நெல்லின் பல் குடிப் பரவை - மிக்க பழைய நெல்லினையுடைய பல குடிப் பரப்பினை உடையதும், பொங்கடி படிகயம் மண்டிய பசுமிளை - யானை படியும் குளத்தினையும் நெருங்கிய காவற் காடுகளையும் உடையதுமாகிய, தண் குடவாயில் அன்னோள் - குளிர்ந்த குடவாயில் என்னும் ஊரை யொத்த சிறப்பினளாகிய நம் தலைவியது, பண்புடை ஆகத்து இன்துயில் பெறவே - நற்பண்பினை யுடைய ஆகத்தின் கண்ணே இனிய துயிலைப் பெறுதற்கு.

ச—சு. பாக - பாகனே, முன் இயங்கு ஊர்தி நின்தேர் - முற்படச் செல்லும் நின் தேராகிய ஊர்தியினை, பின்னிலை யீயாது - இனிப் பின்னில்லாதபடி, கழிய - இச் சுரத்தை நாம் கழிய, ஒருவினை ஊர்க - மீண்ட தேர்களை நீங்கினையாய் விரைந்து செலுத்துவாயாக.

(முடிபு) பாக! வேந்தனும் வினை முடித்தனன்; பகைவரும் தமராயினர்; தானை இரண்டும் ஒன்றெனப் பணை அறைந்தன; சென்னியின் குடவாயிலன்னோள் ஆகத்து இன்றுயில் பெற நின் தேரினைப் பின்னிலை யீயாது ஒருவினை கழிய ஊர்க.

(வி - ரை.) பின்னிலை யியாது - பின்னிற்றல் செய்யாது; வினைத் திரிசொல். நன்னன், ஏற்றை, அத்தி, கங்கன், கட்டி, புன்றுறை என் போர் சேரன் படைத்தலைவர்கள். என்று அவர் - என்று கூறப்பட்ட அவர் என விரித்துரைக்க. ஆங்கு: அசை. கட்டூர்-பாசறை. பழையன்- சோழன் பெரும்பூட் சென்னியின் படைத்தலைவன். கணையன் - சேரன் படை முதலி, தலைமைப் படைத்தலைவன். பிணையலங்கண்ணி - அல் அம், சாரியைகள். கழுமலம்-சேர நாட்டகத்ததோர் ஊர். அழும்பில்- பாண்டிய நாட்டூர் என்பர். பரவை - பரப்பு. பொங்கடி - யானை; யாவற்றினும் பெரிய அடியினையுடையது. பண்புடை ஆகம்: பண் பாவது கற்புடைமையான் ஆற்றியிருத்தல்; தலைவியின் பண்பு ஆகத் தின்மேல் ஏற்றிக் கூறப்பட்டது.

'வந்து வினை முடித்தனன் வேந்தனும்' என்றமையின் வேந்தற்கு உற்றுழிச் சென்ற தலைவனாதல் பெற்றாம்.

(மே - ள்.) [1]'கரணத்தி னமைந்து' என்னுஞ் சூத்திரத்துப் பேரிசையூர்திப் பாங்கினும் தலைவன் கூற்று நிகழ்வதற்கு இதனை எடுத்துக் காட்டினர், நச்.

---

45. பாலை

[வற்புறுக்குந் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.]

வாடல் உழிஞ்சில் விளைநெற் றந்துணர்
ஆடுகளப் பறையின் அரிப்பன வொலிப்பக்
கோடை நீடிய அகன்பெருங் குன்றத்து
நீரிலார் ஆற்று நிவப்பன களிறட்
டாளில் அத்தத் துழுவை உகளும்
காடிறந் தனரே காதலர் மாமை
அரிநுண் பசலை பாஅய்ப் பீரத்
தெழின்மலர் புரைதல் வேண்டும் அலரே
அன்னி குறுக்கைப் பறந்தலைத் திதியன்
தொன்னிலை முழுமுதல் துமியப் பண்ணிப்
புன்னை குறைத்த ஞான்றை வயிரியர்
இன்னிசை யார்ப்பினும் பெரிதே யானே
காதலற் கெடுத்த சிறுமையொடு நோய்கூர்ந்

---

1. தொல், கற்பு: ௫.

தாதி மந்தி போலப் பேதுற்று
கரு அலந்தனென் உழல்வென் கொல்லோ பொலந்தார்க்
கடல்கால் கிளர்ந்த வென்றி நல்வேல்
வான வரம்பன் அடன்முனைக் கலங்கிய
உடைமதில் ஓரரண் போல
அஞ்சுவரு நோயொடு துஞ்சா தேனே.

—வெள்ளி வீதியார்

(சொ - ள்.) க—ச. (தோழியே!) காதலர் - நம் காதலர், வாடல் உழிஞ்சில் விளைநெற்று அம் துணர் - நீர்வற்றிய வாகையின் முதிர்ந்த நெற்றுக்களைக் கொண்ட கொத்து, ஆடு களப் பறையின் அரிப்பன ஒலிப்ப-கூத்தர் ஆடுங் களத்தின் ஒலிக்கும் பறையைப்போல விட்டு விட்டு ஒலித்திட, கோடை நீடிய அதன் பெருங் குன்றத்து - கோடைத் தன்மை மிக்க அகன்ற பெரிய குன்றினிடத்தே, நீர் இல் ஆர் ஆற்று - நீரில்லாத அரிய சுரநெறியில், நிவப்பன களிறு அட்டு - ஓங்கின களிற்றினைக் கொன்று, ஆள்இல் அத்தத்து உழுவை உகளும் - மக்கள் இயங்குதல் அற்ற சுரத்தே புலி திரிவதாகிய, காடு இறந்தனரே - காட்டினைக் கடந்து சென்றனரே;

ரு—அ. மாமை அரி நுண் பசலை பாஅய் - எனது மாமை நிறமானது ஐதாய நுண்ணிய பசலை பரத்தலால், பீரத்து எழில் மலர் புரைதல் வேண்டும் - பீர்க்கின் அழகிய மலரை ஒப்பதாகும்;

அ—கஉ. அலரே - ஊரில் எழும் அலரானது, அன்னி - அன்னி என்பான், குறுக்கைப் பறந்தலை - குறுக்கைப் போர்க்களத்தில், திதியன் - திதியன் என்பானது, தொல்சிலைப் புன்னை முழுமுதல் - பழையதாகிய சினையையுடைய புன்னைமரத்தின் பெரிய அடியை, துமியப் பண்ணிக் குறைத்த ஞான்றை - வெட்டித் துண்டித்த காலத்தே, வயிரியர் இன்னிசை ஆர்ப்பினும் பெரிதே - கூத்தர் எடுத்த இன்னிசைப் புகழ் முழக்கத்தினும் பெரிதாகும்;

கஉ—கூ. யான் - நான், பொலம் தார் கடல் கால் கிளர்ந்த வென்றி - பொன்னரி மாலையினையும் கடலிடத்தினைப் புடைபெயரச் செய்த வென்றியினையும், நல்வேல் - நல்ல வேலினையுமுடைய, வான வரம்பன் - வான வரம்பனது, அடல்முனைக் கலங்கிய - வலிபொருந்திய போர்முனையிற் கலங்கிய, உடைமதில் ஓர் அரண்போல - உடை மதிலாகிய ஓர் அரணைப்போல, அஞ்சுவரு நோயொடு துஞ்சாதேன் - அச்சம் பொருந்திய வருத்தத்தால் துயிலேலனாகி, ஆதிமந்திபோல - ஆதி மந்தியைப்போல, காதலற் கெடுத்த சிறுமையொடு-காதலனைக் காணு தொழிந்த சிறுமையால், நோய் கூர்ந்து - மிக்க வருத்தமுற்று, அலந்தனென் உழல்வென் கொல்லோ - துன்புற்றுத் தேடித் திரிவேனோ?

(முடிபு) காதலர் காடிறந்தனர்; மாமை மலர் புரையும்; அலர், குறுங்கைப் பறந்தலை ஆர்ப்பினும் பெரிது. யான் அஞ்சுவரு நோயொடு துஞ்சாதேனும், ஆதிமந்தி போலக் காதலற் கெடுத்த சிறுமையொடு அலந்து உழல்வேனோ?

(வி - ரை.) உழிஞ்சில் - வாகை. நெற்றந்துணர்: அம்: அசை. வாகை நெற்றுக் கழைக் கூத்தரது பறைபோல ஒலிக்கும் என்னும் கருத்து, [1]'ஆரியர், கயிறாடு பறையிற் கால்பொரக் கலங்கி, வாகை வெண்ணெற் றொலிக்கும்' எனக் குறுந்தொகையுள்ளும், 'உழிஞ்சில், தாறுசினை விளைந்த நெற்றம் ஆடுமகள், அரிக்கோற் பறையி னையென வொலிக்கும்' (கஙக) என, இந்நூலுள்ளும் வருதல் காண்க. உகளல்-சண்டுத் திரிதல். அத்தத்து: அத்து, சாரியை. வேண்டும் என்பது படும் என்றதுபோல் நின்றது. ஆதிமந்தி காதலற் பிரிந்து அவனைத் தேடி யுழந்தமை, இதனாலும், 'பொருநனைக் காண்டிரோவென, ஆதிமந்தி பேதுற்றினைய' (எசு) எனவும், 'ஆட்ட னத்தியைக் காணீரோவென... காதலற் கெடுத்த, ஆதிமந்திபோல்' (உஉசு) எனவும் இந்நூலுட் பின் வருவனவற்றாலும், [2]'மள்ளர் குழீஇய' என்னும் குறுந்தொகைச் செய்யுளாலும் பெறப்படும். ஆதிமந்திபோல என்னும் உவமையால், வெள்ளி வீதியும் கணவனைக் கெடுத்துத் தேடி யுழந்தமை பெற்றாம்; அது 'வெள்ளி வீதியைப்போல நன்றுஞ் செலவயர்ந் திசினால் யானே' (கசஎ) என்னும் இந்நூற் செய்யுளானும், [3]'கன்றுமுண்ணாது' என்னும் குறுந்தொகைச் செய்யுளானும் பெறப்படுதலுங் காண்க.

---

46. மருதம்

[வாயில் வேண்டிச் சென்ற தலைமகற்குத் தோழி வாயில் மறுத்தது.]

சேற்றுநிலை முனைஇய செங்கட் காரான்
ஊர்மடி கங்குலின் நோன்தளை பரிந்து
கூர்முள் வேலி கோட்டின் நீக்கி
நீர்முதிர் பழனத்து மீனுடன் இரிய
அந்தூம்பு வள்ளை மயக்கித் தாமரை
வண்டூது பனிமலர் ஆரும் ஊர
யாரை யோநிற் புலக்கேம் வாருற்று
உரையிறந் தொளிருந் தாழிருங் கூந்தல்
பிறரும் [4]'ஒருத்தியை நம்மனைத் தந்து
வதுவை அயர்ந்தனை யென்ப அஃதியாங்

1. குறுந். எ. 2. குறுந்: கூக. 3. குறுந்: உஎ.
(பாடம்) 4. பிறளும்.

கூறேம் வாழியர் எந்தை செறுநர்
களிறுடை அருஞ்சமந் ததைய நூறும்
ஒளிறுவாள் தானைக் கொற்றச் செழியன்[1]
பிண்ட நெல்லின் அள்ளூ ரன்னஎன்
௧௫ ஒண்டொடி நெகிழினும் நெகிழ்க
சென்றீ பெருமநின் தகைக்குநர் யாரோ.

—அள்ளூர் நன்முல்லையார்.

(சொ - ள்.) க—௬. சேற்றுநிலை முனைஇய செங்கண் காரான் - சேற்றில் நிற்றலை வெறுத்த சிவந்த கண்ணினையுடைய எருமை; ஊர்மடி கங்குலின் - ஊரார் துயின்ற இருளில், நோன் தளை பரிந்து - தனது வலிய தளையை அறுத்துக்கொண்டு, கூர்முள் வேலி கோட்டின் நீக்கி - கூரிய முள்வேலியைத் தனது கொம்பினால் அகற்றிவிட்டு, நீர்முதிர் பழனத்து - நீர்மிக்க வயலில், மீன்உடன் இரிய - மீன்கள் எல்லாம் ஓட, அம் தூம்பு வள்ளை மயக்கி-அழகிய உட்டுளையையுடைய வள்ளைக் கொடியை மயங்கச்செய்து, தாமரை வண்டு ஊது பனிமலர் ஆரும் ஊர - வண்டுகள் உள்ளிருந்து ஊதும் தாமரையின் குளிர்ந்த மலரை நிறையத் தின்னும் ஊரனே!''

எ. யாரையோ நின் புலக்கேம் - நின்னை யாம் புலத்தற்கு நீ என்ன உறவினை;

எ—க0. பிறரும் - இவ்வூரார் பிறரும், வார் உற்று உறையிறந்து ஒளிரும் - நீட்சியுற்று மழைக்கால் வீழ்ச்சியினையுங் கடந்து விளங்கும், தாழ் இருங் கூந்தல் ஒருத்தியை - தாழ்ந்த கரிய கூந்தலையுடையாள் ஒருத்தியை, நம் மனைத் தந்து - எம் மனையிற் கொணர்ந்து காட்டி, வதுவை அயர்ந்தனை என்ப - நீ அவளை வதுவை புரிந்தனை என்று கூறுவர்;

க0—க. எந்தை அஃது யாம் கூறேம் வாழியர் - எந்தையே, அதனை நீ செய்தாயென யாங்கள் சொல்லேம்; நீ வாழ்வாயாக;

கக—௪. செறுநர் களிறு உடை அருஞ் சமம் - பகைவர்களது யானைகளைக்கொண்ட அரிய போரினை, ததைய நூறும் - சிதைந்திடக் கொல்லும், ஒளிறு வாள் தானை - ஒளிவீசும் வாட்படையினையுடைய, கொற்றச் செழியன் - வெற்றி பொருந்திய செழியனது, பிண்ட நெல்லின் அள்ளூர் அன்ன - நெற்பொலி மிக்க அள்ளூரை யொத்த;

க௫—௬. என் ஒள் தொடி நெகிழினும் நெகிழ்க-எனது ஒள்ளிய வளையல் நெகிழ்ந்து வீழினும் வீழ்க, சென்றீ பெரும - நீ முன்னிய விடத்திற்குச் செல்வாயாக, நின் தகைக்குநர் யாரோ - நின்னைத் தடுப்பவர் யாரோதான்?

1. (பாடம்) கொற்கைச் செழியன்.

(முடிபு) ஊர! நிற்புலக்கேம், யாரையோ; ஊரார் ஒருத்தியைத் தந்த வதுவை அயர்ந்தனை என்ப; எந்தை! அஃது யாம் கூறேம்; தொடி நெகிழினும் நெகிழ்க; சென்றீ பெரும; நிற் றகைக்குநர் யாரோ?

காரான், பரிந்து, நீக்கி, மயக்கி, ஆரும் ஊர் என்க.

(வி - ரை.) எருமையைக் காரான் என்றார், [1]"பெற்றமும் எருமையும் மரையும் ஆவே' என்னுஞ் சூத்திரத்தால். இராக்கால மாதலின், வண்டூது பனி மலர் என்றது, வண்டு உள்ளே ஊதும் மலர் என்க. யாரையோ: ஐகாரம் முன்னிலைக்கண் வந்தது; சாரியையுமாம். 'யாரையோ நிற் புலக்கேம்' என்றது, நின்னொடு புலத்தற்கு உரிமையும் இல்லையென்றபடி. பிறளும் ஒருத்தியை என்பது பாடமாயின், பிறளாகிய ஒருத்தியை என்க. வதுவை அயர்ந்தனையென்று கூறுவர்; கூறுபவர் அச்செய்தியை நம்மனைக்கட் கொணர்ந்து கூறுவர் எனவுமாம். [2]"அன்னை யென்னை என்றலு முளவே" என்னுஞ் சூத்திரத்து, உம்மையாற் பிறவுமுள வென்பது பெறுதலின், தலைவனை எந்தை என்றாளென்க. [3]"எந்தைதன் உள்ளங் குறைபடாவாறு' எனக் கலியுள்ளும் வருவது காண்க. நெகிழ்தல் - கழலுதல். என் தொடியென்றாள், தான் அவள் என்னும் வேற்றுமையின்மையால். இனி, ஒண்டொடி யென்பதனை ஆகுபெயரால் தலைவியெனக் கொண்டு, அவள் மெலியினும் மெலிகவென்று உரைத்தலுமாம். செல் என்பது சென்றீ எனத் திரிந்து நின்றது. யாரோ: ஆசிரியம் ஓகாரத்தால் முடிந்தது.

(உ - றை.) 'காரான் தனக்கு நிலையென்று புகுதப்பட்ட கொட்டிலை நீராலும் சாணகத்தாலும் தானே சேறாக்கிக் கொண்டு தளையையும் அறுத்துக்கொண்டு, பழனத்துக்குக் காவலாகிய வேலியையும் கோட்டாலெடுத்து மீன்கள் இரியத் தாமரையைச் சூழ்ந்த வள்ளையை மயக்கி, மலர்ச்சியின்றி வண்டொடு குவிந்த தாமரையை ஆர்ந்தாற் போல, நீயே ஆதரித்துக் கொள்ளப்பட்ட இவளை, நீ தானே வேறுபடுத்தி, நாணமாகிய தளையையும் அறுத்துக்கொண்டு பரத்தையர்க்குக் காவலாகிய விறலியையும் பாணனாகிய கோட்டாலே நீக்கி, அப் பரத்தையருடனுறையும் தோழிமார் இரிய, அப்பரத்தையருடைய தாய்மாரையும் மயக்கி, அகமலர்ந்து உன்னை எதிரேற்றுக் கொள்ளாத மகளிரை நுகர்வானொருத்தன் அல்லையோ என்றவாறு' என்றனர், குறிப்புரைகாரர்.

(மே - ள்.) [4]"அவனறி வாற்ற" என்னும் தலைவி கூற்று நிகழுமிடம் கூறுஞ் சூத்திரத்து, செல்லாக் காலைச் செல்கென விடுத்தலும் என்பதற்குத் 'தலைவன் செல்லாள் என்பது இடமும் காலமும் பற்றி அறிந்த காலத்து, ஊடல் உள்ளத்தாற் கூடப்பெறாதாள், செல்கெனக்

---

1. தொல். மரபு: ௬0 2. தொல். பொருள்: ௫௨.
3. கலி - ௧௧. 4. தொல். கற்பு: ௬.

கூறி விடுத்து ஆற்றுதற் கண்ணும்' எனப் பொருள்கூறி, அதற்கு இச் செய்யுளை எடுத்துக் காட்டினர், நச்.

[1]'உறுகண் ஓம்பல்' என்னுஞ் சூத்திரத்து, தோழி அறிவுடையளாகக் கூறற்கு உதாரணமாக 'பிண்ட நெல்லின்...தகைக்குநர் யாரோ' என்னும் பகுதியைக் காட்டி, என்பது 'உறுகண் காத்தற் பொருட்டாகத் தலைவி வருந்தினும் நீ செல்லென்றாள்; தலைவன் செல்லாமை அறிதலின்' என்று அவருரைத்தமை அவர் கற்பியலிற் கூறியதனோடு கூற்று வகை பால் மாறுபடுகிறது. [2]"கிழவோட் குவம மீரிடத் துரித்தே" என்னும் சூத்திரத்து, தலைமகள் மருதத்து உள்ளுறை உவமம் கூறற்கு, 'தாமரை வண்டூது...புலக்கேம்' என்பதனை எடுத்துக் காட்டினர், பேரா.

---

47. பாலை

[தலைமகன் இடைச்சுரத்து அழிந்த நெஞ்சிற்குச் சொல்லியது.]

அழிவில் உள்ளம் வழிவழிச் சிறப்ப
வினையிவண் முடித்தன மாயின் வல்விரைந்து
எழுவினி வாழிய நெஞ்சே ஒலிதலை
அலங்குகழை நரலத் தாக்கி விலங்கெழுந்து
கடுவளி உருத்திய கொடிவிடு கூரெரி
விடர்முகை அடுக்கம் பாய்தலின் உடனியைந்(து)
அமைக்கண் விடுநொடி கணக்கலை அகற்றும்
வெம்முனை அருஞ்சுரம் நீந்திக் கைம்மிக்
ககன்சுடர் கல்சேர்பு மறைய மனைவயின்
ஒண்தொடி மகளிர் வெண்திரிக் கொளாஅலிற்
குறுநடைப் புறவின் செங்காற் சேவல்
நெடுநிலை வியனகர் வீழ்துணைப் பயிரும்
புலம்போடு வந்த புன்கண் மாலை
யாண்டுளர் கொல்லெனக் கலிழ்வோள் எய்தி
இழைஅணி நெடுந்தேர்க் கைவண் செழியன்
மழைவிளை யாடும் வளங்கெழு சிறுமலைச்
சிலம்பிற் கூதளங் கமழும் வெற்பின்
வேய்புரை பணைத்தோள் பாயும்
நோய்சா வீட முயங்குகம் பலவே.

—ஆலம்பேரிச் சாத்தனார்.

1. தொல். பொருள்; ௪௨. 2. தொல். உவம: ௨௧.

(சொ - ள்.) ௧. நெஞ்சே வாழிய—;

௧—௨. அறிவில் உள்ளம் வழிவழிச் சிறப்ப-சோர்தலில்லாத நம் உள்ளம் மேலும் மேலும் (ஊக்கத்தாற்) சிறப்ப, வினை இவண் முடித்தனமாயின் - இவ்விடத்தே வினையைச் செய்து முடித்தோமாயின்;

௩—௮. ஒலிதலை அலங்கு கழை நரலத் தாக்கி - தழைத்த தலையினையுடைய அசையும் மூங்கிலை ஒலி யுண்டாகத் தாக்கி, விலங்கு எழுந்து-பக்கங்களில் எழுந்து, கடுவளி உருத்திய கொடிவிடு கூர் எரி - சூறாவளி வெப்பமுறச் செய்த கொழுந்து விட்டெரியும் மிக்க தீ;

விடர்முகை அடுக்கம் பாய்தலின் - பிளப்பையும் முழைஞ்சினையுமுடைய மலைப் பக்கங்களிற் பாய்தலின், அமைக் கண் விடு நொடி - மூங்கிலின் கணுக்கள் வெடித்தலால் எழும் ஒலி, கணக்கலை அகற்றும் - கூட்டமாகிய கலைமான்களைத் துரத்தும், வெம்முனை அருஞ்சுரம்நீந்தி - கொடிய போர் நிகழும் இடங்களாகிய அரிய சுரத்தினைக் கடந்து;

௮. கை மிக்கு - அளவு கடந்து;

௯—௧௩. அகன் சுடர் கல் சேர்பு மறைய-பெரிய ஞாயிறு மேற்கு மலையினைச் சேர்ந்து மறைந்திட, மனைவயின் ஒள் தொடி மகளிர் - மனையிடத்து ஒளி பொருந்திய வளைகளை யணிந்த மகளிர், வெண்திரிக் கொளாஅலின் - விளக்கின்கண் வெள்ளிய திரியைக் கொளுவுதலின், குறுநடைப் புறவின் செங்கால் சேவல்-குறுக அடியிட்டுநடக்கும்சிவந்த காலினையுடைய புறவின் சேவல், நெடுநிலை வியன்நகர் - உயர்ந்த மேல் நிலைகளையுடைய பெரிய மனையின்கண், வீழ்துணைப் பயிரும் - தம்பால் அன்புள்ள பெடையை அழைக்கும், புலம்பொடு வந்த புன்கண் மாலை - தனிமையொடு வந்த துன்பத்தைத் தரும் மாலையில்;

௧௪. யாண்டு உளர் கொல் என - நம் தலைவர் இப்பொழுது எவ்விடத்துள்ளாரோ என நினைந்து, கலிழ்வோள் எய்தி - கலங்கி அழுது கொண்டிருக்கும் தம் தலைவியை அடைந்து;

௧௫—௯. இழை அணி நெடுந்தேர்க் கைவண் செழியன் - இழை கள் அணியப்பெற்ற நீண்ட தேரினையும் கை வண்மையையுமுடைய செழியனது, மழை விளையாடும் வளங்கெழு சிறுமலை - மழை தவழ்ந்திடும் வளம் மிக்க சிறு மலை என்னும் பெயருடைய, சிலம்பிற் கூதளம் கமழும் வெற்பின் - பக்க மலையிலே கூதளஞ் செடி கமழப் பெறும் மலையிலுள்ள, வேய் புரை பணைத்தோள் - மூங்கிலை ஒத்த பெரிய தோளில், பாயும் நோய் அசா விட - பரவியுள்ள நோய் வருத்தம் நீங்க;

முயங்குகம் பல - பன்முறையும் முயங்குவோம்; (ஆதலின்)

௨—௧. இனி வல் விரைந்து எழு - இப்பொழுது வினையின் பொருட்டு என்னுடன் மிக விரைந்து எழுவாயாக.

(முடிபு) நெஞ்சே! இவண் வினைமுடித்தனமாயின், இவ்வரிய சுரத்தினைக் கடந்து, நெடுநிலை வியனகரில் புல்கண் மாலையில், கலிழ்வோள் எய்தி பணைத்தோள் நோயசா விட, முயங்குகம் பலவே; ஆகலின் விரைந்து எழு.

(வி - ரை.) விலங்கெழுந்து பாய்தலின் என இயையும். கடுவளி விலங்கெழுந்து உருத்திய என்றுமாம். விடராகிய முகை என்றுமாம். முகை - குகை.

கைமிக்குக் கலிழ்வோள் எனக் கூட்டுக. செழியன் சிறுமலையாகிய வெற்பின் என்று இயைக்க. சிறுமலை. பெயர். புறவின் சேவல் வீழ் துணைப் பயிரும் மாலை என்றது, தலைவர் நம்மை விரும்பி அணைந்திலரே எனத் தலைவி எண்ணி இரங்குவள் என்பதனைப் புலப்படுத்தி நின்றது. [1]'இரைவேட் டெழுந்த சேவ லுள்ளிப், பொறிமயி ரெருத்திற் குறு நடைப் பேடை....தயங்க விருந்து புலம்பக் கூஉம்' என்பது இதனொடு ஒத்து நோக்கற்பாலது.

---

48. குறிஞ்சி

[செவிலித் தாய்க்குத் தோழி அறத்தொடு நின்றது.]

அன்னாய் வாழிவேண் டன்னை நின்மகள்
பாலும் உண்ணாள் பழங்கண் கொண்டு
நனிபசந் தனளென வினவுதி அதன்றிறம்
யானுந் தெற்றென உணரேன் மேனாள்
மலிபூஞ் சாரலென் தோழி மாரோ
டொலிசினை வேங்கை கொய்குவஞ் சென்றுழிப்
புலிபுலி என்னும் பூசல் தோன்ற
ஒண்செங் கழுநீர்க் கண்போல் ஆயிதழ்
ஊசி போகிய சூழ்செய் மாலையன்
பக்கஞ் சேர்த்திய செச்சைக் கண்ணியன்
குயமண் டாகஞ் செஞ்சாந்து நீவி
வரிபுனை வில்லன ஒருகணை தெரிந்துகொண் (டு)
யாதோ மற்றம் மாதிறம் படரென
வினவி நிற்றந் தோனே அவற்கண்டு
எம்முள் எம்முள் மெய்ம்மறை பொடுங்கி
நாணி நின்றனெ மாகப் பேணி
ஐவகை வகுத்த கூந்தல் ஆய்நுதல்

---

1. குறுந்: ககூ.

மையீர் ஓதி மடவீர் நும்வாய்ப்
பொய்யும் உளவோ என்றனன் பையெனப்
பரிமுடுகு தவிர்த்த தேரன் எதிர்மறுத்த
நின்மகள் உண்கண் பன்மாண் நோக்கிச்
சென்றோன் மன்றஅக் குன்றுகிழ வோனே
பகல்மாய் அந்திப் படுசுடர் அமையத்
தவன்மறை தேஎம் நோக்கி மற்றிவன்
மகனே தோழி என்றனள்
அதனள வுண்டுகோள் மதிவல் லோர்க்கே.

—தங்கால் முடக் கொற்றனார்.

(சொ - ள்.) ௧—௬. அன்னாய் வாழி-அன்னையே வாழ்வா யாக; வேண்டு அன்னை - அன்னையே யான் கூறுவதனை விரும்பிக் கேள்; நின் மகள்-, பழங்கண் கொண்டு - துன்பம் எய்தி, பாலும் உண்ணாள்- பாலையும் பருகாளாய், நனி பசந்தனள் என வினவுதி-மிகவும் பசந்துள்ளாள் என வினவுகின்றனை;

௬—௭. அதன் திறம் யானும் தெற்றென உணரேன் - அது வந்த வழியினை யானும் தெளிவாக உணர்ந்திலேன், மேல் நாள் - முன்பு ஒரு நாள், மலிபூஞ் சாரல்-பூக்கள் நிறைந்த மலைச் சாரலில், என் தோழிமாரொடு-என் தோழியருடன், ஒளிசினை வேங்கை கொய்குவம் சென்றுழி - தழைத்த கிளைகளை யுடைய வேங்கையின் பூவினைக் கொய்யச் சென்ற காலை, புலி புலி என்னும் பூசல் தோன்ற - புலி புலி என்னும் ஆரவாரந் தோன்ற;

௮—௧௪. கண்போல் - மகளிர் கண்ணினைப்போலும், ஒண் செங்கழுநீர் ஆய் இதழ் - ஒளிபொருந்திய அழகிய செங்கழுநீர்ப்பூக்களை, ஊசி போகிய சூழ் செய் மாலையன் - ஊசியாற் கோத்துச் சுற்றிக் கட்டிய மாலையனாய், பக்கம் சேர்த்திய செச்சைக் கண்ணியன்-தலையின் ஒரு பக்கத்தே கொண்ட வெட்சிப்பூவாலாய கண்ணியனாய், குயம் மண்டு ஆகம் - மகளிர் முலைகள் பாய்தற்குரிய மார்பில், செஞ்சாந்து நீவி - சிவந்த சந்தனத்தைப் பூசி, வரிபுனை வில்லன் - வரிந்து புனைந்த வில்லையுடையனாய், ஒரு கணை தெரிந்து கொண்டு - ஒப்பற்ற கணையினை ஆய்ந்து கைக்கொண்டு (ஒரு தலைவன் தோன்றி), அம் மா பட்ட திறம் யாதோ என - அப் புலி சென்ற வழி யாதோ என்று, வினவி நிற்றந்தோன் - வினவி நின்றனன்;

௧௪—௧. அவற் கண்டு - யாங்கள் அவனைக் கண்டு, எம்முள் எம் முன் மெய் மறைபு ஒடுங்கி - எங்களுள் ஒருவர் முதுகில் ஒருவர் உடல் மறைந்து ஒடுங்க, நாணி நின்றனெம் ஆக - நாணுற்று நின்றேமாக;

கக—க. பேணி ஐவகை வகுத்த கூந்தல் - விரும்பி ஐவகையாக வகுத்த கூந்தலினையும், ஆய் நுதல் - அழகிய நெற்றியினையு முடைய, மை யீர் ஓதி மடவீர் - கரிய நெய்த்த கூந்தலையுடைய மடவீரே, நும் வாய் பொய்யும் உளவோ என்றனன் - நுமது வாயிற் பொய்ச் சொற்களும் உளவாமோ என்று கூறி;

கக—உஉ. அக் குன்று கிழவோன் - மலை நாட்டிற்குரியனாகிய அவன், பரிமுடுகு பை யெனத் தவிர்த்த தேரன் - பரிகளின் வேகத்தை அடக்கி மெல்லெனச் செலுத்தும் தேரனாகி, நின் மகள் உண்கண் - நின் மகளது மையுண்ட கண்களை, எதிர் மறுத்துப் பன்மாண் நோக்கி - நோக்கியபின் எதிர்நோக்கலாகப் பலமுறை நோக்காநின்று; சென்றோன் - சென்றனன்;

உக—ஙி. பகல் மாய் அந்தி - பகற்பொழுது மாய்கின்ற அந்தியாகிய, படுசுடர் அமையத்து - ஞாயிறு மறையும் பொழுதிலே, அவன் மறை தேஎம் நோக்கி - அவன் மறைந்திடுந் திசையை நோக்கி, தோழி இவன் மகனே என்றனள் - தோழியே இவன் ஓர் ஆடவனே என்றனள்;

உச. மதி வல்லோர்க்கு - ஆராய்ந்து அறியும் அறிவு மிக்கோர்க்கு, அதனளவு உண்டு கோள் - அதனளவாக ஒரு கோட்பாடு உண்டு.

(முடிபு) அன்னாய் வாழி! வேண்டு. நின் மகள் பசந்தனளென வினவுதி; யானும் தெற்றென உணரேன்; மேனாள் தோழிமாரோடு சென்றாடி, பூசல் தோன்ற, ஒரு தலைவன் விலவி நிற்றந்தோன்; அவற்கண்டு, ஒடுங்கி நின்றனெமாக, நும்வாய்ப் பொய்யும் உளவோ என்றனன்; அக் குன்று கிழவோன் தேரன், நோக்கிச் சென்றனன்; தலைவி, அவன் மறை தேஎம் நோக்கி, இவன் மகனே என்றனள்; வல்லோர்க்குக்கோள் உண்டு.

(வி - ரை.) பசந்தனள் என வினவுதி - பசந்தனள் அதன் காரணம் யாதென வினவுகின்றாய் என விரித்துரைக்க. வேங்கை மரத்திற் பூக்கொய்வார், புலி புலி யென்று கூவின், அதன் கிளை தாழ்ந்து கொடுக்கும் என்பது வழக்கு. கழுநீர் இதழ் என்க. இதழ் - பூ. ஊசி போகிய - அல்லியைக் கழித்துத் தொடுத்த என்றுமாம்; ஊசி - ஊசி போன்ற அல்லி. குயம் மண்டு என்பது மார்பிற்கு இயற்கையடை. நீவி - பூசி; உதிர்த்து என்றுமாம். மா படர் திறம் என மாறுக. நிற்றந் தோன் - நிற்றல் தந்தோன்; நின்றோன். பேணி - புழுகு முதலியவற்றாற் பேணி என்றுமாம். கூந்தல் என முன் வந்தமையின் 'மையீரோதி மடவீர்' என்றது பெயர் மாத்திரையாகி நின்றது. எதிர்மறுத்து நோக்குதலாவது, தலைவி தன்னை நோக்காதிருக்க, தான் அவளை நோக்குதல். தலைவன் நோக்குழித் தலைவி எதிர் நோக்காள் என்பதனை, [1]'யானோக்குங் காலை நிலனோக்கும்' என்பதனா லறிக.

(மே - ள்.) [2]'எளித்த லேத்தல்' என்னும் அறத்தொடு நிலை கூறுஞ் சூத்திரத்து, ஏதீடு என்பதற்குக் காரணம் இட்டு உணர்த்தல்

1. குறள்: ௧0௯௪. 2. தொல். பொருள்: ௧௨.

என்று பொருள் கூறி, இதனைப் புலி காத்தற்கு வந்தானென இட்டுரைத்தது என்றும், [1]'உயர்மொழிக்குரிய' என்னுஞ் சூத்திரத்து 'அவன் மறை தேஎம் நோக்கி மற்றிவன்-மகனே தோழி யென்றனள்' என்பது. தலைவி ஐயத்துக்கண் தெய்வமென்று துணிந்தாள் அல்லள் என்றும், கூறினார், நச்.

[2]'இன்பத்தை வெறுத்தல்' என்னுஞ் சூத்திரத்து, 'அன்னாய்...... வினவுதி' என்றது, பசியட நிற்றல் என்னும் மெய்ப்பாடாமென்றும், [3]'பிறப்பே குடிமை' என்னுஞ் சூத்திரத்து, 'நின்மகள்......என்றனள்' என்பது. உருவு நிறுத்த காமவாயில் என்றும் கூறினர், பேரா.

[4]'எளித்தல் ஏத்தல்' என்னுஞ் சூத்திரத்து, இது தலைவனை உயர்த்துக் கூறுதல் என்றும், [5]'உற்றுழியல்லது' என்னுஞ் சூத்திரத்து 'அன்னாய் வாழி......வினவுதி' என்றவழி செவிலி குறிப்பினால் உணர்ந்தவாறு இஃது என்றும் கூறினர். இளம்,

---

49. பாலை

[உடன்போயின தலைமகளை நினைந்து செவிலித்தாய் மனையின்கண் வருந்தியது.]

கிளியும் பந்துங் கழங்கும் வெய்யோள்
அளியும் அன்புஞ் சாயலும் இயல்பும்
முன்னாள் போலாள் இறீஇயரென் உயிரெனக்
கொடுந்தோடைக் குழவியொடு வயின்மரத் தியாத்த
கடுங்கட் கறவையிற் சிறுபுறம் நோக்கிக்
குறுக வந்து குவவுநுதல் நீவி
மெல்லெனத் தழீஇயினே னாக என்மகள்
நன்னர் ஆகத் திடைமுலை வியர்ப்பப்
பல்கால் முயங்கினள் மன்னே அன்னோ
விறன்மிகு நெடுந்தகை பலபா ராட்டி
வறனிழல் அசைஇ வான்புலந்து வருந்திய
மடமான் அசாஇனந் திரங்குமரல் சுவைக்குங்
காடுடன் கழிதல் அறியின் தந்தை
அல்குபத மிகுத்த கடியுடை வியனகர்ச்

---

1. தொல். பொருள்: ௪௪.
2. தொல். மெய்ப்: ௨௨.
3. தொல். மெய்ப்: ௨௫.
4. தொல். பொருள்: ௧௨.
5. தொல். பொருள்: ௧௧.

கரு சேல்வுழிச் செல்வுழி மெய்ந்நிழல் போலக்
கோதை யாயமோ டோரை தழீஇத்
தோடமை அரிச்சிலம் பொலிப்ப அவள்
ஆடுவழி ஆடுவழி அகலேன் மன்னே.

—[1]வண்ணப்புறக் கந்தரத்தனார்.

(சொ - ள்.) க—௩. கிளியும் பந்தும் கழங்கும் வெய்யோள்-கிளி பந்து கழங்கு எனும் இவற்றை மிக விரும்பிக் கைவிடாதவளாகிய என் மகள், அளியும் அன்பும் சாயலும் இயல்பும் - அருள் அன்பு மென்மை செயல் எனும் இவற்றால், முன்னாள் போலாள் - முன்னாட்களைப் போலாது வேறுபட்டுளாள், இஃதென்னோ? இறீஇயர் என் உயிர்என - என் உயிர் கழிவதாக என்று கூறி;

ச—எ. கொடுந்தொடைக் குழவியொடு-வளைந்த தொடையினை யுடைய கன்றுடன், மரத்து வயின் யாத்த - மரத்திடத்தே கட்டப் பெற்ற, கடுங்கண் கறவையின் - விரைந்து விரைந்து கன்றைப் பார்த் திருக்கும் பசுவைப்போல, சிறுபுறம் நோக்கி - அவள் முதுகினைப் பார்த்து, குறுக வந்து குவவு நுதல் நீவி - அண்மையில் வந்து வளைந்த நெற்றியினைத் தடவி, மெல் எனத் தழீஇயினேன் ஆக - மெத்தெனத் தழுவிக் கொண்டேனாக;

எ—௯. என் மகள் - என்னுடைய மகள், ஆகத்து முலையிடை வியர்ப்ப - ஆகத்தே முலையிடை வியர்வுண்டாக, பல்கால் நன்னர் முயங் கினள் மன்னே அன்னோ - பன்முறை நன்கு தழுவிக் கொண்டனள், அந்தோ அது கழிந்ததே;

க0—௩. வான்புலந்து வருந்திய-மேகத்தை வெறுத்து வருந்திய, மடமான் அசாஇனம்-தளர்ச்சியுற்ற இளைய மானின் கூட்டம், திரங்கு மரல் சுவைக்கும் காடு-வற்றிய மரற்செடியினைச் சுவைத்துப் பார்க்கும் காட்டில், விறல் மிகு நெடுந்தகை பல பாராட்டி - வலிமை மிக்க பெருந்தகையாய தலைவன் இவளைப் பலபடியாகப் பாராட்டி, வறன் நிழல் அசைஇ - உலர்ந்த நிழலிலே தங்கி, உடன்கழிதல் அறியின் - இவளை உடன் கொண்டு கழிதலை அறியின்;

க௩—௮. தந்தை - இவள் தந்தையது, அல்கு பதம் மிகுத்த கடி யுடை வியன் நகர் - தங்கும் உணவு மிகுந்துள காவல் பொருந்திய பெரிய மனையில், செல்வுழிச் செல்வுழி மெய்ந்நிழல் போல - செல்லும் இடந்தொறும் இடந்தொறும் உடம்பின் நிழலைப் போலச் சென்று, கோதை ஆயமொடு ஓரை தழீஇ - கோதையையுடைய ஆயத்தாரோடு விளையாடும் விளையாட்டினை மேற்கொண்டு, தோடு அமை அரிச் சிலம்பு

(பாடம்) 1. வண்ணப்புறக் கல்லாடனார்.

ஒலிப்ப - தொகுதி வாய்ந்த பரலினையுடைய சிலம்பு ஒலிக்க, அவள் ஆடுவழி ஆடுவழி - அவள் விளையாடும் இடந்தோறும், அகலேன் மன்னே - அகலாதிருப்பேன்; அது கழிந்ததே;

(முடிபு) வெய்யோன் முன்னாட் போலாது, உயிர் பிரிபியரெனக் கறவையின் நோக்கி, வந்து, நீவித் தழீஇயினோளாக, என் மகள் வியர்ப்ப, முயங்கினென் மன்னே; காடுடன் கழிதல் அறியின், வியனகர் செல்வழிச் செல்வழி நிழற்போலத் தழீஇ, ஆடுவழி ஆடுவழி அகலேன்; மன்னே.

நெடுந்தகை, பாராட்டி, அசைஇ, கழிதல் எனவும், மெய்ந்நிழல் போல அகலேன் எனவும் கூட்டுக.

(வி - ரை.) இயல்பு - செய்தி. [1]'குஞ்சரம் பெறுமே குழவிப் பெயர்க் கொடை', 'ஆவும் எருமையும் அவைசொலப் படுமே' என்பவற்றால், குழவி யென்றார். மரத்துவயின் எனவும், முலையிடை எனவும் மாறுக. கடுங்கண்: கடுமை-விரைவு. வியர்ப்பவும் பல்கால் முயங்கியது, போக்கை நினைந்து என்க. மன் இரண்டும் கழிவின்கண் வந்தன. அல்கு பதம் - வைத்திருந்துண்ணும் உணவு; மிக்க உணவு. உடன் கழிதல் - உடன்கொண்டு கழிதல். பாராட்ட எனத் திரித்து, இருவரும் கழிதல் என்றுரைத்தலுமாம். அடுக்குகள் பன்மை குறித்தன. அன்னோ: இரக்கப் பொருட்டு.

(மே - ள்.) [2]'கொண்டு தலைக் கழியினும்' என்னுஞ் சூத்திரத்து 'அல்குபத மிகுந்த கடியுடை வியனகர்' என நெல்லுடைமை கூறிய அதனானே வேளாண் வருணமென்பது பெற்றாம்' எனவும், [3]'எஞ்சியோர்க்கும் எஞ்சுத லிலவே' என்னுஞ் சூத்திரத்து, செவிலி கூற்று நிகழ்வதற்கு இப் பாட்டினை எடுத்துக் காட்டி, 'இவ் வகப்பாட்டு உடன்போன தலைவியை நினைந்து செவிலி மனையின்கண் மயங்கியது' எனவும் கூறினர், நச்.

---

50. நெய்தல்

[தோழி பாணனுக்குச் சொல்லியது.]

கடல்பா டவிந்து தோணி நீங்கி
நெடுநீர் இருங்கழிக் கடுமீன் கலிப்பினும்
வெவ்வாய்ப் பெண்டிர் கௌவை தூற்றினும்
மாணிழை நெடுந்தேர் பாணி நிற்பப்
பகலும் நம்வயின் அகலா னாகிப்
பயின்றுவரும் மன்னே பனிநீர்ச் சேர்ப்பன்

1. தொல். மரபு: கக; உ௦. 2. தொல். அகத்திணை: ௪௦.
3. தொல். அகத்திணை: ௪உ.

இனியே, மணப்பருங் காமந் தணப்ப [1]நீந்தி
வாரா தோர்நமக் கியாஅரேன் னாது
மல்லல் மூதூர் மறையினை சென்று
சொல்லின் எவனோ பாண எல்லி
மனைசேர் பெண்ணை [2]மடிவாய் அன்றில்
துணையொன்று பிரியினுந் துஞ்சா காணெனக்
கண்ணிறை நீர்கொடு கரக்கும்
ஒண்ணுதல் அரிவையான் என்செய்கோ வெனவே.

—[3]கருவூர்ப் பூதஞ்சாத்தனார்.

(சொ - ள்.) கo. பாண - பாணனே !,

க—சு. பனி நீர்ச் சேர்ப்பன் - குளிர்ந்த கடற்கரையையுடைய நம் தலைவன், கடல்பாடு அவிந்து-(முன்பு) கடலொலி அவிய, தோணி நீங்கி - தோணி கடலிற் செல்லாதொழிய, நெடுநீர் இருங்கழி - மிக்க நீரினையுடைய பெரிய கழியில், கடுமீன் கலிப்பினும் - சுறு முதலியன செருக்கித் திரியினும், வெவ்வாய்ப் பெண்டிர் கௌவை தூற்றினும் - கொடிய வாயினராய பெண்டிர் அலர் தூற்றினும், மாண் இழை நெடுந் தேர் பாணி நிற்ப-மாண்ட இழையினையுடைய நீண்ட தேர் தாழ்த்து நிற்க' பகலும் நம்வயின் அகலானாகி - பகற்காலத்தும் நம்மிடத்து நின்றும் பிரியானாகி, பயின்று வரும் மன்னே - அடுத்தடுத்து வருவன், அது கழிந்தது ;

எ—கச. இனி - இப்பொழுது. மணப்பு அருங் காமம் - களவுக் காலத்துக் கூடுதற்கரிய வேட்கை, தணப்ப-நீங்குதலால், நீந்தி வாரா தோர் - தாம் சென்றிருக்கும் இடத்தைக் கடந்து வாராதொழிவார், நமக்கு யார் என்னாது-நமக்கு என்ன உறவினர் என்னாது, ஒள் நுதல் அரிவை - ஒள்ளிய நெற்றியையுடைய தலைவி, எல்லி - இரவில், மனை சேர் பெண்ணை - மனையைச் சார்ந்துள்ள பனைமரத்தில், ஒன்று துணை பிரியினும் - ஒன்றி யிருத்தலினின்றும் துணை சிறிது பிரியினும், மடி வாய் அன்றில்-வளைந்த வாயினையுடைய அன்றில்கள், துஞ்சா காண் என - துயிலாதன வாதலை நெஞ்சே காண்பாயாக என்று, கண் நிறை நீர்கொடு கரக்கும்-கண்ணில் நிறையும் நீரைக்கொண்டு தனது ஆற்றாமையைப் பிறரறியாமை மறைக்கும், யான் என் செய்கோ எனவே - இதற்கு யான் என் செய்வேன் என்று, மல்லல் மூதூர்-வளம் பொருந்திய பழமையான ஊரின்கண், மறையினை சென்று - மறைந்து சென்று, சொல்லின் எவனோ - தலைவர்க்குச் சொல்லின் என்ன தவறும் ?

(பாடம்) 1. நீங்கி. 2. மடல்வாய் அன்றில்.
3. கருவூர்ப் பூதனார் மகனார் கொற்றனார்.

(முடிபு) பாண! சேர்ப்பன் கடுமீன் கலிப்பினும், கௌவை தூற்றினும், பானாள் நிற்ப, பகலும் அகலானாகிப் பயின்று வரும் மன்: இனி, அவன்பால் நீ மறையினை சென்று, அரிவை 'துஞ்சா கண் எனச் சொல்லிக் கரக்கும்' யான் என் செய்கோ எனச் சொல்லின் எவனோ ?

தணப்ப, நீந்தி வாராதோர் யார் என்று கண்கள் அழா நிற்க அதனைக் கரக்கும் எனவும், மறையினை சென்று சொல்லின் எவனோ எனவும் இயையும்.

(வி - ரை.) கழி - கடற் குட்டம். கடுமீன் - சுறா முதலியன. தோணியிற் சென்று மீன் பிடிப்பாரின்மையின் அவை செருக்கும் என்றார் ; தலைவன் வருகைக்கு அஃதோர் இடையீடு ; களவுக் காலத்து அலர் முதலானவற்றிற்குச் சிறிதும் அஞ்சாது பகலினும் அகலாதிருந் தான் என்க. மன், கழிவு. மணப்பரும் - கூடுதற்கரிய ; மிக்க என்ற படி. தணப்ப - நீங்குகையாலே. நீந்தி-தாம் சென்றிருக்குமிடத்தைக் கழித்து ; பரத்தையர் சேரியைக் கடந்து. நீங்கி என்பது பாடமாயின் நம்மைப் பிரிந்து என்க. மல்லல் மூதூர் - பரத்தையரின் ஆரவார மிகுதியையுடைய சேரி. மறையினை - அவரறியாதபடி மறைந்து.

தலைவனைப் பிரிந்த ஆற்றாமையால் கண்கள் அழாநிற்கவும், அன்றில் பிரியினும் துஞ்சா கண்ணெனச் சொல்லி, அதன் பொருட்டுக் கண்ணீர் சொரிவதுபோற் காட்டித் தனது ஆற்றாமையைத் தலைவி மறைக்கும் என்க.

'அரிவை கரக்கும் ; இதற்கு யான் என் செய்கோ' எனச் சென்று சொல்லின் எவன் எனப் பாணனை நோக்கித் தோழி கூறினாள்.

இனி, துஞ்சா கண் ; இதற்கு என் செய்கோ எனச்சொல்லி அரிவை கரக்கும், எனச் சொல்லின் எவனோ? என்றுரைப்பினும் அமையும்.

(மே - ள்.) [1]'கற்புங் காமமும்' என்னுஞ் சூத்திரத்து, இச் செய்யுளை எடுத்துக் காட்டி, இதனுள் காம மிகுதியால் கண் தாமே அழவும், கற்பிற் கரக்கும் எனத் தலைவி பொறையும் நிறையும் தோழி பாணற்குக் கூறினாள், அவன் தலைவற்கு இவ்வாறே கூறுவன் எனக் கருதி. இனி என்றதனாற் கற்பும் பெறுதும், என்றார், நச்.

[2]'இன்பத்தை வெறுத்தல்' என்னுஞ் சூத்திரத்து, இன்பத்தை வெறுத்தல் என்பது இன்பத்திற் கேதுவாய பொருள் கண்டவழி அவற்றின்மேல் வெறுப்புத் தோன்றுதல் என்று கூறி, அதற்கு, 'எல்லி மனைசேர்......என் செய்கோ எனவே' என்னும் பகுதியை எடுத்துக் காட்டினர், பேரா.

———

1. தொல். கற்பு: கக. 2. தொல். மெய்ப்: உஉ.

51. பாலை

[பொருள்வயிற் பிரிவு கடைக்கூட்டிய நெஞ்சிற்குத் தலைமகன் சொல்லியது.]

ஆள்வழக் கற்ற சுரத்திடைக் கதிர்தெற
நீளெரி பரந்த நெடுந்தா ளியாத்துப்
போழ்வளி முழங்கும் புல்லென் உயர்சினை
முடைநசை இருக்கைப் பெடைமுகம் நோக்கி
ஊன்பதித் தன்ன வெருவரு செஞ்செவி
எருவைச் சேவல் கரிபுசிறை தீய
வேனில் நீடிய வேயுயர் நனந்தலை
நீயுழந் தெய்துஞ் செய்வினைப் பொருட்பிணி
பல்லிதழ் மழைக்கண் மாஅ யோள்வயிற்
[1]பிரியிற் புணர்வ தாயிற் பிரியாது
ஏந்துமுலை முற்றம் வீங்கப் பல்லூழ்
சேயிழை தெளிர்ப்பக் கவைஇ நாளும்
மனைமுதல் வினையொடும் உவப்ப
நினைமாண் நெஞ்சம் நீங்குதல் மறந்தே.

—[2]பெருந்தேவனார்.

(சொ - ள்.) ௧—௭. ஆள் வழக்கு அற்ற - ஆட்கள் இயங்குதல் ஒழிந்த, சுரத்திடை - அத்தத்தில், கதிர் தெற நீள் எரி பரந்த - ஞாயிற்றின் கதிர்கள் காய்தலின் மிக்க வெம்மை பரவிய, நெடுந்தாள் யாத்து - நீண்ட அடியினையுடைய யாமரத்தின், போழ் வளி முழங்கும் புல்லென் உயர்சினை - பிளந்து செல்லும் காற்று முழங்கும் பொலிவற்ற உயர்ந்த கிளையில், முடை நசை இருக்கை - புலால் விருப்பத்துடன் இருத்தலையுடைய, பெடை முகம் நோக்கி - தன் பெடையின் முகத்தினைப் பார்த்து (எழும்), ஊன் பதித்தன்ன வெருவரு செஞ்செவி - ஊன் துண்டினைப் பதித்து வைத்தாற் போலும் அச்சத்தைத் தரும் சிவந்த செவியினையுடைய, எருவைச் சேவல் - ஆண்பருந்தின், சிறை கரிபு தீய-சிறை கரிந்து தீய்ந்திட, வேனில் நீடிய வேய் உயர் நனந்தலை-வேனில் வெப்பம் மிக்க மூங்கில் உயர்ந்த அகன்ற காட்டிடத்தில்;

௮—௰. நீ உழந்து எய்தும் செய்வினைப் பொருட்பிணி - நீ வருந்திச் செய்யும் வினைகளால் அடையப்படும் பொருள், பல் இதழ் மழைக் கண் - பல இதழ்களையுடைய பூப்போலும் குளிர்ந்த கண்ணினையுடைய, மாயோள் வயின் - மாமை நிறத்தினளாய நம் தலைவியிடத்தி

(பாடம்) 1. பிரியப்புணர்வதாயின். 2. கடுகு பெருந்தேவனார்.

னின்றும், பிரியின் - பிரிந்து செல்வதானே, புணர்வதாயின் - கை கூடுவது ஒன்றாயின்;

௧0—௧௪. மாண் நெஞ்சம் - எனது நல்ல மனமே, நீங்குதல் மறந்து - அவளை நீங்குதலை மறந்து, பிரியாது ஏந்துமுலை முற்றம் - ஒன்றினொன்று பிரியாது நெருங்கி விம்மிய முலைப்பரப்பு, வீங்க - விம்மவும், சேய் இழை தெளிர்ப்ப - சிவந்த அணிகள் ஒலிக்கவும், பல்லூழ் கவைஇ - பலமுறையுந் தழுவி, நாளும் - நாடோறும், மனைமுதல் - தலைவியானவள், வினையொடும் உவப்ப - இல்வாழ்க்கைத் தொழிலோடும் மகிழும்படி, நினை - நினைவாயாக.

(முடிபு) நெஞ்சம்! பொருட்பிணி மாயோள்வயின் பிரியின், புணர்வதாயின் அவளை நீங்குதல் மறந்து, வீங்க, தெளிர்ப்பக் கவைஇ, மனைமுதல் உவப்ப நினை.

யாத்தூர்ச் சினை யிருக்கைப் பெடை எனவும், நோக்கி எழும் எருவைச் சேவல் எனவும் இயையும்.

(வி - ரை.) எரி - வெம்மை. பல் இதழ் - பூவிற்கு ஆகுபெயர். வயின் - இடம், இடத்தினின்றும் என விரிக்க. மனைமுதல் - மனைவி. வினை - அறவோர்க் களித்தல், விருந்தெதிர் கோடல் முதலிய இல்வாழ்க்கைத் தொழில். பிரியின் இவள் இறந்துபடும் என்பது கருதி, நீங்குதல் மறந்து உவப்ப நினை என்றான்.

(மே - ள்.) [1]'கரணத்தி னமைந்து' என்னும் தலைவன் கூற்று நிகழுமாறு கூறிய சூத்திரத்து, 'நின்று நனி பிரிவின் அஞ்சிய பையுளும்' என்பதற்கு இச் செய்யுளை எடுத்துக்காட்டினர், இளம்.

---

52. குறிஞ்சி

[தலைமகள் வேறுபட்டமை யறிந்த செவிலித்தாய்க்குத் தோழி அறத்தொடு நிற்குமெனத் தலைமகள் சொல்லியது.]

வலந்த வள்ளி மரனோங்கு சாரற்
கிளர்ந்த வேங்கைச் சேணெடும் பொங்கர்ப்
பொன்னேர் புதுமலர் வேண்டிய குறமகள்
இன்னா விசைய பூசல் பயிற்றலின்
ஏகல் அடுக்கத் திருளளைச் சிலம்பின்
ஆகோள் வயப்புலி யாகுமஃ தெனத்தம்
மலைகெழு சீறூர் புலம்பக் கல்லெனச்
சிலையுடை யிடத்தர் போதரு நாடன்
நெஞ்சமர் வியன்மார் புடைத்தென அன்னைக்கு

1. தொல். கற்பு: ௫.

அறிவிப் பேங்கோல் [1]அறிவியேங் கோல்லென
இருபாற் பட்ட சூழ்ச்சி ஒருபாற்
சேர்ந்தன்று வாழி தோழி யாக்கை
இன்னுயிர் கழிவ தாயினும் நின்மகள்
ஆய்மலர் உண்கண் பசலை
காம நோயெனச் செப்பா தீமே.

[2]நொச்சி நியமங்கிழார்.

(சொ - ள்.) கஉ. தோழிவாழி;

க. அன்னைக்கு - நம் தாய்க்கு:

கக—ச. நின் மகள் ஆய் மலர் உண்கண் பசலை - நின் மகளது, அழகிய மலரனைய மையுண்ட கண்ணிற் படர்ந்த பசலையானது;

உ—அ. மரன் ஓங்கு சாரல் - மரங்கள் உயர்ந்த பக்க மலையிடத்து, வலந்த வள்ளி-சுற்றிய கொடியையுடைய, கிளர்ந்த வேங்கை- செழித்தெழுந்த வேங்கை மரத்தினது, சேண் நெடும் பொங்கர் - மிக வுயர்ந்த கிளையிலுள்ள, பொன்நேர் புதுமலர் வேண்டிய குறமகள்- பொன்னை யொத்த புதிய மலரினைப் பறிக்க விரும்பிய குறமகள் இன்னா இசைய பூசல் பயிற்றலின் - இன்னாமையைத் தரும் ஒலியை யுடைய புலி புலி என்னும் ஆரவாரத்தினை அடுத்தடுத்து எழுப்பலின், ஏகல் அடுக்கத்து - உயர்ந்த பாறைகளின் அடுக்கையுடைய, இருள் அளைச் சிலம்பின் - இருண்ட குகையினையுடைய பக்க மலையில், ஆ கொள் வயப்புலி ஆகும் அஃது என - பசுவினைக் கவரும் வலியபுலி யைக் குறித்த ஒலியாகும் அஃது என்று எண்ணி, சிலையுடை இடத்தர்- வில்லை இடக்கையிற்கொண்ட கானவர், தம் மலைகெழு சீறூர் புலம்ப- தமது மலையை யடுத்துள்ள சிறிய ஊர் தனிப்ப, கல்லெனப் போதரும் நாடன் - கல்லெனும் ஒலியுடன் செல்லாநிற்கும் நாட்டையுடைய நம் தலைவனது;

க—கஉ. நெஞ்சு அமர் வியன் மார்பு உடைத்தென - நமது நெஞ்சை இடமாகக்கொண்ட பெரிய மார்பினைக் காரணமாக உடையது என, அறிவிப்பேம்கொல் அறிவியேம்கொல் என - தெரிவிப் பேமோ தெரிவியா தொழிவேமோ என, இருபாற்பட்ட சூழ்ச்சி - இரு வகையிற்பட்ட ஆராய்ச்சி, ஒருபாற் சேர்ந்தன்று - ஒரு முடிபிற்கு வந்துள்ளது;

கஉ—கசு. யாக்கை இன்னுயிர் கழிவதுஆயினும்-நமது யாக்கையி னின்றும் இனிய உயிர் பிரிவதாயினும், காமநோயெனச் செப்பாதிமே- இது காம நோயால் உண்டாயதென இங்ஙனம் விளங்க உரையாதே.

(பாடம்) 1. அறியலங்கொல்.
2. மாற்றூர் கிழார்மகனார் கொற்றங் கொற்றனார்.

(முடிபு) தோழி! வாழி! அன்னைக்கு நின்மகள் உண்கண் பசலை, நாடன் மார்பைக் காரணமாக வுடைத்தென அறிவிப்பேங்கொல், அறிவியேங் கொல்லென இருபாற்பட்ட சூழ்ச்சி ஒருபாற் சேர்ந்தன்று; இன்னுயிர் கழிவதாயினும் காமநோயெனச் செப்பாதீம்.

(வி - ரை.) வலத்தல் - சுற்றுதல். வள்ளி - கொடி; [1]"வாடிய வள்ளி முதலரிந் தற்று" என்பது காண்க. பொன் ஏர் - பொன் போலும் அழகிய என்றுமாம்.

பூசல்-புலி புலி என்னும் ஆரவாரம்; அச்சத்தை விளைப்பதாகலின், இன்னா விசைய என்றார். வேங்கை மலர் பறிப்பார் புலி புலி என்று கூவுதல், 'ஒலிசினை வேங்கை கொய்குவஞ் சென்றுழிப், புலி புலியென்னும் பூசறோன்ற' (சஅ) என முன்னரும் வந்துளது.

ஏ கல் - மிக்க கல்: [2]"ஏ பெற்றாகும்" என்பது உரியியல்: அறியலம் என்ற பாடத்திற்கும் அறிவிபேம் எனப் பிறவினைப் பொருளே கொள்க.

மார்பு உடைத்து-மார்பினைக் காரணமாக உடையது என விரிக்க. காமநோ யெனச் செப்பாதீமே - ஆராய்ந்து காணுமாறு குறிப்பினாற் சொல்லுக என்றபடி.

(உ - றை.) 'வேங்கையைக் கொடி சூழ, அவ் வேங்கையிலே அலர் உண்டான அளவில், ஆண்டு வாழும் மகளிர் புலி புலியென்று பூப்பறித்தற்குச் சொன்ன அரவத்தாலே ஊரெல்லாம் ஆரவாரித்தாற் போல, அவரை நாம் தலைப்பெய்த அளவிலே, அலர் பிறந்ததாக, அவ்வலர் முதற் சீராலே முகிழ் முகிழ்த்துப் பின்னை யெல்லாரும் அறிந்தது என்றவாறு' என்றனர் குறிப்புரைகாரர்.

(மே - ள்.) [3]'மறைந்தவற் காண்டல்' என்னுஞ் சூத்திரத்து, 'விட்டுயிர்த் தழுங்கினும்' என்பதற்கு, கரந்த மறையினைத் தலைவி தமர்க்கு உரைத்தற்குத் தோழிக்கு வாய்விட்டுக் கூறி, அக் கூறிய தன்னையே தமர் கேட்பக் கூறுதுதவிரினும் எனப் பொருள் கூறி, அதற்கு இச் செய்யுளை எடுத்துக் காட்டி, இது சிறைப்புறம் என்றும், [4]'செறிவு நிறையும்' என்னும் சூத்திரத்து, இவை உடையளேவே (தலைவி) மறை புலப்படுத்தற்கு உரியள் அல்லள் என்று கூறி, 'இன்னுயிர் கழிவதாயினும்......செப்பாதீமே' என்றது அவ் விலக்கணத்ததாம் என்றும் கூறினர், நச்.

[5]'முட்டுவயிற் கழறல்' என்னுஞ் சூத்திரத்து, 'முனிவு மெய்ந்நிறுத்தல்' என்பதற்கு, 'இன்னுயிர் கழிவ தாயினுஞ்......செப்பாதீமே' என்பதனை எடுத்துக் காட்டி; இது வாழ்க்கை முனிந்து தலைமகள் சொல்லியது என்றார், பேரா.

---

1. குறள்: கஉ0௪. 2. தொல். உரி: அ. 3. தொல். களவு: உ0. 4. தொல். பொருள்: கஓ. 5. தொல். மெய்ப்: உக.

53. பாலை

[வற்புறுக்கும் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.]

அறியாய் வாழி தோழி யிருளற
விசும்புடன் விளங்கும் விரைசெலல் திகிரிக்
கடுங்கதிர் எறித்த விடுவாய் நிறைய
நெடுங்கால் முருங்கை வெண்பூத் தாஅய்
நீரற வறந்த நிரம்பா நீளிடை
வள்ளெயிற்றுச் செந்நாய் வருந்துபசிப் பிணவொடு
கள்ளியங் காட்ட கடத்திடை உழிஞ்சில்
உள்ளூன் வாடிய சுரிமூக்கு நொள்ளை
பொரியரை புதைத்த புலம்புகொள் இயவின்
விழுத்தொடை மறவர் வில்லிட வீழ்ந்தோர்
எழுத்துடை நடுகல் இன்னிழல் வதியும்
அருஞ்சுரக் கவலை நீந்தி யென்றும்
இல்லோர்க் கில்லென் றியைவது கரத்தல்
வல்லா நெஞ்சம் வலிப்ப நம்மினும்
பொருளே காதலர் காதல்
அருளே காதலர் என்றி நீயே.

—சீத்தலைச் சாத்தனார்.

(சொ - ள்.) க—இ. தோழி வாழி-, இருள் அற விசும்பு உடன் விளங்கும் - இருள் நீங்க வானிட மெல்லாம் விளங்குதற்கு ஏதுவாய், விரை செலல் திகிரி - விரைந்து செல்லும் ஞாயிற்றின், கடுங் கதிர் எறித்த - கடிய கதிர் எறித்தலாகிய, விடுவாய் நிறைய - பிளப்பிடம் நிறையும்படி, நெடுங்கால் முருங்கை வெண்பூத் தாஅய் - நீண்ட அடியினையுடைய முருங்கையின் வெள்ளிய பூக்கள் பரக்க, நீர் அற வறந்த நிரம்பா நீள்இடை - நீர் அற்றுப் போயதால் வறட்சியுற்றதும் செலத் தொலையாததுமாய நீண்ட இடத்தினையுடைய;

சு—கசு. வள் எயிற்றுச் செந்நாய் - கூரிய பற்களையுடைய செந்நாய், வருந்து பசிப் பிணவொடு - பசியால் வருந்துந் தன் பிணவோடு, கள்ளிக் காட்ட கடத்திடை - கள்ளிக் காட்டினையுடைய கடத்திலே, உழிஞ்சில் - (கோழரையினதாகிய) வாகைமரத்தினை, உள் ஊன் வாடிய சுரிமூக்கு நொள்ளை - உள்ளிருக்கும் ஊன்வாடப்பெற்ற சுரிந்த மூக்கினையுடைய சிறு நத்தைகள், பொரியரை புதைத்த - பொரியரையுடையது போலாக மூடிக்கொண்டிருக்கும், புலம்புகொள் இயவின் - தனிமை கொண்ட நெறியில், விழுத்தொடை மறவர் வில்லிட - சிறந்த

அ.—9

அம்பினை மறவர்கள் வில்லில் வைத்தெய்ய, வீழ்ந்தோர் எழுத்துடை நடுகல் இன்னிழல் வதியும் - இறந்து கிடப்போரது (பெயரும் பீடும் எழுதிய) எழுத்துக்களையுடைய நடுகல்லின் இனிய நிழலிலே தங்கி யிருக்கும், அருஞ் சுரக் கவலை நீந்தி - அரிய பாலையிலே கவர்பட்ட நெறியினைக் கடந்து, என்றும் இல்லோர்க்கு இல்லென்று - எந்நாளும் வறியார்க்கு இல்லையென்று கூறி, இயைவது கரத்தல் வல்லா நெஞ்சம் வலிப்ப - இயைவதைச் செய்யாது கரத்தல் மாட்டாத நெஞ்சம் வற்புறுத்தலின், நம்மினும் பொருளே காதலர் காதல் - நம் காதலர் காதலித்தது நம்மினுங்காட்டில் பொருளேயாகும், அருளே காதலர் என்றி நீயே - நீயோ காதலர் காதல் நம்பால் அருள் செயலே என்னு கின்றாய்; அறியாய் - ஆதலால் நீ அறியாய்காண்.

(முடிபு) தோழி வாழி! நீவிடைக் கடத்திடை இயவின் நாய் பிணவோடு நடுகல் நிழலில் வதியும் சுரக்கவலை நீந்திக் காதலர் காதலித்தது பொருளே; நீ அருளே என்றி; அறியாய்.

(வி - ரை.) விளங்கும் திகிரி - விளங்குதற்கு ஏதுவாய திகிரி; விசும்பில் விளங்கு மெனவுமாம். எறித்த விடுவாய்: பெயரெச்சம்; காரணப் பொருட்டு; ஆறு சென்ற வியர் என்றாற்போல. விடுவாய் - பிளப்பு. கடம் - கன்னிலம். நொள்ளை - நத்தையினமாகிய சிறு பூச்சிகள். விழுத்தொடை - தப்பாத தொடையுமாம். தொடை - தொடுத்தல். வேறு நிழலின்மையின் கல்லின் நிழல் இனிய நிழலாயிற்று. பொருள் இல்லாதிருக்கச் செய்தே முயன்று தேடும் வலியுடையரா யிருந்து இரவலர்க்குப் பொருள் இல்லை யென்னின் அதுவும் இயைவது கரத்தலாகும் என்பது பெற்றாம்.

காதல் - காதலித்தது. நீந்திக் காதலித்தது பொருளே யென்க. அருளே காதலர் என்பதற்கு, அருளையே காதலித்தலுடையர் என்றலுமாம்.

(மே - ள்.) [1]'புணர்தல் பிரிதல்' என்னுஞ் சூத்திரத்து, இச் செய்யுளை எடுத்துக்காட்டி, 'இது பிரிதல் நிமித்தம்; வற்புறுத்தும் தோழிக்குத் தலைவி கூறியது' என்றும் [2]'நிகழ்ந்தது நினைத்தற் கேதுவு மாகும்' என்னுஞ் சூத்திரத்து, இச் செய்யுள் தலைவன்கண் நிகழ்ந்தது தலைவி நினைந்து தோழிக்குக் கூறியது என்றுங் கூறினர், நச்.

---

1. தொல். அகத்: கச. 2. தொல். அகத்: சங.

54. முல்லை

[வினைமுடித்து மீளும் தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.]

விருந்தின் மன்னர் அருங்கலந் தெறுப்ப
வேந்தனும் வெம்பகை தணிந்தனன் தீம்பெயற்
காரும் ஆர்கலி தலையின்று தேரும்
ஓவத் தன்ன கோபச் செந்நிலம்
வள்வாய் ஆழி உள்ளுறு புருளக்
கடவுக காண்குவம் பாக மதவுநடைத்
தாம்பசை குழவி வீங்குசுரை மடியக்
கனையலங் குரல காற்பரி பயிற்றிப்
படுமணி மிடற்ற பயநிரை யாயம்
கொடுமடி யுடையர் கோற்கைக் கோவலர்
கொன்றையங் குழலர் பின்றைத் தூங்க
மனைமனைப் படரும் நனைநகு மாலைத்
தனக்கென வாழாப் பிறர்க்குரி யாளன்
பண்ணன் சிறுகுடிப் படப்பை நுண்ணிலைப்
[1]புன்காழ் நெல்லிப் பைங்காய் தின்றவர்
நீர்குடி சுவையில் தீவிய மிழற்றி
முகிழ்நிலாத் திகழ்தரும் மூவாத் திங்கள்
பொன்னுடைத் தாலி யென்மகன் ஒற்றி
வருகுவை யாயின் தருகுவென் பாலென
விலங்கமர்க் கண்ணள் விரல்விளி பயிற்றித்
திதலை யல்குலெங் காதலி
புதல்வற் பொய்க்கும் பூங்கொடி நிலையே.

[2]—மாற்றூர் கிழார் மகனார் கொற்றங் கொற்றனார்.

(சொ - வி.) சு. பாக - பாகனே !.

க—ங. விருந்தின் மன்னர் - புதிய அரசர், அருங்கலம் தெறுப்ப - திறையாக அரிய அணிகலன்களைக் குவிப்ப, வேந்தனும் வெம் பகை தணிந்தனன் - நம் அரசனும் கொடிய பகைமை தணியப்பெற்றனன். தீம் பெயல் காரும் ஆர்கலி தலையின்று - மேகமும் இனிய பெயலை மிக்க ஒலியுடன் பெய்தது;

(பாடம்) 1. புன்கால் நெல்லி.
2. நொச்சி நியமங்கிழார் மகனார்...

உ—ச. ஓவத்து அன்ன கோபச் செந்நிலம் - ஓவியம் போன்ற இந்திர கோபத்தையுடைய சிவந்த நிலத்தே, தேரும் வள் வாய் ஆழி உள் உறுபு உருள - தேரினை அதன் உறுதி வாய்ந்த உருளை நிலத்தே பதிந்து உருண்டுவர, கடவுக - செலுத்துவாயாக;

ச—கஉ. படுமணி மிடற்ற பயநிறை ஆயம் - ஒலிக்கும் மணி கட்டிய கழுத்தினையுடைய பாற்பசுக்களாகிய இனம், கொடு மடி உடையர் - வளைந்த மடிகோலிய உடையினராகிய, கோல் கைக் கோவலர் - கோலைக் கையிலுடைய இடையர், கொன்றை அம் குழலர் பின்றைத் தூங்க - கொன்றையினது கனியாய அழகிய குழலினை யிசைப்பவராய்ப் பின்னே மெத்தென நடந்துவர, மதவு நடைத் தாம்பு அசை குழவி - செருக்கிய நடையினையுடைய தாம்பிற் பிணிக்கப்பெற்ற இளங்கன்றுகளிடத்தே, வீங்கு சுரை மடிய - பெருத்த மடி கரைய வேண்டி, கனையலங் குரல- கனைக்கின்ற குரலவாய், கால் பரி பயிற்றி - காலால் விரைதலைப் பயிலச்செய்து, மனைமனை படரும் - மனைதோறும் செல்லும், நனை நகு மாலை - அரும்புகள் மலரும் மாலைக் காலத்தே;

கஉ—சு. தனக்கென வாழாப் பிறர்க்கு உரியாளன் - தனக் கென்றே வாழாத பிறர்க்கெல்லாம் உரியவனாகிய, பண்ணன் சிறுகுடிப் படப்பை - பண்ணன் என்பானது சிறுகுடியைச் சார்ந்த தோட்டத்தில் உள்ள, நுண் இலைப் புன்காழ் நெல்லி - சிறிய இலையினையும் புல்லிய வித்தினையுமுடைய நெல்லியின், பைங்காய் தின்றவர் - செவ்விக் காய் களைத் தின்றவர், நீர்குடி சுவையில்- நீர் குடித்தகாலைஎழும் சுவைபோல;

கசு—உஉ. முகிழ் நிலாத் திகழ்தரு மூவாத் திங்கள் - அரும்பும் நிலவினால் விளங்கும் இளைய மதியே!

பொன்னுடைத் தாலி என்மகன் ஒற்றி - பொன்னாலாய தாலியினை யுடைய என் மகனை நினைந்து, வருகுவையாயின் - இவண் வருதியாயின், தருகுவென் பால் என- நினக்கும் பால் தருவேன் என, தீவிய மிழற்றி - இனிய மொழிகள் கூறி, விலங்கு அமர்க் கண்ணள் - ஒருக்கணித்து நோக்கும் அமரிய கண்ணினளாய், விரல் விளி பயிற்றி - விரலால் அழைத்தலைப் பயிலச் செய்து, புதல்வற் பொய்க்கும் - தன் புதல்வனைத் தன் கருத்துணராமை மறைக்கும், திதலை அல்குல் எம் காதலி பூங் கொடி நிலை - தேமல் அணிந்த அல்குலினையுடைய எம் காதலியாய பூங்கொடி போல்வாள் நிலையினை;

ச. காண்குவம் - காண்போம்.

(முடிபு) 'பாக! வேந்தனும் பகை தணிந்தனன்; காரும் தலையின்று; தேரும் கடவுக; தீவிய மிழற்றி, விளிபயிற்றிப் புதல்வற் பொய்க்கும் பூங்கொடி நிலை காண் குவம்.

ஆயம் மனைமனைப் படரும் மாலை எனவும், திங்கள் வருகுவையாயின் 'தருகுவென் பாலெனவிளி பயிற்றிப் பொய்க்கும் பூங்கொடி எனவும் இயையும்.

(வி - ரை.) விருந்தின் மன்னர் - புதியராய் மாறேற்ற அரசர். வேந்தனும் பகை தணிந்தனன் என்றமையால் தலைவன் வேந்தற் குற்றுழிப் பிரிந்தானாயிற்று. நச்சினார்க்கினியர் கருத்தின்படி இஃது அந்தணன் தூதிற் பிரிந்ததாகும் என்க. உள்ளூறுதல் நிலத்தின் ஈரத் தால் என்க.

குழவி பாலுண்ண வேண்டி என்பார் குழவியிடத்து வீங்குசுரை மடிய என்றார்.

கொடுமடி - அடகு பறித்திடுதற்கு வளைத்துக்கட்டிய மடி. சிறு குடி - காவிரியின் வடவயினுள்ளதோர் ஊர். திங்கள்: விளி, என் மகன் ஒற்றி - என்மகன் நினைக்க என்றுமாம். இங்கு ஒற்ற எனத் திரிக்க.

(மே - ள்.) [1]'திணைமயக் குறுதலும்' என்னுஞ் சூத்திரத்து, 'இச் செய்யுள் கார்காலத்து மீள்கின்றான், முகிழ்நிலாத் திகழ்தற்குச் சிறந்த வேனி லிறுதிக்கண் தலைவிமாட்டு நிகழ்வனகூறி, அவை காண்டற்குக் கடிது தேரைச் செலுத்தென்றது: இது முல்லைக்கண் வேனில் வந்தது' என்றும், [2]'அவற்றுள் ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன' என்னுஞ் சூத்திரத்து 'இப்பாட்டில், வேந்தன் பகைமையைத் தான் தணி வித்தமை கூறலின் அந்தணன் தூதிற் பிரிந்தமை பெற்றாம்' என்றும் கூறினர், நச்.

---

55. பாலை

[புணர்ந்துடன் போன தலைமகட்கு இரங்கிய தாய் தெருட்டும் அயலிலாட்டியர்க்கு உரைத்தது.]

காய்ந்துசெலற் கனலி கல்பகத் தெறுதலின்
நீந்து குருகுருகும் என்றூழ் நீளிடை
உளிமுக வெம்பரல் அடிவருத் துறலின்
விளிமுறை அறியா வேய்கரி கானம்
ரு வயக்களிற் றன்ன காளையோ டென்மகள்
கழிந்ததற் கழிந்தன்றோ இலனே யொழிந்தியான்
ஊதுலைக் குருகின் உள்ளுயிர்த் தசைஇ
வேவது போலும் வெய்ய நெஞ்சமொடு
கண்படை பெறேஎன் கனவ ஒண்படைக்
கய கரிகால் வளவனொடு வெண்ணிப் பறந்தலைப்

1. தொல். அகத்: கஉ. 2. தொல். அகத்: உச.

பொருதுபுண் ணாணிய சேர லாதன்
அழிகள மருங்கின் வாள்வடக் கிருந்தென
இன்னா இன்னுரை கேட்ட சான்றோர்
அரும்பெறல் உலகத் தவனொடு செலீ இயர்
பெரும்பிறி தாகி யாங்குப் பிறிந்திவண்
காதல் வேண்டியென் துறந்து
போதல்செல் லாவென் உயிரோடு புலந்தே.

—மாமூலனார்.

(சொ - ள்.) க—சு. காய்ந்து செலல் கனலி - வெம்மையுற்றுச் செல்லுதலையுடைய ஞாயிறு, கல் பகத் தெறுதலின் - மலை பிளக்கக் காய்ந்திடலால், நீந்து குருகு உருகும் என்றூழ் நீளிடை - கடந்து செல்லும் பறவைகள் இனைதற்கு ஏதுவாகிய வெப்பமிக்க நீண்ட விடத்தே, உளிமுக வெம்பரல் - உளிபோலும் வாயையுடைய கொடிய பரற் கற்கள், அடி வருத்துறலின் - அடியிற் பதிந்து வருத்துதலின், விளிமுறை அறியா - இறக்கும் இடம் இன்னது என்று அறியலாகாத, வேய்கரி கானம் - மூங்கில் கரிந்தொழியுங் காட்டில், வயக்களிற்றன்ன காளையொடு - வலிய களிற்றினை யொத்த காளையுடன், என்மகள் கழிந்ததற்கு அழிந்தன்றோ இலன் - என்மகள் உடன் போயதற்கு வருந்தினேன் அல்லேன்;

கு—கூ. யான் ஒழிந்து - யான் அவளைப் பிரிந்திருந்து, ஊது உலைக்குருகின் - உலைக்கண் ஊதும் துருத்திபோல, உள் உயிர்த்து அசைஇ - வெய்துயிர்த்து உள்மெலிந்து, வேவது போலும் வெய்ய நெஞ்சமொடு - தீயில் வேவதுபோலும் வெவ்விய நெஞ்சமொடு, கண் படை பெறேஎன் கனவ - கண் துயிலேலாய் வாய் வெருவிப் புலம்ப;

கூ—கரு. ஒண்படைக் கரிகால் வளவனொடு - ஒளி தங்கிய படையினையுடைய கரிகால் வளவனொடு, வெண்ணிப் பறந்தலைப் பொருது - வெண்ணிப் போர்க்களத்தே போர் செய்து, புண் நாணிய - புறப் புண் பட்டமைக்கு நாணின, சேரலாதன் - பெருஞ் சேரலாதன், அழிகள மருங்கின் - பொருதழிந்த களத்தின் புறத்தே, வாள் வடக்கு இருந்தென - வாளொடு வடக்கிருந்தானாக, இன்னா இன்னுரை கேட்ட சான்றோர் - அச்செய்தியாகிய இன்னாமையும் இனிமையும் உடைய உரையினைக் கேட்ட பெரியோர், அரும்பெறல் உலகத்து - பெறுதற் கரிய துறக்கத்திற்கு, அவனொடு செலீஇயர் - அவனோடு செல்லும் பொருட்டு, பெரும்பிறிது ஆகியாங்கு - உயிர் நீத்தாங்கு;

கரு—எ. இவண் காதல் வேண்டி - இவ்வுலகத்து ஆசையை விரும்பி, என் துறந்து பிறிந்து - என்னை விட்டுப் பிரிந்து, போதல் செல்லா என் உயிரொடு - போதலைச் செய்யாத என் உயிரோடு, புலந்து - நொந்தேன்.

(முடிபு) யான் காணம் எம்மகள் கழிந்ததற்கு அழிந்தன்றே இலன்; நெஞ்சமொடு கனவப் போதல் செல்லா என் உயிரொடு புலந்தே.

கழிந்ததற்கு உயிரொடு புலந்து, அழிந்தன்றே இலன் எனக் கூட்டி முடித்தலுமாம்.

(வி-ரை.) சேரலாதன் வடக்கிருந்தெனக் கேட்ட சான்றோர் அவனொடு செலீஇயர் பெரும் பிறிதாகியாங்கு என் துறந்து போதல் செல்லா உயிர் என்க. உறல் - உறுதல். விளிமுறை அறியா - இன்ன விடத்தில் இன்ன துன்பம் வருமென்றறியாத. அழிந்தன்றே: ஓ: ஒழியிசை. வாள் - வாளொடு. இன்னா இன்னுரை - மரிக்கின்றான் என்பதனால் இன்னாமையும், புறப்புண்பட்ட பழிதீர இருந்து உயிர் விடுகின்றான் என்பதனால் இனிமையும் உடைய உரை. அரும்பெறல் உலகம் - வீரர் எய்தும் துறக்கம். புலந்து - புலந்தேன்: தன்மை வினைமுற்று. சான்றோர் தமக்கு அயன்மை யுடையான் வடக்கிருந்த வழியும் அவனொடு செல்லுதற்கு உயிர் துறந்தனர்; யானோ என் மகளைப் பிரிந்தும் போகாத உயிருடன் கூடியுள்ளேன் என்று வெறுத்தான் என்க.

(மே-ள்.) [1]'தாய்க்கு முரித்தாற் போக்குடன் கிளப்பின்' என்னுஞ் சூத்திரத்து, இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும், 'கண்படை பெறேன் கனவ' என்பதனை எடுத்துக்காட்டி, முறையே உடன் போக்கின்கண் நற்றாய்க்கும் கனவு உரித்தாயிற் றெனவும், செவிலித் தாய்க்கும் கனவு உரித்தாயிற் றெனவும் கூறினர்.

---

56. மருதம்

[பரத்தை மனைக்குச் செல்கின்ற பாணன் தன் மனைக்கு வந்தானாகத் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.]

நகையா கின்றே தோழி நெருநல்
மணிகண் டன்ன துணிகயந் துளங்க
இரும்பியன் றன்ன கருங்கோட் டெருமை
ஆம்பல் மெல்லடை கிழியக் குவளைக்
கூம்புவிடு பன்மலர் மாந்திக் கரைய
காஞ்சி நுண்டா தீர்ம்புறத் துறைப்ப
மெல்கிடு கவுள அல்குநிலை புகுதரும்
தண்டுறை யூரன் திண்டார் அகலம்
வதுவை நாளணிப் புதுவோர்ப் புணரிய

---

1. தொல். பொருள்: ௪.

பரிவொடு வரூஉம் பாணன் தெருவில்
புனிற்றுப் பாய்ந்தெனக் கலங்கி யாழிட்
டெம்மனைப் புகுதந் தோனே அதுகண்டு
மெய்ம்மலி உவகை மறையினென் எதிர்சென்
றிம்மனை அன்றஃ தும்மனை என்ற
என்னுந் தன்னும் நோக்கி
மம்மர் நெஞ்சினேன் தொழுதுநின் றதுவே.

—மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்

(சொ - ள்.) க. தோழி--;

க—க௦: நெருநல்-நேற்று, மணிகண்டன்ன துணிகயம் துளங்க - பளிங்கு மணியினைக் கண்டாற்போலும் தெளிந்த குளம் கலங்க, இருப்பு இயன்றன்ன கருங்கோட்டு எருமை - இரும்பாற் செய்தாலொத்த கரிய கொம்பினையுடைய எருமைகள், ஆம்பல் மெல் அடை கிழிய - ஆம்பலின் மெல்லிய இலைகள் கிழிய, குவளைக் கூம்புவிடு பன் மலர் மாந்தி - குவளையின் குவிதல் நீங்கிய பல மலர்களையும் நிறையத் தின்று, கரைய காஞ்சி நுண்தாது ஈர்ம் புறத்து உறைப்ப - கரையின் கண்ணுள்ள காஞ்சியின் நுண்ணிய தாது ஈரமுடைய உடம்பின் புறத்திலே ஒந்த, மெல்கிடு கவுள - அசையிடும் தாம் வாயினவாய், அல்கு நிலை புகுதரும்-தாம் தங்கும் கொட்டிலில் வந்து புகும், தண் துறை ஊரன் திண்தார் அகலம்-குளிர்ந்த துறையினையுடைய ஊரனது திண்ணிய மாலையினைத் தரித்துள்ள மார்பினில், வதுவை நாள் அணிப் புதுவோர்ப் புணரிய - வதுவைக் காலத்து ஒப்பனையையுடைய பரத்தையரைப் புணர்க்க, பரிவொடு வரூஉம் பாணன் - அவாவுடன் வந்த பாணன்;

க௦—உ. தெருவில் புனிற்று ஆ பாய்ந்தெனக் கலங்கி - தெருவில் ஈன்ற அணிமையுடையதோர் ஆ தன்னைப் பாய்ந்தமையாற் கலக்க முற்று, யாழிட்டு-யாழினைக் கீழே போகட்டு, எம்மனைப் புகுதந்தோன்- எம்மில்லின்கண் புகுந்தான்;

கஉ—கரு. அது கண்டு—, மெய்ம்மலி உவகை மறையினென் - உடல் விம்ம எழுந்த உவகையை மறைத்து, எதிர் சென்று - அவன் எதிரே சென்று, உம்மனை இம்மனையன்று அஃது என்ற - உங்கள் மனை இம்மனை யன்று அதுவாகும் என்று கூறிய, என்னும் தன்னும் நோக்கி - என்னையும் தன்னையும் பார்த்து, மம்மர் நெஞ்சினேன் - மயங்கிய நெஞ்சினனாய், தொழுது நின்றது - என்னைத்தொழுது நின்ற நிலை;

க. நகையாகின்று - நகையை விளைப்பதாகின்றது.

(முடிபு) தோழி, ஊரன் அகலம் புதுவோர்ப் புணரிய வரும் பாணன், புனிற்றுப் பாய்ந்தெனக் கலங்கி, யாழ்இட்டு எம்மனைப் புகுதந்தோன்; அது கண்டு எதிர் சென்று இம்மனை அன்று அஃது என்ற என்னுந் தன்னும் நோக்கி மம்மர் நெஞ்சினேன் தொழுது நின்றது; நகையாகின்று.

(வி - ரை.) மணி - பளிக்குமணி. துணி - தெளிவு. குவளை கூம்பு விடுமலர் என்றமையால், ஆம்பல் குவிதல் பெற்றும். புகுதரும் என்னும் எச்சம் ஊரன் என்பதன் முதனிலை கொண்டு முடியும். புதுவோர் - புதிய பரத்தையர். நோக்கி - நோக்கல் நோக்கம். என்னும் தன்னும் நோக்கி - யான் இகழுதலையும் தனது இளிவையும் கருதி. தொழுது நின்றது நகையாகின்று என்றது, பிறன் பேதைமை பொருளாக நகை யென்னும் மெய்ப்பாடு தோன்றியது.

(உ - றை.) "இரும்பியன் றன்ன கருங்கோட் டெருமை கயங் கலங்க ஆம்பல் மெல்லடை கிழியக் குவளைக் கூம்புவிடு பன்மலரை மாந்திக் காஞ்சி நுண்டாது புறத்துறைப்ப மெல்கிடு கவுளவாய்த் தங்கு நிலைக்கட் புகுதரு மென்றது, இரும்பு போன்ற நெஞ்சினையுடையராகிய பரத்தையர் ஊர்முழுதுங் கலங்கத் தான் முன்பு கூடின பரத்தையர் தாய்மார் கலங்க, அப் பரத்தையர் அவ் வாம்பற் பூப்போலக் குவியக், குவிதல் விட்ட குவளை மலர் போலும் பூப்பெய்து கொள்ளப்பட்ட பரத் தையரை நுகர்ந்து வருகின்ற காலத்து, வழியிலகப்பட்ட சேடியர் முதலாயினரை நுகர்ந்து, பின்னுஞ் சிலரைக் கூடக் கொடுநாக் கெறிந்துகொண்டு நம் மனையிலே தங்குதற் பொருட்டு வருகின்றான் என்று தோழிக்கு வாயில் மறுத்தது" என்பது குறிப்புரை.

(மே - ள்.) [1]'எள்ள விளமை' என்னுஞ் சூத்திரத்து, 'நகையா கின்றே தோழி...'என்பது, எள்ளல் பொருளாக நகை பிறந்ததென்று இளம்பூரணரும், 'பிறன் பேதைமை பொருளாக நகை பிறந்த'தென்று பேராசிரியரும் கூறினர்.

---

57. பாலை

[பொருள்வயிற் பிரிந்த தலைமகன் கிழத்தியை நினைந்து சொல்லியது.]

சிறுபைந் தூவிச் செங்காற் பேடை
நெடுநீர் வானத்து வாவுப்பறை நீந்தி
வெயிலவிர் உருப்பொடு வந்துகனி பெறாஅது
பெறுநாள் யாணர் உள்ளிப் பையாந்து
௫ புகலேக் கற்ற புல்லென் உலவைக்

1. தொல். மெய்ப்: ௪.

குறுங்கால் இற்றிப் புன்தலை நெடுவீழ்
இரும்பிணர்த் துறுகல் தீண்டி வளிபொரப்
பெருங்கை யானை நிவப்பில் தூங்கும்
குன்ற வைப்பின் என்றூழ் நீளிடை
யாமே எமியம் ஆகத் தானே
பசுநிலா விரிந்த பல்கதிர் மதியில்
பெருநல் ஆய்கவின் ஒரீஇச் சிறுபீர்
வீயேர் வண்ணங் கொண்டன்று கொல்லோ
கொய்சுவற் புரவிக் கொடித்தேர்ச் செழியன்
முதுநீர் முன்றுறை முசிறி முற்றிக்
களிறுபட எருக்கிய கல்லென் ஞாட்பின்
அரும்புண் உறுநரின் வருந்தினள் பெரிதழிந்து
பானாட் கங்குலும் பகலும்
ஆனா தழுவோள் ஆய்சிறு நுதலே.

—நக்கீரர்.

(சொ - ள்.) ௧—௫. நெஞ்சே, சிறுபைந் தூவிச் செங்கால் பேடை-சிறிய மெல்லிய சிறகினையும் சிவந்த காலினையும் உடைய வாவற்பேடை, நெடுநீர் வானத்து - நெடிய தன்மையையுடைய வானின்கண், வாவுப் பறை நீந்தி - தாவிப் பறத்தலாற் கடந்து, வெயில் அவிர் உருப்பொடு வந்து-விளங்கும் வெயிலாலாகிய வெம்மையொடு வந்து, கனிபெறாது-கனிகள் பெறாமல், பெறுநாள் யாணர் உள்ளிப் பையாந்து - தான் முன்பு கனிகளைப் பெறும் நாளின் வளனை நினைந்து துன்புற்று, புகல் ஏக்கற்ற - பண்டுபோற் பயன் மரங்களிற் புகுதற்கு ஏங்கியிருப்பதும்;

௬—௮. புல் என் உலவைக் குறுங்கால் இற்றி-பொலிவற்ற கிளைகளையும் குறிய அடியினையும் உடைய இற்றி மரத்தின், புன்தலை நெடுவீழ் - புல்லிய உச்சியினையுடைய நீண்ட விழுது, இரும் பிணர்த் துறுகல் தீண்டி - பெரிய சருச்சரையையுடைய உருண்டைக் கல்லைத் தீண்டி, வளிபொர - காற்றடித்தலால், பெருங்கை யானை நிவப்பில் தூங்கும்-பெரிய கையினையுடைய யானை உயர்ந்திருப்பது போற்றோன்றி அசைவதுமாகிய;

௯—௧௦. குன்ற வைப்பின் என்றூழ் நீளிடை-மலையிடத்தூர்களையுடைய வெம்மை மிக்க நெடிய காட்டில், யாமே எமியம் ஆக - யாம் தனித்திருப்ப;

௧௪—௫. கொய் சுவல் புரவி - கொய்த பிடரிமயிரினையுடைய குதிரைகளையுடைய, கொடித் தேர்ச் செழியன் - கொடி கட்டிய

தேரினையுடைய பாண்டியன், முதுநீர் முன்துறை முசிறி முற்றி - பழைமையான கடலின் துறைமுகத்தையுடைய முசிறியை வளைத்து, களிறுபட எருக்கிய கல்என் ஞாட்பின் - யானைகள் மடியக் கொன்ற கல்லென்னும் ஒலியுடைய போரில், அரும்புண் உறுநரின் - விழுப்புண் பட்டவர்போல, வருந்தினள் பெரிது அழிந்து-மிகவும் மனம் நொந்து வருந்தி, பானாட் கங்குலும் பகலும்-நடு இரவிலும் பகலிலும், ஆனாது அழுவோள்-ஒழியாது அழுதிருக்கும் நம் தலைவியின், ஆய் சிறு நுதல் - அழகிய சிறிய நெற்றி ;

௧௧—௨. பசுநிலா விரிந்த பல்கதிர் மதியில் - குளிர்ந்த நிலா விரிந்த பல கதிர்களையுடைய மதியைப்போலும், பெருநல் ஆய்கவின் ஒரீஇ - பெரிய சிறந்த ஆராயும் அழகு நீங்க, சிறு பீர் வீ ஏர் வண்ணம் கொண்டன்று கொல் - சிறிய பீர்க்கினது பூவினை ஒத்த நிறம் கொண்டதோ ?

(முடிபு) குன்ற வைப்பின் என்றூழ் நீளிடை, யாம் எமியமாக, வருந்திப் பெரி தழிந்து அழுவோள் சிறுநுதல் மதியின் கவின் ஒரீஇப் பீர் வீ ஏர் வண்ணம் கொண்டன்று கொல்.

பேடை நீந்தி வந்து பெறுது உள்ளிப் பையாந்து ஏக்கற்ற நீளிடை எனவும், இற்றி நெடுவீழ் துறுகல் தீண்டி யானை நிவப்பிற் றூங்கும் நீளிடை எனவும் கூட்டுக.

(வி - ரை.) வாவுப்பறை கனி பெறுது என்ற குறிப்புக்களால் செங்காற்பேடை என்பது வாவற்பேடையென்பது பெற்றாம்: வாவிப் பறத்தலின் இது வாவலெனப் பெயர் பெறுவதாயிற்று; இது வௌவால் எனவும் வழங்கப்பெறும். வாவல் கனிகளை விரும்பி யுண்பதென் பது, [1]'அருகல தாகிப் பலபழுத்தக் கண்ணும், பொரிதாள் விளவினை வாவல் குறுகா,' [2]'மரம்பழுத்தால் வௌவாலை வாவென்று கூவி, இரந் தழைப்பார் யாவருமிங் கில்லை' என்பவற்றாலும், [3]'பளிக்கறைப் பவளப் பாவை' என்னும் செய்யுளில், அஞ்சிறைப் பறவை என்பதற்கு வாவல் எனப் பொருள்கொண்டு, 'கண்ணுள் கனியை யொத்தாள்,......அயில் கின்ற வேந்தன் வாவலை யொத்தான்' என உரை கூறியிருத்தலானும் பெறப்படும். ஏக்கறுதல் - ஆசையிற் றாழ்தல். ஒரீஇ - ஒருவ எனத் திரிக்க. கொல்: ஐயம். ஓ: அசை.

---

1. நாலடியார்: ௨௬௪. 2. நல்வழி: ௩௦.
3. சீவக: ௧௧௨.

58. குறிஞ்சி

[சேட்படுத்து வந்த தலைமகற்குத் தலைமகள் சொல்லியது.]

இன்னிசை உருமொடு கனைதுளி தலைஇ
மன்னுயிர் மடிந்த பானாட் கங்குல்
காடுதேர் வேட்டத்து விளிவிடம் பெறாஅது
வரியதள் படுத்த சேக்கைத் தெரியிழைத்
தேனாறு கதுப்பிற் கொடிச்சியர் தந்தை
கூதிரிற் செறியுங் குன்ற நாட
வனைந்துவரல் இளமுலை ஞெமுங்கப் பல்வாழ்
விளங்குதொடி முன்கை வளைந்துபுறஞ் சுற்ற
நின்மார் படைதலின் இனிதா கின்றே
நும்மில் புலம்பினும் உள்ளுதோறு நலியும்
தண்வரல் அசைஇய பண்பில் வாடை
பதம்பெறு கல்லா திடம்பார்த்து நீடி
மனைமரம் ஒசிய ஒற்றிப்
பலர்மடி கங்குல் நெடும்புற நிலையே.

—மதுரைப் பண்டவாணிகன் இளந்தேவனார்.

(பொ - ள்.) ௧—௬. கூதிர் - கூதிர்க்காலத்தில், இன்னிசை உருமொடு கனைதுளி தலைஇ-இனிய ஓசையுடைய இடியுடன் மிக்க மழை பெய்திட, மன்னுயிர் மடிந்த பானாள் கங்குல்-நிலைபெற்ற உயிர்களெல்லாம் துயின்ற பாதியிரவில். தெரியிழை தேன்நாறு கதுப்பின் கொடிச்சியர் தந்தை - ஆராய்ந்தெடுத்த அணிகளையும் தேன் நாறும் கூந்தலினையுமுடைய குறத்தியர் தந்தைமார், காடுதேர் வேட்டத்து - காட்டில் விலங்குகளை ஆராயும் வேட்டையில், விளிவிடம் பெறாது - துயிலும் இடம் பெறாமல், வரி அதள் படுத்த சேக்கை-புலித்தோலினை விரித்துள்ள படுக்கையில், இல்செறியும் - இல்லிலே வந்து தங்கியிருக்கும், குன்ற நாட - மலைகள் பொருந்திய நாட்டின் தலைவனே ;

௧௦—௪. நும் இல் புலம்பின் நும் உள்ளுதொறும் நலியும்-நும்மைப் பிரிந்திருக்கும் தனிமையில் நும்மை நினையுந்தோறும் வருத்தா நிற்கும், தண்வரல் அசைஇய - குளிர்ச்சியுடன் அசைந்து வருதலையுடைய, பண்பில் வாடை - இனிய பண்பில்லாத வாடைக்கு, பதம் பெறுகல்லாது - குறித்த பருவத்தில் நும் வருகையைப் பெறாது, இடம் பார்த்து நீடி - நீர் வருங்காலத்தை நோக்கித் தாழ்த்து, மனை மரம் ஒசிய ஒற்றி-மனைமரம் முறிய வலித்து, பலர் மடி கங்குல்-பலரும் துயின்ற இரவில், நெடும் புற நிலை - நெடுங்காலம் புறத்தே நின்றுகொண்டிருக்கும் எமது நிலை ;

எ—கு. வணைந்து வரல் இளமுலை ஞெமுங்க - பண்ணினாற்போல் எழும் இளமுலைகள் அழுந்த, பல்லூழ் - பன்முறை, விளங்குதொடி முன்கை வளைந்து புறம் சுற்ற - விளங்கும் தொடிகளை யணிந்த முன்கை வளைந்து புறத்தினைச் சுற்றிக்கொள்ள, நின்மார்பு அடைதலின் - நின் மார்பை முயங்குதலினும், இனிதாகின்று - இனியதாயிற்று.

(முடிபு) குன்ற நாட! நும் உள்ளுதொறும் நலியும் வாடைக்கண், பதம் பெறுகல்லாது நீடி ஒற்றிக் கங்குலின் நிற்கும் புறநிலை, இளமுலை ஞெமுங்க முன்கை புறஞ்சுற்ற, நின்மார் படைதலின் இனிதாகின்று.

கொடிச்சியர் தந்தை, கூதிர்க் காலத்து, கங்குலில், வேட்டத்து, விளிவிடம் பெறாது சேக்கையில் இற்செறியும் குன்ற நாடு என்க.

(வி. ரை.) தலைஇ - பெய்து; பெய்ய எனத் திரிக்க. காடு தேர் - காட்டில் விலங்குகளைத் தேரும் என ஒரு சொல் வருவித் துரைக்க. விளிவிடம் - முடிவிடமுமாம். தந்தை - தந்தையர் என்க. வணைந்து வரல் - வணைந்தாற்போல் வரல்; வணைதல் - இயற்றுதல். வரல் - வளர்தல். இடம் பார்த்து: இடம் - காலம். ஒற்றி நிற்கும் நிலையென விரித்துரைக்க.

எல்லோரும் இனிது உறங்கும் கங்குலில் தான் உறக்கமின்றி இங்ஙனம் நிற்கும் நிலை இனிதாயிற்றென்று தலைவி கூறினும், குறிப் பினால் வாடையால் எய்திய வருத்தத்தை உணர்த்தினாள் ஆவள் என்க. கொடிச்சியர் தந்தையர் தாம் செய்தொழிற்கு இடம்பெறாது கூதிர்க் காலத்து இல்லிலே செறியும் குன்ற நாட-என்றது, புறத்து வினையில் லாக் காலத்து எம்மை நினைக்கின்றாய் என்னுங் குறிப்பிற்று.

(மே - ள்.) [1]'மறைந்தவற் காண்டல்' என்னுஞ் சூத்திரத்து 'பெற்றவழி மலியினும்' என்பதற்கு இச் செய்யுளை எடுத்துக் காட்டினர், நச்.

[2]'வினையுயிர் மெலிவிடத்து' என்னுஞ் சூத்திரத்து, உயிர் மெலிந்த விடத்துப் புணர்ச்சி நிமித்தமெனக் கூறப்பட்டவை யின்றியும் புணர்ச்சி நிகழ்ந்ததற்கு, 'வணைந்துவரல்......இனிதாகின்றே' என்னும் பகுதியை எடுத்துக் காட்டினர். பேரா.

———

1. தொல். களவு: உ௦. 2. தொல். மெய்ப்; உ௦.

59. பாலை

[தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட கிழத்திக்குத் தோழி சொல்லியது.]

தண்கயத் தமன்ற வண்டுபடு துணைமலர்ப்
பெருந்தகை இழந்த கண்ணிணை பெரிதும்
வருந்தினை வாழியர் நீயே வடாஅது
வண்புனல் தொழுநை வார்மணல் அகன்றுறை
அண்டர் மகளிர் தண்டழை உடீஇயர்
மரஞ்செல மிதித்த மாஅல் போலப்
புன்றலை மடப்பிடி உணீஇயர் அங்குழை
நெடுநிலை யாஅம் ஒற்றி நனைகவுள்
படிஞிமிறு கடியும் களிறே தோழி
சூர்மருங் கறுத்த சுடரிலை நெடுவேல்
[1]சினமிகு முருகன் தண்பரங் குன்றத்து
அந்துவன் பாடிய சந்துகெழு நெடுவரை
இன்றீம் பைஞ்சுனை ஈரணிப் பொலிந்த
தண்ணறுங் கழுநீர்ச் செண்ணியற் சிறுபுறம்
தாம்பா ராட்டிய காலையும் உள்ளார்
வீங்கிறைப் பணைத்தோள் நெகிழச் சேய்நாட்
டருஞ்செயற் பொருட்பிணி முன்னிநப்
பிரிந்துசேண் உறைநர் சென்ற ஆறே.

—மதுரை மருதனிளநாகன்.

(சொ - ள்.) ௯. தோழி - ;

௧—௩. நீ - நீதான், தண் கயத்து அமன்ற - குளிர்ந்த குளத்தில் நிறைந்த, வண்டு படு துணை மலர்ப் பெருந்தகை இழந்த கண்ணிணை - வண்டுகள் படியும் தமக்குத் தாமே நிகராய மலர்கள் போலும் பெரிய அழகினை இழந்திட்ட கண்களை யுடையையாகி, பெரிதும் வருந்தினை - மிகவும் வருந்தினை, வாழியர் - வாழ்வாயாக,

௧௦—௫. சூர் மருங்கு அறுத்த சுடர்இலை நெடுவேல் - சூர பன்மாவினையும் அவன் சுற்றத்தினையும் தொலைத்த ஒளி பொருந்திய இலைத் தொழிலையுடைய நெடிய வேலினையுடைய, சினம் மிகு முருகன் தண் பரங்குன்றத்து - சினம் மிக்க முருகனது தட்பம் வாய்ந்த திருப்பரங் குன்றமாகிய, அந்துவன் பாடிய - நல்லந்துவனார் பாடிய, சந்துகெழு

(பாடம்) 1. சீர்மிகு முருகன்.

நெடுவரை - சந்தன மரங்கள் மிக்க உயர்ந்த மலையில் உள்ள; இன்தீம் பைஞ்சுனைத் தண் நறுங் கழுநீர் - இனிய தீவிய பசுமை வாய்ந்த சுனையில் உள்ள தண்ணிய நறிய குவளைப் பூவுடன் இயன்ற, ஈரணிப் பொலிந்த - பெரிய ஒப்பனையாற் பொலிவுற்ற, செண் இயல் சிறுபுறம் - கொண்டை அசைதலையுடைய முதுகினை, தாம் பாராட்டிய காலையும் உள்ளார் - நம் தலைவர் தாம் பாராட்டிய காலத்தினையும் நினையாராய்;

கக—௪. வீங்கு இறைப் பணைத்தோள் நெகிழ - பருத்த இறையினையுடைய மூங்கில்போலும் தோள் மெலியும்படி, சேய்நாட்டு அருஞ் செயற் பொருட்பிணி முன்னி - தூரநாட்டிற் சென்று செய்யும் அருஞ் செயலாகிய பொருளீட்டலை நினைத்து, நப் பிரிந்து சேண் உறைநர் சென்ற ஆறு - நம்மைப் பிரிந்து சேணின்கண் உறைகின்றவர் போன வழியின்கண்;

ரு—க. வடாது வண்புனல் தொழுநை வார்மணல் அகல்துறை - வடக்கின் கண்ணதாகிய நீர்வளம் அமைந்த யமுனை யாற்றின் நெடிய மணலையுடைய அகன்ற துறையில் நீராடிய, அண்டர் மகளிர் தண் தழை உடீஇயர் - ஆயர் மகளிர் தண்ணிய தழையை உடுத்திக்கொள்ள, மரம் செல மிதித்த மாஅல் போல - குருந்த மரம் வளைந்திட மிதித்துத் தந்த கண்ணன்போல, களிறு புன்தலை மடப்பிடி அங்குழை உணீஇயர் - களிறு மெல்லிய தலையினையுடைய இளைய பெண்யானை அழகிய தளிர் களை உண்ணற்கு, நெடுநிலை யாஅம் ஒற்றி - (முன்னர்) உயர்ந்த நிலையினை யுடைய யாமரத்தினை வளைத்துத் தந்து, நனைகவுள் படிஞிமிறு கடியும் - மதத்தால் நனைந்த கன்னத்தில் படியும் வண்டுகளை ஓட்டாநிற்கும் (அவர் இது கண்டு வருவர்,)

(முடிபு) தோழி! நீ தலைவரைப் பிரிந்து பெரிதும் வருந்தினை: வாழியர்; நின் சென்னியச் சிறுபுறம் பாராட்டிய காலையு முள்ளார்; தோள் நெகிழ் பொருட் பிணி முன்னிப் பிரிந்து சேணுறைநர் சென்ற ஆற்றிலே களிறு பிடிகுழை உணீஇயர் யாஅம் ஒற்றி, மிஞிறு கடியும், (அவர் அது கண்டு வருவர்.)

(வி - ரை.) துணைமலர் - இரண்டாகிய மலருமாம். 'வண்புனல் ......மால்போல' என்பதிற் குறித்த வரலாறு, ஆயர் பெண்கள் யமுனை யாற்றில் நீராடுங்கால், அவர்கள் கரையில் இட்டுவைத்த ஆடைகளைக் கண்ணபிரான் விளையாட்டாக எடுத்துக்கொண்டு குருந்த மரத்தேறி யிருந்தாராக, அப்பொழுது பலதேவர் அங்கு வர, அம் மகளிர் ஒரு சேர மறைதற்கு வேறு வழியின்மையால், தாம் ஏறியிருந்த குருந்த மரக்கொம்பினைத் தாழ்த்துக் கொடுத்தார் என்பது. இதனை,

[1]"நீனிற வண்ண னன்று நெடுந்துகில் கவர்ந்து தம்முன்
பானிற வண்ண னேக்கிற் பழியுடைத் தென்று கண்டாய்
வேனிறத் தானை வேந்தே விரிபுனற் றொழுனை யாற்றுட்
கோனிற வளையி னார்க்குக் குருந்தவ னொசித்த தென்றான்."

---

1. சிந்தா: உ௪௧.

என்னுஞ் சிந்தாமணிச் செய்யுளானும் அறிக. மாஅல் போல - வினை பற்றிய உவமை. யாமரத்தை வளைத்த களிறு அதனின்றும் தன் கன்ன மதத்திற் படிந்த வண்டுகளைக் கடியும் என்றவாறு. அது கண்டு அவர் வருவரென்று விரித்துரைக்க, சூரினையும் மருங்கினையும் அறுத்த என்க. பரங் குன்றத்து நெடுவரை - பரங் குன்றமாகிய நெடுவரை; அத்துச் சாரியை அல்வழிக்கண் வந்தது. அந்துவன் - கடைச் சங்கப் புலவராகிய ஆசிரியர் நல்லந்துவனார். அவர் [1]'மண்மிசை யவிழ்துழாய்' என்னும் பரிபாடற் செய்யுளிற் பரங்குன்றத்தைப் பாடியுள்ளமை அறிக. அக்காலத்து நல்லிசைப் புலவர்கள் ஒருவர்பா லொருவர் மதிப்பு வைத்திருந்தமைக்கு இஃதொரு சான்றாகும். செண் - ஒப்பனை. செய்யப் பெறுவதாற் கொண்டைக்குப் பெயராயிற்று. நப்பிரிந்து: வலித்தல் விகாரம். களிறு பிடி குழை யுண்ணுதற்கு யாமரத்தினை வளைத்துத் தருமென்றது, [2]'அன்புறுதகுந இறைச்சியுட் சுட்டியதாகும்.

---

60. நெய்தல்

[தலைமகற்குத் தோழி செறிப்பறிவுறீஇ வரைவு கடாயது.]

பெருங்கடற் பரப்பிற் சேயிறால் நடுங்கக்
கொடுந்தொழில் முகந்த செங்கோல் அவ்வலை
நெடுந்திமில் தொழிலொடு வைகிய தந்தைக்கு
உப்புநொடை நெல்லின் மூரல் வெண்சோறு
[3]அயிலை துழந்த அம்புளிச் சொரிந்து
கொழுமீன் தடியொடு குறுமகள் கொடுக்கும்
திண்டேர்ப் பொறையன் தொண்டி அன்னஎம்
ஒண்டொடி [4]ஞெமுக்கா தீமோ தெய்ய
ஊதை ஈட்டிய உயர்மணல் அடைகரைக்
கோதை ஆயமொடு வண்டல் தைஇ
ஓரை ஆடினும் உயங்குநின் ஒளியெனக்
கொன்னுஞ் சிவப்போள் காணின் வெண்வேல்
கொற்றச் சோழர் குடந்தை வைத்த
நாடுதரு நிதியினும் செறிய
அருங்கடிப் படுக்குவள் அறனில் யாயே.

— குடவாயிற் கீரத்தனார்.

---

1. பரி: அ, 2. தொல். பொருள்: கஎ.
(பாடம்) 3. அயிரை துழந்த. 4. ஞெமுங்கா தீமோ.

(சொ - ள்.) க—அ. பெருங்கடல் பரப்பில் சேயிறால் நடுங்க - பெரிய கடற்பரப்பில் சிவந்த இறால்மீன் நடுங்க, கொடுந் தொழில் முகந்த செங்கோல் அவ்வலை - முகக்கும் கொடிய தொழிலையுடைய நேரிய கோலையுடைய அழகிய வலையைக் கொண்ட, நெடுந் திமில் தொழிலொடு வைகிய - நீண்ட படகிலிருந்து மீன் பிடிக்குந் தொழிலிற் றங்கிய. தந்தைக்கு - தன் தந்தைக்கு, உப்பு நொடை நெல்லின் மூரல் வெண்சோறு - உப்பு விற்றுக்கொண்ட நெல்லினாற் சமைத்த மூரலாகிய வெண்சோற்றை, அயிலை துழந்த அம்புளி சொரிந்து - அயிலை மீனை யிட்டாக்கிய அழகிய புளிக்கறியினைச் சொரிந்து, கொழு மீன் தடியொடு குறுமகள் கொடுக்கும் - கொழுமீன் கருவாட்டினுடன் இளைய மகள் இடும் இடமாகிய, திண் தேர்ப் பொறையன் தொண்டி அன்ன-திண்ணிய தேரினையுடைய சேரனது தொண்டியைப் போன்ற, எம் - எம்முடைய, ஒண் தொடி ஞெமுக்கா தீமோ-ஒள்ளிய வளையலைத் தழும்புறும்படி அமுக்கற்க;

க—கஉ. ஊதை ஈட்டிய உயர் மணல் அடைகரை - வாடைக் காற்றுக் குவித்த உயர்ந்த மணல் மேடாகிய கரையில், கோதை ஆய மொடு வண்டல் தைஇ - மாலையையுடைய ஆயத்தாரோடு வண்டல் இயற்றி, ஓரை ஆடினும் - விளையாட்டினைப் புரியினும், உயங்கும் நின் ஒளி என - உன் மேனி வாடும் என, கொன்னும் சிவப்போள் - ஏது வின்றியும் சினப்பவளாகிய, அறனில் யாய் காணின் - அறங் கருதாத யாய் இதனைக் காணின், வென்வேல் கொற்றச் சோழர் - வெல்லும் வேலினையுடைய வெற்றி பொருந்திய சோழர், குடந்தை வைத்த - குடவாயிற்கண் போற்றி வைத்த, நாடு தரு நிதியினும் - பகைவர் நாடு திறையாகக் கொடுத்த நிதியைக் காட்டினும், செறிய அருங் கடிப் படுக்குவள் - மிகவும் அரிய காவற்படுத்திவிடுவள்.

(முடிபு) தலைவ! நெடுந்திமிற் றொழிலொடு வைகிய தந்தைக்குக் குறுமகள் மூரலாகிய வெண்சோறு புளிக்கறி சொரிந்து தடியுடன் கொடுக்கும் தொண்டியன்ன எம் ஒண்டொடி ஞெமுக்கர்தீமோ் ஓரை யாடினும் உயங்கும் ஒளி எனக் கொன்னுஞ் சிவப்போளாகிய யாய் காணின், சோழர் குடந்தை வைத்த நிதியினும் செறிய அருங்கடிப் படுக்குவள்.

(வி - ரை.) இறால், அயிலை, கொழுமீன் - இவை மீனின் சில வகைகள். கொடுந் தொழிலையுடைய வலை என்க. கோல் - வலையிற் கட்டிய கோல். மூரல் சோறு : இரு பெயரொட்டு; முறுவல்போலுஞ் சோறு எனலுமாம். புளி: புளிக் கறிக்கு ஆகுபெயர். கொடுக்கும் தொண்டி யெனப் பெயரெச்சம் இடப்பெயர் கொண்டது. ஒண்டொடி என்ப தற்குத் தலைவி யென்று பொருள் கூறி அவளை வருத்தாதே யென்று உரைத்தலுமாம். மோ, தெய்ய : அசைகள். சிவப்போள் - வெகுள் பவள். குடந்தை: குடவாயில் என்பதன் மரூஉ.

(உ - றை.) "திமிற்றொழிலொடு வைகிய தந்தைக்கு இளமகளான வள் மீன்கொண்டு வருதற்கு முன்னே தான் உப்பு விற்ற நெல்லாலே

ஆக்கப்பட்ட மூரல்வெண் சோற்றையும் புளிக் கறியையும் சொரிந்து கொழுமீன் தடியொடு கொடுத்தாற்போலத் தாம் வரைதற்குத் தாமும் புறம்பே முயல, நாங்களும் அறத்தொடு நிலை வகையால் ஈங்கே முயல்வேம் எனச் சொல்லியவாருக்குக" என்றார் குறிப்புரைகாரர்.

(மே - ள்.) [1]"மரபே தானும் நாற்சொல் லியலான் யாப்புவழிப் பட்டன' என்னும் சூத்திரத்து, 'குடவாயில்' என்பதனைக் 'கொற்றச் சோழர் குடந்தை வைத்த' எனவும்......மேலையோர் திரித்த வகை யானே இக் காலத்தும் திரித்துக் கொள்ளப்படுவன உள" என்றார், பேரா.

---

61. பாலை

[தலைமகன் பொருள்வயிற் பிரிய வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.]

நோற்றோர் மன்ற தாமே கூற்றம்
கோளுற விளியார்பிறர் கோளவிளிந் தோரெனத்
தாள்வலம் படுப்பச் சேட்புலம் படர்ந்தோர்
நாளிழை நெடுஞ்சுவர் நோக்கி நோயுழந்து
ஆழல் வாழி தோழி தாழாஅது
உருமெனச் சிலைக்கும் ஊக்கமொடு பைங்கால்
வரிமாண் நோன்ஞாண் வன்சிலைக் கொளீஇ
அருநிறத் தழுத்திய அம்பினர் பலருடன்
அண்ணல் யானை வெண்கோடு கொண்டு
நறவுநொடை நெல்லின் நாண்மகிழ் அயருங்
கழல்புனை திருந்தடிக் கள்வர் கோமான்
மழபுலம் வணக்கிய மாவண் புல்லி
விழவுடை விழுச்சீர் வேங்கடம் பெறினும்
பழகுவ ராதலோ அரிதே முனாஅது
முழவுறழ் திணிதோள் நெடுவேளாவி
பொன்னுடை நெடுநகர்ப் போதினி அன்னநின்
ஒண்கேழ் வனமுலைப் பொலிந்த
நுண்பூண் ஆகம் பொருந்துதல் மறந்தே.

—மாமூலனார்.

---

1. தொல். செய்: உ0.

(சொ - ள்.) க—டு. தோழி வாழி-, நாள் இழை நெடுஞ்சுவர் நோக்கி - தலைவர் பிரிந்த நாளைக் குறித்து வைத்த நீண்ட சுவரினை நோக்கிச் (சென்ற நாட்களை எண்ணியுணர்ந்து), நோய்உழந்து ஆழல்- வருந்தித் துன்பத்து ஆழ்ந்திடாதே, கூற்றம் கோள் உற விளியார் - கூற்றம் கொள்ள (வறிதே) மரியாமல், பிறர் கொள விளிந்தோர்-பிறர் தம் பொருளைக் கொள்ளும்படி மரித்தோர், நோற்றோர் மன்ற - உறுதி யாக நோற்றோராவர், என - என வற்புறுத்தி, தாள் வலம் படுப்ப - ஊக்கத்தினை வெற்றியுறுவிக்க, சேட்புலம் படர்ந்தோர்-சேணிலத்தே வினைவயிற் பிரிந்தோர்;

சு—கஅ. தாழ்ந்து உரும் எனச் சிலைக்கும் ஊக்கமொடு - தாழ்க் காது இடியென ஒலிக்கும் ஊக்கத்துடன், பைங்கால் வரி மாண் நோன் ஞாண் வன்சிலைக் கொளீஇ-பசிய காலும் மாண்புறும் வரியும் உடைய வலிய வில்லில் வலிய நாணினைக் கொளுத்தி, அருநிறத்து அழுத்திய அம்பினர் பலருடன் - பகைவரது அரிய மார்பிற் செலுத்தும் அம்பினை யுடைய இளைஞர் பலருடன், அண்ணல் யானை வெண்கோடு கொண்டு - தலைமை வாய்ந்த யானைகளின் வெள்ளிய கோடுகளைக் கொண்டு, நறவு நொடை நெல்லின் நாண் மகிழ் அயரும் - அக் கோட்டுடன் கள்ளினை விற்றுக் கொண்ட நெல்லால் நாளோலக்கச் சிறப்புச் செய்யும், கழல் புனை திருந்தடிக் கள்வர் கோமான் - கழலினைத் தரித்த திருந்திய அடியினையுடைய கள்வர் பெருமானாகிய, மழபுலம் வணக்கிய-மழவரது நிலத்தை வணங்கச் செய்த, மாவண் புல்லி - மிக்க வண்மையையுடைய புல்லி என்பானது, விழவுடை விழுச்சீர் வேங்கடம் பெறினும் - திரு விழாக்களையுடைய மிக்க சிறப்பு வாய்ந்த திருவேங்கடத்தைப் பெறுவ தாயினும், முனை அது-மிகப் பழைமை வாய்ந்த, முழ உறழ் திணிதோள் நெடுவேள் ஆவி-முழவினை யொத்த வலிய தோளினையுடைய பெரிய வேளாகிய ஆவியின், பொன்னுடை நெடுநகர்ப் பொதினி அன்ன - பொன் மிக்க பெரிய நகரமாகிய பொதினியை ஒத்த, நின் ஒண் கேழ் வனமுலைப் பொலிந்த-நினது ஒளி விளங்கும் அழகிய முலையாற் சிறந்த, நுண்-பூண் ஆகம் பொருந்துதல் மறந்து - நுண்ணிய பூணினை யணிந்த ஆகத்திற் பொருந்துதலை மறந்து, பழகுவர் ஆதலோ அரிது - ஆங்குப் பழகி யிருத்தல் இல்லையாகும்.

(முடிபு) தோழி வாழி! நீ நாள் இழை நெடுஞ்சுவர் நோக்கி நோயுழந்து ஆழல்; சேட்புலம் படர்ந்தோர் புல்லி வேங்கடம் பெறினும் நின் ஆகம் பொருந்துதல் மறந்து பழகுவர் ஆதல் அரிது.

(வி - ரை.) கூற்றங் கோடலுற விளிதலாவது - ஒருவர்க்கும் பயனின்றி வறிதே மரித்தல். பிறர் கொள விளிதல் - பிறர்க்குத் தம் பொருளை உதவிப் பயன்பட்டு மரித்தல். இதற்கு அமர்க்களத்தில் உயிர் துறத்தல் என்று பொருள் கொள்வர், நச். அவர் கருத்தின்படி தலைவன் வினைவயிற் பிரிந்தானும். என-என்று வற்புறுத்தி என ஒரு-

சொல் வருவித்துரைக்க; எனவே உதவி செய்தற்காகப் பொருளீட்ட வேண்டுமென்றார் என்றாளாம். நாள் இழை நெடுஞ்சுவர்-நாடோறும் ஒவ்வொரு கோடாகப் பிரித்த நாட்களிற் கீறிவைத்துள்ள நெடிய சுவர். கால்வினையும் வரியினையுமுடைய சிலையில் ஞாண் கொளீஇ என்க. மழ புலம் வணக்கிய-மழவர் தேயத்தை வணக்கி அவர்பால் திறைகொண்ட. பழகுவராதல் - பயின்று தங்குதல். முனை அது பொதினி என்க; பொதினி - பழனி. நுண் பூண் - நுண்ணிய தொழிலுடைய பூண்.

(மே - ள்.) [1]'நிகழ்ந்தது கூறி நிலையலுந் திணையே' என்னுஞ் சூத்திரத்து, இச்செய்யுளைக் காட்டி, இவ்வகப்பாட்டினுள் மூப்பினும் பிணியினும் இறவாது அமர்க்களத்து வீழ்ந்தாரே துறக்கம் பெறுவரெனத் தன்சாதிக்கேற்பத் தலைவன் புகழும் மானமும் எடுத்து வற்புறத்தலைத் தோழி கூறினாள் என்றார், நச்.

---

62. குறிஞ்சி

[அல்லகுறிப்பட்டுழித் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.]

அயத்துவளர் பைஞ்சாய் முருந்தின் அன்ன
நகைப்பொலிந் திலங்கும் எயிறுகெழு துவர்வாய்
ஆகத் தரும்பிய முலையள் பணைத்தோள்
மாத்தாட் குவளை மலர்பிணைத் தன்ன
மாயிதழ் மழைக்கண் மாஅ யோளொடு
பேயும் அறியா மறையமை புணர்ச்சி
பூசல் துடியில் புணர்புபிரிந் திசைப்பக்
கரந்த கரப்பொடு நாஞ்செலற் கருமையின்
கடும்புனல் மலிந்த காவிரிப் பேரியாற்று
நெடுஞ்சுழி நீத்தம் மண்ணுநள் போல
நடுங்கஞர் தீர முயங்கி நெருநல்
ஆகம் அடைதந் தோளே வென்வேல்
களிறுகெழு தானைப் பொறையன் கொல்லி
ஒளிறுநீர் அடுக்கத்து வியலகம் பொற்பக்
கடவுள் எழுதிய பாவையின்
மடவது மாண்ட மாஅ யோளே.

— பரணர்.

---

1. தொல். அகத். சச.

(சொ - ள்.) கஉ—க. வென்வேல் - வெல்லும் வேலினையும், களிறு கெழு தானைப் பொறையன் - யானைகள் மிக்க படையினையு முடைய சேரனது, கொல்லி ஒளிறு நீர் அடுக்கத்து வியல் அகம் பொற்ப - கொல்லி மலையின் விளங்கும் அருவி நீரினையுடைய பக்க மலையின் அகன்ற இடம் அழகுற, கடவுள் எழுதிய பாவையின்-தெய்வ மாக அமைத்த (கொல்லிப்) பாவையினைப்போன்ற, மடவது மாண்ட மாயோள் - மடப்பத்தாற் சிறப்புற்ற கரியளாய தலைவி;

க—ு. அயத்து வளர் பைஞ்சாய் முருந்தின் அன்ன - நீரில் வளர்ந்த பைஞ்சாய்க் கோரையின் குருத்தினை யொத்த, நகைப் பொலிந்து இலங்கும் எயிறுகெழு துவர்வாய் - ஒளியாற் சிறந்து விளங் கும் பற்கள் பொருந்திய பவளம்போன்ற வாயினையும், ஆகத்து அரும்பிய முலையள் - மார்பில் தோன்றிய முலையினையும் உடையளும், பணைத் தோள்-மூங்கில் போன்ற தோளினையும், மா தாள் குவளை மலர் பிணைத் தன்ன - கரிய தண்டினையுடைய குவளையின் மலர்களை இணைத்து வைத்தாற் போன்ற, மாஇதழ் மழைக்கண் மாயோளொடு - கரிய இமையினையுடைய குளிர்ந்த கரிய கண்களையும் உடையளுமாகிய அவளுடன்;

க—கஉ. பேயும் அறியா மறையமை புணர்ச்சி - பேயும் அறியாத காலத்தே நிகழ்ந்துவந்த மறைவு அமைந்த புணர்ச்சியை; பூசல் துடியின் புணர்பு பிரிந்து இசைப்ப-ஆரவாரமுடைய துடியினைப் போல ஒருகால் இணைந்தும் ஒருகால் தனித்தும் அயலோர் அலர் கூறலால், கரந்த கரப்பொடு நாம் செலற்கு அருமையின் - முன்பு போல் கரந்த ஒழுக்கத்தில் இனி நாம் செல்லுதற்கு அருமை எய்தினமையாற் போலும், கடும்புனல் மலிந்த காவிரிப் பேர் யாற்று - விரைந்தோடும் நீர் மிக்க காவிரி எனும் பேர் யாற்றில், நெடுஞ்சுழி நீத்தம் மண்ணுநள் போல-நெடிது சுழலும் சுழிகளையுடைய வெள்ளத்திற் படிந்து குளிப் பவள் போல, நெருநல் - நேற்று, நடுங்கு அஞர் தீர முயங்கி - உள்ளம் நடுங்கும் துன்பம் போகத் தழுவி, ஆகம் அடைதந்தோள் - ஆகத்திற் பொருந்திக் கிடந்தனள்.

(முடிபு) பொறையன் கொல்லியில் எழுதிய பாவையின் மாண்டமாயோள், துவர்வாய் அரும்பிய முலையள் பணைத்தோள் மழைக்கண் மாயோளாகிய தன்னுடன் மறை அமை புணர்ச்சி, புணர்பு பிரிந்திசைப்ப செலற்கு அருமையின் காவிரி நீத்தம் மண்ணுநள் போல, நெருநல், முயங்கி ஆகம் அடைதந்தோள். (அந்தோ இன்று அல்லதுறப் பட்டோமே.)

(வி - ரை.) மாயோள் எனப் பின்னர் வருதலின், மழைக்கண் மாயோள் என்புழிக் கருமையைக் கண்ணிற்கு ஏற்றுக. பேயும் இயங்காத நள்ளிரவில் நிகழ்ந்ததாதலின் அஃது அறியாததாயிற்று. புணர்வு பிரிந்து எனப் பாடங்கொண்டு, புணர்ந்த காலத்து மேனி அழகாலும் பிரிந்த காலத்து மேனி வேறுபாட்டாலும் இசைப்ப என்றுமாம்; இப்

பொருட்குப் புணர்வு பிரிந்து என்பவற்றைப் புணர்தல் பிரிதல் எனத் தொழிற்பெயராக்குக. நீத்தம் மண்ணுநள் போல முயங்கி-நீத்தத்திற் குளிக்குமிடத்துக் குளிருமாறு போலக் குளிர முயங்கி.

இச்செய்யுள் நச்சினார்க்கினியர் கருத்தின்படி, தலைவன் தோழியை இரப்பதாகும்.

(மே - ள்.) [1]'மெய் தொட்டுப் பயிறல்' என்னும் சூத்திரத்து 'களஞ்சுட்டுக் கிளவி கிழவிய தாகும்' என்பதனால் இச் செய்யுள், தலைவியாற் குறி பெற்றும் தலைவன் தோழியை இரப்பதாகும் என்றும், [2]'தன்னுறு வேட்கை' என்னுஞ் சூத்திரத்து, 'கடும்புனல்...அடைதந் தோளே' என்பது, தலைவி வேட்கையைத் தலைவன் குறிப்பால் உணர்ந் தது என்றும் கூறினர், நச்.

---

63. பாலை

[தலைமகன் புணர்ந்துடன் செல்லச் செவிலி தன் மகளுக்குச் சொல்லியது.]

கேளாய் வாழியோ மகளைநின் தோழி
திருநகர் வரைப்பகம் புலம்ப அவனொடு
பெருமலை இறந்தது நோவேன் நோவல்
கடுங்கண் யானை நெடுங்கை சேர்த்தி
முடங்குதாள் உதைத்த [3]பொலங்கெழு பூழி
பெரும்புலர் விடியல் விருந்துவெயில் எறிப்பக்
கருந்தார் மிடற்ற செம்பூழ்ச் சேவல்
சிறுபுன் பெடையொடு குடையும் ஆங்கண்
அஞ்சுவரத் தகுந கானம் நீந்திக்
கன்றுகா ணாதுபுன் கண்ண செவிசாய்த்து
மன்றுநிறை பைதல் கூரப் பலவுடன்
கறவை தந்த [4]கடுங்கால் மறவர்
கல்லென் சீறூர் எல்லியின் அசைஇ
முதுவாய்ப் பெண்டின் செதுகால் குரம்பை
மடமயில் அன்னஎன் நடைமெலி பேதை
தோள்துணை யாகத் துயிற்றத் துஞ்சாள்

---

1. தொல். களவு: கக. 2. தொல். களவு: உஎ.
(பாடம்) 3. புலங்கெழு பூழி. 4. கடுங்கண் மறவர்.

வேட்டக் கள்வர் விசியுறு கடுங்கண்
சேக்கோள் அறையுந் தண்ணுமை
கேட்குநள் கோல்லெனக் கலுழுமென் நெஞ்சே.

—கருவூர்க் கண்ணம் புல்லனார்.

(சொ - ள்.) க. மகளை வாழியோ - மகளே! வாழ்வாயாக. கேளாய்-;

க—உ. நின் தோழி - நின் தோழியானவள், திரு நகர் வரைப்பு அகம் புலம்ப - அழகிய இல்லின் இடமெல்லாம் தனிமையுற, அவனொடு பெருமலை இறந்தது - அத் தலைவனுடன் பெரிய மலையைத் தாண்டி உடன்போயது பற்றி, நோவேன் - யான் வருந்துகின்றேனல்லேன்;

ச—கூ. கடுங்கண் யானை நெடுங்கை சேர்த்தி - அஞ்சாமையையுடைய யானை நீண்ட கையினை அணைத்து, முடங்கு தாள் உதைத்த - வளைந்த காலால் உதைத்துண்டாக்கிய, பொலம் கெழு பூழி - பொற்றுகள் எழும் புழுதியில், பெரும் புலர் விடியல் - பெரிய இருள் புலர்கின்ற விடியற்காலத்தில், விரிந்து வெயில் எறிப்ப - வெய்யில் மிகுந்து எறிக்க, கருந்தார் மிடற்ற செம்பூழ்ச் சேவல் - கரிய மாலை போன்ற கழுத்தினையுடைய சிவந்த குறும்பூழின் சேவல், சிறு புன் பெடையொடு - தனது சிறிய புல்லிய பெடையுடன், குடையும் ஆங்கண் - குடையும் அவ்விடங்களையுடைய, அஞ்சுவரத் தகுந கானம் நீந்தி - அச்சமுறத் தகுவதாகிய காட்டினைக் கடந்து;

க0—கூ. கன்று காணாது புன்கண்ண செவிசாய்த்து - கன்றுகளைக் காணாமையின் பொலிவற்ற கண்ணினவாய்ச் செவிகளைச் சாய்த்து, மன்று நிறை பைதல் கூர - மன்றில் நிறைவதாலாம் துன்பம் மிக, பலவுடன் கறவை தந்த - பல கறவைகளையும் ஒருங்கே தந்து அடைத்த, கடுங்கால் மறவர் - வேகம் மிக்க காலினராகிய வெட்சி மறவரது, கல்லென் சீறூர் எல்லியின் அசைஇ - கல்லென்னும் ஆரவாரத்தையுடைய சீறூரில் இரவிலே தங்கி;

கச—கூ. முதுவாய்ப் பெண்டின் செதுகால் குரம்பை - முதுமை வாய்த்தலையுடைய பெண்டின் சோர்ந்த காலினையுடைய குடிலிடத்து, மடமயில் அன்ன என் நடைமெலி பேதை - இளைய மயிலை யொத்த நடத்தல் தளர்ந்திட்ட என் பேதைமகள், தோள் துணையாகத் துயிற்றத் துஞ்சாள் - தன் தலைவன் தனது தோளில் அணைத்துத் துயிற்றவும் துயிலாதவளாகி, வேட்டக் கள்வர் - வேட்டம் புரியும் கள்வரது, விசியுறு கடுங்கண் - வாரினை யிழுத்துக் கட்டிய கடிய கண்ணினையுடைய, சேக்கோள் அறையும் தண்ணுமை - ஏறுகளைக் கொள்ளுங்கால் அடிக்கும் பறையின் ஒலியினை, கேட்குநள் கொல் எனக் கலுழும் என் நெஞ்சு - கேட்டு அழுவளோ என நினைந்தழும் என் நெஞ்சினைக் குறித்து;

௯. நோவல் - யான் நோதல் செய்வேன்.

(முடிபு) மகனே! வாழி! கேளாய்! நின் தோழி அவனொடு மலையிறந்தது நோவேன்; யானை உதைத்த பூழி சேவல் பெடையொடு குடையும் ஆங்கண் கானம் நீந்தி மறவர் சீறூர் அசைஇ குரம்பை துஞ்சாள் தண்ணுமை கேட்குநள் கொல்லெனக் கலுழும் நெஞ்சை நோக்கி நோவல்.

(வி - ரை.) வாழியோ, மகனே: ஓவும் ஐயும் அசைகள். பூழியில் குடையும் என்க. வெயிலெறிப்ப - எறிக்கும்பொழுது, மன்று நிறை கறவை எனலுமாம், சேக்கோள் - ஏறுகோடல். கானம் நீந்துதலும் மறவர் சீறூரில் எல்லியில் தங்குதலும் குரம்பையிற் றுயிற்றவும் துஞ்சா திருத்தலும் தண்ணுமை கேட்டலும் ஆகிய இவற்றைக் குறித்துக் கலுழும் நெஞ்சு என்பது கருத்தாகக் கொள்க.

(மே - ள்.) [1]'தன்னுமவனும்' என்னுஞ் சூத்திரத்து, இச்செய்யுள் அச்சம் கூறியது என்பர், நச்.

---

64. முல்லை

[வினைமுற்றி மீளும் தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.]

களையும் இடனால் பாக உளைஅணி
உலகுகடப் பன்ன புள்ளியற் கலிமா
வகையமை வனப்பின் வள்புநீ தெரியத்
தளவுப்பிணி அவிழ்ந்த தண்பதப் பெருவழி
ஐதிலங் ககலிலை நெய்கனி நோன்காழ்
வென்வேல் இளையர் வீங்குபரி முடுகச்
செலவுநாம் அயர்ந்தன மாயின் பெயல
கடுநீர் வரித்த செந்நில மருங்கின்
விடுநெறி ஈர்மணல் வாரணஞ் சிதரப்
பாம்புறை புற்றத் தீர்ம்புறங் குத்தி
மண்ணுடைக் கோட்ட அண்ணல் ஏஎறு
உடனிலை வேட்கையின் மடநாகு தழீஇ
ஊர்வயிற் பெயரும் பொழுதில் சேர்புடன்
கன்றுபயிர் குரல மன்றுநிறை புகுதரும்
ஆபூண் தெண்மணி ஐதியம் பின்னிசை
புலம்புகொள் மாலை கேட்டொறுங்
கலங்கினள் உறைவோள் கையறு நிலையே.

—ஆர்க்காடு கிழார் மகனார் வெள்ளைக் கண்ணத்தனார்.

---

1. தொல். அகத்: ௧௧.

(சொ - ள்.) க. பாக - பாகனே ;

க—ங. உளை அணி-பிடரி மயிரணிந்த, உலகு கடப்பு அன்ன - உலகத்தையே கடத்தல் வல்லது போன்ற, புள் இயல் கலி மா - பறவையையொத்த வேகம் கொண்ட செருக்குடைய குதிரையின், வகையமை வனப்பின் - செலுத்துங் கூறுபாடமைந்த வனப்பினை யுடைய, வள்பு நீ தெரிய-கடிவாள வாரினை நீ ஆராய்ந்துகொள்ள ;

ச—எ. தளவுப் பிணி அவிழ்ந்த தண் பதப் பெருவழி — செம் முல்லையின் அரும்பு விரிந்த குளிர்ந்த செவ்வியைக் கொண்ட பெரு வழியில், ஐது இலங்கு அகல்இலை நெய்கனி நோன்காழ் - அழகிதாக விளங்கும் அகன்ற இலையினையும் எண்ணெய் கனியப்பெற்ற வலிய தண்டினையும் உடைய, வென்வேல் இளையர் - வெற்றி பொருந்திய வேலை ஏந்திய ஏவலர், வீங்கு பரி முடுக - (தாளால் ஏகும்) விரைந்த செலவில் மிகு வேகங்கொள்ள, செலவு நாம் அயர்ந்தனமாயின் - செல்லும் செலவினை நாம் விரும்பினமாயின் ;

எ—கஎ. பெயல கடுநீர் வரித்த செந்நில மருங்கின்-மழையி னுடைய கடுகிய நீர் வரிவரியாக இழைத்த செம்மண் நிலப் பக்கத்தே, விடுநெறி ஈர் மணல் வாரணம் சிதர - தேர்விடும் நெறியிலுள்ள ஈர மணலைக் கானங் கோழி கிளற, பாம்புஉறை புற்றத்து ஈர்ம்புறங் குத்தி - பாம்பு அடங்கிய புற்றின் குளிர்ந்த மேற்புறத்தைக் குத்தி, மண் ணுடைக் கோட்ட - கோட்டு மண்கொண்ட, அண்ணல் ஏறு - தலைமைமேவிய ஏறு, உடன்நிலை வேட்கையின் மடநாகு தழீஇ - (எக்காலத்தும்) தன்னொடு உடனிற்றலை விரும்பிய தனது இளைய பசுவினைத் தழுவிக்கொண்டு, ஊர் வயின் பெயரும் பொழுதில் - ஊரின்கண் மீண்டு வரும் பொழுதில், சேர்பு உடன் கன்று பயிர் குரல மன்று நிறை புகுதரும்-யாவும் ஒருங்கு சேர்ந்து கன்றுகளை அழைக்கும் குரலினவாய்த் தொழுவிலே நிறையப் புகும், ஆ பூண் தெண்மணி ஐது இயம்பு இன்னிசை - ஆக்கள் பூண்டுள தெள்ளிய மணிகளின் அழகிய தாய் இயம்பும் இனிய ஒலியை, புலம்புகொள் மாலை கேட்டொறும் - தனிமையைக் கொண்டுள்ள மாலையிற் கேட்குந்தொறும், கலங்கினள் உறைவோள் கையறு நிலை - கலங்கி யுறைவோளாகிய நம் தலைவியது செயலற்ற நிலையை.

க. களையும் இடன் - நீக்கும் காலம் இதுவேயாகும்.

(முடிபு) பாக, நீ வள்பு தெரிய இளையர் முடுக, நாம் செலவு அயர்ந்தன மாயின், வாரணம் சிதர ஏறு நாகு தழீஇப் பெயரும் பொழுதில், ஆவின் மணி இசை மாலை கேட்டொறும் கலங்கினள் உறைவோள் கையறுநிலை களையும் இடம் இது.

(வி - ரை.) தலைவன் ஊர்ந்து செல்லும் குதிரை பறவை போலும் விரைந்த செலவினதா மென்பது, [1]"வினை வயிற் பிரிந்தோன் மீண்டு

1. தொல். கற்பு: ருடு.

வருங்காலை, யிடைச்சுர மருங்கிற் றவிர்த லில்லை, யுள்ளம் போல வுற்றுழி யுதவும், புள்ளியற் கலிமா வுடைமை யான" எனத் தொல்காப்பியனார் கூறுமாற்றானும் அறிக: ஐதியம்புதல் - நடக்க நடக்க விட்டிசைத்தல் என்றலுமாம்.

(மே - ள்.) [1]'எருமையும் மரையும் பெற்றமும் நாகே' என்னும் சூத்திரத்து, பெற்றத்திற்கு நாகு எனும் பெண்பாற் பெயர் வந்ததற்கு, 'உடனிலை வேட்கையின் மடநாகு தழீஇ' என்பதனை எடுத்துக் காட்டினர், பேரா.

---

65. பாலை

[வேறுபட்ட தலைமகட்குத் தலைமகன் உடன்போக்கு வலித்தமை தோழி சொல்லியது.]

உன்னங் கொள்கையொ டுளங்கரந் துறையும்
அன்னை சொல்லும் உய்கம் என்னதூஉம்
ஈரஞ் சேரா இயல்பின் பொய்ம்மொழிச்
சேரியம் பெண்டிர் கௌவையும் ஒழிகம்
நாடுகண் அகற்றிய உதியஞ் சேரற்
பாடிச் சென்ற பரிசிலர் போல
உவவினி வாழி தோழி அவரே
பொம்மல் ஓதி நம்மொ டொராங்குச்
செலவயர்ந் தனரால் இன்றே மலைதொறும்
மால்கழை பிசைந்த கால்வாய் கூரெரி
மீன்கொள் பரதவர் கொடுந்திமில் நளிசுடர்
வான்றோய் புணரி மிசைக்கண் டாங்கு
மேவரத் தோன்றும் யாஅ உயர் நனந்தலை
உயவல் யானை வெரிநுச்சென் றன்ன
கல்லூர் பிழிதரும் புல்சாய் சிறுநெறிக்
காடுமீக் கூறுங் கோடேந் தொருத்தல்
ஆறுகடி கொள்ளும் அருஞ்சுரம் பணைத்தோள்
நாறைங் கூந்தற் கொம்மை வரிமுலை
நிரையிதழ் உண்கண் மகளிர்க்கு
அரிய வாலென அழுங்கிய செலவே.

—மாமூலனார்

1. தொல். மரபு: ௬௨.

(சொ - ள்.) எ—அ. பொம்மல் ஓதி - பொலிவுற்ற கூந்தலை யுடையாய், தோழி வாழி-, அவரே - நம் தலைவர் ;

க—உ0. மலைதொறும் மால்கழை பிசைந்த கால்வாய் கூர் எரி - மலைகள்தோறும் பெரிய மூங்கில்கள் உரசிக்கொள்வதால் உண்டாகிய காற்று வீசுவதால் மிக்க தீச்சுடர்கள், மீன்கொள் பரதவர் கொடும் திமில் நளி சுடர் - மீன் பிடிக்கும் பரதவர்களது வளைந்த படகில் தோன்றும் மிக்க சுடர்கள், வான்தோய் புணரி மிசைக் கண்டாங்கு - வானளாவிய கடல் அலையின்மீது காணப்படுமாறு, மேவரத் தோன்றும்-பொருந்தத் தோன்றும், யா உயர் நனந்தலை - யா மரங்கள் உயர்ந்துள அகன்ற இடத்தில், உயவல் யானை வெரிநுச் சென்றன்ன பட்டினியால் மெலிந்து வருந்திய யானையின் முதுகில் நடந்து செல்வது போலும், கல் ஊர்பு இழிதரும் புல்சாய் சிறு நெறி - பாறையில் ஏறியும் இறங்கியும் செல்லும் மூங்கில்கள் சாய்ந்த சிறு நெறிகளையுடைய, காடு மீக்கூறும் கோடு ஏந்து ஒருத்தல்-காட்டை மேம்படச் சொலற்குக் காரணமான நிமிர்ந்த கோட்டினையுடைய களிறு, ஆறு கடி கொள்ளும் அருஞ்சுரம்-வழியினைக் காவல் பூண்டிருத்தற்குரிய அரிய சுரநெறிகள், பணைத்தோள் நாறு ஐங்கூந்தல் கொம்மை வரி முலை-மூங்கில் போன்ற தோளினையும் மணம்நாறும் ஐவகைக் கூறுபாடும் அமைந்த கூந்தலினையும் திரண்ட தேமலையுடைய முலையினையும், நிரையிதழ் உண்கண் மகளிர்க்கு-பூப்போலும் மையுண்ட கண்ணினையும் உடைய மகளிர்க்கு, அரிய என அழுங்கிய செலவு - செல்லற்கு அரியவாகும் எனத் தாழ்த்திருந்த போக்கினை ;

அ—க. நம்மொடு ஓராங்குச் செலவு அயர்ந்தனர் - இதுபோது நம்மோடு ஒரு பெற்றியே உடன்செல்ல விரும்பினர் ஆதலின் ;

க—ச. உன்னம் கொள்கையொடு - நம் கருத்தினை உணர்ந்து கொண்ட அறிவுடன், உளங் கரந்து உறையும் - தானறிந்தவற்றைக் கரந்து அவற்றை வெளியிட்டுக் கூறாதே செலுத்துகிற, அன்னை சொல்லும் உய்கம்-அன்னையின் கடுஞ்சொல்லினின்றும் தப்புவோம், என்னதும் ஈரம் சேரா இயல்பின் - சிறிதும் அன்பு பொருந்தாத இயல்பினை யுடைய, பொய்ம்மொழிச் சேரியம் பெண்டிர் - பொய்ம் மொழி கூறும் சேரிப் பெண்டிர்களது, கௌவையும் ஒழிகம்-அலரினையும் நீங்குவோம் ;

இ—எ. நாடு கண் அகற்றிய உதியஞ் சேரல் - தன் நாட்டினைப் பிறர் நாட்டினை வென்று கொண்டமையான் விரிவாக்கிய உதியஞ் சேரலாதனை, பாடிச் சென்ற பரிசிலர் போல-பாடிச் செல்லும் பரிசிலரைப்போல, உவ இனி-இப்பொழுது மகிழ்வாயாக.

(முடிபு) பொம்மலோதி! தோழி! அவர் அருஞ்சுரம் மகளிர்க்கு அரியவாலென அழுங்கிய செலவை இன்று நம்மொடு செல வயர்ந்தனர்; ஆதலின் அன்னை சொல்லும் உய்கம்; சேரிப் பெண்டிர் கௌவையும் ஒழிகம்; உதியஞ் சேரற் பாடிச் சென்ற பரிசிலர் போல இனி உவ.

மலைதோறும் கூரெரி கொடுந்திமிர் நளிசுடர் புணரிமிசைக் கண்டாங்குத் தோன்றும் அருஞ்சுரமெனவும், நனந்தலைச் சிறு நெறி ஒருத்தர் ஆறு கடிகொள்ளும் அருஞ்சுரமெனவும் இயைக்க.

(வி - ரை.) உன்னம் - கருத்து; இஃது உன்னல் என்னும் வினையடியாகப் பிறந்த பெயர். சேரியம் பெண்டிர்: அம்: அசை. யானையின் முதுகின்மேல் சென்றன்ன சிறுநெறி, கல்லூர் பிழிதரு சிறு நெறி என இயையும். புல் - மூங்கில். யானையையுடைய காடு காட்டிற் சிறந்த தென்றூர். யானையுடைமையின் யாவரும் இயங்காமையின், ஒருத்தல் கடி கொள்ளும் சுரம் எனப்பட்டது. வரி - தொய்யிலுமாம். நிரை யிதழ்: நிரைத்த இதழை யுடையது என மலருக்கு ஆகுபெயர்.

(மே - ள்.) [1]'தலைவரும் விழுமம் நிலையெடுத் துரைப்பினும்' என்னுஞ் சூத்திரத்து, 'விடுத்தற் கண்ணும்' என்பதற்கு இச் செய்யுளை எடுத்துக் காட்டி, இஃது உடன்போக்கு நயப்பித்தது என்றனர், இளம்.

இச் சூத்திரத்து, இச் செய்யுளை எடுத்துக் காட்டி[2] 'இதனுள் அன்னை சொல்லும் பெண்டிர் கௌவையும் தலைவரும் விழுமமென்று (தோழி) தலைவிக்குக் கூறினாள்' என்றனர், நச்.

[3]'பெருமையும் சிறுமையும் மெய்ப்பா டெட்டன், வழிமருங் கறியத் தோன்று மென்ப' என்னுஞ் சூத்திரத்து, பாடிச் சென்ற பரிசிலர் போல, உவவினி வாழி தோழி என்பது உவகையுவமை என்றனர், பேரா.

---

66. மருதம்

[பரத்தையிற் பிரிந்த தலைமகற்கு வாயிலாப்புக்க தோழிக்குத் தலைமகள் சொல்லியது.]

இம்மை யுலகத் திசையோடும் விளங்கி
மறுமை யுலகமும் மறுவின் றெய்துப
செறுநரும் விழையுஞ் செயிர்தீர் காட்சிச்
சிறுவர்ப் பயந்த செம்ம லோரெனப்
பல்லோர் கூறிய பழமொழி எல்லாம்
வாயே யாகுதல் வாய்த்தனம் தோழி
நிரைதார் மார்பன் நெருநல் ஒருத்தியொடு
வதுவை அயர்தல் வேண்டிப் புதுவதின்

---

1. தொல். அகத்: ௩௧.   2. தொல். அகத்: ௩௧.
3. தொல். உவம: ௧௧.

இயன்ற அணியன் இத்தெரு இறப்போன்
மாண்டொழின் மாமணி கறங்கக் கடைகழிந்து
காண்டல் விருப்பொடு தளர்புதளர் போடும்
பூங்கட் புதல்வனை நோக்கி நெடுந்தேர்
தாங்குமதி வலவஎன் றிழிந்தனன் தாங்காது
மணிபுரை செவ்வாய் மார்பகஞ் சிவணப்
புல்லிப் பெரும செல்லினி அகத்தெனக்
கொடுப்போற் கொல்லான் கலுழ்தலின் தடுத்த
மாநிதிக் கிழவனும் போன்மென மகனொடு
தானே புகுதந் தோனே யானது
படுத்தனென் ஆகுதல் நாணி இடித்திவன்
கலக்கினன் போலுமிக் கொடியோன் எனச்சென்
றலைக்குங் கோலொடு குறுகத் தலைக்கொண்
டிமிழ்கண் முழவின் இன்சீர் அவர்மனைப்
பயிர்வன போலவந் திசைப்பவும் தவிரான்
கழங்கா டாயத் தன்றுநம் அருளிய
பழங்கண் ணோட்டமும் நலிய
அழுங்கினன் அல்லனோ அயர்ந்ததன் மணனே.

—[1]செல்லூர்க் கோசிகன் கண்ணனார்.

(சொ - ள்.) க—கு. தோழி-, செறுநரும் விழையும் செயிர்தீர் காட்சி - பகைவரும் விரும்பும் குற்றமற்ற அழகினையுடைய, சிறுவர்ப் பயந்த செம்மலோர் - மக்களைப் பெற்ற தலைமையை யுடையோர், இம்மை உலகத்து இசையொடும் விளங்கி - இவ்வுலகத்தே புகழொடும் விளக்கமுற்று, மறுமை யுலகமும் மறுவின்று எய்துப என - மறுமை யுலக வாழ்வினையும் குற்றமின்றி எய்துவர் என்று, பல்லோர் கூறிய பழமொழி யெல்லாம் - பலருங் கூறிய பழைய மொழிகளெல்லாம், வாயே ஆகுதல் வாய்த்தனம் - உண்மையே யாதலைக் கண்கூடாகக் காணப் பெற்றேம்;

எ—கு. நிரைதார் மார்பன் - மலர் வரிசையாலாய மாலையைத் தரித்த மார்பனாகிய நம் தலைவன், நெருநல் - நேற்று, ஒருத்தியொடு வதுவை அயர்தல் வேண்டி - ஒருத்தியை மணம் செய்துகொள்ள விரும்பி, புதுவதின் இயன்ற அணியன் - புதிதாக இயன்ற ஒப்பனை யுடையனாகி, இத்தெரு இறப்போன் - இத் தெருவினைக் கடந்து செல்வோன்;

(பாடம்) 1. செயலூர்க் கோசங் கண்ணனார்.

கo—உ. மாண் தொழில் மா - மாட்சியுற்ற தொழிலிற் சிறந்த (அவனது) குதிரையின், மணி கறங்க-மணி ஒலிக்க (அதனைக் கேட்டு). கடை கழிந்து - தலைவாயிலைக் கடந்து சென்று, காண்டல் விருப்பொடு தளர்பு தளர்பு ஓடும் - (தன்னைக்) காணும் விருப்புடன் தளர்ந்து தளர்ந்து ஓடிவந்த, பூங்கண் புதல்வனை நோக்கி - பூப்போலும் கண்களை யுடைய தன் புதல்வனைக் கண்டு;

கஉ—அ. வலவ நெடுந்தேர் தாங்குமதி என்று - வலவனே நீண்ட தேரினை நிறுத்துவாயாக என்று கூறி, இழிந்தனன் - தேரினின்றும் இறங்கி, தாங்காது - தாழ்க்காது, மணிபுரை செவ்வாய் மார்பகம் சிவணப் புல்லி - (புதல்வனது) பவளமணியினை யொத்த சிவந்த வாய் தனது மார்பகத்தே பொருந்த எடுத்துத் தழுவி, பெரும செல் இனி அகத்தெனக் கொடுப்போற்கு - பெரும! இனி அகத்திற்குச் செல்வா யாக என விடுப்போனுக்கு, ஒல்லான் கலுழ்தலின் - இசையானுகி அழுதலின், தடுத்த மகனொடு மாநிதிக் கிழவனும் போன்மெனப் புகுந்தோனே - அங்ஙனம் தடுத்த மகனொடு இவன் குபேரனும் ஆவான் எனக் கூறி இல்லிற் புகுந்தனன்;

கஅ—உக. யான் அது படுத்தனென் ஆகுதல் நாணி - யான் அதனைச் செய்வித்தேன் ஆதற்கு நாணி, இக் கொடியோன் - இக் கொடிய மகன், இடித்து இவன் கலக்கினன் போலும் என - இவனை இடித்துக் கலக்கமுறுவித்தனன் போலும் என்றுகூறி, அலைக்குங் கோலொடு சென்று குறுக - அடித்தற்குரிய கோலுடன் சென்று அடைய, தலைக்கொண்டு - மகனைத் தன்பா லணைத்துக்கொண்டு;

உஉ-கூ. அவர் மனை - வதுவை நிகழும் அவர் மனையில், இமிழ் கண் முழவின் இன்சீர் - ஒலிக்கும் கண்ணினையுடைய முழவின் இனிய ஓசை, பயிர்வனபோல வந்து இசைப்பவும் - தன்னை அழைப்பனபோல வந்தொலிக்கவும், தவிரான் - தவிராது, கழங்கு ஆடு ஆயத்து அன்று நம் அருளிய - முன்பொருநாள் கழங்கு ஆடும் ஆயத்தாரிடை வந்து நம்மை அருள் செய்த, பழங்கண்ணோட்டமும் நலிய - பழைய அருட் செயலும் வருத்த, அயர்ந்த தன் மணன் - தொடங்கிய தனது மணத் தினை, அழுங்கினன் அல்லனோ - நிறுத்திவிட்டானல்லனோ?

(முடிபு) தோழி, மார்பன் ஒருத்தியொடு வதுவை வேண்டி இத் தெரு இறப் போன், கடைகழிந்து ஓடும் புதல்வனை நோக்கி, தேர் இழிந்தனன் புல்லிக் கொடுப் போற்கு, ஒல்லான் கலுழ்தலின் மகனொடு புகுந்தோன், யான் நாணிக் கோலொடு குறுக, தலைக்கொண்டு அவர்மனை முழவின் இன்சீர் இசைப்பவும் கண்ணோட்டமும் நலிய மணன் அழுங்கினன் அல்லனோ? ஆதலால், பழமொழி வாயேயாதல் வாய்த்தனம்.

சிறுவர்ப் பயந்த செம்மலோர் மறுமின் றெய்துப எனப் பல்லோர் கூறிய பழமொழி என்க.

(வி - ரை.) இம்மை யுலகம் - இவ்வுடம்புடன் வினைப்பயன் நுகரும் உலகம். மறுமை யுலகம் - உயிர் இவ்வுடம்பின் நீங்கிச்சென்று வினைப்பயன் நுகரும் உலகம். மறுவின் றெய்துப என்பதனால் அது நல்லுலகம் என்பது பெற்றும். இன்று - இன்றி; வினையெச்சக் குறிப்பு முற்று. செறுநரும் விழையும் என்னுங் கருத்து "யாவரும் விழையும் பொலங்தொடிப் புதல்வன்" என (16) முன்னர்ப் போந்ததுங் காண்க.

கொடுப்போற்கு - விடுப்போனுக்கு; தன்னைக் குபேரனும் போல் வன் எனக் கண்டார் சொல்லும்படி மகனைடுபுகுதந்தோன் என்றுரைத் தலுமாம். இருவழியும் கிழவனும் என்ற உம்மை எச்சப்பொருட்டு. தான் மகனைப் புறஞ்செல்ல விடுத்தமையால், அவன் அது செய்தான் எனக் கொண்டு, 'யான் அது படுத்தனெனுகுதல் நாணி' என்றாள். அன்று - இயற்கைப் புணர்ச்சிக் காலத்து ஒருநாள், அயர்ந்த மணன் - விரும்பிய மணம் என்றுமாம்.

(மே - ள்.) [1]'பின்முறையாகிய பெரும்பொருள் வதுவைத், தொன் முறை மனைவி எதிர்ப்பாடாயினு, மின்னிழைப் புதல்வனை வாயில் கொண்டு புகினு, மிறந்த துணைய கிழவோ னாங்கட், கலங்கலு முரிய னென்மனார் புலவர்' என்னுஞ் சூத்திரத்திற்கு, இச் செய்யுளை உதாரண மாகக் காட்டினர், இளம்.

[2]'நிகழ்தகை மருங்கின்' என்னுஞ் சூத்திரத்து, 'நிரைதார் மார்ப னெருந லொருத்தியொடு...' என்றது தலைவி புலவிக்கட் புகழ்ந்தது என்றும், [3]'வாயிற்கிளவி' என்னுஞ் சூத்திரத்து, தோழி வாயிலாகச் சென்றுழி, தலைவி வெளிப்படக் கூறுதலுங் கொள்க; அஃது 'இம்மை யுலகு' என்னும் அகப்பாட்டினுட் காண்க என்றும் கூறினர், நச்.

[4]"இன்பத்தை வெறுத்தல் என்னுஞ் சூத்திரத்து, 'மெய்யே யென்றல்' என்றதற்குப் பொய்யை மெய்யென்று கூறுதல் என்று பொருள் கூறி, அது, 'கழுங்காடாயத்து...அயர்ந்ததன் மணனே'; என்பது: தானே தன் மகனை வாயில் கொண்டு புக்கானாயினும், அதனைப் பழங் கண்ணோட்டமும் நலிதரப் பொய்யே புகுந்தானென்று மெய்யாகத் துணிந்து கோடலால் அப்பெயர்த்தாயிற்று என்றார், பேரா.

---

1. தொல். கற்பு: கூக
2. தொல். பொருள்: கூச.
3. தொல். பொருள்: சஎ.
4. தொல். மெய்ப்: உஉ.

67. பாலை

[பொருள்வயிற் பிரிந்தவழி வற்புறுத்துந் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.]

யானெவன் கொய்கோ தோழி பொறிவரி
வானம் வாழ்த்தி பாடவும் அருளாது
உறைதுறந் தெழிலி நீங்கலிற் பறைபுடன்
மரம்புல் லென்ற முரம்புயர் நனந்தலை
அரம்போழ் நுதிய வாளி அம்பின்
நிரம்பா நோக்கின் நிரையங் கொண்மார்
நெல்லி நீளிடை எல்லி மண்டி
நல்லமர்க் கடந்த நாணுடை மறவர்
பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்
பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்
வேலூன்று பலகை [1]வேற்றுமுனை கடுக்கும்
மொழிபெயர் தேஎங் [2]தருமார் மன்னர்
கழிப்பிணிக் கறைத்தோல் நிரைகண் டன்ன
உவலிடு படுக்கை ஆளுகு பறந்தலை
உருவில் பேஎய் ஊராத் தேரொடு
நிலம்படு மின்மினி போலப் பலவுடன்
இலங்குபரல் இமைக்கும் என்பநம்
நலந்துறந் துறைநர் சென்ற ஆறே.

—[3]நோய்பாடியார்

(சொ - ள்.) ௧. தோழி-;

௧௮—அ. நலம் நம் துறந்து உறைநர் சென்ற ஆறு - நமது இன்பத்தைக் கைவிட்டுப் பிரிந்துபோயிருப்பவர் சென்ற நெறி;

௧—௧௪. பொறி வரி வானம் வாழ்த்தி பாடவும் - புள்ளிகளையும் வரிகளையுமுடைய வானம்பாடிப்புள் பாடவும், அருளாது உறை துறந்து எழிலி நீங்கலின் - மேகம் அருள் செய்யாது துளிபெய்தலை நீத்து அகன்று போதலின், பறைபு உடன் மரம் புல் என்ற - மரங்கள் தம் இலைகள் யாவும் கெட்டொழிதலின் பொலிவற்றிருக்கும், முரம்பு உயர் நனந்தலை - கற்குவியல் உயர்ந்துள அகன்ற இடமாகிய, நெல்லி நீளிடை - நெல்லிமரங்களையுடைய நீண்ட இடங்

(பாடம்) 1. வேற்று முனை கடந்து. 2. தருமார் மள்ளர்.
3. நொய்ப்பாடியார்.

களில், எல்வி மண்டி - இருளிலே விரைந்து சென்று, அரம் போழ்நுதிய - அரத்திளுல் அராவப்பட்ட முனையையுடைய, வாளிஅம்பின் - பற்களையுடைய அம்பினையும், நிரம்பா நோக்கின் - இடுக்கிக் குறிபார்க்கும் பார்வையினையு முடையராய், நிரை அம் கொண்மார் - தம் நிரையை மீட்க வேண்டி, நல் அமர் கடந்த - வெட்சியாருடன் நிகழ்ந்த நல்ல போரினை வென்று பட்ட, நாணுடை மறவர் - மானம் மிக்க கரந்தை வீரர்களது, பெயரும் பீடும் எழுதி - பெயரினையும் சிறப்பினையும் பொறித்து, அதர்தொறும் - நெறிதோறும், பீலி சூட்டிய - மயிற்றோகை யணிந்த, பிறங்கு நிலை நடுகல் - விளங்கும் நிலை மேவிய நடுகல்லானவை, வேல் ஊன்று பலகை - ஊன்றிய வேலும், சார்த்திய பலகையுங் கொண்டு, வேற்று முனை கடுக்கும் - பகைவருடன் போர்செய்யும் முனைப் புலத்தை யொக்கும், மொழி பெயர் தேஎம் தருமார் - வேற்றுமொழி வழங்கும் தேயத்தைக் கொள்ள வேண்டிச் செல்லும், மன்னர் - மன்னர்களது, கழிப்பிணிக் கறைத்தோல் நிரை கண்டன்ன - கழியாற் பிணிக்கப்பட்ட கரிய பரிசையின் நிரையினைக் கண்டாலொத்த, உவல் இடு பதுக்கை ஆள் உகு பறந்தலை - மரித்த ஆட்களை இட்டுத் தழைகளைக் கொண்டு மூடிய கற்குவியல்களையுடைய பாழிடத்தே;

கஉ—எ. உரு இல் ஊராப் பேய்த் தேரொடு - உரு இல்லாத ஊர்ந்திடப் பெருத பேய்த்தேருடன், நிலம்படு மின்மினிபோல - நிலத்தே பொருந்திய மின்மினிப் பூவைப்போல, பலவுடன் இலங்கு பரல் இமைக்கும் - விளங்கும் பரற்கற்கள் பலவும் ஒருங்கு ஒளிவிடும், என்ப - என்று கூறுவர்;

க. யான் எவன் செய்கோ - யான் என் செய்வேனோ ?

(முடிபு) தோழி! நம் நலம் துறந்து உறைநர் சென்ற ஆறு, பறந்தலையில் ஊராத் தேரொடு பரல் இமைக்கும் என்ப; யான் எவன் செய்கோ? எழிலி நீங்கலின் மரம் புல்லென்ற நனந்தலை நீளிடை எல்வி மண்டிக் கடந்த மறவர் பெயரும் பீடும் எழுதிப் பீலி சூட்டிய நடுகல் வேலூன்று பலகை வேற்றுமுனை கடுக்கும் தேஎம் எனவும், தேஎம் தருமார் மன்னர் தோல் நிரை கண்டன்ன பதுக்கைப் பறந்தலை எனவும் கூட்டுக.

(வி - ரை.) போழ்தல் - ஈங்கு அராவுதல், வாளி அம்பு - எயிற்றம்பு. நிரையம்: அம், அசை. நிரயம் கொண்மார் என்பது பாடமாயின், நரகம்புகுவார் என்ருதல், நரகத்தை அடையவேண்டி என்ருதல் கொள்க. நிரை மீட்கும் போராதலின் 'நல்லமர்' என்ருர். இது தன்னுறு தொழில் கடந்த - வென்று இறந்த என்றபடி. வேற்று முனையிடத்தும் வேலும் பலகையும் உண்மையின் வேற்று முனை கடுக்கும் என்ருர். வேற்று முனை கடந்து என்பது பாடமாயின், நடுகல் முதலியவற்றையுடைய வேற்று முனையைக் கடந்து சென்ற ஆறு என இயையும். பதுக்கைகள் தோலின் நிரையை ஒக்கும் என்க; உருவில்லாத பேய்

என்க. பேய்த்தேராகிய ஊராத் தேர் என்க. ஊராத் தேர் வெளிப்படை. நச்சினார்க்கினியர் இதனைத் தோழி கூற்றாகக் கொள்வர்.

(மே - ள்.) ¹"நிகழ்ந்தது கூறி நிலையலும் திணையே" என்னுஞ் சூத்திரத்து, இச் செய்யுள் மண்டிலத் தருமை தலைவன் கூறக் கேட்ட தோழி கூறியது என்றார், நச்.

---

68. குறிஞ்சி

[தலைமகன் இரவுக்குறி வந்தமையறிந்த, தோழி தலைமகட்குச் சொல்லியது.]

அன்னாய் வாழிவேண் டன்னைநம் படப்பைத்
தண்ணயத் தமன்ற கூதளங் குழைய
இன்னிசை அருவிப் பாடும் என்னதூஉங்
கேட்டியோ வாழிவேண் டன்னைநம் படப்பை
ஊட்டி அன்ன ஒண்டளிர்ச் செயலை
ஓங்குசினைத் தொடுத்த ஊசல் பாம்பென
முழுமுதல் துமிய உருமெறிந் தன்றே
பின்னும் கேட்டியோ எனவுமஃ தறியாள்
அன்னையும் கனைதுயில் மடிந்தனள் அதன்றலை
மன்னுயிர் மடிந்தன்றால் பொழுதே காதலர்
வருவ ராயின் பருவம் இதுவெனச்
சுடர்ந்திலங் கெல்வளை நெகிழ்ந்த நம்வயின்
படர்ந்த உள்ளம் பழுதன் றாக
வந்தனர் வாழி தோழி அந்தரத்து
இமிழ்பெயல் தலைஇய இனப்பல கொண்மூத்
தவிர்வில் வெள்ளம் தலைத்தலை சிறப்பக்
கன்றுகால் ஒய்யும் கடுஞ்சுழி நீத்தம்
புன்றலை மடப்பிடிப் பூசல் பலவுடன்
வெண்கோட் டியானை விளிபடத் துழவும்
அகல்வாய்ப் பாந்தட் படாஅர்ப்
பகலும் அஞ்சும் பனிக்கடுஞ் சுரனே.

—ஊட்டியார்.

---

1. தொல். அகத் : சச.

(சொ - ள்.) கச. தோழி வாழி-, (நாம் நம்அன்னையை நோக்கி அவள் துயிலுதலை உணர்ந்துகொள்ள ;)

க—ச. அன்னாய் வாழி வேண்டு அன்னை - அன்னையே வாழ்வாயாக, அன்னையே நான் கூறுவதை விரும்பிக் கேட்பாயாக, நம் படப்பைத் தண் அயத்து அமன்ற - நம் தோட்டத்திலுள்ள குளிர்ந்த பள்ளத்தே நிறைந்த, கூதளம் குழைய - கூதளஞ் செடியின் தழைகளின் கண்ணே விழும், இன்னிசை அருவிப் பாடும் - இனிய இசையையுடைய அருவி யொலியும், என்னதூஉம் கேட்டியோ - சிறிதேனும் கேட்டாயோ (எனவும்);

ச—அ. பின்னும் - மற்றும், வாழி வேண்டு அன்னை-, நம் படப்பை - நம் தோட்டத்திலுள்ள, ஊட்டி யன்ன ஒண் தளிர்ச் செயலை - அரக்கு ஊட்டினாற்போலும் ஒள்ளிய தளிரினையுடைய அசோகினது, ஓங்குசினைத் தொடுத்த-ஓங்கிய கிளையிற் கட்டிய, ஊசல் பாம்பென - ஊசற் கயிற்றினைப் பாம்பெனக் கருதி, முழுமுதல் துமிய உரும் எறிந்தன்றே - (அம்மரத்தின்) பெரிய அடியும் துணிபட இடி வீழ்ந்தது; கேட்டியோ எனவும் - அதனை நீ கேட்டாயோ என்று கூறவும் ;

அ—க. அஃது அறியாள் அன்னையும் கனைதுயில் மடிந்தனள்-அக்கூற்றினை அறியாளாய் அன்னையும் மிக்க துயிலில் அழுந்தியுள்ளாள் ;

க—க0. அதன்றலை மன்னுயிர் மடிந்தன்றால் பொழுதே - அதன் மேலும் அந்நேரம் ஏனை உயிர்களும் துயிலப் பெற்றிருந்தது ;

க0—௩. காதலர் வருவராயின் பருவம் இதுவென - நம் காதலர் வருவராயின் அதற்குரிய அமையம் இஃதாகுமென, சுடர்ந்து இலங்கு எல்வளை நெகிழ்ந்த நம்வயின் - விட்டு விளங்கும் ஒளியுடைய வளை கழன்றிடும் நம்மிடத்து, படர்ந்த உள்ளம் பழுது அன்றாக - மேவிய தமது உள்ளம் குற்ற மற்றதாக ;

கச—உக. அந்தரத்து -வானிடத்தே, இமிழ் பெயல் தலைஇய இனப் பல கொண்மூ - இடித்ததுடன் பெய்தலைச் செய்த கூட்டமாய பல மேகங்கள், தவிர்வு இல் வெள்ளம் தலைத்தலை சிறப்ப-நீங்குதவில்லாது (பெய்தமையால்) எழுந்த வெள்ளங்கள் இடந்தோறும் மிகுதலால், கன்று கால் ஒய்யும் கடுஞ் சுழி நீத்தம் - யானைக்கன்றின் கால்களை இழுத்துச் செல்லும் கடிய சுழியினையுடைய வெள்ளத்தில், புன்தலை மடப்பிடிப் பூசல் பலவுடன் - மெல்லிய தலையினையுடைய இளைய பெண்யானைகளின் ஆரவாரங்கள் பலவுடன், வெண்கோட்டு யானை விளிபடத் துழவும் - வெள்ளிய கொம்பினையுடைய களிறுகள் தாம் அழைக்கும் ஒலியும் சேரத் தடவிக் கொண்டிருப்பதும், அகல் வாய்ப் பாந்தள் படாஅர் - அகன்ற வாயினையுடைய பாம்புச் செடியினையுடையதும் ஆகிய, பகலும் அஞ்சும்-பகற்பொழுதினும் அஞ்சப்படும்,

பனிக் கடுஞ்சுரம் - மிக்க நடுக்கத்தினைச் செய்யும் சுரநெறியில், வந்தனர் - வந்துள்ளார்.

(முடிபு) தோழி; வாழி! 'அன்னாய் வாழி! கேட்டியோ' எனவும், பின்னும், 'கேட்டியோ' எனவும், நம் அன்னை அரியாள் கனைதுயில் மடிந்தனள்; அதன்றலை மன்னுயிர் மடிந்தன்று பொழுது; காதலர் வருவராயிற் பருவம் இதுவென நெகிழ்ந்த நம்வயின் படர்ந்த உள்ளம் பழுதன்றாக, சுரம் தலைவர் வந்தனர்.

(வி - ரை.) என்னதும் - சிறிதும். 'பின்னுங் கேட்டியோ எனவும்' என்பதிலுள்ள எனவும் என்பதனை என்னதூஉங் கேட்டியோ எனவும் என முன்னரும் வருவித் துரைக்க. அன்னையின் துயில் நிலையை உணரக் கருதியவள் அருவி யோசையைக் கேட்டாயோ என முதலிற் கூறிப் பின்பு அதனினும் துணுக்கத்தினை விளைக்கத்தக்கதாக இடியோசையைக் கேட்டாயோ என்று உரைத்தாள். 'அன்னாய் வாழி வேண்டன்னை' என இருமுறையும் அடுக்கி விளிப்பதும் அவளது துயிலின் பெற்றியை அறிதற் பயத்ததே யாகும். ஒருவாற்றானும் அவள் உணர்ந்தெழாமையின் 'கனைதுயில் மடிந்தனள்' என்றாள். கனை துயில் மடிதல் தூக்கத்தில் ஆழ்ந்து விடுதல். இதனால் தாய் துஞ்சுதலும், மன்னுயிர் மடிந்தன்றாற் பொழுது என்பதனால், ஊர், காவலர், நாய் முதலியவை துஞ்சுதலும் கூறினாள். ஒய்தல் - செலுத்துதல். வெள்ளத்தில் கன்று இழுக்கப்படுதலால் பிடியும் களிறும் முறையே பூசல் செய்து, விளித்துத் துழவின. பாந்தட் படார் - பாம்புபோலும் இயல்பினையுடைய ஒரு செடி. யானை துழவுதலானும் பாந்தட் படாரை யுடைமையானும் சுரம் பகலினும் அஞ்சப்படுவதாயிற்று. துழவும் சுரம், படாரையுடைய சுரம், அஞ்சும் சுரம் எனத் தனித்தனி இயையும். இனி, பிடியின் பூசலும்; யானையின் விளியும் உண்டாகக் கேட்டு, அவற்றை உண்டற்குத் துழாவுகின்ற பெரும் பாம்புகள் பொருந்திய காட்டினையுடைய சுரம் என்று உரைத்தலும் ஆம். இப் பொருட்குப் படார் என்பது காடு என்னும் பொருளதாகும். பாம்பு யானையை உண்ணவல்லது என்பதை [1]'இடிகொள் வேழத்தை யெயிற்றொடுமெடுத்துடன் விழுங்கும், கடிய மாசுணம்' என்பதனானும் அறிக.

(உ - றை.) 'யானைகளும் கன்று காரணமாகப் பிடி வருந்திய பின்பு எடுக்க முயன்றாற்போல, அவரும் அலரானும் வழிய தநமை யானும் நாம் நலனழிந்த பின்பு வரைய முயலுவதல்லது முன்பு முயலாரென்பது' என்றது குறிப்புரை.

(மே - ள்.) [2]'குறித்தோன் கூற்றம் தெரித்து மொழி கிளவி' என்னுஞ் சூத்திரத்து 'ஊட்டியன்ன வொண்டளிர்ச் செயலை'' என்புழி இன்னதனை யென்று தெரித்து மொழியாமையின் வழுவாம் பிற

1. கம்ப. சித்திரகூடம்: ௩௫. 2. தொல். கிளவி: ௫௬.

வெனின், உவமை யென்னும் அலங்காரமாயினன்றே இன்னதொன்றனை யெனல் வேண்டுவது, செயலையந் தளிரினது செய்யாத நிறத்தைச் செய்ததுபோலக் கூறுங் கருத்தினனாதலிற் பிறிதோர் அலங்காரமாம்" என்றார் சேனாவரையர்; ஊட்டாததனை யூட்டியதுபோலக் கூறலின் வேறோர் உவமை யிலக்கணமாம் என்பர் நச்சினார்க்கினியர். [1]'நாற்றமும் தோற்றமும்' என்னும் தோழி கூற்று உணர்த்தும் சூத்திரத்து இச் செய்யுளை எடுத்துக்காட்டி, இது தாயது துயிலுணர்ந்து தலைவன் வந்தமை தோழி தலைவிக்குக் கூறிக் குறிவயிற் சென்றது என்றனர், நச்.

---

69. பாலை

[பொருள்வயிற் பிரிந்து நீட்டித்தான் தலைமகன் எனக் கவன்ற தலைமகட்கு வருவர் என்பதுபடச் சொல்லித் தோழி ஆற்றுவித்தது.]

ஆய்நலந் தொலைந்த மேனியும் மாமலர்த்
தகைவனப் பிழந்த கண்ணும் வகையில
வண்ணம் வாடிய வரியும் நோக்கி
ஆழல் ஆன்றிசின் நீயே உரிதினின்
ஈதல் இன்பம் வெஃகி மேவரச்
செய்பொருட் டிறவ ராகிப் புல்லிலைப்
பராரை நெல்லி அம்புளித் திரள்காய்
கான மடமரைக் கணநிரை கவரும்
வேனில் அத்தம் என்னாது ஏமுற்று
விண்பொரு நெடுவரை இயல்தேர் மோரியர்
பொன்புனை திகிரி திரிதரக் குறைத்த
அறையிறந் தகன்றனர் ஆயினும் எனையதூஉம்
நீடலர் வாழி தோழி ஆடியல்
மடமயில் ஒழித்த பீலி வார்ந்துதம்
சிலைமாண் வல்விற் சுற்றிப் பலமாண்
அம்புடைக் கையர் அரண்பல நூறி
நன்கலந் தரூஉம் வயவர் பெருமகன்
சுடர்மணிப் பெரும்பூண் ஆஅய் கானத்துத்
தலைநாள் அலரி நாறுநின்
அலர்முலை ஆகத் தின்றுயில் மறந்தே.

—உமட்டூர்கிழார் மகனார் பரங்கொற்றனார்.

---

1. தொல். களவு: ௨௩.

(சொ - ள்.) ௧௩. வாழி தோழி-;

௧—௪. நீ-, ஆய் நலம் தொலைந்த மேனியும் - ஆராயும் அழகு தொலைந்த மேனியினையும், மாமலர்த் தகைவனப்பு இழந்த கண்ணும் - கரிய மலரின் சிறந்த அழகினை இழந்த கண்ணினையும், வகை இல வண்ணம் வாடிய வரியும் - முன்னை யியல்பு இலவாய் அழகு வாடின திதலையையும், நோக்கி ஆழல் ஆன்றிசின் - நோக்கித் துயரில் அழுந்தாதேகொள்;

௪—௬. உரிதினின் ஈதல் இன்பம் வெஃகி - (நம்காதலர்) ஈதலால் எய்தும் இன்பம் தமக்கு உரிமையாக விரும்பி, மேவர - அது வந்துற, செய்பொருள் திறவராகி - செய்யும் பொருள் வகையராகி;

௬—௯. புல்இலை பரு அரை நெல்லி அம் புளித் திரள்காய் - சிறிய இலையினையும் பரிய அடியினையும் உடைய நெல்லியின் இனிய புளிப்பினையுடைய திரண்ட காயினை, கானம் மடநிரைக் கண நிரை கவரும், கானத்தே யுள்ள இளைய மரைமானின் மிக்க கூட்டம் தின்னும், வேனில் அத்தம் என்னாது - வெம்மை மிக்க நெறி என்று நினையாது, ஏமுற்று - மயக்கமுற்று;

௧0—௨. விண்பொரு நெடுவரை இயல் தேர் மோரியர் - விண்ணை அளாவும் நீண்டுயர்ந்த பெருமலைகளில் செல்லும் தேரினையுடைய மோரியர், பொன்புனை திகிரி திரிதர - தங்கள் பொன்னாலியன்ற உருள் (தடையின்றிச்) செல்ல, குறைத்த அறை இறந்து அகன்றனராயினும்- வெட்டி நெறியாக்கிக்கொண்ட குன்றங்களைக்கடந்து சென்றாராயினும்;

௧௩—௨0. ஆடு இயல் மடமயில் ஒலித்த பீலி வார்ந்து - ஆடும் இயல் வாய்ந்த இளைய மயில் நீக்கிய தோகையை உரித்து, தம் சிலை மாண் வல் வில் சுற்றி - தமது ஓசை மிக்க வலிய வில்லில் சுற்றி, பல மாண் அம்புடைக் கையர்-பலவாகிய மாட்சியுற்ற அம்புடைய கையினராய், அரண் பல நூறி - பகைவர் அரண்கள் பலவற்றை அழித்து, நன்கலம் தரூஉம் - நல்ல அணிகலன்களைக் கொணரும், வயவர் பெருமகன் சுடர்மணிப் பெரும்பூண் ஆஅய் கானத்து - வீரர்கள் பெருமானாகிய சுடரும் மணிகள் பதித்த பெரும் பூணினை அணிந்த ஆய் என்பானது காட்டில், தலைநாள் அலரி நாறும் - அன்றலர்ந்த மலரென மணக்கும், நின் அலர் முலை ஆகத்து இன் துயில் மறந்து - நினது பரந்த முலையினையுடைய மார்பின் கண்ணே துயிலும் இனிய துயிலினை மறந்து;

௨௨—௩. எனையதும் நீடலர் - சிறிதும் தாழ்த்திரார்.

(முடிபு) தோழி வாழி, மேனியும் கண்ணும் வரியும் நோக்கி, ஆழல் ஆன்றிசின் நம் தலைவர் ஈதல் இன்பம் வெஃகிச் செய்பொருட்டிறவராகி, அத்தம் என்னாது ஏமுற்று மோரியர் குறைத்த அறையிறந் தகன்றனராயினும், ஆய் கானத்து அலரி நாறும் நின் அலர்முலையாகத் தின் துயில் மறந்து எனையதும் நீடலர்.

(வி - ரை.) ஆன்றிசின் - அசைநிலை. ஈதலால் இன்ப முண்டாகு மென்பதனை, [1]'ஈத்துவக்கும் இன்பம்' என்பதனால் அறிக. செய்பொருட் டிறவர் - பொருள் செய்யும் கூற்றினர். மோரியர் வடநாட்டின்கண் ணிருந்த அரச வகுப்பினர். இவர்கள் சில பகைவரோடு போர் கருதித் தெற்கே சென்ற காலை, குறுக்காக நின்றதொரு மலையைத் தேருருள் செல்லுமாறு குறைத்து வழிசெய்துள்ளார் என்ற வரலாறு, 'தம்முனை சிதைத்த ஞான்றை மோகூர், பணியா மையிற் பகைதலை வந்த, மாகெழு தானை வம்ப மோரியர், புனைதேர் நேமி யுருளிய குறைத்த, இலங்குவெள் ளருவிய வறைவா யும்பர்' (உருக) எனவும், 'முரண்மிகு வடுகர் முன்னுற மோரியர், தென்றிசை மாதிரம் முன்னிய வரவிற்கு, விண்ணுற வோங்கிய பனியிருங் குன்றத், தொண்கதிர்த் திகிரி யுருளிய குறைத்த, அறையிறந் தவரோ சென்றனர்' (உஅக) எனவும் இந்நூலுள்ளும், [2]'வென்வேல், வெண்பொரு நெடுங்குடைக் கொடித்தேர் மோரியர், திண்கதிர்த் திகிரி திரிதரக் குறைத்த, உலக விடைகழி யறைவாய்நிலைஇய' எனப்புறநானூற்றிலும்வருவனவற்றான் அறியப்படும். சிலை - ஒரு மரமுமாம். நன்கலம் தரூஉம் - பெற்ற கலன்களைப் பாணர் முதலாயினர்க்குத் தரும் என்றுமாம்.

---

70. நெய்தல்

[தலைமகன் வரைவு மலிந்தமை தோழி தலைமகட்குச் சொல்லியது.]

கொடுந்திமிற் பரதவர் வேட்டம் வாய்த்தென
இரும்புலாக் கமழும் சிறுகுடிப் பாக்கத்துக்
குறுங்கண் அவ்வலைப் பயம்பா ராட்டிக்
கொழுங்கண் அயிலை பகுக்குந் துறைவன்
நம்மொடு புணர்ந்த கேண்மை முன்னே
அலர்வாய்ப் பெண்டிர் அம்பல் தூற்றப்
பலருமாங் கறிந்தனர் மன்னே இனியே
வதுவை கூடிய பின்றைப் புதுவது
பொன்வீ ஞாழலொடு புன்னை வரிக்கும்
கானலம் பெருந்துறைக் கழனி மாநீர்ப்
பாசடைக் கலித்த கணைக்கால் நெய்தல்
விழவணி மகளிர் தழையணிக் கூட்டும்
வென்வேற் கவுரியர் தொன்முது கோடி
முழங்கிரும் பௌவம் இரங்கும் முன்றுறை

---

1. குறள்: உஉஅ. 2. புறம்: கஎரு.

வெல்போர் இராமன் அருமறைக் கவித்த
பல்வீழ் ஆலம் போல
ஒலியவிந் தன்றிவ் வழுங்கல் ஊரே.

—மதுரைத் தமிழ்க் கூத்தனார் கடுவன் மள்ளனார்.

(சொ - ள்.) ௧—௪. கொடுந் திமில் பரதவர் - வளைந்த படகினையுடைய பரதவர், வேட்டம் வாய்த்தென - மீன்வேட்டை நன்கு கைகூடிற்றாக, இரும் புலாக் கமழும் - பெரிய புலால் நாற்றம் வீசும், சிறுகுடிப் பாக்கத்து - சிறிய குடிகளையுடைய கடற்கரையூரில், குறுங்கண் அவ்வலைப் பயம் பாராட்டி-குறுகிய கண்களையுடைய அழகிய வலையின் பயனைப் பாராட்டிக் கூறி, கொழுங்கண் அயிலை பகுக்கும் துறைவன் - கொழுவிய கண்களையுடைய அயிலைமீனை யாவர்க்கும் பகுத்துக்கொடுக்கும் துறைவன், நம்மொடு புணர்ந்த கேண்மை - நம்முடன் கொண்ட காதல் நட்பு, முன்னே - முன்பு, அலர்வாய்ப் பெண்டிர் அம்பல் தூற்ற - அலர் கூறும் வாயினையுடைய பெண்டிர் அம்பலாக்கிப் பரப்ப, பலரும் ஆங்கு அறிந்தனர் - அவ்விடத்துப் பலர் அறிவாராயினர், மன் - அது கழிந்தது;

௭—௮. இனி - இப்பொழுது, வதுவை கூடிய பின்றை - மணம் கூடிய பிறகு;

௮—௧௫. புதுவது பொன் வீ ஞாழலொடு புன்னை-புலிநகக்கொன்றையின் புதிய பொன்னிறப் பூக்களுடன் புன்னைப் பூக்கள் உதிர்ந்து, வரிக்கும் - ஓவியம் வரைந்தாற்போல் அழகு செய்யும், கானல் அம் பெருந்துறை - கடற்கரைச் சோலையையுடைய அழகிய பெருந்துறைகளில், கழனி மா நீர் பாசடைக் கலித்த கணைக்கால் நெய்தல் - வயல்களில், கரிய நீரில் பசிய இலைகளையுடைய தழைத்த திரண்ட தண்டினையுடைய நெய்தற் பூக்களை, விழவு அணி மகளிர் தழையணிக் கூட்டும் - விழாவிற்கு ஒப்பனை செய்யும் மகளிர்கள் தங்கள் தழையுடைக்கு அணிசெயச் சேர்க்கும், வென்வேற் கவுரியர் - வெற்றி வேலினையுடைய பாண்டியரது, தொல்முது கோடி - மிக்க பழைமையுடைய திருவணைக் கரையின் அருகில்; முழங்கு இரும்பௌவம் இரங்கும் முன்துறை-முழங்கும் இயல்பினதான பெரிய கடலின் ஒலிக்கின்ற துறைமுற்றத்தில், வெல்போர் இராமன் அருமறைக்கு அவித்த - வெல்லும் போரினில் வல்ல இராமன் அரிய மறையினை ஆய்தற் பொருட்டாகப் புட்களின் ஒலி இல்லையாகச் செய்த, பல்வீழ் ஆலம்போல - பல விழுதுகளைக் கொண்ட ஆலமரம் போல, இவ் அழுங்கல் ஊர் ஒலி அவிந்தன்று - இந்த ஆரவாரமுடைய ஊர் ஒலியடங்கப் பெற்றது.

(முடிபு) துறைவன் கேண்மை, பெண்டிர் அம்பல் தூற்ற, (முன்பு) பலரும் அறிந்தனர்; இனியே, வதுவை கூடிய பின்றை, இராமன் அருமறைக்கு அவித்த ஆலம் போல இவ்வழுங்கலூர் ஒலியவிந்தன்று.

(வி - ரை.) பலரும்: உம் - அசை. மன்: கழிவின்கண் வந்தது. தழையணிக் கூட்டும் - தழை அணிக்குக் கூட்டும் என்க. இராமன் இலங்கைமேற் செல்லுதற் பொருட்டுத் திருவணைக்கரையின் ஞாங்க ரிருந்த பெரிய ஆலமரத்தின் கீழ், தமக்குத் துணைவராயினரோடு, மறைகளைச் சூழுங்கால், ஆங்குள்ள பறவைகள் ஒலிக்காதவாறு தன் ஆணையால் அடக்கினன் என்றதொரு வரலாறு கூறப்பட்டது.

(உ - றை.) "பரதவர் தம்முயற்சியானே வேட்டை வாய்த்ததாகி லும், குறுங்கண் வலையைப் பாராட்டி அம் முயற்சியாலுண்டான அயிலை யைக் கடலினின்றும் நீக்கி, எல்லார்க்கும் பகுத்துக்கொடுத்து மகிழ் வித்தாற் போல, அவரும் தம்முடைய முயற்சியானே வதுவை கூடிற் றாயினும், அதற்குத் துணையாக நின்ற என்னைக் கொண்டாடி, நின்னைப் பெரிய இச் சுற்றத்தினின்றும் கொண்டுபோய்த் தம்மூரின் கண்ணே நின்னைக் கொண்டு விருந்து புறந்தந்து தம்மூரை யெல்லாம் மகிழ் விப்பர் என்றவாறு."

"நெய்தற்பூவானது, ஞாழலும் புன்னையுங் கரையிலே நின்று தாதை யுதிர்த்துப் புறஞ்சூழ, நீரிடத்துத் தன்னை விடாதே அலைகள் சூழ நடுவே நின்று செருக்கி வளர்ந்து பின்னை விழவணி மகளிர் அல்கு லுக்குத் தழையாய்ப் பயன்பட்டாற்போல, இருமுதுகுரவர் புறங்காப்ப ஆயவெள்ளத்தார் மெய்யை விடாதே சூழ்ந்து புறங்காப்ப, இப்படிச் செல்வத்தால் வளர்ந்த நீயும் நம் பெருமானுடைய இல்லறமாகிய பிரி விற்குத் துணையாகப் போகா நின்றாயன்றோ வென்று வியந்து கூறிய வாறு."

---

71. பாலை

[பொருள்வயிற் பிரிந்தவிடத்து ஆற்றாளாய தலைமகட்குத் தோழி சொல்லியது.]

நிறைந்தோர்த் தேரும் நெஞ்சமொடு குறைந்தோர்
பயனின் மையிற் பற்றுவிட் டொரூஉம்
நயனின் மாக்கள் போல வண்டினம்
சுனைப்பூ நீத்துச் சினைப்பூப் படர
மையின் மானினம் மருளப் பையென
வெந்தாறு பொன்னின் அந்தி பூப்ப
ஐயறி வகற்றுங் கையறு படரோ
டகலிரு வானம் அம்மஞ் சீனப்
பகலாற்றுப் படுத்த பழங்கண் மாலை
காதலர்ப் பிரிந்த புலம்பின் நோதக

ஆரஞர் உறுநர் அருநிறஞ் சுட்டிக்
கூரெஃ கெறிஞரின் அலைத்தல் ஆனாது
எள்ளற இயற்றிய நிழல்காண் மண்டிலத்
துள்ளூ தாவியிற் பைப்பய நுணுகி
மதுகை மாய்தல் வேண்டும் பெரிதழிந்
திதுகொல் வாழி தோழி என்னுயிர்
விலங்குவெங் கடுவளி எடுப்பத்
துளங்குமரப் புள்ளில் துறக்கும் பொழுதே.

—அந்தி யிளங்கீரனார்

(சொ - ள்.) கசு. தோழி வாழி-;

க—ச. நிறைந்தோர் தேரும் நெஞ்சமொடு - செல்வம் நிறைந்தோரை ஆராய்ந்தடையும் உள்ளத்தால், குறைந்தோர் பயன் இன்மையின் - செல்வம் குறைந்தோரால் பயன் அடைதல் இன்மையின், பற்றுவிட்டு ஒரூஉம் - அவர்பா லிருந்த பற்றினை யொழித்து நீங்கும், நயன் இல் மாக்கள் போல - நடுநிலை இல்லா மக்களைப்போல, வண்டினம் சுனைப்பூ நீத்துச் சினைப்பூப் படர - வண்டின் கூட்டங்கள் சுனைப்பூக் களை ஒழித்துச் சினைப்பூக்களை யடையவும் ;

டு—கூ. மையில் மான் இனம் மருள - குற்றமற்ற மான் கூட்டம் வருந்தவும், பையென வெந்துஆறு பொன்னின் அந்தி பூப்ப-உலையிற் காய்ந்து மெல்லென ஆறிவரும் பொன்னின் நிறம்போலச் செக்கர் வானம் பூத்தலைச் செய்யவும், ஐ அறிவு அகற்றும் கையறு படரோடு - வியக்கத்தக்க அறிவினைப் போக்கும் செயலற்ற துன்பத்துடன், அம் மஞ்சு அகல் இரு வானம் ஈன - அழகிய மேகங்களை அகன்ற பெரிய வானம் தரவும், பகல் ஆற்றுப் படுத்த பழங்கண் மாலை - ஞாயிற்றைப் போக்கிய துன்பத்தினைத் தரும் மாலைக்காலமானது ;

க0—உ. காதலர் பிரிந்த புலம்பின் நோதக - காதலரைப் பிரிந்த தனிமையால் வருந்தியிருக்கவும், ஆர் அஞர் உறுநர் அருநிறம் சுட்டி - மிக்க துன்பத்தை அடைந்திருப்பா ரொருவரது அரிய மார்பினைக் குறித்து, கூர் எஃகு எறிஞரின்-கூரிய வேலை எறிவார்போல, அலைத் தல் ஆனாது - வருத்துதலை ஒழியாது ;

கங—ரு. எள் அற இயற்றிய நிழல் காண் மண்டிலத்து உள் - இகழ்ச்சி யற இயற்றப்பட்ட உருவங்காணும் கண்ணாடியின் அகத்தே ஊது ஆவியில் - ஊதிய ஆவி முன் பரந்து பின் சுருங்கினாற்போல், பைப்பய நுணுகி - சிறிது சிறிதாகக் குறைந்து வந்து, மதுகை மாய்தல் வேண்டும் - என் வலிமை மாய்தல் வேண்டியிரா நின்றது ;

கசு—அ. வெம் கடு விலங்கு வளி எடுப்ப - மிக்க கடிய சூறவளி அலைப்ப, துளங்கும் மரப் புள்ளில் - அசையும் மரத்திலுள்ள பறவை

போல, பெரிது அழிந்து என் உயிர் துறக்கும் பொழுது-மிகவும் அழி வுற்று என்னுயிர் இவ்வுடலைத் துறந்தேகும் காலம், இதுகொல்-இதுவே போலும்.

(முடிபு) தோழி வாழி, பழங்கண் மாலை அலைத்தல் ஆனாது; மருளை மாய்தல் வேண்டும்; என் உயிர் துறக்கும் பொழுது இது கொல்.

படர், பூப்ப, சுனைப் பகலாற்றுப்படுத்த பழங்கண் மாலை என்க.

(வி - ரை.) குறைந்தோர் என்றது, தமது பொருளை வழங்கி வறிய ராயினவர் என்றபடி. நயன் - நன்றியறிவு என்றுமாம். சுனைப் பூக்கள் முன்பு வளம் நிறைந்து தேன் வழங்கியன. இப்பொழுது வாடி வறியவாயினமையின், அவற்றிற்குக் குறைந்தோரை உவமை கூறினார். சினைப்பூ - வேனிற் காலத்து மலரும் மரங்களின் கோட்டிலுள்ள பூக்கள். [1]“நறுந்தா துண்டு நயனில் காலை, வறும்பூத் துறக்கும் வண்டு போல்குவம்” என வண்டு உவமை கூறப்படுவதும் ஈண்டு அறியற் பாற்று. மானினங்கள் வெம்மையால் வருந்த என்க. அந்தி - ஒரு பூவுமாம். வையறிவு எனப் பிரித்துக் கூரிய அறிவு என்றலுமாம். மஞ்சு - பல நிறத்தையுடைய மேகம். விலங்குவளி - சூறாவளி. புள் சூறாவளியால் அலைப்புண்டு மரத்தைவிட் டொழிதல்போல, என் உயிர் பிரிவால் வருந்தி உடலைத் துறக்கும் பொழுது இதுகொல் என்றாள் என்க.

(மே - ள்.) [2]‘வேட்கை யொருதலை’ என்னுஞ் சூத்திரத்து, தலைவி சாக்காடு என்னும் அவத்தை எய்தினமைக்கு இச் செய்யுளை எடுத்துக் காட்டினர், நச்.

[3]‘கிழக்கிடு பொருளோ டைந்து மாகும்’ என்னுஞ் சூத்திரத்து, உவம நிலைக்களத்து ளொன்றாகிய கிழக்கிடு பொருளிற்கு, ‘உள்ளூ தாவியிற் பைப்பய நுணுகி’ என்பதனை எடுத்துக் காட்டினர், பேரா.

---

1. மணிமேகலை. ௧௮: ௧௧ - ௨0. 2. தொல். களவு: ௯.
3. தொல். உவம: ௫.

72. குறிஞ்சி

[(1) தலைமகன் இரவுக்குறிக்கண் சிறைப்புறத்தானாகத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது. (2) தோழி தலைமகட்குச் சொல்லியதூஉமாம்.]

இருள்கிழிப் பதுபோல் மின்னி வானம்
துளிதலைக் கொண்ட நளிபெயல் நடுநாள்
மின்மினி மொய்த்த முரவுவாய்ப் புற்றம்
பொன்னெறி பிதிரிற் சுடர வாங்கிக்
குரும்பி கெண்டும் பெருங்கை ஏற்றை
இரும்புசெய் கொல்லெனத் தோன்றும் ஆங்கண்
ஆறே அருமர பினவே யாறே
சுட்டுநர்ப் பனிக்குஞ் சூருடை முதலைய
கழைமாய் நீத்தம் கல்பொரு திரங்க
அஞ்சுவந் தமியம் என்னாது மஞ்சுசுமந்
தாடுகழை நரலும் அணங்குடைக் கவாஅன்
ஈருயிர்ப் பிணவின் வயவுப்பசி களைஇய
இருங்களி றட்ட பெருஞ்சின உழுவை
நாம நல்லராக் கதிர்பட உமிழ்ந்த
மேய்மணி விளக்கின் புலர ஈர்க்கும்
வாள்நடந் தன்ன வழக்கருங் கவலை
உள்ளுநர் உட்கும் கல்லடர்ச் சிறுநெறி
அருள்புரி நெஞ்சமொ டெஃகுதுணை யாக
வந்தோன் கொடியனும் அல்லன் தந்த
நீதவ றுடையையும் அல்லை நின்வயின்
ஆனா அரும்படர் செய்த
யானே தோழி தவறுடை யேனே.

—எருமை வெளியனார் மகனார் கடலனார்.

(சொ - ள்.) க—எ. ஆறு - தலைவன் வரும் நெறிகள், வானம் இருள் கிழிப்பதுபோல் மின்னி - மேகம் இருளைக் கிழிப்பதுபோல மின்னி, துளி தலைக் கொண்ட நளி பெயல் நடுநாள் - துளியைத் தன்னிடத்தே கொண்ட மிக்க பெயலையுடைய நள்ளிரவில், மின்மினி மொய்த்த முரவு வாய்ப் புற்றம் - மின்மினிகள் மொய்த்திருக்கும் முரிந்த இடத்தினையுடைய புற்றினை, பொன் எறி பிதிரில் சுடர வாங்கி - இரும்பினைக் காய்ச்சி யடிக்குங்கால் சிதறும் பிதிர்போல அம் மின்மினிகள்

ஒளிவிடப் பெயர்த்து, குரும்பி கெண்டும் பெருங்கை ஏற்றை-புற்றுஞ் சோற்றினைத் தோண்டி யெடுக்கும் பெரிய கையினையுடைய கரடியேறு, இரும்பு செய் கொல் எனத் தோன்றும் ஆங்கண் - இரும்பு வேலை செய்யும் கொல்லன்போலத் தோன்றும் அவ்விடத்து, அருமரபினவே - செல்லுதற்கு அரிய தன்மையன ;

எ—கூ. யாறே - யாறு, கழை மாய் நீத்தம் கல்பொருது இரங்க - ஓடக்கோல் மறையும் வெள்ளம் கல்லிற் பொருது ஒலிக்க, சுட்டுநர்ப் பனிக்கும் சூர் உடை முதலைய - கருதுவோரையும் நடுங்கச் செய்யும் அச்சமுடைய முதலைகளை யுடையன ;

க0. அஞ்சுவம் தமியம் என்னாது - யாம் தமியேம்; இந்நெறிகளிற் போதற்கு அஞ்சுவேம் என்று எண்ணாது ;

க0—எ. மஞ்சு சுமந்து ஆடு கழை நரலும் - மேகத்தினைத் தலைக் கொண்டு அசையும் மூங்கில் ஒலிக்கும், அணங்குடைக் கவான் - தெய் வங்களை யுடைய பக்க மலையில், ஈருயிர்ப் பிணவின் வயவுப் பசி களை இய - கருவுற்றிருக்கும் பெண் புலியின் வேட்கை மிக்க பசியினை நீக்க, இருங்களிறு அட்ட பெருஞ்சின உழுவை - பெரிய ஆண்பன்றியினைக் கொன்ற மிக்க சினம்பொருந்திய ஆண்புலி, நாம நல்லராக் கதிர்பட உமிழ்ந்த மேய் மணி விளக்கில் - அச்சந் தரும் நல்லபாம்பு மேய்தற்குச் செல்ல ஒளியுண்டாக உமிழ்ந்து வைத்த மணியாகிய விளக்கில், புலர ஈர்க்கும்-உதிரம் தோய்ந்துகாய இழுத்துச் செல்லும், வாள் நடந்தன்ன வழக்கு அருங் கவலை-கூர்ங்கற்களை யுடைமையால் வாளில் நடப்பதை யொக்கும் செல்லுதற்கு அரிய வழியாய, உள்ளுநர் உட்கும் கல்அடர்ச் சிறுநெறி - கடக்க எண்ணுநர் அஞ்சும் கற்செறிவையுடைய இட்டிய நெறியில் ;

க அ—உஉ. அருள்புரி நெஞ்சமொடு எஃகு துணையாக - நம்மேல் அருள் வைத்த நெஞ்சமொடு வேல் துணையாகக் கொண்டு, வந்தோன் கொடியனும் அல்லன் - வந்த தலைவனும் கொடியன் அல்லன் : தந்த நீ தவறுடையையும் அல்லை - அவனைக் குறிவழி வரச்செய்த நீயும் தவறு டையை யல்லை ; நின்வயின் ஆனா அரும்படர் செய்த-நின்பால் நீங்காத அரிய துன்பினை யாக்கிய, யானே தவறுடையேன் - யானே தவறுடை யவள் ஆவேன்.

(முடிபு) ஆறு அரு மரபின ; யாறு முதலைய; அஞ்சுவம் தமியம் என்னாது கல்லடர்ச் சிறுநெறி வந்தோன் கொடியனு மல்லன்; நீ தவறுடையையும் அல்லை: யானே தவறுடையேன்.

(வி - ரை.) கொல் - கொற்சாதி ; கொல்லனை உணர்த்திற்று. ஆங்கண்: அசையுமாம். யாறு, இரங்க முதலைய எனக் கூட்டுக. இரங்க என்னும் செயவென் எச்சம் முதலைய என்னும் முற்றுவினைக் குறிப் புடன் முடியும். தன்னுயிரோடு கருவிலிருக்கும் உயிரைய முடைமையின்

ஈருயிர்ப் பிணவு என்றார். வயவு - கருவுற்றிருக்குங்கால் உளதாம் வேட்கை. நாம: உரிச்சொல் ஈறு திரிந்தது. நல்லரா: பெயர். புலர்-புலால் நாற என்றுமாம். கவலையிலும் சிறு நெறியிலும் வந்தோன் எனலுமாம்.

(உ - றை.) "புலி துணை புறந்தருதற்குப் பிறவற்றைத் தீங்கு செய்யும் பாம்பும் அதற்குத் துணையாயினாற் போல, நீயுங் குடியோம்பற் செய்தி காரணமாக வரைவொடு வரிற், கடுஞ் சொற் சொல்லுகிற பேரும் இன்சொற் சொல்லி வரைவுடம்படுவர் என்பதாம்."

(மே - ள்.) [1]'மறைந்தவற் காண்டல்' என்ற சூத்திரத்து, 'வந்தவன் பெயர்ந்த வறுங்களம் நோக்கித் தன்பிழைப்பாகத் தழீஇத் தேறிய'தற்கு, 'வாள்நடந்தன்ன........ தவறுடையேன்' என்பதனை எடுத்துக் காட்டினர், இளம்.

[2]'பொழுது மாறும்' என்னுஞ் சூத்திரத்து 'தன்னை அழிதலும்' என்னும் பகுதிக்கு, 'நீ தவறுடையையும்......தவறுடையேனே' என்பதனை எடுத்துக்காட்டி, அவன் வரவினை உவவாது துன்பங்கூர்தல் வழுவாயினும், அதுவும் அவன்கண் அன்பாதலின் அமைத்தார் என்றுரைத்தனர், நச்.

---

73. பாலை

[தலைமகன் பொருள்வயிற் பிரிகின்றான்; குறித்த பருவவரவுகண்டு அழிந்த தலைமகட்குத் தோழி சொல்லியது.]

பின்னொடு முடித்த மண்ணா முச்சி
நெய்கனி வீழ்குழல் அகப்படத் தைஇ
வெருகிருள் நோக்கி அன்ன கதிர்விடு
பொருகாழ் முத்தம் இடைமுலை விளங்க
அணங்குறு கற்பொடு மடங்கொளச் சாஅய்
நின்னோய்த் தலையையும் அல்லை தெறுவர
என்னா குவள்கொல் அளியள் தானென
என்னழி பிரங்கும் நின்னொடி யானும்
ஆறன் றென்னா வேறல் காட்சி
இருவேம் நம்படர் தீர வருவது
காணிய வம்மோ காதலந் தோழி
கொடிபிணங் கரில இருள்கோள் நாகம்

---

1. தொல். களவு: உக. 2 தொல். பொருள்: கசு.

மடிபதம் பார்க்கும் வயமான் துப்பின்
ஏனலஞ் சிறுதினைச் சேஞ்ஞோன் கையதைப்
கரு பிடிக்கை அமைந்த கனல்வாய்க் கொள்ளி
விடுபொறிச் சுடரின் மின்னிஅவர்
சென்ற தேஎத்து நின்றதால் மழையே.

—எருமை வெளியனார்.

(சொ - ள்.) கக—எ. காதல் அம் தோழி - காதலை யுடைய தோழியே!, அவர் சென்ற தேஎத்து-தலைவர் சென்ற நாட்டில், கொடி பிணங்கு அரில இருள் கொள் நாகம் - கொடிகள் பின்னிய சிறு காட்டினிடத்தவாய இருண்ட நிறத்தையுடைய யானையின், மடிபதம் பார்க்கும்-சோரும் செவ்வியைப் பார்த்திருக்கும், வயமான் துப்பின் - அரியேற்றின் வலியினையுடைய, ஏனல் அம் சிறுதினைச் சேஞ்ஞோன் கையதை - தினையின் வகையு ளொன்றாகிய அழகிய சிறுதினையைக் காக்கும் பரண் மேலுள்ளோன் கையின்கண் ணுள்ளதும், பிடி கை அமைந்த கனல்வாய்க் கொள்ளி - பிடி கையின்கண் பொருந்தியதும் தீவாய்த்தலை யுடையதுமாய கொள்ளிக் கோல், விடுபொறிச் சுடரின் மின்னி - (வீசுங்கால்) விடும் சுடர்ப் பொறிகளைப்போல மின்னி, நின்றது மழையே - மழை காலூன்றிப் பெய்து நிற்கின்றது ;

க—உ. பின்னொடு முடித்த - பின்னுதல் அளவில் முடித்திட்ட, மண்ணா முச்சி - வேறு ஒப்பனை செய்யாத கொண்டையில், நெய்கனி வீழ்குழல் அகப்படத் தைஇ - நெய் தடவப்பெற்ற தாழும் குழலினைச் சேரக் கட்டி ;

ங—ச. வெருகு இருள் நோக்கியன்ன - வெருக்குப் பூனை இருளிலே நோக்கினாற் போல, ஒரு காழ் முத்தம் கதிர் விடுபு இடைமுலை விளங்க - முத்தின் ஒரு வடம் கதிர்விட்டு முலையிடையே விளங்க ;

ரு—சு. அணங்கு உறு கற்பொடு- அருந்ததிபோ லுற்ற கற்பினால், மடம்கொள - மடம் மிக, சாஅய்-மெலிந்து, நின்நோய்த் தலையையும் அல்லை-நின் நோயளவில் வருந்தி நிற்பாயும் அல்லை ;

கூ—கக. தெறுவர என் ஆகுவள் அளியள் தான் என - அச்சம் உற இரங்கத்தக்காள் ஆகிய இவள் என் ஆகுவளோ என, என் அழிபு இரங்கும்-என் வருத்தத்திற்கும் இரங்கா நின்றாய்; அங்ஙனம் இரங்கும், நின்னொடு யானும்-நீயும் யானும், ஆறு அன்று என்னா வேறுஅல் காட்சி-ஒருவர் செய்வது நெறியன்று என்று எண்ணாத வேற்றுமையற்ற அறிவினையுடைய, இருவேம் நம் படர் தீர-நம் இருவேமுடைய வருத்தமும் நீங்க, வருவது காணிய வம்மோ - நம் தலைவர் வருதலைக் காண்டற்கு எழுந்து வருவாயாக.

(முடிபு) தோழி! தலைவர் சென்ற தேஎத்து மழைமின்னி நின்றது; நீ நின் நோய்த் தலையையும் அல்லையாய் என் அழிபும், இரங்காநின்றாய், அங்ஙனம் இரங்கும் நின்னொடு யானும் நம் படர் தீர அவர் வருவது காணிய வம்மோ.

நைஇ, சாஅய், என் அழிபுக்கும் இரங்கும் நின்னொடு என்க.

(வி - ரை.) நோக்கி யன்னவாய்க் கதிர்விட்டு என்க. வணங்குறு கற்பு எனப் பிரித்து, ஏனோர் வணங்குதற்குரிய கற்பு எனலுமாம். நின்னொடு யானும் காண வா எனவும், இருவேம் படர்தீரக்காண வா எனவும் இயையும். வம் - வா என்னும் பொருட்டு. ஓ: அசை. கையது - கையதை எனத் திரிந்துநின்றது. பிடி - பிடிக்கும் இடம். பிடி கையமைந்த என்று பாடம் கொள்ளுதல் பொருந்தும்; பிடித்தற்கு இடம் வைத்து அஃதல்லாத இடம் சுட்டுக் கொள்ளியாகுதல் இயல்பு.

(மே - ள்.) [1]'இளிவே இழவே' என்னுஞ் சூத்திரத்து 'அணங்குறு கற்பொடு...நின்னொடு யானும்' என்னும் பகுதியை எடுத்துக் காட்டி, இது தலைமகன் பிரிவிற்குத் தோழி படர்கூர்ந்தாள் எனச் சொல்லினமையின் பிறன்கட் டோன்றிய இழிவுபற்றி அவலம் பிறந்ததாம் என்பர், பேரா.

---

74. முல்லை

[தலைமகன் பிரிவின்கண் அழிந்த கிழத்தி, வற்புறுத்துந் தோழிக்குச் சொல்லியது.]

வினைவலம் படுத்த வென்றியொடு மகிழ்சிறந்து
போர்வல் இளையர் தாள்வலம் வாழ்த்தத்
தண்பெயல் பொழிந்த பைதுறு காலைக்
குருதி உருவின் ஒண்செம் மூதாய்
பெருவழி மருங்கில் சிறுபல வரிப்பப்
பைங்கொடி முல்லை மென்பதப் புதுவீ
வெண்களர் அரிமணல் நன்பல தாஅய்
வண்டுபோ தவிழ்க்கும் தண்கமழ் புறவில்
கருங்கோட் டிரலை காமர் மடப்பிணை
மருண்டமான் நோக்கம் காண்டொறும் நின்னினைந்து
திண்டேர் வலவ கடவெனக் கடைஇ
இன்றே வருவர் ஆன்றிகம் பனியென
வன்புறை இன்சொல் நன்பல பயிற்றும்

1. தொல். மெய்ப்: ௫.

நின்வலித் தமைகுவன் மன்னோ அல்கல்
புன்கண் மாலையொடு பொருந்திக் கொடுங்கோல்
கல்லாக் கோவலர் ஊதும்
வல்வாய்ச் சிறுகுழல் வருத்தாக் காலே.

—மதுரைக் கவுணியன் பூதத்தனார்.

(சொ - ள்.) ௧௪—௭. அல்கல் புன்கண் மாலையொடு பொருந்தி - நாடோறும் வருத்தத்தைத் தரும் மாலைப் பொழுதுடன் கூடி, கொடுங் கோல் கல்லாக் கோவலர் ஊதும் - வளைந்த கோலினையுடைய தம் தொழிலன்றிப் பிறதொழிலைக் கல்லாத ஆயர் ஊதும், வல்வாய்ச் சிறு குழல் வருத்தாக்கால் - வலிய வாயினையுடைய சிறிய குழல் வருத்தா தொழியின்;

௫—௮. தண்பெயல் பொழிந்த பைதுறு காலை - குளிர்ந்த மழை பொழிந்ததாற் பசுமையுற்ற காலத்தே, குருதி உருவின் ஒண்செம் மூதாய் - குருதியைப் போலும் சிவந்த நிறத்தினையுடைய ஒள்ளிய தம் பலப்பூச்சி, பெருவழி மருங்கில் சிறுபல வரிப்ப-பெரிய வழிகடோறும் பல சிறிய வரிகளாகப் பரக்க, பைங் கொடி முல்லை மென்பதப் புதுவீ நன் பல - பசிய முல்லைக்கொடியின் மெத்தென்ற செவ்வியை யுடைய மென்மைப் பதம் வாய்ந்த நன்றாகிய மிகப்பல புதிய மலர்கள், வெண் களர் அரிமணல் தாஅய்-வெள்ளிய களர் ஆகிய அறல்பட்ட மணலில் தாவிக் கிடப்ப, வண்டு போது அவிழ்க்கும் தண்கமழ் புறவில் - வண்டு கள் அரும்பினை மலர்த்தும் தண்ணிய கமழும் முல்லை நிலத்தில்;

௯—௧௦. கருங்கோட்டு இரலை - கரிய கொம்பினையுடைய ஆண் மானினது, காமர் மடப்பிணை மான் மருண்ட நோக்கம் காண்டொறும்- அழகிய இளைய பெண்மானின் மருட்சியுற்ற பார்வையினைக் காணுந் தோறும், நின் நினைந்து - நின்னை எண்ணி;

௧—௨. வினை வலம்படுத்த வென்றியொடு-வினையை வெற்றியுறச் செய்த மேம்பாட்டுடன், மகிழ் சிறந்து - மகிழ்ச்சி மிக்கு, போர்வல் இளையர் தாள்வலம் வாழ்த்த - போரில் வல்ல வீரர் தனது முயற்சியின் வலிமையினை வாழ்த்திவர;

௧௧—௪. வலவ திண்தேர் கடவு எனக் கடைஇ - பாகனே திண்ணிய தேரினை இன்னும் விரைந்து செலுத்துவாயாக எனக் கூறிச் செலுத்திக்கொண்டு, இன்றே வருவர் - இன்றே (நம் தலைவர்) வந்துறுவர், ஆன்றிகம் பனி என - நாம் நடுக்கத்தை அமைவேம் என்று கூறும், வன்புறை இன்சொல் நன் பல பயிற்றும் - வன்புறையாகிய பல இனிய நல்ல சொற்களைக் கூறிவரும், நின் வலித்து அமைகுவன் - நின் சொல்லைத் துணிந்து அமைந்திருப்பேன், மன் - அது மாட்டுகிலேன்,

(முடிபு) (தோழீ.) அல்கல் மாலையொடு பொருந்திக் கோவலர் ஊதும் குழல் வருத்தாக்கால். (தலைவர்,) 'புறவில் இரலை மடப்பிணை நோக்கம் காண்டொறும் நின் நினைந்து, திண்டேர் கடைஇ, இன்றே வருவர் ஆன்றிகம் பனி'யென வன்புறை பயிற்றும் நின்வலித் தமைகுவன் மன்னே.

இளையர் வாழ்த்த இன்றே வருவர் எனக் கூட்டுக.

(வி - ரை.) தாள் - முயற்சி. தாஅய் - தாவ எனத் திரிக்க. பனி - நடுக்கம். வன்புறை - வற்புறுத்தல். சிறு குழலின் இன்னிசையும் துன்பத்தினை மிகுவித்தலின் அதனை வல்வாய்ச் சிறுகுழல் என்றாள். மாலையும் குழலும் வருத்தாக்கால் என்க.

(மே - ள்.) [1]'இன்பத்தை வெறுத்தல்' என்னுஞ் சூத்திரத்து கல்லாக் கோவல ரூதும், வல்வாய்ச் சிறுகுழல் வருத்தாக் காலே' என்புழி இன்பத்தை வெறுத்தனளாயினும் புணர்ச்சிக்கு ஏதுவாம் என்பது கருத்து என்றார், பேரா.

---

75. பாலை

[[2]பொருள்வயிற் பிரிவரென வேறுபட்ட தலைமகட்குப் பிரியே னெனத் தலைமகன் சொல்லியது.]

அருளன் றாக ஆள்வினை ஆடவர்
பொருளேன வலித்த பொருளல் காட்சியின்
மைந்துமலி உள்ளமோடு துஞ்சல் செல்லாது
எரிசினந் தவழ்ந்த இருங்கடற் றடைமுதல்
கரிகுதிர் மரத்த கான வாழ்க்கை
அடுபுலி முன்பின் தொடுகழல் மறவர்
தொன்றியல் சிறுகுடி மன்றுநிழல் படுக்கும்
அண்ணல் நெடுவரை ஆமறப் புலர்ந்த
கல்நெறிப் படர்குவ ராயின் நன்னுதல்
செயிர்தீர் கொள்கைச் சின்மொழித் துவர்வாய்
அவிர்தொடி முன்கை ஆயிழை மகளிர்
ஆரம் தாங்கிய அலர்முலை ஆகத்து
ஆராக் காதலொடு தாரிடைக் குழையாது
சென்றுபடு விறற்கவின் உள்ளி என்றும்
இரங்குநர் அல்லது பெயர்தந் தியாவரும்
தருநரும் உளரோஇவ் வுலகத் தானென

---

1. தொல். மெய்ப்: 22. (பாடம்) 2. பொருள்வயிற் பிரிவரென வேறுபட்ட தலைமகட்குப் பிரியாரெனத் தோழி சொல்லியது.

மாரி ஈங்கை மாத்தளிர் அன்ன
அம்மா மேனி ஐதமை நுசுப்பின்
பல்காசு நிரைத்த கோடேந் தல்குல்
மெல்லியற் குறுமகள் புலந்துபல கூறி
ஆனா நோயை ஆக [1]யானே
பிரியச் சூழ்தலும் உண்டோ
அரிதுபெறு சிறப்பின் நின்வயி னானே.

மதுரைப் போத்தனார்.

(சொ - ள்.) ௧௭—௨0. மாரி ஈங்கை மாத்தளிர் அன்ன-மாரிக் காலத்தே ஒளிரும் இண்டையின் கரிய தளிரை யொத்த, அம் மா மேனி - அழகிய மாமை நிறத்தையுடைய மேனியினையும், ஐது அமை நுசுப்பின் - நுண்ணிதாய் அமைந்த இடையினையும், பல்காசு நிரைத்த கோடு ஏந்து அல்குல்-பல மணிகள் கோத்த மேகலையையுடைய பக்கம் உயர்ந்த அல்குலினையும் உடைய, மெல்லியற் குறுமகள் - மென்மைத் தன்மையுடைய குறுமகளே நீ;

௧—௩. ஆடவர்-ஆடவர்கள், பொருள்-உண்மைப் பொருளாவது, அருள் அன்றாக - அருள் அன்றாகிட, ஆள்வினை என - ஆள்வினையே யாகுமென, வலித்த - துணிந்த, பொருள்அல் காட்சியின் - உண்மை யற்ற அறிவினையுடைய, மைந்து மலி உள்ளமொடு - வலிமிக்க உள்ளத்தால், துஞ்சல் செல்லாது - மடிதல் இல்லாது;

௪—௯. எரி சினம் தவழ்ந்த - எரியும் தீப் பரந்த, இருங்கடற்று அடைமுதல் - பெருங்காட்டிற் புகுமிடத்தே, கரிகு உதிர் மரத்த - இலைகள் கரிந்து உதிரப்பெற்ற மரங்களையுடைய, கான வாழ்க்கை - காட்டின் வாழ்க்கையையுடைய, அடு புலி முன்பின் தொடு கழல் மறவர் - கொல்லும் புலிபோலும் வலியையுங் கட்டப்பெற்ற கழலையுமுடைய மறவர்கள், தொன்று இயல் சிறுகுடி மன்று நிழல் படுக்கும் - பழையதாய் வருகிற இயல்பையுடைய தமது சீறூரிலுள்ள மன்றத்து நிழலிலே கண்படுக்கும், அண்ணல் நெடுவரை - பெருமையையுடைய நெடிய மலையிலுள்ள, ஆம் அறப் புலர்ந்த - நீரறக்காய்ந்த, கல் நெறிப் படர்குவர் ஆயின் - கல்வழியிற் செல்வாராயின்;

௯—௨௧. நல் நுதல்-நல்ல நெற்றியினையும், செயிர்தீர் கொள்கை-குற்றமற்ற கொள்கையினையும், சின் மொழி - சிலவாய சொற்களையும், துவர் வாய் - பவளம் போன்ற வாயினையும், அவிர்தொடி முன் கை - விளங்கும் வளையலை யணிந்த முன் கையினையும், ஆயிழை - ஆய்ந்த அணிகளையுமுடைய, மகளிர் ஆரம் தாங்கிய அலர்முலை ஆகத்து - மகளிரது முத்தாரம் பூண்ட பரந்த முலையையுடைய ஆகத்தில், ஆராக்

(பாடம்) 1. அவரே பிரியச் சூழலும்.

காதலொடு - அமையாத விருப்புடன், தார் இடைக்குழையாது-தங்கள் தாரை இடையே குழையச் செய்யாதே, சென்று படு விறல் கவின் உள்ளி - சென்றொழிந்த மிக்க அழகினை நினைத்து, என்றும் இரங்குநர் அல்லது - என்றும் இரங்குவாராவரே யல்லாது, இவ்வுலகத்தான் பெயர்தந்து யாவரும் தருநரும் உளரோ என - இவ்வுலகத்தே பெயர்த்து அவ்வழகினைத் தருவார் எவரேனும் உளராவரோ என்று இங்ஙனம், புலந்து பல கூறி - வெறுத்துப் பலவும் கூறி, ஆறு நோயை ஆக - அமையாத நோயுடையை ஆகவும், யான் - நான், அரிது பெறு சிறப்பின் நின் வயினான் - அரிதாகப் பெற்ற சிறப்பினையுடைய நின்னிடத்தினின்றும், பிரியச் சூழ்தலும் உண்டோ - பிரியுமாறு கருதுதலும் உளதோ? இல்லையாகும்.

(முடிபு) குறுமகளே! நீ, ஆடவர் பொருளின் காட்சியின் உள்ளமொடு துஞ்சல் செல்லாது, கன்னெறிப் படர்குவராயின், சென்றுபடு விறற்கவின் உள்ளி இரங்குநர் அல்லது பெயர்தந்து தருநரும் உளரோ எனப் புலந்து பல கூறி ஆறு நோயை யாக, யான் நின்வயின் பிரியச் சூழ்தலு முண்டோ? (சூழேன்.)

(வி - ரை.) ஆள்வினை - பொருளீட்டும் முயற்சி; அருள் பொருளன்றாக, ஆள்வினையே பொருளாக வலித்த என்க. [1]'ஆங்கவை யொருபாலாக' என்னுஞ் சூத்திரத்து, 'அருளல் என்பது, மக்கள் முதலிய சுற்றத்தாரை அருளல்' என்றார் பேராசிரியர். பிரிவினால் தனக்கு வரும் ஏதங் குறித்து இரங்காமையின், அருளன்றாக எனத் தலைவி கூறினாள். இக் கருத்து, பொருளே காதலர் காதல், அருளே காதலர் என்றி நீயே' (ருக) என முன்னர் இந்நூலுள்ளும், [2]'பொருளே மன்ற பொருளே, அருளே மன்ற வாருமில் லதுவே' எனக் குறுந்தொகையுள்ளும் வந்துள்ளமையுங் காண்க. சினம் - நெருப்பு: ஆகு பெயர். கரிபுகு என்னும் எச்சம் கரிகு என விகாரப்பட்டது. கரிந்த குதிர் போலும் என்றுமாம். 'தாரிடைக் குழையாது' என்பது இடக்கரடக்கு. 'அவரே பிரியச் சூழ்தலும்' என்றும் பாடம் உளது. இதற்குத் தலைவர் நின்னைப் பிரியக் கருதலும் உண்டோ வென்று தோழி சொல்லியதாக உரைக்க. இதற்கேற்பக், கருத்தினும், தலைமகட்குப் பிரியாரெனத் தோழி சொல்லியது என்ற பாடமும் உளது. அகநானூற்றுக் குறிப்புரையாசிரியர், யானே பிரியச் சூழ்தலும் உண்டோ என்ற பாடத்திற்கே, 'நின்னிடத்தினின்றும் அவர் பிரிய அவரொடு யான் விசாரிப்பதுண்டோ' எனத் தோழி கூற்றாக்கி வலிந்து பொருள் கூறியுள்ளனர்.

———

1. தொல். மெய்ப்: கஉ. 2. குறுந்: கஎச.

76. மருதம்

[தலைமகனை நடப்பித்துக்கொண்டா ளென்று கழறக் கேட்ட பரத்தை தலைமகட்குப் பாங்காயினர் கேட்பச் சொல்லியது.]

மண்கனை முழவொடு மகிழ்மிகத் தூங்கத்
தண்டுறை ஊரனெம் சேரி வந்தென
இன்கடுங் கள்ளின் அஃதை களிற்றொடு
நன்கலன் ஈயும் நாண்மகிழ் இருக்கை
அவைபுகு பொருநர் பறையின் ஆனாது
கழறுப என்பவவன் பெண்டிர் அந்தில்
கச்சினன் கழலினன் தேந்தார் மார்பினன்
வகையமைப் பொலிந்த வனப்பமை தெரியல்
சுரியலம் பொருநனைக் [1]காண்டி ரோவென
ஆதி மந்தி பேதுற் றினையச்
சிறைபறைந் துரைஇச் செங்குணக் கொழுகும்
அந்தண் காவிரி போலக்
கொண்டுகை வலித்தல் சூழ்ந்திசின் யானே.

—பரணர்.

(சொ - ள்.) க—உ. மண் கனை முழவொடு மகிழ்மிகத் தூங்க-மார்ச்சனை செறிந்த மத்தளத்தொடு (காண்பார்க்கு) மகிழ்ச்சி மிக (யாங்கள்) கூத்தாட, தண் துறை ஊரன் எம் சேரி வந்தென-தண்ணிய நீர்த்துறையையுடைய ஊரன் எம் சேரிக்கண் அதனைக் காண வந்தனனாக (அவ்வளவிற்கே);

ங—ஏ. அவன் பெண்டிர்-அவன் பெண்டிர், இன் கடுங் கள்ளின் அஃதை-இனிய கடிய கள்ளினையுடைய அஃதை என்பானது, களிற்றொடு நன்கலன் ஈயும் நாண்மகிழிருக்கை-யானைகளையும் நல்ல அணிகளையும் (பரிசிலர்க்கு) வழங்கும் மகிழ்ச்சி பொருந்திய நாளோலக்கத்தையுடைய, அவை புகு பொருநர் பறையின்-அவையிற் புகும் பொருநரது பறையைப்போல, ஆனாது கழறுப என்ப-ஒழியாது என்னை இகழ்வர் என்று கூறுவர்;

எ—கூ. கச்சினன் கழலினன் தேம் தார் மார்பினன்-கச்சினையும் கழலினையும் தேனொழுகும் தாரணிந்த மார்பினையும் உடையவனும், வகை அமைப் பொலிந்த வனப்பு அமை தெரியல்-கூறுபாட்டின் அமைதியோடு விளங்கிய அழகு அமைந்த மாலையை யுடையவனும் ஆகிய, சுரியல் அம் பொருநனை-சுழன்ற மயிரினையுடைய அழகிய

(பாடம்) 1. காணீரோ.

கூத்தினளாகிய ஆட்டனத்தியை, காண்டிரோ என - கண்டீரோ என்று (வினவி), ஆதிமந்தி பேதுற்று இனைய - அவன் காதலியாகிய ஆதிமந்தி மயக்கமுற்று வருந்திட, சிறை பறைந்து உரைஇ - கரையினை மோதிப் பரவி, செங்குணக்கு ஒழுகும் - நேர் கிழக்கே ஓடும், அம் தண் காவிரிபோல - அழகிய குளிர்ந்த காவிரி தன் திரைக்கையால் வௌவிக் கொண்டமைபோல, கொண்டு கை வலித்தல் - சூளினை மேற்கொண்டு கையாற் பற்றிக் கோடலை, யான் சூழ்ந்திசின் - யான் எண்ணியுளேன்.

(முடிபு) ஊரன், யாங்கள் முழவொடு தூங்க, எம் சேரி வந்தென, அவன் பெண்டிர் பொருநர் பறையின் ஆறுது கழறுப என்ப; ஆதிமந்தி பொருநனைக் காண்டிரோ எனப் பேதுற்று இனைய, குணக்கு ஒழுகும் காவிரிபோலச் சூள்மேற் கொண்டு கைவலித்தலை யான் சூழ்ந்திசின்.

(வி - ரை.) கனைதல் - செறிதல்; ஒலித்தல் எனக் கொண்டு, மார்ச்சனை யமைந்து ஒலிக்கும் எனலுமாம். தூங்கல் - ஆடுதல். பெண்டிர் என்றது தலைமகளை.

அந்தில்: அசை. கச்சினன் கழலினன் மார்பினன் என்னும் குறிப்பு முற்றுக்கள் எச்சமாய்ப் பொருநன் என்னும் பெயர்கொண்டு முடிந்தன. பொருநன்-ஆட்டனத்தி. இதனை, [1]'ஆட்டனத்தி நலனயந் துரைஇத், தாழிருங் கதுப்பிற் காவிரி வவ்வலின், மாதிரந் துழைஇ மதிமருண் டலந்த, ஆதிமந்தி' என்பதனானறிக.

உரைஇ - பரந்து. காவிரிபோல - காவிரி தன் திரைக்கையால் வௌவிக் கொண்டமைபோல: இது தொழிலுவமம்.

ஆடற் றகையானுதல் பாடற்றுறையானுதல், பெற்றேனென்று சொல்லுவாளாயின், யான் இப்படிச் செய்வேன் என்றாள்.

(மே - ள்.) [2]'புல்லுதல் மயக்கும் புலவிக் கண்ணும்' என்னுஞ் சூத்திரத்து, இச் செய்யுள், தலைவனின் காமக் கிழத்தியாய இளமைப் பருவத்தாளொருத்தி, தன்பாற் றலைவன் வருவது பற்றித் தலைவி புலந்ததாகக் கேட்டவழிப் பெருமிதம் கொண்டு கூறியதாகும் என்பர் நச்.

---

1. அகம் : உஉஉ. 2. தொல். கற்பு : கo.

77. பாலை

[தலைமகன் பிரியக் கருதிய நெஞ்சிற்குச் சொல்லிச் செலவு அழுங்குவித்தது.]

நன்னுதல் பசப்பவும் ஆள்வினை தரீஇயர்
துன்னருங் கானந் துன்னுதல் நன்றெனப்
பின்னின்று சூழ்ந்தனை யாயினன் றின்னாச்
சூழ்ந்திசின் வாழிய நெஞ்சே வெய்துற
இடியுமிழ் வானம் நீங்கி யாங்கணும்
குடிபதிப் பெயர்ந்த சுட்டுடை முதுபாழ்க்
கயிறுபிணிக் குழிசி ஓலை கொண்மார்
பொறிகண் டழிக்கும் ஆவண மாக்களின்
உயிர்திறம் பெயர நல்லமர்க் கடந்த
தறுகண் ணாளர் குடர்தரீஇத் தெறுவரச்
செஞ்செவி எருவை யஞ்சுவர இகுக்குங்
கல்லதர்க் கவலை போகின் சீறூர்ப்
புல்லரை யித்திப் புகர்படு நீழல்
எல்வளி யலைக்கும் இருள்கூர் மாலை
வானவன் மறவன் வணங்குவிற் றடக்கை
ஆனா நறவின் வண்மகிழ்ப் பிட்டன்
பொருந்தா மன்னர் அருஞ்சமத் துயர்த்த
திருந்திலை யெஃகம் போல
அருந்துயர் தருமிவள் பனிவார் கண்ணே.

—மருத னிளநாகனார்.

(சொ - ள்.) ௪. நெஞ்சே வாழிய-,

௧—௪. நன்னுதல் பசப்பவும் - நம் தலைவியின் ஒள்ளிய நெற்றி பசந்திடவும், ஆள்வினை தரீஇயர் - முயற்சியால் பொருள் ஈட்டுதற்கு, துன் அருங் கானம் - அடைதற்கரிய காட்டு நெறியில், துன்னுதல் நன்றென-செல்லுதல் நன்றென எண்ணி, பின்னின்று-என் பின்னே நின்று, சூழ்ந்தனையாயின் - எண்ணுதியாயின், நன்று இன்னா சூழ்ந்திசின் - மிகவும் கொடியவற்றை ஆய்ந்துகொண்டனை யாவாய்; (எதனாலெனின்,)

௪—௬. வெய்துஉற இடி உமிழ் வானம் - இடிகளை உமிழும் மேகம் வெம்மை மிக, நீங்கி - மழை பெய்யாது நீங்குதலால், யாங்கணும் குடி பதிப்பெயர்ந்த - எவ்விடத்தும் குடிகள் தத்தம் பதிகளினின்றும் பெயர்ந்து போகற் கேதுவாய, சுட்டு உடை முது பாழ் - பலரும் சுட்டிக்கூறும் மிக்க பாழிடமாகிய பாலையில்;

எ—அ. கயிறு பிணிக்குழிசி-கயிற்றால் பிணித்தலையுற்ற குடத்தினுள்ள, ஓலை கொண்மார்-ஓலையை எடுத்துக் கோடற்கு, பொறி கண்டு அழிக்கும் - அக் குடத்தின்மேலிட்ட இலச்சினையை ஆய்ந்து நீக்கும், ஆவண மாக்களின் - அவ்வோலையைத் தேரும் மாக்கள் அவையிற்றை வெளியே ஈர்த்தெடுத்தல் போல;

௯—௧௧. உயிர் திறம் பெயர - தம் உயிர் வேறொரு நற்பதவியிற் புக, செறுவர நல் அமர்க் கடந்த - மாற்றாரஞ்ச நற்போரை வென்று பட்ட, தறுகணாளர் குடர் - அஞ்சா வீரரின் குடரை, செஞ்செவி எருவை - சிவந்த செவியினையுடைய பருந்து, அஞ்சுவர - கண்டார் அஞ்சுமாறு, தரீஇ இருக்கும் - வாங்கிப் போகடும்;

௧௨—௪. கல் அதர்க் கவலை போகின் - கற்களையுடைய கவர்த்த நெறியிற் போயின், சீறூர் புல் அரை இத்தி புகர் படு நீழல் - ஆங்குள்ள சீறூர்களின் பாங்கர்ப் புல்லிய அடியினையுடைய இத்தியின் புள்ளிபட்ட நிழலிலே, எல் வளி அலைக்கும் - பெருங் காற்று அலைக்கும், இருள் கூர் மாலை - இருள் மிக்க மாலைப் பொழுதில்;

௧௫—௧௯. வானவன் மறவன் - சேரன் படைத்தலைவனாகிய, வணங்கு வில் தடக்கை - வளைந்த வில்லைப் பெரிய கையிற்கொண்ட, ஆனா நறவின் வண் மகிழ்ப் பிட்டன் - அமையாத கள்ளினது மிக்க மகிழ்ச்சியையுடைய பிட்டன் என்பான், பொருந்தா மன்னர் அரும் சமத்து உயர்த்த - பகை மன்னரது அரிய போரில் எடுத்த, திருந்து இலை எஃகம் போல - திருந்திய இலைத் தொழிலையுடைய வேல் போல, இவள் பனிவார் கண் - நம் தலைவியது நீர் ஒழுகும் கண்கள் (தோன்றி), அருந் துயர் தரும் - அரிய துயரினைத் தரும் ஆதலால் என்க.

(முடிபு) நெஞ்சே வாழிய! நீ ஆள்வினை தரீஇயர் கானம் துன்னுதல் நன்றெனச் சூழ்ந்தனையாயின், இன்னாச் சூழ்ந்திசின்; (ஏதனாலெனின்,) முதுபாழாகிய கவலையைக் கடந்து செல்லுங்கால் மாலையில், இவள் பனிவார்கண் தோன்றிப், பிட்டன் பொருந்தா மன்னர் சமத்து உயர்த்த எஃகம் போல அருந்துயர் தரும் ஆதலால் என்க.

குழிசி ஓலை கொண்மார் பொறி கண்டழிக்கும் ஆவணமாக்களின், எருவை தறுகணாளர் குடர் தரீஇ இருக்கும் கவலை என்க.

(வி - ரை.) தரீஇயர் - பொருள்தரீஇய ரென விரித்துரைக்க. சூழ்தலோடு தன்னைத் தூண்டுதலுங் கருதிப் பின்னின்று சூழ்ந்தனையாயின் என்றான். பின்னின்று-உடன் நின்று என்றுமாம். நன்றெனக் கூறிப் போந்து அதனாலாம் ஏதத்தைப் பின்னின்று ஆராய்வாயாயின் என்றுரைத்தலுமாம். நீங்கி - நீங்கலால் எனத் திரிக்க. சுட்டுடை முதுபாழ்-பலராலும் சுட்டப்படுதலுடைய பாழ் என்க. பாழாகிய கல்லதர்க் கவலை எனக்கூட்டுக. 'கயிறு பிணிக் குழிசியோலை கொண்மார், பொறிகண் டழிக்கு மாவண மாக்களின்' என்றது, ஊராண்மை நாட்டாண்மைக் கழகங்கட்கு உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தற்

பொருட்டு, உடன்பாடு தெரிவிக்கும் தகுதியுடையார் பலரும் எழுதிக் குடத்தின்கட் போகட்ட ஓலைகளை, ஆவண மாக்கள் பலர் முன் குடத்தின் மேலிட்ட இலச்சினையைக் கண்டு, நீக்கி, உள்ளிருக்கும் ஓலைகளை எடுத்து எண்ணித் தேரப்பட்டார் இவரென்ன முடிவு செய்வதொரு வழக்கத்தினைக் குறிப்பது. இது குடவோலை என்று கூறப்படும்; பழைய கல்வெட்டுக்களில் இம்முறை விரிவாகச் சொல்லப்பட்டுள்ளது. ஆவணமாக்கள் - பிரமாணம் வாங்குகிற மாக்கள் என்பாரும் உளர். ஓலை கொண்மார் அழிக்கும் மாக்கள் என்பதனை, அழித்து ஓலை கொள்ளும் மாக்கள் என மாறுக. எல் வளி - தோற்றமுடைய வளியுமாம்.

---

78. குறிஞ்சி

[களவுக் காலத்துப் பிரிந்துவந்த தலைமகற்குத் தோழி சொல்லியது.]

நனந்தலைக் கானத் தாளி யஞ்சி
இனந்தலைத் தரூஉ மெறுழ்கிளர் முன்பின்
வரிஞிமி றார்க்கும் வாய்புகு கடாஅத்துப்
பொறிநுதற் பொலிந்த வயக்களிற் றொருத்தல்
இரும்பிணர்த் தடக்கையின் ஏமுறத் தழுவக்
கடுஞ்சூன் மடப்பிடி நடுங்குஞ் சாரல்
தேம்பிழி நறவின் குறவர் முன்றில்
முந்தூ ழாய்மலர் உதிரக் காந்தள்
நீடிதழ் நெடுந்துடுப் பொசியத் தண்ணென
வாடை தூக்கும் வருபனி யற்சிரம்
நம்மில் புலம்பிற் றம்மூர்த் தமியர்
என்னா குவர்கொல் அளியர் தாமென
எம்விட் டகன்ற சின்னாட் சிறிதும்
உள்ளியும் அறிதிரோ ஓங்குமலை நாட
உலகுடன் திரிதரும் பலர்புகழ் நல்லிசை
வாய்மொழிக் கபிலன் சூழச் சேய்நின்று
செழுஞ்செய் நெல்லின் விளைகதிர் கொண்டு
தடந்தாள் ஆம்பல் மலரொடு கூட்டி
யாண்டுபல கழிய வேண்டுவயிற் பிழையா
தாளிடூஉக் கடந்து வாளமர் உழக்கி

எந்துகோட் டியானை வேந்தர் ஓட்டிய
கடும்பரிப் புரவிக் கைவண் பாரி
தீம்பெரும் பைஞ்சுனைப் பூத்த
தேங்கமழ் புதுமலர் நாறுமிவள் நுதலே.

—மதுரை நக்கீரனார்.

(சொ - ள்.) கச. ஓங்கு மலைநாட - ஓங்கிய மலை பொருந்திய நாட்டையுடையவனே;

க. நனந்தலை கானத்து ஆளி அஞ்சி - அகன்ற இடத்தையுடைய காட்டினிடத்தே ஆளியினை யஞ்சி;

உ—ரு. இனம் தலைத் தரூஉம் - தன் இனத்தைத் தன்னிடத்தே கூட்டிக் கொள்ளும், எறும் கிளர் முன்பின் - விளங்கித் தோன்றும் மிக்க வலியினையும், வரி ஞிமிறு ஆர்க்கும் வாய்புகு கடாஅத்து - வரியினையுடைய வண்டுகள் ஒலிக்கும் வாயிற்புகும் மதத்தினையும் உடைய, பொறி நுதல் பொலிந்த - புள்ளிகள் பொருந்திய நெற்றியாற் பொலிவுற்ற, வயக்களிற்று ஒருத்தல் - வலி பொருந்திய ஆண் யானைகளின் தலைவன், இரும் பிணர்த் தடக்கையின் - கரிய சருச்சரையுடைய பெரிய கையால், ஏம் உறத் தழுவ - பாதுகாவல் தோன்றத் தழுவவும்;

சு. கடும் சூல் மடப்பிடி நடுங்கும் சாரல் - முதற் சூலையுடைய இளைய பிடி நடுங்கும் பக்க மலையிலுள்ள;

எ. தேம்பிழி நறவின் குறவர் முன்றில் - இனிமையுறப் பிழிந்த கள்ளினையுடைய குறவர்களது முற்றத்தில்;

அ—கo. முந்தூழ் ஆய் மலர் உதிர - மூங்கிலின் அழகிய மலர்கள் உதிரவும், காந்தள் நீடு இதழ் நெடுந்துடுப்பு ஒசிய - காந்தளது நீண்ட இதழையுடைய பெரிய மலர் முறியவும், தண்என வாடை தூக்கும் - தண்ணென்று வாடைக்காற்று வீசும், வருபனி அற்சிரம் - தோன்றுகின்ற பனியையுடைய முன்பனிக் காலத்தில்;

கக—கஉ. எம்விட்டு அகன்ற சின்னாள் - எம்மைவிட் டகன்றிருந்த சில நாட்களுள்ளே, நம் இல் புலம்பில் - நம்மைப் பிரிந்திருக்கும் தனிமையால், தம்மூர் - தம்மூரின் கண்ணே, தமியர் அளியர் தாம் - தனித்திருக்கும் இரங்கற்குரிய இவர், என் ஆகுவர் கொல் என - என்னிலையடைவரோ என எண்ணி இரங்கி;

கரு—உச. உலகுடன் திரிதரும் பலர் புகழ் நல்லிசை - உலகெலாம் பரக்கும் பலரும் புகழும் நல்ல புகழினையும், வாய்மொழி - மெய்ம்மொழியினையுமுடைய, கபிலன் சூழ - கபிலன் ஆய்ந்து வினைசெய, சேய் நின்று செழும் செய் நெல்லின் விளை கதிர் கொண்டு - நெடுந்தொலைவினின்று வளம்பொருந்திய வயல்களில் விளைந்த நெற் கதிர்களைக் கொண்டுவந்து, தடந்தாள் ஆம்பல் மலரொடு கூட்டி - அவற்றைப் பெரிய தாளினையுடைய ஆம்பல் மலராகிய அவியலொடு அட்டு

உண்பித்து, யாண்டு பல கழிய வேண்டு வயின் பிழையா - பல யாண்டு கள் கழியவும் போரை விரும்பிச்செய்யும் இடத்தினின்றும் பெயராமல், தாள் இடூஉக் கடந்து வாள் அமர் உழக்கி - பகைவர் வாட்போரினைக் கலக்கி முயற்சியால் வென்று, ஏந்து கோட்டு யானை வேந்தர் ஓட்டிய - நிமிர்ந்த கொம்புகள் பொருந்திய களிற்றினையுடைய மூவேந்தரையும் பிறக்கிடச் செய்த, கடும் பரிப் புரவிக் கைவண் பாரி-மிக்க விரைவினை யுடைய குதிரையையும் கைவண்மையையுமுடைய பாரியின், தீம்பெரும் பைஞ்சுனை பூத்த - இனிய பெரிய பசிய சுனைக்கட் பூத்த, தேம் கமழ் புதுமலர் நாறும் இவள் நுதல் - தேன் மணக்கும் புதிய மலரென மணக் கும் இவளது நெற்றியினை;

கக—ச. சிறிதும் உள்ளியும் அறிதிரோ - சிறிதளவேனும் நினைத் தறிந்திரோ.

(முடிபு) மலை நாட! ஆளி யஞ்சி, ஒருத்தல் தழுவவும் மடப்பிடி நடுங்கும் சார லிடத்துக் குரவர் முன்றிலில் வரடை தூக்கும் அற்சிரம், நம்மில் புலம்பில் அளியர் என் ஆகுவர் கொல் என, பாரியின் சுனைபூத்த புதுமலர் நாறும் இவள் நுதலைச் சிறிதும் உள் ளியும் அறிதிரோ.

(வி - ரை.) இனம் தலை: இங்குத் தலை அசையுமாம். ஏறும் முன்பு: ஒருபொருளிருசொல். மிஞிறு என்பது ஞிமிறு என்றாயிற்று. கடுஞ்சூல் - மூதற் கரு. [1]'மின்னயங் துறைவி கடுஞ்சூற் சிறுவன்' என் பது காண்க. தேம்பிழி நறவு - தேனைப் பிழிந்த நறவுமாம். துடுப்பு - துடுப்புப் போறலின் பூவிற்கு ஆகுபெயர். நம் மில் - நாம் இல்லாத என்க. 'வாய்மொழிக் கபிலன் சூழச் சேய் நின்று, செழுஞ்செய் நெல் லின் விளைகதிர் கொண்டு, தடந்தா ளாம்பல் மலரொடு கூட்டி' என்றது தமிழ்நாட்டு மூவேந்தரும் பாரியின் பறம்பரணை முற்றியிருப்ப, அரணி லுள்ளார் உணவின்றி வருந்தாவாறு, கபிலர் கிளிகளை வளர்த்துக் கதிர் கொண்டுவர விட்ட வரலாற்றை உணர்த்தியவாறு. [2]'பாரி பறம்பின், நிரைபறைக் குரீஇயினம் காலைப் போகி, முடங்குபுறச் செந்நெற் றரீஇய வோராங், கிரைதேர் கொட்பினவாகிப் பொழுதுபட, படர் கொள் மாலை படர்தக் தாங்கு' என இவ்வரலாறு ஔவையாராலுங் கூறப்பட்டுளது. மலரொடு கூட்டி என்பதன்பின், அட்டு உண்பித்து என வருவித்துரைக்க. பிழையா: ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம். வேந்தர் ஓட்டிய என இரண்டனுருபு உயர்திணை மருங்கிற்றொக்கு நின் றது உடம்பொடு புணர்த்தலாற் கொள்க.

(உ - றை.) 'நனந்தலை...மடப்பிடி நடுங்கும்' என்றது, 'யானை காக்கவும் பிடி நடுங்கினாற்போல,' நீயிர் இவளைப் பாதுகாக்க வேண்டு மென்னுங் கருத்துடையரா யிருக்கவும், பிரிவிற்கு அஞ்சாநின்றாள் என்றவாறு.

———

1. ஐங்கு: கூ0க. 2. அகம்: ௩0௩.

79. பாலை

[பொருள்வயிற் பிரிந்த தலைமகன் இடைச்சுரத்துத் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.]

தோட்பதன் அமைத்த கருங்கை ஆடவர்
கனைபொறி பிறப்ப நூறி வினைப்படர்ந்து
கல்லுறுத் தியற்றிய வல்லுவர்ப் படுவில்
பாருடை மருங்கின் ஊறல் மண்டிய
வன்புலம் துமியப் போசிக் கோங்கர்
படுமணி யாயம் நீர்க்குநிமிர்ந்து செல்லும்
சேதா எடுத்த செந்நிலக் குரூஉத்துகள்
அகலிரு விசும்பின் ஊன்றித் தோன்றும்
நனந்தலை அழுவம் நம்மொடு துணைப்ப
வல்லாங்கு வருது மென்னா தல்குவர
வருந்தினை வாழியென் நெஞ்சே இருஞ்சிறை
வளைவாய்ப் பருந்தின் வான்கட் பேடை
ஆடுதொறு கனையும் அவ்வாய்க் கடுந்துடிக்
கொடுவில் எயினர் கோட்சுரம் படர
நெடுவிளி பயிற்றும் நிரம்பா நீளிடை
கல்பிறங் கத்தம் போகி
நில்லாப் பொருட்பிணிப் பிரிந்த நீயே.

—குடவாயிற் கீரத்தனார்.

(சொ - ள்.) கக. வாழி என் நெஞ்சே:

கக—எ. ஆடுதொறு கனையும் அவ்வாய்க் கடுந்துடி-ஆடுந்தோறும் ஒலிக்கும் அழகிய வாயினையுடைய கடிய துடியினையும், கொடுவில் எயினர் கோள் சுரம் படர-வளைந்த வில்லினையுமுடைய மறவர் (பகைவரை வளைத்துக்) கொள்ளும் சுரத்தின்கட் செல்ல, இருஞ்சிறை வளைவாய்ப் பருந்தின் வான்கட் பேடை - பெரிய சிறையினையும் வளைந்த வாயினையுமுடைய பருந்தின் வெள்ளிய கண்ணினை யுடைய பேடை, நெடுவிளி பயிற்றும் நிரம்பா நீளிடை - (தன் துணையினை நோக்கி) நெடுங் கூப்பீடு செய்யும் செல்லத் தொலையாத நீண்ட இடமாய, கல் பிறங்கு அத்தம் போகி - கற்கள் விளங்கும் காட்டில் நடந்து, நில்லாப் பொருட்பிணிப் பிரிந்த நீ-நிலை நில்லாத பொருளின்மேலுள்ள பற்றினால் பிரிதலுற்ற நீ;

க—க. தோட்பதன் அமைத்த கருங் கை ஆடவர் - தோளிலே தொங்கவிடும் சோற்று முடிபைக் கோத்த வலிய கையினையுடைய

ஆடவர்கள், வினைப்படர்ந்து-(கிணறு வெட்டும்) தொழிலிற் புக்கு, கனைபொறி பிறப்ப நூறி - மிக்க தீப்பொறி யுண்டாகப் பாறைகளை வெட்டி, கல்லுறுத்து இயற்றிய-கல்லுதல் செய்து அமைத்த, வல் உவர்ப் படுவில்-மிக்க உவரையுடைய கிணற்றில், பாருடை மருங்கின் ஊறல் மண்டி - பாரினை உடைத்த பக்கத்தே ஊறிய நீரை உண்ண வேண்டி, நீர்க்கு நிமிர்ந்து செல்லும் - நீர் பருகக் கலித்துச் செல்லும், கொங்கர் படு மணி ஆயம் சேதா - கொங்கரது ஒலிக்கும் மணி பூண்ட ஆயமாகிய செவ்விய ஆக்கள், வன்புலம் துமியப் போகி-வன்னிலங்கள் துணிபடச் சென்று, எடுத்த செங்கிலக் குரூஉத்துகள்-கிளப்பிய செம் மண்ணாகிய நிறம் பொருந்திய புழுதி, அகல் இரு விசும்பின் ஊன்றித் தோன்றும்-அகன்ற பெரிய வானின்கண் மிக்குத் தோன்றும், நனந் தலை அழுவம் - இடமகன்ற காட்டில் ;

கூ—கக. நம்மொடு துணைப்ப-நம் தலைவி நம்மொடு துணையாக, வல்லாங்கு வருதும் என்னாது-வல்லபடி செல்வோம் என்னாது, அல் குவர வருந்தினை - இங்கே வந்து தங்கிய அளவில் வருந்துகின்றனை; இஃதென்னை !

(முடிபு) நெஞ்சே! கல்பிறங்கு அத்தம் போகி நில்லாப் பொருட்பிணி பிரிந்த நீ, நனந்தலை அழுவம், நம்மொடு (அவள்) துணைப்ப, வல்லாங்கு வருதும் என்னாது அல்குவர, வருந்தினை.

(வி - ரை.) சோறும் உடன் கொண்டுபோய்க் கிணறு வெட்டு தலின், தோள்பதன் அமைத்த என்றார். கல்லுறுத்தல் -கல்லுதல், வல் உவர்-மிக்க உவர். படு - கிணறு. பார் - வன்னிலம். நீர்க்கு நிமிர்ந்து செல்லும் சேதா மண்டிய போகி எடுத்த துகள் என்க. வரு தும் - போவோம் என்னும் பொருட்டு. நெடுவிளி பயிற்றும் என்றது எயினர் போர்க்குச் செல்லுதல் அறிந்து பேடை துணையை அழைக்கும் என்றபடி.

---

80. நெய்தல்

[இரவுக்குறி வந்த தலைமகற்குத் தோழி சொல்லியது.]

கொடுந்தாள் முதலையொடு கோட்டுமீன் வழங்கும்
இருங்கழி யிட்டுச்சுரம் நீந்தி யிரவின்
வந்தோய் மன்ற தண்கடற் சேர்ப்ப
நினக்கெவன் அரியமோ யாமே எந்தை
ரு புணர்திரைப் பரப்பகம் துழைஇத் தந்த
பன்மீன் உணங்கற் படுபுள் ஓப்புதும்
முண்டகம் கலித்த முதுநீர் அடைகரை
ஒண்பல் மலர கவட்டிலை அடும்பின்

செங்கேழ் மென்கொடி ஆழி அறுப்ப
இனமணிப் புரவி நெடுந்தேர் கடைஇ
மின்னிலைப் பொலிந்த விளங்கிணர் அவிழ்பொன்
தண்நறும் பைந்தா துறைக்கும்
புன்னையங் கானல் பகல்வந் தீமே.

—[1]மருங்கூர் கிழார் பெருங்கண்ணனார்.

(சொ - ள்.) ௧. தண் கடற் சேர்ப்ப - குளிர்ந்த கடற்கரையை யுடைய தலைவனே! நீ;

௩—௬. கொடுந் தாள் முதலையொடு கோட்டுமீன் வழங்கும்- வளைந்த காலினையுடைய முதலையொடு சுறாமீன் இயங்கும், இருங்கழி இட்டுச்சுரம் நீந்தி - கரிய உப்பங் கழியாய நெருங்கிய அரிய வழியினைக் கடந்து, இரவில் வந்தோய் - இரவின்கண் வந்துளாய் ;

௭—௧௩. முண்டகம் கலித்த முதுநீர் அடைகரை - நீர்முள்ளி தழைத்த கடலையடைந்த கரையிலுள்ள, ஒண் பல் மலர் கவட்டிலை அடும்பின் - ஒள்ளிய பலவாய மலர்களையுடையகவடுபட்ட இலைகளை யுடைய அடம்பினது, செங்கேழ் மென்கொடி ஆழி அறுப்ப - சிவந்த நிறமுடைய மெல்லிய கொடிகளை (நின்) தேருருள் அறுத்துவர, இன மணிப் புரவி நெடுந்தேர் கடைஇ-மணிகளைப் பூண்ட ஓரினமாகிய குதிரைகள் பூட்டிய நெடிய தேரினைச் செலுத்தி, மின் இலைப் பொலிந்த விளங்கு இணர்-ஒளியையுடைய இலையொடு பொலிந்த விளங்கும் பூங் கொத்துக்கள், அவிழ் பொன் தண் நறும் பைந்தாது உறைக்கும்- மலர்ந்த பொன்போலும் தண்ணிய நறிய செவ்வித் தாதுக்களைச் சொரி யும், புன்னை அம் கானல் பகல் வந்திமே - புன்னை மரங்களையுடைய அழகிய கடற்கரைச் சோலையில் பகலில் வருவாயாக ;

௨—௪. எந்தை - எம் தந்தை, புணர்திரைப் பரப்பகம் துழைஇத் தந்த-பொருந்தும் அலைகளையுடைய கடலகத்தே துழவிக் கொணர்ந்த, பல்மீன் உணங்கல் படுபுள் ஓப்புதும்-பலவகை மீன்களின் வற்றலிற் பொருந்தும் புட்களை ஓட்டியிருப்பேம் ; ஆகலின் ;

௫. யாம் நினக்கு எவன் அரியம் - யாங்கள் நினக்கு எங்ஙனம் அரியமாவேம்?

(முடிபு) சேர்ப்ப இருங்கழி இட்டுச் சுரம் நீந்தி இரவில் வந்தோய், நெடுந்தேர் கடைஇ, புன்னையங் கானல் பகல் வந்தீமே; மீன் உணங்கல் படுபுள் ஓப்புதும்; யாம் நினக்கு எவன் அரியம்?

(வி - ரை.) கோட்டு மீன் - கொம்பையுடைய மீன்; சுறாமீன். இட்டுச் சுரம் - வழி சிறிதாகிய சுரம். நெறியருமை கூறியவாறு.

மலர அடும்பு எனக் கூட்டுக.

———

(பாடம்) 1. நக்கீரர்.

81. பாலை

[பிரிவுணர்த்திய தலைமகற்குத் தோழி தலைமகள் குறிப்பறிந்து வந்து சொல்லியது.]

நாளுலா எழுந்த கோள்வல் உளியம்
ஓங்குசினை இருப்பைத் தீம்பழம் முனையின்
புல்லளைப் புற்றின் பல்கிளைச் சிதலை
ஒருங்குமுயன் றெடுத்த நனைவாய் நெடுங்கோ
டிரும்பூது குருகின் இடந்திரை தேரும்
மண்பக வறந்த ஆங்கண் கண்பொரக்
கதிர்தெறக் கவிழ்ந்த உலறுதலை நோன்சினை
நெறியயல் மராஅம் ஏறிப் புலம்புகொள
எறிபருந் துயவும் என்றூழ் நீளிடை
வெம்முனை அருஞ்சுரம் நீந்திச் சிறந்த
செம்மல் உள்ளம் துரத்தலின் கறுத்தோர்
ஒளிறுவேல் அழுவம் களிறுபடக் கடக்கும்
மாவண் கடலன் விளங்கில் அன்னஎம்
மையெழில் உண்கண் கலுழ
ஐய சேறிரோ அகன்றுசெய் பொருட்கே.

—ஆலம்பேரி சாத்தனார்.

(சொ - ள்.) கரு. ஐய-, அகன்றுசெய் பொருட்கு - எம்மைப் பிரிந்து சென்று தேடும் பொருட்கு ;

கo—க. சிறந்த செம்மல் உள்ளம் துரத்தலின் - சிறந்த தலைமை வாய்ந்த நும் உள்ளம் தூண்டுதலின் ;

கக—ச. கறுத்தோர் - வெகுண்டெழுந்த பகைவரது, ஒளிறு வேல் அழுவம் - ஒளிர்கின்ற வேலினையுடைய போர்க்களத்தை, களிறு படக் கடக்கும்-யானைகள் மடிய வெல்லும், மாவண் கடலன் விளங்கில் அன்ன-மிக்க வண்மையையுடைய கடலன் என்பானது விளங்கில் எனும் பதியை யொத்த, எம் எழில் மை உண்கண் கலுழ - எமது அழகிய மையுண்ட கண்ணினளாய தலைவி அழ ;

க—ஊ. நாள் உலா எழுந்த கோள் வல் உளியம்-விடியற் காலத்தே எழுந்து உலாவிய தன் இரையைக் கொள்ளுதலில் வல்ல கரடி, ஓங்குசினை இருப்பைத் தீம் பழம் முனையின்-உயர்ந்த கிளைகளை யுடைய இருப்பை மரத்தின் இனிய பழத்தினை வெறுப்பின், பல்கிளைச் சிதலை-பல கிளைகளாய கறையான், நனைவாய் ஒருங்கு முயன்று எடுத்த- நனைந்த வாயால் ஒருங்குகூடி வருந்திக் கட்டிய, புல்அளைப் புற்றின்-,

புல்லிய வளைகளையுடைய புற்றினது, நெடுங்கோடு-நெடிய உச்சியினை, இரும்பு ஊது குருகின் இடந்து - இருப்பு உலையில் ஊதும் துருத்தி யைப் போன்று (உயிர்த்துப்) பெயர்த்து, இரை தேரும்-இரையினை ஆய்ந்தெடுத்துண்ணும், மண்பக வறந்த ஆங்கண்-மண் பிளவுபட வறட்சியுற்ற பாலை நிலமாய அவ்விடத்து;

கூ—க0. கண் பொரக் கதிர் தெற-வெய்யில் கண்களைப் பார்க்க வொண்ணுதவாறு பொர ஞாயிறு காய்தலின், நெறி அயல் மராஅம்-நெறியின் அயலதாகிய வெண்கடம்புகளின், கவிழ்ந்த உலறுதலை நோன் சினை ஏறி-(தழைகள் வாடிக்) கவிழ்ந்துள காய்ந்த உச்சியினையுடைய வலிய கிளைகளில் ஏறி, புலம்பு கொள எறி பருந்து உயவும்-இரையினைப் பாய்ந்தெடுக்கும் பருந்து தனிமை கொள வருந்தும், என்றூழ் நீள் இடை-வெப்பம் மிக்க நீண்ட இடங்களாய, வெம்முனை அருஞ்சுரம் நீந்தி - வெவ்விய முனைகளையுடைய அரிய சுரத்தினைத் தாண்டி;

கக. சேறிரோ - செல்லுவீரோ.

(முடிபு) ஐய! பொருட்கு உள்ளம் துரத்தலின், உண் கண் கலுழ, அருஞ்சுரம் நீந்திச் சேறிரோ.

உளியம் தீம்பழம் முனையின் நெடுங்கோடிடந்து இரை தேரும் ஆங்கண் பருந்து உயவும் நீளிடை அருஞ்சுரம் எனக.

(வி - ரை.) [1]'அத்த விருப்பை யார்கழல் புதுப்பூத், துய்த்த வாய துணிகலம் பரக்க,......வன்கை யெண்கின் வயநிரை பரக்கும்' எனக் கரடி இருப்பைப்பூ உண்டலும், [2]'ஈயற் புற்றத் தீர்ம்புறத் திறுத்த, குரும்பி வல்சிப் பெருங்கை யேற்றை' எனப் புற்றும் பழஞ்சோறு உண்டலும் முன்னர் வந்துள்ளமை காண்க.

கரடி அகழ்கின்ற காலத்து உயிர்த்தலின், குருகின் இடந்து என்ருர். முனை-எயினர் இருப்பு. அழுவம்-போர்க்களப் பரப்பு. எம்ஐ எழில் எனப் பிரித்து வியக்கத்தக்க அழகு என்றுரைத்தலுமாம். உண்கண் : ஆகுபெயர்; தலைவியை உளப்படுத்தி எம் கண் கலுழ என்றுரைத்தலுமாம். இது செலவழுங்குவித்தது.

———

1, 2. அகம்: கரு; அ.

82. குறிஞ்சி

[தோழிக்குத் தலைவி அறத்தொடு நின்றது.]

ஆடமைக் குயின்ற அவிர்துளை மருங்கில்
கோடை யவ்வளி குழலிசை யாகப்
பாடின் அருவிப் பனிநீர் இன்னிசைத்
தோடமை முழவின் துதைகுர லாகக்
கணக்கலை இருக்கும் கடுங்குரல் தூம்பொடு
மலைப்பூஞ் சாரல் வண்டியா ழாக
இன்பல் இமிழிசை கேட்டுக் கலிசிறந்து
மந்தி நல்லவை மருள்வன நோக்கக்
கழைவளர் அடுக்கத் தியலியா டும்மயில்
[1]நனவுப்புகு விறலியில் தோன்றும் நாடன்
உருவ வல்வில் பற்றி அம்புதெரிந்து
செருச்செய் யானை சென்னெறி வினாஅய்
புலர்குரல் ஏனற் புழையுடை ஒருசிறை
மலர்தார் மார்பன் நின்றோற் கண்டோர்
பலர்தில் வாழி தோழி அவருள்
ஆரிருட் கங்குல் அணையொடு பொருந்தி
ஓரியா னாகுவ தேவன்கொல்
நீர்வார் கண்ணொடு நெகிழ்தோ ளேனே.

—கபிலர்.

(சொ - ள்.) கசு. தோழி வாழி-;

க—கசு. ஆடு அமைக் குயின்ற அவிர் துளை மருங்கில் - அசையும் மூங்கிலில் துளைக்கப்பெற்ற விளங்கும் துளையிடத்தே, கோடை அவ் வளி குழல் இசையாக - அழகிய மேல் காற்றினாலெழும் ஒலி குழலின் இசையாகவும், பாடு இன் அருவிப் பனிநீர் இன்னிசை - ஒலி இனிய அருவியின் குளிர்ந்த நீரின் இனிய ஓசை, தோடு அமை முழவின் துதை குரலாக - தொகுதியாகிய முழவின் நெருங்கிய இசையாகவும், கணக் கலை இருக்கும் கடுங்குரல் தூம்பொடு - கூட்டமாய கலைமான்கள் தாழ ஒலிக்கும் கடிய குரல் பெருவங்கியத்தின் இசையாகவும் (அதனொடு), மலைப் பூஞ்சாரல் வண்டு யாழாக - மலைச்சாரலிடத்தே பூக்களினுள்ள வண்டின் ஒலி யாழின் இசையாகவும்ஆக, இன்பல் இமிழ் இசைகேட்டு - இங்ஙனம் இனிய பலவாய ஒலிக்கும் இசைகளைக் கேட்டு, கலி சிறந்து - ஆரவாரம் மிக்கு, மந்தி நல்லவை மருள்வன நோக்க - மந்திகளாய

(பாடம்) 1. விழவுக்கள விறலியில்.

நல்ல திரள் வியப்புற்றுக்காண, கழை வளர் அடுக்கத்து - மூங்கில் வளரும் பக்க மலையில், இயலி ஆடும் மயில் - உலாவி ஆடும் மயில்கள், நனவுப் புகும் விறலியில் தோன்றும் நாடன் - களத்திற் புகுந்தாடும் விறலிபோலத் தோன்றும் நாட்டையுடையவனாகிய, மலர் தார் மார்பன் - அகன்ற தாரினை யணிந்த மார்பையுடையவன், உருவ வல் வில் பற்றி - அழகிய வலிய வில்லினைக் கையிற் பற்றி, அம்பு தெரிந்து - சிறந்த அம்பினை ஆய்ந்து கொண்டு, செருச் செய் யானை செல் நெறி வினாஅய் - தன்னால் அம்பு எய்யப்பெற்ற யானை சென்ற நெறியினை வினவி, புலர் குரல் ஏனல் புழையுடை ஒருசிறை - முதிர்ந்த கதிரினையுடைய தினைப் புனத்தின் வாயிலின் ஒரு பக்கத்தே, நின்றோன் கண்டோர் - நின்றவனைக் கண்டோர், பலர் - பலராவர்;

கங—கஅ. அவருள் - அவர் தம்முள், ஆர் இருள் கங்குல் - அரிய இருள் செறிந்த இரவில், அணையொடு பொருந்தி - அணையின்கண் தங்கி, நீர்வார் கண்ணொடு - நீர் சொரியும் கண்ணினொடு, நெகிழ் தோளேன் - மெலிந்த தோளையுடையேனாக; ஓர் யான் ஆகுவது எவன் கொல் - யானொருத்தியுமே ஆயது என்னையோ?

(முடிபு) தோழி வாழி! நாடன், மார்பன் நின்றோற் கண்டோர் பலர்; அவருள் அணையொடு பொருந்தி நீர்வார் கண்ணொடு, நெகிழ் தோளேன் ஓர் யான் ஆகுவது எவன் கொல்?

(வி - ரை.) மூங்கிலில் வண்டு துளைத்த துளையின் வழியே மேல் காற்றுச் செல்லுதலால் எழும் ஓசை, குழலிசை போலும் என்னுங் கருத்து, 'ஆடமைத் தும்பி குயின்ற, அகலா வந்துளை கோடை முகத் தலின், நீர்க்கியங் கினநிரைப் பின்றை வார்கோல், ஆய்க்குழற் பாணியி னதுவந் திசைக்கும்' (உ௨௫) எனப் பின்னர் வருதலுங் காண்க. இவ் வுருவகம், [1]'பருதியஞ் செல்வன் விரிகதிர்த் தானைக், கிருள் வளைப் புண்ட மருள்படு பூம்பொழிற், குழலிசை தும்பி கொளுத்திக் காட்ட, மழலை வண்டினம் நல்லியாழ் செய்ய, வெயினுழை பறியாக் குயினுழை பொதும்பர், மயிலா டரங்கின் மந்தி காண் பனகாண்' என மணிமேகலை யில் அமைந்திருத்தல் அறிந்து இன்புறத்தக்கது உருவ - என்றதனை உரிச்சொல் ஈறு திரிந்ததெனக் கொண்டு உட்குப் பொருந்திய என்றலு மாம். [2]'உருவக் குதிரை மழவர் ஓட்டிய' என்பதன் உரை காண்க. செருச் செய் யானை - போர்செய்து அம்பு எய்யப்பெற்ற யானை. மலர் மார்பு என இயையும். மலர்ந்த தார் எனச் சினைக்கேற்ற அடையாக் கலுமாம். தில்: அசை.

'ஆடமை குயின்ற...நாடன்' என்றது இங்ஙனம் பிறர்க்கெல்லாம் இன்பஞ் செய்யும் நாடனைக் கண்டார் பலருள்ளும் நமக்கே துயராவான் என்னென்றவாறு. இச் செய்யுள் புதுமை பொருளாகத் தோன்றிய வியப்பு என்னும் மெய்ப்பாடு.

---

1. மணி. ௪: க - ௯. 2. அகம்: க.

(மே - ள்.) [1]'வரைவிடை வைத்த காலத்து வருந்தினும், வரையா நாளிடை வந்தோன் முட்டினும், உரையெனத் தோழிக் குரைத்தற் கண்ணும், தானே கூறுங் காலமு முளவே' என்னும் சூத்திரத்து இச் செய்யுளை எடுத்துக்காட்டி, 'அவனை ஆயத்தார் பலருங் கண்டாரென வந்தோன் முட்டியவாறும், அவருள் நெகிழ் தோளேன் யானேயெனத் தானே கூறிவாறுங் காண்க' என்றுரைத்தனர், நச்.

[2]'புதுமை பெருமை' என்னுஞ் சூத்திரத்து 'மந்தி நல்லவை... தோன்று நாடன்' என்றவழி பண்டு ஒருகாலும் கண்டறியாதபடி ஆடிற்று மயில் என்றமையின், பிற பொருட்கட் டோன்றிய புதுமையாயிற்று எனவும், 'மலர்தார் மார்பன்...நெகிழ் தோளேனே' என்றது தன்கட்டோன்றிய புதுமை பற்றி வியப்புப் பிறந்தது. என்னை? தன் கருத்து வெளிப்படாது தன் மெய்க்கட்டோன்றிய புதுமையைத் தலைவி வியந்தாள் போலத் தோழிக்கு அறத்தொடு நின்றமையின் எனவும், [3]'இன்பத்தை வெறுத்தல்' என்னுஞ் சூத்திரத்து 'கண்டுயில் மறுத்த லென்பது 'இரவும் பகலுந் துஞ்சாமை'; அது 'புலர்குர லேனல்...... நெகிழ்தோ ளேனே' என வரும் எனவும் உரைத்தார், பேரா.

83. பாலை

[தலைமகன் இடைச் சுரத்துத் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.]

வலஞ்சுரி மராஅத்துச் சுரங்கமழ் புதுவீச்
சுரியா ருளைத்தலை பொலியச் சூடிக்
கறையடி மடப்பிடி கானத் தலறக்
களிற்றுக்கன் றொழித்த உவகையர் கலிசிறந்து
கருங்கால் மராஅத்துக் கொழுங்கொம்பு பிளந்து
பெரும்பொளி வெண்ணார் அழுந்துபடப் பூட்டி
நெடுங்கொடி நுடங்கும் நியம மூதூர்
நறவுநொடை நல்லில் புதவுமுதற் பிணிக்குங்
கல்லா இளையர் பெருமகன் புல்லி
வியன்றலை நன்னாட்டு வேங்கடங் கழியினும்
சேயர் என்னா தன்புமிகக் கடைஇ
எய்தவந் தனவால் தாமே நெய்தல்
கூம்புவிடு நிகர்மலர் அன்ன
ஏந்தெழில் மழைக்கணெம் காதலி குணனே.

—கல்லாடனார்

1. தொல். களவு: ௨௧. 2. தொல். மெய்ப்: ௭.
3. தொல். மெய்ப்: ௨௨.

(சொ - ள்.) நெஞ்சே!

௧—௧௦. வலம் சுரி மராஅத்து சுரம் கமழ் புதுவீ - வலமாகச் சுரித்த வெண்கடம்பினது சுரமெல்லாம் கமழும் புதிய பூக்களை, சுரி ஆர் உளைத் தலை பொலியச் சூடி - சுருள் கொண்ட உளைபோன்ற மயிரினையுடைய தலையில் விளங்கும்படி அணிந்து, கறை அடி மடப்பிடி கானத்து அலற-உரல்போன்ற அடியினையுடைய இளைய பெண் யானை காட்டிற் (பிரிந்து) அலற, களிற்றுக் கன்று ஒழித்த உவகையர்-யானைக் கன்றினைப் பிரித்துக்கொண்ட மகிழ்ச்சியை யுடையராய், கலி சிறந்து - செருக்கு மிக்கு, கருங்கால் மராஅத்துக் கொழுங் கொம்பு பிளந்து - வலிய அடிமரத்தினையுடைய வெண் கடம்பின் வளவிய கொம்பினைப் பிளந்து, பெரும் பொளி வெண் நார்-பெரிதாக உரித்த வெள்ளிய நார்க் கயிற்றால், அழுந்துபடப் பூட்டி-அக் கன்றினை அழுத்தம் பெறக் கட்டிக் கொணர்ந்து, நெடுங்கொடி நுடங்கும் நியமம் மூதூர்-நீண்ட கொடிகள் அசையும் அங்காடிகளையுடைய பழைமையான ஊரில், நறவு நொடை நல்இல் புதவு முதல் பிணிக்கும் - கள்விற்கும் நல்ல இல்லின் வாயிலிடத்தே பிணித்திடும், கல்லா இளையர்-தம் வேட்டுவத் தொழிலன்றிப் பிறிது தொழில் கல்லாத வேடர்கட்கு, பெருமகன் - தலைவனாகிய, புல்லி - புல்லி என்பானது, வியன்தலை நல் நாட்டு வேங்கடம் கழியினும் - விரிந்த இடத்தினையுடைய நல்ல நாட்டின்கண்ணுள்ள வேங்கட மலையினைக் கடந்து செல்லினும்;

௧௧—௪. நெய்தல் கூம்பு விடு நிகர் மலர் அன்ன - நெய்தலினது முகை யவிழ்ந்த ஒளி பொருந்திய மலரை யொத்த, ஏந்துஎழில் மழைக் கண் எம்காதலி குணன் - அழகினை ஏந்திய குளிர்ந்த கண்ணினளாய நம் காதலியின் குணங்கள், சேயர் என்னாது - சேய்மைக்கண் சென்றவர் என்னாது, அன்புமிகக் கடைஇ - அன்பு மிகச் செலுத்திவிட, எய்த வந்தன தாம் - தாம் நம்மால் அணுக வந்தன.

(முடிபு) நெஞ்சே! (நாம்) புல்லி வேங்கடம் கழியினும், எம் காதலி குணன் தாம் சேயர் என்னாது அன்பு மிகக் கடைஇ எய்த வந்தன.

(வி - ரை.) உளை - தலையாட்டம். ஒழித்த உவகையர்: ஒழித்த: பெயரெச்சம் காரணப் பொருட்டாக வந்தது.

(மே - ள்.) [1]'வெறியறி சிறப்பின்' என்னுஞ் சூத்திரத்து, தருதலும் என்ற மிகையால், நிரையல்லாத கோடலும் அத் துறைப்பாற்படும் என்றுரைத்து, 'கறையடி மடப்பிடி கானத் தலறக், களிற்றுக் கன்றெழித்த வுவகையர் கலிசிறந்து,......கல்லா விளையர் பெருமகன் புல்லி' என்ற அடிகளைக் காட்டி,......யானைக் கன்றைக் கவர்ந்தவாறு காண்க என்றனர், நச்.

---

1. தொல். புறத்: ௫.

84. முல்லை

[தலைமகன் பாசறையிலிருந்து சொல்லியது.]

மலைமிசைக் குலைஇய உருகெழு திருவில்
பணைமுழங் கெழிலி பௌவம் வாங்கித்
[1]தாழ்பெயற் பெருநீர் வலனேர்பு வளைஇ
மாதிரம் புதைப்பப் பொழிதலின் காண்வர
இருநிலங் கவினிய ஏமுறு காலை
நெருப்பின் அன்ன சிறுகட் பன்றி
அயிர்க்கண் படாஅர்த் துஞ்சுபுறம் புதைய
நறுவீ முல்லை நாண்மலர் உதிரும்
புறவடைந் திருந்த அருமுனை இயவில்
சீறூ ரோளே [2]ஒண்ணுதல் யாமே
எரிபுரை பன்மலர் பிறழ வாங்கி
அரிஞர் யாத்த அலங்குதலைப் பெருஞ்சூடு
கள்ளார் வினைஞர் களந்தோறும் மறுகும்
தண்ணடை தழீஇய கோடிநுடங் காரெயில்
அருந்திறை கொடுப்பவுங் கொள்ளான் சினஞ் [சிறந்து
வினைவயிற் பெயர்க்குந் தானைப்
புனைதார் வேந்தன் பாசறை யேமே.

—மதுரை எழுத்தாளன்.

(சொ - ள்.) ௧—௫. மலைமிசைக் குலைஇய உருகெழு திருவில் - மலைமீது வளைந்த அச்சந் தரும் அழகிய வில்லினையுடைய, பணை முழங்கு எழிலி - முரசமென முழங்கும் மேகம், பௌவம் வாங்கி - கடல் நீரை முகந்துகொண்டு, வலன் ஏர்பு வளைஇ - உலகினை வலனாக எழுந்து வளைத்து, தாழ் பெயல் பெருநீர் - இறங்கிப் பெய்யும் மிக்க மழையை, மாதிரம் புதைப்பப் பொழிதலின் - திசை யெல்லாம் மறையப் பொழிதலால், காண்வர இருநிலம் கவினிய ஏம் உறு காலை - காட்சி யுறப் பெரிய நிலம் அழகுபெற்ற இன்பம் எய்திய இக்காலத்தே;

௧௦. ஒண்ணுதல் - ஒளி பொருந்திய நெற்றியினையுடைய நம் தலைவி;

௬—௧௦. அயிர்க்கண் படாஅர்த் துஞ்சு - நுண் மணலின்கண்ணுள்ள சிறு தூற்றினிடத்தே தூங்கும், நெருப்பின் அன்ன சிறுகண் பன்றி - நெருப்பினை யொத்த சிறிய கண்ணினையுடைய பன்றியின்,

(பாடம்) 1. தாழ்பெயற் கெதிரி. 2. நன்னுதல்.

புறம் புதைய - முதுகு மறைய, நறுவீ முல்லை நாள் மலர் உதிரும் - நறிய பூவினதாகிய முல்லையின் புதிய பூக்கள் உதிரும், புறவு அடைந்திருந்த அருமுனை இயவில் - காடு சார்ந்திருக்கும் அரிய முனைகளையுடைய நெறியிலுள்ள, சீறூரோள் - சிறிய ஊரின்கண் உள்ளாள் அவள்;

௧௦—எ. யாமே - யாமோ, எரி புரை பன்மலர் பிறழ வாங்கி நெருப்புப்போன்ற பல மலர்களை மாறுபட வைத்து வலித்து, அரிஞர் யாத்த அலங்குதலைப் பெருஞ்சூடு - நெல்லரிஞர் கட்டிய அசையும் பக்கங்களுடைய பெரிய நெற்கட்டினைக் கொண்டு, கள்ஆர் வினைஞர் களந்தொறும் மறுகும் - கள்ளினை உண்ட களமர் களந்தோறும் கொடு போகும், தண்ணடை தழீஇய கொடி நுடங்கு ஆர் எயில் - மருதநிலம் சூழ்ந்த கொடிகள் அசையும் இவ்வரிய எயிலை, அருந்திறை கொடுப்பவும் கொள்ளான் - பகைவர் வணங்கி அரிய திறையாகக் கொடுப்பவும் ஏற்றுக் கொள்ளானாகி, சினஞ் சிறந்து - சினம் மிக்கு, வினைவயின் பெயர்க்கும் தானை - மேன்மேலும் போரின்கட் செலுத்தும் சேனையினையுடைய, புனைதார் வேந்தன் பாசறையேம் - மாலையை அணிந்த அரசனது பாசறையிடத்தே யுள்ளேம்.

(முடிபு) எறிவி பொறிநலின் இருநிலம் கவினிய ஏமுறு காலை, ஒண்ணுதல் சீறூரோள்: யாமே, ஆரெயில் திறை கொடுப்பவும் கொள்ளான் வினைவயிற் பெயர்க்கும் தானைப் புனைதார் வேந்தன் பாசறையேம்.

(வி - ரை.) ஏம் - ஏமம்; பாதுகாவலுமாம். எரிபுரை மலர் - தாமரை, செங்கழுநீர். பிறழ என்றது பூவோடரிந்த நெல்லைக் கட்டுங் காலத்து அரியோடு மாற வைத்துக் கட்டப் பெறுதலால் அவை தம்மின் மாறுபடல். எயில் - அரண், ஊர். தூதுவிடக் கருதிய தலைவன் - சீறூரோள் ஒண்ணுதல் எனத் தன் வருத்தந் தோன்றக் கூறினன் என்க. இதனைத் தூது கண்டு கூறிய தென்பர் நச்சினார்க்கினியர்.

(மே - ள்.) [1]'ஏவன் மரபின்' என்னுஞ் சூத்திரத்து, இச்செய்யுளை எடுத்துக்காட்டி, இது தூது கண்டு வருந்திக் கூறியது எனவும், இதன்கண் தன்னூரும் அருமுனையியவிற் சீறூர் என்றலின், தான் குறுநில மன்னன் என்பது பெற்றாம் என்றும், [2]'தானே சேறலும்' என்னுஞ் சூத்திரத்து, 'இது, குறுநில மன்னர் போல்வார் சென்றமை தோன்றக் கூறியது' என்றும், [3]'ஒன்றாத் தமரினும்' என்னும் சூத்திரத்து இது, 'ஆகித் தோன்றும் பாங்கோர் பாங்கினும்' என்றதற்கு உதாரணமாகு மென்றும், [4]'கூதிர் வேனில்' என்னுஞ் சூத்திரத்து, 'வினைவயிற்...... பாசறை யேமே' எனத் தலைவியை நினைவன வாகைக்கு வழுவாம்; அகத்திற்கு வழுவன்று என்றும் கூறுவர், நச்.

1. தொல். அகத்: ௨௭. 2, தொல். அகத்: ௨௭.
3. தொல். அகத்: ௪௧: 4. தொல். புறத்: ௨௧.

85. பாலை

[தலைமகன் பிரிய வேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறுத்தியது.]

நன்னுதல் பசப்பவும் பெருந்தோள் நெகிழவும்
உண்ணா உயக்கமொ டுயிர்செலச் சாஅய்
இன்னம் ஆகவும் இங்குநத் துறந்தோர்
அறவர் அல்லர் அவரெனப் பலபுலந்து
ஆழல் வாழி தோழி சாரல்
ஈன்றுநாள் உலந்த மென்னடை மடப்பிடி
கன்றுபசி களைஇய பைங்கண் யானை
முற்றா மூங்கில் முளைதரு பூட்டும்
வென்வேல் திரையன் வேங்கட நெடுவரை
நன்னாட் பூத்த நாகிள வேங்கை
நறுவீ யாடிய பொறிவரி மஞ்ஞை
நனைப்பசுங் குருந்தின் நாறுசினை யிருந்து
துணைப்பயிர்ந் தகவுந்[1] துனைதரு தண்கார்
வருதும் யாமெனத் தேற்றிய
பருவங் காணது பாயின்றால் மழையே.

—காட்டூர் கிழார் மகனார் கண்ணனார்.

(சொ - ள்.) ௧—௫. தோழி வாழி -; நன்னுதல் பசப்பவும் - அழகிய நெற்றி பசந்திடவும், பெருந் தோள் நெகிழவும் - பெரிய தோள் மெலிந்திடவும், உண்ணா உயக்கமொடு உயிர் செலச் சாஅய் - உண்ணாமையா லாய வருத்தத்தால் உயிர் நீங்க மெலிந்து, இன்னம் ஆகவும் - நாம் இந்நிலையினமாகவும், இங்கு நம் துறந்தோர்-இங்கு நம்மைவிட்டுப் பிரிந்தார் நம் தலைவர், அறவர் அல்லர் அவர் - எனவே அவர் அறத்தினரல்லர், எனப் பல புலந்து ஆழல் - என்றிவ்வாறு பலவுங் கூறி வெறுத்துத் துயரில் அழுந்தாதே ;

௫—௧௫. சாரல் - மலைச் சாரற்கண்ணே, ஈன்று நாள் உலந்த மெல்நடை மடப்பிடி கன்று பசி களைஇய - ஈன்று அணிமை கழிந்த மெல்லிய நடை வாய்ந்த இளைய பிடியினதும் அதன் கன்றினதும் பசியைப் போக்கற்கு, பைங்கண் யானை - பசிய கண்ணினையுடைய களிறு, முற்றா மூங்கில் முளை தருபு ஊட்டும் - மூங்கிலின் முற்றா முளையினைக் கொணர்ந்து உண்பிக்கும், வென்வேல் திரையன் வேங்கட நெடுவரை - வெற்றி பொருந்திய வேலினையுடைய திரையனது வேங்கடமெனும் நீண்ட மலையில், நன்னாள் பூத்த நாகு இளவேங்கை-நல்ல நாட்காலையிற்

(பாடம்) 1. துணைதரு தண்கார்.

பூத்த மிகஇளைய வேங்கை மரத்தின், நறுவீ ஆடிய பொறி வரிமஞ்ஞை - நறியபூக்களின் துகளை அளைந்த பொறிகளுடன் கூடிய வரிகளையுடைய மயில், நனைப் பசுங் குருந்தின் நாறு சினை யிருந்து - தேனையுடைய பசிய குருந்த மரத்தின் நறுமணம் வீசும் கிளையிலிருந்து, துணைப் பயிர்ந்து அகவும் துனைதரு தண்கார் - தன் துணையை அழைத்துக் கூப்பிடும் விரைந்து வரும் குளிர்ந்த கார்ப் பருவமே, யாம் வருதும் எனத் தேற்றிய பருவம் - நம் தலைவர் தாம் வருவோம் எனத் தெளிவித்த பருவமாகும், மழை பாயின்று - அதற்கு மழையும் பரவாநின்றது, அதுகாண் - அதனைக் காண்பாயாக.

(முடிபு) தோழி, வாழி! நாம் இன்னம் ஆக, நம் தலைவர் நம்மைத் துறந்தார், அவர் அறவரல்லர், எனப் புலந்து ஆழல்; தண்கார், யாம் வருதும் எனத் தேற்றிய பருவம், மழை பாயின்று; அது காண்.

யானை முனை தருபு ஊட்டும் வேங்கட நெடுவரை வேங்கை நறுவீயாடிய மஞ்ஞை குருந்தின் சினையிருந்து துணைப் பயிர்ந்தகவும் கார் என்க.

(வி - ரை.) நம் துறந்தோர் என்பது நத்துறந்தோர் என விகாரமாயிற்று. நாள் உலந்த - நாள் முடிந்த; ஈன்றணிமை கழிந்த என்றபடி. பிடி கன்று இவற்றின் பசியென விரித்துக் கொள்க. வேங்கை பூக்குங் காலம் மணநாள் ஆகலின், நன்னாட் பூத்த என்றாள் எனலுமாம். கார் விரைவில் வந்துவிடும் என்பாள் துனைதரு தண்கார் எனவும் மழை பாயின்று எனவும் கூறினாள். எனவே இது வேனிற் காலத்து இறுதியாயிற்று. மஞ்ஞை துணைப் பயிர்ந்து அகவும் என்றது, கார் காலத்தில் பிரிந்திருத்தல் அருமையால் கூடுதற்கு அழைக்கும் என்றபடி.

---

86. மருதம்

[வாயில் மறுத்த தோழிக்குத் தலைமகன் சொல்லியது. தலைமகளைக் கூடி இன்புற்றிருந்த தலைமகன் பண்டு நிகழ்ந்தது சொற்று இன்புற்றிருந்ததூஉமாம்.]

உழுந்துதலைப் பெய்த கொழுங்களி மிதவை
பெருஞ்சோற் றமலை நிற்ப நிரைகால்
தண்பெரும் பந்தர்த் தருமணல் ஞெமிரி
மனைவிளக் குறுத்து மாலை தொடரிக்
கனையிருள் அகன்ற கவின்பெறு காலை
கோள்கால் நீங்கிய கொடுவெண் டிங்கள்
கேடில் விழுப்புகழ் நாடலை வந்தென
உச்சிக் குடத்தர் புத்தகல் மண்டையர்
பொதுசெய் கம்பலை முதுசெம் பெண்டிர்

முன்னவும் பின்னவும் முறைமுறை தரத்தரப்
புதல்வற் பயந்த திதலையவ் வயிற்று
வாலிழை மகளிர் நால்வர் கூடிக்
கற்பினின் வழாஅ நற்பல உதவிப்
பெற்றோற் பெட்கும் பிணையை யாகென
நீரோடு சொரிந்த ஈரிதழ் அலரி
பல்லிருங் கதுப்பின் நெல்லோடு தயங்க
வதுவை நன்மணம் கழிந்த பின்றைக்
கல்லென் சும்மையர் ஞெரேரெனப் புகுதந்து
பேரிற் கிழத்தி யாகெனத் தமர்தர
ஓரிற் கூடிய உடன்புணர் கங்குல்
கொடும்புறம் வளைஇக் கோடிக் கலிங்கத்
தொடுங்கினள் கிடந்த ஓர்புறந் தழீஇ
முயங்கல் விருப்பொடு முகம்புதை திறப்ப
அஞ்சினள் உயிர்த்த காலை யாழநின்
நெஞ்சம் படர்ந்த நெஞ்சா துரையென
இன்னகை இருக்கைப் பின்யான் வினவலின்
செஞ்சூட் டொண்குழை வண்காது துயல்வர
அகமலி உவகையள் ஆகி முகனிகுத்
தோய்யென இறைஞ்சி யோளே மாவின்
மடங்கொள் மதைஇய நோக்கின்
ஒடுங்கீர் ஓதி மாஅ யோளே.

—நல்லாவூர் கிழார்.

(சொ - ள்.) க—ச. உழுந்து தலைப்பெய்த கொழுங் களிமிதவை - உழுத்தம் பருப்புடன் கூட்டிச் சமைத்த செவ்விய குழைதலை யுடைய பொங்கலொடு, பெருஞ் சோற்று அமலை நிற்ப - பெரிய சோற்றுத் திரளையை உண்டல் இடையறாது நிகழ, நிரைகால் தண் பெரும் பந்தர் - வரிசையாகிய கால்களையுடைய குளிர்ந்த பெரிய பந்தரில், தருமணல் ஞெமிரி - கொணர்ந்திட்ட மணலைப் பரப்பி, மனை விளக்கு உறுத்து - மனையின்கண் விளக்கினை ஏற்றி வைத்து, மாலை தொடரி - மாலைகளைத் தொங்கவிட்டு ;

ரு—க0. கோள் கால் நீங்கிய கொடுவெண் திங்கள் - தீய கோள்களின் தொடர்பு நீங்கப்பெற்ற வளைந்த வெள்ளிய திங்களை, கேடுஇல் விழுப்புகழ் நாள் தலை வந்தென - குற்றமற்ற சிறந்த புகழினையுடைய உரோகிணி எனும் நாள் அடைந்ததாக, கனைஇருள் அகன்ற கவின்

பெறு காலை-அந்நாளிலே மிக்க இருள் நீங்கிய அழகு பொருந்திய விடியற்காலையில், உச்சிக்குடத்தர் புது அகல் மண்டையர்-உச்சியில் குடத்தினை யுடையரும் கையினிற் புதிய அகன்ற மண்டை எனும் கலத்தினை யுடையரும் ஆகிய, பொதுசெய் கம்பலை முதுசெம் பெண்டிர் - மணத்தினைச் செய்து வைக்கும் ஆரவாரமுடைய முதிய மங்கல மகளிர், முன்னவும் பின்னவும் முறை முறை தரத் தர - முன்னே தருவனவும் பின்னே தருவனவும் முறை முறையாகத் தந்திட ;

கக—கசு. புதல்வன் பயந்த திதலை அவ் வயிற்று - மகனைப் பெற்ற தேமலுடைய அழகிய வயிற்றினையுடைய, வால் இழை மகளிர் நால்வர் கூடி - தூய அணிகளையுடைய மகளிர் நால்வர் கூடி நின்று, கற்பினின் வழாஅ நற்பல உதவி - கற்பினின்றும் வழுவாது நன்றாய பல பேறுகளையும் தந்து, பெற்றோற் பெட்கும் பிணையை ஆகென-நின்னை எய்திய கணவனை விரும்பிப் பேணும் விருப்பத்தையுடையை ஆக என்று வாழ்த்தி, நீரொடு சொரிந்த ஈர்இதழ் அலரி - நீரொடு கூட்டிப் பெய்த குளிர்ந்த இதழ்களையுடைய பூக்கள், பல் இருங் கதுப்பின் நெல்லொடு தயங்க-மிக்க கரிய கூந்தலில் நெற்களுடன் விளங்க ;

கஎ. வதுவை நன்மணம் கழிந்த பின்றை - இங்ஙனம் நன்றாகிய வதுவைக் கலியாணம் முடிந்த பின்பு ;

கஅ—உ0. தமர் கல் என் சும்மையர் ஞெரேரெனப் புகுதந்து - சுற்றத்தார் கல்லென்ற ஒலியினராய் விரைந்து வந்து, பேர் இற்கிழத்தி ஆக எனத் தர - பெரிய மனைக் கிழத்தி ஆவாய் என்று கூறிக் கூட்ட, ஓர் இல் கூடிய உடன்புணர் கங்குல் - ஓர் அறையில் உடன்கூடிய புணர்ச்சிக்குரிய இரவில் ;

உக—உசு. கொடும்புறம் வளைஇ - முதுகினை வளைத்து, கோடிக் கலிங்கத்து-கோடிப் புடைவைக்குள், ஒடுங்கினள் கிடந்த புறம் தழீஇ-ஒடுங்கிக்கிடந்த இடத்தினைச் சார்ந்து, முயங்கல் விருப்பொடு முகம் புதை திறப்ப - அணையும் விருப்புடன் முகத்தினை மூடியிருந்த ஆடையினை நீக்க, அஞ்சினள் உயிர்த்த காலை - அஞ்சி உயிர்த்தபொழுது, நின் நெஞ்சம் படர்ந்தது எஞ்சாது உரையென - நின் உள்ளம் நினைந்ததனை மறையாது உரை என்று, பின் யான் வினவலின் - யான் பின்பு வினவுதலின், இன் நகை இருக்கை - இனிய மகிழ்ச்சியுடன் கூடிய இருக்கையின்கண் ;

உஎ—ஙக. மாவின் மடங்கொள் மதைஇய நோக்கின் - மானின் மடத்தினைக் கொண்டதும் செருக்கினை யுடையதுமான நோக்கினையும், ஒடுங்கு ஈர் ஓதி-ஒடுங்கிய குளிர்ந்த கூந்தலினையும் உடைய, மாஅயோள்-மாமை நிறத்தினை யுடையாள் ;

செஞ் சூட்டு ஒண் குழை வண்காது துயல்வர - சிவந்த மணிகள் பதித்த ஒள்ளிய குழை வளவிய காதின்கண் அசைய, அகம் மலி உவகையள் ஆகி - உள்ளம் நிறைந்த மகிழ்ச்சியினள் ஆகி, முகன் இகுத்து-

முகத்தினைத் தாழ்த்து, ஒய்யென இறைஞ்சியோள் - விரைந்து தலை வணங்கினள்.

(முடிபு) வதுவை நன் மணம் கழிந்த பின்றை, தமர்தர ஓரிற் கூடிய கங்குல், கோடிக் கலிங்கத்து ஒடுங்கினள் கிடந்த புறம் தழீஇ, முகம் புதைதிறப்ப, அஞ்சினள் உயிர்த்தகாலை, நின் நெஞ்சம் படர்ந்தது எஞ்சாது உரையென யான் வினவலின், மாயோள் முகன் இகுத்து ஒய்யென இறைஞ்சியோள்.

நான் தலைவந்தென, அமலை நிற்ப, பந்தர் விளக்குறுத்து, மாலை தொடரி, முது செம் பெண்டிர் தரத் தர, மகளிர் நால்வர் கற்பினின் வழாஅ நற்பல உதவிப் பெற்றோற் பெட்கும் பிணையை ஆகென, நீரொடு சொரிந்த அலரி கதுப்பின் நெல்லொடு தயங்க, வதுவை நன் மணம் கழிந்த பின்றை என்க.

(வி - ரை.) மிதவை – பொங்கல்; கும்மாயமுமாம். உண்பார் இடையறுமைபற்றி அமலை நிற்ப என்றான். ஞெமிரி - பரப்பி எனப் பிறவினைப் பொருட்டு. விளக்குறுத்து - தூய்மை செய்து என்றுமாம். கனையிருளகன்றகாலை யென்றமையால், முற்பக்கம் (பூர்வ பக்கம்) என்பது பெற்றாம். கோள் என்றது ஈண்டுத் தீய கோள்களை. உரோ கணி என்பதனை வருவித்து, விழுப்புகழ் நாளாவது உரோகணி திங் களை அடைந்த நாள் என்னலுமாம். உரோகணியும் திங்களும் கூடிய நாள் கலியாணத்திற்குச் சிறந்ததென்பது, 'திங்கட் சகடம் வேண்டிய துகடீர் கூட்டத்து......வதுவை மண்ணிய மகளிர்'[1] எனப் பின்னர் இந்நாலுள்ளும், [2]'வானூர் மதியம் சகடணைய வானத்துச், சாலியொரு மீன் தகையாளைக் கோவலன், மாமுது பார்ப்பான் மறைவழி காட் டிடத் தீவலம் செய்வது' எனச் சிலப்பதிகாரத்துள்ளும் வருதலான் அறியப்படும். கலியாணம் எல்லாரும் புகுதற்கு உரியதாகலின், 'பொது' எனப்பட்டது. பிணை - விருப்பம்; [3]'பிணையும் பேணும் பெட்பின் பொருள' என்பவாகலின். நெல்லொடு தயங்க என்றமையால், நெல் லும் சொரிந்தமை பெற்றாம். வதுவை மணமாவது - குளிப்பாட்டல். கோடிக்கலிங்கம்-புதுப் புடைவை. ஓர்புறந் தழீஇ: ஓர், அசை. யாழ: அசை. தலைமகன் தோழிக்கு வாயின் மறுத்தவழிக் கூறியதாயின் தலைவி எக்காலத்தும் என்பால் இன்னதோர் அன்புடையள்; அவள் கருத்தறியாது கூறுகின்றனை என்றான் என்க.

(மே - ள்.) [4]"கற்பெனப் படுவது' என்னுஞ் சூத்திரத்து, இச் செய்யுளைக் காட்டி, 'இதனுள் வதுவைக்கு ஏற்ற கரணங்கள் நிகழ்ந்த வாறும், தமர் கொடுத்தவாறுங் காண்க. சுற்றஞ் சூழ்ந்து நிற்றலானும் தமர் அறிய மணவறைச் சேறலானும் களவாற் சுருங்கி நின்ற நாண் சிறந்தமையைப் பின்னர்த் தலைமகன் வினவ, அவள் மறுமொழி கொடாது நின்றமையைத் தலைவன் தோழிக்குக் கூறியவாறு காண்க. இதனானே இது களவின்வழி நிகழ்ந்த கற்பாயிற்று என்றும்,

1. அகம்: கசு. 2. சிலப். மங்கல: ௫0-௫௩.
3. தொல். உரி: ௬0. 4. தொல். கற்பு: க.

'கரணத்தின் அமைந்து முடிந்த காலை' என்னுஞ் சூத்திரத்து 'முகனிகுத் தொய்யென விறைஞ்சி யோளே' என்பது கரணத்தின் அமைந்து முடிந்தது என்றும் கூறினர், நச்.

²'புகுமுகம் புரிதல்' என்னுஞ் சூத்திரத்து, 'அகமலி யுவகையளாகி முகனிகுத், தொய்யென விறைஞ்சி யோளே' என்றது சிதைவு பிறர்க்கின்மை என்னும் மெய்ப்பாட்டிற்கு உதாரணமாகக் காட்டி, இது தலைமகன் அறிய மெய்ப்பட்டதென்பது என்றும், ³'மறைவெளிப்படுதல் தமரிற் பெறுதல்' என்னுஞ் சூத்திரத்து, 'தமர்தர, ஓரிற்கூடி யுடன் புணர் கங்குல்' என்பது. தமரிற் பெறுதல் என்றும் உரைத்தனர், பேரா.

---

87. பாலை

[⁴வினைமுற்றி மீளுந் தலைமகன் இடைச்சுரத்துத் தன் னெஞ்சிற்குச் சொல்லியது.]

தீந்தயிர் கடைந்த திரள்கால் மத்தம்
கன்றுவாய் சுவைப்ப முன்றில் தூங்கும்
படலைப் பந்தர்ப் புல்வேய் குரம்பை
நல்கூர் சீறூர் எல்லித் தங்கிக்
குடுமி நெற்றி நெடுமரச் சேவல்
தலைக்குரல் விடியல் போகி முனாஅது
கடுங்கண் மறவர் கல்கெழு குறும்பின்
எழுந்த தண்ணுமை இடங்கட் பாணி
அருஞ்சுரம் செல்வோர் நெஞ்சந் துண்ணெனக்
குன்றுசேர் கவலை இசைக்கும் அத்தம்
நனிநீ டுழந்தனை மன்னே அதனால்
உவவினி வாழிய நெஞ்சே மையற
வைகுசுடர் விளங்கும் வான்தோய் வியனகர்ச்
சுணங்கணி வனமுலை நலம்பா ராட்டித்
தாழிருங் கூந்தனங் காதலி
நீளமை வனப்பின் தோளுமா ரணைந்தே.

—மதுரைப் பேராலவாயார்.

---

1. தொல். கற்பு: ௫.
2. தொல். மெய்ப்: ௧௨.
3. தொல். செய்யுள்: ௧௮௭.
(பாடம்) 4. இடைச்சுரத்து மீளலுறும் நெஞ்சிற்குத் தலைமகன் சொல்லியது.

(சொ - ள்.) கஉ. வாழிய நெஞ்சே-;

க—ச. தீம் தயிர் கடைந்த திரள்கால் மத்தம் - இனிய தயிரைக் கடைந்த திரண்ட தண்டினையுடைய மத்து, கன்று வாய் சுவைப்ப முன்றில் தூங்கும் - கன்று தன் வாயாற் சுவைத்திட முற்றத்தே தொங்கும், படலைப் பந்தர்ப் புல்வேய் குரம்பை - மர நிழலாகிய பந்தரையும் புல்லால் வேயப்பெற்ற குடில்களையுமுடைய, நல்கூர் சீறூர்- வறுமைப்பட்ட சிறிய ஊரின்கண், எல்லித் தங்கி - இரவிற்றங்கி;

ரு—சு. குடுமி நெற்றி நெடுமரச் சேவல் - செஞ்சூடு பொருந்திய நெற்றியையுடைய நீண்ட மரத்திலுள்ள சேவலின், தலைக்குரல் விடியற் போகி - முதற் குரல் எழுந்த விடியற்காலையிற் புறப்பட்டுச் சென்று;

௬—கக. முனாஅது - பழைமை யுடையதாகிய, கடுங்கண் மறவர் கல்கெழு குறும்பின் எழுந்த - வன்கண்மையுடைய மறவரது கற்கள் பொருந்திய காட்டரண்களில் எழுந்த, தண்ணுமை இடங்கண் பாணி- தண்ணுமைப் பறையின் அகன்ற கண்ணினின் றெழும் ஒலி, அருஞ் சுரம் செல்வோர் நெஞ்சம் துண்ணென இசைக்கும்-அரிய சுர நெறியே செல்வோர் நெஞ்சு நடுக்குற ஒலிக்கும், குன்று சேர் கவலை அத்தம்- குன்றினைச் சார்ந்த கவர்த்த நெறிகளையுடைய காட்டில், நனி நீடு உழந்தனை மன் - நீ மிகவும் நெடிது வருந்தினை;

கக—௪. அதனால் - ஆதலால், மை அற வைகு சுடர் விளங்கும் வான்றோய் வியன்நகர் - இருள் நீங்க விடிவிளக்கு விளங்குகின்ற வான் அளாவிய நம் பெரிய மாளிகையின்கண், தாழ்இருங் கூந்தல் நம் காதலி சுணங்கு அணி வனமுலை நலம் பாராட்டி - தாழ்ந்த கரிய கூந்தலையுடைய நம் காதலியின் சுணங்கு அணிந்த அழகிய முலையின் நல்லின்பத்தைப் பாராட்டி, நீள் அமை வனப்பின் தோளும் அணைந்து - நீண்ட மூங்கில் போன்ற அழகினையுடைய தோளினையும் அணைந்து, உவஇனி - இப்பொழுது மகிழ்வாயாக.

(முடிபு) நெஞ்சே வாழிய! நீ சீறூர் எல்லித் தங்கி விடியற் போகி அத்தம் நீடு உழந்தனை மன்னே; அதனால் வியனகர், நம் காதலி முலை நலம் பாராட்டி, தோளும் அணைந்து இனி உவ.

(வி - ரை.) படலை - தழைப்பரப்பு, படலைப் பந்தர் - மர நிழலாகிய பந்தர். வினைமுற்றி மீள்கின்றானாகலின் இப்பொழுது உவ என்றான். மை - இருள். வைகு சுடர் - விடியுமளவும் எரியும் விளக்கு. விடிவிளக்கு எனப்படும். தோளுமார், ஆர், அசை.

---

88. குறிஞ்சி

[இரவுக்குறி வந்த தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி சொல்லியது.]

முதைச்சுவல் கலித்த மூரிச் செந்தினை
ஓங்குவணர்ப் பெருங்குரல் உணீஇய பாங்கர்ப்
பகுவாய்ப் பல்லிப் பாடோர்த்துக் குறுகும்
புருவைப் பன்றி வருதிறம் நோக்கிக்
கடுங்கைக் கானவன் கழுதுமிசைக் கொளீஇய
நெடுஞ்சுடர் விளக்கம் நோக்கி வந்துநம்
நடுங்குதுயர் களைந்த நன்ன ராளன்
சென்றனன் கொல்லோ தானே குன்றத்
திரும்புலி தொலைத்த பெருங்கை யானைக்
கவுள்மலி பிழிதரும் காமர் கடாஅம்
இருஞ்சிறைத் தொழுதி யார்ப்ப யாழ்செத்
திருங்கல் விடரளை அசுணம் ஓர்க்கும்
காம்பமல் இறும்பில் பாம்புபடத் துவன்றிக்
கோடுவிரல் உளியம் கெண்டும்
வடுவாழ் புற்றின வழக்கரு நெறியே.

—ஈழத்துப் பூதன்தேவனார்.

(சொ - ள்.) க—எ. முதைச் சுவல் கலித்த - பழங்கொல்லையாகிய மேட்டு நிலத்தில் தழைத்த, மூரிச் செந்தினை - கொழுத்த செந்தினையின், ஓங்கு வணர்ப் பெருங் குரல் உணீஇய - உயர்ந்த வளைந்த பெரிய கதிரை உண்ண, பகுவாய்ப் பல்லி பாங்கர் பாடு ஓர்த்து - பிளந்த வாயினையுடைய பல்லி நற்பக்கத்தே செய்த ஒலியாய நிமித்தம் உணர்ந்து, குறுகும்-அணுக வரும், புருவைப் பன்றி வருதிறம் நோக்கி - இளமை பொருந்திய பன்றியின் வரும் வகையினை நோக்கி, கடுங்கைக் கானவன் - வலிய கையினையுடைய தினைப்புனங் காப்போன், கழுது மிசைக் கொளீஇய - பரண்மீது கொளுத்தி வைத்த, நெடுஞ்சுடர் விளக்கம் நோக்கி-நீண்ட சுடரின் ஒளியினை நோக்கி, வந்து நம் நடுங்கு துயர் களைந்த நன்னராளன் - வந்து நமது நடுக்கத்தைத் தரும் துயரினை ஒழித்த நன்மையாளனாகிய நம் தலைவன்;

அ—கரு. குன்றத்து இரும்புலி தொலைத்த பெருங்கை யானை - குன்றின்கண்ணுள்ள பெரிய புலியைக் கொன்ற பெரிய கையினையுடைய யானையின், கவுள் மலிபு இழிதரும் காமர் கடாஅம்-கன்னத்தி

(பாடம்) 1. ஏறத்துப் பூதன் தேவன்.

விருந்து பெருகி இழியும் அழகிய மதநீரில், இருஞ்சிறைத் தொழுதி ஆர்ப்ப-கரிய சிறகினையுடைய வண்டின் கூட்டம் ஒலிக்க, யாழ் செத்து-அதனை யாழிசையெனக் கருதி, இருங்கல் விடர் அளை அசுணம் ஓர்க்கும் - பெரிய மலையின் பிளப்பாய குகையிலுள்ள அசுணங்கள் உற்றுக் கேட்கும், காம்பு அமல் இறும்பில் - மூங்கில் நிறைந்த சிறு காட்டில், பாம்புபட துவன்றி-பாம்பு இறந்துபட நெருங்கி, கொடுவிரல் உளியம் கெண்டும் - வளைந்த விரலினையுடைய கரடி தோண்டும், வடு வாழ் புற்றின - வடுக்கள் பொருந்திய புற்றுக்களை யுடையனவாகிய, வழக்கு அருநெறி - வழங்குதற்கு அரிய நெறியின்கண், சென்றனன் கொல் - சென்றான் கொல்லோ!

(முடிபு) பன்றி வருதிற நோக்கிக் கானவன் கழுதுமிசைக் கொளீஇய விளக்கம் நோக்கி வந்து, நம் துயர்களைந்த நன்னராளன், வழக்கரு நெறி சென்றனன் கொல்லோ!

(வி - ரை.) பாடு - ஓசை. புருவை - இளமை. கழுது - பரண். புலியைக் கொன்ற யானையும், அசுணமும், பாம்பின் புற்றும், கரடியும் உடைய கொடு நெறியிற் சென்றானோ என்று வருந்தினள் என்க. இத் தன்மையான வழியிலே வந்து போகின்றானோவென இரங்கிக் கூறக் கேட்டு வரைவானாவது பயனாக இங்ஙனம் கூறினாள். பன்றி பல்லி நிமித்தம் பார்த்துச் செல்லுதலுண்டென்னுங் கருத்து, [1]"எய்ம்முள் ளன்ன பருஉமயி ரெருத்திற், செய்ம் மேவற் சிறுகட் பன்றி, ஓங்குமலை வியன்புனம் படீஇயர் வீங்குபொறி, நூழை நுழையும் பொழுதிற் றாழாது, பாங்கர்ப் பக்கத்துப் பல்லி பட்டென, மெல்ல மெல்லப் பிறக்கே பெயர்ந்து தன் கல்லளைப் பள்ளி வதியும் நாட" என நற்றிணையிலும் வந்திருத்தல் அறிந்து மகிழற்குரியது.

(உ - றை.) தினை நுகர்தற்குப் பன்றி நிமித்தம் பார்த்து வருகையைச் செய்தேயும், கானவன் அது வருதிறமறிந்து சுடர் கொளுத்தினாற்போல, தாமும் பேணி வந்தாரே யாயினும் வரவு வெளிப்படும் என்றவாறு.

---

1. நற். கஅ.

89. பாலை

[மகட் போக்கிய செவிலித்தாய் சொல்லியது.]

தெறுகதிர் ஞாயிறு நடுநின்று காய்தலின்
உறுபெயல் வறந்த ஓடுநோ் நனந்தலை
உருத்தெழு குரல [1]குடிஞைச் சேவல்
புல்சாய் விடரகம் புலம்ப வரைய
கல்லெறி இசையின் இரட்டும் ஆங்கண்
சிள்வீடு கறங்கும் சிறியிலை வேலத்
தூழுறு விளைநெற் றுதிரக் காழியர்
கவ்வைப் பரப்பின் வெவ்வுவர்ப் பொழியக்
களரி பரந்த கல்நெடு மருங்கின்
விளரூன் தின்ற வீங்குசிலை மறவர்
மைபடு[2] திண்டோள் மலிர வாட்டிப்
பொறைமலி கழுதை நெடுநிறை தழீஇய
திருந்துவாள் வயவர் அருந்தலை துமித்த
படுபுலாக் கமழும் ஞாட்பில் துடியிகுத்
தருங்கலந் தெறுத்த பெரும்புகல் வலத்தார்
வில்கெழு குறும்பிற் கோள்முறை பகுக்குங்
கொல்லை யிரும்புனம் நெடிய என்னாது
மெல்லென் சேவடி மெலிய ஏக
வல்லுநள் கொல்லோ தானே தேம்பெய்
தளவுறு தீம்பால் அலைப்பவும் உண்ணாள்
இடுமணற் [3]பந்தருள் இயலும்
நெடுமென் பணைத்தோள் மாஅ யோளே.

—மதுரைக் காஞ்சிப் புலவர்.

(சொ - ள்.) கக—உஉ. தேம் பெய்து அளவுறு தீம்பால் - தேனைச் சொரிந்து கலந்த இனிய பாலை, அலைப்பவும் உண்ணாள் - அலைத் தூட்டவும் உண்ணாளாய், இடுமணல் பந்தருள் இயலும் - மணல் பரப்பிய பந்தருள் அங்கும் இங்கும் ஓடும், நெடுமென் பணைத்தோள் மாஅயோள் - நீண்ட மெல்லிய மூங்கில் போலும் தோளினையுடைய மாமை நிறத்தின ளாகிய உன் மகள்;

க—உ. தெறு கதிர் ஞாயிறு - யாவற்றையும் அழிக்கும் கதிர்களை யுடைய ஞாயிறு, நடு நின்று காய்தலின் - முதுவேனிற் காலத்து இடை

(பாடம்) 1. குடுமிச்சேவல். 2. திணிதோள். 3. பந்தரியலும்.

நாட்களில் நின்று எரித்தலின், உறுபெயல் வறந்த-மிக்க மழைபாலாய நீர் வறண்ட, ஓடு தேர் நனந்தலை - பேய்த்தேர் ஓடும் அகன்ற இடத்தினையும் ;

ｆ—௯. உருத்து எழு குரல குடிஞைச் சேவல் - வெகுண்டு எழுகின்ற குரலினையுடைய பேராந்தைச் சேவல், புல் சாய் விடர் அகம் புலம்ப-புற்கள் ஒழிந்த வெடிப்பிடங்கள் தனித்திடச் சென்று, வரையக் கல் எறி இசையின் இரட்டும் - மலையிலுள்ள கற்கள் உருண்டு விழும்போது எழும் ஓசைபோல மாறி ஒலிக்கும் (இடத்தினையும்);

௬—௯. சிறி யிலை வேலத்து - சிறிய இலையினையுடைய வேலமரத்தின், ஊழ் உறு விளை நெற்று உதிர - முறையாக முற்றி விளைந்த நெற்று உதிர, சிள்வீடு கறங்கும் - சிள்வீ டென்னும் வண்டு ஒலிக்கும், கவ்வைப் பரப்பின் - ஆரவாரம் பொருந்திய பரப்பினையுடையதும்; காழியர் வெவ்வுவர்ப்பு ஒழிய - வண்ணார்கள் எடுக்கும் வெவ்விய உவர் மண் ஒழிய, களரி பரந்த - களர் மண் பரந்ததுமாகிய, கல்நெடு மருங்கின் - கற்களை இடையே கொண்ட நீண்ட இடத்தினையும் உடையதும்;

௧௦—௬. விளர் ஊன் தின்ற வீங்கு சிலை மறவர் - கொழுப்பினையுடைய ஊனைத்தின்ற விசைகொண்ட சிலையினராய மறவர்கள், மைபடு திண் தோள் மலிர - கருமை பொருந்திய வலிய தோள்கள் பூரிக்க, பொறை மலி கழுதை நெடுநிரை தழீஇய - பாரம்மிக்க கழுதைகளின் நீண்ட நிரைகளைப் பின்பற்றி வரும், திருந்து வாள்வயவர் வாட்டி அருந்தலை துமித்த - செப்பமுடைய வாளினைக்கொண்ட வீரர்களாய வணிகர்களை வாட்டி அவர்களது அரிய தலையைத் துணித்த, படு புலா கமழும் ஞாட்பில் - மிக்க புலவு நாறும் போர்க்களத்தே, துடி இகுத்து - துடியினைத் தாழக் கொட்டி, அருங்கலம் தெறுத்த பெரும் புகல்வலத்தர் - அரிய அணிகலன்களைத் திறையாகப் பெற்றுக் குவித்த பெரிய போர் விருப்பினையுடைய வென்றியினர், வில்கெழு குறும்பில் கோள் முறை பகுக்கும் - விற்கள் பொருந்திய அரணிடத்தே அவரவர் கொள்ள வேண்டிய முறையே பிரித்துக் கொடுப்பதுமாகிய ;

௧௭—௯. கொல்லை இரும்புனம் நெடிய என்னாது - கொல்லையினையுடைய பெரிய காடுகளை நீண்ட தூரத்தன என்றெண்ணாது, மெல்லென் சேவடி மெலிய ஏக வல்லுநள் கொல்லோ - மெத்தென்றிருக்கும் சிவந்த அடி வருந்தச் செல்லற்கு வன்மையுடையள் ஆவளோ ?

(முடிபு) தீம்பால் அலைப்பவும் உண்ணாள் பந்தருள் இயலும் மாஅயோள், கொல்லை யிரும் புனம் நெடிய வென்னாது சேவடி மெலிய ஏக வல்லுநள் கொல்லோ ?

ஓடுதேர் நனந்தலையினையும் கல்லெறி யிசையின் இரட்டும் இடத்தினையும் கல்நெடு மருங்கினையு முடைய கொல்லைஇரும்புனம் எனவும், கோள் முறை பகுக்கும் கொல்லை இரும்புனம் எனவும் கூட்டுக.

அ.—14.

(வி - ரை.) நடுநின்று காய்தலின் : நடு - முதுவேனிற் காலத்தின் நடுக்கூறாகிய நாட்கள். தேர் - பேய்த்தேர்: உறுபெயல் 'பரந்த' என்பது பாடமாயின், பெயல் (வறந்து) ஓடு தேராய்ப் பரவிய என்க. சிறிய இலை - சிறியிலை என விகாரப்பட்டது. வேலத்து : அத்து, சாரியை. கறங்கும் கவ்வை எனவும், வாட்டித் துணித்த எனவும் கூட்டுக. மலிர ஆட்டி எனப் பிரித்து, ஆட்டி என்றற்கு அலைத்து என்றுரைத்தலுமாம். வாள் வயவர் என்றதனால் வாணிகச் சாத்தரும் வீரராயிருப்பர் என்பது பெற்றாம். அவருடன் போர் புரிந்து கொன்றார் என்பது தோன்றவே ஞாட்பில் என்றார். தேன் கலந்த பால் சுவை வீரியங்களாற் சிறக்கும் என்பது [1]"பாலொடு தேன் கலந்தற்றே" என்பது முதலியவற்றான் அறியப்படும். தேன் கலந்த பாலைத் தானும் அச்சுறுத்தி ஊட்டவும் உண்ணாது ஓடுபவள் என அவளது செல்வச் சிறப்புக் கூறியவாறு. செல்வச் சிறாரும் சிறுமியரும் உணவுண்ண மறுக்குங்கால், உண்பிக்கும் தாயர் அவர்கட்கு இனிய கதைகள் கூறியும் அச்சுறுத்தியும் உண்பித்தல் இயல்பு என்க.

---

90. நெய்தல்

[பகற்குறி வந்து கண்ணுற்று நீங்குந் தலைமகனைத் தோழி எதிர்ப்பட்டு நின்று இற்செறிப் பறிவுறீஇயது.]

மூத்தோ ரன்ன வெண்டலைப் புணரி
இளையோ ராடும் வரிமனை சிதைக்கும்
தளையவிழ் தாழைக் கானலம் பெருந்துறைச்
சில்செவித் தாகிய புணர்ச்சி அலரெழ
இல்வயின் செறித்தமை அறியாய் பன்னாள்
வருமுலை வருத்தா அம்பகட்டு மார்பில்
தெருமரல் உள்ளமொடு வருந்தும் நின்வயின்
நீங்கு கென்றியான் யாங்ஙனம் மொழிகோ
அருந்திறற் கடவுள் செல்லூர்க் குணாஅது
பெருங்கடல் முழக்கிற் றாகி யாணர்
இரும்பிடம் படுத்த வடுவுடை முகத்தர்
[2]கடுங்கண் கோசர் நியமம் ஆயினும்
உறுமெனக் கொள்ளுநர் அல்லர்
நறுநுதல் அரிவை பாசிழை விலையே.

—மதுரை மருதனிள நாகனார்.

---

1. குறள்: ௧௧௨௧. (பாடம்) 2. கருங்கண்.

(சொ - ள்.) க—அ. தலைவ., மூத்தோர் அன்ன வெண்தலைப் புணரி - முதியோரை ஒத்த வெள்ளிய தலையையுடைய கடல், இளையோர் ஆடும் வரிமனை சிதைக்கும்-இளைய மகளிர் விளையாடும் வண்டல் மனையினை அழிக்கும், தளைஅவிழ் தாழைக் கானல்அம் பெருந்துறை - கட்டவிழ்ந்த மடல்கள் பொருந்திய தாழைகளையுடைய சோலை பொருந்திய பெரிய கடற்றுறைக்கண்ணே, சில் செவித்தாகிய புணர்ச்சி - சிலர் செவிப்பட்ட மாத்திரையாகிய கூட்டம், அலர்எழ - அலராகி எங்கும் பரவ, இல்வயின் செறித்தமை அறியாய்-தாய் தலைவியை இல்லிடத்தே செறித்தமையை அறியாயாகி, பல்நாள் - பலநாளும், அம் பகட்டு மார்பின் - நினது அழகிய பெருமையையுடைய மார்பினால், வருமுலை வருத்தா - வளரும் முலையினை யுடையாளை வருத்தி, தெருமரல் உள்ளமொடு வருந்தும் - கலங்கும் உள்ளத்தோடு வருந்தா நிற்கும், நின்வயின் - நின்னிடத்தே, நீங்குக என்று யான் யாங்ஙனம் மொழிகோ - இக் களவொழுக்கத்தினின்றும் நீங்குவாயாக என்று யான் எங்ஙனம் மொழிவேன் ;

கூ—கச. நறு நுதல் அரிவை பாசிழை விலை-(இவள் தந்தைமார்) நறிய நுதலினையுடைய அரிவையாய இவளது பசிய அணிகட்கு விலையாக, அருந் திறல் கடவுள் செல்லூர்க் குணஅது-அரிய வலிகொண்ட தெய்வங்களையுடைய செல்லூரின் கீழ்ப்பாலினதாய், பெருங் கடல் முழக்கிற்றாகி - பெரிய கடல்போலும் ஆரவாரத்தினை யுடையதாகிய, இரும்பு இடம்படுத்த வடு உடைமுகத்தர் - படைக்கலம் இடம்படச் செய்திட்ட வடுக்களையுடைய முகத்தினராய, கடுங்கட் கோசர் - அஞ்சாமையையுடைய கோசர்கள் (வாழும்), யாணர் நியமம் ஆயினும் - புது வருவாயையுடைய நியமம் என்னும் ஊரினைக் கொடுப்பினும், உறும் எனக் கொள்ளுநர் அல்லர் - அமையும் எனக் கொள்வார் அல்லர்.

(முடிபு) தலைவ! கானலம் பெருந்துறை சில் செவித்தாகிய புணர்ச்சி அலரெழ இற் செறித்தமை அறியாய், பன்னாள் இவளை வருத்தி வருந்தும் நின்வயின், (இக் களவொழுக்கம்) நீங்குக என்று யாங்ஙனம் மொழிகோ! அரிவை பாசிழை விலை கோசர் நியமமாயினும் உறுமெனக் கொள்ளுநர் அல்லர்.

(வி - ரை.) 'மூத்தோரன்ன சிதைக்கும்' என்றது புணரி உருவினால் முதியோரை யொத்தும் சிறியரின் செய்கை யுடைய தாயிற்றென நயம்படக் கூறியவாறு. வருமுலை, இரும்பு என்பன ஆகுபெயர். மார்பு காரணமாக வருந்துதலின் மார்பின் வருத்தா என்றாள். எம் வருத்த மறிந்து நீயே வரைதற்கு முயலுதல் முறைமை யென்பாள், யான் யாங்ஙனம் மொழிகோ என்றாள். ஆகி என்றதனை ஆகிய எனத் திரிக்க. யாணர் நியமம் எனக் கூட்டுக. தலைவன் தலைவியைப் பொன்னணிந்து வரைதல் வழக்காதலின் அரிவை பாசிழை விலை என்றாள். உறுமெனக் கொள்ளுநர் அல்லர் என்றமையால், பொருள் மிகக் கொடுக்கவேண்டுமெனத் தலைவியை அருமை பாராட்டியவாறு. அன்றி, விலை நியமம்

கொடுப்பினும் கொள்ளாராதலால் அவர்கள் அன்பிற்கும் உரிமையாகுக என்றாள் எனலுமாம்.

(உ - றை.) மூத்தோர் இளையோரை வருத்தாரன்றே, அது செய்யாது புணரி இளையோர் மனை சிதைத்தாற்போல, பெரிய அறிவுடைய நீர் சிறியேமாகிய எங்களை வருத்தாமின் நீர் என்றவாறு.

(மே - ள்.) [1]'நாற்றமும் தோற்றமும்' என்னுஞ் சூத்திரத்து, இச் செய்யுள், 'பொருள் மிகக் கொடுத்தல் வேண்டுமென்றது' என்றனர், நச்.

---

91. பாலை

[பிரிவிடை மெலிந்த தலைமகளைத் தோழி வற்புறுத்தியது.]

விளங்குபகல் உதவிய பல்கதிர் ஞாயிறு
வளங்கெழு மாமலை பயங்கெடத் தெறுதலின்
அருவி யான்ற பெருவரை மருங்கில்
சூர்ச்சுனை துழைஇ நீர்ப்பயங் காணாது
பாசி தின்ற பைங்கண் யானை
ஓய்பசிப் பிடியோ டொருதிறன் ஒடுங்க
வேய்கண் ணுடைந்த வெயிலவிர் நனந்தலை
அரும்பொருள் வேட்கையின் அகன்றன ராயினும்
பெரும்பே ரன்பினர் தோழி இருங்கேழ்
இரலை சேக்கும் பரலுவர் பதுக்கைக்
கடுங்கண் மழவர் களவுழ வெழுந்த
நெடுங்கால் ஆசினி ஒடுங்காட் டும்பர்
விசிபிணி முழவின் குட்டுவன் காப்பப்
பசியென வறியாப் பணைபயில் இருக்கைத்
தடமருப் பெருமை தாமரை முனையின்
முடமுதிர் பலவின் கொழுநிழல் வதியும்
குடநாடு பெறினும் தவிரலர்
மடமான் நோக்கிநின் மாணலம் மறந்தே.

—மாமூலனார்.

(சொ - ள்.) க—ங. தோழி-, விளங்கு பகல் உதவிய பல் கதிர் ஞாயிறு - உலகம் விளங்கற்குக் காரணமாகிய பகலினைத் தந்த பல

---

1. தொல். களவு: உக.

கதிர்களையுடைய ஞாயிறு, வளம் கெழு மாமலை பயம் கெடத் தெறுதலின்-வளம் வாய்ந்த பெரிய மலையின் பயன் கெட்டொழியக்காய்தலின், அருவி ஆன்ற பெருவரை மருங்கின் - அருவி இல்லையான பெரிய பக்கமலையினிடத்து, சூர்ச்சுனை துழைஇ நீர்ப்பயம் காணாது - தெய்வத் தினையுடைய சுனையைத் துழாவி நீராகிய பயனைக் காணாது, பாசிதின்ற பைங்கண் யானை - பாசியினைத் தின்ற பசிய கண்ணினையுடைய ஆண் யானை, ஒய் பசிப் பிடியொடு ஒரு திறன் ஒடுங்க - அயர்வினைத் தரும் பசியினையுடைய பெண் யானையினுடன் ஒரு பக்கத்தே ஒடுங்கிக்கிடக்க, வேய் கண் உடைந்த வெயில் அவிர் நனந்தலை-மூங்கில்கள் கணுக்கள் பிளந்த வெயில் விளங்கும் அகன்ற பாலை நிலத்தே, அரும் பொருள் வேட்கையின் அகன்றனர் ஆயினும் - அரிய பொருள் விருப்பால் நம் தலைவர் நம்மைப் பிரிந்து சென்றாராயினும், பெரும் பேரன்பினர்-மிகப் பெரிய அன்பினராகலின்,

கூ—கஅ. இரு கேழ் இரலை சேக்கும் பரல் உயர் பதுக்கை - கரிய நிறமுடைய ஆண்மான்கள் தங்கும் பரலையுடைய உயர்ந்த கற்குவியலில், கடுங்கண் மழவர் களவு உழவு எழுந்த - வன்கண்மையினை யுடைய மழவர்கள் களவாகிய உழவிற்கு எழும் இடமாகிய, நெடுங்கால் ஆசினி ஒடுங்காட்டு உம்பர்-நீண்ட அடியை யுடைய ஈரப்பலா மரங்களை யுடைய ஒடுங்காடு என்னும் ஊர்க்கு அப்பால், விசிபிணி முழவின் குட்டுவன் காப்ப - இறுகப் பிணித்த முழவினை யுடைய குட்டுவன் என்பான் புரத்தலால், பசி எனவு அறியா பணை பயில் இருக்கை - பசி எனலை அறியாத மருதவளம் மிக்க ஊர்களையுடைய, தட மருப்பு எருமை தாமரை முனையின் - வளைந்த கொம்பினையுடைய எருமை (மேய்ந்த) தாமரையை வெறுக்குமாயின், முடம் முதிர் பலவின் கொழு நிழல் வதியும் - வளைவு மிக்க பலாவினது கொழுவிய நிழற்கண்ணே தங்கும், குடநாடு பெறினும் - குடநாட்டினையே பெறுவராயினும், மடமான் நோக்கி - இளமை வாய்ந்த மான் போலும் பார்வையினை யுடையாய், நின் மாண் நலம் மறந்து தவிரலர் - நினது மாண்புற்ற நலத்தினை மறந்து ஆங்குத் தங்குவாரல்லர்.

(முடிபு) தோழி! மானேக்கி! நம் தலைவர் வெயிலவிர் நனந்தலை அரும்பொருள் வேட்கையின் அகன்றனராயினும் பெரும் பேரன்பினராகலின் குடநாடு பெறினும் நின் மாணலம் மறந்து ஆங்குத் தவிரலர்.

(வி - ரை.) மாரிக்கண் உண்ட நீரைக் கோடையில் உமிழும் இயல்பினதாகிய மலையின் பயன் கெடத் தெறும் என வேனிலின் வெம்மை மிகுதி கூறியவாறாயிற்று. ஆன்ற - இல்லையான; அகன்ற என்பதன் மரூஉ. சுனைக்கண் சூர் உறையும் என்பதனை, [1]'சுனை யுறையும், சூர்மகள் மாதோ - என்னுமென் நெஞ்சே' என்பதனானும் அறிக. சூர், அச்சமுமாம். யானை பாசியைத் தின்றமை நீர்ப்பசை கருதி யென்க.

1. அகம்: ககஅ.

ஒடு - ஒருவகை மரம் என்பதும், அதன்முன் வல்லெழுத்துவரின், மெலிமிகும் என்பதும், [1]'உதிமரக் கிளவி மெல்லெழுத்து மிகுமே' 'ஒடுமரக் கிளவி யுதிமர வியற்றே' என்பவற்றால் அறியப்படும். ஈண்டு ஒடு மரங்கள் சூழ்ந்தமையின் ஒடுங்காடு எனப்பட்ட தென்க. இருக்கையையுடைய குட நாடு என்க. எருமை தாமரை முனையின் பலவின் நிழலில் வதியும் என்றது, மருதத்திற்கும் குறிஞ்சிக்கும் அணிமை கூறியபடியாம். எருமை, தாமரை யென்னும் மருதக் கருப்பொருள்கள் பாலைக்கண் வந்தன; என்னை? [2]'எந்நில மருங்கிற் பூவும் புள்ளும், அந் நிலம் பொழுதொடு வாரா வாயினும், வந்த நிலத்தின் பயத்த வாகும்' என்பவாகலின் என்க.

---

92. குறிஞ்சி

[இரவுக்குறிச் சென்று தலைமகளைக் கண்ணுற்று நீங்குந் தலைமகனைப் பகற்குறி நேர்ந்த வாய்பாட்டால் தோழி வரைவுகடாயது.]

நெடுமலை யடுக்கம் கண்கெட மின்னிப்
படுமழை பொழிந்த பானாட் கங்குல்
குஞ்சரம் நடுங்கத் தாக்கிக் கோடுவரிச்
சேங்கண் இரும்புலி குழுமுஞ் சாரல்
வாரல் வாழியர் ஐய நேரிறை
நெடுமென் பணைத்தோள் இவளும் யானும்
காவல் கண்ணினம் தினையே நாளை
மந்தியும் அறியா மரம்பயில் இறும்பின்
ஒண்செங் காந்தள் அவிழ்ந்த ஆங்கண்
தண்பல் அருவித் தாழ்நீர் ஒருசிறை
உருமுச்சிவந் தெறிந்த உரனழி பாம்பின்
திருமணி விளக்கிற் பெறுகுவை
இருண்மென் கூந்தல் ஏமுறு துயிலே.

—மதுரைப் பாலாசிரியர் நற்றாமனார்.

(சொ - ள்.) க—இ. ஐய-, வாழியர்-, நெடுமலை அடுக்கம் கண் கெட மின்னி - உயர்ந்த மலையின் பக்கங்களில் கண்ணொளி கெட மின்னி, படு மழை பொழிந்த பால்நாள் கங்குல்-மிக்க மழை சொரிந்த பாதி யிரவாகிய இருளில், குஞ்சரம் நடுங்கத் தாக்கி - யானையை நடுங்கும்படி தாக்கி, கொடுவரி செங்கண் இரும்புலி குழுமும் சாரல் -

---

1. தொல். எழுத். உயிர்மயங் : ௭௯-௮0. 2. தொல். அகத்: ௧௯

வளைந்த கோடுகளையும் சிவந்த கண்ணினையுமுடைய பெரிய புலி முழங்கும் மலைச்சாரலிலே, வாரல் - நீ வாராதிருப்பாயாக;

௫—எ. நேர் இறை நெடு மென் பணைத்தோள் இவளும் யானும் - மெல்லிய முன் கையினையும் நீண்ட மெல்லிய மூங்கிலை யொத்த தோளினையுமுடைய இத்தலைவியும் யானும், காவல் கண்ணினம் தினை - தினைப்புனங் காத்தலைக் கருதியுள்ளோம்;

எ—௧௩. நாளை - நாளைப் பகற்கண், மந்தியும் அறியா மரம் பயில் இறும்பின் - மந்திகளும் ஏறி அறியமாட்டாத மரங்கள் செறிந்த காட்டில், ஒண் செங்காந்தள் அவிழ்ந்த ஆங்கண் - ஒள்ளிய செங்காந்தள் மலர்ந்த அவ்விடத்தே, தண்பல் அருவி தாழ் நீர் ஒரு சிறை - பலவாய தண்ணிய அருவிகள் வீழும் சுனையின் ஒருபுறம், உருமு சிவந்து எறிந்த உரன் அழி பாம்பின் திருமணி விளக்கில் - இடி சினந்து தாக்கலின் வலி யழிந்த பாம்பினது அழகிய தலைமணியாகிய விளக்கிலே, இருள் மெல் கூந்தல் ஏம்உறு துயில் - தலைவியின் இருண்ட மெல்லிய கூந்தலகத்து இன்பம் உறும் துயிலை, பெறுகுவை - நீ அடைவாய்.

(முடிபு) ஐய! வாழியர்! மழை பொழிந்த பானாட்கங்குல் குஞ்சரம் தாக்கிப் புலி குழுமும் சாரல் வாரல்; இவளும் யானும் தினை காவல் கண்ணினம்; நாளை இறும்பில் காந்தள் அவிழ்ந்த ஆங்கண் தாழ் நீர் ஒரு சிறை பாம்பின் திருமணி விளக்கில் கூந்தல் ஏம்உறு துயில் பெறுகுவை.

(வி - ரை.) நாளை காவல் கண்ணினம் எனலுமாம். கோடு வாழ் குரங்கு எனப்படுவதும், மரமேறுந் தொழிலிற் சிறந்ததுமாகிய மந்தியும் ஏறி அறியாத என மரத்தின் உயர்ச்சி கூறியவாறு. உம்மை சிறப்பும்மை. [1]'குரங்கறி வாரா மரம்பயி லிறும்பில்' எனப் பின்னர் இந் நூலினும், [2]'மந்தியு மறியா மரம்பயி லொருசிறை,' [3]'மந்தியு மறியா மரன்பயி லடுக்கத்து' எனப் பிற நூல்களிலும் வருதலுங் காண்க. இனி, மந்தி என்பதற்கு ஞாயிறு எனப் பொருள் கொண்டு, பருதியின் கதிர் நுழைய லாகாதவாறு மரங்கள் செறிந்த காடு என்னலுமாம். பகற்குறி நேர்ந்தாள்போற் கூறினும், காந்தள் அவிழ்ந்த ஆங்கண் அருவித் தாழ்நீர் ஒருசிறை என்றமையின், பூக்கொய்ய வருவாராலும் அருவியாட வருவாராலும் பகற்குறியும் அரிதென்பது புலப்படுத்தி வரைவு கடாயினளாயிற்று.

---

1. அகம்: ௯௩௮. 2. நற்: ௧௧௪. 3. முருகு. அடி: ௪௨.

93. பாலை

[வினைமுற்றி மீளலுறுந் தலைமகன் இடைச்சுரத்துத் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

கேள்கே டூன்றவும் கிளைஞர் ஆரவும்
கேளல் கேளிர் கெழீஇயினர் ஒழுகவும்
ஆள்வினைக் கெதிரிய வூக்கமொடு புகல்சிறந்
தாரங் கண்ணி அடுபோர்ச் சோழர்
அறங்கெழு நல்லவை உறந்தை அன்ன
பெறலரு நன்கலன் எய்தி நாடும்
செயலருஞ் செய்வினை முற்றின மாயின்
அரண்பல கடந்த முரண்கொள் தானை
வாடா வேம்பின் வழுதி கூடல்
நாளங் காடி நாறும் நறுநுதல்
நீளிருங் கூந்தல் மாஅ யோளொடு
வரைகுயின் றன்ன வான்தோய் நெடுநகர்
நுரைமுகந் தன்ன மென்பூஞ் சேக்கை
நிவந்த பள்ளி நெடுஞ்சுடர் விளக்கத்து
நலங்கேழ் ஆகம் பூண்வடுப் பொறிப்ப
முயங்குகஞ் சென்மோ நெஞ்சே வரிநுதல்
வயந்திகழ் பிமிழ்தரும் வாய்புகு கடாத்து
மீளி மொய்ம்பொடு நிலனெறியாக் குறுகி
ஆள்கோட் பிழையா அஞ்சுவரு தடக்கைக்
கடும்பகட் டியானை நெடுந்தேர்க் கோதை
திருமா வியனகர்க் கருவூர் முன்றுறைத்
தெண்ணீர் உயர்கரைக் கவைஇய
தண்ணான் பொருநை மணலினும் பலவே.

—கணக்காயனார் மகனார் நக்கீரனார்.

(சொ - ள்.) கக. நெஞ்சே—;

க—௬. கேள் கேடு ஊன்றவும்-உறவினரைக் கேட்டினை நீக்கித் தாங்கவும், கிளைஞர் ஆரவும்-கிளைகளாயுள்ளார் உண்ணவும், கேள் அல் கேளிர் கெழீஇயினர் ஒழுகவும்-நொதுமலாளர் கெழுதகையினராகி ஒழுகவும் வேண்டி, ஆள்வினைக்கு எதிரிய ஊக்கமொடு-பொருளீட்டும் முயற்சிக்கு ஏற்றதாய ஊக்கங்கொண்டு, புகல் சிறந்து-விருப்பம் மிக்கு,

௬—௭. ஆரம் கண்ணி அடுபோர்ச் சோழர் - ஆத்திமாலையணிந்த அடும் போரினையுடைய சோழரது, அறம்கெழு நல்லவை உறந்தை அன்ன - அறம் பொருந்திய நல்ல அவையினையுடைய உறையூரை யொத்த, பெறல் அரும் நன்கலன் எய்தி - பெறுதற்கு அரிய நல்ல அணிகலன்களை எய்தி, நாடும் செயல் அரும் செய்வினை முற்றினம் ஆயின் - யாவரும் விரும்பும் செய்தற்கரிய பொருள் செய்வினையினை நாம் முடித்தனம் ஆதலின்;

௮—௧௧. அரண் பல கடந்த முரண் கொள் தானை - பகைவர் அரண்கள் பலவற்றை வென்ற மாறுபாடு கொண்ட தானையினையுடைய, வாடா வேம்பின் வழுதி - வாடாத வேப்ப மாலையினைத் தரித்த பாண்டியனது, கூடல் நாள் அங்காடி நாறும் - மதுரையின் காலைக் கடை வீதியென மணக்கும், நறுநுதல் நீள்இருங் கூந்தல் மாஅயோளொடு - நறிய நெற்றியினையும் நீண்ட கரிய கூந்தலினையு முடைய மாமை நிறத்தாளாய நம் தலைவியுடன்;

௧௨—௫. வரை குயின்றன்ன வான்தோய் நெடுநகர் - மலையைக் குடைந் தியற்றியதை யொத்த வானை அளாவிய நீண்ட மனையின் கண்ணே, நுரை முகந்தன்ன மென்பூஞ் சேக்கை - நுரையை முகந்து வைத்தாற்போன்ற மெல்லிய பூக்களாலாய படுக்கையையுடைய, நிவந்த பள்ளி நெடுஞ்சுடர் விளக்கத்து - ஓங்கிய கட்டிலினிடத்து நெடிய விளக்கின் ஒளியிலே, நலம்கேழ் ஆகம் பூண் வடு பொறிப்ப - நன்மைபொருந்திய நம் மார்பிலே தலைவியின் மார்பகத்துப் பூண்கள் வடுக்களைச் செய்ய;

௧௬—௨௩. வரிநுதல் - வரி பொருந்திய நெற்றியினையும், வயம் திகழ்பு இமிழ்தரும் - வலி விளங்குதலின் முழங்கும், வாய் புகு கடாத்து - வாயிற் புகும் மதத்தினையும், மீளி மொய்ம்பொடு - கூற்றுவனை யொத்த வலியுடன், நிலன் எறியா - நிலத்தின்கண்ணே சுருட்டி எறிந்து, குறுகி ஆள் கோள் பிழையா அஞ்சுவரு தடக்கை - நெருங்கி வந்து ஆட்களைக் கொல்லுதலைத் தப்பாத அச்சம் வருகின்ற பெரிய கையினையும் உடைய, கடும் பகட்டு யானை - கடிய பெரிய யானைப் படையினையும், நெடுந் தேர்க் கோதை - நெடிய தேர்ப்படையினையு முடைய சேரனது, திருமா வியன் நகர்க் கருவூர் முன்றுறை - செல்வம் மிக்க சிறந்த அகன்ற நகராகிய கருவூரின் துறைமுன், தெள் நீர் - தெளிந்த நீரினையுடைய, தண் ஆன் பொருநை - தண்ணிய ஆன் பொருநை என்னும் ஆற்றின், உயர்கரை குவைஇய - உயர்ந்த கரைக்கண் குவிந்துள, மணலினும் பல - மணலினும் பலவாக;

௧௬. முயங்குகம் சென்மோ - நாம் முயங்குவோம் வருவாயாக.

(முடிபு) நெஞ்சே! ஊன்றவும், ஆரவும், ஒழுகவும் வேண்டி ஊக்கமொடு புகர் சிறந்து, உறந்தை யன்ன நன்கலன் எய்திச் செய்வினை முற்றினம் ஆதலால், மாயோளொடு மென்பூஞ் சேக்கை நிவந்த பள்ளியில், சுடர் விளக்கத்து, ஆன் பொருநை மணலினும் பல ஆகம் வடுப் பொறிப்ப முயங்குகம் சென்மோ.

(வி - ரை.) கேள் - கேளிர் என்னும் பொருட்டு. ஊன்றல் - தாங்கல். வறுமையுற்ற கிளைஞர் ஆரவும் என்க. கேள்அல் கேளிர் - ஏதிலார். அவர் அன்புடையராய் ஒழுகவும் என்றபடி. [1]'ஆறும் வெதிரும் சாரும் பீரும், மெல்லெழுத்து மிகுதல் மெய்பெறத் தோன்றும்' என்னும் சூத்திரத்து, மெய்பெற என்ற இலேசால் 'ஆரங்கண்ணி' என அம்முப் பெற்றது. உறையூர் அவையில் அறம் நிலைபெற்றதென்பதனை, [2]'மறங்கெழு சோழர் உறந்தை யவையத், தறங்கெட வறியா தாங்கு' [3]'மறங்கெழு சோழர் உறந்தை அவையத், தறம் நின்று நிலையிற் றாகலின்' என வருவனவற்றானும் அறிக. முற்றி எய்தினம் என்று மாறுதலுமாம். 'எய்திய' எனப் பாடங்கொண்டு, எய்துதற்கென்று உரைப்பாருமுளர். ஆயின்-ஆதலால். மீளி - கூற்றுவன் ஆதலை, [4]'மீளி யுடம்பிடித் தடக்கை' என்பதற்கு நச்சினார்க்கினியர் உரைத்த உரையான் உணர்க. மீளி - மறமுமாம். மதங் கொண்ட யானை கையை நிலத்தின்கண் எறிந்து வரும் என்பது, [5]'இரும்பிணர்த் தடக்கை யிருநிலம் சேர்த்திச், சினந்திகழ் கடாஅஞ் செருக்கி மரங் கொல்பு, மையல் வேழம் மடங்கலின் எதிர்தர' என்பதனால் அறியப் படும். கருவூர் மேற்கடற் பக்கத்தது என்பாரும், சோழ நாட்டின் எல்லையை அடுத்துள்ள கொங்குநாட்டுக் கருவூரே என்பாரும் என, இருதிறப்படுவர் வரலாற்று ஆராய்ச்சியாளர். இச்செய்யுளுள் சோழர், பாண்டியர், சேரர் என்னும் மூவேந்தரும், அவர் தலைநகராகிய உறந்தை கூடல், கருவூர் என்பனவும் வந்துள்ளமை அறியற்பாற்று.

(மே - ள்.) [6]'மேவிய சிறப்பின்' என்னுஞ் சூத்திரத்து, 'கேள்கே டூன்றவும்......புகல் சிறந்து' என்பது, 'வணிகர் பொருள் வயிற் பிரிந்த வாறு' என்றும், [7]'புறத்திணை மருங்கின்' என்னுஞ் சூத்திரத்து, இப் பாட்டு, 'புறத்திணைத் தலைவர் பலராய் அகத்திணைக்கண் அளவி வந்தது' என்றும், [8]'கரணத்தி னமைந்து' என்னுஞ் சூத்திரத்து 'கேள்கே டூன்றவும் கிளைஞராரவும்' என்பது, 'அவ்வழிப் பெருகிய சிறப்பு' என்றும் கூறுவர், நச்.

[9]'பிறப்பே குடிமை' என்னும் சூத்திரத்து, 'கேள்கே டூன்றவும் ......புகல் சிறந்து' என்புழி இன்ன காரணத்திற் பிரிந்து போந்து வினைமுடித்தனமாயினும், அவனை 'முயங்குகம் சென்மோ' என்றமையின் தன் ஆள்வினைக்குத் தக்க பெண்மையான் அவள் ஆற்றியிருந்தாள் என்பதூஉம் கருதிய கருத்தினாற் காமக் குறிப்புப்பிறந்தமையின், அஃது ஆண்மையாயிற்று' எனவும், [10]'மறை வெளிப்படுத்தலும்,' என்னுஞ் சூத்திரத்து, 'நலங்கே ழாகம்...சென்மோ நெஞ்சே' என்பது மலிதல் எனவும் கூறுவர். பேரா.

---

1. தொல். எழுத். புள்ளி: ௧௮. 2: நற்: ௪௦௦. 3. புறம்: ௩௯
4. பெரும்பாண்: ௭௫. 5. குறிஞ்சி: ௧௬௩-௬ அடிகள்.
6. தொல். அகத்: ௨௮. 7. தொல். அகத்: ௫௫. 8. தொல். கற்பு: ௫.
9. தொல். மெய்ப்: ௨௫. 10. தொல். செய்: ௧௮௭.

94. முல்லை

[வினைமுற்றி மீளுந் தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது. தலைமகன் பாங்கற்குச் சொற்றதூஉ மாம்.]

தேம்படு சிமயப் பாங்கர்ப் பம்பிய
குவையிலை முசுண்டை வெண்பூக் குழைய
[1]வானெனப் பூத்த பானாட் கங்குல்
மறித்துரூஉத் தொகுத்த பறிப்புற இடையன்
தண்கமழ் முல்லை தோன்றியோடு விரைஇ
வண்டுபடத் தொடுத்த நீர்வார் கண்ணியன்
ஐதுபடு கொள்ளி அங்கை காயக்
குறுநரி யுளம்புங் கூரிருள் நெடுவிளி
சிறுகட் பன்றிப் பெருநிரை கடிய
முதைப்புனங் காவலர் நினைத்திருந் தூதும்
கருங்கோட் டோசையோ டொருங்குவந் திசைக்கும்
வன்புலக் காட்டுநாட் டதுவே அன்புகலந்
தார்வஞ் சிறந்த சாயல்
இரும்பல் கூந்தல் திருந்திழை யூரே.

—நன்பலூர்ச் சிறுமேதாவியார்.

(சொ - ள்) கஉ - ச. அன்பு கலந்து ஆர்வம் சிறந்த - அன்பால் உள்ளம் கலந்து விருப்பம் மிக்க, சாயல் - மென்மைத் தன்மையையும்; இரும் பல் கூந்தல் - கரிய பலவாகிய கூந்தலினையும் உடைய, திருந்து இழை - திருந்திய இழையினையுடைய தலைவியினது, ஊர் - ஊரானது;

க—அ. தேம்படு சிமயப் பாங்கர்ப் பம்பிய குவை இலை முசுண்டை வெண்பூ - தேன் அடை பொருந்திய உச்சிமலையின் பக்கலிற் செறிந்த குவிந்த இலைகளையுடைய முசுண்டையின் வெள்ளிய பூக்கள், வான் எனக் குழையப் பூத்த பால் நாள் கங்குல் - வானமானது மீனைப்பூத்தது போலக் குழைந்திடப் பூத்த நடுஇரவின் இருளிலே, மறித் துரூஉ தொகுத்த பறிப்புற இடையன்-ஆட்டுக் குட்டிகளைச் சேரத் தொகுத்து வைத்துள ஓலைப்பாயை முதுகிற் கொண்ட இடையன், தண்கமழ் முல்லை தோன்றியொடு விரைஇ - தண்ணிய கமழும் முல்லைப் பூவினைத் தோன்றிப் பூவுடன் இணைத்து, வண்டுபடத் தொடுத்த நீர்வார் கண்ணியன் - வண்டுகள் மொய்க்கத் தொடுத்த நீர் ஒழுகுகின்ற கண்ணியனாய், ஐது படு கொள்ளி அங்கை காய - மென்மை வாய்ந்த கொள்ளியின்

(பாடம்) 1. வான்பூத் தன்ன.

நியில் அகங்கை காய்ந்திட, கூர் இருள் குறு நரி உளம்பும் நெடுவிளி - மிக்க இருளில் குறுநரிகளை அலைத்தோட்டும் நீண்ட ஒலி;

க—கஉ. சிறு கண் பன்றிப் பெருநிரை கடிய - சிறிய கண்ணினை யுடைய பன்றியின் பெருங்கூட்டத்தை ஓட்டற்கு, முதைப்புனங் காவலர் - முற்றிய தினைப்புனம் காத்திருப்போர், நினைந்திருந்து ஊதும் கருங்கோட்டு ஓசையோடு - அவை வருங்காலத்தை எண்ணியிருந்து ஊதும் பெரிய கொம்பின் ஓசையொடு, ஒருங்குவந் திசைக்கும் - ஒரு சேர வந்தொலிக்கும், வன்புலக் காட்டு நாட்டதுவே - வன்புலமாகிய காட்டின் அகத்ததாகிய நாட்டினிடத்ததாகும்; (பாக! விரைந்து தேரினைச் செலுத்துவாயாக.)

(முடிபு) (பாக!) திருந்திழையூர், கங்குலில் இடையன் குறு நரி உளம்பும் நெடுவிளி புனங் காவலர் ஊதும் கோட்டோசையொடு ஒருங்குவந் திசைக்கும் காட்டு நாட்டதுவே, (ஆகலின் தேரை விரைந்து செலுத்துவாயாக.)

(வி - ரை.) தேம் - தேன்; தேனிருல் குழைதல் - தழைத்தல். வான் எனப் பூத்த - வான் மீனைப் பூத்தாற்போலத் தோன்றுமாறு பூத்த என்று விரித்துரைக்க. துரூஉ - செம்மறியாடு. மறி - குட்டி. பறி - மழையைத் தடுப்பதற்கு ஓலைப்பாயால் வளைத்து இயற்றிய குடலை. தொகுத்த இடையன் என இயையும். கொள்ளியில் கையைக்காய்த்திக் கொண்டு நரியை ஓட்டுவன் என்க. குறு நரி - ஆட்டு மறியை வௌவு தற்கு வருவது. குறு நரி, நெடு விளி, சிறு கண், பெருநிரை என்பன முரண் என்னும் அணி. வன்புலம் - குறிஞ்சியும் முல்லையும். அன்பு - ஒருவரை யொருவர் இன்றியமையாமை. ஆர்வம் - விருப்பம்.

தலைமகன் பாங்கற்குச் சொற்றது என்பது துறையாயின் களவுக் காலத்துப் பாங்கற் கூட்டத்துத் தலைவன் பாங்கற்குத் தலைவியின் இடங் கூறுதலாம். இது முல்லையிற் களவு நிகழ்ந்ததாதலின், திணை மயக்கமாம், [1]'திணைமயக் குறுதலும் கடிநிலை யிலவே' என்பவாகலின்.

(மே - ள்.) [2]'புணர்தல் பிரிதல்' என்னுஞ் சூத்திரத்து, இச் செய்யுள், 'இருத்தல் நிமித்தமாம்; இக்காலம் வருந்துணையும் ஆற்றினள் எனத் தான் வருந்துதலின்' என்றார், நச்.

---

1. தொல். அகத்: கஉ. 2. தொல். அகத்: கசு.

95. பாலை

[போக்குடன்பட்ட தலைமகள் தோழிக்குச் சொல்லியது.]

பைபயப் [1]பசந்தன்று நுதலுஞ் சாஅய்
ஐதா கின்றேன் தளிர்புரை மேனியும்
பலரும் அறியத் திகழ்தரும் அவலமும்
உயிர்கோடு கழியின் அல்லதை நினையின்
எவனோ வாழி தோழி பொரிகால்
பொகுட்டரை யிருப்பைக் குவிகுலைக் கழன்ற
ஆலி யொப்பின் தூம்புடைத் திரள்வீ
ஆறுசெல் வம்பலர் நீளிடை யழுங்க
ஈனல் எண்கின் இருங்கிளை கவரும்
[2]சுரம்பல கடந்தோர்க் கிரங்குப என்னார்
கௌவை மேவல ராகி இவ்வூர்
நிரையப் பெண்டிர் இன்னா கூறுவ
புரைய அல்லஎன் மகட்கெனப் பரைஇ
நம்முணர்ந் தாறிய கொள்கை
அன்னை முன்னர்யாம் என்னிதற் படலே.

—ஒரோடோகத்துக் கந்தரத்தனார்.

(சொ-ள்.) க—௫. தோழி வாழி-, பை பயப் பசந்தன்று நுதலும்-என் நெற்றியும் மெல்ல மெல்லப் பசந்தது, சாஅய் ஐது ஆகின்று என் தளிர் புரை மேனியும் - தளிரை யொத்த என் மேனியும் நுணுகி மெல்லிதாகின்றது, பலரும் அறியத் திகழ்தரும் அவலமும் - என் துயரமும் பலரும் அறியும்படி விளங்கித் தோன்றும், உயிர்கொடு கழியின் அல்லதை - இவை என் உயிரைக் கொண்டு போவதல்லது, நினையின் எவனோ - ஆயுமிடத்து வேறு என் செய்வன;

௫—௰. பொரி கால் பொகுட்டு அரை இருப்பை - பொரிந்த அடியினையும் கொட்டைகளையுடைய அரையினையுமுடைய இருப்பையினது, குவி குலைக் கழன்ற - குவிந்த குலையினின்றும் கழன்ற, ஆலி ஒப்பின் தூம்பு உடைத் திரள் வீ - பனிக்கட்டி போலும் உட்டுளையினையுடைய திரண்ட பூக்களை, ஆறு செல் வம்பலர் நீள் இடை அழுங்க. வழிச் செல்லும் புதியர் அந்நீண்ட நெறியிடத்தே அஞ்சிப் போக்கினைத் தவிர, ஈனல் எண்கின் இருங்கிளை கவரும் - ஈன்ற கரடிகளின் பெருங் கூட்டம் கவர்ந்துண்ணுகின்ற, சுரம் பல கடந்தோர்க்கு இரங்குப என்

(பாடம்) 1. பசந்த, பசந்தது. 2. சுரம்பல கழிந்தோர்.

னூர் - பல சுரங்களையும் கடந்து சென்ற தம் தலைவர் பொருட்டுத் தலைவியர் இரங்குவராதல் இயல்பென்று நினையாராய்;

௧௧—௧௨. கௌவை மேவலர் ஆகி - அலர் தூற்றலை விரும்புவாராகி, இவ்வூர் நிரையப் பெண்டிர் இன்னா கூறுவ - இவ் வூரிலுள்ள இழிந்த இயல்புடைய பெண்டிர் கூறுவனவாய இன்னாத சொற்கள்;

௧௩—௫. புரைய அல்ல என் மகட்கு என - என் மகளுக்குப் பொருந்துவன அல்ல என்று, பரைஇ - தெய்வத்தைப் பரவி, நம் உணர்ந்து - நமது களவொழுக்கத்தினை உணர்ந்து வைத்து, ஆறிய கொள்கை அன்னை முன்னர் - அமைதியுற்றிருக்கும் கொள்கையினையுடைய நம் அன்னைமுன், யாம் என் இதற் படல்-யாம் இக் களவொழுக்கத்திற் பட்டு ஒழுகல் எங்ஙனம் இயலும்?

(முடிபு) தோழி! வாழி! என் நுதலும் பசந்தன்று; மேனியும் ஐதாகின்று; அவலமும் தீகழ்தரும்; (இவை) உயிர்கோடு கழியின் அல்லதை நினையின் எவனோ? சுரம் பல கடந்தோர்க்கு இரங்குப என்னார். கௌவை மேவலராகி நிரையப் பெண்டிர் இன்னாகூறுப, என் மகட்குப் புரைய அல்லவென, பரைஇ ஆறிய கொள்கை அன்னை முன்னர் யாம் இதற்படல் என்?

(வி - ரை.) பசந்த என்னும் பாடத்திற்கு, பசந்த நுதலும் ஐதாகின்ற மேனியும் திகழ்தரும் அவலமும் எனப் பெயரெச்சத் தொடர்களாகக் கொள்க. இதற்கு ஆகின்று என்பது விகாரம். அல்லதை - அல்லது: ஈறு திரிந்தது. பசப்பு முதலியன உயிர் கொண்டே கழியும் என்பது கருத்து. வீயை எண்கின் கிளை கவரும் என்க. ஈன்ற கரடிகள் சிறும் இயல்பினவாகலின் வம்பலர் அழுங்குவர் என்க. புரைய அல்ல - உயர்வாவன அல்ல எனலுமாம். பரைஇ - தெய்வத்தைப் பராவி. அன்னை, தன் மகள் பழியொடு படாத இன்பவாழ்வு பெறல் வேண்டுமெனத் தெய்வத்தைப் பரவினள். 'நமது ஆற்றா நிலைமை யுணர்ந்து நம்மை சினவாது அமைந்துள்ள அன்னையின் முன்பு நாம் மேலும் இவ்வாறு ஒழுகுதல் பொருந்தாது என்றாள்.'

(மே - ள்.) [1]'எஞ்சியோர்க்கும் எஞ்சுதல் இலவே' என்னுஞ் சூத்திரத்து, இச் செய்யுளை எடுத்துக் காட்டி, இது போக்குடன் பட்டமை தலைவி தோழிக் குரைத்தது என்றனர், நச்.

———

1. தொல். அகத்: ௪௨.

96. மருதம்

[தோழி வாயின் மறுத்தது.]

நறவுண் மண்டை நுடக்கலின் இறவுக்கலித்துப்
பூட்டறு வில்லிற் கூட்டுமுதல் தெறிக்கும்
பழனப் பொய்கை அடைகரைப் பிரம்பின்
அரவாய் அன்ன அம்முள் நெடுங்கொடி
அருவி ஆம்பல் அகலடை துடக்கி
அசைவரல் வாடை தூக்கலின் ஊதுலை
விசைவாங்கு தோலின் வீங்குபு ஞெகிழும்
கழனியம் படப்பைக் காஞ்சி யூர
ஒண்தொடி யாயத் துள்ளுநீ நயந்து
கொண்டனை யென்பவோர் குறுமகள் அதுவே
செம்பொற் சிலம்பின் செறிந்த குறங்கின்
அங்கலுழ் மாமை[1] யஃதை தந்தை
அண்ணல் யானை அடுபோர்ச் சோழர்
வெண்ணெல் வைப்பிற் பருவூர்ப் பறந்தலை
இருபெரு வேந்தரும் [2]பொருதுகளத் தொழிய
ஒளிறுவாள் நல்லமர்க் கடந்த ஞான்றைக்
களிறுகவர் கம்பலை போல
அலரா கின்றது பலர்வாய்ப் பட்டே.

—மருதம் பாடிய இளங்கடுங்கோ.

(சொ - ள்.) க—அ. நறவு உண் மண்டை நுடக்கலின் இறவு கலித்து - கள்ளுண்ட கலம் கழுவப் படுதலின் (அந்நீரையுண்ட) இறு மீன் செருக்கி, பூட்டு அறு வில்லின் கூட்டு முதல் தெறிக்கும் - பூட்டிய நாண் அற்ற வில் தெறிப்பதுபோல நெற் கூடுகளின் அடிகளிற் றுள்ளி விழும் இடமாகிய, பழனப் பொய்கை அடைகரை - மருதநிலத்துப் பொய்கையின் அடைகரையிலுள்ள, பிரம்பின் அர வாய் அன்ன அம்முள் நெடுங் கொடி - பிரம்பினது அரத்தின் வாய் போன்ற அழகிய முட்களையுடைய நீண்ட கொடி, அருவி ஆம்பல் அகல் அடை துடக்கி - நீர்க்குறைவற்ற ஆம்பலது அகன்ற இலையினைச் சுற்றிட (அவ்விலையை) அசை வரல் வாடை தூக்கலின் - அசைந்துவரும் வாடைக்காற்று (விட்டு விட்டுப் புகுந்து) அசைத்தலின், ஊது உலை விசை வாங்கு தோலின் வீங்குபு ஞெகிழும் - (அவ்விலை) ஊதப்பெறும் கொல்லன்

(பாடம்) 1. அகுதை. 2. ஒருகளத் தொழிய.

உலைக்களத்து விசைத்து இழுத்துவிடும் துருத்தியைப் போலப் புடைத்துச் சுருங்கும், கழனி அம் படப்பைக் காஞ்சி ஊர - வயல்களையும் தோட்டங்களையுமுடைய காஞ்சி மரங்கள் மிக்க ஊரையுடைய தலைவனே!

௯—௧௦. ஒண் தொடி ஆயத்துள்ளும்-ஒள்ளிய தொடியினையுடைய பரத்தையர் கூட்டத்தினுள்ளும், நீ ஓர் குறுமகள் நயந்து கொண்டனை என்ப - நீ ஓர் இளைய மகளை விரும்பி மணந்தனை என்று ஊரார் கூறுவாராயினர்;

௧௦—௮. அதுவே - அக் கூற்று, செம்பொன் சிலம்பின் - சிவந்த பொன்னாலாய சிலம்பினையும், செறிந்த குறங்கின் - நெருங்கிய துடையினையும், அம் கலுழ் மாமை - அழகு ஒழுகும் மாமை நிறத்தினையும் உடைய, அஃதை தந்தை - அஃதை என்பாட்குத் தந்தையராகிய, அண்ணல் யானை அடுபோர்ச் சோழர் - பெருமை தங்கிய யானையையும் வெல்லும் போரினையு முடைய சோழர், வெண்ணெல் வைப்பில் பருவூர்ப் பறந்தலை - வெண்ணெல் விளையும் இடங்களை யுடைய பருவூர்ப் போர்க்களத்தே, இரு பெரு வேந்தரும் பொருது களத்து ஒழிய - தம்மொடு பொருத ஏனைச் சேரர் பாண்டியராய இரு பெரு வேந்தர்களும் போர் செய்து களத்தினிடத்தே பட்டொழிய, ஒளிறு வாள் நல் அமர் கடந்த ஞான்றை-விளங்கும் வாளினாற் செய்யும் நல்ல போரினைவென்ற பொழுது, களிறு கவர் கம்பலை போல - அம் பகை வேந்தர்களது களிறுகளைக் கவர்ந்து கொண்டகாலை எழுந்த ஆரவாரம் போல, பலர் வாய்ப்பட்டு அலர் ஆகின்றது - பலர் வாயிலும் பொருந்தி யெழுந்து அலர் ஆகா நின்றது.

(முடிபு) ஊர! நீ ஓர் குறுமகள் கொண்டனை யென்ப, அது, சோழர் பருவூர்ப் பறந்தலையில் இருபெரு வேந்தரும் பொருது ஒழிய, வாளமர்க் கடந்த ஞான்றைக் களிறு கவர் கம்பலை போல அலர் ஆகின்றது.

(வி - ரை.) மண்டை இக்காலத்து மொந்தை என வழங்கப்படுகின்றது. நுடங்கல் - கழுவல். அந்நீரை யுண்ட என வருவித்துரைக்க, நறவு கலந்த நீராதலின் உண்டு களிப்பதாயிற்று. கூட்டு முதற் றெறிக்கும் என்றது வளமிகுதி கூறியவாறும், தெறிக்கும் ஞெகிழும் என்னும் பெயரெச்சங்கள் இடப்பெயர் கொண்டன. பிரம்பின் நெடுங்கொடி என்க. கவர் கம்பலை பெயரெச்சம் காரியப்பெயர் கொண்டது. கின்று: இடைநிலை; பிற்கால வழக்காகலின், அலரா கின்று என்பது பாடமாதல் வேண்டும்; அன்றி, அது பகுதிப் பொருள் விகுதி எனலுமாம்.

(உ - றை.) 'நறவுண் மண்டை...காஞ்சியூர' என்றது, பரத்தையர் சேரியைச் சூழ்ந்து திரியும் பாணன் காமஞ் சாலா இளமையோளாகிய பரத்தையைத் தலைமகனோடு கூட்டத் தலைமகன் அவளை முயங்கியவிடத்து அவள் களிப்புற்று, நீங்கியவழி மெலிகின்றாள் என்றபடி

இதன்கண் பொய்கையைப் பரத்தையர் சேரியாகவும், முள்ளுடைப் பிரம்பின் கொடியை அதனைச் சூழ்ந்து திரியும் நெஞ்சு வலிய பாணனாகவும், ஆம்பல் இலையைக் காமஞ்சாலாக் குறுமகளாகவும், அதனைக் கொடி துடக்கியதனைப் பாணன் அவளைத் தலைமகனோடு கூட்டியதாகவும், வாடையைத் தலைமகனாகவும், அது தாக்குந்தோறும் அவ்விலை வீங்கித் தாக்காதவழி நெகிழ்ந்ததனை, தலைமகன் அவளை முயங்கியவழி அவள் களிப்புற்று, நீங்கிய வழி மெலிந்த தன்மையாகவும் கொள்க' மற்றும், இதில் 'நறவுண் மண்டை.........கூட்டு முதற் றெறிக்கும்.' என்றது நறவு கலந்த இழிந்த நீரையுண்ட இருல் அச் செருக்கினல் கூட்டுமுதற் றெறித்ததுபோலப் பரத்தையரின் இழிந்த இன்பத்தை நுகர்ந்த தலைவனும் செருக்குற்றுத் தனக்குப் புறம்பாகிய வேறிடத்தே தங்கிக் கிடக்கின்ற தன்மையாகவுங் கொள்க.

(மே - ள்.) [1]'புல்லுதல் மயக்கும்' என்னுஞ் சூத்திரத்து, 'ஒண்டொடி யாயத் துள்ளுநீ நயந்து, கொண்டனை யென்பவோர் குறுமகள் எனக் காமஞ் சாலா இளமையோளைக் கூறிற்று' என்றனர், நச்.

[2]'தெய்வ மஞ்சல்' என்னுஞ் சூத்திரத்து, 'களிறு கவர் கம்பலை போல, அலராகின்றது பலர் வாய்ப் பட்டே' என்பது புறஞ்சொல் மாணுக் கிளவிக்கு உதாரணமாகும் என்றனர், பேரா.

[3]'ஒருமை சுட்டிய என்னுஞ் சூத்திரத்து, 'பன்மைக் காகு மிடனுமா ருண்டே' என்பது, ஒருமைச் சொல் பன்மைச் சொல்லோடு தொடர்தற்குப் பொருந்து மிடமு முண் டென்பதூஉம் பட நின்றமையால், 'அஃதை தந்தை......சோழர்' என, ஒருமைச் சொல் பன்மைச் சொல்லோடு தொடர்தலுங் கண்டுகொள்க. ஈண்டு ஒருமைச் சொல் பன்மைச் சொல்லோடு மயங்குத லுடைமையான், 'ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவி' என்புழி அடங்காமை யறிக என்றனர் சேனாவரையர். அச் சூத்திரத்து, 'அஃதை தந்தை......சோழர்' என்புழிச் சோழரெல்லாரும் அஃதைக்குத் தந்தையாம் முறையராய் நிற்றலின், 'தந்தை' என்னும் ஒருமை, சோழர் என்னும் பன்மையோடு தனித்தனி சென்று கூடுதலின் வழுவின்றேனும் ஈற்றுப் பன்மைபற்றி வழுவமைத்தார் என்றனர், நச்.

---

1. தொல். கற்பு, ௯௦. 2. தொல். மெய்ப்; ௨௭.
3. தொல். எச்சவியல்: ௬௫.

97. பாலை

[வற்புறுக்குந் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.]

கள்ளியங் காட்ட புள்ளியம் பொறிக்கலை
வறனுறல் அங்கோ டுதிர வலங்கடந்து
புலவுப்புலி துறந்த கலவுக்கழி கடுமுடை
இரவுக்குறும் பலற நூறி நிரைபகுத்
திருங்கல் முடுக்கர்த் திற்றி கெண்டும்
கொலைவில் ஆடவர் போலப் [1]பலவுடன்
பெருந்தலை யெருவையொடு பருந்துவந் திருக்கும்
அருஞ்சுரம் இறந்த கொடியோர்க் கல்கலும்
இருங்கழை இறும்பின் ஆய்ந்துகொண் டறுத்த
நுணங்குகண் சிறுகோல் வணங்கிறை மகளிரோ
டகவுநர்ப் புரந்த அன்பின் கழல்தொடி
நறவுமகிழ் இருக்கை நன்னன் வேண்மான்
வயலை வேலி வியலூர் அன்னநின்
அலர்முலை யாகம் புலம்பப் பலநினைந்
தாழேல் என்றி தோழி யாழவென்
கண்பனி நிறுத்தல் எளிதோ குரவுமலர்ந்
தற்சிர நீங்கிய [2]அரும்பத வேனில்
அறலவிர் வார்மணல் அகலியாற் றடைகரைத்
துறையணி [3]மருது தொகல்கொள வோங்கிக்
கலிழ்தளிர் அணிந்த இருஞ்சினை மாஅத்
திணர்ததை புதுப்பூ நிரைத்த பொங்கர்ப்
புகைபுரை அம்மஞ் சூர
நுகர்குயில் அகவும் குரல்கேட் போர்க்கே.

—[4]'மாமூலனார்'.

(சொ - ள்.) கரு. தோழி - ;

க—ரு. கள்ளிஅம் காட்ட புள்ளி அம் பொறிக் கலை - கள்ளிக் காட்டிலேயுள்ள புள்ளிகளாய பொறிகளையுடைய கலைமானை, வறன் உறல் அம் கோடு உதிர வலங் கடந்து - அதன் வறட்சியுற்ற அழகிய கொம்பு சிதர்ந்தொழிய அதன் ஓட்டத்தினை வென்று பற்றித்தின்ற'

(பாடம்) 1. பல புலந்து. 2. அரும்பவிழ் வேனில்.
3. மருதமொ டிகல்கொள. 4. ஔவையார், குடவுமூர்த்தனார்.

புலவுப் புலி துறந்த கலவுக் கழி கடுமுடை - புலால் விருப்புடைய புலி கைவிட்டுப் போன மூட்டு வாய் ஒழிந்த கடிய முடைநாற்றத்தினையுடைய தசை கிடக்கு மிடத்தே;

௪-௬. இரவு குறும்பு அலற நூறி - இரவிலே காட்டரண்களிலுள்ளார் அலற அவர்களைக் கொன்று, நிரை பகுத்து - தாம் கொண்ட நிரைகளைப் பகுத்துக் கொண்டு. இருங் கல் முடுக்கர் - பெரிய கற்பாறையின் முடுக்கிலே, நிற்றி கெண்டும் - தசையினை அறுத்துத் தின்னும், கொலை வில் ஆடவர்போல - கொலைத்தொழில் வல்ல வில்லினையுடைய வெட்சி வீரர் போல;

௬-அ. பெருந்தலை எருவையொடு பருந்து பல உடன் வந்திருக்கும் - பெரிய தலையினையுடைய கழுகுகளோடு பருந்துகள் பலவும் ஒருங்கே வந்து சூழ்ந்திருக்கும், அருஞ் சுரம் இறந்த கொடியோர்க்கு - அரிய சுரநெறியைக் கடந்து சென்ற கொடியோராய நம் தலைவரின் பிரிவிற்காக, அல்கலும் - நாடோறும்;

௬-௧௰. இருங் கழை இறும்பின் - பெரிய மூங்கில்களையுடைய சிறு காட்டில், ஆய்ந்து கொண்டு அறுத்த - ஆராய்ந்து கொண்டு அறுத்திட்ட, நுணங்கு கண் சிறு கோல்-சிறிய கணுக்களையுடைய நுண்ணிய கோலினைக் கொண்ட, வணங்கு இறை மகளிரொடு - வளைந்த முன் கையினையுடைய விறலியரொடு, அகவுநர் புரந்த அன்பின் - பாணர்களைப் புரந்திடும் அன்பினையும், கழல்தொடி நறவு மகிழ் இருக்கை - கழலும் தொடியினையும் கள்ளுண்டு மகிழும் இருக்கையினையுமுடைய, நன்னன் வேண்மான் - நன்னன் வேண்மானது, வயலை வேலி வியலூர் அன்ன - வயலைக்கொடி படர்ந்த வேலிகளையுடைய வியலூரினையொத்த, வீன் அலர் முலை ஆகம் புலம்ப-வினது பரந்த முலையையுடைய மார்பகம் தனித்து வருந்த, பல நினைந்து ஆழேல் என்றி - பலவும் நினைந்து துன்பத்தில் ஆழ்ந்திடாதே என்று நின்றாய், என் - இஃதென்னை!,

௧௧—௨௧. குரவு மலர்ந்து அற்சிரம் நீங்கிய அரும்பத வேனில் - குரவம் மலர்ந்து முன்பனிக்காலம் நீங்கப் பெற்ற அரிய செவ்வியையுடைய இளவேனிற் காலத்தே, அறல் அவிர் வார் மணல் அகல் யாற்று அடைகரை - அறல் விளங்கும் நீண்ட மணலையுடைய அகன்ற ஆற்றின் கரையிடத்தே, துறை அணி மருது தொகல்கொள ஓங்கி - துறையை அழகு செய்யும் மருத மரங்களொடு தொகுதியாக உயர்ந்து, கவிழ் தளிர் அணிந்த இருஞ்சினை மாஅத்து - அழகு ஒழுகும் தளிரைக் கொண்ட பெரிய கிளைகளையுடைய மாமரத்தின், இணர் ததை புதுப் பூ நிரைத்த பொங்கர் - கொத்துக்களாக நெருங்கிய புதிய பூக்கள் செறிந்த சோலைகளிலே, புகை புரை அம் மஞ்சு ஊர - புகையினை யொத்த அழகிய வெண் மேகங்கள் தவழ, நுகர் குயில் அகவும் குரல் கேட்போர்க்கு (அவ்வின்பத்தை) நுகரும் குயில்கள் பாடும் குரலினைக் கேட்போருக்கு,

கண்பனி நிறுத்தல் எளிதோ - கண்ணின் நீரை நிறுத்துதல் எளிதாகுங் கொல்?

(முடிபு) தோழி! அருஞ்சுரம் இறந்த கொடியோர்க்கு வியலூ ரன்ன நின் அலர்முலை யாகம் புலம்ப ஆழேல் என்றி; என்? வேனிலில் யாற்றின் அடைகரைப் பொங்கரில் மஞ்ஞை ஊரக் குயில் அகவுங் குரல் கேட்போர்க்குக் கண்பனி நிறுத்தல் எளிதோ?

நிரை பகுத்துத் தீற்றி கொன்றும் ஆடவர் போல, புலி கலையின் வலங்கடந்து துறந்த முடைக்கண் எருவையொடு பருந்து வந்திருக்கும் அருஞ்சுரம் என இயையும்.

(வி - ரை.) கள்ளியம்...பொறிக்கலை; அம்: அசைகள்: வலம்: வென்றி, ஓடும் வென்றி. கடந்து என்பதன்பின் பற்றிக் கொன்று தின்ற என்பதனை விரித்துரைக்க. முடை - முடை நாற்ற முடைய தசைக்கு ஆகுபெயர். முடையிடத்தே எருவையொடு பருந்து வந்திருக்கும் என்க. இரும்பு - பகைவர் எயிற்புறத்துக் காடுமாம். மகளிர் - விறலியர். இவர் கையிலே சிறிய மூங்கிற் கோலையுடைய ராவரென்பது [1]'வெண்கடைச் சிறு கோல் அகவன் மகளிர்' என்பதனாலும் அறியப்படும். பாணர், கூத்தராகிய அகவுநரும் கையிற் கோலுடையரென்பது பிறண்டு வருவனவற்றால் அறியப்படும். யாழ: அசை. என்-எவ்வாறு இயலும் என்றபடி. மருது - மருதொடு என மூன்றனுருபு விரித்துரைக்க. குயில் அகவும் குரல் - குயில் பேட்டினை அழைக்கும் குரல் என்றலுமாம். கேட்போர்க்கு எனத் தன்னைப் பிறர்போல் வைத்துக் கூறினள். இனி, கேட்டு வாளாவிருக்கும் தலைவர் பொருட்டாக, என் கண் பனி நிறுத்தல் எளிதோ என்றுரைத்தலுமாம்.

(மே - ள்.) [2]'நடுவு நிலைத்திணையே' என்னுஞ் சூத்திரத்து, இச் செய்யுளை எடுத்துக் காட்டி, இதன்கண் இருவகை வேனிலும் பாலைக்கண் வந்தன என்றார், நச்.

---

98. குறிஞ்சி

[தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி தலைமகட்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது: தோழிக்குத் தலைமகள் சொல்லியதூஉமாம்.]

பனிவரை நிவந்த பயங்கெழு கவாஅன்
துனியில் கொள்கையோ டவர்நமக் குவந்த
இனிய உள்ளம் இன்னா வாக
முனிதக நிறுத்த நல்கல் எவ்வம்
சூருறை வெற்பன் மார்புறத் தணிதல்

---

1. குறுந் : உ௧௮. 2. தொல். அகத் : ௯.

அறிந்தனள் அல்லள் அன்னை வார்கோல்
செறிந்திலங் கெல்வளை நெகிழ்ந்தமை நோக்கிக்
கையறு நெஞ்சினள் வினவலின் முதுவாய்ப்
பொய்வல் பெண்டிர் பிரப்புளர் பிரீஇ
முருகன் ஆரணங் கென்றலின் அதுசெத்
தோவத் தன்ன வினைபுனை நல்லில்
பாவை அன்ன பலராய் மாண்கவின்
பண்டையிற் சிறக்கவென் மகட்கெனப் பரைஇக்
கூடுகோள் இன்னியம் கறங்கக் களனிழைத்
தாடணி அயர்ந்த அகன்பெரும் பந்தர்
வெண்போழ் கடம்பொடு சூடி இன்சீர்
ஐதமை பாணி இரீஇக்கை பெயராச்
செல்வன் பெரும்பெயர் ஏத்தி வேலன்
வெறியயர் வியன்களம் பொற்ப வல்லோன்
பொறியமை பாவையின் தூங்கல் வேண்டின்
என்னுங் கொல்லோ தோழி மயங்கிய
மையற் பெண்டிர்க்கு நோவ்வ லாக
ஆடிய பின்னும் வாடிய மேனி
பண்டையிற் சிறவா தாயின் இம்மறை
அலரா காமையோ அரிதே யஃதான்
றறிவர் உறுவிய அல்லல்கண் டருளி
வெறிகமழ் நெடுவேள் நல்குவன் எனினே
செறிதொடி யுற்ற செல்லலும் பிறிதெனக்
கான்கெழு நாடன் கேட்பின்
யானுயிர் வாழ்தல் அதனினும் அரிதே.

—வெறிபாடிய காமக்கண்ணியார்.

(சொ - ள்.) உக. தோழி:

க—ச. பனிவரை நிவந்த பயம் கெழு கவான் - குளிர் வாய்ந்த மலையினது உயர்ந்த வளம் பொருந்திய பக்க மலையிடத்து, அவர் - நம் தலைவர், துனிஇல் கொள்கையொடு - வெறுப்பில்லாத கொள்கையுடன், நமக்கு உவந்த இனிய உள்ளம் - நமக்குவந்தளித்த அவரது இனிய உள்ளம், இன்னாஆக - இன்னாவாயினமையின், முனிதக நிறுத்த நல்கல் எவ்வம் - வெறுக்குமாறு நிலை பெறுத்திய நல்கல் வருத்தமானது;

௫—௬. சூர் உறை வெற்பன்-தெய்வம் உறையும் மலையினை யுடையானுப அத் தலைவன், மார்பு உற-மார்பு உறுவதொன்றானே, தணிதல்-தணிவதாதலை, அன்னை அறிந்தனள் அல்லள்-நம் தாய் அறியாதவளாகி;

௬—௮. வார்கோல் செறிந்து இலங்கு எல்வளை நெகிழ்ந்தமை நோக்கி-நீண்ட கோற்றொழில் அமைந்த நெருங்கி விளங்கும் ஒளி பொருந்திய வளை நெகிழ்ந்த நிலையினைப் பார்த்து, கையறு நெஞ்சினள் - செயலற்ற உள்ளத்தினளாய், வினவலின் - வினவுதலாலே ;

௮—௧0. முதுவாய் பொய் வல் பெண்டிர் - முதுமை வாய்ந்த பொய் கூறல் வல்ல கட்டுவிச்சியராய பெண்டிர், பிரப்பு உளர்பு இரீஇ-பிரப்பரிசியைப் பரப்பி வைத்து, முருகன் ஆர் அணங்கு என்றலின் - இது முருகனது செயலான் வந்த அரிய வருத்தம் என்று கூறலின், அது செத்து - அதனை வாய்மையாகக் கருதி ;

௧௧—௩. ஓவத்து அன்ன வினை புனை நல் இல் - ஓவியத்தை யொத்த புனைந்த தொழிற் றிறங்களையுடைய நல்ல மனையில், பாவை அன்ன பலர் ஆய் மாண் கவின் - பாவையைப் போன்ற பலராலும் ஆராயப்பெறும் மாண்புற்ற அழகானது, என் மகட்குப் பண்டையிற் சிறக்க என - என் மகட்கு முன்போற் சிறப்புறுக என்று, பரைஇ - தெய்வத்தைப் பரவி ;

௧௪—௫. கூடு கொள் இன்னியம் கறங்கக் களன் இழைத்து - இணைந்த பலவாய இனிய இயங்கள் ஒத்து ஒலிக்க வெறியாடும் களனை இயற்றி, ஆடு அணி அயர்ந்த அகல் பெரும் பந்தர் - ஆடுதற் கேற்ற அழகு செய்த அகன்ற பெரிய பந்தலிலே ;

௧௬—௨௧. வெண் போழ் கடம்பொடு சூடி - வெள்ளிய பனந்தோட்டினைக் கடப்பமலரொடு சூடி, இன் சீர் ஐது அமை பாணி இரீஇ-இனிய சீர் அழகிதாக அமைந்த தாளத்தொடு பொருத்தி, செல்வன் பெரும் பெயர் ஏத்தி - முருகக் கடவுளின் பெரும் புகழினைத் துதித்து, வேலன் வெறி அயர் வியன் களம் பொற்ப - வேலன் வெறியாடும் பெரிய களம் அழகுபெற, வல்லோன் பொறிஅமை பாவையின் - வல்லோன் ஆட்டும் பொறியமைந்த பாவையைப் போல, தூங்கல் வேண்டின் - ஆடுதலை விரும்பின், என்ஆம் கொல் - என் ஆகுமோ?

௨௧—௫. மயங்கிய மையல் பெண்டிர்க்கு - வெறியாடுங் களத்துக் கூடிய மயக்கம் பொருந்திய பெண்டிர்க்கு, நொவ்வலாக ஆடிய பின்னும் - துன்பம் உண்டாக வேலன் ஆடிய பின்னும், வாடிய மேனி - எனது வாடிய மேனி, பண்டையிற் சிறவாதாயின் - முன்பு போலச் சிறந்திடாதாயின், இம் மறை அலர் ஆகாமையோ அரிதே - இக் களவொழுக்கம் பலரும் தூற்றுமாறு வெளிப்படாதிருத்தல் அரிது ;

---

௨௫. அஃதான்று - அஃதன்றி ;

௨௧—௩௦. அறிவர் உறுவிய அல்லல் கண்டருளி - நம் தலைவர் உறுவித்த இவ்வல்லலைத் தெரிந்தருளுதலின், வெறி கமழ் நெடுவேள் நல்குவன் எனின் - மணங்கமழும் நெடுவேள் நம் முன்னை அழகினைத் தந்தருள்வன் எனின், செறிதொடி உற்ற செல்லலும் பிறிதென - நெருங்கிய வளையலை யணிந்த நம்தலைவி உற்ற துன்பமும் பிறிதொன்றானெய்தியது என, கான் கெழு நாடன் கேட்பின் - காடு பொருந்திய நாட்டினையுடைய நம் தலைவன் கேட்டறியின், யான் உயிர் வாழ்தல் அதனினும் அரிது - யான் உயிர் கொண்டு வாழ்தல், முற்கூறிய அதனினும் அரிது.

(முடிபு) தோழி (நம்) எவ்வம், அன்னை அறிந்தனள் அல்லள்; வினவலின் பெண்டிர் முருகன் அணங்கு என்றலின், அது செத்து, (முருகற்) பரைஇ ஆடனி அயர்ந்த பந்தர், வேலன் பாவையிற் றூங்கல் வேண்டின் என் ஆம் கொல்? ஆடிய பின்னும் வாடிய மேனி சிறவாதாயின் மறை அலராகாமை அரிது; அஃதான்று, நெடுவேள் நல்குவன் எனின், செல்லலும் பிறிதெனக் கான்கெழு நாடன் கேட்பின், யான் உயிர் வாழ்தல் அதனினும் அரிது.

(வி - ரை.) உவந்த-உவந்து அளிசெய்த. ஆக: காரணப் பொருட்டாயது. நல்கல் எவ்வம் - தலைவன் அருளால் வந்த எவ்வம் எனத் தானுற்ற நோய்க்குப் பெயர் கூறினாள். அல்லல் என்பதனை எச்சமாக்குக. முதுவாய் - பேசி முதிர்ந்த வாய் என்றலுமாம். முதுவாய்ப் பெண்டிராவார் கட்டுவிச்சியர்; கட்டுக் கூறுபவர். கட்டாவது, முறத்திலே நெல்லை யிட்டுக் குறி சொல்லுதல். பிரப்பு-அரிசி, தினை முதலியவற்றைப் பல பகுதியாகக் கூடையிலாதல், முறத்திலாதல் பலியாக இட்டு வைத்தல். 'பல்பிரப் பிரீஇ யென' என (உ௪உ) இந் நூலுள்ளும், [1]'தினைப்பிரப் பிரீஇ' எனக் குறுந்தொகையிலும், [2]'குருதியொடு விரைஇய தூவெள் ளரிசி, சில்பலிச்செய்து பல்பிரப் பிரீஇ' எனத் திருமுருகாற்றுப்படையிலும் வருதல் காண்க. வெண் போழ் - போழப்பட்ட பனந்தோடு: ஆகுபெயர். சீர் - தாள அறுதி. செல்வன் - முருகன். பெரும் பெயர் - பெரிய திருநாமமும் ஆம். அஃதாவது, முருகனுக்குரிய ஆறெழுத் தருமறை. வேலன் - செவ்வேளின் வேலை ஏந்தி நின் றாடுபவன்; பூசாரி. பொறி - இயந்திரம் வல்லோன் இயற்றிய பொறி என்க. வல்லோன் ஆட்டும் பாவை யெனினும் பொருந்தும். நொவ்வல்-நோவல். ஆகாமை அரிது: ஆகும் என்றபடி. அஃதான்று: [3]'இன்றி யென்னும் வினையெஞ் சிறுதி' என்னும் சூத்திரத்து, 'தோன்றில் மருங்கின்' என்றதனால், அன்றி என்பது அன்று என ஆயிற்று எனவும், [4]'அன்று வருகாலை ஆவா குதலும்' என்றதனால் ஆன்று என ஆயிற்று எனவும் கொள்க. கண்டருளி - கண்டு அருள் செய்து என்றுரைத்தலுமாம். வெறி - முருகனுக்கு இயல்பாய நறுமணம். [5]'மணங்கமழ் தெய்வத் திளநலம் காட்டி' என்றார் நக்கீரனாரும். இனி

1. குறுந்: உ௬௩. 2. முருகு: உ௩௬-௭. 3. தொல் எழுத்: உ௩௭. 4. தொல். எழுத்: உ௫௮. 5. முருகு: உ௯0.

வெறியாடும் களத்துப் போதரலின் அந்நாற்றம் கமழும் என்றலுமாம். செல்லலும் பிறிதெனக் கான்கெழு நாடன் கேட்பின் யானுயிர் வாழ்தல்......அரிது என்றது, தனது உண்மைக் காதலுக்கு இழுக்கு உண்டாதல் கருதி என்க. இச் செய்யுள் தலைவி கூற்றாதற்கே பெரிதும் பொருந்தியதாம். நச்சினார்க்கினியரும் இக் கருத்தினரே யென்பது [1]'களவல ராயினும்' என்னுஞ் சூத்திரவுரையாற் பெறப்படும். தோழி கூற்றாயின் தலைவிக்கும் தனக்கும் உள்ள ஒற்றுமையால், யான் எனக் கூறினாள் எனல் வேண்டும்.

---

99. பாலை

[உடன் போகிய தலைமகளைத் தலைமகன் மருட்டிச் சொல்லியது.]

வாள்வரி வயமான் கோளுகிர் அன்ன
செம்முகை யவிழ்ந்த முண்முதிர் முருக்கின்
சிதரார் செம்மல் தாஅய் மதரேழில்
மாணிழை மகளிர் பூணுடை முலையின்
முகைபிணி அவிழ்ந்த கோங்கமொ டசைஇணை
அதிரல் பரந்த அந்தண் பாதிரி
உதிர்வீ அஞ்சினை தாஅய் எதிர்வீ
மராஅ மலரோடு விராஅய்ப் பராஅம்
அணங்குடை நகரின் மணந்த பூவின்
நன்றே கானம் நயவரும் அம்ம
கண்டிசின் வாழியோ குறுமகள் நுந்தை
அடுகளம் பாய்ந்த தொடிசிதை மருப்பின்
பிடிமிடை களிற்றில் தோன்றும்
குறுநெடுந் துணைய குன்றமும் உடைத்தே.

—பாலைபாடிய பெருங்கடுங்கோ.

(சொ - ள்.) ௧௧. குறுமகள் - இளமடவாய், வாழியோ - வாழ்வாயாக ;

௧—௩. வாள் வரி வய மான் தோள் உகிர் அன்ன - வாள் போலும் வரிகளையுடைய வலிய புலியினது கொல்லும் தொழிலையுடைய நகம் போன்ற, செம் முகை அவிழ்ந்த முள் முதிர் முருக்கின் - சிவந்த முகை விரிந்த முள் நிறைந்த முருக்க மலராகிய, சிதர் ஆர் செம்மல் தாஅய்-வண்டு சூழ்ந்த வாடிய பூக்கள் பரந்து ;

௩—௫. மதர் எழில் மாண் இழை மகளிர் பூண் உடை முலையின் - களித்த அழகினையும் மாண்புற்ற அணியினையுமுடைய மகளிரது

---

1. தொல். களவியல்: உ௪.

பூணணிந்த முலையினைப் போன்ற, முகை பிணி அவிழ்ந்த கோங்க மொடு நனை அதிரல் அசைஇ-முகைகள் அலர்ந்த கோங்கம் பூக்க ளோடு கொத்துக்களாய புனலிப்பூ கூடிக் கிடக்க;

கூ—எ. பரந்த அம் தண் பாதிரி அஞ்சினை உதிர் வீ தாஅய்-பரவிய அழகிய குளிர்ந்த பாதிரியினது அழகிய சினையினின்றும் உதிர்ந்த பூக்களோடு தாவி;

எ—அ. எதிர் வீ மராஅ மலரொடு விராஅய்-மாறுபட்ட பூக்கள் வெண்கடப்பம் பூக்களோடு விரவித் தாவி;

அ—கூ. பராஅம் அணங்கு உடை நகரின் மணந்த பூவின்- பரவுக் கடன் பூண்ட தெய்வமுடைய கோவிலின்கண் கலந்து கிடக்கும் பூக் களைப் போல;

க0—க. கானம் நன்றே நயவரும்-இக் காடு பெரிதும் விரும்பத் தக்கதாகின்றது, கண்டிசின்-காண்பாயாக;

கக—ச. (மற்றும் இக் கானம்,) நுந்தை அடுகளம் பாய்ந்த தொடி சிதை மருப்பின் - உன் தந்தை பகைவரை அடும் போர்க்களத்துப் பாய்ந்து போர் செய்தலால் பூண் சிதைந்த கோட்டினையுடையவும், பிடி மிடை-பிடிகள் சூழப் பெற்றவுமாய, களிற்றில் தோன்றும்-களிறு களைப் போலத் தோன்றும், குறு நெடுந் துணைய-சிறியவும் பெரியவு மாய அளவினையுடைய, குன்றமும் உடைத்து-குன்றங்களையும் உடைய தாகின்றது; (காண்பாயாக.)

(முடிபு) குறுமகள், வாழியோ! முருக்கின் செம்மல் தாஅய், முகை பிணியவிழ்ந்த கோங்கமொடு நனை அதிரல் அசைஇ, பாதிரி அஞ்சினை உதிர் வீ எதிர் வீ மராஅ மலரொடு தாஅய், விராஅய் அணங்குடை நகரின் மணந்த பூவின் கானம் நன்று நயவரும்; (அது) பிடிமிடை களிற்றிற் றோன்றும் குறு நெடுந் துணைய குன்றமும் உடைத்து; அம்ம! கண்டிசின்.

(வி - ரை.) கோள் உகிர் - இரையைப் பற்றிய உகிரென்றுமாம்; குருதியாற் சிவந்த உகிரென்பான் 'கோளுகிர்' என்றான்; புலியுகிர் வண்ணமும் வடிவும் பற்றி முருக்கின் செம்முகைக்கு உவமையாயது. முலைபோலும் முகை யென்க. 'மராஅ மலரொடு விராஅய்ப் பராஅம்' என்றது அளபெடை வண்ணம்; என்னை? [1]"அளபெடை வண்ண மளபெடை பயிலும்" என்றாராகலின். அம்ம: உரையசை; கேட் பித்தற் பொருட்டுமாம். பகைவரது மதிற்கதவைப் பாய்தலின் தொடி சிதைந்த தெனலுமாம். மருப்பிற் களிறு பிடிமிடை களிறு என்க.

(மே - ள்.) [2]"ஒன்றாத் தமரினும்' என்னுஞ் சூத்திரத்து இச் செய்யுளைக் கூறி, 'இது தலைவியை மருட்டியது' என்று கூறினர், நச்.

———

1. தொல். செய்: உகக. 2. தொல். அகத்: சக.

100. நெய்தல்

[தோழி வரைவு கடாயது.]

அரையுற் றமைந்த ஆரம் நீவிப்
புரையப் பூண்ட கோதை மார்பினை
நல்லகம் வடுக்கொள முயங்கி நீவந்
தெல்லினிற் பெயர்தல் எனக்குமா ரினிதே
பெருந்திரை முழக்கமொ டியக்கவிந் திருந்த
கொண்டல் இரவின் இருங்கடல் மடுத்த
கொழுமீன் கொள்பவர் இருள்நீங் கொண்சுடர்
ஓடாப் பூட்கை வேந்தன் பாசறை
ஆடியல் யானை அணிமுகத் தசைத்த
ஓடை ஒண்சுடர் ஒப்பத் தோன்றும்
பாடுநர்த் தொடுத்த கைவண் கோமான்
பரியுடை நற்றேர்ப் பெரியன் விரியிணர்ப்
புன்னையங் கானற் புறந்தை முன்றுறை
வம்ப நாரை யினனொலித் தன்ன
அம்பல் வாய்த்த தெய்ய தண்புலர்
வைகுறு விடியல் போகிய எருமை
நெய்தலம் புதுமலர்[1] மாந்தும்
கைதையம் படப்பைஎம் மழுங்க லூரே.

—உலோச்சனார்.

(சொ - ள்.) ௧—௪. அரை உற்று அமைந்த ஆரம் நீவி-நறுமணம் கூட்டி அரைக்கப்பெற்று முடிந்த சந்தனத்தைப் பூசி, புரையப் பூண்ட கோதை மார்பினை-உயர்வுற மாலையினைப் பூண்ட மார்பினையுடையையாய், நீ எல்லினில் வந்து நல் அகம் வடுக்கொள முயங்கிப் பெயர்தல் எனக்கும் இனிது-நீ இரவினில் வந்து நினது நல்ல மார்பு வடுவுண்டாக முயங்கிப் போதல் எனக்கும் மிக இனிதாகும்; (ஆயினும்,)

௫—௭. பெரும் திரை முழக்கமொடு இயக்கு அவிந்திருந்த-பெரிய அலையின் ஒலியொடு அதன் அலையும் ஓய்ந்திருந்த, கொண்டல் இரவில்-மேகஞ் சூழ்ந்த இரவில், இரு கடல் மடுத்த கொழுமீன் கொள்பவர்-கொழுமீனைப் பிடிக்கும் பரதவர் கரிய கடலிலே மடுத்த அம்பியிலுள்ள, இருள் நீங்கு ஒள்சுடர்-இருள் நீங்குதற்குக் காரணமான ஒளி பொருந்திய விளக்கம்;

(பாடம்) 1. நெய்தற் புதுமலர்.

அ—கഠ. ஓடாப் பூட்கை வேந்தன் பாசறை-பிறக்கிடாத மேற்கோளினையுடைய வேந்தன் பாசறைக் கண்ணே யுள்ள, ஆடு இயல் யானை அணிமுகத்து அசைத்த - அடுதல் வல்ல யானையின் அழகிய முகத்திற் பிணித்த, ஓடை ஒண் சுடர் ஒப்பத் தோன்றும்-ஓடையினது ஒள்ளிய சுடர்போலத் தோன்றும் (இடமாகிய);

கக—ஔ. பாடுநர்த் தொடுத்த கைவண் கோமான்-பாடி வருவாரை வளைத்துக்கொள்ளும் கைவண்மை வாய்ந்த கோமானாகிய, பரி உடை நல்தேர்ப் பெரியன் - குதிரைகள் பூண்ட சிறந்த தேரினையுடைய பெரியன் என்பானது, விரி இணர்ப் புன்னை அம் கானல் புறந்தை முன்றுறை - மலர் விரிந்த கொத்துக்களையுடைய புன்னைமரங்களையுடைய அழகிய சோலை சூழ்ந்த புறையாற்றின் கடற்றுறையின் கண்ணுள்ள, வம்ப நாரை இனன் ஒலித்தன்ன அம்பல்-புதிய நாரையின் கூட்டம் ஒலித்தாற் போன்ற அலர்;

கடு—அ. தண் புலர் வைகுறு விடியல்-தண்ணென்று புலர்ந்திடும் இருள் தங்கிய விடியற்காலத்தே, போகிய எருமை நெய்தல் புதுமலர் மாந்தும்-வெளிச் சென்ற எருமை நெய்தலின் புதிதாக அலர்ந்த மலரினைத் தின்னும், கைதை அம் படப்பை எம் அழுங்கல் ஊர்-தாழைவேலிகளையுடைய அழகிய தோட்டங்களையுடைய எமது ஆரவாரம் மிக்க ஊரின் கண், வாய்த்த-எழுந்தன.

(முடிபு) தலைவ, நீ எல்லினில் வந்து பெயர்தல் எமக்கும் இனிது ஓடை ஆயினும். மீன் கொள்பவர் இருங்கடல் மடுத்த ஒண்சுடர் வேந்தன் பாசறை யானையின் ஒண்சுடர் ஒப்பத் தோன்றும் பெரியன் புறந்தை முன்றுறை நாரை இனன் ஒலித்தன்ன அம்பல் எம் அழுங்கல் ஊர் வாய்த்தன.

(வி - ரை.) எனக்குமார்: உம்மை எச்சப் பொருட்டு; மார்: அசை. உவமைக்கண் யானை முகத் தசைத்த ஓடை யென்றமையால், பொருளினும் அதற்கேற்ப, கடல்மடுத்த அம்பியிற் பிணித்த சுடர் என வருவித்துரைக்க. 'பாடுநர்த் தொடுத்த கைவண் கோமான்' என்றது, பாடுவார் பொருள் வேட்டுப் பிறரிடம் செல்லாவாறு மிகுதியாக வழங்குபவன் என்றபடியாம். புன்னையில் நாரை யிருக்கு மென்பதும், வம்ப நாரை யென்னும் வழக்கும், [1]'நின்ற புன்னை நிலந்தோய் படுசினை வம்ப நாரை சேக்கும்' என்னுஞ் செய்யுளுள்ளுங் காண்க. புறந்தை - புறையாறு என்பதன் மரூஉ. இது பொறையாறு எனவும் வழங்கும். [2]'நறவுமகிழிருக்கை நற்றேர்ப் பெரியன், கட்கமழ் பொறையாற் றன்ன' என்பது காண்க. வாய்த்த: முற்றுவினை. தெய்ய: அசை. [3]'எங்கில மருங்கிற் பூவும் புள்ளும்' என்ற சூத்திரத்து ஒன்றென முடித்தலால், பிற கருப்பொருள் மயங்குவன உளவேனுங் கொள்க என்றமையின், மருதத்து விலங்காகிய-எருமையும், சிறுபொழுதாகிய வைகறையும் நெய்தற்கண் வந்தன.

1. குறுந்: உ௯௬. 2. நற்: ௧௩௧. 3. தொல். அகத்: ௧௯.

101. பாலை

[பிரிவிடை வேறுபட்ட கிழத்தி தோழிக்குச் சொல்லியது. தோழி கிழத்திக்குச் சொல்லியதூஉ மாம்.]

அம்ம வாழி தோழி யிம்மை
நன்றுசெய் மருங்கில் தீதில் என்னும்
தொன்றுபடு பழமொழி யின்றுபொய்த் தன்றுகொல்
தகர்மருப் பேய்ப்பச் சுற்றுபு சுரிந்த
சுவன்மாய் பித்தைச் செங்கண் மழவர்
வாய்ப்பகை கடியும் மண்ணொடு கடுந்திறல்
தீப்படு சிறுகோல் வில்லொடு பற்றி
நுரைதெரி மத்தங் கொளீஇ நிரைப்புறத்
தடிபுதை தொடுதோல் பறைய வேகிக்
கடிபுலங் கவர்ந்த கன்றுடைக் கொள்ளையர்
இனந்தலை பெயர்க்கும் நனந்தலைப் பெருங்காட்
டகலிரு விசும்பிற் கோடம் போலப்
பகலிடை நின்ற பல்கதிர் ஞாயிற்
றுருப்பவிர் பூரிய[1] சுழன்றுவரு கோடைப்
புன்கால் முருங்கை ஊழ்கழி பன்மலர்
தண்கார் ஆலியில் தாவன உதிரும்
பனிபடு பன்மலை இறந்தோர்க்கு
முனிதகு பண்பியாஞ் செய்தன்றோ விலமே.

—மாமூலனார்.

(சொ - ள்.) ௧. தோழி வாழி-, அம்ம-நான் கூறுவதனைக் கேட்பாயாக!

௨—௩. இம்மை நன்று செய் மருங்கில் தீது இல் என்னும்-இம்மையில் நன்று செய்யுமிடத்துத் தீது வருவதில்லை என்று கூறப்படும், தொன்று படு பழமொழி - தொன்று தொட்டு வழங்கும் பழமொழி, இன்று பொய்த்தன்றுகொல்-இன்று பொய்யாயதோ;

௪—௧௧. தகர் மருப்பு ஏய்ப்பச் சுற்றுபு சுரிந்த-செம்மறியாட்டுக் கிடாயின் கொம்பினை யொப்பச் சுற்றிக் கடை சுருண்ட, சுவல் மாய் பித்தைச் செங்கண் மழவர்-பிடரியை மறைக்கும் தலைமயிரினையும் சிவந்த கண்ணினையுமுடைய மழவர்கள், வாய்ப் பகை கடியும் மண்ணொடு-வாயினின்றெழும் இருமலாய பகையினை எழாமற் றீர்க்

(பாடம்) 1. உளரிய.

கும் மருந்தாய புற்றுமண்ணை வாயில் அடக்கிக்கொண்டனராய், கடும் திறல் தீப் படு சிறு கோல் வில்லொடு பற்றி - கடிய திறல்வாய்ந்த தீயுண்டாம் சிறிய அம்பினை வில்லொடு கையிற்பற்றி, நுரை தெரி மத்தம் கொளீஇ - வெண்ணெய்யை வெளிப்படுத்தும் கடையும் மத்தினைக் கவர்ந்துகொண்டு, நிரைப் புறத்து அடி புதை தொடுதோல் பறைய ஏகி-ஆனிரைகள் உள்ளவிடத்துத் தம் அடியை மறைத்துள்ள செருப்புக்கள் தேயச் சென்று, கடி புலம் கவர்ந்த கன்றுடைக் கொள்ளையர் - பகைவர் காவல் இடத்திலே கவர்ந்த கன்றுகளுடன் கூடிய ஆன் இனத்தையுடையராய், இனம் தலை பெயர்க்கும் நனந்தலைப் பெருங்காட்டு-அவ்வினத்தினை அவ்விடத்தினின்று கொண்டு போகும் அகன்ற இடத்தையுடைய பெரிய காட்டின் கண்ணே;

கட—சு. அகல் இரு விசும்பிற்கு ஓடம்போல - அகன்ற பெரிய வானாகிய கடற்கண் ஓடம்போல, பகலிடை நின்ற பல் கதிர் ஞாயிற்று-பகலில் வானிடையே நின்ற பல கதிர்களையுடைய ஞாயிற்றின், உருப்பு அவிர்பு ஊரிய சுழன்று வரு கோடை - வெப்பம் விளங்கிப் பரக்கச் சுழன்று வரு மேல் காற்றினால், புன் கால் முருங்கை ஊழ் கழி பன் மலர் - புல்லிய அடிமரத்தினையுடைய முருங்கையின் முதிர்ந்து கழியும் பல பூக்கள், தண் கார் ஆலியில் தாவன உதிரும்-குளிர்ந்த கார்காலத்து ஆலங்கட்டி போலப் பரந்தனவாய் உதிரும்;

கஎ—அ. பனிபடு பன்மலை இறந்தோர்க்கு - நடுக்கமுண்டாகும் பல மலைகளையும் தாண்டிச் சென்ற நம் தலைவர்க்கு, முனிதகு பண்பு யாம் செய்தன்றோ இலம் - வெறுக்கத்தக்க செயல் யாதும் நாம் செய்திலமே.

(முடிபு) தோழி! 'இம்மை....பழமொழி' இன்று பொய்த்தன்று கொல்! பெருங்காட்டிலே, ஞாயிற்றின் உருப்பு அவிர்பு ஊர்தலின், சுழன்றுவரு கோடையால் முருங்கையின் பன்மலர் ஆலியின் உதிரும் பன்மலையிறந்தோர்க்கு யாம் முனிதகு பண்பு செய்தன்றோ இலம்.

மழவர், மண்ணொடு சிறுகோல் வில்லொடு பற்றி, கொளீஇ, ஏகி, கவர்ந்த கொள்ளையர் இனந்தலை பெயர்க்கும் பெருங்காடு என்க.

(வி - ரை.) வாய்ப்பகை - வாயினின் றுண்டாம் பகை; இருமல்; அவரது வரவை வெளிப்படுத்தலின் பகை என்றார். நுரை - வெண்ணெய். பறைய - கழல வென்றுமாம். கன்றுடைக் கொள்ளையர் - கன்றினையுடைய ஆனின் கொள்ளையர் என்க. விசும்பிற்கு ஓடம் - விசும்பாகிய கடலின்கண் ஓடம்; அளக்கலாகா விரிவு பற்றி விசும்பிற்குக் கடலும், அதனை ஊடறுத்துச் செல்லுதல் பற்றி ஞாயிற்றுக்கு ஓடமும் உவமையாயின. ஊரிய - ஊர்தலால். காட்டின்கண் மலர் உதிரும் மலையென்க. காட்டினையுடைய பன்மலை யென்றலுமாம். மலையிறந்தோர்க்கு முனிதகு பண்பு யாம் செய்திலம்; அங்ஙனமாகவும் அவர் வரைவினை நீட்டிக்கச் செய்து நம்மை வருத்துதலின் 'நன்று

செய் மருங்கில் தீதுஇல்' என்னும் பழமொழி இன்று பொய்த்தது போலும் எனக் கிழத்தி கவன்று கூறினாளென்க. 'நன்று செய் மருங்கில்' என்றமையால் இவள் இயற்கைப் புணர்ச்சிக் காலத்துத் தலைவற்கு இன்பம் விளைத்தாளென்பது பெற்றும். தோழி கூற்று யிறும் பொருளிதுவே.

---

102. குறிஞ்சி

[இரவுக் குறிக்கண் சிறைப்புறமாகத் தோழிக்குச் சொல்லுவாளாய்த் தலைமகள் சொல்லியது.]

உளைமான் துப்பின் ஓங்குதிணைப் பெரும்புனத்துக்
கழுதிற் கானவன் பிழிமகிழ்ந்து வதிந்தென
உரைத்த சந்தின் ஊரல் இருங்கதுப்
பைதுவரல் அசைவளி யாற்றக் கைபெயரா
ஒலியல் வார்மயிர் உளரினள் கொடிச்சி
பெருவரை மருங்கிற் குறிஞ்சி பாடக்
குரலுங் கொள்ளாது நிலையினும் பெயராது
படாஅப் பைங்கண் பாடுபெற் றொய்யென
மறம்புகல் மழகளி றுறங்கும் நாடன்
ஆர மார்பின் அரிஞிமி றார்ப்பத்
தாரன் கண்ணியன் எஃகுடை வலத்தன்
காவலர் அறிதல் ஓம்பிப் பையென
வீழாக் கதவம் அசையினன் புகுதந்
துயங்குபடர் அகல முயங்கித் தோள்மணந்
தின்சொல் லளைஇப் பெயர்ந்தனன் தோழி
இன்றெவன் கொல்லோ கண்டிகு மற்றவன்
நல்கா மையின் அம்ப லாகி
ஒருங்குவந் துவக்கும் பண்பின்
இருஞ்சூழ் ஓதி ஒண்ணுதல் பசப்பே.

—[1]மதுரை இளம்பாலாசிரியன் சேந்தங்கூத்தன்.

(சொ - ள்.) கஅ. தோழி-;

க—க. உளைமான் துப்பின் - சிங்கம் போலும் வலியினையுடைய, திணைப் பெரும் புனத்து ஓங்கு கழுதில் - பெரிய திணைப்புனத்தில்

(பாடம்) 1. மதுரைப் பாலாசிரியன்.

ஓங்கிய பரணின்கண்ணே, கானவன் பிழி மகிழ்ந்து வதிந்தென - கானவன் கள்ளுண்டு களித்து இருந்தனனாக, உரைத்த சந்தின் ஊரல் இரும் கதுப்பு - பூசிய மயிர்ச் சாந்தினையுடைய பரந்த கரிய கூந்தலை, ஐதுவரல் அசைவளி ஆற்ற - மெல்லென அசைந்து வரும் காற்றுப் புகுந்து புலர்த்த, ஒலியல் வார் மயிர் கை பெயரா உளரினள் - தழைத்து நீண்ட அக் கூந்தலைத் தன் கையாற் பெயர்த்துக் கோதிக் கொண்டு, கொடிச்சி - அவன் மனைவி, பெருவரை மருங்கில் - அப் பெரிய வரையின் பக்கத்தே, குறிஞ்சி பாட - குறிஞ்சிப் பண்ணைப் பாடாநிற்க, குரலும் கொள்ளாது - தான் கொண்ட தினைக் கதிரினையும் உட்கொள்ளாது, நிலையினும் பெயராது - நின்ற நிலையினின்றும் அகலாது, படாஅப் பைங்கண் பாடுபெற்ற - துயில்வரப்பெறாத அழகிய கண் துயில் வரப் பெற்று, மறம் புகல் மழ களிறு ஒய்யென உறங்கும் நாடன் - வீரத்தினை விரும்பிய இளைய களிறு விரைந்து தூங்கும் நாட்டையுடையனாகிய நம் தலைவன்;

௧௦—௫. ஆரம் மார்பின் அரி ஞிமிறு ஆர்ப்ப - சந்தனம் பூசிய தனது மார்பின்கண்ணே அழகிய வண்டுகள் ஒலிப்ப, தாரன் கண்ணியன் எஃகு உடை வலத்தன் - தாரனும் கண்ணியனும் வேல் பொருந்திய வலக்கையை யுடையவனுமாகி, காவலர் அறிதல் ஓம்பி - காவலாளர் அறிதலைப் பரிகரித்து, பையென வீழாக் கதவம் அசையினன் புகுதந்து - தாம் வீழ்த்தாத கதவினருகே தங்கி மெல்லெனப் புகுந்து, உயங்கு படர் அகல முயங்கித் தோள் மணந்து - வருந்தும் துன்பம் நீங்க அணைத்துத் தோளினைக் கூடி, இன்சொல் அளைஇப் பெயர்ந்தனன் - இன் சொற்களைக் கலந்து பேசிச் சென்றனன்; (அங்ஙனமாகவும் இப்பால்,)

௧௬—௯. இன்று அவன் நல்காமையின் - அவன் இன்று ஒரு நாள் வந்து அருள் செய்யாமையின், ஒருங்கு வந்து அம்பல் ஆகி - ஒருங்கே வந்து அலர் ஆகுமாறு, உவக்கும் பண்பின் - மகிழ்ச்சியை விளைவிக்கும் இயல்பினையுடைய, இருஞ் சூழ் ஓதி ஒண் நுதல் பசப்பு - கரிய கூந்தலாற் சூழப்பட்ட ஒள்ளிய நெற்றியின் பசப்பினை, எவன் கொல்லோ கண்டிசும் - நாம் கண்டது என்னையோ?

(முடிபு) தோழி! கானவன் பிழி மகிழ்ந்து வதிந்தென, கொடிச்சி குறிஞ்சி பாட, களிறு கண்பாடு பெற்று உறங்கும் நாடன், முயங்கித் தோள் மணந்து இன் சொல் அளைஇப் பெயர்ந்தனன்; இன்று அவன் நல்காமையின், அம்பல் ஆக, நுதலிடத்துப் பசப்பினை எவன்கொல் கண்டிசும்?

(வி - ரை.) உளைமான் - பிடரி மயிரினையுடைய விலங்கு; சிங்கம். பிழி - கள், பிழியப்படுவது என்னும் பொருட்டு. பாட - பாடுதலால். பாடுதலாற் கொள்ளாது பெயராது உறங்கும் என்க. தார் - மார்பிற் சூடுவது. கண்ணி - தலையிற் சூடுவது. அறிதல் ஓம்பி - அறியாதபடி பாதுகாத்து. முற்று: வினைமாற்று. அம்பல்ஆகி: அம்பல் ஆக எனத்

திரிக்க. உவக்கும் பண்பின் ஓதி என்க; நுதல் என்றலுமாம். இனி ஓதி என்பதனை ஆகு பெயராகக் கொண்டு, தோழி ஓதி என விளியாக் கலுமாம். இன்று ஒரு நாள் அருள் செய்யாமையால், நெற்றியில் பசப்பு உண்டாயது என்னை என்றபடி.

(உ - றை.) கொடிச்சி, கானவனுக்கு இன்பம் உண்டாகப் பாடிய குறிஞ்சிப் பண் யானையைத் தினை யுண்ணாமற் செய்ததன்றி, பசி ஒரு புறம் நலிய, அதனை உறங்கவும் செய்ததுபோல, அம்பற் பெண்டிர், தாய்க்கு உணர்த்திய அலர், தலைவன் தலைவியை நுகராமற் செய்த தன்றி, வேட்கை ஒருபுறம் நலிய, அவன் வாளாதே புறத்தே அயர்ந் திருக்கவும் செய்தது என்க.

(மே - ள்.) [1]'இரவுக்குறியே......மனையகம் புகாக் காலையான' என் னுஞ் சூத்திரத்து இச் செய்யுளைக் கூறி, இது மனையகம் புக்கது என் றுரைத்தனர், நச்.

---

103. பாலை

[தலைமகன் பிரிவின்கண் தலைமகள் தோழிக்குச் சொற்றது.]

நிழலறு நனந்தலை யெழாலேறு குறித்த
கதிர்த்த சென்னி நுணங்குசெந் நாவின்
விதிர்த்த போலும் அந்நுண் பல்பொறிக்
காமர் சேவல் ஏமஞ் சேப்ப
முளியரில் புலம்பப் போகி முனாஅது
முரம்படைந் திருந்த மூரி மன்றத்
ததர்பார்த் தல்கும் ஆகெழு சிறுகுடி
உறையுநர் போகிய வோங்குநிலை வியன்நகர்[2]
இறைநிழல் ஒருசிறைப் புலம்பயா உயிர்க்கும்
வெம்முனை யருஞ்சுரம் நீந்தித் தம்வயின்
ஈண்டுவினை மருங்கின் மீண்டோர் மன்னென
நள்ளென் யாமத் துயவுத்துணை யாக
நம்மொடு பசலை நோன்று தம்மொடு
தானே[3] சென்ற நலனும்
நல்கார் கொல்லோநாம் நயந்திசி னோரே.

— காவிரிப் பூம்பட்டினத்துச் செங்கண்ணனார்.

---

1. தொல். களவு: ௪0. (பாடம்) 2. வியன் மனை. 3. தாமே

(சொ - ள்.) (தோழி), ௧௫. நாம் நயந்திசினோர்-நம்மால் விரும்பப்பட்ட தலைவர்;

௧—௯. நிழல் அறு நனந்தலை - நிழலற்ற அகன்ற பாலை நிலத்தே, எழால் ஏறு குறித்த-புல்லூற்றினால் எற்றுதல் குறிக்கப்பட்ட, கதிர்த்த சென்னி - பெரிய தலையினையும், நுணங்கு செந் நாவின் - நுணுகிய சிவந்த நாவினையும், விதிர்த்த போலும் அம் நுண் பல் பொறி- தெளித்தன போலும் அழகிய சிறிய பலவாய புள்ளிகளையுமுடைய, காமர் சேவல் - அழகிய குறும்பூழ்ச் சேவல், ஏமம் சேப்ப - பாதுகாவலான இடத்திற் சென்று தங்க எண்ணி, முளி அரில் புலம்பப் போகி - தானிருந்த காய்ந்துபட்ட சிறு தூறு தனித்தொழியப் போய்;

௯—௧௦. முனைஅது முரம்பு அடைந்திருந்த மூரி மன்றத்து - வன்னிலத்தைச் சார்ந்திருந்த பழைமையான பெரிய மன்றிலே, அதர்பார்த்து அல்கும் - (ஆறலைக்க) வழியைப் பார்த்துத் தங்கியிருக்கும், ஆ கெழு சிறுகுடி - பசுக்கள் பொருந்திய சிற்றூரின்கண்ணே, உறையுநர் போகிய ஓங்கு நிலை வியன்நகர் - உறைவோர் விட்டுப்போன இடமாகிய உயர்ந்த நிலையினையுடைய பெரிய மனையில், இறை நிழல் ஒரு சிறை-இறப்புநிழலின் ஒரு பக்கத்தே தங்கி, புலம்பு அயா உயிர்க்கும் - தனிமையால் பெருமூச்செறிந்திருக்கும், வெம்முனை அரும் சுரம் நீந்தி-கொடிய முனையிருப்புக்களையுடைய அரிய சுரத்தினைக் கடந்து;

௧௦—௫. தம் வயின் ஈண்டு வினை மருங்கின் - தம்மிடத்து வந்துற்ற பொருளீட்டும் வினையகத்தே, மீண்டோர் என - மீண்டும் செல்லுதலுற்றாரென, நள் என் யாமத்து உயவுத் துணை ஆக - நள்ளென்ற நடு யாமத்தும் உசாவும் துணையாகும் பொருட்டு, நம்மொடு பசலை நோன்று - நம்மொடு இதுகாறும் பசலையைப் பொறுத்திருந்து இப்பொழுது, தம்மொடு தானே சென்ற நலனும்-அத் தலைவருடன் தானே வலிந்து சென்ற நம் நலனையேனும், நல்கார் கொல்லோ - நமக்கு அருளாரோ?

(முடிபு) (தோழி!) நாம் நயந்திசினோர், அருஞ்சுரம் நீந்தி, வினை மருங்கின் மீண்டோர் என நம்மொடு பசலை நோன்று தம்மொடு தானே சென்ற நலனும் நல்கார் கொல்லோ?

எழாலேறு குறித்த சேவல், ஏமம் சேப்ப, போகி இறை நிழல் ஒரு சிறை புலம்பு அயாவுயிர்க்கும் அருஞ்சுரம் என்க.

(வி - ரை.) எழால் - புல்லூறு, ஏறு - எறிதல், வவ்வுதல்; [1]'கூருகிர்ப் பருந்தின் ஏறுகுறித் தொரீஇ' என்பது காண்க. கதிர்த்த சென்னி - ஒளிவிடும் தலை எனலுமாம். சேவல் - ஈண்டுக் குறும்பூழ்ச் சேவல். மீண்டோர் - மீண்டு சென்றார். ஆகிய எனும் பாடத்திற் நம் ஆகும் பொருட்டென்பதே பொருள். நலனும் உயவுத் துணையாக நம்

1. புறம்: ௪௩.

மொடு பசலை நோன்றிருந்து, தம்மொடு தானே சென்றது; இனி, நல்கார் கொல்லோ என்று உரைத்தலுமாம். இதற்குச் சென்றது என்றது சென்ற என விகாரமாயிற்று எனக.

---

104. முல்லை

[வினைமுற்றி மீளுந் தலைமகற்குத் தோழி சொல்லியது.]

வேந்துவினை முடித்த காலைத் தேம்பாய்ந்
தினவண் டார்க்குந் தண்ணறும் புறவின்
வென்வேல் இளையர் இன்புற வலவன்
வள்புவலித் தூரின் அல்லது முள்ளுறின்
முந்நீர் மண்டிலம் ஆதி ஆற்றா
நன்னால்கு பூண்ட கடும்பரி நெடுந்தேர்
வாங்குசினை பொலிய ஏறிப் புதல
பூங்கொடி அவரைப் பொய்யதள் அன்ன
உள்ளில் வயிற்ற வெள்ளை வெண்மறி
மாழ்கி யன்ன தாழ்பெருஞ் செவிய
புன்தலைச் சிறாரோ டுகளி மன்றுழைக்
கவையிலை ஆரின் அங்குழை கறிக்கும்
சீறூர் பலபிறக் கொழிய மாலை
இனிதுசெய் தனையால் எந்தை வாழிய
பனிவார் கண்ணள் பலபுலந் துறையும்
ஆய்தொடி யரிவை கூந்தல்
போதுகுரல் அணிய வேய்தந் தோயே

—மதுரை மருதனிளநாகனார்.

(பொ - ள்.) கச. எந்தை - எம் தலைவனே!,

க—எ. வேந்து வினை முடித்த காலை - வேந்தன் வினையை முடித்த காலத்தே, தேம் பாய்ந்து இன வண்டு ஆர்க்கும் - திசைகள் தோறும் பறந்து கூட்டமாய வண்டுகள் ஆரவாரிக்கும், தண் நறும் புறவில் - குளிர்ந்த நறிய முல்லை நிலத்தே, வென்வேல் இளையர் இன்புற - வென்றி பொருந்திய வேலினையுடைய வீரர் இன்பம் அடைய, வலவன் வள்பு வலித்து ஊரின் அல்லது - பாகன் கடிவாளத்தினை இழுத்துப் பிடித்துச் செலுத்தின் அல்லது, முள் உறின் முந்நீர் மண்டிலம் ஆதி ஆற்றா - தாற்றுக்கோல் தீண்டின் கடல் சூழ்ந்த உலகே ஆதி எனும்

செலவிற்குப் போதாத, கடும்பரி நல்நால்கு பூண்ட நெடுந்தேர் - மிக்க வேகமுடைய நல்ல நான்கு குதிரைகள் பூட்டப்பெற்ற நீண்ட தேரில், வாங்கு சினை பொலிய ஏறி - வளைந்த கொடிஞ்சி பொலிய ஏறி;

எ—கக. புதல் பூ கொடி அவரைப் பொய் அதள் அன்ன - புதலிற் படர்ந்த பூவையுடைய அவரைக் கொடியிலுள்ள பொய்த் தோல் போன்ற, உள் இல் வயிற்ற-உள்ளீடில்லாத வயிற்றினவும், மாழ்கி யன்ன தாழ்பெரும் செவிய - மயங்கிக் கிடந்தாலொத்த தாழ்ந்து தொங்கும் பெரிய செவியினவும் ஆகிய, வெள்ளை வெண்மறி - வெள்ளாட்டின் வெள்ளிய குட்டி, புன்தலைச் சிறாரோடு உகளி - புற்கென்ற தலையினையுடைய சிறுவர்களோடு குதித்துச் சென்று, மன்றுழைக் கவை இல் ஆரின் அம் குழை கறிக்கும் - மன்றின் கண்ணே கவையாய இலையினையுடைய ஆத்தியின் அழகிய தளிரைக் கடிக்கும், சிறு ஊர் பல பிறக்கு ஒழிய - சிறிய ஊர்கள் பல பின்னே ஒழிந்திட வந்து;

கக—எ. மாலை - இம் மாலைக் காலத்தே, பனிவார் கண்ணள் பல புலந்து உறையும்-நீர்வடியும் கண்ணினளாய்ப் பலவற்றையும் எண்ணி வெறுத்து உறையாநிற்கும்; ஆய்தொடி அரிவை - ஆராய்ந்த வளையலையுடைய தலைவி, அணிய - அணிந்துகொள்ளுமாறு, குரல் கூந்தல் - அவளுடைய கொத்தாகிய கூந்தலில், போது வேய்தந்தோய் - மலரைச் சூட்டினை (ஆகவே), இனிது செய்தனை-இனிய தொன்றைச் செய்தனையாவாய், வாழிய - நீ வாழ்வாயாக.

(முடிபு) எந்தை! வேந்து வினை முடித்த காலை, கடும்பரி நெடுந்தேர் ஏறி, சீறூர் பல பிறக்கு ஒழிய (வந்து,) மாலை, புலந்து உறையும் அரிவை அணிய கூந்தல் போது வேய்தந்தோய், அதனால், இனிது செய்தனை, வாழிய!

(வி - ரை.) தேம் - திசை. [1]'அவன் மறைதேஎம் நோக்கி' என்பது காண்க; தேஎனுமாம். வள்பு - வார், கடிவாளம். முள் - தாற்று முள். ஆதி - குதிரையின் நேரோட்டம். நால்கு - நான்கு; பெயர்த் திரிசொல்லென்பர் நச்சினார்க்கினியர்; [2]'பால்புரை புரவி நால்குடன் பூட்டி' என்பதன் உரை காண்க. சினை - தேரின் உறுப்பாகிய கொடிஞ்சி. பொய் அதள்-உள்ளீடின்றித் தோல் மாத்திரமாயிருக்கும் காய். தலைவனை எந்தை யென்று கூறுவது, 'அன்னை யென்னை யென்றலு முளவே' என்னுஞ் சூத்திரத்து உம்மையால் தழுவப்படும். மறி, சிறாரோ டுகளிக் குழை கறிக்கும் சீறூர் பல பிறக்கொழிய என்றது, கார்ப் பருவத்தில், தலைவன் மீண்டு வரும் வழியானது, அவனுக்கு இன்பத்தை விளைத்து, தலைவிபால் விரைந்தேகத் தூண்டியதைக் குறித்தவாறு.

(மே - ள்.) [3]'வெறியறி சிறப்பின்' என்னுஞ் சூத்திரத்து, வஞ்சிக்கண்ணும் பொதுவியல் வருவன உள என்று கூறி, அது 'வேந்து வினை

1. அகம்: ௪௮. 2. பொருந: ௧௬௫. 3. தொல். புறத்: ௫

முடித்த' என்னும் அகப்பாட்டினுள், சுட்டி ஒருவர் பெயர் கூறா வஞ்சி பொதுவியலாய் வந்தவாறு காண்க, என்றும், [1]'வினைவயிற் பிரிந்தோன்' என்னுஞ் சூத்திரத்து, இச் செய்யுளைக் காட்டி, இதனுள் வினை முடித்த காலைத் தெரிவையர் செலவிற்கேற்ப ஊராது கோலூன்றின் உலகிறந்தன செலவிற்குப் பற்றாத குதிரைத் தேரேறி இடைச்சுரத்தில் தங்காது மாலைக்காலத்து வந்து பூச்சூட்டினை; இனிது செய்தனை; எந்தை வாழிய, எனத் தோழி கூறியவாறு காண்க என்றும் உரைத்தனர், நச்.

---

105. பாலை

[மகட்போக்கிய தாய் சொல்லியது.]

அகலறை மலர்ந்த அரும்புமுதிர் வேங்கை
ஒள்ளிலைத் தோடலை தைஇ மெல்லென
நல்வரை நாடன் தற்பா ராட்ட
யாங்குவல் லுநள்கொல் தானே தேம்பெய்து
மணிசெய் மண்டைத் தீம்பால் ஏந்தி
ஈனாத் தாயர் மடுப்பவும் உண்ணாள்
நிழற்கயத் தன்ன நீள்நகர் வரைப்பின்
எம்முடைச் செல்வமும் உள்ளாள் பொய்ம்மருண்டு
பந்துபுடைப் பன்ன பாணிப் பல்லடிச்
சில்பரிக் குதிரைப் பல்வேல் எழினி
கெடலருந் துப்பின் விடுதொழின் முடிமார்
கனையெரி நட்ட கல்காய் கானத்து
வினைவல் அம்பின் விழுத்தொடை மறவர்
தேம்பிழி நறுங்கள் மகிழின் முனைகடந்து
வீங்குமென் சுரைய ஏற்றினந் தரூஉம்
முகைதலை திறந்த வேனில்
பகைதலை மணந்த பல்லதர்ச் செலவே.

—தாயங்கண்ணனார்.

(சொ - ள்.) ச—அ. மணி செய் மண்டைத் தீம்பால் தேம் பெய்து ஏந்தி-மணிகளிழைத்த பொற்கலத்தில் இனிய பாலொடு தேன் கலந்து ஏந்தி, ஈனாத் தாயர் மடுப்பவும் உண்ணாள் - செவிலித் தாயர் ஊட்டவும் உண்ணாளாய என்மகள், நிழற் கயத்து அன்ன நீள் நகர் வரைப்பில்-நிழற்கண்ணுள்ள குளம்போலக் குளிர்ந்த நீண்ட

1. தொல். கற்பு: ௯.

மாளிகை யிடத்தேயுள்ள, எம் உடைச் செல்வமும் உள்ளாள் - எமது பெரிய செல்வத்தையும் நினையாளாய் ;

௧—௩. அகல் அறை மலர்ந்த அரும்பு முதிர் வேங்கை - அகன்ற பாறையில் அரும்பு முதிர்ந்து மலர்ந்த வேங்கையின், ஒள்இலைத் தொடலை தைஇ - ஒள்ளிய இலை விரவிய மாலையினை அணிந்து, மெல் லென - மெத்தென, நல்வரை நாடன் தன் பாராட்ட - நல்ல மலை நாடனாகிய தலைவன் தன்னைப் பாராட்டி வர ;

அ. பொய் மருண்டு - அப் பொய்யை மெய்யென மயங்கி ;

௯—௧௭. பந்து புடைப்பன்ன பாணிப் பல்லடி - பந்து புடைக்கப் பட்டு எழுவதொத்த தாளத்துடன் கூடிய பல அடியீட்டினையும், சில் பரி - சிலவகைச் செலவினையு முடைய, குதிரை - குதிரைகளையும், பல் வேல் - பல வேற்படையினையுமுடைய, கெடலரும் துப்பின் எழினி - கெடுதலில்லாத வலி பொருந்திய எழினி யென்பான், விடு தொழில் முடிமார் - ஏவிவிட்ட தொழிலை முடிக்கும்பொருட்டு, கனை எரி நடந்த கல்காய் கானத்து - மிக்க எரி பரத்தலின் பாறைகள் காய்ந்திருக்கும் காட்டின்கண், வினை வல் அம்பின் விழுத்தொடை மறவர் - போர்த் திறம் வாய்ந்த அம்பினது தப்பாத தொடுத்தலையுடைய வீரர்கள், தேம் பிழி நறுங் கள் மகிழின் - பிழிந்த தேனாற் சமைந்த நறிய கள்ளுண்ட மகிழ்ச்சியினால், முனை கடந்து - பகைவர் போர் முனையை வென்று, வீங்கு மென் சுரைய ஏறு இனம் தரூஉம் - பருத்த மெல்லிய மடியினை யுடையவும் ஏறுகளோடு கூடியவுமாகிய ஆனினத்தைக் கொணர்ந்து தரும், பகை தலை மணந்த-பகைவருடன் பொருதல் கூடிய, பல் அதர் - பலவாகிய நெறிகளில், மூகைதலை திறந்த வேனில் - மலை முழைஞ்சு கள் வெடித்தற் கேதுவாகிய வேனிற் காலத்தே, செலவு-செல்லுதலை ;

௪. யாங்கு வல்லுநள் கொல் - எங்ஙனம் வல்லள் ஆயினளோ!

(முடிபு) ஈனுத்தாயர் தீம்பால் தேம் பெய்து, மடுப்பவும் உண்ணாள், எம்முடைச் செல்வமும் உள்ளாள், வரை நாடன் தற் பாராட்ட, பொய் மருண்டு பகை தலை மணந்த பல்லதரில், வேனில் செலவு யாங்கு வல்லுநள் கொல் !

எழினி விடு தொழில் முடிமார் மறவர், முனை கடந்து ஏற்றினம் தரூஉம் பகை தலை மணந்த பல்லதர் என்க.

(வி - ரை.) மெல்லென என்றதனைச் செலவு என்பதனோடு இயைத்து உரைத்தலுமாம். நற்றாயின் வேறு படுக்கச் செவிலியை, ஈனுத் தாயர் என்றார். சில்பரி-ஆதி, மண்டிலம் முதலிய செலவு வகை. விடுதொழில் - ஏவிய தொழில்; பகைவர் ஆனினத்தைக் கவர்ந்துவரும் தொழில் ; பகைவர் கவர்ந்த தனது நிரையை மீட்கும் தொழிலுமாம். கள் மகிழின் - கள்ளையுண்டு மகிழ்ந்தால் என்றுமாம். வேற்று இனம் எனப் பிரித்து, பகைப் புலத்து இனம் என்றலுமாம். முகை - மலை முழைஞ்சு. ஏற்றினம் தரூஉம் அதர், பகை தலைமணந்த அதர் எனத் தனித்தனி கூட்டுக.

———

106. மருதம்

[தலைமகள் தன்னைப் புறங்கூறினாளாகக் கேட்ட பரத்தை அவட்குப் பாங்காயினார் கேட்பச் சொல்லியது.]

எரியகைந் தன்ன தாமரைப் பழனத்துப்
பொரியகைந் தன்ன பொங்குபல சிறுமீன்
வெறிகொள் பாசடை யுணீஇயர் பைப்பயப்
பறைதபு முதுசிரல் அசைபுவந் திருக்குந்
துறைகேழ் ஊரன் பெண்டுதன் கொழுநனை
நம்மொடு புலக்கும் என்ப நாமது
செய்யா மாயினும் உய்யா மையின்
செறிதொடி தெளிர்ப்ப வீசிச் சிறிதவண்
உலமந்து வருகம் சென்மோ தோழி
ஒளிறுவாட் டானைக் கொற்றச் செழியன்
வெளிறில் கற்பின் மண்டமர் அடுதோறும்
களிறுபெறு வல்சிப் பாணன் எறியும்
தண்ணுமைக் கண்ணின் அலைஇயர்தன் வயிறே.

—ஆலங்குடி வங்கனார்.

(சொ - ள்.) ௧. தோழி-;

௧—௪. எரி அகைந்தன்ன தாமரைப் பழனத்து-தீ கிளைத் தெரிந்தாற் போலும் தாமரைப் பூக்களையுடைய வயலில், பொரி அகைந்தன்ன பொங்கு பல சிறு மீன் உணீஇயர் - நெற்பொரி முதலியன தெறித்தாற் போன்று விளங்கும் பல சிறிய மீன்களை உண்ணும் பொருட்டு, வெறி கொள் பாசடை - மணங்கொண்ட பசிய இலையில், பறைதபு முதுசிரல் - பறத்தல் ஒழிந்த முதிய சிச்சிலிப் பறவை, பைப்பய அசைபு வந்திருக்கும் - மெல்ல மெல்ல அசைந்து வந்திருக்கும், துறைகேழ் ஊரன் பெண்டு - துறை பொருந்திய ஊரனின் மனைவி, தன் கொழுநனை நம்மொடு புலக்கும் என்ப - தன் கணவனை நம்மொடு கூட்டி வெறுத்துப் பேசுகின்றாள் என்பர் ;

௧—௭. நாம் அது செய்யாம் ஆயினும் உய்யாமையின்-நாம் அதற்கேதுவாய தொன்றும் செய்யாம் ஆயினும் அவள் கூறும் பழியினின்றும் நீங்க மாட்டாமையின் ;

௧௦—௩. ஒளிறு வாள் தானைக் கொற்றச் செழியன் - விளங்கும் வாட்படையினையுடைய வெற்றி பொருந்திய பாண்டியன், வெளிறு இல் கற்பின் மண்டு அமர் அடுதோறும் - குற்றமில்லாத படைப்பயிற்சியொடு கூடி நெருங்கிய போரில் அடுந்தோறும், களிறு பெறு வல்சிப்

பாணன் எறியும் - களிறுய உணவினைப் பெறும் பாணன் அடிக்கும். தண்ணுமைக் கண்ணின் - மத்தளத்தின் கண்போல, தன் வயிறு அலை இயர் - அவள் தன் வயிற்றை அலைக்கும்படி ;

அ—க. செறி தொடி தெளிர்ப்ப வீசி-செறிந்த வளை ஒலித்திடக் கையை வீசி, சிறிது அவண் உலமந்து வருகம் - சிறிது பொழுது அவ் விடத்தே உலாவி வருவோம், சென்மோ - வருவாயாக.

(முடிபு) தோழி! துறை கேழ் ஊரன் பெண்டு, தன் கொழுநனை நம்மொடு புலக்கும் என்ப; நாம் அது செய்யாமாயினும் உய்யாமையின் செழியன் அமர் அடு தோறும் பாணன் எறியும் தண்ணுமைக் கண்ணின், தன் வயிறு அலை இயர், சிறிது அவண் உலமந்து வருகம் சென்மோ.

(வி - ரை.) தெளிர்த்தல் - ஒலித்தல். சென்மோ - வாராய் என்றபடி. மோ: முன்னிலை யசை. கற்பு-கல்வி, படைக்கலப் பயிற்சி.

(உ - றை.) முதுமையால் பறக்கமாட்டாத சிரல், மீனுக்கு அண்மையில் பாசடை மீதிருந்தும் அதனைக் கவரமாட்டாமலும் ஏனை யிளஞ் சிரல் கவர்தற்குப் பொருமலுமிருத்தல் போல், முதுமையால் எழுச்சி குன்றிய தலைவி, தன் மனையகத்தே கணவனைக்கொண்டிருந்தும் அவனை வளைத்துக்கொள்ள மாட்டாமலும், ஏனை யிளம் பருவமுடையார் தழுவுதற்கும் பொருமலும் இருக்கிறுள் என்பது.

(மே - ள்.) [1]'பரத்தை வாயில்' என்னுஞ் சூத்திரத்து,'செறிதொடி தெளிர்ப்ப வீசிச் சிறிதிவண் - உலமந்து வருகஞ் சென்மோ தோழி என்றக்கால் தலைவிக்குப் பாங்காயினர் கேட்பச் சொல்லிக் கூறல் வேண்டுமென்பது என்றனர், பேரா.

---

107. பாலை

[தோழி தலைமகள் குறிப்பறிந்து வந்து தலைமகற்குச் சொல்லியது.]

நீசெல வயரக் கேட்டொறும் பலநினைந்
தன்பின் நெஞ்சத் தயாஅப்பொறை மெலிந்த
என்னகத் திடும்பை களைமார் நின்னொடு
கருங்கல் வியலறைக் கிடப்பி வயிறுதின்
ரு றிரும்புலி துறந்த ஏற்றுமான் உணங்கல்
நெறிசெல் வம்பலர் உவந்தனர் ஆங்கண்
ஒலிகழை நெல்லின் அரிசியோ டோராங்
கானிலைப் பள்ளி அளைபெய் தட்ட
வானிணம் உருக்கிய வாஅல் வெண்சோறு

---

1. தொல். செய்: கசக.

புகரரைத் தேக்கின் அகலிலை மாந்தும்
கல்லா நீண்மொழிக் கதநாய் வடுகர்
வல்லாண் அருமுனை நீந்தி அல்லாந்து
உகுமணூ றஞ்சும் ஒருகாற் பட்டத்
தின்னு ஏற்றத் திழுக்கி முடங்கூர்ந்
தொருதனித் தொழிந்த உரனுடை நோன்பக
டங்குழை இருப்பை அறைவாய் வான்புழல்
புல்லுளைச் சிறுஅர் வில்லின் நீக்கி
மரைகடிந் தூட்டும் வரையகச் சீறூர்
மாலை இன்றுணை யாகிக் காலைப்
பசுநனை நறுவீப் பரூஉப்பர லுறைப்ப
மணமனை கமழும் கானம்
துணையீ ரோதியென் தோழியும் வருமே.

—காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார்.

(சொ - ள்.) (தலைவ,) உஉ. துணை ஈர் ஓதி என் தோழியும் - கடையொத்த குளிர்ந்த கூந்தலையுடைய என் தோழியும் ;

க—ங. நீ செலவு அயரக் கேட்டொறும் - நீ உடன்கொண்டு செல்லுதலை விரும்ப அவ்விருப்பினைக் கேட்குந்தொறும், அன்பின் நெஞ்சத்துப் பல நினைந்து - அன்பினை யுடைய நெஞ்சத்து (முன்பு நிகழ்ந்த) பலவற்றையும் எண்ணி (அதனொடு), அயாஅப் பொறை மெலிந்த என் அகத்து இடும்பை களைமார் - வருத்தத்தைத் தாங்குவதால் மெலிந்துள்ள என் நெஞ்சத்துள்ள துன்பினை நீக்கும் பொருட்டு ;

ச—கஉ. இரும்புலி கருங்கல் வியல் அறை கிடப்பி - பெரிய புலியானது கரிய கற்களையுடைய அகன்ற பாறையில் கிடத்தி, வயிறு தின்று துறந்த ஏற்றுமான் உணங்கல் - வயிறு நிறையத் தின்றுவிட்டுப் போன மானேற்றின் காய்ந்த தசையை, நெறி செல் வம்பலர் - வழிச் செல்வோராய புதியர், உவந்தனர் ஆங்கண் - கண்டு மகிழ்ந்தனராய் (அதனை) அவ்விடத்தே, ஒலி கழை நெல்லின் அரிசியோடு ஓராங்கு, தழைத்த மூங்கிலின் விளைந்த நெல்லின் அரிசியுடன் ஒருங்கே கூட்டி- ஆனிலைப் பள்ளி அளை பெய்து அட்ட - ஆயர் சேரியிலுள்ள தயிரினைப் பெய்து சமைத்த, வால் நிணம் உருக்கிய வால் வெண்சோறு - வெள்ளிய நிணத்தினை உருகச்செய்த மிக வெள்ளிய சோற்றினை, புகர் அரைத் தேக்கின் அகல் இலை மாந்தும் - புள்ளி பொருந்திய அரையினையுடைய தேக்க மரத்தினது அகன்ற இலையில் வைத்து உண்ணுவதும், கல்லா நீள்மொழிக் கத நாய் வடுகர் - கல்வியில்லாத நெடுமொழி கூறும் சினம் மிக்க நாயையுடைய வடுகரது, வல் ஆண் அரு முனை - வலிய ஆண்மை விளங்கும் அரிய போர் முனையாவதுமாகிய சுரத்தினை, நீந்தி - கடந்து சென்று ;

௧௨—௩. உகு மண் ஊறு அஞ்சும் ஒரு கால் பட்டத்து - இடிந்து விழும் மண்ணின் இடையூற்றினை அஞ்சுவதான ஒரே துறையினை யுடைய ஓடையிலுள்ள, இன்னா ஏற்றத்து இழுக்கி முடம்கூர்ந்து- இன்னாததாகிய ஏற்றங்கொண்ட நெறியில் வழுக்கி விழுந்து மிக்க முடம்பட்டு, ஒரு தனித்து ஒழிந்த உரன் உடை நோன் பகடு - தன்னந் தனியே ஒழிந்து கிடக்கும் உடல்வலி வாய்ந்த பொறுக்குந் தன்மை யுடைய பகட்டினை;

௧௪—௨௧. புல் உளைச் சிறார்-புல்லிய குடுமியினையுடைய சிறுவர், அம் குழை இருப்பை அறை வாய் வான் புழல்-அழகிய தளிரையுடைய இருப்பையின் அற்ற வாயினையும் வெள்ளிய துளையினையுமுடைய பூவை, வில்லின் நீக்கி - வில்லினால் உதிர்த்து, மரை கடிந்து ஊட்டும்- அதனைத் தின்னவரும் மரைமானைத் துரந்து உண்பிக்கும், வரை அகச் சீறூர்-வரையிடத்தே யுள்ள சிறிய ஊர்களில், மாலை இன் துணை ஆகி- மாலைக்காலத்தே நினக்கு இனிய துணையாகித் தங்கி, காலை பசு நனை நறு வீ-காலைப் போதில் புதிய தேனையுடைய நறிய பூக்கள், பரூஉப் பரல் உறைப்ப - பெரிய பாறைக் கற்களில் உதிர்ந்து கிடத்தலான், மண மனை கமழுங் கானம் - மணம் நிகழும் மனை போன்று நாறுங் காட்டில்;

௩. நின்னொடு - நின்னுடன்;

௨௨. வரும் - வாரா நிற்பள்.

(முடிபு) தலைவ! நீ 'செலவு அயரக் கேட்டொறும் என் தோழியும், பல நினைந்து, எவ்வளகத்து இடும்பை களைமார், வம்பலர் வெண்சோறு மாந்துவதும் வடுகர் அருமுனையாவது மாகிய சுரத்தினை நீந்தி வரையகச் சீறூர் மாலை இன்றுணையாகி காலை மணமனை கமழும் கானம் நின்னொடு வரும்.

(வி - ரை.) வயிறு தின்று - வயிறு நிறையத் தின்று. அட்ட வெண்சோறு எனவும், வால் நிண முருக்கிய வெண்சோறு எனவும் கூட்டுக. அடுதலால் நிணம் உருகிய தென்க. வம்பலர் வெண்சோறு மாந்தும் முனை எனவும், வடுகர் அடுமுனை எனவும் தனித்தனி இயை யும். பகடு - பகட்டினை. ஒருகாற் பட்டம்-ஓரே துறையினையுடைய ஓடை. புழல், பூவிற்கு ஆகுபெயர். மாலை இன் துணை யாகி என்பதற்கு- மாலைப் பொழுதில் நீ இனிய துணை யாகையாலே என்றுரைத்தலுமாம். இதற்கு ஆகி என்றதனை ஆக எனத் திரிக்க.

(உ - றை.) ஓடையிலே நீருண்டு அதினின்றும் ஏறமாட்டாத முடம்பட்ட உரனுடைய பகட்டிற்குச் சிறார் இருப்பைப் பூவை மரத்தி னின்றும் பிரித்து மரையினைக் கடிந்து ஊட்டினாற்போல, களவொழுக்கமாகிய இன்பத்தை நுகர்ந்து, இவ்வொழுக்கத்தினின்றும் நீங்கி வரைவொடு புக மாட்டாது வருந்தும் நினக்குக் குறவன் மக ளாகிய யான் தலைமகளைச் சுற்றத்தினின்றும் பிரித்து நொதுமலர் வரை வினை மாற்றி உடன் போக்கிற்கு ஒருப்படுத்தாநின்றேன் என்பது.

———

108. குறிஞ்சி

[தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகட்குச் சொல்லுவாளாய்த் தோழி சொல்லியது.]

புணர்ந்தோர் புன்கண் அருளலும் உணர்ந்தோர்க்
கொத்தன்று மன்னால் எவன்கொல் முத்தம்
வரைமுதல் சிதறி யவை[1] போல் யானைப்
புகர்முகம் பொருத புதுநீர் ஆலி
பளிங்குசொரி வதுபோல் பாறை வரிப்பக்
கார்கதம் பட்ட கண்ணகன் விசும்பின்
விடுபொறி ஞெகிழியில் கொடிபட மின்னிப்
படுமழை பொழிந்த பானாட் கங்குல்
ஆருயிர்த் துப்பில் கோண்மா வழங்கும்
இருளிடைத் தமியன் வருதல் யாவதும்
அருளான் வாழி தோழி அல்கல்
விரவுப்பொறி மஞ்ஞை வெரீஇ யரவின்
அணங்குடை யருந்தலை பைவிரிப் பவைபோல்
காயா மென்சினை தோய நீடிப்
பஃறுடுப் பெடுத்த அலங்குகுலைக் காந்தள்
அணிமலர் நறுந்தா தூதுந் தும்பி
கையாடு வட்டில் தோன்றும்
மையாடு சென்னிய மலைகிழ வோனே.

—தங்காற் பொற்கொல்லனார்.

(சொ - ள்.) ௧௧. தோழி வாழி—;

௧௨—அ. விரவுப் பொறி மஞ்ஞை வெரீஇ - புள்ளிகள் விரவிய மயிலைக் கண்டஞ்சி, அரவின் அணங்குடை அரும் தலை பை விரிப் பவை போல் - பாம்பின் வருத்தத்தைச் செய்யும் அரிய நஞ்சினை யுடைய தலைகள் படத்தை விரிப்பன போல, காயா மென்சினை தோய - காயாவின் மெல்லிய சினைகள் தோய, நீடிப் பல் துடுப்பு எடுத்த அலங்கு குலைக் காந்தள் அணி மலர் - நீண்டு தூக்கிய பல துடுப்புகள் போலும் அசையும் குலைகளையுடைய காந்தளது அழகிய மலரின், நறும் தாது ஊதும் தும்பி - நறிய தாதினைக் குடைந்துண்ணும் வண்டுகள், கை ஆடு வட்டில் தோன்றும் - கையின்கண் வைத்து ஆடும் வட்டுப் போலத் தோன்றும், மை ஆடு சென்னிய மலை கிழவோன் - மேகம் தவழும் சிமையங்களையுடைய மலைக்கு உரியனாகிய நம் தலைவன்;

(பாடம்) 1. வரை மிசைச் சிதறியவை.

உ—கக. முத்தம் வரை முதல் சிதறியவை போல்-மலைத்தலை யில் முத்துக்கள் சிதறியவை போல் விளங்கும், யானைப் புகர் முகம் பொருத புது நீர் ஆலி - யானையின் புள்ளியினையுடைய முகத்தில் மோதி வீழ்ந்த புதிய ஆலங்கட்டி, பளிங்கு சொரிவது போல் பாறை வரிப்ப-பளிங்கினைச் சொரிவது போலப் பாறையில் வீழ்ந்து கோலம் செய்ய, கார் கதம் பட்ட கண் அகல் விசும்பில்-முகில்கள் சினந்தெழுந் தனவாய இடமகன்ற வானில், விடு பொறி ஞெகிழியின் கொடி பட-மின்னி-பொறிவிடுகின்ற கொள்ளி போல் ஒழுங்குபட மின்னி, படு மழை பொழிந்த பானாள் கங்குல் - மிக்க மழையைச் சொரிந்த நடு நாளாகிய இரவில், ஆர் உயிர் துப்பின் - அரிய உயிர்ப் பொருளாகிய உணவினையுடைய, கோண்மா வழங்கும் இருளிடை- கொல்லும் தொழி லுடைய விலங்குகள் திரியும் இருளிடையே, அல்கல் தமியன் வருதல் யாவதும் அருளான்-நாடோறும் தனியே வருதலானே சிறிதும் அருள் செய்கின்றானல்லன்;

க—உ. புணர்ந்தோர் புன்கண் அருளலும்-தம்மைச் சார்ந்தோ ரது துன்பினைப் போக்கியருளலும், உணர்ந்தோர்க்கு ஒத்தன்று - அறி வுடையார்க்குப் பொருந்தியதாகுமே, மன் - நம் தலைவன் அங்ஙனம் செய்திலன், எவன்கொல் -என்னையோ?

(முடிபு) மலை கிழவோனாகிய நம் தலைவன் பானாட் கங்குல் கோண்மா வழங்கும் இருளிடை அல்கல் தமியன் வருதலானே யாவதும் அருளான்; புணர்ந்தோர் புன்கண் அருளலும் உணர்ந்தோர்க்கு ஒத்தன்று மன்; எவன் கொல்?

(வி - ரை.) புன்கண் அருளலும் - புன்கண்ணை நீக்கி யருளலும் என்க; மன்: ஒழியிசை. வரையிடத்துச் சிதறிய முத்தம் போல் யானை முகத்திற் பொருத ஆலி என்பதும், மஞ்ஞை வெரீஇ அரவின் தலை பை விரிப்பவை போல் காயா மென் சினை தோய நீடி எடுத்த குலைக்காந்தள் என்பதும், கை யாடு வட்டில் போலக் காந்தள் மலரை யூதும் தும்பி தோன்றும் என்பதும் இரட்டைக் கிளவியாகிய உவமங்களாம். ஆலி- நீர்க்கட்டி; நீர் என முன் வந்தமையின் ஈண்டுப் பெயர் மாத்திரையாக நின்றது. முகில் குமுறி எழுந்ததைக் கதம்பட்டது என்றார். கோண்மா- சிங்கம் முதலியன; ஒருவகை விலங்குமாம். என்னை? 'அச்சப் பொரு ளாவன: வள்ளெயிற் றரிமா வாள்வரி வேங்கை, முள்ளெயிற் றரவே முழங்கழற் செந்தீ, ஈற்று மதமா ஏக பாதம், கூற்றங் கோண்மா குன் றுறை யகணம் என்று சொல்லப்பட்டன போல்வன' என்றார் பேரா சிரியர் ஆகலின். வருதல்-வருதலால் என உருபு விரிக்க. காயாவின் மென்சினைக்கு மஞ்ஞையும், தூக்கிய காந்தட் குலைக்குப் பாம்பு படம் விரித்ததும் உவமம். தும்பிக்கு வட்டு, வண்ணம், வடிவு, தொழில் என்னும் மூன்றும் பற்றிய உவமையாம்.

(உ - றை.) கண்டார் விரும்பத்தக்க காந்தட்குலை அஞ்சத்தக்க அரவின் படம் போலும் என்றது. நம்மால் விரும்பத்தக்க தலைவன்

வருகை, ஆற்றாது தீமையால், நமக்கு அச்சத்தை விளைவிக்கின்றது என்று தலைவன் உணருமாறு தோழி கூறியபடியாம்.

(மே - ள்.) [1]'விரவியும் வருஉம் மரபின வென்ப' என்னும் சூத்திரத்து, 'காயா மென்சினை......மலைகிழ வோனே' என்புழி, ஆடுதற்றொழில்பற்றியும், வடிவுபற்றியும், வண்ணம்பற்றியும் (உவமை) வந்தது என்பர், பேரா.

---

109. பாலை

[இடைச்சுரத்துத் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.]

பல்லிதழ் மென்மலர் உண்கண் நல்யாழ்
நரம்பிசைத் தன்ன இன்றீங் கிளவி
நலநல் கொருத்தி இருந்த ஊரே
கோடுழு களிற்றின் தொழுதி யீண்டிக்
காடுகால் யாத்த நீடுமரச் சோலை
விழைவெளில் ஆடுங் கழைவளர் நனந்தலை
[2]வெண்ணுனை யம்பின் விசையிட வீழ்ந்தோர்
எண்ணுவரம் பறியா உவலிடு பதுக்கைச்
சுரங்கெழு கவலை கோட்பாற் பட்டென
வழங்குநர் மடிந்த அத்தம் இறந்தோர்
கைப்பொருள் இல்லை யாயினும் [3]மெய்க்கொண்
டின்னுயிர் செகாஅர் விட்டகல் தப்பற்குப்
பெருங்களிற்று மருப்பொடு வரியதள் இறுக்கும்
அறனில் வேந்தன் ஆளும்
வறனுறு குன்றம் பலவிலங் கினவே.

—கடுந்தொடைக் காவினர்.

(சொ - ள்.) க—௩. பல் இதழ் மெல் மலர் உண் கண் - பல இதழ்களையுடைய மெல்லிய மலர் போன்ற மையுண்ட கண்ணினையும், நல்யாழ் நரம்பு இசைத்தன்ன இன் தீம் கிளவி - நல்ல யாழின் நரம்பு ஒலிப்பது போன்ற மிக இனிய மொழியினையும் உடைய, நலம் நல்கு ஒருத்தி-நலனெல்லாம் தரவல்ல ஒப்பற்ற நம் காதலி, இருந்த ஊர்-இருக்கும் ஊரானது;

1. தொல். உவம: ௩. (பாடம்) 2. வெந்நுனை.
3. மெய்கட் டின்னுயிர்.

௪—௧0. கோடு உழு களிற்றின் தொழுதி ஈண்டி - தம் கொம்பினல் பகையாயவற்றைக் குத்தி உழும் களிற்றியானைகளின் கூட்டம் கூட, காடு கால் யாத்த நீடு மரச்சோலை - காடாகப் பரந்த நீண்ட மரங்களையுடைய சோலையினுள்ள, விழை வெளில் ஆடும் கழைவளர் நனந்தலை - ஒன்றையொன்று விழைந்த அணில்கள் கூடி ஆடும் மூங்கில் வளர்ந்த அகன்றவிடத்தே, வெள் நுனை அம்பின் விசை இட வீழ்ந்தோர் - கிணம் தோய்தலால் வெள்ளிய முனையினையுடைய அம்பின் வேகம் பட இறந்தோர்களின், எண்ணு வரம்பு அறியா உவல் இடு பதுக்கை - எண்ணின் எல்லை அறிய லாகாத தழையிட்டு மூடிய பதுக்கைகளையுடைய, சுரம் கெழு கவலை கோள்பால் பட்டென - சுரத்திற் பொருந்திய கவர் நெறிகள் ஆறலைக்கும் பகுதியிற் கொள்ளப் பெற்றதாக, வழங்குநர் மடிந்த அத்தம் - வழிப்போவார் இல்லையாகிய அச் சுர நெறியில்;

௧0—௫. இறந்தோர் கைப் பொருள் இல்லை யாயினும் - அறியாது வந்தோர் கையிற் பொருள் இல்லையாயினும், மெய் கொண்டு இன்உயிர் செகார் விட்டு அகல் தப்பற்கு - அவர்தம் மெய்யைப் பற்றிக்கொண்டு அவர் இனிய உயிரினைக் கொல்லாராய் விட்டு அகன்று வந்த பிழைக்காக, பெரும் களிற்று மருப்பொடு வரி அதள் இறுக்கும் - பெரிய களிற்றின் கொம்பொடு புலியின் வரி பொருந்திய தோலைத் தண்டமாகத் தன் ஏவலரை இறுக்கச் செய்யும், அறன்இல் வேந்தன் ஆளும் வறன் உறு குன்றம் பல விலங்கின - அறனில்லாத அரசன் ஆளும் வறட்சியுற்ற குன்றுகள் பல குறுக்கிட்டுள்ளனவே; (என்று தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறினன்.)

(முடிபு) நலம் நாகு ஒருத்தி இருந்த ஊர், அறனில் வேந்தன் ஆளும் குன்றம் பல விலங்கின.

சோலையை யுடைய அகன்ற இடத்தில் வீழ்ந்தோரது பதுக்கைகள் பொருந்திய சுரங் கெழு கவலை கோட்பாற் பட்டென, வழங்குநர் மடிந்த அத்தம் என்றும், அத்தம் இறந்தோர் உயிர் செகாஅர் விட்டகல் தப்பற்கு மருப்பொடு வரி அதள் இறுக்கும் அறனில் வேந்தன் என்றும் கூட்டுக.

(வி - ரை.) ஈண்டி - ஈண்ட எனத் திரிக்க. கால் யாத்தல் - பரத்தல். கோட்பால் திங்கின் பகுதி, என்றது ஆறலைக்கும் பகுதி. இறுக்கும் - ஏவலரை இறுக்கச் செய்யும் என விரித்துரைக்க. அறனில் வேந்தன் என்றது - காட்டினை ஆளும் தலைவனை. குன்றம் பல விலங்கினவாதலின் இத்துணையும் போந்து இனி வறிதே மீளுதல் ஒல்லாதென்றான் என்க.

(மே - ள்.) [1]'வெறியறி சிறப்பின்' என்னுஞ் சூத்திரத்து 'அறனில் வேந்த னாளும், வறனுறு குன்றம் பல விலங்கினவே' எனக் காட்டுத் தலைவனை நாட்டுத் தலைவன் பெயராற் கூறினர் என்றனர், நச்.

---

1. தொல். புறத்: ௫.

110. நெய்தல்

[தோழி செவிலித்தாய்க்கு அறத்தொடு நின்றது.]

அன்னை அறியினும் அறிக அலர்வாய்
அம்மென் சேரி கேட்பினுங் கேட்க
பிறிதொன் றின்மை அறியக் கூறிக்
கொடுஞ்சுழிப் புகாஅர்த் தெய்வம் நோக்கிக்
கடுஞ்சூள் தருகுவல் நினக்கே[1] கானல்
தொடலை யாயமொடு கடலுடன் ஆடியுஞ்
சிற்றில் இழைத்தும் சிறுசோறு குவைஇயும்
வருந்திய வருத்தம் தீர யாஞ்சிறி
திருந்தன மாக எய்த வந்து
தடமென் பணைத்தோள் மடநல் லீரே
எல்லும் எல்லின் றசைவுமிக உடையேன்
மெல்லிலைப் பரப்பின் விருந்துண் டியானுமிக்
கல்லென் சிறுகுடித் தங்கின்மற் றெவனோ
எனமொழிந் தனனே ஒருவன் அவற்கண்
டிறைஞ்சிய முகத்தெம் புறஞ்சேர்பு பொருந்தி
இவைநுமக் குரிய வல்ல இழிந்த
கொழுமீன் வல்சி என்றனம் இழுமென
நெடுங்கொடி நுடங்கும் நாவாய் தோன்றுவ
காணா மோவெனக் காலிற் சிதையா
நில்லாது பெயர்ந்த பல்லோருள்ளும்
என்னே குறித்த நோக்கமொடு நன்னுதால்
ஒழிகோ யானென அழிதகக் கூறி
யான்பெயர் கென்ன நோக்கித் தான்தன்
நெடுந்தேர்க் கொடிஞ்சி பற்றி
நின்றோன் போலும் [2]இன்றுமென் கட்கே.

—போந்தைப் பசலையார்.

(சொ - ள்.) ௫—௬. தொடலை ஆயமொடு கடல் உடன் ஆடியும்-மாலை போன்ற ஆயத்தாரோடு கடலில் ஒருங்கு விளையாடியும், கானல் சிற்றில் இழைத்தும் - கடற்கரைச் சோலையில் சிறு வீடு கட்டியும், சிறு சோறு குவைஇயும் - சிறு சோற்றை அட்டுக் குவித்தும், வருந்திய

(பாடம்) 1. நினக்கென. 2. என்றுமென் மகட்கே.

வருத்தம் தீர - இங்ஙனம் வருந்திய வருத்தம் நீங்க, யாம் சிறிது இருந்தனமாக - யாம் சிறிது இளைப்பாறி யிருந்தேமாக (அதுபோது);

க—கச. ஒருவன் எய்த வந்து - ஒரு தலைவன் எம்மிடம் அணுக வந்து, தடமென் பணைத் தோள் மட நல்லீரே - பெரிய மெல்லிய மூங்கில் போலும் தோளினையுடைய மடப்பம் வாய்ந்த நல்லீரே, எல்லும் எல்லின்று-பகலும் ஒளி இழந்தது, அசைவு மிக உடையேன் - தளர்ச்சி மிகவும் உடையேன், மெல் இலைப் பரப்பின் விருந்து உண்டு யானும் - யானும் மெல்லிய இலைப் பரப்பின் நீயிர் இடும் விருந்துணவினை உண்டு, இக் கல் என் சிறு குடித் தங்கின் எவனோ - இந்தக் கல்லென்ற ஆரவாரமுடைய சிறுகுடியில் தங்கினால் எய்தும் குறை யாது? என மொழிந்தனன் - என்று கூறினன்;

கசு—எ. அவன் கண்டு இறைஞ்சிய முகத்தேம் - அவனைக் கண்டு கவிழ்ந்த முகத்தேமாய், புறம் சேர்பு பொருந்தி - மறைவான இடத்தே சேர்ந்திருந்து, இழும் என - இழுமென்ற மெல்லிய குரலில், இவை நுமக்கு உரிய அல்ல - இவ்வுணவு நுமக்கு ஏற்றன அல்ல; இழிந்த கொழுமீன் வல்சி என்றனம்-இழிவாய கொழுமீனாலாய உணவு என்று கூறினேம்: (பின்னர்);

கஅ—உஉ. நெடுங்கொடி நுடங்கும் நாவாய் தோன்றுவ - நீண்ட கொடிகள் அசையாநிற்கும்நாவாய்கள் தோன்றுவனவற்றை, காணேமோ என - யாம் காண்பேமல்லேமோ என்று கூறி, காலின் சிதையா - எம் சிற்றில் சிறு சோறுகளைக் காலாற் சிதைத்துவிட்டு, நில்லாது பெயர்ந்த பல்லோருள்ளும் - அங்கு நில்லாது போய பலருள்ளும், என்னே குறித்த நோக்கமொடு - அவன் என்னையே குறித்து நோக்கிய பார்வையொடு, நல் நுதால் ஒழிகோ யான் என அழிதகக் கூறி - நல்ல நெற்றியினை யுடையாளே யான் செல்லுகோ என்று என் நெஞ்சம் அழிந்திடக் கூற;

உக—ரு. யான் பெயர்க என்ன - யான் செல்க என்னலும், நோக்கி-(பெயராது என்னை) நோக்கியவனாய், தான் தன் நெடுந் தேர்க் கொடிஞ்சி பற்றி - அவன் தனது நீண்ட தேரின் கொடிஞ்சியினைப் பற்றிக் கொண்டு, நின்றோன் - நின்றனன், இன்றும் என் கட்குப் போலும் - இன்றும் என் கண் முன் நிற்பது அங்ஙிலையே போலும்;

க—ரு. அன்னை அறியினும் அறிக - இதனை அன்னை அறியினும் அறிவாளாக, அலர் வாய் அ மென் சேரி கேட்பினும் கேட்க - அலர் கூறும் வாயினையுடைய அம் மெல்லிய சேரியினர் கேட்பினும் கேட்டிடுக, பிறிது ஒன்றும் இன்மை அறியக் கூறி - வேறொன்றும் இல்லாமையை நீயறியக் கூறி, கொடுஞ் சுழிப் புகார்த் தெய்வம் நோக்கி - வளைந்த சுழிகள் மேவிய புகாரிடத்துள்ள தெய்வத்தை நோக்கி, நினக்குக் கடுஞ்சூள் தருகுவல் - நினக்குக் கடிய சூள் செய்து தருவன்.

(முடிபு) கானல் தொடலை ஆயமொடு வருந்திய வருத்தம் தீர யாம் சிறிது இருந்தனம்; ஒருவன் அசைவு மிக உடையேன், விருந்துண்டு இச் சிறுகுடித் தங்கின் எவனோ என மொழிந்தனன்; இழிந்த கொழுமீன் வல்சி என்றனம்; நில்லாது பெயர்ந்த பல்லோருள்ளும் என்னே குறித்த நோக்கமொடு ஒழிகோ யானென அழிதகக் கூறி, யான் பெயர்க என்ன, கொடிஞ்சி பற்றி நின்றோன் போலும் இன்றும் என் கட்கே; (இதனை) அன்னை அறியினும் அறிக; சேரி கேட்பினும் கேட்க. பிறிதொன்றின்மை அறியக் கூறிப் புகார்த் தெய்வம் நோக்கி நினக்குக் கடுஞ்சூள் தருகுவன்.

(வி - ரை.) அன்னை என்றது நற்றாயை. சேரி: ஆகுபெயர். தலைவியுற்ற நோய்க்குக் காரணம் பிறிதொன்று மின்மையை என்க. பிறிதொன்றும் என்னும் முற்றும்மை தொக்கது. மற்றெவனோ: மற்று யான் என்னூர்க்குச் செல்வ தொழிந்து எனப் பொருள் தருதலின் வினைமாற்று. என்னே - என்னையே. கூறி, கூற எனத் திரிக்க. நின்றோன் போலும்: நின்றோன் என முற்றாக்கி அந்நிலையே போலும் என விரித்துரைக்க. என்று மென் மகட்கே என்பது பாடமாயின், அங்ஙனம் நின்றவனே என்றும் என் மகட்கு உரியன் போலுமென அன்னை அறியினும் அறிக என இயைத்துரைக்க.

கடுஞ்சூள் என்பதனை, கடி என்னும் உரிச்சொல் முன்றேற்றுப் பொருளில் வந்ததற்கு எடுத்துக் காட்டி, முன்றேற்று, புறத்திலன்றித் [1]'தெய்வ முதலாயினவற்றின் முன்னின்று தெளித்தல்' என்பர், சேனா.

மேலெல்லாம் ஆயத்தாரையும் தலைவியையும் உளப்படுத்திக் கூறிய தோழி பின்னர் [2]'நில்லாது பெயர்ந்த பல்லோருள்ளும்' என்றது, பல்லோருள்ளுமெனத் தன்னை வேறு பிரித்துக் கூறியது அவரெல்லாம் தலைவனுக்கு இரங்காது சென்றமையும், தான் மட்டும் தனித்து நின்றமையும் தோன்றக் கூறியதாகும் என்பர், நச்.

(மே - ள்.) [3]'மாயோன் மேய' என்னுஞ் சூத்திரத்து, 'நெய்தனிலத்தில் நுளையர்க்கு வலைவளம் தப்பின் அம் மகளிர் கிளையுடன் குழீஇச் சுறவுக்கோடு நட்டுப் பரவுக்கடன் கொடுத்தலின் ஆண்டு வருணன் வெளிப்படும்' என்று கூறி, 'கொடுஞ்சுழிப் புகாஅர்த் தெய்வம் நோக்கிக் கடுஞ்சூள் தருகுவல்' என வரும் என்றும், [4]'மெய்தொட்டுப் பயிறல்' என்னும் சூத்திரத்து, 'மெல்லிலைப் பரப்பின் விருந்துண்டியானுமிக், கல்லென் சிறுகுடித் தங்கின் மற்றெவனோ' என வருவது 'ஊரும் பேரும் கெடுதியும் பிறவும்....கூறி' என்ற சூத்திரப் பகுதியில், 'பிறவும்' என்றதனாற் கொள்க என்றும், அச் சூத்திரத்துத் 'தண்டாது இரப்பினும்' என்னும் பகுதிக்கண், 'எல்லும்....ஒருவன்' எனத் 'தலைவன் இரவுக்குறி வேண்டியதனைத் தோழி கூறியவாறு காண்க' என்றும், [5]'எளித்த லேத்தல்' என்னுஞ் சூத்திரத்து, 'எல்லும்....

1. தொல், சொல். உரி; ௮௭.
2. தொல். சொல். எச்: ௬௭.
3. தொல். அகத்: ௫
4. தொல். களவு: ௧௧.
5. தொல். மெய்ப்: ௨௭.

ஒருவன்' இது எளித்தல் என்றும், அச்சூத்திரத்து, 'பிறிதொன்றின்மை...கடுஞ்சூ டருகுவ னினக்கே' இது தலைப்பாடு என்றும் கூறுவர், நச்.

[1]'கண்ணினுஞ் செவியினும்' என்னுஞ் சூத்திரத்து, 'ஒழிகோயானென அழிதகக் கூறி' என்புழி, தலைமகன் மனத்து நிகழ்ந்த அழிவெல்லாம் ஒழிகோ யான் என்ற உரையானே உணர்ந்தமையின் அது செவியுணர்வு எனப்படும் என்று கூறினர், பேரா.

---

111. பாலை

[தலைமகன் பிரிவின்கண் தோழி தலைமகளை யாற்றுவித்தது.]

உள்ளாங் குவத்தல் செல்லார் கறுத்தோர்
எள்ளல் நெஞ்சத் தேஎச்சொல் நாணி
வருவர் வாழி தோழி யரச
யானை கொண்ட துகிற்கொடி போல
அலந்தலை ஞெமையத்து வலந்த சிலம்பி
ஓடைக் குன்றத்துக் கோடையொடு துயல்வர
மழையென மருண்ட மம்மர் பலவுடன்
ஓய்களி றெடுத்த நோயுடை நெடுங்கை
தொகுசொற் கோடியர் தூம்பின் உயிர்க்கும்
அத்தக் கேழல் அட்ட நற்கோள்
செந்நாய் ஏற்றை கம்மென ஈர்ப்பக்
குருதி யாரும் எருவைச் செஞ்செவி
மண்டம ரழுவத் தெல்லிக் கொண்ட
புண்தேர் விளக்கின் தோன்றும்
விண்தோய் பிறங்கல் மலையிறந் தோரே.

—பாலைபாடிய பெருங்கடுங்கோ.

(சொ - ள்.) ௩. தோழி வாழி-;

௧—௨. உள்ளாங்கு உவத்தல் செல்லார் - தமக்குப் பொருள் உள்ள அளவிற்கு மகிழ்தலிலராய், கறுத்தோர் எள்ளல் நெஞ்சத்து ஏஎச் சொல் நாணி - பகைவர் இகழும் நெஞ்சத்துடன் கூறும் அம்பு போலும் சொல்லிற்கு நாணினராய்;

௩—௪. அரச யானை கொண்ட துகிற்கொடி போல - பட்டத்து யானை தன்மீது கொண்ட துகிற்கொடி போல, ஓடைக் குன்றத்து -

1. தொல். மெய்ப்: உ௭.

ஓடை என்னும் குன்றத்துள்ள, அலந்தலை ஞெமையத்து - காய்ந்ததலை யினையுடைய ஞெமை மரத்தின்மீது, வலந்த சிலம்பி - பின்னிய சிலம்பி யின் கூடானது, கோடையொடு துயல்வர - மேல் காற்றால் அசைய;

எ—கஉ. மழை என மருண்ட - அதனை மேகம் என மயங்கிய, மம்மர் ஓய் களிறு பல உடன் - மயக்கத்தினையுடைய இளைத்த களிறு கள் பலவும் ஒருங்கே, எடுத்த நோயுடை நெடுங் கை - தூக்கிய வருத் தத்தினையுடைய நீண்ட கைகள், தொகு சொல் கோடியர் தூம்பின் உயிர்க்கும் அத்தம் - புகழினைத் திரட்டிக் கூறும் கூத்தரது தூம்பினைப் போலத் தோன்றி ஒலிக்கும் காட்டிலுள்ள, கேழல் அட்ட நல்கோள் செந்நாய் ஏற்றை-ஆண்பன்றியினைக் கொன்ற தன் இரையினை நன்கு பற்றிக்கொள்ளும் திறனுடைய செந்நாயின் ஏற்றை, கம் என ஈர்ப்ப- விரைவாக அதனை இழுத்திட, குருதி ஆரும் எருவைச் செஞ்செவி - வழியெலாம் ஒழுகிய குருதியினைப் பருகும் பருந்தின் சிவந்த செவிகள், மண்டு அமர் அழுவத்து எல்லிக்கொண்ட புண்தேர் விளக்கின் தோன் றும் - மிக்க போர்க்களப் பரப்பில் இராப்பொழுதில் கைக்கொண்ட வீரர்களது மருமத்துப் புண்களை ஆராயும் விளக்குகளைப் போன்று தோன்றும், விண்தோய் பிறங்கல் மலை இறந்தோர் - வானைத் தோயும் விளக்கத்தையுடைய மலையினைக் கடந்து பொருள் ஈட்டச் சென்றோ ராய நம் தலைவர் ;

கூ. வருவர் - விரைய வருவர் (எனத் தோழி தலைவியை ஆற்று வித்தாள்.)

(முடிபு) **தோழி வாழி! உவந்தன் செல்லார், ஏஎச் சொல் நாணி மலை யிறந்தோர் வருவர்.**

(வி - ரை.) உள்ளாங்கு - உள்ளபடி. ஏஎச்சொல் - பெருமிதத் துடன் கூறும் சொல்லுமாம். அலந்ததலை: அலந்தலையென விகாரப் பட்டது. ஞெமையத்து, அத்து: சாரியை. ஓடைக் குன்றத்திற்கு அரசயானையும், ஞெமையத்து வலந்த சிலம்பிக் கூட்டிற்குத் துகிற் கொடியும் உவமம். உண்டற்கு நீரின்றி மெலிந்த களிறு மேலுள்ள சிலம்பிக்கூட்டை மேகமென மருண்டு அதில் நீருண்டற்குக் கையை மேலே எடுத்ததென்க. கோடியர் தூம்பின் ஒலியும் யானையின் உயிர்ப் பொலியும் ஒரு தன்மையன என்பது, [1]'கண்ணிடை விடுத்த களிற் றுயிர்த் தூம்பின்' என்பதனாலும் அறிக. உயிர்க்கும் அத்தம் எனவும், அத்தத்தில் கேழலட்ட ஏற்றை ஈர்ப்ப அதன் குருதியை ஆரும் எருவை எனவும் இயையும். குருதி படிந்த அத்தம் அமர்க்களம் போலாக, எரு வைச் செஞ்செவி ஆண்டுள்ள விளக்குப் போலத் தோன்றும்.

கம்மென: திசைச் சொல்.

---

1. மலைபடு: ௩.

(உ - ரை.) சிலம்பிக் கூட்டினை மேகமெனக் கருதும் யானையைக் காணும் தலைவர், தாம் பொருளல்லதனைப் பொருளெனக் கருதியதனை உணர்ந்து விரைய மீள்வர் என்றபடி.

---

112. குறிஞ்சி

[இரவுக்குறி வந்த தலைமகனை யெதிர்ப்பட்டு நின்று தோழிசொல்லி வரைவு கடாயது.]

[1]கூனல் எண்கின் குறுநடைத் தொழுதி
சிதலை செய்த செந்நிலைப் புற்றின்
மண்புனை நெடுங்கோ டுடைய வாங்கி
இரைநசைஇப் பரிக்கும் அரைநாட் கங்குல்
ஈன்றணி வயவுப்பிணப் பசித்தென மறப்புலி
ஒளிறேந்து மருப்பின் களிறட்டுக் குழூஉம்
பனியிருஞ் சோலை யெமியம் என்னாய்
தீங்குசெய் தனையே யீங்குவந் தோயே
நாளிடைப் படினென் றோழி வாழாள்
தோளிடை முயக்கம் நீயும் வெய்யை
[2]கழியக் காதலர் ஆயினும் சான்றோர்
பழியொடு வரூஉம் இன்பம் வெஃகார்
வரையின் எவனோ வான்தோய் வெற்ப
கணக்கலை இருக்கும் கறியிவர் சிலம்பின்
மணப்பருங் காமம் புணர்ந்தமை அறியார்
தோன்றியல் மரபின் மன்றல் அயரப்
பெண்கோள் ஒழுக்கம் கண்கோள நோக்கி
நோதுமல் விருந்தினம் போலவிவள்
புதுநாண் ஒடுக்கமும் காண்குவம் யாமே.

—நெய்தற் சாய்த்துய்த்த ஆவூர் கிழார்.

(சொ - ள்.) கக. வான்தோய் வெற்ப-வானை அளாவும் மலையை உடைய தலைவனே!,

க—ச. கூனல் குறுநகை எண்கின் தொழுதி - கூனிய முதுகினையும் குறுகக்குறுக அடியிட்டு நடக்கும் நடையினையும் உடைய கரடிக்

(பாடம்) 1. கூரல் எண்கின், கூருகிர் எண்கின்.
2. கழிபெருங்காதலர், கழியாக் காதலர்.

கூட்டம், சிதலை செய்த செந்நிலைப் புற்றின் - கறையான் எடுத்த சிவந்த நிலையினையுடைய புற்றினது, மண்புனை நெடுங்கோடு உடைய வாங்கி - மண்ணாற் புனைந்த நீண்ட உச்சி உடைந்திடப் பெயர்த்து, இரை நசைஇ பரிக்கும் அரைநாள் கங்குல் - புற்றாஞ்சோறாய இரையினை விரும்பிச் சூழ்ந்துகொண்டிருக்கும் நடுநாள் இரவில் ;

டு—அ. ஈன்ற அணி வயவு பிணவு பசித்தென - குட்டியை ஈன்ற அண்மையினையுடைய வேட்கையையுடைய பெண்புலி பசித்ததாக, மறப்புலி - தறுகண்மையையுடைய ஆண்புலி, ஒளிறு ஏந்து மருப்பின் களிறு அட்டுக் குழுமும் - ஒளி வீசுகின்ற ஏந்திய கோட்டினையுடைய ஆண்யானையைக் கொன்று முழங்குகின்ற, பனி இருஞ்சோலை-குளிர்ந்த கரிய சோலையில், எமியம் என்னாய்-யாம் தமியேம் என்று நினையாயாய், தீங்கு செய்தனையே ஈங்கு வந்தோயே - ஈங்கு வருதலின் நீ தீங்கு செய்தாய் ஆவாய் ;

கூ—க௦. நாள் இடைப்படின் என் தோழி வாழாள் - நீ வாராது ஒருநாள் இடையீடுறினும் என்தோழி உயிர் வாழாள்காண், தோளிடை முயக்கம் நீயும் வெய்யை - அங்ஙனே நாளும் என் தோழியின் தோளின் கண் முயங்குதலை நீயும் விரும்புதலுடையை ;

கக—உ. சான்றோர் பழியக் காதலர் ஆயினும் - சான்றோராவார் மிகக் காதல் கொண்டார் ஆயினும், பழியொடு வரூஉம் இன்பம் வெஃகார் - பழியுடன் கூடி வரும் இன்பினை விரும்பார் ஆகலின் ;

கங. வரையின் எவன் - நீ வரைந்து கொள்ளின் குறையாவது என்னை ? (அங்ஙனம் வரைந்திடின்;)

கச—கூ. கணம் கலை இகுக்கும் கறி இவர் சிலம்பில்-கூட்டமாகிய கலைமான்கள் தாழ ஒலிக்கும் மிளகுக் கொடி படர்ந்த மலைச்சாரலில், மணப்பு அரும் காமம் புணர்ந்தமை அறியார்-எய்துதற்கு அரிய காமத்தால் நீர் கூடிய களவொழுக்கத்தினை அறியாத எமர், தொன்று இயல் மரபின் மன்றல் அயர - தொன்று தொட்டு வரும் முறைப்படி வதுவை நிகழ்த்திட ;

கஎ—கஅ. பெண்கோள் ஒழுக்கம் கண்கொள நோக்கி - நீ இவளை வரைந்துகொள்ளும் அவ்வொழுக்கத்தினைக் கண்ணார நோக்கி, யாம் நொதுமல் விருந்தினம் போல - யாம் அயலேமாகிய புதியேம் போல, இவள் புதுநாண் ஒடுக்கமும் காண்குவம் - இவள் புதிய நாணாலாகிய ஒடுக்கத்தினையும் காண்பேமன்றோ ?

(முடிபு) அரை நாட் கங்குல் புலி களிறு அட்டுக் குழுமும் சோலையின் ஈங்கு வந்தோய் தீங்கு செய்தனை ; நாள் இடைப்படின் என் தோழி வாழாள் ; தோளிடை முயக்கம் நீயும் வெய்யை ; சான்றோர் பழியொடு வரூஉம் இன்பம் வெஃகார்; வரையின் எவன் ? எமர் அயர அப் பெண்கோளொழுக்கத்தை நோக்கி யாம் நொதுமல் விருந்தினம் போல் இவள் புது நாண் ஒடுக்கமும் காண்குவம்.

(வி - ரை.) 'கூரலெண்கின்' என்ற பாடத்திற்கு, வளைந்த உடம்பினையுடைய கரடியின் என்பதே பொருளாகும். அணி-அணிமையுடைய. பிணு என்பது பிண என்றுயது, [1]'குறியத னிறுதிச் சினைகெட வுகரம் - அறிய வருதல் செய்யுளு ளுரித்தே' என்னுஞ் சூத்திரத்து, அறிய என்னும் இலேசாற் கொள்ளப்படும். கழியாக் காதலர் என்பது பாடமாயின், நீங்காத காதலையுடையார் என்க. மன்றல் கிகழ்த்தும் தமராவார், இருமூது குரவரும் சான்றோரு முதலாயவர்.

(உ - றை.) கரடியின் கூட்டம் சிதலை செய்த புற்றின் கோட்டினையுடைத்து, அதிலுள்ள புற்றும் பழஞ் சோற்றை யுண்டும், மேலும் அதனை விரும்பிச் சூழ்ந்தாற் போல, நீ எமர் காவலைச் சிதைத்துத் தலைவியை நுகர்ந்தும் மீட்டும் அக் கள வொழுக்கத்தையே விரும்பிப் பகலினும் இரவினும் சூழ்வாராகின்றாய் என்பது.

(மே - ள்.) [2]'நாற்றமும் தோற்றமும்' என்னுஞ் சூத்திரத்து, 'ஆற்றது தீமை யறிவுறு கலக்கமும்' என்பதற்கு இப்பாட்டு உதாரணமாகும் என்றும், [3]'பொழுது மாறுங் காப்பும்' என்னுஞ் சூத்திரத்து 'நன்மையுந் தீமையும் பிறிதினைக் கூறலும்' என்ற பகுதிக்கு, கழி பெருங் காதல ராயினுஞ் சான்றோர், 'பழியொடு வருஉ மின்பம் வெஃகார்' எனப் பிறர்மேல் வைத்துத் தலைவனை அறிவு கொளுத்தினமையின் வழுவாய் அமைந்தது என்றும், 'பழியொடு வருஉ மின்பம் வெஃகார்' எனவே, புகழொடு வருஉம் இன்பம் வெஃகுவ ரெனக் கொள்ள வைத்தலின், நன்மையுந் தீமையும் பிறிதின்மேல் வைத்துக் கூறிற்றும் என்றும் கூறினர், நச்.

[4]'கல்வி தறுகண்' என்னுஞ் சூத்திரத்து, 'கழியக் காதல ராயினுஞ் சான்றோர், பழியொடு வருஉ மின்பம் வெஃகார்' என்பது புகழ் பற்றிப் பிறந்த பெருமிதம்' என்பர், பேரா.

---

1. தொல். உயிர்மயங்: கூஉ. 2. தொல். களவு: உகூ.
3. தொல். பொருளி: கஅ. 4. தொல். மெய்ப்: க

113. பாலை

[தலைமகன் பிரிவின்கண் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.]

நன்றல் காலையும் நட்பிற் கோடார்
சென்று வழிப்படூஉந் திரிபில் சூழ்ச்சியில்
புன்றலை மடப்பிடி அகவுநர் பெருமகன்
[1]அமர்வீசு வண்மகிழ் அஃதைப் போற்றிக்
காப்புக்கை நிறுத்த பல்வேற் கோசர்
இளங்கள் கமழும் நெய்தலம் செறுவின்
வளங்கெழு நன்னா டன்னவென் தோள்மணந்
தழுங்கல் மூதூர் அலரெடுத் தரற்ற
நல்காது துறந்த காதலர் என்றும்
கல்பொரூஉ மெலியாப் [2]பாடினோன் அடியன்
[3]அல்கு வன்சுரைப் பெய்த வல்சியன்
இகந்தன வாயினும் இடம் பார்த்துப் பகைவர்
ஓம்பினர் உறையும் கூழ்கெழு குறும்பில்
குவையிமில் விடைய வேற்று ஒய்யும்
கனையிருஞ் சுருணைக் கனிகாழ் நெடுவேல்
விழவயர்ந் தன்ன கொழும்பல் திற்றி
எழாஅப் பாணன் நன்னாட் டும்பர்
நெறிசெல் வம்பலர்க் கொன்ற தெவ்வர்
எழிபடை கழீஇய சேயரிச் சின்னீர்
அறுதுறை யயிர்மணல் படுகரைப் போகிச்
சேயர் என்றலில் சிறுமை யுற்றவென்
கையறு நெஞ்சத் தெவ்வம் நீங்க
அழாஅம் உறைதலும் உரியம் பராரை
அலங்கல் அஞ்சினைக் குடம்பை புல்லெனப்
புலம்பெயர் மருங்கில் புள்ளெழுந் தாங்கு
மெய்யிவ ணொழியப் போகிஅவர்
செய்வினை மருங்கில் செலீஇயரென் உயிரே.

—கல்லாடனார்.

(பொ - ள்.) க—ரு. நன்று அல் காலையும் நட்பில் கோடா - (நட்டார் ஆக்கமின்றிக்) கேடுற்ற காலையும் நட்புத் தன்மையிற் றிரியா

(பாடம்) 1. மாவீசு. 2. பரட்டினோனடி.
3. அகன்கு வஞ்சுரைப் பெய்த வல்சியர், வைகலஞ்சுரைப் பெய்த

ராய், சென்று வழிப்படூஉம் திரிபுஇல் சூழ்ச்சியில் - அங்கட்டார்பாற் சென்று அவர் குறிப்பிற் படும் மாறுபாடில்லாத அறிவுடைமையால், அகவுநர் பெருமகன் - கூத்தரைப் புரக்கும் தலைவனாய், புன்தலை மடப்பிடி அமர் வீசு வண்மகிழ் - (அவர்கட்குப்) புல்லிய தலையினை யுடைய இளைய பிடியினை அமரின்கண் அளிக்கும் வண்மையாலாகிய மகிழ்வுடைய, அஃதை போற்றி - அஃதை என்பாளைப் பாதுகாத்து, காப்புக் கை நிறுத்த - அவளைக் காவல் மிக்க இடத்தே நிலை நிறுத்திய, பல்வேல் கோசர் - பல வேற்படையினை யுடைய கோசரென்பவரது;

௬—எ. இளங் கள் கமழும் நெய்தலஞ் செறுவின் - புதிய கள் கமழும் நெய்தலஞ்செறு எனும், வளம் கெழு நல் நாடு அன்ன - வளம் பொருந்திய நல்ல நாட்டை யொத்த;

எ—௬. என் தோள் மணந்து - என் தோளினைக் கூடி, அழுங்கல் மூதூர் அலர் எடுத்து அரற்ற - ஆரவாரமுடைய பழைய ஊர் அலரினை மிகுத்துக் கூற, நல்காது துறந்த காதலர் - அருளாது விட்டேகிய நம் காதலர்;

௬—௧௧. என்றும் கல் பொரூஉ மெலியாப் பாடுஇன் நோன் அடியன் - எஞ்ஞான்றும் கல்லைப் பொருது மெலிவுறாத ஓசை இனிய வலிய அடியினை யுடையவனும், அல்கு வன் சுரை பெய்த வல்சியன் - மிக்க வலிய மூங்கிற் குழாயிற் பெய்த உணவினையுடையவனும்;

௧௨—௭. இகந்தனவாயினும் - தன் நாட்டெல்லையைக் கடந்து சேய்மைக்கண்ண வாயினும், இடம் பார்த்து-கவரும் செவ்வி பார்த்து, பகைவர் ஓம்பினர் உறையும் கூழ்கெழு குறும்பில் - பகைவர் ஆவினைப் பாதுகாத்து உறையும் உணவு மிக்க அரண்களிற் சென்று, குவை இமில் விடைய வேற்று ஆ ஒய்யும் - திரண்ட இமிலையுடைய விடைகளுடன் கூடிய பகைப்புலத்து ஆக்களைக் கவர்ந்து செலுத்தும், கனை இரும் சுருணை கனி காழ் நெடுவேல் - செறிந்த கரிய பூணையும் நெய் கனிந்த தண்டையுமுடைய நீண்ட வேலினையும், விழவு அயர்ந்தன்ன கொழும் பல் திற்றி - விழாச் செய்தாலொத்த கொழுமையாகிய பல உணவுகளையுமுடைய, எழாஅப் பாணன் நன்னாட்டு உம்பர்-பகைவர்க்குப் புறக்கிடாத பாணன் என்பானது நல்ல நாட்டிற்கு அப்பாற்பட்ட;

௧அ—உ௨. நெறிசெல் வம்பலர்க் கொன்ற தெவ்வர் - வழியிற் போகும் புதியர்களைக் கொன்ற ஆறலைப்போர், எறி படை கழீஇய சேய் அரிச் சில்நீர் - தாங்கள் எறிந்த படைக்கலத்தைக் கழுவிய சிவந்த நிறமுடைய அரித்தோடும் சின்னீரையுடைய, அறு துறை அயிர் மணல் படுகரை போகி - மக்கள் இயக்கம் அற்ற துறையாகிய நுண்மணல் பொருந்திய கரையினைத் தாண்டி, சேயர் என்றலின் - சேய்மைக்கண் உள்ளார் என்று பலரும் கூறலின், சிறுமையுற்ற என் கையறு நெஞ்சத்து எவ்வம்நீங்க - நோயுற்ற என் செயலற்ற நெஞ்சத்துத் துன்பம் ஒழிய;

உக—எ. பரு அரை அலங்கல் அம் சினைக் குடம்பை புல்என - பருத்த அரையிற் கிளைத்த அசையும் அழகிய கிளையிலுள்ள தன் கூடு பொலிவற்றொழிய, புலம் பெயர் மருங்கில் புள் எழுந்தாங்கு - தான் பெயர்ந்து போக எண்ணிய புலத்திடத்துப் பறவை புறப்பட்டுச் சென்றாற் போல, மெய் இவண் ஒழிய - எனது மெய் இங்குத் தனித் தொழிய, என் உயிர் போகி - என் உயிர் பிரிந்து புறப்பட்டு, அவர் செய்வினை மருங்கில் செலீஇயர் - அவர் வினை செய்யுமிடத்திற் செல்வ தாக, அழாஅம் உறைதலும் உரியம் - அதனானே நாம் அழாதேமாய் உறைதற்கு உரியம் ஆவேம்.

(முடிபு) தோழி! கோசர் நன்னாடன்ன என் தோள் மணந்து துறந்த காதலர் பாணன் நன்னாட்டும்பர், பறிகரை பேகிச் சேய ரென்றலின் எவ்வம் நீங்க என் உயிர் போகி அவர் வினைசெய் மருங்கிற் செலீஇயர்; அழாஅம் உறைதலும் உரியம்.

அடியனும் வல்சியனுமாகிய வேற்று ஒய்யும் பாணன் என்க.

(வி - ரை.) கூத்தர் முதலாயினோர்க்கு யானை முதலியவற்றை அமர்க்களத்தில் அளித்தலை [1]'மாற்றார் உறுமுரண் சிதைத்தநின் நோன்றாள் வாழ்த்திக், காண்கு வந்திசிற் கழறொடி யண்ணல்......... மழையினும் பெரும்பயம் பொழிதி யதனாற், பசியுடை யொக்கலை யொரீஇய, இசைமேந் தோன்றனின் பாசறை யானே' என்பதனால் அறிக. மாவீசு என்பது பாடமாயின், பிடியொடு களிற்றினை வழங்கும் என்க. நெய்தலஞ் செறுவாகிய நன்னா டென்க. இன்சாரியை அல் வழிக்கண் வந்தது. பாடுஇன் நோன் அடியன் - ஓசை இனிய வலிய அடியை யுடையவன்; செருப்பணிந்து பரலில் நடத்தலின் ஓசைஇனிய என்றார். பரட்டினோ னடி என்ற பாடத்திற்குப் பரட்டினையுடைய வலிய அடி யென்க. விடைய வேற்று - வேற்றுப்புலத்து விடைக ளோடு கூடிய ஆக்கள். அடியன் வல்சியன் ஆகிய பாணன் எனவும், வேற்று ஒய்யும் பாணன் எனவும், வேலையும் திற்றியையும் உடைய பாணன் எனவும், தனித்தனி கூட்டுக. 'வலிமிகு மொய்ம்பிற் பாணன்' எனவும், 'வடாஅது வல்வேற் பாணன் நன்னாடு' எனவும் இந்நூலுட் பிறாண்டும் வருதலிற் பாணனென்பான் றமிழ்நாட்டின் வடக்கண் இருந்த ஒரு நாட்டுத் தலைவன் ஆவன் என்க. காதலர் சேய ரென்றலின் எனக் கூட்டுக. உயிர் உடம்பை விட்டுப் போதற்குப் புள்குடம்பையை விட்டுச்செல்லுதல் உவமமாதலை, [2]'சேக்கை மரனொழியச் சேணீங்கு புட்போல, யாக்கை தமர்க் கொழிய நீத்து' என்பதனா லறிக. எவ்வம் நீங்க, அழாம் உறைதலும் உரியம் என்றது, உயிர் சென்ற காலத்து நிலையைக் கருதியது.

———

1. பதிற்று: கச. 2. நாலடி: உ௦.

114. முல்லை

[வினைமுற்றி மீளூந் தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.]

கேளாய் எல்ல தோழி வேலன்
வெறியயர் களத்துச் சிறுபல தாஅய்
விரவுவீ உறைத்த ஈர்நறும் புறவின்
உரவுக்கதிர் மழுங்கிய கல்சேர் ஞாயிறு
அரவுநுங்கு மதியின் ஐயென மறையும்
சிறுபுன் மாலையும் உள்ளார் அவரென
நப்புலந் துறையும் எவ்வம் நீங்க
நூலறி வலவ கடவுமதி உவக்காண்
நெடுங்கொடி நுடங்கும் வான்தோய் புரிசை
யாமங் கொள்பவர் நாட்டிய நளிசுடர்
வானக மீனின் விளங்கித் தோன்றும்
அருங்கடிக் காப்பின் அஞ்சுவரு மூதூர்த்
திருநகர் அடங்கிய மாசில் கற்பின்
அரிமதர் மழைக்கண் அமைபுரை பணைத்தோள்
அணங்குசால் அரிவையைக் காண்குவம்
பொலம்படைக் கலிமாப் பூண்ட தேரே.

....

(சொ - ள்.) அ. நூல் அறி வலவ - பரிநூல் வல்ல பாகனே!,

க—எ. எல்ல தோழி கேளாய் - எல்லா ஏடி தோழியே! யான் கூறுவதனைக் கேட்பாயாக; வேலன் வெறி அயர் களத்து தாய - வேலன் வெறியாடும் களத்தில் பரந்த, சிறு பல விரவு வீ - சிறிய பலவாய கலந்த பூக்கள்போல; உறைத்த ஈர் நறும் புறவின் - பூக்கள் உதிர்ந்த குளிர்ந்த நறிய முல்லை நிலத்தே, உரவு கதிர் மழுங்கிய கல்சேர் ஞாயிறு - வலிய கதிரின் வெம்மை குறைந்த மேற்கு மலையைச் சேர்ந்த ஞாயிறு, அரவு நுங்கு மதியின் ஐயென மறையும் - பாம்பு விழுங்கும் திங்களென மெல்லென மறைகின்ற, சிறு புல் மாலையும் உள்ளார் அவர் என - சிறிய புல்லிய மாலைக்காலத்தும் நம் தலைவர் நம்மை நினைந்திலரே என்றிவ்வாறு நம் தலைவி தன் தோழியை நோக்கிக் கூறி, நம் புலந்து உறையும் எவ்வம் நீங்க - நம்மை வெறுத்து உறையும் துன்பம் நீங்குமாறு;

அ—கசு. நெடுங்கொடி நுடங்கும் வான்தோய் புரிசை - நெடிய கொடி அசையும் வானைத் தோயும் மதிலின்கண், யாமம் கொள்பவர் நாட்டிய நளிசுடர் - இராப்பொழுதைக் காத்திருப்போர் ஏற்றிய நெருங்கிய விளக்குக்கள், வான் அக மீனின் விளங்கித் தோன்றும் - வானிடத்தே

யுள்ள மீன்போல விளக்கமுற்றுக் காணப்பெறும், அருகடி காப்பின் - அணுகுதற்கரிய மிக்க காவலினையுடைய, அஞ்சுவரும் மூதூர் - பகைவர்க்கு அச்சத்தினைத் தரும் முதிய ஊரிலுள்ள, திருநகர் அடங்கிய - செல்வமுள்ள மனையில் தங்கிய, மாசு இல் கற்பின் - குற்றமற்ற கற்பினையும், அரி மதர் மழைக்கண் - செவ்வரி படர்ந்த மதர்த்த குளிர்ந்த கண்களையும், அமை புரை பணைத்தோள் - மூங்கிலை ஒத்த பருத்த தோளினையும் உடைய, அணங்குசால் அரிவையைக் காண்குவம் - தெய்வம்போற் சிறந்த நம் தலைவியைக் காண்போம்;

கசு. பொலம்படைக் கலி மா பூண்ட தேர் - பொன்னாலாய சேணத்தினை யணிந்த செருக்கினையுடைய குதிரைகள் பூட்டப்பெற்ற தேரினை;

அ. உவக்காண் கடவுமதி - உங்கே செலுத்துவாயாக.

(முடிபு) வலவ! நம் தலைவி தோழியை நோக்கி, சிறுபுன் மாலையும் உள்ளார் அவர் எனக் கூறி, புலந்து உறையும் எவ்வம் நீங்க, மூதூரில் திருநகர் அடங்கிய அரிவையைக் காண்குவம்! உவக்காண் தேர் கடவுமதி.

புரிசையில் நாட்டிய நவிசுடர் வானக மீனின் விளங்கித் தோன்றும் மூதூர் என்க.

(வி - ரை.) எல்ல - எல்லா; கெழுதகைப் பொதுச்சொல், கல்அத்த மலை. கதிர் வெம்மை மழுங்கினமையால் மதிபோல் என்றார். சிறிது சிறிதாக மறைதல் குறித்து அரவு நுங்கு மதி என்றார். ஐயென - வியக்கும் பரிசு என்றுமாம். புன் மாலை - வருத்தத்தைச் செய்யும் மாலையுமாம். நம் புலந்து என்பது விகாரமாயிற்று; நால்-குதிரையுள மரியும் நால். உவக்காண் - உங்கே; மூதூர்க்கண் என்றபடி. கடிக்காப்பு: ஒருபொருட் பன்மொழி. அடங்கிய கற்பின் எனக்கொண்டு. ஆறிய கற்பினையுடைய என்றுரைத்தலுமாம். அணங்கு சால் - அருந்ததி போலும் கற்புடைய என்றலுமாம்.

---

115. பாலை

[பிரிவிடை வற்புறுக்குந் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.]

அழியா விழவின் அஞ்சுவரு மூதூர்ப்
பழியிலர் ஆயினும் பலர்புறங் கூறும்
அம்பல் ஒழுக்கமும் ஆகிய வெஞ்சொற்
சேரியம் பெண்டிர் எள்ளினும் எள்ளுக
௫ பண்பூண் எருமை குடநாட் டன்னஎன்
ஆய்நலம் தொலையினும் தொலைக என்றும்

கோயில ராகநம் காதலர் வாய்வாள்
எவ்வி வீழ்ந்த செருவிற் பாணர்
கைதொழு மரபின்முன் பரித்திடூஉப் பழிச்சிய
வள்ளுயிர் வணர்மருப் பன்ன ஒள்ளிணர்ச்
சுடர்ப்பூங் கொன்றை ஊழுறு விளைநெற்று
அறைமிசைத் தாஅம் அத்தம் நீளிடைப்
பிறைமருள் வான்கோட் டண்ணல் யானைச்
சினமிகு முன்பின் [1]வாமான் அஞ்சி
இனங்கொண் டொளிக்கும் அஞ்சுவரு கவலை
நன்னர் ஆய்கவின் தொலையச் சேய்நாட்டு
நந்நீத் துறையும் பொருட்பிணிக்
கூடா மையின் நீடி யோரே.

—மாமூலனார்.

(சொ - ள்.) அழியா விழவின் அஞ்சுவரும் மூதூர்-என்றும் நீங்காத விழாவினையுடைய பகைவர்க்கு அச்சம் தரும் இம் முதிய ஊரின் கண்ணே, பலர் - பலரையும், பழியிலராயினும் - அவர் பழியொன்றும் இலராயினும், புறங்கூறும் அம்பல் ஒழுக்கமும் - புறஞ்சொற் கூறுதலாகிய அம்பல் ஒழுக்கத்தினையும், ஆகிய வெம் சொல் - வெவ்விய சொல்லையும் உடையாராகிய, சேரி பெண்டிர் எள்ளினும் எள்ளுக - சேரிப் பெண்டிர் நம்மை இகழினும் இகழுக:

ச—க. நுண்பூண் எருமை குட நாடு அன்ன-நுண்ணிய தொழிற் பாடமைந்த பூணினையுடைய எருமை யென்பானது குடநாட்டினை யொத்த, என் ஆய் நலம் தொலையினும் தொலைக - எனது அழகிய நலம் தொலையினும் தொலைவதாக:

எ—கஉ. வாய் வாள் எவ்வி வீழ்ந்த செருவில் - தப்பாத வாட் படையினையுடைய எவ்வி என்பான் வீழ்ந்த போர்க்களத்தே, பாணர் - பாணர்கள், கைதொழு மரபின் - கையாற் றொழும் முறைமையொடு, முன் பழிச்சிய - முன்பெல்லாம் பராவிய (யாழின்), வல் உயிர் வணர் மருப்பு - வளம் பொருந்திய ஒலியையுடைய வளைந்த கோட்டினை, பரித்து இடூஉ அன்ன - ஒடித்துப் போகட்டால் ஒத்த, ஒள் இணர் சுடர் பூ கொன்றை - ஒளி பொருந்திய கொத்துக்களையுடைய சுடரும் பூக்களையுடைய கொன்றையினது, ஊழ் உறு விளை நெற்று - முறையாக முற்றி விளைந்த நெற்றுக்கள், அறைமிசைத் தாஅம் அத்தம் நீள் இடை - பாறை மீது பரந்து கிடக்கும் சுரத்தின் நீண்ட நெறியிலுள்ள

(பாடம்.) 1. வயமானஞ்சி.

கக—ப. பிறை மருள் வான் கோட்டு அண்ணல் யானை - பிறையினை யொத்த வெள்ளிய கோட்டினையுடைய பெருமை தங்கிய யானைகளையும், சினம் மிகு முன்பின் வாம் மான் அஞ்சி - சினம் மிக்க வலிமையையும் தாவும் குதிரைகளையுமுடைய அஞ்சி என்பான். இனம் கொண்டு ஒளிக்கும் அஞ்சு வரு கவலை - பகைவரின் ஆனினங்களைக் கைப்பற்றி மறைத்திடும் அச்சந்தோன்றும் கவர்த்த நெறிகளிலே ;

கக—அ. நன்னர் ஆய்கவின் தொலைய - நன்றாகிய நமது அழகு தொலைய, நம்நீத்துச் சேய் நாட்டு உறையும் பொருட்பிணி - நம்மைப் பிரிந்து நெடுந் தூரத்திலுள்ள நாட்டில் வதிதற்கேதுவாய பொருளீட்டும் செயல், கூடாமையின் நீடியோர் - உரிய காலத்தினுள் முற்றாமையின் காலம் தாழ்த்திருப்போர் ஆகிய.

கூ—எ. நம் காதலர் என்றும் நோயிலர் ஆக - நம் காதலர் என்றும் நோயின்றி இனிதிருப்பாராக.

(முடிபு) முதுநீர் வெஞ்சோற் பெண்டிர் எள்ளினும் எள்ளுக; என் ஆய் நலம் தொலையினும் தொலைக; எவ்வி வீழ்ந்த செருவில் பாணர் பரிந்து இடூஉப் பழிச்சிய வணர் மருப்பு அன்ன கொன்றை நெற்று தாஅம் அத்தம் நீளிடை, அஞ்சி இனம் கொண்டொளிக்கும் கவலையில், கவின் தொலைய நீத்துச் சேய்நாட்டுறையும் பொருட்பிணி கூடாமையின் நீடியோர் ஆகிய நம் காதலர் என்றும் நோயிலராக.

(வி - ரை.) பலர்-பலரும்; பலர் புகழ் ஞாயிறு என்புழிப் போல முற்றும்மை தொக்கது. சேரி அம் பெண்டிர் ; அம், சாரியை, பாணர் யாழிலே தெய்வம் உறைதல் பற்றியும், தமக்கு உணவளிக்கும் உதவியுடைமை பற்றியும் யாழினைத் தொழுது பரவுவார் எனவும், எவ்வி இறந்தபின் இனித் தம் பாட்டினைக் கேட்டுப் பரிசில் அளிப்பார் இலரென்னும் வருத்த மிகுதியால் யாழினை முறித்துப் போகட்டார் எனவும் கொள்க. மருப்பு அன்னவாக நெற்று அறைமிசைத் தாஅம் என்க. இதனால் பாணர் முறித்துப் போகட்ட மருப்பும் பலவென்பது பெற்றும். வயமான் அஞ்சி என்பது பாடமாயின், சிங்கம் போலும் வலியுடைய அஞ்சி என்றுரைக்க. யானை சின மிகு முன்பின் வயமான் அஞ்சி இனங்கொண் டொளிக்கும் என்பது பாடமாயின், யானையானது சிங்கத்தைக் கண்டஞ்சி தன் இனத்தைக் கொண்டொளிக்கும் கவலை என்க.

(மே - ள்.) [1]'மங்கல மொழியும் வைஇய மொழியும்' என்னுஞ் சூத்திரத்து, 'நோயில ராகநங் காதலர்' எனக் கூறுவது, நம்மை அறனன்றித் துறத்தலின் தீங்கு வருமென்று அஞ்சி வாழ்த்தியது; நம் பொருட்டுத் தீங்கு வருமென நினைத்தலின் வழுவாய் அமைந்தது என்றனர், நச்.

—————

1. தொல். பொருளி: ௫௦.

116. மருதம்

[தோழி தலைமகனை வாயில் மறுத்தது.]

எரியகைந் தன்ன தாமரை யிடையிடை
அரிந்துகால் குவித்த செந்நெல் வினைஞர்
கட்கொண்டு மறுகுஞ் சாகா டளற்றுறின்
ஆய்கரும் படுக்கும் பாய்புனல் ஊர
பெரிய நாணிலை மன்ற பொரியெனப்
புன்கவிழ் அகன்றுறைப் பொலிய ஒண்ணுதல்
நறுமலர்க் காண்வருங் குறும்பல் கூந்தல்
மாழை நோக்கிற் காழியல் வனமுலை
எஃகுடை எழில்நலத் தொருத்தியொடு [1]நெருநை
வைகுபுனல் அயர்ந்தனை யென்ப அதுவே
பொய்புறம் [2]போதிந்தியாம் கரப்பவும் கையிகந்து
அலரா கின்றால் தானே மலர்தார்
மையணி யானை மறப்போர்ச் செழியன்
பொய்யா விழவின் கூடற் பறந்தலை
உடனியைந் தெழுந்த இருபெரு வேந்தர்
கடல்மருள் பெரும்படை கலங்கத் தாக்கி
இரங்கிசை முரசம் ஒழியப் பரந்தவர்
ஓடுபுறம் கண்ட ஞான்றை
ஆடுகோள் வியன்களத் தார்ப்பினும் பெரிதே.

—பரணர்.

(சொ - ள்.) ௧—௫: எரி அகைந்த அன்ன தாமரை இடையிடை - நெருப்புக் கப்புவிட் டெரிவது போன்ற தாமரைப் பூக்களின் இடையிடையே, செந்நெல் கால் அரிந்து குவித்த வினைஞர் - செந்நெற்றாளை அரிந்து அரி அரியாகப் போகட்ட நெல்லரிவோர், கட்கொண்டு மறுகும் சாகாடு - தங்கட்குக் கள்ளைக் கொண்டு பலகாலும் திரியும் வண்டி, அளற்று உறின் - சேற்றிற் பதிந்திடின், ஆய்கரும்பு அடுக்கும் பாய்புனல் ஊர - அதனைப் போக்கச் சிறந்த கரும்புகளை அடுக்கி இடைமடுக்கும் பாயும் புனல் வள மிக்க ஊரனே, பெரிய நாணிலை மன்ற - உறுதியாக நீ பெரிதும் நாணில்லாதவனுவாய்;

௫—௧௦. பொரி எனப் புன்கு அவிழ் அகல் துறை பொலிய - பொரிபோலப் புன்கம்பூ மலரும் அகன்ற நீர்த்துறை பொலிவுற, ஒள்

(பாடம்) 1. நெருநல். 2. யான் கரப்பவும்.

நுதல்-ஒளி பொருந்திய நெற்றியினையும், நறுமலர் காண்வரும் குறும் பல் கூந்தல்-நறிய மலர்கள் வேய்ந்த காண்டற்கினிய குறிய பலவாய கூந்தலினையும், மாழை நோக்கின் - மாவடுப் போன்ற கண்ணினையும், காழ்இயல் வன முலை-முத்துவடம் அசையும் அழகிய முலையினையும், எஃகு உடை எழில் நலத்து ஒருத்தியொடு - நுண்ணிய அழகின் நலத் தினையுமுடைய ஒரு பரத்தையோடு, நெருநை வைகுபுனல் அயர்ந்தனை என்ப - நேற்று இடையறாது ஒழுகும் புனலில் விளையாட்டயர்ந்தனை எனப் பலருங் கூறுவர்;

க0—க. அதுவே - அதுதான், பொய்புறம் பொதிந்து யாம் கரப் பவும் - அதனைப் பொய் யென்று புறத்தே மூடி யாம் மறைக்கவும், கையி கந்து-எம்செயலினைக் கடந்து;

கஉ—கூ. மலர் தார்-மலர்ந்த பூமாலையினையும், மை அணி யானை - தலையில் மை அணிந்த யானையினையும் உடைய, மறப்போர் - மறம் பொருந்திய போரில் வல்ல, செழியன் - பாண்டியனது, பொய்யா விழ வின் கூடல் பறந்தலை - என்றும் நீங்காத விழவினையுடைய கூடற் போர்க்களத்தில், உடன் இயைந்து எழுந்த இரு பெரு வேந்தர் - தம்முள் ஒருங்கு இயைந்து எழுந்த சோழ சேர அரசர்களது, கடல்மருள் பெரும் படை - கடல் போன்ற பெருந்தானைகளை, கலங்கத் தாக்கி - கலக்கும் பரிசு தாக்கி, இரங்கு இசை முரசம் ஒழியப் பரந்து அவர் ஓடுபுறம் கண்ட ஞான்றை - ஒலிக்கும் ஒலியினையுடைய முரசு ஒழிந்து கிடக்க அவர் பரந்து ஓடும் புறக்கொடையைக் கண்ட நாளில், ஆடு கொள் வியன் களத்து ஆர்ப்பினும் பெரிது - வெற்றி கொண்ட பெரிய களத் தின் கண் எழுந்த ஆரவாரத்தினும் பெரிதாக;

கஉ. அலர் ஆகின்று - அலராகின்றது.

(முடிபு) பாய் புனலூர! பெரிய நாணிலை மன்ற; எழில் நலத் தொருத்தியொடு நெருநை வைகுபுனல் அயர்ந்தனை என்ப; அது யாம் கரப்பவும் கையிகந்து, செழியன் கூடற் பறந்தலை, இருபெரு வேந்தர் பெரும்படை கலங்கத் தாக்கி அவர் புறங்கண்ட ஞான்றை, களத்து எழுந்த ஆர்ப்பினும் பெரிது அலர் ஆகின்று.

(வி - ரை.) ஆய் கரும்பு - மெல்லிய கரும்புமாம். கரும்பு அடுக் கும் என்றது மருத நிலத்தின் வளமிகுதி கூறியபடி. மாழை – இளமை என்றும், அழ கென்றுமாம். எழில் நலம் - எழுச்சியும் நலமுமாம். யானைக்கு நெற்றியில் அஞ்சனம் அணிதல் மரபாதலின், மையணி யானை யென்றார்.

(உ - றை.) நெல்லரியும் வினைஞர் தம் தொழிலை விடுத்து இழிந்த கள் வண்டியின் ஆழ்ச்சியைப் போக்கற்குச் சிறந்த கரும்பினைச் சிதைப் பதுபோல, நீ இல்லறஞ் செய்தலாய நின் ஒழுக்கத்தினைக் கைவிட்டு, இழிந்த பரத்தையின் இன்பத்தை நுகர்தற்குச் சிறந்த தலைவியை வருத்துகின்றாய்என்பது

(மே - ள்.) [1]'கிழவோன் விளையாட் டாங்கு மற்றே' என்னுஞ் சூத்திரத்து, 'எஃகுடை யெழினலத் தொருத்தியொடு...அலரா கின்றற்றனே' என்பது, தலைவி பிறர் அலர் கூறியவழிக் காமஞ் சிறந்து புலந்தவாறு என்றும், [2]'வாயிற் கிளவி வெளிப்படக் கிளத்தல்' என்னும் சூத்திரத்து, 'எரியகைந் தன்ன தாமரை யிடை யிடை......யாப்பினும் பெரிதே' என்பதனுள், 'நாணிலை மன்ற' எனத் தோழி கூறி அலராகின்றால் என வெளிப்படக் கிளத்தலின் வழுவாய் அமைந்தது என்றும் கூறினர், நச்.

---

117. பாலை

[மகட் போக்கிய செவிலித்தாய் சொல்லியது.]

மௌவலொடு மலர்ந்த மாக்குரல் நொச்சியும்
அவ்வரி அல்குல் ஆயமும் உள்ளாள்
ஏதிலன் பொய்ம்மொழி நம்பி ஏர்வி(னை)
வளங்கெழு திருநகர் புலம்பப் போகி
வெருவரு கவலை ஆங்கண் அருள்வரக்
கருங்கால் ஓமை யேறி வெண்டலைப்
பருந்துபெடை பயிரும் பாழ்நாட் டாங்கண்
பொலந்தொடி தெளிர்ப்ப வீசிச் சேவடிச்
சிலம்புநக இயலிச் சென்றஎன் மகட்கே
சாந்துளர் வணர்குரல் வாரி வகைவகுத்து
யான்போது துணைப்பத் தகரம் மண்ணாள்
தன்னோ ரன்ன தகைவெங் காதலன்
வெறிகமழ் பன்மலர் புனையப் பின்னுவிடச்
சிறுபுறம் புதைய நெறிபுதாழ்ந் தனகொல்
நெடுங்கால் மாஅத் தூழுறு வெண்பழம்
கொடுந்தாள் யாமை பார்ப்பொடு கவரும்
பொய்கை சூழ்ந்த பொய்யா [3]யாணர்
வாணன் சிறுகுடி வடாஅது
தீநீர்க் கான்யாற்று அவிரறல் போன்றே.

---

1. தொல். கற்பு: உக. 2. தொல். பொருளி: சஎ.
(பாடம்) 3. யாணர்ப் பண்ணன்.

(சொ - ள்.) க—உ. மௌவலொடு மலர்ந்த மாக்குரல் நொச்சி யும் - முல்லைப் பூவோடு மலர்ந்த கரிய கொத்தினையுடைய நொச்சியை யும், அவ்வரி அல்குல் ஆயமும் உள்ளாள் - அழகிய வரி பொருந்திய அல்குலினையுடைய ஆயத்தினையும் நினையாளாயும்;

கo—க. சாந்து உளர் வணர் குரல் வாரி - மயிர்ச் சாந்து பூசிய வளைந்த கொத்தாகிய கூந்தலை வாரி, வகை வகுத்து - வகைப்படுத்து, யான் போது துணைப்ப - யான் மலர்களை இணைக்கப்புக, தகரமும் மண் ணுள்-அதற்கு உடன்பட்டுத் தகரமும் பூசிக்கொள்ளாளாயும்,

ரு-சு. ஏதிலன் பொய் மொழி நம்பி - பிறனொருவன் பொய்ம் மொழியினை விரும்பி, ஏர் வினை வளம்கெழு திரு நகர் புலம்பப் போகி- அழகிய தொழினலம் வாய்ந்த வளம்பொருந்திய செல்வமிக்க மாளிகை தனித் தொழியப் புறப்பட்டு;

கூ—க. வெருவரு கவலை ஆங்கண் - அஞ்சத்தக்க கவர்த்த நெறி களாய அவ்விடங்களில், வெண்தலைப் பருந்து - வெள்ளிய தலையினை யுடைய பருந்து, கருங்கால் ஓமை ஏறி - கரிய அடியினையுடைய ஓமை மரத்தின் மீதேறி, அருள் வர - இரக்கம் உண்டாக, பெடை பயிரும் பாழ் நாட்டு ஆங்கண் - தனது பெடையினை அழைக்கும் பாழான நாட்டிடத்தே, பொலம் தொடி தெளிர்ப்ப வீசி - தனது பொற்றொடி யொலிக்கக் கையினை வீசியும், சேவடிச் சிலம்பு நக இயலி - சிவந்த அடியிற் சிலம்புகள் விளங்க உலாவியும், சென்ற என் மகட்கு - போய் விட்ட என் மகளுக்கு;

கஉ—க. தன் ஓரன்ன தகை வெம் காதலன் - தன்னையே ஒத்த தகைமையையும் விருப்பத்தையுமுடைய காதலனாகிய தலைவன், வெறி கமழ் பன்மலர் புனையப் பின்னுவிட-மணம் கமழும் பலவகை மலர்களை வைத் தணிசெயற்குப் பின்னுதலைச் செய்ய (அவள் கூந்தல்),

கடு—க. நெடுங் கால் மாஅத்து ஊழ்உறு வெண் பழம் - நெடிய அடியினையுடைய மாமரத்தினது முறையாக முற்றிய வெள்ளிய பழத் தினை, கொடு தாள் யாமை பார்ப்பொடு கவரும் - வளைந்த காலினை யுடைய யாமை தன் பார்ப்போடு கவர்ந்துண்ணும், பொய்கை சூழ்ந்த பொய்யா யாணர் - பொய்கைகள் சூழ்ந்துள்ள என்றும் அறாத் புது வருவாய்களையுடைய, வாணன் சிறுகுடி வடாஅது - வாணனது சிறு குடி என்னும் ஊர்க்கு வடக்கின்கண் ணுள்ள, தீம் நீர்க் கான்யாற்று அவிர் அறல் போன்று-இனிய நீரினையுடைய காட்டாற்றின் விளங்கும் அறல் போன்று;

கச. சிறுபுறம் புதைய நெறிபு தாழ்ந்தன கொல் - பிடர் மறைய நெறிந்து தொங்குகின்றனவோ?

(முடிபு) நொச்சியினையும் ஆயத்தினையும் நினையாளாயும், தகரம்மண்ணா ளாயும், ஏதிலன் பொய்ம்மொழி நம்பி, நகர் புலம்பப்போகி, பாழ்நாட்டாங்

கண், வீசியும் இயலியுஞ் சென்ற என் மகட்கு, காதலன் பின்னுவிட அவள் கூந்தல் வாணன் சிறுகுடி வடாஅது கான்யாற்று அறல் போன்ற சிறுபுறம் புதைய நெறிப்பு தாழ்ந்தனகொல்?

(வி - ரை.) அருள் வர பெடைக்கு அருள்; கண்டார்க்கு அருள் வர எனலுமாம். கையை வீசி என்க; தன்னோ ரன்ன - அன்பு. ஒழுக்கம் முதலியவற்றால் தன்னை யொத்த.

---

118. குறிஞ்சி

[செறிப்பறிவுறீஇ இரவும் பகலும் வாரலென்று வரைவு கடாஅயது.]

கறங்குவெள் [1]அருவி பிறங்குமலைக் கவாஅன்
தேங்கமழ் இணர வேங்கை சூடித்
தொண்டகப் பறைச்சீர் பெண்டிரொடு விரைஇ
மறுகிற் றூங்கும் சிறுகுடிப் பாக்கத்து
[2]இயன்முரு கொப்பினை வயநாய் பிற்படப்
பகல்வரிற் கவ்வை அஞ்சுதும் இகல்கொள
இரும்பிடி கன்றொடு விரைஇய கயவாய்ப்
பெருங்கை [3]யானைக் கோள்பிழைத் திரீஇய
அடுபுலி வழங்கும் ஆரிருள் நடுநாள்
தனியை வருதல் அதனினும் அஞ்சுதும்
என்னா குவள்கொல் தானே பன்னாள்
புணர்குறி செய்த புலர்குரல் ஏனல்
கிளிகடி பாடலும் ஒழிந்தனள்
அளியள் தானின் அளியல திலளே.

—கபிலர்.

(சொ - ள்.) க—ச. கறங்கு வெள் அருவி பிறங்கு மலைக் கவாஅன் - ஒலிக்கும் வெள்ளிய அருவிகள் விளங்கும் மலையின் சாரற்கண்ணே, தேம் கமழ் இணர வேங்கை சூடி - தேன் கமழும் கொத்துக்களையுடைய வேங்கைப் பூக்களைச் சூடி, தொண்டகப் பறைச் சீர் - தொண்டகம் என்னும் பறையின் தாளத்திற்கிசைய, பெண்டிரொடு விரைஇ - ஆடவர் பெண்டிரொடு கலந்து, மறுகில் தூங்கும் சிறுகுடிப் பாக்கத்து - தெருக்களில் ஆடும் எமது சிறுகுடிப் பாக்கத்தின் கண்ணே, இயல் முருகு ஒப்பினை - இயங்கும் முருகனை ஒப்பாயாகி, வயநாய் பிற்

(பாடம்) 1. அருவிப் பிறங்கு. 2. இகல்முருகு.
3. யானை கோட்பிழைத்து.

படப் பகல்வரின் - வலிய நாய் பின்னே வரப் பகற்கண் நீ வரின், கவ்வை அஞ்சுதும் - ஊரார் கூறும் அலர்க்கு அஞ்சுகிறேம் ;

கூ—க0. இரும்பிடி கன்றொடு விரைஇய - கரிய பிடியோடும் கன்றோடுங் கூடிய, கயவாய் பெருங்கை யானைக் கோள் பிழைத்து-அகன்ற வாயினையும் நீண்ட கையினையுமுடைய யானையைக் கொள்ளுதல் பிழைத்து, இகல்கொள இரீஇய - அதனால் அவற்றைப் பகைமை பொருந்த மறைந்திருக்கும்படி செய்த, அடுபுலி வழங்கும் ஆர்இருள் நடுநாள்-கொல்லும் புலி திரியும் அரிய இருள் சூழ்ந்த நள்ளிரவில், தனியை வருதல் அதனினும் அஞ்சுதும் - நீ தனியையாகி வருதலை அதனைக் காட்டிலும் அஞ்சுகின்றேம் ;

கக—ச. பன்னாள் புணர்குறி செய்த புலர்குரல் ஏனல்-பலநாளும் புணரும் பகற்குறியாகக் கொண்ட முற்றிய கதிரையுடைய தினைப் புனத்திலே, கிளி கடி பாடலும் ஒழிந்தனள் - கிளியை ஓட்டுதற்குப் பாடும் பாடலும் நீங்கினள், என் ஆகுவள் கொல்-இனி என் ஆகுவளோ, அளியள் நின் அளி அலது இலளே-இரங்கத் தக்காளாய என் தோழி நின் அருளையன்றிப் பிறிதொரு பற்றுக்கோடும் இலள்.

(முடிபு) தலைவ; சிறுகுடிப் பாக்கத்து இயல் முருகு ஒப்பினை பகல்வரின் கவ்வை அஞ்சுதும், அடுபுலி வழங்கும் ஆரிருள் நடுநாள் தனியை வருதல் அதனினும் அஞ்சுதும், இவள், ஏனல் கிளிகடி பாடலும் ஒழிந்தனள் ; என் ஆகுவள் கொல் ? அளியள் நின் அளியலது இலள்.

(வி - ரை.) அருவிப் பிறங்குமலை என்பது பாடமாயின் அருவியையுடைய விளங்கும் மலையென்க. இகல் முருகு என்பது பாடமாயின், பகைவரொடு மாறுபாடு கொண்ட முருகன் என்க. மிகல்கொள எனப் பிரித்து, தருக்கு அமைய என்றுரைத்தலுமாம். இரீஇய - ஓடும்படி செய்த என்றுமாம். யானை கோட் பிழைத்து என்பது பாடமாயின், யானையானது கொள்ளுதல் பிழைத்து இரீஇய என்க. வழங்கும் ஆரிருள் நடுநாள் என்பது பாடமாகக் கொள்ளின், வழங்கும் நெறியின் கண் இருளையுடைய நடுநாள் என்க.

பகல்வரிற் கவ்வை யஞ்சுதும் என்றதனாலே பகற்குறி விலக்கியும், ஆரிருள் நடுநாள் வருதல் அஞ்சுதும் என்றதனால் இரவுக்குறி விலக்கியும், ஏனல்கிளிகடி பாடலும் ஒழிந்தனள் என்றதனால் செறிப்பறிவுறுத்தியும், நின் அளியல திலள் என்றதனால் வரைந்து கொள்ளல் வேண்டும் என்றாளாம்.

(மே - ள்.) '[1]பொழுது மாறும்' என்ற சூத்திரத்துப் 'பகல் வாரல்' என்றதற்குப் 'பகல்வரிற் கவ்வை - யஞ்சுதும்' என்பதனை எடுத்துக் காட்டினர்; நச்.

---

1. தொல். பொருளியல்: கக.

119. பாலை

[செலவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் சொற்றது. தோழி தலைமகட்குச் சொற்றதூஉ மாம்.]

நுதலுந் தோளுந் திதலை யல்குலும்
வண்ணமும் வனப்பும் வரியும் வாட
வருந்துவள் இவளெனத் திருந்துபு நோக்கி
வரைவுநன் றென்னா தகலினும் அவர்வறிது
ஆறுசெல் மாக்கள் அறுத்த பிரண்டை
ஏறுபெறு பாம்பின் பைந்துணி கடுப்ப
நெறியயல் திரங்கும் அத்தம் வெறிகொள
உமண்சாத் திறந்த ஒழிகல் அடுப்பின்
நோன்சிலை மழவர் ஊன்புழுக் கயரும்
சுரன்வழக் கற்ற தென்னா துரஞ்சிறந்து
நெய்தல் உருவின் ஐதிலங் ககலிலைத்
தோடையமை பீலிப் பொலிந்த கடிகை
மடையமை திண்சுரை மாக்காழ் வேலொடு
தணியமர் அழுவம் தம்மொடு துணைப்பத்
துணிகுவர் கொல்லோ தாமே துணிகொள
மறப்புலி உழந்த வசிபடு சென்னி
உறுநோய் வருத்தமொ டுணீஇய மண்டிப்
படிமுழம் ஊன்றிய நெடுநல் யானை
கைதோய்த் துயிர்க்கும் வறுஞ்சுனை
மைதோய் சிமைய மலைமுத லாறே.

—குடவாயிற் கீரத்தனார்.

(சொ - ள்.) (தோழி!)

௧—௪. அவர் - நம் தலைவர், வரைவு நன்று என்னாது அகலினும் - வரைந்து கோடல் தக்கது என்னாது பிரிந்திடினும், நுதலும் தோளும் திதலை அல்குலும் வண்ணமும் வனப்பும் வரியும் வாட - நெற்றியும் தோளும் தேமலையுடைய அல்குலும் நிறமும் அழகும் வரியும் வாட, வருந்துவள் இவள் எனத் திருந்துபு நோக்கி - இவள் வருந்துவாள் என நன்கு ஆராய்ந்துணர்ந்து,

௧௫—௨௦. மறப்புலி உழந்த துணிகொள வசிபடு சென்னி - மறத்தையுடைய புலியுடன் பொருது உழந்தமையால் துண்டமாகப் பிளவுபட்ட சென்னியின்கண், உறு நோய் வருத்தமொடு - உற்ற

(பாடம்) 1. துணிகோள், துணிகொள்பு.

நோயாலாய வருத்தத்துடன், உணீஇய மண்டி - நீர் உண்டற்கு விரைந்து சென்று, படி முழம் ஊன்றிய நெடு நல் யானை - மண்ணில் முழங்காலை மடித்தூன்றிய நெடிய நல்ல யானையானது, கை தோய்த்து உயிர்க்கும் வறுஞ் சுனை - தனது கையால் தோய்த்தும் நீரின்மையால் பெருமூச் செறியும் வறிய சுனையினையுடைய, மை தோய் சிமைய மலை முதல் ஆறு - மேகம் படியும் உச்சியினையுடைய மலையிடத்துச் செல்லும் நெறியாய ;

௫—எ. ஆறு செல் மாக்கள் அறுத்த பிரண்டை - நெறியிற் செல்லும் மக்கள் அறுத்துப் போகட்ட பிரண்டைக் கொடி, ஏறுபெறு பாம்பின் பைந் துணி கடுப்ப - இடியாற் றுக்குதல் பெற்ற பாம்பினது பசிய துண்டுபோல, நெறி அயல் வறிது திரங்கும் அத்தம் - வழியின் பக்கத்தே பயனின்றி வதங்கிக் கிடக்கும் காட்டில் ;

எ—௧0. உமண் சாத்து இறந்த ஒழி கல் அடுப்பில் - உப்பு வணிகர் கூட்டம் விட்டொழிந்த கல் அடுப்பில், நோன் சிலை மழவர் - வலிய வில்லையுடைய மழவர், வெறி கொள ஊன் புழுக்கு அயரும் சுரன் - நாற்றமுண்டாக ஊனைப் புழுக்கி யுண்ணும் இடங்களையுடைய சுரமானது, வழக்கு அற்றது என்னாது - பெண்டிரொடு இயங்குதற்கு உரியதல்லது என்று நினையாது ;

௧0—௫. உரம் சிறந்து - ஊக்கம் மிக்கு, நெய்தல் உருவின் ஐது இலங்கு அகல் இலை - நெய்தற்பூப் போலும் உருவினையுடைய அழகிதாக விளங்கும் அகன்ற இலையினையும், தொடை அமை பீலிப் பொலிந்த கடிகை - தொடுத்தல் அமைந்த மயிற்றோகையால் விளக்கமுற்ற காம்பினையும், மடை அமை திண் சுரை - மூட்டுவாய் அமைந்த திண்ணிய சுரையினையும், மா காழ் வேலொடு - கரிய தண்டினையுமுடைய வேலே துணையாக, தணி அமர் அழுவம் - பகையைத் தணிவிக்கச் செல்லும் போர்க்களத்திற்கு, தம்மொடு துணைப்ப - நாமும் தம்மொடு துணையாகிச் செல்ல, துணிகுவர் கொல்லோ - துணிவரோ ?

(முடிபு) தோழி ! நம் தலைவர் வரைவு நன்றென்னாது அகலினும், வருந்துவல் யான் எனத் திருந்துபு நோக்கி, மலை முதல் ஆறு ஆய சுரன் வழக்கற்ற தென்னாது, உரஞ் சிறந்து அமர் அழுவம் தம்மொடு துணையாகக்கொண்டு செல்லத் துணிகுவர் கொல்லோ ?

பிரண்டை திரங்கும் அத்தத்தில் அடுப்பில் மழவர் ஊன்புழுக் கயரும் சுரன் என்க.

(வி - ரை.) வறிது திரங்கும் எனவும், வெறிகொள ஊன் புழுக்கயரும் எனவும் கூட்டுக. ஏறு - இடி யேறு எனவும், எறிதல் எனவும் இரட்டுற மொழிதலாகக் கொள்க. சாத்து - வணிகர் திரள். துனி கொள என்னும் பாடத்திற்கு வெறுப்புண்டாக என்றுரைக்க.

(உ - றை.) 'ஆறு செல்லும் மாக்களால் அறுத்துப் போகடப்பட்டுப் பிரண்டை வறிதே திரங்குவதுபோலத் தலைவராற் றுறக்கப்பட்டு

எம் அழகு பயன்படலின்றியே கழியா நின்றது.' 'சாத்தராற் றுறக்கப்பட்ட கல்லடுப்பு மழவர்க்கு ஊன்புழுக் கயர்ந்து மகிழ்தற்குக் கருவியானாற் போலத் தலைவராற் றுறக்கப்பட்ட யாம் அம்பற் பெண்டிர்க்கு அலர் தூற்றி மகிழற்கு இலக்காயினேம்.

'புலியொடுழந்து சென்னியிடத்து வடுப்பட்டு வருந்திய யானை நீருண்ணச் சுனையிடத்து முழ மூன்றிக் கையைத் தோய்த்தும் நீர்பெறா துயிர்த்தாற்போல், அன்னையின் கொடுஞ் சொல்லாலும் அம்பற் பெண்டிரின் அலராலும் நெஞ்சுபுண்ணுற்ற யாம், அந்நோய் தீரவரையுமாறு தலைமகன் கழல்களைப் பணிந்து வேண்டியும் அருள் பெறாமல் உயிர்க்கின்றோம்' என்றாளாம். (இராசகோபாலையங்கார்.)

---

120. நெய்தல்

[தோழி பகற்குறிக்கண் தலைமகளை இடத்துய்த்து வந்து தலைமகனை எதிர்ப்பட்டு நின்று சொல்லியது.]

நெடுவேள் மார்பின் ஆரம் போலச்
செவ்வாய் வானந் தீண்டிமீன் அருந்தும்
பைங்காற் [1]கொக்கின நிரைபறை யுகப்ப
எல்லை பைப்பயக் கழிப்பிக் குடவயின்
கல்சேர்ந் தன்றே பல்கதிர் ஞாயிறு
மதரெழில் மழைக்கண் கலுழ இவளே
பெருநாண் அணிந்த சிறுமென் சாயல்
மாணலம் சிதைய ஏங்கி யானாது
அழல்தொடங் கினளே பெரும அதனால்
கழிச்சுறா எறிந்த புட்டாள் அத்திரி
நெடுநீர் இருங்கழிப் பரிமெலிந் தசைஇ
வல்வில் இளையரொ டெல்லிச் செல்லாது
சேர்ந்தனை செலினே சிதைகுவ துண்டோ
பெண்ணை ஓங்கிய வெண்மணற் படப்பை
அன்றில் அகவும் ஆங்கண்
சிறுகுரல் நெய்தலெம் பெருங்கழி நாட்டே.

—நக்கீரனார்.

(பாடம்) 1. கொக்கின் நிரை.

(சொ - ள்.) ௧ - ௫. நெடுவேள் மார்பின் ஆரம் போல - முருகக் கடவுள் மார்பினிடத்து முத்தாரம்போல, செவ்வாய் வானம் தீண்டி - செவ்வானத்திடம் பொருந்தி, மீன் அருந்தும் பைங்கால் கொக்கு இனம் நிரைபறை உகப்ப - மீனை அருந்தும் பசிய காலையுடைய கொக்கினது இனம் வரிசையாகப் பறத்தல் உயர்ந்திட, எல்லை பைப்பயக் கழிப்பி - பகற்பொழுதை மெல்ல மெல்லப் போக்கி, பல்கதிர் ஞாயிறு குடவயின் கல் சேர்ந்தன்று - பல கதிர்களையுடைய ஞாயிறு மேற்றிசையில் மறையும் மலையை அடைந்தது;

௬—௯. இவளே பெருநாண் அணிந்த சிறுமென் சாயல் - மிக்க நாணைக் கொண்ட சிறிய மெல்லிய சாயலினையுடைய இவள், மாண் நலம் சிதைய-மாண்புற்ற அழகு கெட, ஏங்கி-ஏக்கமுற்று, மதர் எழில் மழைக்கண் கலுழ-மதர்த்த அழகினையுடைய குளிர்ந்த கண் கலங்கிட, ஆனாது அழல் தொடங்கினளே - அமையாது அழுதலைத் தொடங்கியுள்ளாள்;

௯—௧௨. பெரும - தலைவ!, அதனால் - அதனாலும், கழிச்சுரு எறிந்த புண் தாள் அத்திரி - உப்பங்கழியிலுள்ள சுறுமீன் எறிதலாலுற்ற புண்ணுற்ற தாளினையுடைய கோவேறு கழுதை, நெடுநீர் இருங்கழி பரி மெலிந்து - நீண்ட நீரினையுடைய கரிய கழியில் செல்லுதல் மெலிந்திடலாலும், வல் வில் இளையரொடு எல்லிச் செல்லாது அசைஇ - வலிய வில்லினையுடைய நின் ஏவலரொடு இவ்விரவிற் செல்லாது இளைப்பாற;

௧௪—௬. பெண்ணை ஓங்கிய வெண்மணல் படப்பை - பனை மரங்கள் ஓங்கியவெள்ளிய மணல் பரந்த தோட்டங்களில், அன்றில் அகவும் ஆங்கண் - அன்றில் தன் துணையை அழைக்கும் அவ்விடத்தே, சிறு குரல் நெய்தல் எம் பெருங் கழி நாட்டு - சிறிய பூங்கொத்தினையுடைய நெய்தல் பொருந்திய எமது பெரிய கழி சூழ்ந்த நாட்டின்கண்;

௧௭. சேர்ந்தனை செலினே சிதைகுவது உண்டோ - நீ தங்கிச் செல்லின் கெடுவதொன்று உளதோ?

(முடிபு) பெரும! பல் கதிர் ஞாயிறு கல் சேர்ந்தன்று; இவள் அழல் தொடங்கினள்; அதனாலும், அத்திரி பரிமெலிந்திடலாலும் இளையரொடு எல்லிச் செல்லாது அசைஇ, எம் பெருங்கழி நாட்டுச் சேர்ந்தனை செலின், சிதைகுவது உண்டோ?

(வி - ரை.) முருகக் கடவுள் மிக்க செந்நிறமுடையரென்பது சேய், செவ்வேள் என்னும் பெயர்களாலும், [1]"பலர்புகழ் ஞாயிறு கடற் கண்டாங்கு" [2]"பவழத் தன்ன மேனி" என்பவற்றானும் அறியப்படும். செவ்வானத்திற்கு நெடுவேளின் செம்மேனியும், அவ்வானத்தை யொட்டி வரிசையாகப் பறந்து செல்லும் கொக்கினத்திற்கு அவரது

1. முருகு: ௨. 2. குறுந்: கடவுள் வாழ்த்து.

மார்பிலணிந்த முத்தாரமும் உவமமாயின; ஆற்றுப்படையால் முருக வேளை யேத்திய ஆசிரியர் நக்கீரனரது அன்பு கனிந்த திருவுள்ளத்தில் செவ்வானையும் அதனை யொட்டிப் பறந்து செல்லும் கொக்கின் நிரை யையும் கண்டுழிச் செவ்வேளின் திருமேனியும் அவரது மார்பின் முத் தாரமும் தோன்றுவது இயல்பேயாம். கொக்கின் நிரை என்பது பாட மாயின் கொக்கின் கூட்டம் என்க. உகப்பு - உயர்வு. பறை யுகப்ப- உயர்ந்து பறக்க வெனக் கொள்க. சாயல் இவள் எனக் கூட்டுக. மெலிந்து என்பதனை மெலிய வெனத் திரிக்க. அன்றில் அகவும் ஆங் கண் என்றதனுல் தலைவன் வராவிடில் தலைவிக்குண்டாம் ஏதம் குறிக் கப்பட்டது. [1]"எல்வி......அன்றில், துணையொன்று பிரியினுந் துஞ்சா காண்" என்பதன் உரை காண்க.

இது நெய்தலிற் களவு. [2]"திணைமயக் குறுதலுங் கடிநிலை யிலவே" என்பதனுல் அமைந்தது.

(மே - ள்.) [3]'நாற்றமும் தோற்றமும் என்னுஞ் சூத்திரத்து, தோழி தலைவனை வேளாண் பெருநெறி வேண்டிக்கோடற்கு இச் செய்யுளை எடுத்துக் காட்டினர், இளம்.

[4]'வைகுறு விடியல்' என்னுஞ் சூத்திரத்து இச் செய்யுள், பகற் குறிக்கண் இடத்துய்த்துத் தலைவனை எதிர்ப்பட்டு உரைத்தது என் றும், ஈண்டு செய்வதற்கு எற்பாடு வந்ததென்றும், [5]'பொழுதும் ஆறும் காப்பும்' என்னுஞ் சூத்திரத்து, 'வல்வி லிளையரொடு......பெருங்கழி நாட்டே' என்பது, 'இரவினும் பகலினும் நீ வா' எனத் தோழி கூறு வதற்கு உதாரணமாகும் என்றும், இங்ஙனம் களவு அறிவுறுமென்று அஞ்சாது வருக என்றவின் வழுவேனும் தலைவன் வருத்தம் பற்றிக் கூறலின் அமைத்தார் என்றும், [6]'தேரும் யானையும் குதிரையும் பிறவும் ஊர்ந்தனர் இயங்கலும், உரியன் என்ப' என்னுஞ் சூத்திரத்து, 'பிற' ஆவன கோவேறு கழுதையும் சிவிகையும் முதலியனவாம் என்றும், 'கழிச்சுறு வெறிந்த புட்டா ளத்திரி......பரிமெலிந் தசைஇ' என வரு தல் அதற்கு உதாரணமாகு மென்றும், இன்னும் இச் சூத்திரத்து (இயங்கலும் என்ற) உம்மையால் இளையரோடு வந்து தனித்துக் கூடு தலுங் கொள்க; இதற்கு 'வல்வி லிளையரொடு...சிதைகுவதுண்டோ' என்பது உதாரணமாகு மென்றும் கூறினர், நச்.

களிற்றியானை நிரை முற்றும்.

---

1. அகம்: ௫௦. 2. தொல். அகத்: ௧௨. 3. தொல். களா: ௨௪. 4. தொல். அகத்: ௮. 5. தொல். பொருளியல்: ௧௬. 6. தொல். பொருளியல்: ௧௮.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

பாகனேரி த. வை. இளைஞர் தமிழ்ச்சங்க ... கழகம்
சென்னை 600005

எட்டுத்தொகையுள்

ஒன்றான

அகநானூறு

மணிமிடைபவளம்

திரு நாவலர் ந மு வேங்கடசாமி நாட்டார்
கரந்தைக் கவியரசு R வேங்கடாசலம் பிள்ளை
அவர்களால் எழுதப்பெற்ற

பதவுரை விளக்கவுரைகளுடன்

பாகனேரி
வெ பெரி பழ மு காசிவிசுவநாதன் செட்டியார்
அவர்களால் வெளியிடப்பெற்றது

விற்பனை உரிமை :
திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
திருநெல்வேலி-6 சென்னை-1

1964

© 1964 பாகனேரி தனவைசிய இளைஞர் தமிழ்ச் சங்கம்

Edition 1 January, 1946
Reprints: Dec 1949, Mar 1955, Dec 1959, July 1964

O31.1B7
K4

Selling Rights:

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.
1/40, BROADWAY, MADRAS-1.

Head Office:
98, EAST CAR STREET, TIRUNELVELI-6.

AKANANOORU
MANIMIDAI PAVALAM

Paari Achakam, 127, Broadway, Madras-1.

பதிப்புரை

அகத்தே நிகழும் இன்பம் 'அகப்பொருள்' எனப்படும். அகப்பொருள் நூல்கள் தமிழில் பல உள்ளன. ஆயினும், 'அகம்' என்றே பெயரமைந்த பழைய இலக்கிய நூல் இப்போது ஒன்றே உள்ளது. அதுதான் '*அகநானூறு*' என்பது.

கடைச் சங்க காலத்தின் எட்டுத்தொகை நூல்களுள் அகநானூறும் ஒன்று. நானூறு அகவற் பாட்டுக்களால் ஆனது; புலவர் பலரால் இயற்றப்பட்டு, மதுரை உப்பூரிகுடிகிழார் மகனார் உருத்திரசன்மரால் தொகுக்கப்பட்டது.

அகநானூறு மூன்று பகுதிகளாக உள்ளது. முதல் நூற்றிருபது பாட்டுக்கள் '*களிற்றியானை நிரை*' எனப்படும். அடுத்த நூற்றெண்பது பாட்டுக்கள் '*மணிமிடைபவளம்*' எனப்படும். கடைசி நூறு பாட்டுக்கள் '*நித்திலக் கோவை*' எனப்படும்.

இந்நூலுக்குப் பழைய உரை ஒன்று உண்டு. அது, முதல் ௯௦ பாட்டுகட்கு மட்டும் குறிப்புரையாக இருக்கின்றது. அடுத்த ௭௦ பாட்டுகட்கு அகநானூற்றின் முதற் பதிப்பாசிரியரான *திரு. வே. இராசகோபாலாசாரியார்* உரை எழுதியிருக்கிறார். ஆதலால் நூல் முழுமைக்கும் ஒரேவகையாகத் தெள்ளிய உரையொன்று எழுதி வெளி வரவேண்டிய இன்றியமையாமை இந்நூலுக்கு நெடுங்காலமாக இருந்து வந்தது.

அக்குறையினை நீக்கும்பொருட்டு, *தஞ்சை நாவலர் திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்களும்*, கரந்தைக் கவியரசு. R. வேங்கடாசலம் பிள்ளையவர்களும் சேர்ந்து இப்போது இந்நூல் முழுமைக்கும் உரை யெழுதியிருக்கின்றனர்.

செய்யுட்களைப் பதம் பிரித்து, முதலில் தெளிவாகத் தலைப்புக் கொடுத்துப் பின்பு பொருள் செல்லும் நெறிக்கு ஏற்ப முறைப் படுத்திப் பதவுரை கண்டு, அதன்மேல் முடிபும் விளக்கவுரையும் எழுதி, உள்ளுறை புலப்படுத்தி, மேற்கோள் இடங்களை விளக்கி, உரிய அடிக்குறிப்புக்களுடன் இவ்வுரை தெளிந்து செல்கின்றது.

முதற்கண் 'களிற்றியானை நிரை' என்னும் முதற்பகுதி ஒரு தனிப் புத்தகமாக வெளியிடப்பெற்றது. இப்போது இரண்டாம் பகுதியாகிய 'மணிமிடை பவளமும்' ஒரு தனிப் புத்தகமாக வெளியிடப் பெறுகின்றது. இறுதியிற் பாட்டு முதற்குறிப்பும் ஆசிரியர் பெயர் வரிசையும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அகநானூறு முழுப் புத்தகமாக வெளிவரும்போது நூல் வரலாறு, உரை வரலாறு, அரும்பொருட் குறிப்பு முதலிய பிற குறிப்புக்களும் சேர்க்கப்பெறும்.

மு. காசிவிசுவநாதன்.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

அகநானூறு

மூலமும் உரையும்

இரண்டாவது

மணிமிடை பவளம்

121. பாலை

[தோழியால் தலைமகளை உடன்வருமெனக் கேட்ட தலைமகன் நெஞ்சிற்குச் சொல்லியது.]

*நாம்நகை யுடையம் நெஞ்சே கடுந்தெறல்
வேனில் நீடிய வானுயர் வழிநாள்
வறுமை கூரிய மண்ணீர்ச் சிறுகுளத்
தொடுகுழி மருங்கில் துவ்வாக் கலங்கல்
கன்றுடை மடப்பிடிக் கயந்தலை மண்ணிச்
சேறுகொண் டாடிய வேறுபடு வயக்களிறு
செங்கோல் வாலிணர் தயங்கத் தீண்டிச்
சொரிபுறம் உரிஞிய நெறியயல் மராஅத்து
அல்குறு வரிநிழல் அசைஇ நம்மொடு
தான்வரும் என்ப தடமென் தோளி
†உறுகண் மழவர் உருள்கீண் டிட்ட
ஆறுசெல் மாக்கள் சோறுபொதி வெண்குடைக்
‡கனைவிசைக் கடுவளி யெடுத்தலின் துணைசெத்து
வெருளேறு பயிரும் ஆங்கண்
கருமுக முசுவின் கானத் தானே.

—மதுரை மருதனிளநாகனார்.

(சொல் பொருள்.) ௧. நெஞ்சே-,

௧௧—௫. உறுகண் மழவர் உருள் கீண்டிட்ட-வழிச் செல்வார்க்குத் துன்பத்தைச் செய்யும் மழவரது சாகாடு கிழித்துச் சென்ற சுவடாகிய,

(பாடம்) * நான்நகை. † உறுகணமழவர். உறுகணை மறவர். ஊறுகணை மழவர். உள் கீண்டிட்ட. ‡ கணை விசை. கண் மிசை.

ஆறுசெல் மாக்கள் - நெறியிலே செல்லும் சாத்தரது, சோறு பொதி வெண்குடை - சோறு பொதிந்த வெள்ளிய பனை ஓலையாலாய குடையினை, கணைவிசை கடுவளி எடுத்தலின் - மிக்க விசையினையுடைய சூறைவளி தூக்கலின் எழுந்த ஒலியினை, துணை செத்து - தனது பிணையினது குரலென எண்ணி, வெருள் ஏறு - அஞ்சிய மானேறு, பயிரும் ஆங்கண் - அப்பிணையை அழைத்திடும் இடங்களையுடைய, கருமுக முசுவின் கானத்தான் - கரிய முகத்தினையுடைய முசுக்களையுடைய காட்டின்கண்ணே ;

௧—௧௦. கடுதெறல் வேனில் நீடிய வான் உயர் வழி - மிக்க காய் தலையுடைய கோடை நீண்ட மிக உயர்ந்த நெறியில், நாள் வறுமை கூரிய - நாளும் தன் வறுமை மிக, மண்ணீர்ச் சிறுகுளத் தொடுகுழி மருங்கில் - குளிக்கும் நீராகிய சிறு குளத்தில் தோண்டப் பெற்ற குழியின் கண், துவ்வாக் கலங்கல் - உண்ணற் காகாத கலங்கிய நீரால், கன்று உடை மடப்பிடிக் கயந்தலை மண்ணி - கன்றினையுடைய இளமை வாய்ந்த பிடியின் மெல்லிய தலையை முதலிற் கழுவி, சேறுகொண்டு ஆடிய வேறுபடு வயக் களிறு - பின் எஞ்சிய சேற்றினைக்கொண்டு அளைந்து கொண்ட நிறம் வேறுபட்ட வலிய ஆண்யானை ; செங்கோல் வால்இணர் தயங்கத் திண்டி - சிவந்த காம்பினையுடைய வெள்ளிய கொத்துக்கள் அசையத் தனது துதிக்கையால் பற்றி, சொரிபுறம் உரிஞிய - தினவு பொருந்திய தன் முதுகினை உராய்ந்து கொண்டதாய, நெறி அயல் மராஅத்து - வழியின் பக்கத்துள்ள வெண்கடம்பின், அல்குறு வரி நிழல் அசைஇ - சுருங்கிய வரி வரியாகவுள்ள நிழலிலே தங்கி, நம்மொடு தடமென்தோளி வரும் என்ப - நம்முடன் பெரிய மென்மை வாய்ந்த தோளையுடைய தலைவி வரும் என்பர், நாம் நகை யுடையம் - ஆகலின் நாம் நகையுடையேமாயிரா நின்றேம்.

(முடிபு) நெஞ்சே! முசுவின் கானத்தான், தடமென்தோளி வரி நிழலசைஇ நம்மொடு வருமென்ப; நாம் நகையுடையம்.

(விளக்க உரை) 'நாள் நகை' யென்பது பாடமாயின் நாளும் நகையுடையேம் என்க. வானுயர் வழிநாள் என்றுகொண்டு மேகம் கால் வீழ்த்துப் பெய்யாது உயர்ந்த பிற்காலத்து என்றுரைத்தலுமாம். மண் நீர்-கழுவும் நீர் ; மண் கலந்த நீருமாம். வேறுபடு களிறு — சேறு காய்ந்திடத் தன்னுடல் வெண்ணிறம் ஆயினமையின் வேறுபடு களிறென்றார். தான் வருமென்ப : தான் : அசை. உறு கண மழவர் என்பது பாடமாயின், மிக்க கூட்டமாகிய மழவர் என்க. கணைவிசை யென்னும் பாடத்திற்கு அம்பு போலும் விசை என்க.

(உள்ளுறை) களிறு துவ்வாக் கலங்கலால் முதற்கண் பிடியின் தலையை மண்ணிப் பின்பு சேற்றினைக் கொண்டு தான் ஆடியது என்றது, தலைவன் தலைவியைத் தலையளி செய்வன் என்றவாறும்.

(மேற்கோள்) *'கரணத்தினமைந்து' என்னுஞ் சூத்திரத்து, 'உடன் சேறல் செய்கையொ டன்ன பிறவும், மடம்பட வந்த தோழிக் கண்ணும்' என்னும் பகுதியில், தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறியதற்கு இச் செய்யுளைக் காட்டினர், நச்.

†'எள்ளல் இளமை' என்னுஞ் சூத்திரத்து, 'சான்றவையுடையம் நெஞ்சே நம்மொடு, தான் வருமென்ப தடமென்தோளி' என்பது பிறர் மடம் பொருளாக நகை தோன்றியது என்றனர், பேராசிரியர்.

---

122. குறிஞ்சி

[தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழிக்குச் சொல்லுவாளாய்த் தலைமகள் சொற்றது. தோழி சொல்லெடுப்பத் தலைமகள் சொல்லியதூஉமாம்.]

‡இரும்பிழி மாரி, அழுங்கல் மூதூர்
விழவின் றாயினுந் துஞ்சா தாகும்
மல்லல் ஆவணம் மறுகுடன் மடியின்
வல்லுரைக் கடுஞ்சொல் அன்னை துஞ்சாள்
பிணிகோள் அருஞ்சிறை அன்னை துஞ்சின்
துஞ்சாக் கண்ணர் காவலர் கடுகுவர்
இலங்குவேல் இளையர் துஞ்சின் வைபெயிற்று
வலஞ்சுரித் தோகை ஞாளி §மகிழும்
அரவவாய் ஞமலி ¶மகிழாது மடியின்
பகலுரு §உறழ நிலவுக்கான்று விசும்பின்
அகல்வாய் மண்டிலம் நின்றுவிரி யும்மே
திங்கள் கல்சேர்பு கனையிருள் மடியின்
இல்எலி வல்சி வல்வாய்க் கூகை
கழுதுவழங் கியாமத் தழிதகக் குழறும்
வளைக்கட் சேவல் வாளாது மடியின்
மனைச்செறி கோழி மாண்குரல் இயம்பும்
எல்லாம் மடிந்த காலை யொருநாள்
நில்லா நெஞ்சத் தவர்வா ரலரே, அதனால்

---

* தொல். கற்பு. ௯. † தொல். மெய்ப்பாடு. ௪.

(பாடம்) ‡ இரும்பிழி மகாஅரிவ். § மருளும். ¶ குரையாது. § உறழ்நிலாக் கான்று.

அரிபெய் புட்டில் ஆர்ப்பப் பரிசிறந்து
ஆதி போகிய பாய்பரி நன்மான்
நொச்சி வேலித் தித்தன் உறந்தைக்
கல்முதிர் புறங்காட் டன்ன
பல்முட் டின்றால் தோழிநங் களவே. —பரணர்.

(சொ - ள்.) ௨௧. தோழி-,

௧—௧௮. மாரி இரும்பிழி இவ் அழுங்கல் மூதூர் - மழையை ஒத்த மிக்க கள்ளினையும் ஆரவாரத்தினையுமுடைய இந்த முதிய ஊரானது, விழவு இன்று ஆயினும் - விழா இல்லையாயினும், துஞ்சாது ஆகும் - துயிலப் பெறாதாகும், மல்லல் ஆவணம் மறுகு உடன் மடியின் - வளஞ் சான்ற கடைத் தெருவும் ஏனைய தெருக்களும் ஒருங்கே உறங்கி ஒலியடங்கினும், வல்உரைக் கடுஞ்சொல் அன்னை துஞ்சாள் - வலிய ஒலியுடன் கூடிய கொடிய சொற்களையுடைய அன்னை உறங்காள், பிணிகோள் அருஞ்சிறை அன்னை துஞ்சின் - பிணித்தலைக் கொண்ட அரிய சிறையினைப் போன்ற அன்னை உறங்கினும், துஞ்சாக் கண்ணர் காவலர் கடுகுவர் - துயிலாத கண்களை யுடையராய் ஊர்காவலர் விரைந்து சுழல்வர், இலங்குவேல் இளையர் துஞ்சின் - விளங்கும் வேலினராய அக் காவலர் துஞ்சினும், வைஎயிற்று வலம் சுரித்தோகை ஞாளி மகிழும் - கூரிய பல்லினையும் வலமாகச் சுரிதலுடைய வாலினையுமுடைய நாய் குரைக்கும், அரவ வாய் ஞமலி மகிழாது மடியின் - ஒலிக்க வாயினையுடைய நாய் குரையாது உறங்கினும், பகல் உரு உறழ நிலவுக் கான்று - பகலின் ஒளியினை யொக்க நிலவினைத் தந்து, விசும்பின் அகல்வாய் மண்டிலம் நின்று விரியும் - வானின்கண் அகற்சி வாய்ந்த மதியம் விளங்கிப் பரவும், திங்கள் கல் சேர்பு கனையிருள் மடியின் - திங்கள் மேற்குமலையினை அடைந்து மிக்க இருள் தங்கின், இல் எலி வல்சி வல்வாய்க் கூகை - இல்லிலுள்ள எலியை இரையாகக் கொண்ட வலிய வாயினதான கூகையின் சேவல், கழுது வழங்கு யாமத்து அழிதகக் குழறும் - பேய்கள் திரியும் நள்ளிரவில் அழிவு உண்டாகக் குழறும், வளைக்கண் சேவல் வாளாது மடியின் - பொந்தில் வாழும் அச் சேவல் வறிதே உறங்கின், மனைச் செறி கோழி மாண் குரல் இயம்பும் - மனையிற் றங்கிய கோழிச்சேவல் மாண்புற்ற குரலை எழுப்பிக் கூவும், எல்லாம் மடிந்த காலை ஒருநாள் - ஒருநாள் இவையெல்லாம் ஒழிந்த காலத்தும், நில்லா நெஞ்சத்து அவர் வாரலர் - நிலைபெறாத நெஞ்சினையுடைய நம் தலைவர் வருதலிலர்;

௧௮—௨௧. அதனால்-, நம் களவு - நமது இந்தக் களவொழுக்கம், அரி பெய் புட்டில் ஆர்ப்பப் பரி சிறந்து - பரல் பெய்துள்ள கெச்சை ஒலிக்க வேகத்தால் சிறந்து, ஆதி போகிய - ஆதி யெனும் கதியிலே நேர்ச்சியுற்ற, பாய்பரி நன்மா - பாயும் செலவினையுடைய நல்ல குதிரை

களையுடைய, தித்தன்-தித்தன் என்பானது, நொச்சிவேலி-மதிலாகிய வேலியையுடைய, உறந்தை-உறையூரைச் சூழ்ந்துள்ள, கல்முதிர் புறங் காடு அன்ன-கற்கள் நிறைந்த காவற் புறங்காடு போன்ற, பல் முட்டின்று-பல தடைகளையுடையதாகின்றது.

(முடிபு) தோழி! மூதூர் துஞ்சாதாகும்; ஆவணம் மறுகு மடியின் அன்னை துஞ்சாள்; அன்னை துஞ்சில் காவலர் கடுகுவர்; இளையர் துஞ்சின் ஞாளி மகிழும்; ஞமலி மடியின் மண்டிலம் விரியும்; திங்கள் மடியின் கூகை குழறும்; சேவல் மடியின் கோழி குரலியம்பும்; எல்லாம் மடிந்த காலை அவர் வாரலர். அதனால் நம் களவு தித்தன் உறந்தைப் புறங்காட்டன்ன பல் முட்டின்று.

(வி - ரை.) கள்ளின் மிகுதியைக் குறித்தற்கு *"சேறுசெய் மாரியி னளிக்குநின், சாறுபடு திருவி னனைமகி ழானே" எனப் பிறரும் மாரியை உவமை கூறியுள்ளாராகலின், 'இரும்பிழி மாரி' எனப் பாடங் கொள்ளப்பட்டது. 'மகாஅர்' என்னும் பாடத்திற்கு, மாக்கள் என நலிந்து பொருள் கொள்ளல் வேண்டும். கள்ளுண்பாரை மிகவுடைமையின் ஆரவாரமுடைய ஊர் என்க. விழவின் றாயினும் என்றதனால் விழா நிகழ்தலில் துஞ்சாமையும் பெறப்பட்டது. ஆவணமும் மறுகு மென்க. ஈன்று புறந்தந்த அன்னையையும் 'வல்லுரைக் கடுஞ்சொல் அன்னை,'யென வெறுத்துரைக்குமாறு செய்யும் காதலின் பெற்றியை யாரே அறியவல்லர்! தோகை யென்றது ஈண்டு வாலினைக் குறித்தது. மகிழ்தல் - மகிழ்ந்து குரைத்தல். இருள் படியின் - இருள் தங்கின். யாமத்து மென்னும் உம்மை தொக்கது. வளை - பொந்து. புட்டில்- சதங்கை; கெச்சை: †"அரிபுனை புட்டிலும்," "நூபுரப் புட்டில்" என்னு மிடங்களில் நச்சினார்க்கினிய ருரைத்தமை காண்க. ஆதி-குதிரையின் நேரோட்டம்: ‡"ஆதிக்கொளீஇ" என்புழி, 'ஆதிமாதி யென்பவற்றுள் ஆதி - நெடுஞ்செலவு' என்றார் நச்சினார்க்கினியர்.

(மே - ள்.) §'குடையும் வாளும்' என்னுஞ் சூத்திரத்து, 'நொச்சி யாவது-காவல்...அது மதிலைக் காத்தலும் உள்ளத்தைக் காத்தலுமென இருவர்க்குமாயிற்று. இக் கருத்தானே, 'நொச்சிவேலித் தித்தன் உறந்தை' என்றார் சான்றோரும்' என்றும், ¶'இருவகைக் குறிபிழைப் பாகிய விடத்தும்' என்னுஞ் சூத்திரத்து, 'காணா வகையிற் பொழுது நனி யிகப்பினும்' என்னும் பகுதியில் இப்பாட்டினைக் காட்டி, 'என்றது தாய்துஞ்சாமை, ஊர் துஞ்சாமை, காவலர் கடுகுதல், நிலவு வெளிப் படுதல், நாய் துஞ்சாமை போல்வனவற்றால் தலைவன் குறியின்கண் தலைவி வரப்பெறாமல் நீட்டித்தலாம்' என்றும் உரைத்தனர், நச்.

இறையனார் களவிய லுரையாசிரியர் §"காமம் மிக்க" என்னுஞ் சூத்திரத்துக் 'காப்புச் சிறை மிக்க கையறு கிளவியும்' என்னும் பகுதி

* பதிற். சுஉ. † கலி. அ0: கூக. ‡ கலி. கூ. § தொல். புறத். கடு.
¶ தொல். கள. கசு. § இறையனார் அகப். கூ0.

யில் இப் பாட்டினை யெடுத்துக் காட்டி, இதனைச் சிறைகாவல் எல்லாம் வந்த செய்யுள் என்றனர். *'மூட்டு வயிற் கழறல்' என்னுஞ் சூத்திரத்து, மூட்டு வயிற் கழறல் என்னும் மெய்ப்பாட்டிற்கு 'நொச்சி வேலி...தோழி நக்களவே' என்ற அடிகளை எடுத்துக்காட்டி, இது தலைமகன் கேட்பக் கழறியுரைத்தது என்று உரைத்தனர், பேரா.

---

123. பாலை

[தலைமகன் இடைச்சுரத்துத் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.]

உண்ணா மையின் †உயங்கிய மருங்கின்
ஆடாப் படிவத் தான்றோர் போல
வரைசெறி சிறுநெறி நிரைபுடன் செல்லுங்
கான யானை கவினழி குன்றம்
இறந்துபொருள் தருதலும் ஆற்றாய், சிறந்த
சில்லைங் கூந்தல் நல்லகம் பொருந்தி
ஒழியின் வறுமை யஞ்சுதி அழிதக
‡உடைமதி வாழிய நெஞ்சே நிலவென
நெய்கனி நெடுவேல் எஃகிலை யிமைக்கும்
மழைமருள் பஃறோல் மாவண் சோழர்
கழைமாய் காவிரிக் கடன்மண்டு பெருந்துறை
இறவொடு வந்து கோதையொடு பெயரும்
பெருங்கட லோதம் போல
§ஒன்றில் கொள்ளாய் சென்றுதரு பொருட்கே.

—காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணனார்.

(சொ - ள்.) ௮. நெஞ்சே வாழிய-,

௧—௫. உண்ணாமையின் உயங்கிய மருங்கின்-உண்ணாமையாலே வாடிய வயிற்றினையும், ஆடாப் படிவத்து ஆன்றோர் போல - நீராடாத விரதத்தினையுமுடைய தவத்தினர்போல, வரை செறி சிறுநெறி நிரைபு உடன் செல்லும் - மலைகள் செறிந்த சிறிய நெறிகளிலே நிரைத்து சேரச் செல்லும், கான யானை கவின் அழி குன்றம்-காட்டு யானைகள் அழகு அழியும் இடமாய குன்றத்தினை, இறந்து பொருள் தருதலும் ஆற்றாய்-கடந்து பொருள் ஈட்டி வருதலும் செய்திலை;

௫—௭. சிறந்த சில் ஐங்கூந்தல் நல் அகம் பொருந்தி-சிறப்புற்ற சிலவாகிய ஐம் பகுதியையுடைய கூந்தலையுடைய நம் தலைவியின் நல்ல

---

* தொல். மெய்ப். ௨௧. (பாடம்) † உறங்கிய ‡ உடையை.
§ ஒன்றிற் கொல்லாய்.

ஆகத்திற் பொருந்தி. ஒழியின்-மனையில் தங்கிவிடினும், வறுமை அஞ்சுதி-வறுமையை அஞ்சாநின்றாய்;

அ—கச. சென்று தரு பொருட்கு-சுர நெறிகளிற் சென்று ஈட்டிவரும் பொருட்காக, நிலவு என-நிலவுபோல், எஃகு இலை இமைக்கும்-கூரிய இலை விளங்கும், நெய்கனி நெடுவேல்-நெய்மிக்க நெடிய வேலினையும், மழை மருள் பல்தோல்-கரிய மேகம்போன்ற நிறமுடைய பல கிடுகுகளையுமுடைய, மாவண் சோழர் - பெரிய வண்மை வாய்ந்த சோழருடைய, கழைமாய் காவிரிக் கடல் மண்டு பெருந்துறை - ஓடக்கோலும் மறையும் நீர்த்தன்மையுடைய காவிரி கடலில் மண்டும் பெருந்துறையின் கண்ணே, இறவொடு வந்து கோதையொடு பெயரும் பெருங்கடல் ஓதம்போல - இரு மீனொடு வந்து மாலையோடு மீளும் பெரிய கடல் நீர்போல, ஒன்றில் கொள்ளாய்-போதல் ஒழிதல் எனும் இரண்டினொன்றில் உறுதி கொண்டிலை;

எ—அ. அழிதகவு உடைமதி-நீ வருந்துதலை உடையை யாவாய்.

(முடிபு) நெஞ்சே! குன்றம் இறந்து பொருள்தருதலும் ஆற்றாய்; சில்லைங் கூந்தல் நல்லகம் பொருந்தி ஒழியின் வறுமை யஞ்சுதி; சோழர் காவிரிக் கடன்மண்டு பெருந்துறை ஓதம் போலச் சென்று தருபொருட்கு ஒன்றில் கொள்ளாய்; அழிதக உடைமதி.

(வி - ரை.) "உண்ணாமையின் உயங்கிய மருங்கின், ஆடாய் படிவத் தான்றோர்போல...கானயானை கவினழி" என்னும் இவ்வுவமை, *"உண்ணா நோன்பொ டுய்வல் யானையின், மண்ணா மேனியன் வருவோன்" என, மணிமேகலையில் எதிர்நிலையாக வந்திருத்தல் காண்க. அகம்-ஆகம். உடைமதி-உடைமை யாகுதி. எஃகிலை இமைக்கும் வேல் என மாறுக. கழை-மூங்கில்: ஓடக் கோல். மாய்-மறைக்குமெனலுமாம். கோதை-நீரொடுவார் களைந்திட்டவை. ஓதம்-அலையுமாம்.

நெஞ்சு செல்லுதல் ஒழிதல் என்னும் இரண்டனுள் ஒன்றைத் துணியாது பொருளை யுள்ளிச் செலவயர்தலும் தலைவியது ஆகத்தை யுள்ளிச் செலவொழிதலுமாக உழலுதற்கு ஓதம் இறவொடு வருதலும் பின்பு அதனை விடுத்துக் கோதையொடு பெயர்தலும் உவமமாயின.

(மே - ள்.) †'கரணத்தி னமைந்து முடிந்த காலை' என்னுஞ் சூத்திரத்து, 'வேற்றுநாட் டகல்வயின் விழுமத் தானும்' என்னும் பகுதியில், அஃதாவது,பிரிவு ஒருப்பட்ட பின்பு போவேமோ தவிர்வேமோ எனச் சொல்லும் மன நிகழ்ச்சி என்றுரைத்து, அதற்கு இச் செய்யுளை உதாரணமாகக் காட்டினர், இளம்பூரணர்.

அச் சூத்திரத்து அப் பகுதியில் இச் செய்யுளைக் காட்டி, இது போவேமோ தவிர்வேமோ என்றது என்றும், ‡'நோயும் இன்பமும்' என்றுஞ் சூத்திரத்து, உண்ணாமையின் என்னும் அகப்பாட்டினுள்,

* மணி. ந: கo-க † தொல். கற். இ. ‡ தொல். பொருளி, உ.

'இறவொடு வந்து கோதையொடு பெயரும், பெருங்கட லோதம்போல, ஒன்றிற்கொள்வாய் சென்று தருபொருட்கே' என்றவழி 'அழிதகவுடை மதி வாழிய நெஞ்சே' என்றதனன், நிலையின்றாகுதியென நெஞ்சினை உறப்புடையது போலக் கழறி நன்குரைத்தவாறும், ஓதத்தையும் நெஞ்சையும் உயர்திணையாக்கி உவம வாயிற் படுத்தவாறும் காண்க என்றும் உரைத்தனர், நச்.

---

124. முல்லை

[தலைமகன் தேர்ப்பாகற் குரைத்தது.]

நன்கலங் களிற்றொடு நண்ணார் ஏந்தி
வந்துதிறை கொடுத்து வணங்கினர், வழிமொழி
சென்றீ கென்ப வாயின் வேந்தனும்
நிலம் *வருத் துறூஉ ஈண்டிய தானையொடு
இன்றே புகுதல் வாய்வது நன்றே
மாட †மாணகர்ப் பாடமை சேக்கைத்
துனிதீர் கொள்கைநங் காதலி இனிதுறப்
பாசறை வருத்தம் வீட நீயும்
மின்னுநிமிர்ந் தன்ன பொன்னியற் புனைபடைக்
கொய்சுவல் புரவிக் கைகவர் வயங்குபரி
வண்பெயற்கு அவிழ்ந்த பைங்கொடி முல்லை
வீகமழ் நெடுவழி ஊதுவண் டிரியக்
காலை யெய்தக் கடவு மதி மாலை
அந்திக் கோவலர் அம்பணை யிமிழிசை
அரமிய வியலகத் தியம்பும்
நிரைநிலை ஞாயில் நெடுமதில் ஊரே.

—மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்.

(சொ - ள்.) ௧—௫. நண்ணார் நன்கலம் ஏந்தி வந்து-பகைவர் நல்ல அணிகலன்களைக் கொண்டு வந்து, களிற்றொடு திறை கொடுத்து வணங்கினர்-அவற்றைக் களிற்றொடு திறையாகக் கொடுத்து வணங்கி, வழி மொழிந்து சென்றீக என்ப ஆயின்-பணிமொழி கூறிச்சென் றருள்க என்பாராயின், வேந்தனும் நிலம் வருத்துறூஉ ஈண்டிய தானையொடு-நம் அரசனும் பாரமிகுதியாற் புவியினை வருத்துதல் செய்து திரண்ட சேனையுடன், இன்றே புகுதல் நன்றே வாய்வது-இன்றே தன் ஊர்க்கேகல் பெரிதும் உண்மையாகும்;

(பாடம்) * வருத்துறு. † மாநகர்.

௯—அ. மாட மாண் நகர்ப் பாடு அமை சேக்கை - மாடங்களால் மாண்புற்ற நமது மாளிகையில் பெருமை அமைந்த படுக்கையின்கண்ணுள்ள, துனி தீர் கொள்கை நம் காதலி இனிது உற - வெறுப்பற்ற கொள்கையினையுடைய நம் தலைவி இனிமை உறவும், பாசறை வருத்தம் வீட - நமக்குப் பாசறைக்கண் மேவிய வருத்தங்கள் ஒழியவும்;

அ—௧௦. நீயும்-(பாகனே) நீயும், மின்னுமிழ்ந்தன்ன-மின்னல் பரந்து விளங்கினாலொத்த ஒளியினையுடைய், பொன் இயல் புனைபடை-பொன்னாலியன்ற அலங்கரிக்கப்பட்ட கலனையையும், கொய்சுவல் - கொய்யப்பெற்ற பிடரி மயிரினையும், நைகவர் வயங்குபரி - செலுத்தும் கை விரும்பும் விளக்கம் அமைந்த செலவினையும் உடைய, புரவி - குதிரையை;

௧௧—௩. காலை - செலுத்தும் காலத்தே, வண்பெயற்கு அவிழ்ந்த பைங் கொடி முல்லை - வளம் மிக்க மழையால் மலர்ந்த பசிய முல்லைக் கொடியின், வீ கமழ் நெடு வழி ஊதுவண்டு இரிய - மலர் மணக்கும் நெடிய வழியில் ஊதும் வண்டுகள் இரிந்தோட;

௧௩—௬. அந்திக் கோவலர் அம் பணை இமிழ் இசை - அந்திக் காலத்தே இடையரது அழகிய குழலின் ஒலிக்கும் இசை, அரமியவியல் அகத்து இயம்பும் - நிலாமுற்றமாய அகன்றவிடத்தே வந்து ஒலிக்கும், நிரைநிலை ஞாயில் நெடு மதில் ஊர் - வரிசையாக நிற்கும் சூட்டுக்களையுடைய நீண்ட மதில் சூழ்ந்த ஊரின்கண், மாலை எய்தக் கடவுமதி - மாலைப் போழ்தில் நாம் எய்திடச் செலுத்துவாயாக.

(முடிபு) நண்ணார் திறைகொடுத்துச் சென்றீக என்பராயின், வேந்தனும் தானையொடு இன்றே புகுவது வாய்வது; ஆதலின், பாகனே நீயும் காதலி இனிது உறவும், வருத்தம் வீடவும், புரவியை, வண்டு இரிய, நெடுமதில் ஊர் மாலை எய்தக் கடவுமதி.

(வி - ரை.) சென்றீக - செல்லுக. * 'என் போர்யானை வந்தீக' †'வினை கலந்து வென்றீக வேந்தன்' என்னுமிடங்களிற்போல வியங்கோள். சென்றீகென்ப - அகரம் தொக்கது. வருத்தரூஅ - தான் கைப்பற்றிய நாட்டிலுள்ளாரை வருத்தாமல் என்றுமாம். வருத்துரு என்பது பாடமாயின், நிலத்தை வருத்துக்கொண்டு என்க. சேக்கைத் துனிதீர் கொள்கை நம் காதலி என்றதனால், தலைவனைப் பிரிந்த வருத்தத்தை, அவன் கூறிய சொற் பிழையாத கற்பினால் மாற்றியிருப்பவள் என்பது பெறப்பட்டது. 'மின்னு மிழ்ந்தன்ன வயங்குபரி' என இயைத்து உரைத்தலுமாம். பெயற்கு அவிழ்ந்த, வேற்றுமை மயக்கம். காலை - பொழுது; ‡'கழகத்துக் காலை புகின்' என்புழிப்போல. அந்தி காவலர் அம்பணை என்னும் பாடத்திற்கு, அந்திப் பொழுதில் காத்தல் செய்யும் காவலரது அழகிய முரசு எனப் பொருள் கொள்க. அரமியம்: வடசொற் சிதைவு. ஞாயில் - சூட்டு; ஏவறை.

---

* கலி. அ௬. † குறள். ௧௨௬அ. ‡ குறள். ௯௩எ.

(மே-ள்.) *'மேலோர் முறைமை' என்னுஞ் சூத்திரத்து 'நன்கலங் களிற்றொடு நண்ணா ரேந்தி, வந்துதிறை கொடுத்து வணங்கினர் வழிமொழிந்து' என்புழி, நன்கலந் திறைகொடுத்தோ ரென்றலிற் பகைவயிற் பிரிவே பொருள் வருவாயாயிற்று என்றனர், நச்.

---

125. பாலை

[†தலைமகன் வினைமுற்றி மீண்டமை யுணர்ந்த தோழி தலைமகட்குச் சொல்லியது.]

அரம்போழ் அவ்வளை தோள்நிலை நெகிழ
நிரம்பா வாழ்க்கை நேர்தல் வேண்டி,
இரங்காழ் அன்ன அரும்புமுதிர் ஈங்கை
ஆலி அன்ன வால்வீ தாஅய்
வைவால் ஓதி மையணல் ஏய்ப்பத்
தாதுறு குவளைப் போதுபிணி அவிழப்,
படாஅப் பைங்கண் பாவடிக் கயவாய்க்
கடாஅம் மாறிய யானை போலப்
பெய்துவறி தாகிய பொங்குசெலற் கொண்மூ
மைதோய் விசும்பின் மாதிரத்து உழிதரப்,
பனியடூஉ நின்ற பானாள் கங்குல்
தமியோர் மதுகை தூக்காய் தண்ணென
முனிய அலைத்தி, முரணில் காலைக்
கைதொழு மரபில் கடவுள் சான்ற
செய்வினை மருங்கில் சென்றோர் வல்வரின்,
விரியுளைப் பொலிந்த பரியுடை நன்மான்
வெருவரு தானையொடு வேண்டுபுலத் திறுத்த
பெருவளக் கரிகால் முன்னிலைச் செல்லார்
சூடா வாகைப் பறந்தலை ஆடுபெற
ஒன்பது குடையும் நன்பகல் ஒழித்த
பீடில் மன்னர்போல
ஓடுவை மன்னால் வாடைநீ யெமக்கே. —பரணர்.

(சொ-ள்.) ௩—௧௧. இரங் காழ் அன்ன அரும்பு முதிர் ஈங்கை ஆலி அன்ன வால் வீ தாஅய் - இரவம் வித்தினை ஒக்கும்

---

* தொல். அகத். ௨௧. (பாடம்) † தலைமகன் வினைமுற்றி மீண்டமை தோழி யுணரத் தலைமகள் சொல்லியது.

அரும்பு முதிர்ந்த ஈங்கையினது ஆலங்கட்டி போலும் வெள்ளிய பூக்கள் தாவ, வை வால் ஓதி மை அணல் எய்ப்ப தாது உறு குவளைப் போது பிணி அவிழ - கூரிய வாலினையுடைய ஓந்தியின் கரிய தாடியை ஒத்திடத் தாதுமிக்க குவளையின்போது பிணிப்பு நெகிழவும், படாஅப் பைங்கண் பா அடிக் கய வாய் கடாஅம் மாறிய யானை போல - உறங்காத பசிய கண்ணினையும் பரந்த அடியினையும் பெரிய வாயினையும் உடைய மதம் ஒய்ந்த யானையைப் போல, பெய்து வறிது ஆகிய பொங்கு செலல் கொண்மூ - நீரினைப் பெய்து வறுமை எய்திய பொங்கிய செலவினையுடைய மேகம், மை தோய் விசும்பின் மாதிரத்து உழிதர - கருமை பொருந்திய வானின் திசைகளில் திரியவும், பனி அடூஉ நின்ற பால் நாள் கங்குல் - பனி நலிகின்ற நடு இரவின் இருளில், தமியோர் மதுகை தூக்காய் - தனிமை எய்தியவர் பொறுக்கும் வலியளவை ஆராயாது, முரண் இல் காலை - மாறுபாடு இல்லாத காலத்தும், தண்ணென முனிய அலைத்தி - வெறுக்கும்படி தண்ணென்று வீசி அலைக்கின்றாய்;

க—உ. நிரம்பா வாழ்க்கை நேர்தல் வேண்டி - முற்றுப்பெறாத இல்வாழ்க்கையை முற்றுவிக்க வேண்டி, அரம் போழ் அவ்வளை தோள் நிலை நெகிழ - அரத்தாற் பிளக்கப்பட்ட அழகிய வளைகள் எம் தோளில் நிற்றலினின்று நெகிழ்ந்துவீழ;

கச—டு. கைதொழு மரபில் கடவுள் சான்ற - கையாற்றொழும் மரபினையுடைய கடவுட்டன்மை நிரம்பிய, செய்வினை மருங்கின் சென்றோர் வல் வரின் - ஓதல்வினையிடத்துச் சென்ற தலைவர் விரைந்து வருவரேல்;

கசு—உஉ. வாடை - வாடையே, விரி உளை பொலிந்த பரி உடை நல்மான் - விரிந்த தலையாட்டத்தாற் சிறந்த விரைந்த செலவினையுடைய நல்ல குதிரைப் படையுடன் கூடிய, வெருவரு தானையொடு வேண்டு புலத்து இறுத்த - பகைவர்க்கு அச்சந் தரும் சேனையுடன் தான் விரும்பும் புலத்தில் தங்கிய, பெருவளக் கரிகால் முன்னிலைச் செல்லார் - பெரிய வளத்தையுடைய கரிகால் வளவன் முன்னிற்றலை ஆற்றாராய், சூடா வாகைப் பறந்தலை - வாகைப் பறந்தலை எனும் போர்க்களத்தின்கண், ஆடுபெற - அவன் வெற்றி பெற, ஒன்பது குடையும் நன் பகல் ஒழித்த - தமது ஒன்பது குடைகளையும் நன்றாகிய பகலிற் போர்கட்டுச் சென்ற, பீடு இல் மன்னர் போல - பெருமையில்லாத மன்னர் ஒன்பதின்மரையும் போல, நீ எமக்கு ஓடுவை மன் - நீ எமக்குத் தோற்று மிகவும் விரைந்து ஓடுவை.

(முடிபு) வாடை! நீ குவளைப்போது அவிழ, மேகம் உழிதர, பானாட் கங்குல் முனிய அலைத்தி, செய்வினை மருங்கின் சென்றோர் வரின் கரிகால் வளவன் வாகைப் பறந்தலை ஆடுபெற, ஒன்பது குடையும் நன்பகல் ஒழித்த பீடில் மன்னர்போல, நீ எமக்குத் தோற்று விரைந்து ஓடுவை.

(வி - ரை.) நிரப்பா வாழ்க்கையாவது; துறவு பூண்டு மெய் புணர்ந்து வீடுபெறுதல் இல்லறத்தின் பயனாகலின், அவை நிகழாவழி நிரம்புதல் இல்லாத வாழ்க்கை என்பது நச்சினார்க்கினியர் கருத்து. இர-ஒரு மரம்; இஃது, இரா, இரவு, இரவம் எனவும் வழங்கும். தாஅய். தாவ எனத் திரிக்க. ஒதி - இடைக்குறை. பொங்கு செலல்: பொங்குதல் - விளங்கிப் பரத்தல்; உயர்தலுமாம். தமியோர் - தன்மையிற் படர்க்கை. கடவுட் சான்ற செய்வினை என்றமையால், வினை ஓதலாயிற்று. சூடாவாகை - வாகைப் பறந்தலைக்கு வெளிப்படை.

(மே - ள்.) *'மேவிய சிறப்பின்' என்னுஞ் சூத்திரத்து, இச்செய்யுளைக் கூறி, இது தேவர் காரணமாகப் பிரியும் பிரிவு என்றனர், இளம்.

†'பனியெதிர் பருவமும்' என்னுஞ் சூத்திரத்து, 'உரித்து என்றதனாற் கூதிர் பெற்ற யாமமும் முன்பனி பெற்று வரும்' என்று கூறி, 'பனிபடுஉ நின்ற பானாட் கங்குல்...மூரணில் காலை' என்பதைக்காட்டி, முன்பனியாமம் குறிஞ்சிக்கண் வந்தது என்றும், ‡'அவற்றுள் ஓதலுந் தூதும்' என்னுஞ் சூத்திரத்து, இச் செய்யுளைக் காட்டி, இதனுட் பலருங் கைதொழும் மரபினையுடைய கடவுட்டன்மை யமைந்த செய்வினையெனவே, ஓதற் பிரிவென்பது பெற்றாம் என்றும், மேலும், §'சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே' என்பதனாற் கிழவனுங் கிழத்தியும் இல்லறத்திற் சிறந்தது பயிற்றாக்கால் இறந்ததனாற் பயனின்றாதலின், இல்லறம் நிரப்பா தென்றற்கு, 'நிரம்பா வாழ்க்கை' என்றார் என்றும், ¶'வேண்டிய கல்வி' என்னுஞ் சூத்திரத்து, ஓதற் பிரிவிற்குக் கால வரையறையின்றென்று கூறி, 'அரம்போ ழவ்வளை' என்னும் பாட்டினுள் 'பானாட் கங்குல்...முனிய வலைத்தி'...'கடவுட் சான்ற: செய்வினை மருங்கிற் சென்றோர் வல்வரின், ஓடுவை' என்றது, இராப்பொழுது அகலாது நீட்டித்ததற்கு ஆற்றாளாய்க் கூறினாள் என்று உணர்க என்றும் கூறுவர், நச்.

---

126. மருதம்

[(க) உளர்ப்புவயின் வாரா ஊடற்கண் தலைமகன் தன்னெஞ்சிற்குச் சொல்லியது. (உ) அல்ல குறிப்பட் டழிந்ததுமாம். (௩) தோழியைப் பின்னின்ற தலைமகன் தன் னெஞ்சிற்குச் சொல்லியதுமாம்.]

நினவாய் செத்து நீபல உள்ளிப்
பெரும்புன் பைதலை வருந்தல் அன்றியும்
மலைமிசைத் தொடுத்த மலிந்து செலல் நீத்தம்
தலைநாள் மாமலர் தண்துறைத் தயங்கக்

---

*தொல். அகத். ௨௮. †தொல். அகத். ௭. ‡தொல். அகத். ௨௧.
§தொல். கற். ௫௧. ¶தொல். கற். ௪௭.

கட்ற்கரை [?] மெலிக்குங் காவிரிப் பேரியாற்று.
*அறல்வார் நெடுங்கயத்து அருநிலை கலங்க
மாலிருள் நடுநாள் போகித் தன்னையர்
காலைத் தந்த கணைக்கோட்டு வாளைக்கு
அவ்வாங்கு உந்தி அஞ்சொல் பாண்மகள்
நெடுங்கொடி நுடங்கு நறவுமலி மறுகில்
பழஞ்செந் நெல்லின் முகவை கொள்ளாள்
கழங்குறழ் முத்தமொடு நன்கலம் பெறூஉம்
பயங்கெழு வைப்பிற் பல்வேல் எவ்வி
நயம்புரி நன்மொழி அடக்கவும் அடங்கான்
பொன்னிணர் நறுமலர்ப் புன்னை வெஃகித்
திதியனொடு பொருத அன்னி போல
விளிகுவை கொல்லோ நீயே கிளியெனச்
சிறிய மிழற்றுஞ் செவ்வாய்ப் பெரிய
கயலென அமர்த்த உண்கண் புயலெனப்
புறந்தாழ்பு இருளிய பிறங்குகுரல் ஐம்பால்
மின்னேர் மருங்குல் குறுமகள்
பின்னிலை விடாஅ மடங்கெழு நெஞ்சே. —நக்கீரர்.

(சொ - ள்.) கஎ—உஉ-கிளி எனச் சிறிய மிழற்றும் செவ்வாய்-கிளிபோல மென் சொற்களைக் கூறும் சிவந்த வாயினையும், பெரிய கயல் என அமர்த்த உண்கண் - பெரிய கயல்மீன் என்னுமாறு ஒன்றையொன்று பொருத மையுண்ட கண்களையும், புயல் என புறம் தாழ்பு இருளிய பிறங்கு குரல் ஐம்பால் - மேகம் என்னும்படி முதுகில்தாழ்ந்து இருண்ட விளங்கும் கொத்தாய ஐந்து பகுப்பை யுடைய கூந்தலையும், மின் நேர் மருங்குல்-மின்னலை யொத்த இடையினையும் உடைய, குறுமகள் பின் நிலை விடாஅ மடம்கெழு நெஞ்சே - இளைய தலைவியின் பின்னே தாழ்ந்து நிற்றலை விடாத அறியாமை மிக்க நெஞ்சே!

க—உ. நீ நினை வாய் செத்து - நீ நின் எண்ணங்களை உண்மையானவை எனக் கருதி, பல உள்ளி-பலவும் எண்ணி, பெரும் புன்பைதலை வருந்தல் அன்றியும் - மிகப் பெரிய துன்பத்தினையுடையையாய் வருந்துதல் அன்றியும்;

ங—கக [?]. மலைமிசைத் தொடுத்த மலிர்பு செலல் நீத்தம் - மலை உச்சியினின்று தொடர்புற்று வீழ்ந்த மிக்குச் செல்லுதலையுடைய வெள்ளத்தால், தலைநாள் மாமலர் தண் துறை தயங்க - முதல் நாட்

(பாடம்) * அரல் வாழ்,

ஆகச் சிறந்த மலர் நண்ணிய துறைகளில் விளங்க, கடற்கரை மெலிக்கும் காவிரிப் பேர் யாற்று-கடற்கரையினைக் கரைத்திடும் காவிரியாய பெரிய ஆற்றினது, அறல்வார் நெடுங்கயத்து அருநிலை கலங்க-கருமணல் ஒழுகும் நீண்ட மடுவின் நிலைக்கொள்ளாத நீர் கலங்குமாறு, மால் இருள் நடுநாள் போகி-கரிய இருளினையுடைய நடு இரவில் சென்று, தன் ஐயர் காலை தந்த கைவைக் கோட்டு வாளைக்கு-தன் தமையன்மார் விடியலிற்கொணர்ந்த திரண்ட கோடுகளையுடைய வாளைமீனுக்கு விலையாக, அவ் வாங்கு உந்தி அம்சொல் பாண்மகள்-அழகிய வளைந்த உந்தியினையும் அழகிய சொற்களையுமுடைய பாண்மகள், நெடுங்கொடி நுடங்கும் நறவு மலி மறுகில்-நீண்ட கொடிகள் அசையும் கள் மிக்க தெருவில், பழஞ் செந்நெல்லின் முகவை கொள்ளாள்-பழைய செந்நெல்லை முகந்து தருதலைக் கொள்ளாளாகி, கழங்கு உறழ் முத்தமொடு நன்கலன் பெறூஉம்-கழங்கினை ஒத்த பெரிய முத்துக்களுடன் சிறந்த அணிகளையும் பெறும், பயம்கெழு வைப்பில்-வளம் மிக்க ஊர்களையுடைய, பல்வேல் எவ்வி-பல வேற்படைகளையுடைய எவ்வியென்பான்;

௧௪—எ. நயம்புரி நன்மொழி அடக்கவும் அடங்கான்-நீதியை உட்கொண்ட சிறந்த மொழிகளைக் கூறித் தணிக்கவும் தணியானாகி, பொன் இணர் நறுமலர் புன்னை வெஃகி-பொன் போலும் கொத்துக்களாகிய நறிய மலர்களையுடைய (காவன் மரமாய) புன்னையைக் குறைக்க விரும்பி, திதியனொடு, பொருத அன்னிபோல-திதியன் என்பானொடு போரிட்டிறந்த அன்னி என்பானைப்போல, நீ விளிகுவை கொல்லோ-நீ இறந்து படுவை போலும்.

(முடிபு) குறுமகள் பின்னிலை விடா நெஞ்சே! நீ பெரும் புன்பைதலையாய் வருந்தலன்றியும், புன்னை வெஃகித் திதியனோடு பொருத அன்னிபோல விளிகுவை கொல்லோ!

தன் ஐயர் தந்த வாளைக்குப் பாண்மகள் நெல்லின் முகவைகொள்ளாள் முத்தமொடு நன்கலன் பெறூஉம் வைப்பின் எவ்வி என்க.

(வி-ரை.) நின-நின்னுடையன; குறிப்பு வினைப்பெயர். புன்மை-துன்பம். புன் பைதலை-ஒருபொருட்பன்மொழி. நயங்க-அசைய என்றுமாம். வாளை துஞ்சுங் காலத்துப் பற்றுதற்பொருட்டு மாலிருள் நடுநாட் போயினர் என்க. *'கடல் மீன் துஞ்சும் நள்ளென் யாமத்து' என வருதலுங் காண்க. நெடுங்கொடி-கள் விற்குமிடத்தில் எடுத்தவை. முகவை-முகந்து அளக்கப்பட்டவை. நன்மொழி கூறி என ஒரு சொல் வருவிக்க. விளிகுவை கொல்லோ-விளிதலுஞ் செய்வையோ என உம்மை விரித்துரைக்க. மின் ஏர் எனப் பிரித்து மின் போலும் அழகிய என்றுரைத்தலுமாம். †'உணர்ப்புவரை யிறப்பினும் செய்தரி பிழைப்பினும், புலத்தலும் ஊடலும் கிழவோற்குரிய'

* அகம். ௧௭௨. † தொல். கற். ௧௫.

என்னுஞ் சூத்திரத்தாற் கற்பின்கண் தலைவற்கும் ஊடல் நிகழும் எனக்கொள்க. பின் இரண்டு துறைகளுமாயின், மருதத்துக் களவு நிகழ்ந்ததென்று கொள்க. இது திணை மயக்கம்.

(மே - ள்.) *'மெய்தொட்டுப் பயிறல்' என்னுஞ் சூத்திரத்து, 'மற்றைய வழியும்' என்னும் பகுதிக்கு இப்பாட்டினை எடுத்துக் காட்டி, இது செஞ்சினை இரவு விலக்கியது என்றனர். நச்.

---

127. பாலை

[பிரிவிடை ஆற்றாளாகிய தலைமகளைத் தோழி வற்புறுத்தியது]

இலங்குவளை நெகிழச் சாஅய் அல்கலும்
கலங்கஞர் உழந்து நாம்இவண் ஒழிய
வலம்படு முரசில் சேர லாதன்
முந்நீர் ஓட்டிக் கடம்பறுத் திமயத்து
முன்னோர் மருள வணங்குவிற் பொறித்து
நன்னகர் மாந்தை முற்றத்து ஒன்னார்
பணிதிறை தந்த பாடுசால் நன்கலம்
பொன்செய் பாவை வயிரமொடு ஆம்பல்
ஒன்றுவாய் நிறையக் குஃவைஇ அன்றவண்
நிலந்தினத் துறந்த நிதியத்து அன்ன
ஒருநாள் ஒருபகல் பெறினும் வழிநாள்
தங்கலர் வாழி தோழி செங்கோல்
கருங்கால் மராஅத்து வாஅல் மெல்இணர்
சுரிந்துவணர் பித்தை பொலியச் சூடிக்
கல்லா மழவர் வில்லிடந் தழீஇ
வருநர்ப் பார்க்கும் வெருவரு கவலை
மொழிபெயர் தேஎத்த ராயினும்
பழிதீர் காதலர் சென்ற நாட்டே. —மாமூலனார்.

(சொ - ள்.) கஉ. தோழி வாழி-,

க—உ. இலங்கு வளை நெகிழச் சாஅய்-விளங்கும் கைவளை கழல மெலிந்து, அல்கலும் கலங்கு அஞர் உழந்து நாம் இவண் ஒழிய-நாளும் கலங்கும் துன்பத்தால் வருந்தி நாம் இங்கே தனித்திருக்க;

கஉ—எ. செங்கோல் கருங்கால் மராஅத்து வால்மெல் இணர்-சிவந்த கொம்புகளையும் கரிய அடியினையுமுடைய வெண்கடம்பின்

* தொல். களவு. கக.

வெள்ளிய மெல்லிய பூங்கொத்தினை, சுரிந்து வணர் பித்தை பொலியச் சூடி - சுரிந்து வளைந்த தலைமயிர் அழகுபெறச் சூடி, கல்லா மழவர் வில் இடம் தழீஇ-அறிவில்லாத மழவர் வில்லினை இடப்பக்கத்தே தழுவிக் கொண்டு, வருநர்ப் பார்க்கும் வெருவரு கவலை - வழி வருவோரைப் பார்த்திருக்கும் அச்சம்வரும் கவர்த்த வழிகளையுடைய, மொழிபெயர் தேஎத்தர் ஆயினும்-மொழி வேறுபட்ட தேயத்தில் உள்ளார் ஆயினும்;

கூ—கக. வலம்படு முரசின் சேரலாதன் - வெற்றி தங்கிய முரசினையுடைய சேரலாதன் என்னும் அரசன், முந்நீர் ஓட்டிக் கடம்பு அறுத்து - கடல் காப்பணுள்ள பகைவர்களைப் புறங்கிடச் செய்து அவர் காவன் மரமாகிய கடம்பினை வெட்டி, இமயத்து - இமையமலையில், முன்னோர் மருள வணங்குவில் பொறித்து - தமது முன்னோரை யொப்ப வளைந்த வில்இலச்சினையைப் பொறித்து, மாந்தை நல்கர் முற்றத்து - மாந்தை எனும் ஊரிலுள்ள தனது நல்ல மனையின் முற்றத்து, ஒன்னார் பணி திறை தந்த - பகைவர் பணிந்து திறையாகத் தந்த, பாடு சால் நன்கலம்-பெருமை சான்ற நல்ல அணிகலங்களுடன் பொன் செய் பாவை வயிரமொடு - பொன்னானியன்ற பாவையினையும் வயிரங்களையும், ஆம்பல் ஒன்று வாய் நிறையக் குவைஇ-ஆம்பல் எனும் எண்ணளவு இடம் நிறையக் குவித்து, அன்று அவண் நிலம் தினத் துறந்த நிதியத்தன்ன - அக்காலத்தே அவ்விடத்தே நிலம் தின்னும்படி விட்டொழித்த நிதியம் போன்ற பொருளை, ஒரு நாள் ஒரு பகல் பெறினும்-ஒரு நாளில் ஒரு பகற் பொழுதிற் பெற்றாலும்;

கஅ. பழிதீர் காதலர் - குற்றமற்ற நம் காதலர், சென்ற நாட்டு — தாம் சென்றுள்ள அந்நாட்டில்;

கக—உ. வழி நாள் தங்கலர் - பிற்றை ஞான்று தங்காது வருவர்.

(முடிபு) தோழி! வாழி! நாம் இவண் ஒழிய, நம் தலைவர், மொழிபெயர் தேஎத்தர் ஆயினும் சேரலாதன் குவைஇ நிலம் தினத் துறந்த நிதியத்தன்ன பொருளினை ஒருநாள் ஒரு பகல் பெறினும் அவர் தாம் சென்ற நாட்டு, வழிநாள் தங்கலராகி மீள்வர்.

(வி - ரை.) முந்நீரோட்டி என்பதற்குக் கடலின்கண் நாவாயைச் செலுத்தியென்று உரைத்தலுமாம். கடம்பறுத்தியற்றிய வலம்படு முரசு எனக் கூட்டி யுரைத்தலுமாம்; என்னை? *'சேரலாதன், மாக்கடலோட்டிக் கடம்பறுத் தியற்றிய, பண்ணமை முரசு' என வருதலின். பணிதிறை - பணிதலாற் றிறையாகத் தந்த என்க. †'ஐயம் பல்லென வரூஉ மிறுதி, அல்பெய ரெண்ணினு மாயியல் நிலையும்' என்னுஞ் சூத்திரத்தால், ஆம்பல் - ஒரு பேரெண்ணும் என்க. நிலம் தின என்றது ‡'உண்டற் குரிய வல்லாப் பொருளை, யுண்டன போலக் கூறலும் மரபே' என்னுஞ் சூத்திரத்து உம்மையாற் கொள்ளப்படும். நிதியத்தன்ன பொருளென விரித்துரைக்க.

* அகம், கஉஎ. † தொல், புள்ளி. கூஅ. ‡ தொல். பொருளி. கசு.

128. குறிஞ்சி

[இரவுக்குறி வந்த தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகள் தோழிக்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது.]

மன்றுபா டவிந்து மனைமடிந் தன்றே
கொன்றோர் அன்ன கொடுமையோ டின்றே
யாமங் *கொளவரின் கனைஇக் காமங்
கடலினும் உரைஇக் கரைபொழி யும்மே
எவன்கொல் வாழி தோழி மயங்கி
இன்ன மாகவும் நன்னர் நெஞ்சம்
என்னொடும் நின்னொடுஞ் சூழாது கைம்மிக்கு
இறும்புபட் டிருளிய இட்டருஞ் சிலம்பிற்
குறுஞ்சுனைக் குவளை வண்டுபடச் சூடிக்
கான நாடன் வரூஉம் யானைக்
கயிற்றுப்புறத் தன்ன கன்மிசைச் சிறுநெறி
மாரி வானந் தலைஇ நீர்வார்பு
இட்டருங் கண்ண படுகுழி இயவின்
இருளிடை மிதிப்புழி நோக்கியவர்
தளரடி தாங்கிய சென்ற தின்றே.

— கபிலர்.

(சொ - ள்.) ரு. தோழி வாழி-,

க—ச. மன்றுபாடு அவிந்து மனை மடிந்தன்று - அம்பலம் ஒலி யடங்க மனைகளும் துயின்றன, கொன்றோர் அன்ன கொடுமையொடு - கொன்றாரையொத்த கொடுமையுடன், இன்று யாமம் கொளவரின் - இன்று நடுயாமம் பொருந்தவரின், காமம் கனைஇ - காமம் செறிந்து, கடலினும் உரைஇ - கடலைக் காட்டினும் பரவி, கரை பொழியும் - கரை கடந்து செல்லும்;

ரு—எ. இன்னம் ஆகவும் - யாம் இந்நிலையினம் ஆகவும், நன்னர் நெஞ்சம் - நமது நல்ல நெஞ்சம், மயங்கி - மயங்கலுற்று, என்னொடும் நின்னொடும் சூழாது - என்னையும் நின்னையும் உசாவியுணராது, கை மிக்கு - கை கடந்து;

அ—கக. இறும்புபட்டு இருளிய இட்டு அரும் சிலம்பில் - சிறு காடாய் இருண்ட சிறிய செல்லற்கரிய பக்கமலையின்கண் உள்ள, குறும் சுனைக்குவளை வண்டுபடச் சூடி - குறிய சுனையிற் பூத்த குவளைப் பூவினை வண்டு மொய்த்திடச் சூடி, கான நாடன் வரூஉம் - காட்டு

(பாடம்) * கோள்வரின்.

நாட்டினையுடைய நம் தலைவன் வருகின்ற, யானைப் புறத்துக் கயிறு அன்ன - யானையின் முதுகிலுள்ள கயிற்றுத் தழும்பை யொத்த, கல் மிசைச் சிறு நெறி - மலை மீதுள்ள சிறிய வழியாகிய;

௧௨—௩. மாரி வானம் தலைஇ நீர் வார்பு - மேகம் மழை பெய்த லால் நீர் ஒழுகா நிற்க, இட்டு அருஞ் சண்ணை - செல்லுதற்கரிய சிறிய இடங்களிலுள்ள, படுகுழி இயவில் - படுகுழிகளைக் கொண்ட நெறியில், இருளிடை மிதிப்புழி நோக்கி - இருளின்கண் மிதிக்குமிடத்துப் பார்த்து, அவர் தளர் அடி - அவரது தளராநின்ற அடியை, தாங்கிய இன்று சென்றது - தாங்கும் பொருட்டு இன்று சென்றுவிட்டது;

௩. எவன் கொல் - இஃதென்னையோ!

(முடிபு) தோழி! வாழி! மன்று பாடவிந்து மனை மடிந்தன்று; காமம் கரை பொழியும்; நாம் இன்னம் ஆகவும் நெஞ்சம் இன்று கான நாடன் வருஉம் நெறிக்கட் படுகுழி இயவின் இருளிடை மிதிப்புழி நோக்கி அவர் தளரடி தாங்கிய சென்றது; இஃது எவன் கொல்.

(வி - ரை.) அவிந்து-அவிய. மனை: ஆகுபெயர். கரைபு ஒழியும் எனப் பிரித்து, முழங்கி யொழியும் என்றலுமாம். ஒழியும், சண்டு விடும் என்பதுபோலத் துணிபுப் பொருட்டாய துணைவினை. சிலம்பில் கானநாடன் வருஉம் சிறு நெறியாகிய படுகுழி யியவின் என்க. யானை யும் அதன் புறத்துக் கயிற்றுத் தழும்பும் கல்லிற்கும் அதன் மேலுள்ள சிறு நெறிக்கும் உவமை. கயிற்றை யொத்த சிறு நெறி என்றலுமாம். தலைஇ, வார்பு என்னும் எச்சங்களைத் திரிக்க. நெஞ்சம் தளரடி தாங்கிய சென்றது என்றது, இரவுக் குறிக்கண் தலைவன் வரும் நெறியின் ஏதத்தை நினைந்து வருந்துதல் புலப்படுத்தியவாறு.

(மே - ள்.) *'மறைந்தவற் காண்டல்' என்னுஞ் சூத்திரத்து, 'பொழுதும் ஆறும் புரைவ தன்மையின், அழிவுதலை வந்த சிந்தைக் கண்ணும்' என்ற பகுதியில், இச் செய்யுளைக் காட்டி, காமம் கரை பொழியா நிற்கவும், என்ன நன்றி கருதி, இருவரொடுஞ் சூழாது சென் றது நெஞ்செனை இரண்டும் (பொழுதும் ஆறும்) கூறினான். மனைமடிந் தன்றென்பது பொழுது; சிறு நெறி யென்பது ஆறின்னாமை என்றும், †'நோயு மின்பமும்' என்னுஞ் சூத்திரத்து, 'நெஞ்சம்...தளரடி தாங்கிய சென்றது இன்றே' என்பது, நெஞ்சினை உறுப்புடையதுபோல் அழுகைபற்றிக் கூறியது என்றும், ‡'பொழுதும் ஆறும்' என்னுஞ் சூத்திரத்து, 'மன்று பாடவிந்து' என்பது, பொழுது வழுவுதவிற் குற்றங்காட்டியது என்றும் கூறுவர், நச்.

§'முட்டுவயிற்கழறல்' என்னுஞ் சூத்திரத்து, அச்சத்தின் அகறல் என்றும் மெய்ப்பாட்டிற்கு, இப் பாட்டினைக் காட்டி, இதன்

* தொல். களவு. ௨௦. † தொல். பொருளி. ௨.
‡ தொல். பொருளி. ௧௧. § தொல். மெய்ப். ௨௧.

கருத்தாவது, 'நாம் அவர் இருளிடை வருதல் ஏதமஞ்சி அன்று அவலித்திருப்பவும் என்னையும் நின்னையும் கேளாது என நெஞ்சு போவானேன் என்றவாறாயிற்று' என்பர், பேரா.

---

129. பாலை

[பிரிவிடை வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.]

உள்ளல் வேண்டும் ஒழிந்த பின்னென
நள்ளென் கங்குல் நடுங்குதுணை யாயவர்
நின்மறந் துறைதல் யாவது *புல்மறைந்து
அலங்கல் வான்கழை உதிர்நெல் நோக்கிக்
கலைபிணை விளிக்குங் கானத் தாங்கண்
கல்சேர்பு இருந்த கதுவாய்க் குரம்பைத்
தாழிமுதல் கலித்த கோழிலைப் பருத்திப்
பொதிவயிற்று இளங்காய் பேடை ஊட்டிப்
போகில்பிளந் திட்ட †பொங்கல் வெண்காழ்
நல்கூர் பெண்டிர் ‡அல்கல் கூட்டும்
கலங்குமுனைச் சீறூர் கைதலை வைப்பக்
கொழுப்பா தின்ற கூர்ம்படை மழவர்
செருப்புடை அடியர் தெண்சுனை மண்டும்
அருஞ்சுரம் அரிய வல்ல வார்கோல்
திருந்திழைப் பணைத்தோள் தேன்நாறு கதுப்பின்
குவளை உண்கண் இவளொடு செலற்கென
நெஞ்சுவாய் அவிழ்ந்தனர் காதலர்
அஞ்சில் ஓதி ஆயிழை நமக்கே.

—குடவாயிற்கீரத்தனார்.

(சொ - ள்.) ௧௮. அம் சில் ஓதி ஆய் இழை - அழகிய சிலவாகிய கூந்தலையும் ஆராய்ந்த அணிகளையும் உடைய தலைவியே!

௧—௨. ஒழிந்தபின் - இவளைப் பிரிந்து சென்றபின், உள்ளல் வேண்டும் என - இவளை எண்ணி நாம் இரங்கல் வேண்டிவரும் என்று நினைத்து, நள் என் கங்குல் நடுங்கு துணையாயவர் - நள்ளென்னும் ஒலியினையுடைய நடு இரவில் நடுங்கும் துணையினரான;

௧௭. காதலர் - நம் தலைவர்;

(பாடம்) * புன்மறைச்சு. † பொச்சர். ‡ அல்குற் கூட்டு.

௧—௧௪. புல் மறந்து - புல்லைத் தின்னுதலை மறந்து, அலங்கல் வான் கழை உதிர் நெல் நோக்கி - அசையும் நெடிய மூங்கிலினின்று உதிர்ந்த நெல்லைப்பார்த்து, கலைபிணை விளிக்கும் கானத்து ஆங்கண் - கலைமான் தன் பிணையினை அழைக்கும் காட்டிடத்தே, கல்சேர்பு இருந்த கதுவாய்க் குரம்பை - பாறையைச் சேர்ந்திருந்த சிதைவுற்ற குடிலில், தாழி முதற் கலித்த கோழ் இலைப் பருத்தி - தாழியிடத்தே தழைத்த கொழுவிய இலையையுடைய பருத்திச் செடியின், பொதி வயிற்று இளங்காய் பேடை ஊட்டி - பருத்த வயிற்றினை யுடைய இளங் காயைப் பேடைகட்கு அருத்தி, போகில் பிளந்திட்ட பொங்கல் வெண் காழ் - ஆண் பறவைகள் பிளந்து போகட்ட பஞ்சினையுடைய வெள்ளிய கொட்டையை, நல்கூர் பெண்டிர் அல்கல் கூட்டும் - வறுமையுற்ற மகளிர் வைத்துண்ணும் உணவாகச் சேர்க்கும், கலங்கு முனைச் சீறூர் கை தலை வைப்ப - கலங்குதற்கு ஏதுவாய போர் நிகழும் இடங்களை யுடைய சீறூரிலுள்ளார் கையைத் தலைமீது வைத்து அலற, கொழுப்பு ஆ தின்ற கூர்ம் படை மழவர் - அவர்களுடைய கொழுத்த ஆக்களைக் கவர்ந்துசென்று கொன்று தின்ற கூரிய படைகளையுடைய மழவர்கள், செருப்பு உடை அடியர் - செருப்பினைப் பூண்ட அடியராகி, தெண்சுனை மண்டும்-தெளிந்த சுனை நீரை மிகுதியாகப் பருகும், அரும் சுரம்-அரிய சுரநெறிகள்;

௧௪—௮. வார் கோல் திருந்து இழை பணைத் தோள் தேன் நாறு கதுப்பின் குவளை உண்கண் - நீண்ட கோல்தொழிலமைந்த வளையலையும் திருந்திய அணிகளையும் மூங்கில் போன்ற தோளினையும் தேன் மணக்கும் கூந்தலினையும் கருங்குவளைபோன்ற மையுண்ட கண்களையும் உடைய, இவளொடு செலற்கு அரியவல்ல என - இவளுடன் செல்லுதற்கு அருமையுடையன அல்லவென, நமக்கு நெஞ்சு வாய் அவிழ்ந்தனர் - நமக்குத் தமது உள்ளக் கருத்தை வாய்விட்டு மொழிந்தனர்;

௯. நின் மறந்து உறைதல் யாவது - ஆகலின் நின்னை மறந்து வேற்று நாட்டுத் தங்குதல் எங்ஙனம் கூடும்?

(முடிபு) ஆயிழை, நடுங்கு துணை யாயவர், காதலர், நமக்கு அருஞ்சுரம் இவளொடு செலற்கு அரியவல்ல என நெஞ்சு வாய் அவிழ்ந்தனர்; ஆகலின் நின் மறந்து உறைதல் யாவது?

கானத் தாங்கண் சீறூர் கை தலைவைப்பக் கொழுப்பாதின்று மழவர் சுனை மண்டும் அருஞ்சுரம் என்க.

(வி-ரை.) முதலிலே பிரிவிற்கு அஞ்சி நடுங்கிய காதலர். அதன் மேலும் இவளொடு செலற்கு அருஞ்சுரம் அரியவல்ல எனக் கூறினராதலின், நின்னை மறந்து வேற்று நாட்டின்கண் நீட்டித்திருப்பாரல்லர் என்று தோழி தலைவியை ஆற்றுவித்தாள் என்க. விரைந்து வந்து நின்னை உடன் கொண்டு செல்வார் என்றாளாயிற்று. புல் கரிந்து போயினமையின் மான் அதனை உண்ணுதலை மறந்ததென்க. புல்

மன்றத்து என்னும் பாடத்திற்கு புல் அற்றொழிந்தமையால் என்று பொருள் கொள்க. போகில் - பறவைப் பொதுப்பெயர். பொங்கர் என்பது பாடமாயின், சிறுகோட்டிலுள்ள என்க. அல்குற் கூட்டும் என்பது பாடமாயின், இடைமருங்கிலுள்ள மடியிற் சேர்க்கும் என்க. மண்டுதல் - மிக்குப் பருகுதல். பருகுதற்கு விரைதல் என்றுமாம்.

---

130. நெய்தல்

[கழறிய பாங்கற்குத் தலைமகன் கழற்றெதிர் மறுத்தது.]

அம்ம வாழி கேளிர் முன்நின்று
கண்டனி ராயிற் கழறலிர் மன்னோ
நுண்தாது பொதிந்த செங்கால் *கொழுமுகை
முண்டகங் கெழீஇய மோட்டுமணல் அடைகரைப்
பேஎய்த் தலைய பிணர்அரைத் தாழை
எயிறுடை நெடுந்தோடு காப்பப் பலவுடன்
வயிறுடைப் போது வாலிதின் †விரீஇப்
புலவுப்பொரு தழித்த பூநாறு பரப்பின்
இவர்திரை தந்த ஈர்ங்கதிர் முத்தம்
‡கவர்நடைப் புரவிக் கால்வடுத் தபுக்கும்
நற்றேர் வழுதி கொற்கை முன்துறை
வண்டுவாய் திறந்த வாங்குகழி நெய்தல்
போதுபுறங் கொடுத்த உண்கண்
மாதர் வாண்முகம் மதைஇய நோக்கே.

—வெண்கண்ணனார்.

(சொ - ள்.) க. கேளிர் அம்ம வாழி - பாங்கீர், யான் கூறுவதனைக் கேட்பீராக; வாழி!

ங—சு. நுண் தாது பொதிந்த செங் கால் கொழு முகை - நுண்ணிய பூந்துகளால் மூடப்பட்ட சிவந்த தண்டினையும் கொழுவிய மொட்டினையுமுடைய, முண்டகம் கெழீஇய மோட்டு மணல் அடைகரை - கழிமுள்ளி பொருந்திய உயர்ந்த மணல்அடைந்த கரையிடத்தே, பேஎய்த்தலைய பிணர் அரைத் தாழை - பேய் போலும் தலையினையுடைய சருச்சரை வாய்ந்த அரையினையுடைய தாழையின், எயிறு உடை நெடுந்தோடு பல உடன் காப்ப - முள்ளாகிய பற்களை யுடைய நீண்ட புற இதழ்கள் பலவும் ஒருங்கு காவா நிற்ப, வயிறு உடைப்

(பாடம்) * குறுமுகை. † விரைஇப். ‡ கவர்பரி.

போது வாலிதின் விரீஇ - அதன் அகட்டினை இடமாகவுடைய பூவாய்த் தாக விரிந்து, புலவுப் பொருது அழித்த பூ நாறு பரப்பின் - புலால் நாற்றத்தைத் தாக்கி ஒழித்த மலர் நாற்றம் கமழும் இடத்தின்கண்;

இவர் திரைதந்த ஈர்ங் கதிர் முத்தம் - பரக்கும் அலைகள் கொணர்ந்து வீசியகுளிர்ந்த ஒளியினையுடைய முத்துக்கள், கவர்நடைப் புரவிக் கால் வடுத் தபுக்கும்-விரும்பும் நடையினையுடைய குதிரையது காலினை வடுச்செய்து அதன் செலவினைக் கெடுக்கும், நல்தேர் வழுதி கொற்கை முன் துறை - நல்ல தேரையுடைய பாண்டியனது கொற்கை யென்னும் பதியின் கடற்றுறைக் கண்ணுள்ள;

வண்டு வாய் திறந்த வாங்கு கழி நெய்தற்போது-வண்டினால் வாய் திறக்கப்பெற்ற வளைந்த கழியிடத்திலுள்ள நெய்தல் பூவானது, புறங் கொடுத்த மாதர் வாள்முக உண்கண் - புறங்கொடுத்த அழகிய ஒளி பொருந்திய முகத்தின்கண்ணுள்ள மையுண்ட கண்களது; மதைஇய நோக்கு - செருக்கிய பார்வையினை;

க—உ. முன்நின்று கண்டனிர் ஆயின் கழறலிர் - முன்னே நின்று கண்டீராயின் இங்ஙனம் கழறிக் கூறீர்.

(முடிபு) கேளிர், வாழி, கொற்கை முன்றுறையின் நின்ற அவள் உண்கண் நோக்குமுன் நின்று கண்டனிராயின் கழறலிர், கண்டிலீர்.

அம்ம: கேட்பித்தற் பொருளில் வரும் இடைச்சொல். கழறுதல்—இடித்துரைத்தல். மன்-கழிபு. வடுத் தபுக்கும் - காலை வடுச் செய்து முடமாக்கும் என்றலுமாம்; வடுச் செய்து என ஒரு சொல் வருவிக்க. தபுக்கும் முன்துறை: பெயரெச்சம் இடப்பெயர் கொண்டது. மாதர்—காதலுமாம்.

(உ-றை.) முண்டகமுனை கெழீஇய தாழையின்போது எயிறுடை நெடுந்தோடு பல காப்ப இருந்து விரீஇப் புலவுப் பொரு தழித்த தென்பது, காதற்றோழியுடன் கூடி ஆயவெள்ளம் புடை சூழநின்ற தலைவியின் இயல், நீ கூறிய உறுதி மொழிகளை யெல்லாம் அழித்தது என்றபடி.

---

131. பாலை

[பொருள் கடைக்கூட்டிய நெஞ்சிற்குத் தலைமகன் சொல்லியது.]

விசும்புற நிவந்த மாத்தாள் *இகணைப்
பசுங்கேழ் மெல்லிலை அருகுநெறித் தன்ன
வண்டுபடுபு இருளிய தாழிருங் கூந்தல்
சுரும்புண விரிந்த பெருந்தண் கோதை
இவளினுஞ் சிறந்தன்று †ஈதல் நமக்கென
வீளை அம்பின் விழுத்தொடை மழவர்

(பாடம்) * இதணைப். † ஈகை.

நாளா உய்த்த நாமவெஞ் சுரத்து
நடைமெலிந் தொழிந்த சேட்படர் கன்றின்
கடைமணி உகுநீர் துடைத்த ஆடவர்
பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்
பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்
வேலூன்று பலகை வேற்றுமுனை கடுக்கும்
வெருவரு தகுந கானம் நம்மொடு
வருக என்னுதி யாயின்
வாரேன் நெஞ்சம் வாய்க்கநின் வினையே.

—மதுரை மருதனிளநாகனார்

(சொ - ள்.) ௧௫. நெஞ்சம் - நெஞ்சமே!

௧௫—௫. விசும்பு உற நிவந்த மா தாள் இகணை-வானை அளாவ உயர்ந்த கரிய அடியினை உடைய இகணை மரத்தினது, பசுகேழ் மெல் இலை அருகு நெறித்தன்ன-பசியநிறமுடைய மெல்லிய இலைகளைநெருங்கச் செறித்து வைத்தால் ஒத்த, வண்டு படுப இருளிய தாழ் இருங் கூந்தல்-வண்டுமொய்த்து இருண்ட தாழ்ந்த பெரிய கூந்தலையும், சுரும்பு உண விரிந்த பெரும் தண் கோதை - வண்டுகள் தேன் உண்ணும்படி மலர்ந்த பூக்களாலாய பெரிய குளிர்ந்த மாலையையும் உடைய, இவளினும் நமக்கு ஈதல் சிறந்தன்று என - இத்தலைவியினும் நமக்கு ஈதலே சிறந்தது என்று;

௬—௧௩. வினை அம்பின் விழுத்தொடை மழவர் - சீழ்க்கை போலும் ஒலியுடன் செல்லும் அம்பினது தப்பாத தொடையினையுடைய வெட்சி மறவர், நாள் ஆ உய்த்த நாம வெம் சுரத்து - விடியற் காலையில் ஆக்களைக் கவர்ந்து கொண்டுபோன அச்சந்தரும் கொடிய சுர நெறியிலே, சேண்படர் நடை மெலிந்து ஒழிந்த கன்றின் - நெடுந்தூரம் நடந்து வருதலின் நடை ஓய்ந்து நின்றுவிட்ட கன்றினது, கடைமணி உகுநீர் துடைத்த ஆடவர் - கடைக்கண்ணினின்றும் ஒழுகும் நீரைத் துடைத்த கரந்தையோரது, பெயரும்பீடும் எழுதிப் பீலி சூட்டியபிறங்குநிலைநடுகல்-பெயரும் சிறப்பும் பொறித்த மயில்தோகையினைச் சூட்டிய விளங்கும் நிலையினையுடைய நடுகல்லின் முன், ஊன்று வேல் பலகை - ஊன்றிய வேலும் அதன்கட் சார்த்திய கேடகமும், அதர்தொறும் வேற்றுமுனை கடுக்கும் - செல்லும் வழிதோறும் பகைவர் போர்முனை இருப்பை ஒக்கும், வெருவரு தகுந கானம் - அச்சம்வரும் இயல்பினவாய காட்டில்;

௧௩—௫. நம்மொடு வருக என்னுதியாயின் - எம்மோடு வருக என்பையாயின், வாரேன்-யான் வருவேனல்லேன்; நின்வினை வாய்க்க-மேற்கொண்ட வினை வாய்ப்பதாக.

(முடிபு) நெஞ்சம், இவளினும் ஈதல் சிறந்தன்றெனக் கானம் நம்மொடு வருக என்னுதியாயின், வாரேன்; நின் வினை வாய்க்க.

(வி - ரை.) இகணை-ஒருமரம்; இது செழுமையுடன் அடர்ந்திருக்கும் தழைகளைத் தலையில் உடையதாகும் என்பது, *'துன்னிய, ஈரச் செஞ்சத் தார்வ லாளர், பாரந்தாங்கும் பழமை போல, இலைக்கொடிச் செல்வமொடு தலைப்பரந்தோங்கிய, கணைக்கால் இகணை' என்னும் பெருங்கதையாற் பெறப்படும். இதணை எனப் பாடம் கொள்வாரு முளர். இவளினும் சிறந்தன்றீதல் - ஈதலால் வரும் இன்பம் இவளால் வரும் இன்பத்தினும் சிறந்தது என்றபடி. விளைவினையும் அம்பின் தொடைவினையுமுடைய மழவர் என்னலுமாம். விளை-சீழ்க்கையொலி. விழு-இடும்பை என்னலுமாம். கடைமணி யுகுநீர், இவ்வாறே †'ஆவின் கடைமணி புகுநீர்' என வருதலுங் காண்க. உகுநீர், துடைத்த என்றது, ஆநிரையை மீட்டமையால் அதன் துயரைப்போக்கிய என்றபடி. நிரைமீட்ட கரந்தையார் துடைத்த ஆடவர் நடுகல் என்றமையால், நிரைமீட்ட கரந்தையார் பொருதுபட்டமை பெற்றும். வாய்க்க நின்வினை என்றது இகழ்ச்சி.

(மே - ள்.) ‡'வெறியறி சிறப்பின்' என்னும் சூத்திரத்து, 'ஆபெயர்த்துத் தருதலும்' என்னும் பகுதிக்கு, இச் செய்யுளையும் காட்டி, இதனுள் 'மறவர் கான்ஆ உய்த்த' என வேற்றுத் தொழில் அல்லாத வெட்சித்திணையும் பொதுவியல் கரந்தைக்கண்ணே கொள்க; இஃது எழற்கும் பொதுவாகலின் என்றும், இச் சூத்திரம் 'பெயரும் பீடும் எழுதி அதர்தொறும், பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்' என அகத்திற்கும் வருதலிற் பொதுவியலாயிற்று என்றும், §'நோயு மின்பமும்' என்னுஞ் சூத்திரத்து, 'வருக வென்னுதியாயின், வாரேன் நெஞ்சம் வாய்க்கநின் வினையே' என்பது 'மறுத்துரைப்பதுபோல் நெஞ்சொடு புணர்ந்து' ...

132. குறிஞ்சி

[தோழி தலைமகளை இடத்துய்த்துவந்து தலைமகனை எதிர்ப்பட்டு நின்று வரைவுகடாயது.]

ஏனலும் இறங்குகுரல் இறுத்தன நோய்மலிந்து
ஆய்கவின் தொலைந்தஇவள் நுதலும் நோக்கி
ஏதில மொழியும்இவ் வூரு மாகலிற்
களிற்றுமுகந் திறந்த கவுளுடைப் பகழி
வால்நிணப் புகவிற் கானவர் தங்கை

* பெருங். ௩-௧௧, ௩௪-௩௮. † சிலப். ௨௦-௫௪.
‡ தொல். புறத். ௫. § தொல். பொருளி. ௨.

அம்பணை மென்தோள் ஆயிதழ் மழைக்கண்
ஒல்கியல் கொடிச்சியை நல்கினை யாயிற்
கொண்டனை சென்மோ நுண்பூண் மார்ப
துளிதலைத் தலைஇய சாரல் நளிசுனைக்
கூம்புமுகை அவிழ்த்த குறுஞ்சிறைப் பறவை
வேங்கை விரியிணர் ஊதிக் காந்தள்
தேனுடைக் குவிகுலைத் துஞ்சி யானை
இருங்கவுள் கடாஅம் கனவும்
பெருங்கல் வேலிநம் உறைவின் ஊர்க்கே.

—தாயங் கண்ணனார்.

(சொ - ள்.) அ. நுண் பூண் மார்ப - நுண்ணிய தொழிற்றிறமமைந்த பூணணிந்த மார்பனே!

௧—௩. ஏனலும் இரங்கு குரல் இறுத்தன - தினையும் முதிர்ந்து வளைந்த கதிர் அறுக்கப் பெற்றன, இவள் நுதலும் நோய்மலிந்து ஆய் கவின் தொலைந்த - இவள் நெற்றியும் காமநோய் மிக்கமையால் ஒள்ளிய அழகு தொலையப் பெற்றது, இவ்வூரும் - இவ்வூராரும், நோக்கி - அதனை நோக்கி, ஏதில மொழியும் - இயைபில்லாதன கூறுவர், ஆகலின் - ஆதலால்;

௪—௭. களிற்று கவுள் உடை முகம் கிழித்த பகழி - களிற்றியானையின் மதம் பொருந்திய கன்னத்தையுடைய முகத்தைக் கிழித்த அம்பினையும், வால் நிணப் புகவின் - வெள்ளிய நிணத்துடன்கூடிய உணவினையும் உடைய, கானவர் தங்கை - வேடர்களது தங்கையும், அம்பணை மெல் தோள் - அழகிய மூங்கிலை யொத்த மெல்லிய தோளினையும், ஆய் இதழ் மழைக்கண் - அழகிய இமையுடன் கூடிய குளிர்ந்த கண்ணினையும், ஒல்கு இயல் - அசையும் இயலினையும் உடைய, கொடிச்சியை நல்கினை ஆயின் - கொடிச்சியுமாகிய இவளை அருள் செய்தாய் ஆயின்;

௮—௧௪. துளி தலைத் தலைஇய சாரல் - வானம் மழைத்துளியை முதற்கண்ணே பெய்த பக்க மலையிலே, நளிசுனைக் கூம்பு முகை அவிழ்த்த குறுஞ்சிறைப் பறவை - பெரிய சுனைக்கண்ணே குவிந்த அரும்பினை விரித்த குறுகிய சிறையினவாய வண்டுகள், வேங்கை விரி இணர் ஊதி - வேங்கையின் விரிந்த பூங்கொத்துக்களில் தாதினை ஊதி, காந்தள் தேன் உடைக் குவிகுலை துஞ்சி - காந்தளின் தேன் பொருந்திய குவிந்த குலையில் உறங்கி, யானை இரு கவுள் கடாஅம் கனவும் - யானையின் பெரிய கன்னத்தில் ஒழுகும் மதத்தினை உண்பதாகக் கனாக் காணும், பெருங்கல் வேலி - பெரிய மலையைச் சூழக்கொண்ட, உறைவு இன் நம் ஊர்க்கு - உறைதற்கு இனிய நமது ஊர்க்கு;

அ. கொண்டனை சென்மோ - வரைந்துகொண்டு செல்வாயாக.

(முடிபு) நுண்பூண் மார்ப! ஏனல் குரல் இறுத்தன; நுதலும் கவின் தொலைந்த; இவ்வூரும் ஏதில மொழியும்; கொடிச்சியை நல்கினையாயின், நும் ஊர்க்கு (வரைந்து) கொண்டனை சென்மோ.

(வி - ரை.) ஏனலுங் குரல் இறுத்தன, இவ்வூரும் கவின் தொலைந்த இவள் நுதல் நோக்கி ஏதில மொழியும் ஆகலின் என்றுரைத்தலுமாம். இதற்கு நுதலும் என்பதிலுள்ள உம்மை இசைநிறை; நுதலும் பிறவுமென எச்சவும்மையுமாம்.

(உ - றை.) முகையவிழ்த்த வண்டு வேங்கை மலரையூதி, கார் நட் குலையிலே துஞ்சி யானையின் கடாத்தினைக் கனவும் என்றது, தலைவியின் நாண் முதலிய தளைகளை நெகிழ்த்த தலைவன் அவளை நுகர்ந்து, அக் களவொழுக்கத்திலே அழுந்தி, மேலும் பகற்குறி இரவுக்குறிகளால், அடைதற்கரிய அவளைப் பெறுதற்கு நினைக்கின்றான் என்றபடி.

(மே - ள்.) *'ஆயர் வேட்டுவர்' என்னுஞ் சூத்திரத்து ஆயர் வேட்டுவர் என்னும் இரண்டு பெயரேயன்றி, ஒன்றென முடித்தலாற் கொள்ளப்படும் தலைவரும் தலைவியரும் உளர் என்றுரைத்து, 'வானிணப் புகவிற்கானவர் தங்கை' என வருவனவுங் கொள்க என்றனர், நச்.

---

133. பாலை

[பிரிவிடை யாற்றாளாயினளெனக் கவன்ற தோழிக்குத் தலைமகள் ஆற்றுவலென்பதுபடச் சொல்லியது.]

குன்றி அன்ன கண்ண குரூஉ மயிர்ப்
புன்தாள் வெள்எலி மோவாய் ஏற்றை
செம்பரல் முரம்பில் சிதர்ந்த பூழி
நல்நாள் வேங்கைவீ நன்களம் வரிப்பக்
கார்தலை மணந்த பைம்புதல் புறவின்
வில்லெறி பஞ்சியின் வெண்மழை தவழும்
கொல்லை இதைய குறும்பொறை மருங்கில்
கரிபரந் தன்ன காயாஞ் செம்மலொடு
எரிபரந் தன்ன இலமலர் விரைஇப்
பூங்கலுழ் சுமந்த தீம்புனல் கான்யாற்று
வான்கொள் தூவல் வளிதர உண்டும்

---

* தொல். அகத். ௨௧.

எம்மொடு வருதல் வல்லையோ மற்றெனக்
கொன்னொன்று வினவினர் மன்னே தோழி
இதல்முள் ஒப்பின் முகைமுதிர் வெட்சி
கச கொல்புனக் குருந்தொடு கல்லறைத் தாஅம்
*மிளைநாட்டு அத்தத்து ஈர்ஞ்சுவல் கலித்த
வரிமரல் கறிக்கும் மடப்பிணைத்
திரிமருப்பு இரலைய காடிறந் தோரே.

—உறையூர் மருத்துவன் தாமோதரனார்.

(சொ - ள்.). கக. தோழி—,

கச—அ. இதல் முள் ஒப்பின் - சிவலின் காலிலுள்ள முள்ளை ஒத்த, முகை முதிர் வெட்சி - அரும்பு முதிர்ந்த வெட்சிப் பூக்கள், கொல் புனக் குருந்தொடு - வெட்டித்திருத்திய கொல்லை நிலத்திலுள்ள குருந்த மலர்களோடு, கல்அறைத் தாஅம் - கற்பாறையிலே பரந்து கிடக்கும், மிளை நாட்டு அத்தத்து - மிளை என்னும் நாட்டின் பாலை நெறியில், ஈர் சுவல் கலித்த - ஈரமுடைய மோட்டு நிலத்தே தழைத்த, வரி மரல் கறிக்கும் - வரிகளையுடைய மரலைக் கடித்துண்ணும், மடப் பிணை திரி மருப்பு இரலைய - மடப்பத்தையுடைய பெண்மானுடன் கூடிய முறுக்குண்ட கொம்பினையுடைய ஆண்மான்களையுடைய, காடு, இறந்தோர் - காட்டினைக் கடந்துசென்ற நம் தலைவர்;

க—ச. குன்றி அன்ன கண்ண - குன்றிமணி போன்ற கண்களையும், குரூஉ மயிர் - நல்ல நிறம் வாய்ந்த மயிரையும், புல் தாள்-மெல்லிய கால்களையும், மோவாய்-தாடியினையுமுடைய, வெள் எலி ஏற்றை - ஆண் வெள்ளெலி; செம்பரல் முரம்பில் சிதர்ந்த பூழி - சிவந்த பரல்கள் மிக்க வன்னிலத்தில் ஊறிப் போகட்ட புழுதியில், நல் நாள் வேங்கை வீகளம்வரிப்ப - மணநாளை அறிவிக்கும் இயல்புடைய வேங்கைப் பூக்கள் உதிர்ந்து சிறந்த வெறியாடு களம் போல அழகு செய்ய;

இ—எ. கார்தலை மணந்த பைம்புதல் புறவின் - கார்காலம் கூடியதால் பசிய புதல்களையுடைய முல்லை நிலத்தே, வில் எறி பஞ்சின் வெண் மழை தவழும் - வில்லினால் அடிக்கப்பெற்ற பஞ்சுபோல வெள்ளிய மேகம் - தவழ்ந்திடும், கொல்லை இதைய குறும்பொறை மருங்கில் புதுக் கொல்லைகளையுடைய சிறிய மலையின் பக்கலில்;

அ—கக. கரி பரந்தன்ன காயா செம்மலொடு - கரி பரந்தாலொத்த காயாவின் வாடற் பூக்களொடு, எரி பரந்தன்ன இலமலர் விரைஇ - நெருப்புப் பரந்தாலொத்த இலவமலர் கலக்க, பூ கழும் சமந்த தீம்புனல் - அப் பூக்களின் ஒழுகுதலைச் சுமந்துவரும் இனிய புனலையுடைய, கான்யாற்று - காட்டாற்றின்கண்ணே, வளிதர வான்

(பாடம்) *இரநாட் டத்தத்து.

கொன் தூவல் - காற்று எழுப்புதலின் மேலே எழும் துளிகளையே, உண்கும் - உண்பேமாகிய, எம்மொடு வருதல் வல்லையோ என - எம்முடன் வருதற்கு வன்மையுடையையோ வென்று, கொன் ஒன்று வினவினர் - பெருமை தங்கிய ஒரு மொழியினைக் கூறி வினவினர்.

(முடிபு) தோழி! மிளைநாட்டு அத்தத்துக் காடிறந்தோர் ஆய நம் தலைவர், குறும்பொறை மருங்கில் கான்யாற்றுத் தூவல் உண்கும் எம்மொடு வருதல் வல்லையோவெனக் கொன் ஒன்று வினவினர்! (ஆதலின் விரைந்து வந்து உடன்கொண்டு செல்லுதலும் கூடும்.)

(வி - ரை.) இதை-புதப்புனம். இலவமலர்-இலமலரென விகாரமாயிற்று. விரைஇ - விரவ எனத்திரிக்க. கலுழ்-வண்டலுமாம். உண்கும்-உண்பேமாக என்னலுமாம். மற்று, அசை. மன், ஒழியிசை. மிளைக்கந்தன், மிளைகிழான் நல்வேட்டன், மிளைவேள் தித்தன் எனவரும் புலவர் பெயர்களால் மிளையென்பது நாட்டின் பெயராதல் அமையும்; இளைகாடெனப் பிரித்தலுமாம். தலைவர் அங்ஙனம் வினவினராதலின் உடன்கொண்டு செல்லுதலும் கூடுமென எண்ணினாளென்க. நச்சினார்க்கினியர் கருத்தின்படி, தலைவர் வினவினதன்றி அங்ஙனம் செய்திலரே என்று தலைவி இரங்கினாள் எனக் கொள்ளல்வேண்டும்.

(மே - ள்). *'கொண்டு தலைக் கழியினும்' என்னுஞ் சூத்திரத்து இது பாலைக்கண் இரங்கல் நிகழ்ந்ததென்றனர், நச்.

---

134. முல்லை

[வினைமுற்றி மீண்ட தலைமகன் பாகற் குரைத்தது.]

வானம் வாய்ப்பக் கவினிக் கானம்
கமஞ்சூல் மாமழை கார்பயந்து இறுத்தென
மணிமருள் பூவை அணிமலர் இடையிடைச்
செப்புறழ் மூதாய் பரத்தலின் நன்பல
முல்லை வீகழல் தாஅய் வல்லோன்
செய்கை அன்ன செந்நிலப் புறவின்
வாஅப் பாணி வயங்குதொழிற் கலிமாத்
தாஅத் தாளிணை மெல்ல ஒதுங்க
இடிமறந் தேமதி வலவ குவிமுகை
வாழை வான்பூ ஊழ்உறு புதிர்ந்த
ஒழிகுலை யன்ன திரிமருப் பேற்றொடு
கணைக்கால் அம்பிணைக் காமர் புணர்நிலை

---

* தொல். அகத். ௪௫.

கடுமான் தேரொலி கேட்பின்
நடுநாள் கூட்டம் ஆகலும் உண்டே.

—சீத்தலைச் சாத்தனார்—

(சொ - ள்.) ௧௨—௧௪. வலவ - பாகனே! கடுமான் தேர் ஒலி கேட்பின் - கமது விரைந்த குதிரைபூண்ட தேரின் ஒலியினைக் கேட்டால், வாழை வான் பூ ஊழ் உறுபு உதிர்ந்த குவிமுகை ஒழிகுலை அன்ன - வாழையின் பெரிய பூ மடல்கள் முறையாக முற்றி உதிர எஞ்சிய குவிந்த மொட்டும் ஒழிந்த குலையை ஒத்த, திரி மருப்பு ஏற்றொடு - முறுக்கிய கொம்பினையுடைய மானேற்றுடன், கணைக்கால் அம் பிணைக் காமர் புணர்நிலை-திரண்ட காலினையுடைய அழகிய பெண் மானினது விருப்பம் பொருந்தும் நிலையினதாகிய, நடுநாள் கூட்டம் — நள்ளிரவின் கூட்டம், ஆகலும் உண்டே - நிகழ்தலும் கூடுமோ? (கூடாதாகலின்,)

௧—௬. கமம் சூல் மாமழை - நிறைந்த சூலினையுடைய கரிய மேகங்கள், கார் பயந்து இறுத்தென - கார் காலத்தினைத் தந்து தங்கிற்றாக, வானம் வாய்ப்ப-மழை தப்பாது பெய்தலால், கானம் கவினி — காடு அழகுபெற்று. மணி மருள் பூவை அணிமலர் இடை இடை - நீலமணியை ஒக்கும் காயாவின் அழகிய மலர்களின் இடையிடையே, செம்புற மூதாய் பரத்தலின் - சிவந்த புறத்தினையுடைய இந்திரகோபப்பூச்சி பரந்தலோடு, முல்லை கழல் கன்பல வீ தாஅய் - முல்லையின்நின்றும் உதிர்ந்த நன்றாகிய பல பூக்களும் பரந்து கிடத்தலால், வல்லோன் செய்கை அன்ன - ஓவியம் வல்லோன் செய்த ஓவியம் போன்ற, செம்நிலப் புறவின் - சிறந்த நிலமாகிய முல்லை நிலத்தே;

௭—௧. வாஅ பாணி வயங்கு தொழிற் கலிமா - தாவிச் செல்லும் தாளச்சீர் விளக்கும் நடை வாய்ந்த செருக்கிய குதிரையின், தாஅதாள் இணை மெல்ல ஒதுங்க - தாவிச் செல்லும் இணையொத்த கால்கள் மெல்லென நடக்கும்படி, இடிமறந்து - தாற்றுக் கோலால் குத்துதலை மறந்து, ஏமதி - செலுத்துவாயாக.

(முடிபு) வலவ! தேரொலி கேட்பின் ஏற்றொடு பிணையின் நடுநாள் கூட்டம் ஆகலுமுண்டோ? (ஆகாதாகலின்) புறவின்கண் கலிமாத்தாளிணை மெல்ல வொதுங்க இடிமறந்து ஏமதி.

(வி - ரை.) வீகழல் - கழல்வீ என மாறுக. தாஅய்-தாவ எனத் திரிக்க. வாவும், தாவும் என்பன விகாரப்பட்டன. இடி: முதனிலைத் தொழிற்பெயர். இடித்தல் - கசையால் அடித்தலுமாம். ஏவுமதி என்பது ஏமதி என்றாயிற்று. காமம்-காமர் என ஈறு திரிந்தது. தலைவியைக் கூடவருகின்ற பெருங்காதலுடைய னாகலின், மானினங்களின் அத்தகைய கூட்டத்திற்கு இடையூறு விளைத்தல் ஆகாதென அஞ்சினனென்க.

———

135. பாலை

[தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட தலைமகள் தோழிக்குச் சொற்றது.]

திதலை மாமை தளிர்வனப்பு அழுங்கப்
புதலிவர் பீரின் எதிர்மலர் கடுப்பப்
பசலை பாய்ந்த நுதலேன் ஆகி
எழுதெழில் மழைக்கண் கலுழ நோய்கூர்ந்து
ஆதி மந்தியின் அறிவுபிறி தாகிப்
பேதுற் றிசினே காதலம் தோழி
காய்கதிர் திருகலின் கனைந்துகால் கடுகி
ஆடுதளிர் இருப்பைக் கூடுகுவி வான்பூக்
கோடுகடை கழங்கின் அறைமிசைத் தாஅம்
காடிறந் தனரே காதலர் அடுபோர்
வீயா விழுப்புகழ் விண்தோய் வியன்குடை
ஈரெழு வேளிர் இயைந்தொருங் கெறிந்த
கழுவுள் காமூர் போலக்
கலங்கின்று மாதவர்த் தெளிந்தஎன் னெஞ்சே.

—பரணர்.

(சொ - ள்.) ௬. காதல் அம் தோழி - காதலையுடைய அழகிய தோழியே!

௭—௧௦. காதலர் - நம் காதலர், காய் கதிர் திருகலின் - காயும் ஞாயிறு தாக்குதலால், ஆடு தளிர் இருப்பை - அசையும் தளிரினையுடைய இருப்பை மரத்தின், கூடு குவி வான் பூ - இதழ் குவிந்த வெள்ளிய பூக்கள், கோடு கடை கழங்கின் - யானை மருப்பினாற் கடைந்து செய்த கழங்கினைப் போன்று, அறைமிசைத் தாஅம் - பாறைமீது பரவிக் கிடக்கும், காடு இறந்தனரே - காடு கடந்து சென்றனர் ஆதலின்;

௧௦—௪. அவர் தெளிந்த என்நெஞ்சு - அவரைப் பிரியாரென்று தெளிவுற்றிருந்த என் மனம், அடுபோர் வீயா விழுப்புகழ் - அடும் போரினையும் நீங்காத சிறந்த புகழினையும், விண் தோய் வியன் குடை - வானை அளாவிய பெரிய குடையினையுமுடைய; கழுவுள் - கழுவுள் என்பானுடையதும், ஈர் எழு வேளிர் இயைந்து ஒருங்கு எறிந்த : பதினான்கு வேளிர் ஒருங்குகூடித் தாக்கியதுமாகிய, காமூர் போல - காமூரைப் போல, கலங்கின்று - கலங்காநின்றது;

௧—௫. திதலை மாமை தளிர் வனப்பு அழுங்க - தேமலுடன் கூடிய எனது மாமை நிறமும் தளிர்போலும் அழகும் கெட்டொழிய,

புதல் இவர் பீரின் எதிர்மலர் கடுப்ப - புதர்களிற் படர்ந்த பீர்க்கினது புதிய மலரை யொக்க, பசலை பாய்ந்த நுதலேன் ஆகி - பசலை பரந்த நெற்றியை யுடையேன் ஆகி, எழுது எழில் மழைக்கண் கலுழ - ஓவியம் வல்லார் பார்த்து எழுதுதற்குரிய அழகிய குளிர்ந்த கண் அழ, நோய் கூர்ந்து - துன்பம் பெருகி, ஆதிமந்தியின் அறிவு பிறிதாகி - ஆதிமந்தி போல அறிவு திரிந்து, பேதுற்றிசின் - யான் மயங்கியுளேன்.

(முடிபு) தோழி காதலர் காடிறந்தனர் ஆகலின், நெஞ்சு காமூர் போலக் கலங்கின்று; (அவர் இன்னும் வந்திலாமையால்) வனப்பு அழுங்க, பசலை பாய்ந்த நுதலேன் ஆகி மழைக்கண் கலுழ நோய் கூர்ந்து, ஆதிமந்திபோல அறிவு பிறிதாகிப் பேதுற்றிசின்.

(வி - ரை.) ஆதிமந்தி-கரிகால் வளவன் மகள். இவள் தன் காதலனைக் கெடுத்து வருந்தினளென்பது, அகம் ருசு, ௪௫, ௨௨௨-ஆம் செய்யுட்களாலும் அறியப்படும். இருப்பையின் பூவிற்கு யானைக் கொம்பினுற் கடைந்தவை உவமையாதலை, மேல், *'இருப்பை, மருப்புக் கடைந்தன்ன கொள்ளை வான்பூ' †'இருப்பைக், கோடு கடைந்தன்ன கொள்ளை வான்பூ' என வருவனவற்றாலும் அறிக. கலங்கின்று மாது: மாது, அசை.

---

136. மருதம்

[உணர்ப்புவயின் வாரா ஊடற்கண் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.]

மைப்பறப் ‡புழுக்கின் நெய்க்கனி வெண்சோறு
வரையா வண்மையொடு புரையோர்ப் பேணிப்
புள்ளுப்புணர்ந் தினிய வாகத் தெள்ளொளி
அங்கண் இருவிசும்பு விளங்கத் திங்கள்
§சகடமண் டிய துகள்தீர் கூட்டத்துக்
கடிநகர் புனைந்து கடவுட் பேணிப்
படுமண முழவொடு பரூஉப்பணை இமிழ
வதுவை மண்ணிய மகளிர் ¶விதுப்புற்றுப்
பூக்கணும் இமையார் நோக்குபு மறைய
மென்பூ வாகைப் புன்புறக் கவட்டிலை
பழங்கன்று கறித்த பயம்பமல் அறுகைத்
தழங்குகுரல் வானின் தலைப்பெயற்கு ஈன்ற
மண்ணுமணி அன்ன மாஇதழ்ப் பாவைத்

---

* அகம். ௨௬௭. † அகம். ௩௩௧. (பாடம்) ‡ புழுக்கி நெய்க்கனி § சகடம் வேண்டிய. ¶ விருப்புற்று.

தண்ணறு முகையொடு வெந்நூல் சூட்டித்
தூவுடைப் பொலிந்து மேவரத் துவன்றி
மழைபட் டன்ன மணன்மலி பந்தர்
இழையணி சிறப்பின் பெயர்வியர்ப்பு ஆற்றித்
தமர்நமக் கீத்த தலைநாள் இரவின்
உவர்நீங்கு கற்பின்எம் உயிருடம்பு அடுவி
முருங்காக் கலிங்கம் முழுவதும் வளைஇப்
பெரும்புழுக்கு உற்றநின் பிறை* நுதல் பொறிவியர்
உறுவளி ஆற்றச் சிறுவரை திறவென
ஆர்வ நெஞ்சமொடு போர்வை வவ்வலின்
உறைகழி வாளின் உருவுபெயர்ந் திமைப்ப
மறைதிறன் அறியா ளாகி ஒய்யென
நாணினள் இறைஞ்சி யோளே பேணிப்
பரூஉப்பகை ஆம்பல் குரூஉத்தொடை நீவிச்
சுரும்பிமிர் ஆய்மலர் வேய்ந்த
இரும்பல் கூந்தல் இருள்மறை ஒளித்தே.

—விற்றூற்று மூதெயினனார்.

(சொ - ள்.) க—கூ. நெஞ்சே—, மைப்பு அற - குற்றம் நீங்க, புழுக்கின் - இறைச்சியுடன் கூட்டி ஆக்கிய, நெய்க்கனி - நெய் மிக்க, வெண் சோறு - வெள்ளிய சோற்றை, வரையா வண்மையொடு-வரைதலில்லாத வள்ளன்மையுடன், புரையோர்ப் பேணி-உயர்ந்த சுற்றத்தார் முதலாயினரை உண்பித்து, புள் இனியவாகப் புணர்ந்து-புள் நிமித்தம் இனிதாகக் கூட, தெள் ஒளி அம் கண் இரு விசும்பு விளங்க-தெள்ளிய ஒளியையுடைய அழகிய இடமகன்ற பெரிய வானம் களங்க மற விளங்குதலுற, திங்கள் சகடம் மண்டிய துகள் தீர் கூட்டத்து-திங்களை உரோகணி கூடிய குற்றமற்ற நன்னாள் சேர்க்கையில், கடிநகர் புனைந்து-மணமனையை அழகுறுத்தி, கடவுள் பேணி - கடவுளை வழிபட்டு, படுமண முழவொடு - ஒலிக்கும் மணமுழவுடன், பரூஉப் பணை இமிழ - பெரிய முரசம் ஒலிக்க, வதுவை மண்ணிய மகளிர் - தலைவிக்கு மணநீராட்டிய மகளிர், பூக்கணும் இமையார் நோக்குபு - தமது கூரிய கண்களாலும் இமையாராய் நோக்கி, விதுப்புற்று மறைய - விரைந்து மறைந்திட ;

க0—அ. மென்பூ வாகைப் புல்புறக் கவட்டு இலை - மெல்லிய பூவையுடைய வாகையின் புல்லிய புறத்தினையுடைய கவர்த்த இலையை, பழங்கன்று கறித்த - முதிய கன்று கறித்த, பயம்பு அமல் - பள்ளத்திற்

* நுதற்குறுவியர்.

படர்ந்த, அறுகை-அறுகினது, தழங்கு குரல் வானின் தலைப்பெயற்கு ஈன்ற - ஒலிக்கும் குரலையுடைய மேகத்தின் முதற்பெயலால் ஈன்ற, மண்ணுமணி அன்ன - கழுவிய நீலமணியை ஒத்த, மா இதழ் கரிய இதழையுடைய, பாவை-பாவைபோலுங் கிழங்கிடத்துள்ள, தண் நறு முகையொடு-தண்ணிய நறிய அரும்புடன் (சேரக்கட்டிய), வெண் நூல் சூட்டி-வெள்ளிய நூலைச் சூட்டி, தூ உடைப் பொலிந்து - தூய உடையாற் பொலியச் செய்து, மேவரத் துவன்றி - விருப்பம் உண்டாக நெருங்கி, மழைபட்டன்ன மணன்மலி பந்தர்-மேகம் ஒலித்தாலொத்த மணவொலி மிக்க பந்தலிலே, இழை அணி சிறப்பின்-அணிகளை அணிவித்த சிறப்பினொடு, பெயர் வியர்ப்பு ஆற்றி - தோன்றிய வியர்வையை ஆற்றி, தமர் நமக்கு ஈத்த தலை நாள் இரவின் - சுற்றத்தார் நமக்குத் தந்த முதல் நாள் இரவில்;

௯—௨௧. உவர் நீங்கு கற்பின் எம் உயிர் உடம்பு அடுவி - வெறுப்பு நீங்கிய கற்பினையுடைய என் உயிர்க்கு உடம்பாக அடுத்தவன், முருங்காக் கலிங்கம் முழுவதும் வளைஇ - கசங்காத புத்துடையால் உடல் முழுவதும் போர்த்தியதால், பெரும் புழுக்கு உற்ற நின் பிறை நுதல் பொறி வியர் - மிக்க புழுக்கத்தை எய்திய நினது பிறைபோன்ற நெற்றியில் அரும்பிய வியர்வை, உறுவளி ஆற்ற சிறுவரை திற என - மிக்க காற்றுப் போக்கிடச் சிறுபொழுது திறவாய் என்று கூறி, ஆர்வம் நெஞ்சமொடு போர்வை வவ்வலின் – அன்பு மிக்க நெஞ்சமொடு போர்வையைக் கவர்தலின், உறை கழிவாளின் - உறையினின்றும் எடுத்த வாளைப்போல, உருவு பெயர்ந்து இமைப்ப - அவள் உருவம் வெளிப்பட்டு விளங்க, மறை திறன் அறியாள் ஆகி - மறையும் வகை அறியாதவள் ஆகி, பருஉப்பகை ஆம்பல் குரூஉத்தொடை நீவி - ஆம்பற் பூவின் முறிக்கப்பட்ட இதழ்களால் ஆய பருத்த நிறம் பொருந்திய மாலையை நீக்கி, சுரும்புஇமிர் ஆய் மலர் வேய்ந்த - வண்டுகள் ஒலிக்கும் ஆராய்ந்த மலரினைச் சூடிய, இரும் பல் கூந்தல் இருள்-பெரிய பலவாய கூந்தலின் இருளால், மறை ஒளித்து-மறைத்தற்குரிய உறுப்புக்களை மறைத்து, ஒய்யென நாணினள் பேணி இறைஞ்சியோள்-விரைவாக நாணி விருப்புற்று இறைஞ்சினள்; (அத்தகையாள், இன்று நாம் பல கூறி உணர்த்தவும், உணராது ஊடுகின்றாள்; இவள் என்ன உறவினள் நமக்கு!)

(முடிபு) நெஞ்சே! சோற்றைப் புரையோரைப் பேணி, கடிநகர் புனைந்து கடவுட்பேணி, வதுவை மண்ணிய மகளிர் நோக்குபு மறைய, தமர் வெண்ணூல் சூட்டி உடையாற் பொலிவித்து மணன்மலி பந்தரிடத்து வியர்ப்பாற்றி நமக்குஈத்த தலைநாளிரவின்கண், எம் உயிருடம்படுவி, கலிங்கம் வளைஇப் புழுக்குற்ற வியரை வளிஆற்றத் திறவென யாம் போர்வை வவ்வலின், உரு இமைப்ப மறைதிறனறியாளாகி, கூந்தல் இருள் மறையொளித்து, ஒய்யென நாணினள் பேணி இறைஞ்சியோளாயினள்; (அத்தகையாள் இன்று நாம் பல கூறி உணர்த்தவும் உணராதுஊடுகின்றாள் ஆகலின், இவள் நமக்குஎன்ன உறவினளோ!).

(வி - ரை.) புள்ளு - புள் நிமித்தம். சகடம் - உரோகிணி. பழந் தமிழ் மக்கள் உரோகிணியைத் திருமணத்திற்குச் சிறந்த நாளாகக் கொண்டிருந்தனர்; உரோகிணியுடன் கூடிய சந்திரன் உச்சன் ஆகலின் எவ்வகைத் தீங்கும் நீங்கும் என்னுங் கருத்தினர் போலும்; *'வானூர் மதியம் சகடணைய வானத்துச், சாலி யொருமீன் தகையாளைக், கோவலன்...தீவலம் செய்வது' என்பது காண்க. சகடம் வேண்டிய என்பது உம் பாடம். கடவுட் பேணி என்பதனால், திருமணத்தின் தொடக்கத்தில், கடவுளை வழிபடும் வழக்கம் பண்டும் உளதென்பது பெறும். †'பூக்கண்: பூ - கூர்மை: பூவாட் கோவலர்' என்புழி பூ இப்பொருட்டாதல் காண்க. மகளிர் விதப்புற்றுப் பூக்கண்ணும் இமையார் நோக்குபு என்றதனால், தலைவி மகளிரும் விரும்பும் பேரழகினள் என்பது பெறப்படும். ‡'கஞ்சத்துக் களிக்குமின்றேன்...மஞ்சர்க்கும் மாதரார்க்கும் மனமென்ப தொன்றே யன்றோ!' §'நெய்விலை பசும் பொற்றோடு...... செய்தவர் சிறுபுன் கோலம் தொறுத்தியர் திகைத்து நின்றார்' என்பன ஈண்டு அறியற்பாலன. விதப்புற்று மறைதல் கண் எச்சில் படாமைப் பொருட்டு. அறுகை-அறுகு. பெயற்கு-பெயலால்; வேற்றுமை மயக்கம். அறுகின் கிழங்கினைப் பாவை என்றல் மரபு. மாயிதழ் மூகை எனக் கூட்டுக. மணல்மலி: மணம், மணன் எனப் போலியாயிற்று. மணல் மலிந்த என்றலுமாம். பருஉப்பகை யாம்பற் குருஉத் தொடை நீவி - பாரத்தாற் பகையாயிருக்கிற பருத்த ஆம்பற் பூவாலாகிய தொடையினை நீக்கி என்றலுமாம்.

(மே - ள்.) ¶'பொய்யும் வழுவும்' என்னுஞ் சூத்திரத்து, இச் செய்யுள், களவின்வழி நிகழ்ந்த கற்புங்கோடற்கு உதாரணமாகும் என்றார், நச்.

$'புகுமுகம் புரிதல்' என்னுஞ் சூத்திரத்து 'பெரும்புழுக் குற்றநின் பிறைநுதற் பொறிவியர், உருவளி யாற்றச் சிறுவரை திறவென' என்பது பொறிநுதல் வியர்த்தல் எனும் மெய்ப்பாடும் ஆகும் என்றும், இம் மெய்ப்பாடு தலைமகட்கே யுரித்து தலைமகற்கு உரித்தன்று, உட்கும் நாணும் அவற்கு இன்மையின் என்றும் கூறினர், பேரா.

* சிலப். க-ூ௦-௫௩. † புறம். ௨௨௪. ‡ கம்ப. பால. கோலங் காண். ௧௧. § சீவக. கோவிந்தை. ௮௦. ¶. தொல். கற்பு. ௪. $ தொல். மெய்ப். ௧௩.

137. பாலை

[தலைமகன் பிரியுமெனக் கருதி வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.]

ஆறுசெல் வம்பலர் சேறுகிளைத்து உண்ட
சிறுபல் கேணி பிடியடி நசைஇக்
களிறுதொடூஉக் கடக்குங் கான்யாற்று அத்தஞ்
சென்றசேர்பு ஒல்லா ராயினும் நினக்கே
வென்றெறி முரசின் விறல்போர்ச் சோழர்
இன்கடுங் கள்ளின் உறந்தை ஆங்கண்
வருபுனல் நெரிதரும் இகுகரைப் பேரியாற்று
உருவ வெண்மணல் முருகுநாறு தண்பொழில்
பங்குனி முயக்கம் கழிந்த வழிநாள்
வீஇலை அமன்ற மரம்பயில் இறும்பில்
தீயில் அடுப்பின் அரங்கம் போலப்
பெரும்பாழ் கொண்டன்று நுதலே தோளும்
தோளா முத்தின் தெண்கடல் பொருநன்
திண்தேர்ச் செழியன் பொருப்பின் கவாஅன்
நல்லெழில் நெடுவேய் புரையும்
தொல்கவின் தொலைந்தன நோகோ யானே.

—*உறையூர் முதுகூத்தனார்.

(சொ - ள்.) ௧—௪. ஆறுசெல் வம்பலர்-சுரநெறியிற் செல்லும் புதியர், சேறு கிளைத்து உண்ட சிறு பல் கேணி-சேற்றைக் கிண்டி ஊறிய நீரை உண்ட சிறியபலவாய கேணிகளை, பிடி அடி நசைஇ-தன் பிடியின் அடிச் சுவடென விரும்பி, களிறு தொடூஉக் கடக்கும்-களிறுகள் தொட்டுப் பார்த்துக் கடந்து செல்லும், கான் யாற்று அத்தம் - காட்டாற்றினையுடைய அச் சுர நெறியில், சென்று சேர்பு ஒல்லார் ஆயினும் - சென்று சேர்தலை நம் தலைவர் இசையார் ஆயினும்;

௫—௧௨. வென்று எறி முரசின் விறல்போர்ச் சோழர் - பகைவரை வென்று அடிக்கும் முரசினையும் போர் வென்றியையும் உடைய சோழரது, இன்கடுங் கள்ளின் உறந்தை ஆங்கண் - இனிய கடுப்பு மிக்க கள்ளினையுடைய உறையூரிடத்து, வருபுனல் நெரிதரும் இகுகரைப் பேர் யாற்று - வரும்நீர் உடைத்திடும் கரைந்து மெலிந்த கரையினையுடைய பெரிய யாறாகிய காவிரியின், உருவ வெண்மணல் முருகு நாறு தண் பொழில்-அழகிய வெண்மணல் நிறைந்த தேன் நாறும் தண்ணிய

(பாடம்) * முதுகூற்றனார்.

பொழிலில், பங்குனி முயக்கம்கழிந்த வழிநாள்-பங்குனி விழாக்கழிந்த பிற்றை நாளில், வீஇலை அமன்ற மராம்பயில் இறும்பில் - பூக்களுடன் கூடிய இலைகள் நிறைந்த மரங்கள் அடர்ந்த சிறு காட்டில், தீஇல் அடுப்பின் அரங்கம்போல-அடுதல் இன்மையின் தீ இல்லையாகிய வெற்றடுப்புக்களையுடைய விழாக்களம் போல, நினக்கு நுதல் பெரும்பாழ்கொண்டன்று-உனக்கு நெற்றி பெரிதும் பொலிவற்ற நிலையினைக்கொண்டது;

கஉ—ச. தோளா முத்தின் தெண்கடல் பொருநன்-துளையிடாத புதிய முத்துக்கள் விளையும் தெளிந்த கடலையுடைய வீரனாகிய, திண் தேர்ச் செழியன்-திண்ணிய தேரினையுடைய பாண்டியனது, பொருப்பின் நவாஅன்-பொதியிலின் பக்க மலையிலுள்ள, நல் எழில் நெடுவேய் புரையும் தோளும்-நல்ல அழகிய நெடிய மூங்கிலை ஒக்கும் நின்தோளும், தொல்கவின் தொலைந்தன-பழைய அழகு கெட்டன; நோகோ யானே—யான் நோவேன்.

(முடிபு) நம் தலைவர் அத்தம் சேர்பு ஒல்லார் ஆயினும் நினக்கு நுதல் பெரும்பாழ் கொண்டன்று; தோளும் தொல்கவின் தொலைந்தன: யான் நோகோ.

(வி - ரை.) கேணியை என இரண்டனுருபு விரிக்க. அடிநசைஇ-அடியென நசைஇ. முயக்கம்-கூட்டம்; உத்தரமும் நிறைமதியும் கூடிய கூட்டம். பங்குனித் திங்களில் உத்தரமும் நிறைமதியுங் கூடிய நாள் கன்னுனாகும். அந்நாளில் உறையூரில் பங்குனி உத்தர விழாச் சிறப்புற்றிருந்ததென்பது, *'களவினுட் டவிர்ச்சி' என்னும் இறையனார் அகப்பொருட் சூத்திர உரையில், 'இனி, ஊர் துஞ்சாமை என்பது, ஊர் கொண்ட பெருவிழா நாளாய்க் கண்பாடில்லையாமாகவும் இடையீடாம் என்பது; அவை மதுரை ஆவணி யவிட்டமே, உறையூர்ப் பங்குனி யுத்தரமே கருவூர் உள்ளி விழாவே என இவையும், இவை போல்வன பிறவும் எல்லாம் அப் பெற்றியான பொழுது இடையீடாம் என்பது' என வருதலான் அறியப்படும். தீயில் அடுப்பின் அரங்கம்போல என்பதை தீயில் அடுப்பினர் அங்கம்போல எனக் கண்ணழித்து, விறலியர் உறுப்புப்போல என கலித்துரை கூறுதல் சிறப்பின்றாம் என்க.

---

138. குறிஞ்சி

[தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழிக்குச் சொல்லுவாளாய்த் தலைமகள் சொல்லியது.]

இகுளை கேட்டிசின் காதலம் தோழி
குவளை உண்கண் தெண்பனி மல்க
வறிதியான் வருந்திய செல்லற்கு அன்னை

* களவியல். சூத். கசு.

பிற்றோன்று கடுத்தன ளாகி வேம்பின்
வெறிகொள் பாசிலை நீலமொடு சூடி
உடலுநர்க் கடந்த கடலந் தானைத்
திருந்திலை நெடுவேல் தென்னவன் பொதியில்
அருஞ்சிமை இழிதரும் ஆர்த்துவரல் அருவியின்
ததும்புசீர் இன்னியங் கறங்கக் கைதொழுது
உருகெழு சிறப்பின் முருகுமனைத் தரீஇக்
கடம்புங் களிறும் பாடி நுடங்குபு
தோடுந் தொடலையுங் *கைக்கொண்டு அல்கலும்
ஆடின ராதல் நன்றோ நீடு
நின்னொடு தெளித்த நன்மலை நாடன்
குறிவரல் அரைநாள் குன்றத் துச்சி
நெறிகெட வீழ்ந்த துன்னருங் கூரிருள்
திருமணி உமிழ்ந்த நாகங் காந்தள்
கொழுமடற் புதுப்பூ வூதுந் தும்பி
நல்நிறம் மருளும் அருவிடர்
இன்னா நீளிடை நினையுமென் னெஞ்சே.

—எழுஉப்பன்றி நாகன் குமரனார்.

(சொ - ள்.) க. இகுளை - இகுளையே! காதல் தோழி-காதலை யுடைய தோழியே! கேட்டிசின் - கேட்பாயாக;

கரு—உ௦. நீடு நின்னொடு தெளித்த நன்மலை நாடன்-நெடுநாளாக நின்னொடு கடிதுவரைந்து கொள்வல் எனத் தெளிவித்து, வந்த நல்ல மலை நாடனாகிய நம் தலைவன், குறிவரல் அரை நாள்-இரவுக்குறி வரும் நடு இரவில், குன்றத்து உச்சி - அவர் வரும் குன்றின் உச்சியில், நெறி கெட வீழ்ந்த துன்அரும் கூர்இருள்-வழி தவறுமாறு செறிந்த அணுகற் கரிய மிக்க இருளிலே, திருமணி உமிழ்ந்த நாகம்-தனது அழகிய முடி மணியை உமிழ்ந்த நாகமானது, காந்தள் கொழு மடல் புதுப்பூ ஊதும் தும்பி - காந்தளது கொழுவிய மடலையுடைய புதிய பூவினை ஊதித் தாதினை அளைந்த வண்டின், நல்நிறம் மருளும்-நல்ல நிறத்தினைக் கண்டு தன் மணி என மயங்கும், அரு விடர் இன்னா நீள் இடை - அரிய பிளப்புக்களையுடைய இன்னாத நெடிய வழியை, என் நெஞ்சு நினையும் - என் மனம் நினைந்து கவலும்;

உ—ச. குவளை உண்கண் தெண் பனி மல்க-(அதனால்) குவளைப் பூவை ஒத்த எனது மையுண்ட கண்களில் தெளிந்த நீர் ததும்ப, வறிது யான் வருந்தி செல்லற்கு - யான் சிறிது வருந்திய துன்பத்தினைக்

(பாடம்) * கைக்கொண்டாடின; ளாஅதனன்றோ வன்றே நீடு.

சுண்டு, அன்னை-நம் அன்னையானவள், பிறிது ஒன்று கடுத்தனள் ஆகி-இது தெய்வத்தால் ஆயதோ எனும் வேறோர் ஐயமுற்றனளாக;

ச—கஉ. வேம்பின் வெறிகொள் பசுஇலை நீலமொடு சூடி - கட்டு விச்சியும் வேலனும் வேம்பினது காற்றமுடைய பசிய இலையுடன் நீலப் பூக்களைச் சூடி, உடலுநர்க் கடந்த கடல் தானை—மாறுபட்ட பகைவரை வென்ற கடல்போலும் சேனைகளையும், திருந்து இலை நெடுவேல்-திருந் திய இலையினைக் கொண்ட நெடிய வேலையுமுடைய, தென்னவன் பொதியில் அரும் சிமை இழிதரும் ஆர்த்துவரல் அருவியில் - பாண்டிய னது பொதியில்மலையில் அடைதற்கரிய உச்சியினின்றும் இழியும் ஆர வாரித்து வருதலையுடைய அருவி ஒலிபோல, ததும்பு சீர் இன்னியம் கறங்க - ஒலிக்கும் சீரையுடைய இனிய வாச்சியங்கள் ஒலிக்க, கைதொழுது - கையால் வணங்கி, உருகெழு சிறப்பின் முருகு மனைத் தரீஇ - அச்சம் தோன்றும் தலைமையையுடைய முருகனை மனைக்கண் வருவித்து, கடம்பும் களிறும்பாடி - அவனது கடம்பினையும் களிற்றினை யும் பாடி, தோடும் தொடலையும் கைக்கொண்டு - பனந்தோட்டினையும் கடப்ப மாலையையும் கையிற்கொண்டணிந்து, நுடங்குபு - அசைந் தசைந்து, அல்கலும் - இரவெல்லாம், ஆடினர் ஆதல் நன்றோ - ஆடுதல் நன்றாகுமோ!

(முடிபு) தோழி, நன்மலை நாடன் குறிவரல் அரைநாட் கூரிருள் இன்னு நீளிடை என் நெஞ்சு நினையும்; அதனால் உண்கண் பனிமல்கு வருந்திய செல்லற்கு, அன்னை பிறிதொன்று கடுத்தனளாக, கட்டு விச்சியும் வேலனும் முருகுமனைத் தரீஇ ஆடினராதல் நன்றோ?

(வி—ரை.) கடுத்தனளாகி: ஆக எனத் திரிக்க: கட்டுவிச்சியும் வேலனும் கட்டினானும் கழங்கினானும் குறி பார்த்து, பாசிலை நீலமொடு சூடி என விரித்துரைக்க. காதல் அம் தோழி, கடல்அம் தானை என்ற இடங்களில் 'அம்' அசை. பனந்தோடுங் கடப்பமாலையும் அணிந்து ஆடு தல், மேல், *'வெண்போழ் கடம்பொடு சூடி' என வந்தமையால் அறிக. தொடலை காந்தள் மாலையுமாம். ஆடினர் எனப் பன்மை கூறின மையின், கட்டுவிச்சியும் வேலனும் என்க. †'வெறியறி சிறப்பின் வெவ் வாய் வேலன், வெறியாட் டயர்ந்த காந்தளும்' என்பதற்கு, 'செவ்வேள் வேலைத்தான் ஏந்தி நிற்றலின், 'வேலன்' என்றார்; காந்தள் சூடி ஆடு தலிற் காந்தள் என்றார்; வேலனைக் கூறினமையிற் கணி காரிகையுங் கொள்க. காந்தளை யுடைமையானும், பனந்தோடுடைமையானும் மகளிரை வருத்துதலானும், வேலன் வெறியாட்டயர்ந்த என்றதனு னும், வேலன் ஆடுதலே பெரும்பான்மை; ஒழிந்தோர் ஆடுதல் சிறு பான்மையென்றுணர்க,' என நச்சினார்க்கினியர் உரைத்தது ஈண்டு அறிதற்பாலது. காந்தட்பூவை யூதுந்தும்பி நாகத்தின் மணிபோலும் என்னுங் கருத்து, ‡'காந்தள் அணிமலர் நறுந்தா தூதுந் தும்பி,

* அகம். கஅ. † தொல். புறத். ல. ‡ அகம். கoஅ.

கையாடு வட்டிற் றோன்றும்' என்பதனோடு ஒத்திருத்தல் அறிந்து மகிழற்பாலது.

(உ - றை.) திருமணி புமிழ்ந்த நாகம், காந்தட் புதுப்பூவை நகர்ந்ததனால் நன்னிறம்பெற்ற தும்பியைக் கண்டு, ஐயுற்று மயங்குதல் போல, நம் அன்னை தலைவனோடு இன்பந் துய்த்ததனாற் புதுச் செவ்வி யுற்ற என்னைக் கண்டு மயங்குகின்றாள் என்றவாறு.

(மே - ள்.) *'களவல ராயினும்' என்னுஞ் சூத்திரத்து, 'கட்டினுங் கழங்கினும்...செய்திக் கண்ணும்' என்ற துறைக்கு இச்செய்யுளைக் காட்டி, இதன்கண் கட்டென்றாயினும் கழங்கென்றாயினும் விதந்து கூறாமையின் இரண்டும் ஒருங்கு வந்தன' என்றும், †'பொழுதும் ஆறும்' என்னுஞ் சூத்திரத்து, அன்னவை பிறவும் என்னும் பகுதியில், 'கடம்புங் களிறும்...ஆதல் நன்றோ' என்பது, தலைவற்கு வெறியாட்டு உணர்த்தியது என்றும் கூறினர், நச்.

139. பாலை

[பிரிவிடை மெலிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.]

துஞ்சுவது போல இருளி விண்பக
இமைப்பது போல மின்னி உறைக்கொண்டு
ஏறுவது போலப் பாடுசிறந் துரைஇ
நிலம்நெஞ்சு உட்க ஓவாது சிலைத்தாங்கு
ஆர்தளி பொழிந்த வார்பெயல் கடைநாள்
ஈன்றுகாள் உலந்த வாலா வெண்மழை
வான்தோய் உயர்வரை ஆடும் வைகறைப்
‡புதலொளி சிறந்த காண்பின் காலைத்
தண்ணறும் படுநீர் மாந்திப் பதவருந்து
வெண்புறக் குடைய திரிமருப்பு இரலை
வார்மணல் ஒருசிறைப் பிடவவிழ் கொழுநிழற்
காமர் §துணையொடு ஏமுற வதிய
அரக்குநிற உருவின் ஈயல் மூதாய்
பரப்பி யவைபோல் பாஅய்ப் பலவுடன்
நீர்வார் மருங்கின் ஈரணி திகழ
இன்னும் வாரா ராயின் நன்னுதல்

* தொல். கள. உச. † தொல். பொருள். கக.

(பாடம்) ‡ புதலே ரணிந்த. § துணையோ டமர்துயில்.

யாதுகொல் மற்றவர் நிலையே காதலர்
கருவிக் காரிடி இரீஇய
*பருவ மன் அவர் வருதுமென் றதுவே.

—இடைக்காடனார்.

(சொ-ள்.) கக. நன்னுதல்-நல்ல நெற்றியையுடைய தோழியே!

க—அ. துஞ்சுவதுபோல இருளி - மேகம் உறங்குவது போல இருண்டு, இமைப்பதுபோல விண்பக மின்னி-கண் இமைப்பதுபோல விண்பிளக்க மின்னி, உறைக்கொண்டு ஏறுவதுபோல பாடு சிறந்து உரைஇ-நீரைக்கொண்டு மேலேறுவதுபோல ஒலிமிக்குப் பரந்து, நிலம் நெஞ்சு உட்க ஓவாது இலைத்து-நிலத்தின் நெஞ்சு துணுக்குற ஒழியாது இடித்து, ஆர் தளி பொழிந்த வார்பெயல் கடைநாள் - மிக்க நீரைச் சொரிந்த நீண்ட பெயலைக் கொண்ட கார்காலத்தின் கடைநாளில், ஈண்டு நான் உலந்த வாலா வெண் மழை-பெய்து நாள் கழிந்த தூய்மை யில்லாத வெளிய மேகம், வான்தோய் உயர்வரை ஆடும் வைகறை - வானை அளாவிய உயர்ந்த மலையில் தவழும் வைகறையாகிய, புதல் ஒளி சிறந்த காண்பு இன் காலை - புதல்கள் ஒளியாற் சிறந்த காண்டற்கு இனியவாகும் காலத்தே;

க—கடு. தண் நறும் படுநீர் மாந்தி - குளிர்ந்த நறிய குளத்தின் நீரை நிறைய உண்டு, பதவு அருந்து - அறுகம்புல்லை மேயும், வெண் புறக்கு உடைய திரிமருப்பு இரலை-வெள்ளிய புறத்தினையுடைய திரிந்த கொம்பினையுடைய ஆண்மான், வார் மணல் ஒரு சிறை பிடவு அவிழ் கொழு நிழல் - நீண்ட மணலின் ஒருபக்கத்தே மலர் விரிந்த பிடவினது கொழுவிய நிழலிலே; காமர் துணையொடு ஏம் உற வதிய- அழகிய தன் பிணையுடன் இன்பம் பொருந்தத் தங்க, அரக்கு நிற உருவின் ஈயல் மூதாய் - செவ்வரக்கு அனைய நிறத்தையும் அழகினையுமுடைய தம்பலப் பூச்சிகள், பரப்பியவைபோல் பாஅய்ப் பலவுடன் - பரப்பி வைத்தாற் போலப் பலவும் ஒருங்கே பரந்து, நீர்வார் ஈர் மருங்கின் அணி திகழ - நீர் ஒழுகிய ஈரமுடைய இடத்தில் அழகுடன் விளங்க;

கக—எ. இன்னும் காதலர் வாரார் ஆயின்-இன்னும் நம் காதலர் வந்திலரேல், அவர் நிலை யாது கொல்-அவரது நிலை என்னையோ;

கஅ—கூ. அவர் வருதும் என்றது-அவர் மீண்டு வருவேம் என்று கூறியது, கருவிக் கார் இடி இரீஇய பருவம் மன் - தொகுதியையுடைய மேகங்கள் இடிகளைக் கொண்ட இந்தப் பருவம் அன்றோ!

(முடிபு) மேகம் தளி பொழிந்த கடைநாள் வெண்மழை ஆடும் வைகறையாகிய காலை, இரலை துணையொடு ஏமுற வதிய, ஈயன் மூதாய் அணி திகழ, காதலர் இன்னும் வாராராயின், அவர் நிலை யாது கொல். அவர் வருதும் என்றது கார் ஆகிய பருவம் மன்.

(பாடம்) * பருவமன்றவர்.

(வி-ரை.) சிலைத்தாங்கு: ஆங்கு, அசை. ஆம் கார் எனப்பிரித்து நீரையுடைய மேகம் என்பாரும் உளர்; வைகறையாகிய காலை என்க. படு – குளம். புறக்கு-புறம்; உடலின் வெளிப்புறம். இரலை வதியவும், ஈயன் மூதாய் திகழவும் இக்காலத்தும் வந்திலராயின் என்க. பருவ மன்றவர் என்பது பாடமாயின், மன்ற என்றதன் அகரம் தொக்கதாகக் கொள்க. இப்பாட்டு உரிப்பொருளாற் பாலையாயிற்று.

(மே-ள்.) *'திணைமயக்கு உறுதலும்' என்னுஞ் சூத்திரத்து, இச் செய்யுட்கண், பாலைக்கண் முன்பனியும் வைகறையும் ஒருங்கு வந்தன என்றும், †'வேந்துறு தொழிலே யாண்டின தகமே' என்னுஞ் சூத்திரத்து, 'கருவிக் காரிடி யிரீஇய, பருவ மன் அவர்' வருதுமென் றதுவே (என்னும்) இது, கார் குறித்து வருவரென்றலின், அறுதிங்கள் இடைவிட்டது' என்றும் கூறினர், நச்.

140. நெய்தல்

[இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து நீங்குந் தலைமகன் பாங்கற்குரைத்தது.]

பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர்
இருங்கழிச் செறுவின் உழாஅது செய்த
வெண்கல் உப்பின் கொள்ளை சாற்றி
என்றூழ் விடர குன்றம் போகும்
கதழ்கோல் உமணர் காதல் மடமகள்
சில்கோல் எல்வளை தெளிர்ப்ப வீசி
நெல்லின் நேரே வெண்கல் உப்பெனச்
சேரி விலைமாறு கூறலின் மனைய
விளியறி ஞமலி குரைப்ப வெரீஇய
மதர்கயல் மலைப்பின் அன்னகண் எமக்கு
இதைமுயல் புனவன் புகைநிழல் கடுக்கும்
மாமூ தள்ளல் அழுந்திய சாகாட்டு
எவ்வந் தீர வாங்குந் தந்தை
கைபூண் பகட்டின் வருந்தி
வெய்ய உயிர்க்கும் நோயா கின்றே.

—அம்மூவனார்.

(சொ-ள்.) க—ரு. பெருங் கடல் வேட்டத்து-பெரிய கடலில் மீன் வேட்டை செய்யும், சிறுகுடிப் பரதவர்-சிறு குடியில் வாழும் பரத

* தொல். அகத். கஉ. † தொல் கற்பு: சஅ.

வர், இருகழி செறுவில்-பெரிய உப்பங்கழியாய செய்யில், உழாஅது செய்த வெண்கல் உப்பின்-உழாமலே விளைவித்த வெள்ளிய கல் உப்பின், கொள்ளை சாற்றி-விலை கூறி, என்றூழ் விடர குன்றம் போகும்-ஞாயிற்றின் வெம்மையாலாய பிளப்புக்களையுடைய குன்றங்களைக் கடந்துபோகும், கதழ்கோல் உமணர் காதல் மடமகள் - கடாவினை விரையத் தூண்டும் கோலினையுடைய உப்பு வாணிகரது காதலையுடைய இளைய மகள்;

கூ—௧0 சில்கோல் எல்வளை தெளிர்ப்ப வீசி-சிலவாகிய திரண்ட இலங்கும் வளைகள் ஒலிக்க வீசி, நெல்லின் நேரே வெண் கல் உப்பு என-நெல்லுக்கு ஒத்த அளவினதே வெள்ளிய கல்லுப்பு என்று, சேரி விலைமாறு கூறலின்-சேரியில் பண்ட மாற்றாகிய விலை கூறலின், விளி அறி ஞமலி குரைப்ப - ஒலி வேற்றுமை அறியும் மனையிலுள்ள நாய் வேற்றுக் குரலென்று குரைத்துவர, வெரீஇய மதர் கயல் மலைப்பின் அன்ன கண்- அதற்கு அஞ்சிய மதர்த்த கயல் இரண்டு எதிர்த்துப் பொருவது போன்ற அவள் கண்கள்;

௧0 எமக்கு-எமக்கு, இதை முயல் புனவன் புகை நிழல் கடுக்கும்- புதுக்கொல்லை ஆக்க முயலும் குறவன் மரங்களைச் சுட்டெரிக்கும் தீயின் புகை நிழலை ஒக்கும், மாமூது அள்ளல்-கரிய பழஞ் சேற்றிலே, அழுந்திய சாகாட்டு எவ்வம் தீர - அழுந்திய பண்டியின் இடையூறு நீங்க, வாங்கும்-வருந்தி இழுக்கும், தந்தை கைபூண் பகட்டின் வருந்தி — அவள் தந்தை கையிற் பற்றிய பகடுபோல் வருந்தி, வெய்ய உயிர்க்கும் நோய் ஆகின்ற - வெய்யவாக உயிர்த்தலைச் செய்யும் நோய் ஆகின்றது.

(முடிபு) உமணர் காதல் மடமகள் சேரிக்கண் விலைமாறு கூறலின்; ஞமலி குரைப்ப, வெரீஇய கண், எமக்கு நோய் ஆகின்று.

(வி - ரை.) பகடு - கடா; எருதுமாம். கண்ணால் நோயாகின்றது என்றலுமாம்.

141. பாலை

[பிரிவிடை ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.]

அம்ம வாழி தோழி கைம்மிகக்
கனவுங் கங்குல்தோ றினிய நனவும்
புனைவினை நல்இல் புள்ளும் பாங்கின
நெஞ்சு நனிபுகன் றுறையும் எஞ்சாது
உலகுதொழில் உலந்து நாஞ்சில் துஞ்சி

மழைகால் நீங்கிய மாக விசும்பில்
குறுமுயல் மறுநிறங் கிளர மதிநிறைந்து
அறுமீன் சேரும் அகலிருள் நடுநாள்
மறுகுவிளக் குறுத்து மாலை தூக்கிப்
பழவிறல் மூதூர்ப் பலருடன் *துவன்றிய
விழவுடன் அயர வருகதில் அம்ம
துவரப் புலர்ந்து தூமலர் கஞலித்
தகரம் நாறுந் தண்நறுங் கதுப்பின்
புதுமண மகடூஉ அயினிய கடிநகர்ப்
பல்கோட்டு அடுப்பில் பால்உலை இரீஇக்
கூழைக் கூந்தல் குறுந்தொடி மகளிர்
பெருஞ்செய் நெல்லின் வாங்குகதிர் முறித்துப்
பாசவல் இடிக்கும் இருங்காழ் உலக்கைக்
கடிதிடி †வெரீஇய கமஞ்சூல் வெண்குருகு
தீங்குலை வாழை ஓங்குமடல் இராது
நெடுங்கால் மாஅத்துக் குறும்பறை பயிற்றுஞ்
செல்குடி நிறுத்த பெரும்பெயர்க் கரிகால்
வெல்போர்ச் சோழன் இடையாற் றன்ன
நல்லிசை வெறுக்கை தருமார் பல்பொறிப்
புலிக்கேழ் உற்ற பூவிடைப் பெருஞ்சினை
நரந்த நறும்பூ நாண்மலர் உதிரக்
கலைபாய்ந்து உகளுங் கல்சேர் வேங்கைத்
தேங்கமழ் நெடுவரைப் பிறங்கிய
வேங்கட வைப்பிற் சுரன்இறந் தோரே. —நக்கீரர்.

(சொ - ள்.) ௧—௪. அம்ம வாழி தோழி - தோழியே! நான் கூறுவதனைக் கேட்பாயாக; கங்குல்தோறு கனவும் கைம்மிக இனிய - இரவுதோறும் கனவும் மிகவும் இனியவாகின்றன, நனவும் புனைவினை நல் இல் புள்ளும் பாங்கின - நனவிலும் புனையப் பெற்ற தொழில்களையுடைய நல்ல மனையிலே புள் நிமித்தங்கள் நல்லனவாகின்றன, நெஞ்சும் எஞ்சாது நனி புகன்று உறையும்-என் நெஞ்சும் சுருங்காது மிகவும் விருப்பம்மேவி அமைதியுற்றிருக்கும்;

௧௨—௨௪. துவரப் புலர்ந்து - முற்ற உலர்ந்து, தூமலர் கஞலி - தூய மலர்கள் நெருங்கப்பெற்று, தகரம் நாறும்-மயிர்ச்சாந்து மணக்கும், தண்நறும் கதுப்பின்-தண்ணிய நறிய கூந்தலையுடைய, புதுமண

(பாடம்) * துவன்றி. † வெரீஇ.

மகடூஉ-புதிய மணமகள், அயினிய-உணவு மிக்க, கடிநகர்-மண மனையில், பல்கோட்டு அடுப்பில்-பல புடைகளையுடைய அடுப்பில், பால் உலை இரீஇ-பாலை உலையாக வார்த்து, கூழைக் கூந்தல் குறு தொடி மகளிர்-கூழையாகிய கூந்தலையும் சிறிய வளையலையும் உடைய இள மகளிருடன், பெரும் செய் நெல்லின் வாங்கு கதிர் முறித்து-பெரிய வயலில் விளைந்த நெல்லின் வளைந்த கதிரினை முறித்து, பசு அவல் இடிக்கும்-பசிய அவலாகக் குற்றும், இரும் காழ் உலக்கைக் கடிது இடி வெரீஇய-கரிய வயிரமாய உலக்கையின் விரைந்த இடிக்கு அஞ்சிய, கமம் சூல் வெண் குருகு-நிறைந்த சூலினையுடைய வெள்ளிய பறவை, தீம் குலை வாழை ஓங்கு மடல் இராது-இனிய குலையினையுடைய வாழையின் உயர்ந்த மடலில் இராது, நெடுகால் மாஅத்துக் குறும் பறை பயிற்றும்-நெடிய காலையுடைய மாமரத்தின்கண் குறுகப் பறந்து செல்லும் பதியாய, செல்குடி நிறுத்த பெரும் பெயர்-கெட்ட குடிகளைத் தாங்கிய பெரும் புகழையுடைய, வெல் போர்-வெல்லும் போரையுமுடைய, கரிகால் சோழன்-கரிகால் வளவனது, இடையாறு அன்ன-இடையாற்றினை ஒத்த, நல் இசை வெறுக்கை தருமார்-நல்ல புகழ் வாய்ந்த செல்வத்தை ஈட்டிவர;

உ௪—௬. கல்சேர் வேங்கை-மலையிடத்துள்ள வேங்கைமரத்தின், பல்பொறிப் புலிக் கேழ் உற்ற பூ இடை-பல புள்ளிகளையுடைய புலியின் நிறத்தினைப் பொருந்திய பூக்களிடையே, பெருஞ்சினை நரந்தம் நறும் பூ நாள்மலர் உதிர-பெரிய கிளையினையுடைய நாரத்தை மரத்தின் நறிய அழகிய புதிய மலர்கள் உதிர, கலை பாய்ந்து உகளும்-முசுக்கலை பாய்ந்து தாவும், தேம் கமழ் நெடுவரைப் பிறங்கிய-தேன் நாறும் நீண்ட சிமையங்களால் விளங்கிய, வேங்கடவைப்பின் சுரன் இறந்தோர்-வேங்கட மலையைச் சார்ந்த ஊர்களையுடைய சுரநெறியைக் கடந்து சென்றோர்;

௭—௧௧. நாஞ்சில் துஞ்சி-கலப்பைகள் மடிந்து, உலகு தொழில் உலந்து-உலகின்கண் உழுதொழில் முடிந்தவிட, மழை கால் நீங்கிய மாக விசும்பில்-மழை பெய்தல் ஒழிந்த வானின்கண்ணே, குறு முயல் மறுநிறம் கிளர-குறிய முயலாகிய மறுவின் நிறம் விளங்க, மதி நிறைந்து-மதி நிறைவுற்று, அறுமீன் சேரும் இருள் அகல் நடுநாள்-கார்த்திகையைச் சேரும் இருள் அகன்ற நடு இரவில், மறுகு விளக்கு உறுத்து-தெருக்களில் விளக்குகளை நிரல்பட ஏற்றி, மாலை தூக்கி-மாலைகளைத் தொங்கவிட்டு பழவிறல் மூதூர் பலர் உடன் துவன்றிய-பழமையான வென்றியுடைய முதிய ஊரின்கண் பலரும் ஒருங்கு சேர்ந்த, விழவு உடன் அயர-விழவினை நம்முடன் கொண்டாட, வருக-வருவாராக.

(முடிபு) தோழி! வாழி! கனவும் இனிய; நனவும் புள்ளும் பாங்கின; நெஞ்சும் எஞ்சாது புகன்று உறையும்; கரிகால் இடையாற்றன்ன

வெறுக்கை தருமார் வேங்கட வைப்பின் சுரம் இறந்தோர்; (ஆய நம் தலைவர்); பழவிறல் மூதூர் மதி நிறைந்து அறுமீன் சேரும் நடுநாள் விழவு நம்முடன் அயர வருகதில்.

(வி - ரை.) கனவும் நனவும் என்பவற்றின் உம்மை எச்சவும்மை. புள்-புள்நிமித்தம். உலந்து - உலக்க எனத் திரிக்க. மாகவிசும்பு: இருபெயரொட்டு. அறுமீன் - கார்த்திகை. கார்த்திகைத்திங்களின், கார்த்திகை நாளில், மறுகுகளில் நிரைநிரையாக விளக்கு ஏற்றி விழாக் கொண்டாடும் வழக்கம் பண்டுதொட்டுள்ள தென்பது, இதனாலும், பிறாண்டு வருவனவற்றானும் அறியப்படும்: *இலையில மலர்ந்த முகையில் இலவம், கலிகொ ளாய மலிபு தொகு பெடுத்த, அஞ்சுடர் நெடுங்கொடி பொற்பத் தோன்றி, '†கார்த்திகைச் சாற்றிற் கழிவிளக்குப் போன்றனவே' என்பன காண்க. தில், விழைவு. அம்ம, அசை. உலையிற் பெய்தற் பொருட்டு அவல் இடிப்பர் என்க. இடி வெரீஇய - இடியாலாய ஓசையை வெருவிய என்க. இடையாறு-இடையாற்று மங்கலம் என்னும் ஊர். கனவு முதலியவற்றால் தலைவர் விரைந்து வருவர் எனத் துணிந்து, ஆற்றுவல் என்பதுபடத் தலைமகள் தோழிக்குக் கூறினள்.

---

142. குறிஞ்சி

[இரவுக்குறி வந்து நீங்கும் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.]

இலமலர் அன்ன அஞ்செந் நாவிற்
புலமீக் கூறும் புரையோர் ஏத்தப்
பலர்மேந் தோன்றிய கவிகை வள்ளல்
நிறையருந் தானை வெல்போர் மாந்தரம்
பொறையன் கடுங்கோப் பாடிச் சென்ற
குறையோர் கொள்கலம் போல நன்றும்
உவவினி வாழிய நெஞ்சே காதலி
முறையின் வழாஅது ஆற்றிப் பெற்ற
கறையடி யானை நன்னன் பாழி
ஊட்டரு மரபின் அஞ்சுவரு பேஎய்க்
கூட்டெதிர் கொண்ட வாய்மொழி மிஞிலி
புள்ளிற் கேம மாகிய பெரும்பெயர்
வெள்ளத் தானை ‡அதிகற் கொன்றுவந்து

---

* அகம். ௧௧. † களவழி. ௧எ. (பாடம்) ‡ அதியற்.

ஒள்வாள் அமலை ஆடிய ஞாட்பிற்
பலரறி வுறுதல் அஞ்சிப் பைப்பய
நீர்த்திரள் கடுக்கும் மாசில் வெள்ளிச்
சூர்ப்புறு கோல்வளை செறித்த முன்கைக்
குறையறல் அன்ன இரும்பல் கூந்தல்
இடனில் சிறுபுறத் திழையொடு துயல்வரக்
கடல்மீன் துஞ்சும் நள்ளென் யாமத்து
உருவுகிளர் ஏர்வினைப் பொலிந்த பாவை
இயல்கற் றன்ன ஒதுக்கினள் வந்து
*பெயலலைக் கலங்கிய மலைப்பூங் கோதை
இயலெறி பொன்னின் கொங்குசோர்பு உறைப்பத்
தொடிக்கண் வடுக்கொள முயங்கினள்
வடிப்புறு நரம்பில் தீவிய மொழிந்தே. —பரணர்.

(சொ-ள்.) ஏ, நெஞ்சே-, வாழிய-, காதலி-நம் காதலியானவள்;

அ—க௪. முறையின் வழாஅது ஆற்றிப் பெற்ற - நீதி முறையின் வழுவாமல் கடமையினைச் செய்து பெற்ற, கறை யடி யானை நன்னன் பாழி - உரல்போலும் அடியினையுடைய யானையையுடைய நன்னனது பாழியிலுள்ள, ஊட்டு அரும் மரபின் அஞ்சுவரு பேய்க்கு - பலியிடற்கு அரிய தன்மையையுடைய அஞ்சத்தக்க பேய்க்கு, ஊட்டு எதிர் கொண்ட வாய்மொழி மிஞிலி - ஊட்டுதலை ஏற்றுக்கொண்ட வாய்மை பொருந்திய மிஞிலி என்பான், புள்ளிற்கு ஏமம் ஆகிய - புட்களுக்குப் பாதுகாவல் ஆகிய, பெரும் பெயர் — பெரும்புகழினையுடைய, வெள்ளத் தானை அதிகன் கொன்று உவந்து - வெள்ளம் போன்ற சேனையினையுடைய அதிகன் என்பானைக் கொன்று மகிழ்ந்து, ஒள்வாள் அமலை ஆடிய ஞாட்பின் - 'ஒள்வாள் அமலை' எனும் வென்றிக்கூத்தை ஆடிய போர்க்களப் பூசலைப்போல, பலர் அறிவுறுதல் அஞ்சி - பலரும் அறிந்து அலர் கூறலை அஞ்சி;

கரு—உஉ. நீர்த் திரள் கடுக்கும் - நீரின் திரட்சியை ஒக்கும், மாசு இல் வெள்ளி - குற்றமற்ற வெள்ளியினாலாய, சூர்ப்பு உறு கோல் வளை - வளைவு பொருந்திய திரண்ட வளைகள், செறித்த முன் கை - செறிக்கப்பெற்ற முன் கையளாய், குறை அறல் அன்ன இரும்பல் கூந்தல் - நீர் குறைந்த அறலை ஒத்த கரிய பலவாய கூந்தல், இடன் இல் சிறுபுறத்து இழையொடு துயல்வர - அகற்சியில்லாத பிடரியின்பாலுள்ள அணியோடு கூடி அசைய, கடல்மீன் துஞ்சும் நள் என் யாமத்து - கடல் மீன்கள் துயிலும் நள்ளென்று ஒலிக்கும் இடையாமத்தில், உருவு கிளர் ஏர்வினை பொலிந்த பாவை - அழகு கிளர்ந்த பொலி

(பாடம்) * பெயலலை.

வினையுடைய செய்தொழிலாற் சிறந்தபாவை, இயல் கற்றன்ன ஒதுக்கினன் - நடை கற்றாற்போன்ற நடையினளாய், பைப்பைய வந்து - மெல்ல மெல்ல வந்து ;

உந—சு. பெயல் அலை கலங்கிய - மழையின் அலைத்தலாற் கலங்கிய, மலை பூ கோதை - மலைப் பூக்களாலாய மாலையினின்றும், எறி இயல் பொன்னில் - உலைக்களத்து அடிக்குங்கால் தெறித்து விழும் பொற்றாள்போல், கொங்கு சோர்பு உறைப்ப - தேன் துளித்து விழ, வடிப்பு உறு நரம்பில் தீவிய மொழிந்து - வடித்தல் அமைந்த யாழ் நரம்பின் ஒலிபோல இனிய மொழிகளைக்கூறி, தொடிக்கண் வடுக்கொள முயங்கினள் - வட்டமாய முலைக்கண்ணின் வடுவுண்டாகத் தழுவினள் ;

க—எ. இலமலர் அன்ன அம்செம் நாவின் - இலவமலர் போன்ற அழகிய சிவந்த நாவினால், புலம் மீக் கூறும் புரையோர் ஏத்த - புலமையால் உயர்த்திக் கூறப்பெறும் மேலோர் புகழ, பலர் மேந்தோன்றிய கவி கை வள்ளல் - பலரினும் மேம்பட்ட கொடுத்தலாற் கவிந்த கையினையுடைய வள்ளலாய, நிறை அருந் தானை - நிறுத்துதற்கரிய சேனையினையுடைய, வெல்போர் - போர் வெல்லும், மாந்தரம்பொறையன் கடுங்கோ - மாந்தரம் பொறையன் கடுங்கோ என்னும் சேர மன்னனை, பாடிச் சென்ற குறையோர் கொள்கலம் போல - பாடிச்சென்ற வறியோராது பிச்சை ஏற்கும் கலம்போல, நன்றும் உவ இனி - இனிப் பெரிதும் நிறைவுற்று மகிழ்வாயாக.

(முடிபு) நெஞ்சே! வாழிய! காதலி, மிஞிலி அதிகற்கொன்று ஒள்வாள் அமலை ஆடிய ஞாட்பின் பலர் அறிவுறுதல் அஞ்சி; நள்ளென் யாமத்து வந்து; தீவிய மொழிந்து; தொடிக்கண் வடிக்கொள முயங்கினள்; மாந்தரம் பொறையன் கடுங்கோப் பாடிச்சென்ற குறையோர் கொள்கலம் போல இனி உவப்பாயாக. நன்னன் பாழிப் பேய்க்கு ஊட்டெதிர் கொண்ட வாய்மொழி மிஞிலி என்க. காதலி கூந்தல் துயல்வர வந்து தீவிய மொழிந்து தொடிக்கண் வடுக்கொள முயங்கினள் என்க.

(வி - ரை.) இல்வ மலர் : இலமலர், விகாரம். கறையடி-குருதிக் கறை பொருந்திய அடி எனலுமாம். ஊட்டு எதிர்கொண்ட - உண்பித்தலை ஏற்றுக்கொண்ட ; களவேள்வியாற் பேய்க்கு ஊட்டிய என்றபடி. புள்ளிற்கு ஏமமாயினன் என்பது, *'தன்னநுங் கானம்' †'யாம இரவின்' என்னும் செய்யுட்களானும் அறியப்படுகின்றது. அதிகன் என்பது, ஆய் எயினனுக்குரிய வேறு பெயர் போலும், எயினன் என்றே பிறண்டு வந்திருத்தலின் ; அன்றி எயினற்கொன்றுவந்து என்று பாடங் கொள்ளுதலுமாம். ஒள்வாள் அமலை யென்பது தம்பைத் திணையின் ஓர் துறை; வாள்வீரர் தம் தலைவனுடன் ஆடுதல் அதன் இலக்கணம். சூர்ப்பு - வளைவு. தொடி - வட்டம். தொடிக்கண் - வளையாலாய என்றுரைத்தலுமாம்; ஈண்டுக் கண் வேற்றுமை மயக்கம்.

---

* அகம். கஅக. † அகம். உ0அ.

(மே-ள்.) *'செல்வம் புலனே' என்னுஞ் சூத்திரத்து; 'தொடிக்கண் வடுக்கொள முயங்கினள், வடிப்புறு நரம்பிற் றீவிய மொழிந்தே' என்பது, புணர்ச்சிபற்றிய உவகை யென்றும், †'வினைபயன் மெய்யுரு' என்னுஞ் சூத்திரத்து, 'உருவுகிளர் ஏர்வினைப் பொலிந்த பாவை, இயல் கற்றன்ன ஒதுக்கினள்' என்பது வடிவு பற்றிய உவமம் என்றும் கூறினர், பேரா.

---

143. பாலை

[பொருள்வயிற் பிரியக் கருதிய தலைமகனைத் தோழி தலைமகளது ஆற்றாமை கண்டு செலவழுங்குவித்தது.]

செய்வினைப் பிரிதல் எண்ணிக் கைம்மிகக்
காடு‡கவின் ஒழியக் கடுங்கதிர் தெறுதலின்
நீடுசினை வறிய வாக ஒல்லென
§வாடுபல் அகலிலை கோடைக்கு ஒய்யும்
தேக்கமல் அடுக்கத்து ஆங்கண் மேக்கெழுபு
முளிஅரில் பிறந்த வளிவளர் கூர்எரிச்
சுடர்நிமிர் நெடுங்கொடி விடர்முகை முழங்கும்
¶வெம்மலை அருஞ்சுரம் நீந்தி ஐய
சேறும் என்ற சிறுசொற் கிவட்கே
வசையில் வெம்போர் வானவன் மறவன்
நசையின் வாழ்நர்க்கு நன்கலஞ் சுரக்கும்
பொய்யா வாய்வாள் புனைகழல் பிட்டன்
மைதவழ் உயர்சிமைக் குதிரைக் கவாஅன்
அகலறை நெடுஞ்சுனைத் துவலையின் மலர்ந்த
தண்கமழ் நீலம் போலக்
கண்பனி கலுழ்ந்தன நோகோ யானே.

—ஆலம்பேரி சாத்தனார்.

(சொ-ள்.) ௧—௪. ஐய - ஐயனே! செய்வினைப் பிரிதல் எண்ணி - பொருள் ஈட்டும் வினைக்கண் பிரிதலை எண்ணி, காடு கவின் ஒழிய - காடு அழகுகெட, கடும் கதிர் கைம்மிகத் தெறுதலின் - ஞாயிற்றின் கடிய கதிர் அளவு கடந்து காய்தலின், நீடுசினை வறிய ஆக - நீண்ட கிளைகள் வறியன ஆக, ஒல்லென வாடு பல் அகல் இலை - ஒல்லெனும் ஒலியுடன் வாடிய பல அகன்ற இலைகள், கோடைக்கு ஒய்யும்

---

*. தொல். மெய்ப். ௧௧. தொல். உவம. ௧.

(பாடம்) ‡ கவின் அழிய. § ஆடுபல் லகவிலை. ¶ வெம்முலை.

மேல் காற்றால் உதிர்க்கப்பெறும், தேக்கு அமல் அடுக்கத்து ஆங்கண் - தேக்கு மரங்கள் நிறைந்த பக்கமலைகளாய அவ்விடத்து, முளி அரில் பிறந்த வளிவளர் கூர் எரி - காய்ந்த தூறுகளிற் பிறந்ததும் காற்றினால் வளர்ந்தோங்கியதுமான மிக்க தீயின், சுடர் விமிர் நெடும் கொடி - ஒளி மிக்க நீண்ட ஒழுங்கு, மேக்கு எழுபு விடர்முகை முழங்கும் - மேலே எழுந்து மலைப்பிளப்பாகிய குகைகளில் முழங்கும், வெம்மலை அரும் சுரம் நீந்தி-வெப்பம் மிக்க மலையைச் சார்ந்த அரிய சுரத்தினைக் கடந்து சேறும் - என்ற சிறு சொற்கு - நாம் போவேம் என்று கூறிய நமது சில வாய சொல்லைக் கேட்டதற்கே;

கூ—கச. இவட்கு - இத்தலைவிக்கு, வசை இல் வெம்போர் வானவன் மறவன் - பழியில்லாத கொடிய போர் வல்ல சேரன் படைத்தலைவனான, நசையின் வாழ்நர்க்கு நன்கலம் சுரக்கும் - பரிசில் விருப்புடன் வாழ்வார்க்கு நல்ல அணிகலன்களை அளிக்கும், பொய்யா வாய்வாள் புனைகழல் பிட்டன் - தப்பாது வென்றி வாய்க்கும் வாளினையும் புனைந்த கழலினையும் உடைய பிட்டன் என்பானது, மைதவழ் உயர் சிமை குதிரைக் கவான் - மேகம் தவழும் உயர்ந்த உச்சியினையுடைய் குதிரை மலையின் பக்க வரையில், அகல் அறை நெடும் சுனைத் துவலையின் மலர்ந்த - அகன்ற பாறையிலுள்ள நெடிய சுனையிடத்து மழைத் துவலையால் மலர்ந்த, தண் கமழ் நீலம் போல - குளிர்ந்த மணம் கமழ்கின்ற நீலமலர் நீர் ஒழுகுவது போல, கண் பனி கலுழ்ந்தன - கண்கள் நீரைச் சொரிந்தன, யான் நோகு - யான் அது கண்டு நோவேன் ஆயினன்.

(முடிபு) ஐய! நீ செய்வினைப் பிரிதல் எண்ணி, வெம்மலை அருஞ் சுரம் நீந்திச் சேறும் என்ற சிறு சொற்கு, இவட்கு, பிட்டன் குதிரைக் கவான் சுனை நீலம்போலக் கண் பனி கலுழ்ந்தன; யான் நோகோ.

அடுக்கத்து ஆங்கண் கூரெரி நெடுங்கொடி விடர்முகை முழங் கும் வெம்மலை அருஞ்சுரம் என்க.

(வி - ரை.) ஒல்லென ஆடு எனப் பிரித்து, ஒல்லென்னும் ஒலி யுண்டாக அசையும் என்றலுமாம். கோடைக்கு - கோடையால், ஒய்தல்-செலுத்தல். மேக்கு-மேலிடம். கொடி-ஒழுங்கு. விடராகிய முகை என்க. சிறு சொல்-நன்மை யல்லாத சொல்லுமாம். பொய்யாத பிட்டன் எனவும், பொய்யாது சுரக்கும் பிட்டன் எனவும் கூட்டி யுரைத்தலுமாம். துவலையின் மலர்ந்த - துவலையொடு மலர்ந்த என்றுமாம்.

144. முல்லை

[வினைமுற்றிய தலைமகன் தன்னெஞ்சிற்கு உரைப்பானுய்ப் பாகற்குச் சொல்லியது.]

*வருதும் என்ற நாளும் பொய்த்தன
†அரியேர் உண்கண் நீரும் நில்லா
தண்கார்க்கு ஈன்ற பைங்கொடி முல்லை
வைவாய் வான்முகை அவிழ்ந்த கோதை
பெய்வனப்பு இழந்த கதுப்பும் உள்ளார்
அருள்கண் மாறலோ மாறுக அந்தில்
அறனஞ் சலரே ஆயிழை நமரெனச்
சிறிய சொல்லிப் பெரிய புலம்பினும்
பனிபடு நறுந்தார் குழைய நம்மொடு
துனிதீர் முயக்கம் பெற்றோள் போல
உவக்குவள் வாழிய நெஞ்சே விசும்பின்
ஏறெழுந்து முழங்கினும் மாறெழுந்து சிலைக்கும்
கடாஅ யானை கொட்கும் பாசறைப்
போர்வேட்டு எழுந்த மள்ளர் ‡கையதை
கூர்வாள் குவிமுகஞ் சிதைய நூறி
மானடி மருங்கில் பெயர்த்த குருதி
வான மீனின் வயின்வயின் இமைப்ப
§அமரோர்த்து அட்ட செல்வம்
தமர்விரைந்து உரைப்பக் கேட்கும் ஞான்றே.

—மதுரை அளக்கர்ஞாழலார் மகனர் மள்ளனர்.

(சொ - ள்.) ௧௧. நெஞ்சே-, வாழிய-,

௧—௮. (நம் தலைவி தன் தோழியை நோக்கி) ஆயிழை-தோழியே! நமர் - நம் தலைவர், வருதும் என்ற நாளும் பொய்த்தன-தாம் வருவேம் என்று கூறிய நாட்களும் பொய்யாயின; அரி ஏர் உண் கண் நீரும் நில்லா - செவ்வரி பரந்த அழகிய மையுண்ட கண்களினின்று நீரும் நில்லா தொழுகுகின்றன; தண் கார்க்கு ஈன்ற பைங்கொடி முல்லை வைவாய் வான்முகை அவிழ்ந்த - குளிர்ந்த மழையால் அரும்பிய பசிய முல்லைக்கொடியினது கூரிய முனைவாய்ந்த வெள்ளிய அரும்புகள் மலர்ந்தன; கோதை பெய் வனப்பு இழந்த கதுப்பும் உள்ளார் - மாலை

(பாடம்) * வருவேமென்ற. † வரியேர் உண்கண், வரியேய் உண் கண். ‡ கைய. § அமரோறுத்து அட்ட.

யைத் தரிக்கும் அழகினை இழந்த - கூந்தலையும் நினையார் ஆயினர், அறன் அஞ்சலர் - அறத்திற்கும் அஞ்சுகின்றிலர், அந்தில் அருள்கண் மாறலோ மாறுக - இங்ஙனமெல்லாம் ஆகலின் அவரிடத்தினின்றும் அருள்மாறினும் மாறுக என, சிறிய சொல்லிப் பெரிய புலம்பினும் - சிறியவாகச் சொல்லிப் பெரியவாக வருத்தமுறுவளாயினும்;

கக—கூ. விசும்பின் ஏறு எழுந்து முழங்கினும்-வானில் இடியேறு எழுந்து முழங்கினும், மாறு எழுந்து சிலைக்கும் - அதற்கு எதிராக எழுந்து தானும் முழங்கும், கடாஅ யானை கொட்கும் பாசறை - மதம் பொருந்திய களிறு சுழலும் பாசறைக்கண், போர்வேட்டு எழுந்த மள்ளர் கையதை - போர் விரும்பிக் கிளர்ந்தெழும் வீரர்தம் கையிடத்த தாகிய, கூர்வாள் குவிமுகம் சிதைய நூறி-கூரிய வாளின் குவிந்த முனை சிதைந்திட மாற்றார் படையை வீசிக் கொன்று, மான் அடி மருங்கில் பெயர்த்த குருதி - மான் அடிபதிந்த பள்ளங்களிலே பாய்ச்சிய உதிரம், வான மீனின் வயின்வயின் இமைப்ப - வானின்கண் மீன்போல இடந்தோறும் இடந்தோறும் மின்ன, ஓர்த்து அமர் அட்ட செல்வம் - அறிய வேண்டுவனவற்றையெல்லாம் ஆராய்ந்து அறிந்து போரினை வென்ற செல்வத்தை, தமர் விரைந்து உரைப்பக் கேட்கும் ஞான்று-நம் சுற்றத்தார் விரைந்து சென்று உரைக்கக் கேட்கும்பொழுது;

கூ—கக. பனிபடு நறுந்தார் குழைய - குளிர்ச்சி பொருந்திய நறிய மாலை குழைந்திட, நம்மொடு துனிதீர் முயக்கம் பெற்றோள்போல-நம் முடன் வெறுப்பு ஒழிந்த கூட்டம் பெற்றவளைப்போல, உவக்குவள் - மகிழ்வள் அன்றே?.

(முடிபு) நெஞ்சே! வாழிய! (நம்தலைவி தன் தோழியை நோக்கி), ஆயிழை! நமர் அருள்கண் மாறலோ மாறுக எனச் சிறிய சொல்லிப் பெரிய புலம்பினும், அமரோர்த்து அட்ட செல்வம் தமர் விரைந்துரைப்பக் கேட்கும் ஞான்று, நம்மோடு துனிதீர் முயக்கம் பெற்றோள் போல உவக்குவள்.

நாளும் பொய்த்தன; நீரும் நில்லா; முகை அவிழ்ந்த; கதுப்பும் உள்ளார்; அறன் அஞ்சலர் மாறலோ மாறுக; எனச் சிறிய சொல்லி என்க.

(வி - ரை.) வரி வர் எனப் பிரித்துரைத்தலுமாம். கண்மாறல், ஒரு சொல். அந்தில் - அசையுமாம். புலப்பினும் என்ற பாடத்திற்கு வெறுப்பினும் என்றுரைக்க. கையதை, ஐ சாரியை. மான் - விலங்கு என்றுமாம். செல்வம் - வெற்றியாகிய செல்வம். அட்டதனாற் பெற்ற பொருளாகிய செல்வம் என்றுமாம். கேட்கும் ஞான்று உவக்குவளு என்றதனால் நீ தேரினை விரையக் கடவுதி எனத் தலைவன் பாகற்குக் குறிப்பினாற் கூறினனாயிற்று.

(மே - ள்.) *'ஏவன் மரபின்' என்னுஞ் சூத்திரத்து, இப்பாட்டினுள், வேந்தன் தலைவனாயினவாறும், தான் அமரகத்து அட்ட செல்

* தொல். அகத். உச.

வத்தையே மிக்க செல்வமாகக் கருதுதற்குரியாள் அரச வருணத்திற் றலைவியே என்பதூஉம் உணர்க' என்றனர், நச்.

"*இன்பத்தை வெறுத்தல்' என்னுஞ் சூத்திரத்து, பொய்யாகக் கோடல் என்ற துறைக்கு மெய்யைப் பொய்யாக் கோடல் என் றுரைத்து, 'வருது மென்ற நாளும் பொய்த்தன, வரியே ருண்கண் நீரு நில்லா' எனவரும் என்றார்' பேரா.

---

145. பாலை

[மகட் போக்கிய செவிலித்தாய் சொல்லியது.]

வேர்முழுது உலறி நின்ற புழல்கால்
தேர்மணி இசையின் சிள்வீடு ஆர்க்கும்
வற்றல் மரத்த பொன்தலை ஓதி
வெயில்கவின் இழந்த வைப்பில் பையுள்கொள
நுண்ணிதின் நிவக்கும் வெண்ஞெமை வியன்காட்டு
ஆளில் அத்தத்து †அளியள் அவனொடு
வாள்வரி பொருத புண்கூர் யானை
புகர்சிதை முகத்த குருதி வார
உயர்சிமை நெடுங்கோட்டு உருமென முழங்கும்
அருஞ்சுரம் இறந்தனள் என்ப பெருஞ்சீர்
அன்னி குறுக்கைப் பறந்தலைத் திதியன்
தொன்னிலை முழுமுதல் துமியப் பண்ணிய
நன்னர் மெல்லிணர்ப் புன்னை போலக்
கடுநவைப் படீஇயர் மாதோ களிமயில்
குஞ்சரக் குரல குருகோடு ஆலும்
துஞ்சா முழவின் ‡துய்த்தியல் வாழ்க்கைக்
கூழுடைத் தந்தை இடனுடை வரைப்பின்
ஊழடி ஒதுங்கினும் உயங்கும் ஐம்பால்
சிறுபல் கூந்தல் போதுபிடித் தருளாது
எறிகோல் சிதைய நூறவுஞ் சிறுபுறம்
எனக்குரித் தென்னாள் நின்றஎன்
அமர்க்கண் அஞ்ஞையை அலைத்த கையே.

—கயமனார்.

---

* தொல். மெய்ப். ௨௨. (பாடம்) † அத்தத்தமியள்:
பாடம்) ‡ துயக்கில் வாழ்க்கை.

(சொ - ள்.) க—கo. வேர் முழுது உலறி நின்ற புழல்கால்-வேர் முதல் முழு மரமும் வற்றி நின்ற துளைபட்ட அடியினை யுடையதும், தேர்மணி இசையில் சிள்வீடு ஆர்க்கும்-தேரின் மணி ஒலிபோலச் சிள்வீடு எனும் வண்டுகள் ஒலிப்பதும் ஆகிய, வற்றல் மரத்த - வற்றல் என்னும் மரத்தினிடத்தவாகிய, பொன் தலை ஓதி - பொன்னிறம் வாய்ந்த தலையையுடைய ஓந்தி, வெயில் கவின் இழந்த வைப்பில் - வெய்யிலால் அழகு ஒழிந்த ஊர்களில், பையுள் கொள நுண்ணிதின் நிவக்கும்-வருத்தங் கொள்ளுதலின் மெல்லெனத் தாவும், வெண் ஞெமை வியன் காட்டு - வெள்ளிய ஞெமை மரங்களையுடைய அகன்ற காட்டகத்தே, ஆள் இல் அத்தத்து - ஆட்கள் வழங்காத அரிய நெறியாய, வாள்வரி பொருத புண் கூர் யானை - வாள்போலும் வரியினையுடைய புலியுடன் போர் செய்தமையால் புண்மிக்க யானைகள், புகர் சிதை முகத்த-புள்ளிகள் சிதைந்த முகத்தினவாய், குருதி வார - உதிரம் ஒழுக, உயர்சிமை நெடும் கோட்டு உரும் என முழங்கும் - உயர்ந்த உச்சியினையுடைய நெடிய சிகரத்தில் இடிக்கும் இடிபோல முழங்குகின்ற, அரும் சுரம் - அரிய பாலைநிலத்திலே, அளியள் - இரங்கத்தக்களாய என் மகள், அவனொடு - அத்தலைவனுடன், இறந்தனள் என்ப - சென்றாள் என்று கூறுவர்;

கச—உஉ. களி மயில் - களிக்கும் மயில்கள், குஞ்சரக் குரல குருகோடு ஆலும் - யானைபோலும் குரலுடைமையான் யானையங் குருகு எனப் பெயர்பெறும் பறவைகளுடன் சேர்ந்து ஒலிக்கும், துஞ்சா முழவின்-இடையறாது ஒலிக்கும் முழவினையும், துய்த்து இயல் வாழ்க்கை- செல்வம் நுகர்ந்து வாழும் வாழ்க்கையினையும் உடைய, சூழ் உடை நந்தை இடன் உடை வரைப்பில்-நெல் மிக்க நந்தையின் அகன்ற இடமுடைய மாளிகையில், ஊழ் அடி ஒதுங்கினும் உயங்கும் - முறையாக அடியிட்டு நடக்கினும் வருந்தும் (என் அமர்க்கண் அஞ்ஞையை), ஐம்பால் சிறுபல் கூந்தல்போது பிடித்து - ஐம்பகுதியான சிறிய பலவாய கூந்தலை வேய்ந்த மாலையுடன் கையாற்பற்றி, அருளாது - இரங்காது, எறிகோல் சிதைய நூறவும்- அடிக்குங்கோல் சிதையும் பரிசு (முதுநில்) அடிக்கவும், சிறுபுறம் எனக்கு உரித்து என்னுள் நின்ற - என் முதுகு எனக்கு உரியது என்று கருதாது நின்ற, அமர்க் கண் என் அஞ்ஞையை- அமர்த்த கண்களையுடைய எனது மகளை, அலைத்த கை-துன்புறுத்திய கைகள்;

கஉ—ச. பெருஞ்சீர் அன்னி-பெரிய புகழையுடைய அன்னியானவன், குறுக்கைப் பறந்தலை - குறுக்கைப் பறந்தலை என்னும் போர்க்களத்திலே, திதியன் - திதியன் என்பானது, தொல்நிலை முழுமுதல்- பழைமை பொருந்திய பரிய அடியுடன், துமியப் பண்ணிய - துணித்திட்ட, நன்னர் மெல் இணர் - நன்றாகிய மெல்லிய பூங்கொத்துக்களை

புடைய, புன்னைபோல - புன்னை மரம்போல, கடு நவைப் படீஇயர் - பெரிய துன்பத்தை அடைவனவாக.

(முடிபு) அளியள் வியன்காட்டு ஆளில் அத்தத்து அருஞ்சுரம் அவனொடு இறந்தனள் என்ப; அமர்க்கண் அஞ்ஞையை அலைத்த கைகள் அன்னி தமியப் பண்ணிய திதியன் புன்னைபோலக் கடு நவைப் படீஇயர்.

(வி - ரை.) வற்றல்-ஒருவகை மரம். ஒதி-இடைக்குறை. வாள்வரி - ஆகுபெயர். திதியனது புன்னை அன்னி என்பவனாற் குறைக்கப்பட்டதென்பது, 'அன்னி குறுக்கைப் பறந்தலைத் திதியன்...புன்னை குறைத்த ஞான்றை' (௪௫) என முன் வந்தமையா லறிக. இதற்குத் திதியன் புன்னையை முதல் தமியப்பண்ணிய அன்னிபோலக் கடு நவைப் படீஇயர் எனக் கொண்டு கூட்டிப் பொருளுரைத்தலும் ஆம். என்னை? 'பொன்னிணர் நறுமலர்ப் புன்னை வெஃகித், திதியனொடு பொருத அன்னிபோல, விளிகுவை கொல்லோ (௧௨௬) என்றதனால், அன்னி துஞ்சினன் என்பது பெறப்படுதலின் என்க. குஞ்சரக் குரல குருகு - யானைபோலும் குரலுடைமையான் யானையங்குருகு எனப்படும் பறவை; இது, * 'யானையங் குருகின் பெருந்தோடு' எனவும், † 'யானையங் குருகின் சேவலொடு' எனவும் பிறண்டும் வந்துள்ளமை காண்க. இதற்கு வண்டாங்குருகு எனவும் பெயருண்டென்பது நச்சினார்க்கினியர் உரையால் அறியப்படுவது. அஞ்ஞை-அன்னை.

(மே-ள்.) ‡'கொண்டுதலைக் கழியினும்' என்னுஞ் சூத்திரத்து, 'கூழுடைத் தந்தை யிடனுடை வரைப்பின், ஊழடி யொதுங்கினு முயங்கும்' என நெல்லுடைமை கூறிய அதனானே, வேளாண் வருண மென்பது பெற்றாம்;' என்றனர், நச்.

146. மருதம்

[வாயில் வேண்டிச் சென்ற பாணற்குத் தலைமகள் வாயில் மறுத்தது.]

வலிமிகு முன்பின் அண்ணல் ஏஎறு
பனிமலர்ப் பொய்கைப் பகல்செல மறுகி
மடக்கண் எருமை மாண்நாகு தழீஇப்
§படப்பை நண்ணிப் பழனத் தல்கும்
கலிமகிழ் ஊரன் ஒலிமணி நெடுந்தேர்
ஒள்ளிழை மகளிர் சேரிப் பன்னாள்
இயங்கல் ஆனாது ஆயின் வயங்கிழை

* குறுந். ௩௪. † மதுரைக்காஞ்சி. ௧௭௪. ‡ தொல். அகத். ௧௫- (பாடம்) § படப்பை நண்ணிய.

யார்கொல் அளியள் தானே எம்போல்
மாயப் பரத்தன் வாய்மொழி நம்பி
வளிபொரத் துயல்வருந் தளிபொழி மலரில்
கண்பனி ஆகத்து உறைப்பக் கண்பசந்து
ஆயமும் அயலும் மருளத்
தாயோம்பு ஆய்நலம் வேண்டா தோளே.

—உவர்க்கண்ணூர்ப் புல்லங்கீரனார்.

(சொ - ள்.) ௧—௭. வலிமிகு முன்பின் அண்ணல் ஏறு - வலிமிக்க திண்மையையும் தலைமையையுமுடைய எருமைக்கடா, பனிமலர்ப் பொய்கை பகல் செல மறுகி - குளிர்ந்த மலர்களையுடைய பொய்கையில் பகலெல்லாம் கழியச் சுழன்று, மடக்கண் எருமை மாண்நாகு தழீஇ - மடப்பம் வாய்ந்த கண்ணினையுடைய மாண்புற்ற பெண் எருமையினை அணைந்து, படப்பை கண்ணி - தோட்டங்களில் பொருந்தி மேய்ந்து, பழனத்து அல்கும் - வயல்களிற்றங்கும், கலிமகிழ் ஊரன் - ஆரவாரம் பொருந்திய மகிழ்ச்சியையுடைய ஊரனது, ஒலி மணி நெடுந்தேர் - ஒலிக்கும் மணி பொருந்திய நெடிய தேரானது, ஒள் இழை மகளிர் சேரி - ஒளி பொருந்திய அணிகளையுடைய பரத்தையர் சேரியின்கண், பல்நாள் இயங்கல் ஆனாது ஆயின் - பல நாளும் இயங்குதல் அமையாதாயின்;

௭—௧௩. மாயப் பரத்தன் வாய்மொழி எம்போல் நம்பி - மாயம் செய்யும் பரத்தமைத் தொழிலுடைய அவனது வாய்மை போலும் மொழியினை எம்மைப்போல மெய்யென விரும்பி, வளிபொரத் துயல் வரும் தளி பொழி மலரில் - காற்று மோதுதலின் அசையும் மழை பெய்யப்பட்ட மலரைப்போல, கண் பனி ஆகத்து உறைப்ப - கண்கள் நீரினை மார்பிலே சொரிய, கண் பசந்து - கண்கள் கலங்கி, ஆயமும் அயலும் மருள - ஆயத்தாரும் அயலாரும் மயங்க, தாய் ஓம்பு ஆய்நலம் வேண்டாதோள் - தன் தாயார் பாதுகாத்து வளர்த்த அழகிய நலத்தினை வேண்டாது இழப்பாள் ஆகிய, வயங்கு இழை - விளக்கும் அணியினை யுடையாள், யார்கொல் - யாவளோ, அளியள் - அவள் இரங்கத் தக்காள்.

(முடிபு) ஊரன் நெடுந்தேர் சேரிப் பன்னாள் இயங்கல் ஆனாதாயின், பரத்தன் வாய்மொழி நம்பி கண்பனி யுறைப்பப் பசந்து, தாய் ஓம்பு நலம் வேண்டாதோள் யார்கொல்! அளியள்.

(வி - ரை.) முன்பு-வலிமை. வலிமிகு முன்பு - மிக்க பெருவலி யுடைய என்க. ஏறு என்பது எருமைக்கும் உரித்தென்பது *'எருமையும் மரையும் பெற்றமும் அன்ன' என்பதனாற் பெறப்படும். †'எருமை

* தொல். மரபு. ௬௧. † தொல். மரபு. ௬௨.

யும் மரையும் பெற்றமும் நாகே' என்றதனால் எருமை நாகு எனப்பட்டது. பரத்தன் - புறத்தொழுக்க முடையவன். வாய்மொழி - வாய் என்பதனை வேண்டா கூறலாக்கி உள்ளத்தொடு கூடாத மொழி என்றலுமாம். துயல் வரும் மலர் எனக் கூட்டுக. மருள வேண்டா தோள் என்க. மருள - வியக்க எனக்கொண்டு, மருள ஓம்பிய நலம் என்றுரைத்தலுமாம். நலம் வேண்டாதோளாகிய வயங்கிழை அளியள் என்றமையால், நீ அவள்பால் வாயில்வேண்டிச் சென்று அவளது ஊடலைத் தீர்ப்பாயாக எனத் தலைவி பாணனுக்கு வாயின் மறுத்தாளென்க.

(உ-றை.) எருமை ஏறு பொய்கையிற் பகல்செல மறுகி, எருமை நாகு தழீஇப் படப்பை நண்ணிப் பழனத்தல்கும் என்றது, தலைவன் பரத்தையர் சேரியிற்றிரிந்து அவர்களை நுகர்ந்து, பின்பு இளையளாய பரத்தையொடும் சோலையில் விளையாடி, சேற்றினையுடைய பழனம் போலும் எம் இல்லில் தங்குதல் மாத்திரைக்கு இப்பொழுது வந்தனன் என்றவாறு.

---

147. பாலை

[செலவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் சொல்லியது.]

ஓங்குமலைச் சிலம்பில் பிடவுடன் மலர்ந்த
வேங்கை வெறித்தழை வேறுவகுத் தன்ன
ஊன்பொதி அவிழாக் கோட்டுகிர்க் குருளை
மூன்றுடன் ஈன்ற முடங்கர் நிழத்த
துறுகல் விடரளைப் பிணவுப்பசி கூர்ந்தெனப்
பொறிகிளர் உழுவைப் போழ்வாய் ஏற்றை
அறுகோட்டு உழைமான் ஆண்குரல் ஓர்க்கும்
நெறிபடு கவலை நிரம்பா நீளிடை
வெள்ளி வீதியைப் போல நன்றுஞ்
செலவயர்ந் திசினால் யானே பலபுலந்து
உண்ணா உயக்கமொடு உயிர்செலச் சாஅய்த்
தோளும் தொல்கவின் தொலைய நாளும்
பிரிந்தோர் பெயர்வுக் கிரங்கி
மருந்துபிறி தின்மையின் இருந்துவினை இலனே.

—ஒளவையார்.

(சொ-ள்.) ௧௦—௪. (தோழியே, நம் தலைவன் பிரிதலால்,) பல புலந்து உண்ணா உயக்கமொடு உயிர்செலச் சாஅய் - பலவற்றையும்

வெறுத்து உண்ணுத வருத்தத்தால் உயிர் மெலிந்து ஒழுகக் கெடவும், தோளும் தொல்கவின் தொலைய - தோளும் பழைய அழகு கெடவும், நாளும் - நாடோறும், பிரிந்தோர் பெயர்வுக்கு இரங்கியிருந்து - நம்மைப் பிரிந்த தலைவரது நீக்கத்திற்கு இரங்கி யிருந்தும், மருந்துபிறிது இன்மையின் - அதனைப் போக்கும் மருந்து பிறிதொன்று இல்லாமையால், வினையிலன் - வேறு செயலில்லேன் ஆயினேன் ஆகலின்;

க—௧0. ஒங்குமலைச் சிலம்பில் - உயர்ந்த மலைச்சாரலில், 'பிடவுடன் மலர்ந்த வேங்கை வெறிதழை - பிடவுடன் சேர மலர்ந்த வேங்கையின் வெறி கமழும் பூவுடன் கூடிய தழையை, வேறு வகுத்தன்ன - வேறு வேருக வகுத்து வைத்தாற்போன்ற, ஊன்பொதி அவிழாக் கோட்டு உகிர் குருளை மூன்று உடன் ஈன்ற - தசையின் மறைப்பு நீங்காத வளைந்த நகத்தினையுடைய குட்டிகள் மூன்றை ஒரு சேரப் பெற்றதும், முடங்கர் - முடக்கமான இடத்திலே, நுறுகல் விடர் அளை - பாறையின் பிளப்பாகிய குகையிலுள்ளதுமாகிய, நிழத்த பிணவு பசி கூர்ந்தென - ஒய்ந்த பெண் புலி பசி மிக்கதாக, பொறி கிளர் போழ் வாய் உழுவை ஏற்றை - புள்ளிகள் விளங்கும் பிளந்த வாயையுடைய ஆண்புலி, அறுகோட்டு உழைமான் ஆண் குரல் ஓர்க்கும் - அறல்பட்ட கொம்பினையுடைய ஆண் மானினது குரலினை உற்றுக் கேட்கும், கவலை நெறிபடு நிரம்பா நீள் இடை - கவர்த்த நெறிகள் பொருந்திய செல்லத் தொலையாத நீண்ட காட்டிலே, வெள்ளி வீதியைப் போல - தன் கணவனைத் தேடிச் சென்ற வெள்ளி வீதி என்பாளைப் போன்று, நன்றும் செலவு அயர்ந்திசின் - செல்லுதலைப் பெரிதும் விரும்பியுளேன்.

(முடிபு) தோழி! தலைவர் பிரிதலால், யான் உயிர் செல்லவும் தோளும் கவின் தொலையவும், பிரிந்தோர் பெயர்வுக்கு இரங்கி யிருந்தும் மருந்து பிறிதின்மையால், வேறு வினையிலேன் ஆயினேன் ஆகலின், உழுவை யேற்றை உழைமான் குரல் ஓர்க்கும் கவலை நெறிபடு நிரம்பா நீளிடையில் வெள்ளி வீதியைப்போல நன்றும் செலவயர்ந்திசின்.

(வி - ரை.) வேறு வகுத்தன்ன குருளை எனவும், கோட்டுகிர்க் குருளை எனவும் தனித்தனி கூட்டுக. அவிழா உகிர் என்க. முடங்கர் - முடக்கமான இடம். நிழத்தல்-மெலிதல். வெள்ளி வீதியைப் போலும் என்ற உவமையான் அவள் கணவனைப் பிரிந்து பலவிடத்தும் தேடித் திரிந்தாளாதல் பெற்றாம். இலன் என அன்விகுதி தன்மைக்கண் வந்தது. செலவயர்ந்திசின் என்பதனை எச்சப்படுத்தி வினையிலனாயினன் என முடிப்பது நச்சினார்க்கினியர் கருத்தாகும்.

(மே - ள்.) *'கொண்டு தலைக் கழியினும்' என்னுஞ் சூத்திரத்து, 'தலைவி பிரிந்திருந்து மிகவும் இரங்குதலின், இரங்கினும் எனச் சூத்திரஞ் செய்து அதனானே பாலைப் பொருட்கண் இரங்கற்பொருள் நிகழுமென்றார். உதாரணம் - ஒங்குமலைச் சிலம்பிற்......வினை இலனே,

* தொல், அகத். ௪௨.

(என்பது) இதனுள் வெள்ளிவீதியைப் போலச் செல்லத் துணிந்து, 'யான் பலவற்றிற்கும் புலந்திருந்து, பிரிந்தோரிடத்தினின்றும் பிரிந்த பெயர்வுக்குத் தோள் நலந் தொலைய உயிர்செலச் சாஅய், இரங்கிப் பிறிது மருந்தின்மையிற் செயலற்றேனென மிகவும் இரங்கியவாறு மெய்ப்பாடுபற்றி புணர்க' என்றும், *'மக்கள் நுதலிய' என்னுஞ் சூத்திரத்து 'வெள்ளி வீதியைப் போல நன்றும், செலவயர்ந்திசினால் யானே' என்பதன்கண் பெயர் அகத்திணைக்கட் சார்த்துவகையான் வந்ததன்றித் தலைமை வகையாக வந்திலது என்றும் கூறினர், நச்.

---

148. குறிஞ்சி

[பகல் வருவானை இரவு வருகென்றது.]

பனைத்திரள் அன்ன பரேர்எறுழ்த் தடக்கைக்
கொலைச்சினந் தவிரா மதனுடை முன்பின்
வண்டுபடு கடாஅத்து உயர்மருப்பு யானை
தண்கமழ் சிலம்பின் மரம்படத் தொலைச்சி
உறுபுலி உரறக் குத்தி விறல்கடிந்து
சிறுதினைப் பெரும்புனம் வவ்வும் நாட
கடும்பரிக் குதிரை ஆஅய் எயினன்
நெடுந்தேர் மிஞிலியொடு பொருதுகளம் பட்டெனக்
காணிய செல்லாக் கூகை நாணிக்
கடும்பகல் வழங்கா தாஅங்கு இடும்பை
பெரிதால் அம்ம இவட்கே அதனால்
மாலை வருதல் வேண்டும் சோலை
முளைமேய் பெருங்களிறு வழங்கும்
மலைமுதல் அடுக்கத்த சிறுகல் ஆறே.

—பரணர்.

(சொ-ள்.) க—௪. திரள் பனை அன்ன பரு ஏர் எறுழ்த்தடக்கை - திரண்ட பனையை யொத்த பருத்த அழகிய வலிய வளைந்த கையையும், கொலைச் சினம் தவிரா மதன் உடை முன்பின் - கொல்லும் சினம் நீங்காத செருக்குப் பொருந்திய வலிமையினையும், வண்டுபடு கடாஅத்து - வண்டு மொய்க்கும் மதத்தினையும், உயர்மருப்பு யானை - நிமிர்ந்த கோட்டினையும் உடைய யானை, தண் கமழ் சிலம்பின் மரம் படத் தொலைச்சி - குளிர்ந்த மணம் கமழ்கின்ற பக்கமலையிலுள்ள மரம் வீழ ஒடித்துத்தள்ளி, உறுபுலி உரறக் குத்தி விறல் கடிந்து - மாறுபா

---

* தொல். அகத். உச.

முற்ற புலியினைக் கதறுமாறு குத்தி அதன் வெற்றியினைத் தொலைத்து, சிறுதினைப் பெரும்புனம் வவ்வும் நாட - சிறிய தினை விளைந்த பெரிய புனத்தினைக் கவர்ந்து கொள்ளும் நாடனே!

எ—௧௧. கடும் பரிக் குதிரை ஆஅய் எயினன் - கடிய செலவினையுடைய குதிரையையுடைய ஆய் எயினன் என்பான், நெடும் தேர் மிஞிலியொடு பொருது களம் பட்டென - நெடிய தேரையுடைய மிஞிலி என்பானொடு போர்புரிந்து களத்தில் இறந்தனனாக, காணிய செல்லாக் கூகை நாணி - (புள்ளின் பாதுகாவலனாகிய அவனை ஏனைப் பறவைகளைப் போலச் சென்று) காணவியலாத பகற்குருடாகிய கூகையானது நாணுதலுற்று, கடும்பகல் வழங்காதாங்கு - கடிய பகலிலே இயங்காத இடும்பை யுற்றாற்போல, இவட்கு இடும்பை பெரிது - இவளுக்குப் பகற் குறிக்கட் செல்லாத துன்பம் பெரிதாயிற்று;

௧௧—௪. அதனால், சோலை முளைமேய் பெருங்களிறு வழங்கும் - சோலையின்கண் மூங்கிற் குருத்தினைத் தின்னும் பெரிய களிறு இயங்குகின்ற, மலைமுதல் அடுக்கத்து - மலைச்சாரலிலுள்ள, சிறுகல் ஆறு - சிறிய பாறைகள் செறிந்த நெறியில், மாலை வருதல் வேண்டும் - நீ மாலைக் காலத்தே வருதல் வேண்டும்.

(முடிபு) நாட! இவட்குப் பகற்குறிக்கண் இடும்பை பெரிது; அதனால் சிறுகல்ஆறு மாலை வருதல் வேண்டும்.

(வி - ரை.) பனைத்திரள் என ஐகாரங் கெடாது வல்லெழுத்துப் பெற்று முடிந்தது, *'கொடிமுன் வரினே யையவ ணிற்பக், கடிநிலையின்றே வல்லெழுத்து மிகுதி' என்ற சூத்திரத்து இலேசாற் கொள்ளப்படும். பரேர் என்றது மரூஉ முடிபு. ஆஅய் எயினன் என்பான் புட்களுக்குப் பாதுகாவலனாக இருந்தான் என்பதும், அதனால் அவன் களத்திற் பொருது வீழ்ந்தபோது புட்களெல்லாம் வானிலை நெருங்கி வட்டமிட்டு, அவன்மீது வெயிற்படாது மறைத்தன என்பதும் வேறு சில †செய்யுட்களாற் பெறப்படுகின்றன. ஏனைப் பறவைகளெல்லாம் செல்லவும் பகலிலே தான் செல்லலாற்றாமையின் ‡கூகை நாணி வருந்தியிருந்த தென்றார். அகம்-௨0௮ ஆம் பாட்டில் 'எயினன்...பாழிப் பறந்தலை...மிஞிலியொடு நண்பகலுற்ற செருவிற் புண்கூர்ந் தொள் வாண் மயக்கமர் வீழ்ந்தெனப் புள்ளொருங்கு, அங்கண் விசும்பின் விளங்கு ஞாயிற்று, ஒண்கதிர் தெறாமைச் சிறகரிற் கோலி, நிழல்செய் துழறல் காணேன் யானெனப், படுகளங் காண்டல் செல்லான் சினஞ் சிறந்து, உருவினை நன்னன் அருளான் கரப்ப' என வரும். நன்னன் என்பானே பகலிற் செல்லா ஒப்புமைபற்றி இச் செய்யுளிற் §'கூகையென வழங்கப்பட்டானவன்' எனக் கருதுவாருமுளர்.

---

* தொல். உயிர்மய. அ௩, † அகம். ௧௪௨. ௧௮௧. ௨0௮.

‡ அகம். ௨0௮. § பாணர் - பக்கம் ௧௪.

149. பாலை

[தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்கியது.]

சிறுபுன் சிதலை சேண்முயன் றெடுத்த
நெடுஞ்செம் புற்றத்து ஒடுங்கிரை முனையில்
புல்லரை இருப்பைத் தொள்ளை வான்பூப்
பெருங்கை எண்கின் இருங்கிளை கவரும்
அத்தம் நீளிடைப் போகி நன்றும்
அரிதுசெய் விழுப்பொருள் எளிதினிற் பெறினும்
வாரேன் வாழியென் நெஞ்சே சேரலர்
சுள்ளியம் பேரியாற்று வெண்நுரை கலங்க
யவனர் தந்த வினைமாண் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
வளங்கெழு முசிறி ஆர்ப்பெழ வளைஇ
*அருஞ்சமம் கடந்து படிமம் வவ்விய
நெடுநல் யானை அடுபோர்ச் செழியன்
கொடிநுடங்கு மறுகில் கூடல் குடாஅது
பல்பொறி மஞ்ஞை வெல்கொடி உயரிய
ஓடியா விழவின் நெடியோன் குன்றத்து
வண்டுபட நீடிய குண்டுசுனை நீலத்து
எதிர்மலர்ப் பிணையல் அன்ன இவள்
அரிமதர் மழைக்கண் தெண்பனி கொளவே.

—†எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார்.

(சொ - ள்.) எ. என் நெஞ்சே - எனது நெஞ்சமே!

க—ச. பெரும் கை எண்கின் இரும் கிளை - பெரிய கையினையுடைய கரடியின் பெரிய கூட்டம், சிறு புன் சிதலை சேண் முயன்று எடுத்த - சிறிய புல்லிய கறையான் நெடிது முயன்று ஆக்கிய, நெடும் செம்புற்றத்து - உயர்ந்த சிவந்த புற்றில், ஒடுங்கு இரை முனையில் - மறைந்து கிடந்த புற்றாம் பழஞ்சோற்றைத் தின்று வெறுப்பின், புல் அரை இருப்பை - புற்கென்ற அரையினையுடைய இருப்பை மரத்தின், தொள்ளை வான்பூ கவரும் - தொளை பொருந்திய வெள்ளிய பூவைக் கவர்ந்து உண்ணும், அத்தம் நீள் இடைப்போகி - சுரத்தின் நீண்டவழியே சென்று, நன்றும் அரிது செய் விழுப்பொருள் எளிதினிற் பெறினும் - பெரிதும் அரிதாக ஈட்டும் சிறந்த பொருளை எளிதாகப் பெறுவதாயினும்;

(பாடம்) * பெருஞ்சமம். † ஏர்க்காட்டூர்.

எ—கக. சேரலர் சுள்ளிஅம் பேர்யாற்று வெண் நுரை கலங்க - சேர அரசரது சுள்ளியாகிய பேர் யாற்றினது வெள்ளிய நுரை சிதற, யவனர் தந்த வினைமாண் நல்கலம்-யவனர்கள் கொண்டு வந்த தொழில் மாட்சிமைப்பட்ட நல்ல மரக்கலம், பொன்னொடு வந்து கறியொடு பெயரும்-பொன்னுடன் வந்து மிளகொடு மீளும், வளம்கெழு முசிறி ஆர்ப்பு எழ வளைஇ - வளம் பொருந்திய முசிறி என்னும் பட்டினத்தை ஆரவாரம் மிக வளைத்து, அரும் சமம் கடந்து படிமம் வவ்விய - அரிய போரை வென்று அங்குள்ள பொற்பாவையினைக் கவர்ந்துகொண்ட, நெடு நல் யானை அடுபோர்ச் செழியன் - நெடிய நல்ல யானைகளையும் வெல்லும் போரினையுமுடைய செழியனது, கொடி நுடங்கு மறுகில் கூடல் குடாஅது - கொடி அசையும் தெருவினையுடைய கூடலின் மேல் பாலுள்ள, பல்பொறி மஞ்ஞை வெல்கொடி உயரிய - பல பொறிகளை யுடைய வெல்லும் மயிற் கொடியினை உயர்த்த, ஒடியா விழவின் நெடியோன் குன்றத்து - இடையறாத விழவினையுடைய முருகனது திருப் பரங்குன்றத்தே, வண்டுபட நீடிய குண்டு சுனை நீலத்து - வண்டுவீழ நீண்ட ஆழமான சுனையிற் பூத்த நீலப்பூவின், எதிர்மலர்ப் பிணையல் அன்ன - புதிய மலர்இரண்டின் சேர்க்கை போன்ற, இவள் அரிமதர் மழைக் கண் தெண்பனிகொள - இவளது செவ்வரி படர்ந்த மதர்த்த குளிர்ந்த கண்கள் தெளிந்த நீரினைக் கொள்ள, வாரேன் - வாரேன், வாழி—

(முடிபு) நெஞ்சே! அந் நீளிடைப்போகி, அரிதுசெய் விழுப் பொருள் எளிதிற் பெறினும், இவள் அரிமதர் மழைக்கண் தெண்பனி கொளவாரேன்; வாழி!

(வி - ரை.) சுள்ளி, பேரியாறு என்பன சேரநாட்டு முசிறி மருங்கு கடவிற் கலக்கும் ஓர் யாற்றின் பெயர்கள். யவனர் என்பார் எகிப்து, கிரேக்கம் முதலிய புறநாட்டினர். மரக்கலம் பொன்னொடு வந்து கறியொடு பெயரும் என்றது, பொன்னைக் கொண்டுவந்து விலையாகக் கொடுத்து மிளகை ஏற்றிச் செல்லும் என்றபடி. எனவே அக் காலில் சேரர்நாட்டு வாணிபம் சிறந்திருந்தமை பெற்றாம். படிமம் என்றது முசிறியிலிருந்ததோர் தெய்வ விம்பம்போலும். கூடலின் குடக்கின்கண்ணதாகிய குன்றம் என்க. வாரேன் என்றதனால் நீ வேண்டிற் செல்லுதி என்றாளும்.

150. நெய்தல்

[பகற்குறி வந்து கண்ணுற்று நீங்கும் தலைமகனைத் தோழி தலைமகளை இடத்துய்த்து வந்து, செறிப்பறிவுறீஇ வரைவு கடாயது.]

பின்னுவிட நெறித்த கூந்தலும் பொன்னென
ஆகத் தரும்பிய சுணங்கும் *வம்புவிடக்
கண்ணுருத் தெழுதரும் முலையும் நோக்கி
எல்லினை பெரிதெனப் பன்மாண் கூறிப்
பெருந்தோள் அடைய முயங்கி நீடுநினைந்து
அருங்கடிப் படுத்தனள் யாயே கடுஞ்செலல்
வாள்சுறா வழங்கும் வளைமேய் பெருந்துறைக்
கனைத்த நெய்தற் கண்போன் மாமலர்
நனைத்த செருந்திப் போதுவாய் அவிழ
மாலை மணியிதழ் கூம்பக் காலைக்
கள்நாறு காவியொடு தண்ணென மலரும்
கழியுங் கானலுங் காண்டொறும் பலபுலந்து
வாரார் கொல்லெனப் பருவரும்
தாரார் மார்பநீ தணந்த ஞான்றே.

—குறுவழுதியார்.

(சொ-ள்.) ௬—௧௪. தார் ஆர் மார்ப-மாலை பொருந்திய மார்பனே, நீ தணந்த ஞான்று-நீ பிரிந்தகாலை, கடும் செலல் வாள் சுறா வழங்கும்-விரைந்த செலவினையும் வாள் போன்ற கொம்பினையுமுடைய சுறா மீன் இயங்கும், வளைமேய் பெருந்துறை-சங்குகள் மேயும் பெரிய துறையையுடைய, கனைத்த நெய்தல் கண்போல் மாமலர்-இதழ் செறிந்த நெய்தலது கண்போலும் பெரிய மலர், மாலை மணி இதழ் கூம்ப-மாலைப் போதில் அழகிய இதழ்கள் குவிய, காலை-விடியலில், நனைத்த செருந்திப் போதுவாய் அவிழ-அரும்பிய செருந்தியின் போதுகள் இதழ் விரிய, கள் நாறு காவியொடு-தேன் நாறுகின்ற குவளையுடன், தண் என மலரும்-தட்பம் உற மலருகின்ற, கழியும் கானலும் காண்தொறும்-கழியையும் சோலையினையும் காணுந்தோறும், பல புலந்து-பலவும் எண்ணி வெறுத்து; வாரார்கொல் எனப் பருவரும்-நம் தலைவர் வாராரோ எனத் தலைவி வருந்துவள், அதன்மேலும்;

௧—௬. யாய்-அன்னையானவள், பின்னுவிட நெறித்த கூந்தலும்-பின்னும்படி (வளர்ந்து) நெளிந்த கூந்தலையும், பொன் என ஆகத்து அரும்பிய சுணங்கும்-பொன் போல மார்பிலே தோன்றிய தேமலையும்,

(பாடம்) * வம்புடை.

வம்பு விடக் கண் உருத்து எழுதரும் முலையும்—கச்சு அறக் கண்ணுடன் உருப்பெற்று எழுந்த முலையினையும், நோக்கி - பார்த்து, பெரிது எல்லினை என - பெரிதும் அழகுடையை என்று, பல் மாண் கூறி - பல முறையும் கூறி, பெருந்தோள் அடைய முயங்கி - பெரியதோளை முழுவதும் முயங்கி, நீடு நினைந்து-நெடிது நினைந்து, அருங்கடிப் படுத்தனள்—(தலைவியை) அரிய காவலில் வைத்தனள்.

(முடிபு) தாரார் மார்ப! தலைவி, நீ தணந்த ஞான்று கழியுங் கானலுங் கான்டொறும் வாரார்கொல் லெனப் பருவரும்; (அதன் மேலும்) யாய் கூந்தலும் சுணங்கும் முலையும் நோக்கி; எல்லினை எனக் கூறி, முயங்கி அருங் கடிப்படுத்தனள்.

(வி - ரை.) உருத்து-வெகுண்டு என்றுமாம். வாட்சுறா வழங்கும் கழியெனவும், பெருந்துறையையுடைய கழியெனவும் இயையும். செருந்தியும் செய்தலுங் காவியும் கலையில் மலரும் என்க. கழியுங் கானலும் இயற்கைப்புணர்ச்சிக் காலத்துத் தலைவன் சூளுற்ற இடமாகலின் அவற்றைக் காண்டொறும் வெறுத்தாள் என்றலுமாம்.

(மே - ள்.) *'களவலராயினும்' என்னும் (செவிலி கூற்று நிகழுமாறு கூறும்) சூத்திரத்து, 'அளவு மிகத் தோன்றினும்' என்னும் துறைக்கண், இச் செய்யுள் தோழி செவிலி கூறியதைக்கொண்டு கூறியது என்று கூறினர்; நச்.

†'இன்பத்தை வெறுத்தல்' என்னுஞ் சூத்திரத்து 'ஏதம் ஆய்தல்' என்னும் மெய்ப்பாட்டிற்கு, கூட்டத்திற்கு வரும் இடையூறு உண்டென்று பலவும் ஆராய்தல். அது, கொதுமலர் வரையக் கருதுவர் கொல் லெனவும், பிரிந்தோர் மறந்து இனி வாரார்கொல் லெனவும் தோன்றும் உள்ள நிகழ்ச்சி என்று உரைத்து, அது, 'வாரார் கொல் லெனப் பருவரும், தாரார் மார்ப நீ தணந்த ஞான்றே' என வரும் என்று கூறினர், பேரா.

---

151. பாலை

[தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட தலைமகள் சொல்லியது.]

தம்நயந்து உறைவோர்த் தாங்கித் தாம்நயந்து
இன்னமர் கேளிரொடு ஏமுறக் கெழீஇ
நகுதல் ஆற்றார் நல்கூர்ந் தோரென
மிகுபொருள் நினையும் நெஞ்சமொடு அருள்பிறிது
௫ ஆபமன் வாழி தோழி கால்விரிபு
உருவளி எறிதொறுங் கலங்கிய பொறிவரிக்

* தொல். கள. ௨௪. † தொல். மெய்ப். ௨௨.

கலைமான் தலையின் முதன்முதல் கவர்த்த
கோடலங் கவட்ட குறுங்கால் உழிஞ்சில்
தாறுசினை விளைந்த நெற்றம் ஆடுமகள்
அரிக்கோற் பறையின் ஐயென வொலிக்கும்
பதுக்கைத் தாய செதுக்கை நீழற்
கள்ளி முள்ளரைப் பொருந்திச் செல்லுநர்க்கு
உறுவது கூறுஞ் சிறுசெங் நாவின்
மணியோர்த் தன்ன தெண்குரல்
கணிவாய்ப் பல்லிய காடிறந் தோரே.

—*காவன் முல்லைப் பூதரத்தனார்.

(சொ - ள்.) ௩—௧௫. தோழி-, வாழி-, கால் விரிபு உறுவளி எறிதொறும் - இடமெலாம் விரிந்து மிக்க காற்று வீசுந்தொறும், கலங்கிய - கலங்கியதும், பொறிவரிக் கலைமான் தலையில் - புள்ளிகளையும் வரிகளையுமுடைய கலைமானின் தலையின், முதன்முதல் கவர்த்த - அடியிடத்திற் கப்புவிட்ட, கோடு கவட்ட குறுங்கால் உழிஞ்சில் - கொம்பு போன்ற கவட்டினையுடைய குறிய காலினையுடைய வாகைமரத்தின், சினை விளைந்த-கிளையில் விளைந்ததும் ஆகிய, தாறுநெற்றம் - நெற்றின் குலை, ஆடுமகள் அரிகோல் பறையின் - ஆடும் கூத்தியாது கோலால் அரித்தெழும் ஒலியுண்டாக்கும் பறைபோல, ஐயென ஒலிக்கும் - வியப்புண்டாக ஒலிக்கும், பதுக்கைத்து ஆய செதுக்கை நீழல் - பதுக்கையினையுடையதாய குறைந்த நிழலையுடைய, கள்ளிமுள் அரைபொருந்தி-- கள்ளியின் முட்பொருந்திய அடியில் தங்கி, செல்லுநர்க்கு உறுவது கூறும் - வழிச் செல்வார்க்கு உண்டாகும் நிகழ்ச்சிகளைக் கூறும், சிறு செங்காவின் - சிறிய செவ்விய நாவினது, மணி ஓர்த்தன்ன - மணியொலி கேட்டாற் போலும், தெண் குரல்-தெளிந்த குரலைக்கொண்ட, கணிவாய்ப் பல்லிய காடு இறந்தோர்-சோதிடம் கூறும் வாயையுடைய பல்லிகளையுடைய காட்டைக் கடந்து சென்ற நம் தலைவர் ;

௧—௫. தம் நயந்து உறைவோர்த் தாங்கி - தம்மை விரும்பி இருப்போரைப் புரந்து, தாம் நயந்த இன் அமர் கேளிரொடு ஏம் உறக் கெழீஇ - தாம் விரும்பிய இனிமை பொருந்திய கட்டாரொடு இன்பம் மிக இயைந்து, நகுதல் ஆற்றார் நல்கூர்ந்தோர் என - மகிழ்ந்திருத்தலைமாட்டாராவர் வறுமை யுற்றோர் என்று கூறி, மிகுபொருள் நினையும் நெஞ்சமொடு - மிக்க பொருளை ஈட்ட நினையும் நெஞ்சத்தால், மன் அருள் பிறிதுஆப - நம்பால் மிகவும் அருளுடையவர் அல்லர் ஆவர்.

(பாடம்) *காவன் முல்லை மழுக்கரத்தனார் ; காவன்முல்லைப் பூக்கரத்தனார் ; காவன்முல்லைப் பூச்சாத்தனார்.

(முடிபு) தோழி! வாழி! காடிறந்தோர், தாங்கி, கெழீஇ, நுதல் ஆற்றார் எனப் பொருள் நினையும் நெஞ்சமொடு அருள் பிறிதாப: என் செய்வாம்.

(வி - ரை.) தம் நயந் துறைவோர் - தம் குடிக்கண் இளையாரும் பணியாளரும் பாணர் முதலாயினருமாம். தாம் நயந்த என்னும் பெயரெச்சத்து அகரம் தொக்கது. கேளிர் - நட்டார். நெஞ்சமொடு - நெஞ்சத்தால். பொருளையே காதலிப்பவர் அருளைக் கைவிடுவர் என்னும் கருத்தினை, *'பொருளே காதலர் காதல், அருளே காதலர் என்றி நீயே' என்றதனன் அறிக. கால் விரிபு என்புழிக் கால் இடமென்னும் பொருட்டு. கலங்கிய நெற்றம் எனவும், சினைவிளைந்த நெற்றம் எனவும் தனித்தனி இயையும். முதல் இரண்டனுள் முன்னது அடி, பின்னது இடம் என்னும் பொருளன: கோடலங்கவட்ட; அல்லும் அம்மும் சாரியைகள். நெற்றம்: அம், அசை. பகுதிப்பொருள் விகுதி என்றலுமாம். செங்காவின் குரல் எனவும் மணியோர்த்தன்ன குரல் எனவும் இயையும். உறுவது கூறும் சிறு செங்காவின் என்றமையால், கனிவாய் என்றது பல்லிக்கு இயற்கையடை.

---

152. குறிஞ்சி

[இரவுக்குறிவந்து நீங்குந் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது]

நெஞ்சுநடுங் கரும்படர் தீர வந்து
குன்றுழை நண்ணிய சீறூர் ஆங்கண்
செலீஇய பெயர்வோள் வணர்சுரி ஐம்பால்
நுண்கோல் அகவுநர்ப் புரந்த பேரிசைச்
சினங்கெழு தானைத் தித்தன் வெளியன்
இரங்குநீர்ப் பரப்பில் கானலம் பெருந்துறைத்
தனந்தரும் நன்கலஞ் சிதையத் தாக்கும்
சிறுவெள் இறவின் குப்பை யன்ன
உறுபகை தருஉம் மொய்ம்மூசு †பிண்டன்
முனைமுரண் உடையக் கடந்த வென்வேல்
இசைநல் ஈகைக் களிறுவீசு வண்மகிழ்ப்
பாரத்துத் தலைவன் ஆர நன்னன்
எழில் நெடுவரைப் பாழிச் சிலம்பிற்
களிமயில் கலாவத் தன்ன தோளே
வல்வில் இளையர் பெருமகன் நள்ளி

---

* அகம். ௫௩. (பாடம்) † பிண்டன் உண்முரன்.

சோலை யடுக்கத்துச் சுரும்புண விரிந்த
கடவுள் காந்தள் உள்ளும் பலவுடன்
இறும்பூது கஞலிய வாய்மலர் நாறி
வல்லினும் வல்லா ராயினுஞ் சென்றோர்க்குச்
சாலவிழ் நெடுங்குழி நிறைய வீசும்
மாஅல் யானை யாஅய் கானத்துத்
தலையாற்று நிலைஇய சேயுயர் பிறங்கல்
வேயமைக் கண்ணிடை புரைஇச்
சேய ஆயினும் நடுங்குதுயர் தருமே.

—பரணர்.

(சொ - ள்.) நெஞ்சே,

௧—௬. நெஞ்சு நடுங்கு அரும்படர் தீர வந்து - நம் நெஞ்சம் நடுங்குவதற்குக் காரணமான பிரிதொன்றால் தீர்தற்கரிய துன்பமானது தீர வந்து கூடி, குன்று உழை நண்ணிய சீறூர் ஆங்கண் செலீஇய பெயர்வோள் - குன்றிடத்துப் பொருந்திய தனது சிறிய ஊர்க்குச் செல்ல மீள்வோளாய நம் தலைவியின், வணர் சுரி ஐம்பால் - வளைந்து சுருண்ட கூந்தல்கள்;

௪—௧௪. நுண் கோல் அகவுநர்ப் புரந்த பேரிசை - நுண்ணிய கோலையுடைய பாணரைப் புரந்த பெரிய புகழையும், சினம் கெழு தானை - சினம் மிக்க படையினையுமுடைய, தித்தன் வெளியன் - தித்தன் வெளியன் என்பானது, இரங்கும் நீர்ப் பரப்பின் கானல் அம் பெருந்துறை - ஒலிக்கும் நீர்ப்பரப்பினையுடைய கானலம் பெருந்துறை என்னும் பட்டினத்தே, தனம் தரு நன்கலம் சிதையத்தாக்கும் - பொன்னைக் கொண்டுவரும் நல்ல மரக்கலம் சிதையுமாறு தாக்குகின்ற, சிறு வெள் இறவின் குப்பை அன்ன - சிறிய வெள்ளிய இறாமீனின் தொகுதி போன்ற, உறுபகை தரூஉம் மொய்மூசு பிண்டன் - மிக்க பகையைத் தரும் வலிமிக்க பிண்டன் என்பானது, முனை முரண் உடையக் கடந்த வென்வேல் - போர்செய்யும் மாறுபாடு சிதைய வென்ற வெற்றி வேலையும், இசைநல் ஈகைக் களிறு வீசு வண்மகிழ் - புகழ் மேவிய நல்ல ஈகையினையும் களிறுகளை வழங்கும் வண்மையானாகிய களிப்பினையும் உடைய, பாரத்துத் தலைவன் ஆரம் நன்னன் - பாரம் என்னும் ஊர்க்குத் தலைவனாகிய ஆரம்பூண்ட நன்னன் என்பானது, ஏழில் நெடுவரைப் பாழிச்சிலம்பில் - ஏழில் என்னும் நீண்ட மலையின் பாழி யென்னும் பக்கமலையிடத்துள்ள, களிமயில் கலாவத்து அன்ன - களிக்கும் மயிலின் தோகையை ஒத்தன;

௧௪—௨௪. தோளே - இவள் தோள்கள், வல்வில் இளையர் பெருமகன் நள்ளி - வலிய வில்லையுடைய வீரர்கட்குத் தலைவனான நள்ளி

என்பானது, சோலை அடுக்கத்து-சோலைகள் மிக்க பக்க மலையிடத்தே சுரும்பு உண விரிந்த கடவுள் காந்தள் உள்ளும் - வண்டு உண்ண விரிந்த கடவுள் சூடுதற்குரிய காந்தட் பூவுள்ளும், இறம்பூது கஞலிய ஆய்மலர் பல உடன் நாறி - வியப்பு மிக்க அழகிய மலர் பலவும் ஒருங்கு நாறுவது போல நாறி, வல்லினும் வல்லாராயினும் சென்றோர்க்கு - பரிசில் கருதி வந்தார்க்கு அவர் கல்வியில் வல்லுநராயினும் அல்லாராயினும், சால் அவிழ் - மிடாச் சோற்றை, நெடுங்குழி நிறைய வீசும் - மண்டையின் நெடிய குழி நிறையும்படியாக அளிக்கும், மா அல் யானை ஆஅய் கானத்து - பெரிய யானைகளையுடைய ஆய் என்பானது காட்டினையுடைய, தலையாற்று நிலைஇய சேய் உயர் பிறங்கல் - தலையாறு என்னுமிடத்து நிலைபெற்ற மிக உயர்ந்த மலையிடத்துள்ள, வேய் அமைகண் இடைபுரைஇ - மூங்கிலிற் பொருந்திய கணுக்களின் நடுவிடத்தை ஒத்து, சேய ஆயினும் நடுங்கு துயர் தரும் - சேய்மைக்கண் உள்ளனவாயினும் நாம் நடுங்கத்தக்க துயரினைத் தரும்.

(முடிபு) நெஞ்சே! சீறூராங்கட் செலீஇய பெயர்வோள் ஐம்பால் நன்னன் பாழிச் சிலம்பின் மயிற் கலாவத்தன்ன; தோள் நல்லி அடுக்கத்து ஆய்மலர் நாறி, ஆஅய் கானத்துப் பிறங்கல் வேயமைக் கண்ணிடை புரைஇ; நடுங்குதுயர் தரும்.

தித்தன் வெளியன் பெருந்துறை நன்கலம் சிதையத் தாக்கும் இறவின் குப்பையன்ன உறுபகை தருஉம் பிண்டனது முரண் உடையக்கடந்த நன்னன் என்க.

(வி - ரை.) நடுங்குதுயர் தருமே என்பதனை முன்னும் கூட்டி ஐம்பால் கலாவத்தன்னவாய் நடுங்குதுயர் தரும் என்று உரைத்துக் கொள்க. சால் - மிடா. சாலவிழ் நிறைய வீசும் எனவும், நெடுங்குழி மா அல் யானையெனவும் கூட்டியுரைத்தலுமாம்; குழி-சண்டு யானையை அகப்படுத்தும் பயம்பு. யானையையுடைய ஆஅய் என்க; ஆஅய் கானம் என்றலுமாம். என்னை? "'...அண்டிரன், குன்றம் பாடின கொல்லோ, களிறுமிக வுடைய இக் கவின்பெறு காடே' என்பவாகலின்.

---

153. பாலை

[மகட் போக்கிய செவிலித்தாய் சொற்றது.]

நோகோ யானே நோதகும் உள்ளம்
அம்தீம் கிளவி ஆயமொடு கெழீஇப்
பந்துவழிப் படர்குவள் ஆயினும் நொந்தனள்
வெப்புமன் அளியள் தானே இனிப்

• டற. க.

வன்கணாளன் மார்புற வளைஇ
இன்சொற் பிணிப்ப நம்பி நம்கண்
உறுதரு விழுமம் உள்ளாள் ஒய்யெனத்
தெறுகதிர் உலைஇய வேனில் வெங்காட்டு
உறுவளி ஒலிகழைக் கண்ணுறுபு தீண்டலின்
பொறிபிதிர்பு எடுத்த பொங்கெழு கூரெரிப்
பைதறு சிமையப் பயம்நீங்கு ஆரிடை
நல்லடிக்கு அமைந்த அல்ல மெல்லியல்
வல்லுநள் கொல்லோ தானே எல்லி
ஓங்குவரை அடுக்கத்து உயர்ந்த சென்னி
மீனொடு பொலிந்த வானில் தோன்றித்
தேம்பாய்ந்து ஆர்க்குந் தெரிஇணர்க் கோங்கின்
காலுறக் கழன்ற கண்கமழ் புதுமலர்
கைவிடு சுடரில் தோன்றும்
மைபடு மாமலை விலங்கிய சுரனே.

—சேரமான் இளங்குட்டுவன்.

(சொ - ள்.) உ—ச. அளியள் - இரங்கத்தக்காளாய என் மகள், அம்தீம் கிளவி ஆயமொடு கெழீஇ - அழகிய இனிய சொற்களையுடைய ஆயத்தாருடன் பொருந்தி, பந்துவழிப் படர்குவள் ஆயினும் - பந்தாடுமிடத்துச் சிறிது சென்று வருவாளாயினும், நனி நொந்து வெம்பும்மன் - மிகவும் நொந்து பெரிதும் வருந்துவாள்;

கக—க. ஓங்கு வரை அடுக்கத்து-உயர்ந்த மலைச் சாரலிலுள்ள, தேம் பாய்ந்து ஆர்க்கும் தெரி இணர்க் கோங்கின்-வண்டுகள் பாய்ந்து ஆரவாரிக்கும் விளக்கமுற்ற கொத்துக்களையுடைய கோங்கினது, உயர்ந்த சென்னி - உயர்ந்த உச்சியில், எல்லி - இரவின்கண், மீனொடு பொலிந்த வானில் தோன்றி-மீனொடு விளங்கும் வானெனத் தோன்றிப் (பின்), கால் உறக் கழன்ற கண் கமழ் புது மலர்-காற்று அடித்தலின் கழன்று விழும் இடனெல்லாம் கமழும் புதிய மலர், கைவிடு சுடரில் தோன்றும் - கையினால் விடப்பெறும் சுடர்ப்பொறி போலத் தோன்றும், மை படு மாமலை விலங்கிய சுரன் - மேகம் பொருந்திய பெரிய மலை குறுக்கிட்ட சுரநெறியில்;

ச—கூ. வேனில் தெறு கதிர் உலைஇய - வேனிற்காலத்துக் காய்கின்ற ஞாயிற்றின் கதிர் கெடுத்த, வெம் காட்டு - வெப்பம் மிக்க காட்டிலே, உறு வளி-விரைந்து அடிக்கும் மிக்க காற்று, ஒலி கழைக் கண் உறுபு தீண்டலின் - தழைத்த மூங்கிலின் கணுக்களைப் பொருந்

(பாடம்) * தண்கமழ் பசுமலர்.

தித் தாக்கலின், எடுத்த - எழுப்பப்பட்ட, பொங்கு - விளங்குகின்ற, பொறி பிதிர்பு எழு கூர் எரி - பொறியைச் சிதறி எழுகின்ற மிக்க நெருப்பினால், பைது அறு சிமையம் பயம் நீங்கு-பசுமையற்ற உச்சியை யுடைய பயன் ஒழிந்தவும், நல் அடிக்கு அமைந்த அல்ல - தன் நல்ல அடிகட்கு ஏற்றன அல்லவுமாகிய, ஆர் இடை-அரிய வழிகளை, இனி - இப்பொழுது, மெல்லிய - மென்மைத்தன்மையுடைய அவள், வன்கணாளன் மார்பு உற வளைஇ - கொடுமையுடைய தலைவன் தன் மார்பிலே முற்ற வளைத்து, இன் சொல் பிணிப்ப - இனிய சொல்லாலே கட்டிவிட, நம்பி - அதனை விரும்பி, நம் கண் உறுதரு விழுமம் உள்ளாள் - நம்மிடத்தே உறும் துன்பத்தினை நினையாளாகி, ஒய்யென வல்லுநள் கொல்லோ - விரையச் செல்ல வல்லமையுடையள் ஆவளோ;

௧. நோதகும் உள்ளம் - என் உள்ளம் அதனை நினைந்து வருந்துகின்றது; நோகு - யானும் நோகின்றேன்.

(முடிபு) அளியள் பந்துவழிப் படர்குவள் ஆயினும் நனிநொந்து வெம்பும்மன்; இனி மெல்லியள், மலை விளங்கிய சுரனில், வேனில் வெங்காட்டு பயம் நீங்கு ஆரிடையில் ஒய்யெனச் செல்ல வல்லுநள் கொல்லோ! உள்ளம் நோதகும்; யான்நோகு.

(வி - ரை.) நோகோ - ஓ: அசைநிலை. ஒழியிசையாகக்கொண்டு உரைத்தலுமாம். பந்துவழி - பந்துவிளையாடுமிடம். வெம்பும்மன்; மன மிகுதிப் பொருட்டு; கழிவுமாம். ஒய்யெனச் செல்ல என விரித்துரைக்க. கைவிடு சுடர் - பரணின்மீதுள்ள கானவர் கையினின்றும் விடுத்த பந்தம்.

---

154. முல்லை

[வினைமுற்றிய தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.]

படுமழை பொழிந்த பயமிகு புறவின்
நெடுநீர் அவல பகுவாய்த் தேரை
சிறுபல் இயத்தின் நெடுநெறிக் கறங்கக்
குறும்புதல் பிடவின் நெடுங்கால் அலரி
௫ செந்நில மருங்கின் நுண்அயிர் வரிப்ப
வெஞ்சின அரவின் *பைஅணந் தன்ன
தண்கமழ் கோடல் தாதுபிணி அவிழத்
திரிமருப்பு இரலை தெள்ளறல் பருகிக்
†காமர் துணையொடு ஏமுற வதியக்
௧௦ காடுகவின் பெற்ற தண்பதப் பெருவழி

(பாடம்) * பை அணர்த்தன்ன. † காமர் பிணையொடு.

ஓடுபரி மெலியாக் கொய்சுவல் புரவித்
*தாள்தாழ் தார்மணி தயங்குபு இயம்ப
ஊர்மதி வலவ தேரே சீர்மிகுபு
நம்வயிற் புரிந்த கொள்கை
அம்மா அரிவையைத் துன்னுகம் விரைந்தே.

—பொதும்பிற் புல்லாளங் கண்ணியார்.

(சொ - ள்.) கங. வலவ - பாகனே!

க—க0. படுமழை பொழிந்த பயம் மிகு புறவின் - மிக்க மழை சொரிந்தமையால் பயன் மிக்க முல்லைநிலத்தே, நெடுநீர் அவல பகுவாய்த் தேரை - ஆழமாகிய நீரினையுடைய பள்ளங்களிலுள்ள பிளந்த வாயினையுடைய தேரைகள், நெடு நெறி - நீண்ட வழியெலாம், சிறுபல்லியத்தின் கறங்க - சிறிய பலவாகிய வாச்சியங்களைப்போல ஒலிக்கவும், குறும்புதல் பிடவின் நெடுங்கால் அலரி - குறிய புதராகிய பிடவின் நீண்ட காம்பினையுடைய மலர்கள், செம்நில மருங்கின் நுண் அயிர் வரிப்ப - செம்மண்ணாகிய நிலத்திடத்து நுண்ணிய மணலில் உதிர்ந்து கோலம் செய்யவும், வெம்சின அரவின் பை அணந்தன்ன - கொடிய சினமுடைய பாம்பின் படம் மேலே நிவர்ந்தால் போன்ற, தண் கமழ் கோடல் தாதுபிணி அவிழ - தண்ணென மணக்கின்ற காந்தட்பூவின் தாது கட்டவிழ்ந்து விரியவும், திரிமருப்பு இரலை தெள் அறல் பருகி - முறுக்கிய கொம்பினையுடைய ஆண்மான் தெளிந்த நீரைக் குடித்து, காமர் துணையோடு ஏமுற வதிய - விருப்பம் வாய்ந்த பிணையுடன் இன்பம் மிகத் தங்கவும், காடு கவின்பெற்ற தண்பதப் பெருவழி - காடு அழகுபெற்ற தண்ணிய செவ்வி வாய்ந்த பெரிய வழியிலே;

கக—உ. ஓடுபரி மெலியாக் கொய்சுவல் புரவி - ஓடும் வேகம் குறையாத கொய்யப்பட்ட பிடரி மயிரினையுடைய குதிரையின், தாள் தாழ் தார்மணி தயங்குபு இயம்ப - தாளின் அளவு தாழ்ந்த மாலையிடத்து மணி விளங்கி ஒலிக்க, தேர் ஊர்மதி - தேரை ஓட்டுவாயாக;

கங—ரு. சீர்மிகுபு - சீர்மிக்கு, நம் வயின் புரிந்த கொள்கை - நம்மிடத்து விரும்பிய கொள்கையினையுடைய, அம் மா அரிவையை - அழகிய மாமை நிறத்தையுடைய நம் தலைவியை, விரைந்து துன்னுகம் - விரைந்து சென்று அடைவோம்.

(முடிபு) வலவ! தேரை கறங்க, அலரி வரிப்பக் காந்தட்பூ தாதுபிணி அவிழ இரலை ஏமுறக் காடு கவின்பெற்ற பெருவழி, புரவித் தார் மணி இயம்பு தேர் ஊர்மதி, அரிவையை விரைந்து துன்னுகம்.

(வி - ரை.) தேரையின் ஒலியும் சிறு பல்லியத்தின் ஒலியும் ஒரு தன்மையவாதல், †'தேரை யொலியின் மானச் சீரமைத்துச் சில்லரி

(பாடம்). * தோடார். † அகம். கூ0க.

கறங்கும் சிறுபல் இயத்தோடு' எனப் பின்வருவதனாலும் அறியப்படும். 'அரவின் பை அணர்ந்தன்ன தண்கமழ் கோடல் தாது பிணி அவிழ' என்னும் இக்கருத்து, *'அரவின் அணங்குடை அருந்தலை பைவிரிப் பவைபோல்......பஃறுடுப் பெடுத்த அலங்குகுலைக் காந்தள்' என முன்னரும் வந்துள்ளமை காண்க. அரிவையைத் தன்னுதற் பொருட்டுத் தேர் விரைந்து ஊர்மதி என்று உரைத்தலுமாம். தோடார் தார் மணி என்பது பாடமாயின், தொகுதி கொண்ட தார்மணி என்க. தார் - குதிரையின் கழுத்தில் கட்டும் மாலை.

155. பாலை

[தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட தலைமகள் சொல்லியது.]

அறன்கடைப் படாஅ வாழ்க்கையும் என்றும்
பிறன் கடைச் செலாஅச் செல்வமும் இரண்டும்
பொருளின் ஆகும் புனையிழை என்றுநம்
இருளேர் ஐம்பால் நீவி யோரே
நோய்நாம் உழக்குவ மாயினுந் தாந்தம்
செய்வினை முடிக்க தோழி பல்வயின்
பயநிரை சேர்ந்த பாணாட் டாங்கண்
நெடுவிளிக் கோவலர் கூவல் தோண்டிய
கொடுவாய்ப் பத்தல் வார்ந்துகு சிறுகுழி
நீர்காய் வருத்தமொடு சேர்விடம் பெறாது
பெருங்களிறு மிதித்த அடியகத்து இரும்புலி
ஒதுங்குவன கழிந்த செதும்பல் ஈர்வழி
செயிர்தீர் நாவின் வயிரியர் பின்றை
மண்ணார் முழவின் கண்ணகத்து அசைந்த
விரலூன்று வடுவில் தோன்றும்
மரல்வாடு மருங்கின் மலையிறந் தோரே.

—பாலைபாடிய பெருங் கடுங்கோ.

(சொ - ள்.) க. தோழி-,

க—ச. புனையிழை - அழகிய அணியுடையாளே! என்றும் அறன் கடைப் படாஅ வாழ்க்கையும் - எஞ்ஞான்றும் பாவநெறியிற் செல்லாத வாழ்க்கையும், பிறன் கடைச் செலாஅச் செல்வமும் - பிறன் மனைவாயிலிற் சென்று நில்லாத மேம்பாடும் ஆய, இரண்டும்-இவ்விரண்

* அகம். க0அ.

மும், பொருளின் ஆகும் என்று - பொருளானே யாகும் என்று கூறி, நம் இருள் ஏர் ஐம்பால் நீவியோர் - நமது இருண்ட அழகிய கூந்தலைத் தடவிய தலைவர்;

கூ—கஉ. பல் வயின் பயம் நிரை சேர்ந்த பாணுட்டாங்கண் - பல விடத்தும் பாற்பசுக்கூட்டம் சேர்ந்துள பாணுடென்னும் அவ்விடத்தே, நெடு விளிக் கோவலர் தோண்டிய கூவல் - நீண்ட சீழ்க்கை யொலியை யுடைய கோவலர் தோண்டிய கிணற்றினின்றும் முகந்த, கொடு வாய்ப் பத்தல் நீர் வார்ந்து உகு சிறுகுழி - வளைந்த வாயினையுடைய பத்தலி னின்று நீர் வடிந்து செல்லும் சிறிய குழி, காய் வருத்தமொடு - நீரின் றிக் காய்ந்ததனாலாய வருத்தத்துடன், சேர்வு இடம் பெறாது - நீர் வேட்கை தணித்தற்குச் சேரத்தக்க வேறிடம் பெறாமல், பெருங்களிறு மிதித்த அடியகத்து - பெரிய களிறு மிதித்தேகிய அடிச்சுவட்டில், இரும்புலி ஒதுங்குவன கழிந்த - பெரிய புலிகள் அடிவைத்து நடந்து சென்ற, செதும்பல் ஈர்வழி - சேற்றுநிலமாய ஈரமுடைய வழிகள்;

கங—க. செயிர் தீர் நாவின் வயிரியர் - குற்றமற்ற நாவினை யுடைய கூத்தர், பின்றை அசைத்த - தோளின் பின்னே கட்டிய, மண் ஆர் முழவின் கண் அகத்து - மார்ச்சனை அமைந்த மத்தளத்தின் கண் ணிடத்தே, விரல் ஊன்று வடுவில் தோன்றும் - விரலால் எறிந்த வடுக்கள் போலத் தோன்றும், மரல் வாடு மருங்கின் மலை இறந்தோர் - மரல்கள் வாடிய இடங்களையுடைய மலையைக் கடந்து சென்றார்;

இ—க. நோய் நாம் உழக்குவம் ஆயினும் - அவரது பிரிவால் நாம் நோயுழப்போம் ஆயினும், தாம் தம் செய்வினை முடிக்க - அவர் தமது பொருள்ஈட்டு வினையினை முடித்து வருவாராக.

(முடிபு) தோழி, வாழ்க்கையும் செல்வமும் இரண்டும் பொருளி ணுகும் என்று கூறி நம் ஐம்பால் நீவியோர், மரல் வாடு மருங்கின்மலை யிறந்தோர்; நாம் நோயுழக்குவம் ஆயினும், தாம் தம் செய்வினை முடிக்க.

(வி - ரை.) அறன்கடை - பாவம்; அறத்தின் நீக்கப்பட்டமை யின் அறன்கடையாயிற்று என்பது *பரிமேலழகர் உரை. பாவமாவது இரந்தோர்க்கு இல்லை என்றல். அறன்கடைப் படா வாழ்க்கை, இரந்தார்க்கு ஈதலும், பிறன்கடைப் படாஅச் செல்வம் - பிறர்பாற் சென்று இரவாமையும் ஆம் என்க. என்றும் என்பதனை இரண்டிடத் தும் கூட்டுக. செல்வம் - வீறு, மேம்பாடு. இருள் ஏர் - இருளையொத்த என்றுமாம். ஐம்பால் நீவியோர் என்றது, பிரிவு கருதித் தலையளி செய்தோர் என்றவாறு. பாணுடு-பாணன் நாடென்க; 'பாணன் நன் ணுட்டும்பர்' (ககங), 'வடா அது, நல்வேற் பாணன் நன்ணுட்டுள்ளதை' (கஉஇ) எனப் பிறண்டு வருதல் காண்க. பாணன் நாட்டில் ஆனிரை கள் திரண்டிருந்தனவென்றும், அவற்றிற்கு நீரூட்டற்குக் கோவலர்

* குறள், கசஉ - உரை.

தாம் தோண்டிய கூவலினின்றும் இதனால் நீர் இறைத்துப் பல சிறு குழிகளில் நிரப்புவர் என்றும், வேனில் வெம்மையால் உவர் நீர் வற்றினமையின் நீர் இறைக்கப்பெறாது அக்குழிகள் காய்ந்திருந்தனவென்றும், அவற்றின்கண் நீருண்ண வந்த களிறுகள் நீரில்லாமையாலாய வருத்தத்தோடு அவற்றை மிதித்து நடந்து சென்றன என்றும், பின் ஆண்டுச் சென்ற புலிகள் அக் களிறுகளின் அடிச்சுவட்டிலே கால் வைத்து நடந்து சென்றன என்றும், அக் களிற்றின் அடிச்சுவட்டிற் பதிந்த புலியின் கால் விரற் சுவடு, முழவின் கண்ணிலே விரலூன்றிய வடுப்போலத் தோன்றின என்றும் கொள்க. களிறு குழியில் அடி வைத்து ஏகியதும், புலி, அக் களிற்றடியில் மிதித்துச் சென்றதும் அவ்வுழிச் சிறிது ஈரம் இருந்தமையால் என்க. செதும்பு – சேறு; அல். பகுதிப்பொருள் விகுதி. நாம் நோயுழத்தலால் தலைவர் கருதிய வினை முடியாது ஒழியுங்கொல் என்னும் கருத்தினால், தாம் தம் செய்வினை முடிக்கவென ஓம்படை கூறினாளென்க.

(உ - றை•) யானை யடியகத்தும் புலி யடிவைத்துச் சென்ற சுவடு - முழவின் கண்ணிலே விரலூன்றிய வடுப்போலத் தோன்றும் வழியிற் சென்றார் என்பது, தலைவர் பொருளீட்டுதற்கண் எய்தும் துன்பத்தையே இன்பமாகக் கருதிச் சென்றார் என்றபடி.

---

156. மருதம்

[தலைமகளை இடத்துப்பத்துவந்த தோழி தலைமகனை வரைவு கடாயது.]

முரசுடைச் செல்வர் புரவிச் சூட்டு
மூட்டுறு கவரி தூக்கி அன்ன
செழுஞ்செய் நெல்லின் *சேயரிப் புனிற்றுக்கதிர்
மூதா தின்றல் அஞ்சிக் காவலர்
பாகல் ஆய்கொடிப் பகன்றையொடு பரீஇக்
காஞ்சியின் அகத்துக் கரும்பருத்தி †யாக்குந்
தீம்புனல் ஊர திறவி தாகக்
குவளை உண்கண் இவளும் யானும்
‡கழுநீர் ஆம்பல் முழுநெறிப் பைந்தழை
§காயா ஞாயிற் றாகத் தலைப்பப்
போய்தல் ஆடிப் பொலிகென வந்து
நின்நகாப் பிழைத்த தவறோ பெரும

(பாடம்) * சேயரிப் புனிற்றுக் கதிர்முதல் தின்ற
† யார்க்கும். ‡ கழனி யாம்பல். § காமர் ஞாயிற்.

கள்ளுங் கண்ணியுங் கையுறை யாக
நிலைக்கோட்டு வெள்ளை நால்செவிக் கிடாஅய்
நிலைத்துறைக் கடவுட்கு உளப்பட ஓச்சித்
தணிமருங்கு அறியாள் யாய்அழ
மணிமருள் மேனி பொன்னிறங் கொளலே.

—ஆலூர் மூலங்கிழார்.

(சொ - ள்.) க—எ. முரசு உடைச் செல்வர் புரவிச்சூட்டு - முரசங்களையுடைய செல்வரது குதிரையது தலையின் உச்சியிடத்து, மூட்டுறு கவரி தூக்கி அன்ன - இணைத்துத் தைத்த கவரியை நிமிர்த்து வைத்தாலொத்த, செழும் செய் நெல்லின் சேய்அரி புனிற்றுக் கதிர் - செழுமை வாய்ந்த வயலிலுள்ள நெல்லின் சிவந்த அரிகளையுடைய இளங்கதிரை, முதுஆ தின்றல் அஞ்சி - முதிய பசு தின்பதைக் கண்டு அஞ்சி, காவலர் - வயற்காவலர், கரும்பு அருத்தி - கரும்பினை உண்பித்து, பாகல் ஆய்கொடி பகன்றையொடு பரீஇ - பாகலின் சிறந்த கொடியைப் பகன்றையின் கொடியுடன் அறுத்து (அவற்றால்), காஞ்சியின் அகத்து யாக்கும் - காஞ்சிமரத்திடத்துக் கட்டிவைக்கும், தீம் புனல் ஊர - நீர்வளம் பொருந்திய ஊரையுடைய தலைவனே!

கஉ. பெரும - பெருமானே!

கங—எ. யாய் - எம் அன்னை, நிலைத்துறைக் கடவுட்கு - துறையினிடத்து நிலைபெற்ற தெய்வத்திற்கு, - கையுறையாக - கையுறைப் பொருளாக, கள்ளும் கண்ணியும் - கள்ளினையும் மாலையையும், நிலைக் கோட்டு நால்செவி வெள்ளைக் கிடாஅய் ஓச்சி - நிமிர்ந்த கொம்பினையும் தொங்கும் காதினையுமுடைய வெள்ளாட்டுக் கிடாய் உட்படச் செலுத்தியும், தணிமருங்கு அறியாள் அழ - தன் மகளுக்கு உற்ற நோய், தணியும் உபாயம் அறியாளாய் அழ, மணிமருள் மேனி - இத்தலைவியின் நீலமணி போன்ற மேனி, பொன் நிறம் கொளல் - பசலையால் பொன் நிறத்தினை யடைதல்;

எ—கஉ. குவளை உண்கண் இவளும் யானும் - நீலப்பூப்போலும் மையுண்ட கண்ணினையுடைய இத்தலைவியும் யானும், திறவிது ஆக - செவ்விதாக, கழுநீர் ஆம்பல் முழுநெறிப் பைந்தழை - கழுநீர் ஆம்பல் இவற்றின் இதழ் ஒடியாத பூக்களுடன் கூடிய பசிய தழையுடை, ஆகத்து அலைப்ப - ஆகத்தின்கண் அலைத்திட, காயா ஞாயிற்று - ஞாயிறு காய்தலில்லாத காலைப்பொழுதில், பொய்தல் ஆடி - விளையாடி, பொலிக என வந்து - (பின்பு) நீ வாழ்வாயாக எனக் கூறி வந்து, நின் நகாப் பிழைத்த தவறோ - நின்னுடன் நகையாடிப் பிழைத்த குற்றத்தாலாய தொன்றோ.

(முடிபு) தீம் புனலூர! பெரும! யாய், நிலைத்துறைக் கடவுட்குக் கள்ளும் கண்ணியும் கிடாயும் உட்பட ஓச்சித் தனிமருங்கு அறியாள் அழ, இவள் மேனி பொன்னிறங் கொளல், இவளும் யானும் பொய்தல் ஆடி நீ பொலிகென வந்து நின் நகாப் பிழைத்த தவறே!

(வி - ரை.) மூதா - முதிய எருமையுமாம். முழுநெறி - இதழ் ஒடிக்கப்படாத முழுப் பூ.

புனிற்றுக் கதிர்முதல் தின்றல் அஞ்சி என்னும் பாடத்திற்கு, ஈன்றணிமையுடைய பசு நெல்லின் கதிரையுடைய முதலினைத் தின்றலை அஞ்சி என்க. பொய்தல் ஆடிப் பொலிகென வந்து - நீவிர் பொய்தல் ஆடிப் பொலிக எனத் தாய் விடுக்க வந்து என்றுரைத்தலுமாம். நிலைக்கோடு-அறுதுநிற்கும் கொம்பு என்றலுமாம்.

(உ - றை.) விளைந்தபின் பெரிது பயன்படும் இளங்கதிரை ஆ தின்றலை அஞ்சிக் கரும்பருத்திக் கட்டிப் பயன் கொள்வார்போல, பின்னே பெரும்பயன் தரும் களவினை அழித்துப் பயன்தராது செய்யும் அலர் கூறுவார் வாயடங்கி யொழிய வரைந்து கொள்வாயாக என்றவாறு.

---

157. பாலை

[பிரிவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் சொல்லியது.]

அரியற் பெண்டிர் அல்குல் கொண்ட
*பகுவாய்ப் பானைக் குவிமுனை சுரந்த
அரிநிறக் கலுழி ஆர மாந்திச்
செருவேட்டுச் சிலைக்குஞ் செங்கண் ஆடவர்
வில்லிட வீழ்ந்தோர் பதுக்கைக் கோங்கின்
எல்லி மலர்ந்த பைங்கொடி அதிரல்
பெரும்புலர் வைகறை அரும்பொடு வாங்கிக்
கான யானை கவளங் கொள்ளும்
அஞ்சுவரு நெறியிடைத் தமியர் சென்மார்
நெஞ்சுண மொழிப மன்னே தோழி
முனைபுலம் பெயர்த்த புல்லென் மன்றத்துப்
பெயலுற நெகிழ்ந்து வெயிலுறச் சாஅய்
வினையழி பாவையின் உலறி
மனையொழிந் †திருத்தல் வல்லு வோர்க்கே.

—வேம்பற்றூர்க் குமரனார்.

(பாடம்) *பகுவாய்ப் பானைக் குவிமுலை; பகுவாய் யானைக் குவிகுலை.
†இருத்த லாற்று வோர்க்கே.

(சொ - ள்.) ௧௦—௪. தோழி-, முனைபுலம் பெயர்த்த புல் என் மன்றத்து-போர் நிகழ்ச்சி குடிகளை இடத்தினின்றும் பெயரச் செய்தமையின் பொலிவற்றிருக்கும் மன்றிடத்தே, பெயல்உற நெகிழ்ந்து வெயில் உறச் சாஅய்-மழை பெய்தலால் இளகியும் வெயில் உறுதலால் காய்ந்து நறுகியும், வினை அழி பாவையின்-வண்ணம் முதலியவேலைப் பாடுகள் அழிந்த பாவையைப்போல; உலறி-மேனி வாடி, மனை ஒழிந்திருத்தல் வல்லுவோர்க்கு-மனையின்கண் தலைவரைப் பிரிந்து தனித்திருத்தலை வல்லார்க்கு;

௧ - ௯. அரியல் பெண்டிர் அல்குல் கொண்ட - கள் விற்கும் மகளிர்-இடையிற் சுமந்துவந்த, பகுவாய்ப் பானை குவிமுனை சுரந்த-விரிந்த வாயையுடைய பானையின் குவிந்த முனை சொரிந்த, அரி நிறக்கலுழி ஆரமாந்தி - அரிக்கப்பெற்ற நிறமுடைய கள்ளின் வண்டலை - நிறையக் குடித்து, செருவேட்டுச் சிலைக்கும் செம் கண் ஆடவர் - போரினை விரும்பி ஆரவாரிக்கும்சிவந்த கண்ணையுடைய வீரர், வில் இட வீழ்ந்தோர் பதுக்கைக் கோங்கின் - வில்லால் எய்ய வீழ்ந்தோரது கற்குவியலின் அயலதாய கோங்கின் மீது படர்ந்து, எல்லி மலர்ந்த பைங்கொடி அதிரல் - இரவில் மலர்ந்த பசிய அதிரற் கொடியை, கான யானை - காட்டு யானைகள், பெரும்புலர் வைகறை - பெரிய இருள் புலர்கின்ற விடியலில், அரும்பொடு வாங்கி-அரும்புடன் இழுத்து, கவளம் கொள்ளும் அஞ்சுவரு நெறிஇடை - கவளமாக உண்ணும் அச்சம் வருகின்ற சுரநெறியில்;

௯—௧௦ தமியர் சென்மார் நெஞ்சு உண மொழிப - தனியராகச் செல்லும் தலைவர் அதனை அவர் தம் மனம் விரும்பி ஏற்றுக்கொள்ளும்படி சொல்லுவர்; மன் - யான் அவ்வாறு தனித்திருத்தலை மாட்டுகிலேன்.

(முடிபு) தோழி! அஞ்சுவரு நெறியிடைத் தமியர் சென்மார் வினையழி பாவையின் உலறி மனை ஒழிந்திருத்தல் வல்லுவோர்க்கு அவர் நெஞ்சுண மொழிப; மன்.

(வி - ரை.) அல்குல் - மருங்குல். அல்கில் என்பது பாடமாயின், தங்கிய இல்லில் என்க. குவிமுனை - கள்ளினைச் சொரிவதற்கு மூக்குப்போல் குவிந்திருக்கும் வாய். அரி - பன்னாடையால் அரிக்கப்பட்ட என்க, செங்கண் - கள்ளுண்டலாலும் சினத்தாலும் சிவந்த கண். மன், ஒழியிசை.

158. குறிஞ்சி

[தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி செவிலித்தாய்க்குச் சொல்லுவாளாய்த் தலைமகன் கேட்பச் சொல்லியது.]

உருமுரறு கருவிய பெருமழை தலைஇப்
பெயலான்று அவிந்த தூங்கிருள் நடுநாள்
*மின்னு நிமிர்ந்தன்ன கனங்குழை யிமைப்பப்
பின்னுவிடு நெறியிற் கிளைஇய கூந்தலள்
வரையிழி மயிலின் ஒல்குவனள் ஒதுங்கி
மிடையூர்பு இழியக் கண்டனென் இவளென
அலையல் வாழிவேண்டு அன்னைநம் படப்பைச்
சூருடைச் சிலம்பில் சுடர்ப்பூ வேய்ந்து
தாம்வேண்டு உருவின் அணங்குமார் வருமே
நனவின் வாயே போலத் துஞ்சுநர்க்
கனவாண்டு மருட்டலும் உண்டே இவள்தான்
சுடரின்று தமியளும் பனிக்கும் வெருவர
†மன்ற மராஅத்த கூகை குழறினும்
நெஞ்சழிந்து அரணஞ் சேரும் அதன்றலைப்
புலிக்கணத்து அன்ன நாய்தொடர் விட்டு
‡முருகன் அன்ன சீற்றத்துக் கடுந்திறல்
எந்தையும் இல்லன் ஆக
அஞ்சுவள் அல்லளோ §இவளிது செயலே.

—கபிலர்.

(சொ-ள்.) எ: அன்னை-, வாழி-,

௧—எ. உரும் உரறு கருவிய பெருமழை தலைஇ - இடி முழங்கும் தொகுதியவாய மிக்க மழை பெய்துவிட்டு, பெயல் ஆன்று அவிந்த தூங்கு இருள் நடு நாள்-இப் பெயல் நீங்கி ஒலியடங்கிய செறிந்த இருளையுடைய நள்ளிரவில், இவள்-இவள், மின்னு நிமிர்ந்தன்ன கனம் குழை இமைப்ப-மின்னல் நிமிர்ந்தாலொத்தவாய்க் கனத்த குழைகள் ஒளிவிட, பின்னு விடுநெறியில் கிளைஇய கூந்தலள் - பின்னல் நெகிழ்ந்தமையின் செறிப்புடன் அகன்ற கூந்தலையுடையளாய், வரை இழி மயிலின் ஒல்குவனள் ஒதுங்கி - மலையினின்று இறங்கும் மயிலைப்போலத் தளர்ந்து நடந்து, மிடை ஊர்பு இழியக் கண்டனென் என அலையல் - பரணில் ஏறி இறங்க வரக்கண்டேன் என்று கூறி இவளை வருத்தாதே, வேண்டு - நான் கூறுவதனை விரும்பிக் கேட்பாயாக;

(பாடம்) * மின்னு மிளிர்ந்தன்ன. † மன்ற மாத்த. ‡ முருகனன்ன. § இவனது செயலே.

எ—கக. சூர் உடைச் சிலம்பில் - தெய்வங்களையுடைய மலையை யடுத்த, நம் படப்பை - நம் தோட்டத்தின்கண், அணங்கு - ஒரு தெய்வம், சுடர்ப்பூ வேய்ந்து - ஒளி தங்கிய பூவைச் சூடி, தாம் வேண்டு உருவின் வரும் - தாம் அவ்வப்போது விரும்பிய உருவங்கொண்டு வரும்; (அன்றியும்), நனவின் வாயே போல - நனவினது உண்மைத் தோற்றம் போலவே, துஞ்சுநர் ஆண்டு கனவு மருட்டலும் உண்டு - துயில்வோரைக் கனவு அவ்விடத்து மயக்கலும் உண்டு;

கக—ச. இவள்தான் - இவளோ, சுடர் இன்று தமியளும் பனிக்கும் - விளக்கு இல்லாமல் தனியளாக இருத்தற்கும் நடுங்குவள்; வெருவர - அச்சம் தோன்ற, மன்ற மராஅத்த கூகை குழறினும் - மன்றத்தின்கண்ணுள்ள மராமரத்திலுள்ள கூகை குழறினாலும், நெஞ்சு அழிந்து அரணம் சேரும் - மனம் நடுங்கிப் பாதுகாப்பான இடத்திற்கு வந்துவிடுவள்;

கச—அ. அதன்தலை - அதன்மேலும், புலிக்கணத்து அன்ன நாய் தொடர்விட்டும் - புலிக்கூட்டத்தை ஒத்த நாய்கள் தொடர்தல் நீங்கினவாயினும், முருகன் அன்ன சீற்றத்துக் கடுந்திறல் - முருகனையொத்த சினத்தினையும் கடிய வலியினையும் உடைய, எந்தையும் இல்லன் ஆக - எம் தந்தை இல்லிடத்தானாகவும், இவள் - இத்தலைவி, இது செயல் - இங்ஙனம் படப்பை சென்று வரல், அஞ்சுவள் அல்லளோ - அஞ்சுவாள் ஆகாளோ.

(முடிபு) அன்னை! வாழி! இவள் தூங்கிருள் நடுநாள், கனங்குழை இமைப்ப, கூந்தலள், மயிலின் ஒதுங்கி மிடையூர்பு இழியக் கண்டனென் என அலையல்; வேண்டு; நம் படப்பை, தாம் வேண்டுருவின் அணங்கும் வரும்; கனவு மருட்டலும் உண்டு; இவள்தான் சுடரின்று தமியளும் பனிக்கும்; கூகை குழறினும் அரணம் சேரும்; அதன்றலை, நாய் தொடர்விட்டும் எந்தையும் இல்லன் ஆக இவள் இது செயல் அஞ்சுவள் அல்லளோ?

(வி - ரை.) மிடை - பரண். அணங்குமார்: மார் அசை; அவ்வணங்கு துஞ்சுநரைக் கனவின் மருட்டலும் உண்டு எனலுமாம். இன்று - இன்றி; இல்லையாக. தமியளும் - தனியே யிருத்தற்கும் என்க. குழறினும் உம்மை இழிவு சிறப்பு. நாய் தொடர்தலாலும் இவள் அஞ்சுவள்; அவை அங்ஙனம் தொடராதவிடினும் என விரித்துரைக்க. இதற்கு நாய் தொடர்தல்விட, வேட்டம் ஒழிந்து எந்தையும் இல்லனாக என்றுரைத்தலுமாம். எந்தை இல்லன் ஆகவும் என உம்மையை மாறுதலுமாம்.

(மே - ள்.) *"நாற்றமும் தோற்றமும்" என்னுஞ் சூத்திர உரையில் இச்செய்யுளைக் காட்டி, இது மிடையை ஏறி இழிந்தான் என்றது காரணமாக ஐயுற்ற தாயைக் கனவு மருட்டலும் உண்டென்றது. முத

* தொல். களவு. உங.

லாகப் பொய்யென மாற்றி அணங்கும் வருமென மெய்வழிக் கொடுத்து, இது சிறைப்புறமாகக் கூறி வரைவு கடாயது என்றும், *'களவலராயினும்' என்னுஞ் சூத்திரத்து உரையில், இப் பாட்டினுள் 'மிடையூர்பு இழியக் கண்டனென் இவளென, அலையல் வாழிவேண் டன்னை' என்றது தலைவி புறத்துப்போகக் கண்டு செவிலி கூறியதனைத் தோழி கொண்டு கூறினாள் என்றும் கூறினர், நச்.

---

159. பாலை

[பிரிவிடை வேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறுத்தியது.]

தெண்கழி விளைந்த வெண்கல் உப்பின்
கொள்ளை சாற்றிய கொடுநுக ஒழுகை
உரனுடைச் சுவல பகடுபல பரப்பி
உமண் உயிர்த்து இறந்த ஒழிகல் அடுப்பின்
வடியுறு பகழிக் கொடுவில் ஆடவர்
அணங்குடை நோன்சிலை வணங்க வாங்கிப்
பல்ஆன் நெடுநிரை தழீஇக் கல்லென
வருமுனை அலைத்த பெரும்புகல் வலத்தர்
கனைகுரல் கடுந்துடிப் பாணி தூங்கி
உவலைக் கண்ணியர் ஊன்புழுக்கு அயரும்
†கவலைக் காதலர் இறந்தனர் எனநனி
அவலங் கொள்ளன்மா காதலந் தோழி
விசும்பின் நல்லேறு சிலைக்குஞ் சேண்சிமை
நறும்பூஞ் சாரல் குறும்பொறைக் குணாஅது
வில்கெழு தடக்கை வெல்போர் வானவன்
மிஞிறுமூசு கவுள சிறுகண் யானைத்
தொடியுடைத் தடமருப்பு ஒடிய நூறிக்
கொடுமுடி காக்குங் குரூஉக்கண் நெடுமதில்
சேண்விளங்கு சிறப்பின் ஆமூர் எய்தினும்
ஆண்டமைந்து உறையுநர் அல்லர்நின்
பூண்தாங்கு ஆகம் பொருந்துதல் மறந்தே.

—ஆமூர்க் கவுதமன் சாதேவனார்.

(சொ-ள்.) கஉ. காதல் அம் தோழி—காதலையுடைய தோழியே!

---

* தொல். களவு. உச. (பாடம்) † கவலை காதலர்.

௧—௮. தெண் கழி விளைந்த வெண்கல் உப்பின் - தெளிந்த கழியின்கண் விளைந்த வெள்ளிய கல் உப்பினது, கொள்ளை சாற்றிய - விலையைக் கூறி விற்ற, உமண் - உப்பு வாணிகர், கொடுநுக ஒழுகை - வளைந்த நுகத்தையுடைய வண்டிகளிற் பூட்டிய, உரன் உடைச் சுவல பகடு பல பரப்பி - வலிபொருந்திய பிடரியினையுடைய எருதுகள் பலவற்றையும் மேயும்படி அவிழ்த்துவிட்டு, உயிர்த்து இறந்த - (உண்டு) இளைப்பாறி விடுத்துச் சென்ற, ஒழிகல் அடுப்பின் - ஒழிந்துகிடந்த கல்லாகிய அடுப்பிலே;

௯—௧௨. வடிஉறு பகழிக் கொடுவில் ஆடவர் - வடித்தல் உற்ற அம்பினையும் வளைந்த வில்லினையும் உடைய கரந்தை வீரர், அணங்கு உடை நோன்சிலை வணங்க வாங்கி - மாற்றார்க்கு வருத்தத்தை விளைக்கும் வலிய வில்லினை மிக வளைத்து, பல் ஆன் நெடு நிரை தழீஇ - பல பசுக்களையுடைய நீண்ட நிரையினைக் கவர்ந்து கொண்டு, கல் என - கல்லெனும் ஒலியுடன், வரும் முனை அலைத்த பெரும்புகல் வலத்தர் - வரும் வெருட்சி மறவர் போரினை அலைத்து ஓட்டிய பெரிய செருக்கினையும் வெற்றியையும் உடையராய், கனை குரல் கடும் துடிப் பாணி தூங்கி - மிக்க குரலையுடைய கடிய துடியின் ஒலிக்கொத்த தாளத்தொடு ஆடி, உவலைக் கண்ணியர் ஊன் புழுக்கு அயரும் - தழையுடன் கட்டிய கண்ணியைச் சூடினராய் ஊனைப்புழுக்கி உண்ணும், கவலை - கவர்த்த நெறிகளிலே, காதலர் இறந்தனர் என - நம் காதலர் சென்றனரென்று, கனி அவலம் கொள்ளல் - மிகவும் துன்புறாதே;

௧௩—௨௧. விசும்பின் நல் ஏறு சிலைக்கும் சேண் சிமை - வானிடத்தே சிறந்த இடி ஒலிக்கும் நெடிய உச்சியையுடையதும், நறும் பூ சாரல் - நறிய பூக்களையுடைய சாரல்களையுடையதுமான, குறும்பொறைக் குணாஅது - குறும்பொறை என்னும் மலைக்குக் கிழக்கின்கண் உள்ளதும், வில்கெழு தட கை வெல்போர் வானவன் - விற்பொருந்திய பெரிய கையினையுடைய போர் வெல்லும் சேரனது, மிஞிறு மூசு கவுள சிறு கண் யானை - வண்டுகள் மொய்க்கும் (மதம் வழியும்) கன்னத்தினையுடைய சிறிய கண்ணினையுடைய யானையின், தொடி உடை தட மருப்பு ஒடிய நூறி - பூண் பூண்ட பெரிய கோட்டினை ஒடியும்படி அழித்து, கொடுமுடி காக்கும் - கொடுமுடி என்பான் காத்து வருகின்ற, குரூஉக்கண் நெடுமதில் - விளங்கிய இடத்தையுடைய நெடிய மதில் சூழ்ந்த, சேண் விளங்கு சிறப்பின் - நெடுந்தூரம் சென்று விளங்கும் சிறப்பினையுடைய, ஆமூர் எய்தினும் - ஆமூரையே அடைவதாயினும், நின் பூண் தாங்கு ஆகம் பொருந்துதல் மறந்து - நினது பூண் சுமந்த மார்பினைப் பொருந்துதலை மறந்து, ஆண்டு அமைந்து உறையுநர் அல்லர் - அங்கே மனம் பொருந்தித் தங்கிவிடுவாரல்லர்.

(முடிபு) காதலம் தோழி! உமண் உயிர்த்திறந்த ஒழிகல் அடுப்பின் கொடு வில்லாடவர் ஊன்புழுக்கயரும் கவலையைக் காதலர் இறந்தன

ரென அவலங்கொள்ளல்; (அவர்) ஆமூர் எய்தினும் நின் ஆகம் பொருந்துதல் மறந்து, ஆண்டு அமைந்து உறையுநர் அல்லர்.

(வி-ரை.) அருமுனை அலைத்த எனப் பிரித்துரைத்தலுமாம். தொன்னன்மா: மா, அசை. குறும்பொறை - ஒரு மலையின் பெயர். சோமுடி - ஆமூர்க்கண்ணிருந்த ஒரு தலைவன்.

---

160. நெய்தல்

[தோழி வரைவு மலிந்து சொல்லியது.]

ஒடுங்கீர் ஓதி நினக்கும் அற்றே
நடுங்கின் றளித்தென் நிறையில் நெஞ்சம்
அடும்புகொடி சிதைய வாங்கிக் கொடுங்கழிக்
குப்பை வெண்மணல் பக்கஞ் சேர்த்தி
நிறைச்சூல் யாமை மறைத்தீன் று புதைத்த
கோட்டுவட் டுருவின் புலவுநாறு முட்டைப்
பார்ப்பிட னாகும் அளவைப் பகுவாய்க்
கணவ னோம்புங் கானலஞ் சேர்ப்பன்
முள்ளுறில் சிறத்தல் அஞ்சி மெல்ல
வாவுடை மையின் வள்பிற் காட்டி
ஏத்தொழில் நவின்ற எழில்நடைப் புரவி
செழுநீர்த் தண்கழி நீந்தலின் ஆழி
நுதிமுகங் குறைந்த பொதிமுகிழ் நெய்தல்
*பாம்புயர் தலையிற் சாம்புவன நிவப்ப
இரவந் தன்றால் திண்டேர் கரவாது
ஒல்லென வொலிக்கும் இளையரொடு வல்வாய்
அரவச் சீறூர் காணப்
பகல்வந் தன்றாற் பாய்பரி சிறந்தே.

—குமுழி ஞாழலார் நப்பசலையார்.

(சொ-ள்.) ௫—௮. நிறைச்சூல் யாமை - நிறைவாய சூலுற்ற யாமை, அடும்பு கொடி சிதைய வாங்கி - அடும்பினைக் கொடி சிதைய இழுத்து, கொடும் கழி குப்பை வெண்மணல் பக்கம் சேர்த்தி - வளைந்த கழியிடத்து வெள்ளிய மணல் மேட்டின் பக்கத்தே சேர்த்து (அதன் கண்), மறைத்து ஈன்று புதைத்த - மறைய ஈன்று புதைத்த, கோட்டு வட்டு உருவின் புலவு நாறு முட்டை - யானைக் கொம்பினாற் செய்த வட்

(பாடம்) * பாம்புயிர்.

டின் வடிவமுடைய புலால் நாறும் முட்டையை, பகுவாய்க் கணவன் - பிளந்த வாயினையுடைய ஆண் யாமை, பார்ப்பு இடன் ஆகும் அளவை - அதனிடத்தினின்று குஞ்சு வெளிப்படும் அளவு, ஓம்பும் - பாதுகாத்திருக்கும், கானல் அம் சேர்ப்பன் - சோலையையுடைய கடற்கரைத் தலைவனது;

௯—௧௫. திண்டேர் - வலிய தேரானது, ஏ தொழில் நவின்ற எழில்நடை புரவி - அம்பின் வேகம்போலச் செல்லுதலைப் பழகிய அழகிய நடையினையுடைய குதிரைகள், முள் உறின் சிறத்தல் அஞ்சி-தாற்றினால் குத்தப்பெறின் வேகம் அளவு கடத்தலை அஞ்சி, வள்பின்காட்டி - கடிவாளத்தினால் குறிப்பிக்க, மெல்ல வரவு உடைமையின் - மெல்லத் தாவிச் செல்லுதல் கொண்டமையின், செழுநீர் தண் கழி நீந்தலின் - செழுமை வாய்ந்த நீரினையுடைய குளிர்ந்த கழியினைக் கடக்குங்கால், ஆழி மதிமுகம் குறைந்த பொதி முகிழ் நெய்தல் - அத்தேர் உருளையின் கூரிய முனையால் அறுக்கப்பெற்ற பொதிந்த அரும்புகளையுடைய நெய்தல், பாம்பு உயர் தலையில் சாம்புவன நிவப்ப - பாம்பின் மேலே தூக்கிய தலையைப்போல வாடி மேலெழ, இரவந்தன்று - இதுகாறும் இராக்காலங்களில் வந்து கொண்டிருந்தது;

௧௬—௯. பாய்பரி சிறந்து - (இன்று அத்தேர்) பாயும் குதிரை வேகத்தாற் சிறப்புற்று, கரவாது - மறையாமல், ஒல் என ஒலிக்கும் இளையரொடு - ஒல்லென ஆரவாரம் செய்யும் ஏவல் இளையரொடு, வல் வாய் அரவச் சிறுகுடி காண - வலிய வாயினாலே அலராகிய ஒலியைச் செய்யும் சிறிய ஊர்ப் பெண்டிர் காண, பகல் வந்தன்று - பகலிலே வந்தது; (அதனால்):

௧—௨. என் நிறை இல் நெஞ்சம் நடுங்கின்று - எனது நிறையில்லாத நெஞ்சம் நடுங்கியது, அளித்து-அது இரங்கத்தக்கது, ஒடுங்கு ஈர் ஓதி - ஒடுங்கிய கரிய கூந்தலையுடைய தோழியே! நினக்கும் அற்றோ - நினக்கும் அவ்வாறு நெஞ்சம் நடுங்கியதோ?

(முடிபு) கானலஞ் சேர்ப்பன் தேர் இதுகாறும் இரவின்கண் வந்தன்று; இப்பொழுது பகல் வந்தன்று; என் நெஞ்சம் நடுங்கின்று; அளித்து! ஒடுங்கு ஈர் ஓதி! நினக்கும் அற்றோ?

(வி - ரை.) யாமையானது முட்டையை மறைவிடத்தில் ஈன்று புதைத்துப் போகுமெனவும், ஆண் யாமையானது அம் முட்டையைக் குஞ்சு வெளிப்படும் அளவு பாதுகாக்கும் எனவும் கொள்க. இவ்வுண்மை, *'தாயின் முட்டை போல உட்கிடந்து, சாயினல்லது பிறிதெவனுடைத்தோ, யாமைப்பார்ப்பின் அன்ன, காமம் காதலர் கையற விடினே.' †'நீம்பெரும் பொய்கை யாமையிளம் பார்ப்பு, தாய்முக நோக்கி வளர்ந்திசி னாங்கு' என்னுஞ் செய்யுட்களானும் உணர்க. முன்-

---

* குறு. ௧௫௨. † ஐங்குறு. மருதம். ௪௪.

தாழ. காட்டி — காட்ட எனத் திரிக்க. முன்பெல்லாம் இரவந்தன்று எனவும் இப்பொழுது பகல் வந்தன்று எனவும் விரித்துரைக்க. இப்பொழுது கரவாது இளையரொடு பிறர் காணப் பரிசிறந்து பகல் வந்தன்று என்றமையால், முன்பெல்லாம் கரவிலே இளையரின்றிப் பிறர் காணாமலும், பரிசிறவாமலும் இரவில் வந்ததென்க. இப்பொழுது தேர் இங்ஙனம் வந்தது என்றது வரைவு வேண்டி வந்ததென்றபடி. என் நெஞ்சம் நடுங்கின்று; ஒடுக்கிரோதி! நினக்கும் அற்றோ என்றது தலைவியை நோக்கி, வரைவு மலிந்து கையாடிச் சொல்லியது.

(உ - றை.) 'நிறைச்சூல் யாமையைக் காமம் நிறைந்த தலைவியாகவும், அது அடும்பங் கொடியை யறுத்து அதனை வெண்மணற் பக்கத்தே சேர்த்தது, தலைவி தன் தாயர் தன்னையர்பாலுள்ள அற்புத் தளையையறுத்து அவ்வன்பைத் தலைவன் பக்கலிலே சேர்த்த தன்மையாகவும், அது தான் ஈன்ற முட்டையை மறைத்துப் புதைத்தது, தலைவி தான் ஒழுகிய களவொழுக்கத்தைப் புறத்தார்க்குப் புலனாகாமல் மறைத்துவைத்த தன்மையாகவும், அம்முட்டை புலவு நாறியது, அக் களவு வெளிப்பட்டு அலரெழும் தன்மையாகவும், அம் முட்டையைக் கணவன் பார்ப்பாகுமளவும் ஓம்பியது, அக் களவொழுக்கத்தைத் தலைமகன் வரையவந்து மாட்சிமைப் படுத்தும் துணையும் இடையீடின்றிக் குறிவழி யொழுகித் தலைமகளை ஓம்பின தன்மையாகவும் உள்ளுறை யுவமம் கொள்க' என்பர், இராசகோபால ஐயங்கார்.

---

161. பாலை

[பிரிவுணர்த்திய தோழி, தலைமகளது வேறுபாடு கண்டு முன்னமே உணர்ந்தாள் நம்பெருமாட்டியென்று தலைமகளைச் செலவு விலக்கியது.]

வினைவயின் பிரிதல் யாவது வணர்சுரி
வடியாப் பித்தை வன்கண் ஆடவர்
அடியமை பகழி ஆர வாங்கி
வம்பலர்ச் செகுத்த அஞ்சுவரு கவலைப்
படுமுடை *நசைஇய வாழ்க்கைச் செஞ்செவி
எருவைச் சேவல் ஈண்டுகிளை பயிரும்
வெருவரு கானம் நீந்திப் பொருள் புரிந்து
இறப்ப †எண்ணினிர் என்பது சிறப்பக்
கேட்டனள் கொல்லோ தானே தோட்டிரும்பு
சுரும்புண ஒலிவரும் இரும்பல் கூந்தல்

(பாடம்) * நசைஇ வ: கட். † எண்ணினா.

அம்மா மேனி ஆயிழைக் குறுமகள்
சுணங்கணி ஆகத்து அணங்கென உருத்த
நல்வரல் இளமுலை நோக்கி
*பல்லிதழ் உண்கண் பரந்தன பனியே.

—மதுரைப் புல்லங் கண்ணனார்.

(சொ - ள்.) ௰—௧௪. (தலைவ!) சுரும்பு தோட்டு ஆழ்பு உண – வண்டுகள் மலரிதழுட்புக்குத் தேனையுண்ண, ஒலிவரும் இரும் பல் கூந்தல் - தழைத்த கரிய பலவாய கூந்தலையும், அம் மா மேனி - அழகிய மாமை நிறமுடைய மேனியையும், ஆய் இழை - ஆய்ந்த அணிகளையுமுடைய, குறுமகள்-இளையளாய தலைவியின், சுணங்கு சூழ் ஆகத்து - தித்தி படர்ந்த மார்பின்கண், அணங்கு என உருத்த - வீற்றுத் தெய்வமென உருக்கொண்ட, நல் வரல் இளமுலை நோக்கி - நல்ல வளர்ச்சியையுடைய இளைய முலைகள் நோக்கி, பல் இதழ் உண்கண் - பல இதழையுடைய நீலப் பூப்போன்ற மையுண்ட கண்கள், பனி பரந்தன - நீர் பரந்தொழுகின;

௧—௯. வணர் சுரி வடியாப் பித்தை வன்கண் ஆடவர் - வளைந்து சுருண்ட கோதப்பெறாத மயிரினையுடைய கொடிய மறவர், அடி அமை பகழி ஆர வாங்கி - குதை யமைந்த அம்பினை முழுதும் இழுத்து விடுத்து, வம்பலர்ச் செகுத்த அஞ்சுவரு கவலை-வழிச் செல்லும் புதியரைக் கொன்ற அச்சம் தோன்றும் கவர்த்த நெறியில், படுமுடை நசைஇய வாழ்க்கைச் செம் செவி எருவைச் சேவல் - பொருந்தும் முடை நாறும் புலாலை விரும்பியுண்ணும் வாழ்க்கையினையுடைய சிவந்த செவியையுடைய பருந்தின் சேவல், ஈண்டு கிளை பயிரும் - நெருங்கிய தன் சுற்றத்தினை அழைக்கும், வெருவரு கானம் - அச்சம் தோன்றும் கானத்தை, பொருள் புரிந்து - பொருளை விரும்பி, நீந்தி இறப்ப எண்ணினிர் என்பது - கடந்து செல்ல எண்ணினீர் என்பதை, தான் சிறப்பக் கேட்டனள் கொல் - அவள் முன்னரே நன்கு கேட்டுளாளோ? (ஆயின்);

௧. வினைவயிற் பிரிதல்யாவது-நீர் எண்ணியாங்கு பொருளீட்டும் வினையின்கண் அவளைப் பிரிந்து செல்லுதல் யாங்ஙனம் இயல்வதாகும்? போதுகாண்.

(முடிபு) குறுமகள் ஆகத்து முலை நோக்கி கண் பனி பரந்தன; வெரு வருகானம் பொருள் புரிந்து இறப்ப எண்ணினிர் என்பது, தான் சிறப்பக் கேட்டனள் கொல்லோ? (ஆயின்) வினைவயிற் பிரிதல் யாவது?

(வி - ரை.) சேவல் முடையை உண்டற்குக் கிளையைப் பயிரும் என்க. அணங்கு - வீற்றுத் தெய்வம். அது முலையிடத்திருக்கு மென்பது, †'ஆமணங்கு குடியிருந் தஞ்சுணங்கு பரந்தனவே' என்பதனாற்

* பல்லிதழ் மழைக்கண். †. சீவக. ௯௫௪.

பெறப்படும். கண் பனி பரந்தன என்பது, இடத்துநிகழ் பொருளின் தொழில் இடத்தின்மேல் நின்றது.

---

162. குறிஞ்சி

[இரவுக்குறிக்கண் தலைமகளைக் கண்ணுற்று நீங்கிய தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.]

கொளக்குறை படாஅக் கோடுவளர் குட்டத்து
அளப்பரி தாகிய குவையிருந் தோன்றல
கடல்கண் டன்ன மாக விசும்பின்
அழற்கொடி யன்ன மின்னுவசிபு நுடங்கக்
கடிதிடி உருமொடு கதழுறை சிதறி
விளிவிடன் அறியா வானுமிழ் நடுநாள்
அருங்கடிக் காவலர் இகழ்பதம் நோக்கிப்
பனிமயங்கு அசைவளி அலைப்பத் தந்தை
நெடுநகர் ஒருசிறை நின்றனெ னாக
அறலென அவிர்வருங் கூந்தல் மலரென
வாண்முகத்து அலமரும் ஆயிதழ் மழைக்கண்
முகைநிரைத் தன்ன மாவீழ் வெண்பல்
நகைமாண் டிலங்கு நலங்கெழு துவர்வாய்க்
கோலமை விழுத்தொடி விளங்க வீசிக்
காலுறு தளிரின் நடுங்கி ஆனாது
நோயசா வீட முயங்கினள் வாய்மொழி
நல்லிசை தருஉம் இரவலர்க்கு உள்ளிய
நசைபிழைப் பறியாக் கழல்தொடி *அதிகன்
கோளறவு அறியாப் பயங்கெழு பலவின்
வேங்கை சேர்ந்த வெற்பகம் பொலிய
வில்கெழு தானைப் பசும்பூண் பாண்டியன்
களிறணி வெல்கொடி கடுப்பக் காண்வர
ஒளிறுவன இழிதரும் உயர்ந்துதோன் றருவி
நேர்கொள் நெடுவரைக் கவாஅன்
சூரர மகளிரிற் பெறற்கரி யோளே.

—பரணர்.

(பாடம்) * அதியன்; அதகன்.

(சொ - ள்.) நெஞ்சே-,

க—சு. கொளக் குறைபடா - கொள்ளக் கொள்ளக் குறைபடாததும், கோடு வளர் குட்டத்து - சங்குகள் பெருகும் ஆழத்தினையுடைமையால், அளப்பு அரிதாகிய - அளத்தற்கு அரிதாகியதும், குவை இரு தோன்றல் - திரண்ட கரிய தோற்றத்தினை யுடையதும் ஆகிய, கடல் கண்டன்ன - கடலைக் கண்டாலொத்த, மாக விசும்பின் - வானில், அழற்கொடி அன்ன மின்னு வசிபு நுடங்க - தீயின் கொடியை யொத்த மின்னல் மேகத்தைப் பிளந்து கொண்டு அசைந்து செல்ல, கடிது இடி உருமொடு - கடுமையாக இடிக்கும் இடியுடன், கதழ் உறை சிதறி - விரைந்த நீரைச் சிதறி, விளிவு இடன் அறியா - முடிவிடம் அறியாவாறு, வான் உமிழ் நடு நாள் - மேகம் பெய்தலைச் செய்யும் நடு இரவில்;

எ—கூ. அருங் கடிக் காவலர் இகழ் பதம் நோக்கி - அரிய காத்தற்றொழிலையுடைய காவலர் நெகிழ்ந்திருந்த செவ்வியை நோக்கி, பனி மயங்கு அசை வளி அலைப்ப - குளிர் பொருந்திய அசைந்து வரும் வாடைக்காற்று வருத்த, தந்தை நெடுநகர் ஒரு சிறை நின்றனென் ஆக - தன் தந்தையின் நீண்ட மாளிகையின் ஒரு புறத்தே நின்று கொண்டிருந்தேனாக;

கக—உஒ. வாய்மொழி - வாய்மைச் சொல்லினையும், நல் இசை தரூஉம் இரவலர்க்கு உள்ளிய நசை பிழைப்பு அறியா - நல்ல கீர்த்தியினை அடைவிக்கும் இரவலர்க்கு அவர் எண்ணிய விருப்பம் பிழைத்தல் அறியப்படாத ஈகையினையும் உடைய, கழல் தொடி அதிகன் - கழலும் வீர வளையும் அணிந்த அதிகன் என்பானது, கோளறவு அறியாப் பயம் கெழு பலவின் - காய்த்தல் இல்லையாதலை அறியாத பயனுடைய பலாமரத்தினோடு, வேங்கை சேர்ந்த வெற்பகம் பொலிய - வேங்கைமரமும் பொருந்தியுள்ள மலையிடம் பொலிவுற, வில் கெழு தானை பசும்பூண் பாண்டியன் - வில்லையுடைய சேனையையுடைய பசும்பூண் பாண்டியனது, களிறு அணி வெல் கொடி கடுப்ப - களிற்றின்மீது எடுத்த வெல்லும் கொடியை யொப்ப, காண்வர ஒளிறுவன இழிதரும் உயர்ந்து தோன்று அருவி - அழகுபெற மிளிர்வனவாய் இழியும் உயர்ந்து காணப்பெறும் அருவிகளையுடைய, நேர் கொள் நெடுவரைக் கவான் - நேரான நெடிய மலையின் சாரலிலுள்ள, சூர் அர மகளிரில் பெறற்கு அரியோள் - அச்சம் தரும் தெய்வப்பெண்களைப் போலப் பெறுதற்கு அரியளாகிய நம் தலைவி;

உ0—சு. அறல் என அவிர்வரும் கூந்தல் - அறல்போல் விளங்கும் கூந்தலினையும், மலர் என வாள் முகத்து அலமரும் ஆய் இதழ் மழைக்கண் - நீலமலரென ஒளிபொருந்திய முகத்தில் சுழலும் அழகிய இதழினையுடைய குளிர்ந்த கண்ணினையும், மாவீழ் முகை நிரைத்தன்ன வெண் பல் - வண்டுகள் விரும்பும் முல்லை அரும்பினை வரிசையாக நிறுத்

நிலவொத்த வெண் பல்லினையும், நகை மாண்டு இலங்கு நலம் கெழு துவர்வாய் - புன்னகையால் மாண்புற்று விளங்கும் நன்மை வாய்ந்த பவளம் போன்ற வாயினையும் உடையளாய், கோல் அமை விழுத்தொடி விளங்க வீசி - அழகு வாய்ந்த சிறந்த வளையல் விளங்கக் கையை வீசி, கால் உற தளிரின் நடுங்கி - காற்று வீசப்பெற்ற தளிரென நடுங்கி வந்து, நோய் அசா வீட ஆனது முயங்கினள் - நமது நோயாகிய வருத்தம் நீங்க அமையாது முயங்கினள்.

(முடிபு) நெஞ்சே! வான் உமிழ் நடுநாள் தந்தை நெடுநகர் ஒரு சிறை நின்றனெனாக; சூரர மகளிரிற் பெறற் கரியோள் வீசி நடுங்கி வந்து நோயசா வீட முயங்கினள், விசும்பின் மின்னு வசிபு நுடங்க, வானம் உருமொடு உறைசிதறிப் பெயலுமிழ் நடுநாள் எனவும். வெற்பகம் பொலிய வெல்கொடி கடுப்ப உயர்ந்து தோன்று அருவி நெடு வரைக் கவானிலுள்ள சூரர மகளிர் எனவும் கொள்க.

(வி - ரை.) கோடு - கரையுமாம். மாக விசும்பு - இருபெயரொட்டு. கருமையும் பரப்பும் பற்றிக் கடல் கண்டன்ன என்றார். விளி விடன் தங்கு மிடமுமாம். அருங்கடி என்றதனாற் காவலின் அருமை கூறப்பட்டது. வளி அசைப்ப ஒரு சிறை நின்றனென் என்றதனால்; தலைவிபாலுள்ள வேட்கை மிகுதியால் தலைவன் இரவுக்குறிக்கண் நின்ற அருமை குறிக்கப்பட்டது. கோலம் - கோல் எனக் குறைந்து நின்றது; கோல்-இரட்சியுமாம். நடுங்கி - அச்சத்தால் நடுங்கி என்றலுமாம். பிழைப்பரிய ஈகையினையுமுடைய என விரித்துரைக்க. கோளறவு அறியா என்றது, எஞ்ஞான்றும் காய்த்தலையுடைய என்றபடி. பசும்பூட் பாண்டியன், பெயர். நெடுவரைக்கவான் - நீண்ட மூங்கிலையுடைய பக்க மலையுமாம்.

---

163. பாலை

[பிரிவின்கண் வற்புறுக்குந் தோழிக்குத் தலைமகள் ஆற்றாமை மீதூரச் சொல்லியது.]

விண்ணதிர்பு தலைஇய விரவுமலர் குழையத்
தண்மழை பொழிந்த தாழ்பெயல் கடைநாள்
எமியம் ஆகத் துனியுளம் கூரச்
சென்றோர் உள்ளிச் சில்வளை நெகிழப்
*பெருநசை உள்ளமொடு வருதிசை நோக்கி
†விளியும் எவ்வமொடு அளியள் என்னாது
களிறுயிர்த் தன்ன கண்ணழி துவலை

(பாடம்) * வருநசை. † விளியா வெவ்வம்; விளிய வெவ்வம்.

முளரி கரியும் முன்பனிப் பால்நாள்
குன்றுநெகிழ்ப் பன்ன குளிர்கொள் வாடை
எனக்கே வந்தனை போறி புனல்கால்
அயிரிடு குப்பையின் நெஞ்சுநெகிழ்ந் தவிழக்
கொடியோர் சென்ற தேஎத்து மடியாது
இனையை யாகிச் சென்மதி
வினைவிதுப் புறுநர் உள்ளலும் உண்டே.

—கழார்க்கீர னெயிற்றியார்.

(சொ - ள்.) ௧—௬. விரவு மலர் குழைய - பலவகையாக மலர்களும் குழைந்திட, விண் அதிர்பு தலைஇய - வானின்கண் முழங்கிக் கூடிய, தண்மழை பொழிந்த தாழ்பெயல் கடைநாள் - குளிர்ந்த மேகம் சொரிந்துபோன குறைந்த பெயலைக்கொண்ட கூதிரின் கடைநாளில், துனி உளம்கூர - மனத்தே வெறுப்பு மிக, எமியமாகச் சென்றோர் உள்ளி - யாம் தமியேமாகப் பிரிந்து சென்ற தலைவரை எண்ணி, சில் வளை நெகிழ - எஞ்சிய சிலவாய வளைகளும் கழன்று போக, பெருநசை உள்ளமொடு வருதிசை நோக்கி - பெரிய ஆர்வம் கொண்ட உள்ளத்தோடு அவர் மீண்டுவரும் திசையை நோக்கி (வருந்தி), விளியும் எவ்வமொடு அளியள் என்னாது - இறத்தற்கேதுவாய துன்பத்தோடு கூடி இருத்தலின் அளிக்கத்தக்காள் இவள் என்று நினையாது;

௭—௧0. களிறு உயிர்த்தன்ன கண் அழி துவலை - யானை (நீரைப் பருகி) உயிர்ப்பது போலும் இடம் மறைய வீசும் பனித்துளியால், முளரி கரியும் முன்பனிப் பால்நாள் - தாமரைமலர் கரிந்திடும் முன் பனிக் காலத்துப் பாதியிரவில், குன்று நெகிழ்ப்பு அன்ன குளிர்கொள் வாடை - மலையையும் நடுங்கச் செய்வது போன்ற குளிரைக்கொண்ட வாடைக்காற்றே, எனக்கே வந்தனை போறி - நீ என்பாலே நலிய வந்தனை போல்கின்றாய்;

௧0—௪. புனல் கால் அயிர் இடு குப்பையின் - நீர் ஓடுமிடத்து உள்ள நுண்மணலாலாய மேடு கரைந்திடல்போல, நெஞ்சு நெகிழ்ந்து அவிழ - நெஞ்சம் கரைந்து இளக, கொடியோர் சென்ற தேஎத்து - கொடியராய அத் தலைவர் சென்ற திசையில், மடியாது இனையை ஆகிச் சென்மதி - அயராது இன்ன தன்மையினை ஆகிச் செல்வாயாக; (செல்லின்), வினை விதுப்பு உறுநர் உள்ளலும் உண்டு - பொருளீட்டும் தொழிலிற் பெருவேட்கை யுடையார் என்னை நினைத்து வருதலும் உண்டு.

(முடிபு) தாழ்பெயற் கடைநாள்; சென்றோர் உள்ளி எவ்வமொடு (இருத்தலின்) அளியள் என்னாது, குளிர்கொள் வாடையே! எனக்கே வந்தனை போறி; கொடியோர் சென்ற தேஎத்துச் சென்மதி; வினை விதுப்புறுநர் உள்ளலுமுண்டு.

(வி - ரை.) விளியும் எவ்வமொடு என்பதற்குத் துன்பத்தால் இறந்துபடுவள் என்றுரைத்தலுமாம். விளியா எவ்வமொடு என்பது பாடமாயின் கெடாத துன்பத்தினொடு (இருத்தலின்) என்றுரைக்க. என்னுது வந்தனை எனக் கூட்டுக.

---

164. முல்லை

[பாசறைக்கண் இருந்த தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.]

கதிர்கை யாக வாங்கி ஞாயிறு
பைதறத் தெறுதலிற் பயங்கரந்து மாறி
விடுவாய்ப் பட்ட வியன்கண் மாநிலம்
காடுகவின் எதிரக் கனைபெயல் பொழிதலின்
பொறிவரி யினவண் டார்ப்பப் பலவுடன்
நறுவீ முல்லையொடு தோன்றி தோன்ற
*வெறியேன் றன்றே வீகமழ் கானம்
எவன்கொல் மற்றவர் நிலையென மயங்கி
இருபனி உறைக்குங் கண்ணொடு †இனைபாங்கு
இன்னா துறைவி தொன்னலம் பெறூஉம்
இதுநற் காலங் காண்டிசின் பகைவர்
மதில்முகம் முருக்கிய தொடிசிதை மருப்பில்
கந்துகால் ஒசிக்கும் யானை
வெஞ்சின வேந்தன் வினைவிடப் பெறினே.

—மதுரைத் தமிழ்க்கூத்தன் நாகன்றேவனார்.

(சொ - ள்.) நெஞ்சே!

கக—ச. பகைவர் மதில் முகம் முருக்கிய தொடி சிதை மருப்பின் - பகைவரது மதிற்கதவினைச் சிதைத்த பூண்சிதைந்த கோட்டினையும், கந்து ஒசிக்கும் கால் யானை - கட்டுத் தறியினை ஒடிக்கும் காலினையு முடைய யானைகளையுடைய, வெம் சின வேந்தன் வினைவிடப்பெறின் - கொடிய சினத்தினையுடைய நம் வேந்தன் இப் போரினை முடிக்கப் பெறின்;

க—எ. ஞாயிறு கதிர் கையாக வாங்கி - ஞாயிறு தன் கதிரே கையாக ஈரத்தினைக் கவர்ந்து, பைது அற தெறுதலின் - பசுமையறக் காய்தலின், பயம் கரந்து மாறி - நீர் இல்லையாகி ஒழிய, விடுவாய்ப்பட்ட - பிளத்தல் பொருந்திய, வியன் கண் மாநிலம் - மிக்க இடம் வாய்ந்த

(பாடம்) * வெறி வென்றன்றே. † கூ. க0, இனையா வின்னுது.

பெரிய புவியிலே, காடு கவின் எதிர - காடு (பண்டை) அழகினை எய்த கனை பெயல் பொழிதலின் - மிக்க மழை பொழிந்தமையால், பொறி வரி இனவண்டு ஆர்ப்ப - பொறிகளையும் வரிகளையும் உடைய கூட்டமாய வண்டுகள் ஆரவாரம் செய்ய, நறவீ முல்லையொடு தோன்றி பல உடன் தோன்ற - நறிய முல்லைப்பூவுடன் செங்காந்தள் பூவும் வேறு பல பூக்களும் ஒருங்கு மலர, கானம் வீ கமழ் வெறி என்றன்று - காடு மலர் நாறும் நாற்றம் பொருந்தியது ;

அ—௧௧. அவர்நிலை எவன்கொல் என மயங்கி - நம் தலைவர் நிலை என்னாயிற்றோ என மயங்கி, இரு பனி உறைக்கும் கண்ணொடு - தாழும் நீரினைச் சிந்தாநிற்கும் கண்களுடன், ஆங்கு இனைபு இன்னாது உறைவி - மனையின்கண் வருந்தி இன்னாமையுடன் வதிவாளாய தலைவி, தொல் நலம் பெறூஉம் நல்காலம் இது காண்டிசின் -(நம்மைக் கண்டு) பழைய நலத்தினை அடையும் நல்ல காலம் இதுவாகும் காண்பாயாக.

(முடிபு) நெஞ்சே! வெஞ்சின வேந்தன் வினைவிடப் பெறின், மாநிலம் காடு கவின் எதிரப் பெயல் பொழிதலின் கானம் வெறி என்றன்று; அவர் நிலை யாதோ என மயங்கி இனைபு ஆங்கு இன்னாது உறைவி தொன்னலம் பெறூஉம் நற்காலம் இதுகாண்.

(வி - ரை.) பயம்-வளமுமாம். விடுவாய்-பிளப்பு. நலம் பெறூஉம் நற்காலம் இது என மாறுக. வெஞ்சின வேந்தன் வினைவிடப் பெறின் என்றமையால், வேந்தன் வெற்றி யெய்தியும் சின மிகுதியாற் சந்திற்கு ஒருப்படாதுளன் என்பது போதரும்.

(மே - ள்.) *'ஏனோர் மருங்கினும்' என்னுஞ் சூத்திரத்து, (இச் செய்யுள்) பிரிதற் பகுதியாகிய பாசறைப் புலம்பல் எனினும் நிலம்பற்றி முல்லையாயிற்று என்றுரைத்தனர், இளம்.

---

165. பாலை

[மகட்போக்கிய தாயது நிலைமை கண்டார் சொல்லியது.]

கயந்தலை மடப்பிடி பயம்பிற் பட்டெனக்
களிறுவிளிப் படுத்த கம்பலை வெரீஇ
ஒய்யென எழுந்த செவ்வாய்க் குழவி
தாதெரு மறுகின் மூதூர் ஆங்கண்
எருமை நல்லான் பெறுமுலை மாந்தும்
நாடுபல இறந்த நன்ன ராட்டிக்கு
ஆயமும் அணியிழந்து அழுங்கின்று தாயும்
†இன்தோள் தாராய் இறீஇயரென் உயிரெனக்

* தொல். அகத். ௨௪. (பாடம்) † ஈன்றோட்டாராய்.

கண்ணும் நுதலும் நீவித் தண்ணெனத்
தடவுநிலை நொச்சி வரிநிழல் அசைஇத்
தாழிக் குவளை வாடுமலர் *சூட்டித்
தருமணற் கிடந்த பாவையென்
†அருமக ளேயென முயங்கினள் அழுமே.

....

(சொ-ள்.) ௧—௬. கயந்தலை மடப்பிடி பயம்பிற் பட்டென — மெல்லிய தலையையுடைய இளைய பெண்யானை குழியில் அகப்பட்டதாக, களிறு விளிப்படுத்த கம்பலை வெரீஇ - களிற்றுயானை கூப்பீடு செய்த ஆரவாரத்திற்கு அஞ்சி, ஒய்யென எழுந்த செவ்வாய்க் குழவி - விரைந்தெழுந்த சிவந்த வாயினதாய அதன் கன்று, தாது எரு மறுகின் மூதூர் ஆங்கண் - தாதாகிய எருவினையுடைய தெருக்களையுடைய பழைய ஊராய அவ்விடத்து, எருமை நல் ஆன் பெறு முலை மாந்தும் - எருமையாய நல்ல மாட்டினின்றும் பெறுகின்ற முலைப்பாலை உண்ணும் - இடமாய, நாடு பல இறந்த நன்ன ராட்டிக்கு - பல நாடுகளைக் கடந்து சென்ற நன்மையை யுடையாள் பொருட்டு;

௭. ஆயமும் அணி இழந்து அழுங்கின்று - ஆயமும் பொலிவிழந்து வருந்துகின்றது;

௭—௧௩. தாயும் - தாயும், இரீஇயர் என் உயிர் என - என் உயிர் கெடுவதாக என்று நொந்து கூறி, தருமணல் கிடந்த பாவை - கொணர்ந்து பரப்பிய மணலில் கிடந்த மகளது பாவையை எடுத்து, கண்ணும் நுதலும் நீவி - அதன் கண்ணையும் நெற்றியையும் தடவி, தடவு நிலை நொச்சி வரி நிழல் தண் என அசைஇ - வளைந்த நிலையினையுடைய நொச்சியின் வரிவரியாகவுள்ள நிழலில் தட்பமுறக் கிடத்தி, தாழிக் குவளை வாடுமலர் சூட்டி - தாழிக்கண்ணே யுள்ள குவளையின் வாடிய மலரைச் சூட்டி, என் அருமகளே - என் அரிய மகளே, இன் தோள் தாராய் என முயங்கினள் அழும் - நினது இனிய தோளைத் தருவாயாக என்று கூறித் தழுவி அழாநிற்பள்.

(முடிபு) நாடு பல இறந்த நன்னராட்டிக்கு ஆயமும் அழுங்கின்று; தாயும், இரீஇயர் என் உயிர் எனக்கூறி, பாவையைக் கண்ணும் நுதலும் நீவி, நிழல் அசைஇ, மலர் சூட்டி, என் அருமகளே இன் தோள் தாராய் என முயங்கினள் அழும்.

(வி-ரை.) கற்புக்கடன் பூண்டு கணவனுடன் சென்றாளாகலின் 'நன்னராட்டி' என்றார். ஆயமும் அணியிழந் தழுங்கின்று என்றதனால் தாயது நிலைமையோடு ஆயத்தின் நிலைமையையும் கண்டார் சொல்லினர் என்று கொள்க. ஆயமும் தாயும் என்னும் உம்மைகள் எச்சப்பொருளன. நன்றேட்டாராய் என்பது பாடமாயின், தாய் பாவையை

(பாடம்) * சூடி. † மருமகன்.

நோக்கி, நின்னை ஈன்றவளாகிய என் மகளைக் காட்டுவாயாக என்று கூறினானெனக் கொள்ளல் வேண்டும். தன்னொடு முயங்கினள் என்று இயைத்தலுமாம். தலைவி யிருந்து நீர் வார்க்கப் பெருமையால், தாழிக் குவளையின் மலர் வாடுவதாயிற்று.

(மே-ள்). *'தன்னும் அவனும் அவளும் சுட்டி' என்னுஞ் சூத்திரத்து (இச்செய்யுள்) 'தாய் நிலையும் ஆயத்து நிலையும் கண்டோர் கூறியவாறுணர்க' என்றும் †'பால்கெழு கிளவி நால்வர்க்கு முரித்தே' என்னுஞ் சூத்திரத்து, 'தருமணற் கிடந்த பாவையென், அருமகளே யென முயங்கினன் அழுமே' 'இது நற்றாய் மணற்பாவையைப் பெண்பாலாகக் கூறித் தழீஇக் கொண்டழுதலிற் பால்கெழு கிளவியாயிற்று' என்றும், கூறினர் நச்.

---

166. மருதம்

[பரத்தையொடு புனல் ஆடிய தலைமகன் தலைமகளிடைப் புக்கு யான் ஆடிற்றிலன் என்று சூளுற்றான் என்பது கேட்ட ‡பரத்தை தன் பாங்காயினர் கேட்பச் சொல்லியது.]

நல்மரங் குழீஇய நனைமுதிர் சாடி
பல்நாள் அரித்த கோஒய் உடைப்பின்
மயங்குமழைத் துவலையின் மறுகுடன் பனிக்கும்
பழம்பல் நெல்லின் வேளூர் வாயில்
நறுவிரை தெளித்த நாறிணர் மாலைப்
பொறிவரி இனவண்டு ஊதல கழியும்
உயர்பலி பெறூஉம் உருகெழு தெய்வம்
புனையிருங் கதுப்பின் §நீகடுத் தோள்வயின்
அனையேன் ஆயின் அணங்குக என்னென
மனையோள் தேற்றும் மகிழ்நனாயின்
யார்கொல் வாழி தோழி நெருநல்
தார்பூண் களிற்றின் தலைப்புணை தழீஇ
வதுவை ஈரணிப் பொலிந்த நம்மொடு
புதுவது வந்த காவிரிக்
¶கோடுதோய் மலிர்நிறை ஆடி யோரே.

—இடையன் நெடுங்கீரனார்.

---

* தொல். அகத். ௩௯. † தொல். பொருளி. ௭. ‡ பரத்தை தன் பாங்கிக்கு. (பாடம்) § நீவெய்யோள். ¶ தோடுதோய்.

(சொ - ள்.) கக. தோழி-, வாழி-,

க—ச. நல்மரம் குழீஇய - நல்ல மரங்கள் சூழ்ந்த (கள் விற்கும் இல்லில்உள்ள), பல்நாள் அரித்த கனைமுதிர் சாடி - பலநாளும் வடிக்கப்பெற்ற கள் நிறைந்த சாடியை, கோஒய் உடைப்பின் - முகக்கும் கலம் உடைத்திடின், மயங்கு மழைத் துவலையின் மறுகு உடன் பனிக்கும்-விரவிய மழைத்துளிபோலத் தெருவெலாம் துளிக்கும் (ஊராய), பழம் பல் நெல்லின் வேளூர் வாயில் - பழைய பலவகை நெற்களையும் உடைய வேளூரின் வாயிலிடத்து;

ரு—எ. நறுவிரை தெளித்த நாறு இணர் மாலை - நறுமண நீர் தெளிக்கப்பெற்ற நாறும் கொத்துக்களாலாய பூமாலையை, பொறிவரி இனவண்டு ஊதல கழியும் - புள்ளிகளையும் வரிகளையுமுடைய கூட்டமாய வண்டு அஞ்சி ஊதாது ஒழிவதற்கு ஏதுவான, உயர் பலி பெறூஉம் - உயர்ந்த பலிகளையே பெறும், உருகெழு தெய்வம் - அச்சம் தரும் தெய்வம்;

அ—கூ. புனை இரும் கதுப்பின் நீ கடுத்தோள்வயின் - அணிந்த கரிய கூந்தலையுடையளாய நின்னால் ஐயுறப் பெற்றாளுடன், அனையேன் ஆயின் அணங்குக என் என - யான் புனலாடி வந்தேனாயின் என்னை வருத்துவதாக என்று;

க0. மனையோள் தேற்றும் மகிழ்நன் ஆயின் - தன் மனைவியை அவள் கணவன் சூளுரைத்துத் தெளியவைப்பானாயின்;

கக—கூ. நெருநல் - நேற்று, புதுவது வந்த காவிரிக் கோடுதோய் மலிர் நிறை - புதிதாக வந்த காவிரியின் கரை புச்சியினைத் தோய்ந்து வரும் மிக்க வெள்ளத்தில், தார்பூண் களிற்றில் தலைப்புணை தழீஇ - தாரணிந்த களிற்றினைப் போன்ற புணையின் தலையிடத்தைத் தழுவியிருந்து, வதுவை ஈர் அணிப் பொலிந்த - கூட்டத்திற்குரிய பெரிய அணியாற் பொலிவுற்ற, நம்மொடு ஆடியோர் - நம்மொடு கூடிப் புனலாடினோர்; யார்கொல் - யாரோதான்?

(முடிபு) வேளூர் வாயிலில் உயர்பலி பெறும் உரு கெழு தெய்வம் நீகடுத்தோள் வயின் அனையேனாயின், என் அணங்குக என மகிழ்நன் மனையோளைத் தேற்றுமாயின், நெருநல், காவிரி மலிர் நிறை நம்மோடு ஆடியோர் யார்கொல்?

(வி - ரை.) நன்மரங் குழீஇய என்பதன்பின் கள் விற்கும் இல் என்பது வருவிக்கப்பட்டது. நனை - கள். கோஒய் - கள் விற்கும் கலம். கள்ளும் நெல்லும் மிகுதியாகவுடைய வேளூர் என்றபடி. நறுவிரை-பனிநீரும், சந்தன முதலியவற்றின் கலவையுமாம். பலிபெறூஉம் தெய்வம் உருகெழு தெய்வம் என இயையும். கடுத்தல் - ஐயுறல். என் - என்னை. தேற்றுமாயின் - எனக் கூட்டுக. புணை - மிதக்கும் கட்டையாலாகிய தெப்பம்; வேழக் கோலைச் சேர்த்துக் கட்டியதுமாம்.

தலைப்புணை-புணையின் முற்பகுதி; 'மைந்து மலி களிற்றின் தலைப்புணை தழீஇ' (௨௬௬) எனப் பின்னரும் இவ்வாறு வருதல் காண்க. ஈரணி-நீராட்டிற்குரிய அணியுமாம். பொலிந்த என்பது பாடமாயின் பொலிந்த ஆடியோர் என்க. *'தோடுதோய்' என்பது பேராசிரியர் கொண்ட பாடம்.

(மே-ள்.) †'புல்லுதல் மயக்கும்' என்னுஞ் சூத்திரத்து, 'இல்லோர் செய்வினை இகழ்ச்சிக் கண்ணும்' என்னும் பகுதிக்கு இச் செய்யுளை எடுத்துக் காட்டி, இது, 'இளையோர் கூற்று' என்றும், ‡'கிழவோன் விளையாட் டாங்கும் அற்றே' என்னுஞ் சூத்திரத்து, 'கோடுதோய் மலிர்நிறை ஆடி யோரே' எனப் பரத்தை பிறர் அலர் கூறிய வழிக் காமஞ் சிறந்து புலந்தவாறு காண்க என்றும் கூறினர், நச்.

---

167. பாலை

[தலைமகன் பொருள்கடைக்கூட்டிய நெஞ்சிற்குச் சொல்லிச் செலவு அழுங்கியது.]

வயங்குமணி பொருத வகைஅமை வனப்பின்
பசுங்காழ் அல்குல் மாஅ யோளொடு
வினைவனப் பெய்திய புனைபூஞ் சேக்கை
விண்பொரு நெடுநகர்த் தங்கி இன்றே
இனிதுடன் கழிந்தன்று மன்னே நாளைப்
பொருந்தாக் கண்ணேம் புலம்புவர் துறுதரச்
சேக்குவங் கொல்லோ நெஞ்சே சாத்தெறிந்து
அதர்கூட் டுண்ணும் அணங்குடைப் பகழிக்
கொடுவில் ஆடவர் படுபகை வெரீஇ
ஊரெழுந்து உலறிய பீரெழு முதுபாழ்
முருங்கை மேய்ந்த பெருங்கை யானை
வெரிந்ஓங்கு சிறுபுறம் §உரிஞ ஒல்கி
இட்டிகை நெடுஞ்சுவர் விட்டம் வீழ்ந்தென
மணிப்புறாத் துறந்த மரஞ்சோர் ¶மாடத்து
எழுதணி கடவுள் போகலிற் புல்லென்று
ஒழுகுபலி மறந்த மெழுகாப் புன்திணைப்
$பால்நாய் துன்னிய பறைக்கண் சிற்றில்

---

* தொல். மரபியல், ௯௭. உரை. † தொல். கற். ௧0. ‡ தொல். கற். ௨௪. (பாடம்) § உரிஞ்ச. ¶ மாடக் கெழுதணி. $ பாணுப் துன்னி பறைகட்சிறில்.

குயில்காழ் சிதைய மண்டி அயில்வாய்க்
கூர்முகச் சிதலை வேய்ந்த
போர்மடி நல்லிறைப் பொதியி லானே.

—கடியலூர் உருத்திரங்கண்ணனார்.

(சொ - ள்.) ௭. நெஞ்சே-,

௧—௫. வயங்கு மணி பொருத - பளிங்கு மணியினை யொத்த, வகை அமை வனப்பின் - கூறுபாடமைந்த அழகினையுடைய, பசு காழ் அல்குல் மாஅயோளொடு - பசிய சரத்தாலாய மேகலையை அணிந்த அல்குலையுடைய மாமை நிறத்தினளாய நம் தலைவியுடன், விண் பொரு நெடுநகர் - வானை அளாவும் நீண்ட மாளிகையில், வினை வனப்பு எய்திய புனை பூ சேக்கை - தங்கி - அழகிய வேலைப்பாடு அமைந்த புனையப்பெற்ற பூக்களையுடைய பள்ளியின்கண் தங்குதலானே, இன்று - இன்றைப் பொழுது, இனிது உடன் கழிந்தன்று - முழுதும் இனிதாகக் கழிந்தது;

௭—௨௦. சாத்து எறிந்து அதர் கூட்டுண்ணும் - வழிச் செல்லும் வாணிகச் சாத்தினைக் கொன்று அவர் பொருளைக் கொள்ளை கொண்டு உண்ணும், அணங்கு உடை பகழி - வருத்தத்தைச் செய்யும் அம்பினையும், கொடுவில் - வளைந்த வில்லையும் உடைய, ஆடவர் படு பகை வெரீஇ - மறவரது மிக்க பகையை அஞ்சி, ஊர் எழுந்து உலறிய - குடிபோகப் பெற்றமையின் வளன் அற்ற, பீர் எழு முதுபாழ் - பீர்கு படர்ந்த பெரிய பாழ் இடத்தில், முருக்கை மேய்ந்த பெருங்கை யானை - முருங்கையினைத் தின்ற பெரிய கையினையுடைய யானையின், வெரிந் ஓங்கு சிறுபுறம் உரிஞ - முதுகினின் றுயர்ந்து பிடரி உராய்தலின், ஒல்கி இட்டிகை நெடுஞ்சுவர் விட்டம் வீழ்ந்தென - தளர்ந்து செங்கல்லாலாய நீண்ட சுவரிலுள்ள விட்ட மரம் வீழ்ந்ததாக, மணிப்புறாத் துறந்த மரம்சோர் மாடத்து - மணிப்புறா விட்டொழிந்த மரம் சோர்ந்த மாடத்தினையும், எழுது அணி கடவுள் போகலின் - எழுதப்பெற்ற அழகிய கடவுள் புறத்தே போய்விட்டமையின், புல் என்று - பொலிவற்று, ஒழுகு பலி மறந்த - இடையறாது நிகழும் பலி மறக்கப்பெற்ற, மெழுகாப் புன் திணை - மெழுகப்படாத புல்லிய திண்ணையில் பால் நாய் துன்னிய பறைக்கண் சிறு இல் - ஈன்றணிமையுடைய நாய் தங்கிய பறிந்த இடத்தையுடைய சிற்றிலையும் அவ்விடத்தே குயில் காழ் சிதைய மண்டி - இயற்றப்பட்ட கைம் மரங்கள் சிதையுமாறு பாவி, அயில்வாய் கூர்முக சிதலை வேய்ந்த - வேலின் முனைபோன்ற கூரிய முகத்தினையுடைய கறையான் மூடிக் கொள்ளுதலின், போர் மடி நல்ல இறை பொதியில் ஆன் - கூரைமடிந்த நல்ல இறப்பினையுமுடைய அம்பலத்தின்கண்;

௬—௭. புலம்பு வந்து உறுதரப் பொருந்தாக் கண்ணேம் - தனிமை வந்தடையத் துயிலாத கண்களை யுடையேமாய், காலை - காலைப்

பொழில், சேக்குவம் கொல்-தங்கி இருப்பேமோ (அஃது இயலா தன்றே.)

(முடிபு) நெஞ்சே! இன்று, நெடுநகர் சேக்கைக்கண் மாயோளொடு இனிதுடன் கழிந்தன்று மன்னே; நாளை, பொதியிலின்கண் பொருந்தாக் கண்ணேம் புலம்பு வந்துறுதரச் சேக்குவங் கொல்லோ?

மாடத்தினையும் சிற்றிலையும் இறப்பினையு முடைய பொதியில் என்க.

(வி-ரை.) வயங்கு மணி-பளிங்கு, கண்ணாடி. *'வயங்கலுள் துப் பெறித்தவை போல' என்புழி வயங்கல் இப் பொருட்டாதல் உணர்க. மன்-மிகுதிப்பொருட்டு. ஊர்-ஊரிலுள்ளார்க்கு ஆகுபெயர். எழுந்து-எழுதலால். முருங்கை-முருங்கையை; முருங்கை-தொடை நோக்கித் திரியாது நின்றது' இட்டிகை - செங்கல். பால்நாய் - பாலினையுடைய நாய்; ஈன்றணிமையுடைய நாய் என்றபடி. குயிலுதல் - இயற்றுதல்.

(மே - ள்.) †'காணத்தினமைந்து' என்னுஞ் சூத்திரத்து 'தான் அவட்பிழைத்த நிலையின் கண்ணும்' என்னும் பகுதியில் இச்செய்யுள் நெஞ்சினைப் பிரியக் கருதி வருந்திக் கூறியது என்றார், நச்.

---

168. குறிஞ்சி

[இரவுக்குறி வந்த தலைமகனை இரவுக்குறி விலக்கி வரைவு கடாயது.]

யாமம் நும்மொடு கழிப்பி நோய்மிகப்
பனிவார் கண்ணேம் வைகுதும் இனியே
ஆன்றல் வேண்டும் வான்தோய் வெற்ப
‡பல்லான் குன்றிற் படுநிழற் சேர்ந்த
நல்லான் பரப்பிற் குழுமூர் ஆங்கண்
கொடைக்கடன் என்ற கோடா நெஞ்சின்
உதியன் அட்டில் போல ஒலியெழுந்து
அருவி ஆர்க்கும் பெருவரைச் சிலம்பின்
ஈன்றணி இரும்பிடி தழீஇக் களிறுதன்
தூங்குநடைக் குழவி துயில்புறங் காப்ப
ஒடுங்களை புலம்பப் போகிக் கடுங்கண்
வாள்வரி வயப்புலி கன்முழை உரறக்
கானவர் மடிந்த கங்குல்
மானதர்ச் சிறுநெறி வருதல் நீயே.

—கோட்டம்பலத்துத் துஞ்சிய சேரமான்.

---

* கலி. † தொல். கற். ௯. (பாடம்) ‡ வல்லாண் குன்றிற்.

(சொ - ள்.) க. வான் தோய் வெற்ப - வானை அளாவிய மலையையுடைய தலைவனே!

க—உ. யாமம் நும்மொடு கழிப்பி - இராப்பொழுதை நும் முடன்கூடிக் கழித்து, நோய் மிக - பின்பு இரவுக்குறியின் ஏதம் அஞ்சித் துன்பம் மிகுதலால், பனிவார் கண்ணேம் வைகுதும் - நீர் ஒழுகும் கண்களையுடையேமாய் வருந்தி யிருக்கின்றேம் ஆகலின்;

ங—கச. பல்லான் குன்றில் படுநிழல் சேர்ந்த - பல்லான் குன்று என்னும் மலையிற் பொருந்தும் நிழலின்கட் சேர்ந்த, நல்ஆன் பரப்பின் குழுமூர் ஆங்கண் - நல்ல ஆனிரையின் பரப்பினைக் கொண்ட குழுமூ ரிடத்தே, கொடைக் கடன் என்ற கோடா நெஞ்சின் - ஈகையாய கடனை ஏற்றுக்கொண்ட கோட்டமில்லாத நெஞ்சினையுடைய, உதி யன் அட்டில் போல - உதியன் என்பானது அடுக்களை போல, ஒலி எழுந்து அருவி ஆர்க்கும் பெருவரைச் சிலம்பின் - ஒலியிக்கு அருவிகள் ஆரவாரித்து இழியும் பெரிய வரையினது பக்க மலையில், களிறு ஈன் றணி இருபிடி தழீஇ - களிறு ஈன்ற அணிமையுடைய பெரிய பிடியினைத் தழுவிக்கொண்டு, தன் துஞ்சு நடைக்குழவி துயில் புறம் காப்ப - தனது அசைந்த நடையினையுடைய குழவி உறங்குகின்ற இடத்தைக் காத் திருக்க, கடுங்கண் வாள் வரி வயப்புலி - தறுகண்மையுடைய வாள் போன்ற வரியினையுடைய வலிய புலி, ஒடுங்கு அளை புலம்ப போகி - ஒடுங்கிய முழை தனித்திடப் புறம் போய், கல் முழை உரற - மலையின் குகையிடத்தில் முழங்க, கானவர் மடிந்த கங்குல் - வேட்டுவரும் துயி லும் நள்ளிரவில், மான் அதர்ச் சிறு நெறி - விலங்குகள் செல்லும் வழி யாகிய சிறுநெறியில், நீ வருதல் - நீ வருதலை, இனி ஆன்றல் வேண்டும் - இனி ஒழிதல் வேண்டும்.

(முடிபு) வெற்ப! யாமம் நும்மொடு கழிப்பி, பனிவார் கண்ணேம் வைகுதும் ஆகலின், சிலம்பில், களிறு காப்ப, புலி உரற கானவர் மடிந்த கங்குலில் சிறு நெறிக்கண் நீ வருதலை இனி ஆன்றல் வேண்டும்.

(வி-ரை.) இராப் பொழுதை நம்முடன் கழிக்கும் நாளெல்லாம் அப்பொழுது இன்பமாயினும் நீ வரும் வழியின் ஏதத்தை நினைந்துப் பெரிதும் துன்புறுகின்றோம். ஆகலின், இனி நீ அவ்வாறு வருதலை ஒழி தல் வேண்டும் என்று கூறி, இரவுக்குறி விலக்கி வரைவுகடாயினு ளென்க. ஆன்றல் - அமைதல்; ஒழிதல். பல்லான் குன்று - ஒரு மலை யின் பெயர் போலும்; வல்லாண் குன்று என்பது பாடமாயின் வல் லாண்மைக்கு இடமாகிய குன்று என்க. அட்டில்போல - அட்டிலில் ஒலி யெழுதல்போல. ஒலி; உண்ணவருவாரொலாவது. ஈன்றணி - ஈன்ற அணிமை. ஒடுங்கு அளை - புலி துயின்ற இட்டிய முழை என வும், கன்முழை - பெரிய மலையின் குகை எனவும் கொள்க. களிறு காக்குமாறு புலி உரற என்க. இக் கருத்து *'இலங்கு மருப்பி யானை,

* குறுந். உகூ.

ஊறும்பொறை மருங்கின் அமர்துணை தழீஇக், கொடுவரி இரும்புலி காக்கும்' என்னும் செய்யுளில் அமைந்திருத்தலுங் காண்க. மானதர்ச் சிறுநெறி என்றமையால் மக்கள் இயங்குதற்காகாத இடுங்கிய நெறி என்பது பெற்றாம்.

---

169. பாலை

[தலைமகன், இடைச்சுரத்துத் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.]

மரந்தலை கரிந்து நிலம்பயம் வாட
*அலங்குகதிர் வேய்ந்த அழல்திகழ் நனந்தலைப்
புலிதொலைத் துண்ட பெருங்களிற் றொழிஊன்
கலிகெழு மறவர் காழ்க்கோத் தொழிந்ததை
ஞெலிகோல் சிறுதீ மாட்டி ஒலிதிரைக்
கடல்விளை அமிழ்தின் கணஞ்சால் உமணர்
சுனைகொள் தீநீர்ச் சோற்றுலைக் கூட்டுஞ்
சுரம்பல கடந்த நம்வயிற் படர்ந்துநனி
பசலை பாய்ந்த மேனியள் நெடிதுநினைந்து
செல்கதிர் †மழுகிய புலம்புகொள் மாலை
மெல்விரல் சேர்த்திய நுதலள் மல்கிக்
கயலுமிழ் நீரிற் கண்பனி வாரப்
பெருந்தோள் ‡நெகிழ்ந்த செல்லலொடு
வருந்துமால் அளியள் திருந்திழை தானே.

—தொண்டி ஆமூர்ச்சாத்தனார்.

(சொ - ள்.) நெஞ்சே!

க—அ. மரம் தலை கரிந்து நிலம் பயம் வாட - மரங்கள் உச்சி கரியவும் நிலம் வளம் குன்றவும், அலங்கு கதிர் வேய்ந்த அழல் திகழ் நனந்தலை—அசைகின்ற ஞாயிற்றின் கதிர் சூழப்பெற்ற வெம்மை விளங்கும் அகன்ற பாலை நிலத்தே, புலி தொலைத்து உண்ட பெரும் களிற்று ஒழி ஊன் - புலியாற் கொன்று தின்னப்பெற்ற பெரிய யானையினது எஞ்சிக்கிடந்த ஊனில், கலிகெழு மறவர் காழ்கோத்து ஒழிந்ததை - ஆரவாரம் பொருந்திய ஆறலைப்போர் கோலிற் கோத்துக் (கொண்டேகியது போக) எஞ்சியதை, ஒலி திரை கடல்விளை அமிழ்தின் கணம் சால் உமணர்-ஒலிக்கும் அலை பொருந்திய கடலில் விளையும் உப்பினைக் கொணரும் கூட்டம் மிக்க உப்பு வாணிகர், ஞெலிகோல் சிறு தீ மாட்டி - தீக்கடைகோலாலாக்கிய சிறு தீயில் வதக்கி, சுனை கொள் தீ

(பாடம்) * வயங்கு கதிர். † மழுங்கிய. ‡ நெகிழ்த்த.

நீர் சோற்று உலை கூட்டும் - சுனையிற்கொண்ட இனிய நீராலாய சோற்றின் உலையில் கூட்டி ஆக்கும், சுரம்பல கடந்த நம் வயின் - பல சுர நெறிகளையும் கடந்து வந்துள்ள நம்மிடத்து, படர்ந்து தன் உள்ளம் படர்தலால்;

அ—கை. திருந்து இழை - திருந்திய அணிகளையுடைய நம் தலைவி, செல்கதிர் மழுகிய புலப்பு கொள் மாலை-மறையும் கதிர் மங்கிய தனிமை கொண்ட மாலையில், கனி பசலை பாய்ந்த மேனியள் - பசலை மிகவும் பரந்த மேனியளாகிய, நெடிது நினைந்து - நீள நினைந்து, மெல் விரல் சேர்த்திய நுதலள் - மெல்லிய விரல்களைச் சேர்த்த நெற்றியினளாய், கயல் உமிழ் நீரில் கண் பனி மல்கி வார - கயல்மீன் உமிழும் நீர்போலக் கண்களில் நீர் நிறைந்து ஒழுக, பெரும் தோள் நெகிழ்ந்த செல்லலொடு - பெரிய தோள் மெலிந்ததாலாய துன்பத்துடன், வருந்தும் - வருந்துவள், அளியள் - இரங்கத்தக்காள்.

(முடிபு) நெஞ்சே! சுரம்பல கடந்த நம்வயின் தன் உள்ளம் படர்தலின், திருந்திழை, மாலையிலே நெடிது நினைந்து பசலை பாய்ந்த மேனியளாய், விரல் சேர்த்திய நுதலளாய், கண்பனி வாரச் செல்லலொடு வருந்தும்; அளியள்.

(வி - ரை.) கரிந்து - கரிய எனத் திரிக்க. பயம் - எனை வன்கன். காழ் - இருப்புச் சலாகை. கடல்விளை அமிழ்து-உப்பு. கணஞ்சால் உமணர் என்றமையின் உமணர் கூட்டமாகவே வருவர் என்பது பெற்றாம். சினைகொள் தீ நீர் என்றமையால் சுரத்தில் நீர் இன்மை பெறப்படும். படர்ந்து - படர்தலால்.

---

170. நெய்தல்

[தலைமகன், காமமிக்க கழிபடர்கிளவியாற் சொற்றது.]

கானலுங் கழறாது கழியுங் கூறாது
தேனிமிர் நறுமலர்ப் புன்னையும் மொழியாது
*ஒருநின் அல்லது பிறிதியாதும் இலனே
இருங்கழி மலர்ந்த கண்போல் நெய்தல்
கமழிதழ் நாற்றம் அமிழ்தென நசைஇத்
தண்தாது ஊதிய வண்டினம் களிசிறந்து
†பறைஇய ‡தளருந் துறைவனை நீயே
சொல்லல் §வேண்டுமால் அலவ பல்கால்

(பாடம்) * ஒருநீ\ய. † பறவை தளரும்; பறைஇ தளரும். ‡ கிளரும். § வேண்டுமாலலவ.

கைதையம் படுசினை எவ்வமொடு அசாஅம்
கடற்சிறு காக்கை காமர் பெடையொடு
கோட்டுமீன் வழங்கும் வேட்டமடி பரப்பின்
வெள்இருக் கனவும் நள்ளென் யாமத்து
நின்னுறு விழுமம் களைந்தோள்
தன்னுறு விழுமம் நீந்துமோ எனவே.

—மதுரைக் கள்ளிற் கடையத்தான் வெண்ணாகனார்.

(சொ - ள்.) அ. அலவ - நண்டே!

௪—௭. இரு கழி மலர்ந்த - கரிய நீரோடையில் மலர்ந்த, கண் போல் செய்தல் கமழ் இதழ் நாற்றம் - கண்ணைப்போலும் நெய்தற் பூவின் கமழும் இதழ் நாற்றத்தினை, அமிழ்து என நசைஇ - அமிழ்தம் போலும் என விரும்பிச் சென்று, தண் தாது ஊதிய - குளிர்ந்த தாதினை உண்ட, வண்டு இனம் களி சிறந்து - வண்டின் கூட்டம் களிப்புமிக்கு, பறைஇய தளரும் துறைவனை - பறத்தற்கு இயலாது சோரும் துறையையுடைய தலைவனுக்கு;

௧—௨. கானலும் கழறாது - கடற்கரைச் சோலையும் சென்று தூது கூறாது, கழியும் கூறாது - உப்பங்கழியும் இயம்பாது, தேன் இமிர் நறுமலர்ப் புன்னையும் மொழியாது - வண்டுகள் ஒலிக்கும் நறிய மலரினையுடைய புன்னையும் மொழியாது;

௨: ஒரு நின் அல்லது பிறிது யாதும் இலன் - நின்னையேயன்றி வேறு எத்துணையும் இல்லேன்;

௮—௧௪. கைதைஅம் படு சினை - தாழை மரத்தின் தாழ்ந்த கிளையில், காமர் பெடையொடு எவ்வமொடு அசாஅம் - விருப்பம் மிக்க பெடையுடன் வருத்தமுடன் தளர்ந்திருக்கும், கடல் சிறு காக்கை - சிறிய கடற் காக்கை, கோட்டு மீன் வழங்கும் வேட்டம் மடி பரப்பின் - சுறாமீன் இயங்கும் வேட்டையாடுதல் நீங்கிய இடத்திலுள்ள, வெள் இரு கனவும் - வெள்ளிய இறாமீனைப் பற்றி உண்பதாகக் கனவு காணும், நள் என் யாமத்து - இருள் செறிந்த நடுஇரவில் வந்து, பல்கால் நின் உறு விழுமம் களைந்தோள் - பல நாளும் நினது மிக்க துயரினை நீக்கியோள், தன் உறு விழுமம் நீந்துமோ எனவே - நின் பிரிவால் எய்திய தனது மிக்க துயரினைக் கடக்க வல்லளோ என்று;

௭—௮. நீயே சொல்லல் வேண்டும் - அத் தலைவன்பாற் சென்று நீயே கூறுதல் வேண்டும்.

(முடிபு) அலவ! துறைவனுக்குக் கானலுங்கழறாது; கழியுங் கூறாது; புன்னையும் மொழியாது; ஒரு நின்னல்லது பிறிது யாதும் இலன்; நள்ளென் யாமத்து வந்து பல்நாளும் நின்னுறு விழுமம் களைந்தோள், தன்னுறு விழுமம் நீந்துமோ என நீயே சொல்லல் வேண்டும்.

(வி - ரை.) கானல், கழி, புன்னை என்பன சான்றாகத் தலைவர் தன்னைக் கலந்து சென்றாராயினும், அவை யெல்லாம் தலைவனைப் பிரிந்து எய்தும் வருத்தத்தை உணரவல்லன அன்மையானும், ஒருகால் உணரினும் சென்று கூறமாட்டாதன ஆகலானும் நீயே துறைவனுக்குச் சொல்லல்வேண்டும் எனத் தலைவி அலவனை நோக்கிக் கூறினாளென்க. கண்போல் நெய்தல் என்றது, *'பொருளே உவமம் செய்தனர் மொழியினும்' என்பதனால் அமைந்தது. துறைவனை - துறைவனுக்கு. காக்கை பெடையொடு வெள் இருக் கனவும் யாமம் என்க. கோட்டு மீன் வழங்கும் பரப்பு எனவும், வேட்டமடி பரப்பு எனவும் இயையும். கின்னுறு விழுமம் களைந்தோன் என்றமையால் நீ அவனது விழுமத்தைக் களையாதிருத்தல் நன்றி கோறலாம் என்பதுபடநின்றது. இனி, பழைஇய தளரும் என்பதனை முற்றாக்கிக் கானல் முதலியன போலாது வண்டு சென்று கூறுதற்கு உரியதேனும், அது தேனையுண்ட களிப்பால் சோர்ந்து கிடக்கும் ஆதலின் நீயே சொல்லல் வேண்டும் என்றாள் எனலுமாம். காமம் மிக்க கழிபடர் கிளவியாவது தலைவனைப் பிரிந்து வருந்தும் தலைவி, தனது வேட்கை மிகுதியால், கேளாதனவற்றைக் கேட்பனவாக விளித்து, தலைவனிடத்துச் சென்று என் துன்பத்தை மொழியீரோ என்று கூறுதலாம். நீர்துமோ என்றதனால் விழுமம் கடல் என்று குறித்தவாறும்.

(உ - றை.) தாதினை உண்ட வண்டினம் களிசிறந்து பறக்கமாட்டாது தளரும் துறைவன் என்றது, தான் பெற்ற வேறு இன்பத்தில் மயங்கித் தலைவியை மறந்திருக்கும் தலைவன் என்றவாறு.

காக்கை பெடையொடு யாமத்து இருக் கனவும் என்றது, தலைவி தலைவனுடன் கூடியிருந்து முன்பு பெற்ற இன்பத்தை நினைந்து வருந்தினாள் என்றவாறு.

(மே - ள்.) †'சோபு மின்பமும்' என்னுஞ் சூத்திரத்து இச் செய்யுள், 'சொல்லா மரபின சொல்லுவனவாக அழுகை பற்றிக் கூறியது, இவை உயர்திணைபுமாயின' என்றார், நச்.

‡'இன்பத்தை வெறுத்தல்' என்னுஞ் சூத்திரத்து 'கின்னுறு விழுமங் களைந்தோள், தன்னுற விழுமம் நீர்துமோ எனவே' என்பது துன்பத்துப் புலம்பல் என்னும் மெய்ப்பாடு ஆகுமென்றும், §'முட்டு வயிற் கழறல்' என்னுஞ் சூத்திரத்து, 'கானலுங் கழறாது...நீயே, சொல்லல் வேண்டுமால் அலவ' என்பது, அதுமுனி வின்மை என்னும் மெய்ப்பாடு ஆகுமென்றும் கூறினர், பேரா.

---

* தொல். உவம. ௩. † தொல். பொருளி. ௨. ‡ தொல். மெய்ப். ௨௨. § தொல். மெய்ப். ௨௩.

171. பாலை

[தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறீஇயது.]

நுதலும் நுண்பசப்பு இவரும் தோளும்
அகன்மலை இறும்பின் ஆய்ந்துகொண் டுறந்த
பணையெழில் அழிய வாடும் நாளும்
நினைவல் மாதவர் பண்பென்று ஓவாது
இனையல் வாழி தோழி புணர்வர்
இலங்குகோல் ஆய்தொடி நெகிழப் பொருள்புரிந்து
அலந்தலை ஞெமையத்து அதரடைந் திருந்த
மால்வரைச் சீறூர் மருள்பன் மாக்கள்
கோள்வல் ஏற்றை ஓசை ஓர்மார்
திருத்திக் கொண்ட அம்பினர் நோன்சிலை
எருத்தத்து இரீஇ இடந்தொறும் படர்தலின்
கீழ்ப்படு தாரம் உண்ணு மேற்சினைப்
பழம்போல் சேற்ற தீம்புழல் உணீஇய
கருங்கோட்டு இருப்பை ஊரும்
பெருங்கை எண்கின் சுரனிறந் தோரே.

—கல்லாடனார்.

(சொ - ள்.) ௫. தோழி—, வாழி—,

௬. பொருள் புரிந்து-பொருள் ஈட்டிவர விரும்பி, இலங்கு கோல் ஆய்தொடி நெகிழ -விளங்கும் திரட்சி பொருந்திய அழகிய நின் தொடி கழன்று வீழ ;

௭—௧௫. அலந்தலை ஞெமையத்து அதர் அடைந்திருந்த-வாடிய உச்சியினையுடைய ஞெமை மரங்களையுடைய வழியைச் சார்ந்திருந்த, மால்வரைச் சீறூர்-பெரிய மலையடிவாரத்திலுள்ள சிறிய ஊரில், மருள் பல் மாக்கள் - மருண்ட மக்களாய பலர், கோள் வல் ஏற்றை ஓசை ஓர்மார்-கொல்லுதல் வல்ல கரடி ஏற்றின் ஒலியினை உணர்வாராய், திருத்திக் கொண்ட அம்பினர் - செப்பம் செய்துகொண்ட அம்பினராய், நோன்சிலை எருத்தத்து இரீஇ - வலிய வில்லைத் தோளிற் கொண்டு, இடம்தோறும் படர்தலின் - இடமெலாம் பரவி வருதலின், கீழ்ப்படு தாரம் உண்ணு - தரையிற் கிடக்கும் உணவினை உண்ணுவாய், மேல் சினை பழம்போல் சேற்ற தீம் புழல் உணீஇய - மேலிடத்தே கிளைகளிலுள்ள பழங்களைப் போல இனிக்கும் சாற்றினையுடைய இனிய துளையையுடைய பூக்களை உண்ண, கருங்கோட்டு இருப்பை ஊரும் - கரிய

கொம்பினையுடைய இருப்பை மரத்தின் மேல் ஏறும், பெருங்கை எண்கின் சுரம் இறந்தோர் - பெரிய கையினையுடைய கரடிகளையுடைய சுரநெறியைக் கடந்து சென்றோர்.

௭. புணர்வர் - விரைவில் வருவர் ஆதலால்;

௮—௯. நுதலும் நுண் பசப்பு இவரும் - நெற்றியும் நுண்ணிய பசலைபரக்கப்பெறும், தோளும் அகல் மலை இறும்பின் ஆய்ந்துகொண்டு அறுத்த பணை எழில் அழியவாடும்-தோளும் அகன்ற மலையிலுள்ள காட்டில் ஆராய்ந்துகொண்டு அறுத்த மூங்கில் தன்மையொத்த அழகு ஒழிய வாட்டமுறும், நாளும் நினைவல் அவர் பண்பு என்று-நாடோறும் அவர் அருட்பண்பினை யான் நினைவேன் என்று கூறி, ஓவாது இனைபல் - ஒழியாது வருந்தாநிற்பேன்.

(முடிபு) தோழி! வாழி! பொருள் புரிந்து, தொடி நெகிழச் சுரன் இறந்தோர் புணர்வர்; ஆதலின், நுதலும் பசப்பு இவரும், தோளும் வாடும், நாளும் நினைவல் என இனையல்.

மாக்கள் ஒசையோர்மார் சிலை இரீஇப் படர்தலின், எண்கு கீழ்ப் படுதாரம் உண்ணூ, புழல் உணீஇய இருப்பையூரும் சுரம் என்க.

(வி - ரை.) நினைவல் மாது: மாது, அசை. அலர்தலை: விகாரம். ஞெமையத்து: அத்து, சாரியை. மருள் - கரடியின் ஓசையை முதலில் இன்னதென்றறியாது மருண்ட என்க. தாரம் - பண்டம் (உணவுப் பொருள்). புழல், ஆகு பெயர். கரடியும் மரத்தின் கோட்டில் இயங்க வல்லதாதல் அறியற்பாற்று.

---

172. குறிஞ்சி

[தோழி தலைமகளை இடத்து உய்த்துவந்து தலைமகனை வரைவு கடாயது.]

வாரணம் உரறும் நீர்திகழ் சிலம்பில்
பிரசமொடு விரைஇய வயங்குவெள் அருவி
இன்னிசை இமிழியங் கடுப்ப இம்மெனக்
கல்முகை விடரகஞ் சிலம்ப வீழும்
காம்புதலை மணந்த ஓங்குமலைச் சாரல்
இரும்புவடித் தன்ன கருங்கைக் கானவன்
விரிமலர் மராஅம் பொருந்திக் கோல்தெரிந்து
*வரிநுதல் யானை அருநிறத் தழுத்தி
இகலடு முன்பின் வெண்கோடு கொண்டுதன்

(பாடம்) * அணிநுதல்.

*புல்வேய் குரம்பை புலர ஊன்றி
முன்றில் நீடிய †முழவுறழ் பலவின்
பிழிமகிழ் உவகையன் கிளையொடு கலிசிறந்து
சாந்த ஞெகிழியின் ஊன்புழுக் கயருங்
குன்ற நாடன் அன்பிலை யாகுதல்
அறியேன் யானஃது அறிந்தனென் ஆயின்
அணியிழை உண்கண் ஆயிதழ்க் குறுமகள்
மணியேர் மாண்நலம் சிதையப்
பொன்னேர் ‡பசலை பாவின்று மன்றே.

—மதுரைப் பாலாசிரியர் நப்பாலனார்.

(சொ-ள்.) ௧—௫. வாரணம் உரறும் நீர்திகழ் சிலம்பில்-யானை முழக்கும் தன்மை வாய்ந்த பக்க மலையில், பிரசமொடு விரைஇ வயங்கு வெள் அருவி-தேனுடன் கலந்துவரும் விளக்கமுற்ற வெள்ளிய அருவி, இன்இசை இமிழ் இயம் கடுப்ப - இன்னொலியுடன் முழங்கும் மத்தளத்தை யொப்ப, இம் என கல்முகை விடர் அகம் சிலம்ப வீழும் - இம்மெனும் ஒலியுடன் மலையின் குகைகளும் பிளப்பிடங்களும் ஒலிக்க விழும், காம்பு தலைமணந்த ஓங்கு மலைச் சாரல் - மூங்கில் நெருங்கிய உயர்ந்த மலைச்சாரலில் உள்ள;

௬—௧௪. இரும்பு வடித்தன்ன கருங்கைக் கானவன் - இரும்பினை வார்த்துச் செய்தாற்போன்ற வலிய கையினையுடைய வேட்டுவன், விரிமலர் மராஅம் பொருந்தி - விரிந்த மலரினையுடைய வெண்கடம்பினைச் சார்ந்து நின்று கோல் தெரிந்து - அம்பினை ஆய்ந்துகொண்டு, வரிநுதல் யானை அருநிறத்து அழுத்தி - வரி பொருந்திய நெற்றியினையுடைய களிற்றின் அரிய மார்பிற் செலுத்தி, இகல் அடு முன்பின் வெண்கோடு கொண்டு - பகையினைக் கொல்லும் வலியினையுடைய அதன் வெள்ளிய கொம்பினைக் கொண்டுவந்து, தன் புல்வேய் குரம்பை புலர ஊன்றி - தனது ஊகம் புல்லால் வேய்ந்த குடிசையில் புலால் நாற்றம் வீச ஊன்றுதல் செய்து, முன்றில் நீடிய முழவு உறழ் பலவின் பிழி மகிழ் உவகையன் - அக் குடிசை முன்றிலில் உயர்ந்த முழவுபோலும் பலாக் கனியினின்று பிழிந்தெடுத்த மதுவினை உண்ட களிப்பினனாகி, கிளையொடு கலி சிறந்து - சுற்றத்துடன் ஆரவாரமிக்கு, சாந்த ஞெகிழியின் ஊன்புழுக்கு அயரும் - சந்தனவிறகாலாய தீயில் ஊனுடன் கூடிய சோற்றை அட்டுண்ணும் இடமாகிய, குன்ற நாட-குன்றம் பொருந்திய நாட்டையுடைய தலைவனே!

௧௪—௮. நீ அன்பிலை ஆகுதல் அறியேன் யான் - நீ அன்பிலாய் ஆதலை யான் முன்பு அறிந்திலேன், அஃது அறிந்தனென் ஆயின் -

(பாடம்) * புதற்போர் குரம்பை. † முழவு முதற்பலவு.
‡ பசலை பாயின்று.

அதனை யான் அறிந்தனேனாயின், அணி இழை ஆய் இதழ் உண்கண் குறுமகள்-அழகிய அணிகலனையும் அழகிய இதழினையுடைய மையுண்ட கண்களையும் உடைய இளையளாய என் தலைவியின், மணி ஏர் மாண் நலம் சிதைய - நீலமணி போலும் சிறந்த அழகுகெட, பொன் நேர் பசலை பாஇன்று மன் - பொன்னை ஒத்த பசலை பெரிதும் பரத்தல் இல்லையாகும்.

(முடிபு) குன்ற நாட! நீ அன்பிலை யாகுதல் அறியேன்: அஃது அறிந்தனென் ஆயின் குறுமகள் மாணலம் சிதைய பசலை மன்பா இன்று. அருவி இம்மென வீழும் சாரலில் கானவன் யானைக்கோடு கொண்டு குரம்பை ஊன்றிச் சாந்த ஞெகிழியின் ஊன்புழுக்கு அயரும் குன்றம் என்க.

(வி - ரை.) நீர் - சுனை நீருமாம். முகையாகிய வியர் என்றலு மாம். அருவி வீழும் மலைச்சாரல் எனவும், காம்பு தலைமணந்த மலைச் சாரல் எனவும் தனித்தனி கூட்டுக. யானையைக் கொன்று அதன் கோடு கொள்ளும் வலிய கை யென்பது தோன்ற இரும்பு வடித்தன்ன கருங்கை எனப்பட்டது. மராஅம் பொருந்துதல், யானை தன் இருப்பை யறிந்து இரியாதவாறு பதுங்கி நிற்றல். இரவுக்குறியின் ஏதம் அஞ்சித் தலைவி வருந்துதலையும், ஊரில் அலர் எழுதலையும் கருதி விரைந்து வரைந்து கொள்ளாது களவொழுக்கத்திலேயே தாழ்ந்திருத்தல்பற்றித் தலைவனை 'அன்பிலை' என்றும், நீ இவ்வாறு ஒழுகுதி என்பதனை முன்னர் அறிந்திருப்பேனாயின், யான் கூட்டத்திற்கு உடன்பட்டிரே னாக வின், வரைவு நீட்டித்தல் காரணமாகத் தலைவி நலன்சிதையப் பசலை படர்தல் இல்லையாகும் என்றும் தோழி கூறினாள் என்க.

(உ - றை.) பிரசமொடு விரைஇய அருவி விடரகம் சிலம்ப வீழும் என்றது, தலைவியுடன் கூடிய தலைவனது களவொழுக்கம் ஊரெங்கும் அலருண்டாக நிகழ்கின்றது என்றவாறு. யானை வெண்கோடுகொண்டு கானவன் குரம்பை புலர ஊன்றி உவகையன் கலிசிறந்து சாந்த ஞெகிழியின் ஊன்புழுக் கயரும் என்றது, தலைவன் அரியளாய தலைவியை எளியள் என மதித்துக் களவொழுக்கமாகிய இன்பத்திலே தருக்கியிருத்தல் என்றவாறு.

---

173. பாலை

[தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறுத்தியது.]

அறந்தலைப் பிரியாது ஒழுகலுஞ் சிறந்த
கேளிர் கேடுபல ஊன்றலும் நாளும்
வருந்தா உள்ளமொடு இருந்தோர்க்கு இல்லெனச்
செய்வினை புரிந்த நெஞ்சினர் நறுநுதல்

மையீர் ஓதி அரும்படர் உழத்தல்
சில்நாள் தாங்கல் வேண்டும் என்றுநின்
நன்மாண் எல்வளை திருத்தின ராயின்
வருவர் வாழி தோழி பலபுரி
வார்கயிற் றொழுகை நோன்சுவல் கொளீஇப்
பகடுதுறை ஏற்றத்து உமண்விளி வெரீஇ
உழைமான் அம்பிணை இனனிரிந் தோடக்
காடுகவின் அழிய உரைஇக் கோடை
நின்றுதின விளிந்த அம்பணை நெடுவேய்க்
கண்விடத் தெறிக்கும் மண்ணா முத்தம்
கழங்குறழ் தோன்றல பழங்குழித் தாஅம்
இன்களி நறவின் இயல்தேர் நன்னன்
விண்பொரு நெடுவரைக் கவாஅன்
பொன்படு மருங்கின் மலைஇறந் தோரே.

*—முள்ளியூர்ப் பூதியார்.

(சொ - ள்.) அ. தோழி-, வாழி-,

க—ச. அறம் தலைப்பிரியாது ஒழுகலும் - அறநெறியினின்றும் நீங்காது இல்வாழ்க்கை நடத்தலும், சிறந்த கேளிர் கேடு பல ஊன்றலும் - சிறப்புற்ற சுற்றத்தாரது பலவகையான துன்பங்களையும் தாங்கலும், நாளும் வருந்தா உள்ளமொடு இருந்தோர்க்கு இல் என - எஞ்ஞான்றும் (முயற்சியால்) மெய் வருந்தாமைக்கு ஏதுவாய (ஊக்கமில்லாத) உள்ளமொடு இருந்தோர்க்கு இல்லையாகும் என்று, செய்வினை புரிந்த நெஞ்சினர் - பொருள் ஈட்டும் வினையை விரும்பிய நெஞ்சினராய நம் தலைவர் ;

அ—கஅ. பலபுரி வார் கயிற்று ஒழுகை - பல புரிகளாலாய நீண்ட கயிற்றாற் பிணித்த வண்டியினை, பகடு நோன் சுவல் கொளீஇ - பகடுகளின் வலிய பிடரியில் பூட்டி, துறை ஏற்றத்து - ஏற்றமான துறைகளில் ஓட்டுமிடத்து, உமண் விளி வெரீஇ - உப்பு வாணிகர் அவற்றை உரப்பும் ஓசையைக் கேட்டு அஞ்சி, உழைமான் அம்பிணை இனன் இரிந்து ஓட - ஆண்மானும் பெண்மானும் ஆகிய இனங்கள் கெட்டு ஓடவும், காடு கவின் அழிய - காடுகள் அழகு கெடவும், கோடை உரைஇ - கோடை பரவி, நின்று தின விளிந்த அம் பணை நெடுவேய் - நிலைபெற்று நீரினை உறிஞ்சுதலால் வற்றிய அழகிய பெரிய நெடிய மூங்கிலின், கண்விடத் தெறிக்கும் மண்ணா முத்தம் - கணுக்கள் பிளக்கத்தெறித்து விழும் கழுவப்பெறாத முத்துக்கள், கழங்கு உறழ் தோன்

(பாடம்) * முன்னியூர் வழுதியார்.

றல்-கழங்கினை யொத்த தோற்றம் உடையனவாகி, பழங்குழி தாஅம் - (அங்குள்ளார் கழங்காடிய) பழைய குழியிலே விழும் (இடமாகிய), இன் களி நறவின் இயல்தேர் நன்னன் - இனிய களிப்பைத்தரும் கள்ளினையும் இயற்றப்பட்ட தேரினையுமுடைய நன்னனது, விண்பொரு நெடுவரைக் கவான் - வானை அளாவிய நீண்ட மூங்கிலையுடைய பக்க மலையினையும், பொன்படு மருங்கின் மலை இறந்தோர் - பொன் பொருந்திய இடங்களையுமுடைய மலையினைக் கடந்து சென்றோராய நம் தலைவர்;

௪—௮. நறுநுதல் மை ஈர் ஓதி - நறிய நெற்றியையும் கரிய பெரிய கூந்தலையும் உடையாளே, அரும்படர் உழத்தல் - அரிய துன்பத்தால் வருந்துதலை, சில்நாள் தாங்கல் வேண்டும் என்று - சிலகாலம் பொறுத்துக் கோடல் வேண்டும் என்று கூறி, நின் நல் மாண் எல்வளை திருத்தினராயின் நினது நல்ல மாண்புற்ற ஒளி பொருந்திய வளையினைத் திருத்தித் தலையளி செய்தனராதலால், வருவர் - விரைவில் வந்துறுவர்.

(முடிபு) தோழி! வாழி! செய்வினை புரிந்த நெஞ்சினராய், மலையிறந்தோராகிய நம் தலைவர், அரும்படர் உழத்தல் சின்னாள் தாங்கல் வேண்டும் என்று நின் எல்வளை திருத்தினராதலின், (விரைவில்) வருவர்.

(வி - ரை.) நறுநுதல், ஓதி என்பவற்றிற்கு, நுதலை நீவுதலும் ஓதியைக் கோதுதலும் செய்தனர் எனக் குறிப்பிற் பொருள் கொள்ளலுமாம்; *'வலி முன்பின்' என்ற பாலைக்கலியில், தாழ் கதுப்பு அணிகுவர் காதலர் 'ஒள்ளிழை திருத்துவர் காதலர், ஒண்ணுதல் நீவுவர் காதலர்' என வருதல் காண்க. திருத்தினராயின்-திருத்தினராதலின் என்க. சின்னாள் தாங்கல் வேண்டுமென்று கூறி இங்ஙனம் தலையளி செய்து அகன்றாராதலின், அவர் நின்னை நினைந்து விரைவில் வாரா திருப்பாரல்லர், நீ வருந்தாதேகொள் என்று, தலைவியைத் தோழி வற்புறுத்தினாள் என்க. உமண்-உமணர்; ஆகுபெயர். கோடைதின என்பது, †'உண்டற்குரிய வல்லாப்பொருளை, புண்டன போலக் கூறலு மரபே' என்னுஞ் சூத்திரத்து, உம்மையால் அமைக்கப்பெறும். முத்தம் தாஅம் கவான் என இயையும். கழங்கு உறழ் தோன்றல என்றது முத்தின் பருமை குறித்தபடி.

---

174. முல்லை

[பாசறைக்கண் தலைமகன் தன்னெஞ்சிற்குச் சொல்லியது.]

இருபெரு வேந்தர் மாறுகொள் வியன்களத்து
ஒருபடை கொண்டு வருபடை பெயர்க்குஞ்

---

* பாலைக். ௪. † தொல். பொருளி. ௧௬.

செல்வம் உடையோர்க்கு நின்றன்று விறலெனப்
பூக்கோள் ஏய தண்ணுமை விலக்கிச்
செல்வேம் ஆதல் அறியாள் முல்லை
நேர்கால் முதுகொடி குழைப்பநீர் சொரிந்து
காலை வானத்துக் கடுங்குரல் கொண்மூ
முழங்குதொறும் *கையற்று ஒடுங்கிப் புலந்து
பழங்கண் கொண்ட பசலை மேனியள்
யாங்கா குவள்கொல் தானே வேங்கை
†ஊழுறு நறுவீ கடுப்பக் கேழ்கொள
ஆகத் தரும்பிய மாசறு சுணங்கினள்
நன்மணல் வியலிடை நடந்த
சில்மெல் ஒதுக்கின் மாஅ யோளே.

—மதுரை அளக்கர் ஞாழலார் மகனார் மள்ளனார்.

(சொ - ள்.) ௧—௫. இரு பெரு வேந்தர் மாறு கொள் வியன் களத்து - பேரரசர் இருவர் மாறுபாடு கொண்டு பொரும் பெரிய போர்க்களத்தே, ஒரு படை கொண்டு வருபடை பெயர்க்கும் - தமது ஒப்பற்ற படைக்கலத்தைக்கொண்டு எதிர் வரும் படைகளைப் பிறக்கிடச் செய்யும், செல்வம் உடையோர்க்கு விறல் நின்றன்று என - வெற்றியாகிய செல்வம் உடையோர்க்கு இப்பெருமை நிலைபெற்றது என்று கூறி, பூக்கோள் ஏய தண்ணுமை விலக்கி - தண்ணுமை முழக்குடன் பொருந்த அரசன் அளிக்கும் பூக்கோளினையும் ஏலாது தவிர்த்து, செல்வேம் ஆதல் அறியாள் - நாம் தன்பால் விரைந்து செல்லுதலை அறியாளாய்;

௧௦—௪. வேங்கை ஊழ் உறு நறுவீ கடுப்பக் கேழ் கொள - வேங்கையின் மலர்தலுற்ற நறிய மலரை ஒப்ப நன்னிறம் கொள்ள, ஆகத்து அரும்பிய மாசு அறு சுணங்கினள் - மேனியிற் றோன்றிய குற்றமற்ற தேமலையுடையளாய், நல் மணல் வியலிடை நடந்த - நல்ல மணலையுடைய அகன்றவிடத்தே நடந்த, சில்மெல் ஒதுக்கின் மாஅயோள் - சிலவாய மெல்லிய நடையினையுடைய மாமை நிறத்தினையுடைய நம் தலைவி;

௫—௧௦. நேர் கால் முல்லை முதுகொடி குழைப்ப - நிரம்பிய காலினிற் படர்ந்த முதிய முல்லைக்கொடி தளிர்க்க, காலை வானத்துக் கடுங் குரல் கொண்மூ - கீழ்த்திசையில் வானத்தெழுந்த கடிய குரலையுடைய மேகம், நீர் சொரிந்து முழங்குதொறும் - நீரைப் பெய்து முழங்குந் தோறும், நப்புலந்து கையற்று ஒடுங்கி - நம்மை வெறுத்துச் செயலற்று

(பாடம்) * கையற்றிரங்கி. † ஊழுறு கிளர்வீ.

ஒடுங்கி, பழங்கண் கொண்ட பசலை மேனியள் - தன்பினை எய்திய பசலை பாய்ந்த மேனியளாய், யாங்கு ஆகுவள் கொல் - எந்நிலையினை அடைவாளோ?

(முடிபு). நெஞ்சே! நாம் பூக்கோள் ஏய தண்ணுமை விலக்கிச் செல்வேமாதலை அறியாளாய மாயோள், கொண்மூ நீர் சொரிந்து முழங்கு தோறும் கையற்று ஒடுங்கி நம்மைப் புலந்து பசலை மேனியளாகி யாங்காகுவள் கொல்லோ!

(வி - ரை.) வருபடை பெயர்க்கும் செல்வம் என்றமையால் செல்வமென்பது வெற்றியை உணர்த்திற்று. விறல்-மேன்மை. மாற்றாரை வென்ற வெற்றிவீரர்க்கு அரசன் பொற்பூ அளித்துச் சிறப்புச் செய்வன்; அப்பூவினைப் பெறுதல் பூக்கோளாகும். தண்ணுமை ஏய பூக்கோள் என மாறுக. பகையை வென்ற அரசன் அளிக்கும் சிறப்பினைப் பெறுதற்கும் தாழ்த்து நில்லாது நாம் செல்வேமாயினும் குறித்த பருவம் வர்தமையின் தலைவி எங்ஙனம் ஆகுவளோ என்று தலைவன் தன் நெஞ்சிற்குச் சொல்லிச் செலவு விதப்புறுகின்றான் என்க. காலை வானம்-ஞாயிறு தோன்றும் கீழ்த்திசை வானம் என்க. தான் அவளைப் பிரியும் ஞான்று மணற்பரப்பிலே அவள் குறுக அடியிட்டு நடந்த மென்னடை அவன் நெஞ்சம் விட்டகன்றில தாகலின், 'நன்மணல் வியலிடை நடந்த, சின்மெல் லொதுக்கின் மாஅயோள்' என்றான்.

(மே - ள்.) *'எவன் மரபின்' என்னுஞ் சூத்திரத்து இச் செய்யுள் மீள்வான் தன் நெஞ்சிற்கு உரைத்தது என்றும், இதனுள் பூக்கோளேய தண்ணுமை விலக்கிச் செல்வேம் என்றலின், அரசனாற் சிறப்புப் பெற்ற தலைவனாயிற்று என்றும், †'ஒன்றாத் தமரினும்' என்னுஞ் சூத்திரத்து, ஆகித் தோன்றும் பாக்கோர் பாங்கினும் என்னுந் துறைக்கு, தனக்கு ஆக்கம் சிறந்த நட்புடையோராகித் தோன்றும் நட்புடையோர்க்கு உற்றழி புதவச் சேறற்கண்ணும் என்று பொருள் கூறி, இச் செய்யுள் அதற்கு உதாரணமாகும் என்றும் கூறினர், நச்.

---

175. பாலை

[பிரிவின்கண் வற்புறுக்குந் தோழிக்குத் தலைமகள் சொல்லியது. பிரிவின்கண் வேறுபட்ட தலைமகள் தோழிக்குச் சொற்றதூஉமாம்.]

வீங்குவிசிம்பு உரீஇய விசைபமை நோன்சிலை
வாங்குதொடை பிழையா வன்கண் ஆடவர்
ஞிடுதொறும் விளிக்கும் வெவ்வாய் வாளி
ஆறுசெல் வம்பலர் உயிர்செலப் பெயர்ப்பின்

---

* தொல். அகத். ௪௪. † தொல். அகத். ௪௧.

பாறுகிளை பயிர்ந்து படுமுடை கவரும்
வெஞ்சுரம் இறந்த காதலர் நெஞ்சுணர
அரிய வஞ்சினஞ் சொல்லியும் பன்மாண்
தெரிவளை முன்கை பற்றியும் வினைமுடித்து
வருதும் எனறனர் அன்றே தோழி
கால்இயல் நெடுந்தேர்க் கைவண் செழியன்
ஆலங் கானத்து அமர்கடந் துயர்த்த
வேலினும் பல்லூழ் மின்னி முரசென
மாயிரு விசும்பில் கடியிடி பயிற்றி
நேர்கதிர் *நிரைத்த நேமியஞ் செல்வன்
போரடங்கு அகலம் பொருந்திய தார்போல்
திருவில் தேஎத்துக் குலைஇ உருகெழு
மண்பயம் பூப்பப் பாஅய்த்
தண்பெயல் எழிலி தாழ்ந்த போழ்தே.

—ஆலம்பேரி சாத்தனார்.

(சொ-ள்.) ௯. தோழி-,

௧—௮. வீங்கு விளிம்பு உரீஇய - தமது தடித்த தோளின் விளிம்பினை உரசிய, விசை அமை நோன் சிலை-வேகம் அமைந்த வலிய வில்லில் வைத்து, வாங்கு தொடை பிழையா வன்கண் ஆடவர் - இழுத்து விடும் அம்பு குறி தப்புதல் இல்லாத தறுகண்மையையுடைய மறவர், விடுதொறும் விளிக்கும் வெவ்வாய் வாளி - எய்புந்தோறும் ஒலித்துச் செல்லும் கொடிய வாயினையுடைய அம்பு, ஆறு செல் வம்பலர் உயிர் செலப் பெயர்ப்பின் - வழிச்செல்லும் புதியரது உயிர்கெடப் போக்குதலால், பாறு கிளை பயிர்ந்து படுமுடை கவரும் - பருந்து தன் கிளையினை அழைத்து மிக்க புலாலை உண்ணும், வெம் சுரம் இறந்த காதலர் - கொடிய சுரநெறியைக் கடந்து சென்ற நம் காதலர், நெஞ்சு உணர - நமது நெஞ்சு உணர, அரிய வஞ்சினம் சொல்லியும்-கடிய சூள் உரைத்தும், பல்மாண் தெரிவளை முன்கை பற்றியும் - பன்முறை ஆராய்ந்த வளையினையுடைய எனது முன் கையினைப் பற்றித் தலையளி செய்தும்;

௧௦—௮. தண் பெயல் எழிலி - தண்ணிய மழையைப் பெய்யும் மேகம், கால் இயல் நெடு தேர் கைவண் செழியன் - காற்றுப்போல இயலும் நெடிய தேரினையும் கைவண்மையினையுமுடைய பாண்டியன் நெடுஞ்செழியன், ஆலங்கானத்து அமர் கடந்து உயர்த்த - தலையாலங் கானத்துப் போரை வென்று உயர்த்த, வேலினும் பல் ஊழ் மின்னி - வேற்படைகளைக் காட்டில் பன்முறை மின்னி, முரசு என மாஇரு

(பாடம்) * கோர்த்த.

விசும்பில் கடிஇடி. பயிற்றி - கரிய பெரிய வானின்கண் (அவனது வென்று எறி) முரசம் எனக் கடிய இடியினைப் பலகாலும் தோற்றுவித்து, சேர் கதிர் நிரைத்த நேமி அம் செல்வன் - நிரம்பிய கதிர்களின் ஒழுங்கினைக் கொண்ட ஆழியையுடைய திருமாலின், போர் அடங்கு அகலம் பொருந்திய தார்போல் - பகைவர் போர் ஒழிதற்குக் காரணமாய மார்பினிடத்தே தங்கிய மாலைபோல; உருகெழு திருவில் தேஎத்துக் குலைஇ - பன்னிறம் வாய்ந்த அழகிய வில்லை அவ்விசும்பினிடத்தே வளைத்து; மண் பயம் பூப்பப் பாஅய் - நிலம் பயனைத்தரப் பரவி, தாழ்ந்த பொழுது - இறங்கிப் பெய்யுங் காலத்து;

அ—கூ. வினை முடித்து வருதும் என்றனர் அன்றே - தாம் செல்லும் வினையை முடித்துக்கொண்டு மீண்டும் வருவேம் என்றாரன்றோ? (அங்ஙனம் வந்திலரே; என் செய்வல்!)

(முடிபு) வெஞ்சுரம் இறந்த காதலர், வஞ்சினம் சொல்லியும், முன்கை பற்றியும்; தண்பெயல் எழிலி தாழ்ந்த பொழுது வருதும் என்றனரே? (அங்ஙனம் வந்திலரே; என் செய்வல்!)

(வி-ரை.) விளிம்பு-தோலின் மேற்புறம், பெயர்ப்பின்-பெயர்த்தலால். அவர் கூறிய வஞ்சினத்திற்கு அவர் நெஞ்சே சான்றாக அமையும் என்பாள், 'நெஞ்சுணர' என்றாள்; *'நெஞ்சத்துக்குறுகிய கரியில்லை' எனப் பிறசான்றோர் கூறுதலும் காண்க. முன்கை பற்றி யென்பதனை வேறு பிரித்து வஞ்சினம் சொல்லி என்பதனோடு கூட்டி யுரைத்தலுமாம். முன்கை பற்றி வஞ்சினம் கூறும் வழக்குண்மை. †'நேரிறை முன்கை பற்றிச், சூர ரமகளிரொ டுற்ற சூளே' என்பதனால் அறியப்படும். கரிய வானுக்கு நேமியஞ் செல்வனது அகலமும், அவ்வானிற் றோன்றிய வில்லுக்கு அவ்வகலத்திற் பொருந்திய தாரும் உவமம். தேஎம் - இடம், வானின் இடம். கார்ப்பருவத் தொடக்கத்து வருதும் என்றவர் வாராமையால், யான் என்செய்வேன் எனத் தோழிக்குத் தலைமகள் கூறினள்..

---

176. மருதம்

[தோழி, தலைமகனை வாயின் மறுத்தது.]

கடல்கண் டன்ன கண்ணகன் பரப்பின்
நிலம்பக வீழ்ந்த வேர்முதிர் கிழங்கின்
கழைகண் டன்ன தூம்புடைத் திரள்கால்
களிற்றுச்செவி யன்ன பாசடை மருங்கில்
௫ கழுநிவந் தன்ன கொழுமுகை இடைஇடை
முறுவல் முகத்திற் பன்மலர் தயங்கப்

---

* கலி. செய். அ. † குறுந். ௩௨௩.

பூத்த தாமரைப் புள்ளிமிழ் பழனத்து
வேப்புநனை யன்ன நெடுங்கண் நீர்ஞெண்டு
இரைதேர் வெண்குருகு அஞ்சி அயலது
ஒலித்த பகன்றை இருஞ்சேற்று அள்ளல்
திதலையின் வரிப்ப ஓடி விரைந்துதன்
ஈர்மலி மண்ணளைச் செறியும் ஊர
*மனைநகு வயலை மரன்இவர் கொழுங்கொடி
அரிமலர் ஆம்பலொடு ஆர்தழை தைஇ
விழவாடு மகளிரொடு தழூஉ அணிப் பொலிந்து
மலர்ஏர் உண்கண் மாணிழை முன்கைக்
குறுந்தொடி துடக்கிய நெடுந்தொடர் விடுத்தது
உடன்றனள் போலுநின் காதலி எம்போல்
புல்லுளைக் குடுமிப் புதல்வற் பயந்து
நெல்லுடை நெடுநகர் நின்இன்று உறைய
என்ன கடத்தளோ மற்றே தன்முகத்து
எழுதெழில் சிதைய அழுதனள் ஏங்கி
வடித்தென உருத்த தித்திப் பல்லூழ்
நொடித்தெனச் சிவந்த மெல்விரல் திருகுபு
கூர்நுனை மழுகிய எயிற்றள்
ஊர்முழுதும் நுவலுநிற் காணிய சென்மே.

—மருதம்பாடிய இளங்கடுங்கோ.

(சொ-ள்.) ௧—௧௨. கடல் கண்டன்ன கண் அகன் பரப்பின் - கடலைக் கண்டாற்போன்ற இடமகன்ற நீர்ப்பரப்பில், நிலம்புக வீழ்ந்த வேர்முதிர் கிழங்கின் - நிலம் பிளக்குமாறு இறங்கிய வேரில் முதிர்ந்த கிழங்கினையும், கழை கண்டன்ன தூம்பு உடை திரள் கால் - மூங்கிலைக் கண்டாலொத்த துளையுடைய திரண்ட தண்டினையும், களிற்றுச் செவி அன்ன பாசடை மருங்கில் - களிற்றின் செவிபோன்ற பசிய இலையிடத்தே, கழு நிவந்தன்ன கொழுமுகை இடைஇடை - கழு உயர்ந்து தோன்றலையொத்த செழித்த மொட்டுக்களின் இடையிடையே, முறுவல் முகத்தில் தயங்கப் பூத்த பன்மலர் - புன்சிரிப்பினையுடைய முகம் போல விளங்கப் பூத்த பல மலர்களையுமுடைய, தாமரை புள் இமிழ் பழனத்து - தாமரையினையுடைய புட்கள் ஒலிக்கும் வயலில் உள்ள, வேப்பு நனை அன்ன நெடுகண் நீர் ஞெண்டு - வேம்பின் அரும்பினையொத்த நீண்ட கண்ணினையுடைய நீர் ஞெண்டானது (பரத்தமைக்குப்

(பாடம்) * மனைநடு.

பிரிந்து போயது). இரை தேர் வெண் குருகு அஞ்சி - இரையினை ஆய்ந்து பார்த்திருந்த வெள்ளிய நாரையினைக் கண்டு அஞ்சி, அயலது ஒலித்த பகன்றை இரு சேற்று அள்ளல் - அயலிலுள்ள தழைத்த செடிகளையுடைய கரிய சேற்றுப் பிழம்பில், திதலையின் வரிப்ப ஓடி - தேமல்போல வரியுண்டாக ஓடிச்சென்று, விரைந்து தன் ஈர் மலி மண் அளைச் செறியும் ஊர - விரைந்து தனது ஈரம் மிக்க மண் அளைபுட் பதுங்கும் ஊரனே!

௧௩—௮. மனைநடு மரன் இவர் வயலை கொழுங்கொடி - மனையின் கண் விளங்கும் மரத்திற் படரும் வயலையாகிய கொழுவிய கொடியினை, அரிமலர் ஆம்பலொடு ஆர்தழை தைஇ - விளங்கும் மலர்களையுடைய ஆம்பலொடு சேர்த்துக் கட்டிய தழையுடையை உடுத்து, விழவு ஆடு மகளிரொடு தழூஉ அணி பொலிந்து - விழாவின்கண் ஆடும் மகளிரொடு தழுவி ஆடும் அணியாற் பொலிவுற்று, மலர் ஏர் உண்கண் மாண் இழை குறுந்தொடி முன்கை தொடக்கிய - மலரை யொத்த மையுண்ட கண்ணினையும் மாண்புற்ற அணியினையும் உடைய நின் பரத்தை தனது குறிய வளையணிந்த முன்கையினால் பிணித்த, நெடு தொடர் விடுத்தது - நெடிய பிணிப்பினை விடுத்துச் சென்ற அளவிற்கே, உடன்றனள் - வெகுண்டனளாய்;

௨௧—௪. தன் முகத்து எழுது எழில் சிதைய - தன் முகத்தினது எழுதுவதற்கு ஏதுவாகிய அழகு கெட, அழுதனள் ஏங்கி - அழுது ஏக்கமுற்று, வடித்து என உருத்த திதலை - பொன்னை உருக்கி வார்த்தாலொப்ப உருக்கொண்ட தேமலையும், பல் ஊழ் நொடித்தென சிவந்த மெல்விரல் - பன்முறை முறித்துக் கொள்ளலின் சிவந்த மெல்லிய விரலினையும், திருகுபு கூர்நுனை மழுகிய எயிற்றள் - திருகிக் கடித்தலான் கூரிய நுனை மழுங்கிய எயிற்றையுமுடையளாய், ஊர் முழுதும் நுவலும் நின் காணிய சென்மே - ஊர் எங்கும் அலர் கூறப்படும் நின்னைக் காண்டற்குத் தேடிச் செல்வாள் (ஆகலின்);

௧௮—௨௧, நின் காதலி - நின் காதலியாகிய அவள், எம்போல் புல் உளைக் குடுமிப் புதல்வன் பயந்து - எம்மைப்போலப் புல்லிய உளை போலும் குடுமியையுடைய புதல்வனைப்பெற்று, நெல் உடை நெடுநகர் நின் இன்று உறைய - நெல்லுடைய நீண்ட மனையில் நின்னைப் பிரிந்து தங்க, என்ன கடத்தளோ - என்ன கடப்பாடு உடையவளோ?

(முடிபு) ஊர! மாணிழை தன் முன்கை தொடக்கிய நெடுந் தொடர் விடுத்தது உடன்றனளாய் அழுதனள் ஏங்கி, ஊர் முழுதும் நுவலும் நின்னைக் காணிய சென்மே; ஆகலின் நின் காதலியாய அவள் எம்போற் புதல்வற் பயந்து நெடுநகர் நின்இன்று உறைய என்ன கடத்தளோ?

(வி - ரை.) கடல் கண்டன்ன என்பதனாலும், தாமரையின் கிழங்கு, தண்டு, இலை, மொட்டு, மலர் என்ற இவற்றிற்குக் கூறிய உவமைகளாலும் மருதநிலத்தின் கொழுமையும் நீர் மிகுதியும் குறிக்

கப்பட்டன. நெடுங்கண் - நெடிதாய் விளர்ந்து தோன்றும் கண். வயலைக் கொடி மனையின்கண் வைத்து வளர்க்கப்படுதலால், மனைக்கு வயலை எனப்பட்டது. உண்கண்ணினையும் மாணிழையினையுமுடைய நின் காதலியெனக் கூட்டியுரைத்தலுமாம். போலும்: ஒப்பில் போலி. மற்று, வினைமாற்று. எழுது எழில் - ஓவியர் பார்த்து எழுதுதற்கு ஏதுவாகிய அழகு. விரல்களைப் பலமுறை சொடித்தலும், எயிற்றினைத் திருகுதலும் சினத்தினால் நிகழ்ந்தன. அவன் கைப்பிணிப்பினைச் சிறிது விடுத்த அளவிற்கே உடன்று நின்னைத் தேடித் திரிவான் என்றமையின், அவளது பொறுமையின்மையையும், யாம் மனையின்கண் நின்னையின்றியே உறைகின்றேம் என்றதனால், நமது பொறுமையையும் தலைவி புலப்படுத்தினாள் என்க. செல்வுடை நெடுநகர் எனவிருந்தோம்பற்கு இன்றியமையாத செல்வுடைமை கூறிய அதனானே, யாம் புதல்வற் பயந்தும் விருந்தோம்பியும் நினக்கு இருமைக்கும் ஏதுவாகிய மனையறத்தின் வழுவா தொழுகுகின்றேம் என்று தலைவி குறித்தாளாம். புதல்வற் பயந்த என்றது, முதுமையை எள்ளிப் பரத்தையிற் பிரிக்தான் எனப் புலப்படுத்தபடியுமாம். ஊர் முழுதும் நுவலும் என்றமையால், பிறர் கூறும் பழி கருதி இப்பொழுது ஈண்டு வருகின்றானன்றி அன்பினால் வருகின்றானல்லன் என்று கூறித் தோழி வாயில் மறுத்தாளாம். சென்மே - செல்லும்; ஈற்றுமிசையுகரம் மெய்யொடுங் கெட்டது.

தலைவிக்கும் தனக்கும் உள்ள ஒருமைப்பாட்டினால் தோழி, எம் போல் எனத் தலைவியைக் கூறினாள். இதனைத் தலைவி கூற்றாகவே சொல்வது நச்சினார்க்கினியர்க்கும் பேராசிரியர்க்கும் கருத்தாதல் தொல்காப்பிய உரையால் அறியப்படும்.

(உ-றை.) புன்இமிழ் பழனத்து ஞெண்டு குருகஞ்சி இருஞ்சேற்றள்ளல் இதலையின் வரிப்ப ஓடி மண்ணைச் செறியும் என்றது, பரத்தையர் சேரிக்கண் அவர் நலத்தினை நுகர்ந்திருந்த தலைவன் அலர் எழுதலை அஞ்சி அப்பரத்தையர் செய்த குறி, தன் மார்பிலே படப்பத் தன் மனைக்கண் விரைந்து வரலாயினன் என்றபடி.

(மே-ள்.) *'அவனறிவாற்ற அறியுமாகலின்' என்னும் சூத்திரத்து, 'புகன்ற உள்ளமொடு...ஈரத்து மருங்கினும்' என்னும் துறைக்கண், இச்செய்யுளை உதாரணமாகக் காட்டி, மறுப்பான்போல நயந்தாளாயிற்று என்று கூறினர், நச்.

†'இளிவே இழவே...அழுகை நான்கே' என்னுஞ் சூத்திரத்து 'எழுதெழில் சிதைய அழுதனள் ஏங்கி...கிற்காணிய சென்மே' என்பது, தன்கட்டோன்றிய இளிவரல் பொருளாக அவலச்சுவை பிறந்தது என்றும், ‡'தெய்வம் அஞ்சல்' என்னும் சூத்திரத்து, 'வேம்பு நனை

* தொல். கற். ௫. † தொல். மெய். ௫. ‡ தொல். மெய், ௨௪.

யன்ன...செறியும் வரை' என்பது, தலைமகன் வாயில் வேண்டச் சென்ற ளைப் பிறர் கூறும் பழிக்கு வர்தாய் என்றமையின், இஃது உவ்வ தவர்த்தல் (எனும் மெய்ப்பாடு) ஆயிற்று என்றும் கூறினர், பேரா.

---

177. பாலை

[பிரிவிடை வேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறுத்தியது.]

தொல்கலம் சிதைபச் சாஅய அல்கலும்
இன்னும் வாரார் இனியெவன் செய்கெனப்
பெரும்புலம்பு உறுதல் ஓம்புமதி சிறுகண்
இரும்பிடித் தடக்கை மான நெய் அருந்து
ஒருங்குபிணித் தியன்ற வெறிகொள் ஐம்பால்
தேங்கமழ் வெறிமலர் பெய்ம்மார் காண்பின்
கழைஅமல் சிலம்பின் வழைதலை வாடக்
கதிர்கதம் கற்ற ஏகல் நெறியிடைப்
பைங்கொடிப் பாகல் செங்கனி நசைஇக்
கான மஞ்ஞைக் கமஞ்சூல் மாப்பெடை
அயிரியாற்று அடைகரை வயிரின் நரலும்
காடிறந் தகன்றோர் நீடின ராயினும்
வல்லே வருவர் போலும் வென்வேல்
இலைநிறம் பெயர ஓச்சி மாற்றோர்
மலைமருள் யானை மண்டமர் ஒழித்த
கழல்கால் பண்ணன் காவிரி வடவயின்
நிழல்கயம் தழீஇய நெடுங்கால் மாவின்
தளிர்ஏர் ஆகம் தகைபெற முகைந்த
அணங்குடை வனமுலைத் தாஅய நின்
*சுணங்கிடை வரித்தல் தொய்யிலை நினைந்தே.

†செயலூர் இளம்பொன் சாத்தன் கொற்றனார்.

(சொ - ள்.) ௬—௧௨. தோழி-, காண்பு இன் கழை அமல் சிலம்பின் வழை தலைவாட-காண்டற்கு இனிய மூங்கில் நிறைந்த பக்கமலையி லுள்ள சுரபுன்னையின் உச்சி வாடும்படி, கதிர் கதம் கற்ற-ஞாயிற்றின் கதிர் சினத்தைப் பயின்ற, ஏ கல் நெறியிடை-பெரிய கற்கள்

(பாடம்) * சுணங்கடை. † செலூர் இளம்பொன் சாத்தன் கொற்றன்; உறையூர் இளம்பொன் வாணிகன் சாத்தன் கொற்றன்.

பொருந்திய சுரநெறியில், பைங்கொடிப் பாகல் செங்கனி நசைஇ - பசிய பாகற்கொடியின் சிவந்த பழத்தினை விரும்பி, கானமஞ்ஞை கமம் சூல் மா பெடை - காட்டிலுள்ள மயிலின் நிறைந்த கருவினைக் கொண்ட கரிய பெடை, அயிரி யாற்று அடைகரை வயிரின் நரலும் - அயிரியாற்றினது அடைகரையின்கண் ஊதுகொம்பென ஒலிக்கும் - காடு இறந்து அகன்றோர் நீடினர் ஆயினும் - காட்டினைத் தாண்டிச் சென்ற தலைவர் (குறித்த பருவங் கடந்து) தாழ்த்து வாராதிருப்பினும்;

௯—௧௪. சிறுகண் இரு பிடி தட கை மான - சிறிய கண்ணினையுடைய பெரிய பெண்யானையின் பெரிய கையினை ஒப்ப, ஒருங்கு பிணித்து இயன்ற நெய் அருந்து வெறிகொள் ஐம்பால் - சேரக்கட்டிவிட்ட நெய் பூசப்பெறும் நறாற்றமுடைய கூந்தற்கண்ணே, தேம் கமழ் வெறிமலர் பெய்ம்மார் - தேன் மணக்கும் நறிய மலரைப் பெய்தலையும்;

௧௫—௨௦. வென்வேல் இலைநிறம் பெயர ஓச்சி - வென்றி வேலை இலைமுனை நிறம் மாறிச் செந்நிறமடையச் செலுத்தி, மாற்றோர் மலைமருள் யானை மண்டு அமர் ஒழித்த - பகைவருடைய மலைபோலும் யானைகளை மிக்க போரின்கண் அழித்த, கழல்கால் பண்ணன் - வீரக்கழல் தரித்த காலினையுடைய பண்ணனது, காவிரி வடவயின் - காவிரியின் வடபாலுள்ள, நிழல் கயம் தழீஇய நெடுங்கால் மாவின் - குளிர்ந்த குளத்தினை யடுத்துள நெடிய அடிமரத்தினையுடைய மாமரத்தின், தளிர் ஏர் ஆகம் தகைபெற முகைந்த - தளிரை யொத்த ஆகத்தில் அழகுபெற அரும்பிய, அணங்கு உடை நின் வனமுலை தாஅய - வருத்தும் இயல்புடைய நின் அழகிய முலையிற் பரந்த, சுணங்கிடை தொய்யிலை வரித்தல் நினைந்தே - சுணங்கினிடையே தொய்யில் எழுதுதலையும் நினைந்து;

வல்லே வருவர் - விரைந்து வந்தருள்வர் ஆதலின்;

௧—௫. தொல்நலம் சிதையச் சாஅய் - பழைய அழகு சிதைந்திட வருந்தி, அல்கலும் - நாடோறும், இன்னும் வாரார் - இன்னும் வந்திலர், இனி எவன் செய்கு என - இனி என்ன செய்வேன் என்று, பெரும் புலம்பு உறுதல் ஓம்புமதி - மிக்க வருத்தம் அடைதலைப் பரிகரிப்பாயாக:

(முடிபு) தோழி! காடிறந்தகன்றோர் நீடினர் ஆயினும், நினது ஐம்பால் வெறிமலர் பெய்தலையும், நின் வனமுலைத் தாஅய சுணங்கிடைத் தொய்யில் எழுதுதலையும் நினைந்து வல்லே வருவர்: ஆதலின், நலம் சிதையச் சாஅய், அல்கலும் பெரும் புலம்பு உறுதல் ஓம்புமதி.

(வி - ரை.) தடக்கை மானப் பிணித்தியன்ற ஐம்பால் என்க. அருந்தி என்பது அருந்து எனத் திரிந்ததெனக் கொண்டு, அருந்தி வெறிகொள் என்றலுமாம். கதம் சற்ற - வெம்மை முறுகிய என்றபடி. ஏ கல் நெறி: ஏ - பெருக்கமாதலை, *'ஏ பெற்றாகும்' என்பதன் உரை

* தொல். சொல். உரி.

யால் அறிக; ஏகல் நெறி - உயர்ச்சியையுடைய நெறியென்றுமாம். *'ஏகல் வெற்பன்' என்பது காண்க. பெடை வயிரின் காலுங் காடு என்க. அயிரியாறு தமிழ்நாட்டின் வடக்கண்ணுள்ளதோர் யாறு என்பது †'வடுகர் பெருமகன், பேரிசை எருமை நன்னாட்டுள்ளதை, அயிரியா றிறந்தனர் ஆயினும்' என்பதனால் அறியப்படும். போலும்: ஒப்பில் போலி, மலைமருள்: மருள், உவமச்சொல். காவிரி வடவயின் சிறுகுடி என்னும் ஊரிலுள்ள மாவின் தளிர் என விரித்துரைக்க. பண்ணனது ஊர் சிறுகுடி என்பது, ‡'தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன், பண்ணன் சிறுகுடிப் படப்பை' என்பதனால் அறியப்படும்.

178. குறிஞ்சி

[தோழி வரைவு மலிந்து சொல்லியது.]

வயிரத்து அன்ன வையேந்து மருப்பின்
வெதிர்வேர் அன்ன பரூஉமயிர்ப் பன்றி
பறைக்கண் அன்ன நிறைச்சுனை பருகி
நீலத்து அன்ன அகலிலைச் சேம்பின்
பிண்டம் அன்ன கொழுங்கிழங்கு மாந்திப்
பிடிமடிந் தன்ன கன்மிசை ஊழ்இழிபு
பாறுசேர்ந் தன்ன ஊறுநீர்ப் படாஅர்ப்
பைம்புதல் களிசினைக் குருகிருந் தன்ன
வண்பிணி அவிழ்ந்த வெண்கூ தாளத்து
அலங்குகுலை அலரி தீண்டித் தாதுகப்
பொன்னுரை கட்டளை கடுப்பக் காண்வரக்
கிளை அமல் சிறுதினை விளைகுரல் மேய்ந்து
கண் இனிது படுக்கும் நன்மலை நாடனொடு
உணர்ந்தனை புணர்ந்த நீயும் நின்தோள்
பணைக்கவின் அழியாது துணைப்புணர்ந் தென்றும்
தவலில் உலகத்து உறைஇயரோ தோழி
எல்லையும் இரவும் என்னாது கல்லெனக்
கொண்டல் வான்மழை பொழிந்த வைகறைத்
தண்பனி அற்சிரம் தமியோர்க் கரிதெனக்
கனவினும் §பிரிவறி யலனே அதன்தலை

* குறுந். உக௫. † அகம். உ௫௩. ‡ அகம். ௫௪.
(பாடம்) § பிரிபறி யலரே.

முன்றான் கண்ட ஞான்றினும்
பின்பெரிது அளிக்குந்தன் பண்பி னானே.

—பரணர்.

(சொ - ள்.) கக-தோழி-,

க—கஉ. வயிரத்து அன்ன வை ஏந்து மருப்பின் - வயிரத்தை ஒத்த கூரிய மேனோக்கிய கோட்டினையும், வெதிர்வேர் அன்ன பரூஉ மயிர்ப்பன்றி-மூங்கில் வேரினை ஒத்த பருத்த மயிரினையுமுடைய பன்றியானது, பறைக்கண் அன்ன நிறைச் சுனை பருகி-பறையின் கண்ணினை ஒத்த நிறைந்த சுனை நீரைக் குடித்து, நீலத்து அன்ன அகல் இலைச் சேம்பின்-நீலமணியை யொத்த நிறத்தினையுடைய அகன்ற இலையினையுடைய சேம்பின், பிண்டம் அன்ன கொழு கிழங்கு மாந்தி-பிண்டித்து வைத்தாற்போன்ற வளவிய கிழங்கினை நிறையத் தின்று, பிடி மடிந்தன்ன கல்மிசை - பெண்யானை கிடந்தாலொத்த கல்லின்மீது, ஊழ் இழிபு - வருத்தமின்றி முறையாக இறங்கிவந்து, யாறு சேர்ந்தன்ன ஊறு நீர் படாஅர் - யாற்றினை அடுத்திருப்பதுபோன்ற நீர் ஊறும் இடத்திலுள்ள சிறுதூறாகிய, பைம் புதல் களிசினை குருகு இருந்தன்ன-பசிய புதரிலுள்ள செறிந்த கிளைகளில் வெண்குருகிருந்தாலொத்த, வண்பிணி அவிழ்ந்த வெண் கூதாளத்து அலங்கு குலை அவரி நீண்டி - வெள்ளிய கூதளஞ்செடியின் அசையும் கொத்திலுள்ள வளப்பொருந்திய முகை விரிந்த மலரினைப் பொருந்தி, தாது உக - அதன் பூம்பொடி மேலே உதிர்தலால், பொன் உரை கட்டளை கடுப்பக் காண்வர-பொன் உரைத்து மாற்று அறியும் கட்டளைக் கல்லினை ஒப்ப அழகுபெறத் தோன்றி, கிளை அமல் சிறுதினை விளைகுரல் மேய்ந்து - கிளைத்தல் மிக்க சிறிய தினையின் விளைந்த கதிரினை மேய்ந்து, கண் இனிது படுக்கும் நல்மலை நாடனொடு - இனிது கண்ணுறங்கும் இடமாகிய நல்ல மலை நாட்டையுடையானொடு:

கச—க. உணர்ந்தனை புணர்ந்த நீயும் - கூடிப் பின் அவ்வுடலை நேர்ந்து புணர்ந்திடும் நீயும், நின் தோள் பணைக்கவின் அழியாது-நினது தோளின் மூங்கில்போலும் அழகு ஒழியாது, என்றும் துணை புணர்ந்து-நின் தலைவனுடன் என்றும் சேர்ந்து வாழ்ந்து பின், தவல் இல் உலகத்து உறைஇயர் - என்றுங்கெடாத மறுமை யுலகத்துத் தங்கிவாழ்வீராக;

கள—உ0. எல்லையும் இரவும் என்னாது - பகலும் இரவும் என்றில்லாது, கல் என கொண்டல் வான் மழை பொழிந்த வைகறை - கல்லெனும் ஒலியுடன் மேகம் பெரிய மழையைச் சொரிந்த விடியற் காலத்தே, தண்பனி அற்சிரம் - குளிர்ந்த பனியையுடைய அற்சிரக் காலம், தமியோர்க்கு அரிது என - தனித்திருப்போர்க்குத் தாங்குதற்கரிதாகுமெனவுணர்ந்து, கனவிலும் பிரிவு அறியலன் - கனவின்கண்ணும் பிரிதலை அறியான்;

௨௦—௨. அதன் தலை - அதன்மேலும், தன் பண்பினான் - தனது நற்குணத்தினால், முன் தான்கண்ட ஞான்றினும்-முதன் முதல் தான் கண்ட நாளினும், பின் பெரிது அளிக்கும்-பின் எந்த நாளினும் மிகவும் அருள் செய்வானாவன்.

(முடிபு) தோழி! பன்றி கண் இனிது படுக்கும் நன்மலை நாடனொடு, என்றும் புணர்ந்து உறைஇயரோ; அற்சிரம் தரியோர்க்கு அரிதெனக் கனவினும் பிரிவு அறியலன்; அதன்தலை தன் பண்பினாலே, முன் கண்ட ஞான்றினும் பின் பெரிது அளிக்கும்.

(வி - ரை.) வயிரத்தன்ன மருப்பு, வை மருப்பு, ஏந்து மருப்பு, எனத் தனித்தனி இயையும். குழிந்து வட்டமாயிருத்தல் பற்றிச் சுனைக்குப் பறைக்கண் உவமை கூறப்பட்டது. படாஅர் - சிறு தூறு: படுகர் என்றுமாம். படுகர் - நீர்நிலை. கருநிறமுடைய பன்றியின் உடம்பில் கூதளத்தின் பொன்னிறப் பூம்பொடி படிந்திருத்தல், பொன்னின் மாற்றறியும் கரிய கட்டளைக் கல்லிற் பொன் உரைத்தாற்போலும் என உவமமும் பொருளும் ஒத்து விளங்குதல் காண்க. தலைவன்மாட்டுத் தவறில்லையாயினும் அவன்பால் இருப்பதாக ஏறட்டுக்கொண்டு, எவ்வுக் காலத்தும் சிறுபான்மை ஊடுதலும், பின்னர் அவ்வூடல் நீங்கிக் கூடுதலும் தலைவிமாட்டுண்மையின், 'உணர்ந்தனை புணர்ந்த' என்றான். உணர்தல் - ஊடல் நீங்குதல். இனி, இயற்கைப் புணர்ச்சி முதலிய கூட்டங்களால், தலைவனுடைய பண்பினை இனிதுணர்ந்த நீயும் என்றுரைத்தலுமாம். நீயும் என்ற உம்மையால் தலைவனும் என்பது பெறப்படும். தவல் இல் உலகம்-கெடுதலில்லாத இன்பத்தையுடைய மறுமை யுலகம். இவ்வுலகிலே தலைவரைக் காதலுடன் கூடி இல்லறம் இனிது நடாத்தி, நன்மகப் பெற்றுவாழ்ந்தோர், மறுமையிலும் பிரிவின்றி இன்பம் துய்ப்பர் என்னுங் கருத்தினளாதலின், என்றும் தவலில் உலகத்து உறைஇயர் என்று கூறினாளென்க; *"இம்மை மாறி மறுமை யாயினும், நீயா கியரென் கணவனை, யானா கியர்நின் னெஞ்சுநேர் பவளே' †'இம்மை புலகத் திசையொடும் விளங்கி, மறுமை புலகமும் மறுவின் றெய்துப, செறுநரும் விழையுஞ் செயிர்தீர் காட்சிச், சிறுவர்ப் பயந்த செம்மலோரென' என்பன காண்க. இவ்வாற்றால், தலைவன் வரைய வருதலை புணர்ந்து தோழி வரைவுமலிந்து கூறினாள் என்பது பெற்றாம். அங்ஙனம் தலைவன் வரைதல் ஒருதலை என வற்புறுத்துதற்குக் கனவினும் பிரிவு அறியலன் என்றும், முன் தான் கண்ட ஞான்றினும் பின் பெரிதளிக்கும் என்றும் கூறினாள். இயற்கைப் புணர்ச்சி தொடங்கி ஒருகாலைக் கொருகால் தலைவிமாட்டு அன்பு பெருகித் தலையளிசெய்து வருதலைக் கண்டோளாகலின், தன் பண்பினானே அளிக்கும் என்றனள்.

(உ-றை.) பன்றி சுனை பருகிக் கிழங்கு மாந்தித் தினை விளைகுரல் மேய்ந்து இனிது கண்படுக்கும் நாடன் என்றது, தலைவன் தான் கருதிய

* குறுந். ௪௯. † அகம். ௬௬.

பொருளெலாம் பெற்றுத் தலைவியை மணந்து இன்பந்துய்த்து இனிது வாழ்வான் என்றபடியாம்.

---

179. பாலை

[பிரிவுணர்த்திய தலைமகற்குத் தோழி செலவு அழுங்கச் சொல்லியது.]

விண்டோய் சிமைய விறல்வரைக் கவாஅன்
வெண்தேர் ஓடுங் கடங்காய் மருங்கில்
துனையெரி பரந்த துன்னரும் வியன்காட்டுச்
சிறுகண் யானை நெடுங்கை நீட்டி
*வான்வாய் திறக்கும் வண்புனல் பெறாஅது
கான் புலந்து கழியுங் கண்ணகன் பரப்பின்
விடுவாய்ச் செங்கணைக் கொடுவில் ஆடவர்
நல்லிலை பொறித்த கல்லிலை அதர
†அரம்புகொள் பூசல் களையுநர்க் காணாச்
சாஞ்செல விரும்பினி ராயின் இன்னகை
முருந்தெனத் திரண்ட முள்ளெயிற்றுத் துவர்வாய்க்
குவளை நாள்மலர் புரையும் உண்கண் இம்
மதியேர் ‡வாள்நுதல் புலம்பப்
பதிபெயர்ந்து உறைதல் ஒல்லுமோ நமக்கே.

—கோடிமங்கலத்து வாதுளி நற்சேந்தனார்.

(சொ - ள்.) க—க0. தலைவ-, விண்தோய் சிமைய விறல் வரைக் கவான்-வானை அளாவிய உச்சியினையுடைய பெருமை தங்கிய மலையினது பக்கமலைக்கண்ணே, வெண்தேர் ஓடும் காய் கட மருங்கில்-பேய்த்தேர் ஓடாநிற்கும் காய்ந்த கற்காட்டின் பக்கத்தே, துனை எரி பரந்த துன் அரும் வியன்காட்டுச் சிறுகண் யானை - விரைந்த நெருப்புப் பரவிய கிட்டுதற்கரிய பெரிய காட்டிலுள்ள சிறிய கண்ணினையுடைய யானை, நெடு கை நீட்டி வான் வாய் திறக்கும்-அப் பேய்த்தேரின்பால் தன் நெடிய கையினை நீட்டியும் பெரிய வாயினைத் திறந்தும், வண் புனல் பெறாஅது கான் புலந்து கழியும்கண் அகன் பரப்பின் - வளவிய நீரினைப் பெறாமல் காட்டைவெறுத்துக் கழிந்துபோம் இடம் அகன்ற பாலைநிலத்தின்கண், விடுவாய்ச் செங்கணைக் கொடுவில் ஆடவர் - விடுதல் வாய்ந்த சிவந்த அம்பினையுடைய வளைந்த வில்லைக்கொண்ட மற

(பாடம்) * வறன்வாய். † இரும்புகொள். ‡ வாண்முகம்.

வாத, நல்கிலை பொறித்த கல்கிலை அதர - நல்ல வெற்றி நிலையை எழுதிய நடுகற்கள் நிலைகொண்ட வழிகளையுடையவாய, அரம்பு கொள் பூசல் களையுநர் காணச் சுரம்செல விரும்பினிர் ஆயின் - குறும்பர்கள் செய்யும் பூசலை நீக்குநரைக் காணாத சுரநெறியைக் கடந்து செல்ல விரும்பினீர் ஆயின்;

௧௦—௪. இன் நகை முருந்துஎனத் திரண்ட முள்எயிற்றுத் துவர் வாய் - இனிய நகையினையும் மயிலிறகின் அடியெனத் திரண்ட முட் போலும் கூரிய பற்களையும் சிவந்த வாயினையும், குவளை நாள் மலர் புரையும் உண்கண் - குவளையின் புதிய மலரை யொக்கும் மையுண்ட கண்ணினையும் உடைய,இ மதி ஏர் வாள் நுதல் புலம்ப-இந்த மதியினை யொத்த ஒளி பொருந்திய நெற்றியினை யுடையாள் வருந்த, பதி பெயர்ந்து உறைதல் நுமக்கு ஒல்லுமோ - இப்பதியை நீங்கிப்போய்த் தங்குதல் உமக்குப் பொருந்துவதாமோ?

(முடிபு) தலைவ! சுரம்செல விரும்பினிராயின், வாள்நுதல் புலம்பப் பதிபெயர்ந்து உறைதல் நுமக்கு ஒல்லுமோ!

வெண்தேர் ஓடும் வியன் காட்டில், யானை, கைந் நீட்டியும் வாய் திறந்தும் புனல் பெறாது புலந்து கழிவதும் கொடுவில்லாடவர் நடுகல் நிலைபெற்ற அதர்களையுடையதும் அரம்புகொள் பூசல் களையுநர் இல்லாததும் ஆகிய சுரம் என்க.

(வி - ரை.) கொடுவில் ஆடவர், கரந்தை மறவர் என்க, அரம்பு - குறும்பர், காட்டுத் தலைவர். 'இன்னகை...வாணுதல் புலம்ப' என்றது, தலைவியின் இனிய நகையும் கூரிய பல்லும் துவர் வாயும் உண்கண்ணும் வாணுதலும் ஆய இவை, நும்முன் தோன்றி நும்மை அழுங்குவிப்பன வாகலின், நீர்பிரிந்துறைதல் ஒல்லாதென்றாள் என்றபடி.

---

180. நெய்தல்

[இரந்து பின்னின்ற தலைமகற்குக் குறைநேர்ந்த தோழி தலை மகளைக் குறையயப்பக் கூறியது. தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழிக்குச் சொல்லியதூஉமாம்.]

நகைநனி யுடைத்தால் தோழி தகைமிகக்
கோதை ஆயமொடு குவவுமணல் ஏறி
வீதை கானல் வண்டல் அயரக்
கதழ்பரித் திண்தேர் கடைஇ வந்து
௫ தண்கயத்து அமன்ற ஒண்பூங் குவளை
அரும்பலைத் தியற்றிய சுரும்பார் கண்ணி
பின்றுப்புறந் தாழக் கொன்னே சூட்டி

நல்வரல் இளமுலை நோக்கி நெடிது நினைந்து
நில்லாது பெயர்ந்தனன் ஒருவன் அதற்கே
புலவுநா றிருங்கழி துழைஇப் பலவுடன்
புள்இறை கொண்ட முள்ளுடை நெடுந்தோட்டுத்
தாழைமணந்து ஞாழலொடு கெழீஇப்
படப்பை நின்ற முடத்தாட் புன்னைப்
பொன்னேர் நுண்தாது நோக்கி
என்றும் நோக்குமிவ் வழுங்கல் ஊரே.

—*கருவூர்க் கண்ணம்பாளனார்.

(சொ - ள்.) ௧—௯. தோழீ—, நகை மிக கோதை ஆயமொடு குவவு மணல் ஏறி-அழகு மிக மாலையையுடைய ஆயத்தாருடன் (யான்) திரண்ட மணல் மேட்டில் ஏறி, வீ ததை கானல் வண்டல் உயர - மலர் நெருங்கிய சோலையில் விளையாடல் செய்யாநிற்க, ஒருவன் - ஒரு தலைவன், கதழ் பரி திண்தேர் கடைஇ வந்து - விரைந்த குதிரையையுடைய வலிய தேரினைச் செலுத்தி வந்து, தண் கயத்து அமன்ற ஒள்பூ குவளை-தண்ணிய குளத்தே நிறைந்த ஒள்ளிய பூக்களையுடைய குவளையின், அரும்பு அலைத்து இயற்றிய சுரும்பு ஆர் கண்ணி - அரும்பினை விரித்துக் கட்டிய வண்டுகள் மொய்க்கும் கண்ணியினை, பின்னுப்புறம் தாழக் கொன்னே சூட்டி-எனது பின்னலைக் கொண்ட முதுகின்பால் தாழ்ந்திட யான் வேண்டாதே தலையிற் சூட்டி, நல்வரல் இளமுலை நோக்கி-நல்ல வளர்ச்சியையுடைய இளைய முலையைப் பார்த்து, நெடிது நினைந்து நில்லாது பெயர்ந்தனன் - ஏதோ நீள நினைந்து பின் தாழ்க்காது போயினன்;

௧—௧௫. அதற்கே - அவ்வளவிற்கே, இ அழுங்கல் ஊர் - இந்த ஆரவாரமிக்க ஊர், புலவு நாறு இருகழி துழைஇ பல உடன் புள் இறை கொண்ட-புலால் வீசும் பெரிய கழியினைத் துழாவிப் பலவகைப் புட்களும் ஒருங்கே தங்கியிருக்கும், முள் உடை நெடு தோட்டுத் தாழை மணந்து - முள்ளுடைய நீண்ட இதழையுடைய தாழையைச் சார்ந்து, ஞாழலொடு கெழீஇ - புலிநகக் கொன்றையொடு பொருந்தி, படப்பை நின்ற முடத்தாள் புன்னைப் பொன் நேர் நுண்தாது நோக்கி - தோட்டத்தில் நிற்கும் வளைந்த தாளினையுடைய புன்னையது பொன்னை யொத்த நுண்ணிய தாதினைப் பார்த்து, என்றும் நோக்கும் - என்னையும் நோக்கா நிற்கும்;

௧. நகை மிக உடைத்து - இது மிகவும் நகையினைத் தருவதொன்றாகும்.

(பாடம்) * கருவூர்க்கண்ணம்பாணனார்; கண்ணன் பரணனார்.

(முடிபு) தோழி! நான் ஆயமொடு வண்டல் அயர, ஒருவன் தேர் கடைஇ வந்து, கண்ணியினைப் பின்னுப்புறம் தாழக் கொன்னே சூட்டி, இளமுலை நோக்கி, நெடிது நினைந்து பெயர்ந்தனன்: அதற்கே இந்த அழுங்கலூர் புன்னைத் தாது நோக்கி என்னும் நோக்கும்; இது நகை நனியுடைத்து.

(வி-ரை.) யான் விரும்பாதிருக்கச் செய்தே சூட்டினுன் என்பாள், 'கொன்னே சூட்டி' யென்ருள். பின் அவனொடு தனக்கு யாதொரு தொடர்பும் இன்றென்பாள் நில்லாது பெயர்ந்தனன் என்ருள். இவ்வூர் புன்னையின் தாது நோக்கி என்னையும் நோக்கும் என்றது, என் மேனி புன்னையின் தாதுபோலும் பசலை படர்ந்த தெனக் கருதுகின்றது என்றபடி; இது குறிப்பு நுட்பமாம். தோழியானவள் தலைவி குறை நயப்பக் கருதி, இங்ஙனம் படைத்து மொழியால் கூறவே, இக் கான லின்கண் இங்ஙனம் வந்து செல்வான் தலைவனே யாவான் என்னுங் கருத்தினளாய்க் குறை நேர்வாளாம் என்க. இரண்டாவது துறையின் கருத்து தலைவியானவள் தலைவன் வரையாது பிரிந்திருத்தலால், தன் மேனி பசலை பூத்தலையும் அதனுல் ஊரின்கண் அலர் எழுதலையும் தலைமகன் கேட்பத் தோழிக்குச் சொல்லினுளாம் என்பது.

---

181. பாலை

[இடைச்சுரத்து ஒழியக் கருதிய நெஞ்சிற்குச் சொல்லியது.]

துன்னருங் கானமுந் துணிதல் ஆற்ருய்
பின்னின்று பெயரச் சூழ்ந்தனை யாயின்
என்னிலை யுரைமோ நெஞ்சே ஒன்ஞர்
ஓம்பரண் கடந்த வீங்குபெருந் தானை
அடுபோர் மிஞிலி செருவிற்கு உடைஇ
முருகுறழ் முன்பொடு பொருதுகளஞ் சிவப்ப
ஆஅய் *எயினன் வீழ்ந்தென ஞாயிற்று
ஒண்கதிர் உருப்பம் புதைய ஓராங்கு
வம்பப் புள்ளின் கம்பலைப் பெருந்தோடு
விசும்பிடை தூர ஆடி மொசிந்துடன்
பூவிரி அகன்துறைக் கணைவிசைக் கடுநீர்க்
காவிரிப் பேரியாற்று †அயிர்கொண்டு ஈண்டி
எக்கர் இட்ட குப்பை வெண்மணல்
வைப்பின் யாணர் வளங்கெழு வேந்தர்
ஞாலம் நாறும் நலங்கெழு நல்லிசை

(பாடம்) * வண்மை எயினன். † அயிர்கொடீண்டி.

நான்மறை முதுநூல் முக்கண் செல்வன்
ஆல முற்றம் கவின்பெறத் *தைஇய
பொய்கை சூழ்ந்த †பொழின்மனை மகளிர்
கைசெய் பாவைத் துறைக்கண் இறுக்கும்
மகர நெற்றி வான்தோய் புரிசைச்
சிகரந் தோன்றாச் சேணுயர் நல்லில்
‡புகாஅர் நன்னாட் டதுவே பகாஅர்
பண்டம் நாறும் §வண்டடர் ஐம்பால்
பணைத்தகைத் தடைஇய காண்பின் மென்றோள்
அணங்குசால் அரிவை இருந்த
மணங்கமழ் மறுகின் மணல்பெருங் குன்றே.

—பரணர்.

(சொ - ள்.) க. நெஞ்சே-,

௨௨—௬. பகாஅர் பண்டம் நாறும் வண்டு அடர் ஐம்பால் - விற்பாரது நறுமணப் பண்டங்கள் நாறுகின்ற வண்டுகள் மொய்க்கும் ஐம்பகுதியாய கூந்தலினையும், பணைத்தகை தடைஇய காண்பு இன்மென் தோள்-மூங்கிலின் தகுதியையுடையதாய் வளர்ந்த காண்டற்கு இனிய மெல்லிய தோளினையுமுடைய, அணங்குசால் அரிவை இருந்த - அழகு மிக்க நம் தலைவியிருந்த, மணம் கமழ் மறுகின் மணல் பெரும் குன்று - மணம் நாறும் தெருக்களையுடைய மணலையுடைய பெரிய குன்றம்;

௬—௭. ஆஅய் எயினன்-ஆய் எயினன் என்பான், முருகு உறழ் முன்பொடு - முருகனை ஒத்த வலிமையொடு நின்று, ஒன்னார் ஓம்பு அரண் கடந்த வீங்கு பெரும் தானை - பகைவர் பாதுகாக்கும் அரண்களை வென்று கடந்த மிக்க பெரிய சேனைகளையுடைய, அடுபோர் மிஞிலி செருவிற்கு - போர் அடுதல்வல்ல மிஞிலி என்பான் செருவின் கண், களம் சிவப்பப் பொருது - குருதியால் களம் சிவப்புறப் பொருது பின், உடைஇ வீழ்ந்தென - தோற்று வீழ்ந்தனனாக;

௭—௧௦. ஞாயிற்று ஒள்கதிர் உருப்பம் புதைய - ஞாயிற்றின் ஒள்ளிய கதிர்களின் வெப்பம் (அவன் உடலிற்படாது) மறைய, ஒராங்கு - ஒரு பெற்றியே, வம்பப் புள்ளின் கம்பலைப் பெருந்தோடு - புதிய புட்களின் ஒலி பொருந்திய பெரிய கூட்டம், விசும்பிடை தூர ஆடி - விசும்பிடம் மறைய வட்டமிட்டுப் பின்பு, உடன் மொசித்து - ஒருங்குகூடி;

௧௧—௬. பூவிரி அகல் துறை - பூக்கள் விரிந்த அகன்ற துறையினையுடைய, காவிரிப் பேர் யாற்று - காவிரியாய பெரிய ஆற்றின்,

* தைஇப். † பொழின் மணமகளிர். ‡ பகர்வர்.
§ வண்டாடைம்பால்.

கனைவிசைக் கடுநீர் - மிக்க விசையுடன் கடுகிவரும் நீரானது, அயிர் கொண்டு ஈண்டி - நுண்மணலைக்கொண்டு திரளும்படி, எக்கர் இட்ட குப்பை வெண்மணல் - மேடாக்கிய வெள்ளிய மணற்குவியலையும், யாணர் வைப்பின் - புது வருவாயையுமுடைய ஊர்களையுடைய, வளம் கெழு வேந்தர் - செல்வம் மிக்க சோழவேந்தராற் புரக்கப்படும், ஞாலம் நாறும் நலம்கெழு நல்இசை - உலகமெல்லாம் பரவும் நன்மை பொருந்திய நற்புகழையுடைய, நால்மறை முதுநூல் முக்கண் செல்வன் - நான்கு வேதங்களாய பழைய நூலை அருளிய முக்கண்ணையுடைய பரமனது, ஆலமுற்றம் - ஆலமுற்றம் என்னுமிடத்து, கவின்பெற தைஇய - அழகுபெற இயற்றப்பெற்ற, பொய்கை சூழ்ந்த பொழில் - பொய்கையைச் சூழ்ந்துள்ள பொழிலின்கண்ணே, மனைமகளிர் - சிற்றில் இழைத்து விளையாடும் சிறுமிகளது, கைசெய் பாவைத் துறைக்கண் - அழகுறச் செய்யப்பெற்ற பாவைகளையுடைய துறையின் கண்ணே, இறுக்கும் - வந்து தங்குவதும்;

உ0—உ. மகர நெற்றி வான்தோய் புரிசை - மகரக் கொடியினை உச்சியிற்கொண்ட வானைத்தோயும் மதிலையும், சிகரம் தோன்றாச் சேண் உயர் நல்இல் - முடி அறியப்படாதவாறு சேணின்கண் உயர்ந்த நல்ல மாடங்களையுடையதும் ஆகிய, புகாஅர் நல் நாட்டதுவே - காவிரிப் பூம் பட்டினத்தையுடைய நல்ல சோழநாட்டின் கண்ணதாகும்;

க—ரு. துன் அரும் கானமும் துணிதல் ஆற்றாய் - செல்லுதற்கு அரிய காட்டைக் கடக்கவும் துணிவுறல் செய்யாயாய், பின் நின்று பெயரச் சூழ்ந்தனை ஆயின் - பின்னே நின்று பெயர்ந்து மீண்டிடக் கருதினையாயின், என்நிலை உரைமோ - எனது இந்நிலையினை ஆண்டுச் சென்று அவட்கு உரைப்பாயாக.

(முடிபு) நெஞ்சே! அரிவை இருந்த மணற்பெருங் குன்று, புகாஅர் நன்னாட்டது; நீ கானம் துணிதல் ஆற்றாய்; பின் நின்று பெயரச் சூழ்ந்தனையாயின், என்நிலை ஆண்டுச் சென்று, அவட்கு உரைப்பாயாக.

(வி - ரை.) கானமும் - காட்டினைக் கடக்கவும்; உம்மை எச்சப் பொருட்டு; அசை நிலையுமாம். ஒன்னார், ஓம்பரண் கடந்த வீங்குபெருந் தானை என்பதனால் மிஞிலியின் தானைப் பெருக்கமும், முருகுறழ் முன்பொடு பொருது என்பதனால் எயினனது போர் வலியும் பெறப்பட்டன. களஞ் சிவப்பப் பொருது என்றமையால், பகைவர் தானையையெல்லாம் கொன்று பின் வீழ்ந்தமை பெற்றாம். 'களஞ் சிவப்ப வீழ்ந்தனன் எனக் கொண்டு, பகைவனது வேலால் தாக்குண்டு வீழ்ந்தான் என்றுரைத்தலுமாம். எயினன் புள்ளின் பாதுகாவலனாகலின், இவன் வீழ்ந்த போழ்து பறவைகளெல்லாம் இவன்மேல் ஞாயிற்றின் கதிர்படாது மறைத்தன என்பது, *'புள்ளிற்கு ஏம மாகிய பெரும்பெயர், வெள்ளத்

* அகம். கசஉ.

தானை அதிகற் (எயினற்) கொன்று' என்பதனாலும், *'வெளியன் வேண்மான் ஆஅய் எயினன்...மிஞிலியொடு, ஒண்பகல் உற்ற செருவில் புண்கூர்ந், தொள்வாள் மயங்கமர் வீழ்ந்தெனப், புள்ளொருங்கு அங்கண் விசும்பின் விளங்கு ஞாயிறு, ஒண்கதிர் தெறுமைச் சிறகரில் கோலி, நிழல் செய்து உழறல்' என்பதனாலும் அறியப்படும். 'அகவுநர் வேண்டின் வெங்கோட்டு, அண்ணல் யானை ஈயும் வண்மகிழ், வெளியன் வேண்மான் ஆஅய் எயினன்' (௨0௮) என்று இவன் கூறப் பெறுதலின் ஈண்டு 'வண்மை எயினன்' என்று காணப்படும் பாடமும் பொருத்த முடைத்தே.

எயினன் வீழ்ந்தென, உருப்பம் புதைய, புள்ளின் பெருந்தோடு ஆடி, மொசிந்து, துறைக்கண் இறுக்கும் புகார் நன்னாடு என்க. முக்கட் செல்வனது ஆலமுற்றத்திடத்தே தைஇய பொய்கை சூழ்ந்த பொழில் மகளிர் கைசெய் பாவைகளையுடைய துறையென்று இயையும். வளங்கெழு வேந்தரால் புரக்கப்படும் புகார் நன்னாடு என்க; ஆலமுற்றம் எனலுமாம். ஈண்டி, ஈண்டவெனத் திரிக்க. இறைவன் புகழே மெய்யாய புகழ் ஆகலானும், அதுவே உலகெங்கும் பரத்தற்குரியதாகலானும் 'ஞாலம் நாறும் நலங்கெழு நல்லிசை முக்கட் செல்வன்' என்றார். நான்மறை முக்கண் செல்வனது வாய்மொழியாம் என்பது, †'நன்றாய்ந்த நீணிமிர் சடை, முதுமுதல்வன் வாய்போகா, தொன்று புரிந்த ஈரிரண்டின், ஆறுணர்ந்த ஒரு முதுநூல்' என்றதனால் அறியப்படும். ஆலமுற்றம் - சிவபிரான் எழுந்தருளியுள்ளதோர் இடமாகும். இறுக்கும் புகார் எனவும் புரிசையினையும் நல் இல்லினையுமுடைய புகார் எனவும் தனித்தனி கூட்டுக. பகர்வார் என்பது பகாஅர் எனத் திரிந்துநின்றது. பண்டம் - பூவும் சாந்தும் முதலாயின. அணங்குசால் அரிவை - வருத்துதலையுடைய அரிவை என்றுதல், தெய்வம் போலும் அரிவை என்றுதல் கூறுதலுமாம். குன்றம் நன்னாட்டது; சூழ்தனையாயின் ஆண்டுச் சென்று என் நிலை உரையென விரித்துரைக்க.

---

182. குறிஞ்சி

[தோழி இரா வருவானைப் பகல் வா என்றது.]

பூங்கண் வேங்கைப் பொன்னிணர் ‡மிலைந்து
வாங்கமை நோன்சிலை எருத்தத் திரீஇத்
தீம்பழப் பலவின் சுளைவிளை தேறல்
விளை அம்பின் இளையரொடு மாந்தி

---

* அகம். ௨0௮. † புறம். ௧௬௬. (பாடம்) ‡ மலைந்து.

ஓட்டியல் பிழையா வயநாய் பிற்பட
வேட்டம் போகிய குறவன் காட்ட
குளவித் தண்புதல் குருதியொடு துயல்வர
முளவுமாத் தொலைச்சும் குன்ற நாட
அரவெறி யுருமோ டொன்றிக் கால்வீழ்த்து
உரவுமழை பொழிந்த பானாட் கங்குல்
தனியை வந்த வாறுநினைந் தல்கலும்
பனியொடு கலுழுமிவள் கண்ணே அதனால்
கடும்பகல் வருதல் வேண்டும் தெய்ய
அதிர்குரல் முதுகலை கறிமுறி முனைஇ
உயர்சிமை நெடுங்கோட் டுகள உக்க
கமழ்இதழ் அலரி தாஅய் வேலன்
வெறியயர் வியன்களம் கடுக்கும்
பெருவரை நண்ணிய சார லானே.

—கபிலர்.

(சொ - ள்.) ௧—௮. பூ கண் வேங்கை பொன் இணர் மிலைந்து- அழகிய இடத்தினையுடைய வேங்கை மரத்தின் பொன்போலும் பூங்கொத்துக்களைச் சூடி, வாங்கு அமை நோன்சிலை எருத்தத்து இரீஇ- வளைந்த மூங்கிலாலாய வலிய வில்லைத் தோளில் இருத்தி, தீம் பழப்பலவின் சுளைவிளை தேறல் - இனிய பலாப்பழத்தின் சுளையினின்றும் விளைந்த தேனை, வீளை அம்பின் இளையரொடு மாந்தி - சீழ்க்கையொலியுடன் செல்லும் அம்பினையுடைய ஏவலிளையருடன் நிறையக் குடித்து, ஓட்டு இயல் பிழையா வயநாய் பிற்பட - விலங்குகளைத் துரத்திப் பற்றும் இயல்பு தப்புதலில்லாத வலிய நாய் பின்னேவர, வேட்டம் போகிய குறவன் - வேட்டைக்குச் சென்ற குறவன், காட்ட குளவித் தண்புதல் குருதியொடு துயல்வர - காட்டிலுள்ள மல்லிகையாய தண்ணிய புதர் உதிரத்தொடு அசைந்திட, முழவு மா தொலைச்சும் குன்ற நாட - முள்ளம் பன்றியைக் கொன்று வீழ்த்தும் குன்றுகளையுடைய நாட்டின் தலைவனே!

௯—௧௨. உரவு மழை அரவு எறி உருமோடு ஒன்றி கால் வீழ்த்து- வலிய மேகம் அரவினை எறிந்து கொல்லும் இடியுடன் கூடிக் காலிறக்கங் கொண்டு, பொழிந்த பால் நாள் கங்குல் - நீரினைச் சொரிந்த அரைநாளாகிய இரவில், தனியை வந்த ஆறு நினைந்து - நீ தனியையாகி வந்த வழியேதத்தினை நினைந்து, அல்கலும் பனியொடு கலுழும் இவள் கண்ணே-இவள் கண் எப்பொழுதும் நீர் கொண்டு அழாநிற்கும்;

௧௨—௮. அதனால்-, அதிர் குரல் முதுகலை கறிமுறி முனைஇ - அதிரும் குரலினையுடைய முதிய முசுக்கலை மிளகின் தளிரை உண்டு

வெருத்து, உயர் சிமை நெடு கோட்டு உகள - உயர்ந்த உச்சியினை உடைய நீண்ட சிகரங்களிலே தாவுதலால், உக்க-உதிர்ந்த, கமழ் இதழ் அலரி தாஅய்-மணம் நாறும் இதழினையுடைய பூக்கள் பரந்து, வேலன் வெறி அயர் வியன் களம் கடுக்கும்-வேலன் வெறியாடும் பெரிய களத்தினை ஒக்கும், பெருவரை நண்ணிய சாரலான்-பெரிய மலையை அடுத்துள்ள சாரற்கண்ணே, கடும் பகல் வருதல் வேண்டும் - கடிய பகற்கண்ணே நீ வருதல் வேண்டும்.

(முடிபு) நாட! பானாட் கங்குல் தனியை வந்தவாறு நினைந்து, இவள்கண் அல்கலும் பனியொடு கலுழும்; அதனால் பெருவரை நண்ணிய சாரற்கண்ணே நீ கடும்பகல் வருதல்வேண்டும்.

(வி - ரை.) புதரிடத்தே பதுங்கியிருந்த முளவுமாவைக் கொல்லுதலின் புதல் குருதியொடு துயல்வருதலாயிற்று. இடியொலி கேட்டு அரவு உட்குமென்னும் வழக்குப்பற்றி அரவெறியுரும் எனப்பட்டது. உருமின் கடுமை கூறியபடியுமாம். உருமோடொன்றி என்றதனால் ஆற்றினது ஏதம் குறித்தாள். துணையொடும் வருதற்கரிய ஏதப்பாடுடைய வழியில் நள்ளிருளில் தனிமையாய்த் தன்பொருட்டு வருகின்றான் என்பதுணர்ந்து, இவள் ஆற்றாமை பெரிதுடையளாகின்றாள் என்பாள், 'தனியை வந்த ஆறு நினைந்தல்கலும் பனியொடு கலுழு மிவள் கண்ணே' என்றாள். கடும் பகல் - நண்பகல் என்றபடி. தெய்ய: அசை.

(உ - றை.) குறவன் முளவுமாவைக் கொல்ல அதற்கு இடமாகிய புதல் குருதியொடு அசைந்து தோன்றியதென்பது, தலைவன் தலைவியொடு களவொழுக்கத்தில் ஒழுக, அவ்வொழுக்கம் தலைவியின் மேனி வேறுபாட்டால் தாய் முதலியோருக்குப் புலனாயிற்று என்றவாறாம்.

---

183. பாலை

[தலைமகன் குறித்த பருவ வரவு கண்டு தலைமகள் தோழிக்குச் சொல்லியது.]

குவளை உண்கண் கலுழவுந் திருந்திழைத்
திதலை அல்குல் அவ்வரி வாடவும்
அத்தமார் அழுவம் நத்துறந் தருளார்
சென்றுசே ணிடையர் ஆயினும் நன்றும்
நீடலர் என்றி தோழி பாடான்று
பனித்துறைப் பெருங்கடல் *இறந்துநீர் பருகிக்

(பாடம்) * விரைந்துநீர்.

குவவுத்திரை அருந்து கொள்ளைய குடக்கேர்பு
வயவுப்பிடி யினத்தின் வயின்வயின் தோன்றி
இருங்கிளைக் கொண்மூ ஒருங்குடன் துவன்றிக்
காலை வந்தன்றால் காரே மாலைக்
குளிர்கொள் பிடவின் கூர்முகை அலரி
வண்டுவாய் திறக்கும் தண்டா நாற்றம்
கூதிர் அற்சிரத்து ஊதை தூற்றப்
பனியலைக் கலங்கிய நெஞ்சமொடு
வருந்துவம் அல்லமோ பிரிந்திசினோர் திறத்தே.

—கருவூர்க் கலிங்கத்தார்.

(சொ - ள்.) ௧—௬. தோழி-, குவளை உண்கண் கலுழவும் - எனது குவளை மலர்போன்ற மையுண்ட கண்கள் அழவும், திருந்து இழை திதலை அல்குல் அவ்வரி வாடவும்-திருந்திய அணியையும் தேமலையுமுடைய அல்குலின் அழகிய வரி வாட்டமுறவும், அருளார் நத் துறந்து-அருள் செய்யாராய் நம்மைப் பிரிந்து, அத்தம் ஆர் அழுவம் சென்ற - அருநெறிகளையுடைய பரந்த பாலையைக் கடந்து சென்ற, சேணிடையோர் ஆயினும் - சேய்மைக்கண் உள்ளார் ஆயினும், நன்றும் நீடலர் என்றி - மிகவும் தாழ்க்காது வருவர் என்கின்றாய்;

௬—௧0. இருங் கிளைக் கொண்மூ-பெரிய கூட்டமாய மேகங்கள், குவவு திரை - வளைந்த அலைகளையும், பனித்துறை - குளிர்ந்த துறையினையுமுடைய, பெருங்கடல் இறந்து - பெரிய கடலிலே மிக்குச் சென்று, நீர் பருகி அருந்து கொள்ளைய-நீரினைப் பருகியுண்ட மிகுதியையுடையனவாய், குடக்கு ஏர்பு-மேற்கே எழுந்து, வயவு பிடி இனத்தின்-சூலுற்ற பெண்யானைக் கூட்டம்போல, வயின் வயின் தோன்றி-இடந்தோறும் தோன்றி, பாடு ஆன்று-ஒலிமிக்கு, ஒருங்கு உடன் துவன்றி - பெய்தற்கு ஒருசேர நெருங்க, கார் காலை வந்தன்று-கார்காலம் காலையே வந்தது எனினும்;

௧0—௧௫. மாலை - மாலைப் பொழுதில், குளிர்கொள் பிடவின் கூர் முகை அலரி-குளிர்ச்சி பொருந்திய பிடாவினது கூரிய அரும்பு அலர்தற்குரியதனை, வண்டு வாய் திறக்கும் தண்டா நாற்றம்-வண்டு வாயினை நெகிழ்த்தலால் எழும் அமையாத மணத்தினை, கூதிர் அற்சிரத்து ஊதை தூற்ற - கூதிர் முன்பனிக் காலங்கட்கு உரிய வாடைக் காற்றானது தூற்றாநிற்க, பனி அலை கலங்கிய நெஞ்சமொடு - பனி அலைத்தலால் கலங்கிய நெஞ்சமுடன், பிரிந்திசினோர் திறத்து-பிரிந்து சென்றாராய தலைவரின் பொருட்டு, வருந்துவம் அல்லமோ - நாம் வருந்துதற்குரியோம் அல்லேமோ.

(முடிபு) தோழி! தலைவர் நத்துறந்து சேணிடையராயினும் நீடலர் என்றி; கார் காலை வந்தன்று; மாலை, பிடவினது அலரியின் நாற்றத்தை ஊதை தூற்ற பனி அலைக் கலங்கிய நெஞ்சமொடு நாம் வருந்துவம் அல்லமோ?

(வி - ரை.) இழை - மேகலை. நம் துறந்து — நத்துறந்து என விகாரமாயிற்று. துவன்றி-துவன்று எனத் திரிக்க. கார்ப் பருவம்வந்த தாகலின், தலைவர் நீடாது வந்துவிடுவர் என்று கூறி ஆற்றுவித்த தோழிக்கு, அவர் வருந்துணையும் நாம் எங்ஙனம் ஆற்றியிருக்கற்பாலம் என்பாள், 'கார்காலை வந்தது எனினும் மாலைகூதிர் அற்சிரத்து ஊதை தூற்றப் பனி அலைக் கலங்கிய நெஞ்சமொடு வருந்துவம் அல்லமோ' என்று தலைவி கூறினள். கார்காலை வந்ததெனினும் மாலை கூதிர் அற்சிரத்து ஊதை தூற்ற என்றது, அப் பருவங்கள் அடுத்தடுத்து விரைந்துவரும் என்பதை உணர்த்தியவாறு. கார்ப்பருவம் குறித்துச் சென்ற தலைவர், அப்பருவம் வந்தும் இன்னும் வந்திலராமையின், அடுத்துவரும் கூதிர் அற்சிரப் பருவங்களிற்றான் அவர் வருதல் எங்ஙனம் தெளியப்படும் என்றாளுமாயிற்று.

---

184. முல்லை

[தலைமகன் வினைவயிற் பிரிந்து வந்து எய்தியவிடத்துத் தோழி புல்லு மகிழ்வு உரைத்தது.]

கடவுட் கற்பொடு குடிக்குவிளக் காகிய
புதல்வற் பயந்த புகழ்மிகு சிறப்பின்
நன்ன ராட்டிக் கன்றியும் எனக்கும்
இனிதா கின்றால் சிறக்கநின் ஆயுள்
அருந்தொழில் முடித்த செம்மல் உள்ளமொடு
சுரும்பிமிர் மலர கானம் பிற்பட
வெண்பிடவு அவிழ்ந்த வீகமழ் புறவில்
குண்டைக் கோட்ட குறுமுள் கள்ளிப்
புன்தலை புதைத்த கொழுங்கொடி முல்லை
ஆர்கழல் புதுப்பூ உயிர்ப்பின் நீக்கித்
தெள்ளறல் பருகிய திரிமருப்பு எழிற்கலை
புள்ளியம் பிணையொடு வதியும் ஆங்கண்
*கோடுடைக் கையர் துளர்எறி வினைஞர்
அரிபல் ஆர்கையர் விளைமகிழ் தூங்கச்

(பாடம்) * கோடுடைத்தலை.

செல்கதிர் மழுகிய உருவ ஞாயிற்றுச்
செக்கர் வானஞ் சென்ற பொழுதில்
கற்பால் அருவியின் ஒலிக்கும் நற்றேர்த்
தார்மணி பலவுடன் இயம்பச்
சீர்மிகு குரிசில்நீ வந்துநின் றதுவே.

—மதுரை மருதன் இளநாகனார்.

(சொ - ள்.) ௧௧. சீர்மிகு குரிசில்-சிறப்புமிக்க தலைவனே!

ஓ—௧௧. வெண்பிடவு அவிழ்ந்த வீ கமழ் புறவில் - வெள்ளிய பிடவ மரத்தின் விரிந்த மலர் மணக்கும் முல்லை நிலத்தே, குண்டைக் கோட்ட குறுமுன் கள்ளி - குறிய கிளைகளையும் குறிய முட்களையு முடைய கள்ளியின், புன் தலை புதைத்த கொழு கொடி முல்லை - புல்லிய உச்சியினை மூடிய வளவிய முல்லைக்கொடியின், ஆர் கழல் புது பூ உயிர்ப்பின் நீக்கி - ஆர்க்குக் கழன்ற புதிய பூக்களை மூச்செறிதலால் ஒதுக்கி, தெள் அறல் பருகிய திரி மருப்பு எழில் கலை - தெளிந்த நீரைக் குடித்த முறுக்குண்ட கோட்டினையுடைய அழகிய மான் கலை, புள்ளி அம் பிணையொடு வதியும் ஆங்கண் - புள்ளிகளையுடைய அழகிய பிணையுடன் தங்கும் அவ்விடத்தே, கோடு உடைக் கையர் - கிளைக் கோட்டினையுடைய கையினராய், துளர் எறி வினைஞர் - களையினை வெட்டி எறியும் தொழிலையுடையவர்கள், அரியல் ஆர்கையர் வினை மகிழ் துங்க-கள்ளினை நிறைய உண்டு அதனாலாய களிப்பு மிக்குற, செல்கதிர் மழுகிய உருவ ஞாயிற்று - செல்லும் கதிர் வெம்மை குறைந்த செந்நிறத்தினதாய ஞாயிற்றையுடைய, செக்கர் வானம் சென்ற பொழுதில் - செவ்வானம் பரவிய காலத்தே, கல்பால் அருவியின் ஒலிக்கும் நற்றேர்-மலையின்பால் வீழும் அருவியைப்போல ஒலிக்கும் நல்ல தேரிலுள்ள, தார்மணி பல உடன் இயம்ப - மாலையாகிய மணிகள் பலவும் ஒருங்கே ஒலிக்க, சுரும்பு இமிர் மலர கானம் பிற்பட - வண்டுகள் ஒலிக்கும் மலர்களையுடைய காடு பின்னேபோக, அருந் தொழில் முடித்த செம்மல் உள்ளமொடு - அரிய வினையை முடித்த தலைமை மேவிய ஊக்கத்துடன், நீ வந்து நின்றது - நீ இங்கு வந்து நின்றது;

க—ச. கடவுட் கற்பொடு - தெய்வக் கற்புடன், குடிக்கு விளக்கு ஆகிய-குடிக்கு விளக்கம் ஆகிய, புதல்வன் பயந்த புகழ்மிகு சிறப்பின் நன்னாட்டிக்கு அன்றியும்-மகனைப் பெற்ற புகழ் மிக்க சிறப்பினை யுடைய நன்மையையுடைய தலைவிக்கே. யல்லாமலும், எனக்கும் இனிது ஆகின்று - எனக்கும் இனிமையைத் தருவதாகின்றது; நின் ஆபுள் சிறக்க - நின் ஆயுள் சிறந்திடுவதாக.

(முடிபு) சீர்மிகு குரிசில்! செக்கர் வானம் சென்ற பொழுதில், நற்றேர் மணி இயம்ப, கானம் பிற்பட, செம்மல் உள்ளமொடு நீ வந்து

கின்றது, நன்னராட்டிக்கு அன்றியும், எனக்கும் இனிதாகின்று; நின் ஆயுள் சிறக்க.

(வி - ரை.) கடவுட் கற்பு - தெய்வத்தன்மையையுடைய கற்பு. கற்புடை மகளிர் வேண்டுங்கால் மழையும் பெய்விப்பாராகலின் அவரது கற்பு தெய்வத்தன்மை யுடையதாயிற்று. *'கற்புக் கடம்பூண்ட இத்தெய்வமல்லது, பொற்புடைத் தெய்வம் யாம்கண் டிலமால், வானம் பொய்யாது வளம்பிழைப் பறியாது, நீணில வேந்தர் கொற்றம் சிதையாது, பத்தினிப் பெண்டி ரிருந்த நாடு' என்பதுங் காண்க. கடவுட் கற்பொடு புதல்வன் பயந்த சிறப்பினையுடைய நன்னராட்டி என்று இயையும். புதல்வன் குடியை விளக்கச் செய்பவன் ஆகலின், குடிக்கு விளக்காகிய புதல்வன் என்றாள். மனைவாழ்க்கை மகளிர்க்குக் கற்பொழுக்கமும், நன்மக்கட்பேறும் இன்றியமையாதன என்பது, †'மங்கலமென்ப மனைமாட்சி மற்றதன் நன்கலம் நன்மக்கட் பேறு' என்னும் பொய்யா மொழியானும் அறியப்படும். ‡'மனைக்கு விளக்கம் மடவார்' என்பதுபற்றிக் குடிக்கு விளக்காகிய என்பதனைத் தலைவிக்கு ஏற்றியுரைத்தலுமாம். நன்னராட்டி - மனைமாட்சியாய நன்மையெல்லாம் உடையவள். கணவன் கூறிய சொற்பிழையாது ஆற்றியிருந்த அருமைப்பாடு தோன்றத் தலைவி இங்ஙனம் சிறப்பித்துக் கூறப் பெற்றாள். பிரிவாற்றாது தலைவி வருந்துந்தோறும் தானும் உடன் வருந்தி, அரிதின் ஆற்றுவித்துக் கொண்டிருந்தவள் ஆகலின், நீ வந்து நின்றது எனக்கும் இனிதாகின்றது என்று தோழி கூறினள். பிரிந்த தலைவன் மீண்டு வந்ததேயன்றி அவன் அரிய வினையை முடித்த பெருமிதத்துடன் தேரின் மணி ஒலிக்கவந்து நின்ற தோற்றம், தலைவனது ஆக்கத்தை விரும்பும் தலைவிக்குக் கழிபேரின்பம் பயப்பதாகலின், செம்மலுள்ளமொடு மணி இயம்ப நீ வந்து நின்றது இனிதாகின்று என்றாள். தலைவன் தேர் வந்த விரைவு தோன்றக் கானம் பிற்பட என்றாள். செல்கதிர் - மேற்றிசைக்கட் சென்று மறையும் கதிர். துளர் - களை. தார் மணி-மாலையாகக் கோத்த மணிகள்.

தலைவன் போந்த காட்டின்கண் முல்லை, கள்ளியின் புன்தலையை மறைத்திருப்பது, தலைவி தன் பிரிவாலுளதாகிய வருத்தம் புறந்தோன்றாமல் கற்பினால் ஆற்றியிருந்தலையும், மறைத்த பூவை உயிர்ப்பினால் நீக்கி நீரினைப் பருகிய கலை பிணையொடு வதிதல், தான் தலைவியின் மெலிவினை நீக்கி அவளுடன் இன்புற்று வதியப் போவதையும் அவனுக்குப் புலப்படுத்தி மனவெழுச்சி தருவன என்க.

---

* சிலப். ௧௫, ௧௪௩-௫௦. † குறள். ௬௦. ‡ நான்மணிக். ௧0௫.

185. பாலை

[பிரிவிடை வேறுபட்ட தலைமகள் தோழிக்குச் சொல்லியது.]

எல்வளை ஞெகிழச் சாஅய் ஆயிழை
நல்லெழிற் பணைத்தோள் இருங்கவின் அழியப்
பெருங்கை அற்ற நெஞ்சமொடு நத்துறந்து
இரும்பின் இன்னுயிர் உடையோர் போல
*வலித்து வல்லினர் காதலர் வாடல்
ஒலிகழை நிவந்த நெல்லுடை நெடுவெதிர்
கலிகொள் மள்ளர்வில் விசையின் உடையப்
பைதற வெம்பிய கல்பொரு பரப்பின்
வேனில் அத்தத் தாங்கண் வானுலந்து
அருவி ஆன்ற உயர்சிமை மருங்கில்
பெருவிழா விளக்கம் போலப் பலவுடன்
இலைஇல மலர்ந்த இலவமொடு
நிலையுயர் பிறங்கல் மலைஇறந் தோரே.

—பாலைபாடிய பெருங்கடுங்கோ.

(சொ - ள்.) ரு—கங. வாடல் ஒலி கழை நிவந்த நெல் உடை நெடுவெதிர்-வாடுதலுற்ற ஒலிக்கின்ற மேல்நோக்கி எழுந்த தண்டினையும் நெற்களையுமுடைய நீண்ட மூங்கில், கலிகொள் மள்ளர் வில் விசையின் உடைய - ஆரவாரம் கொண்ட மறவரது வில்லினின் றெழும் அம்பின் விசையாற் பிளர்ந்திட, பைது அற வெம்பிய கல் பொரு பரப்பின்-பசுமை அறக் காய்ந்த பருக்கைகள் பொருகின்ற இடத்தினையுடைய, வேனில் அத்தத்து ஆங்கண் - வேனிலான் உழந்த காட்டிடத்தே, வான் உலந்து அருவி ஆன்ற உயர் சிமை மருங்கின் - மேகம் பெய்யா தொழிதலின் அருவிகள் இல்லையாகிய உயர்ந்த சிகரங்களில், பெருவிழா விளக்கம்போல - பெரிய கார்த்திகை விழாவிற்கு இடும் விளக்குகளைப் போல, பல உடன் இலை இல மலர்ந்த இலவமொடு - இலையே இல்லனவாய்ப் பலவும் ஒருங்கே மலர்ந்த இலவ மரங்களைக் கொண்டு, நிலை உயர் பிறங்கல் மலை இறந்தோர் - உயர்ந்த நிலையையுடைய பக்க மலையினையுடைய பெருமலையினைத் தாண்டிச் சென்றோராய நம் தலைவர்;

க—ரு. ஆய் இழை நல் எழில் பணைத்தோள் - ஆய்ந்தெடுத்த அணிகளையும் நல்ல அழகினையுமுடைய மூங்கில்போலும் நமது தோள், எல்வளை ஞெகிழச் சாஅய் - ஒளிபொருந்திய வளை நெகிழும்படி

(பாடம்) * வலிது.

மெலிந்து, இருக்கவின் அழிய - பெரிய அழகு கெடுமாறு, பெருமை அற்ற நெஞ்சமொடு நம் துறந்து - பெரிய செயலற்ற நெஞ்சமொடிருக்கும் நம்மைக் கைவிட்டு, இரும்பின் இன் உயிர் உடையோர்போல - இரும்பினால் இயன்ற இனிய உயிரை உடையார்போல, வலித்து வல்லினர் - வலித்திருக்க வன்மையுடையோராயினர்.

(முடிபு) மலையிறந்தோர் ஆய நம் காதலர், நம் பணைத்தோள் சாஅய்க் கவின்அழிய நத்துறந்து இரும்பின் இன்னுயிர் உடையோர் போல வலித்து வல்லினர்.

(வி – ரை.) நெஞ்சமொடு இருக்க என ஒருசொல் விரித்துரைக்க. தாம் எய்தும் துன்பம் கருதி இரங்கித் தலைவர் வாராதிருத்தலின் இரும்பின் இன்னுயிர் உடையோர்போல வலித்து வல்லினர் என்றாள். நம்மை இரும்பாலியன்ற உயிருடையார்போலக் கருதி வாராதிருக்கின்றார் என்றுரைத்தலுமாம்.

---

186. மருதம்

[தலைமகட்குப் பாங்காயினார் கேட்ப இல்லிடைப் பரத்தை சொல்லி நெருங்கியது.]

வானம் வேண்டா வறனில் வாழ்க்கை
நோன்ஞாண் வினைஞர் கோளறிந்து ஈர்க்கும்
மீன்முதிர் இலஞ்சிக் கலித்த தாமரை
நீர்மிசை நிவந்த நெடுந்தாள் அகலிலை
*இருங்கயம் துளங்கக் காலுறு தோறும்
பெருங்களிற்றுச் செவியின் அலைக்கும் ஊரனொடு
எழுந்த கௌவையோ பெரிதே நட்பே
கொழுங்கோல் வேழத்துப் புணைதுணை யாகப்
புனலாடு கேண்மை அனைத்தே அவனே
ஒண்டொடி மகளிர் †பண்டையாழ் பாட
ஈர்ந்தண் முழவின் எறிகுணில் விதிர்ப்பத்
தண்நறுஞ் சாந்தம் கமழும் தோள்மணந்து
இன்னும் பிறள்வயி னானே மனையோள்
எம்மொடு புலக்கும் என்ப ‡வெல்வேல்
மாரி அம்பின் மழைத்தோல் பழையன்
காவிரி வைப்பிற் போஒர் அன்னஎன்

(பாடம்) *இருங்கயந் தயங்க. †மண்டைப் பாழ்பட. ‡வெல்புரி.

செறிவளை யுடைத்தலோ இலனே *உரிதினின்
யாந்தன் பகையேம் அல்லேம் சேர்ந்தோர்
திருநுதல் பசப்ப நீங்கும்
கொழுநனுஞ் சாலுந்தன் உடனுறை பகையே.

—பரணர்.

(சொ - ள்.) ௧—௭. வானம் வேண்டா வறன் இல் வாழ்க்கை - மழைபெய்தலை வேண்டாத வறுமையுறுதல் இல்லாத வாழ்க்கையினை யுடைய, நோன் ஞாண் வினைஞர் - வலிய தூண்டிற் கயிற்றினையுடைய மீன் பிடிப்போர், கோள் அறிந்து ஈர்க்கும் - (மீன் இரை கோத்த முள்ளினைப்) பற்றியது உணர்ந்து இழுக்கும், மீன் முதிர் இலஞ்சி - மீன் மிக்க நீர்நிலையில், கலித்த தாமரை நீர் மிசை நிவந்த நெடு தாள் அகல் இலை - தழைத்த தாமரையின் நீர்மீது உயர்ந்த நெடிய காம்பினையுடைய அகன்ற இலையை, இருகயம் துளங்க கால் உறுதோறும் - பெரிய குளம் அலையக் காற்று அடிக்குந்தோறும், பெரு களிற்றுச் செவியின் அலைக்கும் ஊரனொடு - பெரிய களிற்றியானையின் காதுபோல அசைவிக்கும் ஊரனால், எழுந்த கௌவையோ பெரிதே - எனக்கு உண்டாய அலரோ பெரிதாகும் ஆயினும்;

௭—௯. நட்பு - அவன் நட்போ, கொழு கோல் வேழத்துப் புணை துணை ஆக - செழித்த கொறுக்கச்சியாலாய புணையினைத் துணையாகக் கொண்டு, புனல் ஆடு கேண்மை அனைத்தே - புனல் விளையாடும் நட்பின் அளவினதே;

௯—௧௩. அவனே - அத் தலைவனோ, ஒள் தொடி மகளிர் பண்டையாழ் பாட - ஒள்ளிய தொடியினையுடைய மகளிர் பழைய யாழினைப் பாடவும், ஈர் தண் முழவின் எறி குணில் விதிர்ப்ப - மிக்க தண்மை வாய்ந்த முழவினைக் குறுந்தடியால் அடிக்கவும், தண் நறும் சாந்தம் கமழும் தோள் மணந்து - தண்ணிய நறிய சந்தனம் நாறும் தோளைக் கூடி, இன்னும் பிறன் வயினான் - இன்னும் பிறரிடத்தேயுள்ளான் ஆவன்; அங்ஙனமாகவும்;

௧௩—௪. மனையோள் எம்மொடு புலக்கும் என்ப - அவன் மனைவி எம்முடன் வெறுக்கின்றாள் என்பர்;

௧௪—௭. வென் வேல் மாரி அம்பின் மழைத் தோல் பழையன் - வெற்றி பொருந்திய வேலையும் மழைத்துளி போன்ற மிக்க அம்பினையும் மேகம்போலும் கரிய கேடகத்தினையும் உடைய பழையன் என்பானது, காவிரி வைப்பின் போஒர் அன்ன - காவிரி நாட்டிலுள்ள போர் என்னும் ஊரினை ஒத்த, என் செறி வளை உரிதினின் உடைத்தலோ

(பாடம்) * உரிதினினயர்ந்த; உரிதினினூர்ந்த.

இலன்-எனது செருக்கிய வளைகளை உரிமையால் உடைத்தலொன்றுஞ் செய்திலேன்; எனவே,

கஅ—உ௦. யாம் தன் பகையேம் அல்லேம் - யாம் அவனுக்குப் பகையாவேம் அல்லேம், சேர்ந்தோர் திருநுதல் பசப்ப நீங்கும் - தன்னைச் சேர்ந்தோரது அழகிய நெற்றி பசந்திட அவர்களை ஒழித்து நீங்கும், கொழுநனும் - அவள் கணவன், தன் உடன் உறைபகை சாலும் - தன்னுடன் கூடியுறையும் பகைவனுதற்குப் பொருந்துவானுவன்.

(முடிபு) ஊரனொடு எனக்கு எழுந்த கௌவையோ பெரிதே; நட்பே வேழத்துப் புணை துணையாகப் புனலாடு கேண்மை அனைத்தே; அவனே இன்னும் பிறள் வயினானே; மனையோள் எம்மொடு புலக்கும் என்ப; செறிவளை உடைத்தலோ இலேன்; யாம் தன் பகையேம் அல்லேம்; கொழுநன் தன் உடனுறை பகை சாலும்.

(வி - ரை.) மீன் பிடிக்கும் வினைஞர் உழவினால் நெல் முதலியன விளைத்தல் இலராகலின் அவரது வாழ்க்கை வானம் வேண்டா வாழ்க்கை எனவும், அன்னராயினும் அவர் பிடிக்கும் மீனே அவருக்குப் பெரியதொரு வருவாயாகலின், வறனில் வாழ்க்கை எனவும் கூறப்பட்டது. நோன்ஞாண் - தூண்டிலின் வலிய கயிறு; அதுகொண்டு வினை செய்தலின் அவர் நோன்ஞாண் வினைஞர் எனப்பட்டார். கோள்-இரும்பிற்கோத்த இரையைப் பற்றுகை. இனி, வலிய கயிற்றையுடைய வலையெனக் கொண்டு, அஃது அகப்படுத்தமை அறிந்து ஈர்க்கும் என்றுரைத்தலுமாம். புணை துணையாக நீராடுவார் நீராட்டுமுடிந்தவுடன் அப் புணையை விடுத்து அகறல்போல, தலைவன் என்பால் வந்து அகன்றனன் என்பாள், நட்புகேண்மை அனைத்து என்றாள். கேண்மை-புணையினிடத்துளதாய கேண்மை; குறிப்பு மொழி. இனி, நட்பு ஒரு நாள் புணை துணையாகப் புனலாடிய அவ்வளவிற்றே என்றுரைத்தலுமாம்; *"நீ வெய்யோளொடு வேழவெண்புணை தழீஇ.....செருவாடினை புனலே" என முன் வந்தமையுங் காண்க. ஒண்டொடி மகளிர் - விறலியர்; பரத்தையருமாம். தலைவன் சேரிப்பரத்தையொடு கூடி யொழுகுதலைப் பரத்தையர் சேரியினின்றெழும் யாழொலியும் முழவோசையுமே யாவருமறியப் புலப்படுத்தும்; அங்ஙனமாகவும் தலைவி எம்மொடு புலத்தல் பொருந்தாதென்பது தோன்ற, பாடவிதிர்ப்பத் தோன் மணந்து பிறள்வயினான் எனவும், எம்மொடு புலக்குமென்ப எனவும் இற்பரத்தை கூறினாளென்க. மற்றும், தலைவன் தலைவியையும் என்னையும் கையகன்று சேரிப்பரத்தையர்மாட்டு மருவி யொழுகுதலால் எனக்குளதாய வெறுப்பினை என் வளையை உடைத்துக் காட்டிற்றிலேன்; அதுகொண்டே அவன் என்னுடன் உளனாகத் தலைவி கருதினாள்போலு மென்பாள், "செறிவளை புடைத்தலோ இலனே"

* அகம். ௬.

என்றாள்; குலமகளிரல்லாத அல்வற் பெண்டிர் முதலாயினோர் வெறுப்பினால் வளையுடைத்தல் செய்வரென்பது, * "என்னொடு திரியேனாயின்......உடைகவென், நேரிறை முன்கை வீங்கிய வளையே" என்பதனாலறிக. இலன்: அன் விகுதி தன்மைக்கண் வந்தது. கொழுநனும்: உம்: அசை நிலை. இனி, சேரிப்பரத்தையரையும் விடுத்துத் தலைவியுடன் சென்று உறைவானென்பது தோன்றத் 'தன் உடனுறை பகை' என்றாள்; உடனுறைந்த கொழுநன் பகையாதல் சாலும் எனக் கூட்டியுரைத்தலுமாம்.

---

187. பாலை

[பிரிவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் சொல்லியது. தலைமகன் பிரிவின்கண் தலைமகட்குத் தோழி சொல்லியதூஉமாம்.]

தோள்புலம் பகலத் துஞ்சி நம்மொடு
நாள்பல நீடிய கரந்துறை புணர்ச்சி
நாணுடை மையின் நீக்கிச் சேய்நாட்டு
அரும்பொருள் வலித்த நெஞ்சமோ டேகி
நம்முயர்வு உள்ளினர் காதலர் கறுத்தோர்
தெம்முனை சிதைத்த கடும்பரிப் புரவி
வார்கழல் பொலிந்த வன்கண் மழவர்
பூந்தொடை விழவின் தலைநாள் அன்ன
தருமணல் ஞெமிரிய திருநகர் முற்றம்
புலம்புறுங் கொல்லோ தோழி †சேணோங்கு
அலந்தலை ஞெமையத் தாளில் ஆங்கண்
‡கல்சேர்பு இருந்த சில்குடிப் பாக்கத்து
எல்விருந்து அயர ஏமத்து அல்கி
மனையுறை கோழி அணல்தாழ்பு அன்ன
கவையொண் தளிர கருங்கால் யாஅத்து
§வேனில் வெற்பில் கானங் காய
முனையெழுந் தோடிய $கெடுநாட் டாரிடைப்
பனைவெளிறு அருந்து பைங்கண் யானை
ஒண்சுடர் முதிரா ¶இளங்கதிர் அமையத்துக்

---

* அகம். ௩௩௬. (பாடம்) † சேய்நாட் டலந்தலை. ‡ கலைசேர்பு இருந்த. § வேனில் வைப்பிற் கானிலங் காய. $ நெடுநாட்டாரிடை. ¶ விலங்கு கதிர்.

கண்படு பாயல் கையொடுங்கு அசைநிலை
வாள்வாய்ச் சுறவின் பனித்துறை நீந்தி
நாள்வேட்டு எழுந்த நயனில் பரதவர்
வைகுகடல் அம்பியில் தோன்றும்
மைபடு மாமலை விலங்கிய சுரனே.

—மாமூலனார்.

(சொ - ள்.) ௧௦. தோழி—,

௫. காதலர் - நம் காதலர்;

௧—௪. தோள் புலம்பு அகல நம்மொடு துஞ்சி - நமது தோள் தனிமையகல நம்முடன் துயின்று, நாள் பல நீடிய கரந்து உறை புணர்ச்சி - பலநாள் நீட்டித்த களவுப்புணர்ச்சியை, நாண் உடைமை பின் நீங்கி - வினையின்றி யிருத்தற்கு நாணுதல் உடைமையானே நீங்கி, சேய் நாட்டு அரும் பொருள் வலித்த நெஞ்சமொடு - தூர நாட்டிலே அரிய பொருளை ஈட்டத் துணிந்த நெஞ்சத்துடன்;

௧௪—௨௪. மனை உறை கோழி - மனையில் வதியுங் கோழியின், அணல் தாழ்பு அன்ன - தொங்குகின்ற தாடியை யொத்த, கவை ஒண் தளிர கருங்கால் யாஅத்து - கவர்ந்த ஒள்ளிய தளிரினையும் கரியஅடியினையும் உடைய யா மரங்களையுடைய, வேனில் வெற்பில் கானம் காய - வேனில் வெப்பம் வாய்ந்த மலையை யடுத்த காடு காய்ந்திட, முனை எழுந்து ஓடிய கெடு நாட்டு ஆர் இடை - நாட்டரணிலுள்ளார் குடியெழுந்தோடிய பாழ் நாட்டின் அரிய இடத்தே, பனை வெளிறு அருந்து பைங்கண் யானை - பனங்குருத்தைத் தின்னும் பசிய கண்ணினையுடைய யானை, ஒள் சுடர் முதிரா இளம் கதிர் அமையத்து - ஒள்ளிய சுடர் முதிராத இளைய ஞாயிற்றையுடைய காலையிலே, கண்படு பாயல் கை ஒடுங்கு அசை நிலை - துயிலுமிடத்தே செயலொடுங்கி அசைந்து கொண்டிருக்கும் நிலையானது, வாள் வாய்ச் சுறவின் பனி துறை நீந்தி - வாள்போலும் வாயினையுடைய சுறா மீன்களுள்ள குளிர்ந்த துறைகளை நீந்திச் சென்று, நாள் வேட்டு எழுந்த நயன் இல் பரதவர் - நாட்காலத்தே மீன் வேட்டை குறித்து எழுந்த நயமற்ற பரதவருடைய, வைகு கடல் அம்பியில் தோன்றும் - கடலிடத்தே பொருந்திய தோணி போலத் தோன்றுகிற்கும், மை படு மா மலை விலங்கிய சுரன் - மேகம் பொருந்திய பெரிய மலை குறுக்கிட்ட பாலையின் கண்ணே;

௭—௯. சேண் ஓங்கு அலர்தலை ஞெமையத்து - நெடுந்தூரம் உயர்ந்த காய்ந்த உச்சியினையுடைய ஞெமை மரங்களையுடைய, ஆள் இல் ஆங்கண் - ஆள் வழக்கற்ற இடங்களில், கல் சேர்பு இருந்த சில் குடி பாக்கத்து - மலையைச் சார்ந்திருந்த சில குடிகளையுடைய பாக்கத்தே, எல் விருந்து அயர - இரவில் விருந்து செய்ய, ஏமத்து அல்கி - பாதுகாவலாகத் தங்கி;

௨—௫. ஏகி - தொடர்ந்து சென்று, நம் உயர்வு உள்ளினர்-நமது உயர்ச்சியைக் கருதினர்; (அதனால்).

௫—௧0. கறுத்தோர் - சினங்கெழுந்த பகைவரது, தெவ்முனை சிதைத்த கடும்பரிப் புரவி - பகைப்புலம் தொலைத்த கடிய செலவினை புடைய குதிரைகளையுடைய, வார்கழல் பொலிந்த - நீண்ட கழலாற் பொலிவுற்ற, வன்கண் மழவர் - தறுகண்மையினை புடைய மழவர் செய்யும், பூந்தொடை விழவின் தலைநாள் அன்ன - பூந்தொடை விழா என்னும் விழாவின் முதல்நாளை யொத்த பொலிவினையுடைய, தரு மணல் ஞெமிரிய திருநகர் முற்றம் - கொணர்ந்திட்ட மணல் பரந்த அழகிய மனையின் முற்றம், புலம்புறும் கொல்லோ - தனிமை யுறுமோ?

(முடிபு.) தோழி! காதலர், நம்மொடு நீடிய கரந்துறை புணர்ச் சியை நாணுடைமையின் நீங்கி, அரும்பொருள் வலித்தநெஞ்சமொடு, மலை விலங்கிய சுரத்தின்கண்ணே, பக்கத்தே எல்விருந்து அயர ஏமத்து அல்கி, ஏகி, நம் உயர்வு உள்ளினர்; அதனால் திருநகர் முற்றம் புலம்புறுங் கொல்லோ?

(வி - ரை.) தோள் புலம்பு அகலத் துஞ்சி என்றது, தோளிலே துயின்று என்றபடி. நாணுடைமை - போகம் வேண்டி ஆடவர்க்கு உயிராகிய வினையை யொழிந்திருத்தற்கு நாணுதலுடைமை. சேய் நாட்டு அரும் பொருள்-சேய்நாட்டிற் சென்று தேடும் அரிய பொருள். நம் உயர்வு - வறியோர்க்கு அளித்தல், விருந்து புறந்தருதல் முதலிய இல்லறம் புரிந்து நாம் மேம்படுதல்; அதற்குப் பொருள் இன்றியமையா தாகலின், பொருள்வயிற் பிரிந்தாரை நம் உயர்வு உள்ளினர் என்றாள். ஏகி உள்ளினர் என்பதனை உள்ளி ஏகினர் என மாறுக. பூந்தொடை விழவு, படைக்கலம் பயின்ற இளைய வீரரை அரங்கேற்றுவிக்கும் விழா. தொடை - அம்பு தொடுத்தல். தலை நாளன்ன பொலிவினையுடைய முற்றமென விரித்துரைக்க. தலைவர் பிரிவிற்குள தாம் வருத்தத்தை முற்றம் தனிமை யுறுதலால் வருந்துவாள்போற் கூறினாள் அலந்தலை - அலந்த தலை; விகாரம். ஞெமையத்து; அத்து, சாரியை. சுரத்தைக் கடந்து ஏகுங்கால், பாக்கத்து எல்விருந்தயர ஏமத்து அல்கி ஏகுவார் என்றாள். கானங்கோழியின் வேறுபடுக்க, மனையுறை கோழி எனப் பட்டது. முனை - காட்டரண்; வேட்டுவர் ஊர். கெடு நாடு-வாழ்வா ரொழிந்து பாழ்பட்ட நாடு. வாள்வாய்ச் சுறவின் பனித்துறை நீந்தி என்றது, பரதவரின் அஞ்சாமையைப் புலப்படுத்தியவாறும். பனை வெளிறு அருந்து என்றது, வேறு உணவின்மை குறித்தபடியாம். யானை அசை நிலை கடல் அம்பியிற் றோன்றும் சுரம் எனவும், மலை விலங்கிய சுரம் எனவும் தனித்தனி இயையும்.

188. குறிஞ்சி

[இரவில் சிறைப்புறமாகத் தோழி சொல்லியது.]

பெருங்கடல் முகந்த இருங்கிளைக் கொண்மூ
இருண்டுயர் விசும்பின் வலனேர்பு வளைஇப்
போர்ப்புறு முரசின் இரங்கி முறைபுரிந்து
அறனெறி பிழையாத் திறனறி மன்னர்
அருஞ்சமத் தெதிர்ந்த பெருஞ்செய் ஆடவர்
கழித்தெறி வாளின் நளிப்பன விளங்கும்
மின்னுடைக் கருவிலை ஆகி நாளும்
கொன்னே செய்தியோ அரவம் பொன்னென
மலர்ந்த வேங்கை மலிதொடர் அடைச்சிப்
பொலிந்த ஆயமொடு காண்டக இயலித்
தழலை வாங்கியும் தட்டை *யோப்பியும்
அழலேர் செயலை அந்தழை †அசைஇயும்
குறமகள் காக்கும் ஏனல்
புறமும் தருதியோ வாழிய மழையே.

—வீரை வெளியன் தித்தனார்.

(சொ - ள்.) க. பெருங்கடல் முகந்த இரு கிளை கொண்மூ - பெரிய கடல் நீரை முகந்துகொண்ட பெரிய கூட்டமாகிய மேகமே நீதான்;

உ—அ. இருண்டு - இருட்சியுற்று, உயர் விசும்பின் வலன் ஏர்பு வளைஇ - உயர்ந்த வானில் வலமாக எழுந்து சுற்றி, போர்ப்பு உறு முரசின் இரங்கி - தோற்போர்வையுற்ற முரசுபோல முழங்கி, முறை புரிந்து அறன் நெறி பிழையாத் திறன் அறி மன்னர் - செங்கோன்மை மேற்கொண்டு அறநெறி வழுவாத செய்யுள் கூற பாட்டினை அறிந்த மன்னரது, அரும் சமத்து எதிர்ந்த பெரும் செய் ஆடவர் - அரிய போரில் மாற்றருடன் எதிர்த்தும் போர் செய்யும் பேராண்மைச் செய்கையையுடைய வீரர்கள், கழித்து எறி வாளின் நளிப்பன விளங்கும் - உறையினின்றும் உருவி வீசும் வாளைப் போலச் செறிவனவாய் விளங்கும், மின் உடைக் கருவிலை ஆகி - மின்னின் தொகுதியை உடையை ஆகி, நாளும் அரவம் கொன்னே செய்தியோ - நாடோறும் பயனின்றி ஆரவாரம் செய்து ஒழிதியோ? அன்றி;

(பாடம்) * யோச்சியும். † தைஇயும்.

அ—கச. பொன் என மலர்ந்த வேங்கை மலி தொடர் அடைச்சி - பொன்போல மலர்ந்த வேங்கைப் பூக்களாலாய நிறைந்த மாலையைத் தரித்து, பொலிந்த ஆயமொடு காண்தக இயலி - பொலிவுற்ற ஆயத்தாருடன் அழகு பொருந்த நடந்து, தழலை வாங்கியும் தட்டை ஒப்பியும் - தழலினைச் சுற்றியும் தட்டையினைத் தட்டியும், அழல் ஏர் செயலை அம்தழை அசைஇயும் - தீயின் கொழுந்தினை ஒத்த அசோகினது அழகிய தழையாலாய உடையினை யுடுத்தும், குறமகள் காக்கும் - குறமகளாய எம் தலைவி காக்கும், ஏனல் புறமும் மழை தருதியோ - தினையினிடத்து மழையும் பொழிவையோ! வாழிய.

(முடிபு.) கொண்மூவே! நீதான் இருண்டு ஏர்பு வளைஇ இரங்கி விளங்கும் மின்னுடைக் கருவியை ஆகி, அரவம் கொன்னே செய்தியோ; குறமகள் காக்கும் ஏனல்புறம் மழையும் தருதியோ வாழிய!

(வி - ரை.) முறை புரிந்து பிழையா மன்னர் எனவும், திறன் அறி மன்னர் எனவும் தனித்தனி கூட்டுக. இறைமாட்சி யாவும் அடங்கத் திறன் அறி மன்னர் என்றனள். சமம் - அம் மன்னர் தம் மாற்றாருடன் செய்யும் போர். பெருஞ் செய் ஆடவர் - வஞ்சினங் கூறிப் போர் செய்யும் பேராண்மைச் செய்கையுடைய வீரர். மலர்ந்த வேங்கை மலிதொடர் அடைச்சி என்றதனால் தினை விளையுங் காலம் பெறப்பட்டது. தழல் - பிரம்பு போல்வனவற்றாற் பின்னிச் சுற்றி ஒலியுண்டாக்கிக் கிளியை ஓட்டுவதோர் கருவி. தட்டை - மூங்கிற் றுண்டைப் பிளந்து தட்டி ஒலியுண்டாக்கிக் கிளி கடிவதொரு கருவி. இவற்றைத் *'தழலும் தட்டையுங் குளிரும் பிறவும், கிளிகடி மரபின ஊழூழ் வாங்கி' என்பதன் உரையால் அறிக. தழை - தழை உடை. ஏனல் புறம் மழையுந் தருதியோ என உம்மையை மாறுக.

உம்மையை அசையாக்கியும் மழையை விளியாக்கியும் ஏனலைப் புறந்தருதியோ என்றுரைத்தலுமாம். இதற்குக் கொண்மூ ஆகிய மழையே என்க. இரவிற் சிறைப்புறமாகவுள்ள தலைவனைத் தோழி இங்ஙனம் மழையாகக்கொண்டு குறிப்பினாலே நீ இங்ஙனம் வந்து ஒழுகுதலாற் பயனின்றி அலர் விளைக்கின்றாயோ? அன்றி வரைந்துகொள்வையோ? எனக் கூறி வரைவு கடாயினள் என்க.

(மே - ள்.) †'உடனுறை உவமஞ் சுட்டுநகை சிறப்பெனக், கெடலரு மரபின் உள்ளுறை ஐந்தே' என்னுஞ் சூத்திரத்துச் சுட்டு என்னும் உள்ளுறைக்கு இச்செய்யுளை எடுத்துக் காட்டி, 'இதனுள் கொன்னே செய்தியோ அரவம் என்பதனாற் பயனின்றி அலர் விளைத்தியோ எனவும் கூறி, ஏனற் புறமும் தருதியோ என்பதனால், வரைந்து கொள்வையோ எனவும் கூறித் தலைமகனை மழைமேல் வைத்துக் கூறலின் சுட்டாயிற்று. கொன்னே செய்தியோ என்றதனால் வழுவாயினும் வரைதல் வேட்கையாற் கூறினமையின் அமைந்தது' என்பர், நச்.

---

* குறிஞ்சிப். ௪௩-௪௪. † தொல். பொருளியல். ௪௮.

189. பாலை

[மகட் போக்கிய செவிலி சொல்லியது.]

பசும்பழப் பலவின் கானம் வெம்பி
விசும்புகண் அழிய வேனில் நீடிக்
கயங்கண் அற்ற கல்லோங்கு வைப்பின்
நாறுயிர் மடப்பிடி தழீஇ வேறுநாட்டு
விழவுப்படர் மள்ளரின் முழவெடுத் துயரிக்
களிறதர்ப் படுத்த கல்லுயர் கவாஅன்
வெவ்வரை அத்தஞ் சுட்டிப் பையென
வயலையம் பிணையல் வார்ந்த கவாஅன்
திதலை அல்குற் குறுமகள் அவனொடு
சென்று பிறளாகிய அளவை என்றும்
படர்மலி *எவ்வமொடு மாதிரந் துழைஇ
மனைமருண் டிருந்த என்னினும் நனைமகிழ்
நன்னராளர் கூடுகொள் இன்னியம்
தேரூர் தெருவில் ததும்பும்
ஊரிழந் தன்றுதன் வீழ்வுறு பொருளே. —கயமனார்.

(சொ - ள்.) ௧—௭. பசு பழம் பலவின் கானம் வெம்பி - செவ்வி வாய்ந்த பழத்தினைக்கொண்ட பலாமரங்களையுடைய காடு வெதும்ப, விசும்பு கண் அழிய வேனில் நீடி - மேகம் வானிடத்தினின் றொழிதலின் வேனில் வெப்பம் மிக, கயம் கண் அற்ற கல் ஓங்கு வைப்பின் - குளங்கள் தம்மிடத்தே நீரற்றிருக்கும் கற்கள் உயர்ந்த இடங்களில், நாறு உயிர் மட பிடி தழீஇ - பெருமூச்சுத் தோன்றும் இளைய பிடியைத் தழுவி, களிறு - களிறுகள், முழவு எடுத்து உயரி வேறு நாட்டு விழவுப் படர்மள்ளரின் - தங்கள் முழவுகளை எடுத்து உயர்த்துக்கொண்டு வேற்றுநாட்டில் நிகழும் விழாவினை நினைத்துச் செல்லும் மள்ளர்களைப்போல, அதர்ப்படுத்த - நெறிப்படுத்திச்சென்ற, கல் உயர் - கற்கள் உயர்ந்த, வெவ்வரை கவாஅன் அத்தம் சுட்டி - கொடிய பக்க மலையைச் சார்ந்த சுரத்தினைச் செல்லத் துணிந்து;

௮—௧௫. வயலை அம்பிணையல் வார்ந்த கவாஅன் - வயலைக் கொடியாலாகிய அழகிய தழையுடை தாழ்ந்த தொடையினையும், திதலை அல்குல் - தேமல் படர்ந்த அல்குலினையும் உடைய, குறுமகள் - இளையளாய என் மகள், பையென அவனொடு சென்று - மெல்லெனத் தன்தலைவனொடு சென்று, பிறள் ஆகிய அளவை - எங்கட்குப் பிறள் ஒருத்தி

(பாடம்) * உள்ளமொடு.

ஆகியபோது, என்றும் படர் மலி எவ்வமொடு - எக்காலத்தும் நினைவு மிக்க துன்பமொடு, மாதிரம் துழைஇ - திசையெல்லாம் தேடிவந்து, மனைமருண்டு இருந்த என்னினும் - மனையின்கண் மயங்கியிருந்த என்னைக் காட்டிலும், கனை மகிழ் நன்னராளர் கூடுகொள் இன்னியம்-கள்ளின் களிப்பினையுடைய நல்ல பாணர்களது ஒன்றுகூடி யொலிக்கும் வாச்சியங்கள், தேர் ஊர் தெருவில் ததும்பும் - தேர் ஓடும் பெருந் தெருக்களில் அறாது ஒலிக்கும், ஊர் - இவ்வூரானது, தன் வீழ்வு உறு பொருள் - தனது விருப்பம் மிக்கதொரு பொருளை, இழந்தன்று - இழந்ததாயிற்று.

(முடிபு.) கவாஅன் அத்தம் சுட்டி, குறுமகள், அவனொடு சென்று எமக்குப் பிறளாகிய அளவை, என்னினும் ஊர் தன் வீழ்வுறு பொருள் இழந்தன்று.

(வி - ரை.) வெம்பி, நீடி என்பனவற்றை வெம்ப, நீட எனத் திரிக்க. கயம் - சுனையுமாம். மள்ளர் என்றது ஈண்டுக் கூத்தரை. முழவெடுத் துயரி வேறுநாட்டு விழவுப்படர் மள்ளர் என மாறுக. பொருளின்கண் மடப்பிடி தழீஇ என்பதனை உவமையுடன் கூட்டி விறலியருடன் செல்லும் கூத்தர் எனவும், உவமையின்கண் முழவெடுத் துயரி என்பதனைப் பொருளுடன் கூட்டி முழவு போலும் பலாப் பழத்தினை ஏந்திச் செல்லுங் களிறு எனவும் உரைக்க. பிறந்த நாட் டொட்டுப் பேணி வளர்த்த எம்மைக் கையகன்று ஏதிலானொடு சென்றாள் என்பாள், 'அவனொடு சென்று பிறள் ஆகிய அளவை,' என்றாள். அவள் அன்னள் ஆயினும் அவள் பிரிவால் யான் எய்தும் துன்பம் இறப்பவும் பெரிது என்பாள், 'என்றும் படர்மலி எவ்வ மொடு, மாதிரந் துழைஇ மனை மருண்டிருந்த என்னினும்' என்றும், தான் எய்துந் துன்பத்தினும் நற்றாயும் ஆயத்தாரும் முதலியோர் அவளை இழந்து எய்தும் துன்பம் பெரிதென்பாள், 'என்னினும், ஊரிழந்தன்றுதன் வீழ்வுறு பொருளே' என்றும் கூறினள். ஊர் என்றது ஈண்டு, நற்றாய் ஆயத்தார் முதலியோரைக் குறித்து நின்றது.

---

190. நெய்தல்

[தோழி, செவிலித்தாய்க்கு அறத்தொடு நின்றது.]

திரையுழந் தசைஇய நிரைவளை ஆயமொடு
உப்பின் குப்பை ஏறி எற்பட
வருதிமில் எண்ணுந் துறைவனொடு ஊரே
ஒருதன் கொடுமையின் அலர்பா டும்மே
அலமரல் மழைக்கண் அமர்ந்துநோக்காள்

அலையல் வாழிவேண் டன்னை உயர்சிமைப்
பொதும்பில் புன்னைச் சினைசேர்பு இருந்த
வம்ப நாரை இரிய ஒருநாள்
பொங்குவரல் ஊதையொடு புணரி அலைப்பவும்
உழைக்கடல் வழங்கலும் உரியன் அதன்தலை
இருங்கழிப் புகாஅர் பொருந்தத் தாக்கி
வயச்சுறா எறிந்தென வலவன் அழிப்ப
எழில்பயங் குன்றிய சிறையழி தொழில
நிரைமணிப் புரவி விரைநடை தவிர
இழுமென் கானல் விழுமணல் அசைஇ
ஆய்ந்த பரியன் வந்திவண்
மான்ற மாலைச் சேர்ந்தன்றோ இலனே.

—உலோச்சனார்.

(சொ - ள்.) ௬. அன்னை - தாயே, வாழி-, வேண்டு - நான் கூறுவதனை விரும்பிக் கேட்பாயாக;

௬—௧௦. உயர் சிமை பொதும்பில் - உயர்ந்த உச்சியையுடைய சோலையில், புன்னை சினை சேர்பு இருந்த - புன்னைமரத்தின் கிளையைச் சேர்ந்திருந்த, வம்ப நாரை இரிய - புதிய நாரை ஒழிந்திட, ஒரு நாள் - முன்பு ஒரு நாள், பொங்கு வரல் ஊதையொடு புணரி அலைப்பவும் - பொங்குதலுடன் வரும் வடகாற்றுடன் அலைகள் அலைத்துக் கொண்டிருக்கவும், உழை கடல் வழங்கலும் உரியன் - ஒரு தலைவன் கடலோரத்தே தேரில் வருதற்கும் உரியன் ஆயினன்;

௧௦—௭. அதன் தலை - அதன்மேலும், இரு கழிப் புகாஅர் - பெரிய கழியினையுடைய துறைமுகத்தே, வயச்சுறா பொருந்தத் தாக்கி எறிந்தென - வலிய சுறாமீன் தம் உடம்பிற் பொருந்தத் தாக்கி எறிந்ததாக, வலவன் அழிப்ப - தேர்ப்பாகன் செலவினை நிறுத்தலால், எழில் பயம் குன்றிய - எழுச்சியும் பயனும் குன்றியனவும், சிறை அழி தொழில - பூட்டு அழிந்த செய்கையை யுடையனவுமாகிய, நிரை மணிப் புரவி - நிரைத்த மணிமாலை பூண்ட குதிரைகள், விரை நடை தவிர - விரைந்து செல்லும் செலவு ஒழிந்து தங்கினவாக, இழும் என் கானல் - இழுமென்னும் ஒலியையுடைய கானலிடத்தே, விழு மணல் அசைஇ - சிறந்த மணலில் தங்கி, ஆய்ந்த பரியன் இவண் வந்து - வேறு சிறந்த புரவியுடன் இங்கு வந்து, மான்ற மாலை சேர்ந்தன்று இலன் - மயங்கிய மாலைப் பொழுதில் தங்கியதும் இலன்;

௫. அலமரல் மழைக்கண் அமர்த்தும் நோக்காள் - அவனைச் சுழல்கின்ற குளிர்ந்த கண்களையுடைய நின் மகள் நோக்கினளும் அல்லள்; அங்ஙனமாகவும்;

௯—௰. நிரை உழந்து அசைஇய - நிரையின் விளையாடி உழந்தமையால் தளர்ச்சியுற்ற, நிரைவளை ஆயமொடு - நிரைத்த வளையினையுடைய மகளிர் கூட்டத்துடன், (மைந்தர்கள்) உப்பின் குப்பை ஏறி - உப்பு மேட்டில் ஏறி நின்று, எல்பட - இருள்வர, வருதிமில் எண்ணும் துறைவனொடு - கரைக்கு மீண்டு வரும் படகுகளை எண்ணும் துறையையுடைய அத் தலைவனொடு நின் மகளைச் சார்த்தி, ஊர் - இந்த ஊரானது, ஒரு தன் கொடுமையின் - ஒப்பற்ற தனது கொடுமையால், அலர் பாடும் - அலர் கூறா நிற்கும்;

௧. அலையல் - ஆதலால் நீ அவளை வருத்தாதேகொள்.

(முடிபு) அன்னை! வாழி! வேண்டு; ஒரு தலைவன்; ஒருநாள் ஊதையொடு புணரி அலைப்பவும் உழைக்கடல் வழங்கலும் உரியன்; அதன் தலை வயச்சுறா எறிந்தென; வலவன் அழிப்ப, புரவிகள் விரை நடை தவிர, அசைஇய ஆய்ந்த பரியினன், மாலை இவண் சேர்ந்தன்றோ இலன்; மழைக்கண் நின்மகள் அவனை அமர்ந்து நோக்கினளல்லள்; அங்ஙனமாகவும் நின்மகளை அத் துறைவனொடு சார்த்தி; இவ்வூர் தன் கொடுமையின் அலர்பாடும்; ஆதலின் நீ இவளை அலையல்.

(வி - ரை.) ஆயமொடு என்றமையால், மைந்தர் என்பது வருவிக்கப்பட்டது. எண்ணும் என்னும் பெயரெச்சம், துறை என்னும் இடப்பெயர் கொண்டது. துறையையுடைய தலைவனொடு சார்த்தி என விரித்துரைக்க. ஊர் என்பது - கௌவைப் பெண்டிரை. மழைக்கண்: ஆகுபெயர். வழங்கலும் என்ற உம்மை வருதலருமையை விளக்கி நின்றது. அதன்தலை என்றது; ஊதையொடு புணரி அலைத்தலே அன்றி அதன்மேலும் என்றபடி. வயச் சுறா எறிந்தென வலவன் அழிப்ப என்றதனால், குதிரை புண்பட்டமை பெற்றாம். புண்பட்டமையால் வலவன் பூட்டவிழ்த்துவிட்ட குதிரை நடைதவிர்த்திருக்க, அவன் மணலில் ஓரிடத்தே தங்கியிருந்ததன்றி வேறு குதிரை பூண்ட தேருடன் யாங்கள் இருக்குமிடத்திற்கு வந்து இருண்ட மாலைப்பொழுதில் தங்கினனல்லன் என்றும், தலைவியும் அவனை விரும்பி நோக்கினளல்லள் என்றும் கூறி, அங்ஙனமாகவின் ஊர் வாளாது அலர் கூறுவது பற்றி நீ தலைவியை வருத்தாதே என்று கூறுவாள்போல், தலைவன் எதிர்ப்பாட்டைக் குறிப்பிற் புலப்படுத்தித் தோழி, செவிலிக்கு அறத்தொடு நின்றாள் என்க.

---

191. பாலை

[தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்கியது.]

அத்தப் பாதிரித் துய்த்தலைப் புதுவீ
எரிபுரை அலரியொடு இடைபட விரைஇ

*வெண்தோட்டுத் தொடுத்த வண்டுபடு கண்ணித்;
தோல்புதை சிறயடிக் கோலுடை உமணர்
ஊர்கண் டன்ன ஆரம் வாங்கி
அருஞ்சுரம் இவர்ந்த அசைவில் நோன்தாள்
திருந்துபகட் டியம்பும் கொடுமணி புரிந்தவர்
மடிவிடு வீளையொடு கடிதெதி ரோடி
ஓமையம் பெருங்காட்டு வரூஉம் வம்பலர்க்கு
ஏமஞ் செப்பும் என்றூழ் நீளிடை
அரும்பொருள் நசைஇப் பிரிந்துறை †வல்லி
சென்றவினை எண்ணுதி யாயின் நன்றும்
‡உரைத்திசின் வாழிஎன் நெஞ்சே நிரைமுகை
முல்லை அருந்தும் மெல்லிய வாகி
அறலென விரிந்த உறலின் சாயல்
ஒலியிருங் கூந்தல் தேறுமென
வலிய கூறவும் வல்லையோ மற்றே.

—§ஒரோடோகத்துக் கந்தரத்தனார்.

(சொ - ள்.) கக. என் நெஞ்சே வாழி—,

௬—கஉ. அத்தம் பாதிரி துய் தலை புது வீ - பாலையிலுள்ள துய்யினை உச்சியிற்கொண்ட புதிய பாதிரிப் பூவை. எரி இதழ் அலரியொடு இடை பட விரைஇ - நெருப்புப் போன்ற இதழினையுடைய அலரிப்பூவுடன் இடையிடையே கலந்து, வெண்தோட்டுத் தொடுத்த வண்டுபடு கண்ணி - வெண்மை பொருந்திய தாழம்பூவின் தோட்டில் வைத்துக் கட்டிய வண்டு பொருந்தும் கண்ணியினைத் தரித்த, தோல் புதை சிறற அடி - பொதிந்த செருப்பு ஒலிக்கும் அடியினையும், கோல்- கோலினையுமுடைய, உமணர் - உப்பு வாணிகருடைய, ஊர் கண்டன்ன - ஊர் திரண்டுவந்தாலொத்த, ஆரம் வாங்கி - வண்டிகளை இழுத்து, அரும் சுரம் இவர்ந்த - ஏறுதற்கு அரிய மேடுகளையுடைய காட்டில் ஏறி வந்த, அசைவு இல் நோன் தாள் திருந்து பகட்டு இயம்பும் கொடுமணி - தளர்வில்லாத வலிய தாளினையுடைய செவ்விய எருதுகளின் ஒலிக்கும் வளைந்த மணிகளின் ஒலி, புரிந்து அவர் மடி விடு வீளையொடு - அவர்கள் விரும்பி வாயினை மடித்து எழுப்பும் சீழ்க்கை யொலியொடு, கடிது எதிர் ஓடி - விரைந்து எதிரே சென்று, ஓமை அம் பெருங்காட்டு வரூஉம் வம்பலர்க்கு - ஓமை மரங்களையுடைய பெரிய காட்டில் வரும் புதிய

(பாடம்) * வெண்டோட்டு. † வவ்வி. ‡ உரையினி.
§ உரோடோகக் கவுணியன் சேந்தன்.

ராப வழிச்செல்வார்க்கு, ஏமம் செப்பும் - பாதுகாவலைக் கூறும், என்றூழ் நீள் இடை - வெப்பம் மிக்க நெடிய காட்டிலே, அரும்பொருள் நசைஇ - அரிது ஈட்டும் பொருளை விரும்பி, பிரிந்து உறை வல்லி - நம் தலைவியைப் பிரிந்து உறையும் வன்மை யுடையையாய், சென்று வினை எண்ணுதியாயின் - சென்று பொருள் ஈட்டும் வினையை எண்ணுவை யாஞல்;

கக—எ. உறல் இன் சாயல் - உறுதற்கினிய மென்மைத்தன்மையையும், நிரை முகை முல்லை அருந்து - முல்லையின் நிரைத்த அரும்புகளை நிறையச் சூடி, மெல்லியவாகி - மென்மைத் தன்மையுடையவாகி, அறல் என விரிந்த ஒலி இரும் கூந்தல் - கருமணல்போல விரிந்த தழைத்த கரிய கூந்தலையுமுடைய நம் தலைவி, தேறும் என - தெளிந்திருப்பாள் என்று, வலிய கூறவும் வல்லையோ - பிரிவுணர்த்தும் வலிய சொற்களைக் கூறவும் வன்மை யுடையையோ? வல்லையாயின்;

கஅ—கூ. நன்றும் உரைத்திசின் - அவளிடத்தே சென்று பெரிதும் கூறி அவளைத் தேற்றுவாயாக.

(முடிபு). உமணரது ஊர்கண்டன்ன ஆரம் வாங்கிச் சுரம் இவர்ந்த பகட்டு இயம்பும் கொடுமணி; அவர் விளையொடு எதிர் ஒடி வம்பலர்க்கு ஏமம் செப்பும் என்றூழ் நீளிடைப் பொருள் நசைஇச் சென்று வினை எண்ணுதியாயின்; இன்சாயலும் கூந்தலுமுடைய இவள் தேறும் என வலிய கூறவும் வல்லையோ? வல்லையாயின் நன்றும் உரைத்திசின்.

(வி - ரை.) தோடு - தாழம்பூவின் இதழ். சிறுதோல் எனக்கொண்டு சிதறிய செருப்பு என்றலுமாம். கோல்-பகடு ஓட்டுங் கோல். ஆரம் - வண்டியின் உறுப்பு; வண்டிக்கு ஆகுபெயர். மிகப் பலவாகிய வண்டிகளுடன் உமணர் திரண்டு செல்லுந் தோற்றம் ஊர் எழுந்து செல்லுவது போலுமாகலின், உமணர் ஊர்கண்டன்ன ஆரம் என்றார். பகட்டின் மணி யோசையையும் உமணர் விளை யொலியையும் செவியேற்ற வம்பலர் இக் காட்டில் ஏதம் இல்லை யென்று உணர்வாராகலின், அவ்வொலிகள் வம்பலர்க்கு ஏமம் செப்பும் எனப்பட்டன. வல்லி - வலியையாய் என்னும் பொருட்டு; வவ்வி என்பது பாடமாயின், பிரிந்துறைதலை மனத்திற் கொண்டு எனக. பொருள் நசைஇ நீளிடைச் சென்று வினை எண்ணுதியாயின் எனக் கூட்டுக. அருந்து - ஆர்ந்து என்பதன் விகாரம். தேறு மென என்றதனுல், வலிய என்றது, பொருளீட்டி விரைந்து வருவேம் என்னுஞ் சொற்களாதல் வேண்டும். கூறவும் வல்லையோ என்றது கூறுதற்கு அருமையை விளக்கி நின்றது. மற்று, வல்லையல்லை என்னும் பொருள் தருதலின் வினைமாற்று; அசையுமாம்.

192. குறிஞ்சி

[தோழி, தலைமகனைச் *செறிப்பு அறிவுறீஇ இரவுக்குறி மறுத்தது.]

†மதிபரும் பன்ன மாசறு சுடர்நுதல்
பொன்னேர் வண்ணம் கொண்டன்று அன்னோ
யாங்கா குவள்கொல் தானே விசும்பின்
எய்யா வரிவில் அன்ன பைந்தார்ச்
செவ்வாய்ச் சிறுகிளி சிதைய வாங்கிப்
பொறைமெலிந் திட்ட புன்புறப் பெருங்குரல்
வளைசிறை வாரணங் கிளையொடு கவர
ஏனலும் ‡இறங்குபொறை உயிர்த்தன பாங்கர்
நீவாத் தளிக்குவை யெனினே மால்வரை
மைபடு §விடாகத் தழைஇ ஒய்யென
அருவி தந்த அரவுமிழ் திருமணி
பெருவரைச் சிறுகுடி மறுகுவிளக் குறுத்தலின்
இரவும் இழந்தனள் அளியள் உரவுப் பெயல்
உருமிறை கொண்ட உயர்சிமைப்
பெருமலை நாடநின் மலர்ந்த மார்பே.

—¶ போதும்பில் கிழான் வெண்கண்ணனார்.

(சொ - ள்.) ௧௩—௫. உரவுப் பெயல் உரும் இறைகொண்ட - வலிய மழையுடன் இடி தங்குதல் கொண்ட, உயர்சிமை பெருமலை நாட - உயர்ந்த உச்சியையுடைய பெரிய மலைநாட்டையுடைய தலைவனே;

௩—௮. விசும்பில் எய்யா வரிவில் அன்ன பைந்தார் செவ்வாய் சிறு கிளி - வானிலுள்ள எய்யப் பெறாத அழகிய வில்லை ஒத்த பசிய மாலையினையும் சிவந்த வாயினையும் உடைய சிறிய கிளி, சிதைய வாங்கி - தினை சிதையும்படி கொய்து, பொறை மெலிந்திட்ட புன்புறப் பெருங்குரல் - சுமக்கலாற்றாது போகட்ட புல்லிய புறத்தினையுடைய பெரிய கதிரினை, வளை சிறை வாரணம் கிளையொடு கவர - வளைந்த சிறகுகளையுடைய கானக்கோழி தன் இனத்துடன் கவர்ந்துண்ணுமாறு, ஏனலும் இறங்கு பொறை உயிர்த்தன - தினையும் வளைந்த கதிர்களை ஈன்றன (ஆகலின் எம் தலைவி இனி இற்செறிக்கப்படுவள்);

(பாடம்) * செறிப்பு அறிவுறீஇ வரைவு கடாயது. † மதியிருப் பன்ன. ‡ இறங்கு குரலிறுத்தன; இறங்கு பொறையிறுத்தன. § விடலகம். ¶ வெண்கண்ணன்.

௮—௯. பல்நாள் நீ வந்து அளிக்குவை எனினே - பாதி இரவில் நீ வந்து அளிப்பாய் என்று கூறின், மால் வரை மை படு விடரகம் துழைஇ - பெரிய மலையின் இருள் பொருந்திய குகையின் இடங்களைத் தழாவி, ஒய் என அருவிதந்த அரவு உமிழ் திருமணி - விரைய அருவி கொண்டுவந்த பாம்பு உமிழ்ந்த அழகிய மணி, பெருவரை சிறு குடி மறுகு விளக்குறுத்தலின் - பெரிய மலையிலுள்ள எமது சீறூரின் தெரு, விளை இருளகற்றி விளங்கச் செய்தலாலே,

௧௦. நின் மலர்ந்த மார்பு - நின் அகன்ற மார்பின் கூட்டத்தினை;

௧௧. இரவும் இழந்தனள் - இரவினும் இழந்தாள் ஆவள்;

௧—௨. மதி அரும்பு அன்ன - இளைய மதியினை யொத்த, மாசு அறு சுடர் நுதல் - இவளது குற்றமற்ற ஒள்ளிய நெற்றி, பொன் னேர் வண்ணம் கொண்டன்று - பொன்னை யொத்த நிறத்தினைக் கொண்டது; அன்னோ - அந்தோ, யாங்கு ஆகுவள் கொல் - எங்ஙனம் ஆகுவளோ;

௧௩. அளியள் - இரங்கத்தக்காள்.

(முடிபு) பெருமலை நாட! ஏனல் பொறை உயிர்த்தன; (ஆகலின் எம் தலைவி இனி இற்செறிக்கப்படுவாள்;) நீ பல்நாள் வந்து அளிக்குவை எனினே, அரவுமிழ் திருமணி மறுகு விளக்குறுத்தலின், நின்மார்பினை இரவும் இழந்தனள்; சுடர்நுதல் பொன் நேர் வண்ணம் கொண்டன்று; அன்னோ யாங்காகுவள் கொல்; அளியள்.

(வி - ரை.) நுதல் பொன்னேர் வண்ணம் கொண்டன்று என்றது பசலை பூத்தது என்றபடி. விசும்பின் வில் என்க. எய்யா வில் என்றது வான வில்லிற்கு வெளிப்படை. வரி - அழகு. ஏனல் பொறை உயிர்த்தன என்றது, தினையறுக்குங் காலமாகலின் தலைவி இற்செறிக்கப்படுவள் என்பது கூறி, அதனால் பகற்குறி அரிதென்று உணர்த்தியவாறும். திருமணி மறுகு விளக்குறுத்தலின் என்பதனால் இரவுக்குறி யிடையீடு உணர்த்தி, அதனால் அஃதும் அரிதென உணர்த்துவாள் நின் மார்பினை இரவும் இழந்தனள் என்றாள். இரவும் என்னும் உம்மை எச்சப் பொருட்டு. தானே என்பது கட்டுரைச் சுவைபட நின்றது.

---

193. பாலை

[பொருள் வலித்த நெஞ்சிற்குச் சொல்லித்
தலைமகன் செலவு அழுங்கியது.]

காணுநர் மருங்கில் கவலை யல்லது
வானம் வேண்டா வில்லேர் உழவர்
பெருநாள் வேட்டம் கிளையெழ வாய்த்த
பொருகளத்து ஒழிந்த குருதிச் செவ்வாய்ப்
பொறித்த போலும் வாலிற எருத்தின்

அணிந்த போலுஞ் செஞ்செவி எருவை
குறும்பொறை எழுந்த நெடுந்தாள் யாஅத்து
அருங்கவட் டுயர்சினைப் பிள்ளை யூட்ட
விரைந்துவாய் வழுக்கிய கொழுங்கண் ணூன்தடி
தொல்பசி முதுநரி வல்சி யாகும்
சுரனமக் கெளிய மன்னே நன்மனைப்
பன்மாண் தங்கிய சாயல் இன்மொழி
முருந்தேர் முறுவல் இளையோள்
பெருந்தோள் இன்துயில் கைவிடு கலனே.

—மதுரை மருதனிளநாகனார்.

(சொ - ள்.) ௧—௧௧. நெஞ்சே-, கான் உயர் மருங்கில் கவலை அல்லது - உயர்ந்த காட்டினிடத்தேயுள்ள கவர்த்த நெறிகளை யன்றி, வானம் வேண்டா வில் ஏர் உழவர் - மழையை வேண்டுதலில்லாத வில்லாகிய ஏரால் உழுதலைச் செய்யும் ஆறலைப்போர், கிளை எழ வாய்த்த - தம் கிளைஞருடன் எழாநிற்கக் கிடைத்த, பெருநாள் வேட்டம் - நன்னாள் வேட்டத்தில், பொருகளத்து ஒழிந்த - அவர்கள் பொருத களத்தில் ஆறு செல்வார் உடம்பினின்றும் உக்க, குருதி செவ்வாய் - குருதியினை உண்டமையால் சிவந்த வாயினையும், பொறித்த போலும் வால்நிற எருத்தின் - பொறித்து வைத்தாற்போலும் வெண்ணிறம் வாய்ந்த கழுத்தினையும், அணிந்த போலும் செஞ்செவி எருவை - செய்து சூட்டியது போலும் சிவந்த செவியினையுமுடைய கழுகு, குறும்பொறை எழுந்த நெடுந்தாள் யாஅத்து - குறிய மலையிடத்தே வளர்ந்த நெடிய அடியினையுடைய யா மரத்தின், அருங் கவட்டு உயர்சினைப் பிள்ளை ஊட்ட - அரிய கவட்டினின்கின் றெழுந்த உயர்ந்த கிளைகளிலுள்ள தன் குஞ்சினை உண்பிக்க, விரைந்து வாய் வழுக்கிய கொழு கண் ஊன் தடி - விரைதலினாலே அக் குஞ்சின் வாயினின்றும் தவறி வீழ்ந்த கொழுமையுற்ற கண்ணாகிய ஊனின் துண்டு, தொல்பசி முதுநரி வல்சி ஆகும் சுரன் - பழைய பசியினையுடைய முதிய நரிக்கு உணவாகும் காடுகள், நமக்கு எளிய மன் - நாம் செல்லுதற்கு மிகவும் எளியனவே. ஆயினும்;

௧௧—௪. நல் மனை - நமது நல்ல மனையின்கண்ணுள்ள, பல் மாண் தங்கிய - பல மாண்பும் உற்ற, சாயல் - மென்மைத்தன்மையினையும், இன்மொழி - இனிய மொழியினையும், முருந்து ஏர் முறுவல் - மயிலிறகின் அடியினை ஒத்த பற்களையுமுடைய, இளையோள் - இளையோளாய நம் தலைவியின், பெருதோள் இன் துயில் - பெரிய தோளின்பாலெய்தும் இனிய துயிலினை, கைவிடுகலன் - கைவிடுதலை ஆற்றேன்.

(முடிபு) நெஞ்சே! சுரன் நமக்கு எளியமன்; ஆயினும், இளையோள் பெருந்தோள் இன்துயில் கைவிடுகலன்.

(வி-ரை.) உழுதொழில் செய்வார்க்கு மழை துணைக் காரணமாம் என்பது, *'ஏரி னுழாஅர் உழவர் புயலென்னும், வாரி வளங் குன்றிக் கால்' என்பதனாற் பெறும்; ஆயின், ஆறலைப்பாராகிய வில்லேர் உழவர்க்குக் காட்டின் கவர்நெறி யல்லது மழை துணையாதல் இல்லையாகலின், 'கவலை யல்லது வானம் வேண்டா வில்லேர் உழவர்' என்றார். அவர்க்கு வேட்டை பெரிதும் வாய்த்த நாள் சிறந்த நாள் ஆகலின், அது பெருநாள் எனப்பட்டது. கிளையெழ என்பதற்கு ஆறு செல்வார் கிளையுடன் புறப்பட்டு வர என்றுரைத்தலுமாம். குருதிச் செவ்வாய் - குருதியை புண்டமையாற் சிவந்த வாய் என விரித்துரைக்க. அணிந்தபோலும் செஞ்செவி என்ற கருத்து, †'ஊன் பதித்தன்ன வெருவரு செஞ்செவி, எருவைச் சேவல்' என முன்னர்ப் போர்தமையுங் காண்க.

யாமரத்தின் உயர்ச்சி மிகுதி கூறுவார் நெடுந்தாள் யாஅத்து என்றும், அருங்கவட்டு உயர் சினை என்றும் கூறினார். விரைந்த ஊட்ட என்று கூட்டி புரைத்தலுமாம்.

எருவை குஞ்சிற்குக் கண்ணினைக் கொணர்ந்து உணவாகக் கொடுப்பது, ‡'கண்ணுமிழ் கழுகின் கானம்' என்பதனாலும் அறியப் படும். தொல் பசி - பல்நாள் உணவின்மையால் எய்திய பசி. கொல் பசி என்னும் பாடத்திற்கு வருத்தும் பசி யென்றுரைக்க. தலைவன் சுரத்திற் செல்லுதற்கு அஞ்சுகின்றிலேன் என்பான், “சுரன் எமக்கு எளிய மன்' என்றும், எனினும் தலைவியின் தோளிற் பெறும் இனிய துயிலைக் கைவிட்டுப் போதல் இயலாதென்பான் 'இளையோள் பெருந் தோள் இன்றுயில் கைவிடுகலனே' என்றும் கூறினான். அவன் கைவிடற்கு அரியாள் என்பதனைப் 'பன் மாண் தங்கிய சாயல் இன்மொழி முருந்தேர் முறுவல் இளையோள்' என்பதனாற் கூறினான்.

---

194. முல்லை

[பருவங் கண்டு ஆற்றாமை மீதூரத் தலைமகள் சொல்லியது.]

பேருறை தலைஇய பெரும்புலர் வைகறை
ஏரிடம் படுத்த இருமறுப் பூழிப்
புறமாறு பெற்ற பூவல் ஈரத்து
ஊன்கிழித் தன்ன செஞ்சுவல் நெடுஞ்சால்
வித்திய மருங்கின் விதைபல நாறி
இரலை நன்மான் இனம்பரந் தவைபோல்
கோடுடைத் தலைக்குடை சூடிய வினைஞர்
கறங்குபறைச் சீரின் §இறங்க வாங்கிக்

---

* குறள். வான். ௪. † அகம். ௫௧. ‡ அகம். ௧௧.
(பாடம்) § இரங்க.

களைகால் கழீஇய பெரும்புன வரகின்
கவைக்கதிர் இரும்புறங் கதூஉ உண்ட
குடுமி நெற்றி நெடுமாத் தோகை
காமர் கலவம் பரப்பி ஏமுறக்
கொல்லை யுழவர் *கூழ்நிழல் ஒழிந்த
வல்லிலைக் குருந்தின் வாங்குசினை இருந்து
கிளிகடி மகளின் விளிபடப் பயிரும்
†கார்மன் இதுவால் தோழி போர்மிகக்
கொடுஞ்சி நெடுந்தேர் பூண்ட கடும்பரி
விரியுளை நன்மான் கடைஇ
வருதும் என்றவர் தெளித்த போழ்தே.

—இடைக்காடனார்.

(சொ - ள்.) ௧௬—௧௮. தோழி-, போர் மிக-போர்மிக்கு மூண்டதாக, கொடுஞ்சி நெடுதேர் பூண்ட - கொடுஞ்சி யென்னும் உறுப்பினையுடைய நெடிய தேரிற் பூட்டப்பெற்ற, கடும்பரி விரி உளை நன்மான் கடைஇ - விரைந்த செலவினையும் விரிந்த பிடரி மயிரினையும் உடைய நல்ல குதிரையைச் செலுத்தி, வருதும் என்று அவர் தெளித்த போழ்து - இன்ன போழ்தில் வருவேம் என்று நம் தலைவர் தெரிவித்த காலம்;

௧—௧௧. பேர் உறை தலைஇய - பெரிய மழைபெய்த, பெரும் புலர் வைகறை - இருள் பெரிதும் புலர்ந்த காலைப் பொழுதிலே, ஏர் இடம் படுத்த இருமறு - ஏர்களால் இடமுண்டாக உழப்பெற்ற பெரிய வடுவினையுடைய, பூழி புறம் மாறுபெற்ற - கீழ் மேலாகப் புரண்ட புழுதியையுடைய, பூவல் ஈரத்து - செம்மண்ணிலத்தின் ஈரம்பட்ட செவ்வியில், ஊன் கிழித்தன்ன செம் சுவல் நெடுசால் - ஊனைக் கிழித்தாலொத்த செவ்விய மேட்டுநிலத்தைப் பிளந்து சென்ற நெடிய படைச்சாலினிடத்து, வித்திய மருங்கில் - விதைத்த இடங்களில், விதை பல நாறிய - விதைகள் பலவும் முளைத்து வளர, இறலை நன்மான் இனம் பரந்தவைபோல் - நல்ல கலைமானின் கூட்டம் பரந்தனபோல, கோடு உடை தலைக்குடை சூடிய வினைஞர் - கோட்டினையுடைய ஓலைக் குடையைத் தலையிற் சூடிய கொல்லை உழவர், கறங்கு பறைச் சீரின் - ஒலிக்கும் பறையின் ஒலியொடு, இறங்க வாங்கி களை கால் கழீஇய - பயிர்கள் வளைபுப்படி ஒதுக்கிக் களையைப் பறித்துத் தூய்மை செய்த, பெரும் புன வரகின் - பெரிய கொல்லையில் விளைந்த வரகின், கவை கதிர் இருபுறம் கதூஉ உண்ட - கவைத்த கதிர்களின் கரிய புறத்தினைப்

(பாடம்) * காடுழவொழிந்த. † கார்மனிதுவே தோழி.

பற்றி உண்ட, குடுமி செற்றி நெடு மா தோகை - குடுமி பொருந்திய தலையினையுடைய நீண்ட கரிய மயில், காமர் கலவம் பரப்பி - அழகிய தோகையினை விரித்து, எம் உற - இன்பம் உற, கொல்லை உழவர் கூழ் நிழல் ஒழித்த - கொல்லையை உழும் வினைஞர்கள் கூழ் உண்டற்கு நிழலாக விட்டுவைத்த, வல் இலைக் குருந்தின் வாங்குசினை இருந்து - வலிய இலையினையுடைய குருந்தமரத்தின் வளைந்த கிளையிலிருந்து, கிளிகடி மகளிரின் விளிபட பயிரும் - கிளிகளை ஓட்டும் மகளிர்போல ஒலியுண்டாக அகவும், கார் இது - கார் காலம் ஆகிய இதுவேயாகும், மன் - அங்ஙனமாகவும் அவர் இன்னும் வந்திலரே.

(முடிபு) தோழி! நம் தலைவர் வருதும் என்று தெளித்தபோழ்து கார் இதுமன்; வரகின் கதிர் உண்ட தோகை கலவம் பரப்பிக் குருந்தின் சினையிருந்து கிளிகடி மகளிரின் விளிபடப் பயிரும் கார் என்க.

(வி - ரை.) எரிடம் படுத்த இருமறுப் பூழிப் புறமாறு பெற்ற பூவல் என்றது, புழுதி கீழ்மேலாகப் புரண்டு நன்கு புலருமாறு பன்முறை உழுத செம்மண்நிலம் என்றபடி; *'தொடிப்புழுதி கஃசா உணக்கிற் பிடித்தெருவும் - வேண்டாது சாலப் படும்' என, வள்ளுவர் கூறுவதுங் காண்க. அங்ஙனம் உணக்கிய புழுதியில் மழைபெய்து ஈரம் பட்ட செவ்வி பார்த்து மீட்டும் உழுது விதைதெளிப்பர் என்பது, 'பூவல் ஈரத்து, ஊன்கிழித் தன்ன செஞ்சுவல் நெடுஞ்சால், வித்திய' என்பதனாற் பெற்றாம். ஈரமுடைய செம்மண்நிலத்தே உழுபடை கிழித்த வடுவின் தோற்றம், ஊனினைக் கிழித்து வைத்தாற்போலும் என்றார். காறி - காற எனத் திரிக்க; காற - முளைத்து வளர என்க. மழைக்குத் தடையாக வினைஞர் தலையிற் சூடிய ஓலைக்குடையின் இருமுனையும் நீண்டு உயர்ந்திருக்குமாகலின் அதனையுடைய வினைஞர்கள் இரலையினம் போல்வாராயினர் என்க. கறங்கு பறைச் சீரின் என்றதனால், அவர்கள் களைபறிக்குங்கால், பறையை ஒலிப்பிப்பர் என்பது பெற்றாம். களைகால் கழீஇய - களையை அடியுடன் கழித்த என்றுமாம். தோகை - மயில். காரினைக் கண்ட மயில் களிப்புற்று அகவுதல் இயல்பாகலின், தோகை கலவம் பரப்பி ஏமுறப் பயிரும் என்றார். மயில் குருந்தின் சினையிலிருந்து அகவுவது கிளிகடியும் மகளிர், மரத்தின் கிளைமீதிருந்து ஒலிப்பது போலும் என்க. அவர் தெளித்த போழ்து இதுவாகவும் இன்னும் வந்திலரே என்பதுபட நின்றமையின், மன் ஒழியிசையாகும்.

---

* குறள். க0௩எ.

195. பாலை

[மகட் போக்கிய நற்றாய் சொல்லியது.]

அருஞ்சுரம் இறந்தஎன் பெருந்தோள் குறுமகள்
திருந்துவேல் விடலையொடு வருமெனத் தாயே
புனைமாண் இஞ்சி பூவல் ஊட்டி
மனைமணல் அடுத்து மாலை நாற்றி
உவந்தினிது அயரும் என்ப யானும்
மான்பிணை நோக்கின் மடநல் லாளை
ஈன்ற நட்பிற்கு அருளான் ஆயினும்
இன்னகை முறுவல் ஏழையைப் பன்னாட்
கூந்தல் வாரி நுசுப்பிவர்ந் தோம்பிய
*நலம்புனை உதவியும் உடையன் மன்னே
†அஃதறி கிற்பினோ நன்றுமற் றில்ல
அறுவை தோயும் ஒருபெருங் குடுமிச்
சிறுபை நாற்றிய பஃறலைக் கொடுங்கோல்
ஆகுவ தறியும் முதுவாய் வேல
கூறுக மாதோநின் கழங்கின் திட்பம்
மாறா வருபனி கலுழுங் கங்குலின்
ஆனாது துயருமெங் கண்ணினிது படீஇயர்
எம்மனை முந்துறத் தருமோ
தன்மனை உய்க்குமோ யாதவன் குறிப்பே.

—கயமனார்.

(சொ - ள்.) ௧—௫. அரும் சுரம் இறந்த என் பெரும் தோள் குறுமகள்-அரிய சுரநெறியைக் கடந்து சென்ற என் பெரிய தோளினை யுடைய இளையளாய மகள், திருந்து வேல் விடலையொடு வரும் என - திருந்திய வேலினையுடைய தலைவனுடன் வரும் என்று, தாய் - அவன் தாய், புனைமாண் இஞ்சி பூவல் ஊட்டி - புனைதல் மாட்சிமைப்பட்ட மாண்புற்ற புறச்சுவரில் செம்மண் பூசி, மனை மணல் அடுத்து - மனையின் முற்றத்தே மணலைப் பெய்து, மாலை நாற்றி - மாலைகளைத் தொங்க விட்டு, உவந்து இனிது அயரும் என்ப - மகிழ்ந்து இனிதே (மனையின் கண் கோலம் செய்யும் என்ப;

௬—௧0. யானும்-, மான் பிணை நோக்கின் மட நல்லாளை-பெண் மான் போலும் பார்வையையுடைய மடப்பம் வாய்ந்த அவளை, ஈன்ற

(பாடம்) * நலம்புனை புதவியோவுடையன். † அஃதறி கற்பி னன்று.

நட்பிற்கு அருளான் ஆயினும்-ஈன்றாள் என்னும் அன்புபற்றி என்பால் அருள் செய்யானாயினும், இன் நகை முறுவல் ஏழையை - இனிய நகையுடன் கூடிய பற்களையுடைய அவளை, பல் நாள் கூந்தல் வாரி நுசுப்பு இவர்ந்து ஓம்பிய-பலநாளும் கூந்தலை வாரிமுடித்து மருங்கிலே ஏற்றிப் பாதுகாத்த, நலம்புனை உதவியும் மன் உடையன்-நன்மை பொருந்திய உதவியும் பெரிதும் உடையள் ஆவேன்;

௧௧. அஃது அறிகிற்பினோ நன்று - அவன் அதனை அறியின் நன்றாம்;

௧௨—௪. அறுவை தோயும் ஒரு பெருங்குடுமி - ஆடை சூழ்ந்த ஒரு பெரிய உச்சியினையும். சிறு பை நாற்றிய பல் தலை கொடு கோல் சிறிய பை தொங்கவிடப்பெற்ற பல தலையையுடைய வளைந்த கோலினையும் உடையனாய், ஆகுவது அறியும் முதுவாய் வேய் - மேல் நிகழ்வதனை அறிந்து கூறும் அறிவு வாய்ந்த வேலனே!

௧௫—௯. கங்குலின் ஆனாது துயரும் - இரவில் அமையாது துயருறும், எம் - எம்முடைய, மாறா வருபனி கலுழும் கண் - இடையறாது வரும் நீருடன் கலங்கி அழும் கண்கள், இனிது படீஇயர்-இனிது துயிலும் பொருட்டு, எம் மனை முந்துறத் தருமோ-எமது மனையின் கண் முற்படக் கொணர்ந்து தருமோ, (அன்றி) தன் மனை உய்க்குமோ - தன் மனையின்கண் முற்படக் கொண்டு செல்வானோ, யாது அவன் குறிப்பு-அத் தலைமகன் உட்கோள் யாதோ, கழங்கின் திட்பம் - கழங்கின் திண்ணிய குறியை, கூறுக - கூறுவாயாக.

(முடிபு) குறுமகள் விடலையொடு வருமெனத் தாய், ஊட்டி, அடுத்து நாற்றி அயரும் என்ப: யானும் ஓம்பிய உதவியும் உடையன்; அஃதறிகிற்பினோ நன்று; வேல! எம்மனை முந்துறத் தருமோ, தன் மனை முந்துற உய்க்குமோ, அவன் குறிப்பு யாது? நின் கழங்கின் திட்பம் கூறுக.

(வி - ரை.) இஞ்சி - மனையை அடுத்துப் புறத்தே சூழ்ந்த மதில் போலும் சுவர். அயர்தல் - கொண்டாடுதலுமாம். யானும் என்ற உம்மை, தாய் என்றதனைக் கருதி நிற்றலின் எச்சவும்மையாகும். உதவியும் என்ற உம்மையும், எச்சவும்மையே. அஃது அறிகிற்பின் - உதவியாகிய அதனை அறியின் ஈன்ற நட்பிற்கு அருளானாயினும் அஃதறிகிற்பினோ நன்று என்க. அறிகிற்பினோ நன்று என்றது, அறிந்து என் மனைக்கட் கொண்டுவரின் நன்று என்றபடி. அறுவை தோயும் ஒரு பெருங்குடுமி என்றது, தலையிலே மயிர்க்கட்டாகச் சுற்றி ஒரு புறத்தே தொங்கவிட்ட ஆடை தோய்ந்த குடுமி என்றவாறு. குடுமியினையும் கோலினையும் உடைய வேல என்க. திட்பம் என்றது, பிழையாத குறி என்னும் பொருட்டு. 'மன், தில்ல, மாது, ஓ: அசைகள்.

(மே - ள்.) *'தன்னும் அவனும் அவளுஞ் சுட்டி' என்னுஞ் சூத்திரத்து, இப்பாட்டினைக் கூறி, இது தெய்வத்தொடு படுத்துப் புலம்பி

* தொல். அகத். ௨௪.

யது என்றும், *'களவல ராயினும் காமமெய்ப் படுப்பினும்' என்னுஞ் சூத்திரத்து, 'போக்குடன் அறிந்தபின் தோழியொடு கெழீஇக், கற்பின் ஆக்கத்து நிற்றற்கண்ணும்' என்னும் துறைக்கு 'எம்மனை முந்துறத் தருமோ, தன்மனை யுய்க்குமோ யாதவன் குறிப்பே' என்ற பகுதியை உதாரணமாகக் காட்டி, (இது) 'கற்பினுக்கத்துக் கருத்து நிகழ்தல்' என்றும் †'வெளிப்பட வரைதல்படாமை வரைதல்' என்னுஞ் சூத்திரத்து, 'எம்மனை......யாதவன் குறிப்பே' (இது) 'போல்வன வெளிப்படுவதன் முன்னர்க்கொண்டு தலைக் கழிந்துழிக் கொடுப்போர் இன்றியும் கரணம் நிகழ்ந்தமையின் அதுவும் வெளிப்படாமல் வரைந்ததாம்' என்றும், ‡'கொடுப்போ ரின்றியும் கரணமுண்டே' என்னுஞ் சூத்திரத்து, இச்செய்யுள் கொடுப்போ ரின்றிக் கரணம் நிகழ்ந்தது என்றும் கூறுவர், நச்.

§'மறைவெளிப் படுதலும்' என்னுஞ் சூத்திரத்து 'எம்மனை ..... யாதவன் குறிப்பே' என்பது மறை வெளிப்பாடு என்றனர், பேரா.

---

196. மருதம்

[பரத்தையிற் பிரிந்துவந்த தலைமகற்குக் கிழத்தி சொல்லியது.]

நெடுங்கொடி நுடங்கும் நறவுமலி பாக்கத்து
நாள்துறைப் பட்ட மோட்டிரு வராஅல்
துடிக்கட் கொழுங்குறை நொடுத்துண்டு ஆடி
வேட்டம்மறந்து துஞ்சுங் கொழுநர்க்குப் பாட்டி
ஆம்பல் அகலிலை அமலைவெஞ் சோறு
தீம்புளிப் பிரம்பின் திரள்கனி பெய்து
விடியல் வைகறை இடூஉம் ஊர
தொடுகலம் குறுக வாரல் தந்தை
கண்கவின் அழித்ததன் தப்பல் தெறுவர
ஒன்றுமொழிக் கோசர்க் கொன்றுமுரண் போகிய
கடுந்தேர்த் திதியன் அழுந்தைக் கொடுங்குழை
அன்னி மிஞிலியின் இயலும்
நின்னலத் தகுவியை முயங்கிய மார்பே. —பரணர்.

(சொ-ள்.) க—எ. நெடு கொடி நுடங்கும் நறவு மலி பாக்கத்து- நெடிய கொடிகள் அசையும் கள் மலிந்த பாக்கத்திலே, நாள் துறைப்

* தொல். கள. உச. † தொல். கள. சக. ‡ தொல். கற். உ.
§ தொல். செய். கஅஎ.

பட்ட மோட்டு இரு வராஅல்-விடியற்காலை வேட்டத்துத் துறைக்கண் அகப்பட்ட பெரிய அகட்டினையுடைய வரால் மீனின், துடிகண் கொழு குறை நொடுத்து - துடியின் கண்போன்று அகன்ற வளவிய துண்டத்தினை விற்று, உண்டு ஆடி - கள்ளுண்டு ஆடி, வேட்டம் மறந்து-மீண்டும் வேட்டம் போதலை மறந்து, துஞ்சும் கொழுநர்க்கு-உறங்கிக் கிடக்கும் கணவன்மார்க்கு, பாட்டி - (அவரவர் மனைவியராய) பாண் மகளிர், ஆம்பல் அகல்இலை - ஆம்பலது அகன்ற இலையில், அமலை வெஞ்சோறு திரண்ட விருப்பந்தரும் சோற்றை, தீம்புளி பிரம்பின் திரள் கனி பெய்து - பிரம்பின் இனிப்புடன் கூடிய புளிப்பினையுடைய திரண்ட பழத்தினைப் பெய்து, விடியல் வைகறை இடூஉம் ஊர - இருள் புலரும் விடியற் காலத்தே இடும் ஊரனே!

அ—கக. தந்தை கண்கவின் அழித்ததன் தப்பல்-தன் தந்தையின் கண்ணின் எழிலைக் கெடுத்ததாகிய தவற்றிற்காக, ஒன்று மொழிக் கோசர் - நெடுமொழியினையுடைய கோசர்களை, கடுந்தேர் திதியன் - விரைந்த தேரினையுடைய திதியனது, அழுந்தை - அழுந்தூர் என்னுமிடத்து, தெறுவரக்கொன்று முரண் போகிய - அச்சம் உண்டாகக் கொல்வித்து மாறுபாடு தீர்ந்த, கொடுங்குழை அன்னி மிஞிலியின் - வளைந்த குழையினை அணிந்த அன்னி மிஞிலி என்பாளைப்போல, இயலும் - களிப்புற்று நடக்கும், நின்நல தகுவியை - நின் நலத்திற்குத் தக்காளாய பரத்தையை, முயங்கிய மார்பு - தழுவிய மார்பினை, தொடுகலம்- தீண்டேம், குறுக வாரல் - எம்மை அணுக வாரற்க.

(முடிபு) ஊர! அன்னி மிஞிலியின் இயலும் நின்நலத் தகுவியை முயங்கிய மார்பினைத் தொடுகலம்; குறுகவாரல்:

வேட்டம் மறந்து துஞ்சும் கொழுநர்க்குப் பாட்டி அமலை வெஞ் சோறு பிரம்பின் கனிபெய்து வைகறை இடுஉம் ஊர என்க.

(வி - ரை.) நொடுத்து - விற்று. பாட்டி - பாண்மகள்; பாணன் மனைவி. பாட்டியர் எனப் பன்மையாகக் கொள்க. விடியல் வைகறை- விடியற்கு முன்னர்த்தாகிய வைகறை என்பர், நச். * தப்பல்-தப்பற்கு என நான்கனுருபு விரிக்க. கோசர் என்பார், தன் தந்தையை அருளின்றிக் கண் களைந்தமையின், அன்னி மிஞிலி என்பாள் சினம் கொண்டு, குறும்பியன் திதியன் என்பவர்களால் அக் கோசரைக் கொல்வித்து மாறுபாடு தீர்ந்து களிப்புற்றாள் என்பது, †'வாய்மொழித் தந்தையைக் கண்களைந்து அருளாது, ஊர்முது கோசர் கவைத்த சிறுமையில், கலத்தும் உண்ணாள் வாலிதும் உடாஅள், சினத்தின் கொண்ட படிவம் மாறாள், மறங்கெழு தானைக் கொற்றக் குறும்பியன், செருவியல் நன்மான் திதியற் குரைத்தவர், இன்னுயிர் செகுப்பக் கண்டுசின மாறிய, அன்னி மிஞிலி' என்பதனாற் போதரும். கொன்று- கொல்வித்து எனப் பிறவினையாகக் கொள்க. இங்ஙனம் கிடந்தது

* தொல். அகத். அ. † அகம். உகஉ.

அழுந்தூரில் என்பது, திதியன் அழுந்தை என்பதனாற் பெற்றாம். நின் பிரிவால் யானும் இப்பரத்தை முதலாயினாரும் வருந்தும்படி செய்து, சேரிப் பரத்தையானவள் பெருமிதங் கொண்டிருக்கின்றாள் என்பாள், அன்னி மிஞிலியின் இயலும் நின்னலத் தருவியை எனத் தலைமகள் கூறினாள். நின் நலத்தை நுகர்வதற்குத் தக்கவளாகிய அப் பரத்தையை முயங்கிய மார்பை யாம் தீண்டுதலும் தகாதென்பாள் தொடுகலம் என்றும், குறுகவாரல் என்றும் கூறினள்.

(உ - றை.) 'வராஅற் கொழுங்குறை கொடுத்து உண்டு ஆடி வேட்டம்மறந்து தஞ்சம் கொழுநர்க்குப் பாட்டியர் அமலை வெஞ்சோறு வைகறை இடூஉம் ஊர' என்றது, தலைவன் இரவெல்லாம் பரத்தைக்குத் தன் மார்பினை நல்கி அவள் தரும் இன்பத்தை நுகர்ந்து, தலைவியை மறந்தொழுகி, விடியலில் தலைவியை நினைந்து வருகின்றான் என்றபடி.

---

197. பாலை

[பிரிவிடை வேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறீஇயது.]

மாமலர் வண்ணம் இழந்த கண்ணும்
பூநெகிழ் அணையிற் சாஅய தோளும்
நன்னர் மாக்கள் விழைவனர் ஆய்ந்த
தொல்நலம் இழந்த துயரமொடு என்னதூஉம்
இனையல் வாழி தோழி முனைபெழ
*முன்னுவர் ஓட்டிய முரண்மிகு திருவின்
†மறமிகு தானைக் கண்ணன் எழினி
‡தேமுது குன்றம் இறந்தன ராயினும்
நீடலர் யாழநின் நிரைவளை நெகிழத்
தோள்தாழ்பு இருளிய குவையிருங் கூந்தல்
மடவோள் தழீஇய விறலோன் மார்பில்
புன்தலைப் புதல்வன் ஊர்பிழிந் தாங்குக்
கடுஞ்சூல் மடப்பிடி தழீஇய வெண்கோட்டு
இனஞ்சால் வேழங் கன்றூர்பு இழிதரப்
பள்ளிகொள்ளும் பனிச்சுரம் நீந்தி
ஒள்ளிணர்க் கொன்றை ஓங்குமலை அத்தம்
வினைவலி புறூஉம் நெஞ்சமொடு
இனைய ராகிநப் பிரிந்திசி னோரே. —மாமூலனார்.

(பாடம்) * முன்னுநர். † மாமிகு. ‡ தேமுதிர் குன்ற.

(சொ - ள்.) ௬—௯. தோழி—, வாழி—, மாமலர் வண்ணம் இழந்த கண்ணும் - கரிய குவளை மலரின் அழகினை இழந்த கண்களும், பூ நெகிழ் அணையில் சாஅய தோளும் - அழகு நெகிழ்ந்து நிரைத்த அணைபோன்ற மெலிந்த தோள்களும் (கொண்டு), நன்னர் மாக்கள் விழைவனர் ஆய்ந்த தொல் நலம் இழந்த துயரமொடு - நன்மையுடைய ஆயமக்கள் விரும்பி ஆராயும் பழைய நலத்தினை இழந்ததனாலாய துயரத்துடன், என்னதூஉம் இனையல்-சிறிதும் வருந்தாதே;

௧௦—௭. தோள்தாழ்பு இருளிய குவை இரு கூந்தல்-தோள்களில் தாழ்ந்து இருண்ட திரண்டபெரிய கூந்தலையுடைய, மடவோள் தழீஇய விறலோன் மார்பில் - மடப்பத்தையுடைய மனைவியைத் தழுவியுள்ள மேம்பட்ட தலைவன் மார்பில், புன்தலைப் புதல்வன் ஊர்புஇழிந்தாங்கு-புல்லிய தலையினையுடைய புதல்வன் ஏறி இறங்குவது போன்று, கடுஞ்சூல் மடப்பிடி தழீஇய வெண்கோட்டு இனம் சால் வேழம் - நிறைந்த சூலினையுடைய இளைய பிடியினைத் தழுவிக்கிடந்த வெள்ளிய கோட்டினையுடைய இனத்துடன் கூடிய களிறு, கன்று ஊர்பு இழிதர-கன்று தம்மீது ஏறி இறங்க, பள்ளிகொள்ளும் பனிச்சுரம் நீந்தி-படுத்திருக்கும் குளிர்ந்த சுரநெறியைக் கடந்து, ஒள் இணர்க் கொன்றை ஓங்கு மலை அத்தம் - ஒள்ளிய பூங்கொத்துக்களையுடைய கொன்றை மரங்களையுடைய ஓங்கிய மலையையடுத்த நெறியில், வினைவலி யுறூஉம் நெஞ்சமொடு - பொருளீட்டும் வினையை வற்புறுக்கும் நெஞ்சத்தால்;

௧௧. நின் நிரை வளை நெகிழ - நினது நிரைத்த வளைகள் நெகிழும் படி;

௧௮. இனையர் ஆகி நம்பிரிந்திசினோர் - இவ்வனம் அருளிலராகி நம்மைப் பிரிந்து சென்ற தலைவர்;

௯—௧. முனை எழ முன்னுவர் ஓட்டிய - போர்செய்ய முற்பட்டோரை ஓட்டிய, முரண்மிகு திருவின்-வலிமிக்க வீரச் செல்வத்தினையும், மாமிகு தானை-வீரமிக்க படையினையுமுடைய, கண்ணன் எழினி-கண்ணன் எழினி என்பானது, தேம்முது குன்றம் இறந்தனராயினும் - தேன்மிக்க முதுகுன்றத்தினைக் கடந்தனராயினும், நீடலர் - நீட்டித்திராது வல்லே வந்துறுவர்.

(முடிபு) தோழி! வாழி! தொன்னலமிழந்த துயரமொடு இனையல்; பனிச்சுரம் நீந்தி, ஓங்குமலை அத்தம் வினைவலியுறூஉம் நெஞ்சமொடு, நின் நிரைவளை நெகிழ இனையராகி நப் பிரிந்திசினோர், கண்ணன் எழினி முதுகுன்றம் இறந்தனராயினும் நீடலர்.

(வி - ரை.) பூநெகிழ் அணை - நெகிழ்ச்சியுற்ற மலரணை என்றுமாம். அணை-தலையணை. கண்ணும் தோளும் கொண்டு என ஒருசொல் வருவித்துரைக்க. விழைவனர் ஆய்ந்த என்றது, தலைவியின் நலத்தை ஆராய்தல் அவர்க்கு ஓர் விளையாட்டு என்றபடி. யாழ, அசை. மடப்பிடிக்கு மடவோளும் அதனைத் தழுவிய வேழத்திற்கு விறலோனும்

அதன்மீது ஏறி இறங்கும் கன்றுக்குப் புதல்வனும் உவமம். மென்றோல் மடப்பிடி என்றமையால் சூலுற்ற மடவோள் என்று கொள்க. மென்றோல் முதற் சூலாமாம்.

---

198. குறிஞ்சி

[புணர்ந்து நீங்கிய தலைமகளது போக்கு நோக்கிய தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.]

கூறுவங் கொல்லோ கூறலங் கொல்லெனக்
கரந்த காமங் கைந்நிறுக் கல்லாது
நயந்துநாம் விட்ட நன்மொழி நம்பி
அரைநாள் யாமத்து விழுமழை கரந்து
*கார்விரை கமழுங் கூந்தல் தூவினை
நுண்ணூல் ஆகம் பொருந்தினள் வெற்பின்
†இளமழை சூழ்ந்த மடமயில் போல
வண்டுவழிப் படரத் தண்மலர் வேய்ந்து
வில்வகுப் புற்ற நல்வாங்கு குடச்சூல்
அஞ்சிலம் பொடுக்கி அஞ்சினள் வந்து
துஞ்சூர் யாமத்து முயங்கினள் பெயர்வோள்
ஆன்ற கற்பில் சான்ற ‡பெரிய
அம்மா அரிவையோ அல்லள் தெனாஅது
ஆஅய் நன்னாட்டு அணங்குடைச் சிலம்பில்
கவிரம் பெயரிய உருகெழு கவாஅன்
நேர்மலர் நிறைசுனை உறையுஞ்
சூர்மகள் மாதோ என்னும்என் னெஞ்சே.

—பரணர்.

(சொ - ள்.) கஎ. என் நெஞ்சே—,

க—கக. கரந்த காமம் - நம்முள் மறைந்துறையும் காமத்தினை, கூறுவதும் கொல்லோ கூறலம் கொல் என - இவட்குக் கூறுவேமோ அன்றிக் கூறாது விடுவேமோ என்று இங்ஙனம் எண்ணி எண்ணி, கைநிறுக்கல்லாது-(முடிவில்) அடக்க இயலாது, நயந்து நாம் விட்ட நன்மொழி நம்பி - விரும்பி நாம் வெளியிட்டிரந்த இனிய மொழியை விரும்பி, அரை நாள் யாமத்து - பாதியிரவில், விழுமழை கரந்து-பெய்

(பாடம்) * கார்மலர் கமழும். † இனமழை.
(பாடம்) ‡ பெரியள் அம்மா.

பும் மிக்க மழையில் மறைந்து, கார் விரை கமழும் கூந்தல் - கார் காலத்து மணம் கமழும் கூந்தலுடன், துவினை நுண் நூல் ஆகம் பொருந்தினள் - தூய தொழிற்பாடமைந்த நுண்ணிய நூலாலாகிய ஆடை தன் உடம்பின்கண்ணே பொருந்தப் பெற்றவளாய், வெற்பின் இளமழை சூழ்ந்த மடமயில்போல - மலையிடத்துள்ள இளமுகில் சூழ்ந்த மடப்பத்தையுடைய மயில்போல, வண்டு வழிப் படர தண் மலர் வேய்ந்து - வண்டுகள் பின்னே தொடரக் குளிர்ந்த மலர்களைச் சூடி, வில் வகுப்பு உற்ற நல்வாங்கு குடச்சூல் - வில்லினைப்போலும் வகையமைந்த நன்மைபொருந்திய குடச்சூல் ஆகிய, அம் சிலம்பு ஒடுக்கி - அழகிய சிலம்பினை ஒலியாது அடக்கி, அஞ்சினள் வந்து - அச்சத்துடன் வந்து, ஊர் துஞ்சு யாமத்து - ஊர்முழுதும் துயிலும் யாமத்திலே, முயங்கினள் பெயர்வோள் - எம்மைத் தழுவி மீள்வோள் ;

கம—கசு. ஆன்ற கற்பின் சான்ற 'பெரிய அம் மா அரிவையோ அல்லள் - நிறைந்த கற்பினால் உயர்ந்த பெருமையுற்ற அழகிய மாமை நிறமுடைய பெண்ணோ அல்லள் ;

கசு—எ. தெனாஅது ஆஅய்நல்நாட்டு அணங்கு உடை சிலம்பில் - தெற்கின்கண் உள்ளதாகிய ஆய் என்பானது நல்ல நாட்டில் தெய்வத்தையுடைய மலையில், கவிரம் பெயரிய உருகெழு கவான் - கவிரம் எனும் பெயரையுடைய அச்சம் பொருந்திய பக்கமலையில், நேர்மலர் நிறை சுனை உறையும் - மெல்லிய மலர்களையுடைய நிறைந்த சுனையில் உறையும், சூர்மகள் என்னும் - சூரரமகளே யாவள் என்பேம்.

(முடிபு) என் நெஞ்சே! நாம் விட்ட நன்மொழி நம்பி, தண் மலர் வேய்ந்து அஞ்சிலம் பொடுக்கி, மடமயில்போல அஞ்சினள் வந்து யாமத்து முயங்கினள் பெயர்வோள் அரிவையோ அல்லள்; சுனையுறையும் சூர்மகள் என்னும்.

(வி - ரை.) கூந்தலும் நுண்நூலாடையும், உடம்பின் பின்னும் முன்னும் பொருந்தியுள்ள தலைவியின் தோற்றம், இளமேகம் சூழ்ந்த மயில் போல்வதாயிற் றென்க. குடச்சூல் - சூலுற்றதுபோல் புடைபட்டிருக்கும் சிலம்பு. குடச்சூல் ஆகிய சிலம்பு என இருபெயரொட்டாகக் கொள்க. குடைச்சூல் எனப் பாடங் கொள்ளலுமாம்; *'பசும்பொன் குடைச்சூல் சித்திரச் சிலம்பு' என்பது காண்க. 'வெளிப்பாட்டிற்கு அஞ்சிக் கரந்து சிலம்பொடுக்கி ஊர்துஞ்சு யாமத்து வந்து முயங்கிப் பெயர்வாள் ஆயினள் ; அங்ஙனம் வந்து செல்வோளை ஓர் அரிவை யென்று கூறுதற்கு எளியள் அல்லள் ; ஆகலின் அவளைச் சுனையுறையும் தெய்வம் என்பேம்;' என்று தலைவன் தன் நெஞ்சிற்கு வியந்து கூறினான் என்க. துஞ்சு ஊர் யாமம் என்பதனை ஊர் துஞ்சு யாமம் என மாறுக. ஏர் மலர் எனக்கொண்டு அழகிய மலர் என்றலுமாம் என்றும் - என்பேம் என்றும் பொருட்டு.

* சிலப். கக: கசுஅ—ககக.

(மே - ள்.) *'பண்பில் பெயர்ப்பினும்' என்னுஞ் சூத்திரத்து இச் செய்யுளைக் காட்டி, இது இரவுக் குறிக்கண் அவட்பெறாது மலிந்தது என்றும், †'இரவுக் குறியே இல்லகத் துள்ளும், மனையோர் கிளவி கேட்கும் வழியதுவே' என்னுஞ் சூத்திரத்து, 'அஞ்சிலம் பொடுக்கி யஞ்சினள் வந்து, துஞ்சூர் யாமத்து முயங்கினள் பெயர்வோள்' என வருவது 'மனையோர் கிளவி கேட்கும் வழியது' என்றும் கூறினர், நச்.

---

199. பாலை

[பொருள் கடைக்கூட்டிய நெஞ்சிற்குத் தலைமகன் சொல்லியது.]

கரைபாய் வெண்டிரை கடுப்பப் பலவுடன்
நிரைகால் ஒற்றலின் கல்சேர்பு உதிரும்
வரைசேர் மராஅத்து ஊழ்மலர் பெயல்செத்து
உயங்கல் யானை நீர்நசைக்கு அலமரச்
சிலம்பி வலந்த வறுஞ்சினை வற்றல்
அலங்கல் உலவை அரிநிழல் அசைஇத்
திரங்குமரல் கவ்விய கையறு ‡தொகுநிலை
அரம்தின் ஊசித் திரள்நுதி அன்ன
திண்ணிலை எயிற்ற செந்நாய் எடுத்தலின்
வளிமுனைப் பூளையின் §ஒய்யென்று அலறிய
கெடுமான் இனநிரை ¶தரீஇய கலையே
கதிர்மாய் மாலை ஆண்குரல் விளிக்குங்
கடல்போல் கானம் பிற்படப் பிறர்போல்
செல்வேம் ஆயின்எம் செலவுநன்று என்னும்
ஆசை உள்ளம் அசைவின்று துரப்ப
நீசெலற்கு உரியை நெஞ்சே வேய்போல்
தடையின மன்னுந் தண்ணிய திரண்ட
பெருந்தோள் அரிவை ஒழியக் குடாஅது
இரும்பொன் வாகைப் பெருந்துறைச் செருவில்
பொலம்பூண் நன்னன் பொருது$களத் தொழிய
வலம்படு கொற்றந் தந்த வாய்வாள்

---

* தொல். கள. ௧௨. † தொல். கள. ௪௦.

(பாடம்) ‡ தொகை நிலை. § ஒய்யென வலறிய.
¶ தேரிய. $ பொருகளத் தொழிய.

களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்
இழந்த நாடுதந் தன்ன
வளம்பெரிது பெறினும் வாரலென் யானே.

—கல்லாடனார்.

(சொ - ள்.) ௧௧. நெஞ்சே—.

௧—௧௩. கரை பாய் வெண் திரை கடுப்ப - கரைக்கண்ணே பாயும் வெள்ளிய அலையை ஒப்ப, நிரை கால் ஒற்றலின் - வரிசையாக வரும் காற்று மோதுதலின், பல உடன் சேர்பு கல் உதிரும் - பலவும் ஒருங்கே சேர்ந்து பாறையில் உதிர்கின்ற, வரை சேர் மரா அத்து ஊழ் மலர் - மலையின்கண் பொருந்திய வெண்கடம்பின் முற்றிய மலரை, பெயல் செத்து - மழையென்று கருதி, உயங்கல் யானை நீர் நசைக்கு அலமர - நீர் வேட்கையால் வருந்துதலையுடைய யானை அதனைத் தணித்தற்குச் சென்று சுழல, சிலம்பி வலந்த வறுசினை வற்றல் - சிலம்பி நூல் பின்னப்பெற்ற வறிய சினையினையுடைய வற்றல் ஆகிய, அலங்கல் உலவை அரி நிழல் அசைஇ - அசைகின்ற மரங்களின் அறல்பட்ட நிழலில் தங்கி, இரங்கு மரல் கவ்விய கையறு தொகுநிலை - வாடிய மரலைக் கவ்விய செயலற்ற கூட்டத்தில் (புகுந்து), அரம் தின் ஊசி திரள் நுதி அன்ன - அரத்தால் அராவப்பட்ட ஊசியின் திரண்ட முனையை யொத்த, திண் நிலை எயிற்ற செந்நாய் எடுத்தலின் - உறுதி பொருந்திய பற்களையுடைய செந்நாய் தாக்குதலின், வளிமுனைப் பூளையின் ஒய் என்று அலறிய - காற்றின்முன் பூளைப் பூவென விரைந்து அலறி யோடிய, கெடுமான் இனம்நிரை தரீஇய - காணாதொழிந்த தன் இனமாகிய மான்கூட்டத்தைக் கூட்டற்கு, கலை - கலைமான், கதிர்மாய் மாலை - ஞாயிறு மறைந்த மாலைப்பொழுதில், ஆண் குரல் விளிக்கும் - தனது ஆண் குரல் தோன்ற அழைக்கும், கடல்போல் கானம் பிற்பட - கடல்போல் அகன்ற காடு பின்னே போக;

௧௩—௪. பிறர்போல் - ஏதிலரைப்போல, செல்வேம் ஆயின் எம் செலவு நன்று என்னும் - எம் தலைவியைப் பிரிந்து போவேமாயின் எமது போக்கு நன்றாகும் என்றெண்ணும், ஆசை உள்ளம் அசைவு இன்று துரப்ப - பொருளாசையுற்ற நின் உள்ளம் தளர்தலின்றிச் செலுத்த, நீ செலற்கு உரியை - நீ செல்லுதற்கு உரியை ஆவாய்;

௧௪—௨௧. யானே - யானோ, வேய்போல் தடையின மன்னும் - மூங்கிலைப்போல வளைந்தனவாகிப் பொருந்தும், தண்ணிய திரண்ட பெருந்தோள் அரிவை ஒழிய - குளிர்ந்த திரண்ட பெரிய தோளினையுடைய எம் தலைவி (இவண் தனித்து) ஒழிய, வலம்படு கொற்றம் தந்த வாய்வாள் - வென்ற வெற்றியினைத் தந்த வாய்த்த வாளினையுடைய, களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரல் - களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல் என்னும் சேர மன்னன், குடாஅது இரும்பொன் வாகை

பெருந்துறைச் செருவில் - மேற்கின் கண்ணதாகிய பெரியபொன்னினை யுடைய வாகை மரம் நிற்கும் பெருந்துறை என்னுமிடத்து நிகழ்ந்த போரில், பொலம்பூண் நன்னன் - பொற்பூண் அணிந்த நன்னன் என்பவன், பொருது களத்து ஒழிய - போர் செய்து களத்தில் மடிய, இழந்த நாடு தந்தன்ன - தான் முன்பு இழந்த நாட்டைப் பெற்றாலொத்த, வளம்பெரிது பெறினும் - பெரிய செல்வத்தைப் பெறுவதாயினும், வாரலென் - வருவேன் அல்லேன்.

(முடிபு) நெஞ்சே! பிறர்போல (தலைவியைப் பிரிந்து) செல்வேமாயின் எம் செலவு நன்றென்னும் ஆசையுள்ளம் துரப்ப; கடல்போல் கானம் பிற்பட நீ செலற்குரியை; யான் களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல் வாகைப் பெருந்துறைச் செருவில் நன்னனுனவன் பொருது களத்து ஒழிந்தமையால், தான் இழந்த நாடு தந்தன்ன வளம் பெரிது பெறினும் பெருந்தோள் அரிவை ஒழிய வாரலென்.

(வி - ரை.) நிரை நிரையாக மராமரத்தின்மேற் பாய்ந்து கலக்கும் காற்றிற்கு முறை முறையாகக் கரையிற் பாயும் திரை உவமையாகும். மராஅத்து உதிரும் மலர் எனக் கூட்டுக. நீர் நசைக்கு - நீர் நசையால். வறுஞ்சினை - தழையற்ற கிளை. வற்றல் - வற்றிய மரங்கள். உலவை - மரச்செறிவு. காட்டின் விரிவு தோன்றக் கடல்போல் கானம் என்றார். அன்புடையார் பிரியக் கருதாராகலின் பிறர்போல் செல்வேமாயின் என்றான். பிறர்போல் நீ செலற்கு உரியை என்று இயைத்துரைத்தலுமாம். வாகைமரம் நிற்றலின், பெருந்துறையானது வாகைப் பறந்தலை எனவும் படும்; இவ்வாகையானது நன்னன் காவல்மரம் என்பதும், அதனை நார்முடிச்சேரல் தடிந்தான் என்பதும், *'பொன்னங் கண்ணிப் பொலந்தேர் நன்னன், சுடர்வீ வாகைக் கடிமுதல் தடிந்த, தார்மிகு மைந்தின் நார்முடிச் சேரல்' என்பதனால் அறியப்படும். †'உருள்பூங் கடம்பின் பெருவாயில் நன்னனை, நிலைச் செருவின் ஆற்றலை யறுத்தவன், பொன்படு வாகை முழுமுதல் தடிந்து' என்பதனால் கடம்பின் பெருவாயில் என்பதும் வாகைப்பெருந்துறை என்பதும் ஓரிடத்தையே குறிப்பனபோலும். கடம்பின் பெருவாயில் நன்னன் ஊர் என்பர் பதிற்றுப்பத்து உரையாசிரியர். களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல் என்னும் பெயர்க்குக் காரணம் கூறுவாராய்ப் பதிற்றுப்பத்து உரையாசிரியர் ‡'களங்காய்க் கண்ணி நார்முடி என்றது, களங்காயாற் செய்த கண்ணியும் நாரால் செய்த முடியும் என்றவாறு' எனவும், 'தான் முடி சூடுகின்ற காலத்து ஒரு காரணத்தால் முடித்தற்குத் தக்க கண்ணியும் முடியும் உதவாமையிற் களங்காயால் கண்ணியும் நாரால் முடியும் செய்துகொள்ளப்பட்டன என்றவாறு' எனவும் உரைத்தார். இழந்தநாடு தந்தன்ன என்றதனால், முன்

* பதிற்று. ௪௰: ௧௪-௬. † பதிற்று. ௪-ஆம் பத்து, பதிகம்: ௭-௮. ‡ பதிற்று. ௨௮.௪.

தன்னன்பால் இழந்த நாட்டை மீளப் பெற்றனன் என்பது போதரும் நாடு தந்தன்ன வளம் என்றிருப்பினும் தந்த நாடு போலும் வளம் என்பது கருத்தாகக் கொள்க.

(மே - ள்.) *'செலவிடை அழுங்கல் செல்லாமை யன்றே' என்னுஞ் சூத்திரத்து, 'களங்காய்க்கண்ணி......வாரலென் யானே' என்னும் அடிகளைக் காட்டி, இவை வன்புறை குறித்துச் செலவழுங்குதலின் பாலையாயிற்று என்றார், நச்.

200. நெய்தல்

[தலைமகன் குறிப்பறிந்த தோழி தலைமகற்குக் குறைநயப்பக் கூறியது.]

நிலாவின் இலங்கு மணல்மலி மறுகின்
புலாஅஞ் சேரிப் புல்வேய் குரம்பை
ஊரென வுணராச் சிறுமையொடு நீருடுத்து
இன்னா உறையுட்டு ஆயினும் இன்பம்
ஒருநாள் உறைந்திசி னோர்க்கும் வழிநாள்
தம்பதி மறக்கும் பண்பின் எம்பதி
வந்தனை சென்மோ வளைமேய் பரப்ப
பொம்மற் படுதிரை கம்மென உடைதரும்
மரனோங்கு ஒருசிறைப் பலபா ராட்டி
எல்லை எம்மொடு கழிப்பி எல்லுற
நல்தேர் பூட்டலும் உரியீர் அற்றன்று
சேர்ந்தனிர் செல்குவி ராயின் யாமும்
எம்வரை அளவையிற் பெட்குவம்
நும்மொப் பதுவோ உரைத்திசின் எமக்கே.

—†உலோச்சனார்.

(சொ - ள்.) எ. வளைமேய் பரப்ப - சங்குகள் மேயும் கடற்பரப்பினையுடைய தலைவனே!

க—எ. நிலாவின் இலங்கு மணல் மலி மறுகின் - நிலாவைப் போல விளக்கும் மணல் மிக்க தெருவிலுள்ள, புல்வேய் குரம்பை - புல்லால் வேயப்பெற்ற குடிசைகளையுடைய, புலால் அம் சேரி-புலால் நாறும் சேரியாகிய எம் பதி, ஊர் என உணராச் சிறுமையொடு - ஓர் ஊர் என்று உணரலாகாத சிறுமையினதாய், நீர் உடுத்து - நீர் சூழப் பெற்ற, இன்னா உறையுட்டு ஆயினும் - பொலிவற்ற உறையுளையுடைய

* தொல். கற்பு. ௪௪. (பாடம்) † நக்கீரர்.

தாயினும், இன்பம்-இன்பம். தருமாற்றால், ஒருநாள் உறைந்திசினோர்க்கும்-ஒருநாள் தங்கியிருந்தார்க்கும், வழி நாள் - பிற்றை நாள், தம்பதி மறக்கும் பண்பின் - தம்முடைய பதியினையே மறந்திடச் செய்யும் பண்பினையுடைமையால், எம் பதி - எமது அப்பதிக்கு, வந்தனை சென்மோ - வந்து செல்வாயாக;

அ—க௪. பொம்மல் படுதிரை கம் என உடைதரும் - பொலிவுற்ற ஒலிக்கும் அலை விரைந்து சிதர்ந்திடும், மரன் ஓங்கு ஒரு சிறை - மரம் ஓங்கிய ஒரு பக்கத்தே, பல பாராட்டி-பலவாய நின் குணங்களை யாங்கள் பாராட்ட, எல்லை எம்மொடு கழிப்பி - பகற்பொழுதினை எம்முடனிருந்து கழித்து, எல் உற - இரவு உறுங்கால், நல்தேர் பூட்டலும் உரியீர் - நமது நல்ல தேரினைப் பூட்டிச் செல்லுதற்கும் உரியீராவீர்; அற்றன்று-அதுவேயுமன்றி, சேர்ந்தனிர் செல்குவிர் ஆயின் - இரவில் எம் பதியில் தங்கிச் செல்லுவீராயின், யாமும் எம்வரை அளவையில் பெட்குவம் - யாங்களும் எங்களுக்கு இயன்ற அளவில் பேணுதல் செய்வேம்; நும் ஒப்பதுவோ - (இது) நும் கருத்திற்கிசைவதாமோ? எமக்கு உரைத்திசின் - எமக்குக் கூறுவீராக.

(முடிபு) எம் சேரி இன்னா உறையுட்டு ஆயினும், இன்பம் ஒரு நாள் உறைந்திசினோர்க்கும் வழிநாள் தம்பதி மறக்கும் பண்பினையுடைமையால், எம்பதி வந்தனை சென்மோ; எல்லை எம்மொடு கழிப்பி எல்லுற நல்தேர் பூட்டலும் உரியீர்; அற்றன்று, சேர்ந்தனிர் செல்குவிர் ஆயின், யாமும் எம் வரை அளவையிற் பெட்குவம்; நும் ஒப்பதுவோ எமக்கு உரைத்திசின்.

(வி - ரை.) புல்வேய் குரம்பை: புல் - பனைமட்டை முதலியன. புலால் நாறுதலானும், புல்வேய் குரம்பையுடைமையானும், நீர் உடுத்தலானும், சேரி இன்னா உறையுட்டு ஆயிற்று. அன்னதாயினும் அன்புடையாருடன் கூடி நுகரும் இன்பம் பெரிதுடையது என்பாள், 'இன்பம், ஒரு நாள் உறைந்திசினோர்க்கும் வழிநாள், தம் பதி மறக்கும் பண்பின் எம் பதி' என்றாள். ஒரு நாள் உறைந்திசினோர்க்கும் என்பதனால், பல நாள் உறைவார் பெறும் இன்பம் கூறவேண்டாதாயிற்று. பாராட்டி-பாராட்ட எனத் திரிக்க. நல்தேர் பூட்டலும் என்றது, அதன் காரியமாகிய செல்கையை உணர்த்திற்று. அற்றன்று-அஃதன்றி, வந்து செல்லுதல் என்னும் பொதுமை கருதி, இரண்டினையும் ஒப்பதுவோ என ஒருமையாற் கூறினாள்.

---

201. பாலை

[பிரிவிடை வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.]

அம்ம வாழி தோழி பொன்னின்
அவிரெழில் நுடங்கும் அணிகிளர் ஓடை
வினைநவில் யானை விறல்போர்ப் பாண்டியன்

புகழ்மலி சிறப்பிற் கொற்கை முன்துறை
அவிர்கதிர் முத்தமொடு வலம்புரி சொரிந்து
தழையணிப் பொலிந்த கோடேந்து அல்குல்
பழையர் மகளிர் பனித்துறைப் பரவப்
பகலோன் மறைந்த அந்தி ஆரிடை
உருகெழு பெருங்கடல் உவவுக்கிளர்ந் தாங்கு
அலரும் மன்றுபட் டன்றே அன்னையும்
பொருந்தாக் கண்ணள் வெய்ய உயிர்க்குமென்று
எவன்கை அற்றனை இகுளை சோழர்
வெண்ணெல் வைப்பின் நல்நாடு பெறினும்
ஆண்டமைந்து உறைநர் அல்லர் முனாஅது
வான்புகு தலைய குன்றத்துக் கவாஅன்
பெருங்கை எண்கின் பேழ்வாய் ஏற்றை
இருள்துணிந் தன்ன குவவுமயிர்க் குருளை
தோன்முலைப் பிணவொடு திளைக்கும்
வேனில் நீடிய சுரன்இறந் தோரே.

—மாமூலனார்.

(சொ - ள்.) க—கஉ. தோழி—, வாழி,—அம்ம - நான் கூறுவ தனைக் கேட்பாயாக; பொன்னின் அவிர் எழில் நுடங்கும் - பொன் னிலாகிய விட்டு விளங்கும் அழகொளி அசையும், அணிகிளர் ஓடை - அழகுமிக்க நெற்றிப் பட்டத்தினையுடைய, வினை நவில் யானை-போர்ச் செயலிற் பயின்ற யானைகளையுடைய, விறல்போர்ப் பாண்டியன் - போரில் வெற்றிகொள்ளும் பாண்டியனது, புகழ்மலி சிறப்பின் கொற்கை முன் துறை-புகழ்மிக்க சிறப்பினையுடைய கொற்கைப் பதி யின் கடற்றுறையிலே, அவிர் கதிர் முத்தமொடு வலம்புரி சொரிந்து- விளங்கும் ஒளியினையுடைய முத்துக்களுடன் வலம்புரிச் சங்கினையும் சொரிந்து, தழை அணிப் பொலிந்த கோடு ஏந்து அல்குல் பழையர் மக ளிர்-தழையுடை அணிதலாற் பொலிவுற்ற பக்கம் உயர்ந்த அல்குலினை யுடைய பழையரது பெண்டிர், பனித்துறை பரவ - குளிர்ந்த துறைக் கண் தெய்வத்தினைப் பரவாநிற்க, பகலோன் மறைந்த அந்தி ஆர்இடை- ஞாயிறு மறைந்த அந்தியாகிய அரிய பொழுதிலே, உருகெழு பெருங் கடல் உவவுக் கிளர்ந்தாங்கு-அச்சம் பொருந்திய பெரிய கடலானது நிறைமதி நாளில் ஆரவாரித் தெழுந்தாற்போல, அலரும் மன்று பட் டன்று-(ஊரார் கூறும்) அலரும் மன்றின்கண் பரவியது, அன்னையும் பொருந்தாக் கண்ணள் வெய்ய உயிர்க்கும் - தாயும் கண் துயிலாளாய் வெம்மையுடையனவாக மூச்செறியும், என்று - என்று இங்ஙனம் கூறி, எவன் கையற்றனை - என் செயலற்றனை?

௧௨. இகுளை - தோழியே!

௧௩—௧௬. முழுஅது - பழையதாகிய, வான் புகு தலைய குன்றத்துக் கவாஅன் - வானில் ஓங்கிய உச்சியினையுடைய மலையின் சாரற்கண்ணே, பெருங்கை எண்கின் பேழ்வாய் ஏற்றை - பெரிய கையினையும் பிளந்த வாயினையுமுடைய ஆண் கரடி, இருள் துணிந்தன்ன குவவு மயிர்க் குருளை - இருளைத் துணித்து வைத்தாற் போன்ற திரண்ட மயிரினையுடைய குட்டியுடனும், தோல் முலைப் பிணவொடு - திரங்கிய முலையினையுடைய பெண் கரடியுடனும், திளைக்கும் - மகிழ்ந்திருக்கும், வேனில் நீடிய சுரன் இறந்தோர் - வெம்மைமிக்க பாலை நிலத்தைக் கடந்து சென்ற நம் தலைவர்;

௧௭—௮. சோழர் வெண்ணெல் வைப்பின் நல்நாடு பெறினும் - சோழ மன்னரது வெண்ணெல் விளையும் ஊர்களையுடைய நல்ல நாட்டினையே பெறுவதாயினும், ஆண்டு அமைந்து உறைநர் அல்லர் - அங்கே மனமுவந்து தங்கிவிடுவாரல்லர்.

(முடிபு) தோழி! வாழி! அம்ம: 'பெருங்கடல் உவவுக் கிளர்ந் தாங்கு அலரும் மன்று பட்டன்று; அன்னையும் வெய்ய உயிர்க்கும்' என்று எவன் கையற்றனை; இகுளை! சுரனிறந்தோர், சோழர் நல்நாடு பெறினும், ஆண்டு அமைந்து உறைநர் அல்லர்.

(வி - ரை.) முத்தமொடு வலம்புரி சொரிந்து என்றமையால், அவற்றைப் பெறுதற்கிடனாகிய கொற்கைத் துறையின் சிறப்புக் கூறிய வாறாயிற்று. பழையர்-நெய்தல் நில மாக்கள்: கள் விற்பவர். பழையர் மகளிர் உவாநாளிலே முத்தையும் வலம்புரியையுஞ் சொரிந்து கடற் றெய்வத்தைப் பரவுவாரென்க. உவா நாளிற் கடல் பொங்கி எழுதலின் பெருங்கடல் உவவுக் கிளர்ந்தாங்கு என்றார். உவவு: குறியதன் இறுதிச் சினை கெட்டு உகரம் பெற்று முடிந்தது. அலரும், அன்னையும் எச்சவும்மைகள். சோழரது நல்நாடு போலும் பொருளை ஆண்டுப் பெறுவதாயினும் என்பது கருத்தாகக்கொள்க. எண்கின் ஏற்றை குருளையொடும் பிணவொடும் திளைக்கும் என்றது, அன்புறு தகுந வாகிய அவற்றைக் கண்டு, தலைவர் விரைவில் மீள்வர் என்று குறித்த வாறாகும்.

---

202. குறிஞ்சி

[இரவுக் குறிக்கண் வந்து நீங்கும் தலைமகற்குத் தோழி சொல்லி வரைவு கடாயது.]

வயங்குவெள் ளருவிய குன்றத்துக் கவாஅன்
கயந்தலை மடப்பிடி இனனே மார்பப்
புலிப்பகை வென்ற புண்கூர் யானை

கல்லகச் சிலம்பிற் கையெடுத் துயிர்ப்பின்
நல்லிணர் வேங்கை நறுவீ கொல்லன்
குருகூது மிதியுலைப் பிதிர்விற் பொங்கிச்
சிறுபன் மின்மினி போலப் பலவுடன்
மணிநிற இரும்புதல் தாவும் நாட
யாமே அன்றியும் உளர்கொல் பானாள்
உத்தி அரவின் பைத்தலை துமிய
உரவுரு முரறும் உட்குவரு நனந்தலைத்
தவிர்வில் உள்ளமொடு எஃகு துணையாகக்
கனையிருள் பரந்த கல்லதர்ச் சிறுநெறி
தேராது வரூஉம் நின்வயின்
ஆரஞர் அரும்படர் நீந்துவோரே.

—*ஆலூர்கிழார் மகனார் கண்ணனார்.

(சொ - ள்.) ௧—அ. வயங்கு வெள் அருவிய குன்றத்து கவான்-விளங்கும் வெள்ளிய அருவியினையுடைய மலையின் சாரற்கண்ணே, கயம் தலை மடப்பிடி இனன் எம் ஆர்ப்ப - மெல்லிய தலையினையுடைய இளைய பிடி இனத்துடன் இன்பமடைய, புலி பகை வென்ற புண்கூர் யானை-புலியாகிய பகையைவென்ற புண் மிக்க ஆண் யானை, கல் அகச் சிலம்பில் கை எடுத்து உயிர்ப்பின் - கற்களை இடத்தே கொண்ட பக்க மலையில் கையை யுயர்த்துப் பெருமூச் செறிதலால், நல்இணர் வேங்கை நறுவீ - வேங்கைமரத்தினது நல்ல கொத்துக்களிலுள்ள நறுமண முடைய பூக்கள், கொல்லன் குருகு ஊது மிதிஉலைப் பிதிர்வில் பொங்கி - கொல்லன் துருத்தியை மிதித்து ஊதும் உலையிற் பிதிர்ந்து எழும் தீப்பொறி போலப் பொங்கி எழுந்து, சிறு பல் மின்மினி போல-சிறிய பலவாய மின்மினிப் பூச்சிகளைப் போல, பலவுடன் மணி நிற இரும்புதல் தாவும் - பலவும் ஒருங்கே நீலமணியின் நிறத்தினை ஒத்த பெரிய புதரில் பரவி விழும், நாட - நாட்டையுடைய தலைவனே!

௯—௧௫. பானாள் - நடு இரவில், அரவின் உத்தி பை தலை துமிய - பாம்பினது புள்ளிகளையுடைய படம் பொருந்திய தலை துணி பட, உரவு உரும் உரறும் உட்குவரு நனந்தலை - வலிய இடியானது முழக்கும் அச்சம் வரும் அகன்ற இடத்தே, தவிர்வு இல் உள்ளமொடு எஃகு துணையாக - ஊக்கம் குன்றுதலில்லாத உள்ளத்துடன் வேலே துணையாக, கனை இருள் பரந்த கல்அதர் சிறுநெறி - செறிந்த இருள் பரவிய கற்களையுடைய வழியாகிய ஒடுங்கிய நெறியில், தேராது வரூஉம் நின்வயின் - ஏதத்தை ஆராயாது வரும் நின்னிடத்து, ஆர் அஞர் அரும்

(பாடம்) * ஆலூர் கிழார் மள்ளனுகனார்.

படர் நீந்துவோர் - பொறத்தற்கரிய துன்பமாகிய அரிய நினைவினை நீந்துவோர், யாமே அன்றியும் உளர்கொல் - எம்மையன்றிப் பிறரும் உளரோ?

(முடிபு) நாட! சிறுநெறி தேராது வரும் நின்வயின், ஆர்அஞர் அரும்படர் நீந்துவோர் யாமே அன்றியும் உளரோ?

யானை உயிர்ப்பின் வேங்கை நறுவீ பொங்கி மின்மினிபோலப் புதல் தாவும் நாட என்க.

(வி - ரை.) உயிர்ப்பின் - உயிர்த்தலால். பிதிர்வு - பிதிர்கின்ற தீப்பொறி. படர் - துயர் நினைவு. நீந்துவோர் என்றதனால் நினைவாகிய வெள்ளம் என்பது பெற்றாம். நீ இரவுக் குறிக்கண் வருதலால் யாம் துன்புறுதல்போலத் துன்புறுவார் பிறர் இலர் என்பாள், நீந்துவோர் யாமே யன்றியும் உளர்கொல் என்றாள்; அதனால், எமது துன்பம் நீங்க விரைவில் வரைந்து கொள்க என வரைவு கடாயினாளாம்.

(உ - றை.) புலிப்பகை வென்ற யானை யுயிர்ப்பின் வேங்கைவீ மின்மினிபோலப் புதல் தாவும் என்றது, தலைவன் இடையீட்டினைக் கடந்து இரவுக் குறிக்கண் வருதலால் ஊரெங்கும் அலர் எழுகின்றது என்றபடி.

---

203. பாலை

[மகட் போக்கிய *தாய் சொல்லியது.]

உவக்குந ளாயினும் உடலுந ளாயினும்
யாயறிந் துணர என்னார் தீவாய்
அலர்வினை மேவல் அம்பல் பெண்டிர்
இன்னள் இனையள்நின் மகளெனப் பன்னாள்
எனக்குவந் துரைப்பவுந் தனக்குரைப் பறியேன்
நாணுவள் இவளென நனிகரந் துறையும்
யானில் வறுமனை யொழியத் தானே
அன்னை யறியின் இவணுறை வாழ்க்கை
எனக்கெளி தாகல் இல்லெனக் கழற்கால்
மின்னொளிர் நெடுவேல் இளையோன் முன்னுறப்
பன்மலை யருஞ்சுரம் போகிய தனக்கியான்
அன்னேன் அன்மை நன்வா யாக
மானதர் மயங்கிய மலைமுதற் சிறுநெறி
வெப்பிடை யுறாஅ தெய்தி முன்னர்ப்

(பாடம்) * செவிலி.

புல்லென் மாமலைப் புலம்புகொள் சிறூர்ச்
செல்விருந் தாற்றித் துச்சி லிருத்த
நுனைகுழைத் தலமரு நொச்சி
மனைகெழு பெண்டியான் ஆகுக மன்னே.

—கபிலர்.

(சொ - ள்.) ௧—௫. உலக்குநர் ஆயினும் உடலுநர் ஆயினும்-உவப்பு அடைவார் ஆயினும் மாறுபடுவார் ஆயினும், யாய் அறிந்து உணர என்னார் - தாய் ஆய்ந்து உணர்க என்று கருதாராய், அலர் வினை மேவல் அம்பல் பெண்டிர்-கொடிய வாயால் அலர் கூறுந் தொழிலையே விரும்புதலுடைய புறங்கூறும் பெண்டிர்கள், நின்மகள் இன்னள் இனையள் என - நின் மகள் இன்ன தன்மையள் இனைய தன்மையள் என்று, பல் நாள் எனக்கு வந்து உரைப்பவும் - பல நாளும் என்பால் வந்து கூறவும்;

௫—௭. நாணுவள் இவள் என - இவள் நாணுவாள் என்று எண்ணி, தனக்கு உரைப்பு அறியேன் - அவளுக்கு உரைத்தல் செய்யேனாய், கனிகரந்து உறையும் - மிகவும் மறைத்து ஒழுகும், யான்இவ் வறு மனை ஒழிய - யான் இந்த வறிய மனையில் ஒழிந்திட;

௭—௧௧. தான் - என் மகள், அன்னை அறியின் இவண் உறை வாழ்க்கை - என் அன்னை அறியின் இங்குத் தலைவனுடன் களவிற் கூடியுறையும் வாழ்க்கை, எனக்கு எளிதாகஇல் என - எனக்கு எளிய தொன்றாதல் இல்லை என்று எண்ணினமையால், கழல்கால் மின் ஒளிர் நெடுவேல் இளையோன் முன்உற - கழலினைத் தரித்த காலையும் மின் போல ஒளிவிடும் நீண்ட வேலையுமுடைய இளமைப் பருவமுடைய தன் தலைவன் முன்னே ஏக, பல் மலை அரு சுரம் போகிய தனக்கு-பல மலைகளையுடைய அரிய காட்டினைக் கடந்து சென்ற அவளுக்கு;

௧௧—௬. யான் அன்னேன் அன்மை நன் வாயாக-யான் அத்தன்மையினேன் அல்லாமை மிக்க உண்மையாதல் தோன்ற, மான் அதர் மயங்கிய மலைமுதல் சிறுநெறி-விலங்குகள் செல்லும் நெறிகள் பின்னிக் கிடக்கும் மலையடியிற் சிறிய நெறிகளில், வெய்து இடையுறாது முன்னர் எய்தி - இடையே தீங்கு உண்டாகாதவாறு அவர்கட்கு முன்னரே சென்று சேர்ந்து, புல் என் மா மலை புலம்பு கொள் சிறூர் - பொலிவற்றிருக்கும் பெரிய மலையைச்சார்ந்த தனிமைகொண்ட சிறிய ஊரில், செல் விருந்து ஆற்றி - வரும் விருந்தாக ஏற்று அவர்களை உண்பித்து, துச்சில் இருத்த - தங்குமிடத்தில் இருக்கச் செய்ய;

௭—அ. நுனை குழைத்து அலமரும் நொச்சி - முனைகள் தளிர்க்கப் பெற்று அசைந்திடும் நொச்சி சூழ்ந்த, மனைகெழு பெண்டு யான் ஆகுக - மனைக்குரிய பெண்டாக யான் ஆவேனாக.

(முடிபு) அம்பல் பெண்டிர் இன்னள் நின் மகளெனப் பன்னாள் எனக்கு வந்து உரைப்பவும் (அவள்) தனக்கு உரைப்பறியேன் கரந் துறையும் யான் வறுமனை ஒழிய, இளையோன் முன்னுற அருஞ்சுரம் போகிய தனக்கு, யான் அன்னேன் அன்மை வாயாக, சிறுநெறி எய்திச் சீறூர்ச் செல் விருந்தாற்றித் துச்சிலிருத்த, மனைகெழு பெண்டு யானாகுக.

(வி - ரை) இன்னள் இனையள்: ஒரு பொருள் குறித்த சொன்னடை. அம்பற் பெண்டிரது கொடுமை கூறுவாள், அவர் புறத்தே உரைத்தலன்றிப் பன்னாள் என்பால் வந்து, நின்மகள் இனையளென் றுரைத்தார் என்றும், அதனைக் கேட்டும் தன் மகள் நாணால் வருந்தாத படி, அவளுக்கு உரையாமையே யன்றி எவ்வாற்றானும் அது புலப்படா மல் தான் மறைத்தலும் செய்த அருமை தோன்றத், 'தனக்குரைப் பறியேன் நாணுவள் இவளென கனிகரந் துறையும் யான்' என்றும் கூறினாள். தன் மகள் நீங்கிய மனை சிறிதும் பொலிவின்றி வறுவிய மனையாகத் தோன்றலின், யான் இவ் வறுமனை யொழிய என்றாள். அருஞ்சுரம் போயினாள், அங்ஙனம் போகிய தனக்கு என வேறு அறுத்து உரைக்க. அவள் தலைவனொடு நுகரும் இன்பத்தை உணர்ந்தான் வெறுமையே யன்றி உவத்தலும் செய்தல் முழு உண்மையாதலை, இவ்வாறன்றி வெளிப்படுத்தல் அரிதென்பாள், 'யான் அன்னேனன்மை கன்வாயாகச், சீறூர்ச் செல்விருந் தாற்றித் துச்சிலிருத்த மனைகெழு பெண்டி யானாகுக' என்றாள். மன்: அசைநிலை; ஒழியிசையுமாம்.

---

204. முல்லை

[வினைமுற்றிய தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.]

உலகுடன் நிழற்றிய தொலையா வெண்குடைக்
கடல்போல் தானைக் கலிமா வழுதி
வென்றமர் உழந்த வியன்பெரும் பாசறைச்
சென்றுவினை முடித்தன மாயின் இன்றே
கார்ப்பெயற்கு எதிரிய காண்டகு புறவில்
கணங்கொள் வண்டின் அஞ்சிறைத் தொழுதி
மணங்கமழ் முல்லை மாலை ஆர்ப்ப
உதுக்காண் வந்தன்று பொழுதே வல்விரைந்து
செல்க பாகநின் நல்வினை நெடுந்தேர்
வெண்ணெல் அரிநர் மடிவாய்த் தண்ணுமை
பன்மலர்ப் பொய்கைப் படுபுள் ஓப்பும்

காய்நெற் படப்பை *வாணன் சிறுகுடித்
தண்டலை கமழுங் கூந்தல்
ஒண்டொடி மடந்தை தோளிணை பெறவே.

—மதுரைக் காமக்கணி நப்பாலத்தனார்.

(சொ - ள்.) ௧. பாக - பாகனே!

௧—௪. உலகு உடன் நிழற்றிய தொலையா வெண்குடை - உலக முழுவதும் நிழல் செய்த கெடாத வெண்கொற்றக் குடையினையும், கடல்போல் தானை - கடல்போன்ற சேனையினையும், கலி மா - செருக்கிய குதிரையினையுமுடைய. வழுதி - பாண்டியன், வென்று அமர் உழந்த வியன் பெரு பாசறைச் சென்று - போரில் முயன்று வென்ற அகன்ற பெரிய பாசறைக்கண்ணே சென்று, வினை முடித்தனம் ஆயின் - வினையை வெற்றிபெற முடித்தோம் ஆதலானும்;

௫—௮. கார் பெயற்கு எதிரிய கான்தகு புறவில் - கார்காலத்தின் மழையை ஏற்றுக்கொண்டு (தழைத்த) காண்டற்கு இனிய காட்டில், கணம் கொள் வண்டின் அம் சிறைத் தொழுதி - கூட்டம் கூட்டமாக வரும் அழகிய சிறையினையுடைய வண்டின் தொகுதி, மணம் கமழ் முல்லை மாலை ஆர்ப்ப - மணம் வீசும் முல்லை மலரில் மாலைக் காலத்தே ஆரவாரிக்க, பொழுது உதக்காண் வந்தன்று - உதோ, கார் காலம் வந்து விட்டது (ஆதலானும்);

௧0—௪. வெண்நெல் அரிநர் - வெண்ணெல்லை அரிவோர் (அடிக்கும்), மடிவாய் தண்ணுமை - தோல் மடங்கிய வாயினையுடைய கிணையின் ஒலி, பல் மலர்ப் பொய்கை படுபுள் ஓப்பும் - பல மலர்களையுடைய பொய்கையில் பொருந்திய பறவைகளை ஓட்டும், காய் நெல் படப்பை - விளைந்த நெற்களையுடைய வயல்களையுடைய, வாணன் சிறுகுடித் தண்டலை கமழும் கூந்தல் - வாணனது சிறுகுடியிலுள்ள சோலை என மணக்கும் கூந்தலையும், ஒள் தொடி - ஒளி பொருந்திய வளையலையும் உடைய, மடந்தை தோள் இணை பெற - நம் தலைவியின் தோளிணையை முயங்குதற்கு;

௪. இன்றே - இப்பொழுதே;

௮—௧. நின் நல் வினை நெடுதேர் - நினது நல்ல தொழிற் திறம் அமைந்த நீண்ட தேர், வல் விரைந்து செல்க - மிக விரைந்து செல்லுவதாக.

(முடிபு) பாக! வழுதி பாசறை வினை முடித்தனம் ஆதலானும், உதோ பொழுது வந்தன்று (ஆதலானும்), மடந்தை தோளிணை பெற, நெடுந்தேர் விரைந்து செல்க.

(பாடம்) * பண்ணன் சிறுகுடி.

(வி - ரை.) அரசனது வெற்றியைக் குடைக்கு ஏற்றி, கொற்றக் குடை என்பவாகலின் தொலையா வெண்குடை என்றார். வென்று அமர் உழந்த-அமர் உழந்து வென்ற என மாறுக. முடித்தனம் ஆயின்-முடித்தனம் ஆதலால் என்க. ஆதலால் என்பதனைப் பின்னுங்கூட்டி, முடித்தனம் ஆதலானும், பொழுது வந்தன்று ஆதலானும் எனஉரைத்துக் கொள்க. வண்டாகிய தொழுதி என்க. உதக்காண் - உதோ. தேர் வல் விரைந்து செல்க என்றது, செல்லுமாறு செலுத்துக என்றபடி.

---

205. பாலை

[தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட தலைவி வற்புறுக்கும் தோழிக்குச் சொல்லியது.]

உயிர்கலந்து ஒன்றிய தொன்றுபடு நட்பில்
செயிர்தீர் நெஞ்சமொடு செறிந்தோர் போலத்
தையல் நின்வயின் பிரியலம் யாமெனப்
பொய்வல் உள்ளமொடு புரிவுணக் கூறித்
துணிவில் கொள்கைய ராகி இனியே
நோய்மலி வருத்தமொடு நுதல்பசப் பூர
நாம் அழத் துறந்தனர் ஆயினுந் தாமே
வாய்மொழி நிலைஇய சேண்விளங்கு நல்லிசை
வளங்கெழு கோசர் விளங்குபடை நூறி
நிலங்கொள வெஃகிய பொலம்பூண் கிள்ளி
பூவிரி நெடுங்கழி நாப்பண் பெரும்பெயர்க்
காவிரிப் படப்பைப் பட்டினத் தன்ன
செழுநகர் நல்விருந் தயர்மார் ஏமுற
விழுநிதி எளிதினின் எய்துக தில்ல
மழைகால் அற்சிரத்து மாயிருள் நீங்கி
நீடமை நிவந்த நிழல்படு சிலம்பிற்
கடாஅ யானைக் கவுண்மருங் குறழ
ஆசூர்பு இழிதரு காமர் சென்னிப்
புலியுரி வரியதள் கடுப்பக் கலிசிறந்து
நாட்பூ வேங்கை நறுமலர் உதிர
மேக்கெழு பெருஞ்சினை யேறிக் கணக்கலை
கூப்பிடூஉ உகளுங் குன்றகச் சிறுநெறிக்

கற்பிறங்கு ஆரிடை விலங்கிய
சொற்பெயர் தேஎத்த சுரனிறந் தோரே.

—நக்கீரர்.

(சொ - ள்.) ௧—௭. (தோழி!), தாம் - நம் தலைவர், உயிர் கலந்து ஒன்றிய தொன்றுபடு நட்பில் - உயிருடன் கலந்து பொருந்திய பல பிறவிகளினும் தொடர்ந்து வரும் நட்பினால், செயிர்தீர் நெஞ்சமொடு செறிந்தோர்போல - குற்றமற்ற நெஞ்சத்தால் கலந்தோர்போல, தையல்-பெண்ணே, நின்வயின் பிரியலம் யாம் என - நின்னிடத்தினின்றும் யாம் என்றும் பிரியேம் என்று, பொய் வல் உள்ளமொடு புரிவுணக் கூறி - பொய்மிக்க உள்ளத்தால் யாம் விரும்புமாறு கூறி, துணிவு இல் கொள்கையராகி - உறுதியில்லாத கொள்கையினராகி, இனி - இப்பொழுது, நோய்மலி வருத்தமொடு நுதல் பசப்பு ஊர - துன்பம் மிக்க வருத்தத்தால் நமது நெற்றியிற் பசலை பரக்கவும், நாம் அழ - நாம் அழவும், துறந்தனராயினும் - நம்மைப் பிரிந்து சென்றாராயினும்;

௧௫—௨௪. மழை கால் அற்சிரத்து மால் இருள் நீங்கி - மழையென்னப் பெய்யும் முன்பனிப் பருவத்து மயக்கத்தினைத் தரும் இருள் நீங்க, நீடு அமை நிவந்த நிழல்படு சிலம்பில் - நீண்ட மூங்கில் உயர்ந்த நிழல் பொருந்திய பக்க மலையில், கடாஅ யானைக் கவுள் மருங்கு உறழ - மதக்களிற்றினது கவுளின் பக்கத்தினை யொப்ப, ஆம் ஊர்பு இழிதரு காமர் சென்னி - நீர் ஊர்ந்து இறங்கும் அழகிய உச்சிமலையில், புலி உரி வரி அதள் கடுப்ப - புலியின் உரியாகிய வரிகளையுடைய தோலை யொப்ப, நாள்பூ வேங்கை நறுமலர் உதிர - மணநாளைக் காட்டும் பூக்களாய வேங்கையின் நறிய பூக்கள் உதிர்ந்திட, கலிசிறந்து மேக்கு எழு பெரு சினை ஏறி - செருக்கு மிக்கு அவ்வேங்கையின் மேனோக்கி யெழுந்த பெரிய கிளையில் ஏறி, கண கலை - கூட்டமாய ஆண் குரங்குகள், கூப்பிடூஉ உகளும் - தம் இனங்களைக் கூப்பிட்டுத் தாவும், குன்றகச் சிறுநெறி - குன்றிடையே செல்லும் சிறிய நெறியாகிய, கல் பிறங்கு ஆர் இடை விலங்கிய - கற்கள் விளங்கிய அரிய இடங்கள் குறுக்கிட்ட, சொல்பெயர் தேஎத்த சுரன் இறந்தோர் - மொழி வேறுபட்ட தேயங்களிலுள்ள பாலையைக் கடந்து சென்ற அவர்;

௮—௧௪. வாய்மொழி நிலைஇய சேண் விளங்கு நல் இசை - உண்மை நிலைபெற்ற நெடுந்தூரத்து விளங்கும் நல்ல புகழினையுடைய, வளங்கெழு கோசர் - செல்வம் மிக்க கோசர்களது, விளங்கு படை நூறி - விளக்கமுற்ற படையினை அழித்து, நிலம்கொள வெஃகிய பொலம்பூண் கிள்ளி - அவர்கள் நிலத்தைக் கைக்கொள்ள விரும்பிய பொற்பூணையுடைய சோழனது, பூவிரி நெடுங்கழி நாப்பண் - பூக்கள் விரிந்த நீண்ட கழியின் நடுவே, படப்பை - தோட்டங்களையுடைய,

பெரும் பெயர்க் காவிரிப் பட்டினத்து அன்ன - பெரிய புகழையுடைய காவிரிப்பூம்பட்டினத்தை யொத்த, செழுநகர் - வளவிய நம் இல்லில், நல்விருந்து அயர்மார் - நல்ல விருந்தாற்றுதற்கு, ஏம் உற - இன்பம் உண்டாக, விழுநிதி எளிதினின் எய்துக - சிறந்த பொருளை எளிதினில் அடைவாராக.

(முடிபு) தோழி! நம் தலைவர். 'தையல்! நின் வயிற் பிரியலம் யாம்' எனக்கூறி, நுதல் பசப்பூர நாம் அழத் துறந்தனராயினும், சொற்பெயர் தேஎத்த சுரன் இறந்தோராய அவர், காவிரிப் பட்டினத் தன்ன செழு நகர் நல்விருந் தயர்மார் ஏமுற விழுநிதி எளிதினின் எய்துக;

சிலம்பில் ஆமூர்பு இழிதரு சென்னியில் வேங்கை மலர் உதிர, பெருஞ்சினை ஏறிக் கணக்கலை உகளும் குன்றகச் சிறுநெறியாய ஆரிடை விலங்கிய சுரன் என்க.

(வி - ரை.) தொன்றுபடு நட்பு - பழமை பொருந்திய நட்பு; பல பிறவிகளினும் தொடர்ந்துவரும் நட்பு என்றபடி. கழிகாப்பண் படப் பையையுடைய காவிரிப்பட்டினம் என்க. இல்ல: விழைவுப்பொருட்டு. அற்சிரத்து மாலிருள் நீங்கி எனவே பின்பனியும் வேனிலும் போக் தமை பெற்றாம். நீங்கி-நீங்க எனத் திரிக்க. அருவி நீரொழுகும் மலையின் சென்னிக்கு மதஞ் சேர்தும் யானையின் கவுள் உவமையாகக் கூறப் பட்டது: *'மலைபடு கடாஅம் மாதிரத்து இயம்ப' என்னும் தொடரும், அதன் சிறப்பால் கூத்தராற்றுப்படை மலைபடுகடாம் எனப் பெயர் எய்தியதும் ஈண்டு அறியற்பாலன. நாட்பூ - புதியபூ என்றுமாம்.

---

206. மருதம்

[வாயில் வேண்டிச் சென்ற விறலிக்குத் தலைமகள் வாயில் மறுத்தது.]

என்னெனப் படுங்கொல் தோழி நன்மகிழ்ப்
பேடிப் பெண்கொண் டாடுகை கடுப்ப
†நகுவரப் பணைத்த திரிமருப் பெருமை
மயிர்க்கவின் கொண்ட மாத்தோல் இரும்புறம்
சிறுதொழில் மகாஅர் ஏறிச் சேணோர்க்குத்
துறுகல் மந்தியில் தோன்றும் ஊரன்
மாரி ஈங்கை மாத்தளி ரன்ன
அம்மா மேனி ஆயிழை மகளிர்
ஆரம் தாங்கிய அலர்முலை ஆகத்து
ஊராக் காதலொடு தாரிடைக் குழைய

---

*மலைபடு. ௩௫௨. (பாடம்) †நகுவரப் படைத்த.

முழவுமுகம் புலரா விழவுடை வியனகர்
வதுவை மேவல னாகலின் அதுபுலந்து
அடுபோர் வேளிர் வீரை முன்துறை
நெடுவெள் ளுப்பின் நிரம்பாக் குப்பை
பெரும்பெயற்கு உருகி யாஅங்குத்
திருந்திழை நெகிழ்ந்தன தடமென் றோளே.

—மதுரை மருதனிள நாகனார்.

(சொ - ள்.) ௧—௪. தோழி-, நல் மகிழ் - நல்ல களிப்புடன், பேடிப்பெண் கொண்டு - பேடியாகிய பெண்ணின் உருவம் பூண்டு, ஆடு கை கடுப்ப - ஆடுவானது பின்சென்று மேல்வளைந்த கையை யொப்ப, நகுவரப் பணைத்த திரி மருப்பு எருமை - விளக்குதலுறப் பெருத்த முறுக்குண்ட கொம்பினையுடைய எருமையின், மயிர்க்கவின் கொண்ட மா தோல் இரு புறம் - மயிரால் அழகுபெற்ற கரிய தோலினையுடைய பெரிய முதுகில், சிறுதொழில் மகாஅர் ஏறி - குறுந்தொழில் களைச் செய்யும் சிறுவர்கள் ஏறி, சேணோர்க்கு துறு கல் மந்தியில் தோன்றும் ஊரன் - சேய்மையிலுள்ளார்க்கு உருண்டைக் கல்லின் மீதுள்ள மந்திபோலக் காணப்படும் ஊரனாகிய நம் தலைவன்;

௭—௧௨. மாரி ஈங்கை மா தளிர் அன்ன - மாரிக் காலத்து ஈங்கைச் செடியிற் றோன்றும் சிறந்த தளிரினை ஒத்த, அம் மா மேனி ஆய் இழை மகளிர் - அழகிய மாமை நிறத்தினையுடைய மேனியினையும் ஆய்ந்த அணியினையுமுடைய பரத்தையரது, ஆரம் தாங்கிய அலர் முலை ஆகத்து - முத்துமாலையை ஏந்திய பரந்த முலையினையுடைய மார்பகத்தே, ஆராக் காதலொடு தார் இடை குழைய - அமையாத காதலுடன் பூமாலை இடைப்பட்டுக் குழைய, முழவு முகம் புலரா விழவு உடை வியன் நகர் - முழவின் ஒலி ஓய்தலில்லாத விழாவினையுடைய பெரிய மனையில், வதுவை மேவலன் ஆகலின் - மணத்தினைப் பொருந்துதலுடைய னாதலின்;

௧௨—௧௬. அது புலந்து - அச் செயலினை வெறுத்து, அடுபோர் வேளிர் வீரை முன்துறை - வெல்லும் போரினை வல்ல வேளிர்கட்கு உரிய வீரை என்னும் இடத்திலுள்ள துறையின் முன்னிடத்தே, நெடு வெள் உப்பின் நிரம்பாக் குப்பை - மீண்டு கிடக்கும் வெள்ளை யுப்பின் அளவிலடங்காத குவியல், பெரும் பெயற்கு உருகியாங்கு - மிக்க மழையால் உருகினாற்போல, தட மென் தோள் - எனது பெரிய மெல்லிய தோள்கள் மெலிந்து, திருந்து இழை நெகிழ்ந்தன - திருந்திய வளைகள் நெகிழப்பெற்றன;

௪. என் எனப்படும் சொல் - இவ்வாறாகவும் இவ் விறலியின் கூற்று யாதெனப்படும்.

(முடிபு) தோழி! ஊரன் வதுவை மேவலன் ஆகலின், மென்தோள் இழை நெகிழ்ந்தன; (இவ்வாறாகவும் இவ்விறலியின கூற்று) என் எனப்படும்!

(வி - ரை.) பேடிப்பெண் - பேடியாகிய பெண்ணென இருபெயரொட்டு. பெண்கொண்டு - பெண்ணினது உருவு கொண்டு. ஆடுகைகடுப்ப என்றமையாற் பின்சென்று மேல் வளைந்த மருப்பு என்க. எருமையின் புறத்திற்குத் துறுகல்லும் மகாஅருக்கு மந்தியும் உவமம். தார் இடை குழைய மேவலன் எனவும், அது புலர்ந்து தோள் இழை நெகிழ்ந்தன எனவும் கூட்டுக. முழவு முகம் புலரா விழவுடை வியனகர் வதுவை மேவலன் என்றமையால், அவன் பரத்தையர் இல்லில் வதுவை அயர்தலை அவ் வாரவாரமே புலப்படுத்தும் என்றாராயிற்று. உப்பின் குப்பை பெயற்கு உருகியாங்கு என்ற கருத்து, *'கடல்விளையமுதம் பெயற்கேற்றாஅங் குருகி புகுதல்' †'உப்பியல் பாவை யுறைபுற்றதுபோல, உக்கு விடுமென் னுயிர்' ‡'உப்பொய் சகடம், பெரும் பெயறலைய வீந்தாங்கு' எனப் பலவிடத்தும் வருதல் காண்க.

---

207. பாலை

[மகட்போக்கிய §தாய் சொல்லியது.]

அணங்குடை முந்நீர் பரந்த செறுவின்
உணங்குதிறம் பெயர்ந்த வெண்கல் அமிழ்தம்
குடபுல மருங்கின் உய்ம்மார் புள்ளோர்த்துப்
படையமைத் தெழுந்த பெருஞ்செய் ஆடவர்
நிரைப்பரப் பொறைய நரைப்புறக் கழுதைக்
குறைக்குளம்பு உதைத்த கற்பிறழ் இயவின்
வெஞ்சுரம் போழ்ந்த அஞ்சுவரு கவலை
பிளிறுர் கடாஅம் கரந்துவிடு கவுள
வெயில்தின வருந்திய நீடுமருப்பு ஒருத்தல்
பிணர்அழி பெருங்கை புரண்ட கூவல்
தெண்கண் உவரிக் குறைக்குட முகவை
அறனி லாளன் தோண்ட வெய்துயிர்த்துப்
பிறைநுதல் வெயர்ப்ப உண்டனள் கொல்லோ
தேங்கலந் தளைஇய தீம்பால் ஏந்திக்
கூழை உளர்ந்து ¶மோழைமை கூறவும்

---

*நற். அஅ. †கலி. கஙஅ. ‡குறு. ககூ.
(பாடம்) §செவிலி. ¶மொழிமை.

மறுத்த சொல்லள் ஆகி
வெறுத்த உள்ளமொடு உண்ணு தோளே.

—மதுரை எழுத்தாளன் சேந்தம்பூதனார்.

(சொ - ள்.) ௧—௭. அணங்கு உடை முந்நீர் பரந்த செறுவின்-தெய்வத்தையுடைய கடலின்நீர் பரவிய உப்பு விளையும் வயலில், உணங்கு திறம் பெயர்த்த வெண்கல் அமிழ்தம் - நீர் காய்ந்த தன்மையால்வேறாகிய வெள்ளிய உப்பாகிய அமிழ்தினை, குடபுல மருங்கின் உய்ம்மார் - மேற்குத் திசையிலுள்ள இடங்களுக்குச் செலுத்தும் பொருட்டு, புள் ஓர்த்து - நிமித்தம் பார்த்து, படை அமைத்து எழுந்த பெருஞ்செய் ஆடவர் - படைக்கலங்களை அமைத்துக்கொண்டெழுந்த பெரிய வீரச் செயல்களைப் புரியும் ஆடவர், நிரை பரப்பொறைய நரை புறக் கழுதை - அடுக்கிய உப்புப் பொதியாய சுமையினையுடைய வெள்ளிய புறத்தினையுடைய கழுதைகளின், குறைக் குளம்பு உதைத்த கல் பிறழ் இயவின் - தேய்ந்த குளம்பு உதைத்தலால் பரற்கற்கள் பிறழ்ந்து கிடக்கும் வழியாய, வெம் சுரம் போழ்ந்த அஞ்சுவரு கவலை - கொடிய பாலையினை ஊடறுத்துச் செல்லும் அச்சந்தோன்றும் கவர்த்த நெறிகளில்;

௮—௧௨. மிளிறு ஆர் கடாஅம் கரந்துவிடு கவுள - வண்டுகள் பொருந்தும் மதம் காய்ந்தொழிந்த கன்னத்தினையுடைய, வெயில் தின வருந்திய நீடு மருப்பு ஒருத்தல் - வெயில் கவிதலால் வருந்திய நீண்ட கொம்பினையுடைய களிற்றின், பிணர் அழி பெருங்கை புரண்ட கூவல் - சருச்சரை அழிந்த பெரிய கை நீர்வேண்டித் தழாவிப் பார்த்த கிணற்றினை, அறன் இலாளன் தோண்ட - அறம் இல்லானாகிய தன் தலைவன் தோண்டுதலால் ஊறிய, தென் உவரி குறைக்குட முகவை - தெளிந்த உவரையுடையதாகிய குறைக்குடமாக முகக்கப்பட்ட நீரை;

௧௩—௭. தேம் கலந்து அளைஇய தீம்பால் ஏந்தி - தேனைப் பெய்து நன்கு கலந்த இனிய பாலை ஏந்திக்கொண்டு, கூழை உளர்ந்து மோழைமை கூறவும் - கூந்தலைக் கோதி நயமொழிகளைக் கூறவும், மறுத்த சொல்லள் ஆகி - மறுத்துரைப்பாள் ஆகி, வெறுத்த உள்ளமொடு உண்ணுதோள் - வெறுப்புற்ற உள்ளத்துடன் அதனை உண்ணுதோளாகிய என்மகள்;

௧௮—௯. வெய்து உயிர்த்து - வெப்பத்துடன் மூச்செறிந்து, பிறை நுதல் வியர்ப்ப உண்டனள் கொல் - பிறைமதி போன்ற நெற்றி வியர்த்திடப் பருகினளோ!

(முடிபு) அஞ்சுவரு கவலையில், கூவலை அறனிலாளன் தோண்ட, குறைக்குட முகவை நீரை, தேம்கலந்து அளைஇய தீம்பாலை ஏந்தி உளர்ந்து மோழைமை கூறவும் உண்ணுதோள், வெய்துயிர்த்து நுதல் வியர்ப்ப உண்டனள் கொல்.

(வி - ரை.) குடபுல மருங்கின் உய்ம்மார் என்றமையால், உப்பு விளைந்தது குணகடற் செறுவில் என்பது போதரும். பலட-சேனையுமாம். செய்-வீரச்செய்கை; முதனிலைத் தொழிற்பெயர். கவுளவாகிய ஒருத்தல் எனவும், உவரியாகிய மூதலை எனவும் இயையும். மூதலை - முதிர்ந்த நீர். தெண்கண்: கண் அசை. *"மீன்கண் அற்றதன் சுனையே" என்புழிப்போல. தலைவிபால் மிக்க அன்புடையனாயினும் தமரிற் பிரித்துக்கொண்டு சென்றமையின் அறனிலாளன் என்றாள். மோழைமை - தாழ்ந்த மொழி.

---

208. குறிஞ்சி

[புணர்ந்து நீங்கும் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.]

யாம இரவின் நெடுங்கடை நின்று
தேமுதிர் சிமையக் குன்றம் பாடும்
நுண்கோல் அகவுநர் வேண்டின் வெண்கோட்டு
அண்ணல் யானை ஈயும் வண்மகிழ்
வெளியன் வேண்மான் ஆஅய் எயினன்
அளியியல் வாழ்க்கைப் பாழிப் பறந்தலை
இழையணி யானை யியல்தேர் மிஞிலியொடு
நண்பகல் உற்ற செருவில் புண்கூர்ந்து
ஒள்வாள் மயக்கமர் வீழ்ந்தெனப் புள்ளொருங்கு
அங்கண் விசும்பின் விளங்கு ஞாயிற்று
ஒண்கதிர் தெறுமைச் சிறகரில் கோலி
நிழல்செய்து உழறல் காணேன் யானெனப்
படுகளங் காண்டல் செல்லான் சினஞ்சிறந்து
உருவினை நன்னன் அருளான் கரப்பப்
பெருவிதுப் புற்ற பல்வேள் மகளிர்
குரூஉப்பூம் பைந்தார் அருக்கிய பூசல்
வசைவிடக் கடக்கும் வயங்குபெருந் தானை
அகுதை களைதந் தாங்கு மிகுபெயல்
உப்புச்சிறை நில்லா வெள்ளம் போல
நாணுவரை நில்லாக் காம நண்ணி
நல்கினள் வாழியர் வந்தே ஓரி

---

* புறம். ௧௦௬.

பல்பழப் பலவின் பயங்கெழு கொல்லிக்
கார்மலர் கடுப்ப நாறும்
ஏர்நுண் ஓதி மாஅ யோளே —பரணர்.

(சொ-ள்.) க—க. (நெஞ்சே!) யாம இரவின் நெடுகடை நின்று - இரவின் கடையாமத்தே நீண்ட கடை வாயிலில் நின்று, தேம் முதிர் சிமையக் குன்றம் பாடும் - தேன் நிறைந்த உச்சியினையுடைய நனது குன்றினைப் பாடுகின்ற, நுண்கோல் அகவுநர் வேண்டின்-சிறிய பிரப்பங் கோலைக் கொண்ட பாடுநர் விரும்பின், வெண்கோட்டு அண்ணல் யானை ஈயும் - வெள்ளிய கொம்பினையும் தலைமையையுமுடைய யானையை வழங்கும், வண்மகிழ் - வண்மையாலாகிய மகிழ்ச்சியினையும், அளி இயல் வாழ்க்கை - அருள் பொருந்தும் வாழ்க்கையினையுமுடைய, வெளியன் வேண்மான் ஆஅய் எயினன் - வெளியன் வேண்மான் ஆய் எயினன் என்பான், பாழி பறந்தலை - பாழி என்னும் ஊரின் கண்ணதாகிய போர்க்களத்தே, இழை அணி யானை இயல் தேர் மிஞிலியொடு - ஓடையை அணிந்த யானையினையும் இயன்ற தேரினையும் உடைய மிஞிலி என்பானொடு, நண்பகல் உற்ற செருவில் - நண்பகற் பொழுதிலே செய்த போரின்கண், ஒள்வாள் மயங்கு அமர் புண் கூர்ந்து வீழ்ந்தென - ஒள்ளிய வாட்படை மயங்கிய போரினாலே புண் மிக்கு வீழ்ந்தனனாக ;

௯—௧௪. அம் கண் விசும்பின் விளங்கு ஞாயிற்று - அழகிய இடத்தையுடைய வானில் விளங்கிய ஞாயிற்றினது, ஒள் கதிர் தெறுமை - ஒள்ளிய கதிர் அவன் உடலைக் காய்தல் செய்யாது, புள் ஒருங்கு சிறகரிற் கோலி - புட்கள் பலவும் கூடித் தம் சிறகுகளால் பந்தரிட்டு, நிழல் செய்து உழறல் காணேன் யானென-நிழலைச் செய்து சுழன்று கொண்டிருத்தலை யான் காணேனென்று, படுகளம் காண்டல் செல்லான்-அவன் பட்ட களத்தைக் காண்டற்குச் செல்லானாய், சினம் சிறந்து - கோபம் மிக்கு, உருவினை நன்னன் அருளான் கரப்ப-அச்சம் தரும் போர்ச் செயலினைக் கொண்ட நன்னன் அருளின்றி மறைந்து கொள்ள ;

௧௫—௮. பெரு விதுப்புற்ற பல் வேள் மகளிர் - மிக்க விரைவு கொண்டு வந்த பல வேளிர் மகளிர், குரூஉப் பூ பைந்தார் அருக்கிய பூசல்-விளங்கும் பூக்களாலாய அழகிய மாலைகளை அழித்து விட்டுச் செய்த அழுகை ஆரவாரத்தினை, வசைவிடக் கடக்கும் வயங்கு பெருதானை - பழிநீங்க மாற்றார் படையினை வெல்லும் விளங்குகின்ற பெரிய சேனையினையுடைய, அகுதை களைதந் தாங்கு - அகுதை என்பான் நீக்கினாற் போல ;

௧௯—௨௪. ஓரி-ஓரி என்பானது, பல் பழப் பலவின் பயம்கெழு கொல்லி - பல பழங்களையுடைய பலா மரங்களையுடைய பயன் மிக்க

கொல்லி மலையின், கார் மலர் கடுப்ப நாறும் - கார்காலத்துப் பூக்கும் மலரினை யொப்ப நாறும், ஏர் நுண் ஓதி - அழகும் மென்மையும் பொருந்திய கூந்தலையுடைய, மாயோள் - மாமை நிறத்தினளாய நம் தலைவி, உப்புச்சிறை நில்லா மிகுபெயல் வெள்ளம்போல - உப்பினுலாகிய அணையில் தடைப்பட்டு நில்லாத மிக்க மழையால் எழுந்த வெள்ளத்தைப்போல, நாணு வரை நில்லாக் காமம் நண்ணி - நாணத்தின் எல்லையில் அடங்காத காமம் பொருந்தப்பெற்று, வந்து நல்கினள் - வந்து நம் துன்பினை நீக்கி அருள் செய்தனள், வாழியர் - வாழ்வாளாக.

(முடிபு) (நெஞ்சே!) ஆஅய் எயினன் மிஞிலியொடு உற்ற செருவில் வீழ்ந்தெனப் புள் ஒருங்கு ஞாயிற்று ஒண்கதிர் தெறுவைச் சிறகரிற் கோலி நிழல் செய்துழறல் யானேன் யானெனப் படுகளங் காண்டல் செல்லான் நன்னன் அருளான் கரப்ப, மகளிர் பூசல் அகுதை களைதந்தாங்கு. மாயோள் காமம் நண்ணி வந்து நல்கினள் வாழியர்!

(வி - ரை.) யாம இரவு நள்ளிரவென்றே கொண்டு, நெடுங்கடை நின்று குன்றம் பாடும் அகவுநர் யாம இரவின் வேண்டினும் யானைசயும் எயினன் என்றலுமாம். வெளியன் வேண்மான் ஆஅய் எயினன் எனவும், பல்வேள் மகளிர் எனவும் கூறப்பட்டிருத்தலின், ஆஅய் எயினன் என்பான் வேளிர் குடியினன் என்பது பெறப்படும். வெளியன் வேண்மானுக்கு மகனாகிய ஆய் எயினன் என்றுதல், வெளியன் வேண்மான் ஆகிய ஆய் எயினன் என்றுதல் கொள்க. முன்னதற்கு வெளியன் என்பது தந்தையின் பெயரும், பின்னதற்கு எயினனது மற்றொரு பெயரும் ஆகும். அளியியல் வாழ்க்கை எயினன் எனக் கூட்டுக. மிஞிலி யென்பான் நன்னனுக்குத் துணையாயவன். நன்னன் புன்னாடு என்னும் நாட்டினைக் கடிந்த காலத்து, ஆய் எயினன் அஞ்சலிர் என்று கூறி அந்நாட்டினரைப் பாதுகாத்தலின், அவனுக்கும் நன்னனுக்கும் பகைமை விளைந்த தென்பதும், பாழிப் பறந்தலையில் நன்னனுக்குத் துணையாக வந்தெதிர்த்த மிஞிலியொடு பொருது எயினன் தான் கூறிய சொற் பிழையாது உயிர் கொடுத்தனன் என்பதும், *'பொலம்பூ ணன்னன் புன்னாடு கடிந்தென, யாழிசை மறுகிற் பாழி யாங்கண், அஞ்சல் என்ற ஆஅய் எயினன், இகலடு கற்பின் மிஞிலியொடு தாக்கித், தன்னுயிர் கொடுத்தனன் சொல்லிய தமைபாது' என்பதனால் அறியப்படும். எயினன் புள்ளின் பாதுகாவலன் ஆகலின், பறவைகள் ஒருங்குகூடி நிழல் செய்தனவென்க. அவன் அன்னனாதலை அகம் ௧௪௨, ௧௮௧ ஆகிய பாட்டுக்களாலும் அறிக. புள் ஒருங்குகூடி என ஒரு சொல் வருவித்துரைக்க. தனக்குத் துணையாகிய மிஞிலியின் பகைவனைக் கொன்ற களத்தினைத் தான் சென்று காண்டலும், தன் பகைவனது அருள்மேம்பாட்டை அஃறிணையாகிய பறவைகள் தாமும் வெளிப்படுத்தலைக் கண்டு சினத்தவிர்ந்து இரங்கலும் முறையாகவும்

* அகம். ௩௯௬.

நாணினும் அழுக்காற்றினும் அங்ஙனம் நன்னன் செய்திலன் என்பார், 'புன்னொருங்கு...நிழல் செய்தழறல் காணேன் யானெனப், பலகளம் காண்டல் செல்லான் சினஞ்சிறந்து, உருவினை நன்னன் அருளான் கரப்ப' என்றார். மகளிர் பூசலை அகுதை களைந்தாற்போல மாயோள் வந்து என் துயர் களைந்து நல்கினள் என்றான் என்க. 'உப்புச் சிறை நில்லா வெள்ளம் போல' என்னுங் கருத்துப் பலவிடத்து வந்திருத்தலை *'என்னெனப் படுங்கொல் தோழி' என்னுஞ் செய்யுளுரையிற் காண்க.

---

209. பாலை

[பிரிவிடை வேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறீஇயது.]

தோளுந் தொல்கவின் தொலைந்தன நாளும்
அன்னையும் அருந்துயர் உற்றனள் அலரே
பொன்னணி நெடுந்தேர்த் தென்னர் கோமான்
எழுவுறழ் திணிதோள் இயல்தேர்ச் செழியன்
நேரா எழுவர் அடிப்படக் கடந்த
ஆலங் கானத்து ஆர்ப்பினும் பெரிதென
ஆழல் வாழி தோழி அவரே
மாஅல் யானை மறப்போர்ப் புல்லி
காம்புடை நெடுவரை வேங்கடத்து உம்பர்
அறையிறந் தகன்றனர் ஆயினும் நிறையிறந்து
உள்ளா ராதலோ அரிதே செவ்வேல்
முள்ளூர் மன்னன் கழல்தொடிக் காரி
செல்லா நல்லிசை நிறுத்த வல்வில்
ஓரிக் கொன்று †சேரலர்க் கீத்த
செவ்வேர்ப் பலவின் பயங்கெழு கொல்லி
நிலைபெறு கடவு ளாக்கிய
பலர்புகழ் பாவை யன்னநின் னலனே.

—கல்லாடனார்.

(சொ - ள்.) ௧—௭. தோழி—, வாழி—, தோளும் தொல்கவின் தொலைந்தன - என் தோள்களும் பழைய அழகு கெட்டன, நாளும் அன்னையும் அரு துயர் உற்றனள் - நாடோறும் அன்னையும் அரிய துயரினை மேயினள், அலரே - ஊரில் எழும் அலர்தான், பொன் அணி நெடுதேர் தென்னர் கோமான் - பொன்னால் அணியப்பெற்ற நீண்ட தேரினையுடைய பாண்டியர் பெருமானாகிய, எழு உறழ் திணிதோள்

---

* அகம். ௨௬௩. (பாடம்) † சேரலற்கு.

இயல்தேர் செழியன் - கணையமரத்தை மாறுபடும் திண்ணிய தோளினையும் நன்கு இயன்ற தேரினையுமுடைய பாண்டியன் நெடுஞ்செழியன், நேரா எழுவர் அடிபடக் கடந்த-பகைத்த எழுவரையும் முற்ற வென்ற, ஆலங்கானத்து ஆர்ப்பினும் பெரிது என-தலையாலங்கானத்து எழுந்த வெற்றி யாரவாரத்தினும் பெரிது என்று கூறி, ஆழல் - துயரில் அழுந்தாதே;

௭—௧௦. அவர் - நம் தலைவர், மால் யானை மறப் போர்ப் புல்லி - பெரிய யானையையும் வீரத்துடன் புரியும் போரினையுமுடைய புல்லி என்பானது, காம்பு உடை நெடு வரை வேங்கடத்து உம்பர் - மூங்கில் களையுடைய நீண்ட சாரல் பொருந்திய வேங்கடமலையின் அப்பாலுள்ள, அறை இறந்து அகன்றனர் ஆயினும் - குன்றுகளைக் கடந்து சென்றனராயினும்;

௧௦—௭. முள்ளூர் மன்னன் செவ்வேல் கழல் தொடி காரி-சிவந்த வேலினையும் கழல இடப்பட்ட தொடியினையுமுடைய முள்ளூர்க்குத் தலைவனாகிய காரி என்பான், செல்லா நல்இசை நிறுத்த வல்வில் ஓரிக் கொன்று - கெடாத நல்ல புகழினை நிலைநாட்டிய வல்வில் ஓரியைக் கொன்று, சேரலர்க்கு ஈத்த - சேர மன்னர்க்கு உரிமையாக்கிய, செவ் வேர்ப் பலவின் பயம்கெழு கொல்லி - சிவந்த வேர்ப் பலாமரத்தின் பழம் மிக்க கொல்லி மலையில், நிலைபெறு-நிலைபெற்ற, கடவுள் ஆக்கிய-தெய்வத் தச்சனா லியற்றப்பட்ட, பலர் புகழ்பாவை அன்ன நின் நலன்-பலரும் புகழும் கொல்லிப் பாவையையொத்த நினது அழகை, நிறை யிறந்து - நெஞ்சை நிறுத்தல் தன்மை மிக்கு, உள்ளார் ஆதல் அரிது - நினையாராதல் இல்லை.

(முடிபு) தோழி! வாழி! அலர்ஆர்ப்பினும் பெரிதென ஆழல்; அவர் வேங்கடத்து உம்பர் அறையிறந் தகன்றன ராயினும், கொல்லி நிலைபெறு பாவையன்ன நின் நலன் நிறையிறந்து உள்ளாராதல் அரிது.

(வி-ரை.) செழியனால் வெல்லப்பட்ட பகைவர் எழுவர் இவர் என்பதனை *"செழியன், ஆலங்கானத்து அகன்தலை சிவப்பச், சேரல் செம்பியன் சினங்கெழு திதியன், போர்வல் யானை பொலம்பூண் எழினி, நாரரி நறவின் எருமையூரன், தேங்கமழ் அகலத்துப் புலர்ந்த சாந்தின், இருங்கோ வேண்மான் இயல்தேர்ப் பொருநனென், றெழுவர்' என்பதனால் அறிக. நிறை-நிறுத்தல்; நெஞ்சை நிறுத்தல் தன்மை. இறத்தல் - மிகுதல். 'கழறொடி - கழலும் தொடியுமாம். காரி-கடையெழு வள்ளல்களில் ஒருவனாகிய மலையமான் திருமுடிக் காரி. செல்லா நல்லிசை நிறுத்த - தன் வள்ளன்மையால் அழியாத நல்ல புகழை நிலை நிறுத்திய என்க. ஓரி என்பானும் கடையெழு வள்ளல்களில் ஒருவனே. இவன் வல்வில்லோரி என்று வழங்கப்படுதலின், சிறந்த படையாண்

* அகம். ௩௬.

மையும் உடையன் என்பது போதரும். ஓரீக்கொன்று: இரண்டனுருபு உயர்திணை மருங்கின் ஒழிந்து வந்தது, உடம்பொடு புணர்த்தலாற் கொள்ளப்படும். சொல்லி நிலைபெறு பாலை எனக் கூட்டுக.

(மே - ள்.) *'நாற்றமும் தோற்றமும்' என்னுஞ் சூத்திரத்து, 'என்பு நெகப் பிரிந்தோள் வழிச்சென்று கடைஇ, அன்புதலையடுத்த வன்புறைக் கண்ணும்' என்னும் பகுதிக்கண் இயற்பட மொழிந்து வற்புறுத்தற்கு இச்செய்யுளைக் காட்டினர், நச்.

---

210. நெய்தல்

[தோழி, தலைமகன் சிறைப்புறமாகத் தலைமகட்குச் சொல்லுவாளாயச் சொல்லியது.]

குறியிறைக் குரம்பைக் கொலைவெம் பரதவர்
எறியுளி பொருத ஏமுறு பெருமீன்
புண்ணுமிழ் குருதி புலவுக்கடல் மறுப்பட
விசும்பணி வில்லிற் போகிப் பசும்பிசிர்த்
திரைபயில் அழுவம் உழக்கி உரனழிந்து
நிரைதிமில் மருங்கில் †படர்தருந் துறைவன்
பானாள் இரவில்நம் பணைத்தோள் உள்ளித்
தானிவண் வந்த காலை நம்மூர்க்
கானலம் பெருந்துறைக் கவின்பா ராட்டி
ஆனாது புகழ்ந்திசி னோனே இனித்தன்
சாயல் மார்பிற் பாயல் மாற்றிக்
கைதயம் படுசினை கடுந்தேர் விலங்கச்
செலவரி தென்னும் என்பது
பலகேட் டனமால் தோழி நாமே. —உலோச்சனார்.

(சொ - ள்.) ௧௪. தோழி—,

௧—௬. குறி இறைக் குரம்பை கொலை வெம் பரதவர் - குறிய இறப்பினையுடைய குடிசையில் வாழும் கொலைத்தொழிலையுடைய கொடிய பரதவரால், எறி உளி பொருத ஏம் உறு பெருமீன் - எறியப் பட்ட உளி தாக்கிய களிப்புப் பொருந்திய பெரிய மீன், விசும்பு அணி வில்லில் போகி - விசும்பினை அணிசெயும் வில்லைப்போலத் தாவிச் சென்று, புண் உமிழ் குருதி புலவுக் கடல் மறுப்பட - தன் புண்ணினின்றும் ஒழுகிய உதிரத்தால் புலால் நாறும் கடல் நீரின் நிறம் மாறு

* தொல். கள. ௨௩. (பாடம்) † படரூர் துறைவன்.

பட, பசும் பிசிர் திரை பயில் அழுவம் உழக்கி - பசிய திவலைகளை புடைய அலை நெருங்கிய கடற்பரப்பைக் கலக்கி, உரன் அழிந்து - வலி குன்றி, நிரைதிமில் மருங்கில் படர்தரும் துறைவன் - வரிசையாக வுள்ள படகின் பக்கலில் வந்து சேரும் துறையினையுடைய நம் தலைவன் ;

எ—கO. பால் நாள் இரவில் நம் பணைத்தோள் உள்ளி - நடு இரவில் நம் மூங்கிலையொத்த தோளினை நினைத்து, இவண் வந்தகாலை - இங்கு வந்தபோது, நம் ஊர்க் கானல் பெருந்துறைக் கவின்பாராட்டி - நம்மூரின்கண்ணே சோலையையுடைய பெரிய துறையின் அழகினைப் பாராட்டி, ஆனாது புகழ்ந்திசினோன் - அமையாது புகழ்ந்தனன்;

கO—ச. இனி - இப்பொழுதோ, தன் சாயல் மார்பில் பாயல் மாற்றி - தனது மென்மைவாய்ந்த மார்பில் யாம் கண் துயிலலை யகற்றி, கைதை படுசினைக் கடுந்தேர் விலங்க - தாழையின் தாழ்ந்த கிளைகளால் தனது கடிய தேர் தடைப்படுதலால், செலவு அரிது என்னும் என்பது - செல்லுதல் அரிது என்று கூறுவன் என்பதனை, நாம் பல கேட்டனம் - நாம் பலமுறை கேட்டேம் அல்லேமோ.

(முடிபு) தோழி! துறைவன் நம் பணைத்தோள் உள்ளி வந்த காலை, நம்மூர்க் கானலம் பெருந்துறைக் கவின் பாராட்டிப் புகழ்ந்திசினோன்; இனி, தன் மார்பிற் பாயல் மாற்றிக் கடுந்தேர் விலங்கச் செலவரிது என்னும் என்பது நாம் பல கேட்டனம்.

(வி - ரை.) வேட்டம் சென்று மீன்களைக் கொல்பவராகலின் கொலை வெம் பரதவர் எனப்பட்டார். எறி உளி-பெருமீன்களை வெட்டுவதொரு வாள். விசும்பு அணி வில் - விசும்பானது அணிந்த வில் என்றுமாம். வில்விற்போகி - விற்போலப் பன்னிறமுடையதாய் வளைந்து தோன்றுமாறு சென்று என்க. கானலம் பெருந்துறைக் கவின் பாராட்டி, ஆனாது, புகழ்ந்திசினோன் என்பதனால், முன்பு இத் துறையை விடுத்துச் செல்லுதற்கு விருப்பின்றி யிருந்தான் என்பதும், 'கடுந்தேர் விலங்கச் செலவரி தென்னும்' என்பதனால், இப்போது அதன்கண் வருவதற்கும் விருப்பின்றி யுள்ளான் என்பதும் பெறப் படும்.

(உ - றை.) உளிபொருத பெருமீன் கடல் மறுப்படப் போகி அழுவம் உழக்கி உரனழிந்து திமில் மருங்கிற் படரும் என்றது, அவனால் நலன் நுகரப்பட்டு வேறுபாடுற்ற நாம் இற்பழியாக்கி, ஊர் அலர் தூற்ற வலியழிந்து இறந்துபடுவதே பயனாயிற்று என்றவாறு.

211. பாலை

[பிரிவின்கண் வேறுபட்ட தலைமகளது வேறுபாடு கண்டு தோழி சொல்லியது.]

கேளாய் எல்ல தோழி வாலிய
சுதைவிரிந் தன்ன பல்பூ மராஅம்
பறைகண் டன்ன பாவடி நோன்தாள்
திண்ணிலை மருப்பின் வயக்களிறு உரிஞுதொறும்
தண்மழை ஆலியில் தாஅய் உழவர்
வெண்ணெல் வித்தின் அறைமிசை உணங்கும்
பனிபடு சோலை வேங்கடத் தும்பர்
மொழிபெயர் தேஎத்த ராயினும் நல்குவர்
குழியிடைக் கொண்ட கன்றுடைப் பெருநிரை
பிடிபடு பூசலின் எய்தா தொழியக்
கடுஞ்சின வேந்தன் ஏவலின் எய்தி
நெடுஞ்சேண் நாட்டில் தலைத்தார்ப் பட்ட
கல்லா எழினி பல்லெறிந் தழுத்திய
*வன்கண் கதவின் வெண்மணி வாயில்
மத்தி நாட்டிய கல்கெழு பனித்துறை
நீரொலித் தன்ன பேஎர்
அலர்நமக் கொழிய அழப்பிரிந் தோரே.

—மாமூலனார்.

(சொ - ள்.) ௧. எல்ல தோழி கேளாய் - ஏடி, தோழி! நான் கூறுவதனைக் கேட்பாயாக;

௯—௧௭. குழியிடை கொண்ட-பள்ளத்தில் அகப்படுத்திய, கன்று உடை பெரு நிரை பிடி பூசலின் - கன்றுகளையும் பிடிகளையுமுடைய பெரிய யானையினங்களை அகப்படுத்தும் பூசற்கண்ணே, எய்தாது ஒழிய-(எழினி என்பான்) வாராது ஒழிய, கடுசின வேந்தன் ஏவலின் எய்தி - அதனால் மிக்க சினங்கொண்ட சோழமன்னனது ஏவலாற் சென்று, மத்தி-மத்தி என்பான், நெடு சேண் நாட்டில் - நெடுஞ் சேய்மைக்கண்ணதாகிய நாட்டில், தலைத் தார்ப்பட்ட - முதற்படையில் அகப்பட்டுக்கொண்ட, கல்லா எழினி - கல்லாத அவ்வெழினியின், பல் எறிந்து அழுத்திய - பல்லைப் பறித்து வந்து பதித்த, வன்கண் கதவின் - வன்மை பொருந்திய கதவினையுடைய, வெண்மணி வாயில் -

(பாடம்) * அகன்கட் கதவின்.

வெண்மணி என்னும் ஊரின் வாயிலிடத்தே, நாட்டிய - அம் மத்தி என்பவனால் நாட்டப்பட்ட, கல் கெழு-கல் பொருந்திய, பனித்துறை-குளிர்ந்த துறைமுகத்தே, நீர் ஒலித்தன்ன - நீர் மோதி ஒலிப்பது போன்ற, பேஎர் அலர் நமக்கு ஒழிய - பெரிய அலர் நம்பால் எஞ்சி யிருக்கவும், அழப் பிரிந்தோர் - நாம் அழவும் பிரிந்த நம் தலைவர்;

௧—௮. மராஅம் - வெண் கடப்பமரத்தை, பறை கண்டன்ன பாவு அடி நோன் தாள் - பறையினையொத்த வட்டமாகிய பரந்த அடியினையுடைய வலிய தாளினையும், திண் நிலை மருப்பின்-திண்ணிய நிலை வாய்ந்த கோட்டினையுமுடைய, வய களிறு உரிஞுதொறும் - வலிய களிறு உரிஞ்சுதொறும், வாலிய சுதை விரிந்தன்ன பல்பூ - வெள்ளிய சுண்ணாம்பு பரந்திருந்தாலொத்த, அதன் பலவாய பூக்கள், தண் மழை ஆலியில் தாஅய் - தண்ணிய மழையொடு விழும் பனிக்கட்டிபோல உதிர்ந்து பரவி, உழவர் வெண் நெல் வித்தின் அறை மிசை உணங்கும் - உழவரது வெண்ணெல்லின் விதைபோலப் பாறையின்மீது காய்ந்து கிடக்கும், பனிபடு சோலை வேங்கடத்து உம்பர் - குளிர்ச்சி பொருந்திய சோலைகளையுடைய வேங்கட மலையின் அப்பாலுள்ள, மொழிபெயர் தேஎத்தர் ஆயினும் - வேற்றுமொழி வழங்கும் நாட்டின் கண்ணராயினும், நல்குவர் - விரைந்து வந்து அருள் செய்வர்.

(முடிபு) தோழி! கேளாய்! அலர் நமக்கொழிய, (நாம்) அழப் பிரிந்தோர், வேங்கடத்தும்பர் மொழி பெயர் தேஎத்த ராயினும் நல்குவர்.

(வி - ரை. கன்று பிடியுடைப் பெருநிரை என மாறுக. பூசல் - வேட்டம். யானைகளை அகப்படுத்தும் வேட்டைக்கு எழினி என்பான் வாராமையால், சினங்கொண்ட சோழ மன்னன், மத்தி என்னும் படைத் தலைவனை ஏவ, அவன் சென்று அவ் வெழினியைப் போரிலே அகப்படுத்து, அவன் பல்லைப் பறித்து வந்து வெண்மணி யென்னும் ஊரினது வாயிற் கதவிலே பதித்தனன் என்பதும், அவ்வெற்றிக்கு அடையாளமாக ஆங்குள்ள நீர்த்துறையில் கல் நாட்டினான் என்பதும் இச் செய்யுளில் அறியப்படும் வரலாறுகளாகும். மத்தி என்பான் பரதவக் குடியினன் என்பதும், கழாஅர் என்னும் ஊருக்கு உரியவன் என்பதும், 'பரதவர் கோமான் பல்வேல் மத்தி, கழாஅர் முன்துறை' (அகம். ௧௨௬) என்பதனால் அறியப்படும். இனிப் பூசலின் எய்தா தொழிய என்பதற்கு, வேட்டையிற் சென்றிருந்தானாகலின் தன் ஆணையின்படி வாராதொழிய என்றுரைத்தலுமாம்.

---

212. குறிஞ்சி

[அல்லகுறிப்பட்டு நீங்குந் தலைமகன் தன் நெஞ்சினை *நெருங்கிச் சொல்லியது.]

தாவில் நன்பொன் தைஇய பாவை
விண்டவழ் இளவெயில் கொண்டுநின் றன்ன
மிகுகவின் எய்திய தொகுகுரல் ஐம்பால்
கிளையரில் நாணல் கிழங்குமணற் கீன்ற
முளையோ ரன்ன முள்ளெயிற்றுத் துவர்வாய்
நயவன் தைவருஞ் செவ்வழி நல்யாழ்
இசையோர்த் தன்ன இன்றீங் கிளவி
அணங்குசால் அரிவையை நசைஇப் பெருங்களிற்று
இனம்படி நீரில் கலங்கிய பொழுதில்
பெறலருங் குரைய ளென்னாய் வைகலும்
இன்னா அருஞ்சுரம் நீந்தி நீயே
என்னை யின்னற் படுத்தனை மின்னுவசிபு
உரவுக்கார் கடுப்ப மறலி மைந்துற்று
†விரவுமொழிக் கட்டூர் வேண்டுவழிக் கொளீஇப்
படைநிலா இலங்குங் கடல்மருள் தானை
மட்டவிழ் தெரியல் மறப்போர்க் குட்டுவன்
பொருமுரண் பெறாஅது விலங்குசினஞ் சிறந்து
செருச்செய் முன்பொடு முந்நீர் முற்றி
ஓங்குதிரைப் பௌவம் நீங்க வோட்டிய
நீர்மாண் எஃகம் நிறத்துச்சென் றழுந்தக்
கூர்மதன் அழியரோ நெஞ்சே ஆனாது
எளிய ளல்லோள் கருதி
விளியா எவ்வந் தலைத்தந் தோயே.

—பரணர்.

(சொ - ள்.) உக. நெஞ்சே—,

க—கஉ. தாஇல் நன் பொன் தைஇய பாவை - வலியற்ற மாற்றுயர்ந்த பொன்னாற் செய்யப்பெற்ற பாவை, விண் தவழ் இளவெயில் கொண்டு நின்றன்ன - வானில் பரவும் இளவெயிலைத் தன்மேற் கொண்டு ஒளிதிகழ நின்றாலொத்த, மிகு கவின் எய்திய - மிக்க அழகு பொருந்தியவளும், தொகு குரல் ஐம்பால் - திரண்ட கொத்தாகிய கூர்

(பாடம்) * நோக்கிச் சொல்லியது. † விரவு மொழித் தகட்டூர்.

தலையும், இன் அரில் கானல் கிழங்கு மணற்கு ஈன்ற - கிளைத்த அருகிய கானற் கிழங்கு மணலிடத்தே ஈன்ற, முளை ஓரன்ன முள் எயிற்றுத் துவர் வாய் - முளையை ஒத்த (வெள்ளிய) கூரிய பற்களையுடைய சிவந்த வாயினையும், நயவன் தைவரும் நல்யாழ் செவ்வழி இசை ஓர்த்தன்ன இன் தீம் கிளவி - யாழ் வல்லோன் இயக்கும் நல்ல யாழின் செவ்வழிப் பண்ணின் இசையைக் கேட்டாற்போலும் மிக இனிய சொல்லினையும் உடையவளாகிய, அணங்கு சால் அரிவையை நசைஇ - தெய்வத்தின் இயல்பினையுடைய மகளை விரும்பி, பெரு களிற்று இனம் படி நீரில் கலங்கிய பொழுதில் - பெரிய களிற்றியானைக் கூட்டம் படிந்து கலக்கிய நீரைப்போல நீ கலக்கமுற்ற பொழுது, பெறல் அருங் குரையள் என்னாய் - இவள் பெறுதற்கு அரியள் என்று எண்ணாயாகி, வைகலும் இன்னா அருஞ்சுரம் நீந்தி - நாடோறும் இன்னாமையுடைய அரிய சுரநெறியைக் கடந்து, நீ என்னை இன்னல் படுத்தனை - நீ என்னைத் துன்பத்தின்கண் செலுத்தினை ;

உக—ங. ஆனாது எளியள் அல்லோள் கருதி - எளியள் அல்லளாய அவளை அமையாது எண்ணி, விளியா எவ்வம் தலைத் தந்தோய் - நீங்காத துன்பத்தினை என்பாற் சேர்த்தியுள்ள நீதான் ;

கஉ—உக. படை நிலா இலங்கும் கடல் மருள் தானை - படைக் கலன்களின் ஒளிவீசும் கடலையொத்த தானையினையுடைய, மட்டு அவிழ் தெரியல் மறப் போர்க் குட்டுவன் - தேன் ஒழுகும் மாலையினையுடைய தறுகண்மையுடன் போர்செய்தல்வல்ல குட்டுவன். மின்னு வசிபு உரவுக்கார் கடுப்ப மறலி மைந்து உற்று - மின்னலால் வானைப் பிளந்து வலிமை கொண்டெழும் மேகத்தையொப்பப் பகைத்து வலிமை கொண்டு, விரவு மொழிக் கட்டூர் வேண்டுவழிக் கொளீஇ - பல மொழியும் கலந்த பாசறையைத் தான் வேண்டுமிடங்களில் அமைத்து, பொரு முரண் பெறாது - தன்னுடன் பொரும் பகைவை நில எல்லைக்குள் காணாமையின், விலங்கு சினம் சிறந்து - பொங்கி எழும் சினம் மிக்கு, செரு செய் முன்பொடு முந்நீர் முற்றி - போர் புரியும் வலியால் கடலை வளைந்து, ஓங்கு திரைப் பௌவம் நீங்க ஓட்டிய - உயர்ந்த அலைகளையுடைய கடலைப் பிறக்கிடும்படி ஓட்டிய, நீர் மாண் எஃகம் - மாண்புற்ற நீர்மையுடைய வேல், நிறத்துச் சென்று அழுந்த - நின் மார்பிலே தைத்து அழுந்திட, கூர் மதன் அழியரோ - நினது மிக்க செருக்கு அழியப் பெறுவாயாக.

(முடிபு) நெஞ்சே! என்னை இன்னற்படுத்தனை; விளியா எவ்வம் தலைத்தந்த நீதான் குட்டுவன் எஃகம் நிறத்துச் சென்றழுந்த மதன் அழியரோ.

(வி - ரை.) தா-வலி; போக்கற்ற பொன் நெகிழ்ச்சி யுடையதா யிருத்தலின் தாவில் நன்பொன் எனப்பட்டது. கவின் எய்திய அரிவை எனவும், ஐம்பாலையும் முள்ளெயிற்றுத் துவர்வாயினையும்,

நீள்ஒளியினையுமுடைய அரிவை எனவும் கூட்டுக. மணற்கு ஈன்ற: வேற்றுமை மயக்கம். நயவன் - இசையாழ் தெரிந்து பாடுபவன். அணங்கு - தெய்வத்தன்மை. பெறுதற்கரியள் என்பது தோன்ற அணங்குசால் அரிவை என்றான். கலங்கிய நெஞ்சிற்குச் செய்வதும் தவிர்வதும் தோன்றாவாகலின், 'கலங்கிய பொழுதில்......என்னை பின்னர்ப் படுத்தனை' என்றான். மறவுதல் - மாறுபடுதல், பகைத்தல். படைஞருள்ளே பலமொழி பேசுவாரும் உளராதலின், விரவு மொழிக் கட்டூர் என்றார்.

முந்நீர் முற்றி, ஓங்குதிரைப் பௌவம் நீங்க ஓட்டிய என்றது, கடல் நாப்பண் பகைவர் உறையும் தீவைச் சூழ்ந்து, அவர்க்கு அரணாக வுள்ள கடல் வலி கெடப் போக்கிய என்றவாறு. *பதிற்றுப்பத்தில், 'உடை திரைப் பரப்பிற் படுகட லோட்டிய' (௪௧) என்புழி, கடலோட்டிய என்றது: 'தன்னுள் வாழ்வார்க்கு அரணாகிய கடல் வலியை அழித்த என்றவாறு' என அதன் பழைய உரைகாரர் கூறியிருப்பது காண்க; அதனாலே கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன்' எனக் குட்டுவன் கூறப்படுவான் ஆயினன்.

இனி, ஓட்டிய என்பதற்குப் பகைவரை ஓட்டிய என்றலுமாம். நிறம்-மார்பு; நிறத்துச் சென்றழுந்த என, நெஞ்சை உறுப்புடையது போல் கூறியது, †'உறுப்புடை யதுபோல்......நெஞ்சொடு புணர்த்து' என்பதனால் அமையும்.

---

213. பாலை

[பிரிவிடை வேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறீஇயது.]

வினைநவில் யானை விறற்போர்த் தொண்டையர்
இனமழை தவழும் ஏற்றரு நெடுங்கோட்டு
ஓங்குவெள் ளருவி வேங்கடத் தும்பர்க்
கொய்குழை யதிரல் வைகுபுலர் அலரி
சுரியிரும் பித்தை சுரும்புபடச் சூடி
இகல்முனைத் தரீஇய ஏறுடைப் பெருநிரை
நனைமுதிர் நறவின் நாட்பலி கொடுக்கும்
வால்நிணப் புகவின் வடுகர் தேஎத்து
நிழற்கவி னிழந்த நீரில் நீளிடை
அழலவிர் அருஞ்சுரம் நெடிய வென்னாது
அகற லாய்ந்தன ராயினும் பகல்செலப்

---

* பதிற்று. ௫-ஆம் பத்து, பதிகம். † தொல். பொருளியல்-௨.

பல்கதிர் வாங்கிய படுசுடர் அமையத்துப்
பெருமரக் கொன்ற கால்புகு வியன்புனத்து
*எரிமருள் கதிர திருமணி யிமைக்கும்
வெல்போர் வானவன் கொல்லிக் குடவரை
வேயொழுக் கன்ன சாயிறைப் பணைத்தோள்
பெருங்கவின் சிதைய நீங்கி ஆன்றோர்
அரும்பெறல் உலகம் அமிழ்தொடு பெறினுஞ்
சென்றுதாம் நீடலோ இலரே யென்றுங்
கலம்பெயக் கவிழ்ந்த கலத்தொடித் தடக்கை
வலம்படு வென்றி வாய்வாட் சோழர்
இலங்குநீர்க் காவிரி யிழிபுனல் வரித்த
அறலென நெறிந்த கூந்தல்
உறலின் சாயலொடு ஒன்றுதல் மறந்தே.

—†தாயங்கண்ணனார்.

(சொ-ள்.) க—கக. (தோழி! நம் தலைவர்,) வினை நவில் யானை விறல் போர் தொண்டையர் - போர்த்தொழில் பயின்ற யானைகளையுடைய வலிய போர் வல்ல தொண்டையரது; இனம் மழை தவழும் ஏற்று அரு நெடு கோட்டு - கூட்டமாய மேகங்கள் தவழும் ஏறுதற்கு அரிய நெடிய உச்சியினின்று இழியும், ஓங்கு வெள் அருவி - உயர்ந்து தோன்றும் வெள்ளிய அருவிகளையுடைய, வேங்கடத்து உம்பர் - வேங்கட மலைக்கு அப்பாலுள்ளதும், கொய் குழை அதிரல் வைகு புலர் அலரி - கொய்யப்பெற்ற தழைகளையுடைய காட்டுமல்லிகையின் வைகறையில் அலரும் பூவினை, சுரி இரு பித்தை சுரும்பு பட சூடி - சுருண்ட கரிய மயிரில் வண்டு மொய்க்கச் சூடி, இகல் முனை தரீஇய ஏறு உடை பெரு நிரை - பகைவர் போர்முனையில் வென்று கொண்ட ஏறுகளையுடைய பெரிய ஆனிரைக்காக, கனைமுதிர் நறவின் நாள் பலி கொடுக்கும் - முதிர்ந்த கள்ளாகிய நறவினை விடியற்காலத்தே பலியாகச் செலுத்தும், வால்நிண புகவின் வடுகர் தேஎத்து - வெள்ளிய நிணச் சோற்றினையுடைய வடுகரது தேயத்தேயுள்ள, நிழல் கவின் இழந்த நீர் இல் நீள் இடை - நிழலின் அழகை இழந்த நீர் இல்லாத நீண்ட இடத்தினையுடைய, அழல் அவிர் அரு சுரம் நெடிய என்னாது - தீயின் வெப்பம் விளங்கும் அரிய காடுகள் நீண்டன என்று கருதாமல், அகறல் ஆய்ந்தனர் ஆயினும் - நம்மைப் பிரிந்து போதலைத் துணிந்தனர் ஆயினும்;

(பாடம்) * எரிமருள் கதிர்மணி யிமைக்கும் அத்தம்.
† தையங் கண்ணனார்; இதையங் கண்ணனார்.

கசு—உச. என்றும் கலம் பெயக் கவிழ்ந்த கழல்தொடித் தடக்கை - எஞ்ஞான்றும் அணிகளைப் பெய்தற்குக் கவிழ்ந்தன கழலும் தொடியினை அணிந்த பெரிய கையின்கண், வலம் படு வென்றி வாய்வாள் சோழர் - வலிமையான் எய்திய வென்றிபொருந்திய தப்பாத வாளினைக்கொண்ட சோழரது, இலங்கு நீர்க் காவிரி இழிபுனல் வரித்த - விளங்கும் நீரினையுடைய காவிரியினது வடிந்த நீர் வரி வரியாகச் செய்திட்ட, அறல் என நெறிந்த கூந்தல் - கருமணல் போல வளர்ந்த கூந்தலையும், உறல் இன்சாயலொடு ஒன்றுதல் மறந்து - ஊறுதற்கு இனிய மென்மையையும் பொருந்துதலை மறந்து;

கக—எ. பகல் செல பல் கதிர் வாங்கிய படுசுடர் அமையத்து - பகற்பொழுது நீங்க ஞாயிறு தனது பல கதிர்களையும் சுருக்கிய ஒளி மழுங்கும் நேரத்தே, பெரு மரம் கொன்ற கால் புகு வியன் புனத்து - பெரிய மரத்தினை வெட்டித் தள்ளியதால் காற்றுப் புகலாகும் பெரிய கொல்லையில், எரி மருள் கதிர் திருமணி இமைக்கும் - தீப்போன்ற கதிர்களையுடைய அழகிய மணி மிளிரும், வெல்போர் வானவன் கொல்லிக் குடவரை-வெல்லும் போரினையுடைய சேரனது கொல்லி மலையின் மேற்குப் பக்கத்தேயுள்ள, வேய் ஒழுக்கு அன்ன சாய் இறைப் பணைத் தோள் - மூங்கிலின் நேரிய பகுதியை ஒத்த வளைந்த முன்கையுடன் கூடிய பருத்த தோளின், பெரு கவின் சிதைய நீங்கிச் சென்று - பெரிய அழகு சிதைந்திட நீங்கிப்போய்;

கஎ—க. ஆன்றோர் அரும் பெறல் உலகம் அமிழ்தொடு பெறினும் - தேவரது பெறலரும் விண்ணுலகை ஆண்டுள்ள அமிழ்தத்துடன் பெறுவாராயினும், தாம் நீடலோ இலர் - அவர் தாழ்ந்திருத்தல் இலராவர்.

(முடிபு) தோழி! நம் தலைவர், வேங்கடத்தும்பர் வடுகர் தேத்து அருஞ்சுரம் அகறல் ஆய்ந்தனராயினும், நின் கூந்தல் உறலின் சாயலொடு ஒன்றுதல் மறந்து பெருங் கவின் சிதைய நீங்கிச் சென்று அரும் பெறல் உலகம் அமிழ்தொடு பெறினும் நீடலோ இலர்.

(வி - ரை.) தொண்டையர் வேங்கடம் என்க, தொண்டையர் - தொண்டை நாட்டிலுள்ள பழங்குடியினர். நிரையினையும் கறவினையும் பலிகொடுக்கும் என்றலுமாம். ஆய்ந்தனராயினும் - ஆய்ந்து துணிந்தனராயினும், ஆன்றோர் உலகம் - தேவருலகம்.

214. முல்லை

[பாசறைக்கண் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.]

அகலிரு விசும்பகம் புதையப் பாஅய்ப்
பகலுடன் கரந்த பல்கதிர் வானம்
இருங்களிற்று இனநிரை குளிர்ப்ப வீசிப்

பெரும்பெயல் அழிதுளி பொழிதலானாது
வேந்தனும் வெம்பகை முரணி யேந்திலை
விடுகதிர் நெடுவேல் இமைக்கும் பாசறை
அடுபுகழ் மேவலொடு கண்படை யிலனே
அமரும் நம்வயின் அதுவே நமரென
நம்மறிவு *தெளிந்த பொம்மல் ஓதி
பாங்கா குவள்கொல் தானே ஓங்குவிடைப்
படுசுவல் கொண்ட பகுவாய்த் தெண்மணி
ஆபெயர் கோவலர் ஆம்பலொ டளைஇப்
பையுள் நல்யாழ் செவ்வழி வகுப்ப
ஆருயிர் அணங்குந் தெள்ளிசை
மாரி மாலையுந் தமியள் கேட்டே.

—வடமவண்ணக்கன் பேரி சாத்தனார்.

(சொ - ள்.) ௧—௪. (நெஞ்சே!) அகல் இரு விசும்பு அகம் புதைய பாஅய் - அகன்ற பெரிய வானிடமெல்லாம் மறையப் பரந்து, பல் கதிர் பகல் உடன் கரந்த வானம்-பல கதிர்களையுடைய ஞாயிற்றை முழுவதும் மறைத்த மேகம், இரு களிற்று இன நிரை குளிர்ப்ப-பெரிய களிற்றின் பிடியுடன் கூடிய தொகுதி குளிர்ந்திட, பெரும் பெயல் அழி துளி வீசி பொழிதல் ஆனாது-பெரும் பெயலாகிய மிக்க துளிகளை வீசிச் சொரிதலை அமையாது;

௫—௭. வேந்தனும் வெம்பகை முரணி - அரசனும் மிக்க பகையொடு மாறுபட்டு, ஏந்து இலை விடுகதிர் நெடுவேல் இமைக்கும் பாசறை - நிமிர்ந்த இலையினையுடைய ஒளிவிடுகின்ற நீண்ட வேல் மின்னும் பாசறைக் கண்ணேயிருந்து, அடுபுகழ் மேவலொடு கண்படை இலனே - பகையை வெல்லுதலால் எய்தும் புகழினை விரும்பித் துயிலுதல் செய்திலன்;

௮. அமரும் நம்வயி னதுவே - போரின் பொறை நம்மைச் சார்ந்தனது;

௮—௯. நமர் என - நம்கேளிர் என்று, நம் - நம்மை, அறிவு தெளிந்த - தன் அறிவினால் தெருண்ட, பொம்மல் ஓதி - பொலிவுற்ற கூந்தலையுடைய நம் தலைவி;

௧௦—௫. ஓங்கு விடை படுசுவல் கொண்ட பகுவாய்த் தெள்மணி- உயர்ந்த ஏற்றின் பொருந்திய பிடரிற் கட்டிய பெரிய வாயினையுடைய தெளிந்த ஒலியினதாகிய மணியின் ஓசையையும், ஆபெயர் கோவலர் ஆம்பலொடு அளைஇ - ஆக்களை மீட்டுவரும் கோவலர் புல்லாங்குழ

(பாடம்) * தெளித்த.

லுடன் பொருந்த, பைபுள் நல்யாழ் செவ்வழி வகுப்ப - பிரிந்தார்க்குத் துன்பினைத் தரும் நல்ல யாழின்கண்ணே செவ்வழிப் பண்ணைப் பாட, ஆர் உயிர் அணங்கும் தெள் இசை - அரிய உயிர்களை வருத்தும் அத் தெள்ளிய ஓசையையும், மாரி மாலையும் தமியள் கேட்டு-மாரிக்காலத்து மாலையிலும் தனியளாயிருந்து கேட்டவின், யாங்கு ஆகுவள் கொல்லோ - எந்நிலையினை அடைவாளோ?

(முடிபு.) நெஞ்சே! வானம் பெரும்பெயல் வீசி அழிதுளி பொழிதல் ஆனது; வேந்தனும் பாசறை புகழ் மேவலொடு கண் படையிலன் நமரென நம்மைத் தெளிந்த பொம்மல் ஓதி, மணியின் ஓசையையும் தெள்ளிசையையும் மாரி மாலையிலும் தமியள் கேட்டு யாங்காகுவள் கொல்லோ.

(வி - ரை.) வேந்தனும் வெம்பகை முரணிப் புகழ் மேவலொடு கண் படையிலன் என்றமையால், மாற்றார் பணிந்து திறை கொடுக்கவும், புகழ் விருப்பினால் அரசன் மேலும் போர் புரியக் கருதியுள்ளான் என்பதும், அமரும் நம்வயினது என்றமையால், அப்போரினை நடத்தும் கடப்பாடு தனக்கு உளதென்றும் கூறினான். நாம் இங்கே இவ்வாறிருக்க, அவட்கு வருவேம் எனக்குறித்த கார் வந்து விட்டமையாலும், எற்றின் கழுத்திற் கட்டிய மணியோசையும் குழலுடன் கூடிய யாழிசையும் மாலைப்பொழுதிலே தமியளாய்க் கேட்டலாலும் நம் காதலி எத்தகைய துன்பமுறுவளோ எனத் தலைமகன் தன் நெஞ்சிற்கு இரங்கிக் கூறினானென்க. அமரும் நம் வயினது என்றமையால், தலைவன் அரசனுக்குப் படைத்தலைவனோ அன்றி நட்பாளனோ ஆதல் வேண்டும். நமர் எனத் தெளிந்த ஓதி என்க. அறிவு - தன் அறிவினாலே; நாம் கூறித் தெளிவித்த உரைகளால் என்றுமாம். ஆம்பல் என்றது குழல்.

(மே - ள்.) *'எவன் மரபின் ஏனோரு முரியர்' என்னுஞ் சூத்திரத்து, இவ்வகப்பாட்டும் பொருணோக்கினால் அது கண்டு வருந்திக் கூறியது என்பர், நச்.

---

215. பாலை

[செலவுணர்த்திய தோழி தலைமகள் குறிப்பறிந்து தலைமகனைச் செலவழுங்குவித்தது.]

விலங்கிருஞ் சிமையக் குன்றத் தும்பர்
வேறுபன் மொழிய தேஎம் முன்னி
வினைநசைஇப் பரிக்கும் உரன்மிகு நெஞ்சமொடு
புனைமாண் எஃகம் வலவயின் ஏந்திச்
செலன்மாண்பு உற்ற நும்வயின் வல்லே

---

* தொல். அகத், ௨௪.

வலனாகு என்றலும் நன்றுமற் றில்ல
கடுத்தது பிழைக்குவ தாயின் தொடுத்த
கைவிரல் கவ்வுங் கல்லாக் காட்சிக்
கொடுமரம் பிடித்த கோடா வன்கண்
வடிநவில் அம்பின் ஏவ லாடவர்
ஆளழித் துயர்த்த அஞ்சுவரு பதுக்கைக்
கூர்நுதிச் செவ்வாய் எருவைச் சேவல்
படுபிணப் பைந்தலை தொடுவன குழீஇ
மல்லன் மொசிவிரல் ஒற்றி மணிகொண்டு
வல்வாய்ப் பேடைக்குச் சொரியும் ஆங்கண்
கழிந்தோர்க்கு இரங்கு நெஞ்சமொடு
ஒழிந்திவண் உறைத லாற்று வோர்க்கே.

—இறங்குகுடிக் குன்ற நாடன்.

(சொ-ள்.) எ—கஎ. கடுத்தது பிழைக்குவதாயின் - குறித்த இலக்குத் தப்புவதாயின், தொடுத்த கைவிரல கவ்வும் - அம்பினைத் தொடுத்த கைவிரலை வாயாற் கவ்விக்கொள்ளும், கல்லாக் காட்சி - கல்லாத அறிவினையும், கொடுமரம் பிடித்த கோடா வன்கண் - வில்லை ஏந்திய மாறாத கொடுமையையும், வடிநவில் அம்பின் ஏவல் ஆடவர் - வடித்தல் செய்த அம்பினையுமுடைய ஏவலராய மறவர், ஆள் அழித்து உயர்த்த அஞ்சுவரு பதுக்கை - வழிப்போகும் ஆட்களைக் கொன்று அவர்களை யிட்டு மூடிய கண்டார்க்கு அச்சம் வரும் கற்குவியல்களில், கூர்நுதிச் செவ்வாய் எருவைச் சேவல் - கூரிய அலகினைக் கொண்ட சிவந்த வாயினையுடைய ஆண் பருந்துகள், படுபிணப் பைந்தலை தொடுவன குழீஇ - இறந்துபட்ட பிணங்களின் பசிய தலையினைத் தோண்டுவனவாகிக் கூடி, மல்லல் மொசிவிரல் ஒற்றி - வலிய நெருங்கிய விரலால் தோண்டி, மணி கொண்டு - கண்மணியைப் பெயர்த்துக்கொண்டு, வல்வாய்ப் பேடைக்குச் சொரியும் ஆங்கண் - வலிய வாயினையுடைய தம் பேடைகட்குச் சொரியும் அவ்விடத்தே; கழிந்தோர்க்கு இரங்கும் நெஞ்சமொடு - பிரிந்து சென்றார்க்கு இரங்கியொழியும் நெஞ்சத்துடன், ஒழிந்து இவண் உறைதல் ஆற்றுவோர்க்கு - அவர் தம்மைப் பிரிந்து இங்கே தங்குதல் வல்லார்க்கு;

க—ரு. (தலைவ!) விலங்கு இரு சிமையக் குன்றத்து உம்பர்-குறுக்காகவுள்ள பெரிய உச்சியினையுடைய மலைக்கு அப்பாலுள்ள, வேறு பல் மொழிய தேஎம் முன்னி-வேறுபட்ட பல மொழிகள் வழங்கும் தேயத்தைக் கொள்ளக்கருதி, வினை நசைஇப் பரிக்கும் உரன்மிகு நெஞ்சமொடு-போர்த்தொழிலை விரும்பிச் செலுத்தும் துணிவுமிக்க உள்ளத்துடன், புனைமாண் எஃகம் வலவயின் ஏந்தி - அழகிய மாண்

புற்ற வேலை வலக்கையின் ஏந்தி, செலல் மாண்பு உற்ற நும்வயின் - செல்லுதல் மாட்சியுற்ற நும்மிடத்தே;

ஓ—௪. வல்லே வலன் ஆக என்றலும் நன்று — விரைந்து வெற்றி மேவுக என்று கூறி விடுத்தலும் நன்றாகும்; மன் - யாம் அங்ஙனம் பிரிந்துறைதல் ஆற்றவேம் அல்லேம்; என் செய்வேம்.

(முடிபு) (தலைவ), எருவைச்சேவல் மணிகொண்டு பேடைக்குச் சொரியும் ஆங்கண் கழிந்தோர்க்கு இரங்கும் நெஞ்சமொடு இவண் உறைதல் ஆற்றுவோர்க்கு, குன்றத்து உம்பர் தேஎம் முன்னி வினை நசைஇப் பரிக்கும் நெஞ்சமொடு செலன் மாண்புற்ற நும்வயின், வலனு கென்றலும் நன்று; யாம் அங்ஙனம் பிரிந்துறைதல் ஆற்று வேம் அல்லேம்; என் செய்வேம்.

(வி - ரை.) தேஎம் முன்னி - தேயத்தைக் கொள்ளக் கருதி யென்க. பரிக்கும் - செலுத்தும். வலனுக என்றலும் - வெற்றி உண் டாக என்று கூறி விடுத்தலும் என விரித்துரைக்க. ஆக, ஈறு தொக்கது. மன், ஒழியிசை. இல்ல, அசைச் சொல் ஈறு திரிந்தது. கடுத்தது - குறித்த இலக்கு; வினைப்பெயர். மணி - விழி.

(மே - ள்.) *'வேந்து வினையியற்கை' என்னுஞ் சூத்திரத்து, முடியுடை வேந்தர்க்குரிய தொழிலாகிய இலக்கணங்கள்......குறுநில மன்னரிடத்தும் பொருந்தும் இடனுடையது என்றுரைத்து, அதற்கு உதாரணமாக 'விலங்கிருஞ் சிமையக் குன்றத் தும்பர்......செலன் மாண்புற்ற' என்ற அடிகளைக் காட்டி, 'வேறுபன் மொழிய தேஎத்தைக் கொள்ளக் கருதிப் போர்த் தொழிலைச் செலுத்தும் உரன்மிக்க நெஞ்ச மென்றலின், இது குறுநில மன்னவன் தன் பகைவயின் நாடு கொள்ளச் சென்றதாம், வேந்தன் எனப் பெயர் கூறாமையின்' என்றார், நச்.

---

216. மருதம்

[தலைமகட்குப் பாங்காயினர் கேட்பத் தனக்குப் பாங்காயினர்க் குப் பரத்தை சொல்லியது.]

நாண்கொள் நுண் கோலின் மீன்கொள் பாண்மகள்
†தான்புன லடைகரைப் படுத்த வராஅல்
நாரரி நறவுண் டிருந்த தந்தைக்கு
வஞ்சி விறகிற் சுட்டுவா யுறுக்குந்
௫ தண்டுறை யூரன் பெண்டிர் எம்மைப்
பெட்டாங்கு மொழிப என்ப அவ்வலர்ப்

---

* தொல். அகத். ௩௨. (பாடம்) † தண்புனல்.

பட்டன மாயின் இனியெவ னாகியர்
கடலாடு மகளிர் கொய்த ஞாழலுங்
கழனி யுழவர் குற்ற குவளையுங்
கடிமிளைப் புறவிற் பூத்த முல்லையொடு
பல்லிளங் கோசர் கண்ணி அயரும்
மல்லல் யாணர்ச் செல்லிக் கோமான்
எறிவிடத் துலையாச் செறிசுரை வெள்வேல்
ஆதன் எழினி யருநிறத் தழுத்திய
பெருங்களிற் றெவ்வம் போல
வருந்துவர் மாதவர் சேரியாஞ் செலினே.

—ஐயூர் முடவனார்.

(சொ - ள்.) க—ச. காண் கொள் நுண்கோலின் மீன்கொள் பாண் மகள் - கயிற்றினைக்கொண்ட நுண்ணிய தூண்டிற் கோலால் மீனைப் பிடிக்கும் பாணரது மகள், புனல் அடைகரைப்படுத்த வரால - புனலை அடுத்த கரையில் அகப்படுத்திய வரால்மீனை, கார் அரி நறவு உண்டு இருந்த தந்தைக்கு - பன்னாடையால் அரிக்கப்பெற்ற கள்ளை யுண்டு களித்திருந்த தன் தந்தைக்கு, வஞ்சி விறகில் சுட்டு - வஞ்சிமரத்தின் விறகினாற் சுட்டு, வாய் உறுக்கும் - வாயில் உண்பிக்கும், தண் துறை ஊரன் பெண்டிர் - குளிர்ந்த துறையினையுடைய ஊரனது பெண்டிர்கள், எம்மைப் பெட்டாங்கு மொழிப என்ப - எம்மைத் தம் மனம் விரும்பியபடி யெல்லாம் இகழ்ந்துரைப்பர் என்பார்கள் ;

ரு—எ. அ அலர் பட்டனமாயின் - அந்த அலர் மேவப்பெற்றேமாயின், இனி எவன் ஆகியர் - இப்பொழுது யாதேனும் ஆக ;

அ—கசு. அவர் சேரி யாம் செலினே-அவர்தம் சேரிக்கண் யாம் செல்வேமாயின், கடல் ஆடு மகளிர் கொய்த ஞாழலும்-கடலாடும்பெண்டிர் கொய்துவந்த புலிநகக் கொன்றைப் பூவினையும், கழனி உழவர் குற்ற குவளையும்-வயலில் உழுவோர் பறித்துவந்த குவளைப் பூவினையும், கடிமிளைப் புறவில் பூத்த முல்லையொடு-காவற்காட்டினையுடைய முல்லை நிலத்தே பூத்த முல்லைப்பூவுடன் சேர்த்து, பல் இளம் கோசர் கண்ணி அயரும் - பல இளைய கோசர்கள் கண்ணியாகக் கட்டி விளையாடும், மல்லல்யாணர் செல்லிக் கோமான் -மிக்க வளம் பொருந்திய செல்லூர் மன்னனாகிய, ஆதன் எழினி - ஆதன் எழினி என்பான், எறிவிடத்து உலையா செறி சுரை வெள் வேல் - மாற்றார்மீது எறியுமிடத்துச் சிதையாத சுரைசெறித்த வெள்ளிய வேலை, அரு நிறத்து அழுத்திய பெருகளிற்று எவ்வம் போல - தனது அரிய மார்பில் பாய்ச்சப் பெற்ற பெரிய களிற்றின் துன்பம் போல, வருந்துவர் - வருத்தமுறுவர்.

(முடிபு) தண்டுறை யூரன் பெண்டிர் எம்மைப் பெட்டாங்கு மொழிப என்ப; அவ்வலர் பட்டனமாயின் இனி யாதேனும் ஆக; அவர் சேரி யாம் செலினே, ஆதன் எழினி வேல் நிறத்து அழுத்திய களிற்றின் எவ்வம்போல் வருந்துவர்.

(வி - ரை.) பெண்டிர் - தலைமகளும் அவள் தோழியரும். ஞாழலும் குவளையும் முல்லையொடு கண்ணி அயரும் என நெய்தற்கும் முல்லைக்கும் உரிய பூக்கள் மருதத்தின்கண் வந்தமை "*எந்நில மருங்கிற் பூவும் புள்ளும், அந்நிலம் பொழுதொடு வாரா வாயினும், வந்த நிலத்தின் பயத்த வாகும்' என்பதனால் அமையும். செல்லிக் கோமானாய ஆதன் எழினி வெவ்வேல் அழுத்திய பெருங்களிற்று எவ்வம் என்க. தனக்குப் பாங்காயினரை உளப்படுத்தி, யாம் செலின் என்றாள். தான், மாத என்பன அசைகள்.

---

217. பாலை

[பிரிவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் ஆற்றாமைமீதூரச் சொல்லியது.]

†பெய்துபுலம் திறந்த பொங்கல் வெண்மழை
எஃகுறு பஞ்சித் துய்ப்பட் டன்ன
துவலை தூவல் கழிய அகல்வயல்
நீடுகழைக் கரும்பின் கணைக்கால் வான்பூக்
கோடைப் பூளையின் வாடையொடு துயல்வரப்
பாசிலைப் பொதுளிய புதல்தொறும் பகன்றை
நீலுண் பச்சை நிறமறைத்து அடைச்சிய
தோலெறி பாண்டிலின் வாலிய மலரக்
கோழிலை அவரைக் ‡கொழுமுகை அவிழ
ஊழுறு தோன்றி ஒண்பூத் தளவிடப்
புலந்தொறுங் § குருகினம் நரலக் கல்லென
அகன்றுறை மகளிர் அணிதுறந்து நடுங்க
அற்சிரம் வந்தன் றமைந்தன் றிதுவென
எப்பொருள் பெறினும் பிரியன்மி னோவெனச்
செப்புவல் வாழியோ துணையுடை ¶யீர்க்கென
நல்காக் காதலர் நலனுண்டு துறந்த
பாழ்படு மேனி நோக்கி நோய்பொர

---

* தொல். அகத். ௧௯. (பாடம்) † பெய்துபுறந்தந்த.
‡ கொழுமுகையுடைய. § குயினரால. ¶ யீர்க்கே.

இணரிறப்பு உடையும் நெஞ்சமொடு புணர்புவேட்டு
எயிறுதீப் பிறப்பத் திருகி
நடுங்குதும் பிரியின்யாம் கடும்பனி உழந்தே.

—கழார்க் கீரனெயிற்றியார்.

(சொ - ள்.) க—கக. (தோழி!) பெய்து புலம் திறந்த பொங்கல் வெண்மழை - பெய்த பின் திசைகளை வெளியாக்கிய பொங்கிய வெண்மேகம், எஃகுறு பஞ்சி துய் பட்டன்ன - கடையப்பெற்ற பஞ்சாவது மென்மையுற்றாற் போன்ற, துவலை தூவல் கழிய-சிறிய துளியைத் தூவுதலையும் ஒழிய, அகல் வயல்நீடு கழைக் கரும்பின் கணைக் கால் வான் பூ - அகன்ற வயலிலுள்ள நீண்ட தண்டினைபுடைய கரும்பின் திரண்ட காம்புடைய பெரிய பூக்கள், கோடைப் பூளையின் வாடையொடு துயல்வர -கோடைக்காலத்துப் பூளைப் பூப்போல வாடைக்காற்றால் அசைந்திட, பசு இலை பொதுளிய புதல்தொறும் பகன்றை - பசிய இலை நெருங்கிய புதல்தோறும் பகன்றையானது, நீல் உண் பச்சை நிறம் மறைத்து அடைச்சிய - நீலம் ஊட்டப்பெற்ற தோலினது நிறம் மறையும்படி பதித்த, தோல் எறி பாண்டிலின்-கிடுகிற் பதித்த வட்டக் கண்ணாடி போல, வாலிய மலர - வெள்ளியனவாக மலர, கோழ்இலை அவரை கொழுமுகை அவிழ-கொழுத்த இலையினைபுடைய அவரையின் வளவிய அரும்புகள் விரிய, ஊழ் உறு தோன்றி ஒண்பூ தளைவிட - முறையாக முற்றிய தோன்றியின் ஒள்ளிய பூக்கள் பிணிப்பு விட, புலம் தொறும் குருகு இனம் கல் என நரல - புலங்கள் தோறும் பறவைகளின் கூட்டம் கல்லென்று ஒலிக்க, அகன்று உறை மகளிர் அணி துறந்து நடுங்க - தம் தலைவரைப் பிரிந்து தங்கிய மகளிர் அழகிழந்து நடுங்க, அற்சிரம் வந்தன்று - பனிப்பருவம் வந்துவிட்டது (ஆதலால்);

கஉ—கரு. அமைந்தன்று இது என - இப் பருவம் பொருள் வயிற் பிரிவார்க்கு ஏற்றதொன்றென எண்ணி, எப்பொருள் பெறினும் பிரியன்மின் என - எத்துணைச் சிறந்த பொருளைப் பெறுவதாயினும் பிரியாதீர் என்று, துணைபுடையீர்க்குச் செப்புவல் - எங்கட்குத் துணையாகவுள்ள நுமக்குச் செப்புவேன், என - என்று நீ நம் தலைவர்க்குக் கூறவும்;

கசு—உ0. நல்காக் காதலர்-அருள் செய்யாத காதலர், பிரியின்-நம்மைப் பிரிந்து செல்வரேல், யாம் - நாம், நலன் உண்டு துறந்த பாழ்படு மேனி நோக்கி-(அவர்) நமது நலத்தினை நுகர்ந்து கைவிட்ட பாழ்பட்ட மேனியைக் கண்டு, நோய் பொர - நோய் வருத்த, இணர் இறப்பு உடையும் நெஞ்சமொடு - மதுகை இற்று உடையும் நெஞ்சத்துடன், புணர்வு வேட்டு - அவர் புணர்தலை விரும்பி, கடும்பனி உழந்து - கடிய பனியால் வருந்தி, எயிறு தீ பிறப்பத் திருகி - பற்களைத் தீயுண்டாகக் கடித்து, நடுங்குதும் - நடுங்குவேம்.

(முடிபு) (தோழி!) நீ, அற்சிரம் வந்தன்று; இது அமைந்தன்றென எப்பொருள் பெறினும் பிரியன்மினோ எனத் துணையுடையீர்க்குச் செப்புவல் என நல்காக் காதலர் பிரியின், யாம் மேனி நேர்க்கி உடையும் நெஞ்சமொடு புணர்வுவேட்டுக் கடும்பனி யுழந்து, திருகி நடுங்குதும்.

தூவல் கழிய, வான் பூ வாடையொடு துயல்வர, பகன்றை வாலிய மலர, அவரை முகை யவிழ, தோன்றிப் பூ தளைவிட, குருகினம் நரல, மகளிர் நடுங்க, அற்சிரம் வந்தன்று என்க.

(வி - ரை.) பாசிலை பொதுளிய புதல்தொறும் பகன்றை இடையிடையே மலர்ந்திருப்பது, நீலநிறமுடைய தோற்கிடுகில் இடையிடை பதித்த கண்ணாடி போலும் என்க. பச்சை - தோல்; பாண்டில்-கண்ணாடி. தோல்-தோலால் ஆகிய கிடுகு. *'பாண்டில் நிரை தோல்' என்பதன் உரை காண்க. அற்சிரம் என்றது ஈண்டுப் பின்பனிக் காலத்தை. துணை யுடையீர்க்குப் பிரியன்மினோ எனச் செப்புவல் எனவும் என்று இயையும். 'துணையுடையீர்க் கென' என்று பழைய பதிப்பிற் காணப்பட்ட பாடத்தினைக் கொண்டு, எனவும் என உம்மை விரித்து உரைக்கப்பட்டது; 'துணையுடையீர்க்கே' என்னும் பாடத்திற்குப் பிரியன்மின் என்று தலைவர்க்கு நீ சொல்லுமாறு எனக்குத் துணையாகவுள்ள நினக்கு யான் செப்புவல் என்று தலைவி தோழிக்குக் கூறினாளாகக் கொள்க.

218. குறிஞ்சி

[தோழி தலைமகளை இடத்துய்த்து வந்து பகற்குறிநேர்ந்த வாய்பாட்டால் தலைமகனை வரைவுகடாயது.]

கிளைபா ராட்டுங் கடுநடை வயக்களிறு
முளைதரு பூட்டி வேண்டு†குள கருத்த
வாள்நிற உருவின் ஒளிறுபு மின்னிப்
பரூஉவுறைப் பஃறுளி சிதறிவான் நவின்று
பெருவரை நளிர்சிமை அதிர வட்டித்துப்
புயலேறு உரைஇய வியலிருள் நடுநாள்
விறலிழைப் பொலிந்த காண்பின் சாயல்
தடைஇத் திரண்டநின் தோள்சேர்பு அல்லதைப்
படாஅ வாகுமெங் கண்ணென நீயும்
இருண்மயங் கியாமத் தியவுக்கெட விலங்கி
வரிவயங் கிரும்புலி வழங்குநர்ப் பார்க்கும்
பெருமலை விடரகம் ‡வரலரி தென்னாய்

---

* புறப்பொருள் வெண்பாமாலை. ௪-௧௨.

(பாடம்) † குளகருத்த. ‡ வரவரிதென்னாய்.

வரவெளி தாக எண்ணுதி அதனான்
நுண்ணிதிற் கூட்டிய படுமாண் ஆரந்
தண்ணிது கமழும் நின்மார்பு ஒருநாள்
அடைய முயங்கே மாயின் யாமும்
விறலிழை நெகிழச் சாஅய்தும் அதுவே
அன்னை யறியினும் அறிக அலர்வாய்
அம்பல் மூதூர் கேட்பினுங் கேட்க
வண்டிறை கொண்ட எரிமருள் தோன்றியொடு
ஒண்பூ வேங்கை கமழுந்
தண்பெருஞ் சாரல் பகல்வந் தீமே.

—கபிலர்.

(சொ - ள்.) ௧—௬. (தலைவ!) கிளை பாராட்டும் கடு நடை வயக் களிறு - தன் இனங்கள் பாராட்டும் கடிய செலவினையுடைய வலிய களிறு, முளை தருபு ஊட்டி வேண்டு குளகு அருத்த - மூங்கில் முளைகளைத் தந்து அவற்றிற்கு உண்பித்து வேண்டும் தழைகளையும் உண்பிக்க, வாள்நிற உருவின் ஒளிறுபு மின்னி - வாளின் நிறம்போலும் உருவுடன் ஒளிருமாறு மின்னி, பருஉ உறைப் பல் துளி சிதறி - பரிய பலவாகிய மழைத்துளிகளைச் சிதறி, வான் நவின்று - வானிலே பயின்று, பெருவரை நளிர் சிமை அதிர வட்டித்து - பெரிய மலையின் குளிர்ந்த உச்சி அதிரச் சூழ்ந்துகொண்டு, புயல் - மேகமானது, ஏறு உரைஇய வியல் இருள் நடுநாள் - இடியேற்றுடன் பரந்த மிக்க இருள் கொண்ட நடு இரவில்;

௭—௯. விறல் இழைப் பொலிந்த காண்பு இன் சாயல்-மேம்பட்ட அணிகளாற் பொலிவுற்ற காண்டற்கினிய மென்மைத்தன்மையின தாய், தடைஇ திரண்ட நின் தோள் சேர்பு அல்லதை - வளைந்து திரண்ட நின் தோளைச் சேர்ந்தாலல்லது, படாஅ ஆகும் எம் கண் என - எம் கண்கள் துயிலாவாகும் என்று கூறி;

௯—௧௩. நீயும் இருள் மயங்கு யாமத்து - நீயும் இருள் செறிந்த நடு யாமத்தே, இயவு கெட விலங்கி - நெறி தடுமாறலான் விலங்கி, வரி வயங்கு இரும் புலி வழங்குநர்ப் பார்க்கும் - வரிகள் விளங்கும் பெரிய புலி வழிவருவாரைப் பார்த்திருக்கும், பெருமலை விடர் அகம் வர அரிது என்னாய் - பெரிய மலையின் பிளப்பினையுடைய இடத்தில் வருதல் அரிதென்று நினையாயாய், வர எளிதாக எண்ணுதி - வரற்கு எளிதென்று எண்ணுகின்றனை;

௧௪—௭. நுண்ணிதில் கூட்டிய படு மாண் ஆரம் - நுண்மையாக அரிந்து பல மணங்களைக் கலந்த மாண்பு பொருந்திய சந்தனம், தண்ணிது கமழும் நின் மார்பு - தண்ணெனக் கமழும் நின் மார்பினை.

ஒருநாள் - ஒருநாளேனும், அடைய முயங்கேம் ஆயின் - பொருந்தத் தழுவேமாகுல், யாமும்-யாங்களும், விறல் இழை நெகிழச் சாஅய்தும்-மேம்பட்ட அணி நெகிழ்ந்து விழ மெலிவோம்.

கசு— அதனால்-,

கஎ—உஉ. அதுவே - அதனை, அன்னை அறியினும் அறிக - எம் அன்னை அறிந்திடினும் அறிந்திடுக, அலர் வாய் அம்பல் மூதூர் கேட்பினும் கேட்க - அலர் கூறும் பெண்டிரது வாயினின்று வரும் பழிச் சொற்களை முதிய எம்மூர் கேட்பினும் கேட்பதாக, வண்டு இறை கொண்ட எரிமருள் தோன்றியொடு - வண்டுகள் தங்குதல்கொண்ட தீயினை ஒத்த தோன்றிப் பூவுடன், ஒண்பூ வேங்கை கமழும் - ஒள்ளிய வேங்கைப் பூ நாறும், தண் பெரும் சாரல் - தண்ணிய பெரிய மலைச் சாரலில், பகல் வந்தீமே - பகலில் வருவீராக.

(முடிப்பு) தலைவ! புயல் ஏறுடன் உரைஇய நடுநாள் நீயும் நின் தோள் சேர்பு அல்லதை எம்கண் படாஅவாகும் என, விடரகம் வர எண்ணுதி; யாமும் நின்மார்பு ஒருநாள் முயங்கேம் ஆயின் இழை நெகிழச் சாய்தும்; அதனால், அதுவே அன்னை அறியினும் அறிக; மூதூர் கேட்பினும் கேட்க; தோன்றியொடு வேங்கை கமழும் சாரல் பகல்வந்தீமே.

(வி – ரை.) கிளைபாராட்டும் - கிளையினைப் பாராட்டும் என்றுமாம். ஒளிறுபு - ஒளிர என்க, தடைஇ - பருத்து என்றுமாம். சேர்பு- சேர்தால் என்னும் பொருட்டு. நீயும் என்னும் எண்ணுதி என இயையும். அடைய – முழுதும் என்றுமாம். எண்ணுதி, சாய்தும் அதனால் பகல் வந்தீமே எனக் கொண்டுகூட்டி புரைக்க. அதுவே என்றது, பகல் வருதலை. அன்னை அறியினும் அறிக, அம்பல் மூதூர் கேட்பினும் கேட்க என்றது, பகற் குறிக்கும் இடையீடு உளதாதல் புலப்படுத்திய வாறு.

(உ - றை.) "கிளைபாராட்டும் கடுநடை வயக்களிறு, முளைதரு பூட்டி வேண்டுகுள கருத்த" என்றது, நீயும் தலைவியை வரைந்து கொண்டு இல்லறம் நிகழ்த்திச் சுற்றஞ்சூழ வாழவேண்டும் என்ற வாறு.

(மே - ள்.) *'முதல்கரு உரிப்பொருள்' என்னுஞ் சூத்திரத்து, இச் செய்யுளை இத் துறைக்கே கொண்டு, இது குறிஞ்சிக்கு முதலுங் கருவும் வந்து உரிப்பொருளாற் சிறப்பெய்தி முடிந்தது என்றார். நச்.

---

* தொல். அகத். ௩.

219. பாலை

[மகட் போக்கிய தாய் சொல்லியது.]

சீர்கெழு வியனகர்ச் சிலம்புநக வியலி
ஓரை யாயமொடு பந்துசிறிது தெறியினும்
வாரா யோவென் றேத்திப் பேரிலைப்
பகன்றை வான்மலர் பனிநிறைந் ததுபோல்
பால்பெய் வள்ளஞ் சால்கை பற்றி
என்பா டுண்டனை யாயின் ஒருகால்
நுந்தை பாடும் உண்ணென் றூட்டிப்
*பிறந்ததற் கொண்டும் சிறந்தவை செய்தியான்
நலம்புனைந் தெடுத்தவென் பொலந்தொடிக் குறுமகள்
அறனி லாளனொ டிறந்தனள் இனியென
மறந்தமைந் திராஅ நெஞ்சம் கோவேன்
பொன்வார்ந் தன்ன வைவால் எயிற்றுச்
செந்நாய் வெரீஇய புகருழை யொருத்தல்
பொறியரை விளவின் புன்புற விளைபழம்
அழலெறி கோடை தூக்கலிற் கோவலர்
குழலென நினையும் நீரில் நீளிடை
மடத்தகை மெலியச் சாஅய்
நடக்குங் கொல்லென நோவல் யானே.

—கயமனார்.

(சொ - ள்.) ௧—௪. சீர் கெழு வியன் நகர் சிலம்பு நக இயலி - சிறப்புப் பொருந்திய பெரிய மனையின்கண் தன் சிலம்பு ஒலித்து விளங்க நடந்து, ஓரை ஆயமொடு பந்து சிறிது எறியினும்-விளையாடும் ஆய மகளிருடன் பந்தினை சிறிது எறிந்தாலும், வாராயோ என்று ஏத்தி - இங்கு வருவாயாக என்று அழைத்துப் பாராட்டி, பேர் இலைப் பகன்றை வால் மலர் பனி நிறைந்தது போல்-பெரிய இலையினையுடைய பகன்றையின் வெள்ளிய பூ பனிநீர் நிறையப்பெற்றதுபோல, பால் பெய் வள்ளம் சால்கை பற்றி - பால் பெய்யப்பெற்ற கிண்ணம் நிறைந்த தனைப் பற்றிக்கொண்டு, என்பாடு உண்டனையாயின் - என் பகுதிக்கு இதனை உண்டாயானால் (இனி), ஒருகால் நுந்தை பாடும் உண் என்று ஊட்டி-ஒரு முறை உன் தந்தையின் பகுதிக்கும் உண்பாயாக என்று கூறி யான் உண்பித்து, பிறந்ததற் கொண்டும் சிறந்தவை செய்து- அவள் பிறந்தநாள் தொட்டும் சிறப்புக்களைச் செய்து, யான் நலம்

(பாடம்) * பிறந்ததற்கொன்றும்.

புனைந்து எடுத்த என்பொலம் தொடிக் குறுமகள் - நான் இங்ஙனம் நலம்பாராட்டி வளர்த்த பொன் வளையல் அணிந்த எனது சிறிய மகள்;

க0—க. அறன் இலாளனொடு இறந்தனள் இனி என - அறநெறியில்லாதவனொடு இப்பொழுது கடந்து சென்றாள் என்று, மறந்து அமைந்து இரா நெஞ்சம் நோவேன் - சிறிதும் மறந்திருத்தலில்லாத நெஞ்சத்தால் வருந்துவேன் அல்லேன்;

கஉ—அ. பொன் வார்ந்தன்ன வை வால் எயிற்று - பொற்கம்பி யிழுத்தாலொத்த கூரிய வெள்ளிய பற்களையுடைய, செந்நாய் வெரீஇய புகர் உழை ஒருத்தல் - செந்நாயினை அஞ்சிய புள்ளிகளையுடைய கலைமான், பொறி அரை விளவின் புல் புற விளை புழல்-பொறிகள் பொருந்திய அரையினையுடைய விளவின்கனியின் புல்லிய ஓட்டில் தோன்றிய துளையில், அழல் எறி கோடை தூக்கலின் - வெப்பத்தைக்கொண்டு வீசும் மேல்காற்று நுழைந்து இசைத்தலின், கோவலர் குழல் என நினையும் - கோவலரது குழலோசை என நினைந்து (பாதுகாவலாக) ஆங்குச் செல்லும், நீர் இல் நீள் இடை - நீர் இல்லாத நீண்ட நெறியில், மடத் தகை மெலியச் சாஅய்-தனது மடப்பத்தையுடைய அழகு கெட மெலிந்து, நடக்குங்கொல் என யான் நோவல் - நடப்பளோ எனவே யான் நோகின்றேன்.

(முடிபு) யான் நலம் புனைந்தெடுத்த குறுமகள், அறனிலாளனொடு இனி இறந்தனள் என நெஞ்சம் நோவேன்; நீரில் நீளிடை மெலியச் சாஅய் நடக்கும் கொல்லென யான் நோவல்.

(வி - ரை.) மனையிலே இயலிப் பந்து சிறி தெறியினும் வாராயோ என்று அழைத்தாள் என்பது தலைவியின் மென்மைத் தன்மையினையும், பால்பெய் வள்ளம் பற்றி, என்பாடுண்டனையாயின் ஒருகால் நுந்தை பாடும் உண்ணென் றூட்டினளென்பது, அவளது செல்வக் களிப்பையும் உணர்த்தியபடியாம். பாடு - கூறு, பங்கு. செல்வக் குடியிற் பிறந்து உணவு விருப்பின்றி யிருக்கும் சிறவர் சிறுமியரைத் தாய்மார், இவ்வாறெல்லாம் கூறி உண்பித்தல் இயல்பு.

செந்நாய் வெரீஇய உழை ஒருத்தல், குழல் என நினைந்து பாது காவலாகச் செல்லும் என்க.

---

220. நெய்தல்

[இரவுக்குறிவந்து நீங்குந் தலைமகனை யெதிர்ப்பட்டுத் தோழி சொல்லியது.]

ஊருஞ் சேரியும் உடனியைந் தலரெழத்
தேரொடு மறுகியும் பணிமொழி பயிற்றியும்

கெடாஅத் தீயின் உருகெழு செல்லூர்க்
கடாஅ யானைக் *குழூஉச்சமந் ததைய
மன்மருங்கு அறுத்த மழுவாள் நெடியோன்
முன்முயன் றரிதினின் முடித்த வேள்விக்
கயிறரை யாத்த காண்டகு வனப்பின்
அருங்கடி நெடுந்தூண் போல யாவருங்
காண லாகா மாணெழி லாகம்
உள்ளுதொறும் பனிக்கும் நெஞ்சினை நீயே
நெடும்புற †நிலையினை வருந்தினை யாயின்
முழங்குகட லோதங் காலைக் கொட்கும்
பழம்பல் நெல்லின் ஊணூ ராங்கண்
கோளா ‡இரும்புள் போல நெஞ்சமர்ந்து
காதன் மாறாக் காமர் புணர்ச்சியின்
இருங்கழி முகந்த செங்கோல் அவ்வலை
முடங்குபுற இறவோ டினமீன் செறிக்கும்
நெடுங்கதிர்க் கழனித் தண்சாய்க் கானத்து
யாணர்த் தண்பணை யுறுமெனக் கானல்
ஆய மாய்ந்த சாயிறைப் பணைத்தோள்
நல்லெழில் சிதையா வேமஞ்
சொல்லினித் தெய்யயாந் தெளியு மாறே.

—மதுரை மருதனிளநாகனார்.

(சொ - ள்.) ௧—௨. ஊரும் சேரியும் உடன் இயைந்து அலர் எழ - ஊரின்கண்ணும் சேரியின்கண்ணும் ஒருங்கே சேர்ந்து அலர் எழாநிற்க, தேரொடு மறுகியும் பணிமொழி பயிற்றியும் - தேரொடு வந்து திரிந்தும் பணிந்த மொழிகளைப் பலகாற் கூறியும்;

௩—௧௧. கெடாத் தீயின் உருகெழு செல்லூர் - என்றும் நீங்காத வேள்வித் தீயினையுடைய அழகு விளங்கும் செல்லூரின்கண், கடாஅ யானைக் குழூஉச் சமம் ததைய - மதம்பொருந்திய யானையின் கூட்டம் போர்முனையில் அழிய, மன் மருங்கு அறுத்த மழுவாள் நெடியோன் - மன்னர் வழியை அழித்த பரசுராமன், முன் முயன்று அரிதினில் முடித்த வேள்வி - முன்பு அரிதினில் முயன்று முடித்த வேள்விக்கண், கயிறு அரை யாத்த காண்டகு வனப்பின் - கயிற்றினை அரையிற் சுற்றிய காணத்தக்க அழகினையுடைய, அரும் கடி நெடுதூண் போல - அரிய காவலைக் கொண்ட நீண்ட வேள்வித்தூண் போல, யாவரும்

(பாடம்) * குரூஉச்சமம். † நிலையின் வருந்தினை. ‡ இருபுள்.

கானல் ஆகா மாண் எழில் ஆகம் - யாவரும் காணுதல் இயலாத மாண்புற்ற அழகினையுடைய எம் தலைவியின் மார்பினை, உள்ளுதொறும் பனிக்கும் நெஞ்சினையாகி - நினைபுந்தொறும் நடுங்கும் நெஞ்சினையுடையையாகி, நீயே நெடும்புற நிலையினை வருந்தினையாயின் - நீதான் புறத்திலே நெடிது நிற்றலை யுடையையாகி வருந்தினை யாதலின்;

கஉ—௯. முழங்கு கடல் ஓதம் காலை கொட்கும் - முழங்கும் கடலின் திரைகள் காலையில் அலையும், பழம் பல் நெல்லின் ஊணூர் ஆங்கண்-மிகுதியான பழைய நெல்லையுடைய ஊணூரிடத்து, நோலா இரும்புள்போல-ஒன்றையொன்று பிரிந்திருத்தலைப் பொறாத பெரிய பறவையாய மகன்றிலைப்போல, நெஞ்சு அமர்ந்து - ஒருவர் நெஞ்சிலே ஒருவர் பொருந்தி, காதல் மாறா காமர் புணர்ச்சியின் - காதல் நீங்காத அழகிய புணர்ச்சியினாலே;

கக—உஉ. இரு கழி முகந்த செங்கோல் அவ்வலை - பெரிய கழியைத் துழவி முகந்த நேரிய கோல்களையுடைய அழகிய வலை, முடங்கு புற இறவோடு இன மீன் செறிக்கும் - வளைந்த புறத்தினையுடைய இறாமீனுடன் ஏனைமீன் இனங்களையும் குவிக்கும், நெடு கதிர்க் கழனி தண் சாய்க்கானத்து - நீண்ட கதிர்களையுடைய வயல்களையுடைய தண்ணிய சாய்க்கானம் என்னும் ஊரிடத்துள்ள, யாணர் தண்பணை உறும் என - அழகிய குளிர்ந்த மூங்கிலை ஒக்கும் என்று, கானல் ஆயம் ஆய்ந்த-கடற் சோலையில் தோழிமார் ஆய்ந்து பாராட்டிய, சாய் இறைப் பணைத் தோள் - வளைந்த முன் கையினையுடைய பருத்த இவள் தோள்கள், நல் எழில் சிதையா ஏமம் - நல்ல அழகு கெடாமைக்கு ஏதுவாய பாதுகாவலை, யாம் தெளியுமாறு இனிச் சொல் - யாம் தெளிய உணருமாறு இப்பொழுது நீ கூறுவாயாக.

(முடிபு.) தலைவ! நீயே தேரொடு மறுகியும் பணிமொழி பயிற்றியும், நெடியோன் முடித்த வேள்வி நெடுந்தூண் போலக் காணலாகா எழில் ஆகம் உள்ளுதொறும் பனிக்கு நெஞ்சினையாகி, நெடும்புற நிலையினை வருந்தினை யாதலான், நோலா இரும்புள் போலக் காமர் புணர்ச்சியினால், இவள் பணைத்தோள் எழில் சிதையா ஏமம் யாம் தெளியுமாறு சொல்.

(வி - ரை.) சேரி-ஊரின் ஒரு பகுதி, தெரு. *'ஒரூர் வாழினுஞ் சேரி வாரார்' என்பது காண்க. கெடாத்தீ-நீங்காத வேள்வித் தீ. உருகெழு - உட்குப் பொருந்திய என்றுமாம். மருங்கு - வழி. மழுவாள்-மழுவாகிய வாளென இருபெயரொட்டு. மழு-பரசு. பரசுராமன் நெடுமாலின் தோற்றமாகலின் நெடியோன் என்றார். செல்லூர்க்கண் நெடியோன் முடித்த வேள்வித்தூண்போலக் காணலாகா ஆகம் என்க. வருந்தினையாயின்-வருந்தினை யாதலின் என்க. இரும்புள் - காதலிற் சிறந்த மகன்றில்; மகன்றிற் பறவைகள், ஆணும் பெண்ணும் சிறிதும் பிரிந்திருக்கப்பெறாதன என்பது †'பூவிடைப் படினும் யாண்டு கழிந்

* குறு. உகக. † குறு. ௫எ.

தன்ன, நீருறை மகன்றிற் புணர்ச்சி போலப் பிரிவரிதாகிய தண்டாக் காமம்' என்பதனால் அறிக. சாய்க்கானம் - திருச் சாய்க்காடு என்னும் பதி. தெய்ய, அசைச் சொல். நீ தேரொடு வந்து திரிந்தும் குறைஇரந்தும் செல்லுதலால், ஊரும் சேரியும் அலர் உண்டாக, அதனால், தலைவி இற்செறிக்கப்பட்டு நின்னாற் காண்டற்கு அரியளாக இருத்தலின், நீ அவள் ஆகத்தை நினைபுந்தோறும் நடுக்கும் நெஞ்சுடன் பலகாலும் வந்து புறத்தே நின்று வருந்தி வறிது மீள்கின்றனை; அதனால், தலைவியின் தோளும் எழில் சிதைகின்றது; இனி அவ்வாறு சிதையாமைக்கு ஏதுவாகிய ஏமம் இன்னதென யாம் தெளிந்திலேமாகலின், அதனைத் தெளியுமாறு நீ கூறுக என்பாள்போன்று, நீ தலைவியை வரைந்து கொள்ளுதலே பாதுகாவலாகும் எனக் குறிப்பிற் புலப்படுத்தித் தோழி தலைவனை வரைவு கடாயினாள் என்க.

---

221. பாலை

[தலைமகற்குப் போக்குடன்பட்ட தோழி, தலைமகட்குப் போக்குடன்படச் சொல்லியது.]

நனைவிளை நறவின் தேறல் மாந்திப்
புனைவினை நல்லில் தருமணற் குவைஇப்
பொம்மல் ஓதி எம்மகள் மணனென
வதுவை அயர்ந்தனர் நமரே அதனால்
புதுவதுவை புனைந்த †சேயிலை வெள்வேல்
மதியுடம் பட்ட மையணற் காளை
‡வாங்குசினை மலிந்த திரளரை மராஅத்துத்
தேம்பாய் மெல்லிணர் தளிரொடு கொண்டுநின்
தண்ணறும் முச்சி புனைய அவனொடு
கழைகவின் போகிய மழையுயர் நனந்தலைக்
களிற்றின் பிழைத்தலிற் கயவாய் வேங்கை
காய்சினஞ் சிறந்து குழுமலின் வெரீஇ
இரும்பிடி பிரியுஞ் சோலை
அருஞ்சுரம் சேறல் அயர்ந்தனென் யானே.

—கயமனார்

(சொ - ள்.) க—ச. நனை விளை நறவின் தேறல் மாந்தி-அரும்பினின்றும் உண்டாகிய கள்ளின் தெளிவைப் பருகி, புனைவினை நல் இல்

(பாடம்) * செயலை வெள்வேல். † வாங்கு சினை கொய்த.

தருமணல் குவைஇ-புனையப்பட்ட வினைத்திறம் அமைந்த நல்ல மனையில் கொணர்ந்த மணலைக் குவித்துப் பரப்பி, பொம்மல் ஓதி எம் மகள் மணன் என-பொலிவுற்ற கூந்தலையுடைய எம் மகளுக்கு மணம் என்று கூறி, வதுவை அயர்ந்தனர் நமர் - நம்தாய் தந்தையர் மணத்திற்கு ஆவன செய்தனரர்;

௩—௪. அதனால்—, புதுவது புனைந்த செய் இலைவெள் வேல் - புதிதாகச் செய்யப்பட்ட செவ்விய இலைபொருந்திய வெள்ளிய வேலையுடைய, மதி உடம்பட்ட - உடன் போக்கிற்கு இயைந்த அறிவினையுடைய, மை அணல் காளை - கரிய தாடியினையுடைய காளைபோன்ற எம் தலைவன், வாங்கு சினை மலிந்த திரள் அரை மராஅத்து - வளைந்த கிளைகள் மிக்க திரண்ட அரையினையுடைய வெண் கடப்பமரத்தின், தேம்பாய் மெல் இணர் தளிரொடு கொண்டு - தேன் பாயும் மெல்லிய பூங்கொத்துக்களைத் தளிருடன் கொண்டுவந்து, நின் தண் நறும் முச்சி புனைய - நினது தண்ணிய நல்ல மயிர்முடியிற்சூட, அவனொடு - அத் தலைவனுடன், கழை கவின் போகிய மழை உயர் நனந்தலை - மூங்கில்கள் அழகிழந்த மழைபெய்யாது மேலேசென்ற அகன்ற பாலையிடத்தே, களிறு இரை பிழைத்தலின் கயவாய் வேங்கை - களிறாகிய இரை தப்பி விட்டமையின் பெரிய வாயினையுடைய வேங்கை, காய் சினம் சிறந்து குழுமலின் வெரீஇ - கொதிக்கும் சினம் மிக்கு முழங்குதலின் அஞ்சி, இரும்பிடி இரியும் சோலை அரும் சுரம் சேறல் - கரிய பெண்யானைகள் நிலைகெட்டு ஓடும் காட்டினையுடைய அரிய சுரநெறியிற் செல்லுதலை, யான் அயர்ந்தனென் - யான் விரும்பி ஏற்றுக்கொண்டேன்.

(முடிபு) நமர் எம்மகள் மணன் என வதுவை அயர்ந்தனர்! அதனால், மதியுடம்பட்ட காளை மெல்லிணர் தளிரொடு கொண்டு நின் முச்சிபுனைய அவனொடு நீ அரும் சுரம் சேறல், யான் அயர்ந்தனென்.

(வி - ரை.) வதுவை அயர்ந்தனர் நமர் என்றது, நமர் வேற்று வரைவினை உடன்பட்டார் என்றபடி. அருஞ்சுரம் சேறல் அயர்ந்தனென் என்றது தலைவனுடன் போக்குடன்பட்டேன் என்றவாறு. புதுவது புனைந்த செயிலை வெள்வேற் காளை என்றமையால், அவன், காட்டிடையே எத்துணையும் ஏதமின்றிக் காக்கவல்லன் என்பதும், மெல்லிணர் தளிரொடுகொண்டு நின் முச்சி புனைய என்றமையால், சுரத்திலே நடந்து செல்லும் வருத்தம் தோன்றாவாறு அன்பினால் நின்னைப் பாராட்டி அழைத்தேகுவன் என்பதும் கூறியவாறாம்.

---

222. குறிஞ்சி

[தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி தலைமகட்குச் சொல்லியது]

வானுற நிவந்த நீல்நிறப் பெருமலைக்
கான நாடன் உறீஇய *நோய்க்குன்
மேனி ஆய்நலந் தொலைதலின் மொழிவென்
முழவுமுகம் புலராக் கலிகொள் ஆங்கண்
கழாஅர்ப் பெருந்துறை விழவின் ஆடும்
ஈட்டெழில் பொலிந்த ஏந்துகுவவு மொய்ம்பின்
ஆட்ட னத்தி நலனயந் துரைஇத்
தாழிருங் கதுப்பின் காவிரி வவ்வலின்
மாதிரந் துழைஇ மதிமருண் டலந்த
ஆதி மந்தி காதலற் காட்டிப்
படுகடல் புக்க பாடல்சால் சிறப்பின்
மருதி யன்ன மாண்புகழ் பெறீஇயர்
சென்மோ வாழி தோழி பன்னாள்
உரவுரும் ஏறொடு மயங்கி
இரவுப்பெயல் பொழிந்த ஈர்ந்தண் ஆறே.

—பரணர்.

(சொ - ள்.) ௧௩. தோழி—, வாழி—,

௧—௩. வான் உற நிவந்த நீல் நிறப் பெருமலைக் கான நாடன் - வானில் மிக உயர்ந்த நீல நிறம் பொருந்திய பெருமலையினை அடுத்துள்ள காட்டு நாட்டினையுடைய தலைவன், உறீஇய நோய்க்கு உன் மேனி ஆய் நலம் தொலைதலின் மொழிவென் - அடைவித்த நோயால் நினது மேனியின் ஆய்ந்த அழகு ஒழிதலின் யான் இதனைக் கூறுவேன், கேட்பாயாக;

௪—௮. முழவு முகம் புலரா கலிகொள் ஆங்கண் - முழவின் ஒலி மாறாத ஆரவாரம் மிகும் இடமாகிய, கழாஅர் பெரும் துறை விழவின் ஆடும் - கழார் என்னுமிடத்துள்ள பெரிய துறையிடத்து விழாவில் ஆடிய, ஈட்டு எழில் பொலிந்த ஏந்து குவவு மொய்ம்பின் - திரண்ட அழகாற் பொலிவுற்ற நிமிர்ந்த திரண்ட தோளினையுடைய, ஆட்டன் அத்தி நலன் நயந்து உரைஇ - ஆட்டனத்தி என்பான் அழகினை விரும்பிப் பரந்து வந்து, தாழ் இரு கதுப்பின் காவிரி வவ்வலின் - தாழ்ந்து தொங்கும் கரிய கூந்தலையுடைய காவிரி கவர்ந்து கொண்டமையின்;

(பாடம்) * நோய்க்கென்.

௧—௰௨. மாதிரம் தழைஇ மதி மருண்டு அலந்த ஆதி மந்தி - திசையெல்லாம் தன் கணவனைத் தேடி மதிமயங்கி வாடிய அவன் மனையாள் ஆகிய ஆதிமந்திக்கு, காதலன் காட்டி - அவள் காதலனைக் காட்டி, படுகடல் புக்க பாடல் சால் சிறப்பின் மருதி அன்ன - ஒலிக்கும் கடலிற் புக்கு மறைந்த பாடுதல் அமைந்த சிறப்பினையுடைய மருதியை யொத்த, மாண்புகழ் பெறீஇயர் - சிறந்த புகழைப் பெறும் பொருட்டு;

௧௩—௫. பல் நாள் உரவு உரும் ஏறொடு மயங்கி - பல நாளும் வலிய இடியேற்றுடன் கூடி, இரவு பெயல் பொழிந்த ஈர் தண் ஆறு - இரவெல்லாம் மழை சொரிதலின் ஈரம் மிக்க சேற்று நெறியில் (நம் தலைவனைத் தேடி), சென்மோ - செல்வோமாக.

(முடிபு) தோழி வாழி, நின் மேனி நலம் தொலைதலின் மொழிவென்: ஆட்டனத்தி நலம் நயந்து காவிரி வவ்வலின், அவனை ஆதிமந்திக்குக் காட்டிக் கடலிற் புக்க மருதி யன்ன புகழ் பெறீஇயர், ஈர்ந் தண் ஆறு சென்மோ.

(வி-ரை.) நோய்ச்சென்மேனி என்பது பாடமாயின் *'தாயத்தினடையா' என்னுஞ் சூத்திர விதியால், தோழி தலைவி உறப்பைத் தன்னுறப்பாகக் கொண்டு கூறினாளென்க. ஆதிமந்தி காதலற் கெடுத்து அலமந்த செய்தி இந்நூலுள் வேறு செய்யுட்களிலும் கூறப்பட்டுள்ளது; †'வாடல் உழிஞ்சில்' என்னும் செய்யுளின் உரையிற் காண்க. ஆட்டனத்தியைக் காவிரி வவ்விச் சென்றதனை அவனது நலம் நயந்து கவர்ந்து சென்றதாகத் தற்குறிப்பேற்ற வகையாற் கூறினர். காவிரியைப் பெண்ணாக உருவகித்தமைக்கேற்ப, தாழிருங் கதுப்பின் என அடை கொடுக்கப்பட்டது. காதலற் காட்டிப் படுகடல் புக்க மருதி என்றமையால், மருதி யென்பாள் தன்னுயிர்க்கு அஞ்சாது கடலிற் சென்று, ஆதிமந்திக்கு அவள் கணவனைக் காட்டித் தான் உயிர் விடுத்தாள் என்பது போதரும். அதனால் அவள் புகழ் மிகச் சிறந்ததாயினமையின், 'மருதி யன்ன மாண்புகழ்' எனப்பட்டது. 'மருதி யன்ன மாண்புகழ் பெறீஇயர் சென்மோ' என்று தோழி கூறியது நாமும் தலைவனைத் தேடிச்சென்று அவனைக் காணமாட்டாது உயிர் துறந்தேமாயினும் அதனால் விழுப்புகழ் எய்துவேம் என்பாள் போன்று தலைமகனை வரைவு கடாயினவா றென்க. செல்கம் என்பது சென்மோ என விகாரமாயிற்று.

---

* தொல். பொருளியல், ௨௭. † அகம். ௪௫.

223. பாலை

[பிரிவிடை வேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறுத்தியது.]

பிரிதல் வல்லியர் இதுநத் துறந்தோர்
மறந்தும் அமைகுவர் கொல்லென் றெண்ணி
ஆழல் வாழி தோழி கேழல்
வளைமருப்பு உறழும் உளை *நெடும் பெருங்காய்
நனைமுதிர் முருக்கின் சினைசேர் பெருங்கல்
காய்சினக் கடுவளி எடுத்தலின் †வெங்காட்டு
அழல்பொழி யானையின் ஐயெனத் தோன்றும்
நிழலில் ஓமை நீரில் நீளிடை
இறந்தன ராயினும் காதலர் நம்வயின்
மறந்துகண் படுதல் யாவது புறந்தாழ்பு
அம்பணை நெடுந்தோள் தங்கித் தும்பி
அரியினங் கடுக்குஞ் சுரிவணர் ஐம்பால்
‡நுண்கேழ் அடங்க வாரிப் பையுள்கெட
நன்முகை அதிரற் போதொடு குவளைத்
தண்ணறுங் கமழ்தொடை வேய்ந்துநின்
மண்ணார் கூந்தல் மரீஇய துயிலே.

—பாலைபாடிய பெருங்கடுங்கோ.

(சொ - ள்.) ௧—௩. தோழி—, வாழி—, பிரிதல் வல்லியர் நத் துறந்தோர் - நம்மைப் பிரிதற்கு மனவலி எய்தினராகி அங்ஙனம் நம்மைப் பிரிந்து சென்றோர், மறந்தும் அமைகுவர் கொல் என்று இது எண்ணி - நம்மை மறந்து தங்குதலும் செய்வரோ என்று இதனை எண்ணி, ஆழல் - துயரில் அழுந்தாதே;

௩—௮. கேழல் வளை மருப்பு உறழும் உளை நெடு பெரும் காய் - பன்றியின் வளைந்த கொம்பினை ஒத்த ஆர்க்கினையுடைய நெடிய பெரிய காயினையுடைய, நனை முதிர் முருகின் சினைசேர் பெருங்கல் - அரும்பு முதிர்ந்த முருக்க மரத்தின் கிளை பொருந்திய பெரிய கல்லானது, காய்சின கடு வளி எடுத்தலின் - மிக்க வேகமுடைய கடிய காற்று மூட்டுதலின், வெம் காட்டு அழல் பொழி யானையின் ஐ எனத் தோன்றும் - வெம்மை மிக்க காட்டில் அழலால் மூடப்பெற்ற யானையைப்போன்று வியப்புறத் தோன்றும், நிழல் இல் ஓமை நீர் இல் நீள் இடை - நிழலற்ற ஓமை மரத்தினையுடைய நீர் இல்லாத நீண்ட சுரத்தை,

(பாடம்) *நெடும்பொங்கர். †வெங்கட்டு. ‡நுண்டுளடங்க.

இறந்தனர் ஆயினும் - கடந்து சென்றனராயினும், காதலர் - நமது காதலர்;

க—கக. புறம் தாழ்பு - புறத்தில் தாழ்ந்து, அம்பணை நெடுதோள் தங்கி - அழகிய மூங்கில் போன்ற நீண்ட தோளில் படிந்து, தும்பி அரி இனம் கடுக்கும் - தும்பி வண்டின் கூட்டத்தை ஒக்கும், சுரி வணர் நுண் கேழ் ஐம்பால் - சுரிந்து வளைந்த நுண்ணிய கருநிறம் வாய்ந்த கூந்தலை, பையுள் கெட அடங்க வாரி - வருத்தம் ஒழிய முழுவதும் வாரி, நன்முகை அறல் போதொடு - காட்டுமல்லிகையின் நல்ல அரும்புடன் கூடிய மலரொடு, தண் நறும் குவளை கமழ் தொடை வேய்ந்த - தண்ணிய நறிய குவளைமலரை வைத்துத் தொடுத்த நாறும் மாலையைச் சூட்டிய, நின் மண் ஆர் கூந்தல் மரீஇய துயில் - நினது மண்ணுதல் அமைந்த கூந்தலிற் பொருந்திய துயிலை, நம் வயின் - நம்மிடத்தே தங்கிப் பெறுதலை, மறந்து கண்படுதல் யாவது - மறந்து ஆங்குத் துயிலுதல் எங்ஙனம் இயல்வது?

(முடிபு) தோழி, வாழி, நத்துறந்தோர், மறந்தும் அமைகுவர் கொல் என்று இது எண்ணி ஆழல்; நம் காதலர், நீரில் நீளிடை இறந்தனராயினும், நின் மண்ணார் கூந்தல் மரீஇய துயில் மறந்து கண்படுதல் யாவது?

(வி - ரை.) முருக்கின் செந்நிறப் பூக்களாற் சூழப்பெற்ற கல், காட்டிலே அழலாற் சூழப்பெற்ற யானைபோலத் தோன்றுமென்றார். காய்சினக் கடு வளி எடுத்தலின் என்றது, காட்டிலே - அழல் சூழுதற்கு ஏதுக் கூறியபடியாம். அழல் பொதி யானை யெனப் பாடம் கொள்ளுவுமாம். தோன்றும் நீளிடை எனவும், ஓமை நீள் இடை எனவும், நீரில் நீளிடை எனவும் தனித்தனி கூட்டுக. மண் - கழுவுதல்; முதனிலைத் தொழிற்பெயர். காதலர் கூந்தல் மரீஇய துயிலை மறந்து ஆண்டுக் கண் துயில் செய்யாராதலின், விரைந்து வருவர் எனக் கூறித், தோழி தலைமகளை ஆற்றுவித்தா ளென்க.

---

224. முல்லை

[வினைமுற்றிய தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.]

செல்க பாக எல்லின்று பொழுதே
வல்லோன் அடங்குகயி றமைப்பக் கொல்லன்
விசைத்துவாங்கு தருத்தியின் வெய்ய உயிராக்
கொடுநுகத் தியாத்த தலைய கடுநடைக்
ரு காற்கடுப் புன்ன கடுஞ்செலல் இவுளி
பால்கடை நுரையின் பரூஉமிதப் பன்ன
வால்வெண் டெவிட்டல் வழிவார் நுணக்கஞ்

சிலம்பி நூலின் உணங்குவன பாறிச்
சாந்துபுலர் அகலம் மறைப்பக் காண்டகப்
புதுநலம் பெற்ற வெய்துநீங்கு புறவில்
தெறிநடை மரைக்கணம் இரிய மனையோள்
ஐதுணங்கு வல்சி பெய்துமுறுக் குறுத்த
திரிமரக் குரலிசை கடுப்ப வரிமணல்
அலங்குகதிர்த் திகிரி ஆழி போழ
வருங்கொல் தோழிநம் இன்னுயிர்த் துணையெனச்
சில்கோல் எல்வளை யொடுக்கிப் பல்கால்
அருங்கடி வியனகர் நோக்கி
வருந்துமால் அளியள் திருந்திழை தானே.

—*ஆலூர் மூலங்கிழார் மகனார் பெருந்தலைச் சாத்தனார்.

(சொ - ள்.) ௪௫. தோழி—,

௨—௪௫. வல்லோன் அடங்கு கயிறு அமைப்ப - வல்லோனாகிய பாகன் அடங்கிச் செல்வதற்கு உரிய கடிவாளக் கயிற்றினைப் பூட்ட, கொல் விசைத்து வாங்கு துருத்தியின் வெய்ய உயிரா - கொல்லன் வலித்து இழுக்கும் துருத்தியினைப்போல வெப்பமாகப் பெருமூச்சு விட்டு, கொடு நுகத்து யாத்த தலைய - வளைந்த நுகத்திடத்தே கட்டப் பெற்ற தலையினவாகிய, கடு நடை கால் கடுப்பு அன்ன கடும் செலல் இவுளி - கடிய நடையினையும் காற்றின் வேகத்தை யொத்த விரைந்த ஓட்டத்தினையுமுடைய குதிரைகளின், பால் கடை நுரையின் பரூஉ மிதப்பு அன்ன - பால் கடையுங்கால் எழும் வெண்ணெயின் பெரிய மிதப்பினை யொத்த, வால் வெண் தெவிட்டல் வழி வார் நுணக்கம் - மிக வெள்ளியதான வாயின் தெவிட்டலாய பின்னே வழிந்திடும் மெல்லிய நுரை, சிலம்பி நூலின் நுணங்குவன பாறி - சிலம்பியின் நூல்போல நுணுகுவனவாய்ச் சிதறி, சாந்து புலர் அகலம் மறைப்ப - சந்தனம் பூசிப் புலர்ந்த மார்பில் மறைச் செய்யவும், காண்தக புதுநலம் பெற்ற வெய்து நீங்கு புறவில் - அழகு பெறப் புதுநலத்தினைப் பெற்ற வெம்மை நீங்கிய காட்டில், தெறி நடை மரைக்கணம் இரிய - குதித்துச் செல்லும் மரையினங்கள் அஞ்சியோடவும், மனையோள் ஐது உணங்கு வல்சி பெய்து முறுக்கு உறுத்த - மனைவி பதமாகக் காய்ந்த அரிசியைப் பெய்து சுற்றுதல் செய்த, திரிமரக் குரலிசை கடுப்ப - சுழலும் திரிகையின் குரலொலி ஒக்க, வரி மணல் - வரிப்பட்ட மணலில், அலங்கு கதிர் திகிரி ஆழி போழ - சுழலும் கதிரினையுடைய வட்ட ஆழி அறுத்துக்கொண்டு செல்லவும், நம் இன் உயிர்த்துணை வரும் கொல் என - நமது இனிய உயிர்த்துணைவராய காதலர் வருவர்கொல் என்று;

(பாடம்) * ஆலூர் கிழார் மகன் பெருஞ்சாத்தன்.

௧௩—௮. சில் கோல் எல் வளை ஒடுக்கி - சிலவாய திரண்ட ஒளி பொருந்திய வளையினை யொடுக்கி, பல் கால் அருங்கடி வியன் நகர் நோக்கி - பலமுறை அரிய காவலுடைய பெரிய மனையின் புறத்தே வந்து பார்த்து, அளியள் திருந்து இழை - இரங்கத்தக்காளாகிய திருந்திய அணியினையுடைய நம் காதலி, வருந்தும் - வருந்துவாள்;

௧௪. எல்லின்று பொழுதே - பொழுதும் இராவாயிற்று ஆதலின், செல்க பாக - பாகனே விரைந்து நம் தேர் செல்வதாக.

(முடிபு) 'தோழி! இன்னுயிர்த்துணை வருங்கொல்' எனப் பல் கால் வியனகர் நோக்கி அளியள் திருந்திழை வருந்தும்; பொழுதும் எல்லின்று; பாக, (தேர்) செல்க.

(வி - ரை.) செல்க - செலுத்துக எனப் பிறவினைப் பொருட்டாக்கலுமாம். இவுளியின் தெவிட்டல் என்க. தெவிட்டல்-வாய் குதட்டுதலால் உண்டாகும் விலாழிநீர். மறுப்ப - மறச்செய்ய. 'காண்டகப் புது நலம் பெற்ற வெய்து நீங்கு புறவில்' என்றமையால், கார்ப்பருவம் வந்தமை பெற்றாம். முறுக்குறுத்த - சுழற்றிவிட்ட. திரிமரம் - இது திரிகை என வழங்கும். திகிரியாய ஆழி என இருபெயரொட்டுமாம். கழலும் வளைகளைச் செறித்து என்பான், எல்வளை ஒடுக்கி என்றான்.

225. பாலை

[பொருள் கடைக்கூட்டிய நெஞ்சிற்குத் தலைமகன் சொல்லியது.]

அன்பும் மடனுஞ் சாயலும் இயல்பும்
என்பும் நெகிழ்க்குங் கிளவியும் பிறவும்
ஒன்றுபடு கொள்கையொடு ஓராங்கு முயங்கி
இன்றே யிவண மாகி நாளைப்
புதலிவர் ஆடமைத் தும்பி குயின்ற
அகலா அந்துளை கோடை முகத்தலின்
நீர்க்கியங் கினநிரைப் பின்றை வார்கோல்
ஆய்க்குழற் பாணியின் ஐதுவந் திசைக்குந்
தேக்கமல் சோலைக் கடறோங் கருஞ்சுரத்து
யாத்த தூணித் தலைதிறந் தவைபோற்
பூத்த இருப்பைக் குழைபொதி குவியிணர்
கழல்துளை முத்திற் செந்நிலத்து உதிர
மழைதுளி மறந்த அங்குடிச் சிறார்ச்
சேக்குவங் கொல்லோ நெஞ்சே பூப்புனை

புயலென ஒலிவருந் தாழிருங் கூந்தல்
செறிதொடி முன்கைநங் காதலி
அறிவஞர் நோக்கமும் புலவியும் நினைந்தே.

—எயினந்தை மகனார் இளங்கீரனார்.

(சொ - ள்.) கச. நெஞ்சே—,

க—ச. அன்பும் மடனும் சாயலும் இயல்பும் - அன்பும் மடனும் மென்மையும் ஒழுக்கமும், என்பும் நெகிழ்க்கும் கிளவியும் – என்பையும் நெகிழ்விக்கும் சொல்லும், பிறவும் - ஏனையவும், ஒன்றுபடு கொள்கையொடு - தலைவியுடன் ஒன்றுபட்டுள்ள நற்கொள்கையுடையேமாய், ஓராங்கு முயங்கி-ஒரு பெற்றியே தழுவி, இன்று இவணம் ஆகி-இன்று இவ்விடத்தேம் ஆகி;

ச—கங. நாளை - நாளைப் பொழுதில், புதல் இவர் ஆடு அமை - புதல்கள் படர்ந்த இடத்தேயுள்ள அசையும் மூங்கிற்கண்ணே, தும்பி குயின்ற அகலா அம் துளை - வண்டு துளைத்த குறுகிய அழகிய துளை வழியே, கோடை முகத்தலின் - மேல்காற்றுப் புகுந்து வருதலின் (எழும் ஒலி), நீர்க்கு இயங்கு இன நிரைப்பின்றை - நீர்பருகச் செல்லும் கூட்டமாய ஆனிரைக்குப் பின்னே வரும், வார்கோல் ஆய்க்குழல் பாணியின் ஐது வந்து இசைக்கும் - நீண்ட கோலினையுடைய ஆயர்தம் குழலின் இசையென அழகிதாக வந்து ஒலிக்கும், தேக்கு அமல் சோலை கடறு ஓங்கு அருசுரத்து-தேக்குமரங்கள் நிறைந்த சோலையினையுடைய காடு உயர்ந்த அரிய பாலைவழியிலுள்ள, யாத்த தூணி தலை திறந்தவை போல் - அம்புகளைத் தொகுத்த புட்டில்கள் மூடி திறக்கப்பெற்றன போற் காணப்பெறும், பூத்த இருப்பைக் குழை பொதி குவி இணர் - பூத்துள்ள இருப்பையின் தளிர் பொதியப் பெற்ற குவிந்த (துளையுடைய) பூக்கொத்துக்கள், கழல் துளை முத்தின் செந்நிலத்து உதிர - நூலினின்று கழன்று விழும் துளை பொருந்திய முத்தைப்போல சிவந்த நிலத்தே உதிர, மழை துளி மறந்த - மழைபெய்தலை மறந்த இடமாய, அம் குடி சீறூர் - அழகிய குடிகளையுடைய சிறிய ஊரின்கண்ணே;

கச—எ. பூ புனை புயல் என ஒலிவரும் தாழ் இரு கூந்தல் - பூவாற் புனையப்பெற்ற மேகம்போலத் தழைத்த தாழ்ந்த கரிய கூந்தலினையும், செறி தொடி முன்கை - நெருங்கிய வளைகளையுடைய முன்கையினையும் உடைய, நம் காதலி அறிவு அஞர் நோக்கமும் புலவியும் நினைந்து - நம் காதலியின் அறிவு கலங்கிய பார்வையினையும் புலவியினையும் நினைந்து, சேக்குவம் கொல்லோ - (தனித்துத்) தங்கியிருப்பேமோ?

(முடிபு) நெஞ்சே! தலைவியுடன் ஓராங்கு முயங்கி இன்றே இவணமாகி, நாளை, அருஞ்சுரத்துச் சீறூர், காதலி நோக்கமும் புலவியும் நினைந்து சேக்குவம் கொல்லோ?

(வி - ரை.) அன்பு - ஒருவரை யொருவர் இன்றியமையாமைக் கேதுவாகிய காதல். மடன் - ஒருவர் குற்றம் ஒருவர் அறியாமை. சாயல் - மென்மைத்தன்மை. இயல்பு-ஒழுக்கம். *'சால்பும் வியப்பும் இயல்பும்' என்பதின் உரை காண்க. பிற என்றது செறிவு, நிறை, அறிவு முதலாயினவற்றை. ஒன்றுபடு கொள்கை என்றமையால் இவையெல்லாம் தலைவனுக்கும் தலைவிக்கும் ஒத்திருத்தல் வேண்டும் என்றவாறாயிற்று. இனி, தலைவி, அன்பு முதலிய யாவும் ஒன்றிய கொள்கையை யுடைமையினாலே அவனுடன் ஓராங்கு மயங்கி என்றலுமாம். கடறு - கற்காடு. இருப்பையின் அரும்பு அம்புக்குப்பி போலுமாகலின், துணித்தலை திறந்தலைபோல் இருப்பைக்குழை பொதி குவியிணர் என்றார். †'வில்லோர் தூணி வீங்கப் பெய்த, அப்புநுனை யேய்ப்ப அரும்பிய இருப்பை' என முன் வந்தமையுங் காண்க. இருப்பையின் குவியிணர் முத்துப்போற் செங்கலத் துதிர்ந்து கிடத்தலால் அழகு பெற்ற குடியிருப்பினையுடைய சீறூர் என்க. இன்று நம்மாற் பாராட்டப்பெற்று மகிழ்ச்சியுடன் இருக்கும் நம் காதலி, நாளை நம்மைப் பிரிந்து ஒப்பனை செய்யாத கூந்தலும், தொடி நெகிழும் கையும், கலங்கிய நோக்கமும், அசனல் வெறுப்பும் உடையள் ஆதலை நினைந்து சீறூரில் தங்கியிருப்போம் போலும் என்றான் என்க.

---

226. மருதம்

[தலைமகற்குத் தோழி வாயின் மறுத்தது.]

உணர்குவென் அல்லேன் உரையல்நின் மாயம்
நாணிலை மன்ற யாணர் ஊர
அகலுள் ஆங்கண் அம்பகை மடிவைக்
குறுந்தொடி மகளிர் குரூஉப்புனல் முனையின்
பழனப் பைஞ்சாய் கொழுதிக் கழனிக்
கரந்தையஞ் செறுவின் வெண்குருகு ஓப்பும்
வல்வில் எறுழ்த்தோட் பரதவர் கோமான்
பல்வேல் மத்தி கழாஅர் முன்துறை
நெடுவெண் மருதொடு வஞ்சி சாஅய்
விடியல் வந்த பெருநீர்க் காவிரித்
தொடியணி முன்கை நீவெய் யோளொடு
முன்னாள் ஆடிய கவ்வை இந்நாள்
வலிமிகு முன்பிற் பாணனொடு மலிதார்த்

---

* குறிஞ்சிப். ௧௬. † அகம். ௯.

தித்தன் வெளியன் உறந்தை நாளவைப்
பாடின் தெண்கிணைப் பாடுகேட் டஞ்சிப்
போரடு தானைக் கட்டி
பொராஅ தோடிய ஆர்ப்பினும் பெரிதே.

—பரணர்.

(சொ - ள்.) க—உ. யாணர் ஊர - புது வருவாயையுடைய ஊரனே! நின் மாயம் உரையல் - நின் வஞ்சனை பொதிந்த சொற்களைக் கூறாதே, உணர்குவென் அல்லென் - யான் அவற்றை மெய்ம்மையாகக் கொள்வேன் அல்லேன், நாண் இலை மன்ற - நீ தேற்றமாக நாணம் உடையை யல்லை;

ங—கஉ. அகலுள் ஆங்கண் - அகன்ற ஊரிடத்தே, அம் பகை மடிவை - அழகிய பகுப்பையுடைய தழையுடையினையும், குறு தொடி - குறிய வளையலையுமுடைய மகளிர், குரூஉ புனல் முனையின் - விளங்கும் புனல் விளையாட்டை வெறுப்பின், பழனம் பைஞ்சாய் கொழுதி - பொய்கையிலுள்ள கோரைகளைக் கோதி, கழனிக் கரந்தை செறுவில் வெண் குருகு ஓப்பும் - கழனியாகிய கரந்தையையுடைய செய்யின்கண்ணுள்ள வெள்ளிய நாரையை ஓட்டும் (இடமாய), வல்வில் எறுழ் தோள் பரதவர் கோமான் - வலிய வில்லைத்தாங்கிய வலிமை பொருந்திய தோள்களையுடைய பரதவர்கட்குத் தலைவனாகிய, பல் வேல் மத்தி - பல வேற்படைகளையுடைய மத்தி என்பானது, கழாஅர் - கழார் என்னும் பதியின், முன் துறை - துறையின் முற்றத்தே, நெடு வெள் மருதொடு வஞ்சி சாஅய் - நீண்ட வெள்ளிய மருதமரத்துடன் வஞ்சிமரத்தையும் சாய்த்து, விடியல் வந்த பெருநீர்க் காவிரி - நாட்காலையில் வந்த மிக்க வெள்ளத்தையுடைய காவிரியிடத்தே, தொடி அணி முன்கை நீ வெய்யோளொடு - வளையல் அணிந்த முன்கையினையுடைய உன்னால் விரும்பப்பெற்ற பரத்தையொடு, முன்னாள் ஆடிய கவ்வை - நீ நேற்று விளையாடியதாலெழுந்த அலர்;

கஉ—எ. இந்நாள் - இன்று, வலி மிகு முன்பின் பாணனொடு - ஆற்றல் மிக்க வலிமையுடைய பாணன் என்பானொடு கூடி, போர் அடு தானை கட்டி - போர் அடுதலில்வல்ல தானையையுடைய கட்டியென்பான் (போர் செய்தற்கு வந்து), மலி தார் தித்தன் வெளியன் உறந்தை நாள் அவை - தார் மலிந்த தித்தன் வெளியன் என்பானது உறையூரின்கண்ணுள்ள நாளோலக்கத்தின்கண்ணே எழுந்த, பாடு இன் தெண் கிணைப் பாடு கேட்டு அஞ்சி - ஓசை இனிய தெளிந்த கிணையினது ஒலியைக் கேட்டு அவனது பெருமையை உணர்ந்து அஞ்சி, பொராஅது ஓடிய ஆர்ப்பினும் பெரிது - போர் செய்யாது ஓடியபோது உண்டாய ஆரவாரத்தினும் பெரிதாகும்.

(முடிபு) ஊர! மாயம் உரையல்; யான் அவற்றை உணர்குவென் அல்லென்; நாணிலை; காவிரியில் கழாஅர் முன்துறைக்கண்ணே நீ வெய்யோளொடு முன்னாள் ஆடிய கவ்வை, இந்நாள் கட்டி யென் பான் பாணன் என்பானொடு கூடிப் போர் செய்தற்கு வந்து வெளியன் உறந்தை நாளவைக் கண்ணே கிணையொலி கேட்டு அஞ்சிப் பொராது ஓடிய போதுண்டாய ஆரவாரத்தினும் பெரிதாகும்.

(வி - ரை.) மாயம் - பரத்தையை அறியேன் என்னும் பொய்ம் மொழி. பகை - பகுப்பு. ஒன்றற்கொன்று முரண் என்றுமாம். பல திறமுடைய பூக்களாலும் தழையாலும் செய்யப்படுதலின் பகை மடிவை என்றார். மடிவை - தழையுடை. குறுந்தொடி மகளிர் என்றது, மருத நிலத்து உழவர் மகளிரை. மகளிர் புனலாடுதலில் வெறுப்புறின்செறு வில் குருகினை யோட்டி விளையாடுவர் என்க. விளை செறுவில் காந்தை உளதாதல், *'காய்த்த கரந்தை மாக்கொடி விளைவயல்' எனப் பிறாண்டும் கூறப்படுதல் காண்க. †'பல்வேல் மத்தி கழாஅர்' என இவ்வாசிரியர் முன்னரும் கூறியுள்ளமை அறியற்பாற்று. கிணை-ஈண்டு முரசு. பாணனும் கட்டியும் மிக்க மெய்வலியும் படைவலியும் உடைய ராகியும் தித்தன் வெளியனது நாளவைக்கண் ஒலிக்கும் கிணையொலி கேட்டல் மாத்திரையானே அஞ்சியோடினமையின் எள்ளல் பற்றிய நகை யாரவாரம் பெரிதாயிற்றென்க. ஓடிய ஆர்ப்பினும்: பெயரெச்சம் காரணப் பொருட்டு.

---

227. பாலை

[தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது. பிரிவின்கண் வேறுபட்ட தோழிக்குத் தலைமகள் சொல்லியதுஉமாம்.]

நுதல்பசந் தன்றே தோள்சா யினவே
திதலை யல்குல் வரியும் வாடின
என்னா குவள்கொல் இவளெனப் ‡பன்மாண்
நீர்மலி கண்ணொடு நெடிதுநினைந் தொற்றி
இனையல் வாழி தோழி நனைகவுள்
காய்சினஞ் சிறந்த வாய்புகு கடாத்தொடு
முன்னிலை பொறாஅது முரணிப் பொன்னிணர்ப்
புலிக்கேழ் வேங்கைப் பூஞ்சினை புலம்ப
முதல்பாய்ந் திட்ட முழுவலி யொருத்தல்
செங்கிலப் படுநீ றாடிச் செருமலைந்து
களங்கொள் மள்ளரின் முழங்கும் அத்தம்

---

* பதிற். ௬0. †அகம். ௬. (பாடம்) ‡பன்னானீர்மலி.

பலஇறந்து அகன்றன ராயினும் நிலைஇ
நோயில ராகநங் காதலர் வாய்வாள்
தமிழகப் படுத்த இமிழிசை முரசின்
வருநர் வரையாப் பெருநா ளிருக்கைத்
தூங்கல் பாடிய ஓங்குபெரு நல்லிசைப்
*பிடிமிதி வழுதுணைப் பெரும்பெயர்த் தழும்பன்
கடிமதில் வரைப்பின் ஊணூர் உம்பர்
விழுநிதி துஞ்சும் †வீறுபெறு திருநகர்
இருங்கழிப் படப்பை மருங்கூர்ப் பட்டினத்து
எல்லுமிழ் ஆவணத்து அன்ன
கல்லென் கம்பலை செய்தகன் றோரே.

—நக்கீரர்.

(சொ - ள்.) ௧—௫. தோழி—, வாழி—, நுதல் பசந்தன்று - நுதல் பசந்தனது, தோள் சாயின - தோள்கள் மெலிந்துவிட்டன, திதலை அல்குல் வரியும் வாடின - தேமல் பரந்த அல்குலின் வரிகளும் வாடிப்போயின, என் ஆகுவள் கொல் இவள் என - இனி இவள் எந் நிலை யடைவளோ என்று, பல்மாண் நீர்மலி கண்ணொடு - பலபடியாக நீர் நிறைந்த கண்ணொடு, கொடிது நினைந்து - கொடிது எண்ணி, ஒற்றி - ஆராய்ந்து, இனையல் - வருந்தாதே;

௬—௧௨. காய் சினம் சிறந்த - காயும் சினம் மிக்கமையால், கனை கவுள் வாய்புகு கடாத்தொடு - கனைந்த கன்னத்தினின்றும் வாயிற் புகும் மதநீரொடு, முன் நிலை பொறாஅது - தன் முன்னே நிற்றலைக் காணப் பொறாமல், முரணி - பகைத்து, பொன் இணர் புலி கேழ் வேங்கை - பொன்னிறமான கொத்துக்களையுடைய புலியின் நிறத்தினைக்கொண்ட வேங்கை மரத்தினது, பூ சினை புலம்ப - பூங்கொம்புகள் பூக்கள் உதிர்தலால் தனிமையுற, முதல் பாய்ந்திட்ட - அவ்வேங்கையின் அடிமரத்தில் பாய்ந்திட்ட, முழுவலி ஒருத்தல் - மிக்க வலியினையுடைய களிறு, செந்நிலப் படு நீறு ஆடி - செம்மண் நிலத்திற் பொருந்திய புழுதியை அளைந்து, செரு மலைந்து களம் கொள் மள்ளரின் - போர்புரிந்து களத்தில் வெற்றிகொண்ட வீரர்போல், முழங்கும் அத்தம் - முழங்குகின்ற சுரநெறிகள், பல இறந்து அகன்றனர் ஆயினும் - பலவற்றைக் கடந்து அகன்று போயினராயினும்;

௧௨—௨௨. வாய் வாள் - தப்பாத வாளினையும், தமிழ் அகப்படுத்த - தமிழ்நாடு முழுதினையும் அகப்படுத்தி, இமிழ் இசை முரசின் - ஒலிக்கும் புகழமைந்த முரசினையும், வருநர் வரையா பெருநாளிருக்கை-

(பாடம்) *பிடிமகிழ் வழுதுணை. †விழவுறு திருநகர்.

பாடி வருநர்க்கு வரையாத பெரிய நாளோலக்க இருக்கையினையும் உடைய, தங்கல் பாடிய - தங்கல் எனும் புலவராற் பாடப்பெற்ற, ஓங்கு பெரு நல்இசை - மிக உயர்ந்த நல்ல புகழ் வாய்ந்த, பிடி மிதி - பிடி மிதித்தமையால் ஆகிய, வழுதுணைப் பெரும் பெயர்த் தழும்பன் - வழுதுணங்காய் போலும் தழும்பினை புடைமையால் வழுதுணைத் தழும்பன் என்னும் சிறந்த பெயரினையுடையானது, கடிமதில் வரைப்பின் ஊணூர் உம்பர் - காவல்பொருந்திய மதில் எல்லையையுடைய ஊணூர்க்கு அப்பாலுள்ள, விழுநிதி துஞ்சும் வீறுபெறு திருநகர்-மிக்க பொருள் நிலைபெற்றிருக்கும் பெருமை கொண்ட அழகிய நகராகிய, இருகழி படப்பை மருங்கூர் பட்டினத்து - பெரிய உப்பங்கழிப் பக்கங்களையுடைய மருங்கூர்ப் பட்டினத்து, எல் உமிழ் ஆவணத்து அன்ன - ஒளி வீசும் கடைத்தெருவைப் போன்ற, கல் என் கம்பலை செய்து அகன்றோர் - கல்லென்னும் அலரை இவ்வூரில் எழச்செய்து பிரிந்தகன்றோராகிய, நம் காதலர் - நம் காதலர், நிலைஇ நோயிலராக-நோயில் லாதவராகி நிலைபெற்று வாழ்வாராக.

(முடிபு) தோழி! வாழி! இவள் என்னுகுவள் என இனையல்; அத்தம் இறந்தகன்றனராயினும் மருங்கூர்ப் பட்டினத்து ஆவணத்தன்ன கம்பலை செய்து அகன்றோர் ஆய நம் காதலர் நிலைஇ நோயிலராக.

(வி-ரை.) இனையல் எனத் தலைவி தோழிக்குக் கூறினள் என்க. நீர்மலி கண்ணொடு கொடிது நினைந்தொற்றுதல் தோழியிடத்துண்டாய வேறுபாடாகும். எனவே, இச்செய்யுள், இரண்டாவதாகக் குறிக்கப் பட்டுள்ள தலைவி கூற்றாதற்குப் பெரிதும் பொருத்தமாம். நோயிலராக நம் காதலர் எனத் தலைவி தோழியை உளப்படுத்திக் கூறலின், தலைவியும் தோழியும் தலைவனை வாழ்த்தினரெனக் கொள்ளுதலும் அமையும். சிறந்த என்னும் பெயரெச்சம் காரணப்பொருட்டு. ஒருத்தல் செந்நிலைப் படுநீறாடியது என்றதற்கேற்ப மள்ளர் குருதியால் உடல் சிவந்தமை கொள்க. ஒருத்தல் பகையை ஒழித்த பெருமிதத்துடன் முழங்குதலின் களங்கொள் மள்ளரின் முழங்கும் என்றார். நிலைஇ நோயிலராக-நோயிலராய் நிலைபெற்று வாழ்க என விகுதி பிரித்துக்கூட்டியுரைக்க. முரசு- வீரமுரசும், கொடை முரசுமாம். அவனது வீரமும் வண்மையும் தமிழ் நாடு முழுதும் பரந்திருந்தமையின் தமிழகப்படுத்த இசைமுரசு என்றார். வாளினையும் முரசினையும் இருக்கையினையும் உடைய தழும்பன் எனவும், தங்கல் பாடிய நல்லிசைத் தழும்பன் எனவும் கூட்டுக. தங்கல்-தங்கல் ஓரியார் என்னும் புலவர். அவர் தழும்பனைப் பாடிய பாட்டுக் கிடைத்திலது. பிடிமிதித்த புண்ணின் தழும்பு என்க. வழுதுணைத் தழும்பன் என்னும் பெயர் தழும்பன் என்றே வழங்கலுமுண்டு. *'பெரும்புண், ஏஎர் தழும்பன் ஊணூர்' என வருதலுங் காண்க. கழிப் படப்பை - உப்பு விளையும் செறு.

* நற். உ00.

*'மங்கல மொழியும்' என்னுஞ் சூத்திரத்து மங்கலமொழி என்றதற்குத் 'தலைவர்க்குத் தீங்கு வருமென்று உட்கொண்டு தோழியும் தலைவியும் அதற்கஞ்சி அவனை வழுத்துதலும்' என்று பொருள் கூறி, அதற்கு, 'கோயிலராக நங் காதலர்' என்னும் இதனை எடுத்துக் காட்டினர், நச்.

---

228. குறிஞ்சி

[தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகட்குச் சொல்லுவாளாய்த் தோழி சொல்லியது.]

பிரசப் பல்கிளை யார்ப்பக் கல்லென
வரையிழி யருவி யாரந் தீண்டித்
தண்ணென நனைக்கும் நளிமலைச் சிலம்பிற்
கண்ணென மலர்ந்த மாயிதழ்க் குவளைக்
கன்முகை நெடுஞ்சுனை நம்மொ டாடிப்
பகலே யினிதுடன் கழிப்பி யிரவே
செல்வ ராயினும் நன்றுமற் றில்ல
வான்கண் விரிந்த பகல்மருள் நிலவில்
சூரல் †மிளைய சாரல் ஆராற்ற
ஓங்கல் மிசைய வேங்கை யொள்வீப்
புலிப்பொறி கடுப்பத் தோன்றலிற் கயவாய்
இரும்பிடி இரியுஞ் சோலைப்
பெருங்கல் யாணர்த் தஞ் சிறு குடியானே.

—அண்டர்மகன் குறுவழுதியார்

(சொ - ள்.) தோழி—,

௧—௫. பிரசம் பல்கிளை ஆர்ப்ப-தேனை உண்ணும் பலவாய வண்டின் இனங்களும் ஆரவாரிக்க, கல் என வரை இழி அருவி - கல்லென்னும் ஒலியுடன் வரையினின்றும் இறங்கும் அருவியானது, ஆரம் தீண்டி தண் என நனைக்கும்-சந்தன மரத்தில் வீழ்ந்து அதனைத் தண்ணியதாக நனைத்திடும், நளிமலை சிலம்பில் - செறிந்த பக்க மலையில் உள்ள, கண் என மலர்ந்த மா இதழ் குவளை - கண்போல் மலர்ந்த கரிய இதழினையுடைய குவளை மலர்களையுடைய, கல்முகை நெடு சுனை-மலை முழைஞ்சிலுள்ள நெடிய சுனையில், நம்மொடு ஆடி-தலைவர் நம்முடன் விளையாடி, பகல் இனிது உடன் கழிப்பி - பகற் பொழுதை இனிதாக நம்முடனிருந்து கழித்து;

* தொல். பொருளியல். ௨௪௪. (பாடம்) † மிளைஇய.

௧—௬. வான்கண் விரிந்த பகல் மருள் நிலவில் - வானிடத்தே விரிந்த பகலை யொத்த நிலவொளியில், சூல் மிளைய சாரல் ஆர் ஆற்று- பிரப்பங்காட்டினையுடைய சாரல் பொருந்திய நெறியிலே, ஓங்கல் மிசைய வேங்கை ஒள் வீ - மலையின்மேலுள்ளவாகிய வேங்கை மரத்தின் ஒளி பொருந்திய மலர்கள், புலிப் பொறி கடுப்பத் தோன்றலின் - புலியின் உடம்பிலுள்ள புள்ளிகளைப்போலத் தோன்றுதலின், கயவாய் இரும்பிடி இரியும் சோலை - பெரிய வாயினையுடைய கரிய பெண் யானைகள் அஞ்சியோடும் சோலையினையுடைய, பெரு கல் யாணர் தம் சிறு குடியான் - பெரிய மலையில் உள்ள அழகிய தமது சிறு குடியாயவூர்க்கு;

௭—௭. இரவே செல்வர் ஆயினும் நன்று - இரவினிற் செல்வாராயினும் மிக நன்றாகும்.

(முடிபு) தோழி! நம் தலைவர் நெடுஞ்சுனை நம்மோடாடிப் பகலே இனிது கழிப்பி, பெருங்கல் யாணர்த் தம் சிறுகுடியான் இரவு செல்வராயினும் நன்றுமன்.

(வி - ரை.) பிரசம் என்னும் அடையால், இளை வண்டிற்காயிற்று. ஆர்ப்ப இழி அருவி என்க; வண்டுகள் ஒலித்தலாலும், அருவி நறிய சந்தன மரத்தைத் தீண்டி வந்து தட்பமுற கனைத்தலாலும், குவளைகள் கண்ணென மலர்தலாலும், செவி முதலிய பொறிகளுக்கு இன்பம் விளைக்கும் சுனையெனச் சுனையின் சிறப்பைக் கூறினளென்க. பகலினும் இரவினும் தலைவனைப் பிரியாதிருத்தலே தம் விருப்பமாயினும், இரவில் நிலவு வெளிப்பாடு முதலியவற்றால் கூட்டத்திற்கு இடையீடு உண்டாகலானும், பகலில் மலையிடத்துள்ள சுனையில் ஆடுதற்கண் அன்னதோர் இடையீடு இன்மையானும், 'பகலே யினிதுடன் கழிப்பி இரவே, செல்வராயினும் நன்றுமன்' என்றாள். தில் என்னும் இடைச்சொல் தில்ல எனத் திரிந்தது. தில் - விழைவுப் பொருட்டு. நிலவு வானிடமெல்லாம் விரிந்தமையான் மலைமீதுள்ள வேங்கைமரத்தின் பூக்கள் சாரற்கண்ணுள்ள பெண் யானைகட்கு இரவிலே புலிப்பொறி போலத் தோன்றின என்க.

---

229. பாலை

[தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட தலைமகளை வற்புறுத்துந் தோழிக்குத் தலைமகள் வன்புறை யெதிரழிந்து சொல்லியது.]

பகல்செய் பல்கதிர்ப் பருதியஞ் செல்வன்
அகல்வாய் வானத் தாழி போழ்ந்தென
நீர்அற வறந்த நிரம்பா நீளிடைக்

கயந்தலைக் குழவிக் கவியுகிர் மடப்பிடி
குளகுமறுத் துயங்கிய மருங்குல் பலவுடன்
பாழூர்க் குரம்பையில் தோன்றும் ஆங்கண்
நெடுஞ்சேண் இடைய குன்றம் போகிய
பொய்வ லாளர் முயன்றுசெய் பெரும்பொருள்
நம்மின் றாயினும் முடிக வல்லெனப்
பொருந்தனி மேவல் நல்கூர் குறுமகள்
நோய்மலிந் துகுத்த நொசிவரற் கின்னீர்
பல்லிதழ் மழைக்கட் பாவை மாய்ப்பப்
பொன்னேர் பசலை யூர்தரப் பொறிவரி
நன்மா மேனி தொலைதல் நோக்கி
இனையல் என்றி தோழி சினைய
பாசரும்பு ஈன்ற செம்முகை முருக்கினப்
போதவிழ் அலரி கொழுதித் தாதருந்து
அந்தளிர் மாஅத்து அலங்கல் மீமிசைச்
செங்கண் இருங்குயில் நயவரக் கூஉம்
இன்னிள வேனிலும் வாரார்
இன்னே வருதும் எனத்தெளித் தோரே.

மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்.

(சொ - ள்.) ௰. நல்கூர் குறுமகள் - மகட்கு நல் கூர்ந்தாராத செல்வ மகளாகிய இளைய தலைவியே!

௧—௰. பகல் செய் பல்கதிர் பருதி அம் செல்வன் - பகலைத் தோற்றுவிக்கும் பல கதிர்களையுடைய ஞாயிறாகிய அழகிய செல்வனது, அகல் வாய் வானத்து ஆழி - அகன்ற இடமாகிய வானின் கண்ணுள்ள ஆணையாய ஆழி, போழ்ந்தென - உலகைக் கிழித்துச் சென்றதாக, நீர் அற வறந்த நிரம்பா நீள் இடை - நீரில்லையாக வறந்திட்ட செல்லத் தொலையாத நீண்ட நெறியிடத்தே, கயம் தலை குழவிக் கவிஉகிர் மடப்பிடி - மெல்லிய தலையினையுடைய கன்றினையும் கவிந்த நகத்தினையுமுடைய இளைய யானை, குளகு மறுத்து உயங்கிய - தன் கன்றுண்ண வேண்டித் தான் தழை உணவை உண்ணாது மறுத்தமையின் வாடிய, மருங்குல் பலவுடன் - உடம்பின் உறுப்புக்கள் பலவற்றுடன், பாழ் ஊர் குரம்பையில் தோன்றும் ஆங்கண் - பாழ்பட்ட ஊரிலுள்ள குடிசைகள் போலத் தோன்றும் அவ்விடங்களையுடைய, நெடு சேண் இடைய குன்றம் போகிய - நெடிய சேய்மையிலுள்ள குன்றங்களைத் தாண்டிச் சென்ற, பொய் வலாளர் - பொய் மிக்காராய நம் தலைவர், முயன்று செய் பெரும்

பொருள் - முயன்று ஈட்டும் பெரிய பொருள், நம் இன்று ஆயினும் வல் முடிக என - நாம் இல்லையாயினும் விரைந்து கைகூடுக என்று, பெரு துனி மேவல் - பெரிய வெறுப்பு மேவற்க;

கக—டு. நோய் மலிந்து உகுத்த நொசி வரல் சின்னீர் - வருத்த மிக்கு உதிர்ந்த நுண்ணிதாக வரும் சிறிதளவாய கண்ணீர், பல் இதழ் மழை கண் பாவை மாய்ப்ப - பலவாய இதழ்களையுடைய தாமரை மலர் போன்ற குளிர்ந்த கண்ணில் உள்ள கருமணியை மறைத்திட, பொன் ஏர் பசலை ஊர்தர - பொன்னை யொத்த பசலை பரந்திட, பொறி வரி நன் மா மேனி தொலைதல் நோக்கி - புள்ளிகளாய தேமலையுடைய நல்ல சிறந்த எனது மேனியின் அழகு தொலைதலைப் பார்த்து, இனையல் என்றி - வருந்தாதே என்கிறாய்;

கடு—உக. தோழி—, பசு அரும்பு ஈன்ற சினைய - அழகிய அரும்புகளை ஈன்ற கிளைகளையுடைய, செம்முகை முருக்கின் அ போது அவிழ் அலரி கொழுதி - சிவந்த அரும்புகளையுடைய முருக்கமரத்தின் அழகிய போதுகள் விரிந்த மலர்களைக் கிண்டி, தாது அருந்து - அவற்றிலுள்ள பொடிகளை உண்டு, அம் தளிர் மா அத்து அலங்கல் மீமிசை - அழகிய தளிர்களையுடைய மாமரத்தின் அசையும் கிளைகளின் உச்சியிலிருக்கும், செம் கண் இரு குயில் - சிவந்த கண்ணினையுடைய கரிய குயில், நயவர கூஉம் இன் இள வேனிலும் - இனிமை தோன்றக் கூவும் இனிய இளவேனிற் காலத்திலும், இன்னே வருதும் எனத் தெளித்தோர் - இப்பொழுதே வருவேம் எனத் தெரிவித்துச் சென்றவர், வாரார் - வந்திலரே; என் செய்வேன்.

(முடிபு) 'நல்கூர் குறுமகள்! குன்றம் போகிய பொய்வலாளர் முயன்று செய்பொருள் நம்மின்றாயினும் முடிக எனப் பெருந் துனி மேவல்; மேனி தொலைதல் நோக்கி, இனையல்' என்றி; தோழி! இன்னே வருதும் எனத் தெளித்தோர் இன்னிள வேனிலும் வாரார்; என்செய்வேன்.

(வி - ரை.) முதுவேனிற் காலத்தின் ஞாயிற்றின் கதிர் முறுகுதலால் காட்டின் இடமெல்லாம் நீர் அற வறண்டமையைப், பருதியஞ் செல்வனுடைய ஆழி போழ்ந்தமையால் வறந்த தென்றார். ஆழி - ஆணை. குழவியை ஈன்றமையாலும் உணவு பெறாமையாலும் என்பு தோன்ற வற்றிய உடம்பினையுடைமையான், பிடிகள் கூரைசிதைந்த குரம்பைபோலத் தோன்றும் என்க. பெரும்பொருள், நம்மின்றாயினும் முடிக என்றது, நாம் இறந்துபடினும் அவர் அப் பெரும் பொருளைப் பெற்று வாழ்வாராக எனத் தலைவி துனிபற்றிக் கூறியதாகும். தோழியானவள் தலைவியை நோக்கி, நீ அங்ஙனம் கூறித் துனியுறாதே எனவும், மேனி தொலைதல் நோக்கி இனையல் எனவும் வற்புறுத்தினளாக, தலைவி நீ அங்ஙனம் வற்புறுத்தலாற் பயனென்ன? இன்னே வருதும் எனத் தெளிவித்துச் சென்றவர், இளவேனிற் பருவம் வந்தும்

வந்திலராகலின், யான் எங்ஙனம் ஆற்றியிருப்பேன் எனத் தோழிக்கு எதிரழிந்து கூறினளென்க. பல் இதழ் — பல இதழ்களையுடைய தாமரைப் பூ. செம்முகை என்றது முருக்கிற்கு இயல்பாய அடை. அருந்து — அருந்தி எனத் திரிக்க. அருந்து குயில் எனக் கூட்டியுரைத்தலுமாம். முதுவேனிற் காலத்தே பிரிதலுற்ற தலைமகன் அடுத்துள்ள கார்ப்பருவத்தின் தொடக்கத்தே வருவேன் எனக் காலம் குறித்துச் சென்றனனாகலின், அதனை இன்னே வருதும் எனத் தெளித்தோர் என்றாள். கார்ப்பருவத்து வாராமையேயன்றிக் கூதிர் முதலிய இடைவிட்ட பருவங்களையும் கடந்து இளவேனில் வந்தும் அவர் இன்னும் வந்திலர் என்றாள். இளவேனிலில் மாமரத்தின்மீது குயிலிருந்து கூவுவது கூடியிருப்பார்க்கு இன்பம் விளைப்பதாகலின், குயில் நயவரக் கூவும் இன்னிளவேனில் என்றாள் என்க.

---

230. நெய்தல்

[தலைமகளைக் கண்ணுற்று நீங்கும் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.]

உறுகழி மருங்கின் ஓதமொடு மலர்ந்த
சிறுகரு நெய்தற் கண்போன் மாமலர்ப்
பெருந்தண் மாத்தழை யிருந்த அல்குல்
ஐய அரும்பிய சுணங்கின் வையெயிற்று
மையீ ரோதி வாணுதற் குறுமகள்
விளையாட் டாயமொடு வெண்மணல் உதிர்த்த
புன்னை நுண்தாது பொன்னின் கொண்டு
மனைபுறந் தருதி யாயின் எனையதூஉம்
இம்மனைக் கிழமை யெம்மொடு புணரின்
தீது முண்டோ மாத ராயெனக்
கடும்பரி நன்மான் கொடிஞ்சி நெடுந்தேர்
கைவல் பாகன் பையென இயக்க
யாந்தற் குறுகின மாக ஏந்தெழில்
அரிவேய் உண்கண் பனிவரல் ஒடுக்கிச்
சிறிய இறைஞ்சினள் தலையே
பெரிய எவ்வம் யாமிவண் உறவே.

—மதுரை அறுவைவாணிகன் இளவேட்டனார்.

(சொ — ள்.) க—ரு. உறுகழி மருங்கின்—பெரிய உப்பங்கழியின் பக்கலிலே, ஓதமொடு மலர்ந்த — கடல் நீரால் மலர்ந்த, கண்போல் சிற

கரு.நெய்தல் மா மலர் - கண்ணைப்போன்ற சிறிய கரிய நெய்தலது பெரிய மலருடன் கூடிய, பெரு தண் மா தழை இருந்த அல்குல் - பெரிய குளிர்ந்த சிறந்த தழையுடை பொருந்திய அல்குலினையும், ஐய அரும்பிய சுணங்கின் - மென்மையவாகிய அரும்பிய தேமலையும், வை எயிற்று மை ஈர் ஓதி வாள் நுதல் - கூரிய எயிற்றினையும் கரிய நெடிய கூந்தலையும் ஒளி பொருந்திய நெற்றியினையுமுடைய, குறுமகள்-இளைய மகளே;

க—கO. மாதராய் - பெண்ணே, விளையாட்டு ஆயமொடு - நீ கூடி விளையாடும் நின் ஆயத்தாருடன், புன்னை வெண்மணல் உதிர்த்த நுண் தாது - புன்னைமரம் வெள்ளிய மணலில் உதிர்த்த நுண்ணிய பொடியினை, பொன்னின் நொண்டு - பொன்னாகக் கொண்டு முகந்து, மனை புறந் தருதி யாயின் - இல்லறம் நடாத்துவாயாயின், இ மனைக்கிழமை எம்மொடு எனையதூஉம் புணரின் - இந்த இல்லறக்கிழமை சிறிதேனும் எம்முடன் பொருந்துவதாயின், தீதும் உண்டோ - வரக்கடவதொரு தீங்கும் உண்டோ, என என்று கூறி;

கக—கஉ. கடும் பரி நல்மான் கொடிஞ்சி நெடுந் தேர் - கடிய செலவினையுடைய நல்ல குதிரை பூண்ட கொடிஞ்சியினையுடைய உயர்ந்த தேரினை, கைவல் பாகன் பைய என இயக்க-செலுத்துந் திறமை மிக்க பாகன் மெல்லெனச் செலுத்த, யாம் தன் குறுகினம் ஆக - நாம் அவளை அணுகினமாக;

கங—கடு. பெரிய எவ்வம் யாம் இவண் உற - யாம் இங்கே பெரிய வருத்தத்தை அடைய, ஏந்து எழில் அரி வேய் உண் கண் - அவள் அழகு மிக்க செவ்வரி பரந்தமையுண்ட கண்களில், பனி வரல் ஒடுக்கி - உவகைக் கண்ணீர் வருதலை மறைத்து, தலை சிறிய இறைஞ்சினள் - தன் தலையினைச் சிறிய அளவில் கவிழ்த்தனள்.

(முடிபு) குறுமகள்! மாதராய்! நீ மனைபுறந்தருதியாயின், இம் மனைக்கிழமை எம்மொடு புணரில் தீதுமுண்டோ என, நெஞ்சே யாம் தற்குறுகினமாக, யாம் பெரிய எவ்வம் உற, அவள், கண்பனிவரல் ஒடுங்கி, தலை சிறிய இறைஞ்சினள்.

(வி - ரை.) கண்போல் மா மலர் என்பது, *'பொருளே யுவமம் செய்தனர் மொழியினும்' என்பதனால் அமையும். ஐய: பெயரெச்சக் குறிப்பு; வினையெச்சக் குறிப்பாக்கி, மென்மையவாக அரும்பிய என்றுரைத்தலுமாம். குறுமகள் என்பதனை, எழுவாயாகக்கொண்டு குறுமகள் இறைஞ்சினள் என முடித்தலுமாம். நொண்டு - முகந்து என்பதன் மரூஉ. மனை புறந்தருதலாவது, மனையில் வாழ்வாரைப் பேணுதலும் அறஞ்செய்தலுமாம். இம் மனைக்கிழமை எம்மொடு புணரின் என்பது நீ என்னுடன் கூடி மனையறம் புரிதியாயின் என்னுங் கருத்

---

* தொல். உவம. க.

திற்று. தேரிற்பூட்டிய குதிரை மிக விரைந்து செல்வதாகவும், அம் மகளிர் அஞ்சி யகலாது தன் குறிப்பறிந்து மெல்லெனச் செலுத்தினமையின், கைவல் பாகன் என்றான். தலைவன் அணுகிய வழி தனக்கு உண்டாகிய வேட்கையை அதனால் எழும் கண்ணீர் புலப்படுத்திற்றாகவின், தலைவி நாணினால் அதனை மறைத்துத் தலை சிறிது இறைஞ்சினாள் என்க. அவள் அங்ஙனம் நாணி நின்ற நிலையானது அவள் வேட்கையைப் புலப்படுத்தி அவளைப் பிரிந்து செல்லும் தன் உள்ளத்தில் பெரிய துன்பத்தை விளைத்தலின் பெரிய எவ்வம் யாம் இவண் உறவே என்றான்.

(மே - ள்.) *'மறைந்தவற் காண்டல்' என்னுஞ் சூத்திரத்துக் 'கைப்பட்டுக் கலங்கினும்' என்னுந் துறைக்கு இதனைக் காட்டி, இது தலைவன் கூறியது என்றனர், நச்.

---

231. பாலை

[தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.]

செறுவோர் செம்மல் வாட்டலுஞ் சேர்ந்தோர்க்கு
உறுமிடத்து உய்க்கும் உதவி ஆண்மையும்
இல்லிருந் தமைவோர்க் கில்லென் றெண்ணி
நல்லிசை வலித்த நாணுடை மனத்தர்
கொடுவிற் கானவர் கணையிடத் தொலைந்தோர்
படுகளத் துயர்த்த மயிர்த்தலைப் பதுக்கை
கள்ளியம் பறந்தலைக் களர்தொறுங் குழீஇ
உள்ளுநர்ப் பனிக்கும் ஊக்கருங் கடத்திடை
வெஞ்சுரம் இறந்தனர் ஆயினும் நெஞ்சுருக
வருவர் வாழி தோழி பொருவர்
செல்சமங் கடந்த செல்லா நல்லிசை
விசும்பிவர் வெண்குடைப் பசும்பூண் பாண்டியன்
பாடுபெறு சிறப்பிற் கூடல் அன்னநின்
ஆடுவண் டரற்றும் உச்சித்
தோடார் கூந்தல் மரீஇ யோரே.

—மதுரை ஈழத்துப் பூதன்றேவனார்.

(சொ - ள்.) ௧0. தோழி—, வாழி—,

* தொல். கள. ௨0.

௧—௪. செறுவோர் செம்மல் வாட்டலும் - தம் பகைவர் செருக்கினை ஒழித்தலும், சேர்ந்தோர்க்கு உறுமிடத்து உய்க்கும் உதவி ஆண்மையும் - தம்மைச் சேர்ந்தோர்க்கு ஓர் ஊறு எய்துமிடத்து உதவி செய்தலாய ஆண்மையும், இல்இருந்து அமைவோர்க்கு இல் என்று எண்ணி - இல்லின்கண்ணே வாளாவிருந்து மடியால் அமைந்திருப்போர்க்கு இல்லை என்று எண்ணி, நல் இசை வலித்த நாண் உடை மனத்தார் - நல்ல புகழைக் கருதிய நாண் உடைய மனத்தாராய நம் தலைவர்;

௫—௯. கொடு வில் கானவர் கணை இடத்தொலைந்தோர் - கொடிய வில்லையுடைய வேடர் தமது அம்பினை விடுதலாற் பட்டோர், படுகளத்து உயர்த்த மயிர்த்தலைப் பதுக்கை - விழுந்து கிடக்கும் களத்தில் உயர்த்திய மயிரினையுடைய தலைகளையுடைய கற்குவியல்கள், கள்ளி பறந்தலை களர் தொறும் குழீஇ - கள்ளியினையுடைய பாழிடமாகிய களர்நிலந் தோறும் திரண்டு, உள்ளுநர் பனிக்கும் ஊக்கு அரும் கடத்திடை - நினைப்போரையும் நடுங்கச் செய்தலின் யாரும் செல்லத் துணியாத காட்டிடையே உள்ள, வெம் சுரம் இறந்தனராயினும் - கொடிய சுரத்தைக் கடந்தனர் ஆயினும்;

௧௦—௫. பொருவர் செல் சமம் கடந்த செல்லா நல்இசை - பகைவரது எதிர்த்த போரினை ஒழித்த கெடாத நல்ல புகழினையும், விசும்பு இவர் வெண்குடை - வானிடத்தே ஓங்கிய வெண்குடையினையும் உடைய, பசும்பூண் பாண்டியன் - பசும்பூட் பாண்டியன் என்பானது, பாடு பெறு சிறப்பின் கூடல் அன்ன நின் - பெருமை யமைந்த சிறப்பினையுடைய மதுரையை யொத்த நினது, ஆடு வண்டு அரற்றும் உச்சி - அசையும் வண்டு ஒலிக்கும் உச்சியினையுடைய, தோடு ஆர் கூந்தல் மரீஇயோர் - பூவிதழ் பொருந்திய கூந்தற்கண்ணே பொருந்தித் துயின்றோர் ஆய அவர்;

௧—௧௦. நெஞ்சு உருக வருவர் - அதனை நினைந்து தம் நெஞ்சம் உருகுதலால் விரைந்து வருவர்; ஆகலின் வருந்தாதேகொள்.

(முடிபு) தோழி! வாழி! நல்லிசை வலித்த நாணுடை மனத்தர், வெஞ்சுரம் இறந்தனராயினும், நின் கூந்தல் மரீஇயோர் ஆய அவர் நெஞ்சுருக, வருவர். ஆகலின் வருந்தாதே கொள்.

(வி - ரை.) பகைவரை அழித்தற்கும் நட்டாரை ஆக்கற்கும் பொருள் இன்றியமையாததாகலின், பொருளீட்டும் முயற்சியின்றி இல்லில் இருப்போர்க்கு அவை இல்லை என்றார். பொருள் பகைவரை அழித்தற்குக் கருவியாகுமென்பதை, *'செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும், எஃகதனிற் கூரிய தில்' என்பதனால் அறிக. அது நட்டாரை ஆக்குதற்கு உரியதென்பது, ஆசிரியர் நக்கீரனார் பாடிய †'கேள்கே டூன்றவுங் கிளைஞ ராரவும்' என்னும் பாட்டினாற் பெறப்

* குறள். எ௫௯: ௧. † அகம். ௯௩.

படும். *'அரிதாய அறனெய்தி அருளியோர்க் களித்தலும், பெரிதாய பகைவென்று பேணாரைத் தெறுதலும்,...தருமெனப்...பொருள்வயிற் சென்ற நங்காதலர்' என்பதுங் காண்க. செம்மல்-தலைமை; ஈண்டுச் செருக்கின்மேற்று. உதவி உய்க்கும் ஆண்மை என்க. உவக்கும் என்பது பாடமாயின், சேர்ந்தோர் உவத்தற்கு ஏதுவாய உதவியை ஆளுந்தன்மை என்று பொருள் கொள்க. நாண் - பழிக்கு அஞ்சும் குணம். தொலைந்தோர் தலைகளை யுடைமையின் நினைப்போரை நடுங்கச் செய்யும் கடம் என்க. நம் நெஞ்சு நெகிழுமாறு வருவர் என்றுரைத்தலுமாம். கடந்த பாண்டியன் என்க; பெயரெச்சத்தினைக் காரணப் பொருட்டாகக் கொண்டு, கடந்த நல்லிசை என்றலுமாம். அரற்றும் முச்சி எனப் பிரித்தலுமாம்.

---

232. குறிஞ்சி

[தோழி, தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகட்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது.]

காணினி வாழி தோழி பானாள்
மழைமுழங்கு அரவங் கேட்ட கழைதின்
மாஅல் யானை புலிசெத்து வெரீஇ
இருங்கல் விடரகஞ் சிலம்பப் பெயரும்
பெருங்கல் நாடன் கேண்மை இனியே
குன்ற வேலிச் சிறுகுடி யாங்கண்
மன்ற வேங்கை மணநாள் பூத்த
மணியேர் அரும்பின் பொன்வீ தாஅய்
வியலறை வரிக்கும் முன்றில் குறவர்
மனைமுதிர் மகளிரொடு குரவை தூங்கும்
ஆர்கலி விழவுக்களங் கடுப்ப நாளும்
விரவுப்பூம் பலியொடு விரைஇ அன்னை
கடியுடை வியனகர்க் காவல் கண்ணி
முருகென வேலன் தரூஉம்
பருவ மாகப் பயந்தன்றால் நமக்கே.

—கோடிமங்கலத்து வாதுளி நற்சேந்தனார்.

(சொ-ள்.) க. தோழி—, வாழி-, இனி காண் - இப்பொழுது யான் கூறுவதனை உணர்வாயாக;

* கலி. ௧௧: ௧-௪.

க—இ. பால் நாள்-நடு இரவில், மழை முழங்கு அரவம் கேட்ட - மேகம் முழங்கும் இடியொலியினைக் கேட்ட, கழை தின் மா அல் யானை-மூங்கிலைத் தின்னும் பெரிய யானையானது, புலி செத்து வெரீஇ-அவ் வொலியினைப் புலியின் ஒலி எனக் கருதி அஞ்சி, இரு கல் விடர் அகம் சிலம்ப பெயரும் - பெரிய மலையின் முழைஞ்சிடம் எதிரொலி செய்யக் கதறிப் பெயர்ந்தோடும், பெரு கல் நாடன் கேண்மை - பெரிய மலை பொருந்திய நாட்டினையுடைய தலைவனது நட்பு;

ரு—கக. இனி - இக்காலத்து, குன்றவேலி சிறு குடி ஆங்கண் - குன்றங்களாய வேலியினையுடைய சீறூரிடத்தே, மன்ற வேங்கைமணம் நாள் பூத்த - மன்றத்தின்கண்ணுள்ள வேங்கை மரங்கள் மணநாளாகிய காலத்தே பூத்த, மணி ஏர் அரும்பின் பொன்வீ தாஅய் - மணியை யொத்த அரும்பு மலர்ந்த பொன்போன்ற பூக்கள் பரந்து, வியல் அறை வரிக்கும் முன்றில்-அகன்ற பாறைகளை அழகுறுத்தும் முற்றத்திலே, குறவர் - குறவர்கள், மனை - மனைக்கண்ணுள்ள, முதிர் மகளிரொடு குரவை தூங்கும் - ஆடுதல் வல்ல மகளிரொடு குரவை ஆடும், ஆர்கலி விழவுக் களம் கடுப்ப - ஆரவாரமிக்க விழாக்களத்தை யொப்ப;

கக—இ. அன்னை—, நாளும் - நாடொறும், விரவு பூ பலியொடு விரைஇ-விரவிய பலவகைப் பூக்களாய பலியொடு பொருந்தி, கடி உடை வியன் நகர் காவல் கண்ணி-காவல் பொருந்திய அகன்ற மலையின்கண் காத்தலைக் கருதி, முருகு என - நமது வேறுபாடு முருகனால் உண்டாய தென்று, வேலன் தரூஉம் - வேலனை அழைக்கும், பருவம் ஆக நமக்கு பயந்தன்று - காலமாக நமக்கு விளைந்தது.

(முடிபு) தோழி! வாழி! காண்; நாடன் கேண்மை, இனி அன்னை முருகென (எண்ணி) காவல் கண்ணி, பலியொடு விரைஇ, வேலனைத் தரூஉம் பருவமாக நமக்குப் பயந்தன்று.

சிறுகுடியாங்கண் வேங்கையின் பொன்வீ தாஅய் அறைவரிக்கும் முன்றிலில் குறவர் மகளிரொடு குரவை தூங்கும் களங்கடுப்பப் பூம் பலியொடு விரைஇ என்க.

(வி - ரை.) மணி - முத்து. முத்துக்களில் பொன்மை செம்மை புடையவும் உளவென்பது, *'சந்திர குருவே அங்கா ரகனென, வந்த நீர்மைய வட்டத் தொகுதியும்' என்பதனாற் பெற்றாம். அரும்புடன் வீ தாஅய் என்றலுமாம். காவல் கண்ணி என்பதற்கு, நம்மை இற் செறித்தலைக் கருதி என்றும், நமக்குத் தீங்குண்டாகாமல் முருகன்காத் தலைக் கருதி யென்றும், இருவகையாகக் கோடலும் பொருந்தும். விழவுக் களம் கடுப்ப என்னும் உவமையால், வேலன் வெறியாடுமிடத்திற்கு மலர் சிதறிக்கிடத்தலுடன் குரவை ஆடுதல் கோடலுமாம்.

* சிலப். ஊர்காண். கஅ-சு.

233. பாலை

[பிரிவின்கண் வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.]

அலமரல் மழைக்கண் மல்குபனி வாரநின்
அலர்முலை நனைய அழாஅல் தோழி
எரிகவர்பு உண்ட கரிபுறப் பெருநிலம்
பீடுகெழு மருங்கின் ஓடுமழை துறந்தென
ஊனில் யானை உயங்கும் வேனில்
மறப்படைக் குதிரை மாறா மைந்தின்
துறக்கம் எய்திய தொய்யா நல்லிசை
முதியர்ப் பேணிய உதியஞ் சேரல்
பெருஞ்சோறு கொடுத்த ஞான்றை இரும்பல்
கூளிச் சுற்றம் குழீஇ யிருந் தாங்குக்
குறியவும் நெடியவுங் குன்றுதலை மணந்த
சுரனிறந் தகன்றன ராயினும் மிகநனி
மடங்கா உள்ளமொடு மதிமயக் குறாஅப்
பொருள்வயின் நீடலோ இலர்நின்
இருளேங் கூந்தல் இன்துயின் மறந்தே.

— மாமூலனார்

(சொ - ள்.) க—உ. தோழி-, அலமரல் மழை கண் மல்கு பனி வார-கலங்குகின்ற குளிர்ந்த கண்ணினின்றும் நிறைந்த நீர் ஒழுகலின், நின் அலர்முலை நனைய அழாஅல்-நின் பரந்த முலை நனைய அழாதே;

ங—ரு. எரி கவர்பு உண்ட - நெருப்புச் சூழ்ந்து எரித்திட்ட, கரி புறம் பெரு நிலம்-கரிந்த இடங்களையுடைய பெரிய நிலத்தை, பீடுகெழு மருங்கின் ஓடு மழை துறந்தென-வளம் பொருந்திய வேறு இடங்கட்கு ஓடும் மழை துறந்திட்டதாக, ஊன் இல் யானை உயங்கும் வேனில் - தசை யொழிந்த யானை வருந்தும் வேனிற்கண்;

சு—க0. மறப் படைக் குதிரை மாறா மைந்தின் - வீரம் பொருந்திய குதிரைப் படைகளுடன் புறக்கிடாத வலியையுடைய, துறக்கம் எய்திய தொய்யா நல் இசை - துறக்கத்தினை யடைந்த கெடாத நல்ல புகழினையுடைய, முதியர் பேணிய உதியன் சேரல் - முன்னோர்கட்குத் தென்புலக் கடன் ஆற்றிய உதியன் சேரலாதன் எனும் மன்னன், பெரு சோறு கொடுத்த ஞான்றை - அவர்கட்குப் பலியாகப் பெருஞ்சோறு படைத்திட்ட காலத்தே, இரு பல் கூளிச் சுற்றம் குழீஇ இருந்தாங்கு - கரிய பலவாய பேய்ச்சுற்றங்கள் அதனை உண்பதற்குக் கூடியிருந்தாற் போல;

௧௧—௪. குறியவும் நெடியவும் குன்று தலை மணந்த - குறியனவும் நெடியனவுமாய குன்றுகள் இடந்தோறுமுள்ள, சுரன் இறந்து - சுரத்தினைக் கடந்து, மிக ஏனி மடங்கா உள்ளமொடு - மிகப் பெரிதும் அடங்காத உள்ளமுடையராய், மதிமயக்குறூஅ - அறிவுமயங்குதலுற்று, பொருள்வயின் அகன்றனர் ஆயினும் - பொருள் ஈட்டுதலைக் கருதிச் சென்றாராயினும்;

௧௪—௬. நின் இருள் ஐங் கூந்தல் இன் துயில் மறந்து - நினது கரிய ஐம் பகுப்பாய கூந்தலிற் பெறும் இனிய துயிலை மறந்து, நீடல் இலர் - தாழ்த்திருத்தல் இலராவர்; விரைந்து வருவர்.

(முடிபு) தோழி அழாஅல்; வேனிற்கண் குறியவும் நெடியவும் குன்று தலை மணந்த சுரன் இறந்து பொருள்வயின் அகன்றனராயினும் நின் கூந்தல் இன்றுயில் மறந்து, நீடலோ இலர்.

(வி - ரை.) பெரு நிலத்தின்கண் யானை உயங்கும் வேனில் எனவும், குதிரைப்படையினையும் மைந்தினையுமுடைய உதியஞ் சேரல் எனவும் கூட்டுக. இனிக் குதிரைப் படையினையும் மைந்தினையும் உடைய முதியர் என்றுரைத்தலுமாம். உதியன் சேரல் துறக்கமெய்திய தன் முன்னோர்க்குப் பிண்டம் ஈதலாகிய கடன் ஆற்றியபோது, பெருஞ்சோறு அளித்தனன் என்க. இனி, பெருஞ்சோறு கொடுத்த ஞான்று என்பதனைப் பாரதப்போரில் இருதிறப் படைக்கும் சோறளித்த ஞான்று என்றுரைப்பாருமுளர். உதியஞ் சேரலாதன் என்பான் பாரதப் போரில் சோறளித்தமை, *'அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ...... ஈரைம் பதின்மரும் பொருது களத்தொழியப், பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்' †'ஓரைவ ரீரைம் பதின்மர் உடன்றெழுந்த, போரிற் பெருஞ்சோறு போற்றாது தானளித்த, சேரன்' என்பவற்றாற் பெறப்படுமாயினும், ஈண்டுப் பாரதப்போரைச் சுட்டும் குறிப்பு யாதுமின்மையின், இவ்வுதியன் சேரன் அவனின் வேறாயினன் எனக் கொள்ளல் வேண்டும். தொய்யா - கெடாத. கூளிச் சுற்றம் - குறியவும் பெரியவுமாகிய பேய்களின் சுற்றம்.

---

234. முல்லை

[தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.]

கார்பயம் பொழிந்த நீர்திகழ் காலை
நுண்ணயிர் பரந்த தண்ணயம் மருங்கில்
கிளைபறை அன்னத்து அன்ன விரைபரிப்

* புறம், ௨. † சிலப்-வாழ்த்து, ஊசல்வரி, ௩-௮.

புல்லுளைக் கலிமா மெல்லிதிற் *கொளீஇய
வள்பொருங் கமையப் பற்றி †முள்கிய
பல்கதி ராழி மெல்வழி யறுப்பக்
காலென மருள ஏறி நூலியற்
‡கண்ணோக்கு ஒழிக்கும் பண்ணமை நெடுந்தேர்
வல்விரைத் தூர்மதி நல்வலம் பெறுந
§தகர்தழை முனைஇய தெறிநடை மடப்பிணை
ஏறுபுணர் உவகைய ஊறில உகள
அஞ்சிறை வண்டின் மென்பறைத் தொழுதி
முல்லை நறுமலர்த் தாதுநயந் தூத
எல்லை போகிய புல்லென் மாலைப்
புறவடைந் திருந்த உறைவின் நல்லூர்க்
கழிபட ருழந்த பனிவா ருண்கண்
நன்னிறம் பரந்த பசலையள்
மின்னேர் ஓதிப் பின்னுப்பிணி விடவே.

—¶பேயனார்

(சொ - ள்.) ௯. நல்வலம் பெறுந - தேர் செலுத்துதலில் நல்ல வெற்றியுடைய பாக!

௧—௮. கார் பயம் பொழிந்த நீர் திகழ் காலை - மேகம் நீரைப் பொழிந்ததாலாய வெள்ளம் விளங்கும் காலத்தே, நுண் அயிர் பரந்த தண் அயம் மருங்கின் - நுண்ணிய மணல் பரவிய குளிர்ந்த நீர்நிலையிடத்தே, நிரை பறை அன்னத்து அன்ன - வரிசையாகப் பறத்தலையுடைய அன்னப் பறவையை ஒத்த, விரை பரி புல்உளை கலிமா - விரைந்த செலவினையுடைய புல்லிய பிடரிமயிரினையுடைய செருக்கு வாய்ந்த குதிரைகளை, மெல்லிதின் கொளீஇய வள்பு ஒருங்கு அமையப் பற்றி - மென்மையுறப் பூட்டிய கடிவாள வாரினை ஒரு பெற்றியமையப் பற்றி, முள்கிய பல்கதிர் ஆழி மெல்வழி அறுப்ப - நிலத்தே பதிந்த பல ஆரக்களையுடைய உருளை மென்னில வழியை அறுத்தேக, கால் என மருள - வேகத்தாற் காற்றென வியக்க, ஏறி - ஏறியமர்ந்து, நூல் இயல் கண் நோக்கு ஒழிக்கும் பண் அமை நெடுந்தேர் - நூல் நெறிப்படி இயன்றதும் வேகத்தாற் கண்ணின்பார்வையினைத் தவிர்ப்பதும் பண்ணுதல் அமைந்ததுமாய நெடிய தேரினை;

(பாடம்) * கொளீஇ. † மூழ்கிய.
(பாடம்) ‡ கண்ணோக்கு ஒளிக்கும். § தகர் நனை. ¶ கழார்க்கீரன் எயிற்றியார்.

௧௦—௫. ததர் தழை முனைஇய தெறிநடை மடப்பிணை - நெருங்கிய தழையினை மிகத்தின்று வெறுத்த துள்ளிச்செல்லும் நடையினையுடைய இளைய பெண்மான், ஏறு புணர் உவகைய ஊறு இல உகள - ஆண்மானுடன் கூடிய மகிழ்ச்சியை யுடையவாய் இடையூறின்றித் துள்ளித்திரிய, அம் சிறைவண்டின் மென்பறைத் தொழுதி - அழகிய சிறையினையுடைய வண்டின் மெல்லிய பறத்தலையுடைய கூட்டம், முல்லை நறுமலர் தாது நயந்து ஊத - நறிய முல்லை மலரில் உள்ள பூம்பொடியினை விரும்பி ஊத, எல்லை போகிய புல் என் மாலை - பகற்பொழுது கழிந்த பொலிவற்ற மாலைக்காலத்தே, புறவு அடைந்திருந்த உறைவு இன் நல் ஊர் - முல்லைநிலத்தைச் சார்ந்திருந்த உறைதற்கு இனிதாகிய நல்ல ஊரின்கண்ணே ;

௧௬—௮. கழி படர் உழந்த பனிவார் உண்கண் - மிக்க துன்பத்தால் வருந்திய நீர்வாரும் மையுண்ட கண்களையும், நல் நிறம் பரந்த பசலையள் - நல்ல மேனியின்கண் பரவிய பசலையையும் உடைய நம தலைவி, மின் நேர் ஓதி - தனது மின்னலையொத்த கூந்தலின், பின்னுப் பிணி விடவே - பின்னலாய பிணிப்பு நீங்க ;

௯. வல் விரைந்து ஊர்மதி - மிக விரைந்து செலுத்துவாயாக.

(முடிபு) நல்வலம் பெறுந! நல்லூர்க்கண் மாலையில் கழிபடர் உழந்த பசலையள் ஓதியின்பின்னுப் பிணிவிட நெடுந்தேர் வல்விரைந்து ஊர்மதி.

(வி - ரை.) கார்பயம் பொழிந்த என்றதனால், தலைவன் குறித்த கார்ப்பருவம் வந்தமை பெற்றாம். நுண்மணல் பரந்த நீர்நிலைகளின் பக்கத்தே தாழவிரைந்து பறக்கும் அன்னம், அங்ஙனம் பறப்பதுபோல் விரைந்து தாவிச் செல்லும் குதிரைக்குத் தொழில் பற்றி உவமமாகும். தொல்காப்பியனார், *'வினைவயிற் பிரிந்தோன் மீண்டுவரு காலை, இடைச்சுர மருங்கிற் றவிர்த லில்லை, உள்ளம் போல உற்றுழி யுதவும், புள்ளியற் கலிமா வுடைமை யான' எனக் கூறுதலுங் காண்க. தூய வெண்ணிற முடைமை பற்றிப் பண்புவமை விரவிவந்த தெனலுமாம். குதிரைக்கு வெண்ணிறம் சிறந்ததாதல், †'பால்புரை புரவி நால்குடன் பூட்டி' என்பதனால் அறிக. வள்பு - வார். மழையால் நிலம் நெகிழ்ந்திருத்தலின் மெல்வழி எனப்பட்டது. கட்புலன் கதுவலாகாத விரைவுடைமையின், காலென மருள எனவும், கண்ணேக் கொழிக்கும் எனவும் கூறினர். தன் பிரிவால் பசலை பரந்த மேனியளாய் ஒப்பனை செய்யாது பிணிப்புற்றிருக்கும் கூந்தலையுடையளாய்ப் படருழக்கும் தலைவியின் துன்பத்தைப் போக்குதற்கு மிக விரைந்து சேறல் வேண்டுமென்பான், 'காலென மருள வல்விரைந்து ஊர்மதி' என்றான். பாகன் அங்ஙனம் செலுத்தும் ஆற்றல் உடையன் என்பது புலப்பட, 'நல்வலம்

* தொல். கற். ௫௩. † பொருந. ௧௬௫.

பெறும்' என, விளித்தான். கார்ப்பருவம் வந்துற்றமையால் முல்லை நிலத்துள்ள மானினங்களும் வண்டுகளும் நறிய உணவினையுண்டும், துணையுடன் கூடியும் மகிழ்ந்திருக்க, அந்நிலத்தின் கண்ணதாகிய உறைதற்கினிய ஊரிலிருக்கும் தலைவி அவற்றைக் காணுந்தோறும் ஆற்றாமை மீதூர்ந்து படருழப்பள் என்பது தோன்ற, மடப்பிணை உவகைய உகள, வண்டின் தொகுதி தாது நயந்தூத, கழிபடருழந்த பசலையள் என்றான் என்க. பின்னும் பிணி விட என்றது, தன் வருகையால் மகிழ்ச்சியுற்றுக் கூந்தலை ஒப்பனை செய்துகொள்ள என்றபடி.

---

235. பாலை

[தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட தலைமகள் ஆற்றாமைமீதூரத் தோழிக்குச் சொல்லியது.]

அம்ம வாழி தோழி பொருள்புரிந்து
உள்ளார் கொல்லோ காதல ருள்ளியுஞ்
சிறந்த செய்தியின் மறந்தனர் கொல்லோ
பயனிலங் குழைய வீசிப் பெயல்முனிந்து
விண்டு முன்னிய கொண்டல் மாமழை
மங்குல் அற்கமொடு பொங்குபு துளிப்ப
வாடையொடு நிவந்த ஆயிதழ்த் தோன்றி
சுடர்கொள் அகலில் சுருங்குபிணி யவிழச்
சுரிமுகிழ் முசுண்டைப் பொதியவிழ் வான்பூ
விசும்பணி மீனிற் பசுப்புத லணியக்
*கள்வன் மண்ணளைச் செறிய அகல்வயற்
கிளைவிரி கரும்பின் கணைக்கால் வான்பூ
மாரியங் குருகின் ஈரிய குரங்க
நனிகடுஞ் சிவப்பொடு நாமந் தோற்றிப்
பனிகடி கொண்ட பண்பில் வாடை
மருளின் மாலையொ †டருளின்றி நலிய
நுதலிறை கொண்ட அயலறி பசலையொடு
தொன்னலஞ் சிதையச் சாஅய்
என்னள்கொல் அளியள் என்னு தோரே.

—கழார்க் கீரனெயிற்றியார்.

(பாடம்) * களவன். † டருளின்று.

(சொ - ள்.) க. தோழி-, வாழி-, அம்ம - கேட்பாயாக;

௪—கக. பயன் நிலம் குழைய வீசி - பயன் தரும் நிலங்கள் செழிப் பெய்து, பெயல் முனிந்து - பின் பெய்தலை வெறுத்து, விண்டு முன்னிய கொண்டல் மா மழை - மலையைச் சேர்ந்த கொண்டலாகிய கரியமேகம். மங்குல் அற்சமொடு பொங்குபு துளிப்ப - மீண்டும் இரவில் தங்குதலுற்றுப் பொங்கித் துளிக்க, வாடையொடு நிவந்த ஆய் இதழ் தோன்றி - வாடைக்காற்றால் உயர்ந்த அழகிய இதழினையுடைய செங்காந்தள், சுடர் கொள் அகலில் சுருங்கு பிணி அவிழ - சுடரினைக் கொண்ட அகல்போலச் சுருங்கிய அரும்பு விரிய, சுரிமுகிழ் முசுண்டை பொதி அவிழ்வான்பூ-சுரிந்த அரும்பினையுடைய முசுண்டையின் கட்டவிழ்ந்த பெரிய பூ, விசும்பு அணி மீனில் பசும் புதல் அணிய - வானை அழகுறுத்தும் மீன்களைப்போலப் பசிய புதர்களை அழகுறுத்த, கள்வன் மண் அளை செறிய - நண்டு தனது மண் வளையுட் செறிந்திட, அகல் வயல் கிளைவிரி கரும்பின் கணைக்கால் வான் பூ - அகன்ற வயலில் கிளைத்து விரிந்த கரும்பினது திரண்ட காம்பினையுடைய பெரிய பூ, மாரி அம் குருகின் ஈரிய குரங்க-மழையில் நனைந்த நாரையைப்போல ஈரம் கொண்டனவாய் வளைந்திருக்க, நனி கடும் சிவப்பொடு நாமம் தோற்றி-மிக்க கடிய சினத்தினால் அச்சத்தை உண்டாக்கி, பனி கடி கொண்ட பண்பில் வாடை - பனி தங்கிய நற்பண்பில்லாத வாடைக் காற்றானது, மருளின் மாலையொடு அருளின்றி நலிய - மயங்குதலையுடைய மாலைப் பொழுதுடன் கூடி இரக்கமின்றி நலிந்திட;

கஎ—க. நுதல் இறை கொண்ட அயல் அறி பசலையொடு-நுதற்கண்ணே தங்குதல்கொண்ட அயலோரால் அறியப்படும் பசலையுடன், தொல் நலம் சிதையச் சாஅய் - பழைய மேனி நலம்கெட மெலிந்து, என்னள்கொல் அளியள் என்னுதோர் - என்ன நிலையினளாயினளோ இரங்கத்தக்காள் என்று உசாவி யறியாராதலின்;

க—ந. காதலர் - நம் தலைவர், பொருள் புரிந்து உள்ளார் கொல்லோ - பொருள் தேடுதலையே விரும்பி நம்மை நினைந்திலரோ, உள்ளியும்-நினைந்தும், சிறந்த செய்தியின் - செய்யும் வினையின் மிகுதியால், மறந்தனர் கொல்லோ-உசாவுதலை மறந்துவிட்டனரோ?

(முடிபு) தோழி! வாழி! பண்பில் வாடை மாலையொடு அருளின்றி நலிய, என்னள்கொல் அளியள் என்னுதோர் ஆதலின், நம் காதலர் நம்மை உள்ளார் கொல்லோ, உள்ளியும் சிறந்த செய்தியின் மறந்தனர் கொல்லோ?

மழை பொங்குபு துளிப்ப, தோன்றி பிணி அவிழ, முசுண்டை வான்பூ புதல் அழியு, கள்வன் அளைச் செறிய, கரும்பின் பூ ஈரிய குரங்க, சிவப்பொடு நாமம் தோற்றிப் பனிகடி கொண்ட வாடை என்க.

(வி - ரை.) குழைய - தளிர்க்க என்றுமாம். பெயல் முனிந்து என்றமையாலும், பொங்குபு துளிப்ப என்றமையாலும், பனிகடி கொண்ட வாடை என்றமையாலும், கூதிரின் பின்னர்த்தாகிய பனிப்

பொழுது என்பது போதரும். மங்குல் - விசும்பு என்றுமாம். அற்கம்- தங்குதல்; தொழிற் பெயர். கூதிர்ப் பருவத்தே மேகம் பெயலை வெறுத்து வானிலிருந்து துளிக்கும் இயல்பினது என்பது *'பெயலுலந் தெழுந்த பொங்கல் வெண்மழை, அகலிரு விசும்பிற் றுவலை கற்ப' என்பதனானும் அறியப்படும். குரங்குதல் - வளைதல். சிவப்பு-வெகுளி. நாம் என்னும் உரிச்சொல் ஈறு திரிந்தது. தலைவனைப் பிரிந்து தலைவி வருந்துதலை ஏனோர்க்கு அறிவிப்பது பசலையாகலின், 'அயலறி பசலை' எனப்பட்டது.

---

236. மருதம்

[ஆற்றாமை வாயிலாகப் புக்க தலைமகன் நீக்கத்துக்கண் புக்க தோழிக்குத் தலைமகள் சொல்லியது.]

மணிமருள் மலர முள்ளி அமன்ற
துணிநீர் இலஞ்சிக் கொண்ட பெருமீன்
அரிநிறக் கொழுங்குறை †வௌவினர் மாந்தி
வெண்ணெ லரிநர் பெயர்நிலைப் பின்றை
‡இடனில நெரிதரு நெடுங்கதிர்ப் பல்சூட்டுப்
பனிபடு சாய்ப்புறம் பரிப்பக் கழனிக்
கருங்கோட்டு §மாஅத்து அலங்குசினைப் புதுப்பூ
மயங்குமழைத் துவலையில் தாஅம் ஊரன்
காமம் பெருமை யறியேன் நன்றும்
உய்ந்தனென் வாழி தோழி யல்கல்
அணிகிளர் சாந்தின் அம்பட் டிமைப்பக்
கொடுங்குழை மகளிரின் ஒடுங்கிய இருக்கை
அறியா மையின் அழுந்த நெஞ்சின்
ஏற்றியல் எழினடைப் பொலிந்த மொய்ம்பின்
தோட்டிருஞ் சுரியல் மணந்த பித்தை
ஆட்டன் அத்தியைக் காணீ ரோவென
நாட்டின் நாட்டின் ஊரின் ஊரின்
கடல்கொண் டன்றெனப் புனலொளித் தன்றெனக்
கலுழ்ந்த கண்ணள் காதலற் கெடுத்த
ஆதி மந்தி போல
ஏதஞ் சொல்லிப் பேதுபெரி துறலே. —பரணர்.

---

* நெடுநல். கக—உ0.

(பாடம்) † வெவ்விளர். ‡ இடைநிலம், § மாஅத்த அஞ்சினை.

(சொ - ள்.) ௧—௯. தோழி-, வாழி-, வெண் நெல் அரிநர்-வெள்ளிய நெல்லை அறுப்போர், மணி மருள் மலர-நீல மணியினை யொத்த மலர்களையுடைய, முள்ளி அமன்ற - நீர் முள்ளி நிறைந்த, துணி நீர் இலஞ்சி கொண்ட - தெளிந்த நீரினையுடைய மடுவிற் கவர்ந்த; பெரு மீன் அரி நிறம் கொழு குறை - பெரிய மீனின் வரிகள் பொருந்திய நிறத்தினையுடைய வளவிய துண்டினை, வௌவினர் மாந்தி - கௌவி யுண்டு, பெயர் நிலைப் பின்றை - எழுந்த பின்னர்க் (கொண்டு போய்ப் போகட்ட), இடன் இல நெரிதரு நெடும் கதிர் பல் சூட்டு - களத்தே வெற்றிடம் அறச் செறிந்தன நீண்ட கதிரினையுடைய பல நெற்கட்டுகளையுடைய, பனிபடு சாய்ப்புறம் பரிப்ப - பனிதங்கிய கோரையை யுடைய களனெலாம் சூழ, கழனி - வயற்புறத்தேயுள்ள, கருங்கோட்டு மா அத்து - கரிய கவரினையுடைய மாமரத்தின், அலங்கு சினைப் புது பூ - அசையும் கொம்புகளிலுள்ள புதிய பூக்கள், மயங்கும் மழைத் துவலையில் தாஅம் ஊரன் - கலந்து சொரியும் மழைத்துளிபோல உதிர்ந்து பரந்து கிடக்கும் ஊரனாகிய நம் தலைவனது, காமம் பெருமை அறியேன் - காமம் பெருமை இவற்றினை அறியாதேன்;

௧௦—௩. அல்கல் - இரவில், அணிகிளர் சாந்தின் அம்பட்டு இமைப்ப - அழகு விளங்கும் சாந்தினுடன் அழகிய பட்டாடை ஒளி செய, கொடு குழை மகளிரின் ஒடுங்கிய இருக்கை - வளைந்த குழை யணிந்த மகளிரைப்போல நம்தலைவன் நாணியிருந்த இருக்கையினைக் கண்டு, அறியாமையின் அழிந்த நெஞ்சின் - மடமையால் உருகப்பெற்ற நெஞ்சினேன் ஆயினமையின்;

௧௪—௨௧. காதலற்கெடுத்த - தன் கணவனை இழந்தமையின், கலுழ்ந்த கண்ணள் - அழுத கண்ணினளாகிய, ஆதிமந்தி போல-ஆதி மந்தியைப்போல, ஏற்று இயல் எழில் நடை - ஏற்றின் தன்மையுடைய எழுச்சி பொருந்திய நடையினையும், பொலிந்த மொய்ம்பின் - பொலிவுற்ற தோளினையும், தோடு இரு சுரியல் மணந்த பித்தை - தொகுதி கொண்ட கரிய சுருளைப் பொருந்திய தலைமயிரினையுமுடைய, ஆட்டன் அத்தியைக் காணீரோ என - ஆட்டன் அத்தியாய என் தலைவனைக் கண்டீரல்லீரோ என்று, நாட்டின் நாட்டின் ஊரின் ஊரின் - நாடு தோறும் ஊர்தோறும் சென்று, கடல் கொண்டன்று என புனல் ஒளித்தன்று என-என் தலைவனைக் கடல் கொண்டதுபோலும் புனல்கொண்டொளித்தது போலுமெனக் கூறி, ஏதம் சொல்லிப் பேது பெரிது உறல் - துன்பத்தைச் சொல்லிப் பெரிதும் மயங்குதலினின்றும்;

௯—௧௦. நன்றும் உய்ந்தனென் - பெரிதும் தப்பினேன்.

(முடிபு) தோழி! வாழி ஊரன் காமம் பெருமை அறியேன், அல்கல் மகளிரின் ஒடுங்கிய அவனது இருக்கை கண்டு அழிந்த நெஞ்சின் காதலற் கெடுத்த ஆதிமந்திபோல ஏதம் சொல்லிப் பேதுறல் நன்றும் உய்ந்தனன்.

(வி - ரை.) பின்றைக் கொண்டுபோகட்ட என வருவித்துரைக்க. காமம் பெருமை: என்னும்மை விகாரத்தாற் றொக்கன. சாந்தினொடு பட்டிமைப்ப என்றமையால், பரத்தையிற் பிரிந்து வந்தான் என்பது பெற்றாம். நாணாலும் அச்சத்தாலும் ஒடுங்கிய இருக்கை என்க. இருக்கை கண்டு என ஒரு சொல் வருவிக்கப்பட்டது. நெஞ்சின் - நெஞ்சினேனாகலின் என விரித்துரைக்க. ஆதிமந்தி, தன் காதலனாகிய ஆட்டன் அத்தியுடன் நீராடியபொழுது அத்தியைக் காவிரி வவ்விச் சென்றமை பின், அவள் அவனைப் பலவிடங்களிலும் தேடியுழந்த வரலாறு முன்னர் *'வானுற நிவந்த' என்னும் அகப்பாட்டிலும் பரணராற் கூறப்பட்டமை அறிக. காட்டின் நாட்டின் ஊரின் ஊரின் என்னும் அடுக்குகள் பன்மை குறித்தன. கொண்டன்று, ஒளித்தன்று என்னும் இடங்களில் ஐயப்பொருட்டாகிய இடைச்சொல் விரித்துரைத்துக்கொள்க.

(மே - ள்.) †'அணங்கே விலங்கே' என்னும் சூத்திரத்தே, புலவி பொருளாக அச்சம் வருதற்கு இப்பாட்டின் 'அணிகிளர் சாந்தின் அம் பட்டிமைப்பக், கொடுங்குழை மகளிரின் ஒடுங்கிய இருக்கை' என்ற அடிகளைக் காட்டினர், பேரா.

---

237. பாலை

[தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறீஇயது.]

புன்காற் பாதிரி அரிநிறத் திரள்வீ
நுண்கொடி அதிரலொடு நுணங்கறல் வரிப்ப
அரவெயிற்று அன்ன அரும்புமுதிர் குரவின்
தேனிமிர் நறுஞ்சினைத் தென்றல் போழக்
குயில்குரல் கற்ற வேனிலுந் துயில்துறந்து
இன்னா கழியுங் கங்கு லென்றுநின்
நன்மா மேனி அணிநலம் புலம்ப
இனைதல் ஆன்றிசின் ஆயிழை கனைதிறல்
செந்தீ அணங்கிய செழுநிணக் கொழுங்குறை
மென்றினைப் ‡புன்கம் உதிர்த்த மண்டையொடு
இருங்கதிர் அலமருங் கழனிக் கரும்பின்
விளைகழை பிழிந்த அந்தீஞ் சேற்றொடு
பால்பெய் செந்நெற் பாசவல் பகுக்கும்

---

*அகம். உஉஉ. †தொல். மெய். அ. (பாடம்) ‡புன்கம் உயர்த்த.

புனல்பொரு புதவின் உறந்தை யெய்தினும்
வினைபொரு ளாகத் *தவிர்விலர் கடைசிவந்து
ஐய அமர்த்த உண்கணின்
வையேர் வாலெயி றூறிய நீரே.

—தாயங் கண்ணனார்.

(சொ - ள்.) க—அ. ஆயிழை - அழகிய அணிகளையுடைய தலைவியே, புன் கால் பாதிரி அரி நிற திரள் வீ - புல்லிய காம்பினையுடைய பாதிரியின் வரிகள் பொருந்திய நிறமுடைய திரண்ட மலர், நுண் கொடி அதிரலொடு - மெல்லிய கொடியாகிய புனலியின் மலரொடு, நுணங்கு அறல் வரிப்ப - நுண்ணிய மணலிடத்தே கோலஞ் செய்ய, அரவு எயிறு அன்ன அரும்பு முதிர் குரவின் - பாம்பின் பல் அனைய அரும்புகள் முதிர்ந்த குராவினது, தேன் இமிர் நறு சினை தென்றல் போழ - வண்டுகள் ஒலிக்கும் நறிய கிளையில் தென்றல் ஊடறுத்துச் செல்ல, குயில் குரல் கற்ற வேனிலும் - குயில் கூவுதலைப் பயின்ற வேனிற்காலத்தும், கங்குல் - இராப்பொழுதானது, துயில் துறந்து இன்னா கழியும் என்று - துயிலின்றி வருந்தும்படி இன்னாதாய்க் கழியாநிற்கும் என்று கூறி, நின் நல் மா மேனி அணி நலம் புலம்ப - நினது நல்ல மாமை நிறத்தையுடைய மேனியின் சிறந்த அழகு ஒழிய, இனைதல் ஆன்றிசின் - வருந்துதல் ஒழிவாயாக;

அ—கச. கனை திறல் செந்தீ அணங்கிய செழு நிண கொழு குறை - செறிந்த வலிய செந்தீயில் சுட்ட வளம் பொருந்திய நிணத்தில் கொழுவிய துண்டுகளை, மென் தினை புன்கம் உதிர்த்த மண்டையொடு - மெல்லிய தினைச்சோற்றிலே சொரிந்த கலத்துடன், இருங் கதிர் அலமரும் கழனி - பெரிய நெற்கதிர்கள் சுழல்கின்ற வயலிடத்து, கரும்பின் விளைகழை பிழிந்த - முற்றிய கரும்பின் தண்டினைப் பிழிந்த, அம் தீம் சேற்றொடு - அழகிய இனிய சாறு அட்டபாகுடன், பால் பெய் - பாலினையும் பெய்து அளைந்த, செந்நெல் பாசவல் - செந்நெல்லாலாகிய பசிய அவலை, பகுக்கும் - பாணர் முதலாயினார்க்குப் பகுத்துக்கொடுக்கும், புனல் பொரு புதவின் உறந்தை எய்தினும் - நீர் மோதுகின்ற வாய்த் தலைகளையுடைய உறையூரையே அடைவதாயினும்;

கடு—எ. கடை சிவந்து ஐய அமர்த்த உண்கண் நின் - கடை சிவப்புற்று வியக்குமாறு பொருந்திய மையுண்ட கண்களையுடைய நினது, வை ஏர் வால் எயிறு ஊறிய நீர் - அழகு பொருந்திய கூரிய வெள்ளிய எயிற்றின்கண் ஊறிய நீரினை, வினை பொருளாக - (நம் தலைவர்) பொருளீட்டும் வினை காரணமாக, தவிர்விலர் - உண்ணாது தவிர்ந்திருப்பாரல்லர்.

* தவிரலர்.

(முடிபு) ஆயிழை! வேனிலும் கங்குல் இன்னா கழியும் என்று நின் மேனி நலம் புலம்ப இனைதல் ஆன்றிசின்; நம் தலைவர் உறந்தை எய்தினும் நின்வால் எயிறு ஊறிய நீரினை வினைப்பொருளாகத் தவிர்விலர்.

(வி - ரை.) புன்கால் வீ எனக் கூட்டுக. அரி - ஒண்மையுமாம். 'புன்கால்......குயில் குரல்கற்ற' என்றதனால் ஈண்டுக் குறித்தது இளவேனில் ஆகும். பாதிரி முதலிய பூக்கள் நீர் வற்றிய கருமணலிற் சிதறி அழகு செய்தலும், தென்றல் பூத்த குரா முதலியவற்றை வாடுறத்து வந்து வீசுதலும், வண்டுகள் ஒலித்தலும், குயில் கூவுதலும் உடைய இளவேனிற் போது, கூடியிருப்பார்க்கு மிக்க இன்பத்தினைச் செய்வதாகலின், வேனிலும் என்னும் உம்மை உயர்வு சிறப்பு. அணங்குதல்-வருத்துதல்; ஈண்டுச் சுடுதல் என்றபடி. மண்டை - பாணருடைய உண்கலம். புன்கம் உதிர்த்த மண்டையொடு என்றூரேனும், மண்டையின்கண் சொரிந்த புன்கத்தினையும் பாசவலினையும் பருக்கும் எனக் கொள்க; இனி, புன்கத்தை ஒழித்த மண்டையின்கண் பாசவற் பருக்கும் என்னலுமாம்; இதற்கு மண்டையொடு என்பது வேற்றுமை மயக்கம். விளை கரும்பின் கழை என மாறுக. சேறு - சாறு காய்ச்சிய பாகு. சாறு என்னலுமாம். பருக்கும் உறந்தை என்றது, பருத்தளிக்கும் வண்மையுடையார் வாழும் செல்வம் மிக்க உறந்தை என்றபடி. பொருளாக-காரணமாக. ஊறிய நீர் தவிர்விலர் என்றது, அதனை உண்ணும் வேட்கையால் விரைந்து வருவர் என்று குறிப்பித்தவாறுமிற்று.

---

238. குறிஞ்சி

[இரவுக்குறி வந்த தலைமகற்குத் தோழி சொல்லியது.]

மான்றமை யறியா மரம்பயில் இறும்பின்
ஈன்றிளைப் பட்ட வயவுப்பிணப் பசித்தெனப்
மடமான் வல்சி தரீஇய நடுநாள்
இருண்முகைச் சிலம்பின் இரைவேட் டெழுந்த
*பனைமருள் எருத்திற் பல்வரி இரும்போத்து
மடக்கண் ஆமான் மாதிரத்து அலறத்
தடக்கோட்டு ஆமான் அண்ணல் ஏஎறு
நனந்தலைக் கானத்து வலம்படத் தொலைச்சி
இருங்கல் வியலறை சிவப்ப ஈர்க்கும்
பெருங்கல் நாட பிரிதி யாயின்
மருந்தும் உடையையோ மற்றே இரப்போர்க்கு

(பாடம்) * பணை மருள்.

இழையணி நெடுந்தேர் களிறொடு என்றும்
மழைசுரந் தன்ன ஈகை வண்மகிழ்க்
கழல்தொடித் தடக்கைக் *கலிமான் நள்ளி
நளிமுகை யுடைந்த நறுங்கா ரடுக்கத்துப்
போந்தை முழுமுதல் நிலைஇய காந்தள்
மென்பிணி முகையவிழ்ந் தலர்ந்த
தண்கமழ் புதுமலர் நாறுநறு நுதற்கே.

—கபிலர்.

(சொ - ள்.) க—௧௦. மான்றமை அறியா மரம் பயில் இறும்பின் - மரங்கள் ஒன்றோடொன்று பின்னியிருத்தல் அறியப்படாதவாறு நெருங்கியுள்ள காட்டின்கண், ஈன்று இளைப்பட்ட வயவு பிணவு பசித்தென - ஈன்ற காவற்பட்ட வேட்கையினையுடைய பெண்புலி பசியுற்றதாக, மடமான் வல்சி தரீஇய - அதற்கு இளைய மானாகிய உணவைக் கொணர்ந்து தர, நடுநாள் இருள்முகைச் சிலம்பின் இரைவேட்டு எழுந்த - நள்ளிரவில் இருண்ட குகைகளையுடைய பக்க மலையில் இரை கொள்ளுதலை விரும்பிப் புறப்பட்ட, பனைமருள் எருத்தின் பல்வரி இரும்போத்து - பனந்துண்டினைப்போன்ற பிடரியினையுடைய பல வரிகளையுடைய பெரிய ஆண்புலி, மடக்கண் ஆமான் மாதிரத்து அலற - மடப்பம் பொருந்திய கண்ணினையுடைய காட்டுப்பசு சேய்மைக்கண் நின்று அலற, தடகோட்டு ஆமான் அண்ணல் ஏறு - வளைந்த கோட்டினையுடைய தலைமை பொருந்திய அக்காட்டுப் பசுவின் ஏற்றினை, கன்றலைக் கானத்து வலம்பட தொலைச்சி - அகன்ற இடத்தினையுடைய காட்டில் வலப்பக்கம் வீழக் கொன்று, இருகல் வியல் அறை சிவப்ப ஈர்க்கும் - பெரிய மலையையடுத்த அகன்ற பாறைகள் குருதியால் சிவந்திட இழுத்தேகும், பெருகல் நாட - பெரிய மலை பொருந்திய நாட்டையுடையவனே!

பிரிதியாயின் - நீ இவளைப் பிரிந்து செல்வாயாயின்,

௧௧—௮. இரப்போர்க்கு - பாணர் முதலிய இரவலர்க்கு, இழை அணி நெடுதேர் - அணிகள் அணிந்த நெடிய தேரை, களிறொடு - களிற்றுடன், என்றும் மழை சுரந்தன்ன ஈகை - எஞ்ஞான்றும் வானம் சுரந்தளிப்பது போன்று தரும் ஈகையினையும், வண் மகிழ் - மிக்க மகிழ்ச்சியினையும், கழல் தொடி - கழலவிட்ட தொடியணிந்த, தடகை - பெரிய கையினையும், கலிமான் - செருக்குற்ற குதிரைகளையுமுடைய, நள்ளி - நள்ளி என்பானது, நளி முகை உடைந்த நறு கார் அடுக்கத்து - செறிந்த அரும்புகள் மலர்ந்த நறிய கரிய பக்கமலைகளில், போந்தை முழுமுதல் நிலைஇய - பனையின் பெரிய அடிப்பக்கத்தே நிலைபெற்றுள்ள, காந்தள்

* கமொன் நள்ளி.

மெல் பிணி முகை அவிழ்ந்து அலர்ந்த - கார்காலத்து மெல்லிய பிணிக்கப் பெற்ற அரும்புகள் இதழ் விரிந்து மலர்ந்த, தண் கமழ் புதுமலர் நாறும் நறு நுதற்கு - தண்ணிதாகிக் கமழும் புதிய மலர் போல நாறும் நறிய நெற்றியுடையாளை (இறவாது காத்தற்கு);

௧௧. மருந்தும் உடையையோ - மருந்தினையும் உடையையோ? மற்று - உடையை யல்லையாகலின் பிரியற்க.

(முடிபு) பெருங்கல் நாட! நீ இவளைப் பிரிதியாயின், நறு நுதலை யுடையாளை (இறவாது காத்தற்கு) மருந்தும் உடையையோ! மற்று.

(வி-ரை.) மான்றமை - மயங்கினமை. வயவு - சூல் முதிர்ந்த விடத்தும் ஈன்றவிடத்தும் உணவு முதலிய பற்றி புண்டாம் ஆசைப் பெருக்கம். பனை மருள் என்பது பாடமாயின், பட்டடைபோலும் என்க. பட்டடை - கொல்லன் உலைக்களத்து அடைகல். பல்வரி என்னும் அடையால், போத்து, புலிச்சேயிற்று. புலியானது பசியால் உயிர் வருந்துவதாயினும் இடப்பக்கத்தில் வீழ்ந்த விலங்கினை உண்ணாமையும், வலப்பக்கத்தே வீழ்த்தி உண்ணுதலும் ஆகிய இயல்பினை யுடையதென்பது *'கடுங்கட் கேழல் இடம்பட வீழ்ந்தென, அன்றவண் உண்ணாதாகி வழிநாள்,......இருங்களிற் றொருத்தல் நல்வலம் படுக்கும், புலிபசித் தன்ன' என்பதனால் அறிக. †'தொடங்கு வினைதவிரா அசைவில் நோன்றாள், கிடந்துயிர் மறுகுவதாயினும் இடம்படின், வீழ்களிறு மிசையாப் புலியினும்' என இந்நூலுள் முன்னர்ப் போந்தமையும் அறியற்பாற்று. மற்று, வினைமாற்று. நேர் ஒளிசெறும் நயமும் என ஒரு சொல் விரித்துரைக்க. வண்மகிழ் - வண்மையாலாகிய மகிழ்ச்சியுமாம். பிணிமுகைபுடைந்த - பூக்களின் செறிந்த முகைபுடைந்த என்க. நறு நுதற்கு - நறு நுதலையுடையாளை இறவாது காத்தற்கு என விரித்துரைக்க. மருந்தும் உடையையோ என்றது, நீ பிரியின் இறந்துபடுவள் என்றபடியாம்; என்றும் பிரியாதிருக்க வரைந்து கொள்க என்பது கருத்து.

---

239. பாலை

[பொருள்வயிற் பிரிந்துபோகாநின்ற தலைமகன்
தன் னெஞ்சிற்குச் சொல்லியது.]

‡அளிதோ தானே எவனா வதுகொல்
மன்றுந் தோன்றாது மரனும் மாயும்
புலியென உலம்புஞ் செங்கண் ஆடவர்

---

* புறம். ௧௯0. † அகம். உ௯.

(பாடம்) ‡ அளிதோ தானே யாதாகுவங்கொல்.

ஞெலியொடு பிடித்த வார்கோல் அம்பினர்
எல்லூர் எறிந்து பல்ஆத் தழீஇய
விளிபடு பூசல் வெஞ்சுரத்து இரட்டும்
வேறுபல் தேஎத்து ஆறுபல நீந்திப்
புள்ளித் தொய்யில் பொறிபடு சுணங்கின்
ஒள்ளிழை மகளிர் உயர்பிறை தொழூஉம்
புல்லென் மாலை யாமிவண் ஒழிய
ஈட்டருங் குரைய பொருள்வயின் செலினே
நீட்டுவிர் அல்லிரோ நெடுந்தகை யீரெனக்
குறுநெடும் புலவி கூறி நம்மொடு
*நெருநலுந் தீம்பல மொழிந்த
சிறுநல் ஒருத்தி பெருநல் லூரே.

—எயினந்தை மகனிளங்கீரனார்.

(சொ - ள்.) ௧௨. நெடுந்தகையீர்-பெருந் தன்மையுடையீரே!

௧—௭. புலி என உலம்பும் செங்கண் ஆடவர் - புலிபோல முழங்கும் சிவந்த கண்ணையுடைய மறவர், ஞெலியொடு பிடித்த வார்கோல் அம்பினர் - தீக் கொள்ளியுடன் பிடித்துள்ள நீண்ட திரண்ட அம்பினராகிச் சென்று, எல் ஊர் எறிந்து - இரவில் மாற்றார் ஊரினைப்போரிற் றொலைத்து, பல் ஆ தழீஇய விளிபடு பூசல் - பல ஆனினங்களைக் கவர்ந்தமையால் உண்டாகிய ஒலித்தல் மிக்க ஆரவாரம், வெம் சுரத்து இரட்டும் - கொடிய சுரத்தே மாறி யொலிக்கும், வேறு பல் தேஎத்து ஆறு பல நீந்தி - வேறுபட்ட மொழி வழங்கும் பல தேயங்களின் நெறிகள் பலவற்றைக் கடந்து சென்று;

௮—௧௨. புள்ளித் தொய்யில் - புள்ளி வடிவினதாக எழுதப்பட்ட கோலத்தினையும், பொறிபடு சுணங்கின் - பொறிகள் பொருந்தியதேமலையும் உடைய, ஒள் இழை மகளிர் - ஒள்ளிய அணிகளை யணிந்த மங்கையர், உயர் பிறை தொழூஉம் புல் என் மாலை - உயர்ந்த பிறையினை வணங்கும் பொலிவற்ற மாலைக்காலத்தே, யாம் இவண் ஒழிய - நாம் இங்கே தனித்திருக்க, ஈட்டு அரும் குரைய - ஈட்டுதற்கு அருமையாய, பொருள் வயின் செலினே - பொருளீட்டும் வினைக்கண் செல்லின், நீட்டுவிர் அல்லிரோ என - காலம் தாழ்ப்பீர் அல்லிரோ என்று;

௧௩—௫. குறுநெடு புலவி கூறி - குறியனவும் நெடியனவுமாகிய ஊடலுரைகளைக் கூறி, நெருநலும் நம்மொடு தீம்பல மொழிந்த - நேற்றும் நம்முடன் இனிய பலவற்றை உரைத்த, சிறு நல் ஒருத்தி

* நெருநையும்.

பெருநல் லூர் - இளமை பொருந்திய நல்லனாய நம் தலைவியது பெரிய நல்ல ஊரானது;

க—உ. மன்றும் தோன்றாது - மன்றம் தோன்றப் பெறாது; மரனும் மாயும் - மரங்களும் மறையப்பெறும்; எவன் ஆவது கொல் - இனி எத்தன்மையது ஆகுமோ? அளிது - இரங்கத்தக்கது.

(முடிபு) நெடுந் தகையீர்! வேறு பல் தேயத்து ஆறு பல நீந்தி, யாம் இவண்ஒழிய, பொருள் வயிற் செலினே, நீட்டுவிர் அல்லிரோ என நெருநலும் நம்மொடு புலவிகூறித் தீம்பல மொழிந்த ஒருத்தி பெருநல் ஊர்மன்றும் தோன்றாது; மரனும் மாயும்; எவனாவது கொல்? அளிது.

(வி - ரை.) செங்கண் ஆடவர் என்றது, வெட்சி மறவரை. மாற்றார் ஊரினைத் தீக்கொளுவுதற்கு ஞெலியும், பகைவரைக் கோறற்கு அம்பும் கொண்டு சென்றாராகலின், "ஞெலியொடு பிடித்த வார்கோல் அம்பினர்" எனப்பட்டார். இரவிலே சென்று ஊரினை அழிப்பராகலின் 'எல் லூரெறிந்து' என்றார்; *"அரவூர் மதியிற் கரிஞர வடையிரா லூரெரிகொளீஇக் கொன்று' என வருதல் காண்க. விளிபடு பூசல்-வெட்சியாரும் கரந்தையாரும் போர்செய்தலால் எழும் ஆரவாரம். 'எல்லூ ரெறிந்து பல்லாத் தழீஇய, விளிபடு பூசல்' என்பதன்கண், ஊர்கொலை, ஆகோள், பூசல் மாற்று என்னும் வெட்சித்திணையின் துறைகள் அமைந்திருத்தல் அறியற்பாற்று. இரட்டும் ஆறு எனவும் தேளத்த ஆறு எனவும் இயையும். தொய்யில் - சந்தனக்குழம்பு முதலியவற்றால் மகளிர் மார்பிலும் தோளிலும் செய்யும் கோலம். உயர்பிறை-மேல் வளர்தற்குரிய பிறை என்றுமாம். வதுவையாகாத கன்னியர் பிறை தொழுதல் மரபு என்க. இளமையும் எழிலும் வாய்ந்த தலைவியின் ஊடலுரையும் தலைவனுக்கு மிக்க இன்பம் விளைத்தனவாகலின், 'புலவிகூறி நம்மொடு தீம்பல மொழிந்த, சிறுநல் லொருத்தி' என்றான். தலைவியைப் பிரிந்த பிற்றைஞான்று, இடைச்சுரத்தே தன் நெஞ்சிற்குக் கூறுகின்றானாகலின், நெருநலும் என்றான். பெருநல்லூர்-அவள் பிறத்தலாற் பெருமையும் நன்மையும் வாய்ந்த ஊர் என்க. ஊரின்கண் மன்றும் தோன்றாது மரனும் மாயும் என்றுமாம். தலைவியைப் பிரிந்து அவ்வூரை விடுத்துச் செல்லுந் தலைவன், தலைவிபாலுள்ள காதல்மிகுதியால் அவ்வூரினை நோக்கியவண்ணம் செல்வானாகலின், அங்ஙனம் செல்லுங்கால் முதலில் மன்று மறையவும், பின் உயர்ச்சியுடைய மரங்களும் மறையவுற்றன; அதனால் ஆற்றாமை எய்திய தலைவன் இனியும் எனக்கு எத்தன்மையதாகுங்கொல் என்றான் என்க.

---

* தொல். பொருள். புறத். ௩-ஆம் சூத்திர மேற்கோள்.

240. நெய்தல்

[தோழி, இரவுக்குறிவந்த தலைமகற்குப் பகற்குறி நேர்ந்தது.]

செவ்வீ ஞாழல் *கருங்கோட் டிருஞ்சினைத்
தனிப்பார்ப்பு உள்ளிய தண்பறை நாரை
மணிப்பூ நெய்தல் மாக்கழி நிவப்ப
இனிப்புலம் பின்றே கானலும் நளிகடல்
திரைச்சுரம் உழந்த திண்திமில் விளக்கிற்
பன்மீன் கூட்டம் என்னையர்க் காட்டிய
எந்தையுஞ் செல்லுமார் இரவே அந்தில்
அணங்குடைப் பனித்துறை கைதொழு தேத்தி
யாயும் ஆயமோ டயரும் நீயுந்
தேம்பாய் ஓதி திருநுதல் நீவிக்
கோங்குமுகைத் தன்ன குவிமுலை யாகத்து
இன்றுயில் அமர்தனை யாயின் வண்டுபட
விரிந்த செருந்தி வெண்மணன் முடுக்கர்ப்
பூவேய் புன்னையந் தண்பொழில்
வாவே தெய்ய மணந்தனை செலற்கே.

—எழுஉப்பன்றி நாகன் குமரனார்.

(சொ - ள்.) ௧—௪. செவ் வீ ஞாழல் கரு கோட்டு இரு சினை - சிவந்த பூவினையுடைய புலிநகக் கொன்றையின் கரிய கொம்பின் பெரிய கிளையில், தனி பார்ப்பு உள்ளிய தண் பறை நாரை - தனியே யிருக்கும் தன் குஞ்சினை நினைந்த தணியப் பறத்தலையுடைய நாரை, மணி பூ நெய்தல் மா கழி நிவப்ப - நீலமணி போலும் நெய்தற் பூக்களையுடைய கரிய கழியினின்றும் மேலே எழுந்து பறந்திட, கானலும் இனி புலம்பின்று - கடற்கரைச்சோலையும் இப்பொழுது தனிமையுற்றது;

௪—௭. நளி கடல் திரை சுரம் உழந்த திண் திமில் விளக்கில் - செறிந்த கடலாகிய திரையையுடைய சுரத்தில் திரிந்து வருந்திய திண்ணிய படகின் விளக்கொளியில், பல் மீன் கூட்டம் என் ஐயர்க் காட்டிய - தான் அகப்படுத்த பலவாய மீன்கூட்டங்களை என் அண்ணன்மார்க்குக் காட்டுதற்கு, எந்தையும் இரவு செல்லும் - என் தந்தையும் இரவில் மனைக்கண் போதரும்;

௭—௯. யாயும் ஆயமோடு - என் தாயும் ஆயத்தாருடன், அணங்கு உடை பனி துறை அந்தில் கை தொழுது ஏத்தி அயரும் - தெய்வ

(பாடம்) * கருங்கோட் டஞ்சினை.

முடைய குளிர்ந்த துறையாய ஆங்கே (அத்தெய்வத்தைக்) கையால் வணங்கித் துதித்து அதற்குச் சிறப்புச் செய்யும்;

க—கடு. நீயும்-, தேம் பாய் ஓதி - தேன் ஒழுகும் கூந்தலை யுடைய தலைவியது, திரு நுதல் நீவி - அழகிய நெற்றியைத் தடவி, கோங்குமுகைத்தன்ன குவிமுலை ஆகத்து-கோங்கு அரும்பினையொத்த குவிந்த முலையினையுடைய மார்பகத்தே, இன் துயில் அமர்ந்தனை யாயின் - இனிய துயிலை விரும்பினையாயின், மணந்தனை செலற்கு - அங்ஙனம் அவளைக் கூடிச் செல்லுதற்கு, வண்டுபட விரிந்த செருந்தி - வண்டு மொய்க்க விரிந்த பூக்களையுடைய செருந்திமரம் பொருந்திய, வெண்மணல் முடுக்கர் - வெள்ளிய மணல் பரந்த முடுக்கில், பூவேய் புன்னை அம் தண் பொழில் - பூக்கள் பொருந்திய புன்னை மரங்களை யுடைய அழகிய தண்ணிய சோலைக்கண், வா - வருவாயாக.

(முடிபு) தலைவ! நாரையும் நிவப்பக் கானல் புலம்பின்று; எந்தையும் இரவு (மனைக்கட்) செல்லும்; யாயும் ஆயமொடு அயரும்; நீயும் ஓதி ஆகத்து இன்றுயில் அமர்ந்தனையாயின் மணந்தனை செலற்குப் புன்னையந் தண்பொழில் வா.

(வி - ரை.) தண் பறை - மெல்லப் பறத்தல். நிவப்ப-உயர்ந்து பறந்து செல்ல என்றபடி. நாரை நிவப்பக் கானல் புலம்பின்று என்றது, கடலில் அகப்படுத்த மீன்களைக் கரையிற் போகட்டுச் செல்லு தற்கு இடையூறின்மை கூறியபடி. நாரை நிவப்ப என்றாரேனும் இனம்பற்றிப் பிற பறவைகளும் கொள்ளப்படும். வேட்டம் ஆடுவார் சுரத்திலே செல்லும் வழக்கு வலியால் கடலைச் சுரமாக உருவகித்தார். எந்தை இரவில் மனைக்கட் செல்லும் என்பதும், யாய் அணங்கிற்குச் சிறப்பயரும் என்பதும், இரவுக்குறியின் இடையீடு கூறியவாறு. அணங்கு - நெய்தற் றெய்வமாகிய வருணன். 'வண்டு பட விரிந்த... தண்பொழில்' என்றது பகற்குறிக்குச் சிறந்த களம் சுட்டியவாறு. தெய்ய, அசை. அந்திலும் அசை யென்னலுமாம்.

(மே - ள்.) *'மாயோன் மேய' என்னுஞ் சூத்திரத்து 'அணங் குடை......அயரும்' என்பது, நெய்தன்மகளிர் கிளையுடன் குழீஇ வருணற்குப் பரவுக்கடன் கொடுப்பது என்றும், †'தோழியின் முடியும் இடனுமா ருண்டே' என்னுஞ் சூத்திரத்து ''பூவேய் புன்னையந் தண் பொழில் நீவா' என்பதனை இது தோழி களஞ் சுட்டியது என்றும், ‡'பகற் புணர் களனே' என்னும் சூத்திரத்து, இது தோழி பகற்குறி உரைத்தது என்றும், §'பொழுதும் ஆறும்' என்னுஞ் சூத்திரத்து,இது, பகல் நீ வா என்றல் வழுவமைதி என்றும் கூறினர், நச்.

---

* தொல். அகத். ௫. † தொல். கள. ௩௦, ‡ தொல். கள. ௩௩.
§ தொல். பொருளியல், ௩௩.

241. பாலை

[பிரிவிடை வேறுபட்ட தலைமகள், வற்புறுத்துந் தோழிக்குச் சொல்லியது.]

தனியின் றியைந்த தவரா நட்பின்
இனியர் அம்ம அவரென முனியாது
நல்குவர் நல்ல கூறினும் அல்கலும்
பிரியாக் காதலொடு உழைய ராகிய
நமர்மன் வாழி தோழி யுயர்மிசை
மூங்கில் இளமுளை திரங்கக் காம்பின்
கழைநரல் வியலகம் வெம்ப மழைமறந்து
அருவி யான்ற வெருவரு நனந்தலைப்
பேஎய் வெண்தேர்ப் பெயல்செத் தோடித்
தாஅம் பட்ட தனிமுதிர் பெருங்கலை
புலம்பெயர்ந் துறைதல் செல்லா *நலங்குதலை
விருந்தின் வெங்காட்டு வருந்தி வைகும்
அத்த நெல்லித் தீஞ்சுவைத் திரள்காய்
வட்டக் கழங்கில் தாஅய்த் துய்த்தலைச்
செம்முக மந்தி ஆடும்
†நன்மர மருங்கின் மலையிறந் தோரே.

—காவன் முல்லைப் பூதனார்.

(சொ - ள்.) ரு. தோழி—, வாழி—,

க—௪. முனியாது நல்குவர் - என்னை வெறாது அருளுவார் ஒருவர், தனி இன்று இயைந்த தவரா நட்பின் - வெறுப்பின்றி ஒன்றிய என்றும் பிளவுபடாத நட்பினையுடைய, இனியர் - இனிய குணங்களை யுடையர், அவர் என - நம் தலைவர் என, நல்ல கூறினும் - அவரது நற்குணங்களைப் பாராட்டிக் கூறினும், அல்கலும் - என்றும், பிரியாக் காதலொடு-நம்மை விட்டுப் பிரியாத காதலுடன், உழையர் ஆகிய-நம் பக்கலில் உள்ளார் ஆகிய, நமர் - நம் காதலர்;(இப்பொழுது);

ரு—கக. உயர் மிசை-மலையின் உச்சிக்கண்ணே யுள்ள, மூங்கில் இளமுளை திரங்க - மூங்கிலின் இளைய முளை வதங்கவும், காம்பின் கழை நரல் வியல் அகம் வெம்ப - மூங்கில்தண்டு ஒலிக்கும் பெரிய பாறையின் இடங்கள் வெம்பவும், மழை மறந்து - மழை பெய்யாது மறந்து போதலின், அருவி ஆன்ற - அருவி இல்லையாகிய, வெருவரு நனந்தலை-

(பாடம்) * அலங்கு நிலை. † நீண் மரம்.

அச்சம் வரும் அகன்ற இடத்தே தோன்றிய, பேஎய் வெண் தேர்பெயல் செத்து ஓடி-வெள்ளிய பேய்த்தேரை மழையென்று கருதி ஓடி, தாஅம் பட்ட தனி முதிர் பெரு கலை - தாகம்பட்ட தனித்த முதிர்ந்த பெரிய கலைமான், புலம் பெயர்ந்து உறைதல் செல்லாது-அவ்விடத்தினின்றும் மீண்டு உறைதல் மாட்டாது, அலங்கு தலை விருந்தின் வெம் காட்டு - அப் பேய்த்தேர் அசையும் இடமாய புதிய வெவ்விய காட்டின்கண்ணே, வருந்தி வைகும்-வருத்தமுற்றுத் தங்கிக்கிடக்கும், அத்தம் நெல்லி தீம் சுவை திரள் காய் - பாலைநிலவழியில் உள்ள நெல்லியின் இனிய சுவை பொருந்திய திரண்ட காய்கள் ஆகிய, வட்ட கழங்கின் - வட்டமான கழங்குகளைக் கொண்டு, துய் தலை செம்முக மந்தி தாஅய் ஆடும் - பஞ்சு போன்ற மயிரையுடைய தலையினையும் சிவந்த முகத்தையுமுடைய மந்தி தாவி விளையாடும், நல்மர மருங்கின் மலையிறந்தோர் - நல்ல மரங்கள் பொருந்திய பக்கத்தையுடைய மலையினைக் கடந்து சென்றார் ஆதலின் ஆற்றகில்லேன்.

(முடிபு) தோழி! வாழி! முனியாது நல்குவர், ஒருவர் 'நட்பின இனியர் நம் தலைவர்' என நல்ல கூறினும், பிரியாக் காதலோடு உழையர் ஆகிய நமர், மலையிறந்தோர்; ஆதலின் ஆற்றகில்லேன் என்றாள்.)

(வி - ரை.) முனியாது நல்குவர் என்றது, தோழியைப் பிறர் போற் கூறியதாகும். இனி அவர் நட்பின் இனியர், நல்குவர் என நீ முனியாது நல்ல கூறினும் என்றுரைத்தலுமாம். மறந்து-மறத்தலால். பேஎய்த் தேர் - வெண்டேர் எனவும்படும். தாகம் என்றது தாஅம் என விகாரமாயிற்று. புலம் - வேறு நற்புலம் என்றுமாம். அலங்குதலை-வருந்தற் கேதுவாகிய இடமுமாம்.

---

242. குறிஞ்சி

[தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி தலைமகட்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது.]

அரும்புமுதிர் வேங்கை அலங்கல் மென்சினைச்
சுரும்புவாய் திறந்த பொன்புரை நுண்தாது
மணிமருள் கலவத் துறைப்ப அணிமிக்கு
அவிர்பொறி மஞ்ஞை யாடுஞ் சோலைப்
பைந்தாட் செந்தினைக் கொடுங்குரல் வியன்புனம்
செந்தார்க் கிள்ளை நம்மொடு கடிந்தோன்
பண்புதர வந்தமை அறியாள் நுண்கேழ்
முறிபுரை யெழினலத் தென்மகள் துயர்மருங்கு
அறிதல் வேண்டுமெனப் பல்பிரப் பிரீஇ

அறியா வேலன் தரீஇ அன்னை
வெறியயர் வியன்களம் பொலிய ஏத்தி
மறியுயிர் வழங்கா அளவைச் சென்றியாம்
செலவரத் துணிந்த சேண்விளங்கு எல்வளை
நெகிழ்ந்த முன்கை நேரிறைப் பணைத்தோள்
நல்லெழில் அழிவில் தொல்கவின் பெறீஇய
முகிழ்த்துவரல் இளமுலை மூழ்கப் பல்லூழ்
முயங்கல் இயைவது மன்னோ தோழி
நறைகால் யாத்த *நளிர்முகைச் சிலம்பின்
பெருமலை விடரகம் நீடிய சிறியிலைச்
சாந்த மென்சினை தீண்டி மேவர
பிரசந் தூங்கு சேட்சிமை
வரையக வெற்பன் †மணந்த மார்பே.

—பேரி சாத்தனார்.

(சொ - ள்.) கஎ. தோழி—,

க—எ. அரும்பு முதிர் வேங்கை அலங்கல் மெல் சினை - அரும்புகள் முதிர்ந்த வேங்கைமரத்தின் அசையும் மெல்லிய கிளைகளில், சுரும்பு வாய் திறந்த பொன்புரை நுண் தாது - வண்டுகள் பூவின் வாயைத் திறத்தலால் பொன்னை யொத்த நுண்ணிய பொடிகள், மணி மருள் கலவத்து உறைப்ப - நீலமணியை யொத்த தோகையில் உதிர்ந்திட, அணி மிக்கு - அழகு மிகுந்து, அவிர் பொறி மஞ்ஞை ஆடும் சோலை - விளங்கும் பொறிகளையுடைய மயில் ஆடும் சோலையின் பக்கத்தே, பைந்தாள் செந்தினை கொடுங் குரல் - பசிய தாளினையுடைய சிவந்த தினையின் வளைந்த கதிர்களையுடைய, வியன் புனம் - பெரிய கொல்லையில் வரும், செந்தார்க்கிள்ளை நம்மொடு கடிந்தோன் - சிவந்த இரேகையையுடைய கிளிகளை நம்முடனிருந்து ஓட்டிய நம் தலைவனது, பண்பு தர வந்தமை அறியாள் - நல்லியல்புகள் தருதலால் வந்த வருத்தத்தை அறியாதவளாகி;

எ—கஉ. அன்னை - நம் அன்னை, நுண் கேழ் முறி புரை எழில் நலத்து என் மகள் - நுண்ணிய நிறம் பொருந்திய தளிரை யொத்த எழுச்சி வாய்ந்த அழகினையுடைய என் மகளது, துயர் மருங்கு அறிதல் வேண்டும் என - துயர்வந்த பரிசினை அறிதல் வேண்டும் என்று, பல் பிரப்பு இரீஇ - பல பிரப்பினைப் பலியாகவைத்து, அறியா வேலன் தரீஇ - உண்மை உணரமாட்டாத வேலனை அழைத்து, வெறி அயர் வியன் களம் பொலிய ஏத்தி - வெறியாடும் பெரிய களம் பொலிவுற

(பாடம்) * களிமுகை. † மலர்ந்த மார்பு.

மாறு தனித்து, மறி உயிர் வழங்கா அளவை - ஆட்டுக்குட்டியின் உயிரைப் பலியிடா முன்னரே;

கஉ—கு. செலவரத் தணிந்த-ஏறி இறங்கும் அளவில் எண்ணிச் சேர்த்த, சேண் விளங்கு எல்வளை - சேய்மைக்கண் சென்று விளங்கும் ஒளியினையுடைய வளை, நெகிழ்ந்த முன் கை - கழன்ற முன் கையும், நேர் இறை - நேரிய சந்தினையுடைய, பணை தோள் - பெரிய தோளும், நல் எழில் அழிவில் - நல்ல அழகு ஒழிவினின்றும் நீங்கி, தொல்கவின் பெறீஇய-பழைய அழகினைப் பெறுமாறு, யாம் சென்று-யாம் சென்று;

கஅ—உஉ. நறை கால் யாத்த நளிர் முழை சிலம்பின்-தேன் கூடு கள் நிரம்பிய குளிர்ந்த குகைகளையுடைய பக்க மலைகளைக் கொண்ட, பெருமலை விடர் அகம்-பெரிய மலையின் பிளப்புக்களிடத்தே, நீடிய சிறி இலை சாந்த மெல் சினை தீண்டி-நீண்டு வளர்ந்த சிறிய இலைகளையுடைய சந்தனமரத்தின் மெல்லிய கிளைகள் தீண்ட, மேலது பிரசம் தூங்கும் - மேலிடத்ததாகிய தேனிறால் தொங்கும், சேண் சிமை வரையக வெற்பன்-நெடிய உச்சியினையுடைய மூங்கிலைத் தன்னகத்தே கொண்ட மலை நாடனது, மணந்த மார்பு - முன்பு கூடிய மார்பினை;

ககூ—எ. முகிழ்த்து வரல் இள முலை மூழ்க - அரும்பிவருதலுடைய இளைய முலை மூழ்கிட, பல் ஊழ் முயங்கல் இயைவது-பலமுறை தழுவுதல் தக்கது.

(முடிபு) தோழி! (நமது இடும்பை) கிள்ளை நம்மொடு கடிந் தோன் பண்பு தர வந்தமை அறியாள், அன்னை துயர்மருங்கு அறிதல் வேண்டுமென வேலன் தரீஇ, பிரப்பு இரீஇ, களம் பொலிய ஏத்தி, மறி யுயிர் வழங்கா அளவை, யாம் சென்று வெற்பன் மணந்தமார்பு முலை மூழ்க முயங்கல் இயைவது.

(வி-ரை.) வாய் திறந்த-பூவின் வாயைத் திறந்த என விரித்துக் கொள்க. திறந்த என்னும் பெயரெச்சம் காரணப்பொருட்டு. கிள்ளை நம்மொடு கடிந்தோன் என்றது, எளியனாய் நம்முடனிருந்து கிளியை ஓட்டி உதவிபுரிந்த நன்மையாளன் என்றபடி. பண்பு தர வந்தது என்றது, அவனது உயர்ந்த குண வொழுக்கங்களால் தலைவிக்கு மெலிவுண்டாயிற்று என்று கூறும் வாயிலாகத் தலைவி அவனைக் காதலித்தது தகவுடையதே என்றும், அவனுடன் இடையறாது கூடியிருக்கப் பெறாமையால் மெலிவுறுகின்றாள் என்றும் தோழி கூறியபடியாம். இவ்வுண்மையை அறியாத அன்னை தன் மகளுற்ற மெலிவு அணங்கு முதலியவற்றால் உண்டாயதோ என ஐயுற்று, அதனை அறிந்து களைதற்கு வேலனை யழைத்து வெறியாட்டெடுத்து மறியைப் பலியிட முற்றுகின்றாளாகலின், அவள் அங்ஙனம் செய்தற்கு முன் நமது மேனி பழைய அழகினைப் பெறும்படி, தலைவனைப் பல்லூழ் முயங்கல் வேண்டுமென்று, தலைமகன் சிறைப்புறத்தினின்று கேட்பத், தோழி தலைமகட்குக் கூறினாளென்க. அதனைத் தலைமகன் கேட்டு விரைய வரைந்துகொள்வானாவ

தல் பயன். அறியா வேலன் என்றது உண்மையை அறியாமலே, எதனையும் தெய்வத்தால் வந்ததென்று கூறுபவன் என்றபடி. முன்கை, யும் பணைத்தோளும் தொல்கவின் பெறீஇய என்றுரைத்தாளேனும், மேனி தொல்கவின் பெறீஇய என்பது கருத்தாகக் கொள்க. 'பழைய கவின் பெற்றமையைக் காணின், அன்னை வெறியாட்டெடுத்தலை நிறுத் துவள் என்க.' செலவுற (௧௩) என்று பாடம் கொள்ளின் வளை கழலா வாறு என்றும், மலர்ந்த மார்பு என்பது பாடமாயின் பரந்த மார்பு என்றும் பொருள்கொள்க.

(உ-றை.) வேங்கை நுண்தாது கலவத்து உறைப்ப, மஞ்ஞை அணிமிக்கு ஆடும் என்றது, தலைவனது மார்பின் சாந்தம் நம் ஆகத்திற் பொருந்துமாறு முயங்குதல் கூடின், நாம் எழில் சிறந்து மகிழ்ச்சியுறு வேம் என்றவாறு. உயர்ந்த சந்தனத்தின் கிளை நீண்டத் தேனிறால் தொங்கும் என்றது, பல்லாற்றாலும் ஒப்புமையுடைய உயர்ந்த தலைவ னும் தலைவியும் கூடி இல்லறம் புரிதல் யாவர்க்கும் இன்பம் பயப்பதாம் என்றபடி.

---

243. பாலை

[தலைமகன் பிரிவின்கண் வற்புறுத்துந் தோழிக்குத் தலைமகள் ஆற்றேன் என்பதுபடச் சொல்லியது.]

அவரை ஆய்மலர் உதிரத் துவரின
வாங்குதுளைத் துகிரின் ஈங்கை பூப்ப
இறங்குபோ தவிழ்ந்த ஈர்ம்புதல் பகன்றை
கறங்குநுண் துவலையின் ஊருழை யணியப்
பெயல்நீர் புதுவரல் தவிரச் சினைநேர்பு
பீள்விரிந் திறைஞ்சிய பிறங்குகதிர்க் கழனி
நெல்லொலி பாசவல் துழைஇக் கல்லெனக்
கடிதுவந் திறுத்த கண்ணில் வாடை
நெடிதுவந் தனையென *நில்லா தேகிப்
பலபுலந் துறையுந் துணையில் வாழ்க்கை
நம்†வலத் தன்மை கூறி அவர்நிலை
‡அறியும் ஆயின் நன்றுமன் தில்ல
பனிவார் கண்ணே மாகி இனியது

(பாடம்) * நில்லா தேங்கி. † வலித்தன்மை.
‡ அறியுநமாயின்.

நமக்கே எவ்வம் ஆகின்று
அனைத்தால் தோழிநந் தொல்வினைப் பயனே.

—*கோடியூர்கிழார் மகனார் நெய்தற்றத்தனார்.

(சொ - ள்.) ௧௫. தோழி-,

௧—௯. அவரை ஆய் மலர் உதிர-அவரையின் அழகிய மலர் உதிரவும், துவரின வாங்குதுளை துகிரின்-சிவந்த வளைந்த துளையினையுடைய பவளம்போல, ஈங்கை பூப்ப - இண்டையானது பூக்கவும், இறங்கு போது அவிழ்ந்த ஈர் புதல் பகன்றை-ஞாயிறு தாழும்பொழுது விரிந்த குளிர்ந்த புதலாகிய பகன்றை, கறங்கு நுண் துவலையின் ஊர் உழை அணிய - ஒலிக்கும் வாடையுடன் வரும் நுண்ணிய மழைத்துளியால் ஊரின் அருகே அழகுபெற மலரவும், பெயல் நீர் புது வரல் தவிர - மழையாகிய நீர் புதுவதாக வருதல் ஒழியவும், சினை நேர்பு பீள் விரிந்து இறைஞ்சிய - கிளைத்தல் பொருந்திக் கருவிரிந்து எழுந்து வளைந்த, பிறங்கு கதிர் கழனி நெல் ஒலி பசு அவல் துழைஇ-விளங்கும் கதிர்களையுடைய வயலின் நெல் ஒலி செய்யும் பசிய பள்ளங்களைத் துழாவி, கல் என கடிது வந்து இறுத்த கண் இல் வாடை-கல்லென்ற ஒலியுடன் விரைந்து வந்து தங்கிய இரக்கமற்ற வாடையானது, நில்லாது ஏகி - தாழ்க்காது தலைவரிடத்தே விரைந்து சென்று, நெடிது வந்தனை என - நீ வந்து நெடுங்காலம் தாழ்த்தனை என்று;

௧௦—௨. பல புலந்து உறையும் துணை இல் வாழ்க்கை-பலவற்றையும் வெறுத்து உறையும் துணைவருடன் கூடியிராத வாழ்க்கையினையுடைய, நம் வலத்தன்மை கூறி - நமது வலித்தன்மையைக் கூறி, அவர் நிலை அறியும் ஆயின் நன்று மன் - அவர் தம் நிலையினைத் தேருமாயின் பெரிதும் நன்றாகும்;

௧௨—௫. இனி அது-இப்பொழுது அவ் வாடையானது, பனி வார் கண்ணேம் ஆகி - நாம் நீர் ஒழுகும் கண்களையுடையேம் ஆக, நமக்கே எவ்வம் ஆகின்று-நமக்கே துன்பம் தருவதாக ஆகின்றது, நம் தொல்வினைப் பயன் அனைத்து - நமது பழைய தீவினையின் பயன் அத்தன்மைத்துப் போலும்.

(முடிபு) தோழி! வாடை நில்லாது தலைவரிடத்தே ஏகி, நீ நெடிது வந்தனை யெனக் கூறி, பல்புலந்து உறையும் துணையில் வாழ்க்கை நம் வலத்தன்மை கூறி, அவர் நிலை அறியுமாயின் நன்று; இனி அது, பனிவார் கண்ணேம் ஆக, நமக்கே எவ்வம் ஆகின்று; நம் தொல்வினைப்பயன் அனைத்து.

உதிர, பூப்ப, அணிய, தவிர, துழைஇ, கல்லென இறுத்த வாடை என்க.

---

*குடிக்கிழார் மகனார்.

(வி - ரை.) முன்னரே, தலைவனைப் பிரிந்து வருந்தும் நம்பாற் சிறிதும் இரக்கமின்றி, வாடை நம்மை மேலும் வருத்துகின்றது என்பாள், 'கண்ணில் வாடை' என்றாள். கண் - கண்ணோட்டம், இரக்கம்; அது வரக் கடவதாகிய காலத்திலும் முன்னரே நம்மை வருத்துதற் பொருட்டு வந்து நிலைபெற்றுளது என்பாள், 'கடிது வந்திறுத்த' என்றாள். வலத் தன்மையாவது, இன்னலைப் பொறுத்து உயிர் தாங்கியிருக்கும் வலித்தன்மையாகும். அவர் நிலை அறியுமாயின் நன்றுமன் என்றது, நம்மிடத்தே தங்கி இன்னல் விளைக்கும் இவ்வாடை, தலைவர் உறையுமிடத்தும் இருப்பதாயின் அவர் அதற்கு ஆற்றாது வருவர் என்னும் கருத்திற்று. அன்றி, வாடையானது தலைவர்பால் தூதாகச் சென்று அவரைப் பிரிந்து நாம் எய்தும் துன்பநிலையினை அவர்க்கு உரைத்து அவர் கருத்தினை அறிந்துவந்து உரைக்குமாயின் நன்று என்று உரைத்தலுமாம். தில்ல - இடைச்சொல்: ஈறு திரிந்தது. ஆகி - ஆக எனத் திரிக்க.

---

244. முல்லை

[வினைமுற்றிய தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.]

*பசைபடு பச்சை நெய்தோய்த் தன்ன
சேயுயர் சினைய மாச்சிறைப் பறவை
பகலுறை முதுமரம் புலம்பப் போகி
முகைவாய் திறந்த நகைவாய் முல்லை
கடிமகள் கதுப்பின் நாறிக் கொடிமிசை
வண்டினந் தவிர்க்குந் தண்பதக் காலை
வரினும் வாரா ராயினும் ஆண்டவர்க்கு
இனிதுகொல் வாழி தோழி யெனத்தன்
பல்லிதழ் மழைக்கண் நல்லகஞ் சிவப்ப
அருந்துய †ருடையள் அவளென விரும்பிப்
பாணன் வந்தனன் தூதே நீயும்
புல்லார் புரவி வல்விரைந்து பூட்டி
‡நெடுந்தேர் ஊர்மதி வலவ
முடிந்தன்று அம்மநாம் முன்னிய வினையே.

—மதுரை....மள்ளனார்.

(பாடம்) * பகைபடு பச்சை. † வருந்தினள் அவளென: ‡ நெடுந்தேர் ஏவு மதி.

(சொ - ள்.) ௧௪. வலவ - பாகனே;

௧—௬. பசை படு பச்சை நெய் தோய்த்தன்ன மா சிறை பறவை - பசை பொருந்திய தோலை நெய்யிற்றோய்த்தாற் போன்ற கரிய சிறகினையுடைய வாவல், பகல் உறை சேய் உயர் சினைய முதுமரம் புலம்பப் போகி - பகலில் தங்கியிருந்த மிக உயர்ந்த கிளைகளையுடைய முதிர்ந்த மரம் தனித்திடப்போக, கொடி மிசை முகைவாய் திறந்த நகைவாய் முல்லை - கொடியின்மீது அரும்புகள் வாய்திறந்து மலர்ந்த ஒளி பொருந்திய முல்லை, கடிமகள் கதுப்பின் நாறி - மணமகள் கூந்தலைப்போல மணந்து, வண்டினம் தவிர்க்கும் - வண்டின் தொகுதிகளைச் செல்லவொட்டாது தடுக்கும், தண்பதக் காலை - குளிர்ந்த செவ்வியையுடைய கார்காலத்தே;

௭—௧௩. தோழி-தோழியே! வரினும் வாரார் ஆயினும் - நம் தலைவர் ஈண்டு வரினும் வாராதிருப்பினும், ஆண்டு அவர்க்கு இனிது கொல் - அவர் சென்ற இடம் அவர்க்கு இனியதுபோலும், வாழி-, என - என்று கூறி, தன் பல் இதழ் மழைக் கண்-தனது பல இதழை யுடைய தாமரை மலர்போன்ற குளிர்ந்த கண்ணின், நல் அகம் சிவப்ப - நல்ல உள்ளிடமெல்லாம் சிவக்க, அரும் துயர் உடையள்-பொறுத்தற் கரிய துயரினை யுடையவளாயினள், அவள் என - நின் தலைவி என்று, பாணன் - பாணன், விரும்பித் தூது வந்தனன் - விருப்பமுற்றுத் தூதாக வந்தனன்;

௧௪. நாம் முன்னிய வினை முடிந்தன்று - நாம் எண்ணி முயன்ற வினையும் முடிவுற்றது;

௧௫—௬. நீயும் புல் ஆர் புரவி பூட்டி - நீயும் புல்லினைத் தின்ற குதிரையைப் பூட்டி, நெடு தேர் வல்விரைந்து ஊர்மதி-நீண்ட தேரினை மிக விரைந்து செலுத்துவாயாக.

(முடிபு 'தோழி, தண்பதக் காலை, நம் காதலர் வரினும் வாராராயினும் ஆண்டு அவர்க்கு இனிதுகொல்' என்று கூறித் தன் கண் சிவப்ப அருந்துயருடையாள் நின் தலைவி என்று பாணன் தூது வந்தனன்; வலவ! வினையும் முடிந்தன்று; நீயும் தேர் விரைந்து ஊர்மதி.

(வி - ரை.) போகி - போக எனத் திரிக்க. மாச்சிறைப் பறவை போக, முல்லை வண்டினம் தவிர்க்கும் தண் பதக் காலை என்க. போக என்பது நிகழ்வு உணர்த்திற்று. தண்பதக் காலை-கார்காலம். பறவை போதல் கார்காலத்து மாலை எனக் கொள்க. என்னை, 'கெடுநீ ராம் பல் அடைப்புறத் தன்ன, கொடுமென் சிறைய கூருகிர்ப் பறவை,...பக லுறை முதுமரம் புலம்பப் போகும், சிறு புன் மாலை' என வருதலின், 'வரினும் வாரா ராயினும் ஆண்டவர்க்கு, இனிது கொல்' என்றது, அவர் வந்து நமது துன்பத்தைப் போக்காதொழியினும், அவர் உறைபு மிடம் அவர்க்கு இன்பம் விளைப்பதாயின் நன்றும், அவ்வாறு

விளக்குங் கொல்லோ என்று தலைவி துயருற்று மொழிந்தாள் என்க. அதனைக் கூறிப் பாணன் தூது வந்தமையாலும், வினை முடிந்தமையாலும் விரைந்து தேரினை ஊர்மதி என்று தலைவன் கூறினான் என்க.

(மே - ள்.) *'வேந்து வினையியற்கை' என்னுஞ் சூத்திரத்து 'முடிந்தன்று அம்மசாம் முன்னிய வினையே' என்றலின், தானே குறுநில மன்னன் சென்றதாம் என்றனர், நச்.

---

245. பாலை

[பொருள் கடைக்கூட்டிய நெஞ்சினைக் கழறித் தலைமகன் சொல்லிச் செலவழுங்கியது.]

உயிரினுஞ் சிறந்த ஒண்பொருள் தருமார்
நன்றுபுரி காட்சியர் சென்றனர் அவரென
மனைவலித் தொழியும் மதுகைய ளாதல்
நீநன்கு அறிந்தனை யாயின் நீங்கி
மழைபெயல் மறந்த கழைதிரங்கு இயவில்
செல்சாத்து எறியும் †பண்பில் வாழ்க்கை
வல்வில் இளையர் தலைவர் எல்லுற
வரிகிளர் பணைத்தோள் வயிறணி திதலை
அரிய லாட்டியர் அல்குமனை வரைப்பின்
மகிழ்நொடை பெறாஅ ராகி நனைகவுள்
கான யானை வெண்கோடு சுட்டி
மன்றோடு புதல்வன் புன்தலை நீவும்
அருமுனைப் பாக்கத்து அல்கி வைகுற
நிழல்படக் கவின்ற நீளறை இலவத்து
அழலகைந் தன்ன அலங்குசினை யொண்பூக்
குழலிசைத் தும்பி யார்க்கும் ஆங்கண்
குறும்பொறை யுணங்குந் ததர்வெள் என்பு
கடுங்கால் ஒட்டகத் தல்குபசி தீர்க்கும்
கல்நெடுங் கவலைய கானம் நீந்தி
அம்மா அரிவை யொழியச்
சென்மோ நெஞ்சம் வாரலென் யானே.

—மதுரை மருதனிள நாகனார்.

---

* தொல். பொருள். அகத். ௩௨. (பாடம்) † அன்பில் வாழ்க்கை.

(சொ - ள்.) உக. நெஞ்சம் - நெஞ்சே!

க—ச. நன்று புரி காட்சியர் அவர் நன்மையினை விரும்பிய அறிவினையுடையராகிய தலைவர், உயிரினும் சிறந்த ஒண்பொருள் தருமார் - உயிரைக் காட்டினும் சிறந்த ஒள்ளிய பொருளைத் தருதல் வேண்டி, சென்றனர் என வலித்து - சென்றனர் என்று துணிந்து, மனை ஒழியும் மதுகையள் ஆதல் - மனையின்கண் தங்கியிருக்கும் வலியுடையள் ஆதலை, நீ நன்கு அறிந்தனையாயின் - நீ நன்றாக அறிந்தனையாயின், நீங்கி - இவளின் நீங்கி;

ரு—உக. மழை பெயல் மறந்த - மழை பெய்தலை மறந்தமையால், கழைதிரங்கு இயவில் - மூங்கில்கள் வற்றிய நெறியில், செல் சாத்து எறியும் - செல்லும் வணிகர் திரளை அலைத்திடும், பண்பு இல் வாழ்க்கை - அன்பில்லாத வாழ்க்கையினையுடைய, வல் வில் இளையர் தலைவர் - வலிய வில்லினைக்கொண்ட மறவர் தலைவர், எல் உற - இருள் வர, வரிநிறப் பணை தோள் திதலை அணிவயிறு - வரி விளங்கும் பருத்த தோளினையும் தேமல் அணிந்த வயிற்றினையுமுடைய, அரியலாட்டியர் அல்கு மனை வரைப்பின் - கள்விற்போர் பொருந்திய மனையகத்தே, மகிழ் நொடை பெறூஉர் ஆகி - கள்ளிற்கு உரிய விலைப்பொருள் எய்தப் பெறாராகி; கனை கவுள் கான யானை வெண்கோடு சுட்டி - மதத்தால் கனைந்த கன்னத்தினையுடைய யானையின் வெள்ளிய கொம்பினை எடுத்து வருதல் குறித்து, மன்று ஓடு புதல்வன் - மன்றின்கண் ஓடி விளையாடும் புதல்வனுடைய, புன் தலை நீவும் - புல்லிய தலையைத் தடவி ஏவும், அருமுனை பாக்கத்து அல்கி - அரிய போர்முனைகளையுடைய பாக்கத்திடத்தே தங்கி, வைகு உற - இருள் கழியும் விடியல் தோன்ற, நிழல்படக் கவின்ற நீள் அரை - நிழல்பொருந்த அழகுபெற்ற நீண்ட அரையினையுடைய, இலவத்து - இலவமரத்தினது, அலங்கு சினை - அசையுங் கிளைகளிலுள்ள, அழல் அகைந்தன்ன ஒள்பூ - எரி தளிர்த்தாலொத்த ஒள்ளிய பூக்களில், குழல் இசைத்தும்பி ஆர்க்கும் ஆங்கண் - குழல்போலும் இசையையுடைய வண்டுகள் ஒலிக்கும் இடமாகிய, குறும்பொறை உணங்கும் - பாறையிடத்தே காய்ந்து கிடக்கும், ததர் வெள் என்பு - சுள்ளிபோலும் வெள்ளிய எலும்புகள், கடும் கால் ஒட்டகத்து அல்கு பசி தீர்க்கும் - வேகம் வாய்ந்த கால்களையுடைய ஒட்டகத்தின் மிக்க பசியினைப் போக்கும், கல் நெடும் கவலைய கானம் நீந்தி - கற்கள் பொருந்திய நீண்ட கவர் வழிகளையுடைய காட்டினைக் கடந்து, அம் மா அரிவை ஒழியச் சென்மோ - அழகிய மாமை நிறத்தையுடைய நம் தலைவி தனித்திருக்க நீ செல்வாயாக, யான் வாரலென் - யான் அவளைப் பிரிந்து நின்னுடன் வாரேன்.

(முடிபு) நெஞ்சம்! மனை வலித்தொழியும் மதுகையாளாதல் நீ நன்கு அறிந்தனையாயின், நீங்கி, அருமுனைப் பாக்கத்து அல்கி, வைகுற, கானம் நீந்தி, அரிவை ஒழியச்சென்மோ; யான் வாரலென்.

(வி - ரை.) 'உயிரினுஞ் சிறந்த......சென்றனரவர்' என என்பது தலைவியின் கூற்றைத் தலைவன் கொண்டு கூறியது. தலைவன் பொருள்வயிற் பிரியின், தன் உயிர்க்கு ஊறுபாடுறும் அக்காரணத்தால் தலைவன் உயிர்க்கு ஏதமும் உண்டாகும் என்பது தோன்ற, 'உயிரினும் சிறந்த' எனப்பொதுப்படக் கூறினள். அறனும் இன்பமும் பயவாமையேயன்றி, உயிர்க்கும் ஊறு விளைக்கும் பொருளைத் தேடுதற்பொருட்டுச் செல்பவர் அதனை உயிரினும் சிறந்ததெனக் கருதினராவர் எனவும், அதனால் அவர் நன்றுபுரி காட்சியர் அல்லர் எனவும் கொள்வள் என்பதும், அந்நீரதாகிய நமது பிரிவினால் அவள் மனையின்கண் தனித்து ஆற்றியிருக்கும் வலிபுடையள் அல்லள் என்பதும் நீ அறிந்திலை என்பான், 'உயிரினும் சிறந்த ஒண்பொருள்' எனவும், 'நன்றுபுரி காட்சியர்' எனவும், 'மதுகையள்' எனவும் குறிப்புமொழியாற் கூறினன் என்க. கள் விற்கும் மகளிர் தம் மனையின்கண் வைத்து விற்பராகலின், 'அரியலாட்டியர் அல்கு மனை வரைப்பின்' என்றார். பெருஅராஅ என்றது, வேறு பொருள் பெருமையால் என்க. வெண்கோடு சுட்டிப் புதல்வன் புன்றலை நீவும் என்றது, தம் மனையின்கண்ணுள்ள யானையின் கோட்டினைக் கள் விலையாகத் தருதற்கு, அதனைக் கொணருமாறு புதல்வனை ஏவுவர் என்றபடி. தலையை நீவுதல் அவர்க்கு மனவெழுச்சியுண்டாக்குதற்பொருட்டாம். தலைவர் ஒவ்வொருவரும் தம் புதல்வன் புன்றலை நீவுவர் எனக் கொள்க. கானவர்கள் விலையாக யானைக்கோடு கொடுத்தலை, *"வேட்டுவர்.........மதனுடை வேழத்து வெண்கோடுகொண்டு, பொன்னுடை நியமத்துப் பிழிநொடை கொடுக்கும்", †"வேந்தர் யானை வெண்கோடுகொண்டு, கட்கொடி நுடங்கு மாவணம் புக்கு, அருங்கள் நொடைமை தீர்த்தபின் மகிழ்சிறந்து" என்பவற்றானறிக. அத்தகைய கொடிய பாக்கத்திலே, நீ இரவிலே தங்கி இருள் கழிந்தபின் கானம் நீந்திச் செல் என்றான். வெள்ளென்பு ஒட்டகத்து அல்குபசி தீர்க்கும் என்றது, அதற்கும் வேறு உணவு கிட்டாமை கூறியபடி. ஒட்டகம் பாலையிலும் விரைந்து செல்லும் இயல்பினதென்பது தோன்றக், 'கடுங்கால் ஒட்டகம்' என்றும், பலநாள் உணவுபெறாத பசியைப் பொறுத்திருக்கும் இயல்பினது என்பது தோன்ற, 'ஒட்டகத்து அல்குபசி' என்றும் கூறப்பட்டது.

---

246. மருதம்

[தோழி தலைமகற்கு வாயில் மறுத்தது.

பிணர்மோட்டு நந்தின் பேழ்வாய் ஏற்றை
கதிர்மூக்கு ஆரல் ‡கள்வனொ

* பதிற்று. ௩௰. † பதிற்று. ௪௨. (பாடம்) ‡ களவன்.

நெடுநீர்ப் பொய்கைத் துணையொடு புணரும்
மலிநீர் அகல்வயல் யாணர் ஊர
போதார் கூந்தல் நீவெய் யோளொடு
தாதார் காஞ்சித் தண்பொழில் அகல்யாறு
ஆடினை யென்ப நெருநை அலரே
*காய்சின மொய்ம்பிற் பெரும்பெயர் கரிகால்
ஆர்கலி நறவின் வெண்ணி வாயில்
சீர்கெழு மன்னர் மறலிய ஞாட்பின்
இமிழிசை முரசம் பொருகளத் தொழியப்
பதினொரு வேளிரொடு வேந்தர் சாய
மொய்வலி யறுத்த ஞான்றைத்
தொய்யா அழுந்தூர் ஆர்ப்பினும் பெரிதே.

—பரணர்.

(சொ - ள்.) ௧—௪. பிணர் மோட்டு நந்தின் பேழ்வாய் ஏற்றை - சருச்சரை பொருந்திய வயிற்றினையும் பிளந்த வாயினையுமுடைய ஆண் சங்கு, கதிர் மூக்கு ஆரல் கள்வனாக - கூரிய மூக்கினையுடைய ஆரல் மீன் கரி கூறுவோனாக, நெடு நீர்ப் பொய்கை - ஆழ்ந்த நீரையுடைய பொய்கையில், துணையொடு புணரும் - பெண்சங்கினொடு மணம் புணரும், மலி நீர் அகல் வயல் யாணர் ஊர - நீர் நிறைந்த அகன்ற வயல்களையுடைய புது வருவாய் மிக்க ஊரனே!

௫—௭. போது ஆர் கூந்தல் நீ வெய்யோளொடு - பூக்கள் நிறைந்த கூந்தலையுடைய நின்னால் விரும்பப்பெற்ற பரத்தையொடு, தாது ஆர் காஞ்சித் தண் பொழில் அகல் யாறு - பூந்துகள் நிறைந்த குளிர்ந்த காஞ்சி மரச்சோலை சூழ்ந்த அகன்ற ஆற்றின்கண்ணே நெருநை ஆடினை என்ப - நேற்று நீர்விளையாட்டயர்ந்தனையெனப் பலரும் கூறாநிற்பர்;

௭—௧௪. அலரே - அதனாலெழுந்த அலர், காய் சின மொய்ம்பின் - மிக்க சினமும் வலியுமுடைய, பெரும் பெயர்க் கரிகால் - பெரிய புகழினைக்கொண்ட கரிகால் வளவன், ஆர்கலி நறவின் வெண்ணி வாயில் - ஆரவார மிக்க கள் வளமுடைய வெண்ணிவாயில் என்னுமிடத்தே, சீர்கெழு மன்னர் மலிய ஞாட்பில் - சிறப்புவாய்ந்த பகையரசர் மாறுபட்டெழுந்த போரின்கண், இமிழ் இசை முரசம் பொருகளத்து ஒழிய - மிக்க ஓசையையுடைய வீர முரசம் போர்க்களத்தே ஒழிந்து கிடக்க, பதினொரு வேளிரொடு வேந்தர் சாய - வேளிர் பதினொருவருடன் இரு பெரு வேந்தரும் நிலைகெட, மொய் வலி அறுத்த ஞான்றை - அவர்தம் மிக்க வலியைக் கெடுத்த நாளில், தொய்யா அழுந்தூர் ஆர்ப்பினும் -

(பாடம்) * காய்சின முன்பின்.

அழுந்தூர்க்கண் எழுந்த குறையாத ஆரவாரத்தினும், பெரிது - பெரிதாயது.

(முடிபு) யாணர் ஊர! நெருநை நீ வெய்யோளொடு காஞ்சித் தண்பொழில் அகல் யாறு ஆடினை என்ப; அலர் பெரும்பெயர்க் கரிகால் வளவன், வெண்ணி வாயிலின்கண், ஞாட்பில், முரசம் பொருகளத்தொழிய வேளிரொடு வேந்தர் சாய அவர்தம் மொய்வலி அறுத்த ஞான்றை, அழுந்தூரிலெழுந்த ஆர்ப்பினும் பெரிது.

(வி - ரை.) கள்வன் - கரி கூறுபவன்; பிறர் அறிய வெளிப்படுத்துபவன் என்றபடி. இச்சொல்லின் உருவம் களவன் என்றும் காணப்படுகின்றது. பொழிலிலும் யாற்றிலும் விளையாடினையென்ப என்றுரைத்தலுமாம். கரிகால் - கரிகால் வளவன். வேளிர் குறுநில மன்னராகலின், *பதினொரு வேளிர் என்றது. வேளிரும் வேந்தருமாகிய இருதிறத்தார்க்கும் பொது. வேந்தர் என்றது, சேர பாண்டியரை. கெடாத அழுந்தூர் என்றலுமாம். நெருநை ஆடினை, அலர் அழுந்தூர் ஆர்ப்பினும் பெரிது என்றது, அவ்வலர் விரைந்து பரவுதலை உணர்த்தியபடி.

(உ - றை.) நந்தின் ஏற்றை ஆரல் கள்வனைத் துணையொடு புணரும் என்றது, நீ அலர் கூறுவோர் அறியும்படி நினக்குத் துணையாகிய பரத்தையொடு கூடி விளையாடினை என்றபடி.

(மே - ள்.) ''ஆற்றலொடு புணர்ந்த' என்னுஞ் சூத்திரத்து, ஏற்றை என வருதற்கு, 'பிணர்மோட்டு நந்தின் பேழ்வாய் ஏற்றை' என்பதனை எடுத்துக் காட்டினர், பேரா.

---

247. பாலை

[தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட தலைமகளது வேறுபாடு கண்டு வேறுபட்ட தோழிக்குத் தலைமகள் சொல்லியது.]

மண்ணா முத்தம் ஒழுக்கிய வனமுலை
நன்மாண் ஆகம் புலம்பத் துறந்தோர்
அருளிலர் வாழி தோழி பொருள்புரிந்து
இருங்கிளை எண்கின் அழல்வாய் ஏற்றை
டு கருங்கோட்டு இருப்பை வெண்பூ முனையின்
பெருஞ்செம் புற்றின் இருந்தலை யிடக்கும்
அரிய கானம் என்னார் பலகபட
முனைபாழ் பட்ட ஆங்கண் நாட்பார்த்துக்

* தொல். மரபு. சுக.

கொலைவல் யானை சுரங்கடி கொள்ளும்
ஊறுபடு கவலைய ஆறுபல நீந்திப்
படுமுடை நசைஇய பறைநெடுங் கழுத்திற்
பாறுகிளை சேக்குஞ் சேட்சிமைக்
கோடுயர் பிறங்கல் மலையிறந் தோரே.

—*மதுரை மருதங்கிழார் மகனார் பெருங்கண்ணனார்.

(சொ - ள்.) ௧. தோழி-, வாழி-,

௬—௧௩. பொருள் புரிந்து-பொருளை விரும்பி, இரு கிளை எண்கின் அழல் வாய் ஏற்றை-பெரிய சுற்றத்தினையுடைய வெப்பம் பொருந்திய வாயினையுடைய ஆண் கரடி, கரு கோட்டு இருப்பை வெண் பூ முனையின் - கரிய கிளைகளையுடைய இருப்பை மரத்தின் வெள்ளிய பூவினை வெறுத்தால், பெரு செம் புற்றின் இரு தலை இடக்கும்-பெரிய செம்மண் புற்றினது பெரிய உச்சியினைப் பெயர்த்திடும், அரியகானம் என்னார் - செல்லுதற்கு அரிய கானம் என்று நினையாராய், பகைபட முனை பாழ்பட்ட ஆங்கண் - மாறுகொண்டு போர்செய்தலால் ஊர் பாழாகிய அவ்விடத்தே, ஆள் பார்த்து கொலைவல் யானை சுரம் கடி கொள்ளும் - ஆட்களின் வருகையை எதிர்நோக்கிக் கொல்லுதல் வல்ல யானை சுரநெறியைக் காவல்கொண்டிருத்தலின், ஊறுபடு கவலைய ஆறு பல நீந்தி - இடையூறு மிக்க கவர்த்தனவாகிய பல நெறிகளையும் கடந்து, படுமுடை நசைஇய பறை நெடு கழுத்தின் - மிக்க புலால்நாற்றத்தினை விரும்பிச்செல்லும் பறத்தலையுடைய நீண்ட கழுத்தினையுடைய, பாறு கிளை சேக்கும்-பருந்து மரக்கிளைகளிற் றங்கியிருக்கும், சேண் சிமை கோடு உயர் பிறங்கல் மலை இறந்தோர் - நீண்ட உச்சியினையும் சிகரம் உயர்ந்த பக்க மலைகளையும் உடைய மலையைக் கடந்து சென்றோர் ஆகிய நம் தலைவர்;

௪—௫. மண்ணா முத்தம் ஒழுக்கிய வனமுலை-கழுவாத முத்தமாய கண்ணீர் ஒழுகவிடப்பெற்ற அழகிய முலையினையுடைய, நல் மாண் ஆகம் புலம்பத் துறந்தோர்-நல்ல மாண்புற்ற மார்பு தனித்து வருந்தத் துறந்து சென்றோர் ஆகலின், அருள் இலர் - அருள் அற்றவரே யாவர்; என் செய்வாம்.

(முடிபு) தோழி! வாழி! பொருள் புரிந்து, அரிய கானம் என்னார், ஆறு பல நீந்தி, மலையிறந்தோர் ஆகிய நம் தலைவர் ஆகம் புலம்பத் துறந்தோராகலின் அருள் இலர்.

(வி - ரை.) மண்ணுதல் - கழுவுதல். முத்தம் கழுவப்படுவதாகலின், மண்ணா முத்தம் ஒழுக்கிய வனமுலை என்புழி, மண்ணா முத்தம் என்றது கண்ணீர்த் துளிகளை; இது வெளிப்படை எனப்படும். பகை

(பாடம்) * மதுரை மருதங்கிழார் மகனார் வெண்ணாகனார்.

பட - மாறுபட்டுப் போர்செய்தலால் என்றபடி. முனை - வேட்டுவர் ஊர். சேட்சிமையையுடைய மலையெனவும், பிறங்கல் மலையெனவும் கூட்டுக.

---

248. குறிஞ்சி

[இரவுக்குறிச் சிறைப்புறமாகத் தலைமகட்குச் சொல்லுவாளாய்த் தலைமகன் கேட்பத் தோழி சொல்லியது.]

நகைநீ கேளாய் தோழி அல்கல்
வயநாய் எறிந்து வன்பறழ் தழீஇ
இளையர் எய்துதன் *மடக்கிக் கிளையொடு
நான்முலைப் பிணவல் சொலியக் கானொழிந்து
அரும்புழை முடுக்கர் ஆட்குறித்து நின்ற
தறுகட் பன்றி நோக்கிக் கானவன்
குறுகினன் தொடுத்த கூர்வாய்ப் பகழி
படைசெலன் முன்பில்தன் படைசெலச் செல்லாது
அருவழி விலக்குமெம் பெருவிறல் போன்மென
எய்யாது பெயருங் குன்ற நாடன்
செறியரில் துடக்கலிற் பரீஇப் புரியவிழ்ந்து
ஏந்துகுவவு மொய்ம்பிற் பூச்சோர் மாலை
ஏற்றமில் கயிற்றின் எழில்வந்து துயல்வர
இல்வந்து நிற்றோற் கண்டனள் அன்னை
வல்லே யென்முகம் நோக்கி
நல்லை மன்னென நகூஉப்பெயர்ந் தோளே.

—கபிலர்.

(சொ - ள்.) க. தோழி-, அல்கல் நகை நீ கேளாய்-(நேற்று) இரவு நிகழ்ந்த நகைக்கிடனாய செய்தியொன்றைக் கேட்பாயாக;

உ—கப. வய நாய் எறிந்து-வலிய வேட்டமாடும் நாயைக்கடித்து விலக்கி, இளையர் எய்துதல் மடக்கி-வேட்டுவர் நெருங்குதலைத் தடுத்து, வன்பறழ் தழீஇ-வலியமைந்த குட்டிகளை அணைத்துக்கொண்டு, கிளையொடு நான்முலைப் பிணவல் சொலிய - தொங்கும் முலையினையுடைய பெண்பன்றி கிளையுடன் பெயர, கான் ஒழிந்து - காட்டினின்றும் வெளிவந்து, அரும்புழை முடுக்கர் - அரிய வாயிலாய முடுக்கிலே, ஆள் குறித்து நின்ற - வேட்டம் செய்யும் ஆட்களை எதிர்நோக்கி நின்ற,

---

(பாடம்) * மடக்கிளையோடு.

தறுகண் பன்றி - அஞ்சாமையையுடைய பன்றியினை, கானவன் - வேட்டுவன், குறுகினன் நோக்கி - அணிமையிற் சென்று நோக்கி, தொடுத்த கூர்வாய் பகழி - தன் வில்லிற்கோத்த கூரிய முனையையுடைய அம்பினை, மடை செலல் முன்பின் தன் படை செல - மடுத்தல் அமைந்த வலியையுடைய தன் படை இரியவும், செல்லாது - தான் பெயராது நின்று, அரு வழி விலக்கும் - பகைவர் வரும் அரிய வழியில் அவரைத் தடுத்து நிற்கும், எம் பெரு விறல் போன்ம் என - எம்முடைய பெரிய வல்லாளனைப் போலும் இது வென (வியந்து), எய்யாது பெயரும் குன்றநாடன் - அப் பன்றியின்மேல் எய்யாது மீளும் இடமாய மலை பொருந்திய நாட்டினையுடைய நம் தலைவன் ஆகிய;

கக—ச. செறி அரில் துடக்கலின் - நெருங்கிய தூறுகள் பற்றி யிழுத்தலால், பரீஇ புரி அவிழ்ந்து - அறுபட்டுப் புரிகள் அவிழ்ந்து வீழ்தலின், ஏந்து குவவு மொய்ம்பில் - உயர்ந்து திரண்ட தோளிடத்தே, பூ சோர் மாலை - பூக்கள் உதிரப்பெறும் மாலையானது, ஏற்று இமில் கயிற்றின் எழில் வந்து துயல்வர - எருதின் திமிலின்கட் கிடக்கும் கயிற்றைப்போன்று அழகு பெற அசைந்திட, இல் வந்து நின்றோன் - நம் இல்லின்கண் வந்து நின்றவனை;

கச—கு. அன்னை கண்டனள் - நம் அன்னை கண்டனளாகி, வல்லே என் முகம் நோக்கி - விரைய என முகத்தினைப்பார்த்து, நல்லை மன் என - நீ மிகவும் நல்லவள் என்று, நகூஉ பெயர்ந்தோள் - நகா நின்று புறம் போயினள், என் செய்வாம்.

(முடிபு) தோழி! அல்கல் நகை நீ கேளாய்; கானவன் தறுகட் பன்றியை நோக்கி எம் பெருவிறல் போன்மெனப் பகழி எய்யாது பெயரும் குன்ற நாடன் இல் வந்து நின்றோனைக் கண்டனளாகி, அன்னை என்முகம் நோக்கி நல்லை மன்னென நகூஉப் பெயர்ந்தோள்.

(வி - ரை.) வயமாய் எறிந்து இளையர் எய்துதலை மடக்கிக் கான் ஒழிந்து ஆட்குறித்து நின்ற பன்றி என்க. பன்றியை நோக்கிய கானவன் அதனது தறுகண்மையை வியந்து, தான் வில்நாணிற் றொடுத்த அம்பினை அதன்மீது எய்யாது அவ்விடத்து நின்று பெயர்வான் என்க. தன் படை செலச் செல்லாது அருவழி விலக்கும் என்றது, *"வருவிசைப் புனலைக் கற்சிறைபோல, ஒருவன் தாங்கிய பெருமை' என்னும் வஞ்சித் திணையின் துறைப்பொருள் அமைந்தது. மொய்ம்பிற்கு ஏற்றின் இமிலும், பூச்சோர் மாலைக்குக் கயிறும் உவமையாம். இல் வந்து நின்றோன் என்பதனால் இரவுக்குறி வந்து நின்றான் என்பது பெற்றாம். அன்னை நின்றோனைக் கண்டு என் முகம் நோக்கி நல்லைமன் எனக் கூறி நக்குச் சென்றாள் என்றது, அவன் வருகைக்கு யான் வாயிலாதல் கருதித் தீங்குடையை யென இழித்துக்கூறி வெகுண்டு சென்றாள் என்றபடியாம். நல்லைமன் என்றது குறிப்பு

* தொல். புறத், அ.

மொழி. நச்சினார்க்கினியரும் பேராசிரியரும் இச் செய்யுளைத் தலைவி கூற்றாகக் கொண்டனர்.

(உ - றை.) பன்றியானது தனது பிணவல் முதலியவற்றிற்கு உண்டாய வறுபாட்டை நீக்கிக் காத்து நின்றது என்பது, தலைவன் இற் செறித்தலால் தலைவிக்கு உண்டாகும் ஏதத்தை நீக்கிக் காக்க வேண்டும் என்றபடி.

(மே - ள்.) *'வரைவிடை வைத்த காலத்து வருந்தினும்' என்னுஞ் சூத்திரத்தே, தலைவி கூற்றிற்கு இச் செய்யுளை எடுத்துக் காட்டி, இது வந்தோன் செவிலியை எதிர்ந்தழிக் கூறியது என்றனர், நச்.

†'எள்ளல் இளமை' என்னுஞ் சூத்திரத்தே 'நகை நீ கேளாய் தோழி' என்பது தன் பேதைமை பொருளாக நகை பிறந்தது; என்னை? தான் செய்த தவற்றிற்குத் தாய் தன்னை வெகுண்டது தனக்கு நகையாகக் கொண்டமையின் என்றும், 'கல்லை மன்னென நகூஉப் பெயர்ந்தோனே; என்பது பிறர் எள்ளியது பொருளாகத் தன்கண் நகை பிறந்தது; என்னை? தன் மகள் தன்னை மதியாது இகழ்ந்தாளென நக்கவாறு; இது வெகுளிப் பொருளாக நக்க தன்றோ வெனின், அது வீரர்க்கே உரித்தாகல்வேண்டும், இவள் அவளை வெகுண்டு தண்டம் செய்வாள் அல்லள் அதற்கே உவப்பின் அல்லது என்றும் கூறினர், பேரா.

---

249. பாலை

[தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட தலைமகளது வேறுபாடு கண்டு ஆற்றாளாய தோழிக்குத் தலைமகள் சொல்லியது.]

அம்ம வாழி தோழி பன்னாள்
இவ்வூர் அம்பல் எவனோ வள்வார்
விசிபிணித் தியாத்த அரிகோல் தெண்கிணை
இன்குரல் அகவுநர் இரப்பின் நாடொறும்
பொன்கோட்டுச் செறித்துப் பொலந்தார் பூட்டிச்
சாந்தம் புதைத்த ‡ஏந்துதளங் கெழிலியில்
ஏறுமுந் துறுத்துச் சால்பதங் குவைஇ
நெடுந்தேர் களிற்றொடு சுரக்குங் கொடும்பூட்
பல்வேல் முசுண்டை வேம்பி யன்னவென்
நல்லெழில் இளநலந் தொலையினும் நல்கார்

---

* தொல். களவியல். ௨௧. †தொல். மெய். ௪. (பாடம்) ‡ஏந்து தளங்கிமிலெழில்.

பல்பூங் கானத்து அல்குநிழல் அசைஇத்
தோகைத் தூவித் தொடைத்தார் மழவர்
நாகா வீழ்த்துத் திற்றி தின்ற
புலவுக்களந் துழைஇய துகள்வாய்க் கோடை
நீள்வரைச் சிலம்பின் இரைவேட் டெழுந்த
வாள்வரி வயப்புலி தீண்டிய விளிசெத்து
வேறுவேறு கவலைய ஆறுபரிந் தலறி
உழைமான் இனநிரை யோடுங்
கழைமாய் பிறங்கன் மலையிறந் தோரே.

— நக்கீரனார்.

(சொ - ள்.) க. தோழி-, வாழி-, அம்ம - நான் கூறுவதனைக் கேட்பாயாக;

கக—ச. தோகை தூவி தொடை தார் மழவர் - மயிலின் சிறகாற் றொடுத்தலையுடைய மாலையை அணிந்த மழவர், பல்பூ கானத்து அல்கு நிழல் அசைஇ - பல பூக்களையுடைய காட்டில் சுருங்கிய நிழலில் தங்கி, நாகு ஆ வீழ்த்து - இளைய பசுவினைக் கொன்று, திற்றி தின்ற - அதன் ஊனைத் தின்ற இடமாய, புலவு களம் துழைஇய - புலால் வீசும் இடத்தினைத் துழாவிய, துகள்வாய்க் கோடை - புழுதியைத் தன்னிடத்தே கொண்ட மேல் காற்றின் ஒலியினை;

கரு—க. உழை மான் இனம் நிரை - ஆண்மானுடன் கூடிய கூட்டமாய மானினம், நீள் வரைச் சிலம்பின் இரை வேட்டு எழுந்த - நீண்ட மூங்கிலையுடைய பக்க மலையில் இரையினைக் கொள்ளுதற்கு விரும்பி எழுந்த, வாள் வரி வய புலி தீண்டிய விளி செத்து - ஒளி பொருந்திய வரிகளையுடைய வலிய புலி (மானைப்) பற்றியதால் எழும் ஒலியாகக் கருதி, வேறு வேறு கவலைய ஆறு பரிந்து அலறி ஓடும் - வேறு வேறாய கவர்த்த நெறிகளில் வருந்தி அலறி ஓடாநிற்கும், கழை மாய் பிறங்கல் மலை இறந்தோர் - மூங்கிலால் மறையும் உயர்ந்த தோற்றமுடைய மலையைக் கடந்து சென்ற நம் தலைவர்;

உ—கo. வள் வார் விசி பிணித்து யாத்த - வளம் பொருந்திய வாரினால் இறுகப் பிணித்துக் கட்டிய, அரிகோல் தெண் கிணை இன் குரல் அகவுநர் - இழுத்து அடிக்கும் கோலினையுடைய தெளிந்த ஒலியினதாகிய கிணைப் பறையின் இனிய குரலை எழுப்பிப் பாடும் பாணர், இரப்பின் - இரந்து வேண்டின், நாடொறும் - நாள்தோறும், பொன் கோட்டுச் செறித்து - பொற் பூணினைக் கொம்பில் நெருங்கச் சேர்த்து, பொலம் தார் பூட்டி - பொன்னரி மாலையினைக் கழுத்தில் அணிவித்து, சாந்தம் புதைத்த ஏறு தளங்கு எழில் இமில் - சந்தனம் பூசிய

உயர்ந்து அசையும் அழகிய திமிலினையுடைய, ஏறு முந்துறுத்து - ஏற்றினை முன்னர் நிறுத்தி, சால்பதம் குவைஇ - மிக்க உணவினைக் குவித்து, நெடு தேர் களிற்றொடு சுரக்கும் - நீண்ட தேரினை யானையுடன் சேர அளிக்கும், கொடும் பூண் பல்வேல் முசுண்டை - வளைந்த பூணையும் பல வேற்படையையுமுடைய முசுண்டை என்பானது, வேம்பி அன்ன - வேம்பி எனும் ஊர்போன்ற, என் நல் எழில் இளநலம் தொலையினும் - எனது நல்ல அழகிய இளமைச்செவ்வி தொலைந்த வழியும், நல்கார் - வந்து அருள் செய்கின்றிலர்; (அங்ஙனமாகவும்);

௧—௨. பல் நாள் இ ஊர் அம்பல் எவனோ - பல நாளாக இவ் ஊரார் செய்யும் அம்பல் என்னையோ?

(முடிபு) தோழி! வாழி! மலையிறந்தோர், முசுண்டை என்பானது வேம்பி அன்ன என் நலம் தொலையினும் நல்கார்; (அங்ஙனமாகவும்) பன்னாள் இவ்வூர் அம்பல் எவனோ?

(வி - ரை.) அரிகோல் - அரித்தெழும் ஓசையைச் செய்யும் கோல், பொன் - பொன்னாற் செய்த குப்பிக்கு ஆகுபெயர். சால் பதம் குவைஇ ஏறு முந்துறுத்து நெடுந்தேர் களிற்றொடு சுரக்கும் என மாறுக. கோடை - மேல் காற்று; ஈண்டு அதன் ஒலிக்கு ஆயிற்று. வயப்புலி தீண்டிய - வயப்புலி மானைத் தீண்டிய என ஒரு சொல் வருவித்துரைக்க. தீண்டிய என்னும் பெயரெச்சம் காரியப் பெயர் கொண்டது.

(உ - றை.) கோடையானது புலால் நாறும் களத்தைத் தழாவிப் புழுதியைத் தன்னிடத்துக் கொண்டதென்பது, அம்பற் பெண்டிர் பிறர் பழியாயவற்றையே ஆராய்ந்து தங்கண் கொள்ளுகின்றனர் என்றபடி. கோடையின் ஒலியை வயப்புலி மானைத் தீண்டிய ஒலியாகக் கருதி மானினம் அஞ்சுமென்றது, தலைவனுலாய மெய்வேறுபாட்டைத் தெய்வத்தால் ஆயதென்று அன்னை அஞ்சுகின்றாள் என்றபடி.

---

250. நெய்தல்

[தலைமகற்குக் குறைநேர்ந்த தோழி தலைமகட்குக் குறைநயப்பக் கூறியது.]

வென்கொல் வாழி தோழி மயங்குபிசிர்
மல்குதிரை யுழந்த ஒல்குநிலைப் புன்னை
வண்டிமிர் இணர நுண்டாது வரிப்ப
மணங்கமழ் இளமணல் எக்கர்க் கான்வரக்
கணங்கொள் ஆயமொடு புணர்ந்துவிளை யாடக்

கொடுஞ்சி நெடுந்தேர் இளையரொடு நீக்கித்
தாரன் கண்ணியன் சேரவந் தொருவன்
வரிமனை புகழ்ந்த கிளவியன் யாவதும்
மறுமொழி பெறாஅன் பெயர்ந்தனன் அதற்கொண்டு
அரும்படர் எவ்வமொடு பெருந்தோள் சாஅய்
அவ்வலைப் பரதவர் கானலஞ் சிறுகுடி
வெவ்வாய்ப் பெண்டிர் கவ்வையில் கலங்கி
இறைவளை நெகிழ்ந்த நம்மொடு
துறையுந் துஞ்சாது கங்கு லானே.

—செல்லூர்கிழார் மகனார் பெரும்பூதங்கொற்றனார்.

(சொ - ள்.) க—ரு. தோழி—, வாழி—, மயங்கு பிசிர் மல்கு திரை உழந்த - நெருங்கிய துளிகள் மிக்க அலைகளால் வருந்திய, ஒல்கு சினை புன்னை - அசையும் கிளையினையுடைய புன்னை மரத்தின், வண்டு இமிர் இணர நுண் தாது வரிப்ப - வண்டுகள் ஒலிக்கின்ற பூங்கொத்துக்களின் நுண்ணிய பூம்பொடிகள் உதிர்ந்து அழகு செய்ய, மணம் கமழ் இளமணல் எக்கர்-மணம் நாறும் மெத்தென்ற மணல் மேட்டில், காண்வர கணம் கொள் ஆயமொடு புணர்ந்து விளையாட - யாம் அழகு பொருந்தக் கூட்டம் கொண்ட ஆயத்தாரொடு கலந்து விளையாடாநிற்க (அப்பொழுது);

சு—கூ. கொடுஞ்சி நெடுந்தேர் இளையரொடு நீக்கி - மொட்டினையுடைய நீண்ட தேரினைத் தன் ஏவலாளரொடு நீக்கி நிறுத்தி, தாரன் கண்ணியன் - தாரினையும் கண்ணியையும் உடையன் ஆகி, சேரவந்து - அணுக வந்து, ஒருவன் - ஒரு தலைவன், வரி மனை புகழ்ந்த கிளவியன் - யாம் இயற்றிய வண்டல் மனையைப் பாராட்டிய சொல்லையுடையனாகி, யாவதும் மறுமொழி பெறாஅன் பெயர்ந்தனன் - யாதொன்றும் மறுமொழி பெறாது மீண்டு சென்றனன்;

கூ—கச. அதற்கொண்டு - அது முதல், அரும் படர் எவ்வமொடு - அரிய நினைவாலாய துன்பத்தால், பெரும் தோள் சாஅய் - பெரிய தோள் மெலிய, அ வலை பரதவர் கானல் அம் சிறுகுடி - அழகிய வலைகளையுடைய பரதவரது கடற்கரையிலுள்ள அழகிய சிற்றூரிலுள்ள, வெவ்வாய்ப் பெண்டிர் கவ்வையில் கலங்கி - கொடிய வாயினையுடைய பெண்டிர் தூற்றும் அலரால் உள்ளம் கலங்க, இறை வளை நெகிழ்ந்த நம்மொடு - முன்கையிடத்து வளை நெகிழப்பெற்ற நம்முடன், கங்குலான் - இராப்பொழுதிலே, துறையும் துஞ்சாது - கடற்றுறையும் துஞ்சுகின்றிலது;

க. எவன் கொல் - இதற்குக் காரணம் என்னையோ?

(முடிபு) தோழி! வாழி! நாம் இள மணல் எக்கரிலே ஆயமொடு புணர்ந்து விளையாட, ஒருவன் தேரினை இளையரோடு நீக்கி அணுக வந்து, வரிமனை புகழ்ந்த கிளவியனாய் மறுமொழி பெறாஅன் பெயர்ந்தனன்; அதற்கொண்டு பெருந்தோள் சாஅய், கவ்வையிற் கலங்கி, வளை நெகிழ்ந்த நம்மொடு கங்குலான் துறையும் துஞ்சாது; (இஃது) எவன் கொல்?

(வி - ரை.) மணம்-புன்னைப் பூவின் மணம். விளையாட என்னும் எச்சம், காலத்தையும் இடத்தையும் குறித்துநின்றது. தார், கண்ணி என்பவற்றின் பொருளைக் கடவுள்வாழ்த்துச் செய்யுளுரையிற் காண்க. 'வரிமனை புகழ்ந்த கிளவியன் யாவதும், மறுமொழி பெறாஅன் பெயர்ந்தனன்' என்றது, நம்பாலுள்ள அன்புமிகுதியால் நம் வாய்ச்சொல்லைக் கேட்க விரும்பி அவன் நம் வண்டல் மனையைப் புகழ்ந்தானாகவும், நாம் மறுமொழி யொன்றுங் கூறாது வன்கண்மை யுடையேம் ஆயினமையின், வாளா பெயர்ந்து சென்றனன் என்றபடி. அதற்கொண்டு எவ்வமொடு தோள் சாஅய்க் கவ்வையிற் கலங்கி இறை வளை நெகிழ்ந்த நம்மொடு என்றமையால், நாம் உற்ற நோய்க்குக் காரணம், நம் உள்ளம் அவன்கண்ணதாக நாம் அவனைப் பிரிந்திருத்தலேயாம் என்பதும், நம்மொடு கங்குலானே துறையும் துஞ்சாது என்றமையால், அவனைப் பிரிந்த வருத்தத்தால் நாம் இரவிலே துயிலின்றியே வருந்துகின்றேம் என்பதும் கூறினாளாம். துறையும் துஞ்சாது என்றது, இரவிலே துயிலின்றியே விழித்திருக்கும் தமக்கு அக் கடலொலி இடையறாது தோன்றி மிக வருத்துதலின், நம்மைப் போல் இக்கடலும் துஞ்சுகின்றிலதே; இஃதென்னை என்றும் கூறினாளாம். எனவே, நாம் உற்ற நோயும் வெவ்வாய்ப் பெண்டிர் கவ்வையும் ஒழிய வேண்டின், அப் பெருந்தகையின் குறையினை நயந்து எற்றுக்கோடல் வேண்டும் எனத் தோழி குறையயப்பக் கூறினாளாம் என்க. சாஅய், கலங்கி என்னும் எச்சங்களைச் சாஅய, கலங்க எனத் திரிக்க; திரியாது தோள் சாஅய், உள்ளங் கலங்கி, வளை நெகிழ்ந்த நம்மொடு எனச் சினைகளின் வினையை முதலொடு சார்த்தி யுரைத்தலுமாம்.

---

251. பாலை

[தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட தலைமகளது வேறுபாடு கண்டு தோழி சொல்லியது.]

தூதும் சென்றன தோளுஞ் செற்றும்
ஓதி யொண்ணுதல் பசலையும் மாயும்
வீங்கிறை நெகிழச் சாஅய்ச் செல்லலொடு
நாம்படர் கூரும் அருந்துயர் கேட்பின்

*நந்தன் வெறுக்கை யெய்தினும் மற்றவண்
தங்கலர் வாழி தோழி வெல்கொடித்
துனைகா லன்ன புனைதேர்க் கோசர்
தொன்மூ தாலத் தரும்பணைப் பொதியில்
இன்னிசை முரசங் கடிப்பிகுத் திரங்கத்
தெம்முனை சிதைத்த ஞான்றை மோகூர்
பணியா மையிற் பகைதலை வந்த
மாகெழு தானை வம்ப மோரியர்
புனைதேர் நேமி யுருளிய குறைத்த
இலங்குவெள் ளருவிய †அறைவா யும்பர்
மாசில் வெண்கோட்டு அண்ணல் யானை
வாயுள் தப்பிய அருங்கேழ் வயப்புலி
மாநிலம் நெளியக் ‡குத்திப் புகலொடு
காப்பில வைகுந் தேக்கமல் சோலை
நிரம்பா நீளிடைப் போகி
அரம்போழ் அவ்வளை நிலைநெகிழ்த் தோரே.

—மாமூலனார்.

(சொ - ள்.) ௪. தோழி—, வாழி—,

௧. தூதும் சென்றன - நாம் தலைவர்பாற் செலுத்திய தூதர்களும் சென்றனர்கள்;

௨—௪. வீங்கு இறை நெகிழச் சாஅய் - செறிந்த அணிகள் நெகிழ்ந்து விழ மெலிந்து, செல்லலொடு நாம் படர்கூரும் அருந்துயர் கேட்பின் - நாம் வருத்தத்துடன் நினைவு மிகும் அரிய துயரினை அத்தூதுவர் கூறக் கேட்பின்;

௯—௧௪. வெல் கொடி துனை கால் அன்ன புனை தேர்க் கோசர் - வெல்லும் கொடியினையுடைய விரையும் காற்றையொத்த அணி செயப்பெற்ற தேரினையுடைய கோசர் என்பார், தொல் முது ஆலத்து அரும் பணைப் பொதியில் - மிக்க தொன்மை வாய்ந்த ஆலமரத்தின் அரிய கிளைகளையுடைய மன்றத்தே, இன் இசை முரசம் கடிப்பு இகுத்து இரங்க - இனிய ஓசையையுடைய முரசம் குறுந்தடியால் அடிக்கப் பெற்று ஒலிக்க, தெவ்முனை சிதைத்த ஞான்றைப் - பகைவரது போர் முனையை அழித்தகாலத்தே, மோகூர் பணியாமையின் - மோகூர் என்பான் பணிந்து வாராமையின், பகை தலைவந்த மா கெழு தானை

(பாடம்) * நந்தர் வெறுக்கை. † வரைவா யும்பர். ‡ குத்திய புகலொடு.

வம்ப மோரியர்-அவன்பாற் பகை ஏறட்டுக் கொண்டவராகிய குதிரை கள் பொருந்திய சேனையினையுடைய புதிய மோரியர் என்பார், புனை தேர் நேமி உருளிய குறைத்த - புனையப்பெற்ற தேர் உருளை தடை யின்றிச் செல்லுதற்பொருட்டு உடைத்து வழியாக்கிய, இலங்கு வெள் அருவிய அறைவாய் உம்பர் - விளங்கும் வெள்ளிய அருவிகளையுடைய மலைநெறிக்கு அப்பாற்பட்ட;

கம-கூ. மாசு இல் வெண்கோட்டு அண்ணல் யானை-குற்றமற்ற வெள்ளிய கொம்பினையுடைய பெருமைவாய்ந்த யானையானது, வாயுள் தப்பிய அருங்கேழ் வய புலி - தன் வாயினின்றும் தப்பிய அரிய நிறத்தையுடைய வலிய புலியை, மாநிலம் நெளியக் குத்தி - பெரிய நிலம் குழியக் குத்திக்கொன்று, புகலொடு காப்பில வைகும் தேக்கு அமல் சோலை - செருக்குடன் பாதுகாவல் இன்றித் தங்கியிருக்கும் தேக்குமரங்கள் நிறைந்த காடாகிய, நிரம்பா நீள் இடைப்போகி - தொலையாத நீண்ட இடத்திலே சென்று;

உ0. அரம் போழ் அவ்வளை நிலை நெகிழ்த்தோர் - அரத்தால் அறுத்து இயற்றப்பட்ட அழகிய வளையினை நிலையினின்றும் நெகிழச் செய்தோராகிய நம் தலைவர்;

கு-சு. நந்தன் வெறுக்கை எய்தினும் - நந்தன் என்பான் தொகுத்து வைத்த செல்வத்தையே எய்துவதாயினும், மற்று அவண் தங்கலர் - இனி அங்குத் தங்கியிரார் (விரைந்து வந்துறுவார்);

க-உ. தோளும் செற்றும் - இனி நாம் தோளும் வளை செறியப் பெறவேம், ஓதி ஒள் நுதல் பசலையும் மாயும் - நம் கூந்தல் சூழ்ந்த ஒளி தங்கிய நெற்றியின்கண் உள்ள பசலையும் மறைந்தொழியும்.

(முடிபு) தோழி! வாழி! தூதும் சென்றன, நீளிடைப் போகி நிலைநெகிழ்த்தோராகியநம் தலைவர், நாம் படர் கூரும் அருந்துயர் கேட் பின் நந்தன் வெறுக்கை எய்தினும் அவண் தங்கலர்; அதனால் நாம் தோளும் செற்றும், நந்நுதற் பசலையும் மாயும்.

(வி - ரை.) செற்றும்-செறியப்பெறும் என்றபடி; வளை செறியப் பெறும் என விரித்துரைக்க. செல்லல் - உடற்றுன்பமும், படர் கூர் தல் - உளத்துன்பமும் ஆம். பாடலிபுரத்தை யாண்ட நந்த அரசர் களில் ஒருவன் மகாபதுமம் எனும் பேரெண் அளவு நிதியம் படைத்து அதனால் மகாபதும நந்தன் எனப் பெயர் சிறந்து விளங்கினனென்று வட நூல்களால் அறியப்படுதலின், அவனது செல்வத்தைக் குறித்து, 'நந்தன் வெறுக்கை எய்தினும்' என்றான்; நந்தன் வெறுக்கை போல் வதோர் செல்வத்தை எய்தினும் என்றலுமாம். மோகூர் - மோகூர்க்கு மன்னனாகிய பழையன்; ஆகுபெயர். *'மோகூர், வலம்படு குழூஉநிலை யதிர மண்டி' என்புழியும் ஆகுபெயராதல் காண்க. கோசர் என்பார்

* பதிற்று. சஉ.

பழையனுடைய மோகூரில் வஞ்சினம் கூறிப் பொருதனர் என்பது, *'பழையன் மோகூர் அவையகம் விளங்க, நான்மொழிக் கோசர் தோன்றி யன்ன' என்பதன் உரையால் அறியப்படும். மோகூர் மன்னன் கோசர்க்குப் பணியாமையினாலே கோசர்க்குத் துணையாய் வந்த மோரியர் என்க. மோரியர் தேர்நேமி உருளும்படி மலையை யறுத்து வழி செய்தமையை †'ஆய்கலம் தொலைந்த மேனியும்' என்னும் அகப்பாட்டின் உரையிற் காண்க. வாயுள் தப்பிய - வாயினின்றும் தப்பிய; உருபு மயக்கம்.

---

252. குறிஞ்சி

[தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழிக்குச் சொல்லுவாளாய்த் தலைமகள் சொல்லியது.]

இடம்படுபு அறியா வலம்படு வேட்டத்து
வாள்வரி நடுங்கப் புகல்வந்து ஆளி
உயர்நுதல் யானைப் புகர்முகத் தொற்றி
வெண்கோடு புய்க்குந் தண்கமழ் சோலைப்
பெருவரை யடுக்கத்து ஒருவேல் ஏந்தித்
தனியன் வருதல் அவனும் அஞ்சான்
பனிவார் கண்ணேன் ஆகி நோயட
எமியேன் இருந்தலை யானும் ஆற்றேன்
யாங்குச் செய்வாங்கொல் தோழி ஈங்கைத்
துய்யவிழ் பனிமலர் உதிர வீசித்
‡தொழின்மழை பொழிந்த பானாட் கங்குல்
எறிதிரைத் திவலை தூஉஞ் சிறுகோட்டுப்
பெருங்குளங் காவலன் போல
அருங்கடி அன்னையுந் துயின்மறந் தனளே.

—§ நக்கண்ணையார்.

(சொ - ள்.) ௧. தோழி—,

௧—௫. இடம் படுபு அறியா வலம்படு வேட்டத்து - தான் வீழ்த்தும் விலங்குகள் இடது பக்கத்தே வீழ்தலை அறியாத வெற்றி பொருந்திய வேட்டத்தினுடைய, வாள் வரி நடுங்க புகல்வந்து - புலி நடுங்கிட விருப்பங்கொண்டு (பாய்ந்து), ஆளி - ஆளியானது, உயர் நுதல் யானை

---

* மதுரைக். ௫௦௮-௯. † அகம். ௬௯. (பாடம்) ‡ தெழி மழை.
§ திண்பொற் கோழிக் காவிதி மகன் கண்ணனார்; நக்கணன்.

புகர் முகத்து ஒற்றி - உயர்ந்த நெற்றியினையுடைய யானையின் புள்ளி பொருந்திய முகத்தைத் தாக்கி, வெண்கோடு புய்க்கும் - அதன் வெள்ளிய தந்தத்தினைப் பறிக்கும் (இடமாய), தண் கமழ் சோலை பெருவரை அடுக்கத்து - தண்ணெனக் கமழும் சோலையினையுடைய பெரிய மலையின் சாரலின்கண்;

௫—௬. ஒரு வேல் ஏந்தி தனியன் வருதல் அவனும் அஞ்சான் - வேல் ஒன்றினையே கொண்டு தனியனாகி வருதலைத் தலைவனும் அஞ்சு கின்றிலன்;

௭—௮. பனி வார் கண்ணேன் ஆகி நோய் அட - நீர் ஒழுகும் கண்ணினேன் ஆகிப் பிரிதற்றுன்பம் வருத்த, எமியேன் இருத்தலை யானும் ஆற்றேன் - தனித்து இருத்தலை யானும் ஆற்றுகிலேன்;

௯—௧௪. அரு கடி அன்னையும் - கடிய காவல்கொண்ட எம் அன்னையும், ஈங்கை துய் அவிழ் பனி மலர் உதிர - இண்டையின் ஆர்க்கு விரிந்த குளிர்ந்த மலர் உதிருமாறு, வீசி தொழில் மழை பொழிந்த பானாள் கங்குல் - பெய்தற்றொழிலையுடைய மேகம் நீரினை வீசிச் சொரிந்த நடுநாள் இரவில், எறி திரை திவலை தூஉம் - வீசும் அலைகளின் துளிகள் பரக்கும், சிறு கோட்டுப் பெருங் குளம் காவலன் போல - சிறிய கரையினையுடைய பெரிய குளத்தைக் காத்தல் செய்பவன்போலக் (காவல் செய்து), துயில் மறந்தனள் - தூங்குதலை மறந்துவிட்டனள்; யாங்குச் செய்வாம் - யாம் என் செய்வாம்.

(முடிபு) தோழி! பெருவரை யடுக்கத்து அவனும் தனியன் வருதல் அஞ்சான்; யானும் நோயட எமியேன் இருத்தலை ஆற்றேன்; அருங் கடி அன்னையும் பெருங்குளம் காவலன்போலத் துயில் மறந்தனள்; யாங்குச் செய்வாம்.

(வி - ரை.) இடம்படுபு அறியா என்றமையால், புலி எப்பொழுதும் ஏனை விலங்குகளை வலப்பக்கத்தே வீழ்த்தி உண்ணும் இயல்பினது என்பது பெற்றாம். முன்னர், புலியின் சிறப்புக் கூறினமையால், வான் வரியும் என்னும் சிறப்பும்மை தொக்கதெனக் கோடலுமாம். புகல்வல் - விரும்புதல். ஆளி - யாளி. சிங்கம் புய்க்கும் அடுக்கம் எனவும் சோலை அடுக்கம் எனவும் கூட்டுக. புய்க்கும் என்னும் பெயரெச்சம் இடப்பெயர் கொண்டது: எமியேன் - தமியேன். தனியன் வருதல் அவனும் அஞ்சான், எமியேன் இருத்தலை யானும் ஆற்றேன் என்றமையால், யான் அவனது கூட்டத்தையே விரும்புதலுடையேன்; எனினும் ஏதம் மிக்க வரையடுக்கத்து அவன் தனியனாய் வருதலை அஞ்சுகின்றேன் என்றாளாம். தொழில் மழை - உழுதொழிற்கு உதவும் மழை என்றலுமாம், *'மழைதொழி லுதவ' என்புழி நச்சினார்க்கினியர் இவ்விரு பொருளும் கொண்டமையுங் காண்க. தெழி மழை என்னும் பாடத்திற்கு - கனைக்கின்ற மழை யென்க. மலர் உதிர வீசிப் பொழிந்த

* மதுரைக்காஞ்சி. ௧0.

என்றமையால், பெரும்பெயல் என்பது பெறப்படும். கன்னிரவில் மழை பொழிய, அதனால் நீர் நிரம்பிய அலை மோதாநிற்க, அதன் துளிகள் கரையின் மேலிட எங்கும் பரத்தலின் மெலிந்த கரையினையுடைய அப்பெரிய குளத்தைக் காப்பவன், அதன் கரை உடையாதபடி துயி லென்பது சிறிதுமின்றி அதனைச் சூழ்வந்து காப்பன் ஆகலின், அவ்வாறு கன்னிரவிலும் துயிலாது தன்னைப் பல்காலும் நோக்குதலுடைய அன்னைக்குக் குளங் காவலனை உவமை கூறினாள். காவலன் துயிலின்றிக் குளத்தைக் காத்தல்போல, அன்னையும் துயிலின்றி என்னைக் காக்கின்றனள் எனத் தொழில் உவமம் கொள்க. எறி திரைத் திவலை தூஉம் சிறுகோட்டுப் பெருங்குளம் என்றமையால், தலைவியானவள் காமவெள்ளம் மிகுதலால், தனது நாண் நறுமி நின்றநிலையைக் குறித்தானாம். *'மிகுபெயல், உப்புசிறை நில்லா வெள்ளம் போல, நாணு வரை நில்லாக் காமம் நண்ணி' என்பது ஈண்டு அறியற்பாலது. அவனும். யானும், அன்னையும் என்னும் உம்மைகள் கட்டுரைச் சுவைபட நின்றன; எண்ணும்மையுமாம். கொல் - அசை.

---

253. பாலை

[தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.]

வைகல் தோறும் பசலை பாயவென்
மெய்யும் பெரும்பிறி தாகின்று ஒப்பென
அன்னையும் அமரா முகத்தினள் அலரே
வாடாப் பூவிற் கொங்கர் ஓட்டி
காடுபல தந்த பசும்பூண் பாண்டியன்
பொன்மலி †நெடுநகர்க் கூடல் ஆடிய
இன்னிசை யார்ப்பினும் பெரிதே எம்போன்
சிலநாள் உய்யலென் போன்மெனப் பலநினைந்து
ஆழல் வாழி தோழி வடாஅது
ஆரிருள் நடுநாள் ‡ஏரா ஒய்யப்
பகைமுனை யறுத்துப் பல்லினஞ் சாஅய்க்
கணஞ்சால் கோவலர் நெடுவிளிப் பயிர்றிரு
இனந்தலைத் தருஉந் துளங்கிமில் நல்லேற்றுத்
தழூஉப்பிணர் எருத்தந் தாழப் பூட்டிய
அந்தூம் பகலமைக் கமஞ்செலப் பெய்த

---

* அகம். உ0அ. (பாடம்) † நெடுமதிற் கூடல். ‡ ஏராஉய்ய.

நறுகாழ் வல்சியர் தொழுவறை வௌவிக்
கன்றுடைப் பெருநிரை மன்றுநிறை தரூஉம்
நேரா வன்றோள் வடுகர் பெருமகன்
பேரிசை எருமை நன்னாட் டுள்ளதை
அயிரியாறு இறந்தன ராயினும் மயரிறந்து
உள்ளுப தில்ல தாமே பணைத்தோட்
குரும்பை மென்முலை அரும்பிய சுணங்கின்
நுசுப்பழித் தொலிவருந் தாழிருங் கூந்தல்
பாக விசும்பில் திலகமொடு பதித்த
திங்கள் அன்னநின் திருமுகத்து
ஒண்சூட்டு அவிர்குழை மலைந்த நோக்கே.

—நக்கீரர்.

(சொ - ள்.) க—க. தோழி-, வாழி-, வைகல் தோறும் பசலை பாய - நாடோறும் பசலையானது படர்தலின், என் மெய்யும் ஒய் எனப் பெரும் பிறிது ஆகின்று - என் உடம்பும் விரைய இறப்பினை எய்தி வருகின்றது, அன்னையும் அமரா முகத்தினள் - அன்னையும் வெறுத்த முகத்தினள் ஆகின்றாள், அலரே - ஊர்க்கண் எழும் அலர்தான், வாடாப் பூவின் கொங்கர் ஓட்டி - பொற்பூவினை அணிந்த கொங்கரை அகற்றி, நாடு பல தந்த பசும் பூண் பாண்டியன் - அவர் தம் நாடு பலவற்றையும் கைப்பற்றிய பசும்பூண் பாண்டியன் என்பான், பொன் மலி நெடு நகர்க் கூடல் - பொன்மிக்க பெரிய நகரமாகிய கூடற்கண், ஆடிய இன் இசை ஆர்ப்பினும் பெரிது - அவ்வெற்றிக் களிப்பினால் ஆடிய இனிய ஒலியையுடைய ஆரவாரத்தினும் மிக்கதாகின்றது, ஈங்கு யான் சில நாள் உய்யலென் போலும் என - இவ்விடத்தே யான் இனிச் சிலநாளும் உயிர்தரித்திரேன் போலும் என்று, பல நினைந்து ஆழல் - பலவும் எண்ணித் துயரில் அழுந்தாதே;

கூ—கக. வடாஅது - வடக்கின்கண்ணதாகிய, ஆர் இருள் நடுநாள் - இயங்குதற்கரிய நள்ளிரவில், ஏர் ஆ ஒய்ய - அழகிய பசுக்களைக் கவர்ந்து வருவதற்கு, பகை முனை அறுத்து - பகைப் புலத்தைக் கெடுத்து, பல் இனம் சாஅய் - பல இனங்களையும் ஓட்டியும்·

கஉ—உ௰. நெடு விளி பயிர் அறிந்து - தங்கள் நெடிய கூப்பீட்டொலியை அறிந்து, இனம் தலைத் தரும் - பசுவினத்தைத் தம்மிடத்து அணைத்துக்கொடுவரும், துளங்கு இமில் நல் ஏறு - அசையும் முசுப்பினையுடைய நல்ல ஏறுகளின், தழூஉப் பிணர் எருத்தம் - சருச்சரை கொண்ட கழுத்தில், தாழப் பூட்டிய - தொங்கப் பூட்டியுள்ள, அம் தூம்பு அகல் அமைகமம் செல வெய்த - அழகிய உட்டொளையினையுடைய

அகன்ற மூங்கிற் குழாயில் நிறைவு எய்துமாறு பெய்த, திரு காழ் வல்சியர் - செறிவுமிக்க உணவினராகிய, கணம் சால் கோவலர் - கூட்டம் மிக்க கோவலரது, தொழு அறை வெளவி - தொழுவாகிய அறையினைக் கவர்ந்தும், கன்று உடை பெருநிரை மன்று நிறை தரூஉம் - கன்றுகளையுடைய ஆனிரையை மன்றுகள் நிறையுமாறு கொணரும், நேரா வன் தோள் வடுகர் பெருமகன் - ஒப்பில்லாத வலிய தோளினையுடைய வடுகர் தலைவனாகிய, பேர் இசை எருமை நல் நாட்டு உள்ளதை - பெரிய புகழினையுடைய எருமை என்பானது நல்ல நாட்டின்கண் உள்ளதாகிய, அயிரியாறு இறந்தனர் ஆயினும் - அயிரி என்னும் யாற்றினைக் கடந்து (நம் தலைவர்) சென்றனர் ஆயினும்;

உக—அ. பணை தோள் - மூங்கில்போன்ற தோளினையும், குரும்பை மெல் முலை - குரும்பை போன்ற மெல்லிய முலையினையும், அரும்பிய சுணங்கின் - அரும்பிய சுணங்கினையும், நுசுப்பு அழித்து ஒலிவரும் தாழ் இரும் கூந்தல் - இடையினை வருத்தித் தழைத்த தாழ்ந்த கரிய கூந்தலையும் உடைய, நின் - நினது, மாக விசும்பில் திலகமொடு பதித்த திங்கள் அன்ன திருமுகத்து - மாகமாகிய வானில் உள்ள இடையே திலகம் பதித்த திங்கள்போன்ற அழகிய முகத்திலுள்ள, ஒண்சுட்டு அவிர் குழை மலைந்த நோக்கு - ஒள்ளிய மத்தக மணியமைந்த விளங்குகின்ற காதணியாகிய குழையொடு பொருத பார்வையினை;

உ0—க. தாம் மயர் இறந்து உள்ளுப - அவர் மறவியற்று என்றும் நினையாநிற்பர்.

(முடிபு) தோழி! வாழி! மெய்யும் பெரும் பிறிது ஆகின்று; அன்னையும் அமரா முகத்தினள்; அலர் பசும்பூண்பாண்டியன் கூடல் ஆடிய ஆர்ப்பினும் பெரிது; யான் உய்யவென் போலும் என நினைந்து ஆழல்; (நம் தலைவர்) வடாஅது எருமை நன்னாட்டு உள்ளதாகிய அயிரியாறு இறந்தனராயினும், நின் திருமுகத்து அவிர்குழை மலைந்த நோக்குத் தாம் மயர் இறந்து உள்ளுவர்.

சாய், வெளவிப் பெருநிரை தரூஉம் எருமை என்க.

(வி - ரை.) வாடாப்பூ - பொன்னானியன்ற பூவிற்கு வெளிப்படை, பூவென்றது வெட்சி முதலிய போர்ப்பூவினை. ஆடிய - வெற்றிக் களிப்பால் ஆடிய என்க. ஆடிய ஆர்ப்பு - ஆடியகாலை எழுந்த ஆர்ப்பு. இன்னிசை - இனிய இயங்களின் ஓசையுமாம். போன்ம் - போலும்; ஒப்பில் போலி. வடாஅது நன்னாடு எனக் கூட்டுக. பகை முனை என்றது, சுரந்தையாரது போர் முனை; பல்இனம் என்புழிப் பன்மை, மிகுதியை யுணர்த்திற்று. தழூஉப் பிணர் - பிணர் தழூஉ என மாறுக; தழுவுதல்; பொருந்துதல். வல்சியராகிய கோவலரது தொழு அறை என் றியைக்க. கோவலர் எருத்தின் கழுத்தில் மூங்கிற்குழாயில் உணவினைப் பெய்து பூட்டியிருப்பர் என்பது *'கோவலர், மழுவிடை பூட்டிய

* அகம். ௩௦௪.

குழாஅய்த் தீம்புளி, செவியடை தீரத் தேக்கிலைப் பகுக்கும், புல்லி நன்னாடு' எனப் பிறண்டும் கூறப்பட்டது. சிறை-சிறைய-உள்ளதை-ஐ பகுதிப்பொருள் விகுதி. மாக விசும்பு : இருபெயரொட்டு. திலகமொடு பதித்த திங்கள் அன்ன என்றது, இல்பொருள் உவமை. திலகமொடு : வேற்றுமை மயக்கம். சூடு - குழையிற் பதித்த மத்தக மணி.

---

254. முல்லை

[வினைமுற்றி வந்தெய்திய தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.]

நரைவிரா வுற்ற நறுமென் கூந்தற்
செம்முது செவிலியர் *பலபா ராட்டப்
பொலன்செய் கிண்கிணி நலம்பெறு சேவடி
மணன்மலி முற்றத்து நிலம்வடுக் கொளாஅ
மனையுறை புறவின் செங்கால் சேவல்
துணையொடு குறும்பறை பயிற்றி மேற்செல
விளையாடு ஆயத் திளையோர்க் காண்டொறும்
நம்வயின் நினையும் நன்னுத லரிவை
புலம்பொடு வதியும் கலங்கஞர் அகல
வேந்துறு தொழிலொடு வேறுபுலத்து அல்கி
வந்துவினை முடித்தன மாயின் நீயும்
பணைநிலை முனைஇய வினைநவில் புரவி
இழையணி நெடுந்தேர் ஆழி யுறுப்ப
நுண்கொடி மின்னிற் பைம்பயிர் துமியத்
தளவம் †முல்லையொடு தலைஇத் தண்ணென
வெறிகமழ் கொண்ட வீததை புறவின்
நெடியிடை பின்படக் கடவுமதி என்றியான்
சொல்லிய ‡அளவை நீடாது வல்லெனத்
தார்மணி மாவறி வுறாஅ
ஊர்நணித் தந்தனை உவகையாம் பெறவே.

— §மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்.

(சொ - ள்.) க—க. (பாக!), நரை விராவுற்ற நறுமென் கூந்தல்- நரைமயிர் கலப்புற்ற நறிய மெல்லிய கூந்தலையுடைய செம்முது

(பாடம்) * பலர்பா ராட்ட. † முல்லையொடுதோன்றி தோன்ற. ‡ அளவையி னீடாது. § கபிலர்.

செவிலியர் - செவ்விய முதிய செவிலித் தாயர், பல பாராட்ட - தன்னைப் பலவாறு பாராட்டிக் கூற, பொலன் செய் கிண்கிணி கலம்பெறு சேஅடி - பொன்னாற் செய்யப்பெற்ற சதங்கையை அணிந்த அழகிய அடியால், மணல் மலி முற்றத்து நிலம் வடுக் கொளாஅ - மணல் பரந்த முற்றத்தே நிலம் வடுக்கொள்ளுமாறு செய்து, மனை உறை புறவின் செங்கால் சேவல் - மனையிற் றங்கி புறையும் சிவந்த காலினையுடைய புறவின் சேவல், துணையொடு குறும் பறை பயிற்றி - தன் பெடையொடு குறுகக் குறுகப் பறத்தலைச் செய்து, மேல்செல - பின்பு மேலே எழுந்திட, விளையாடு ஆயத்து இளையோர்க் காண்தொறும் - விளையாடும் தன் தோழியராய இளையரைக் காணுந்தோறும், நம்வயின் நினையும் - நம்பால் நினைவு கொள்ளும், நல் நுதல் அரிவை - அழகிய நெற்றியினையுடைய நம் தலைவி, புலம்பொடு வதியும் கலங்கு அஞர் அகல - தனிமையொடு தங்கியிருக்கும் மிக்க துன்பம் நீங்குமாறு;

௧௦—௧. வேந்து உறு தொழிலொடு - வேந்தற்கு உற்றுழி உதவும் வினையினால், வேறு புலத்து வந்து அல்கி - இவ் வேற்று நாட்டின் கண் வந்து தங்கி, வினைமுடித்தனம் ஆயின் - மேற்கொண்ட வினையினை முடித்துளோம் ஆகலின்;

௧௧—௮. நீயும், பணை நிலை முனைஇய வினைநவில் புரவி - பந்தியில் நிற்றலை வெறுத்த போர்த்தொழிலிற் பயின்ற குதிரை பூட்டிய, இழை அணி நெடுதேர் ஆழி - முத்தாரம் முதலியன அணிந்த நீண்ட தேர் உருளை, நுண் கொடி மின்னின் உறப்ப - நுண்ணிய மின்னுக் கொடி போன்று செலுத்தப் பெறுதலின், பைம் பயிர் துமிய - வழியிலுள்ள பசிய பயிர்கள் அறுபட்டு விலக, தளவம் முல்லையொடு தலைஇ - செம்முல்லை வெண்முல்லையுடன் கூடி, தண் என வெறி கமழ்கொண்ட வீ ததை புறவின் - தண்ணென்ற நறுமணம் கமழும் மலர் செறிந்த காட்டினது, நெடிஇடை பின்படக் கடவுமதி என்று - நீண்டவழி பின்னுறச் செலுத்துவாய் என்று, யான் சொல்லிய அளவை - யான் கூறிய மாத்திரையானே;

௧௮—௨௦. நீடாது - தாழ்க்காது, உவகை யாம் பெற - யாம் மகிழ்வுபெறும் பரிசு, தார் மணி மா அறிவுறாஅ - மணிமாலையணிந்த குதிரையின் உள்ளம் அறிந்து, வல் என - விரைய, ஊர் நணி தந்தனை - ஊர்க்கு அணித்தாகத் தேரினைக் கொண்டு வந்தனை; (வாழியர்,)

(முடிபு) பாக! வந்து வினை முடித்தனமாயின், அரிவை புலம்பொடு வதியும்கலங்கஞர் அகல, நெடுந்தேரினைப் புறவின் நெடியிடை பின்படக் கடவுமதி என்று யான் சொல்லிய அளவை யாம் உவகை பெற வல்லென ஊர் நணித்தந்தனை (வாழியர்.)

(வி - ரை.) கிண்கிணி கலம்பெறு சேவடி - கிண்கிணியானது அழகு பெறுதற்கு ஏதுவாகிய சேவடி என்றுமாம். *"குழைக்கு விளக்

* பதிற்றுப். ௨௧.

காகிய ஒண்ணுதல் பொன்னின், இழைக்கு விளக்காகிய.....மகளிர்' என்பது காண்க. வடுக்கொளாஅ - வடுக்கொள்ள என்பது திரிந்து நின்றது; வடுச்செய்து என்றுமாம். பாராட்ட விளையாடும், நிலம்வடுக் கொள விளையாடும், மேற்செல் விளையாடும் எனத் தனித்தனி கூட்டுக. மணல் முற்றத்தே இளையோர் ஓடி விளையாடுதலின் அங்குள்ள சேவலும் பெடையும் மேலெழுந்து செல்வவாயின. அங்ஙனம், புறாக் கள் சேவலும் பெடையுமாக மேற்செல்ல, இளம் பருவமுடைய மகாரும் மகளிரும் விளையாடும் மகிழ்ச்சிமிக்க விளையாட்டு, கூடியிருப்பவர்க்கே இன்பம் விளக்குமாகலின், நாம் தலைவருடன் கூடி இவ்வின்பினை நுகரப் பெற்றிலேமென்று தலைவி நம்மை நினைந்து வருந்துவள் எனக் கருதி, அவ் வருத்தம் நீங்க நீ தேரினை விரைந்து கடவுதி என்று தலைவன் பாகற்குக் கூறினன் என்க. வினை நவில் புரவி - குறிப்பறிந்து செல்லும் தொழில் பயின்ற புரவி என்றுமாம். பணை நிலை முனைஇய என்றதனால், அதுவும் விரைந்து சேறற்கண் மனவெழுச்சியுடையதாதல் கூறியவாறாயிற்று. உறுப்ப - ஊடறுத்துச் செல்ல. நெடிய இடை என்பது நெடியிடை என விகாரமாயிற்று. மா - குதிரையின் உள்ளம். அறிவுறூஉ - அறிந்து தந்தனையாகலின், வாழி என விரித்துரைக்க.

---

255. பாலை

[பிரிவிடை வேறுபட்ட தலைமகள் ஆற்றாமை மீதூரத் தோழிக்குச் சொல்லியது.]

உலகுகிளர்ந் தன்ன உருகெழு வங்கம்
புலவுத்திரைப் பெருங்கடல் நீரிடைப் போழ
இரவும் எல்லையும் அசைவின் றாகி
விரைசெலல் இயற்கை வங்கூழ் ஆட்டக்
கோடுயர் திணிமணல் அகன்துறை நீகான்
மாட வொள்ளெரி மருங்கறிந் தொய்ய
ஆள்வினைப் பிரிந்த காதலர் நாள்பல
கழியா மையே அழிபட ரகல
வருவர் மன்னால் தோழி தண்பணைப்
பொருபுனல் வைப்பின் நம்மூ ராங்கண்
கருவிளை முரணிய தண்புதற் பகன்றைப்
பெருவள மலர அல்லி தீண்டிப்
பலவுக்காய்ப் புறத்த பசும்பழப் பாகல்

கூதள மூதிலைக் கொடிநிரைத் தூங்க
அறனின் றலைக்கும் ஆனா வாடை
கடிமனை மாடத்துக் கங்குல் வீசித்
திருந்திழை நெகிழ்ந்து பெருங்கவின் சாய
நிரைவளை யூருந் தோளென
உரையொடு செல்லும் அன்பினர்ப் பெறினே.

—மதுரை மருதனிளநாகனார்.

(சொ - ள்.) க. தோழி—,

க—எ. உலகு கிளர்ந்தன்ன - உலகு புடைபெயர்ந்தா லொத்த, உருகெழு வங்கம் - அச்சம் தோன்றும் நாவாய், புலவு திரை பெருங் கடல் நீர் இடைப்போழ - புலால் வீசும் அலைகளையுடைய பெரிய கடலின் நீரை இடையே பிளந்து செல்ல, இரவும் எல்லையும் அசைவு இன்று ஆகி - இரவும் பகலும் ஓரிடத்தும் தங்குதல் இன்றி, விரை செலல் இயற்கை வங்கூழ் ஆட்ட - விரைந்து செல்லும் இயற்கையின தாய காற்று அசைத்துச் செலுத்த, நீகான் - நாவாய் ஓட்டுவான், கோடு உயர் திணி மணல் அகன் துறை - கரை உயர்ந்த செறிந்த மணலை யுடைய அகன்ற துறைக்கண், மாட ஒள் எரி மருங்கு அறிந்து ஒய்ய - மாடத்தின்மீதுள்ள ஒள்ளிய விளக்கினால் இடம் அறிந்து செலுத்த, ஆள்வினைப் பிரிந்த காதலர் - பொருளீட்டும் முயற்சிபற்றி நம்மைப் பிரிந்து சென்ற நம் தலைவர்;

அ—கக. தண் பணைப் பொரு புனல் வைப்பின் நம் ஊர் ஆங்கண் - குளிர்ந்த மருத நிலமாய நீர்மோதும் நாட்டிலுள்ள நமது ஊரிடத்தே, கருவிளை முரணிய தண் புதல் பகன்றை - கருவிளையின் பூவினொடு மாறுபட்ட குளிர்ந்த பகன்றைச்செடியின், பெருவளம் மலர அல்லி தீண்டி - மிக்க செழுமையுடைய மலர்களின் அகவிதழை அசைத்து, பலவுக் காய்ப்புறத்த பசும் பழப் பாகல் - பலாக்காய் போலும் புறத்தினையுடைய அழகிய பழத்தினையுடைய பாகற்கொடிகள், கூதள முதுஇலைக் கொடி நிரை தூங்க - கூதாளியின் முதிய இலைகளையுடைய கொடிகளின் கூட்டத்திற்கிடந்து அசையும்படி செய்து, அறன் இன்று அலைக்கும் ஆனாவாடை - நம்மை அறமில்லாது வருத்தும் நீங்காத வாடை, கடி மனை மாடத்துக் கங்குல் வீசி - காவல் பொருந்திய மாடமாய மனையில் இரவெல்லாம் வீசலின், திருந்து இழை நெகிழ்ந்து பெருங்கவின் சாய - திருந்திய அணிகள் சோரப் பெரிய அழகு கெட, நிரை வளை ஊரும் தோள் என - தோளானது வரிசையாகவுள்ள வளைகள் நெகிழ்ந்து விழப்பெறும் என்னும், உரையொடு செல்லும் அன்பினர் பெறின் - உரைகொண்டு தூது செல்லும் அன்புடையாரை நாம் பெறுவோமாயின்;

௭—௧. அழிபடர் அகல - எமது மிக்க துன்பம் நீங்க, நாள் பல கழியாமை - பலநாள் தாழ்க்காது, வருவர் - விரைந்து வந்துறுவர், மன் - அங்ஙனம் சென்றுரைப்பார் இலரே; (என் செய்வாம்.)

(முடிபு) தோழி! ஆள்வினைப் பிரிந்த நங் காதலர், வாடை, கடி மனை மாடத்துக் கங்குல் வீச, இறை நெகிழ்ந்து கவின் சாய, தோள் வளையூரும் என உரையொடு செல்லும் அன்பினர்ப் பெறின், நாள் பல கழியாமையே, அழிபடர் அகல வருவர் மன்.

(வி - ரை.) உலகு கிளர்ந்தன்ன வங்கம் என்பது வங்கத்தின் பெருமை கூறியபடி; உலகு புடை பெயர்வது போலும் புடைபெயர்ச்சியையுடைய வங்கம் என்க. வங்கூழ் - காற்று. மாட ஒள்ளெரி. கலங்கள் துறையறிந்து வருதற் பொருட்டு உயரிய மாடத்தின்மீது அமைக்கப்பெற்ற ஒள்ளிய விளக்கு. இது கலங்கரை விளக்கம் எனவும்படும். வங்கம் நீகான் ஒய்ய ஆள்வினைப் பிரிந்த காதலர் என்றமையான், பொருளீட்டுதற்குக் கலத்திற் பிரிந்த தலைவன் என்பதாயிற்று. பகன்றையின் மலர் வெண்ணிறமுடையதாகலின் கருவிளை முரணிய பகன்றை மலர் எனப்பட்டது. பகன்றை - சிவதை. தூங்க-தூங்கச் செய்து என விரித்துரைக்க. வீசி, வீச என்பதன் திரிபு. வீச என்னும் பாடமே கொள்ளுதலும் ஆம். என உரையொடு - என உரைக்கும் உரையொடு என விரித்துரைக்க. உரையொடு செல்லும் அன்பினர் என்பது, சென்று உரைக்கும் அன்பினர் என்றபடி. செல்லும் அன்பினர்ப் பெறினே என்றது தோழி அங்ஙனம் செய்திலள் என்பதனைக் குறிப்பிற் கூறியவாறும்.

(மே - ள்.) *'முந்நீர் வழக்கம் மகடூஉவோ டில்லை' என்னுஞ் சூத்திரத்து இச் செய்யுள் கலத்திற் பிரிவு தலைமகளை யொழியப் பிரிந்தமைக்கு உதாரணமென்றனா், இளம்.

†'இருவகைப் பிரிவும்' என்னுஞ் சூத்திரத்து, இச்செய்யுள் தூது விடுவது காரணமாக உரைத்தது எனவும், இம் மணிமிடை பவளத்துப் பின்பனி வந்தவாறும் நண்பகல் கூறுமையும் அவர் குறித்த காலம் இதுவென்பது தோன்றியவாறும் காண்க எனவும், ‡'எவன் மரபின்' என்னுஞ் சூத்திரத்து, இப் பாட்டுள் வணிகன் தலைவனாகவும் கொள்ளக் கிடத்தலின், தலைவியும் அவ்வருணத் தலைவியாமென் றுணர்க எனவும் கூறினர், நச்.

---

* தொல். பொருள். அகத். ௩௭. † தொல். அகத். ௪௧. ‡தொல். அகத். ௨௪.

256. மருதம்

[தோழி தலைமகற்கு வாயின் மறுத்தது.]

பிணங்கரில் வள்ளை நீடிலைப் பொதும்பின்
மடிதுயின் முனைஇய வள்ளுகிர் யாமை
நொடிவிடு கல்லிற் போகி அகன்றுறைப்
பகுவாய் நிறைய நுங்கிற் கள்ளின்
*உகுவா ரருந்து மகிழ்பியக்கு நடையொடு
தீம்பெரும் பழன முழக்கி அயலது
ஆம்பல் மெல்லடை யொடுங்கும் ஊர
†பொய்யால் அறிவெனின் மாய மதுவே
கையகப் பட்டமை யறியாய் நெருநை
மையெழில் உண்கண் மடந்தையொடு வையை
ஏர்தரு புதுப்புனல் உரிதினி னுகர்ந்து
பரத்தை யாடங் கரப்பவும் ஒல்லாது
கவ்வையா கின்றாற் பெரிதே காண்டகத்
தொல்புகழ் நிறைந்த பல்பூங் கழனிக்
கரும்பமல் படப்பைப் பெரும்பெயர்க் கள்ளூர்த்
திருநுதற் குறுமக ளணிநலம் வவ்விய
அறனி லாளன் அறியே னென்ற
திறனில் வெஞ்சூ ளறிகரி கடாஅய்
முறியார் பெருங்கிளை செறியப் பற்றி
நீறுதலைப் பெய்த ஞான்றை
வீறுசா லவையத்து ஆர்ப்பினும் பெரிதே.

—மதுரைத் தமிழ்க்கூத்தனார் கடுவன் மள்ளனார்.

(சொ - ள்.) க—எ. பிணங்கு அரில் வள்ளை நீடு இலை பொதும்பில் - பின்னிய தூறுகளையுடைய வள்ளைக்கொடியின் நீண்ட இலைச் செறிவில், மடி துயில் முனைஇய வள் உகிர் யாமை - மடிந்து கிடக்கும் துயிலை வெறுத்த வலிய நகத்தினையுடைய யாமை, நொடி விடு கல்லில் போகி - ஒலித்தல் செய்கின்ற பரல்களின் வழியே சென்று, அகன் துறை-அகன்ற நீர்த்துறைக்கண்ணே, பகுவாய் நிறைய - பிளந்த வாய் நிறைந்திட, நுங்கின் கள்ளின் உகுவார் அருந்து மகிழ்பு இயங்கு நடையொடு - பனங்கள்ளின் அருந்துங்கால் சிந்திய ஒழுக்கினை உண்ட களிப்புடன் செல்லும் நடையொடு, தீம்பெரும் பழனம் உழக்கி-இனிய

(பாடம்) * நுகர்வார் உந்து. † பொய்யா னறிவன்.

பெரிய வயல்களைக் கலக்கி, அயலது ஆம்பல் மெல் அடை ஒடுங்கும் ஊர - அதன் அயலதாகிய ஆம்பலின் மெல்லிய இலைகட்குள்ளே ஒடுங்கிக் கிடக்கும் ஊரனே!

அ—கூ. பொய்யால் - நீ பொய் கூறாதே, நின் மாயம் அறிவென் - நின் வஞ்சனையை அறிவேன், அது கையகப்பட்டமை அறியாய் - நின் பரத்தமை வெளிப்பட்டமையை நீ அறிந்திலே, நெருநை - நேற்று, மை உண் எழில் கண் மடந்தையொடு - மையுண்ட அழகிய கண்களையுடைய பரத்தையுடன், வையை ஏர்தரு புதுப்புனல் - வையையின் அழகு பொருந்திய புதிய புனலில், உரிதினில் நுகர்ந்து - உரிமையுடன் இன்பம் நுகர்ந்திட, பரத்தை ஆயம் கரப்பவும் - அதனைப் பரத்தையர் கூட்டம் ஊரார் அறியாமல் மறைக்கவும், ஒல்லாது கவ்வை ஆகின்று பெரிது - மறைக்க முடியாமல் மிகவும் அலர் எழுகின்றது; (அவ்வலர்தான்.)

கூ—இ. காண்தக தொல் புகழ் நிறைந்த - அழகு விளங்க பழைமையான புகழ் மிக்க, பல் பூ கழனி - பலவகையான பூக்கள் நிறைந்த வயல்களையும், கரும்பு அமல் படப்பை - கரும்பு மிக்க தோட்டங்களையுமுடைய, பெரும் பெயர்க் கள்ளூர் - மிக்க சிறப்பு வாய்ந்த கள்ளூர் என்னும் ஊரின்கண்;

கச—உக. திரு நுதல் குறுமகள் அணிநலம் வவ்விய - அழகிய நெற்றியினையுடைய இளையாள் ஒருத்தியின் அழகிய நலத்தினைக் கவர்ந்த, அறன் இலாளன் அறியேன் என்ற திறன் இல் வெஞ்சூள் - அறநெறி இல்லா ஒருவன் பின்பு தான் அவளை அறியேன் என்று கூறிய நீதியில்லாத கொடிய சூளினை, அறிகரி கடாஅய் - அவர்தம் கூட்டம் உணர்ந்த சான்றோரை வினவி உணர்ந்து, (அவனை), முறி ஆர் பெருங் கிளை செறியப் பற்றி - (அவையத்தார்) தளிர்கள் பொருந்திய பெரிய மரத்தின் கிளையில் இறுகப்பிணித்து, நீறு தலைப் பெய்த ஞான்றை - நீற்றினை அவன் தலையிற் பெய்த காலத்தே, வீறுசால் அவையத்து ஆர்ப்பினும் பெரிது - சிறப்பு மிக்க அவையின்கண் எழுந்த ஆரவாரத்தினும் பெரிதாயிற்று.

(முடிபு) ஊர! பொய்யால்! அறிவன் நின் மாயம்! அதுவே கையகப்பட்டமை அறியாய்! நெருநை மடந்தையோடு வையைப் புனல் உரிதினில் நுகர்ந்து; பரத்தை ஆயம் கரப்பவும் ஒல்லாது கவ்வையாகின்று; அது கள்ளூர் அறனிலாளனை, வெஞ்சூள் அறிகரி கடாஅய், கிளைபற்றி; நீறுதலைப் பெய்த ஞான்றை அவையத்து ஆர்ப்பினும் பெரிது.

(வி-ரை.) நொடி விடுதல் - வெடித்தல்; கொடிவிடு கல்லிற் போகி என்பதற்குச் சிறார்கள் நீரிலே தத்திச் செல்லுமாறு விடுகின்ற வட்டக்கல்போலச் சென்று என்றலுமாம். நுங்கிற்கள் - பனங்கள். உகுவார் - கள் சிதறுண்டு ஒழுகுவது, *"மேற்றுறைக் கொளீஇய கழா

* அகம். கூ௬கூ.

விற் கீழ்த்துறை, உருவார் அருந்தப் பகுவா யாமை' எனப் பின் வருவதுங் காண்க. நிறைய அருந்தும் எனக் கூட்டுக. அருந்தும் என்னும் பெயரெச்சம் காரணப்பொருட்டு. வையகப் பட்டமை என்றது தெளிய அறியப்பட்டமையை உணர்த்திற்று. குறுமகள் அணிநலம் வவ்விய அறனிலாளன் அறியேன் என்ற திறனில் வெஞ்சூள் என்றமையால் தீவினையாளன் ஒருவன் ஓர் இளமகளின் நலத்தை நுகர்ந்து பின் அவளைக் கைவிடுத்து, அவளது முறையீட்டினைக் கேட்டு அவளை உசாவிய சான்றோர் முன், யான் அவளை அறிந்திலேன் எனப் பொய்ச்சூள் கூறினன் என்றவாறாயிற்று. வெஞ்சூள் அறிகரி கடாஅய்ச் செறியப் பற்றி, நீறு தலைப் பெய்த என்றமையால், சான்றோர்கள் கரியாவார் கூற்றினாலே உண்மை தெளிந்து அவனை அவ்வாறு ஒறுத்தனர் என்பதாயிற்று. மூன்று கவராய கிளைகளின் நடுவே வைத்துப் பிணித்தலும் நீறுதலைப் பெய்தலும் அஞ்ஞான்று குற்றத்திற்கு விதிக்கும் தண்டங்களாம் என்க.

(உ - றை.) வள்ளை நீடிலைப் பொதும்பில் துயில்முனைஇய யாமை, கள்ளின் உருவார் அருந்து மகிழ்பியங்கு நடையொடு பழனம் உழக்கி, அயல ஆம்பல் மெல்லடை ஒடுங்கும் ஊர என்றது, நின் மனையிடத்துத் துயிறலை வெறுத்துச் சென்று, பரத்தையர் சேரியில் அவர் இன்பம் நுகர்ந்த பெருமிதத்தோடு, இற்பரத்தைபாற் சென்று தங்குவை என்றவாறும்.

---

257. பாலை

[உடன் போகாநின்ற தலைமகட்குத் தலைமகன் சொல்லியது.]

வேனிற் பாதிரிக் கூனி மாமலர்
நரைவாய் வாடல் நாறும் நாள்சுரம்
அரியார் சிலம்பின் சீறடி சிவப்ப
எம்மொ டோரா றுபடஇயர் யாழநின்
பொம்மல் ஓதி பொதுள வாரி
அரும்பற மலர்ந்த ஆய்பூ மராஅத்துச்
சுரும்புசூழ் அலரி தைஇ வேய்ந்தநின்
தேம்பாய் கூந்தல் குறும்பல மொசிக்கும்
வண்டுகடிந் தோம்பல் தேற்றாய் அணிகொள
நுண்கோல் எல்வளை தெளிர்க்கும் முன்கை
மெல்விறைப் பணைத்தோள் விளங்க வீசி
வல்லுவை மன்னால் நடையே கள்வர்

பகைமிகு கவலைச் சென்னெறி காண்மார்
மிசைமரஞ் சேர்த்திய கவைமுறி யாஅத்து
நாரரை மருங்கின் நீர்வரப் பொளித்துக்
களிறுசுவைத் திட்ட கோதுடைத் ததரல்
கல்லா உமணர்க்குத் தீமூட் டாகும்
துன்புறு தகுந ஆங்கண் புன்கோட்டு
அரிலிவர் புற்றத்து அல்கிரை நசைஇ
வெள்ளரா மிளிர வாங்கும்
பிள்ளை எண்கின் மலைவயி னானே.

—உறையூர் மருத்துவன் தாமோதரனார்

(சொ - ள்.) கஉ—உக. (குறுமகள்) கள்வர் பகை மிகு கவலை செல்நெறி காண்மார் - ஆறலை கள்வர்களுடைய பகை மிக்க கவர்த்த நெறிகளில் வம்பலர் தாம் செல்லுதற்குரிய நெறியிதுவெனக் காணும் பொருட்டு, மிசைமரம் சேர்த்திய கவை முறி யாஅத்து - மேலிடத்தே ஏணி சார்த்தப்பெற்ற கவர்த்த தளிர்களையுடைய யா மரத்தின், நார் அரை மருங்கின் நீர் வர பொளித்து - நாரினையுடைய அடிமரத்தில் நீர் வரும்படி உரித்து, களிறு சுவைத்திட்ட கோது உடை ததரல் - களிற்றியானை சுவைத்துப் போகட்ட சக்கையாகிய சுள்ளிகள், கல்லா உமணர்க்கு தீமூட்டு ஆகும் - கல்லாத உப்பு வாணிகர்க்குத் தீமூட்டுத் துரும்பு ஆகும், துன்பு உறு தகுந ஆங்கண் - துன்பம் உறத்தகுவன ஆகிய அவ்விடங்களில், புன் கோட்டு அரில் இவர் புற்றத்து - புல்லிய புடைகளையுடைய சிறு தூறுகள் படர்ந்த புற்றின்கண், அல்கு இரை நசைஇ - இராப்பொழுதில் உண்ணும் இரையினை விரும்பி, வெள் அரா மிளிர வாங்கும் - வெள்ளிய பாம்புகள் பிறழும்படி கையால் வவ்வும், பிள்ளை எண்கின் மலைவயின் ஆன - குட்டிக் கரடிகளையுடைய மலையினிடத்தே;

க—கஉ. பாதிரி நறைவாய் கூனி மாமலர் வாடல் நாறும்-பாதிரியின் தேன் பொருந்திய வளைவையுடைய சிறந்த பூக்களின் வாடல் நாறுகின்ற, வேனில் நாள் - வேனிற்காலத்தின் பகற்பொழுதில், சுரம் - சுரத்தின்கண்ணே, அரி ஆர் சிலம்பின் சிறு அடி சிவப்ப - பரற்கல் பொருந்திய சிலம்பினை அணிந்த நின்சிறிய அடிகள் சிவக்க, எம்மொடு ஓர் ஆறு படீஇயர் - எம்முடன் ஒரு நெறியில் பொருந்தி வரற்கு, பொம்மல் ஓதி பொதுள வாரி-பொலிவுற்ற கூந்தலை நெருங்க வாரி, அரும்பு அற மலர்ந்த ஆய் பூ மராஅத்துச் சுரும்பு சூழ் அலரி - அரும்பு இல்லையாக மலர்ந்த அழகிய பூக்களையுடைய வெண்கடம்பின் வண்டுகள் சூழ்ந்த மலர்களை, தைஇ வேய்ந்த - தொடுத்துச் சூடிய, நின் தேம் பாய் கூந்தல் குறும் பல மொசிக்கும் வண்டு - நினது தேன்

பொருந்திய கூந்தலில் குறியனவாய்ப் பலவாக மொய்க்கும் வண்டுகளை, கடிந்து ஓம்பல் தேற்றாய் - கடிந்து பாதுகாத்தலையும் அறியாயாய், அணிகொள - அழகு பொருந்த, நுண்கோல் எல் வளை தெளிர்க்கும் முன்கை - நுண்ணிய திரண்ட ஒளி பொருந்திய வளை ஒலிக்கும் முன் கையையுடைய, மெல் இறை பணைதோள் விளங்கவீசி - மெல்லிய சந்தினையுடைய மூங்கில் போலும் தோள்களை விளக்கமுற வீசி, நடை வல்லுவை மன் - பெரிதும் நடத்தல் வன்மையுடையை ஆகின்றாய்.

(முடிபு) (குறுமகள்!) வேனில் நாள் சுரம் சீறடி சிவப்ப எம்மொடு ஓராறு படீஇயர், ஓதி பொதுள வாரி அலரி தைஇ வேய்ந்த நின் கூந்தல் மொசிக்கும் வண்டு கடிந்து ஓம்பல் தேற்றாய்; பணைத் தோள் விளங்க வீசி நடைவல்லுவை மன்.

(வி - ரை.) கொடுமை மிக்க மலையின் கண்ணதாகிய சுரத்திலே வெம்மை மிக்க வேனில் நாளில் எம்முடன் ஒருபெற்றியே செல்லுதலை விரும்பிச் சீறடி சிவப்ப வண்டுகடிந்தோம்புதல் தேற்றாய்; பணைத்தோள் விளங்க வீசி நடத்தல் வன்மையை யுடையையாயினாய்; குறுமகளே! நின் அன்பிருந்தவாறு என்னே! என்று தலைவன் தலைவியின் நடையை வியந்து பாராட்டினான் என்க. கூந்தலை வாரி மலர்களைத் தொடுத்துச் சூடினான் என்பது, தலைவனுடன் சேறற்கண் தலைவிக்குள்ள ஆர்வ மிகுதியைப் புலப்படுத்தியபடியாம். ஓம்பல் - தன்னைக் காத்தலும் வண்டு மீட்டும் வாராமற் காத்தலுமாம். மிசைமரம் - மரத்தின் மேற் பகுதி. கோடு - புற்றின் புடைப்பு.

(மே - ள்.) *'கொண்டு தலைக் கழியினும்' என்னுஞ் சூத்திரத்து, இச் செய்யுள் கொண்டுதலைக் கழிதற்கண் தலைவன், நடையை வியந்தது என்றார், நச்.

---

258. குறிஞ்சி

[அல்ல †குறிப்பட்டுப் பதிப்பெயர்ந்த தலைமகன் தன்னெஞ்சிற்குச் சொல்லியது.]

நன்னன் உதியன் அருங்கடிப் பாழித்
தொன்முதிர் வேளிர் ஓம்பினர் வைத்த
பொன்னினும் அருமைநன் கறிந்தும் அன்னோள்
துன்னல மாதோ எனினுமஃ தொல்லாய்
தன்மழை தவழுந் தாழ்நீர் நனந்தலைக்
கடுங்காற் றெடுக்கும் நெடும்பெருங் குன்றத்து
மாய இருளளி மாய்கற் போல

---

* தொல். அகத். ௪௧. (பாடம்) † அல்ல குறிப்பிட்ட தலைமகன்.

மாய்கதில் *வாழிய நெஞ்சே நாளும்
மெல்லியற் குறுமகள் நல்லகம் நசைஇ
அரவிரை தேரும் அஞ்சுவரு சிறுநெறி
இரவின் எய்தியும் பெறாஅய் அருள்வரப்
புல்லென் கண்ணை புலம்புகொண் டுலகத்து
உள்ளோர்க் கெல்லாம் பெருநகை யாகக்
காமம் கைம்மிக வுறுதர
ஆனா அரும்படர் தலைத்தந் தோயே.

—பரணர்.

(சொ - ள்.) அ. நெஞ்சே—, வாழிய—,

௧—௪. நன்னன் உதியன் அரு கடிப் பாழி - நன்னன் உதியன் என்பானது அரிய காவலையுடைய பாழிச் சிலம்பில், தொல் முதிர் வேளிர் ஓம்பினர் வைத்த - பழமை மிக்க வேளிர்கள் பாதுகாவல் செய்துவைத்த, பொன்னினும் அருமை நற்கு அறிந்தும் - பொன்னைக் காட்டிலும் எய்துதற்கு அரியளாதலை நன்கு அறிந்தும், அன்னோள் துன்னலம் எனினும் - அவளை யாம் நெருங்குவேம் அல்லேம் என யான் கூறினும், அஃது ஒல்லாய் - அங்ஙனம் என் கூற்றிற் பொருந்தாயாய்;

௮—௧௩. நாளும் - நாடோறும், மெல் இயல் குறுமகள் நல் அகம் நசைஇ - மென்மைத்தன்மை வாய்ந்த இளைய தலைவியை நின் நல்ல அகத்தில் விரும்பி, அரவு இரை தேரும் அஞ்சுவரு சிறுநெறி - பாம்புகள் இரைதேடித் திரியும் அச்சம் தோன்றும் ஒடுங்கிய நெறியில், இரவின் எய்தியும் பெறாஅய் - இராப்போதில் சென்றும் பெறாயாகி, அருள் வரப் புல் என் கண்ணை புலம்புகொண்டு - கண்டார்க்கு அருள் உண்டாக புல் என்ற கண்ணை யுடையையாய்த் தனிமை மேவி, உலகத்து உள்ளோர்க்கெல்லாம் பெரு நகை ஆக - உலகின்கண்ணுள்ள யாவர்க்கும் பெரிய இகழ்ச்சி தோன்ற, காமம் கைம்மிக உறுதர - காமம் அளவுகடந்து மிகலான், ஆனா அரும்படர் தலைத் தந்தோய் - அமையாத அரிய துன்பினை நம்பால் எய்துவித்தனை;

௫—௮. தண் மழை தவழும் தாழ்நீர் நனந்தலை - குளிர்ந்த மேகங்கள் தவழும் வீழும் அருவி நீரினையுடைய அகன்ற இடத்தினையுடைய, கடும் காற்று எடுக்கும் நெடு பெரு குன்றத்து - கடிய காற்றுச் சுழலும் நீண்ட பெரிய குன்றின்கண்ணே, மாய இருள் அளை மாய் கல்போல - மயக்கத்தினைத் தரும் இருளுடைய குகையில் ஒளியின்றி மறையும் மணிகள் போல, மாய்கதில் - நீ ஒளியிழந் தொழிவாயாக.

(முடிபு) நெஞ்சே! வாழிய! பொன்னினும் அருமை நன்கறிந்தும், அன்னோள் துன்னலம் எனினும், அஃது ஒல்லாய், குறுமகள்

* வாழி யென்னெஞ்சே.

நல்லகம் நசைஇ, அஞ்சுவரு சிறுநெறி இரவின் எய்தியும் பெறுஅய், புலம்பு கொண்டு உலகத்துள்ளோர்க் கெல்லாம் பெருநகை யாக, காமம் கைம்மிக உறுதர ஆனா அரும் படர் தலைத் தந்தோய்: நெடும் பெருங் குன்றத்து இருள் அளை மாய் கற்போல மாய்க தில்.

(வி - ரை.) நன்னன் உதியன் என்பதனால், நன்னனுக்குச் சேர மன்னர் சார்பினால் உதியன் என்பதோர் பெயர் எய்திற்றுப் போலும். அருங்கடிப் பாழி - அரிய அரண்வலியுடைய பாழிச் சிலம்பு; அச் சிலம்பிலுள்ள நகருமாம். பாழியில் வேளிர் ஓம்பினர் வைத்த பொன்னினும் அருமை நற்கறிந்தும் என்றது, தலைவியைத் தாயர் முதலியோர், பிறர் அணுகாவாறு அருங்கடிப் படுத்துள்ளார் என்பதனை அறிந்தும் என்றபடி. குறுமகள் நல்லகம் நசைஇ என்பதற்குத் தலைவியது நல்ல மனையின்கண் அவளைக்கூட விரும்பி என்றுரைத்தலுமாம். தலைவியை இரவுக்குறியில் எய்த விரும்பி ஏதமிக்க நெறியிடை இராப்போதில் பலகாலுஞ் சென்று அவளைக் கூடப்பெறாது மீண்டும் வருந்துதல் கண்டார்க்கு இரக்கத்தையும், அவளைக் கூடப்பெறாமையால் காமம் கைமிக்கு எழுந்து வருத்துதல் உலகத்தோர்க்கெல்லாம் பெரிய இகழ்ச்சியையும் தருவனவாயின என்று தலைவன் நெஞ்சிற்குக் கூறி, நீ இன்ன தீமையையுடையை ஆதலின், இருள் அளையில் ஒளி மாழ்கிக் கிடக்கும் மணிபோல மறைந்தொழிக என்றான் என்க. இதனால் தலைவன் இரவுக்குறியிற் சென்று அல்லகுறிப்பட்டு மீண்டமை பெற்றாம்.

(மே - ள்.) *'மெய்தொட்டுப் பயிறல்' என்னுஞ் சூத்திரத்து இப்பாட்டு நெஞ்சினை இரவு விலக்கியது என்பர், நச்.

---

259. பாலை

[உடன்போக்கு நேர்ந்த தோழி தலைமகட்குச் சொல்லியது.]

வேலும் விளங்கின வினைஞரு மியன்றனர்
தாருந் தையின தழையுந் தொடுத்தன
நிலநீர் அற்ற வெம்மை நீங்கப்
பெயல்நீர் தலைஇ உலவையிலை நீத்துக்
குறுமுறி யீன்றன மரனே நறுமலர்
வேய்ந்தன போலத் தோன்றிப் பலவுடன்
தேம்படப் பொதுளின பொழிலே கானமும்
நனிநன் றாகிய பனிநீங்கு வழிநாள்
பாலெனப் பரத்தரு நிலவின் மாலைப்

* தொல். கள. கக.

போதுவந் தன்று தூதே நீயும்
கலங்கா மனத்தை யாகி யென்சொல்
நயந்தனை கொண்மோ நெஞ்சமர் தகுவி
தெற்றி உலறினும் வயலை வாடினும்
நொச்சி மென்சினை வணர்குரல் சாயினும்
நின்னினும் மடவள் நனிநின் நயந்த
அன்னை அல்லல் தாங்கிநின் ஐயர்
புலிமருள் செம்மல் நோக்கி
வலியாய் இன்னுந் தோய்கநின் முலையே.

—கயமனார்.

(சொ - ள்.) கஉ. நெஞ்சு அமர் தகுவி - என் உள்ளம் விரும்பும் தகுதியை யுடையாய்!

க—உ. வேலும் விலங்கின - வேல்களும் நெய் பூசப்பெற்று விளக்கமுற்றன, வினைஞரும் இயன்றனர் - வேலாளரும் புறப்பட்டனர், தாரும் தையின - மாலைகளும் கட்டப்பெற்றன, தழையும் தொடுத்தன - தழையுடைகளும் தொடுக்கப்பட்டன;

ங—க0. நிலம் நீர் அற்ற வெம்மை நீங்க - நிலமானது நீர் ஒழிந்ததாலாய வெப்பம் நீங்க, பெயல் நீர் தலைஇ - மழைநீர் பொருந்தலின்; உலவை இலை நீத்த குறமுறி ஈன்றன மரன் - மரங்கள் கிளைகளிலுள்ள முதிர் இலைகளை உதிர்த்துக் குறிய தளிர்களை ஈன்றன; பொழில் - பொழிலின்கண், நறுமலர் - நறிய மலர்கள், வேய்ந்தன போலத் தோன்றி - புனையப்பட்டன போலத் தோன்றி, பல உடன் தேம்படப் பொதுளின - பலவும் ஒருங்கே தேன் பொருந்தச் செறிந்தன; கானமும் கனி நன்று ஆகிய - காடுகளும் மிகவும் நல்லன ஆயின; (இங்ஙனமெல்லாம் சிறக்க,) பனிநீங்கு வழிநாள் - பனிக்காலம் கழிந்த பின்னுளாகிய இளவேனிற்கண், பால் எனப் பரத்தரு நிலவின் மாலைப்போது - பால் என்னப் பரவிய நிலாவினைக்கொண்ட மாலைப் பொழுதானது, அது வந்தன்று - அதாக வந்தது;

கங—எ. தெற்றி உலறினும் - மேடையிலுள்ள பூஞ்செடிகள் காய்ந்தாலும், வயலை வாடினும் - வயலைக்கொடி வாடுதலுற்றாலும், நொச்சி மென்சினை வணர்குரல் சாயினும் - நொச்சியின் மெல்லிய கிளைகளிலுள்ள வளைந்த கதிர்கள் வாடிக் கவிழ்ந்தாலும் அவை கருதியும், நின்னினும் மடவள் - நின்னைக் காட்டிலும் மடப்பத்தையுடையளாகி, நனி நின் நயந்த அன்னை அல்லல் தாங்கி - நின்னை மிக விரும்பிய அன்னை எய்தும் துன்பத்தை உளத்திற்கொண்டும், நின் ஐயர் புலிமருள் செம்மல் நோக்கி - நின் தமையன்மாரது புலியை யொத்த அச்சம் தரும் தலைமையை நோக்கியும்;

௧௦—௨. *நீயும் கலங்கா மனத்தையாகி* - நீதான் கலங்காத மனத்தினையுடையையாகி, *என் சொல் நயந்தனை கொண்மோ*-என் சொல்லை விரும்பி ஏற்றுக்கொள்வாயாக;

௧௮. *வலியாய்* - உடன் போக்கினைத் துணிவாயாக; '*இன்னும் தோய்க நின் முலையே* - இன்னும் நின் முலை என் மார்பிலே பொருந்த முயல்வாயாக.

(முடிபு) நெஞ்சமர் தகுவி! வேலும் விளங்கின, வினைஞரும் இயன்றனர், தாரும் தையின, தழையுந் தொடுத்தன; மரம் குறுமுறி ஈன்றன; பொழிலில் நறுமலர் பொதுளின; கானமும் நனி நன்குகிய; மாலைப் போது தூது வந்தன்று; நீயும் உலறினும் வாடினும் சாயினும் அவ்வை கருதியும், அன்னை அல்லல் தாங்கியும், நின்னையர் செல்லல் நோக்கியும் கலங்கா மனத்தை யாகி என் சொல் நயந்தனை கொண்மோ; வலியாய்; இன்னும் நின்முலை தோய்க.

(வி - ரை.) வேலும் விளங்கின வினைஞரும் இயன்றனர் என்பது, தலைவன் புறப்படுவதற்கும். தாரும் தையின தழையும் தொடுத்தன என்பது, தலைவி புறப்படுவதற்கும், ஏற்ற கருவிகள் அமைந்தமை கூறியபடியாம். மரன் குறுமுறி ஈன்றன, பொழிலில் நறுமலர் பொதுளின, கானமும் நனி நன்குகிய என்பன, செல்லும் நெறிகள் ஏதம் விளைக்காது இன்பம் விளைத்தற்குரியவாதல் கூறியபடி. பனி நீங்கு வழிநாள் பாலெனப் பரந்தரு நிலவின் மாலைப்போது என்பது செல்லுதற்குரிய பொழுதும் இன்பம் பயப்பதாதல் தெரிவித்தபடி. போது தூது வந்தன்று என்பது, இக்காலத்தே நீவிர் ஒருங்கு கூருவீராயின் பேரின்பம் துய்ப்பீர் என்று அழைப்பது போன்றதாயிற்று என்றவாறு. இங்ஙனம் யாவும் இன்பம் பயப்பனவாக அமைந்திருத்தலின். தெற்றி உலறுதல் முதலியவற்றையும் அன்னை அல்லலையும் நின்னையர் செம்மலையும் நோக்கி உள்ளம் கலங்கி உடன்போக்கால் எய்தும் பேரின்பத்தை இழத்தல் தகவன்று என்பாள், 'நீயும் கலங்கா மனத்தையாகி என் சொல் நயந்தனை கொண்மோ' எனக்கூறி, உடன் போக்கிற்கு ஒருப்படுத்துவாள் ஆயினுள் என்க. இளையரும் என்னும் பாடத்திற்கும் ஏவலாளர் என்பதே பொருள். வலிமா என்பது பாடமாயின், மா அசை. அலமரல் என்னும் பாடத்திற்கு, நோக்கி மனஞ்சுழலாதே என்று உரைக்க. இன்னும் தோய்க நின் முலை என்றது தோழி தலைவியை முயங்கியபடி கூறிற்று.

(மே - ள்.) *'தலைவரும் விழுமநிலையெடுத் துரைப்பினும்' என்னுஞ் சூத்திரத்து, இவ் வகப்பாட்டு போக்குதற்கண் முயங்கிக் கூறியது என்றனர், நச்.

---

* தொல். அகத். ௨௧.

260. நெய்தல்

[இரவுக் குறிக்கண் தலைமகன் சிறைப்புறமாகத் தோழியாற் சொல்லெடுக்கப்பட்டுத் தலைமகள் சொல்லியது.]

மண்டிலம் மழுக மலைநிறங் கிளர
வண்டினம் *மலர்பாய்ந்து ஊத மீமிசைக்
கண்டற் கானற் குருகினம் ஒலிப்பக்
கரையா டலவன் அளைவயிற் செறியத்
திரைபா டவியத் திமில்தொழில் மறப்பச்
செக்கர் தோன்றத் துணைபுணர் அன்றில்
எக்கர்ப் பெண்ணை அகமடல் சேரக்
கழிமலர் கமழ்முகங் கரப்பப் பொழில்மனைப்
புன்னை நறுவீ பொன்னிறங் கொளாஅ
எல்லை பைப்பயக் கழிப்பி எல்லுற
†பாங்கா குவன்கொல் தானே நீங்காது
முதைமாந்து உறையும் மூரலவாய் முதுபுள்
கதுமெனக் குழறுங் கழுதுவழங் கரைநாள்
நெஞ்சுநெகிழ் பருவரல் செய்த
அன்பி லாளன் அறிவுநயந் தேனே.

—மோசிக் கரையனார்.

(சொ – ள்.) ௧—௧௧. மலைநிறம் கிளர - மலைகள் செக்கர் வானின் ஒளி பெறவும், வண்டு இனம் மலர் பாய்ந்து ஊத - வண்டின் கூட்டம் மலர்களிற் பாய்ந்து ஊதவும், மீ மிசை கண்டல் கானல் குருகு இனம் ஒலிப்ப - தாழைகளையுடைய சோலையின் மேலேயிருந்து நாரையினங்கள் ஒலிக்கவும், கரை ஆடு அலவன் அளைவயின் செறிய - கடற்கரையில் விளையாடிய நண்டு வளையகத்தே செல்லவும், திரைபாடு அவிய - அலைகள் ஒலித்தல் இல்லையாகவும், திமில் தொழில் மறப்ப - மீன் படகுகள் வேட்டமாடலை நீங்கவும், செக்கர் தோன்ற - செவ்வானம் தோன்றாநிற்க, துணை புணர் அன்றில் - தன் துணையைப் பிரியாது சேர்ந்திருக்கும் அன்றிற் பறவை, எக்கர் பெண்ணை அகமடல் சேர - மணல்மேட்டிலுள்ள பனைமரத்தின் உள் மடலிற் சேர்ந்து தங்கவும், கழிமலர் கமழ முகம் கரப்ப - கழியிடத்து மலர்கள் மணக்கும் இதழ்கள் குவியப்பெறவும், பொழில் மனை புன்னை நறுவீ - பொழிற் சேர்ந்த மனைக்கண் உள்ள புன்னையின் நறிய மலர், பொன் நிறம்

(பாடம்) * மலர் பாய்ந்து அசைய
† யாங்கா குவங்கொல் யானே.

கொளாஅ - பொன்னின் நிறத்தினைக்கொண்டு விரியவும், எல்லை பைபய கழிப்பி - பகற்பொழுதை மெல்ல மெல்லப் போக்கி, மண்டிலம் மழுக - ஞாயிற்று மண்டிலம் வெம்மை குறைய, எல்உற - இரவு வந்தக்கால், யாங்கு ஆகுவள் கொல்தான் - இவள் என் நிலையினை அடைவாளோ (என்று தோழி உரைப்ப);

௧௧—௩. நீங்காது முதுமரத்து உறையும் முரவுவாய் முதுபுள் - முதிய மரத்தின்கண் எப்பொழுதும் நீங்காது தங்கும் முழங்கும் வாயினையுடைய பேராந்தை, கதுமெனக் குழறும் - விரைந்து குழறியொலிப்பதும், கழுது வழங்கு அரைநாள் - பேய் இயங்குவதுமாகிய பாதியிரவில், நெஞ்சு நெகிழ் பருவரல் செய்த - மனம் உருகும் துன்பினைச் செய்த, அன்பு இலாளன் அறிவு நயந்தேன் - அன்பில்லாதவனது அறிவுடைய மொழியை மெய்ம்மை என விரும்பினேன் என்று தலைவி கூறினள் என்க.

(முடிபு) மலைநிறங் கிளர, வண்டினம் மலர்பாய்ந்து ஊத, குருகினம் ஒலிப்ப, அலவன் அளைவயிற் செறிய, திரை பாடு அவிய, திமில் தொழில் மறப்ப, செக்கர் தோன்ற, அன்றில் பெண்ணை அகமடல் சேர, மலர்முகங் கரப்ப, புன்னை நறு வீ பொன்னிறம் கொள்ள, எல்லை பைபயக் கழிப்பி மண்டிலம் மழுக எல்லுற, தான் யாங்காகுவள்கொல் (என்று தோழி உரைப்ப,) கழுது வழங்கு அரைநாள் பருவரல் செய்த அன்பிலாளன் அறிவு நயந்தேன்; (எனத் தலைவி கூறினள்.)

(வி - ரை.) மலைநிறங்கிளர்தல் முதல் புன்னை வீ பொன்னிறங் கொள்ளல் ஈறாகவுள்ளவை எற்பாட்டின் நிகழ்ச்சிகளாம். கொளாஅ - கொள்ள எனத் திரிக்க. மண்டிலம் எல்லை கழிப்பி மழுக எனக் கூட்டுக. மண்டிலம் மழுக என்பதனைக் கொண்டுகூட்டாது இடர்தாங்கு நிறீஇ, எல்லானது எல்லை கழிப்பி உற என்று உரைத்தலுமாம். தலைவி எய்தும் ஆற்றாமைக்கு இரங்கி, யாங்காகுவள் கொல்தானே எனத் தோழி கூற, அவள் தான் கொண்ட கருத்தினைக் கூறி முடிக்கு முன், அன்பிலாளன் அறிவு நயந்தேன் என்று தலைமகள் கூறினள் என்க. எனவே, எனது அறியாமையால் யான் எய்தும் துன்பத்திற்கு நீ வருந்துவதனாற் பயன் என்னை என்றாளாம்.

இச் செய்யுளில் திரைபாடவிய என்னும் ஐந்தாவது அடி, ஐந்தாவதாகவும் பழைய பதிப்புக்களில் காணப்படினும், *"அடிதொறும் தலையெழுத் தொப்பது மோனை" என்னுஞ் சூத்திர உரைக்கண் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் 'கண்டற்கானல்' 'கரையாடலவன்' என்னும் அடிகளை அடிமோனைத்தொடைக்கு உதாரணமாகக் காட்டியிருத்தலின், இங்ஙனம் பாடங் கொள்ளலே பொருத்தமாம். பொருளிதி

* தொல் - செய். ௯௨.

காரத்தைப் பின்னர் அச்சிட்டவர்கள் இவ்வடிகள் அடிமோனைத் தொடைக்கு உதாரணமாதலைக் கருதாமலும் தாமோதரம் பிள்ளையவர்கள் பதிப்பை நோக்காமலும் அகநானூற்றின் பழைய பதிப்புக்களை நோக்கித் தவறாகப் பதிப்பித்துள்ளனர் என்க.

(மே - ள்.) *'எழுத்துமுதலா ஈண்டிய அடியில்' என்னுஞ் சூத்திரத்து எழுத்து முதலா ஈண்டிய அடியில் குறித்த பொருளை முடியநாட்டுதல் என்பதற்கு உதாரணம் காட்டுமிடத்தே, 'மண்டிலம் மழுக ......குருகினம் ஒலிப்ப' என்னும் பகுதியை எடுத்துக் காட்டி, இது இருசீரானும் முச்சீரானும் நாற்சீரானும் குறித்த பொருளை முடியநாட்டினவாறு கண்டுகொள்க என்றார், பேரா.

†'அடிதோறும் தலையெழுத் தொப்பது மோனை' என்னுஞ் சூத்திரத்தில் 'கண்டற்...ஒலிப்ப, கரையா டலவன்...செறிய' என்பது அடிதோறும் முதலெழுத்தொன்றி மோனைத்தொடை வந்தவாறு என்றார், பேரா.

அச் சூத்திரத்தில், அதற்கு இவ்வடிகளைக் காட்டி, இது சீர்வகையடி தொடுத்தது என்றார், நச்.

---

261. பாலை

[புணர்ந்துடன் போயினகாலை இடைச்சுரத்துப் பட்டதனை மீண்டு வந்த காலத்துத் தோழிக்குத் தலைமகன் சொல்லியது.]

கானப் பாதிரிக் கருந்தகட்டு ஒள்வீ
வேனில் அதிரலொடு விரைஇக் காண்வரச்
சில்லைங் கூந்தல் அழுத்தி மெல்லிணர்த்
தேம்பாய் மராஅம் அடைச்சி வான்கோல்
இலங்குவளை தெளிர்ப்ப வீசிச் சிலம்புநகச்
சின்மெல் ஒதுக்கமொடு மென்மெல இயலிநின்
அணிமாண் சிறுபுறங் காண்கம் சிறுநனி
ஏகென ஏகல் நாணி ஒய்யென
மாகொள் நோக்கமொடு மடங்கொளச் சாஅய்
நின்றுதலை யிறைஞ்சி யோளே அதுகண்டு
யாமுந் துறுதல் செல்லேம் ஆயிடை
அருஞ்சுரத் தல்கி யேமே இரும்புலி
களிறட்டுக் குழூஉம் ஓசையுங் களிபட்டு

* தொல் - செய். எஅ. † தொல் - செய். கூ.

வில்லோர் குறும்பில் ததும்பும்
வல்வாய்க் கடுந்துடிப் பாணியுங் கேட்டே.

—பாலைபாடிய பெருங்கடுங்கோ.

(சொ - ள்.) கஉ—கடு. (தோழி!) இரும்புலி களிறு அட்டு குழுமும் ஓசையும் - பெரிய புலியானது களிற்றினைக் கொன்று முழங்கும் ஓசையினையும், வில்லோர் குறும்பில் களிபட்டு ததும்பும்-வில்லினையுடைய கானவரது சிறூரில் (அவர் தாம் கள்ளுண்டு) களிப்புநலால் ஒலிக்கும்; வல்வாய் கடு துடி பாணியும் கேட்டு - வலிய முகத்தினையுடைய கடிய துடியின் ஒலியினையும் யாம் கேட்டமையின் (தலைவி அஞ்சுவாளென உட்கொண்டு);

க—அ. வேனில் கானப் பாதிரி கரு நுகட்டு ஒள் வீ - இவ்வேனிலிற் பூத்துள காட்டிலுள்ள பாதிரியின் கரிய புறவிதழையுடைய ஒளி பொருந்திய மலர்களை, அதிரலொடு விரைஇ - புனலி மலரொடு கலந்து, காண்வர - அழகு பொருந்த, சில் ஐம் கூந்தல் அழுத்தி - சில வாய ஐவகைப்படும் கூந்தலிற் செருகி, மெல் இணர் தேம்பாய் மராஅம் அடைச்சி - மெல்லிய கொத்துக்களிலுள்ள தேன் பாயும் மராமரத்தின் மலர்களைச் சூடி, வான் கோல் இலங்கு வளை தெளிர்ப்ப வீசி - பெரிய திரண்ட ஒளி பொருந்திய வளைகள் ஒலிக்கக் கையை வீசி, சிலம்பு நக சில்மெல் ஒதுக்கமொடு மெல் மெல இயலி - சிலம்பொலி விளங்க சிலவாய மெல்லிய நடைகொண்டு மெல்ல மெல்லச் சென்று, நின் அணிமாண் சிறுபுறம் காண்கம் - நினது அழகு மாண்புற்ற முதுகினை யாம் காண்பேமாக, சிறு நனி ஏக என - சிறிதுதூரம் முன் நடக்கவென யாம் கூற;

அ—கO. ஏகல் நாணி - அங்ஙனம் முன்னே செல்லுதலை அவள் நாணி, ஒய்யென - விரைவாக, மா கொள் நோக்கமொடு மடம் கொளச் சாஅய் நின்று - மானை ஒத்த நோக்கத்தோடு மடப்பம் பொருந்த வளைந்து நின்று, தலை இறைஞ்சியோள் - தலைவணங்கினள்;

கO—உ. அதுகண்டு—, யாம் முந்துறுதல் செல்லேம் - யாம் முன்னே செல்லுதலும் இல்லேமாய், ஆயிடை அரும் சுரத்து அல்கியேம் - அரிய சுரமாய அவ்விடத்தே யாங்கள் தங்குவேம் ஆயினேம்.

(முடிபு) புலி களிறட்டுக் குழுமும் ஓசையும் வில்லோர் குறும்பில் ததும்பும் கடுந்துடிப் பாணியும் கேட்டு, தலைவி அஞ்சுவாளென உட்கொண்டு. 'நின் அணி மாண் சிறு புறம் காண்கம்; சிறு நனி, ஏக' என, ஏகல் நாணி ஒய்யென மாகொள் நோக்கமொடு மடங்கொளச் சாஅய் நின்று தலை இறைஞ்சியோள்; அது கண்டு யாம் முந்துறுதல் செல்லேம். ஆயிடை அருஞ்சுரத்து அல்கியேம்.

(வி - ரை.) காண்கம் - யாம் காண்டற்கு. ஏகென - முன்னர் ஏகென்று உரைக்க என்க. காட்டிலே களிற்றைக்கொன்று புலி முழம்

கும் ஒலிசையையும் கானவரது அடி ஓசையையும் கேட்ட தலைவன் தனக்குப் பின்னே வரும் தலைவி அவற்றால் அஞ்சுவள் என உட்கொண்டு, அதனைப் புலப்படுத்தாமல், வேறோராற்றால் தலைவியை முன் னடக்கும்படி கூறக் கருதி, நினது மென்னடையினையும் அணிமாண் சிறுபுறத்தினையும் யாம் கண்டு மகிழுமாறு சிறிது முற்படச் செல்க என்றான்; தலைவன் தன்னை இங்ஙனம் பாராட்டுவதைக் கேட்ட தலைவி நாண்சிறந்து தலை இறைஞ்சி நின்றாள்; அந்நிலையில் தலைவன் வேறு செய்தல் கூடாமையின் இடைச்சுரத்தே தலைவியுடன் சிறிது பொழுது தங்குவானாயினன்; இங்ஙனம் நிகழ்ந்ததனை மீண்டுவந்தகாலை தோழிக்குத் தலைவன் கூறினான் என்க. வளைதெளிர்ப்ப வீசிச் சிலம்பு நக சின்மெல் லொதுக்கமொடு மென்மெல இயலி என்றதனால், தலைவியது நடையின் அழகும், கூந்தல் அழுத்தி, மராஅம் அடைச்சி என்பதனாலும், அணி மாண் சிறு புறம் என்பதனாலும் தலைவியது பிற்பக்கத்து அழகும் பெற்றாம். காண்கம் சிறுநனி ஏக என்றமையால், காண்டற்கு ஏற்ற அணிமையில் முன்னர்ச் செல்லுக என்றானாயிற்று. மாகொள் நோக்கம் - மாவடுவையொத்த கண்ணின் பார்வை யென்றுமாம்.

(மே-ள்.) *"மரபுநிலை திரியா மாட்சிய வாகி" என்னுஞ் சூத்திரத்து, இச்செய்யுள் மீண்டு வந்தோன் தோழிக்கு உரைத்தது என்றார், நச்.

---

262. குறிஞ்சி

[இரவுக்குறிக்கண் தலைமகளைப் புணர்ந்து நீங்குந் தலைமகன் தன் னெஞ்சிற்குச் சொல்லியது.]

முதைபடு பசுங்காட்டு அரில்பவர் மயக்கிப்
பகடுபல பூண்ட உழவுறு செஞ்செய்
இடுமுறை நிரம்பி ஆகுவினைக் கலித்துப்
பாசிலை அமன்ற பயறுஆ புக்கென
வாய்மொழித் தந்தையைக் கண்களைந் தருளாது
ஊர்முது கோசர் நவைத்த சிறுமையிற்
கலத்து முண்ணாள் வாலிது முடாஅள்
சினத்திற் கொண்ட படிவம் மாறாள்
மறங்கெழு தானைக் கொற்றக் குறும்பியன்
செருவியல் நன்மான் திதியற் குரைத்தவர்
இன்னுயிர் செகுப்பக் கண்டுசின மாறிய
அன்னி மிஞிலி போலமெய்ம் மலிந்து

* தொல். அகத். ௪௫,

ஆறு வுவகையே மாயினெம் பூமலிந்து
அருவியார்க்கும் அயந்திகழ் சிலம்பில்
நுண்பல் துவலை புதன்மிசை நனைக்கும்
வண்டுபடு நறவின் வண்மகிழ்ப் பேகன்
*கொண்டல் மாமலை நாறி
அந்தீங் கிளவி வந்த மாறே.

—பரணர்.

(சொ - ள்.) ௧௩—௮. பூ மலிந்து அருவி ஆர்க்கும் அயம் திகழ் சிலம்பில் - பூக்களை நிறையக்கொண்டு அருவி ஒலித்து விழும் சுனைகள் விளங்கும் பக்கமலையில் (எழும்), நுண் பல் துவலை - நுண்ணிய பல வாய துளிகள், மிசை புதல் நனைக்கும் - அம் மலைமீதுள்ள புதல்களை யெல்லாம் நனைக்கும், வண்டுபடு நறவின் - வண்டு பொருந்தும் மதுவினை யும், வண் மகிழ்ப் பேகன் - வண்மையால் எய்தும் மகிழ்ச்சியையும் உடைய பேகன் என்பானது, கொண்டல் மாமலை நாறி - மேகம் தவழும் பெரிய மலைபோலும் நாற்றம் உடையளாய், அம் தீம் கிளவி வந்தமாறே - அழகிய இனிய சொல்லையுடைய நம் தலைவி வந்து புணர்ந்தமையால்;

௧—௪. முதை படு பசுங் காட்டு - பழமை மேவிய பசிய காட்டிலே, அரில் பவர் மயக்கி - பின்னிய கொடிகளை உழக்கி, பகடு பல பூண்ட உழவு உறு செஞ் செய் - எருதுகள் பூண்ட பல ஏரால் உழவினைப் பொருந்திய சிவந்த புன்செய் நிலத்தில், இடு முறை நிரம்பி - இடப் பெறுவன முறையே நிரம்ப இடப்பெற்று, ஆகு வினைக் கலித்து - பொருந்திய வினையுடைமையால் தழைத்து, பசு இலை அமன்ற பயறு - பசிய இலைகள் நிறைந்த பயற்றில், ஆ புக்கென - பசு புகுந்து மேய்ந்த தாக (அதன்பொருட்டு);

௫—௬. ஊர் முது கோசர் - பழமை வாய்ந்த ஊரிலுள்ள கோசராவார், வாய் மொழித் தந்தையை அருளாது கண் களைந்து - வாய்மை மிக்க தந்தையை அருளாமல் கண்ணைப் பிடுங்கி, நவைத்த சிறுமையின் - துன்புறுத்திய கொடுமைபற்றி;

௭—௮. கலத்தும் உண்ணாள் வாலிதும் உடாஅள் - கலத்திலிட்டு உண்ணாமலும் தூயதாய உடையினை உடாமலும், சினத்தில் கொண்ட படிவம் மாறாள் - சினத்தினால் மேற்கொண்ட நோன்பிற்குரிய வடிவம் மாறாமலும் இருந்து;

௯—௧௧. மறம்கெழு தானை கொற்றக் குறும்பியன் - வீரம் பொருந்திய படையினைக் கொண்ட வெற்றி பொருந்திய குறும்பியனாகிய, செரு இயல் நல்மான் திதியற்கு உரைத்து - போர்த்திறம் வாய்ந்த நல்ல குதிரையையுடைய திதியன் என்பானுக்குக் கூறி, அவர் இன் உயிர்

(பாடம்) * கொண்டகன் மாமலை.

செருப்பக் கண்டு-அக் கோசரது இனிய உயிர்களைப் போக்கக் கண்டு, சினம் மாறிய அன்னி மிஞிலிபோல - சினம் ஒழியப்பெற்று மகிழ்ந்த அன்னி மிஞிலி என்பாளைப் போல, மெய் மலிர்ந்து ஆனு உவகையேம் ஆயினெம் - உடல் பூரிக்கப்பெற்று அமையாத மகிழ்ச்சி உடையேம் ஆயினம்.

(முடிபு) சிலம்பில் பேகன் மாமலை நாறி அந்தீங்கிளவி வந்த மாறே, அன்னி மிஞிலி போல மெய்ம்மலிந்து ஆனு உவகையேம் ஆயினெம்.

பயறு ஆ புக்கெனத் தந்தையைக் கண் களைந்து அருளாது முதுகோசர் நவைத்த சிறுமையின், உண்ணாள், உடாஅள், படிவம் மாருள், திதியற்கு உரைத்து, அவர் உயிர் செகுப்பக் கண்டு சினம் மாறிய அன்னி மிஞிலி போல என்க.

(வி - ரை.) பசுங் காடு என்றமையால் மழை பெய்து புல் முதலாயின தழைத்த காடு என்றபடியாம். அரில் பவர் மயக்கி என்றது, கொடி முதலாயின மண்ணிற் புதைந்து மடியுமாறு செய்து என்றபடி. பல - பல ஏர். இடு முறை நிரம்புதலாவது - பொருந்திய எருக்களை நிரப்ப இடுதல். ஆகு வினை-களை கட்டல், நீர்ப்பாய்ச்சலாகிய தொழில். பயறு - கூலப்பொருள்களுள் ஒன்று. வாய் மொழித் தந்தை என்றதனால், தன் பசு புகுந்து மேய்ந்ததனை மறையாது உண்மையுரைத்தனன் என்பது பெற்றும். கண் களைந்து அருளாது என்றதனை, அருளாது கண்களைந்து என்று மாறுக. பயற்றிலே ஆ புகுந்த சிறு பிழைக்காக உண்மையுரைத்த தந்தையை அருளின்றிக் கண் களைதலாகிய கொடுஞ் செயலைச் செய்தமையால், அன்னிமிஞிலி அதனைப்பொறுக்கலாற்றாது, அன்னோரைக் கொல்வித்தன்றிக் கலத்தினும் உண்ணேன், வாலிதும் உடேன் என வஞ்சினம் கூறித் தவக்கோலம் தாங்கி நின்று, திதியன் என்பானுக்கு உரைத்து, அவனால் அக் கோசர் உயிரைக் கொல்வித்துச் சினம் மாறினள் என்க. சினம் மாறிய என்றது, சினம் நீங்கி உவகை எய்திய என்றபடி. அந்தீங் கிளவி: ஆகுபெயர். 'நிரம்பியாகு' என்பது 'நிரம்பிய வாகு' என்றிருக்க வேண்டும் என ஒருசாரார் கூறியது பொருந்துவதன் றென்க.

---

263. பாலை

[மகட் போக்கிய தாய் சொல்லியது.]

தபங்குதிரைப் பெருங்கடல் உலகுதொழத் தோன்றி
வயங்குகதிர் விரிந்த உருகெழு மண்டிலம்
கயங்கண் வறப்பப் பாஅய் நன்னிலம்
பயங்கெடத் திருகிய பைதறு காலை
௫ வேறுபல் கவலைய வெருவரு வியன்காட்டு

ஆறுசெல் வம்பலர் வருதிறம் காண்மார்
வில்வல் ஆடவர்* மேலான் ஒற்றி
நீடுநிலை† யாஅத்துக் கோடுகொள் அருஞ்சுரம்
கொண்டனன் கழிந்த வன்கண் காளைக்கு
அவள்துணிவு அறிந்தனென் ஆயின் அன்னோ
ஒளிறுவேல் கோதை ஓம்பிக் காக்கும்
வஞ்சி யன்னவென் வளநகர் விளங்க
இனிதினிற் புணர்க்குவென் மன்னே துனியின்று
திருநுதற் பொலிந்தவென் பேதை
வருமுலை முற்றத் தேமுறு துயிலே.

—கருவூர்க் கண்ணம்பாளனார்.

(சொ - ள்.) ௧—௪. நயங்கு திரைப் பெரு கடல் உலகு தொழத் தோன்றி - அசையும் அலைகளையுடைய பெரிய கடலில் உயர்ந்தோர் தன்னை வணங்கத் தோன்றி, வயங்கு கதிர் விரிந்த உருகெழு மண்டிலம் - விளங்கும் கதிர்கள் விரியப்பெற்ற உட்குப் பொருந்திய ஞாயிற்று மண்டிலம், கயம் கண் வறப்பப் பாஅய் - குளங்கள் தம்மிடத்துள்ள நீர் வற்றிடப் பரந்து, நல் நிலம் பயம் கெடத் திருகிய பைதறு காலை - நல்ல நிலங்களின் வளம் கெடுமாறு முரணிய பசுமையற்ற வேனிற் காலத்தே;

௫—௮. வேறு பல் கவலைய வெருவரு வியன் காட்டு - வேறுபட்ட பலவாய கவர்த்த நெறிகளையுடைய அச்சம் தரும் பெரிய காட்டகத்தே, ஆறு செல் வம்பலர் வருதிறம் காண்மார் - வழிச்செல்லும் புதியர் வரும் இயல்பினைக் காணும்பொருட்டு, வில்வல் ஆடவர் - வில் வன்மையுடைய ஆறலைப்போராய ஆடவர், மேல் ஆன் ஒற்றி - மேலிடத்தே மறைந்து, நீடுநிலை யாஅத்துக் கோடுகொள் அருஞ் சுரம் - நீண்ட நிலை வாய்ந்த யா மரத்தினது கோட்டினை இடமாகக்கொள்ளும் அரிய சுரத்தே;

௯—௧௦. கொண்டனன் கழிந்த வன்கண் காளைக்கு - என்மகளை உடன்கொண்டு போன திண்ணியனாகிய காளையிடத்தே, அவள் துணிவு அறிந்தெனென் ஆயின் - அவள் கொண்டுள்ள அன்பின் உறுதியை யான் அறிந்தேன் ஆயின், அன்னோ - ஐயோ!

௧௧—௧௫. ஒளிறு வேல் கோதை ஓம்பிக் காக்கும் வஞ்சி அன்ன - ஒளிவீசும் வேலையுடைய சேரன் பாதுகாத்து ஆளும் வஞ்சிபோன்ற, என் வளநகர் விளக்க - எனது வளம் பொருந்திய மனை சிறப்புற்று விளங்க, துனியின்று - வெறுப்பின்றி, திரு நுதல் பொலிந்த என் பேதை வருமுலை முற்றத்து - அழகிய நெற்றியாற் பொலிவுற்ற என்

(பாடம்) * மேலாள் ஒற்றி. † மராஅத்து.

மகளது வளரும் முலைப்பரப்பில், ஏம் உறு துயில் - அவன் தலைவன் இன்புற்றுத் துயிலும் துயிலினை, இனிதினிற் புணர்க்குவென் - (வதுவை நெறியால்) இனிமையுறக் கூட்டிவைத்திருப்பேன், அன்னோ - அந்தோ! மன் - அது கழிந்ததே!

(முடிபு) உருகெழு மண்டிலம் திருகிய பைது அறு காலை; வெருவருவியன்காட்டு அருஞ்சுரம் கொண்டனன் கழிந்த காளைக்கு அவள் துனிவு அறிந்தனென் ஆயின், அன்னோ! என் வளநகர் விளங்க, துனியின்றி, என்பேதை வருமுலை முற்றத்து ஏமுறு துயில் இனிதினிற் புணர்க்குவென் மன்.

(வி - ரை.) கயம் கண்: கண் அசையுமாம்; *'மீன்கணற்றதன் கனையே', என்புழிப்போல. ஒற்றிக் கோடுகொள் என்பதற்குக் கோட்டினை இடமாகக்கொண்டு மறைந்து அறியும் என்பது கருத்தாகக் கொள்க. வன்கண் - கலங்காமை; †'வன்கண் குடிகாத்தல்' என்புழி அப்பொருட்டாதல் காண்க. காளைக்கு - காளை திறத்தில்; வேற்றுமை மயக்கம். அன்னோ - இரங்கற் பொருள்தரும் இடைச்சொல். ஓம்பிக் காக்கும் என்றது - குறிக்கொண்டு காக்கும் என்றலுமாம். குறிக்கொண்டு காத்தலாவது, ‡'வறிஞன் ஓம்புமோர் செய்யெனக் காத்தல்.'

264. முல்லை

[பருவங் கண்டு வன்புறை யெதிரழிந்து தலைமகள் தோழிக்குச் சொல்லியது; தோழி தலைமகட்குச் சொல்லியதுமாம்.]

மழையில் வானம் மீனணிந் தன்ன
குழையமல் முசுண்டை வாலிய மலர
வரிவெண் கோடல் வாங்குகுலை வான்பூப்
பெரிய சூடிய கவர்கோற் கோவலர்
எல்லுப்பெயல் உழந்த பல்லான் நிரையொடு
நீர்திகழ் கண்ணியர் ஊர்வயின் பெயர்தர
நனிசேண் பட்ட மாரி தளிசிறந்து
ஏர்தரு கடுநீர் தெருவுதொறு ஒழுகப்
பேரிசை முழக்கமொடு சிறந்துநனி மயங்கிக்
கூதிர்நின் றன்றாற் பொழுதே காதலர்
நம்நிலை அறியா ராயினுந் தம்நிலை
அறிந்தனர் கொல்லோ தாமே ஓங்குநடைக்
காய்சின யானை கங்குல் சூழ

* புறம். ௧0௯. † குறள். ௬௩௨. ‡ கம்ப. பால. அரசியல்: ௬௨.

அஞ்சுவர இறுத்த தானை
வெஞ்சின வேந்தன் பாசறை யோரே.

—உம்பற்காட்டு இளங்கண்ணனார்.

(சொ - ள்.) ௧—௰. மழை இல் வானம் மீன் அணிந்தன்ன - மேகம் இல்லாத வானம் விண்மீன்களை அணிந்து விளங்கினாற்போல, குழை அமல் முசுண்டை வாலிய மலர - தழை நிறைந்த முசுண்டையின் பூக்கள் வெள்ளியவாக மலரவும், வரி வெண் கோடல் வாங்கு குலை வான்பூ - வரிகளையுடைய வெண்காந்தளின் வளைந்த - குலையிலுள்ள சிறந்த பூக்களை, பெரிய சூடிய கவர்கோல் கோவலர் - மிகுதியாகச் சூடிக்கொண்ட கவர்த்த கோலினைக்கொண்ட ஆயர்கள், எல்லு பெயல் உழந்த பல் ஆன் நிரையொடு - பகற்பொழுதில் மழையால் வருந்திய பல பசுத்திரளொடு, நீர் திகழ் கண்ணியர் ஊர்வயின் பெயர்தர - நீர் விளங்கும் மாலையராய் ஊரிடத்தே மீண்டு வரவும், நனி சேண்பட்ட மாரி - மிகவும் சேணிடைப்பரந்த மேகங்கள், பேர் இசை முழக்கமொடு சிறந்து நனி மயங்கி - பெரிய இடிமுழக்கத்தோடு மேம்பட்டு மிகவும் ஒன்றோடொன்று கலந்து, தளி சிறந்து ஏர்தரு கடுநீர் தெருவு தொறு ஒழுக - துளிகள் மிக்குப் பெய்தலால் எழுச்சி பொருந்திய விரைந்த நீர் தெருக்கடோறும் செல்லவும், கூதிர் நின்றன்று பொழுது - கூதிர்ப் பொழுது நிலைபெற்றது;

௧௧—௫. ஓங்கு நடை காய் சின யானை கங்குல் சூழ - உயர்ந்த நடையினையும் காயும் சினத்தினையும் உடைய யானைகள் இராக்காலத்தே சூழ்ந்து நிற்க, அஞ்சு வர இறுத்த தானை - பகைவர்க்கு அச்சம் உண்டாகத் தங்கிய சேனையையுடைய, வெம்சின வேந்தன் பாசறையோர் காதலர் - கொடிய சினத்தினையுடைய அரசனது பாசறைக்கண்ணுள்ளாராய நம் தலைவர், நம் நிலை அறியார் ஆயினும் - நமது துன்ப நிலையினை அறியாராயினும், தம் நிலை அறிந்தனர்கொல் - தாம் உறும் நிலையினையாதல் அறிந்துளராவரோ?

(முடிபு) முசுண்டை வாலிய மலர, கோவலர் பல்லான் நிரையொடு ஊர்வயிற் பெயர்தர, மாரி தளி சிறந்து பெய்த கடுநீர் தெருவு தொறும் ஒழுகக் கூதிர்ப்பொழுது நின்றன்று; வேந்தன் பாசறையோர் ஆகிய காதலர் நம் நிலை அறியாராயினும் தம் நிலை அறிந்தனர் கொல்லோ?

(வி-ரை.) முகில் மறைப்பில்லாத நீலநிற விசும்பில் மீன்கள் நன்கு விளங்கினாற்போல, பசுமை மிக்க முசுண்டையில் அதன் வெள்ளிய பூக்கள் மலர்ந்து விளங்கின என்க. பெரிய சூடிய - பெரிய கண்ணிகளாகக் கட்டிச் சூடிய என்றுமாம். எல்-ஈண்டுப் பகல். பேரிசை முழக்கமொடு சிறந்து கார்ப்பருவத்துடன் மயங்கிக் கூதிர்ப்பொழுது நின்றன்று என்றுரைத்தலுமாம். தலைவர் வந்துவிடுவர் என்று வற்புறுத்திய தோழிக்கு, அவர் குறித்த கார்ப்பருவம் போய், கூதிர்வந்

தம் அவர் இன்னும் வந்திலர் ; இப் பருவத்தில் யாம் எய்தும் துன்பத்தினை அவர் அறியாராயினும் பின் தாம் எய்தும் நிலையையும் ஓர்ந்திலர் போலும் என்று தலைவி எதிரழிந்து கூறினள் என்க. தம் நிலை என்றது, நாம் இறந்துபடின் பின் அவர் எய்தும் துன்பம் என்க. இன்ன காலத்து வருவேன் என்று உரைத்த சொல் தவறலாகாது என்னும் இயல்பு என்றுமாம்.

(மே - ள்.) *'இணைமயக்குறுதலும்' என்னுஞ் சூத்திரத்து, இச் செய்யுள் தோழிக்குத் தலைவி கூறியது, இதன்கண் முல்லையுட் கூதிர் வந்தது என்றும், †'நிகழ்ந்தது கூறி நிலையலும் திணையே' என்னும் சூத்திரத்து, இது தலைவன் பாசறைப் புலம்பினவை கூறக்கேட்ட தலைவி, தந்நிலையறியாராயினும் எனக் கூறினள் என்றும் கூறினர், நச்.

---

265. பாலை

[பிரிவிடை வேறுபட்ட தலைமகள் ஆற்றாமை மீதூரத் தோழிக்குச் சொல்லியது.]

புகையிற் பொங்கி வியல்விசும்பு உகந்து
பனியூர் அழற்கொடி கடுப்பத் தோன்றும்
இமயச் செவ்வரை மானுங் கொல்லோ
பல்புகழ் நிறைந்த வெல்போர் நந்தர்
சீர்மிகு பாடலிக் குழீஇக் கங்கை
நீர்முதற் கரந்த நிதியங் கொல்லோ
எவன்கொல் வாழி தோழி வயங்கொளி
நிழற்பால் அறலின் நெறித்த கூந்தல்
குழல்குரல் பாவை இரங்க நத்துறந்து
ஒண்டொடி நெகிழச் சாஅய்ச் செல்லலொடு
கண்பனி கலுழ்ந்தியாம் ஒழியப் பொறையடைந்து
இன்சிலை எழிலேறு கெண்டிப் புரைய
நிணம்பொதி விழுத்தடி நெருப்பின் வைத்தெடுத்து
அணங்கரு மரபிற் பேஎய் போல
விளரூன் தின்ற வேட்கை நீங்கத்
துகளற விளைந்த தோப்பி பருகிக்
குலாஅ வல்வில் கொடுநோக்கு ஆடவர்

---

* தொல். அகத். கஉ. † தொல். அகத். சச.

*புலாஅற் கையர் பூசா வாயர்
ஒராஅ உருட்டுங் குடுமிக் குராலொடு
மராஅஞ் சிறூர் மருங்கில் தூங்கும்
செந்நுதல் யானை வேங்கடந் தழீஇ
வெம்முனை அருஞ்சுரம் இறந்தோர்
நம்மினும் வலிதாத் தூக்கிய பொருளே.

—மாமூலனார்.

(சொ - ள்.) ௭—௧௧. தோழி-, வாழி-, வயங்கு ஒளி நிழற்பால் அறலின் நெறித்த கூந்தல் - விளங்கும் ஒளி வாய்ந்த நிழற்கண்ணுள்ள அறல்போலக் குழன்ற கூந்தலினையும், குழல் குரல் - குழலோசை போன்ற இனிய குரலினையும் உடைய, பாவை இரங்க - பாவை போன்ற நீ இரங்க, ஒண் தொடி நெகிழ - நமது ஒள்ளிய வளை நெகிழ்ந்து வீழ, சாஅய் செல்லலொடு - மெலிந்த துன்பத்துடன், கண்பனி கலுழ்ந்து யாம் ஒழிய - கண்ணீர் சொரிந்து யாம் இவண் தங்கியிருக்க, நம் துறந்து - நம்மைக் கைவிட்டு;

௧௧—௨௨. குலாஅ வல்வில் கொடு நோக்கு ஆடவர் - வளைந்த வலிய வில்லையும் கொடிய பார்வையினையுமுடைய மறவர்கள், பொறை அடைந்து - குன்றினை அடைந்து, இன்சில எழில் ஏறு கெண்டி - இனிய முழக்கம் செய்யும் எழுச்சியுள்ள எருதினைக் கொன்று, புரைய நிணம் பொதி விழு தடி நெருப்பின் வைத்து எடுத்து - உயர்ச்சியுடைய கொழுப்புப்பொதிந்த சிறந்த தசையினை நெருப்பில்வைத்துச் சுட்டு எடுத்து, அணங்கு அரும் மரபின் பேஎய் போல - கண்டாரை வருத்தும் அரிய திறலுடைய பேய்களைப் போல, விளர் ஊன் தின்ற வேட்கை நீங்க - வெளுத்த அவ் ஊனைத் தின்றதாலாய நீர்வேட்கை நீங்க, துகள் அற விளைந்த தோப்பி பருகி - குற்றமற முதிர்ந்த தோப்பிக்கள்ளைக் குடித்து, புலாஅல் கையர் பூசா வாயர் - புலால் நீங்காத கையினராய்க் கழுவாத வாயினராய், ஒராஅ உருட்டும் குடுமிக் குராலொடு - இடையறாது விட்டுவிட்டு ஒலிக்கும் குடுமியினையுடைய கோட்டான் ஒலியொடு கூடி, மராஅம் சிறூர் மருங்கில் தூங்கும் - வெண்கடப்ப மரங்களையுடைய சிறிய ஊர்ப்பக்கத்தே கூத்தாடும், செம் நுதல் யானை வேங்கடம் தழீஇ - சிவந்த நெற்றியினையுடைய யானைகளையுடைய வேங்கடமலையைப் பொருந்தியுள்ள, வெம்முனை அரும் சுரம் இறந்தோர் - வெவ்விய முனையிருப்புக்களையுடைய அரிய சுரத்தினைத் தாண்டிச் சென்ற நம் தலைவர்;

௨௩. நம்மினும் வலிதா தூக்கிய பொருள் - நம்மைக்காட்டினும் உறுதியுடைத்தாக ஆராய்ந்து துணிந்த பொருள்;

(பாடம்) * புலராக் கையர்.

௧—௭. வியல் விசும்பு உகந்து - அகன்ற வானில் உயர்ந்து, புகையிற் பொங்கி - புகைபோலப் பொலிவுற்று, பனி வார் - பனி நவழும், அழல் கொடி கடுப்பத் தோன்றும் - தீச்சுடரை ஒப்பத் தோன்றும், இமயச் செவ்வரை மானுங்கொல் - இமயமாய செவ்விய மலையினை ஒக்குமோ? அன்றி, பல் புகழ் நிறைந்த வெல்போர் நந்தர் - பல்வகைப் புகழும் மிக்க போர்வெல்லும் நந்தர் என்பாரது, சீர் மிகு பாடலி - சிறப்புமிக்க பாடலிபுரத்திலே, குழீஇ - திரண்டிருந்து (பின்பு), கங்கை நீர் முதல் கரந்த நிதியம் கொல் - கங்கையின் நீர் அடியில் மறைவுற்ற செல்வமோ, எவன்கொல் - அவ்விரண்டும் அன்றாயின் அவர் நம்மை விட்டுப் பிரிந்தது என்னை கொல்லோ?

(முடிபு) தோழி! வாழி! பாவை இரங்க, நத்துறந்து, கண்பனி கலுழ்ந்து யாம் ஒழிய வேங்கடம் தழீஇய சுரம் இறந்தோர் நம்மினும் வலிதாத் தூக்கிய பொருள் இமயச் செவ்வரை மானும் கொல்லோ! நந்தர் பாடலிக் குழீஇப் பின்பு கங்கைநீர் முதற்கரந்த நிதியங் கொல்லோ! எவன்கொல்!

கொடு நோக்கு ஆடவர் பேஎய் போல ஊன்தின்ற வேட்கை நீங்கத் தோப்பி பருகி; புலாற்கையராய் பூசா வாயராய் குராலோடு சீறூர் மருங்கில் தூங்கும் வேங்கடம் என்க,

(வி - ரை.) உகந்து - உயர்ந்து; *'உகப்பே உயர்தல்' என்பது உரியியல். இமயம் பனிமலை யாகலானும், அது பொன்மலை எனவும் படுதலானும் பனிவார் 'அழற்கொடி கடுப்பத் தோன்றும் இமயச் செவ்வரை' என்றான். உகந்து தோன்றும் இமயச் செவ்வரை என்க, மானும் கொல்லோ என்றது, அத்துணைப் பெரியதொன்றோ என்றபடி. நந்தர், பாடலியை ஆண்ட அரசருள் ஒரு பிரிவினர். நந்தரது பாடலி என்க. நந்தருள் ஒருவனால் ஈட்டப்பட்டுப் பாடலியில் திரண்டிருந்த பெரும்பொருள், பின்னர் மாற்றார் படையெடுப்பினால் அழியாவண்ணம் அன்னோர், கங்கையாற்றின் அடியில் சுருங்கை செய்து மறைத்து வைக்க, அப்பொருள் மறைந்து ஒழிந்தது என்னும் வரலாறு இங்கே குறிக்கப்பட்டது என்க. குழீஇக் கரந்த நிதியம் என்க. 'நந்தன் வெறுக்கை' (௨௱௫௰௧) என முன் இவ்வாசிரியராற் சுட்டப்பெற்றதும் இதுவே. இமயச் செவ்வரை ஒப்பது ஒன்று இன்மையானும், நீர் முதற் கரந்த நிதியம் பெறுதற்கு அரிதாகலானும், நம் தலைவர் அவை நோக்கிப் பிரிந்தவர் ஆகார். அவையன்றி அவர் கொண்டுவரத் துணிந்த பொருள், நம்மினும் பார்க்கில் அவர்க்கு அறமும் இன்பமும் பயவாதன்றே, அவ்வாறாகவும் பிரிவுத் துன்பத்தால் நாம் வருந்த அவர் நம்மைப் பிரிந்து சென்றது என்னையோ எனத் தலைமகள் ஆற்றாமை மீதூரத் தோழிக்குச் சொல்லினாள் என்க. பாவை என்றது தோழியை. யாம் ஒழியச் சுரம் இறந்தோர் எனக் கூட்டுக. அணங்கு அரும்

* தொல். சொல். ௩௱௨.

மரபிற் பேஎய் - பிறரால் வருத்துதற்கரிய தன்மையையுடைய பேய் என்றுமாம். ஒராஅ-ஒருவாது; ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம்.

குராலின் ஓசை கடிப்பு உருண்டு ஒலிப்பிக்கும் துடியின் ஓசை போல்வதாகலின் உருட்டும் எனப்பட்டது. 'உருள்துடி மகுளியின்... இசைக்கும்' (௧௧) என முன் வந்திருப்பதுங் காண்க. தூங்கும் என்னும் பெயரெச்சம் இடப்பெயர் கொண்டது. தூங்கும் வேங்கடம் எனவும் யானையையுடைய வேங்கடம் எனவும் தனித்தனி கூட்டுக. தழீஇ - தழீஇய என்னும் பொருட்டு; தழீஇய என்றே பாடம் கோடலுமாம்.

---

266. மருதம்

[பரத்தையிற் பிரிந்துவந்து கூடிய தலைமகற்குத்
தலைமகள் சொல்லியது.]

கோடுற நிவந்த நீடிரும் *பரப்பின்
அந்தீம் †பாஅயப் புதுப்புனல் நெருநை
மைந்துமலி களிற்றின் தலைப்புணை தழீஇ
நரந்தம் நாறுங் குவையிருங் கூந்தல்
இளந்துணை மகளிரொடு ஈரணிக் கலைஇ
நீர்பெயர்ந்து ஆடிய ஏந்தெழின் மழைக்கண்
நோக்குதொறும் நோக்குதொறும் தவிர்விலை யாகிக்
காமங் கைம்மிகச் சிறத்தலின் நாணிழந்து
ஆடினை என்ப மகிழ்ந அதுவே
யாழிசை மறுகின் நீடூர் கிழவோன்
வாய்வாள் எவ்வி ஏவல் மேவார்
நெடுமிடல் சாய்த்த ‡பசும்பூண் பொருந்தலர்
அரிமண வாயில் உறத்தூர் ஆங்கண்
கள்ளுடைப் பெருஞ்சோற்று எல்லிமிழ் அன்ன
கவ்வை ஆகின்றால் பெரிதே யினியஃது
அவலம் அன்றுமன் எமக்கே அயல
கழனி யுழவர் கலிசிறந் தெடுத்த
கறங்கிசை வெரீஇப் பறந்த தோகை
அணங்குடை வரைப்பகம் பொலியவந் திறுக்குந்

(பாடம்) * பரப்பினந்தி. † பராஅய பதி.
‡ பெரும்பூட் பொருந்திலர்; பசும்பூட் பொருந்திலர்.

திருமணி விளக்கின் அலைவாய்ச்
செருமிகு சேஎயொடு உற்ற சூளே.

—பரணர்.

(சொ - ள்.) ௧—௯. மகிழ்ந - தலைவனே!, கோடு உற நிவந்த - வரையின் உச்சியைப் பொருந்துமாறு உயர்ந்த, நீடு இரும் பரப்பின் - நீண்ட பெரிய பரப்பினையுடைய, அம் தீம் பாயப் புதுப்புனல் - அழகிய இனிய மனத்திற்கு விருப்பமான புதுநீர்ப் பெருக்கில், செருவை - சேற்று, மைந்துமலி களிற்றின் - வலிமை மிக்க களிற்றினைப்போல, தலைப்புணை தழீஇ-புணையின் தலைப்புறத்தினைத் தழுவி, நரந்தம் நாறும் குவை இரும் கூந்தல்-நரந்தம்புல் நாறுகின்ற திரண்ட கரிய கூந்தலையுடைய, இளம் துணை மகளிரொடு-நினக்குத் துணையாய இளைய மகளிரொடு, ஈர் அணிக் கலைஇ-நீர் விளையாட்டிற்குரிய அணிகளைக்கொண்டு, நீர் பெயர்ந்து ஆடிய-நீரின்கண் பெயர்ந்து-விளையாடிய, ஏந்து எழில் மழைக்கண் - அவர்களுடைய மிக்க அழகினையுடைய குளிர்ந்த கண்கள், நோக்குதொறும் நோக்குதொறும் - நின்னைப் பார்க்குந்தோறும் பார்க்குந்தோறும், தவிர்விலையாகி - நீ விருப்பம் தவிராயாகி, காமம் கைம்மிகச் சிறத்தலின்-காமம் அளவு கடந்து மிகுதலினால், நாண் இழந்து - நாணத்தினை இழந்து, ஆடினை யென்ப - நீ அவர்களுடன் நீர்விளையாட்டு நிகழ்த்தினை என்று பலரும் கூறுவர்;

௯—௧௫. அதுவே - அச்செயல்தான், யாழ் இசை மறுகின் நீடூர் கிழவோன் - யாழ் ஒலிக்கும் தெருக்களையுடைய நீடூரின் தலைவனான, வாய் வாள் எவ்வி - வாள்வென்றி வாய்ந்த எவ்வி என்பான், ஏவல் மேவார் - தன் ஏவுதலை ஏற்றுக்கொள்ளாராகிய, பசும்பூண் பொருநர் - பசிய பொன்னணியையுடைய பகைவரது, நெடுமிடல் சாய்த்த-மிக்க வலிமையைக் கெடுத்த, அரிமணவாயில் உறத்தூர் ஆங்கண் - அரிமணவாயில் உறத்தூராய அவ்விடத்தே, கள்ளுடைப் பெருஞ் சோற்று எல் இமிழ் அன்ன - அவனுடைய படையாளர்க் களித்த கள்ளுடன் கூடிய பெருஞ்சோற்றினாலே பகலில் எழுந்த ஆரவாரம் போன்று, பெரிது கவ்வை ஆகின்று - மிகவும் அலராகின்றது;

௧௫—௨௧. இனி அஃது அவலம் அன்று எமக்கு - இப்பொழுது அதுதானும் எமக்குத் துன்பந் தருவதன்று (மற்று), அயல கழனி உழவர் கலி சிறந்து எடுத்த - பக்கத்தேயுள்ள வயலில் உழுவோர் செருக்கு மிக்கு எழுப்பிய, கறங்கு இசை வெரீஇ - ஒலிக்கின்ற ஆரவாரத்தினை அஞ்சி, பறந்த தோகை - பறந்துபோய மயில், அணங்கு உடை வரைப்பு அகம் பொலிய வந்து இறுக்கும்-தெய்வத்தையுடைய குன்றிடத்தே பொலிவுற வந்து தங்கும், திருமணி விளக்கின் அலைவாய்-அழகிய மணிவிளக்கு ஒளிரும் திருச்சீரலைவாயமர்ந்த, செருமிகு சேஎயொடு உற்ற சூள்-போர்வன்மை மிக்க முருகனொடு பொருந்திச் செய்த சூளுறவே துன்பம் தருவதாகும்.

(முடிபு) மகிழ்ந! நெருநை புதுப்புனல் தலைப்புணை தழீஇ இளந் துணை மகளிரொடு ஈரணிக் கலைஇ மழைக்கண் நோக்குந்தோறும் தவிர்விலையாகி நாண் இழந்து ஆடினை என்ப; அதுவே எவ்வி, பொருந் தலர் நெடுமிடல் சாய்த்த அரிமண வாயில் உறத்தூர் ஆங்கண்பெருஞ் சோற்று இமிழ் அன்ன கவ்வை பெரிதாகின்று; இனி அஃது அவலம் அன்று எமக்கே; அலைவாய்ச் சேஎயொடு உற்ற சூளே அவலமாகும்.

(வி-ரை.) பாயம்-விருப்பம்; *'பாயம் பாடி' என்பதற்கு விருப்ப மானவற்றைப் பாடி என நச்சினார்க்கினியர் உரைத்தமை காண்க. இனி, பாஅய புதுப்புனல் என்றுதல் பராஅய புதுப்புனல் என்றுதல் பாடமிருப்பின் பரந்த புதுநீர் என்க. அந்தில் என்பது பாடமாயின் அவ்விடத்தே என்றுரைக்க. தலைப்புணை - புணையின் தலைப்பு; 'தார் பூண் களிற்றிற் றலைப்புணை தழீஇ' (௧௧௧) என முன்னரும் வந்துள் ளமை காண்க. ஈர் அணி - ஈரிய அணி; நீராட்டிற்குரிய அணி என்ற படி. கலைஇ - கலந்து கொண்டு என்றபடி. எவல் மேவாராகிய பொருந்தலர் என்பது பெருந்திறல் எனவும் இருக்கவேண்டும் எனக் கொண்டு, பசும்பூண் பெருந்திறல் பாண்டியன் நெடுஞ்செழியன் ஆவான் என்று உரைப்பாரும் உளர். †பசும்பூண் பெருந்திறல் என்பது பாண்டியன் நெடுஞ்செழியனையே குறிக்கவேண்டும் என்னும் நியதி யின்மையும், எவ்வி என்பான் அவனது ஏவலைப் பொருந்தினன் என்றல் ஏலாமையும், 'மேவா', 'பெருந்திறல்' என யாண்டும் பாடமின் மையும் கருதற்பாலன. இமிழ் - ஒலி; ஆரவாரம். கழனி உழவர் தகங்கிசை வெரீஇப் பறந்த தோகை வரைப்பகம் பொலிய வந்திறக் கும் அலைவாய் என்றமையால், மருதம் குறிஞ்சி நெய்தலாகிய நிலங்கள் கலந்துள்ளமை பெற்றாம். அலைவாய் - கடலின் அலை ஓவாது அலைக் கும் செந்தில் என்னும் பதி; ‡'வெண்டலைப் புணரி அலைக்குஞ் செந் தில்' எனப் புறப்பாட்டில் வருதல் காண்க. 'சூளே அவலமாகின்றது' என விரித்துரைக்க. §'பெறற்கரும் பெரும்பொருள் முடிந்த பின்' என்னுஞ் சூத்திரத்து, 'சூள்நயத் திறத்தாற் சோர்வுகண் டழியினும்' என்னும் பகுதியில் கோடற்கு வந்த என்னும் மணிமிடை பவளத்தைத் தோழி கூற்றாகக் காட்டுவாரும் உளர் என்னும் நச்சினார்க்கினியர் கூற்றால் இதனைத் தோழி கூற்றாகக் கொண்டாரும் உளர் என்பது போதரும்.

(உ-றை.) உழவர் தண்ணுமை இசை வெருவிப் பறந்த தோகை அணங்குடை வரைப்பகம் பொலியவந் திறக்கும் என்பது, நீயும் ஊரில் எழுந்த அலருக்கு அஞ்சியே இம் மனை பொலிய வந்துள்ளாய் என்ற கூறியபடி.

---

* பத்து. குறிஞ்சிப். ௫அ. † பாணர். பக்கம். ௫௪-௫௫.
‡ புறம். ௫௫. § தொல். கற்பு. ௯.

267. பாலை

[பிரிவிடை வேறுபட்ட தலைமகளது ஆற்றாமை கண்டு ஆற்றாளாகிய தோழிக்குத் தலைமகள் சொல்லியது.]

*நெஞ்சு நெகிழ்தகுந கூறி அன்புகலந்து
அறாஅ வஞ்சினஞ் செய்தோர் வினைபுரிந்து
திறம்வே றாகல் எற்றென்று ஒற்றி
†இனைதல் ஆன்றிசின் நீயே சினைபாய்ந்து
உதிர்த்த கோடை உட்குவரு கடத்திடை
வெருக்கடி யன்ன குவிமுகிழ் இருப்பை
மருப்புக் கடைந்தன்ன கொள்ளை வான்பூ
மயிர்க்கால் எண்கின் ஈரினங் கவர
மைபட் டன்ன மாமுக ‡முசுக்கலை
பைதறு நெடுங்கழை பாய்தலின் ஒய்யென
வெதிர்படு வெண்மணல் வெவ்வறைத் தாஅய
உகிர்நெரி யோசையிற் பொங்குவன பொரியும்
ஓங்கல் வெற்பிற் சுரம்பல இறந்தோர்
தாம்பழி யுடைய ரல்லர் நாளும்
நயந்தோர்ப் பிணித்தல் தேற்றா வயங்குவினை
வாளேர் எல்வளை §நெகிழ்த்த
தோளே தோழி தவறுடை யவ்வே.

—பாலை பாடிய பெருங்கடுங்கோ.

(சொ - ள்.) ௧௭. தோழி-,

௧—௪. நீயே-நீதான், நெஞ்சு நெகிழ்தகுந கூறி - நம் நெஞ்சம் நெகிழத்தக்கனவற்றைக் கூறி, அன்பு கலந்து - அன்பினால் உள்ளம் கலந்து, அறாஅ வஞ்சினம் செய்தோர் - நாம் என்றும் பிரியாமைக்குரிய சூளுறவு செய்தோராகிய நம் தலைவர், வினை புரிந்து - பொருளீட்டும் தொழிலை விரும்பி, திறம் வேறு ஆகல்-வேறு தன்மையர் ஆயது, எற்று என்று ஒற்றி-என்னையென்று ஆராய்ந்து, இனைதல் ஆன்றிசின்-வருந்துதல் ஒழிவாயாக;

௪—௧௪. உட்கு வரு கடத்திடை - அச்சம் தோன்றும் காட்டிடத்தே, கோடை - கோடைக்காற்று, சினை பாய்ந்து உதிர்த்த - கிளையின் மோதி உதிரச்செய்த, வெருக்கு அடி அன்ன - பூனையின் அடி

(பாடம்) * நெஞ்சு நெகிழ்க்குந. † சினைதல் ஆன்றிசின். ‡ முசுவினம். § நெகிழ்த்த.

வினையொத்த, குவி முகிழ் இருப்பை - குவிந்த அரும்பினையுடைய இருப்பையினது, மருப்புக் கடைந்தன்ன கொள்ளை வான் பூ - தந்தத்தினைக் கடைந்தாலொத்த மிகுதியாகவுள்ள வெள்ளிய பூக்களை, மயிர்க்கால் எண்கின் ஈர்இனம் கவர - மயிர் அடர்ந்த காலினையுடைய கரடியின் பெரிய கூட்டம் கவர்ந்துண்ண, மைபட்டன்ன மாமுகமுசுக்கலை - மை பூசினாலொத்த கரிய முகத்தினையுடைய ஆண்குரங்கு, பைது அறு நெடு கழை பாய்தலின் - பசுமையற்ற நீண்ட மூங்கிலிற் பாய்தலினால், ஒய்யென - விரைய, வெதிர்படு வெண் நெல் வெவ் அறை தாஅய் - மூங்கிலில் விளைந்த வெள்ளிய நெற்கள் வெப்பம் மிக்க பாறையில் உதிர்ந்து பரந்து, உகிர் நெரி ஓசையில் பொங்குவன பொரியும் - நகத்தை நெரிப்பது போன்ற ஓசையுடன் பொங்கிப் பொரிந்திடும், ஓங்கல் வெற்பின் சுரம் பல இறந்தோர் - உயர்ந்த மலைகளையடுத்த காடு பலவற்றையும் கடந்து சென்றவராய அவர், பழியுடையர் அல்லர் - பழியுடையோர் ஆகார்;

கச—எ. நாளும் - எஞ்ஞான்றும், நயந்தோர்ப் பிணித்தல் தேற்றா - தம்மை விரும்பி வந்தாரை விடாது பற்றிக்கொள்ளுதலை அறியாவாய, வடக்கு வினை வாள் ஏர் எல் வளை நெகிழ்த்த - விளங்கும் தொழிற் திறம் வாய்ந்த வாளால் அறுத்து அழகுறுத்தப்பெற்ற ஒளிபொருந்திய வளையலை நெகிழவிட்ட, தோளே தவறுடைய - நம் தோள்களே தவறுடையன.

(முடிபு) தோழி! நீ, அருஅ வஞ்சினம் செய்தோர் வினைபுரிந்து திறம் வேறுதல் எற்றென்று ஒற்றி இனைதல் ஆன்றிசின்; வெற்பின் சுரம் பல இறந்தோர் பழியுடையர் அல்லர்; நாளும் நயந்தோர்ப் பிணித்தல் தேற்றாவாய எல்வளை நெகிழ்த்த தோளே தவறுடைய.

இருப்பை வான்பூ எண்கின் ஈரினம் கவர, முசுவினம், கழை பாய்தலின, வெண்ணெல் வெவ்வறைத் தாஅய்ப் பொறியும் சுரம் என்க.

(வி - ரை.) அன்பு கலந்து கூறி வஞ்சினம் செய்தோர் என்க. அருஅ வஞ்சினம் - நீங்காமையைப் புலப்படுக்கும் சூளுறவு. எற்று - எவன், என்னை. ஈர் இனம் - கரிய கூட்டமுமாம். முசுவானது "மைபட்டன்ன மாமுக முசுக்கலை' என இங்ஙனமே பிறண்டும் கூறப்பட்டுள்ளது.* வஞ்சினம் செய்தோர் திறம் வேறுதல் எற்றென்று தோழி ஆற்றாளாய்க் கூறியபொழுது நீ அங்ஙனமே கூறி வருந்தாதே, கொடிய சுரம் பல கடந்த தலைவர் பழியுடையர் அல்லர், நம்மாட்டு அன்புடைய அவரைப் பிணித்துக்கொள்ள அறியாத நம் தோளே தவறுடையன, ஆகவின் நாம் ஆற்றியிருத்தலே கடன் என உரைத்தாளாம்.

---

* குறுந். கஅஅ.

268. குறிஞ்சி

[குறைவேண்டிப் பின்னின்ற தலைமகனுக்குக் குறைநேர்ந்த தோழி தலைமகட்குக் குறைநயப்பக் கூறியது.]

அறியாய் வாழி தோழி பொறிவரிப்
பூநுதல் யானையொடு புலிபொரக் குழைந்த
குருதிச் செங்களம் புலவற வேங்கை
உருகெழு நாற்றங் குளவியொடு விலக்கும்
மாமலை நாடனொடு மறுவின் றாகிய
காமங் கலந்த காதல் உண்டெனின்
நன்றுமன் னதுநீ நாடாய் கூறுதி
நாணும் நட்பும் இல்லோர்த் தேரின்
யானல தில்லையிவ் வுலகத் தானே
இன்னுயிர் அன்ன நின்னொடுஞ் சூழாது
முளையணி மூங்கிலிற் கிளையொடு பொலிந்த
பெரும்பெயர் எந்தை அருங்கடி நீவிச்
செய்துபின் இரங்கா வினையொடு
மெய்யல பெரும்பழி எய்தி னேனே.

—வடமவண்ணக்கன் பேரிசாத்தனார்.

(சொ - ள்.) ௧—௭. தோழி—, வாழி—, அறியாய் - யான் கூறுவதனை நீ மனத்தான் ஆராய்ந்து பாராய், பொறி வரி பூ நுதல் யானையொடு - புள்ளிகளையும் வரிகளையுமுடைய பொலிவுற்ற நெற்றியினையுடைய யானையுடன், புலி பொர - புலி பொருதலால், குழைந்த குருதிச் செங்களம் புலவு அற - குருதியால் குழைவுற்ற சிவந்த களம் புலால் நாற்றம் நீங்க, வேங்கை உருகெழு நாற்றம் குளவியொடு விலக்கும் - நிறம் பொருந்திய வேங்கைமலர்களின் நாற்றம் காட்டுமல்லிகை மலர் நாற்றத்தொடு கூடி மாற்றும், மாமலை நாடனொடு - பெரிய மலைநாட்டையுடைய தலைவனொடு, மறு இன்று ஆகிய - குற்றமில்லையாகத் தோன்றிய, காமம் கலந்த காதல் உண்டு எனின் - அன்பு கலந்த கூட்டம் உளதாயின், நன்று மன் - அது மிக நன்றாகும், அது நீ நாடாய் கூறுதி - அதனை நீ ஆராயாமற் கூறுகின்றாய்;

௧0—௪. இன் உயிர் அன்ன நின்னொடும் சூழாது - இனிய உயிரையொத்த நின்னொடும் கலந்தெண்ணாது, முளை அணி மூங்கிலிற் கிளையொடு பொலிந்த - முளைகளால் அழகுபெற்ற மூங்கிலைப்போலப் பெருஞ் சுற்றத்தாற் சிறப்புற்ற, பெரும் பெயர் எந்தை அரு கடி நீவி - பெரிய புகழ் மேவிய நம் தந்தையின் அரிய காவலைத் தாண்டி, செய்து பின்

இரங்கா வினையொடு - செய்தபின் வருந்துதற் கேதுவாகா நல்ல வினையைச் செய்தமையால், மெய் அல பெரும் பழி எய்தினேன் - ஆபுங்கால் உண்மை ஆகாத பெரிய பழிகளை நான் அடைந்துள்ளேன்; ஆகலான்.

அ—கு. இவ்வுலகத்தான் - இவ் வுலகத்தின்கண்ணே, நாணும். நட்பும் இல்லோர்த் தேரின் - நாணும் நட்பும் இலராயினாரை ஆராயின், யான் அலது இல்லை - என்னை யொழிய யாரும் இலராவர்.

(முடிபு) தோழி! வாழி! மாமலை நாடனொடு காமம் கலந்த காதல் உண்டெனின் நன்றுமன்; நீ அது நாடாய் கூறுதி அறியாய்; இன்னுயிர் அன்ன நின்னொடுஞ் சூழாது எந்தை அருங்கடி நீவிச் செய்து பின் இரங்கா வினையொடு மெய்யல பெரும்பழி எய்தினேனே; இவ்வுலகத்தானே நாணும் நட்பும் இல்லோர்த்தேரின் யானலதில்லை.

(வி - ரை.) 'அறியாய்' முன்னிலை ஏவல் உடன்பாடு. காதல் ஈண்டுக் கூட்டம் என்னும் பொருட்டு. நாடாய் கூறுதி அறியாய் எனக் கூட்டுக. கூறுதி என்பதனைக் கூறி எனப் பாடங்கொண்டு இகரவிற்று வியங்கோள் என்பர் *சிவஞான முனிவர். தலைமகனுக்குக் குறை நேர்ந்த தோழி, தலைவனொடு கூட்டம் உண்டெனின் நன்று; அதனை ஆராய்ந்து பார் என்று தலைவிக்குக் கூறியவழி, அவள் அதற்கு இசையான் போன்றிருந்தனளாகலின், யான் பெரும் பழி எய்தினேன்; இவ்வுலகில் நாணும் நட்பும் இல்லோர் என்னை யன்றிப் பிறர் இலர் என அவன் குறை நயப்பான்வேண்டி வன்மையாற் கூறினள் என்க. இன்னுயிரன்ன நின்னொடும் சூழாது என்றது, என்னின் வேறல்லாத நின்னொடும் சூழாதது குற்றம் ஆகாது என்பதும், செய்துபின் இரங்கா வினை என்றது, தான் செய்தது பழியாகாத நல்வினையே என்பதும், பெரும்பழி எய்தினேன் என்றது, யான் அங்ஙனம் செய்தும் எலாத பழியை எய்தினேன் என்பதும் கூறியபடியாம். தோழி கூறியதற்குத் தலைவி நாணினளாதலின், இவ்வுலகில் யானே நாண் இல்லாதவள் என்றும், கெழுதகைமையாற் கேளாது செய்ததற்கு இசைந்த மகிழாமையின் யானே நட்பில்லாதவள் என்றும் வலிதிற் கூறினளென்க. அதன் பயன் தலைவி குறைநயப்பாளாவது.

(உ - றை.) குருதிச் செங்களம் புலவுஅற, வேங்கை நாற்றம் குளவியொடு விலங்கும் மாமலை நாடன் என்றது, களவொழுக்கத்தால் பிறர் கூறும் பழியை, வரைந்துகொண்டு இல்லறம் நிகழ்த்துதலாற் போக்கி யருள்வன் தலைவன் என்றபடி.

(மே - ள்.) †'செய்யாய் என்னும் முன்னிலை வினைச்சொல் - 'செய்யென் கிளவி யாகிடன் உடைத்தே' என்னுஞ் சூத்திரத்து, 'அறியாய் வாழி தோழி,...' என்னும் அகப்பாட்டினுள், அறியாய் என்றது, 'காமம் கலந்த காதல் உண்டெனின், நன்றுமன் அது நீ நாடாய் கூறுதி' என்றதனொடு இயையுங்கால், அவனொடு கூட்டம்

* சிவஞானபாடியம், சூத். க' உரை. † தொல். சொல். எச. சே

உண்டெனின் அது மிக நன்று, அதனை நீ ஆராயாமல் கூறுகின்றாய்; அதனை நின் மனத்தால் ஆராய்ந்து பாராய் என வேண்டிக்கோடற் பொருள் தந்து, முன்னிலை ஏவல் உடன்பாடாய் நின்றவாறுங் காண்க என்றார், நச்.

---

269. பாலை

[பிரிவிடை வேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறுத்தியது.]

தொடிதோள் இவர்க எவ்வமுந் தீர்க
நெறியிருங் கதுப்பிற் கோதையும் புனைக
ஏறுடை யினநிரை பெயரப் பெயராது
செறிசுரை வெள்வேல் மழவர்த் தாங்கிய
தறுகணாளர் நல்லிசை நிறுமார்
பிடிமடிந் தன்ன குறும்பொறை மருங்கின்
நட்ட போலும் நடாஅ நெடுங்கல்
அகலிடங் குயின்ற பல்பெயர் மண்ணி
*நறுவிரை மஞ்சள் ஈர்ம்புறம் பொலிய
அம்புகொண் டறுத்த ஆர்நார் உரிவையிற்
செம்பூங் கரந்தை புனைந்த கண்ணி
வரிவண் டார்ப்பச் சூட்டிக் கழற்கால்
இளையர்பதிப் பெயரும் அருஞ்சுரம் இறந்தோர்
தைஇ நின்ற தண்பெயல் கடைநாள்
பொலங்காசு நிரைத்த கோடேந்து அல்குல்
நலங்கேழ் மாக்குரல் குழையொடு துயல்வரப்
பாடூர்பு எழுதரும் பகுவாய் மண்டிலத்து
வயிரிடைப் பட்ட தெள்விளி இயம்ப
வண்டற் பாவை உண்டுறைத் தரீஇத்
திருநுதன் மகளிர் குரவை அயரும்
†பெருநீர்க் கானல் தழீஇய இருக்கை
வாணன் சிறுகுடி வணங்குகதிர் நெல்லின்
யாணர்த் தண்பணைப் போதுவா யவிழ்ந்த
ஒண்செங் கழுநீர் அன்னநின்
கண்பனி துடைமார் வந்தனர் விரைந்தே.

—மதுரை மருதனிள நாகனார்.

(பாடம்) * நறுவரை. † பெருநிழற் கானல்.

(சொ-ள்.) ௧—௧௩. தோழி, ஏறு உடை இனநிரை பெயர - ஏறுகளுடன் கூடிய பசுவினமாய நிரைகள் மீளவும், பெயராது - மீளாது நின்று, செறி சுரை வெள்வேல் மழவர்த் தாங்கிய - திணிந்த சுரையையுடைய வெள்ளிய வேலையுடைய வெட்சி வீரரைத் தடுத்துப் பொருதுபட்ட, தறுகணாளர் நல் இசை நிறுமார் - அஞ்சாமையுடைய கரந்தை வீரரது நல்ல புகழை நிலைநிறுத்துமாறு, பிடி மடிந்தன்ன குறும்பொறை மருங்கின் - பெண் யானைகள் கிடந்தாலொத்த குன்றுகளின் பக்கத்தே, நட்டபோலும் நடாஅ நெடுங்கல் - வைத்தவை போன்ற இயற்கையிலெழுந்த நீண்ட கற்களின், அகல் இடம் குயின்ற பல் பெயர் மண்ணி - அகன்ற இடத்தைச் செதுக்கி இயற்றிய பல வடிவுகளையும் நீராட்டி, நறுவிரை மஞ்சள் ஈர்ம் புறம் பொலிய - நறுமணமுள்ள மஞ்சள் அவற்றின் ஈரிய புறத்தில் விளங்குமாறு பூசி, அம்பு கொண்டு அறுத்த ஆர் நார் உரிவையின் - அம்பினால் அறுத்தெடுத்த ஆத்தியின் பட்டையாகிய நாரினால், செம்பூ கரந்தை புனைந்த கண்ணி - சிவந்த கரந்தைப் பூவைத் தொடுத்து இயற்றிய கண்ணியை, வரிவண்டு ஆர்ப்பச் சூட்டி - வரிகளையுடைய வண்டுகள் ஒலிக்கச் சூட்டி, கழல் கால் இளையர் பதிப்பெயரும் - கழலினைத் தரித்த காலினையுடைய வீரர்கள் தம் பதிக்கண்ணே மீளும், அரும் சுரம் இறந்தோர் - அரிய காட்டைக் கடந்து சென்றோராய நம் தலைவர்;

௧௪. தைஇ நின்ற தண்பெயல் கடைநாள் - தைத் திங்களில் எஞ்சி நிற்கும் குளிர்ந்த பெயலின் இறுதி நாட்களில்;

௧௫—௨௩. பொலம் காசு நிரைத்த கோடு ஏந்து அல்குல் - பொன்னாலாய காசினைத் தொடுத்து அணிந்த பக்கம் உயர்ந்த அல்குலிடத்தே, நலம் கேழ் மாகுரல் குழையொடு துயல்வர - நன்னிறம் வாய்ந்த சிறந்த பூங்கொத்துக்கள் தழையுடன் கூடி அசைய, பாடு ஊர்பு எழுதரும் பகுவாய் மண்டிலத்து - ஓசை பரந்து எழும் பெரிய வாய் வட்டத்தையுடைய, வயிரிடைப்பட்ட தெள் விளி இயம்ப - ஊதுகொம்பினிடத்து எழுந்த தெளிந்த இசை ஒலிக்க; வண்டல் பாவை உண்துறை தரீஇ - வண்டல் விளையாட்டுக்குரிய பாவையை நீர் உண்ணும் துறையில் கொணர்ந்து வைத்து, திருநுதல் மகளிர் குரவை அயரும் - அழகிய நெற்றியினையுடைய பெண்கள் குரவைக் கூத்தாடும், பெரு நீர்க் கானல் தழீஇய இருக்கை - கடற்கரைச் சோலை சூழ்ந்த ஊராகிய, வாணன் சிறுகுடி - வாணன் என்பானது சிறுகுடியிலுள்ள, வணங்கு கதிர் நெல்லின் யாணர்த் தண்பணை - வளைந்த கதிர்களைக் கொண்ட நெல்லினையுடைய அழகிய நீர்வளஞ்சான்ற வயலில், போது வாய் அவிழ்ந்த ஒள் செங்கழுநீர் அன்ன - அரும்பு வாய் திறந்த ஒள்ளிய செங்கழுநீர் மலர் போன்ற, நின் கண் பனி துடைமார் - நின் கண்ணினின்று வரும் நீரைத் துடைத்து ஆற்றுவிக்க, விரைந்து வந்தனர் - விரைந்து வந்துள்ளார்; ஆதலின், தோழி!

௧—௨. தொடி தோள் இவர்க - நின் வளைகள் தோளில் ஏறுவன வாக, எவ்வமும் தீர்க - நின் துன்பமும் தீர்வதாக, நெறி இரும் கதுப்பில் கோதையும் புனைக - நெளிந்த கரிய கூந்தலில் மாலையையும் நீ புனைக.

(முடிபு) அருஞ்சுரம் இறந்தோர் நின் கண்பனி துடைமார் விரைந்து வந்தனர்; ஆதலின், நின் தொடி தோள் இவர்க; எவ்வமும் தீர்க; கதுப்பிற் கோதையும் புனைக.

(வி - ரை.) தொடி தோள் இவர்க என்றதனால், தலைவனைப் பிரிந்த தலைவியின் தோள் மெலிவால் தொடிகள் கழலப்பெற்றன என்பதும், எவ்வமும் தீர்க என்றதனால், தலைவி தீராத வருத்தம் உடையள் ஆயினாள் என்பதும், கதுப்பிற் கோதையும் புனைக என்றதனால், அவ் வருத்தத்தால் தலைவி கோதை புனைதல் முதலிய ஒப்பனை யின்றி யிருந்தாள் என்பதும் பெற்றாம். மழவர் என்பார் வெட்சி மறவர்; தறுகணாளர் - கரந்தை மறவர், நிரை கவர்ந்து சென்ற வெட்சி மறவரிடத்தினின்றும் அதனை மீட்ட கரந்தை மறவர், அவ்வெட்சியார் மீட்டும் நிரைமேற் செல்லாது தடுத்து நின்று தறுகண்மையுடன் பொருது பட்டனர் ஆதலின், அவர் புகழை நிறுத்துதற்கு அவரைச் சார்ந்த வீரர்கள் கல்லிலே அவர் படிவத்தை இயற்றி வழிபடுவாரா யினர் என்க. 'கடாஅ நெடுங்கல் அகலிடம் குயின்ற' என்றதனால், பல்லவர் காலத்திற்போல இயல்பாய பாறையைக் குடைந்து படிவம் இயற்றும் வழக்கு அஞ்ஞான்றும் இருந்த தென்பது புலனாகின்றது பல் பெயர் என்புழி, பெயர் என்பது பொருள்; ஆவது படிவம் என்க. தறுகணாளர் நல்லிசை நிறுமார் நெடு கல் குயின்ற பல்பெயர் என்க. பொருதுபட்ட கரந்தையாரது புகழை நிறுத்தவேண்டி நெடுங்கல்லிலே குயின்ற வடிவினை நீராட்டி மஞ்சட்பூசிக் கண்ணி சூட்டி வழிபட்டு இளையர் தம் பதிக்கு ஏகும் அரும் சுரம் என்க. தைஇ நின்ற - தைத் தன்மை நிலை பெற்ற என்றுமாம். கடைநாளில் வண்டற்பாவையை உண் துறைத் தரீஇ மகளிர் குரவை அயருங் கானல் எனவும், கானல் தழீஇய இருக்கைச் சிறுகுடி எனவும் இயையும். துயல்வர இயம்பக் குரவை அயரும் என்க. தைத் திங்களில் கன்னியர் பாவையை நீர்த் துறையில் வைத்து விளையாடும் நோன்புடையர் என்பது, *'தளைநெகிழ் பிணி நிவந்த' என்னும் குறிஞ்சிக் கலியானும் அறியப்படும். விரைந்து வருவார் என்பதனை வந்தனர் விரைந்து எனத் துணிவுபற்றி ஓதினான் என்க.

———

* குறிஞ்சிக், ௨௯.

270. நெய்தல்

[பகற்குறிக்கண் வந்தொழுகுந் தலைமகனைத் தோழி வரைவுகடாயது.]

இருங்கழி மலர்ந்த வள்ளிதழ் நீலம்
புலாஅன் மறுகிற் சிறுகுடிப் பாக்கத்து
இனமீன் வேட்டுவர் ஞாழலொடு மிலையும்
மெல்லம் புலம்ப நெகிழ்ந்த தோளே
சேயிறாத் துழந்த நுரைபிதிர்ப் படுதிரை
பராஅரைப் புன்னை வாங்குசினைத் தோயுங்
கானலம் பெருந்துறை நோக்கி யிவளே
கொய்சுவல் புரவிக் கைவண் கோமான்
நல்தேர்க் குட்டுவன் கழுமலத் தன்ன
அம்மா மேனித் *தொன்னலந் தொலையத்
துஞ்சாக் கண்ணள் அலமரும் நீயே
கடவுள் மரத்த முள்மிடை குடம்பைச்
சேவலொடு புணராச் சிறுகரும் பேடை
†இன்னாது உயங்குங் கங்குலும்
‡நம்மூர் உள்ளுதிர் நோகோ யானே.

—சாகலாசனார்.

(சொ - ள்.) க—ச. புலாஅல் மறுகின் சிறுகுடிப் பாக்கத்து - புலால்நாற்றம் வீசும் தெருவினையுடைய சிறிய குடியிருப்புக்களையுடைய பாக்கத்தில், இன மீன் வேட்டுவர் - கூட்டமாய மீன் வேட்டம் புரிபவர், இரு கழி மலர்ந்த வள் இதழ் நீலம் - பெரிய உப்பங்கழியில் மலர்ந்த வளம் வாய்ந்த இதழ்களையுடைய நீலப் பூக்களை, ஞாழலொடு மிலையும் - புலிநகக்கொன்றைப் பூக்களுடன் சூடும், மெல் அம் புலம்ப - மென்னிலமாகிய நெய்தற் றலைவனே;

ச—கக. தோள் நெகிழ்ந்த-இவள் தோள்கள் மெலிந்தன; இவள்-இத் தலைவி, சேய் இறா துழந்த நுரை பிதிர்ப்படு திரை - சிவந்த இறா மீன் கலக்கிய நுரையுடன் கூடிய திவலை பொருந்திய அலைகள், பரு அரைப் புன்னை வாங்கு சினைத் தோயும் - பெரிய அடியினையுடைய புன்னைமரத்தின் வளைந்த கிளைகளில் பொருந்தும், கானல் அம் பெருந் துறை நோக்கி - சோலையை யடுத்த அழகிய பெரிய துறையை நோக்கி, கொய் சுவல் புரவிக் கைவண் கோமான் - கொய்யப் பெற்ற பிடரிமயிரினையுடைய குதிரைகளையுடைய கைவண்மை மிக்க தலைவனாகிய,

(பாடம்) * தொன்னலம் சிதைய. † இன்னாது உயவும்.
‡ நம்மூர் உள்ளுவை.

நல்தேர் குட்டுவன் - நல்ல தேரினையுடைய குட்டுவனது, கழுமலத்து அன்ன - கழுமலம் என்னும் ஊரினைப் போன்ற, அம் மா மேனி தொல் நலம் தொலைய - அழகிய மாமை நிறம் வாய்ந்த மேனி பழைய அழகு கெட, துஞ்சாக் கண்ணள் அலமரும் - கண் துயிலாளாகி மனம் கலங்குவள்;

௧௧—௫. நீயே-, கடவுள் மரத்த முள் மிடை குடம்பை - தெய்வத் தினையுடைய மரத்திடத்தவாகிய முள்ளால் மிடையப்பெற்ற கூட்டில், சேவலொடு புணராச் சிறு கரும் பேடை - தன் சேவலுடன் கூடப் பெறாத சிறிய கரிய அன்றிற் பேடை, இன்னாது உயங்கும் கங்குலும் - துன்பமுற்று வருந்தும் இரவிலும், நம் ஊர் உள்ளுதிர் - நமது ஊர்க்கு ஏகிவிட எண்ணுகின்றீர், யான் நோகு - யான் நோகின்றேன்.

(முடிபு) மெல்லம் புலம்ப! இவள் தோள் மெலிந்த; இவள் கானலம் பெருந்துறை நோக்கி, மேனி தொன்னலம் தொலையத் துஞ்சாக் கண்ணள் அலமரும்; நீர்தாம் பேடை இன்னாது உயங்கும் கங்குலும் நும் ஊர் உள்ளுதிர்; யான் நோகு.

(வி - ரை.) கானலம் பெருந்துறை நோக்கித் துஞ்சாக் கண்ணள் அலமரும் என்றதனால், முன்பு நின்னுடன் தலைப்பெய்து இன்பம் துய்த்த அவ்விடத்திலே, இனிப் பகற்குறிக்கண் கூடுதல் அரிதென்னும் கருத்தினால் தலைவி துயிலாது வருந்துகின்றாள் என்பதும், சேவலொடு புணராப்பேடை இன்னாது உயங்கும் கங்குலும் நும் ஊர் உள்ளுதிர் என்றதனால், நீர் இரவுக் குறிக்கண் வாராதல் தலைவியின் வருத்தத்தைப் போக்க நினைக்கின்றிலீர் என்பதும், இவ்வாற்றால் பகற் குறியினும் இரவுக் குறியினும் நும்மைத் தலைப்படுமாறின்றித் தலைவி எய்தும் வருத்தத்தினை நோக்கி, யான் வருந்துகின்றேன் என்பதும் தோழி தலைவனிடத்துக் கூறி, ஒருஞான்றும் பிரியாது இன்பம் துய்த்தற்கு இனி நீர் வரைந்துகொள்ளவேண்டுமெனக் குறிப்பித்தாளாம் என்க. பேடை உயங்கும் கங்குலும் நும் ஊர் உள்ளுதிர் என்றது, தனது கூட்டமின்மையால் தலைவி எய்தும் வருத்தத்தைச் சிறிதும் கருதாது தலைவன் செல்லும் கொடுமையை விளக்கியபடியாம்.

---

271. பாலை

[*செலவுணர்த்திய தோழி தலைமகளது குறிப்பறிந்து தலைமகனைச் செலவழுங்கச் சொல்லியது.]

பொறிவரிப் புறவின் செங்கால் சேவல்
சிறுபுன் பெடையொடு சேட்புலம் போகி

(பாடம்) * பிரிவுணர்த்திய தோழி.

அரிமணல் இயவிற் பரல்தேர்ந் துண்டு
வரிமரல் வாடிய வான்நீங்கு நனந்தலைக்
குறும்பொறை மருங்கிற் கோட்சுரம் நீந்தி
நெடுஞ்சேண் வந்த நீரநசை வம்பலர்
செல்லுயிர் நிறுத்த சுவைக்காய் நெல்லிப்
பல்காய் அஞ்சினை யகவும் அத்தம்
சென்றுநீர் அவணி ராகி நின்றுதரும்
நிலையரும் பொருட்பிணி நினைந்தனி ரெனினே
*வல்வ தாகநுஞ் செய்வினை யிவட்கே
களிமலி கள்ளில் நற்றே †ரவியன்
ஆடியல் இளமழை சூடித் தோன்றும்
பழந்தூங்கு விடரகத் தெழுந்த காம்பின்
கண்ணிடை புரையும் நெடுமென் பணைத்தோள்
திருந்துகோ லாய்தொடி ஞெகிழின்
மருந்து முண்டோ பிரிந்துறை காட்டே.

—காவிரிப்பூம்பட்டினத்துச் செங்கண்ணனார்.

(சொ - ள்.) ௧—௧௧. (தலைவ!) பொறிவரி செங்கால் புறவின் சேவல் - புள்ளிகளையும் வரிகளையும் சிவந்த கால்களையுமுடைய ஆண் புறா, சிறு புன் பெடையொடு சேண் புலம் போகி-தனது சிறிய புல்லிய பெடையுடன் சேய்மையாய இடத்திற்குச் சென்று, அரி மணல் இயவில் பரல் தேர்ந்து உண்டு - விளங்கும் மணல்நெறியில் பரல்கற்களை ஆய்ந்து உண்டு, வரி மரல் வாடிய வான் நீங்கு நனந்தலை - வரிகளையுடைய மரற்செடி வாடியுள்ள மேகம் பொய்யாதொழிந்த அகன்ற இடத்தையுடைய, குறும்பொறை மருங்கில் கோள் சுரம் நீந்தி - குன்றுகளின் பக்கத்திலுள்ள ஊறுபொருந்திய சுரத்தினைக் கடந்து, நெடு சேண் வந்த நீர் நசை வம்பலர் - நெடுந்தூரம் வந்த நீர்வேட்கை மிக்க புதியர்களின், செல் உயிர் நிறுத்த சுவைக்காய் நெல்லி - போகும் உயிரைப் போகாது நிறுத்திய சுவையுடைய காய்களைக் கொண்ட நெல்லி மரத்தின், பல்காய் அம்சினை அகவும் அத்தம் - பல காய்களையுடைய அழகிய கிளையிலிருந்து ஒலிக்கும் காட்டுநெறியில், நீர் சென்று - நீர் போய், அவணிர் ஆகி நின்று - அவ்விடத்தீ ராகி நின்று, தரும் - ஈட்டி வரும், நிலை அரும் பொருட்பிணி நினைந்தனிர் எனினே - ஓரிடத்தும் நிற்றலில்லாத பொருளை நினைந்து செல்வீராயின், நும் செய்வினை வல்லதாக - நும் பொருள் ஈட்டும்வினை வலிமை யுறுவதாக; ஆயின்;

(பாடம்) *வாய்வதாக. † அவையன்.

௧௧—௭. இவட்கு - இத்தலைவிக்கு, களி மலி கள்ளின் நல்தேர் அவியன் - களிப்பு மிக்க கள்ளினையும் நல்ல தேரினையுமுடைய அவியன் என்பானது, ஆடு இயல் இளமழை சூடித் தோன்றும் - அசைதல் பொருந்திய இளமுகிலை அணிந்து தோன்றுகின்ற, பழம் தூங்கு விடர் அகத்து - பழங்கள் பொருந்திய மலைப்பிளவிடத்தே, எழுந்த காம்பின் கண் இடை புரையும் - வளர்ந்த மூங்கிலின் இரு கணுக்களின் இடைப் பகுதியை ஒக்கும், நெடு மென் பணைத் தோள் - நீண்ட மெல்லிய பெரிய தோளின்கண்ணுள்ள, திருந்து கோல் ஆய் தொடி - திருந்திய திரண்ட அழகிய வளையல, ஞெகிழின் - நெகிழ்ந்து வீழின், பிரிந்து உறை நாட்டு - நீ பிரிந்து தங்கியிருக்கும் நாட்டில், மருந்தும் உண்டோ - அதனை மாற்றும் மருந்து உளதாமோ? உளதாயிற் செல்க.

(முடிபு) நீர் அத்தம் சென்று அவணிராகி நின்று தரும் பொருட்பிணி நினைந்தனிர் எனின், நும் செய்வினை வல்வதாக; இவட்குப் பணைத் தோள் ஆய்தொடி ஞெகிழின், பிரிந்துறை நாட்டு மருந்தும் உண்டோ?

(வி - ரை.) சேவல் படையொடு போகிப் பரல் தேர்ந்து உண்டு நெல்லி அஞ்சினையிலிருந்து அக்வும் அத்தம் என்க. மரல் வாடிய நனந்தலை வானீங்கு நனந்தலை எனத் தனித்தனி கூட்டுக. கோட் சுரம் - ஆறலைப்போராலும் கொடு விலங்குகளாலும் உண்டாம் கூறுபாட்டினையுடைய சுரம். வந்த நீர் நசை என்புழிப் பெயரெச்சம் காரண காரியப் பொருட்டாய் நின்றது. நீர் நசை வம்பலர் செல்லுயிர் நிறுத்த சுவைக்காய் நெல்லி என்றமையால், வம்பலர் நீர் விடாய் தாங்காது உயிர் கழியப்பெறும் எல்லையில் நெல்லிக்காய் அவ்விடாயைப் போக்கி அவர்கள் உயிரை நிறுத்தும் என்பதாயிற்று. நீரற்ற காட்டு நெறிகளில் வழிச்செல்வார் விடாய் தணித்தல் கருதி நெல்லிமரத்தை வைத்து வளர்த்தல் உண்டென்பது *'அறந்தலைப் பட்ட நெல்லியம் பசுங்காய்' என்பதனாலும் அறியப்படும். களி மலி கள்ளின் எனக் கொண்டு களிப்பு மிக்க மதுவினையுடைய என்றுரைத்தலுமாம். தோள் ஆய்தொடி ஞெகிழின் என்றது, மருந்துமுண்டோ என்னும் குறிப்பால் அவள் பிரிவுத்துயரால் மெலிந்து இறந்து படுவள் என்று கூறியவாறாயிற்று. நீர் பிரிந்துறையும் அவ்விடத்திருந்து இவள் உயிரைக் காக்கத் தக்கதொரு மருந்தும் இன்மையால் நீர் செல்லுதல் தவிர்க எனத் தோழி செலவு அழுங்குவித்தாளாம் என்க.

---

* குறுந்: ௨0௯.

272. குறிஞ்சி

[இரவுக்குறி வந்த தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகட்குச் சொல்லுவாளாய்த் தோழி சொல்லியது]

இரும்புலி தொலைத்த பெருங்கை வேழத்துப்
புலவுநாறு புகர்நுதல் கழுவக் கங்குல்
அருவி தந்த அணங்குடை நெடுங்கோட்டு
அஞ்சுவரு விடர்முகை ஆரிருள் அகற்றிய
மின்னொளிர் எஃகஞ் செல்நெறி விளக்கத்
தனியன் வந்து *பனியலை முனியான்
நீரிழி மருங்கின் ஆரிடத் தமன்ற
குளவியொடு மிடைந்த கூதளங் கண்ணி
அசையா நாற்றம் அசைவளி பகரத்
துறுகல் நண்ணிய கறியிவர் படப்பைக்
குறியிறைக் குரம்பைநம் மனைவயிற் புகுதரும்
மெய்ம்மலி யுவகையன் அந்நிலை கண்டு
முருகென உணர்ந்து முகமன் கூறி
உருவச் செந்தினை நீரொடு தூஉய்
நெடுவேட் பரவும் அன்னை அன்னோ
என்ன வதுகொல் தானே பொன்னென
மலர்ந்த வேங்கை அலங்குசினை பொலிய
மணிநிற மஞ்ஞை அகவும்
அணிமலை நாடனொடு அமைந்தநந் தொடர்பே.

—மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்.

(சொ-ள்.) ௧—௧௯. (நம் தலைவன்), இரும்புலி தொலைத்த பெருங்கை வேழத்து-பெரிய புலியை வென்ற பெரிய கையினையுடைய யானையின், புலவு நாறு புகர் நுதல் கழுவ - புலால் நாறும் புள்ளி பொருந்திய நெற்றியினைக் கழுவ, கங்குல் - இரவில், அருவி தந்த - அருவியைத் தந்த, அணங்கு உடை நெடுங்கோட்டு - தெய்வத்தினை யுடைய நெடிய மலையினது, அஞ்சுவரு விடர்முகை - அச்சம் தரும் பிளப்பாகிய குகைகளிலுள்ள, ஆர் இருள் அகற்றிய - அரிய இருளைப் போக்கிய, மின் ஒளிர் எஃகம் செல் நெறி விளக்க - மின்போல் விளங்கும் வேல் தான் செல்லும் நெறியினைக் காட்ட, தனியன் வந்து பனி அலை முனியான் - நம் தலைவன் தமியனாய் வந்து பனி அலைத்தலை

(பாடம்) * பணியலை.

வெருணுகி, நீர் இழி மருங்கின் ஆர் இடத்து அகன்ற - அருவிநீர் ஒழுகும் பக்கத்தினையுடைய அரிய இடத்தே செருங்கிய, குளவியொடு மிடைந்த கூதளம் கண்ணி - காட்டுமல்லிகை மலருடன் கூதள மலரையும் சேரத்தொடுத்த கண்ணியின், அசையா நாற்றம் அசைவளி பகர - விட்டு நீங்காத மணத்தினை அசையும் காற்று வெளிப்படுத்த, நறுகல் கண்ணிய கறி இவர் படப்பை - பொற்றைக்கல் பொருந்திய மிளகுக் கொடி படர்ந்த தோட்டத்தையுடைய, குறி இறை குரம்பை நம் மனைவயின் - குறிய இறப்பினையுடைய குடிசையாய நம் மனையினிடத்தே, மெய்ம்மலி உவகையன் - உடல் பூரிக்கும் மகிழ்ச்சியுடையனாய், புகுதரும் அந்நிலை - புகும் அந்நிலையை, கண்டு - நோக்கி, அன்னை - நம் அன்னை, முருகு என உணர்ந்து - முருகனே என எண்ணி, முகமன் கூறி - புகழுரை கூறி, உருவச் செந்தினை நீரொடு தூஉய் - நல்ல நிறம் வாய்ந்த செந்தினையை நீரொடு தூவி, நெடுவேள் பரவும் - முருகனைப் பரவா நின்றாள்;

௧௫—௧. பொன் என மலர்ந்த வேங்கை - பொன்னிறங் கொண்டு மலர்ந்த வேங்கையின், அலங்கு சினை பொலிய - அசையும் கிளை பொலிவுற, மணிநிற மஞ்ஞை அகவும் - நீலமணியை யொத்த நிறத்தையுடைய மயில் ஆடும், அணிமலை நாடனொடு அமைந்த நம் தொடர்பு - அழகிய மலைநாட்டையுடையனாய தலைவனொடு பொருந்திய நம் நட்பானது, அன்னோ -, என் ஆகுவது கொல் - என்ன நிலையினை அடையுமோ?

(முடிபு) (நம் தலைவன்) எஃகம் செல்நெறி விளக்க, தனியன் வந்து, பனியலை முனியான், கண்ணி நாற்றம் வளிபகர, மெய்ம்மலியுவகையன் நம் மனைவயிற் புகுதர, புகும் அந்நிலை கண்டு, முருகென உணர்ந்து முகமன் கூறி, செந்தினை நீரொடு தூஉய், அன்னை நெடுவேள் பரவும்; மலை நாடனொடு அமைந்த தொடர்பு அன்னோ என்னாவதுகொல்?

(வி - ரை.) நெடுங்கோடு மலைக்கு ஆயிற்று. விடாரகிய முகை என்க. பனியலை முனியான் என்பது பாடமாயின், தாழ்ந்து சிற்றலை வெருது என்று பொருள் உரைத்தல் வேண்டும். இப் பாடம் பொருந்து மேற்கொள்க. நீடுநிலை மாடத்தில் வதியும் இயல்புடைய நம் தலைவன் நமது குறியிறைக் குரம்பையையும் மதித்து உவகையுடன் புகுவான் ஆயினன் என்று தோழி வியந்து கூறினள் என்க. புகுதரும் - புகா நிற்க; அங்ஙனம் புகும் என வேறறுத்து உரைக்க. வேல் உடைமையாலும் அஞ்சாமையாலும் கண்ணி நாற்றத்தாலும் தலைவனே முருகென உணர்ந்தாளென்று கொள்க. முருகென உணர்ந்து அன்னை பரவும் என்றமையால், முருகனால் நமக்குத் தீங்கு உண்டாகும் என்று அஞ்சி இனி இற்செறிப்பள் என்பது புலப்படுத்தி அதனால் தலைவனொடு அமைந்த நம் தொடர்பு இனி யாதாகுமோ எனத் தோழி தலைவிக்குக் கூறினாள் என்க. சிறைப்புறத்தானாகிய தலைவன் கேட்டு வரைந்து கொள்ளுதல் இதன் பயனும் என்க.

(மே - ள்.) *'களவல ராயினும்' என்னும் சூத்திரத்து, இச்செய்யுளைக் கூறி, இம் மணிமிடை பவளத்துத் தலைவனைச் செவிலி கண்டு முருகெனப் பராவினமை தோழி கொண்டு கூறினள் என்றார், நச்.

---

273. பாலை

[பிரிவின்கண் தலைமகள் அறிவுமயங்கிச் சொல்லியது.]

விசும்பு †விசைத்தெறிந்த கூதளங் கோதையிற்
பசுங்கால் வெண்குருகு வாப்பறை வளைஇ
ஆர்கலி வளவயிற் போதொடு பரப்பப்
புலம்புனிறு தீர்ந்த புதுவரல் அற்சிரம்
நலங்கவர் பசலை நலியவும் நம்துயர்
அறியார் கொல்லோ தாமே அறியினும்
நம்மனத் ‡தன்ன மென்மை யின்மையின்
நம்முடை யுலகம் உள்ளார் கொல்லோ
யாங்கென உணர்கோ யானே வீங்குபு
§தலைவரம் பறியாத் தகைவரல் வாடையொடு
முலையிடைத் தோன்றிய நோய்வளர் இளமுளை
அசைவுடை நெஞ்சத்து உயவுத்திரள் நீடி
ஊரோர் எடுத்த அம்பல் அஞ்சினை
ஆராக் காதல் அவிர்தளிர் பரப்பிப்
புலவர் புகழ்ந்த ¶நாணில் பெருமரம்
நிலவரை யெல்லாம் நிழற்றி
அலரரும்பு ஊழ்ப்பவும் வாரா தோரே.

—ஔவையார்.

(சொ - ள்.) ௯—௧௭. வீங்குபு தலைவரம்பு அறியாத் தகைவரல் வாடையொடு - மிகுந்து முடிவெல்லை இதுவென அறியப்பெறாத தன்மையொடு வருதலையுடைய வாடைக் காற்றொடு கூடி, முலையிடைத் தோன்றிய நோய் வளர் இளமுளை - முலையின்கண்ணே தோன்றிய வேட்கை நோயாகிய வளரும் இளைய முளை, அசைவு உடை நெஞ்சத்து உயவுத் திரள் நீடி - தளர்ச்சியையுடைய நெஞ்சினிடத்தே வருத்தமாகிய திரண்ட அடியாய் நீண்டு, ஊரோர் எடுத்த அம்பல் அம் சினை - ஊரார் எழுப்பிய அம்பலாய அழகிய கிளைகளைக் கொண்டு, ஆராக்

---

* தொல். கள. ௨௪. (பாடம்) † விசைத்தெழுந்த. ‡ தன்மை யன்மையின் § தலைவரம்பு ¶ நாரில் பெருமரம்.

காதல் அவிர்தளிர் பரப்பி - அமையாத காதல் என்னும் விளங்கும் தளிர்களைப் பரப்பி, புலவர் புகழ்ந்த நாண் இல் பெருமரம் - புலவரால் புகழப்பெற்ற நாணம் இல்லாத பெரிய மரம் ஆகி, நிலவரை எல்லாம் நிழற்றி - நிலத்தின் எல்லையெல்லாம் கவிந்து, அலர் அரும்பு ஊழ்ப்பவும் - அலர் ஆகிய மலர்களைச் சொரியவும், வாராதோர் - வாராரா யினர்; ஆகலின், அங்ஙனம் வாராத நம் தலைவர்;

௯—௧௦. விசும்பு விசைத்து எறிந்த - வானில் வேகங் கொண்டெ றிந்த, கூதளம் கோதையில்-கூதாளியின் மாலைபோல, பசு கால் வெண் குருகு-பசிய காலினையுடைய வெள்ளாங் குருகு, வாப் பறை வளைஇ - தாவும் சிறகினை வளைத்து, ஆர்கலி வளவயின் போதொடு பரப்ப - வளம் பொருந்திய கடற்பக்கத்தே காட்காலையில் பரவி அமர, புலம் புனிறு தீர்ந்த புதுவரல் அற்சிரம் - விளைநிலங்கள் கதிர்களை ஈன்ற அணிமை நீங்கிய புதிதாக வந்த பனிக்காலத்தே, நலம் கவர் பசலை நலியவும் - நமது அழகினைக் கவர்ந்த பசலை நம்மை வருத்தவும், நம் துயர் அறியார் கொல்லோ - அதனால் நாம் எய்தும் துயரினை அறிந்திலரோ;

௧௧—௧௨. அறியினும் - அன்றி அறிந்திருப்பினும், நம் மனத்து அன்ன மென்மை இன்மையின் - நம் மனத்தின் மென்மை போன்ற மென்மை தம்மனத்தே யின்மையின், தாம் - அவர், நம்முடை உலகம் உள்ளார் கொல் - நம் பெண்டிர் உலகத்து இயல்பினை நினைந்திலரோ, யான் யாங்கு என உணர்கு - யான் என்னென உணர்வேன்?

(முடி.பு) வாடையொடு முலையிடைத் தோன்றிய நோய்வளர் இளமுளை, நெஞ்சத்து உயவுத் திரள் நீடி, அம்பல் அஞ்சினை கொண்டு காதல் தளிர் பரப்பி, நாணில் பெரு மரமாகி, நிலவரை யெல்லாம் நிழற்றி, அலர் அரும்பு ஊழ்ப்பவும் வாராதோர், அற்சிரம் பசலை நலிய வும், நம் துயர் அறியார் கொல்லோ; அறியினும், மென்மையின்மை யின், தாம் நம்முடை யுலகம் உள்ளார்கொல்லோ; யான் யாங்கென உணர்கு?

(வி - ரை.) விரிந்த கூதாளி மலரும் வெண்குருகும் தோற்றத் தான் ஒப்புமையுடையவாதல், *"பைம்புதல் நளிசினைக் குருகிருந்தன்ன, வண்பிணி யவிழ்ந்த வெண்கூ தாளத்து, அலங்குலை யலரி" என்ப தனாலும் அறியப்படும். நிலத்திலிருந்து வானிலே விசைத்தெழுந்த வெண்குருகு வானில் விசையுடன் எறியப்பட்ட வெள்ளிய கூதாளி மலர் போல்வதாயிற்று. குருகுபல நிரைத்து சென்றமையின் கூதள மாலைபோல என்றார். போது-காலைப்பொழுது. வாடையுடன் கூடிய கூதிர்ப்பருவம் தலைவனைப் பிரிந்து வருந்தும் தனக்கு மிக கொடிதாய்த் தோன்றுதலின், 'தலைவரம்பு அறியா வாடை' என்றாள். அக்காலத்தே, தலைவி தலைவனை அணையப்பெறாத முலையினை நோக்குழிப் பிரிவுத்

* அகம். ௭௭௮.

துன்பம் தோன்றுதலின், அது முளையாகவும் பின்னும் அதற்கேற்ப அவ்வருத்தம் மிகுதலும் அதனால் ஊரார் எழுப்பிய அம்பலும், அது பற்றி மிக்கெழுகின்ற காதலும், காதல் மிக்குழி நாண் அழிதலும், பின் அலர் பரத்தலும் முறையே பாரை, சினை, தளிர், பெருமரம், மலர் என்பனவாகவும் உருவகிக்கப்பெற்றன. இப்பாட்டு உருவகம். அம்பல் - முகிழ் முகிழ்த்தல்; பிறர் பழியினைச் சிலர் கூடிச் செவிச் சொல்லாகப் பேசுதல். காதல் - ஈண்டு வேட்கை நோய். அம்பலால் நோய் வளருமென்பது, * 'ஊரவர் கௌவை எருவாக அன்னை சொல், நீராக நீளுமிந் நோய்' என்பதனால் அறிக. மகளிர்க்கு நாண் உயிரினும் சிறந்தது என்று புலவர் பலரானும் போற்றப்படுதலின், 'புலவர் புகழ்ந்த நாண்' எனப்பட்டது. நாண் இல் பெருமரம் என்றதனை, நாண் இன்மையாகிய பெருமரம் எனப் பொருள் கொள்க. அலர் - பலர் அறியப்பேசும் பழிமொழி. இங்ஙனம் உருவகங்களைக் காரண காரிய முறையால் அமைத்திருப்பது ஔவையாரது நல்லிசைப் புலமையின் எல்லையில் பெருமைக்குச் சான்றாகுமாறு அறிக. வாராதோர் - என்பதனை வாராராயினர் ஆதலின், அங்ஙனம் வாராத நம் தலைவர் என விரித்துரைத்துக் கொள்க. ஆகலின் நம் துயர் அறியார் கொல்லோ என்றியைக்க. தம் பிரிவால் நம்மிடைத் தோன்றிய நோய் இவ்வாறெல்லாம் பெருகி நம்மைத் துன்புறுத்தவும் வந்திலராகலின் நம் துயரினை அறியாரோ எனவும், அறிந்துவைத்தும் நம்போலும் மனமொய்ம்மையின்றித் துன்பத்தைத் தாங்கும் திண்மையுடையராகலின், மகளிராவார் துயர் பொறுக்கலாற்றாது உயிர்விடும் நீரர் என்பதனையுணர்ந்திலரோ எனவும், அவற்றுள் ஒன்று துணியப்படாமையின் யாங்கென உணர்கோ எனவும் தலைவி அறிவு மயங்கிக் கூறினள் என்க.

---

274. முல்லை

[தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.]

இருவிசும்பு அதிர முழங்கி அரநலிந்து
இகுபெயல் அழிதுளி தலைஇ வானம்
பருவஞ் செய்த பானாட் கங்குல்
ஆடுதலைத் துருவின் தோடே மார்ப்பக்
கடைகோல் சிறுதீ அடைய மாட்டித்
திண்கால் உறியன் பானையன் அதளன்
நுண்பஃ றுவலை யொருதிறம் நனைப்பத்
தண்டுகால் ஊன்றிய தனிநிலை இடையன்

---

* குறள். அலரறி. ௭.

மடிவிடு வீளை கடிதுசென் றிசைப்பத்
தெறிமறி பார்க்குங் குறுநரி வெரீஇ
முள்ளுடைக் குறுந்தூறு *இரியப் போகுந்
தண்ணறும் புறவி னதுவே நறுமலர்
முல்லை சான்ற கற்பின்
மெல்லியற் குறுமகள் உறைவின் ஊரே.

—†இடைக்காடனார்.

(சொ - ள்.) கஉ—ச. (பாக!) நறுமலர் முல்லை சான்ற-நறுமணமுடைய முல்லைமலர் அணிந்த, கற்பின் மெல்லியல் குறுமகள் - கற்பினையுடைய மென்மைத்தன்மை வாய்ந்த நம் தலைவி, உறைவு இன் ஊர் - உறைவிடமாய இனிய ஊர்;

க—ங. வானம் - மேகம், இரு விசும்பு அதிர முழங்கி-பெரிய ஆகாயம் அதிரும்படி முழங்கி, அராவிந்து - பாம்பினை வருத்தி, இரு பெயல் அழி துளி தலைஇ - சொரியும் பெயலாகிய மிக்க துளியினைப் பொருக்கி, பருவம் செய்த பால் நாள் கங்குல் - கார்ப்பருவத்தினைச் செய்த பாதி இரவில்;

ச—கஉ. ஆடு தலைத் துருவின் தோடு எம் ஆர்ப்ப-அசையும் தலையினையுடைய செம்மறியாட்டின் தொகுதி பாதுகாவல் அடைய, கடைகோல் சிறு தீ அடைய மாட்டி - கடையும் கோலினின் றெழுந்த சிறுதீயை (அதை) வளர்த்திட விறகிற் சேர்த்து, திண் கால் உறியன் - வலிய தாம்பினையுடைய உறியுடையோனும், பானையன் - பானையையுடையோனும், அதளன் - தோற்படுக்கை உடையோனும், நுண் பல் துவலை ஒருதிறம் நனைப்ப - நுண்ணிய பலவாய மழைத்துளி தனது ஒரு பக்கத்தை நனைத்திட, தண்டு கால் ஊன்றிய தனிநிலை-கோலினைக் காலுடன் சார்த்தி ஊன்றிய தனியே நிற்றலையுடையோனுமாகிய, இடையன்—, மடிவிடு வீளை கடிது சென்று இசைப்ப - வாயை மடித்து எழுப்பும் சீழ்க்கை விரைந்து சென்று ஒலித்தலின், தெறிமறி பார்க்கும் குறு நரி வெரீஇ - துள்ளி விளையாடும் குட்டியினைக் கவரப் பார்த்திருக்கும் குள்ள நரி அஞ்சி, முள் உடை குறுந்தூறு இரியப் போகும் - முட்களையுடைய குறிய தூற்றின்கண் கெட்டு ஓடிப்போகும், தண் நறும் புறவினது - குளிர்ந்த நறிய காட்டின் கண்ணது.

(முடிபு) (பாக) குறுமகள் உறைவுஇன் ஊர் தண் நறும் புறவினது. பானாட்கங்குல் தனிநிலை இடையன் மடிவிடு வீளை இசைப்பக் குறுநரி வெரீஇக் குறுந்தூறு இரியப் போகும் புறவு எனக.

(வி - ரை.) அரா, குறியதன் இறுதிச் சினைகெட உகரம் பெறாது வந்தது. அழிதுளி - மிக்க துளி. கற்புடை மகளிர் முல்லை மலரை

(பாடம்) * இரியப் பெயரும். † கல்லாடனார்.

விரும்பி அணிவாராகலின், நறுமலர் முல்லை சான்ற கற்பின் என்றான். அன்றி, முல்லை சான்ற கற்பு என்பதற்கு இருத்தல் அமைந்த கற்பு எனப் பொருள் கொண்டு, நறுமலர் என்ற அடை முல்லை என்னும் பெயர் நோக்கி வந்தது என்றலுமாம். வானம் பருவம் செய்த என்றமையால், நாம் தலைவிக்கு மீண்டு வருவதாகக் குறித்த பருவம் வந்துவிட்டதென்பதும், குறுமகள் உறைவின் ஊர் தண்ணறும் புறவினது என்றமையால், நாம் செல்லுதற்கு நெறியும் செவ்விபுடைத்தென்பதும் கூறி, ஆண்டுத் தேரைச் செலுத்துக எனத் தலைவன் பாகற்கு உணர்த்தினான் என்க.

---

275. பாலை

[மகட் போக்கிய *தாய் சொல்லியது.]

ஓங்குநிலைத் தாழி மல்கச் சார்த்திக்
குடையடை நீரின் மடையினள் எடுத்த
பந்தர் வயலைப் பந்தெறிந் தாடி
இளமைத் தகைமையை †வளமனைக் கிழத்தி
பிதிர்வை நீரை வெண்ணீ றாகென
யாந்தற் கழறுங் காலைத் தான்றன்
மழலை இன்சொற் கழறல் இன்றி
இன்னுயிர் கலப்பக் கூறி நன்னுதல்
பெருஞ்சோற் றில்லத் தொருங்கியவண் இராஅன்
ஏதி லாளன் காதல் நம்பித்
திரளரை யிருப்பைத் தொள்ளை வான்பூக்
குருளை ‡யெண்கின் ஈரினங் கவரும்
§வெம்மலை யருஞ்சுரம் நம்மிவண் ஒழிய
இருநிலன் உயிர்க்கும் இன்னாக் கானம்
நெருநைப் போகிய பெருமடத் தகுவி
ஐதகல் அல்குல் தழையணிக் கூட்டும்
கூழை நொச்சிக் கீழ தென்மகள்
செப்புடைச் சிறுவிரல் வரித்த
வண்டலுங் காண்டிரோ கண்ணுடை யீரே.

—கயமனார்.

(பாடம்) * செவிலி சொல்லியது. † வளமனை கழிப்பி.
‡ எண்கின் இருங்கிளை. § வெம்முனை அருஞ்சுரம்.

(சொ - ள்.) க—க. வளமனைக் கிழத்தி - வளம்பொருந்திய மனைக்கு உரியளாகிய செல்வியே! ஒங்கு நிலைத் தாழி—உயர்ந்த நிலையின தாகிய சாடியில், மல்கச் சார்த்தி - நிறைய அடைவித்து, குடை அடை நீரின்-பனக்குடையால் முகந்த நீரினை, மடையினள் எடுத்த-சொரிந்து வளர்த்த. பந்தர் வயலை - வயலைக் கொடி படர்ந்த பந்தரில், பந்து எறிந்து ஆடி - பந்தினை எறிந்து விளையாடி, இளமைத் தகைமையை - இளமைத் தன்மையை உடையையாய், பிதிர்வை நீரை - திரியும் இயல் பினையுடையை ஆகின்றாய்; பெண் நீறு ஆக என - நினது பெண்மை அழிவதாக என்று, யாம் தன் கழறுங்காலை - யாம் அவளைக் கடிந்து கூறுங் காலத்து;

ரு—அ. நல் நுதல் - நல்ல நெற்றியினளாய அவள், தான் கழறல் இன்றி - தான் வன்சொற் கூறுதலின்றி, தன் மழலை இன் சொல் - தனது மழலையாகிய இன் சொல்லால், இன் உயிர் கலப்பக் கூறி - இனிய உயிருடன் பொருந்தும்படி கூறி;

கூ—கக பெருஞ்சோற்று இல்லத்து - (நாளும்) பெருவிருந்து நிகழும் எம் இல்லில், ஒருங்கு இவண் இராஅள் - எம்முடன்கூடி இங்குத் தங்காளாய், ஏதிலாளன் காதல் நம்பி - அயலானது காதலை விரும்பி, நம் இவண் ஒழிய - நாம் இங்கே பிரிந்திருக்க, திரள் அரை இருப்பை தொள்ளை வான் பூ - திரண்ட அரையினையுடைய இருப்பை மரத்தின் துளையுடைய வெள்ளிய பூக்களை, குருளை எண்கின் ஈர்இனம் கவரும் - குட்டிக் கரடிகளின் பெரிய கூட்டம் கவர்ந்துண்ணும், வெம் மலை அரும் சுரம் - கொடிய மலைகளை யடுத்த அரிய வழியையுடைய, இரு நிலம் உயிர்க்கும் இன்னாக் கானம் - பெரிய உலகம் அஞ்சி உயிர்த் தற்கேதுவாகிய இன்னாமையையுடைய பெரிய காட்டின்கண், நெருநை போகிய - நேற்றுப் போய்விட்ட, பெருமடத் தகுவி - பெரிய மடப் பத்தையுடையளாகிய, என் மகள் - என் மகள், ஐது அகல் அல்குல் - அழகிதாக அகன்ற அல்குலிடத்தே, தழை அணி கூட்டும்-தழையாகிய அணிக்குக் கொய்யும், கூழை நொச்சிக் கீழது - குறிய நொச்சியின் கீழதாய், செம்புடைச் சிறு விரல் வரித்த - அவளது சிவந்த பக்கத் தினையுடைய சிறுவிரல்களால் இயற்றப் பெற்றதாய, வண்டலும் - வண்டலையும், கண் உடையீர் - கண்ணுடையவர்களே, காண்டிரோ - நீவிர் காண்டிரோ?

(முடிபு) யாம் தன் கழறுங்கால், தான் மழலை இன்சொற்கூறி, இவண் இராஅள், காதல் நம்பிக் கானம் போகிய என் மகள் சிறுவிரல் வரித்த வண்டலும் கண்ணுடையீர் காண்டிரோ?

(வி - ரை.) நீரின் - சாரியை நிற்க உருபு தொக்கது. மடையினள் - மடுத்தவளாய்ச் சொரிந்து என்றபடி. எடுத்த - வளர்த்த. வயலைப்பந்தர் என மாறுக. மனைக்கிழத்தியாதற்குரிய பருவம் எய்திய

இளமைத்தன்மையை யுடையையாய்ப் பந்தினை விளையாடிப் புறத்தே திரிகின்றனை யாகலின் நினது பெண்மை நீருக என்று தாய் கழறினாள் என்க. *'பேதை யல்லை மேதையங் குறுமகள், பெதும்பைப் பருவத் தொதுக்கினை புறத்தென' என முன் வந்தமையுங் காண்க. பெண் - பெண்மை, பெண்டன்மை. †'கண்ணார்ந்த......பெண்ணன்று புனையிழாய்' என்புழிப் பெண் இப் பொருட்டாதல் காண்க. பெண் நீருக எனப் பிரித்துரைத்தலுமாம். கூழை கொச்சி - தழையணியின் பொருட்டுக் கொய்து குறைந்த கொச்சி என்றுமாம். ஏழை வண்டலும் என்று இயையும். கண்ணுடையீர் காண்டிரோ என்றது காணில் ஆற்றீர் எனத் தாய் தன் ஆற்றாமை தோன்றக் கூறியபடியாம்.

(மே - ள்.) ‡'எமப் பேரூர்ச்' என்னுஞ் சூத்திரத்து, 'வெம்மலை அருஞ்சுரம்......கண்ணுடையீரே' என்பதன்கண், வண்டலைக் காணூர் தேஎத்து நின்று, காணல் ஆற்றீர் எனக் கூறினமையின், ஆயத்திற் கன்றிப் புறஞ்சென்று சேரியோர்க்கு உரைத்ததாயிற்று என்றார், நச்.

---

276. மருதம்

[தலைமகட்குப் பாங்காயினர் கேட்பப் பரத்தை சொல்லியது.]

நீளிரும் பொய்கை யிரைவேட் டெழுந்த
வாளை வெண்போத்து உணீஇய நாரைதன்
அடியறிவு உறுதல் அஞ்சிப் பைப்பயக்
கடியிலம் புகூஉங் கள்வன் போலச்
சாஅய் ஒதுங்குந் துறைகேழ் ஊரனொடு
ஆவ தாக இனிநாண் உண்டோ
வருகதில் அம்மஎஞ் சேரி சேர
அரிவேய் உண்கண் அவன்பெண்டிர் காணத்
தாரும் தானையும் பற்றி ஆரியர்
பிடிபயின்று தரூஉம் பெருங்களிறு போலத்
தோள்கந் தாகக் கூந்தலிற் பிணித்தவன்
மார்புகடி கொள்ளே னாயின் ஆர்வுற்று
இரந்தோர்க் கீயாது ஈட்டியோன் பொருள்போல்
பரந்து வெளிப்படா தாகி
வருந்துக தில்லயாய் ஓம்பிய நலனே.

—பரணர்.

---

* அகம். எ. † கலி. குறிஞ்சி. உச. ‡ தொல். அகத். கூஎ.

(சொ - ள்.) க—ச. நீள் இரும் பொய்கை-நீண்ட பெரிய பொய்கையில், இரை வேட்டு எழுந்த வாளை வெண் போத்து-இரையை விரும்பிப் புறப்பட்ட வெள்ளிய வாளைப் போத்தினை, உணீஇய - உண்ணும் பொருட்டு, நாரை - நாரையானது, தன் அடி அறிவுறுதல் அஞ்சி - தன் அடியின் ஒலியை அம்மீன் உணர்ந்துகொள்ளலை அஞ்சி, பைப்பய-மெல்லமெல்ல, கடி இலம் புகூஉம் கள்வன்போல-காவல் பொருந்திய வீட்டிற் புகும் கள்வனைப்போல, சாஅய் ஒதுங்கும் துறை கேழ் ஊரனொடு-தளர்ந்து நடக்கும் இடமாகிய துறை பொருந்திய ஊரனுடன் ஆவது ஆக - நமக்கு ஆம்பழி ஆவதாக, இனி நாண் உண்டோ - இனி நமக்கு நாண் என்பதும் உளதாகுமோ?

எ—கஉ. எம் சேரி சேர வருக - அவ்வூரன் எம் சேரிக்கண் பொருந்த வருவானாக, அரிவேய் உண்கண் அவன் பெண்டிர் காண - செவ்வரி பொருந்திய மையுண்ட கண்களையுடைய அவன் பெண்கள் காண, தாரும் தானையும் பற்றி - அவன் மாலையையும் ஆடையையும் பிடித்துக்கொண்டு, ஆரியர் பிடி பயின்று தரூஉம் பெருங் களிறு போல - ஆரியர் பழக்கிவைத்துள்ள பெண்யானை தான் பழகிக் கொணர்ந்து தரும் பெரிய ஆண் யானைபோல, தோள் கந்தாகக் கூந்தலில் பிணித்து - தோள் கட்டுந் தறியாக அதன்கண் கூந்தலாற் கட்டி, அவன் மார்பு கடிகொள்ளேன் ஆயின் - அவன் மார்பினைச் சிறை செய்யேனாயின்;

கஉ—இ. யாய் ஓம்பிய நலன் - என் தாய் பாதுகாத்து வளர்த்த என் அழகானது, ஆர்வு உற்று - பொருளை விரும்பி, இரந்தோர்க்கு ஈயாது - இரந்தவர்களுக்கு ஈயாமல், ஈட்டியோன் பொருள்போல் - சேர்த்தவன் பொருளைப்போல, பரந்து வெளிப்படாது ஆகி - வெளிப்பட்டுப் பரவாததாகி, வருந்துக - வருந்தி ஒழிவதாக.

(முடிபு) ஊரனொடு ஆவது ஆக; இனி நாண் உண்டோ; அவன் எம் சேரி சேர வருக தில்; அவன் பெண்டிர் காணத் தாரும் தானையும் பற்றித் தோள் கந்தாகக் கூந்தலிற் பிணித்து, அவன் மார்பு கடிகொள்ளேன்ஆயின், யாய் ஓம்பிய நலன் பரந்து வெளிப்படாதாகி வருந்துக.

(வி - ரை.) வாளைப்போத்து-ஆண் வாளை; *'நீர் வாழ்சாதியுள் அறபிறப் புரிய' என்பதனால் வாளை போத்து எனப்பட்டது. நாரை கள்வன்போலச் சாஅய் ஒதுங்கும் ஊரன் என்றதனால், தலைவன் மறைவிற் பிறரை நாடுவன் என்பது குறிப்பித்தவாறாயிற்று. நாண் உண்டோ-நாணிருத்தலாற் பயனுண்டோ என்றபடி- வருகதில் என்புழி வந்தால் இன்னது செய்வல் என்னும் பொருட்டாகலின் தில் ஒழியிசைக்கண் வந்தது. அவன் பெண்டிர் என்றது, தலைமகட்குப் பாங்காயினாரை. ஆர்வு உற்று - விரும்பி, இவறுதலை மேற்கொண்டு; ஆர்வுற்று ஈட்டி

* தொல். மரபு. உச.

யோன் என்க. இரந்தோர்க்கு ஈயாது ஈட்டியோன் பொருள், அறனும் இன்பமும் பயவாமையின், நன்மக்களால் அறியப்படாததாகியிருந்து ஒழிதல்போல, யாய் ஓம்பிய நலன் வெளிப்பாடின்றி இருந்து அழிக எனப் பரத்தை வஞ்சினம் கூறினாள் என்க. இச் செய்யுள் காமக் கிழத்தி சேரிப்பரத்தையைப் புலந்து கூறியதென்பது நச்சினார்க்கினியர் கருத்தாகும்.

(மே - ள்.) *'புல்லுதல் மயக்கும் புலவிக் கண்ணும்' என்னுஞ் சூத்திரத்து இச்செய்யுளைக் காட்டி, இதனுட் 'பரந்து வெளிப்படாதாகி வருந்துக என்னலம்,' என்றமையிற் சேரிப்பரத்தையைப் புலந்து கூறுதல் முதலியனவுங் கொள்க என்றார், நச்.

†'விழைவே காலம்' என்னுஞ் சூத்திரத்து, 'தில்' ஒழியிசைப் பொருளில் வந்ததற்கு, 'வருக தில் அம்ம' என்பதனை எடுத்துக் காட்டி, வந்தக்கால் இன்னது செய்வல் என்பது பொருள் என்றனர், இளம், சேனா, தெய்வச், நச்.

---

277. பாலை

[தலைமகன் பிரிவின்கண் தலைமகள் தோழிக்குப் பருவங்கண்டழிந்து சொல்லியது.]

தண்கதிர் மண்டிலம் அவிரறச் சாஅய்ப்
பகலழி தோற்றம் போலப் பையென
நுதலொளி கரப்பவும் ஆள்வினை தருமார்
கவலில் உள்ளமொடு எஃகுதுணை யாகக்
கடையலங் குரல வாள்வரி உழுவை
பேழ்வாய்ப் பிணவின் விழுப்பசி நோனாது
இரும்பனஞ் ‡செறும்பின் அன்ன பரூஉமயிர்ச்
சிறுகட் பன்றி வருதிறம் பார்க்கும்
அத்தமார் அழுவத் தாங்கண் நனந்தலைப்
பொத்துடை மரத்த புகர்படு நீழல்
ஆறுசெல் வம்பலர் §அசையுநர் இருக்கும்
ஈரமில் வெஞ்சுரம் இறந்தோர் நம்வயின்
வாரா அளவை ஆயிழை கூர்வாய்
அழலகைந் தன்ன காமர் துதைமயிர்

---

* தொல். கற். ௧௦. † தொல். இடை. ௫.
(பாடம்) ‡ செறும்பினனைய. § அசைவினர் இருக்கும்.

மனையுறை கோழி மறனுடைச் சேவல்
போர்புரி யெருத்தம் போலக் கஞலிய
*பொங்கழல் முருக்கின் ஒண்குரல் மாந்திச்
சிதர்சிதர்ந் துகுத்த செவ்வி வேனில்
வந்தன்று அம்ம தானே
வாரார் தோழிநங் காத லோரே.

—கருவூர் நன்மார்பனார்.

(சொ - ள்.) கஅ. ஆய் இழை - ஆய்ந்த அணிகலனுடைய தோழியே!

க—கஅ. தண் கதிர் மண்டிலம் - குளிர்ந்த கதிர்களையுடைய திங்கள் மண்டிலம், அவிர் அற - விளக்கம் அற, சாஅய்-ஒளிகுன்றி, பகல் அழி தோற்றம்போல - பகலில் மறையும் செயல்போல, பை என நுதல் ஒளி கரப்பவும் - மெல்லென நமது நெற்றியின் ஒளி மாழ்கவும், ஆள் வினை தருமார் - முயற்சியால் பொருள் ஈட்டுதற்காக, தவல் இல் உள்ளமொடு-நீங்குதல் இல்லாத ஊக்கத்துடன், எஃகு துணையாக - தமது வேலே உற்ற துணையாகக்கொண்டு, கடையல் அம் குரல - தயிர் கடைவது போன்ற குரலையுடைய, வாள் வரி உழுவை - ஒளிபொருந்தியவரிகளையுடைய வேங்கையானது, பேழ் வாய் பிணவின் விழுபசிநோனாது-பிளந்த வாயினையுடைய தன் பெண்புலியின் மிக்க பசியினைப் பொறாது (சென்று), இரு பனம் செறும்பின் அன்ன - கரிய பனையின் சிறும்பினைப் போன்ற, பரூஉ மயிர்-தடித்த மயிரினையும், சிறு கண் - சிறிய கண்ணினையு முடைய, பன்றி வரு திறம் பார்க்கும்-பன்றி வருகிறநெறியினைப் பார்த்திருக்கும், அத்தம் ஆர் அழுவத்து நனந்தலை ஆங்கண் - காட்டின் பரப்பாகிய அகன்ற இடத்திலே. பொத்து உடை மரத்தபுகர் படு நீழல் - பொந்தினையுடைய மரங்களின் புள்ளிபட்ட நீழலில், ஆறு செல் வம்பலர் அசைபுநர் இருக்கும் - வழிச்செல்லும் புதியர் தளர்ந்தனராகித் தங்கியிருக்கும், ஈரம் இல் வெம் சுரம் இறந்தோர் - ஈரம் அற்ற வெவ்விய பாலையைக் கடந்து சென்ற நம் தலைவர். நம் வயின் வாரா அளவை - நம்பால் மீண்டு வாராக் காலத்தே;

கஅ—உ0. தோழி-, கூர்வாய்-கூரிய வாயினையும், அழல் அகைந்தன்ன - தீ கொழுந்துவிட் டெரிந்தாற்போலும், காமர் துதை மயிர் - அழகிய செறிந்த மயிர்ச் சிறகினையுடைய, மனை உறை கோழி மறன் உடைச் சேவல் - மனையில் உறையும் கோழியின் தறுகண்மையை உடைய சேவலின், போர் புரி எருத்தம் போல - போர் செய்யுங்கால் சிலிர்த்தெழும் கழுத்தினைப்போல, கஞலிய பொங்கு அழல் முருக்கின் ஒண் குரல் மாந்தி - நெருங்கிய மிக்க தீப்போலும் நிறம் வாய்ந்த செம்

(பாடம்) * புன்காய் முருக்கின்.

முருக்கினது ஒள்ளிய கொத்திலுள்ள மதுவை ஆர உண்டு, சிதர் சிதர்ந்து உகுத்த செவ்வி வேனில் - வண்டுகள் அத் தேன் சிதறுமாறு உகுத்த இளவேனிற்காலம், வந்தன்று - வந்தது, நம் காதலோர் வாரார் - நம் காதலர் இன்னும் வந்திலர், என்செய்வாம்.

(முடிபு) ஆய் இழை! நம் நுதல் ஒளி கரப்பவும், ஆள் வினை தருமார் எஃகு துணையாக வெஞ்சுரம் இறந்தோர் நம்வயின் வாரா அளவை, செவ்வி வேனில் வந்தன்று; தோழி! நம் காதலோர் வாரார்; என்செய்வாம்.

(வி - ரை.) பகலில் ஞாயிற்றின் கதிர் முறுகுந்தோறும், திங்கள் மண்டிலம் ஒளி சிறிது சிறிதாகக் குறைந்து மறைதலின் தலைவியின் நுதல் ஒளி சிறிது சிறிதாகக் குன்றி ஒழிதற்கு உவமையாகக் கூறப்பட்டது. நுதலொளி கரப்பவும் ஆள்வினை தருமார் வெஞ்சுரம் இறந்தோர் என்றது, பிரிவுக்குறிப்பு அறிந்து தலைவர் பிரிவர் என்னும் அச்சத்தால் நமது நெற்றியின் ஒளி ஒழுகக் கெடவும், அது நோக்கி யொழியாது முயற்சியை மேற்கொண்டு சென்றவர் என்றபடி. 'தவலில் உள்ளமொடு எஃகு துணையாக...சுரமில் வெஞ்சுரம் இறந்தோர்' என்றது தலைவனுடைய ஆண்மையையும் அஞ்சாமையையும் கூறியபடியாம். கடையலங்குரல: கடையல் - தயிர் கடைதல்; அம் - அசை. தயிர் கடையும் ஓசையும் புலியின் முழக்கமும் ஒரு நிகரன என்பது *'புலிக்குரல் மத்தம் ஒலிப்ப வாங்கி' †'கடைதயிர்க் குரல வேங்கை' என்பவற்றாலும் அறியப்படும். பொத்து-பொந்து; வலித்தல் விகாரம். வெஞ்சுரம் இறந்தோர் வாரா அளவை செவ்விவேனில் வந்தன்று: காதலோர் வாரார் என்றமையால் இளவேனிற்குமுன் வருவேம் என்று காலம் குறித்துச் சென்ற தலைவர் அது வந்த பின்னும் வந்திலரேனத் தலைவி பருவங்கண்டழிந்து கூறினளாயிற்று. துதைமயிர்ச் சேவல் எனக் கூட்டுக. சிதர் - வண்டு. சிதர்ந்து - சிதர்ந்திட. உகுத்த என்னும் பெயரெச்சம் காலப்பெயர் கொண்டது. வண்டு உண்டு எஞ்சிய தேனைச் சிதறும்படி உகுத்த வேனில் என்றது, இன்பம் நுகர்வார்க்குச் சிறந்த இளவேனில் என, அதன் சிறப்புக் கூறியபடி.

---

278. குறிஞ்சி

[இரவுக்குறிக்கண் தலைமகன் சிறைப்புறமாகத்
தலைமகட்குத் தோழி சொல்லியது.]

குணகடல் முகந்த கொள்ளை வானம்
பணைகெழு வேந்தர் பல்படைத் தானைத்
தோல்நிரைத் தனைய வாகி வலனேர்பு

---

* பெரும்பாண் - கருசு. † சிந்தா - உ௫கஎ.

கோல்நிமிர் கொடியின் வசிபட மின்னி
உருமுரறு அதிர்குரல் தலைஇப் பானாட்
*பெருமலை மீமிசை முற்றின வாயின்
வாளிலங் கருவி தாஅய் நாளை
இருவெதிர் அம்கழை ஒசியத் தீண்டி
வருவது மாதோ வண்பரி யுந்தி
நனிபெரும் பரப்பின் நம்மூர் முன்துறைப்
பனிபொரு மழைக்கண் †சிவப்பப் பானாள்
முனிபடர் அகல மூழ்குவங் கொல்லோ
மணிமருண் மேனி யாய்நலந் தொலையத்
தணிவருந் துயரஞ் செய்தோன்
அணிகிளர் நெடுவரை யாடிய நீரே.

—கபிலர்.

(சொ - ள்.) தோழி!

க—ச. குணகடல் முகந்த கொள்ளை வானம் - கீழ்கடலின் நீரை முகந்த மிகுதியையுடைய மேகங்கள், பணைகெழு வேந்தர் பல்படைத் தானை தோல் நிரைத்த அனையவாகி-முரசு பொருந்திய அரசர்களின் பலவாகிய படைக்கலங்களையுடைய சேனையின்கண்ணே நிரைக்கப் பட்ட யானைகளை ஒப்பனவாகி, வலன் ஏர்பு-வலமாக எழுந்து, கோல் நிமிர் கொடியின் வசிபட மின்னி-கோலின்கண் நிமிர்ந்த கொடிபோல வானம் பிளக்கும்படி மின்னுதலைச் செய்து, உரும் உரறு அதிர் குரல் தலைஇ - இடி இடிக்கின்ற மிக்க முழக்கத்தைப் பொருந்தி, பால் நாள்-நடு இரவில், பெருமலை மீமிசை முற்றின ஆயின் - பெரிய மலையின் உச்சியில் சூழ்ந்தன ஆகவின்;

எ—க0. நாளை - நாளை, வாள் இலங்கு அருவி தாஅய்-ஒளிவிளங் கும் அருவியானது பரந்து, இரு வெதிர் அம் கழை ஒசியத் தீண்டி - பெரிய மூங்கிலின் அழகிய தண்டு முரியும்படி தாக்கி, வண் பரி உந்தி- அழகிய குதிரை மரங்களைச் சாய்த்து, நனி பெரும் பரப்பின் நம் ஊர் முன் துறை-மிக்க பெரிய பரப்பினையுடைய நம் ஊரின் நீர்த்துறையில், வருவது - வாராநிற்கும் (வந்தால்);

கக—ச. மணி மருள் மேனி ஆய் நலம் தொலைய-மணியை ஒக்கும் மேனியின் அழகிய நலம் கெடும்படி, தணிவு அரும் துயரம் செய் தோன் - நீங்குதல் இல்லாத துயரத்தைச் செய்தவனுடைய, அணி கிளர் நெடுவரை ஆடிய நீர் - அழகு விளங்குகின்ற நீண்ட மலையிலே தோய்ந்து வருகின்ற நீரின்கண், பனி பொரு மழைக்கண் சிவப்ப -

(பாடம்) *பெருவரை. †சிவப்பப் பன்னாள்.

பனியை யொக்கும் குளிர்ந்த கண்கள் சிவக்க, பால் நாள் முனிபடர் அகல - நள்ளிரவில் வெறுக்கும் துன்பம் நீங்க, மூழ்குவம் கொல்லோ- மூழ்குவேமோ?

(முடிபு) தோழி! வானம் பெருமலை மீமிசை முற்றின; ஆயின், நாளை அருவி நம் ஊர் முன்றுறை வருவது; வந்தால், துயரஞ் செய்தோன் நெடுவரை ஆடிய நீர் பானாள் படர் அகல மூழ்குவங் கொல்லோ?

(வி - ரை.) கொள்ளை - நீர்ப் பெருக்கு. நீருண்ட மேகத்திற்கு யானை உவமையாதலை, *'ஒளிறுவாட் பொருப்பன் உடல்சமத் திறுத்த, களிறு நிரைத்தவை போற் கொண்மூ' †'நெய்யணி குஞ்சரம் போல இருங் கொண்மூ, வைகலும் ஏரும் வலம்' என்பவற்றாலும் அறிக. இனி, தோல் பரிசை என்றலுமாம்; ‡'நெய்கனி நெடுவேல் எஃகிலை யிமைக்கும், மழை மருள் பஃறோல் மாவண் சோழர்' §'மாரி யம்பின் மழைத்தோற் பழையன்' என்பன காண்க. ஆயின் - ஆதலால். பரி - யாற்றில் அணை கோலுவார் நிறுத்தும் குதிரை மரம்; ¶'பரி நிறுத்துவார்' என்பது காண்க. தலைவன் நமது அழகுகெட நம்மைப் பிரிந்து நாம் முயங்குதற்குத் தன் மார்பினைத் தாராது துன்பம் செய்தான் ஆயினும், அவனது மலையினைத் தோய்ந்துவரும் நீரில் நாம் மூழ்குதலால் அவனது மார்பினைத் தோய்ந்தாற்போல் படர் அகலப் பெறுவேம் என்று தனது வேட்கை மிகுதி புலப்படுத்துத் தலைமகட்குக் கூறுவாளாய்த் தோழி தலைமகன் சிறைப்புறமாகக் கூறினாளென்க. தலைவன் இதனைக் கேட்டு விரைந்து வரைவானாதல் பயன்.

---

279. பாலை

[பொருள்வயிற் பிரிந்து போகாநின்ற தலைமகன்
தன்னெஞ்சிற்குச் சொல்லியது.]

நட்டோர் இன்மையுங் கேளிர் துன்பமும்
ஒட்டாது உறையுநர் பெருக்கமுங் காணூஉ
ஒருபதி வாழ்தல் ஆற்றுப தில்லை
பொன்னவிர் சுணங்கொடு செறிய வீங்கிய
மென்முலை முற்றங் கடவா தோரென
நள்ளென் கங்குலும் பகலும் இயைந்தியைந்து
உள்ளம் பொத்திய உரஞ்சுடு கூரெரி
ஆள்வினை மாரியின் அவியா நாளும்

---

* பரிபாடல். ௨௨: ௧-௨. † கார்நாற்பது. ௧௨. ‡ அகம். ௧௨௬.
§ அகம். ௧௮௬. ¶ திருவிளை. மண்சுமந்த. ௫.

கடறுழந்து இவண மாகப் படருழந்து
யாங்கா குவள்கொல் தானே தீந்தொடை
விளரி நரம்பின் நயவரு சீறியாழ்
*மலிபூம் பொங்கர் மகிழ்குரல் குயிலொடு
புணர்துயில் எடுப்பும் புனல்தெளி காலையும்
நம்முடை மதுகைய ளாகி யணிநடை
அன்னமாண் பெடையின் மென்மெல இயலிக்
கையறு நெஞ்சினள் அடைதரும்
மையீர் ஓதி மாஅ யோளே.

—†இருங்கோன் ஒல்லையாயன் செங்கண்ணனார்.

(சொ - ள்.) நெஞ்சே!

க—க. பொன் அவிர் சுணங்கொடு - பொன்னென விளங்கும் சுணங்கினைக் கொண்டு, செறிய வீங்கிய - நெருங்கப் பணைத்த, மெல் முலை முற்றம்-மெல்லிய முலைப் பரப்பினை, கடவாதோர்-விட்டு நீங்காத நெஞ்சினர், நட்டோர் இன்மையும்-நண்புற்றார் செல்வம் இல்லாதொழிதலும், கேளிர் துன்பமும் - சுற்றத்தார் துன்பம் உறுதலும், ஒட்டாது உறையுநர் பெருக்கமும் - மனம் பொருந்தாது உறைபவர் பெருமிதத்துடனிருத்தலும், காணூஉ - கண்டு வைத்தும், ஒரு பதி வாழ்தல் ஆற்றுப - ஒரே யிடத்தில் மடிந்திருத்தலைப் பொறுத்திருப்பார்கள், என - என்று, நள் என் கங்குலும் பகலும் - நள்ளென்னும் ஓசையையுடைய இரவிலும் பகலிலும், உள்ளம் இயைந்து இயைந்து பொத்திய - உள்ளத்திலே தோன்றித் தோன்றி மூண்ட, உரம் சுடு கூர் எரி-நெஞ்சினைச் சுடுகின்ற கவலையாகிய மிக்க தீயினை, ஆள் வினை மாரியின் அவியா-முயற்சியாகிய மழையால் அவித்து, நாளும்-ஒவ்வொரு நாளும், கடறு உழந்து இவணம் ஆக - இக்காட்டில் வருந்தி நாம் இங்கே பிரிந்திருப்பேம் ஆக;

கூ—கஎ. தீம் தொடை விளரி நரம்பின் நயவரு சீறியாழ்-இனிய தொடுத்தல் அமைந்த விளரி என்னும் நரம்பினது இனிமை பொருந்திய சிறிய யாழின் இசை, மலி பூங் கொம்பர் மகிழ்குரற் குயிலொடு - மிக்க பூக்களையுடைய கொம்புகளிலிருந்து மகிழ்ந்து கூவும் குயிலின் ஒலியுடன் கூடி, புணர் துயில் எடுப்பும் புனல் தெளி காலையும்-பொருந்திய துயிலை எழுப்பும் நீர் தெளிந்து வரும் காலையும், நம்முடை மதுகையள் ஆகி - நம்மையே தன் வலியாகக்கொண்டனளாகி, அணி நடை அன்ன மாண் பெடையின் மெல்மெல இயலி - மாண்புற்ற அன்னப்பெடை போலும் அழகிய நடையால் மெல்லென நடந்து, கையறு நெஞ்சினள்-செயலற்ற நெஞ்சினளாகி, அடைதரும்-நம்மை அணையும், மை ஈர் ஓதி மாயோள்-கரிய நெடிய கூந்தலையுடைய மாமை நிறத்தின

(பாடம்) * நறை மலி பொங்கர். † இருங்கோக் கண்ணனார்.

வாய நம் தலைவி, படர் உழந்து யாங்கு ஆகுவன்கொல் - துன்பத்தால் வருந்தி எத்தன்மையள் ஆவளோ?

(முடிபு) நெஞ்சே! மென்முலை முற்றம் கடவாதோர், நட்டோ ரின்மையும் கேளிர் துன்பமும் ஒட்டா துறையுநர் பெருக்கமும் காணூஉ, ஒருபதி வாழ்தல் ஆற்றுப; என உள்ளம் பொத்திய உரஞ் சுடு கூர்எரி, ஆள்வினை மாரியின் அவியா, நாளும் கடறுழந்திவண மாக, மை ஈர் ஓதி மாயோள் யாங்காகுவள் கொல்?

(வி - ரை.) ஒட்டாது உறையுநர் - ஒட்டார், பகைவர். மென் முலை முற்றம் கடவாதோர் என்றது - போகம் வேண்டி ஆள்வினை யாற் பொருள் ஈட்டாதவர் என அதன் காரியத்தை உணர்த்திற்று. பொருள் ஈட்டாதவர் நட்டாரது வறுமையையும், சுற்றத்தாரது துன்பத்தையும் பகைவரது மிகுதியையும் களைதல் ஆற்றார் என்க. நட்டோரும் கேளிரும் துன்பமுறுதலையும் பகைவர் பெருமிதத்தோடு வாழ்தலையும் கண்டுவைத்து அவர்களுடன் ஒரு பதியில் வாழ்தல் என்பது மானமுடையார்க்குப் பொறுத்தற்கரியதாகவும், மென்முலை முற்றங் கடவாதோர் அதனையும் பொறுப்பரென அவரது இகழ்ச்சி தோன்றக் கூறியபடி. *"செறுவோர் செம்மல் வாட்டலும் சேர்ந் தோர்க், குறைமிடத் துய்க்குமுதவி யாண்மையும், இல்லிருந் தமை வோர்க் கில்லென் றெண்ணி" என்பதும். அச்செய்யுளின் உரையும் கண்டு அறியற்பாலன. பொத்திய-ஈண்டு மூண்ட என்றபடி. அவியா உழந்து என இயையும். யாழ் குயில் என்பன ஆகுபெயர். சிறியாழ் துயிலெடுப்பும் என்றது, துயிலெடைநிலை பாடுதலைக் குறிப்பித்தவாறு. புனல் தெளி காலை இளவேனிற் காலம். காலையும்: உம்மை, சிறப் பும்மை. நம்முடை மதுகையள் ஆகி மென்மெல இயலிக் கையறு நெஞ் சினன் அடைதரும் மாயோள் என்றது - நாம் பிரியும் முன்பே பிரி வேமோ என்னும் அச்சத்தால் கையற்ற நெஞ்சுடன் நம்மை அகலாது அணுகும் இயல்புடையவள் என்றபடி, பிரியாவுங்கே அங்ஙனம் வருந்துபவள் நாம் பிரிந்திருக்கும் இக்காலத்தே ஊடினரெல்லாம் கூடுதற்குரிய இவ்விளவேனில் யாங்காகுவளோ என்று தலைவன் தன் நெஞ்சிற்குச் சொல்லி வருந்தினனென்க.

---

280. நெய்தல்

[தலைமகளைக் கண்ணுற்று நீங்குந் தலைமகன் தன்னெஞ்சிற்குச் சொல்லியது. அல்லகுறிப்பட்டுப் போகாநின்றவன் சொல்லியதுமாம்.]

பொன்னடர்க் தன்ன ஒள்ளிணர்ச் செருந்திப்
பன்மலர் வேய்ந்த நலம்பெறு கோதையள்

---

* அகம் - ௨௩௧.

திணிமணல் அடைகரை அலவன் ஆட்டி
அசையினள் இருந்த ஆய்தொடிக் குறுமகள்
நலஞ்சால் விழுப்பொருள் கலம்நிறை கொடுப்பினும்
பெறலருங் குரையள் *ஆயின் அறந்தெரிந்து
நாமுறை தேஎம் மரூஉப்பெயர்ந் தவனொடு
இருநீர்ச் சேர்ப்பின் †உப்புடன் உழந்தும்
பெருநீர்க் குட்டம் புணையொடு புக்கும்
படுத்தனம் பணிந்தனம் ‡அடுத்தனம் இருப்பில்
தருகுவன் கொல்லோ தானே விரிதிரைக்
கண்திரள் முத்தங் கொண்டு ஞாங்கர்த்
தேன் இமிர் அகன்கரைப் பகுக்குங்
கானலம் பெருந்துறைப் §பரதவன் நமக்கே.

—அம்மூவனார்.

(சொ - ள்.) க—ச. நெஞ்சே!) பொன் அடர்ந்தன்ன—பொற்பூக்கள் நெருங்கி யிருந்தாற்போன்ற, ஒள் இணர் செருந்தி பல் மலர் வேய்ந்த - ஒளிபொருந்திய கொத்துக்களையுடைய செருந்தியின் பல பூக்களைச் சூடிய, நலம் பெறு கோதையள் - அழகு பொருந்திய கூந்தலை யுடையாளாகி. திணி மணல் அடைகரை - செறிந்த மணலையுடைய கடற்கரையில், அலவன் ஆட்டி - ஞெண்டினை ஓட்டி விளையாடி, அசையினள் இருந்த - இளைப்பாறி யிருந்த, ஆய்தொடி குறுமகள் - ஆய்ந்த தொடியினை அணிந்த தலைவி, நலம் சால் விழு பொருள் கலம் நிறை கொடுப்பினும், நன்மை மிக்க சிறந்த பொருளும் அணிகலமும் நிறையக் கொடுப்பினும், பெறல் அருங் குரையள் ஆயின் - பெறுதற்கு அரியள் ஆனால்;

கக—ச. விரி திரை கண் திரள் முத்தம் கொண்டு - விரிந்த கடலில் திரண்ட வடிவினையுடைய முத்துக்களைக்கொண்டு, தேன் இமிர் அகன்கரை ஞாங்கர் பகுக்கும் - வண்டுகள் ஒலிக்கும் அகன்ற கரையிடத்தே அவைகளைப் பகுத்துக்கொள்ளும், கானல் அம் பெருந்துறை பரதவன் - சோலையினையுடைய அழகிய பெரிய துறையினை யுடைய நெய்தற் றலைவனாகிய அவன் தந்தை நமக்கு—,

ரு—கக. நாம் உறை தேஎம் மரூஉ பெயர்ந்து - நாம் தங்கும் இந் நாட்டில் பயின்றிருத்தலின் நீங்கி, அவனொடு - அவனுடன்கூடி, இருநீர் சேர்ப்பின் உப்பு உடன் உழந்தும் - பெரிய கடற்கரையினை யடுத்த உப்புச்செறுவில் உப்புப்பொதியுடன் திரிந்து வருந்தியும், பெரு நீர்

(பாடம்) * ஆயினத்தில். † உப்புடனுழுதும்.
‡ மடுத்தனம் விரும்பில். § பரதவன் மகளே.

குட்டம் புணையொடு புக்கும் - பெரிய கடலின் ஆழத்தில் புணையின்கண் சென்றும், படுத்தனம் பணித்தனம் அடுத்தனம் இருப்பின் - அவன் வயமாகியும் பணிந்தும் சார்ந்தும் இருப்பின், அறம் தெரிந்து - அறமா தலை உணர்ந்து, தருகுவன் கொல் - அவளைத் தருவானோ?

(முடிபு) நெஞ்சே! விழுப்பொருள் கலம் நிறை கொடுப்பினும் பெறலருங் குரையள் ஆயின், நாம் பெயர்ந்து அவனொடு உடன் உழந்தும், புணையொடு புக்கும் படுத்தனம் பணிந்தனம் அடுத்தனம் இருப்பில், பரதவன் அறந்தெரிந்து நமக்கு (அவளைத்) தருகுவன் கொல்லோ?

(வி - ரை.) பொன் அடர்ந்தன்ன-பொன் தகடாயினாற்போன்ற (செருந்திமலர்) என்றுரைத்தலுமாம். கடற்கரையிடங்களில் உள்ள சிறு ஞெண்டுகள் மக்களைக் காண்புழி விரைந்து ஓடி அளையிற் புகுதல் சிறந்ததோர் காட்சியாக இருக்குமாகலின், சிறுவர் சிறுமியர் அவற்றை அங்கும் இங்கும் அலைத்து விளையாடுதல் இற்றைக்கும் கண்கூடு. விழுப் பொருள் - பொன். கலம்-அணிகலம். நிறை - நிறைய. மருவுதல் - பயின்று வதிதல். ஒப்புடன் உழுதும் என்று பாடங் காணப்படினும், இவ்வாசிரியரே, *'இருங்கழிச் செறுவின் உழாஅது செய்த, வெண் கல் உப்பின் கொள்ளை சாற்றி' என்று கூறியிருத்தலின், ஈண்டு உழு தும் என்ற பாடம் பொருந்தாமை புணர்க. உப்புடன் உழத்தலாவது உப்பு விற்றுத் திரிந்து வருந்துதல். படுத்தல் - அகப்படுத்தல்; அவன் வயம் ஆக்குதல். அடுத்தல் - சார்ந்திருத்தல். தருகுவன் கொல்லோ என்றமையால். தருவனாயின் அவ்வாறு செய்தும் அவளைப் பெறக்கட வேம் என்று தலைமகன் நெஞ்சிற்குக் கூறினான் என்க. நச்சினார்க் கினியர் இச் செய்யுளைத் தலைவன் பொருள்வயிற் பிரியக் கருதியதாகக் கொண்டு உரைப்பர்.

(மே - ள்.) †'வெளிப்படைதானே' என்னுஞ் சூத்திரத்து, இச் செய்யுளைக் காட்டி, இதனுள் பொருள் கொடுத்தாற் பெறல் அரியளா யின், தன்னை வழிபட்டால் தந்தை தருவனோ? அது நமக்கு அரிதா கலின், இன்னும் பொருள் நாம் மிகத் தேடிவந்து வரைதும் எனப் பொருள்வயிற் பிரியக் கருதியவாறு காண்க என்பர், நச்.

---

281. பாலை

[தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட தலைமகளது வேறுபாடு கண்டு ஆற்றாளாகிய தோழிக்குத் தலைமகள் சொல்லியது.]

செய்வது தெரிந்திசின் தோழி அல்கலும்
‡அகலுள் ஆங்கண் அச்சறக் கூறிய

---

* அகம். ௪௬௦. † தொல். கள. ௨௦.
(பாடம்) ‡ அகலுள் ஆண்மை.

சொற்பழு தாகும் என்றும் அஞ்சாது
ஒல்கியல் மடமயில் ஒழித்த பீலி
வான்போழ் வல்வில் சுற்றி நோன்சிலை
அவ்வார் விளிம்பிற்கு அமைந்த நொவ்வியல்
கணைகுர லிசைக்கும் விரைசெலற் கடுங்கணை
முரண்மிகு வடுகர் முன்னுற மோரியர்
தென்றிசை மாதிரம் முன்னிய வரவிற்கு
விண்ணுற வோங்கிய பனியிருங் குன்றத்து
ஒண்கதிர்த் திகிரி யுருளிய குறைத்த
அறையிறந் தவரோ சென்றனர்
பறையறைந் தன்ன அலர்நமக் கொழித்தே.

—மாமூலனார்.

(சொ - ள்.) ௧—௩. தோழி—, அல்கலும் அகலுள் ஆங்கண் - நாடோறும் ஊரின்கண்ணே யிருந்து, அச்சு அறக் கூறிய சொல் - நமக்கு அச்சம் இன்றாகக் கூறிய சொல், பழுது ஆகும் என்றும் அஞ்சாது - பழுதுபடும் எனவும் அஞ்சாமல்;

௪—௧௨. ஒல்கு இயல் மட மயில் ஒழித்த பீலி - நடக்கும் தன்மை வாய்ந்த இளமை பொருந்திய மயில் கழித்த தோகையை, வான் போழ் வல்வில் சுற்றி - நீண்ட வாரினால் வலிய வல்லில் வைத்துக் கட்டி, நோன் சிலை - அந்த வலிய வில்லின், அவ் வார் விளிம்பிற்கு அமைந்த - அழகிய நெடிய நாணின் விளிம்பிற்குப் பொருந்திய, நொவ்வு இயல் கணை குரல் இசைக்கும் விரை செலல் கடு கணை - விரைவுத்தன்மை யுடைய மிக்க ஒலி ஒலிக்கும் விரைந்தசெலவு பொருந்திய கடிய அம்பு களையுடைய, முரண் மிகு வடுகர் முன் உற - மாறுபாடு மிக்க வடுகர் தமக்கு முன்னே துணையாகி வர, மோரியர் தென் திசை மாதிரம் முன்னிய வரவிற்கு - மோரியர் என்பார் தென்றிசை நாடுகளைப் பற்ற எண்ணிப் போந்த வருகைக்கு, விண் உற ஓங்கிய பனி இரு குன்றத்து - விசும்பு அளாவ உயர்ந்த பனியுடைய பெரிய மலையினை, ஒண் கதிர் திகிரி உருளிய - தமது ஒள்ளிய கதிர்களையுடைய ஆழி தடையின்றிச் செல்ல, குறைத்த - போழ்ந்து வழியாக்கிய, அறை இறந்து - பாறைகளைக் கடந்து;

௧௨—௧௩. பறை அறைந்தன்ன அலர் நமக்கு ஒழித்து - பறை அறைந்தாலொத்த அலரினை நம்பால் விடுத்து, அவரோ சென்றனர் - நம் தலைவர் போய்விட்டார்;

௧. செய்வது தெரிந்திசின் - நாம் இனிச் செயற்பாலதனை ஆராய்ந்து காண்பாயாக.

(முடிபு) தோழி, அச்சறக் கூறியசொற் பழுதாகுமென்றும் அஞ்சாது, அவர் அறையிறந்து அலர் நமக்கு ஒழித்துச் சென்றனர்; செய்வது தெரிந்திசின்.

(வி - ரை.) அகலுள் - அகன்ற இடத்தையுடைய ஊர்; *"அகலு ளாங்கண் அறிபுநர் வினவும்" என்புழி நச்சினார்க்கினியர் உரைத்தமை காண்க. அச்சம் - அச்சு எனக் குறைந்து நின்றது. கூறிய சொல்லாவது - நின்னிற் பிரியேன் என்று பலகாலும் தெருட்டிய சொல். அஞ்சாது சென்றனர் என்று இயையும். கொவ்வு இயல் கணை குரல் - கணை விரைந்து செல்லுதலால் எழும் ஓசை. பறை அறைந்தன்ன அலர் - பறையறைந்தாற் போல யாண்டும் பரந்து வெளிப்படும் அலர். அலர் நமக்கு ஒழித்து என்றது, அலராகிய துன்பம் ஒன்றையே நமக்கு உரியதாக்கிச் சென்றனர் என்றபடி.

---

282. குறிஞ்சி

[இரவுக்குறிக்கண் தலைமகன் சிறைப்புறமாகத் தோழி தலைமகட்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது. தலைமகன் பிரிவின்கண் தோழிக்குத் தலைமகள் சொல்லியதுமாம்.]

பெருமலைச் சிலம்பின் வேட்டம் போகிய
செறிமடை யம்பின் வல்விற் கானவன்
பொருதுதொலை யானை வெண்கோடு கொண்டு
நீர்திகழ் சிலம்பின் நன்பொன் அகழ்வோன்
கண்பொருது இமைக்குந் திண்மணி †கிளர்ப்ப
வைந்நுதி வான்மருப் பொடிய உக்க
தெண்ணீர் ஆலி கடுக்கும் முத்தமொடு
மூவேறு தாரமும் ‡ஒருங்குடன் கொண்டு
சாந்தம் பொறைமர மாக நறைநார்
வேங்கைக் கண்ணியன் இழிதரு நாடற்கு
இன்தீம் பலவின் ஏர்கெழு செல்வத்து
எந்தையும் எதிர்ந்தனன் கொடையே அலர்வாய்
அம்பல் ஊரும் அவனொடு மொழியுஞ்
சாயிறைத் திரண்ட தோள்பா ராட்டி
யாயு மவனே யென்னும் யாமும்
வல்லே வருக வரைந்த நாளென

---

* குறிஞ்சிப். ௪. (பாடம்) † கிளர. ‡ ஒருங்குடன் சாற்றிச்.

நல்லிறை மெல்விரல் கூப்பி
இல்லுறை *கடவுட்கு ஓக்குதும் பலியே.

—தோல் கபிலர்.

(சொ - ள்.) க—கo. தோழி! பெருமலைச் சிலம்பின் வேட்டம் போகிய - பெரிய மலையின் பக்கத்தே வேட்டைக்குச் சென்ற, செறி மடை அம்பின் வல் வில் கானவன் - மூட்டுவாய் செறிந்த அம்பினையும் வலிய வில்லினையுமுடைய வேட்டுவன், பொருது தொலை யானை வெண்கோடு கொண்டு - தன்னுடன் போர் செய்துபட்ட யானையின் வெள்ளிய கொம்பினைக்கொண்டு, நீர் திகழ் சிலம்பின் - நீர் விளங்கும் மலையில், நன் பொன் அகழ்வோன் - சிறந்த பொன்னை அகழ்ந்து எடுப்போன், கண் பொருது இமைக்கும் திண் மணி கிளர்ப்ப - கண்ணினைப் பொருது விளங்குகின்ற திண்ணிய மணிகள் பொன்னுடன் மீப்போந்து விளங்க அவற்றை, வை நுதி வால் மருப்பு ஒடிய உக்க - கூரிய முனையையுடைய வெள்ளிய யானைக் கொம்பு ஒடிதலால் உதிர்ந்த, தெண் நீர் ஆலி கடுக்கும் முத்தமொடு - தெளிந்த நீர்மையையுடைய ஆலங்கட்டியையொக்கும் முத்துக்களுடன் கூட்டி, மூ வேறு தாரமும் - வெவ்வேறாகிய அம்மூன்று பண்டங்களையும், சார்தம் பொறை மரம் ஆக ஒருங்கு உடன் கொண்டு - சந்தன மரம் காவு மரமாக அவற்றை ஒரு சேரக் காவிக் கொண்டு, நறை நார் வேங்கைக்கண்ணியன் - நறைக்கொடியாய நாரினால் வேங்கைமலரைத் தொடுத்த கண்ணியை யுடையனாய், இழி தரும் நாடற்கு - அம் மலையினின்றும் இறங்கிவரும் நாட்டையுடைய நம் தலைவனுக்கு;

கக—அ. இன் தீம் பலவின் ஏர் கெழு செல்வத்து எந்தையும் - மிக்க இனிமையுடைய பலாமரங்களையுடைய அழகு மிக்க செல்வத்தையுடைய நம் தந்தையும், கொடை எதிர்ந்தனன் - நின்னைக் கொடுத்தலை ஏற்றுக் கொண்டான், அலர்வாய் அம்பல் ஊரும் - பழிமொழியினைச் சிலரும் பலரும் அறியக் கூறும் வாயினையுடைய ஊரிலுள்ளாரும், அவனொடு மொழியும் - அவனொடு நின்னைச் சேர்த்தே கூறுவர், யாயும் - நம் தாயும், சாய் இறை திரண்ட தோள் பாராட்டி - வளைந்த சந்தினையுடைய திரண்ட நின் தோள்களைப் பாராட்டி, அவனே என்னும் - நினக்கு உரியன் அவனே என்று கூறுவள். யாமும் - நாமும், வரைந்த நாள் வல்லே வருக என - நம் மணத்திற்கு வரைந்த நாள் விரைந்து வருவதாக என்று, நல் இறை மெல்விரல் கூப்பி - நல்ல இறையினையுடைய மெல்லிய விரல்களைக் குவித்து, இல்லுறை கடவுட்கு - மனையுறை தெய்வத்திற்கு, பலி ஓக்குதும் - பலி செலுத்துவோமாக.

(முடிபு) கானவன வெண்கோடு கொண்டு பொன் அகழ்வோன் மூவேறு தாரமும் ஒருங்குடன் கொண்டு இழிதரும் நாடற்கு எந்தை

(பாடம்) * கடவுட் காக்குதும்.

யும் கொடை எதிர்ந்தனன்; அலர்வாய் அம்பலூரும் அவனொடு மொழியும்; யாயும் அவனே என்னும்; யாமும் நாள் வல்லே வருக என இல்லுறை கடவுட்குப் பலி ஒக்குதும்.

(வி - ரை.) நீர் திகழ் சிலம்பு – நீர் வெளிப்பட்டு விளங்கும் மலை; மாரிக்கண் உண்ட நீரினைக் கோடைக்கண் உமிழும் மலையென்க. கண் பொருது – கண்ணொளியுடன் மாறுபட்டு; கண் வழுக்குற விளங்கும் என்றபடி. பொன்னுடன் மணி மிளிர்ப்ப என்க. ஆலி – நீர்த்திரள் என்னும் பொருளது; ஆலம் – நீர். தெண்ணீர் – தெளிந்த நீர் என்றே கொண்டு ஆலி பெயர் மாத்திரையாய் நின்றது என்றலுமாம். அவற்றை முத்தமொடு கூட்டி எனச் சில சொல் வருவித்துரைக்க, ஒருங்குடன் சாற்றி என்னும் பாடத்திற்கு ஒருங்கே விலை கூறி எனப் பொருள் உரைக்க. வேட்டம் போகிய கானவன், யானைக்கோடும் பொன்னும் முத்தும் சந்தனமும் வேங்கை மலரும் பெற்று வருவன் என்றது, அம் மலையின் சிறப்புக்கூறியபடி. அத்தகைய நாட்டினையுடையவன் நம் தலைவன் என்றமையால், அவன் அரும் பொருள் பலவற்றை வரை பொருளாகக் கொண்டுவந்துளான் என்றவாறாயிற்று. எந்தை நின்னை அவனுக்குக் கொடுத்தல் ஒருதலை என்பாள் 'எதிர்ந்தனன் கொடை' யெனத் துணிவு பற்றிக் கூறினாள். எதிர்ந்தனன் கொடை என்பதற்கு நின் பொருட்டுத் தலைவன் கொண்டுவந்த பொருட்கொடையை ஏற்றுக் கொண்டனன் என்றலுமாம். எந்தை கொடை எதிர்ந்தமையாலும், யாயும் அவனே உரியன் என்றதாலும், ஊரும் அவனொடு சார்த்தியே மொழிதலாலும் நீ தலைவனுக்கே உரியையாதலால் ஒருதலை; எனினும் மணநாள் விரைந்து வருக என்று கடவுட்குப் பலி ஓக்குதும் எனத் தோழி தலைவிக்குக் கூறினாள் என்க. தலைவன் கேட்டு விரைந்து வரைய வருவானாதல் இதன் பயன். 'யாயும் அவனே' என்பது தாய் தெய்வத்தைப் பராவுங் குறிப்பினதென்பது நச்சினார்க்கினியர் கருத்து. இச்செய்யுள் தலைமகள் தோழிக்குச் சொல்லியதெனக் கொள்ளின், நின் என்னும் இடங்களில் நம் என உரைத்துக் கொள்க. ஆக்குதும் பலி என்பது பாடமாயின் பலி அமைப்போம் என்று உரைக்க. *'சேர்ப்பனை, யானுங் காதலென் யாயுநனி வெய்யள் எந்தையுங் கொடீஇயர் வேண்டும், அம்பல் ஊரும் அவனொடு மொழிமே' என்பது இச்செய்யுட் கருத்தொடு பெரிதும் ஒத்திருத்தல் அறிந்து இன்புறற்பாலது.

(மே - ள்.) †'களவலராயினும்' என்னும் சூத்திரத்து, தெய்வம் வாழ்த்தலும் என்னும் பகுதிக்கண் இச்செய்யுளைக் காட்டி, இதனுள் 'தோள் பாராட்டி, யாயும் அவனே யென்னும்' என்று யாய் தெய்வம் பராயினாள் என்பதுபடக் கூறி, யாம அத்தெய்வத்திற்குப் பலி கொடுத்தும் என்றவாறு காண்க என்றனர், நச்.

---

* குறுந். ௫௧. † தொல். கள. ௨௪.

283. பாலை

[உடன்போக்கு வலித்த தோழி தலைமகற்குச் சொல்லியது.]

நன்னெடுங் கதுப்பொடு பெருந்தோள் *நீவிய
நின்இவண் ஒழிதல் அஞ்சிய என்னினுஞ்
செலவுதலைக் கொண்ட பெருவிதுப் புறவி
பல்கவர் மருப்பின் முதுமான் போக்கிச்
சில்லுணாத் தந்த சீறூர்ப் பெண்டிர்
திரிவயின் தெவிட்டுஞ் சேட்புலக் குடிஞைப்
பைதல் மென்குரல் ஐதுவந் திசைத்தொறும்
போகுநர் புலம்பு மாறே †ஏகுதற்கு
அரிய ஆகுமென் னுமைக் கரிமரக்
கண்ணகை இளங்குழை கால்முதல் கவினில்
விசும்புடன் இருண்டு வெம்மை நீங்கப்
பசுங்கண் வானம் பாய்தளி பொழிந்தெனப்
புன்னுகும் பெடுத்த நன்னெடுங் கானத்து
ஊட்டு பஞ்சிப் பிசிர்பரந் தன்ன
வண்ணம் மூதாய் தண்ணிலம் ‡வரிப்ப
இனிய ஆகுக தணிந்தே
இன்னா நீப்பின் நின்னொடு செலற்கே.

—மதுரை மருதனிளநாகனார்.

(சொ - ள்.) க—௩. தலைவ! நல் நெடுங் கதுப்பொடு பெருந் தோள் நீவிய-தலைவியின் நல்லநீண்ட கூந்தலொடு பெரிய தோளினைத் தடவிய, நின் இவண் ஒழிதல் அஞ்சிய என்னினும் - நின்னை ஒழிந்து இங்குத் தங்கியிருத்தலை அஞ்சியுள என்னைக்காட்டிலும், செலவு தலைக் கொண்ட - உடன்போக்கினை மேற்கொண்ட, பெரு விதுப்பு உறவி - பெரிய விரைவினை யுற்றிருக்கும் தலைவி;

கஎ. இன்னா நீப்பின் நின்னொடு செலற்கு - துன்பத்தைத் தரும் பிரிவின்கண் நின்னுடன் போதற்கு;

௪—௬. பல் கவர் மருப்பின் முது மான் போக்கி - பல கிளைகள் பொருந்திய கொம்பினையுடைய முதிய மான்களைத் துரந்து, சில் உணா தந்த-சிறிய உணவுப் பொருளைக் கொண்டுவந்த, சீறூர் பெண்டிர் திரிவயின்-சிறிய ஊர்களிலுள்ள பெண்கள் திரியுமிடத்தே, தெவிட்டும் சேட்புலக் குடிஞை-சேய்மையிடத்தே இருந்து ஒலிக்கும் பேராந்தை

(பாடம்) * நீவி. † ஏகுதற்கு. ‡ பரிப்ப.

யின், பைதல் மென் குரல் ஐது வந்து இசைத்தொறும்-வருத்தம் தரும் மெல்லிய குரல் மென்மையாக வந்து ஒலிக்குந்தோறும், போகுநர் புலம்பும் ஆறு - வழிப் போவார் கேட்டு வருந்தும் சுர நெறிகள், ஏகுதற்கு அரிய ஆகும் என்னாமை - செல்லற்கு அரியன ஆகும் என்னாதபடி;

க—கசு, கரி மரம் கண் அகை இளம் குழை கால் முதல் கவினி-கரிந்த மரங்கள் தம்மிடத்தே கிளைக்கப்பெறும் இளைய தளிர்கள் அடி முதற் கிளைத்து அழகு பெறவும், வெம்மை நீங்க - வெப்பம் ஒழியவும், விசும்பு உடன் இருண்டு-வானில் ஒருங்கே இருட்சியுற்று, பசுங் கண் வானம் பாய் தளி பொழிந்தென - பசுமையைத் தன்பாற் கொண்ட மேகம் பரந்த துளியினைச் சொரிந்ததாக, புல் நுகும்பு எடுத்த நல் நெடுங் கானத்து - புற்கள் குருத்தினை விட்ட நல்ல நீண்ட காட்டில், ஊட்டு பஞ்சிப் பிசிர் பரந்தன்ன - செந்நிறம் ஊட்டிய பஞ்சின் பிசிர் பரவியதுபோன்ற, வண்ணம் மூதாய் தண் நிலம் வரிப்ப - செந்நிறமுடைய தம்பலப் பூச்சிகள் குளிர்ந்த நிலத்தே அழகுறுத்த; தணிந்து இனிய ஆகுக - வெப்பம் தணிந்து இனிமையுடன் ஆகுக.

(முடிபு) தலைவ! பெருவிதுப்புறுவி நின்னொடு செலற்கு, ஆறுகள் ஏகுதற்கு அரிய ஆகும் என்னாமை, வானம் தளி பொழிந்தென, நன்னெடுங் கானத்து மூதாய் வரிப்ப, தணிந்து இனிய ஆகுக!

(வி - ரை.) அஞ்சிய - அஞ்சி உடன்போக்கு வலித்த என்றபடி. கதுப்பும் தோளும் நீவித் தலையளி செய்த பேரன்புடைய நின்னைப் பிரிந்து தலைவி ஆற்றியிருத்தல் அரிதென அஞ்சி யான் உடன்போக்கு வலித்தேனாக, தலைவி என்னினும் முந்துற உடன்போக்கிற்கு விரைகின்றாள் என்பாள், 'அஞ்சிய என்னினும், செலவுதலைக்கொண்டபெரு விதுப்புறவி' என்றாள். விதுப்புறுதல் - ஆர்வமுடன் விரைதல். சில் உணா-மான் உண்டு எஞ்சிய சிறிய உணவு; தினை முதலியன. சேட்புலத்தினின்று ஒலித்தலால் குடிஞையின் குரல் மென்குரல் எனப்பட்டது. கவினி-கவின எனத் திரிக்க. புல்-புறக்காழனவாகிய பனை முதலியனவுமாம். மழை பெய்த பின்றை நிலத்திலே பரந்துகிடக்கும் தம்பலப் பூச்சிகள் நிலத்தினைக் கோலம் செய்தாற்போல இனிய காட்சியைப் பயக்குமாகலின், 'வண்ணம் மூதாய் தண்ணிலம் வரிப்ப இனியவாகுக' என்றாள். உடன்போக்கில் தலைவி தலைவனுடன் செல்லினும் தோழி ஆயத்தார் உள்ளிட்டாரையும் பயின்ற இடத்தையும் விடுத்துச் சேறலின் அதனையும் பாலையாகவே கொண்டு புலனெறி வழக்கம் செய்தனர் சான்றோர். உடன்போக்கானது தனக்கும் தாய் முதலாயினார்க்கும் இன்னாமை விளைத்தலின் அதனை இன்னாநீப்பு என்று தோழி கூறினாள் என்க.

---

284. முல்லை

[வினைமுற்றிய தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது. தன் நெஞ்சிற்குச் சொல்லியதுமாம்.]

சிறியிலை நெல்லிக் காய்கண் டன்ன
குறுவிழிக் கண்ண கூரலங் குறுமுயல்
முடந்தை வரகின் வீங்குபீள் அருந்துபு
குடந்தையஞ் செவிய கோட்பவர் ஒடுங்கி
இன்றுயி லெழுந்து துணையொடு போகி
முன்றில் சிறுநிறை நீர்கண் டுண்ணும்
புன்புலந் தழீஇய பொறைமுதற் சிறுகுடித்
தினைக்கள் ளுண்ட தெறிகோல் மறவர்
விசைத்த வில்லர் வேட்டம் போகி
முல்லைப் படப்பைப் புல்வாய் கெண்டுங்
காமர் புறவி னதுவே காமம்
நம்மினுந் தான்றலை மயங்கிய
அம்மா அரிவை உறைவின் னூரே.

—இடைக்காடனார்.

(சொ - ள்.) ௧௧—௩. காமம் நம்மினும் தலைமயங்கிய-காமத்தால் நம்மைக்காட்டினும் மிக்க மயக்கமுற்ற, அம் மா அரிவை - அழகிய மாமை நிறமுடைய நம் தலைவி, உறைவு இன் ஊர் - உறைதலுறும் இனிய ஊரானது;

௧—௧௧. சிறி இலை நெல்லிக்காய் கண்டன்ன - சிறிய இலைகளையுடைய நெல்லியின் காயைக் கண்டாலொத்த, குறுவிழிக் கண்ண-குறிய விழிபொருந்திய கண்களையும், கூரல் குறு முயல் - கூரிய மயிரினையுமுடைய குறிய முயல்கள், முடந்தை வரகின் வீங்கு பீள் அருந்துபு - வளைந்து கிடக்கும் வரகினது பருத்த குருத்தினைத் தின்று, குடந்தை அம் செவிய-வளைந்த அழகிய செவியினவாகி,கோள் பவர் ஒடுங்கி-காய்களைக் கொண்ட கொடிகளுட் புகுந்து கிடந்து உறங்கி, இன் துயில் எழுந்து - இனிய துயிலினின்றும் எழுந்து, துணையொடு போகி - தம் துணையொடு போகி, முன்றில் சிறு நிறை நீர் கண்டு உண்ணும் - வீட்டு முற்றத்தேயுள்ள சிறிய சால்களிலுள்ள நீரைக்கண்டு பருகும், புன்புலம் தழீஇய - முல்லை நிலத்து ஊர்கள் சூழ்ந்த, பொறை முதல் சிறுகுடி - குன்றின் அடிகளிலுள்ள சிறிய ஊர்களிடத்தே, தினைக் கள் உண்ட தெறி கோல் மறவர் - தினையினலாக்கிய கள்ளினையுண்ட நாணினைத் தெறித்து விடுக்கும் அம்பினையுடைய மறவர்கள், விசைத்த வில்லர் -

வேகமாக இழுத்து நாண் பூட்டிய வில்லினராய், வேட்டம் போகி வேட்டையாடி, முல்லைப் படப்பை புல்வாய் கெண்டும் - முல்லைநிலத் தோட்டத்தே மானை அறுத்து உண்ணும், காமர் புறவினது - அழகிய காட்டின்கண்ணது.

(முடிபு) காமம் நம்மினும் தலைமயங்கிய அரிவை ஊர் காமர் புறவினது; குறுமுயல் வரகின் பீள் அருந்துபு, ''வர் ஒடுங்கி, துயில் எழுந்து, துணையொடு போகி, முன்றில் நிறையின் நீர் கண்டு உண்ணும் புன்புலம் எனவும், சிறு குடி மறவர் வேட்டம் போகிப் புல்வாய் கெண்டும் புறவு எனவும் இயையும்.

(வி - ரை.) கண்ணவாகிய குறுமுயல், கூரலையுடைய குறுமுயல் என்க. கூரல் - மயிர். நிறை - நீர்ச்சால். புன்புலம் - முல்லைநிலம். முன்றில் நிறைநீர் கண்டு உண்ணும் புன்புலம் என்றமையால், முல்லை நிலத்து ஊர்கள் எனப் பொருளுரைக்கப்பட்டது. மருத நிலத்து நெல்லாற், கள் அமைத்தல் போலக் குறிஞ்சி நிலத்துத் தினையால் கள் அமைத்து உண்பராகலின், தினைக்கள் உண்ட மறவர் என்றான். புறவினது ஆகலின் நம் தேரினை ஆண்டு விரைந்து செலுத்துக எனத் தலைமகன் பாகற்குக் கூறினான் என்க. நெஞ்சிற்குக் கூறியதாயின், தலைவியிருக்கும் ஊர் புறவினது; நாம் இன்னும் ஈண்டுளோம்! என்றான் என்க.

---

285. பாலை

[*உடன்போக்குடன் படுவித்த தோழி, தலைமகட்குச் சொல்லியது.]

ஒழியச் சென்மார் செல்ப என்றுநாம்
அழிபடர் உழக்கும் அவல நெஞ்சத்து
எவ்வம் இகந்துசேண் அகல வைஎயிற்று
ஊனசைப் பிணவின் உறுபசி களைஇயர்
காடுதேர் மடப்பிணை யலறக் கலையின்
ஒடுகுறங்கு அறுத்த செந்நாயேற்றை
வெயில்புலந் திளைக்கும் வெம்மைய பயில்வரி
இரும்புலி வேங்கைக் கருந்தோல் அன்ன
கல்லெடுத் தெறிந்த பல்கிழி உடுக்கை
உலறுகுடை வம்பலர் உயர்மரம் ஏறி
ஏறுவேட் டெழுந்த இனந்தீர் எருவை
ஆடுசெவி நோக்கும் அத்தம் பணைத்தோள்

(பாடம்) * உடன்போக்கு அமைத்த.

குவளை யுண்கண் இவளும் நம்மொடு
வரூஉம் என்றனரே காதலர்
வாராய் தோழி முயங்குகம் பலவே.

—காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணனார்.

(சொ - ள்.) ௧௫. தோழி-,
௧௪. காதலர் - நம் காதலர்;

௧—௩. ஒழியச் சென்மார் செல்ப என்று - நாம் பிரிந்திருக்கப் பொருளீட்டச் செல்லுதற்குச் செல்வார் என்று, நாம் அழிபடர் உழக்கும் - நாம் மிக்க துன்பத்தால் எப்பொழுதும் வருந்தும், அவலம் நெஞ்சத்து - ஆற்றாமையுடைய மனத்தின், எவ்வம் இகந்து சேண் அகல - துன்பம் நீங்கிச் சேய்மைக்கண் ஒழியுமாறு;

௩—௧௪. வை எயிற்று ஐஞ்ஞை நசைப்பிணவின் உறுபசி களைஇயர்- கூரிய பல்லினையுடைய ஐஞ்ஞை விரும்பும் பெண்நாயின் மிக்க பசியினைப் போக்குதற்கு, காடு தேர் மடப் பிணை அலற - தன் கலையினைக் காட்டில் தேடும் இளைய பெண்மான் கதற, கலையின் ஒடு குறங்கு அறுத்த செந்நாய் ஏற்றை - ஆண்மானின் ஓடித் தப்பற்குரிய தொடையினைச் சிதைத்த செந்நாயின் ஆண், வெயில் புலந்து இளைக்கும் - வெய்யிலை வெறுத்து மெலியும், வெம்மைய - வெப்பம் பொருந்தியனவும், பயில் வரி இரும்புலி வேங்கை - வரிகள் பொருந்திய பெரிய வேங்கைப்புலியின், கருந் தோல் அன்ன - விளங்கும் தோலினைப் போன்ற, கல் எடுத்து எறிந்த - ஆறலைப்போர் கல்லை எடுத்து எறிதலின், பல் கிழி உடுக்கை உலறு குடை வம்பலர் - பல கிழிவுகளைக் கொண்ட உடையினையும் உலறிய குடையினையுமுடைய புதியராய வழிச்செல்வார், உயர் மரம் ஏறி - உயர்ந்த மரத்தில் ஏறி, ஏறுவேட்டு எழுந்த - உணவை ஏற்றுதலை விரும்பி எழுந்த, இனம் தீர் எருவை - இனத்திற் பிரிந்து வந்த பருந்து, ஆடு செவி நோக்கும் அத்தம்-வானில் அசையும் செவ்வியை நோக்கியிருப்பனவும் ஆகிய காட்டு நெறிகளில், பணைத்தோள் - பெருத்த தோளினையும், குவளை உண்கண் இவளும் - குவளைமலரைப் போன்ற மையுண்ட கண்களையுமுடைய இவளும் - நம்மொடு வரூஉம் என்றனர் - நம்முடன் வாராநிற்பள் என்று கூறினர்;

௧௫. வாராய் முயங்குகம் பலவே - ஆகையால் நாம் பன்முறை முயங்குதற்கு நீ வருவாயாக.

(முடிபு) தோழி! காதலர் நாம் அழிபடர் உழக்கும் நெஞ்சத்து எவ்வம் இகந்து சேண் அகல, அத்தம் இவளும் நம்மொடு வரூஉம் என்றனர்; ஆகையால் முயங்குகம் பல; வாராய்.

(வி - ரை.) அகல என்னும் எச்சம் என்றனர் என்பதன் முதனிலை கொண்டு முடியும். காடு தேர் பிணை - காட்டிலே ஆண்மான் இருக்கு

மிடத்தை ஆராய்ந்து திரியும் பிணை. ஓடு குரங்கு-ஓடுதற்கு ஏதுவாகிய குரங்கு. செந்நாய் ஏற்றை வெயில் புலர்ந்து இளைக்கும் வெம்மைய என்றது, காட்டின் வெம்மை மிகுதி கூறியபடி, வெம்மைய அத்தம் எனவும், வம்பலர் மரம் ஏறி எருவை ஆடு செவி நோக்கும் அத்தம் எனவும் இயையும். ஏறு - ஏறிதல்; *'கூருகிர்ப் பருந்தின் ஏறுகுறித் தொரீஇ' என்றதனாலும் இஃது இப் பொருட்டாதல் அறியப்படும். செவ்வி செவி என்றாயது. உணவு குறித்து எழுந்த பருந்து விசும்பிலே இயங்கும் திசைபற்றி, காட்டின் இயல்பு அறியப்படுமாகலின், வம்பலர் அதனை நோக்குவாராயினர் என்க.

---

286. மருதம்

[வரைந் தெய்துவலென்று நீங்குந் தலைமகன் தலைமகளை ஆற்றுவித்துக் கொண்டிருத்தல் வேண்டுமென்று தோழியைக் கைப்பற்றியது. தன்னைத் தொட்டுச் சூளுறுவானாகக் கருதித் தோழி சொல்லியது.]

வெள்ளி விழுத்தொடி மென்கருப் புலக்கை
வள்ளி நுண்ணிடை வயின்வயின் நுடங்க
மீன்சினை யன்ன வெண்மணற் குவைஇக்
காஞ்சி நீழல் தமர்வளம் பாடி
ஊர்க்குறு மகளிர் குறுவழி விறந்த
இருஅல் அருந்திய சிறுசிரல் மருதின்
தாழ்சினை யுறங்குந் தண்டுறை யூர
விழையா வுள்ளம் விழையும் ஆயினும்
என்றுங், கேட்டவை தோட்டி யாக மீட்டாங்கு
அறனும் பொருளும் வழாமை நாடித்
தற்றக வுடைமை நோக்கி மற்றதன்
பின்னா குவ்மே முன்னியது முடித்தல்
அனைய பெரியோ ரொழுக்க மதனால்
அரிய பெரியோர்த் தெரியுங் காலை
நும்மோ ரன்னோர் மாட்டும் இன்ன
பொய்யொடு மிடைந்தவை தோன்றின்
மெய்யாண் டுளதோவிவ் வுலகத் தானே.

—ஓரம்போகியார்.

---

* புறம். ௬௪.

(சொ - ள்.) க—எ. வெள்ளி விழு தொடி - வெள்ளியினாலாகிய சிறந்த பூணையுடைய, மெல் கருப்பு உலக்கை - மெல்லிய கரும்பாகிய உலக்கையால், வள்ளி நுண் இடை-கொடிபோன்ற நுண்ணிய இடை, வயின் வயின் நுடங்க - அங்கும் இங்கும் அசைய, மீன் சினை அன்ன வெண் மணல் குவைஇ-மீனின் முட்டை போன்ற வெள்ளிய மணலைக் குவித்து, காஞ்சி நீழல் - காஞ்சி மரத்தின் நிழலில், தமர் வளம் பாடி - தம் குடியினர் பெருமைகளைப் பாடி, ஊர்க்குறு மகளிர் குறுவழி - ஊரிலுள்ள இளைய பெண்கள் குற்றுங்கால், விறந்த இருஅல் அருந்திய சிறு சிரல் - செறிந்த இருல் மீனைத் தின்ற சிறிய சிரற்பறவை, மருதின் தாழ்சினை உறங்கும் தண் துறை ஊர-மருதமரத்தின் தாழ்ந்த கிளையிற் சென்று துயிலும் குளிர்ந்த துறையையுடைய ஊரனே!

அ—கங. என்றும் விழையா உள்ளம் விழையும் ஆயினும் - அறனல்லவற்றை என்றும் விரும்பா உள்ளம் ஒரோவழி மயங்கி விரும்புமாயினும், கேட்டவை தோட்டியாக - கேட்ட கேள்விகள் அங்குசமாக, மீட்டு - உள்ள மாய யானையை மீட்டு, அறனும் பொருளும் வழாமை நாடி - இல்லறமும் பொருளும் வழுவாவகையை ஆய்ந்து, தன் தகவுடைமை நோக்கி மற்று அதன்பின் - தனது தகுதியுடைமையை உணர்ந்து அதன் பின்னரே, முன்னியது முடித்தல் ஆகும்-தான் கருதியதை முடித்தல் உளதாகும், பெரியோர் ஒழுக்கம் - பெரியோர் ஒழுக்கங்கள், அனைய - அத் தன்மையவாம்;

கங—எ. அதனால்-, அரிய பெரியோர்த் தெரியுங்காலை-அரியன செய்யும் பெரியோர் செயல்களை ஆராயுமிடத்து, நும் ஓரன்னோர் மாட்டும் - நும்மை யொத்த பெரியோரிடத்தும், இன்ன பொய்யொடு மிடைந்தவை தோன்றின் - இத்தகையன பொய்யொடு கூடிய கூற்றுக்கள் தோன்றின், இவ்வுலகத்தான் - இவ்வுலகின்கண், மெய் யாண்டு உளதோ - மெய் எங்கு உளதாகும்?

(முடிபு) தண் துறை ஊர! விழையா வுள்ளம் விழையும் ஆயினும், மீட்டு, நாடி, நோக்கி, அதன் பின்னாகும் முன்னியது முடித்தல்; பெரியோர் ஒழுக்கம் அனைய; அதனால் தெரியுங்காலை நும்மோரன்னோர் மாட்டும் பொய்யொடு மிடைந்தவை தோன்றின் இவ்வுலகத்தான் மெய் யாண்டுளதோ?

(வி - ரை.) குறுமகளிர் காஞ்சி நிழலில் வெண்மணற் குவைஇ கருப்பு உலக்கையால் இடைநுடங்கத் தமர் வளம்பாடிக் குறுவழி என்க. தமர் என்றது, தம் இணைமுதல்வர்களையும் அரசர் முதலாயினாரையும் குறிக்கும். கருப்புலக்கையால் குறுவர் என்றது, மருதநிலத்தின் வளமிகுதி கூறியபடி; *நீங்கரும்பு நல்லுலக்கை யாகச்செழுமுத்தம், பூங்காஞ்சி நீழல் அவைப்பார் புகார்மகளிர், ஆழிக் கொடித்திண்டேர்ச் செம்பியன் வம்பலர்தார்ப், பாழித்தடவரைத் தோட்பாடலே பாடல்,

* சிலப். வாழ்த்துக். உக.

பாவைமார் ஆரிக்கும் பாடலே பாடல்' என்னும் வள்ளைப் பாட்டென்று அறிந்து இன்புறற்பாலது. அருந்திய சிறுசிரல் என்றதனால் வராஅல் என்னும் பாடம் பொருந்தாமை அறிக. பாட்டினைக் கேட்டு உறங்கும் என்க. விழையா உள்ளம் என்றது, இயல்பிலே நன்றல்லதனை விரும்பாத உள்ளம் என உள்ளத்தின் தூய்மை கூறியபடி. கேட்டவை தோட்டியாக என்றமையால், உள்ளமாகிய யானையை என்க. இஃது ஏகதேச உருவகம். உள்ளம் விரும்பிய வழி அதனைச் செல்லவிடாது, விரும்பிய பொருளின் நலம் தீங்கினை ஆராய்ந்து, நன்மையாயினவழிச் செலுத்தவேண்டு மென்பது, *'சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ, நன்றின்பால் உய்ப்பது அறிவு' என்னும் வாயுறை வாழ்த்தால் அறியப்படும். அங்ஙனம் உள்ளத்தை மீட்டு நல்வழிப்படுத்தற்குச் சான்றோர்பால் தாம் கேட்ட பொருண்மொழிகள் பெரிதும் துணையாவன ஆகலின், 'கேட்டவை தோட்டியாக மீட்டு' என்றார். தலைவன் தன்னைக் கைப்பற்றிய அதனைச் சூளுறவாகக் கருதிய தோழி, உலகத்துப் பெரியோர் ஒழுக்கம் அத்தன்மைய ஆகலின், நம்மாட்டுப் பொய் தோன்றுமாறில்லை என்பதுபட அவனுக்குக் கூறினள் என்பது இச் செய்யுளின் கருத்தாகும். ஆசிரியர் நக்கீரனாரும் இச் செய்யுளின் கருத்து இதுவேயாகக் கொண்டுள்ளார். நச்சினார்க்கினியர், முன்னியது என்பதற்குப் புறத்தொழுக்கம் என்றும், அரிய பெரியோர்த் தெரியுங்காலை என்பதற்குப் பெரியோர் ஒழுக்கத்தை ஆராயுமிடத்து அவை அரியவாய் இருந்தன என்றும் பொருள் கொண்டு, தலைமகன் முன்பு சூள் தப்பினான் எனத் தோழி புலந்து கூறுகின்றாளாகக் கருத்துக் கொண்டனர்.

(மே - ள்.) †'குறியெனப் படுவது...மொழிப' என்னும் சூத்திரத்துச் 'செறிப்பறிவுறுக்கப்பட்ட தலைமகன் - தெருள்வானாயின் இந்நாள் வரைவல், அத்துணையும் இவளை ஆற்றுவித்துக் கொண்டிரு; நினக்கு அடைக்கல மெனக் கைப்பற்றும்; கைப்பற்றியதனைத் தோழி சூளுறவாகக் கருதினாள்; உலகத்துச் சூளுறுவார் பசுவையும் பார்ப்பாரையும் பெண்டிரையும் தொட்டுச் சூளுறுவராகலான்; சூளுற வாற்றார் என்பது நினைந்து, நீ வரைவல் என்றதே அமையாதோ? சூளுறல் வேண்டுமோ? பொய்த்தலும் வாய்த்தலும் உடையாரன்றே சூளுறுவர்? மெய்யல்லது சொல்லாதார்க்குச் சூளுறவு வேண்டுமோ? நின் கண்ணும் பொய்யுண்டாயின் மெய்யென்பது இவ்வுலகத்து நிலைபெற்றவழி இல்லையாகாதே? என்னும்;' என்று உரைத்து அதற்கு உதாரணமாக இச்செய்யுளைக் காட்டினர், நக்கீரர்.

‡'கூதிர் வேனில் என்றிரு பாசறை' என்னும் சூத்திரத்து, 'கட்டமை ஒழுக்கத்துக் கண்ணுமையானும்' என்னும் பகுதிக்கு, இச் செய்யுளில் 'விழையா வுள்ளம் விழைய மாயினும்...அரிய பெரியோர்த்

* குறள். ௪௨௨. †இறையனார் களவியல், ௧௮. ‡தொல். புறத். ௨௧.

தெரியுங் காலை' என்னும் பகுதியை எடுத்துக் காட்டி, இது தொகுத்துக் கூறியது என்றும், *'பெறற்கரும் பெரும்பொருள் முடிந்த பின் வந்த' என்னும் சூத்திரத்து, பெரியோர் ஒழுக்கம் பெரிது எனக் கிளந்து பெறுதலை யில்லாப் பிழைப்பினும் என்ற பகுதியில் இச்செய்யுளைக் காட்டி, இதனுள் அறன் என்றது, இல்லறத்தை; தற்றகவுடைமை நோக்கி என்றது, தன்னால் அவ்வறனும் பொருளும் தகுதிப்பா டுடையவாம் தன்மை நோக்கி என்றவாறும்; முன்னியது என்றது, புறத்தொழுக்கத்தை; பெரியோர் ஒழுக்கம் அனைய என்றது, பெரியோர் ஒழுக்கம் பெரிய என்றவாறு, என்று உரைத்து, இது முன்னர் நிகழ்ந்த பொய்ச்சூள் பற்றி, நம்மனோர்மாட்டும் இன்ன பொய்ச்சூள் பிறக்குமாயின் இவ்வுலகத்து மெய்ச்சூள் இனி இன்றாம்; அதனால் பெரியோரைத் தமது ஒழுக்கத்தைத் தேருங்காலை அரியவாயிருந்தனவெனத் தலைவனை நோக்கித் தோழி கூறலின், அவனை வழிபாடு தப்பினாளாயிற்று. உள்ளுறையுவமம் இதற்கு ஏற்குமாறு உணர்க என்றும் கூறினார், நச்.

---

287. பாலை

[பிரிந்து போகாநின்ற தலைமகன் இடைச்சுரத்து நின்ற தன்னெஞ்சிற்குச் சொல்லியது.]

தொடியணி முன்கைத் தொகுவிரல் குவைஇப்
படிவ நெஞ்சமொடு பகல்துணை யாக
நோங்கொல் அளியள் தானே தூங்குநிலை
மரையேறு சொறிந்த மாத்தாள் கந்தின்
சுரையிவர் பொதியில் அங்குடிச் சீறூர்
நாட்பலி மறந்த நரைக்கண் இட்டிகைப்
புரிசை மூழ்கிய பொரியரை ஆலத்து
ஒருதனி நெடுவீழ் உதைத்த கோடை
துணைப்புறா இரிக்குந் தூமழை நனந்தலைக்
கணைக்கால் அம்பிணை ஏறுபுறம் நக்க
ஒல்குநிலை யாஅத்து ஓங்குசினை பயந்த
அல்குறு வரிநிழல் அசையினம் நோக்க
அரம்புவந்து அலைக்கும் மாலை
நிரம்பா நீளிடை வருந்துதும் யாமே.

—குடவாயிற் கீரத்தனார்.

---

* தொல். கற்பு. ௫.

(சொ - ள்.) ௧—௯. மரை ஏறு சொறிந்த - ஆண் மரை உராய்ந்தமையால், தூங்கு நிலை - அசையும் நிலையினைப் பொருந்திய, மா தாள் கந்தின் - கரிய அடி பொருந்திய கந்தினையுடைய, சுரை இவர் பொதியில் - சுரைக்கொடி படர்ந்த அம்பலத்தின்கண்ணே, அம் குடி சீறூர் - அழகிய குடியிருப்பினையுடைய சீறூரிலுள்ளார், நாட் பலி மறந்த - விடியற்காலத்தே யிடும் பலியை மறந்தமையால், நரைக்கண் - வெளிதாகிய இடத்தினையுடைய, இட்டிகை - பலிபீடத்தை யடுத்து, புரிசை மூழ்கிய பொரி அரை ஆலத்து - மதில்போற் சூழ்ந்த பொரிகள் பொருந்திய அடியினையுடைய ஆலமரத்தின், ஒரு தனி நெடு வீழ் உதைத்த கோடை - ஒன்றாய்த் தனித்த நீண்ட விழுதினை மோதிய கோடைக் காற்று, துணைப் புறா இரிக்கும் - துணையுடன் மேவியிருந்த புறாக்களை ஓட்டும் இடமாகிய, தூ மழை நனந்தலை - மழை அற்ற அகன்ற இடத்தே;

௧௦—௪. கணைக் கால் அம் பிணை ஏறு புறம் நக்க - திரண்ட காலினையுடைய அழகிய பிணையினை அதன் கலை முதுகிடத்தே நக்க, ஒல்கு நிலை யாத்து ஓங்கு சினை பயந்த - அசையும் நிலையினையுடைய யாமரத்தின் உயர்ந்த கிளைகளாலாகிய, அல்குறு வரி நிழல் அசையினம் நோக்க - சுருங்கிய வரிவரியாய நிழலில் தங்கினேமாய் நோக்க, அரம்பு வந்து அலைக்கும் மாலை - குறும்பாக வந்து வருத்தும் மாலையில், நிரம்பா நீளிடை யாம் வருத்துதும் - இந்தத் தொலையாத நீண்ட நெறியில் யாம் தனித்து வருந்துகின்றேம்; (நம் தலைவி,)

௧—௬. தொடி அணி முன்கைத் தொகுவிரல் குவைஇ - வளையினை அணிந்த முன்கையில் தொக்க விரலைக் குவித்து, படிவ நெஞ்சமொடு - நம்மைக் காணலாம் விரதம் கொண்ட நெஞ்சத்துடன், பகல் துணையாக நோம்கொல் - பகல் நேரமே தனக்குத் துணையாக வருந்தியிருப்பளோ, அளியள் - இரங்கத்தக்காள்.

(முடிவு) யாம் யாத்து வரி நிழல் அசையினம் நோக்க, அரம்பு வந்தலைக்கும் மாலை நிரம்பா நீளிடை வருந்துதும்; நம் காதலி படிவ நெஞ்சமொடு பகல் துணையாக நோங்கொல்? அளியள்.

(வி - ரை.) தொகு விரல் குவைஇ என்றது, மகளிர்க்கு வருத்தம் மிக்க வழி நிகழ்வதொரு நிகழ்ச்சி. படிவம்-நோன்பு. வேறு துணையின்றி யென்பான், பகல் துணையாக என்றான். தான் விரைந்து சென்று அவளது வருத்தத்தைப் போக்கமுடியாமை கருதி அளியள் தானே என்றான். கந்து - பொதியிலின்கண் தெய்வம் உறையும் தறி; அதன் அடி கரிதாயிருத்தலின் மாத்தாட்கந்து எனப்பட்டது. அங் குடிச் சீறூர் - முன்பு அழகின் குடியிருப்பினதாயிருந்த சீறூர் என்க. சீறூர் குடி போகப்பட்டமையின், நாட்காலத்தே பலி கொடுப்பாரின்றிப் பொதியில் பாழ்பட்டது என்பான், மரையேறு சொறிந்த தூங்கு நிலைக்கந்து எனவும், சுரை இவர் பொதியில் எனவும்

கூறினன். இட்டிகை - செங்கல்; ஈண்டுப் பலிபீடம்; அதன்கண் பலியிடப் பெருமையின் நரைக்கண் இட்டிகை எனப் பட்டது. *'கலிகெழு கடவுள் கந்தங்கை விடப், பலிகண் மாறிய பாழ்படு பொதியில்' †'கடவுள் போகிய கருந்தாட் கந்தம்' என்பனவற்றாலும் பொதியிலில் கந்தின்கண்ணே தெய்வம் உறைதலும், பலியிடுவாரின்றி அது பாழ்படுதலும் அறியப்படும். தூமழை - மழை தூ என மாறுக; தூவுதல் - ஒழிதல்; ‡'கருமஞ் செயவொருவன் கைதூவேன்' என்புழித் தூவுதல் ஒழிதல் என்னும் பொருட்டாதல் காண்க. பிணையின் வெப்பத்தைத் தணித்தற்காக ஏறு அதன் புறத்தினை நக்கும் என்க. நோக்க அலைக்கும் மாலை என்க. அரம்பு - குறும்பு. இருபேரரசர்க்கு இடையே சிறிது பொழுது புகுந்து குடிகளை வருத்திச் செல்லும் குறுநில மன்னர் போலப் பகலுக்கும் இரவுக்கும் நடுவே புகுந்து சிறிது பொழுது நின்று தணந்தாரிடைத் துன்புறுத்திச் செல்வதாகலின், மாலையை அரம்பு என்றான்; §'புன்கண் மாலைக் குறும்பெறிந்து ஓட்டி' என்றார் இளங்கோ வடிகளும். நிரம்பா நீளிடை - செல்லத் தொலையாத நெடிய வழி.

---

288. குறிஞ்சி

[பகற்குறிக்கண் தோழி செறிப்பறிவுறீஇ வரைவு கடாயது.]

சென்மதி சிறக்கநின் உள்ளம் நின்மலை
ஆரம் நீவிய அம்பகட்டு மார்பினை
சாரல் வேங்கைப் படுசினைப் புதுப்பூ
முருகுமுரண் கொள்ளும் உருவக் கன்னியை
எரிதின் கொல்லை யிறைஞ்சிய ஏனல்
எவ்வங் கூறிய வைகலும் வருவோய்
கனிமுதிர் அடுக்கத்தெம் தனிமை காண்டலின்
எண்மை செய்தனை யாகுவை நண்ணிக்
கொடியோர் குறுகும் நெடியிருங் குன்றத்து
இட்டாறு இரங்கும் விட்டொளிர் அருவி
அருவரை யிழிதரும் வெருவரு படாஅர்க்
கயந்தலை மந்தி உயங்குபசி களைஇயர்
பார்ப்பின் தந்தை பழச்சுளை தொடினும்
நனிநோய் ஏய்க்கும் பனிகூர் அடுக்கத்து
மகளிர் மாங்காட்டு அற்றே துகளறக்

---

* புறம். ௫௨.　† அகம், ௩௦௭.　‡ குறள். ௧௦௨௧.　§ சிலப். ௪-௨௪.

*கொங்தோ டுதிர்த்த கதுப்பின்
அந்தீங் கிளவி தந்தை காப்பே.

—†விற்றூற்று மூதெயினனார்.

(சொ - ள்.) க—௪. (தலைவ!) நின் மலை ஆரம் நீவிய அம் பகட்டு மார்பினை - நினது மலையின் சந்தனம் பூசப்பெற்ற அழகிய விளக்கம் பொருந்திய மார்பினையுடையையாய், சாரல் வேங்கை படு சினை புது பூ - பக்கமலையிலுள்ள வேங்கைமரத்தின் மிக்க கிளைகளிலுள்ள புதிய பூக்களாலாய, முருகு முரண்கொள்ளும் உருவக் கண்ணியை - பிறவற்றின் மணத்துடன் மாறுபடும் அழகிய கண்ணியையுடையையாய், எரி நின் கொல்லை இறைஞ்சிய ஏனல் - தீயானது எரித்த கொல்லையின்கண் விளைந்து கதிர் வளைந்த தினைப்புனத்தே, எவ்வம் கூறிய வைகலும் வருவோய் - நினது துன்பத்தைக் கூறுதற்கு நாடோறும் வருவோய்!

அ—௧௫. கொடியோர் நன்னி குறுகும் நெடி இரு குன்றத்து - ஆறலைப்போர் பொருந்தி நெருங்கியிருக்கும் நீண்ட பெரிய குன்றின், இட்டு ஆறு இரங்கும் விட்டு ஒளிர் அருவி - குறுகிய நெறியில் ஒலிக்கும் இடையிட்டு விளங்கும் அருவியானது, அருவரை இழிதரும் வெருவரு படாஅர் - அரிய மலையினின்று வந்து வீழும் இடமாகிய அச்சந்தோன்றும் சிறு தூறுகளிலிருக்கும், கயந்தலை மந்தி உயங்கு பசி களைஇயர் - மெல்லிய தலையினையுடைய மந்தியின் வருந்தும் பசியினை நீக்குமாறு, பார்ப்பின் தந்தை - அதன் குட்டியினது தந்தையாய கடுவன், பழச்சுளை தொடினும் - பலாப்பழத்தின் சுளையினைத் தோண்டினும், நனி நோய் ஏய்க்கும் பனி கூர் அடுக்கத்து - மிக்க துன்பம் வந்து பொருந்தும் நடுக்கம் மிக்க (தெய்வமுடைய) பக்கமலையில் உள்ள, மகளிர் மாங்காட்டு அற்றே - கன்னியர் உறையும் மாங்காடு என்னும் ஊரின் காவலை ஒத்தது;

௧௫—எ. துகள் அற - குற்றமற, கொங்தோடு உதிர்த்த - பூங் கொத்துக்களை உதிர்த்து அணிந்த, கதுப்பின் கூந்தலையும், அம் தீம் கிளவி தந்தை காப்பு - அழகிய இனிய சொற்களையுமுடைய இவள் தந்தையின் காவலிடம்;

எ—அ. (அங்ஙனமாகவும்), கனி முதிர் அடுக்கத்து எம் தனிமை காண்டலின் - கனிகள் முதிர்ந்துள இந்தப் பக்கமலையில் நாங்கள் தனிமையுற்றிருத்தலைக் காணுதலின், எண்மை செய்தனை ஆகுவை - நீ எங்கள் அருமையுணராது எளிமை செய்தனை ஆகின்றாய்;

க. நின் உள்ளம் சிறக்க - நின் எண்ணம் சிறப்புறுவதாக; சென் மதி - சென்று வருவாயாக.

(பாடம்) *கொங்கோ டுதிர்த்த. †முத்தூற்று மூதெயினனார்.

(முடிபு) தலைவ! மார்பினை, கண்ணியை, ஏனல் எவ்வங்கூறிய வைகலும் வருவோய்! அந்தீங் கிளவி தந்தை காப்பு, பனிகூர் அடுக்கத்து [மகளிர் மாங்காட்டு அற்று; (அங்ஙனமாகவும்) எம் தனிமை காண்டலின் எண்மை செய்தனை ஆகுவை; சென்மதி; சிறக்க நின் உள்ளம்.

(வி - ரை.) தோழி, செறிப்பறிவுறுத்தி, தலைவனைப் பகற்குறி விலக்குகின்றாளாகலின், சென்மதி என்றும், தலைவி இற்செறிப்பு உற்றமையால், இனி எய்துதற்கு அரியள் என மனம் மாழ்கியிராது முயன்று வரைந்து கொள்ளுதி என்பாள், சிறக்க நின் உள்ளம் என்றும் கூறினாள். நின் மலை ஆரம் நீவிய என்றதனால், தலைமகன் அம்மலை நாட்டிற்குத் தலைவன் ஆதல் பெற்றாம். புதுப் பூவாலாகிய கண்ணியையுடையை என்று இயையும். முருகு முரண் கொள்ளல், பிற பூக்களின் மணத்துடன் மாறுபடுதல்; முருகனுடன் மாறுபடத்தக்க கண்ணியையுடையையாய் என்றலுமாம். தீயினால் காட்டினையெரித்துத் திருத்திய கொல்லையாகலின், எரிதின் கொல்லை எனப்பட்டது, எவ்வங் கூறுதல் - கெடுதி வினாதல் முதலியனவும் ஆம். அடுக்கத்து எம் தனிமை காண்டலின் என்றமையால் பிறவழித் தனித்துக் காண்டல் அரிது என்பதாயிற்று, நெடிய என்பது நெடி என விகாரமாயிற்று குன்றத்து இரக்கும் அருவி இழிதரும் படாஅர் என்க. இழிதரும் என்னும் பெயரெச்சம் இடப்பெயர் கொண்டது. படாஅர்-சிறுதூறு; குறுங்காடு எனலுமாம். குட்டியை ஈன்ற மந்தி என்பது தோன்ற ஆண் குரங்கு பார்ப்பின் தந்தை எனப்பட்டது. ஈன்ற மந்தியின் அழிபசியைப் போக்குதற்கு அதன் கணவனாகிய கடுவன், தமக்கு இயல்பில் உணவாயுள்ள பழச்சுளையைத் தோண்டி எடுத்தல் குற்றமாகாதென்பது தோன்ற, 'மந்தி உயங்கு பசி களைஇயர்......தந்தை பழச்சுளை தொடினும்' எனப்பட்டது. தக்கன தகாதன அறிந்து ஒழுகற்பாலராய மக்களுட் படாது விலங்கினத்திற்பட்ட குரங்கு, இன்றியமையாக் கடப்பாடுபற்றிப் பழச்சுளை தொட்டதாயின், ஆண்டுறையும் தெய்வத்தால் அதற்கும் துன்பம் உண்டாகும் என அவ்விடத்தின் இயல்பு கூறியவாறாயிற்று. எய்க்கும்-எயும் என்ரபடி. எனவே, மகளிரே புறையும் மாங்காடு எனும் பதி, தெய்வத்தின் காப்பு மிக்குடையதென்பது போதரும். கொங்தோடு - கொர்தகளை; வேற்றுமை மயக்கம்.]

---

289. பாலை

[பிரிந்து போகாநின்ற தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.]

சிலையே றட்ட கணைவீழ் வம்பலர்
உயர்பதுக் கிவர்ந்த ததர்கொடி அதிரல்
*நெடுநிலை நடுகல் நாட்பலிக் கூட்டுஞ்

(பாடம்) * நிரைநிலை.

சுரனிடை விலங்கிய மரனோங் கியவின்
வந்துவினை வலித்த நம்வயின் என்றும்
தெருமரல் உள்ளமொடு வருந்தல் ஆனாது
நெகிழா மென்பிணி வீங்கிய கைசிறிது
அவிழினும் உயவும் ஆய்மடத் தகுவி
சேணுறை புலம்பின் நாண்முறை யிழைத்த
திண்சுவர் நோக்கி நினைந்து கண்பனி
நெகிழ்நூல் முத்தின் முகிழ்முலைத் தெறிப்ப
மையற விரிந்த படையமை சேக்கை
ஐமென் தூவி அணைசேர் பசைஇ
மையல் கொண்ட மதனழி யிருக்கையள்
பகுவாய்ப் பல்லி படுதொறும் பரவி
நல்ல கூறென நடுங்கிப்
புல்லென் மாலையொடு பொருங்கொல் தானே.

—எயினந்தை மகன் இளங்கீரனார்.

(சொ - ள்.) ௧—௬. சிலை ஏறட்ட கணை வீழ் வம்பலர் உயர் பதுக்கு-வில்லிற் கோத்த கணையால் வீழ்ந்திறந்த புதியர்களின் உடலை மூடிய உயர்ந்த கற்குவியல்களில், இவர்ந்த - ஏறிப்படர்ந்த, ததர்கொடி அதிரல் - நெருங்கிய கொடியாகிய காட்டு மல்லிகையின் பூக்கள், நெடு நிலை நடுகல் நாள் பலி கூட்டும் - உயர்ந்த நிலையினையுடைய நடுகல்லின் காலைப்பலிக்குக் கூட்டப்பெறும், சுரனிடை விலங்கிய மரன் ஓங்கு இயவின் - பாலைநிலத்தே குறுக்கே செல்லும் மரங்கள் உயர்ந்துள்ள நெறியில், வந்து வினைவலித்த நம்வயின் - வந்து பொருளீட்டும் தொழிலில் உறுதிகொண்டுள்ள நம்மிடத்தே, என்றும் தெருமரல் உள்ளமொடு வருந்தல் ஆனாது - எப்பொழுதும் நினைந்து சுழலும் உள்ளத்தால் வருந்துதல் அமையாது;

௭—௮. மென்பிணி வீங்கிய கை நெகிழா சிறிது அவிழினும் - மெத்தென்ற பிணிப்பு மிக்க கை நெகிழ்ந்து சிறிது விலகினும், உயவும் ஆய் மட தகுவி - வருந்தும் அழகிய மடப்பமுடைய நம் தலைவி;

௯—௧௪. சேண் உறை புலம்பின் நாள் முறை இழைத்த - நாம் சேய்மைக்கண் உறையும் தனிமையால் நாடோறும் முறை முறையாகக் கோடிட்டு வந்த, திண் சுவர் நோக்கி நினைந்து - திண்ணிய சுவரினைப் பார்த்து உடனுறையப் பெறுமையை நினைந்து, கண்பனி நெகிழ் நூல் முத்தின் முகிழ்முலை தெறிப்ப - கண்ணீர் நூலற்று உதிரும் முத்துக் களைப்போல முகிழ்த்த முலைமீது தெறித்து விழ, மை அற விரிந்த படை அமை சேக்கை - குற்றமற அகன்ற படுத்தல் அமைந்த படுக்கை

பில், ஐ மென் தூவி அணை சேர்பு அசைஇ - அழகிய மெல்லிய அன்னத்தின் சிறகாலாய அணையினைச் சேர்ந்து தங்கி, மையல் கொண்ட மதன் அழி இருக்கையள் - மயக்கம் கொண்டமையின் வலியற்ற இருக்கையளாகி;

௧௫—௭. பகு வாய்ப் பல்லி படுதொறும் பரவி - பிளந்த வாயினையுடைய பல்லி ஒலிக்குந்தொறும் தெய்வத்தைத் தொழுது, நல்ல கூறு என - நல்ல மொழியினைக் கூறுவாயாக என அதனை வேண்டி, நடுங்கி - மனம் நடுங்கி, புல் என் மாலையொடு பொரும் கொல் - பொலிவற்ற மாலைக்காலத்தோடு மாறுபடுவளோ?

(முடிப்பு) நெகிழா மென் பிணி வீங்கிய கை சிறிது அவிழினும் உயவும் ஆய் மடத் தகுவி. மரன்ஓங்கு இயவின் வந்து வினை வலித்த நம் வயின் என்றும் வருந்தல் ஆனாது, சேண் உறை புலம்பின், நாண் முறை இழைத்த சுவர் நோக்கி நினைந்து, கண்பனி தெறிப்ப, சேக்கை அணை சேர்பு அசைஇ, மதன் அழி இருக்கையள், பல்லி படுதொறும் பரவி, நடுங்கி, மாலையொடு பொருங்கொல்?

(வி-ரை.) பதுக்கு - பதுக்கை, வழிச் செல்வார் அதிரலைப் பலிக்குக் கூட்டும் என்க; பலியாகக் கூட்டும் என்றலுமாம். ஆய்மடத் தகுவி வருந்தல் ஆனாது இழைத்த சுவர் நோக்கி நினைந்து என்று இயையும். கை சிறிது அவிழினும் உயவும் ஆய் மடத் தகுவி என்றது அவளது இளமை கூறியபடி. இழைத்த-கோடிட்ட, நோக்கி என்றது, சென்ற நாட்களையும் செல்லக்கடவ நாட்களையும் எண்ணி மதித்து என்னும் காரியம் தோன்றநின்றது. சேக்கை அணைசேர்பு அசைஇ மதன் அழி இருக்கையள் என்றது, தலைவி துயிலின்றி வருந்துதலை உணர்த்தியபடி. படுதல் - ஒலித்தல். நல்ல என்றது, தலைவன் வரவு என்றபடி. கூறு என - கூறு என்று கூறி, தணந்தார்க்கு மாலைப் பொழுது பல்லாற்றானும் துன்பம் விளைப்பதாகலான், அதனொடு நடுங்கிப் பொருங்கொல் என்றான். மாலையொடு மாறுபடுதலை "மாலையோ அல்லை மணந்தார் உயிருண்ணும் - வேலைநீ வாழி பொழுது' என்பதனால் அறிக.

---

290. நெய்தல்

[இரவுக் குறிக்கண் தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழிக்குச் சொல்லுவாளாய்த் தலைமகள் சொல்லியது.]

குடுமிக் கொக்கின் பைங்கால் பேடை
இருஞ்சேற்று அள்ளல் நாட்புலம் போகிய
கொழுமீன் வல்சிப் புன்தலைச் சிறாஅர்

---

* குறள், ௧௨௨௧.

நன்ஞாண் அவ்வலைச் சேவல் பட்டென
அல்குறு பொழுதின் மெல்கிரை மிசையாது
பைதற் பிள்ளை தழீஇ ஒய்யென
அங்கட் பெண்ணை யன்புற நரலுஞ்
சிறுபஃ றொல்குடிப் பெருநீர்ச் சேர்ப்பன்
கழிசேர் புன்னை யழிபூக் கானல்
தணவா நெஞ்சமொடு தமியன் வந்துநம்
மணவா முன்னும் எவனோ தோழி
வெண்கோட் டியானை விறற்போர்க் குட்டுவன்
தெண்டிரைப் பரப்பிற் றொண்டி முன்றுறைச்
சுரும்புண மலர்ந்த பெருந்தண் நெய்தல்
*மணியேர் மாணலம் ஒரீஇப்
பொன்னேர் வண்ணங் கொண்டவென் கண்ணே.

—நக்கீரர்.

(சொ-ள்.) ௧௧. தோழி—,

௧—௮. இரு சேற்று அள்ளல் - கரிய குழம்பாகிய சேற்றினையுடைய, புலம் - செய்யின்கண், காள்போகிய - காலைவேட்டத்திற்குச் சென்ற, கொழுமீன் வல்சிப் புல்தலை சிறாஅர் - கொழுமீனாகிய உணவினையுடைய பர்கென்ற தலையினையுடைய சிறுவர் (இட்ட), நன் ஞாண் அ வலை சேவல் பட்டென - நுண்ணிய கயிற்றாலாய அழகிய வலையில் சேவல் அகப்பட்டதாக, குடுமிக் கொக்கின் பைங்கால் பேடை - குட்டினையுடைய அக் கொக்கின் பசிய காலினையுடைய பேடை, அல்குறு பொழுதின் மெல்கு இரை மிசையாது - தனித்துத் தங்கியிருக்கும் காலத்தே மெல்லும் இரையினைத் தின்னாது, பைதல் பிள்ளை தழீஇ - துன்புறும் தன் குஞ்சினைத் தழுவி, ஒய் என அம் கண் பெண்ணை அன்பு உற நரலும் - அழகிய இடத்தையுடைய பனைமரத்தின்கண் விரைவாக அன்பு தோன்ற ஒலித்திருக்கும், சிறு பல் தொல் குடி பெருநீர்ச் சேர்ப்பன் - சிறிய பலவாய பழைய குடிகளைக்கொண்ட கடற்கரையையுடைய நம் தலைவன்;

௯—௧௧. கழி சேர் புன்னை அழி பூ கானல் - கழியைச் சார்ந்த புன்னையின் மிக்க பூக்களையுடைய சோலையில், தணவா நெஞ்சமொடு தமியன் வந்து - அன்பு நீங்காத நெஞ்சமுடன் தனியனாகி வந்து, நம் மணவா முன்னும் - நம்மைக் கலத்தற்கு முன்னும்;

௧௨—௧௬. என்கண் - என் கண்கள், வெண்கோட்டு யானை விறல் போர்க் குட்டுவன் - வெள்ளிய தந்தத்தினையுடைய யானையையும்

(பாடம்) * மலரே மாணலம்.

போர் வெற்றியினையுமுடைய குட்டுவனது, தெண்டிரைப் பரப்பின் தொண்டி முன்துறை - தெளிந்த அலைகள் பொருந்திய பரப்பினையுடைய தொண்டியின் துறைமுற்றத்தே, சுரும்புண மலர்ந்த பெருதண் நெய்தல் - வண்டு தேனையுண்ண மலர்ந்த பெரிய தண்ணிய நெய்தற்பூவின், மணி ஏர் மாண்நலம் ஒரீஇ - நீலமணியை நிகர்த்த மாண்புற்ற அழகிய நிறத்தினை நீங்கி, பொன் நேர் வண்ணம் கொண்ட - பொன் போலும் நிறத்தைக் கொண்டன, எவனோ - இஃதென்னையோ?

(முடிபு) தோழி! சேர்ப்பன், கானல் தமியன் வந்து நம் மணவா முன்னும் என்கண் குட்டுவன் தொண்டி முன்றுறை நெய்தல் மாண் நலம் ஒரீஇ, பொன் நேர் வண்ணம் கொண்ட; எவன்?

(வி - ரை.) குடுமி - சூடு; உச்சியின் கண்ணதோர் உறுப்பு. அன்னற் புலம் காட்போகிய என மாறுக. போகிய சிறுஅர் அவ்வலைச்சேவல் பட்டென என்று இயையும். அல்குறு பொழுது - தனித்துத் தங்கியிருக்கும் பொழுது. மெல்கு இரை - மென்று தின்னும் இரை; *'மெல்குபு பெயரா' என்புழி மெல்குதல் இப்பொருட்டாதல் காண்க. பைதற் பிள்ளை - பறக்கலாற்றா வருத்தத்தையுடைய பிள்ளை; பிறவற்றைக் கண்டு அஞ்சும் வருத்தத்தையுடைய பிள்ளை என்றுமாம். அன்பு - சேவலிடத்துள்ள அன்பு. கண்டார்க்கு இரக்கம் தோன்ற ஒலிக்கும் என்றுமாம். தணவா நெஞ்சம் - காதல் நீங்காத நெஞ்சம். தலைவன் கானலிடத்துத் தனியன் வந்து இரவுக் குறிக்கண் நம்மை மணத்தல் ஒருதலை என்பாள், 'மணவா முன்னும்' என்றாள். இரவுக் குறிக்கண் என்ன இடையீடு நேருங்கொல் என்னும் அச்சத்தால் கண்கள் பசலையுற்றன என்பாள், 'மணவா முன்னும் என்கண் பொன் நேர்வண்ணம் கொண்ட' என்றாள். இது பசப்புறு பருவரல். மணவா முன்னும் கண்கள் பசலையுற்றன எவனோ என்றதன் பயன், தலைவி நம்மைப் பிரிந்து சிறிதும் ஆற்றகிலாள் ஆகலின், நாம் விரைந்து வரைதல் வேண்டுமெனத் தலைவன் உணர்தலாம் என்க.

---

291. பாலை

[பொருள்வயிற் போகாநின்ற தலைமகன் இடைச்சுரத்துத் தன்னெஞ்சிற்குச் சொல்லியது.]

வானம் பெயல்வளங் கரப்பக் கானம்
உலறி இலையில வாகப் பலவுடன்
ஏறுடை ஆயத்து இனம்பசி தெறுப்பக்
கயனற வறந்த கோடையொடு நயனறப்
பெருவரை நிவந்த மருங்கில் கொடுவரிப்

---

* சிறுபாண். ௬௨.

புலியொடு பொருது சினஞ்சிறந்து வலியொடு
உரவுக்களிறு ஒதுக்கிய மருங்கிற் பருஉப்பரல்
சிறுபன் மின்மினி கடுப்ப எவ்வாயும்
இறைவன இமைக்கும் நிரம்பா நீளிடை
எருவை இருஞ்சிறை இரீஇய விரியிணர்த்
தாதுண் தும்பி முரலிசை கடுப்பப்
பரியின துயிர்க்கும் அம்பிணர் வெருவா
உவலை சூடிய தலையர் கவலை
ஆர்த்துடன் அரும்பொருள் வவ்வலின் யாவதும்
சாத்திடை வழங்காச் சேட்சிமை அதர
சிறியிலை நெல்லித் தீஞ்சுவைத் திரள்காய்
உதிர்வன தாஅம் அத்தம் தவிர்ந்தன்று
புள்ளி அம்பிணை உணீஇய உள்ளி
அறு*மருப்பு ஒழிந்த தலைய தோல்பொதி
மறுமருப் பிளங்கோ டதிரக் கூஉஞ்
சுடர்தெற வருந்திய அருஞ்சுரம் இறந்தாங்கு
உள்ளினை வாழிய நெஞ்சே போதெனப்
புலங்கமழ் நாற்றத் திரும்பல் கூந்தல்
நல்லெழின் மழைக்கணங் காதலி
மெல்லிறைப் பணைத்தோள் விளங்குமாண் கவினே.

—பாலை பாடிய பெருங்கடுங்கோ.

(சொ - ள்.) ௨௨—௫. நெஞ்சே-, வாழிய-, போது என புலம் கமழ் நாற்றத்து - மலர் எனப் புலமெலாம் கமழும் நாற்றத்தினை யுடைய, இரும்பல் கூந்தல் - கரிய பலவாய கூந்தலையும், நல் எழில் மழைக்கண் - நல்ல அழகிய குளிர்ந்த கண்ணினையும் உடைய, நம் காதலி-நம் காதலியின், மெல் இறைப் பணைத்தோள் - மெல்லிய இறையினையுடைய பருத்த தோளின், விளங்கும் மாண் கவின் - விளங்கும் மாண்புற்ற அழகினை;

௧—௪. வானம் பெயல் வளம் கரப்ப - மேகம் பெயலாய வளத்தினைத் தராதொழிய, கானம் உலறி இலையிலவாக - காடுகள் காய்ந்து இலைகளில்லாதனவாக, ஏறு உடை ஆயத்து இனம் பல உடன்பசி தெறப்ப - ஏறுகளையுடைய ஆயமாகிய ஆனிரைகள் பலவற்றையும் ஒருங்கே பசி வருத்த, கயன் அற வறந்த கோடையொடு - குளங்கள் நீரவற்றிய கோடையால், கயன் அற பெருவரை நிவந்த மருங்கில் -

(பாடம்) * மருப்பொழிந்த.

வளம் ஒழியப் பெரிய மலை உயர்ந்த பக்கத்தில், கொடு வரிப்புலியொடு சினம் சிறந்து பொருது-வளைந்த வரிகளையுடைய புலியுடன் சினம் மிக்குப் போர் செய்து, வலியோடு உரவுக்களிறு ஒதுங்கிய மருங்கில் - செருக்குடன் வலிய யானை நடந்த இடங்களில், பருஉப்பரல் - பெரிய பரற்கற்கள், சிறு பல் மின் மினி கடுப்ப - சிறிய பலவாய மின்மினிப் பூச்சிகளைப் போல, எவ்வாயும் நிறைவன இமைக்கும் நிரம்பா நீளிடை - எவ்விடத்தும் நிறைந்து ஒளிவிடும் செல்லத் தொலையாத நீண்ட இடத்தே;

௧0—௫. இரும் சிறை எருவை இரீஇய - பெரிய சிறகினையுடைய பருந்து அஞ்சியோட, விரி இணர் தாது உண் தும்பி முரல் இசை கடுப்ப - விரிந்த பூங்கொத்துக்களில் பூந்துகளை உண்ணும் வண்டுகள் ஒலிக்கும் இசையைப்போல, பரியினது உயிர்க்கும் அம்பினர்-விரைந்து செல்வதாய் ஒலிக்கும் அம்பினையுடையவரும், வெருவர உவலை சூடிய தலையர் - கண்டார்க்கு அச்சம் தோன்றத் தழைக் கண்ணி சூடிய தலையினையுடையரும் ஆகிய ஆறலைப் போர், கவலை ஆர்த்து உடன் அரும் பொருள் வவ்வலின் - கவர்த்த நெறிகளில் ஆரவாரித்து ஒருங்கு அரிய பொருள்களைப் பறித்துக் கோடலின், யாவதும் சாத்து இடைவழங்கா - வாணிகச் சாத்தர் சிறிதும் நெறியிடையே இயங்குதல் அற்றதும்;

௧௫—உ௨. சேண் சிமை அதர - உயர்ந்த மலையுச்சிகளை யடுத்த நெறிகளிடத்தவாய, சிறி இலை நெல்லித் தீம்சுவைத் திரள்காய்-சிறிய இலையினையுடைய நெல்லியின் இனிய சுவை பொருந்திய திரண்ட காய்கள், உதிர்வன தாஅம் அத்தம் - உதிர்ந்து பரந்து கிடக்கும் காட்டில், தவிர்வு இன்று புள்ளி அம் பிணை உணீஇய உள்ளி - தவிர்தல் இன்றிப் புள்ளிகளையுடைய அழகிய பிணைமான் உண்ண நினைந்து, அறு மருப்பு ஒழித்த தலைய - அற்று விழும் கொம்பினை ஒழித்த தலையிற் றோன்றுவனவும், தோல் பொதி மறு மருப்பு-தோலாற் பொதியப் பெறுவனவும் ஆகிய பின்னர்த் தோன்றும் கொம்புகளாகிய, இளங்கோடு அதிர - இளைய கொம்புகள் அதிர்ந்திட, கூஉம் - ஆண்மான்கள் கூவி அழைக்கும் இடமாய, சுடர் தெற வருந்திய அரும் சுரம் இறந்து - ஞாயிறு தெறுதலால் வருத்த முற்ற அரியசுர நெறியைக் கடந்து வந்து, உள்ளினை - நினைந்தனை.

(முடிபு) பெருவரை நிவந்த மருங்கில், களிறு ஒதுங்கிய மருங்கில், பரல் இமைக்கும் நீளிடையில், அம்பினர், தலையர் அரும் பொருள் வவ்வலின், சாத்திடை வழங்காத அருஞ்சுரம் இறந்து, நம் காதலியின் மாண்கவின் உள்ளினை.

(வி - ரை.) பொருது சினஞ் சிறந்து எனக் கிடந்தவாறே உரைத்தலுமாம். வலி - ஈண்டுத் தருக்கு; பெருமிதமுமாம். 'பரல் மின்மினி கடுப்ப இமைக்கும்' என்றது, வெயிலின் விளக்க மிகுதி கூறியபடி. இருஞ்சிறை எருவை இரீஇய என மாறுக. பரியினது -

விரைந்து செல்வதாய். உயிர்த்தல் - ஒலித்தல். கலைமான் கூடம் என எழுவாய் வருவித்துரைக்க. முன் முளைத்த கொம்பு கழன்று வேறு கொம்பு தோன்றிய பொழுது, அதனைத் தோல் மூடியிருக்குமாதலானும், அப்பொழுது உரக்க ஒலிப்பின் அவ்விளங் கொம்பு நடுங்குமாதலானும், 'அறமருப் பொழிந்த தலைய தோல் பொதி, மறமருப்பினங்கோடு அதிரக் கூடம்' எனப்பட்டது. வருந்திய சுரம் - ஆண்டுள்ள மாவும் புள்ளும் மரனும் முதலாயினவெல்லாம் வருந்திய சுரம் என்க. கொடிய - காட்டினை இத்துணையும் கடந்து வந்து காதலியின் கவினை உள்ளுதலாற் பயன் என்னை என்பான், 'நெஞ்சே! அருஞ் சுரம் இறந்து காதலி கவின் உள்ளினை' என்றான்.

ஆங்கு அசை.

---

292. குறிஞ்சி

[வெறியச்சுறீஇத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.]

கூறாய் செய்வது தோழி வேறுணர்ந்து
அன்னையும் பொருளுறுத்து அலமரும் மென்முறிச்
சிறுகுளகு அருந்து தாய்முலை பெறாஅ
மறிகொலைப் படுத்தல் வேண்டி வெறிபுரி
ஏதில் வேலன் கோதை துயல்வரத்
தூங்கும் ஆயின் அதூஉம் நாணுவல்
இலங்குவளை நெகிழ்ந்த செல்லல் புலம்படர்ந்து
இரவின் மேயல் மரூஉம் யானைக்
கால்வல் இயக்கம் ஒற்றி நடுநாள்
வரையிடைக் கழுதின் *வன்கைக் கானவன்
கடுவிசைக் கவணின் எறிந்த சிறுகல்
உடுவுறு கணையிற் போகிச் சாரல்
வேங்கை விரியிணர் சிதறித்தேன் சிதையூஉப்
பலவின் பழத்துள் தங்கும்
மலைகெழு நாடன் மணவாக் காலே.

—கபிலர்.

(சொ - ள்.) ௧. தோழி—,

௭. இலங்குவளை நெகிழ்ந்த செல்லல்-விளங்கும் வளை நெகிழ்தற்கு ஏதுவாய துன்பத்தினைக் கண்டு;

(பாடம்) * வன்கட் கானவன்.

௧—௪. அன்னையும் - நம் அன்னையும், வேறு உணர்ந்து - அது பிறி தொன்றானதென உணர்ந்து, பொருள் உகுத்து - பொருளைச் சொரிந்து, அலமரும் - மனம் சுழலாநிற்கும்;

௨—௬. மெல் முறி சிறு குளகு அருந்து - மெல்லிய தளிராய சிறிய தழையுணவைத் தின்னும், தாய் முலை பெறாஅ - தாய் முலையினைப் பெறா தொழியும், மறி கொலைப் படுத்தல் வேண்டி - யாட்டுக் குட்டியினைப் பலிக்காகக் கொல்லுதலை விரும்பி, வெறிபுரி - வெறியாடலைச் செய்யும், ஏதில் வேலன் - யாதும் இயைபில்லாத வேலன், கோதை துயல்வர - மாலை தன் மார்பில் அசைந்திட, தூங்கும் ஆயின் - வெறி ஆடுவானாயின், அதூஉம் நாணுவல் - அதனையும் நாணா நிற்பேன்;

௭—௧௫. புலம் படர்ந்து இரவில் மேயல் மரூஉம் யானை - வேற்றுப்புலம் சென்று இரவில் மேய்தலைப் பொருந்தி வரும் யானையின், கால்வல் இயக்கம் ஒற்றி - கால் ஊன்றி நடக்கும் வலிய நடையைக் கூர்த்து அறிந்து, நடு நாள் - நள்ளிரவில், வரையிடைக் கழுதின் வன் கைக் கானவன் - மலையிடத்தே பரண்மீதுள்ள வலிய கையையுடைய வேட்டுவன், கடு விசைக் கவணின் எறிந்த சிறு கல் - மிக்க விசையினை யுடைய கவணால் எறிந்த சிறுகல், உடு உறு கணையின் போகி - இறகினைப் பொருந்திய அம்பென விரைந்து சென்று, சாரல் வேங்கை விரி இணர் சிதறி - பக்கமலையிலுள்ள வேங்கைமரத்தின் விரிந்த பூங்கொத்துக்களைச் சிதறி, தேன் சிதையூஉ - தேனை அழித்து, பலவின் பழத்துள் தங்கும் - பலாப் பழத்தினுள் தங்கிவிடும், மலைகெழு நாடன் மணவாக்கால் - மலைநாட்டையுடைய நம் தலைவன் நம்மை மணந்து கொள்ளாத வழி;

௧. செய்வது கூறாய் - நாம் செய்வதனைக் கூறுவாயாக.

(முடிபு) தோழி! வளை நெகிழ்ந்த செல்லல் வேறு உணர்ந்து அன்னையும் பொருள் உகுத்து அலமரும்; வெறிபுரி ஏதில் வேலன் தூங்குமாயின் அதூஉம் நாணுவல்; மலைகெழு நாடன் மணவாக்கால், செய்வது கூறாய்.

(வி - ரை.) வேறு உணரல் - தலைவனால் உண்டாகிய செல்லலைப் பிறிதொன்றால் ஆயதென உணர்தல். பொருள் உகுத்து அலமரும் என்றது, கட்டினும் கழங்கினும்குறி கூறுவாரிடத்தும் வேலனிடத்தும் வறிதே பொருளைச் சொரிந்தும் அதனானும் தீராமையால் மனங் கலங்கும் என்றபடி. குளகருந்து மறி, தாய்முலை பெறாஅ மறியெனத் தனித்தனி கூட்டுக; என்றது மிக்க இளமையுடையதோர் மறியென இரங்கிக் கூறியபடியாம். வேலன் வெறியாடலின்பயன் மறியைக் கோறலன்றிப் பிறிதின்றென்பாள், 'மறிகொலைப் படுத்தல்வேண்டித் தூங்கும் ஆயின்' என்றாள். அதூஉம் நாணுவல் என்ற உம்மையால், அன்னை அலமரும் அதனையும் நாணுவல் என்றாளாகும். *'பிறர்பழியும்

* குறள், ௧௦௧௫.

தம் பழியும் காணுவார் காணுக் - குறைபதி யென்னும் உல்கு' என்பதனால், அன்னையின் பயனில் செயலும் வேலனது நீச்செயலும் ஆகிய பழிகட்குத் தலைவி காணுவாள் ஆயினள் என்க. செல்லல் வேறு உணர்ந்து எனக் கூட்டுக. ஒற்றி-மறைய நின்றுணர்ந்து என்றலுமாம். உடு - காணிற் பொருந்தும் அம்பின் அடியுமாம். மலைகெழு நாடன் மணவாக்கால்யாது செய்வது என அஞ்சுகின்றேன் என்பாள்,செய்வது கூறுயெனத் தோழிக்குக் கூறினாள் என்க. *'நெடுவரை ஆசினிப் பணவை யேறிக், கடுவிசைக் கவணையிற் கல்கை விடுதலின், இறுவரை வேங்கையின் ஒள்வீ சிதறி, ஆசினி மென்பழம் அளிந்தவை உதிராத், தேன்செய் இறாஅல் துளைபடப் போகி, நறுவடி மாவின் பைந்துணர் உழக்கிக், குலையுடை வாழைக் கொழுமடல் கிழியாப், பலவின் பழத்துட் டங்கும், மலைகெழு வெற்பனை' என, இவ்வாசிரியர் பாடிய பிறிதொரு செய்யுளின் பகுதி, 'வரையிடை...மலைகெழு நாடன்' என்னும் இப்பகுதியோடு ஒத்திருத்தல் அறிந்து மகிழ்வதற்குரியது.

(உ-றை.) கானவன் எறிந்த கல் வேங்கை விரிபிணர் சிதறித் தேன் சிதையூட பலவின் பழத்துள் தங்கும் என்றது, வெறியாடலால் எழும் அலர், தலைவன் குறியிடத்து வருதலைக் கெடுத்து, எமது இன்பத்தை அழித்து, எமது உள்ளத்திலே தங்குவதாகும் என்றபடி.

---

293. பாலை

[பொருள்வயிற் பிரியக்கருதிய தலைமகன் குறிப்பறிந்து தலைமகள் தோழிக்குச் சொல்லியது. தலைமகனாற் பிரிவுணர்த்தப்பட்ட தோழி தலைமகட்குச் சொல்லியதூஉமாம்.]

இலையொழித் துலறிய புன்தலை யுலவை
வலைவலந் தனைய வாகப் பலவுடன்
சிலம்பி சூழ்ந்த புலங்கெடு வைப்பின்
†துகிலாய் செய்கைப் பாவிரிந் தன்ன
வெயிலவிர்பு நுடங்கும் ‡வெவ்வெங் களரிக்
குயிற்கண் ணன்ன குரூஉக்காய் முற்றி
மணிக்கா சன்ன மானிற இருங்கனி
உகாஅ மென்சினை உதிர்வன கழியும்
வேனில் வெஞ்சுரம் தமியர் தாமே
§செல்ப என்ப தோழி யாமே

---

* குறிஞ்சிக்கலி, ௪. (பாடம்) † துகிலானெய்கை.
‡ வேல்வெங்களரி. § செல்ப என்றார்.

பண்பில் கோவலர் தாய்பிரித் தியாத்த
நெஞ்சமர் குழவி போல நொந்து நொந்து
இன்னா மொழிதும் என்ப
*என்மயங் கினர்கொல்நங் காத லோரே.

—காவன் முல்லைப் பூதனார்.

(சொ - ள்.) கo. தோழி—,

கச. நம் காதலோர் - நம் காதலர்,

க—உ. இலை ஒழித்து உலறிய புன் தலை உலவை - இலைகளை உதிர்த்து வற்றிய பொலிவற்ற உச்சியினையுடைய வேல மரத்தில், வலை வலந்தனைய ஆக - வலை கட்டியன போல, சிலம்பி பல உடன் சூழ்ந்த - சிலம்பி நூல் பலவும் ஒருங்கே சூழ்ந்த, புலம் கெடு வைப்பின் - நிலம் பாழ்பட்ட இடங்களையுடைய;

ச—சு. துகில் ஆய் செய்கை பா விரிந் தன்ன - ஆடை ஆய்ந்து செய்யுங்கால் பாவானது விரிந்தது போல, வெயில் அவிர்பு நுடங்கும் வெவ் வெங் களரி - வெய்யில் விளங்கி அசையும் மிக்க வெப்பத்தை யுடைய காட்டிடத்தே;

கூ—கo. குயில் கண் அன்ன குரூஉக் காய்முற்றி - குயிலின் கண்ணைப்போன்ற விளங்கும் காய் முற்றி, மணிக்காசு அன்ன மால் நிறஇரு கனி - அழகிய பொற்காசு போன்ற பெருமை பொருந்திய நிறத்தினையுடைய பெரிய கனி, உகாஅ மென்சினை உதிர்வன கழியும்—உகாவின் மெல்லிய கிளைகளினின்றும் உதிர்ந்து ஒழியும், வேனில் வெம் சுரம் தமியர்தாம் செல்ப என்ப-வேனிலால் வெப்பமிக்க சுரத்தில் தனித்து நம் காதலர் செல்லுவார் என்று ஊரார் கூறுகின்றனர்; மற்றும் அவரே;

கo—கூ. பண்பு இல் கோவலர் தாய் பிரித்து யாத்த - இரக்கம் இல்லாத கோவலர் தாயைப் பிரித்துக் கட்டிய, நெஞ்சு அமர் குழவி போல - நெஞ்சத்து அதனை விரும்பிய கன்றுபோல, நொந்து நொந்து இன்னா மொழிதும் என்ப - யாம் மிக நொந்து இன்னாதவற்றை மொழிந்திருக்கின்றோம் என்று நம்மைப் புறங்கூறுகின்றனர்;

கச. என் மயங்கினர் கொல் - அவர் இங்ஙனம் மயங்கியது என்னையோ?

(முடிபு) தோழி! (இவ்வூரார்,) நம் காதலோர் வேனில் வெஞ் சுரம் தமியர் செல்ப என்ப; மற்றும் அவர், யாம் நொந்து நொந்து இன்னா மொழிதும் என்ப; என் மயங்கினர்கொல்?

(வி-ரை.) சிலம்பி சூழ்ந்த வைப்பு என்றதனால் மழையின்மையும், பா விரிந்தன்ன வெயில் அவிர்பு நுடங்கும் என்றதனால், வெம்மை

* என்மயங் கினர்கம்.

மிகுதியும் கூறியபடியாம். விரிந்தன்ன - விரிந்தன்னவாக என வினையெச்சப்படுத்துக. காசு ஈண்டுப் பொற்காசு. உகா - பாலைக்கண்ணுள்ளதோர் மரம்; இது உகாய் எனவும் வழங்கும். குழவி போல - குழவி பலகாலும் வருந்திக் கதறுவதுபோல என விரித்துரைத்துக் கொள்க. தலைவர் கொடிய காட்டிலே தனித்துச் செல்ல, அவரைப் பிரிந்து நாம் வருந்துதல் இயல்பாகவும் அதனை அறிந்து வைத்தும் ஊரார் நம்மைப் புறன் உரைத்தல் என்னென்பாள், 'என் மயங்கினர்' என்றாள்.

---

294. முல்லை

[பருவவரவின்கண் வற்புறுக்குந் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.]

மங்குல் மாமழை விண்ணதிர்பு முழங்கித்
துள்ளுப்பெயல் *கழிந்த பின்றைப் புகையுறப்
புள்ளிநுண் துவலை பூவகம் நிறையக்
காதலர்ப் பிரிந்த கையறு மகளிர்
நீர்வார் கண்ணிற் கருவிளை மலரத்
துய்த்தலைப் பூவின் புதலிவர் ஈங்கை
நெய்த்தோய்த் தன்ன நீர்நனை யந்தளிர்
†இருவகிர் ஈருளின் ஈரிய துயல்வர
அவரைப் பைம்பூப் பயில அகல்வயற்
கதிர்வார் காய்நெல் கட்கினிது இறைஞ்சச்
சிதர்சினை தூங்கும் அற்சிர அரைநாள்
காய்சின வேந்தன் பாசறை நீடி
நந்நோய் அறியா அறனி லாளர்
இந்நிலை களைய வருகுவர் கொல்லென
ஆனா தெறிதரும் வாடையொடு
நோனேன் தோழியென் ‡தனிமை யானே

—கழார்க்கீரன் எயிற்றியார்.

(சொ - ள்.) ௧௬. தோழி—,

௧-௩. மங்குல் மா மழை - மிகவும் இருண்ட மேகமானது, விண் அதிர்பு முழங்கி - வானில் அதிர்ந்து முழங்கி, துள்ளு பெயல் கழிந்த பின்றை - குதித்தலாகிய பெய்தலைச் செய்து கழிந்த பின்பு, புகை உற

(பாடம்) * பொழிந்த பின்றை. † இருவகிர் இருளின்.
‡ தனிமையினானே.

புள்ளி நுண் துவலை - புகையைப் போலப் புள்ளியாய நுண்ணிய பனித் துளிகள், பூ அகம் நிறைய - பூக்களின் உள்ளே நிறையவும்;

௪—௫. காதலர்ப் பிரிந்த கையறு மகளிர் - தம் காதலரைப் பிரிந்துள்ள செயலற்ற மகளிரது; நீர்வார் கண்ணில் கருவிளை மலர - நீர் ஒழுகும் கண்களைப்போலக் காக்கணம் பூ மலரவும்;

௬—௮. துய் தலை பூவின் புதல் இவர் ஈங்கை - பஞ்சு போன்ற தலையினையுடைய பூவினையுடையதும் புதர்களிற் படர்வதுமான ஈங்கையது, நெய்த் தோய்த்தன்ன நீர் நனை அம் தளிர்-நெய்யிற்றோய்த்தெடுத்தாற்போன்ற நீரால் நனைந்த அழகிய தளிர்கள், இருவகிர் ஈருளின் - இருபிளவாகிய ஈரல் போல, ஈரிய துயல்வர - ஈரமுடையனவாய் அசைந்திட;

௯—௧0. அவரை பைம் பூ பயில - அவரையின் அழகிய பூக்கள் எங்கும் செறிய, அகல் வயல் கதிர்வார் காய் நெல் கட்கு இனிது இறைஞ்ச - அகன்ற வயலிடத்தே கதிர்கள் நீண்ட காய்த்த நெல் கண்ணிற்கு இனிமையுறத் தலை வளைந்திட;

௧௧. சிதர் சினை தூங்கும் அற்சிர அரைநாள் - வண்டுகள் கிளைகளில் அசையாநிற்கும் முன்பனிக்காலத்து நள்ளிரவில்;

௧௨—௪. காய் சின வேந்தன் பாசறை நீடி-சின மிக்க அரசனது பாசறைக்கண்ணே நெடிது மேவி, நம் நோய் அறியா அறன் இலாளர் - நமது துன்பினை அறியாத அறன் இல்லாத தலைவர், இந்நிலை களைய வருகுவர் கொல் என - நமது இத்துயர் நிலையினை நீக்க வருவரோ என்று எண்ணி;

௧௫—௬. ஆனாது எறிதரும் வாடையொடு - அமையாது வீசும் வாடைக்காற்றால், என் தனிமை - எனது தனிமையை, யான் நோனேன் - யான் பொறேனாகின்றேன்.

(முடிபு) தோழி,! மங்குல் மாமழை பெயல் கழிந்த பின்றை அற்சிர அரைநாள் வேந்தன் பாசறை நீடி, நந்நோய் அறியா; அறனிலாளர் இந்நிலை களைய வருகுவர் கொல் என, வாடையொடு என் தனிமை நோனேன்.

(வி—ரை.) துள்ளுப் பெயல் என்றது, கார்காலத்து, மிக்க மழை என்றபடி. புகையுற என்றமையால், துவலை பனித்துவலையாயிற்று. தலைவி தலைவனைப் பிரிந்த வருத்தத்தால் நீர் ஒழுகும் கண்ணினளாயிருத்தலின், அவ்வாறே காதலரைப் பிரிந்த ஏனை மகளிரும் துன்புறுவர் எனக்கொண்டு; பனிநீர் !வார மலர்ந்திருக்கும் கருவிளை மலருக்கு, மகளிர் நீர்வார் கண்ணினை உவமை கூறினன் என்க. ஈங்கை - இண்டை. நெய்யிற் றோய்த்தெடுத்தா லொத்த நெய்ப்பும் பசுமையும் உடைய இண்டையின் தளிர் இருவகிராக ஈரல்

போன்றிருக்குமாகலின், அதனை இருவகிர் ஈருளின் ஈரிய துயல்வர என்றான். ஈருள்-ஈரல்; 'ஈருட்டடி மூடி'* என்பதனால் ஈது அறியப்படும். வாடைக்காற்றினால் வண்டுகள் ஓரிடத்தில் நிலையுதலின்றிக் கிளைகளிலே திரிந்துகொண்டிருக்குமாகலின், சிதர்சினை தூங்கும் அற்சிர அரை நாள் என்றாள். தலைவர் வந்துவிடுவர் என வற்புறுக்கும் தோழிக்குத் தாம் குறித்த கார்ப்பருவமேயன்றிக் கூதிரும் முன்பனியும் வந்தும் நாம் எய்தலாகும் துன்பத்தினை அறிந்து, வருதலில்லாத அறனில்லாதவர் இனியும் வருவரோ என் ஐயுற்று வாடையால் என் தனிமையைப் பொறுக்கலாற்றேன் ஆகின்றேன் எனத் தலைமகள் வன்புறை எதிரழித்து கூறினாள் என்க. வருகுவர் கொல் என என்பது வாரார் எனக் கருதி என்றபடி. தான் நோனாமைக்குப் பிறிதும் ஏதுக் கூறுவாள், 'வாடையொடு நோனேன்' என்றாள்.

(மே-ள்.) 'திணை மயக்குறுதலும்'† என்னுஞ் சூத்திரத்து, இச்செய்யுளைக் காட்டி, இம் மணியிடை பவளத்து, முல்லையுள் முன்பனி வந்தது; நிலமும் கருவும் மயங்கிற்று; என்றார், நச்.

---

295. பாலை

[பிரிவிடை வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.]

நிலநீ ரற்று நீள்சுனை வறப்பக்
குன்றுகோ டகையக் கடுங்கதிர் தெறுதலின்
என்றூழ் ‡நீடிய வேய்படு நனந்தலை
நிலவுநிற மருப்பிற் பெருங்கை சேர்த்தி
வேங்கை வென்ற வெருவரு பணைத்தோள்
ஓங்கல் யானை உயங்கிமதந் தேம்பிக்
கடனீர் உப்பின் கணஞ்சால் உமணர்
உயங்குபக டுயிர்ப்ப அசைஇ முரம்பிடித்து
அகலிடங் குழித்த அகல்வாய்க் கூவல்
ஆறுசெல் வம்பலர் அசைவிட ஊறும்
புடையலங் கழற்காற் புல்லி குன்றத்து
நடையருங் கானம் விலங்கி நோன்சிலைத்
தொடையமை பகழித் துவன்றுநிலை வடுகர்
பிழியார் மகிழர் கலிசிறந் தார்க்கும்
மொழிபெயர் தேஎம் இறந்தனர் ஆயினும்

---

* சிந்தா. 2791. †தொல். அகத். கஉ. (பாடம்) ‡நீடியவெயபடு.

பழிதீர் பாணலந் தருகுவர் மாதோ
மாரிப் பித்திகத்து ஈரிதழ் புரையும்
அம்கலுழ் கொண்ட செங்கடை மழைக்கண்
மணங்கமழ் ஐம்பால் மடந்தைநின்
அணங்குநிலை பெற்ற தடமென் றோளே.

—மாமூலனார்.

(சொ - ள்.) ௧௩—௨௧. மாரி பித்திகத்து ஈர்இதழ் புரையும் - மாரிக்காலத்தே பூக்கும் பிச்சி மலரின் குளிர்ந்த இதழை ஒக்கும், அம் கலுழ் கொண்ட செம் கடை மழைக் கண் - அழகு ஒழுகும் சிவந்த கடையினையுடைய குளிர்ந்த கண்ணினையும், மணம் கமழ் ஐம்பால் - மணம் கமழும் கூந்தலையுமுடைய, மடந்தை - மடந்தையே;

௩. கடல் நீர் உப்பின் கணம் சால் உமணர் - கடல் நீரால் விளைந்த உப்புவாணிகரது கூட்டம்;

௪—௮. நிலம் நீர் அற்று - நிலங்கள் நீர் இல்லையாகி, நீள் சுனை வறப்ப - ஆழ்ந்த சுனைகள் வறளவும், குன்று கோடு அகைய - மலையிலே மரக்கிளைகள் எரியவும், கடு கதிர் தெறுதலின் - ஞாயிற்றின் கடிய கதிர் தெறுதலால், என்றூழ் நீடிய வேய் படு நனந்தலை - வெம்மை மிக்க மூங்கில்கள் தெறிக்கும் அகன்ற இடமாகிய, வேங்கை வென்ற வெருவரு பணை தோள் - வேங்கைப்புலியினை வென்ற அச்சம் வரும் பருத்த கையினையுடைய, ஓங்கல் யானை உயங்கி மதம் தேம்பி - மலை போன்ற யானை வருந்தி மதம் வாடி - நிலவு நிற மருப்பின் பெருங் கை சேர்த்தி - நிலாப்போலும் நிறத்தினையுடைய கொம்பிலே பெரிய கையை அணைத்துக்கொண்டு, பல் மர ஒரு சிறை பிடியொடு வதியும் - பல மரங்களையுடைய ஒரு பக்கத்தே தன் பிடியோடு தங்கிக் கிடக்கும், கல் உடை அதர கானம் நீந்தி - கற்கள் பொருந்திய நெறிகளையுடைய காட்டினைக் கடந்து;

௧௦—௨. உயங்கு பகடு உயிர்ப்ப அசைஇ - உப்புப்பொறையினை ஈர்த்து வருந்திய எருதுகள் இளைப்பாறத் தங்கி, முரம்பு இடித்து அகல் இடம் குழித்த அகல்வாய்க் கூவல் - வன்னிலத்தை இடித்து விரிந்த இடத்திலே தோண்டின அகன்ற வாயினையுடைய கிணறு, ஆறு செல் வம்பலர் அசைவிட ஊறும் - அந்நெறியே செல்லும் புதியர்கள் தளர்ச்சி நீங்க ஊறும் இடமாகிய;

௧௩—௭. புடையல் கழல் கால் புல்லி குன்றத்து - ஒலிக்கின்ற வீரக்கழலணிந்த காலையுடைய புல்லி என்பானது, வேங்கடமலையைச் சார்ந்த, நடை அரு கானம் விலங்கி - செல்லற்கு அரிய காட்டினைக் கடந்து, நோன் சிலை தொடை அமை பகழி துவன்று நிலை வடுகர் - வலிய வில்லில் தொடுத்தல் அமைந்த அம்புகளின் செறிவினையுடைய

வடுகர், பிழி ஆர் மகிழர் - கள்ளினையுண்ட மகிழ்ச்சியுடையராய், கலி சிறந்து ஆர்க்கும்-செருக்கு மிக்கு ஆரவாரிக்கும், மொழி பெயர் தேஎம் இறந்தனர் ஆயினும் - வேற்றுமொழி வழங்கும் தேயத்தைக்கடந்து சென்றனராயினும்;

உக—உ. நின் அணங்கு நிலைபெற்ற தடமென் தோள் - நினது அழகு நிலைபெற்ற பெரிய மெல்லிய தோளின்;

கஅ. பழிதீர் மாண் நலம் தருகுவர்-குற்றமற்ற சிறந்த நலத்தினை வந்து தந்தருள்வர்.

(முடிபு) மடந்தை! (நம் தலைவர்) புல்லிகுன்றத்துக் கானம் விலங்கி, வடுகர் கலிசிறந்தார்க்கும் மொழி பெயர் தேஎம் இறந்தனர் ஆயினும், நின்தோள் மாண் நலம் தருகுவர்.

உமணர் கானம் நீந்திப் பகடு உயிர்ப்ப அசைஇக் குழித்த கூவல் வம்பலர் அசைவிட ஊறும் புல்லிகுன்றம் என்க.

(வி - ரை.) என்றூழ் நீடிய கானம் எனவும், நனந்தலைக் கானம் எனவும், யானை பிடியொடு வதியும் கானம் எனவும் தனித்தனி கூட்டுக. யானை மருப்பிற் கை சேர்த்தி வதியும் என்க. ஓங்கல் - உயர்ச்சியுமாம். அசை - அசைவு; நீர் வேட்கையால் ஆம் தளர்ச்சி. தலைவர் விரைந்து வந்து நின் துன்பத்தைப் போக்கி இன்பம் தருவர் என்பாள் 'நின் தோள் மாணலம் தருகுவர்' என்றாள்.

---

296. மருதம்

[வாயில்வேண்டிச் சென்ற தலைமகற்கு வாயின்மறுக்குந் தோழி சொல்லியது.]

கோதை யிணர குறுங்காற் காஞ்சிப்
போதவிழ் நறுந்தா தணிந்த கூந்தல்
அரிமதர் மழைக்கண் மாஅ யோளொடு
நெருநையுங் கமழ்பொழில் *துஞ்சி இன்றும்
பெருநீர் வையை அவளொடு ஆடிப்
புலரா மார்பினை வந்துநின்று எம்வயின்
கரத்தல் கூடுமோ மற்றே பரப்பிற்
பன்மீன் கொள்பவர் முகந்த இப்பி
நாரரி நறவின் மகிழ்கொடைக் கூட்டும்
பேரிசைக் கொற்கைப் பொருநன் வென்வேல்

(பாடம்) * துஞ்சினை இன்றும்.

கடும்பகட்டு யானை நெடுந்தேர்ச் செழியன்
மலைபுரை நெடுநகர்க் *கூடல் ஆடிய
மலிதரு கம்பலை போல
அலராகின்றது பலர்வாய்ப் பட்டே.

—மதுரைப் பேராலவாயார்.

(சொ - ள்.) தலைவ!,

க—எ. கோதை இணர குறுங்கால் காஞ்சி - மாலை போன்ற கொத்துக்களையுடைய குறிய அடியினையுடைய காஞ்சிமரத்தின், போது அவிழ் நறும் தாது அணிந்த கூந்தல் — மலர் விரிந்த நறிய பொடியினை அணிந்த கூந்தலையும், அரிமதர் மழைக் கண் - செவ்வரி பரந்த மதர்த்த குளிர்ந்த கண்ணினையும் உடைய, மாஅயோளொடு - மாமை நிறத்தினை யுடைய பரத்தையுடன், நெருநையும் கமழ் பொழில் துஞ்சி - நேற்றும் மணம் கமழும் பொழிலில் துயின்று, இன்றும் அவளொடு பெருநீர் வையை ஆடி-இன்றும் அவளுடன் வையை நீர்ப்பெருக்கில் விளையாடி, புலரா மார்பினை - ஈரம் புலராத மார்பினையுடையையாய், எம் வயின் வந்து நின்று - எம்பால் வந்து நின்று, கரத்தல் கூடுமோ - எமக்கு மறைத்தல் இயலுமோ?, மற்று - இயலாதன்றே, (அச்செயல்)

எ-கச. பரப்பில் - கடல் நீர்ப் பரப்பில், பல் மீன் கொள்பவர் - பல மீன்களையும் பிடிப்போர், முகந்த இப்பி - அவற்றுடன் சேரக் கொண்ட சிப்பிகளை, நார் அரி நறவின் மகிழ் நொடைக் கூட்டும்-பன்னுடையால் அரிக்கப்பெறும் மகிழ்ச்சி தரும் கள்ளின் விலையாகச் சேர்க்கும், பேர் இசைக் கொற்கைப் பொருநன் - பெரிய புகழினை யுடைய கொற்கைக்குத் தலைவனாகிய, வென் வேல் - வென்றியைத் தரும் வேலையும். கடு பகட்டு யானை நெடுந்தேர்ச் செழியன் - கடிய பெரிய யானையினையும் நெடிய தேரினையுமுடைய பாண்டியன் நெடுஞ் செழியன், மலைபுரை நெடுநகர் கூடல் - மலையை யொத்த நீண்ட கோயிலையுடைய மதுரைக்கண், ஆடிய-வெற்றிக்களிப்பால் ஆடியதனால் எழுந்த, மலிதரு கம்பலைபோல - நிறைந்த ஆரவாரம்போல, பலர்வாய்ப் பட்டு அலராகின்றது - பலர் வாயாலும் கூறப்பட்டு அலராகின்றது.

(முடிபு) தலைவ! மாஅயோளொடு நெருநையும் பொழில்துஞ்சி, இன்றும் வையை அவளொடு ஆடிப் புலரா மார்பினை வந்து நின்று; எம்வயிற் கரத்தல் கூடுமோ? மற்று; அது செழியன் கூடல் ஆடிய கம்பலை போலப் பலர் வாய்ப்பட்டு அலராகின்றது.

(வி - ரை.) புலரா மார்பினை என்பதனை இரட்டுறமொழிதலாகக் கொண்டு, பரத்தை செய்த குறி நீங்காத மார்பினையுடையையாய் எனவும் உரைத்துக் கொள்க. பரத்தையிற் பிரிந்து வந்து தலைவியை ஊடல் நீக்கிக் கூட விழைந்து தோழியை வாயில் வேண்டி நிற்பவன்,

(பாடம்) * கூடல் நீடிய.

யான் பரத்தையை அறியேன் என்றானாக, நீ நெருநை அவளுடன் துஞ்சி அவன் செய்த குறியோடும் இன்று அவளுடன் நீராடிப் புலராத மார்போடும் வந்து நின்று, நின் புறத்தொழுக்கத்தை மறைத்தல் யாங்ஙனம் என்பாள், 'புலரா மார்பினை வந்து நின்று எம்வயிற் கரத்தல் கூடுமோ' என்றாள். மற்று, வினைமாற்று. இப்பி - முத்துக்கு ஆகு பெயருமாம்.

பாண்டியன் கூடலில் ஆடியபொழுது ஆரவாரம் எழுந்தது. *'வாடாப் பூவிற் கொங்கரோட்டி, நாடுபல தந்த பசும்பூட் பாண்டியன், பொன்மலி நெடுநகர்க்கூட லாடிய, இன்னிசையார்ப்பினும் பெரிதே' என முன்னரும் போந்தமை அறியற்பாலது.

---

297. பாலை

[பொருள்வயிற் போகாநின்ற தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.]

பாணாட் கங்குலும் பெரும்புன் மாலையும்
ஆனா நோயொடு அழிபடர்க் கலங்கி
நம்வயின் நினையும் இடும்பை கைம்மிக
என்னை யாகுமோ நெஞ்சே நம்வயின்
இருங்கவின் இல்லாப் பெரும்புல் தாடிக்
†கடுங்கண் மறவர் பகழி மாய்த்தென
‡மருங்குல் நுணுகிய பேஎமுதிர் நடுகல்
பெயர்பயம் படரத் §தோன்று குயிலெழுத்து
இயைபுடன் நோக்கல் செல்லா தசைவுடன்
ஆறுசெல் வம்பலர் விட்டனர் கழியுஞ்
¶சூர்முத லிருந்த ஓமையம் புறவின்
சீர்முள் வேலிப் புலவுநாறு முன்றில்
எழுதியன்ன கொடிபடு வெருகின்
பூளை யன்ன பொங்குமயிர்ப் பிள்ளை
மதிசூழ் மீனின் தாய்வழிப் படூஉஞ்
சிறுகுடி மறவர் சேக்கோள் தண்ணுமைக்கு
எருவைச் சேவல் இருஞ்சிறை பெயர்க்கும்

---

* அகம், உ௫௯. (பாடம்) † கடுங்கணை மழவர்.
‡ மருங்கில் நுணுகிய. § தொன்று குயிலெழுத்து.
¶ சாரமுதலிருந்த.

வெருவரு கானம் நம்மொடு
வருவல் என்றோள் மகிழ்மட நோக்கே.

—மதுரை மருத னிளநாகனார்.

(சொ - ள்.) ௪. நெஞ்சே-,

ம்—௧௧. இரும் கவின் இல்லாப் பெரும் புல் தாடி - மிக்க அழகு இல்லாத பெரிய பொலிவற்ற தாடியினையும், கடுங்கண் மறவர் பகழி மாய்த்தென - வன்கண்மையையும் உடைய மறவரது அம்பு தேய்த்ததாக, மருங்குல் நுணுகிய பேஎம் முதிர் நடுகல் - பக்கம் மெலிந்த அச்சம் மிக்க நடு கல்லில், பெயர் பயம் படரத் தோன்று குயில் எழுத்து - பெயரும் பீடும் விரியத் தோன்றுமாறு பொறித்த எழுத்துக்களை, இயைபு உடன் நோக்கல் செல்லாது - ஒருங்கு சேர்த்து நோக்குதல் மாட்டாராய், அசைவுடன் - தளர்ச்சியுடன், ஆறு செல் வம்பலர் விட்டனர் கழியும் - வழிச் செல்லும் புதியர் அதனை விடுத்து நீங்கும், சூர் முதல் இருந்த ஓமைப் புறவின் - தெய்வம் அடியிலிருக்கப்பெற்ற ஓமை மரங்களையுடைய காட்டிலுள்ள;

௧௨—௬. ஈர்முள் வேலிப் புலவு நாறு முன்றில் - ஈர்கின்ற முள் வேலியினையுடைய புலால்நாறும் முற்றத்தே, எழுதி யன்னகொடி படு வெருகின் - ஓவியத்து எழுதினாற் போன்ற மெலிந்து நீண்ட பூனையின், பூளை அனன பொங்கு மயிர்ப் பிள்ளை-பூளைப் பூவினை யொத்த விளங்குகின்ற மயிரினையுடைய குட்டிகள், மதிசூழ் மீனில் தாய் வழிப் படூஉம்- திங்களைச் சூழ்ந்துள்ள விண்மீன் போலத் தம் தாயின் பின் சூழ்ந்திருக்கும், சிறு குடி மறவர் - சீறூரிலுள்ள மறவர்களது, சே கோள் தண்ணுமைக்கு - ஏறு கோட் பறையொலிக்கு, எருவைச் சேவல் இரு சிறை பெயர்க்கும் - ஆண் பருந்து தனது பெரிய சிறகினை எழுப்பிப் பறந்தேகும், வெருவரு கானம் - அச்சம் வரும் காட்டிற்கு, நம்மொடு வருவல் என்றோள் - நம்முடன் வருவேன் என்று கூறிய நம் தலைவியின், மகிழ்மட நோக்கு - மகிழ்ச்சியைத் தரும் மடப்பம் வாய்ந்த நோக்கம்;

௧—௪. பால் நாள் கங்குலும் பெரும் புல் மாலையும் - பாதி நாளாகிய இரவிலும் மிக்க பொலிவற்ற மாலைக்காலத்தும், ஆனா நோயொடு அழி படர்க் கலங்கி - அமையாத வருத்தத்துடன் மிக்க துயரத்தாற் கலங்க, நம்வயின் நினையும் இடும்பை - நம்மை நினைதலாலாகும் துன்பம், கை மிக - அளவு கடத்தலின், நம்வயின் என்னை ஆகுமோ - நம்பால் என்ன தீங்கு நிகழுமோ?

(முடிபு) நெஞ்சே! சிறுகுடி மறவர் சேக்கோள் தண்ணுமைக்கு எருவைச் சேவல் இருஞ்சிறை பெயர்க்கும் வெருவரு கானம், நம்மொடு வருவல் என்றோள் மடநோக்கு, கங்குலும் மாலையும் கலங்கி, இடும்பை கைம்மிக. நம்வயின் என்னையாகுமோ?

(வி - ரை.) கலங்கி - கலங்க. நம்வயின் நினையும் - நம்மை நினையும்; வேற்றுமை மயக்கம். நோக்குக் கலங்க, இடும்பை கைம்மிக, நம்வயின் என்னை ஆகுமோ? எனத் தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறினான் என்க. என்னை யாகுமோ - யாது துன்பம் நிகழுமோ என்றபடி. மாய்த்தல் - தீட்டுதல், *"மாய்த்த போல மழுகுநுனை தோற்றி" †"கொடுவில் லெயினர் பகழி மாய்க்கும்" என்பவற்றில் மாய்த்தல் இப்பொருட்டாதல் காண்க. மறவர் தம் அம்பினைத் தீட்டுதலால், புறந்தேய்ந்த எழுத்துக்கள் இடையிடை மறைந்திருத்தலின், வம்பலர் அவற்றை இலயர்ந்து நோக்கலாற்றாது விடுத்து அகல்வார் என்க. பெயர் பயம் - பெயரும் பீடும் என்க. குயில் எழுத்து - குயிற்றிய எழுத்து. புரவின் முன்றிலில் வெருகின் பிள்ளை தாய்வழிப் படும் சிறுகுடி என்க, வெண்ணிறமுடைய வெருகிற்கு மதியும் அதனைச் சூழும் பிள்ளைகட்கு மதியைச் சூழும் மீன்களும் உவமமாயின. தண்ணுமை ஒலியைக் கேட்ட எருவைச் சேவல், ஆண்டு உணவு உளதாதல் கருதிச் செல்லும் என்பது சிறை பெயர்க்கும் என்பதனாற் குறிக்கப்பட்டது. அஞ்சத்தக்க காட்டிலும் தலைவி உடன்போக்குத் துணிந்து கூறிய காலை அவளது நோக்கம் மகிழ்ச்சியால் மலர்ந்திருந்தது, தலைவனது நெஞ்சில் நிலைபெற்றிருந்தமையின் அதனை விதந்து மகிழ்மட நோக்கு என்றான்.

---

298. குறிஞ்சி

[இரவுக்குறிக்கண் தலைமகற்குத் தலைமகள் சொல்லியது.]

பயங்கெழு திருவின் பல்கதிர் ஞாயிறு
வயங்குதொழில் தரீஇயர் வலனேர்பு விளங்கி
மல்குகடல் தோன்றி யாங்கு மல்குபட
மணிமருண் மாலை மலர்ந்த வேங்கை
ஒண்தளிர் அவிர்வரும் ஒலிகெழு பெருஞ்சினைத்
தண்துளி அசைவளி தைவரும் நாட
கொன்றுசினந் தணியாது வென்றுமுரண் சாம்பாது
இரும்பிடித் தொழுதியின் இனந்தலை மயங்காது
பெரும்பெயற் கடாஅஞ் செருக்கி வள்மலை
இருங்களிறு இயல்வரும் பெருங்காட்டு இயவின்
ஆரிருள் துமிய ‡வெள்வேல் ஏந்தித்

---

* அகம். ௫. குறுந். ௧௨.

(பாடம்) ‡ ௧௧—௧௪. ஏந்தி, மென்பிணி யவிழ்ந்த தாழ்பூங் கோதை, ஊதுவண் டிரிய வழிப்பிணை முயங்கிய, நீவர் ததனினும்.

தாழ்பூங் கோதை ஊதுவண்டு இரீஇ
மென்பிணி யவிழ்ந்த அரைநாள் இரவின்
நீவந் ததனினும் இனிதா கின்றே
தூவற் கள்ளின் துனைதேர் எந்தை
கடியுடை வியனகர் ஓம்பினள் உறையும்
யாயறி வுறுதல் அஞ்சிப் பானாட்
*கரவல் நெஞ்சமொடு காமஞ் செப்பேன்
யான்நின் கொடுமை கூற நினைபாங்கு
இனையல் வாழி தோழிநத் துறந்தவர்
நீடல ராகி வருவர் வல்லெனக்
கங்குல் உயவுத்துணை யாகிய
துஞ்சா துறைவி இவளுவந் ததுவே.

—மதுரைப் பண்டவாணிகன் இளந்தேவனார்.

(சொ - ள்.) க—ச. பயம்கெழு திருவின் பல்கதிர் ஞாயிறு - உலகிற்குப் பயன்மிக்க திருவினைத் தரும் பல கதிர்களையுடைய ஞாயிறு, வயங்கு தொழில் தரீஇயர் - விளங்கும் தொழில்களை அவ்வுலகிற்குத் தருமாறு, வலன் ஏர்பு - வலமாக எழுந்து, விளங்கி - விளக்கமுற்று, மல்கு கடல் தோன்றியாங்கு - பெரிய கடலில் தோன்றினாற் போல, மணி மருள் மாலை - நீல மணியினை யொத்த மாலைக் காலத்தே, மல்கு பட மலர்ந்த வேங்கை - நிறைதல் உண்டாக மலர்ந்துள வேங்கை மரத்தின், ஒள் தளிர் அவிர் வரும் ஒலிகெழு பெருஞ்சினை - ஒளி பொருந்திய தளிர்கள் விளங்கும் தழைத்தல் பொருந்திய பெரிய கிளையிலுள்ள, தண் துளி அசைவளி தைவரும் காட - தண்ணிய துளிகளை அசைந்துவரும் காற்று மெல்லெனத் தடவி உதிர்க்கும் காடனே!

எ—க0. கொன்று சினம் தணியாது - தன் பகையினைக் கொன்று தன் சினத்தினைப் போக்கிக்கொள்ளாமலும், வென்று முரண் சாம்பாது - அன்றி அதனை வென்றோட்டி மாறுபாட்டினை மெலிவிக்காமலும், இரும்பிடித் தொழுதியின் இனம் தலைமயங்காது - பெரிய பெண் யானைகளின் கூட்டமாகிய இனத்துடன் கலவாமலும், பெரும் பெயல் கடாஅம் செருக்கி - பெரும் மழைபோலும் மதத்தால் செருக்குற்று, வள மலை இருங்களிறு - வளமிக்க மலையிடத்ததாய பெரிய களிறு, இயல்வரும் பெருங் காட்டு இயவின் - இயங்கும் பெரிய காட்டு நெறியில்;

கக—ச. ஆர் இருள் துமிய வெள் வேல் ஏந்தி - அரிய இருள் நீங்க வெள்ளிய வேலைக் கையிற்கொண்டு, மெல் பிணி அவிழ்ந்த - மெல்லிய அரும்பு மலர்ந்த, தாழ் பூ கோதை - தாழ்ந்த பூமாலைக்கண்,

(பாடம்) * காவல்.

ஊதுவண்டு இரீஇ-ஊதும் வண்டினை ஓட்டி, அரை நாள் இரவு இவண் நீ வந்ததனினும்-நடு நாளாய இரவில் இங்கு நீ வந்த வருகையினும்;

௧௪—௨௧. தூவல் கள்ளின் துனை தேர் எந்தை-மழை போன்று கள்ளையும் விரையும் தேரினையுமுடைய எம் தந்தையின், கடி உடை வியன் நகர் ஓம்பினள் உறையும்-காவலையுடைய பெரிய மனையின் கண் எம்மைப் பாதுகாத்து அகலாதிருக்கும், யாய் அறிவுறுதல் அஞ்சி-எம் தாய் அறிந்திடலை அஞ்சி, பால் நாள் - நடு இரவில், கரவல் நெஞ்சமொடு காமம் செப்பேன் - மறைத்தல் பொருந்திய மனத்தினொடு எனது காமத்தினைச் செப்பாது, யான்—, நின் கொடுமை கூற - நீ வந்திலை என்னும் கொடுமையினை மெல்லெனக் கூற, ஆங்கு நினைபு - அங்கு என் கருத்தினை உணர்ந்து, தோழி—, வாழி—, இனையல்-வருந்தாதே, நம் துறந்தவர் - நம்மைத் துறந்த நம் தலைவர், நீடலர் ஆகி வல் வருவர் என - தாழ்க்காதவராகி விரைந்து வருவர் எனக் கூறி, கங்குல் உயவுத் துணையாகிய - இரவில் உசாத்துணையாதற்கு, துஞ்சாது உறைவி - துயிலாது என்னுடன் கூடியிருந்த என் தோழியாய, இவள் உவந்தது - இவள் மகிழ்ந்தது, இனிது ஆகின்று - எனக்கு இனியதாகவுள்ளது.

(முடிபு) நாட! பெருங்காட்டியாவின் வேல் ஏந்தி, அரைநாள் இரவு இவண் நீ வந்ததனினும், தோழி இனையல், நந்துறந்தவர் நீடலராகி வருவர் எனக் கூறி, கங்குல் உயவுத் துணையாகிய துஞ்சாது உறைவி இவள் உவந்தது இனிது ஆகின்று.

(வி - ரை.) பயம் கெழு திருவில் பல் கதிர் - பயன் மிக்க வானவில் போலும் பல கதிர்கள் என்றுமாம். வயங்கு தொழில் - உயிர்கள் விளங்குதற்கு ஏதுவாகிய தொழில்கள் ஞாயிறு தோன்றின் அன்றித் தொழில் நிகழாதாகலின், ஞாயிறு தொழில் தரீஇயர் கடற்றோன்றியாங்கு எனப்பட்டது. மாலைப்பொழுதின் நீலமணி போலும் இருளிற்கும், அதன்கண் மலரொடும் தளிரொடும் சிவந்து விளங்கும் வேங்கைக்கும், நீலநிறமுடைய கடலும் அதன்கண் உதிக்கும் ஞாயிறும் உவமமாயின என்க. வென்று-பகையைத் தொலைத்து வென்று என்க. கொன்றும் வென்றும் என உம்மை விரித்துரைத்தலுமாம். களிறு மதச் செருக்கினாலே சினம் தணியாது முரண் சாம்பாது இனம் தலை மயங்காது திரியும் காடு என்க. இரவிற் பூக்கும் 'இருள் நாறி' முதலிய பூக்கள். மென் பிணி அவிழ்த்த இரவு என்க. இரவு நீ வந்ததனினும் இனிதாகின்று என்றமையால், தலைவன் வருகை தனக்கு இனிதாயிற்று என்றாளாம். நின் காதல் மிகுதியை அறிந்து வைத்தும் அன்னை அறிதற்கஞ்சிப் பாணுள் அதனை மொழியாது, நின் கொடுமை கூறினேனாக, 'நீ வருந்தாதே தலைவர் வருவர்' என்று கூறி, இரவெல்லாம் உசாத்துணையாகித் துயிலாதிருந்த தோழி எய்திய மகிழ்ச்சி நீ வந்த மகிழ்ச்சியினும் இனிதாயிற்று எனத் தலைவி தலைவற்குக் கூறினாள் என்க.

———

299. பாலை

[இடைச்சுரத்துப் போகாநின்ற தலைமகன்
தன் நெஞ்சிற்குச் சொல்லியது.]

*எல்லையும் இரவும் வினைவயின் பிரிந்த
†உள்ளம் முன்னுறு படைய உள்ளிய
பதிமறந்து உறைதல் ‡வல்லுநம் ஆயினும்
அதுமறந் துறைதல் அரிதா கின்றே
கடுவளி யெடுத்த கால்கழி தேக்கிலை
நெடுவிளிப் §பருந்தின் வெறியெழுந் தாங்கு
விசும்புகண் புதையப் பாஅய்ப் பலவுடன்
¶அகலிடஞ் செல்லுநர் அறிவுகெடத் தாஅய்க்
கவலை கரக்குங் $காடகல் அத்தஞ்
செய்பொருண் மருங்கின் செலவுதனக் குரைத்தென
வைகுநிலை மதியம் போலப் பையெனப்
புலம்புகொள் அவலமொடு புதுக்கவின் இழந்த
நலங்கெழு திருமுகம் இறைஞ்சி நிலங்கிளையா
நீரொடு பொருத ஈரிதழ் மழைக்கண்
இகுதரு தெண்பனி ஆகத்து உறைப்பக்
கால்நிலை செல்லாது கழிபடர்க் கலங்கி
நாநடுக் குற்ற நவிலாக் கிளவியொடு
அறல்மருள் கூந்தலின் மறையினள் திறன்மாண்டு
திருந்துக மாதோ நும் செலவென வெய்துயிராப்
பருவரல் எவ்வமொடு அழிந்த
பெருவிதுப் புறுவி பேதுறு நிலையே.

—எயினந்தைமகனார் இளங்கீரனார்.

(சொ - ள்.) க—௩. வினைவயின் பிரிந்த உள்ளம் - வினையின் பொருட்டுப் பிரிந்து போந்த உள்ளமே! முன் உறபு-பண்டு தொட்டு, எல்லையும் இரவும் அடைய உள்ளிய - பகலும் இரவும் முழுதும் நினைக்கப்பட்ட, பதிமறந்து உறைதல் வல்லுநம் ஆயினும்-நம் பதியை மறந்து தங்குதலை மாட்டுவேமாயினும்;

௫—௯. கடுவளி எடுத்த கால் கழி தேக்கு இலை-கடிய காற்றினாற் பறிக்கப்பெற்ற காம்பு ஒழிந்த தேக்கின் இலைகள், நெடுவிளிப் பருந்

(பாடம்) * எல்லியும் இரவும். † முன்னம். ‡ வல்லினமாயினும். § பருந்தினம். ¶ அகலிடைச் செல்லுநர். $ காய்கலத்தம்.

நின் வெறி எழுந்தாங்கு - நீண்ட கூப்பீட்டினைச் செய்யும் பருந்தின் வட்டம் எழுந்ததுபோன்று, விசும்பு கண்புதையப் பாஅய் - விசும்பு இடம் மறையப் பரவி, பல உடன் - பலவும் ஒருங்கே சேர்ந்து, அகல் இடம் செல்லுநர் அறிவுகெடத் தாஅய் - அகன்ற பாலையிடத்தே செல்லுவோரின் அறிவு (சுவடு அறியாது) மயங்கும்படி பரந்து, கவலை கரக்கும் காடு அகல் அத்தம் - கவர்த்த நெறிகளையெல்லாம் மறைத்து விடும் அகன்ற காட்டு நெறியில்;

௯௦. செய்பொருள் மருங்கின் செலவு தனக்கு உரைத்தென - பொருளீட்டும் வினைக்கட் செல்லுதலை அவளுக்கு உரைத்தேனாக;

௧௧—௨௧. வைகுநிலை மதியம் போல - இரவு புலரும் காலத்து மதியினைப்போல, புலம்புகொள் அவலமொடு - தனிமையுறும் துன்பத்தொடு, பையெனப் புதுக்கவின் இழந்த நலம்கெழு திருமுகம் இறைஞ்சி - புதிய அழகினை மெல்ல இழந்த நலம் பொருந்திய அழகிய முகத்தினைக் கவிழ்த்து, நிலம் கிளையா - கால் விரலால் நிலத்தைக் கிளைத்து, நீரொடு பொருத ஈர் இதழ் மழைக்கண் - நீருடன் கூடிய ஈரம் வாய்ந்த இதழினையுடைய குளிர்ந்த கண், இருதரு தெண்பனி ஆகத்து உறைப்ப - சொரிகின்ற தெளிந்த நீர் மார்பின்கண் துளித்து விழ, கால்நிலை செல்லாது - கால் ஓரிடத்தில் நிற்றல் ஆற்றாதாக, கழி படர்க்கலங்கி - மிக்க துன்பத்தாற் கலக்கமுற்று, அறல் மருள் கூந்தலின் மறைந்தனள் - கருமணலை ஒத்த விரிந்த கூந்தலில் மறைந்து, நாநடுக்குற்ற நவிலாக் கிளவியொடு-நாவானது நடுக்கமுற்ற திருந்தாத சொற்களால், நும் செலவு திறன்மாண்டு திருந்துக என - நுமது போக்கானது கூறுபாடு மாட்சியுற்றுச் செப்பமுறுக என்று கூறி, வெய்து உயிரா - வெவ்விதாக உயிர்த்து, பருவரல் எவ்வமொடு அழிந்த-துன்பத்தைத் தரும் வருத்தத்தால் அழிந்த, பெருவிதுப்புறுவி பேது உறு நிலை - மிக்க விரைவினை யுறுவாளாய தலைவி மயக்குற்ற நிலையாய;

௪. அது மறந்து உறைதல் அரிதாகின்று - அதனை மறந்து தங்குதல் அரியதாக வுள்ளது.

(முடிபு) வினைவயிற் பிரிந்த உள்ளமே! பதிமறந்துறைதல் வல்லுநம் ஆயினும், காடகல் அத்தம் செலவு தனக்கு உரைத்தென, திருமுகம் இறைஞ்ச, நிலம் கிளையா, மழைக்கண் தெண்பனி ஆகத்து உறைப்ப, கால் நிலை செல்லாது, கழிபடர்க் கலங்கி, கூந்தலின், மறையினள், நவிலாக் கிளவியொடு, நும் செலவு திறன் மாண்டு திருந்துக எனக் கூறி அழிந்த பெருவிதுப்புறுவி பேதுறுநிலை அது மறந் துறைதல் அரிதாகின்று.

(வி - ரை.) பிரிந்த—பிரிந்து என்னுடன் போந்த என்க. உள்ளம், விளி. பிறந்த நாள் தொட்டுப் பகலும் இரவும் பயின்று வதிந்து நீங்கி வந்த பதியை ஒரு காலத்து மறந்துறைதல் என்பது அரிதென்பான், 'பதி மறந்துறைதல் வல்லுநமாயினும்' என்றான். தேக்கிலை பாஅய்த்

தாஅய்க் கவலை கரக்கும் அத்தம் என்க. கடுங்காற்றினால் கவரப்பெற்ற தேக்கிலைகள் முதற்கண் விசும்பிடமெல்லாம் மறையும்படி படர்ந்து, பின் நிலமிசை வீழ்ந்து பரவி வழிகளை மறைக்கும் அத்தம் என்றான். பொருள் வயிற் செலவை உரைத்ததுகேட்ட தலைவியின் முகம், முதலில் மெல்லென ஒளிகுன்றிக் காட்டிற்று ஆதலின், அதனை விடியற் காலையில் ஒளி குறைந்து தோன்றும் மதியத்தொடு உவமித்தான். பொருத - தடுத்த என்றுமாம். இதழ் - இமை. தான் பொருள்வயிற் பிரிவு உரைப்பக் கேட்டபொழுது, தலைவியின் முகம் ஒளிகுன்றிக் கவிழ்ந்திருக்க, கால்கள் நிலத்தைக் கிளைத்து நிலைபெறுவாக, கண்கள் நீரினைச் சொரிய, உள்ளம் பெருந் துன்பத்தால் கலங்குதலுற, கூந்தல் விரிந்து உடம்பினை மறைக்க, இங்ஙனமாகத் தலைவி எவ்வம் உற்று அழிந்து வெய்துயிர்த்து, உரைத்தற்கு நா எழாது நடுங்க, நும் செலவு திருந்துக எனக் கூறிய வருத்தம் மிக்க நிலை, தலைவன் உள்ளத்தே மாறாது நிலைபெற்றிருந்தமையின், பேதுறு நிலையாகிய அது மறந்துறைதல் அரிதாகின்று எனத் தலைவன் நெஞ்சிற்கு உரைத்தான் என்க. பேது உறு நிலை - வருத்தத்தை மிகுவிக்கும் நிலை என்றுமாம்.

---

300. நெய்தல்

[பகற்குறி வந்து நீங்குந் தலைமகற்குத் தோழி சொல்லியது.]

நாள்வலை முகந்த கோள்வல் பரதவர்
நுணங்குமணல் ஆங்கண் உணங்கப் பெய்ம்மார்
பறிகொள் கொள்ளையர் மறுக உக்க
மீனார் குருகின் கானலம் பெருந்துறை
எல்லை தண்பொழில் சென்றெனச் செலீஇயர்
தேர்பூட்டு அயர ஏஎய் வார்கோல்
செறிதொடி திருத்திப் பாறுமயிர் நீவிச்
செல்இனி மடந்தைநின் தோழியொடு மனையெனச்
சொல்லிய அளவை தான்பெரிது கலுழ்ந்து
தீங்கா யினளிவ ளாயின் தாங்காது
நொதுமலர் போலப் பிரியிற் கதுமெனப்
பிறிதொன் றாகலும் அஞ்சுவல் அதனாற்
சேணின் வருநர் போலப் பேணாய்
*இருங்கலி யாணரெம் சிறுகுடித் தோன்றின்
வல்லெதிர் கொண்டு மெல்லிதின் வினைஇத்

(பாடம்) * பெருங்கலி.

துறையும் மான்றின்று பொழுதே சுறவும்
†ஓதம் மல்கலின் மாறா யினவே
எல்லின்று தோன்றல் செல்லா தீமென
எமர்குறை கூறத் தங்கி ஏமுற
இளையரும் புரவியும் இன்புற நீயும்
இல்லுறை நல்விருந் தயர்தல்
ஒல்லுதும் பெரும நீ நல்குதல் பெறினே.

—உலோச்சனார்.

(சொ - ள்.) ௨௨. பெரும - பெருமானே!

௧—௪. நாள் வலை முகந்த கோள் வல் பரதவர் - நாட் காலையில் வலையினால் மீன்களை முகந்துகொண்ட மீன் பிடித்தலில் வல்ல பரதவர்கள், பறி கொள் கொள்ளையர்-பின் பறியால் கொண்ட மிக்க மீனினை யுடையராகி அவற்றை, நுணங்கு மணல் ஆங்கண்-நுண்ணிய மணலிடத்தே, உணங்கப் பெய்ம்மார்-புலரும்படி பெய்வாராய், மறுக உக்க - வருந்துமாறு சொரிந்த, மீன் ஆர் குருகின் - மீன்களைத் தின்னும் பறவைகளையுடைய, கானல் அம் பெருந்துறை - சோலையையுடைய அழகிய பெரிய கடற்றுறையின்கண்;

௫—௯. தண் பொழில் எல்லை சென்றென-குளிர்ந்த சோலையிற் பகற்பொழுது சென்றதாக, செலீஇயர் - நின் ஊர்க்குச் செல்ல, தேர் பூட்டு அயர ஏஎய்-தேரைப் பூட்டுமாறு ஏவி. வார் கோல் செறி தொடி திருத்தி - இவளது நெடிய திரண்ட நெருங்கிய வளையினைத் திருந்த அணிவித்து, பாறு மயிர் நீவி - சிதறிய கூந்தலைத் தடவி, மடந்தைநின் தோழியொடு இனி மனை செல் என - மடந்தையே நின் மனைக்கு நின் தோழியுடன் இப்போது செல்வாயாக என்று, சொல்லிய அளவை - சொன்ன அளவிலே;

௯—௧௨. இவள் பெரிது கலுழ்ந்து தீங்காயினள் ஆயின் - இவள் மிகவும் அழுது வருந்துகின்றாளாதலின், தாங்காது நொதுமலர் போலப் பிரியின்-அதனை எண்ணாது ஏதிலர் போலப் பிரிந்து செல்லின், கதுமெனப் பிறிதொன்றும் ஆகலும் அஞ்சுவல் அதனால் - விரைந்து இவள் வேறு தீங்கு அடையினும் அடைவளென அஞ்சுகின்றேன், அதனால்;

௧௩—௨௨. நீ நல்குதல் பெறினே-யான் கூறுவதனை நீ கேட்டருளுதல் செய்யின், சேணின் வருநர் போல பேணாய்-நீயும் நின் இளையரும் சேய்மையினின்றும் வருவார் போலக் கருதாயாய், இரு கலி யாணர் எம் சிறுகுடித் தோன்றின்-மிக்க ஆரவாரமுடைய அழகிய எமது சிறூரின்கண் வரின், எமர் - எங்கள் மனையினர். வல் எதிர் கொண்டு - விரைய எதிர்கொண்டழைத்து, மெல்லிதின் வினைஇ - மெல்லென வினவி,

(பாடம்) * ஓதமலி கடலின்.

பொழுது மான்றின்று-பொழுது மயங்கிவிட்டது. துறையும் ஓதம் மல்கலின் சுறவும் மாறு ஆயினவே - நீர்த்துறையும் அலைபெருகி எறவின் சுருக்களும் பகையாயின, எல்வின்று-இருண்டுவிட்டது, தோன்றல் - தலைவ, செல்லா நீம் என-செல்லற்க என, குறை கூற - குறையிரந்து வேண்ட, எம் உறத் தங்கி-அங்கு இன்பமுறத் தங்குதல் செய்து, இளை யரும் புரவியும் நீயும் இன்பு உற-நின் ஏவலரும் குதிரையும் நீயும் இன்பம் எய்த, இல் உறை நல் விருந்து அயர்தல் ஒல்லுதும் - எம் இல்லில் தங்கும் நல்ல விருந்தாக ஏற்றுப் பேணுதலைப் பொருந்துவோம்.

(முடிபு) பெரும! நீ எல்லை சென்றெனச் செலீஇயர் தேர் பூட்டயர ஏஎய், மடந்தை! நின் தோழியொடு இனி மனைசெல் எனச் சொல்லிய அளவை இவள் பெரிது தீங்காயினள் ஆயின், நீ பிரியின், பிறிதொன் ருகலும் அஞ்சுவல்; அதனால் நீ நல்குதல் பெறின், எம் சிறுகுடித் தோன்றின், எமர் குறை கூறத் தங்கி, ஏமுற, நல்விருந்தயர்தல் ஒல்லுதும்.

(வி - ரை.) பறி-மீன் படுக்கும் ஓர் கருவி. எல்லை தண் பொழிற் சென்றன என்பது பகற்குறிக்கண் கூட்டம் முடிந்தமை உணர்த்தி வாரும். செலீஇயர்-ஊர்க்கண் செல்லுதற்கு. ஏஎய்-இளையரை ஏவி என்க. இளையரை ஏவி, தொடி திருத்தி, மயிர் நீவிச்சொல்லிய அளவை என்றியையும். கூட்டத்தால் தொடி பிறழ்ந்தும் மயிர் குலைந்தும் இருந்தவற்றைத் திருத்தியும் நீவியும் செம்மை செய்தான் என்க. தாங்காது-உள்ளத்திற் கொள்ளாது. பிறிதொன்ருகல்-பெரும்பிறி தடைதல்; உயிர்துறத்தல் என்றதனை வெளிப்படக் கூறுதற்கும் ஆற்ருது பிறிதொன்ருகலும் என்ருள்; பிறிதொன்ருகலும் கூடுமோ என அஞ்சுவல் என்ருள் என்க. சேணின் வருநர்போலப் பேணுது என்றது, பழையர் போலக்கருதி என்றபடியாம். அன்றிச் சேய்மைக்கணின்றும் புதியராய் வருவார் போல எம்முடனுள்ள தொடர்பு புலப்படாது சிறுகுடித் தோன்றின் என்றுரைத்தலும் ஆம். பொழுது மான்றின்று துறையும் ஓதம் மல்கலின் சுறவும் மாருயின எனக் கொண்டு கூட்டுக. குறை கூறுதல் - குறையிரத்தல். ஏமுறத் தங்கி நீ நல்குதல் பெறின் என இயைத்துரைத்தலுமாம்.

(மே - ள்.) *'இருவகைக் குறிபிழைப் பாகிய விடத்தும்' என்னுஞ் சூத்திரத்து இச்செய்யுளைக் காட்டி, இதனுள் தான் பெரிது கலுழ்ந்து தீங்காயினள் எனவே அக்குறிப்புத் தலைவன் போகாமற் றடுப்பக் கூறிய தென்று உணர்ந்து தோழி கூறினுள் என்றும், †'நாற்றமும் தோற்றமும்' என்னுஞ் சூத்திரத்து, வேளான் பெருநெறி வேண்டிய விடத்தும் என்ற பகுதியில், இச்செய்யுளும் அது என்றும் கூறினர், நச்.

---

* தொல். கள. ௧௩. † தொல். கள. ௨௩.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

பாட்டு முதற்குறிப்பு அகரவரிசை

பாட்டு	பக்கம்
அகலிரு விசும்புதம்	௧௯௩
அணங்குடை முந்நீர்	௧௭௮
அத்தப் பாதிரித்	௧௪௫
அம்மவாழி...கேளிர்முன்	௨௧
அம்மவாழி...கைம்மிகக்	௪௨
அம்மவாழி...பன்னாள்	௨௬௫
அம்மவாழி...பொருள்	௨௩௧
அம்மவாழி...பொன்னின்	௧௪௯
அரம்போழ் அவ்வளை	௧௦
அரியற் பெண்டிர்	௭௫
அருஞ்சுரம் இறந்த என்	௧௫௪
அரும்புமுதிர் வேங்கை	௨௫௦
அலமரல் மழைக்கண்	௨௩௨
அவரை ஆய்மலர்	௨௫௩
அறந்தலைப் பிரியாது	௧௦௫
அளிதோ தானே	௨௪௪
அறன்கடைப் படாஅ	௭௧
அறியாய் வாழி	௩௦௯
அன்பும் மடனும்	௨௧௫
ஆறுசெல் வம்பலர்	௩௫
இகுளைகேட்டிசின்	௩௯
இடம்படுபு அறியா	௨௭௨
இருங்கழி மலர்ந்த	௩௧௪
இருபெரு வேந்தர்	௧௦௭
இரும்பிழி மாரி	௩
இரும்புலி தொலைத்த	௩௧௮
இருவிசும்பு அதிர	௩௨௨
இலங்குவளை நெகிழச்	௧௫
இலமலர் அன்ன	௪௫
இலையொழித் துலறிய	௩௬௨
உண்ணாமையின்	௯
உணர்குவென் அல்லென்	௨௧௭
உயிர்கலந்து ஒன்றிய	௧௭௪
உயிரினுஞ் சிறந்த	௨௫௭
உருமுரறு கருவிய	௭௭
உலகுகிளர்ந் தன்ன	௨௭௯
உலகுடன் நிழற்றிய	௧௭௨
உவக்குந ளாயினும்	௧௭௦
உள்ளல் வேண்டும்	௧௯
உறுகழி மருங்கின்	௨௨௬
ஊருஞ் சேரியும்	௨௦௫
எல்லையும் இரவும்	௩௭௫
எல்வளை ஞெகிழச்	௧௩௩
எவன்கொல் வாழி	௨௯௭
என்னெனப் படுங்கொல்	௧௭௬
எனலும் இறங்குகுரல்	௨௪
ஒடுங்கீர் ஓதி	௮௧
ஒழியச்சென்மார்	௩௪௪
ஓங்குநிலைத் தாழி	௩௨௪
ஓங்குமலைச் சிலம்பில்	௫௬
கடல்கண் டன்ன	௧௧௧
கடவுட் கற்பொடு	௧௩௦
கதிர்கை யாக	௮௯
கயந்தலை மடப்பிடி	௯௦
கரைபாய் வெண்திரை	௧௬௨
காணினி வாழி	௨௩௦
கார்பயம் பொழிந்த	௨௩௩
கானப் பாதிரிக்	௨௧௩
கானலுங் கழறாது	௯௬
கானுயர் மருங்கில்	௧௪௯
கிளைபா ராட்டுங்	௨௦௧
குடுமிக்கொக்கின்	௩௫௫
குணகடல் முகந்த	௩௩௦
குவளை உண்கண்	௧௨௮
குறியிறைக் குரம்பைக்	௧௮௫
குன்றி அன்ன	௨௬
கூறாய் செய்வது	௩௬௦
கூறுவங் கொல்லோ	௧௬௦
கேளாய் எல்ல	௧௮௭
கொளக்குறை படாஅக்	௮௫
கோடுற நிவந்த	௩௦௪
கோதையிணர	௩௬௮
சிலையேறட்ட	௩௫௩
சிறியிலை நெல்லிக்	௩௪௩
சிறுபுன் சிதலை	௬௦
சீர்கெழு வியனகர்ச்	௨௦௪
செய்வது தெரிந்திசின்	௩௩௬
செய்வினைப் பிரிதல்	௪௮
செல்க பாக	௨௧௩
செவ்வீ ஞாழல்	௨௪௭
செறுவோர் செம்மல்	௨௨௮
சென்மதி சிறக்கநின்	௩௫௧
தண்கதிர் மண்டிலம்	௩௨௮
தம்நயந்து உறைவோர்த்	௬௩
தயங்குதிரைப் பெருங்கடல்	௨௯௭
தாவில் நன்பொன்	௧௮௯
திதலை மாமை	௩௦
திரையுழந் தசைஇய	௧௪௩

பாட்டு முதற்குறிப்பு அகரவரிசை

பாட்டு	பக்கம்	பாட்டு	பக்கம்
துஞ்சுவது போல	௩௯	பூங்கண் வேங்கைப்	௧௨௯
துன்னருங் கானமுர்	௧௨௩	பெய்துபுலம் திறந்த	௧௧௯
துனியின் றியைந்த	௨௪௯	பெருங்கடல் முகந்த	௧௪௦
தூதும் சென்றன	௨௬௯	பெருங்கடல் வேட்டத்துச்	௪௯
தெண்கழி விளைந்த	௭௯	பெருமலைச் சிலம்பின்	௩௩௮
தொடிதோள் இவர்க	௩௧௧	பேருறை தலைஇய	௧௫௧
தொடியணி முன்கை	௩௪௯	பொறிவரிப் புறவின்	௩௧௫
தொல்கலம் சிதையச்	௧௧௫	பொன்னடர்ந் தன்ன	௩௩௪
தோள்புலம் பகலத்	௧௩௭	மங்குல் மாமழை	௩௬௪
தோளுந் தொல்கவின்	௧௮௩	மண்டிலம் மழுக	௨௯௧
நகைநனி புடைத்தால்	௧௨௧	மண்ணுறு முத்தம்	௨௬௧
நகைநீ கேளாய்	௨௬௩	மணிமருள் மலர	௨௩௮
நட்டோர் இன்மையுங்	௩௩௨	மதியரும் பன்ன	௧௪௮
நரைவிரா வுற்ற	௨௭௭	மரந்தலை கரிந்து	௯௮
நல்மரங் குழீஇய	௯௨	மழையில் வானம்	௨௯௩
நன்கலங் களிற்றொடு	௮	மன்றுபா டவிந்து	௧௭
நன்னன் உதியன்	௨௮௬	மாமலர் வண்ணம்	௧௫௮
நன்னெடுங் கதுப்பொடு	௩௪௧	மான்றமை யறியா	௨௪௨
நனைவிளை நறவின்	௨௦௮	முதைபடு பசுங்காட்டு	௨௧௫
நாண்கொள் நுண்	௧௯௭	முரசுடைச் செல்வர்	௭௩
நாம்நகை யுடையம்	௧	மைப்பறப் புழுக்கின்	௩௧
நாள்வலை முகந்த	௩௭௭	யாமம் நும்மொடு	௯௬
நிலநீ ரற்று	௩௬௬	யாம இரவின்	௧௮௦
நிலாவின் இலங்கு	௧௬௫	வயங்குமணி பொருத	௯௪
நினவாய் செத்து	௧௨	வயங்குவெள் ளருவிய	௧௬௮
நீளிரும் பொய்கை	௩௨௯	வயிரத் தன்ன	௧௧௭
நுதல்பசந் தன்றே	௨௧௯	வருதும் என்ற	௫௦
நுதலும் நுண்பசப்பு	௧௦௨	வலிமிகு முன்பின்	௫௪
நெஞ்சுநடுங் கரும்படர்	௬௫	வாரணம் உரறும்	௧௦௩
நெஞ்சு நெகிழ்தகுந	௩௦௭	வானம் பெயல்வளங்	௩௫௭
நெடுங்கொடி நுடங்கும்	௧௫௬	வானம் வாய்ப்பக்	௨௮
நோகோ யானே	௬௭	வானம் வேண்டா	௧௩௪
பகல்செய் பல்கதிர்ப்	௨௨௩	வானுற நிவந்த	௨௧௦
பசும்பழப் பலவின்	௧௪௨	விசும்பு விசைத்தெறிந்த	௩௨௦
பசைபடு பச்சை	௨௫௫	விசும்புற நிவர்ந்த	௨௨
படுமழை பொழிந்த	௬௯	விண்டோய் சிமைய	௧௨௦
பயங்கெழு திருவின்	௩௭௨	விண்ணதிர்பு தலைஇய	௮௭
பனைத்திரள் அன்ன	௫௮	விலங்கிருஞ் சிமையக்	௧௯௫
பாணுட்கந்தலும்	௩௭௦	வினைநவில் யானை	௧௬௧
பிணங்கரில் வள்ளை	௨௮௨	வினைவயின் பிரிதல்	௮௩
பிணர்மோட்டு நந்தின்	௨௫௯	வீங்குவிளிம்பு உரீஇய	௧௦௯
பிரசப் பல்கிளை	௨௨௨	வெள்ளிவீழ்த்தொடி	௩௪௯
பிரிதல் வல்லியர்	௨௧௨	வேர்முழுது உலறி	௫௨
பின்னுவிட நெறித்த	௬௨	வேலும் விளங்கின	௨௮௮
புகையிற் பொங்கி	௩௦௫	வேனிற் பாதிரிக்	௨௮௪
புன்காற் பாதிரி	௨௪௦	வைகல் தோறும்	௨௭௪

ஆசிரியர் பெயர் அகரவரிசை

பெயர்	பாட்டெண்
அண்டர் மகன் குறு வழுதியார்	228
அம்மூவனார்	140, 280
ஆமூர்க்கவுதமன் சாதேவனார்	150
ஆலம்பேரி சாத்தனார்	143, 165
ஆலூர்கிழார் மகனார் கண்ணனார்	202
ஆலூர்மூலங்கிழார்	156
ஆலூர்மூலங்கிழார் மகனார் பெருந்தலைச் சாத்தனார்	224
இடைக்காடனார்	139, 194, 274, 284
இடையன் நெடுங்கீரனார்	166
இருங்கோன் ஒல்லையாயன் செங்கண்ணனார்	279
இறங்குகுடிக் குன்றநாடன்	215
உம்பற்காட்டு இளங் கண்ணனார்	264
உலோச்சனார்	190, 200, 210, 300
உவர்க்கண்ணூர்ப் புல்லங்கீரனார்	146
உறையூர் மருத்துவன் தாமோதரனார்	133, 257
உறையூர் முதுகூத்தனார்	137
எயினந்தை மகனார் இளங்கீரனார்	225, 239, 289, 299
எருக்காட்டூர்த் தாயங் கண்ணனார்	149
எழுஉப்பன்றி நாகன் குமரனார்	138, 240
ஐயூர் முடவனார்	216
ஒரோடோகத்துக் கந்தரத்தனார்	191
ஓரம் போகியார்	286
ஔவையார்	147, 273
கடியலூர் உருத்திரங் கண்ணனார்	167
கபிலர்	128, 158, 182, 203, 218, 238, 248, 278, 292
கயமனார்	145, 189, 195, 219, 221, 259, 275
கருவூர்க் கண்ணம்பாளனார்	180, 263
கருவூர்க் கலிங்கத்தனார்	183
கருவூர் நன்மார்பனார்	277
கல்லாடனார்	171, 199, 209
கழார்க்கீரனெயிற்றியார்	163, 217, 523, 294
காவன்முல்லைப் பூதரத்தனார்	151
காவன்முல்லைப்பூதனார்	241, 293
காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார்	123, 285
காவிரிப்பூம்பட்டினத்துச் செங்கண்ணனார்	271
குடவாயிற் கீரத்தனார்	129, 287
குழழி ஞாழலார் நப்பசலையார்	160
குறுவழுதியார்	150
கொடிமங்கலத்து வாதுளி நற்சேந்தனார்	179, 232
கொடியூர்கிழார் மகனார் நெய்தற்றத்தனார்	243
கோட்டம்பலத்துத் துஞ்சிய சேரமான்	168
சாகலாசனார்	270
சீத்தலைச்சாத்தனார்	134
செயலூர் இளம்பொன் சாத்தன் கொற்றனார்	177
செல்லூர்கிழார் மகனார் பெரும்பூதங் கொற்றனார்	250
சேரமான் இளங்குட்டுவன்	153
தாயங்கண்ணனார்	132, 213, 237
தொண்டி ஆமூர்ச் சாத்தனார்	169
தொல் கபிலர்	282
நக்கண்ணையார்	252
நக்கீரர்	126, 141, 205, 227, 249, 253, 290
பரணர்	122, 125, 135, 142, 148, 152, 162, 178, 181, 186, 196, 198, 208. 212, 222, 226, 236, 246, 258, 262, 266, 276
பாலை பாடிய பெருங்கடுங்கோ	155, 185, 223, 261, 267, 291
பேயனார்	234
பேரி சாத்தனார்	242

பெயர்	பாட்டெண்
பொதும்பில் கிழான் வெண்கண்ணனார்	192
பொதும்பிற் புல்லாளங் கண்ணியார்	154
மதுரை அளக்கர் ஞாழலார் மகனார் மள்ளனார்	144, 174
மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்	124, 230, 254, 272
மதுரை ஈழத்துப் பூதன்தேவனார்	231
மதுரை எழுத்தாளன் சேந்தம் பூதனார்	207
மதுரைக் கள்ளிற்கடையத்தன் வெண்ணாகனார்	170
மதுரைக் காமக்கண்ணி நப்பாலத்தனார்	204
மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்	229
மதுரைத் தமிழ்க்கூத்தன் நாகன்றேவனார்	164
மதுரைத் தமிழ்க்கூத்தனார் கடுவன் மள்ளனார்	256
மதுரைப் பண்டவாணிகன் இளந்தேவனார்	298
மதுரைப் பாலாசிரியர் நப்பாலனார்	172
மதுரைப் புல்லங்கண்ணனார்	161
மதுரைப் பேராலவாயார்	296
மதுரை மருதங்கிழார் மகனார் பெருங்கண்ணனார்	247
மதுரை மருதனிளநாகனார்	121, 131, 184, 193, 206, 220, 245, 255, 269, 283, 297
மதுரை...மள்ளனார்	244
மருதம்பாடிய இளங்கடுங்கோ	176
மாமூலனார்	127, 187, 197. 201. 211, 233, 251, 265, 281, 295
முள்ளியூர்ப் பூதியார்	173
மோசிக்கரையனார்	260
வடமவண்ணக்கன் பேரி சாத்தனார்	214, 268
விற்றூற்று மூதெயினனார்	136, 288
வீரை வெளியன் தித்தனார்	188
வெண்கண்ணனார்	130
வேம்பற்றூர்க்குமரனார்	157

———

பாகனேரி த. வை. இளைஞர் தமிழ்ச்சங்க வெளியீடு : கரு

எட்டுத் தொகையுள்

ஒன்றாகிய

அகநானூறு

நித்திலக் கோவை

※

திரு நாவலர், ந மு வேங்கடசாமி நாட்டார்,
கரந்தைக் கவியரசு, ரா வேங்கடாசலம் பிள்ளை
அவர்களால் எழுதப்பெற்ற
பதவுரை விளக்கவுரைகளுடன்

※

பாகனேரி
வெ பெரி பழ மு காசிவிசுவநாதன் செட்டியார்
அவர்களால் வெளியிடப்பெற்றது

※

கிடைக்குமிடம் :

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்.,
சென்னை–1. மதுரை-1. திருநெல்வேலி–6.
1969

© பாகனேரி தனவைசிய இளைஞர் தமிழ்ச்சங்கம்

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,

Ed 1 Oct 1944
Reprints: July 1951; March 1957; July 1963
Feb 1969

O31,1B7
K9

AKANANOORU - NITTILAKKOVAI

Appar Achakam Madras - 1. (I-2)

பதிப்புரை

அகத்தே நிகழும் இன்பம் 'அகப்பொருள்' எனப்படும். அகப் பொருள் நூல்கள் தமிழிற் பல உள்ளன. ஆயினும், 'அகம்' என்றே பெயரமைந்த பழைய இலக்கிய நூல் இப்போது ஒன்றே உள்ளது. அது தான் 'அகநானூறு' என்பது.

கடைச்சங்க காலத்தில் எட்டுத்தொகை நூல்களுள் அகநானூறும் ஒன்று. நானூறு அகவற் பாட்டுக்களால் ஆனது; புலவர் பலரால் இயற்றப்பட்டு, மதுரை உப்பூரிகுடிகிழான் மகனார் உருத்திரசன்மரால் தொகுக்கப்பட்டது.

அகநானூறு மூன்று பகுதிகளாக உள்ளது. முதல் நூற்றிருபது பாட்டுக்கள் 'களிற்றியானை நிரை' எனப்படும். அடுத்த நூற்றெண்பது பாட்டுக்கள் 'மணிமிடைபவளம்' எனப்படும். கடைசி நூறு பாட்டுக்கள் 'நித்திலக் கோவை' எனப்படும்.

இந் நூலுக்குப் பழைய உரை உண்டு. அது, முதல் 90 பாட்டுகட்கு மட்டும் குறிப்புரையாக இருக்கின்றது. அடுத்து 70 பாட்டுகட்கு அந் நானூற்றின் முதற்பதிப்பாசிரியரான திரு. வே. இராஜகோபாலாச்சாரியார் உரை எழுதியிருக்கின்றார். ஆதலால் நூல் முழுமைக்கும் ஒரே வகையாகத் தெள்ளிய உரையொன்று எழுதி வெளிவரவேண்டிய இன்றியமையாமை இந்நூலுக்கு நெடுங்காலமாக இருந்து வந்தது.

அக் குறையினை நீக்கும்பொருட்டு, இப்போது, தஞ்சை நாவலர், திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்களும் கரந்தைக் கவியரசு, ரா. வேங்கடாசலம் பிள்ளையவர்களும் சேர்ந்து இந்நூல் முழுமைக்கும் முயன்று உரை யெழுதி யுதவினர்.

செய்யுட்களைப் பதம் பிரித்து, முதலில் தெளிவாகத் தலைப்புக் கொடுத்துப் பின்பு பொருள் செல்லும் நெறிக்கு ஏற்ப முறைப்படுத்திப் பதவுரை கண்டு, அதன்மேல் முடிபும் விளக்கவுரையும் எழுதி, உள்ளுறை புலப்படுத்தி, மேற்கோள் இடங்களை விளக்கி, உரிய அடிக் குறிப்புக் களுடன் இவ்வுரை தெளிந்து செல்கின்றது.

முதற்கண் 'களிற்றியானை நிரை' என்னும் முதற்பகுதி ஒரு தனிப் புத்தகமாக வெளியிடப்பெற்றது. பின்பு, இரண்டாம் பகுதியாகிய 'மணிமிடை பவளமும்' ஒரு தனிப் புத்தகமாக வெளிவந்தது. இப் போது இறுதிப் பகுதியாகிய 'நித்திலக் கோவை'யும் தனியாக வெளி வருகின்றது. ஒவ்வொன்றன் இறுதியிலும் பாட்டு முதற் குறிப்பும், ஆசிரியர் பெயர் வரிசையும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அண்மையில், அகநானூறு முழுப் புத்தகமாக வெளிவரும்போது நூல் வரலாறு, உரை வரலாறு, அரும்பொருட் குறிப்புக்களும் சேர்க்கப்பெறும்.

மு. காசிவிசுவநாதன்.

முன்னுரை

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

அகநானூறு

மூலமும் உரையும்

—:o:—

மூன்றாவது

நித்திலக் கோவை

301. பாலை

[பிரிவிடை வேறுபட்ட தலைமகள் வற்புறுத்துந் தோழிக்குச் சொல்லியது.]

வறனுறு செய்யின் வாடுபு வருந்திப்
படர்மிகப் பிரிந்தோர் உள்ளுபு நினைதல்
சிறுநனி யான்றிகம் என்றி தோழி
நல்குநர் ஒழித்த கூலிச் சில்பதம்
ஒடிவை யின்றி ஓம்பா துண்டு
நீர்வாழ் முதலை ஆவித் தன்ன
ஆரை வேய்ந்த அறைவாய்ச் சகடத்து
ஊரிஃ தென்ன வூறில் வாழ்க்கைச்
சுரமுதல் வருத்தம் மரமுதல் வீட்டிப்
பாடின் றெண்கிணை கறங்கக் காண்வரக்
குவியிண ரெருக்கின் ததர்பூங் கண்ணி
ஆடூஉச் சென்னி தகைப்ப மகடூஉ
முளரித் தீயின் முழங்கழல் விளக்கத்துக்
களரி யாவிரைக் கிளர்பூங் கோதை
வண்ண மார்பின் வனமுலைத் துயல்வரச்
செறிநடைப் பிடியொடு களிறுபுணர்ந் தென்னக்
குறுநெடுந் தூம்பொடு முழவுப்புணர்ந் திசைப்பக்
கார்வான் முழக்கின் நீர்மிசைத் தெவுட்டும்
தேரை யொலியின் மானச் சீரமைத்துச்
சில்லரி கறங்குஞ் சிறுபல் லியத்தோடு

பல்லூர் பெயர்வன ராடி ஒல்லெனத்
தலைப்புணர்த் தசைத்த பஃறுரைக் கலப்பையர்
இரும்பே ரொக்கற் கோடிய ரிறந்த
புன்றலை மன்றங் காணின் வழிநாள்
அழுங்கன் மூதூர்க் கின்னா தாகும்
அதுவே மருவினம் மாலை யதனாற்
காதலர் செய்த காதல்
நீடின்று மறத்தல் கூடுமோ மற்றே.

—அதியன் விண்ணத்தனார்.

(சொற் பொருள்.) ௧—௩. தோழி—, வறன் உறு செய்யின்- வற்கட காலத்தே நீர்வறண்ட விளைபுலம் போல, வாடுபு வருந்தி- வாடி வருந்தி, படர்மிக - துன்பம் மிக, பிரிந்தோர் உள்ளுபு நினைதல்- நம்மைப் பிரிந்த நல்லவரைப் பலகாலும் நினைந்து வருந்துதலை, சிறுநனி ஆன்றிகம் என்றி-சிறிது மிக அமைந்திருப்பாம் என்று கூறுகின்றனை ;

௪—௫. நல்குநர் ஒழிந்த கூலிச் சில்பதம்- கொடையாளர் எஞ்சாது கொடுத்த பரிசில் ஆகிய சிறிய உணவினை, ஒடிவை இன்றி ஓம்பாது உண்டு- இடையறவின்றிப் பொருளைப் பாதுகாவாது உண்டு,

௬—௮. நீர்வாழ் முதலை ஆவித் தன்ன- நீரில் வாழும் முதலை அங்காந்தாற்போன்ற, ஆரை வேய்ந்த - பாயால் வேயப்பெற்ற, அறைவாய்ச் சகடத்து - ஒலியினைச் செய்யும் வாயினையுடைய வண்டியில் செல்லும், இஃது ஊர் என்னா - இஃது எமது ஊர் என்று சொல்லுதல் இல்லாத, ஊறு இல் வாழ்க்கை- இடையூறு இல்லாத வாழ்க்கையராய்,

௯—௧௫. சுரம் முதல் வருத்தம் மரம் முதல் வீட்டி- சுரத்திடத்தே வந்த வெம்மையாலாய வருத்தத்தை மரத்தடியில் தங்கிப் போக்கி, பாடு இன் தெண்கிணை கறங்க- இனிய ஒலியினையுடைய தெள்ளிய கிணைப்பறை ஒலிக்க, காண்வர- அழகு பொருந்த, குவி இணர் எருக்கின் ததர் பூங் கண்ணி- குவிந்த கொத்துக்களையுடைய எருக்கினது நெருங்கிய பூக்களாலாய கண்ணி, ஆடூஉச் சென்னி தகைப்ப- ஆடவர் சென்னியை அழகுறுத்த, முளரித் தீயின்-காட்டுத் தீயிலெழுந்த, முழங்கு அழல் விளக்கத்து- ஒலிக்கும் தீயின் ஒளியில், களரி ஆவிரைக் கிளர் பூங் கோதை- காட்டிலுள்ள ஆவிரைச்செடியின் விளங்கும் பூக்களாலாய மாலை, மகடூஉ வண்ணம் மார்பின் வன முலைத் துயல்வர- மகளிரது அழகிய மார்பின் கண்ணவாய பெரிய முலைகளிற் கிடந்தசைய,

௧௬—௨௧. செறி நடைப் பிடியொடு களிறு புணர்ந் தென்ன- செறிந்த நடையினையுடைய பெண் யானையின் உயிர்ப்பு ஒலியுடன் களிற்றின் உயிர்ப்பொலி கூடினாற்போலும், குறு நெடு தூம்பொடு- சிறு வங்கியம் பெருவங்கியங்களின் ஒலியோடு, முழவு புணர்ந்து

இசைப்ப - தண்ணுமை ஓசை பொருந்தி ஒலிக்க, கார்வான் முழக்கின்-கரிய மேகம் இடிக்குங்கால், நீர்மிசைத் தெவுட்டும் - நீரின்கண் ஒலிக்கும், தேரை ஒலியின் மான சீர் அமைத்து - தேரை ஒலியினை யொக்கத் தாளம் அமைத்து, சில்லரி கறங்கும் சிறு பல்லியத்தொடு - சிலவாகிய அரிகள் ஒலிக்கும் சிறிய பல வாச்சியங்களோடு, பல்லூர் பெயர்வனர், பல ஊர்க்கும் சென்று, ஆடி - கூத்தியற்றி, ஒல் என - விரைவாக, தலை புணர்த்து அசைத்த பல்தொகை கலப்பையர் - தலையினைச் சேர்த்துக் கட்டிய பல தொகையாகிய வாச்சியங்களையுடைய பையினராகிய, இரும் பேர் ஒக்கல் கோடியர்-மிகப் பெரிய சுற்றத்தினையுடைய கூத்தர்,

உரு—ரு. இறந்த புன் தலை மன்றம் வறிநாள் காணின் - போய் விட்ட பொலிவற்ற இடத்தினையுடைய மன்றினைப் பின்னாளிற் காணின் அக் காட்சி, அழுங்கல் மூதூர்க்கு - ஆரவாரங் கொண்டிருந்த முதிய ஊரார்க்கு, இன்னாது ஆகும் - துன்பம் உண்டாகும்;

உசு—அ. அதுவே-அத்தகைய துன்பத்தையே, மாலை மருவினம்-இம் மாலைக்கண் அடைந்துள்ளேம், அதனால் -, காதலர் செய்த காதல்-நம் காதலர் செய்த காதலினை, நீடு இன்று மறத்தல் கூடுமோ - தாமாது மறத்தல் ஒல்லுமோ, மற்று - ஒல்லாதன்றே.

(முடிபு) தோழி! பிரிந்தோர் உள்ளுபு நினைதல் சிறுநனி ஆன்றிகம் என்றி; கோடியர் இறந்த புன்றலை மன்றங் காணின் வறிநாள் மூதூர்க்கு இன்னாதாகும்; அதுவே மருவினம் மாலை; அதனால் காதலர் செய்த காதல் நீடின்று மறத்தல் கூடுமோ.

சில்பதம் உண்டு, வருத்தம் வீட்டி, கண்ணி தகைப்ப, கோதை துயல்வரத்-தூம்பொடு முழவு புணர்ந்து இசைப்ப, சிறு பல்லியத்தொடு, பல்லூர் பெயர்வனர் ஆடி, தலைப்புணர்த்து அசைத்த கலப்பையராய கோடியர் என்க.

(விளக்க உரை.) செய்யின் - செய்யிலுள்ள பயிர்போல என்க. ஓம்புதல் - பிறர்க்கு வழங்காமலும் பின் தமக்கு வேண்டுமென்று கருதியும் பொருளைப் பாதுகாத்தல். முதலை ஆவித்தன்ன - முதலை கொட்டாவி விடுதற்கு வாய் அங்காந்தாலொத்த வடிவினையுடைய என்க. ஆவித்தாற் போலும் ஒலிக்கின்ற சகடம் என்றுமாம்.[1] ஆரை - தொத்துளிப்பாய் என்பர் நச்சினார்க்கினியர். சகடத்து - சகடத்துச் செல்லும் என விரித்துச் செல்லும் வாழ்க்கையராய் என இயைக்க. வங்கியத்தின் ஓசை, யானையின் உயிர்ப்பு ஓசைபோலும் என்பது, [2]'ஒப்களி றெடுத்த நோயுடை நெடுங்கை, தொகுசொற் கோடியர் தூம்பின் உயிர்க்கும்' எனவும், [3]'எண்ணிடை விடுத்த களிற்றுயிர்த் தூம்பின்' எனவும், [4]'கண்விடு தூம்பிற் களிற்றுயிர்' எனவும் வருவனவற்றால் அறிக. குறு நெடுந் தூம்பு - குறுந்தூம்பும் நெடுந்தூம்பும் என்க. சில்லரி - சிலவாகிய அரித்தெழும் ஓசை என்க.

---

1. பத்துப். பெரும்பாண். ௫0. உரை. 2. அகம். ௧௧௧.
3. மலைபடு. ௬. 4. புறம். ௧௫௨.

302. குறிஞ்சி

[பகலே சிறைப்புறமாகத் தோழி தலைமகட்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது.]

சிலம்பிற் போகிய செம்முக வாழை
அலங்கல் அந்தோ டசைவளி யுறுதோறும்
பள்ளி யானைப் பரூஉப்புறந் தைவரும்
நல்வரை நாடனொ டருவி யாடியும்
பல்லிதழ் நீலம் படுசுனைக் குற்றும்
நறுவீ வேங்கை இனவண் டார்க்கும்
வெறிகமழ் சோலை நயந்துவிளை யாடலும்
அரிய போலுங் காதலந் தோழி
இருங்கல் அடுக்கத் தென்னையர் உழுத
கரும்பெனக் கவினிய பெருங்குரல் ஏனல்
கிளிபட விளைந்தமை யறிந்துஞ் செல்கென
நம்மவண் விடுநள் போலாள் கைம்மிகச்
சில்சுணங் கணிந்த செறிந்துவீங் கிளமுலை
மெல்லியல் ஒலிவருங் கதுப்பொடு
பல்கால் நோக்கும் அறனில் யாயே.

—மதுரை அறுவைவாணிகன் இளவேட்டனார்.

(சொ - ள்.) ௧—௮. காதல் அம் தோழி-அன்புடைய தோழியே!, சிலம்பில் போகிய செம்முக வாழை - மலையில் நீண்டு வளர்ந்த செவ்வாழையின், அலங்கல் அம் தோடு - அசையும் அழகிய இலைகள், அசைவளி உறுதொறும் - அசையும் காற்று மோதுந்தோறும், பள்ளி யானைப் பரூஉப் புறம் தைவரும் - துயில்கொள்ளும் யானையின் பரிய உடம்பினைத் தடவும், நல்வரை நாடனொடு - நல்ல மலைநாட்டினையுடைய நம் தலைவனுடன், அருவி ஆடியும் - அருவி நீராடியும், படுசுனை பல் இதழ் நீலம் குற்றும் - பொருந்திய சுனையிலுள்ள பல இதழ்களையுடைய நீலப் பூக்களைப் பறித்தும், நறுவீ வேங்கை - நறிய பூக்களையுடைய வேங்கையின்கண், இனம் வண்டு ஆர்க்கும் - தொகுதியாய வண்டுகள் ஒலிக்கும், வெறி கமழ் சோலை - மணம் வீசும் சோலைக்கண், நயந்து விளையாடலும் - விரும்பி விளையாடலும், அரிய போலும் - அரியன வாகும் போலும்;

௯—௧௫. இரு கல் அடுக்கத்து - பெரிய கற்களையுடைய பக்க மலையில், என் ஐயர் உழுத-என் தமையன்மார் உழுதவிடத்தே, கரும்பு எனக் கவினிய பெரு குரல் ஏனல் - கரும்புபோலத் திரண்டு அழகுற்ற பெரிய கதிர்களையுடைய தினை, கிளிபட விளைந்தமை அறிந்தும் - கிளிகள் வந்து வீழ விளைந்ததை அறிந்து வைத்தும்; அறன் இல்

யாய் - அறிவுணர்ச்சியில்லாத தாய், செல்க என நம் அவண் விடுநள் போலாள் - செல்வீராக என நம்மை அங்குப் போக்குவாள் போன்றிலாளாய், கைம் மிக - அழகு மிக, சில் சுணங்கு அணிந்த - சிலவாய தேமலை அணிந்த, செறிந்து வீங்கு இள முலை - நெருங்கிப் பெருத்த இள முலைகளை, மெல் இயல் ஒலிவரும் கதுப்பொடு - மென்மைத் தன்மையுடன் தழைத்தல் கூடிய கூந்தலொடு, பல்கால் நோக்கும் - பன்முறையும் நோக்கா நிற்கும்.

(முடிபு) காதல் அம் தோழி! அறன் இல் யாய், இளமுலை கதுப்பொடு பல்கால் நோக்கும்; ஆகலின் ஏனல் கிளிபட விளைந்தமை அறிந்தும் செல்கென நம் அவண் விடுநள் போலாள்; (இனி, நாம்) நாடனொடு அருவி யாடியும் சுனைக்குற்றும் சோலை நயந்து விளையாடலும் அரிய போலும்.

(வி -ரை.) ஆடியும் குற்றும் சோலை விளையாடல் என்க. ஈண்டு அருவியாடுதல் பொழில் விளையாட்டில் அடக்கப்பட்டது. விளையாடலாவது [1]'யாறுங் குளனுங் காவும் ஆடிப் பதியிகந்து' வருதல்; [2]'செல்வம் புலனே புணர்வு விளையாட்டு' என்னுஞ் சூத்திர உரை காண்க. உழுத ஏனல் பெருங்குரல் ஏனல் எனத் தனித்தனி இயையும். உழுத ஏனல் என்றது, [3]'பகடு நடந்த கூழ்' என்புழிப்போலப் பெயரெச்சம் காரணப் பொருட்டாய் நின்றது. யாய் பல்கால் நோக்கும், நம் அவண் விடுநள் போலாள் என்பன இற்செறிப்பு நிகழ்ந்தமை தலைவனுக்குத் தோழி அறிவித்தபடியாம்.

303. பாலை

[தலைமகன் பிரிவின்கண் வேட்கை மீதூர்ந்த தலைமகள் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.]

இடைபிற ரறித லஞ்சி மறைகரந்து
பேஎய் கண்ட கனவிற் பன்மாண்
நுண்ணிதின் இயைந்த காமம் வென்வேல்
மறமிகு தானைப் பசும்பூட் பொறையன்
கார்புகன் றெடுத்த சூர்புகல் நனந்தலை
மாயிருங் கொல்லி யுச்சித் தாஅய்த்
ததைந்துசெல் லருவியின் அலரெழப் பிரிந்தோர்
புலங்கந் தாக இரவலர் செலினே
வரைபுரை களிற்றொடு நன்கலன் ஈயும்
உரைசால் வண்புகழ்ப் பாரி பறம்பின்
நிரைபறைக் குரீஇயினங் காலைப் போகி
முடங்குபுறச் செந்நெற் றரீஇயர் ஓராங்கு

1. தொல். கற். ௫௦. 2. தொல். மெய். ௧௧. 3. நாலடி. ௨

இரைதேர் கோட்பின வாகிப் பொழுதுபடப்
படர்கொண் மாலைப் படர்தந் தாங்கு
வருவரென் றுணர்ந்த மடங்கெழு நெஞ்சம்
ஐயந் தெளியரோ நீயே பலவுடன்
வறன்மரம் பொருந்திய சிள்வீ டுமணர்
கணநிரை மணியி னார்க்குஞ் சுரனிறந்து
*அழிநீர் மீன்பெயர்ந் தாங்கவர்
வழிநடைச் சேறல் வலித்திசின் யானே. —ஔவையார்.

(சொ - ள்.) க—௩. இடை பிறர் அறிதல் அஞ்சி - நம்மிடை நிகழ்ந்தனவற்றைப் பிறர் அறிதலை அஞ்சி, பேஎய் கண்ட கனவின் - பேய் தான் கண்ட கனவினைக் கூறாதது போன்று, மறை கரந்து - மறையினை வெளிப்படுத்தாது அடக்குதலால், பல்மாண் நுண்ணிதின் இயைந்த - பல மாண்புடன் கூடி நுட்பமாகப் பொருந்திய, காமம் - நம் காதலானது,

௩—௭. வென் வேல் - வென்றி பொருந்திய வேலினையும், மறம் மிகு தானை - வீரம் மிக்க சேனையினையும் உடைய, பசும்பூட் பொறையன் - பசும்பூண்களையுடைய பொறையனது, கார் புகன்று எடுத்த - மேகம் விரும்பி மழை பெய்த, சூர்புகல் நனந்தலை - தெய்வம் விரும்பியுறையும் அகன்ற இடத்தினையுடைய, மா இரு கொல்லி உச்சித் தாஅய் - மிகப்பெரிய கொல்லி மலையின் உச்சியில் பரவி, ததைந்துசெல் அருவியின் - மிக்குச் செல்லும் அருவியின் ஒலிபோன்று, அலர்எழ - அலராகி வெளிப்பட, பிரிந்தோர் - நம்மைப் பிரிந்து சென்ற நம் தலைவர்,

அ—கச. புலம் கந்து ஆக - தம் அறிவு பற்றுக்கோடு ஆக, இரவலர் செலினே - இரப்போர் வரின், வரைபுரை களிற்றொடு நன்கலன் ஈயும் - அவர்கட்கு மலைபோலும் களிறுகளுடன் நல்ல அணிகலன்களையும் அளிக்கும், உரைசால் வண்புகழ் - உரைத்தல் அமைந்த வளவிய புகழினையுடைய, பாரி பறம்பில் - பாரியினது பறம்பு அரணில், நிரை பறைக் குரீஇ இனம் - வரிசையாகப் பறத்தலையுடைய குருவியின் கூட்டம், காலைப்போகி - காலையில் புறம் போய், முடங்குபுறச் செந்நெல் தரீஇயர் - வளைந்த புறத்தினையுடைய சிவந்த நெற்கதிர்களைக் கொணர்ந்து தருமாறு, ஓராங்கு இரைதேர் கொட்பினவாகி - ஒருங்கே அந் நெற்கதிருள்ள இடத்தை ஆராய்ந்து திரிதலையுடையனவாகி, பொழுதுபட - ஞாயிறு மறைய, படர்கொள் மாலைப் படர் தந்தாங்கு - துன்பத்தைத் தரும் மாலைப் பொழுதில் மீண்டுவந்தாற்போல,

கரு—௬. வருவர் என்று உணர்ந்த மடம்கெழு நெஞ்சம் - மீண்டு வருவர் என்று எண்ணிய அறியாமை பொருந்திய நெஞ்சமே, ஐயம் தெளி நீ - ஐயம் நீங்கித் தெளிவுறுவாயாக.

(பாடம்) 1. இழிநீர்.

கக—உ0. வறன் மரம் பொருந்திய சிள்வீடு-வற்றல் மரத்தினைப் பொருந்திய சிள்வீடு என்னும் வண்டுகள், பல உடன் - பலவும் ஒருங்கு சேர்ந்து, உமணர் கணம் நிரை மணியின் ஆர்க்கும் - உப்பு வாணிகரது கூட்டமாய எருதுகளின் மணியொலிபோல ஒலிக்கும், சுரன் இறந்து - சுரத்தினைக் கடந்து, அழிநீர் மீன் பெயர்ந்தாங்கு - நீர் வற்றும் பொழுது அதிலுள்ள மீன் நீர் உள்ள இடத்திற்கு மீண்டு சென்றாற் போல, யான் அவர் வழிநடைச் சேறல் வலித்திசின் - யான் அவர் சென்ற வழியே செல்லுதலைத் துணிந்துளேன்.

(முடிபு) மறை கரந்து நுண்ணிதின் இயைந்த காமம் அலர் எழப் பிரிந்தோர் வருவர் என்று உணர்ந்த நெஞ்சம்! நீ ஐயம் தெளியரோ; சுரன் இறந்து அவர் வழிநடைச் சேறல் யான் வலித்திசின்.

(வி - ரை.) இடை - இடம்; இடத்து நிகழ்ச்சி. கரந்து, கரத்தலால் எனத் திரிக்க. பசும்பூண் - பசும் பொன்னாலாய பூண். பொறையன் - சேரன். குரீஇ இனம் - கிளிகளின் கூட்டம். பாரியின் பறம்பு அரணை மூவேந்தரும் முற்றியிருந்த பொழுது, அகத்திருப்பார் உணவின்றி வருந்தாவாறு, கபிலர் என்னும் நல்லிசைப் புலவர் கிளிகளை வளர்த்து வெளியிலிருந்து கதிர்களைக் கொண்டுவரச் செய்தனர் என்பது வரலாறு. இதனை 'உலகுடன் திரிதரும் பலர்புகழ் நல்லிசை, வாய் மொழிக் கபிலன் சூழச் சேய்நின்று, செழுஞ்செய் நெல்லின் விளைகதிர் கொண்டு......வேந்தர் ஓட்டிய கடும்பரிப் புரவிக் கைவண் பாரி' என்பதனாலும், 'கபிலன் சூழ என்றது, பாரியை அரசர் மூவரும் வளைத்திருப்ப அகப்பட்டிருந்து உணவில்லாமைக் கிளிகளை வளர்த்து கதிர்கொண்டு வர விட்ட கதை' என்ற அதன் பழைய உரையினாலும் அறிக. குரீஇ இனம் மாலைப் படர்தந்தாங்கு என்ற உவமையால் தலைவர் பொருளீட்டிக்கொண்டு குறித்தபொழுதில் தவறாது வருவர் என்னும் பொருள் பெறப்படும்.

---

304. முல்லை

[[1]பாசறைக்கண் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.]

இருவிசும் பிவர்ந்த கருவி மாமழை
நீர்செறி நுங்கின் கண்[2]சிதர்ந் தவைபோற்
சூர்பனிப் பன்ன தண்வரல் ஆலியொடு
பருஉப்பெயல் அழிதுளி தலைஇ வானவின்று
குரூஉத்துளி பொழிந்த பெரும்புலர் வைகறை
செய்துவிட் டன்ன செந்நில மருங்கிற்

(பாடம்) 1. பாசறைப் பிரிந்த. 2. சிதர்த்தவைபோல.

செறித்துநிறைத் தன்ன தெள்ளறல் பருகிச்
சிறுமறி தழீஇய தெறிநடை மடப்பிணை
வலந்திரி மருப்பின் அண்ணல் இரலையோடு
அலங்குசினைக் குருந்தின் அல்குநிழல் வதியச்
சுரும்பிமிர் பூதப் பிடவுத்தளை யவிழ
[1]அரும்பொறி மஞ்ஞை யால[2]வரிமணல்
மணிமிடை பவளம் போல அணிமிகக்
காயாஞ் செம்மல் தாஅய்ப் பலவுடன்
ஈயல் மூதாய் ஈர்ம்புறம் வரிப்பப்
புலனணி கொண்ட காரெதிர் காலை
ஏந்துகோட் டியானை வேந்தன் பாசறை
வினையொடு வேறுபுலத் தல்கி நன்றும்
அறவ ரல்லர்நம் அருளா தோரென
நந்நோய் தன்வயின் அறியாள்
எந்நொந்து புலக்குங்கொல் மாஅ யோளே.

—இடைக்காடனார்.

(சொ - ள்.) ௧—௫. (நெஞ்சே!) இரு விசும்பு இவர்ந்த கருவி மா மழை - பெரிய வானில் எழுந்த தொகுதியாகிய கரிய மேகம், நீர் செறி நுங்கின் கண்சிதர்ந்தவை போல் - (பனங்காயின்) நீர் நிறைந்த நுங்காகிய கண் சிதறி விழுந்தவைபோலும், சூர் பனிப்பு அன்ன தண் வரல் ஆலியொடு - தெய்வம் நடுக்கஞ் செய்தல் போன்ற குளிர்ச்சி பொருந்திய பனிக்கட்டியோடு, பருஉப் பெயல் அழி துளி தலைஇ - பருத்த பெயலாய மிக்க துளிகளைப் பொருந்தி, வான் நவின்று - வானிடத்தே பயின்று, குரூஉத் துளி பொழிந்த பெரும் புலர் வைகறை - விளக்கம் வாய்ந்த அத்துளிகளைச் சொரிந்த இருள்மிகப் புலர்ந்த விடியற்காலத்தே,

௬—௧0. செய்து விட்டன்ன செந் நில மருங்கின் - செவ்வண்ணம் தீட்டி வைத்தாற்போன்ற சிவந்த நிலத்திடத்தே, செறித்து நிறைத் தன்ன தெள் அறல் பருகி - தேக்கி வைத்தாற்போன்ற தெளிந்த அறல் பட்ட நீரைக்குடித்து, சிறுமறி தழீஇய தெறிநடை மடப்பிணை - சிறிய குட்டியைத் தழுவிக்கொண்ட துள்ளிய நடையினையுடைய இளைய பெண்மான், வலம் திரி மருப்பின் அண்ணல் இரலையோடு - வலமாகத் திரிந்த கொம்பினையுடைய தலைமையுடைய கலைமானொடு, அலங்கு சினைக் குருந்தின் அல்கு நிழல் வதிய - அசையும் கிளையினையுடைய குருந்த மரத்தின் பொருந்திய நிழலில் தங்கியிருக்க,

(பாடம்) 1. இரும்பொறி. 2. விரிமணல்.

௧௧—௨. கரும்பு இமிர்பு ஊதப் பிடவுத் தளை அவிழ - வண்டு ஒலித்து ஊதப் பிடாவினது அரும்புகள் மலர, அரும் பொறி மஞ்ஞை ஆல - அரிய புள்ளிகளையுடைய மயில்ஆட,

௧௨—௪. வரி மணல் - வரிப்பட்ட மணலில், மணி மிடை பவளம் போல - நீல மணியுடன் கலந்த செம்பவளம் போல, அணி மிக - அழகு மிக, காயாஞ் செம்மல் - காயாவின் வாடற்பூவும், ஈயல் மூதாய் - தம்பலப் பூச்சியும், பல உடன் தாஅய் - பலவும் சேரப் பரந்து, ஈர்ம் புறம் வரிப்ப - நிலத்தில் ஈரம்பட்ட இடத்தை அழகுசெய்ய,

௧௫. புலன் அணி கொண்ட கார் எதிர் கானம் - (இங்ஙனம்) காடாகிய நிலம் அழகு பெற்ற கார்காலம் தோன்றிய பொழுதில்,

௧௬—௨௧. மாயோள் - மாமை நிறத்தினையுடைய நம் தலைவி, ஏந்து கோட்டு யானை வேந்தன் பாசறை - நிமிர்ந்த கொம்பினையுடைய யானையையுடைய அரசனது பாசறைக்கண்ணே, வினையொடு வேறு புலத்து அல்கி - அவன் ஏவிவிட்ட வினையினால் வேற்றுநாட்டில் தங்கி, நம் அருளாதோர் நன்றும் அறவர் அல்லர் என - நமக்கு அருள் செய்யாதோர் பெரிதும் அறத்தினை யுடையர் அல்லர் என்று, நம்நோய் தன் வயின் அறியாள் - அவளைக் கருதி நாம் அடையும் நோயினை அறியாளாய், எம் நொந்து புலக்கும் கொல் - எம்மை நொந்து வெறுப்பாளோ.

(முடிபு) நெஞ்சே! கார் எதிர்கானை மாஅயோள், வேந்தன் பாசறை வினையொடு வேறு புலத்து அல்கி, நம் அருளாதோர், அறவர் அல்லரென எம் நொந்து புலக்கும் கொல்.

மழை பொழிந்த வைகறை, வதிய, ஊத, அவிழ, வரிப்ப, புலன் அணிகொண்ட கார் எதிர் கானை எனக.

(வி - ரை.) நுங்கின்கண் - நுங்காகிய கண், கண் போறலின் கண் எனப்பட்டது. இனி, நுங்கு என்றது பனங்காயை உணர்த்திற்றுமாம். நுங்கின்கண் ஆலிக்கு வடிவும் உருவும் பற்றிய உவமையாகும். சூர் பனிப்பு அன்ன என்றது ஆலியின் தட்பமிகுதியை உணர்த்தியபடி. மழையால் மேடு பள்ளம் நிரவப்பெற்றுச் சமமாக இருத்தலின், செய்து விட்டன்ன செந்நிலம் எனப்பட்டது என்றலுமாம். செய்து வைத்தாற் போல இயல்பில் அமைந்த (செந்நில மருங்கிற்) பொய்கை என்றலுமாம். அல்கு நிழல் - பிற்பகலின் நிழல் என்றுமாம். மணி மிடை பவளம் போலக் காயாஞ் செம்மலும் மூதாயும் வரிக்கும் என்னும் இது, [1]“அரக்கத்தன்ன செந்நிலப் பெருவழிக், காயாஞ் செம்மல் தாஅய்ப் பலவுடன், ஈயல் மூதாய் வரிப்பப் பவளமொடு, மணி மிடைந்தன்ன குன்றம்” என முன் வந்ததனொடு சொல்லானும் பொருளானும் ஒத்திருத்தல் அறிந்து மகிழ்தற்குரியது.

---

1. அகம். ௧௪.

305. பாலை

[பிரிவுணர்த்தப்பட்ட தோழிக்குத் தலைமகள் சொல்லியது. தலைமகன் பிரிவின்கண் தோழி தலைமகட்குச் சொல்லியதுமாம்.]

பகலினும் அகலா தாகி[1] யாமம்
தவலில் நீத்தமோ டையெனக் கழியத்
தளிமழை பொழிந்த தண்வரல் வாடையோடு
பனிமீக் கூரும் பைதற் பானாள்
பல்படை நிவந்த வறுமையில் சேக்கைப்
பருகு வன்ன காதலொடு திருகி
மெய்புகு வன்ன கைகவர் முயக்கத்து
ஓருயிர் மாக்களும் புலம்புவர் மாதோ
அருளி லாளர் பொருள்வயி னகல
எவ்வந் தாங்கிய இடும்பை நெஞ்சத்து
யானெவன் உளனோ தோழி தானே
பராரைப் பெண்ணைச் சேக்குங் கூர்வாய்
ஒருதனி அன்றில் உயவுக்குரல் கடைஇய
உள்ளே கனவும் உள்ளம் மெல்லெனக்
கனையெரி பிறப்ப ஊதும்
நினையா மாக்கள் தீங்குழல் கேட்டே.

—[2]வடமவண்ணக்கன் பேரிசாத்தனார்.

(சொ - ர்.) ௧௧. தோழி—,

௧—௪. பகலினும் அகலாதாகி - பகற்காலத்தும் நீங்காதாகிப் பெய்து, யாமம் தவல் இல் நீத்தமொடு - இரவினும் நீங்குதல் இல்லாத வெள்ளத்துடன், ஐ எனக் கழிய - மெல்லெனக் கழிய, தளி மழை பொழிந்த - மேகம் மழையைச் சொரிந்தமையால், தண் வரல் வாடையொடு பனி மீக்கூரும் - குளிர்ந்து வருதலையுடைய வாடைக் காற்றால் நடுக்கம் மிகும், பைதல் பால் நாள் - வருத்தத்தையுடைய பாதியிரவில்,

௫—௮. பல் படை நிவந்த வறுமை இல் சேக்கை - பல அடுக்கு மெத்தைகளால் உயர்ந்த வளம் மிக்க படுக்கையின்கண், பருகு அன்ன காதலொடு - பருகுதலையொத்த காதலுடன், திருகி மெய் புகுவு அன்ன கைகவர் முயக்கத்து - மாறி ஒருவர் மெய்யில் ஒருவர் மெய் புகுவது போலும் கை விரும்பும் முயக்கத்தால், ஓர் உயிர் மாக்களும் புலம்புவர் - ஈருடம்பிற்கு ஓர் உயிரெனத் தகும் காதலர்களும் வருந்தா நிற்பரன்றே;

(பாடம்) 1. இரவுந். 2. பெருஞ்சாத்தன்.

கூ. அருள் இலாளர் பொருள்வயின் அகல - அருள் இல்லாத நம் தலைவர் பொருள் ஈட்டும் வினைக்குச் செல்ல,

க0—க. எவ்வம் தாங்கிய இடும்பை நெஞ்சத்து யான் - துன்பத்தைச் சுமந்த வருத்தமுற்ற நெஞ்சுடையேனாகிய யான்,

கஉ—கூ. பரு அரைப் பெண்ணை ஒரு தனி சேக்கும் - பரிய அடியினையுடைய பனைமரத்தில் துணையின்றித் தனியே தங்கியிருக்கும், கூர்வாய் அன்றில் உயவு குரல் கடைஇய - கூரிய வாயினையுடைய அன்றிலின் வருத்தத்தையுடைய குரல் மூட்டுதலால், உள்ளே கனலும் உள்ளம் - அகத்தே கொதிக்கின்ற உள்ளத்திடத்தே, கனை எரி பிறப்ப - மிக்க தீ உண்டாக, நினையா மாக்கள் மெல்லெனஊதும் தீங்குழல் கேட்டு - சூழ்ச்சியில்லாத மாக்கள் மெல்லென ஊதும் இனிய குழல் ஓசையைக் கேட்டு,

கக. எவன் உளன் - எங்ஙனம் ஆற்றியிருப்பேன்.

(முடிபு) தோழி! வாடையொடு பனி மீக்கூரும் பைதற்பானாள், கைகவர் முயக்கத்து ஒருயிர் மாக்களும் புலம்புவர்; அருளிலாளர் பொருள்வயின் அகல, எவ்வம் தாங்கிய இடும்பை நெஞ்சத்து யான், உள்ளம் எரி பிறப்ப ஊதும் குழல்கேட்டு, எவன் உளனே.

(வி - ரை.) தளி - மேகம். பொழிந்த என்னும் பெயரெச்சமும் அகல என்னும் வினையெச்சமும் காரணப்பொருளன. பருகு: முதனிலைத் தொழிற்பெயர். பருகு வன்ன காதல் என்றது, காதல் மிகுதியை உணர்த்தியபடி. [1]'பருகுவார் போலினும்', [2]'பருகு வன்ன அருகா நோக்கமொடு' என்பன காண்க. அன்பால் செறிய முயங்கும் முயக்கம், இவ்வாறே 'மெய் புகு வன்ன கைகவர் முயக்கம்,' என, இந்நூலில் முன்னரும் (கக) பின்னரும் (௩௭௧) வந்துள்ளமையும் காண்க. ஒருயிர் மாக்களும் புலம்புவர் என்றது, வாடையின் கொடுமை மிகுதியை உணர்த்தியபடியாம். எவ்வமும், இடும்பையும் தாங்கிய நெஞ்சம் என்றலுமாம். எவ்வம், அருளின்றித் தலைவர் பிரிந்ததனாலாகிய துன்பமும்; இடும்பை, வாடையால் வருந்தும் வருத்தமும் ஆகக் கொள்க குழலோசை, துணைவரைப் பிரிந்திருக்கும் நம் உள்ளத்தில் துன்பமாகிய நெருப்பினை மூட்டுவதாகவும், அதனைச் சிறிதும் ஓராது தமக்கு ஒரு விளையாட்டாகக் குழல் ஊதுகின்றனர் என்பாள், கனை யெரி பிறப்ப ஊதும், நினையா மாக்கள் தீங்குழல் என்றாள் என்க. அருளிலாளர் பொருள்வயின் அகல, தீங்குழல் கேட்டு எவ்வம் தாங்கிய இடும்பை நெஞ்சத்து யான் ஒருயிர் மாக்களும் புலம்புதற்கு ஏதுவாகிய வாடையால் எவன் உளனே என முடித்தலும் ஆகும்.

(மே - ள்.) [3]'உரிப்பொருளல்லன மயங்கவும் பெறுமே' என்னுஞ் சூத்திரத்து, 'இப்பாட்டினுள் பெருமணலுலகத்துப் பாலை வந்தது' என்றனர், நச்.

---

1. குறள். ௮உ:க. 2. பத்துப். பொருந. ௭௭. 3. தொல். அகத். ௧௨.

306. மருதம்

[தோழி தலைமகற்கு வாயின் மறுத்தது.]

பெரும்பெயர் மகிழ்ந பேணா தகன்மோ
பரந்த பொய்கைப் பிரம்பொடு நீடிய
முட்கோம் பீங்கைத் துய்த்தலைப் புதுவீ
ஈன்ற மாத்தின் இளந்தளிர் வருட
ஆர்குரு குறங்கும் நீர்சூழ் [1]வளவயற்
கழனிக் கரும்பின் சாய்ப்புறம் ஊர்ந்து
பழன யாமை பசுவெயிற் கொள்ளும்
நெல்லுடை மறுகின் நன்னர் ஊர
இதுவோ மற்றுநின் செம்மல் மாண்ட
மதியேர் ஒண்ணுதல் வயங்கிழை யொருத்தி
இகழ்ந்த சொல்லுஞ் சொல்லிச் சிவந்த
ஆயிதழ் மழைக்கண் நோயுற நோக்கித்
தண்ணறுங் கமழ்தார் [2]பரீஇயினள் நும்மொடு
ஊடினள் சிறுதுனி செய்தெம்
மணன்மலி மறுகின் இறந்திசி னோளே.

—மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனார்.

(சொ - ள்.) க. பெரும் பெயர் மகிழ்ந - பெரிய புகழையுடைய தலைவனே!

உ—அ. பரந்த பொய்கைப் பிரம்பொடு நீடிய - அகன்ற பொய்கைக் கண்ணதாய பிரம்பினொடு கூடி நீண்டு வளர்ந்த, முள் கொம்பு ஈங்கை - முள்ளையுடைய கொம்பினையுடைய ஈங்கையின், துய் தலை புதுவீ - பஞ்சு போன்ற உச்சியினையுடைய புதிய பூவும், ஈன்ற மாத்தின் இளம் தளிர் - ஈனப்பட்ட மாமரத்தின் இளம் தளிரும், வருட - தன்னைத் தடவுதலின், ஆர் குருகு உறங்கும் நீர் சூழ் வள வயல் - மீனை யுண்ட நாரை துயிலும் நீர் சூழ்ந்த வளம் பொருந்திய வயலிடத்தே யுள்ள, கழனிக் கரும்பின் சாய்ப் புறம் ஊர்ந்து - நன்செய்க் கரும்பின் செறும்பினையுடைய புறத்தே ஊர்ந்து சென்று, பழன யாமை பசு வெயில் கொள்ளும் - பொய்கையிலுள்ள யாமை இளவெயிற் காயும், நெல் உடை மறுகின் நன்னர் ஊர - நெற்களையுடைய தெருவினையுடைய நல்ல வளம் வாய்ந்த ஊரனே!

கூ—கக. மாண்ட மதி ஏர் ஒள் நுதல் - மாட்சிமையுற்ற திங்களை யொத்த ஒளிபொருந்திய நெற்றியினையும், வயங்கு இழை - விளங்கும் அணியினையும் உடைய, ஒருத்தி - நின் பரத்தையாய ஒருத்தி, இகழ்ந்த

(பாடம்) 1. அகல் வயல். 2 பரீஇயினள் நம்மொடு.

சொல்லும் சொல்லி - இன்னே இகழ்ந்து கூறும் சொல்லும் கூறி, சிவந்த ஆய் இதழ் மழைக்கண் நோய் உற நோக்கி - சிவந்த அழகிய இதழினையுடைய குளிர்ந்த கண்ணால் வருத்தம் மிகப் பார்த்து, தண் நறு கமழ் தார் பரீஇயினள் - நினது தண்ணிய நறிய மணம் கமழும் மாலையினை அறுத்து, நும்மொடு ஊடினள் சிறு துனிசெய்து - நும்முடன் ஊடிச் சிறு கலாம் செய்து, எம் மணல் மலி மறுகின் இறந்திசினோள் - எமது மணல் நிறைந்த தெருவழியே சென்றாளன்றே;

௯. இதுவோ நின் செம்மல் - இதுதான் நினது தலைமையோ;

௧௦. பேணாது அகன்மோ - எம்மைப் போற்றாது அகன்று செல்வாயாக.

(முடிபு) பெரும் பெயர் மகிழ்ந! வயங்கிழை ஒருத்தி, இகழ்ந்த சொல்லும் சொல்லி, நோயுற நோக்கி, தார் பரீஇயினள், நும்மொடு ஊடினள், சிறுதுனி செய்து, எம்மறுகின் இறந்திசினோள்; இதுவோ நின் செம்மல் பேணாது அகன்மோ.

(வி - ரை.) பெரும்பெயர் மகிழ்ந என்றது இகழ்ச்சிக் குறிப்பு. பரத்தையிற் பிரிந்து வந்த தலைவன், தனது தலைமை தோன்றப் பரத்தையரை இழித்துரைத்துத் தலைவியைப் பாராட்டி, வாயில் வேண்டி நின்றானாக, இன்ன தன்மையாள் ஒருத்தி, நும்மை இகழ்ந்துரைத்துத் தாரினைப் பரிந்து ஊடிச் சிறு துனி செய்து எம்மறுகின் இறந்திசினோள் ஆதலின், அதுதான் நும் தலைமையோ, எம்மைப் பேணுதலை ஒழிவீராக என்று கூறித் தோழி வாயில் மறுத்தாள் என்க.

(உ - றை.) ஈங்கைப் புதுவீயும் மாத்தின் இளந்தளிரும் வருடஆர் குருகு உறங்கும் நீர் சூழ் வளவயல் என்றது, தலைவன் குறியாத இன்பத்தினையும் எளிதின் எய்துவான் என்றபடி.

---

307. பாலை

[பிரிவுணர்த்தப்பட்ட தோழி தலைமகனைச் செலவு விலக்கியது.]

சிறுநுதல் பசந்து பெருந்தோள் சாஅய்
அகலெழில் அல்குல் அவ்வரி வாடப்
பகலுங் கங்குலும் மயங்கிப் பையெனப்
பெயலுறு மலரிற் கண்பனி வார
ஈங்கிவள் உழக்கும் என்னாது வினைநயந்து
நீங்கல் ஒல்லுமோ ஐய வேங்கை
அடுமுரண் தொலைத்த நெடுநல் யானை
மையலங் கடாஅஞ் செருக்கி மதஞ்சிறந்து

இயங்குநர்ச் செகுக்கும் எய்படு நனந்தலைப்
பெருங்கை எண்கினம் குரும்பி தேரும்
புற்றுடைச் சுவர புதலிவர் பொதியிற்
கடவுள் போகிய கருந்தாட் கந்தத்து
உடனுறை பழமையிற் றுறத்தல் செல்லாது
இரும்புருப் பெடையொடு பயிரும்
பெருங்கல் வைப்பின் மலைமுத லாறே.

—மதுரை ஈழத்துப் பூதன் தேவனார்.

(சொ - ள்.) ௬. ஐய - ஐயனே!

௭—௧௫. வேங்கை அடு முரண் தொலைத்த - வேங்கையின் அடுகின்ற மாறுபாட்டை ஒழித்த, நெடு நல் யானை - நீண்ட நல்ல யானை, மையல் கடாஅம் செருக்கி - மயக்கத்தைத் தரும் மதத்தால் செருக்குற்று, மதம் சிறந்து - வலிமிக்கு, இயங்குநர்ச் செகுக்கும் - வழிப் போவாரைக் கொல்லும், எய் படு நனந்தலை - முள்ளம்பன்றி பொருந்திய அகன்ற காட்டின் இடத்தையும், பெருகை எண்கு இனம் - பெரிய கையினையுடைய கரடிக் கூட்டம், குரும்பி தேரும் - புற்றாம்பழஞ் சோற்றினை ஆராயும், புற்று உடைச் சுவர - புற்றுக்களையுடைய சுவரினையுடைய, புதல் இவர் - புதர்கள் படரப்பெற்ற, பொதியில் - பொதியிலிடத்தே, கடவுள் போகிய கரு தாள் கந்தத்து - தெய்வம் போய்விட்ட வலிய தாளினையுடைய தூணில், உடன் உறை பழமையில் - நெடுங்காலம் கூடியிருந்த பழமை பற்றி, துறத்தல் செல்லாது - விட்டு நீங்காமல், இரு புரு பெடையொடு பயிரும் - பெரிய புருக்கள் பெட்டைகளோடு கூடி ஒலிக்கும், பெரு கல் வைப்பின் மலைமுதல் ஆறு - பெரிய கற்கள் பொருந்திய ஊர்களையுமுடைய மலையடியிலுள்ள நெறியில்,

௧—௬. சிறு நுதல் பசந்து - சிறிய நெற்றி பசப்புற்று, பெரு தோள் சாஅய் - பெரிய தோள் மெலிந்து, அகல் எழில் அல்குல் அவ் வரி வாட - அகன்ற எழிலுடைய அல்குலின் அழகிய வரிகள் வாட, பகலும் கங்குலும் மடங்கி - பகலும் இரவும் மயங்குதலுற்று, பை என - மெல்லென, பெயல் உறு மலரின் கண் பனி வார - மழை பெய்தலை ஏற்ற மலரைப் போலக் கண்ணில் நீர் பெருகி வழிய, ஈங்கு இவள் உழக்கும் என்னாது - இங்கே இவள் தனித்துத் துயரால் வருந்துவள் என்று எண்ணாது, வினை நயந்து - பொருளீட்டும் வினையை விரும்பி, நீங்கல் ஒல்லுமோ - நீ பிரிந்து செல்லுதல் பொருந்துவதாமோ?

(முடிபு) ஐய! நனந்தலையினையும் பெருங்கல் வைப்பினையும் உடைய மலைமுதல் ஆற்றில், இவள் உழக்கும் என்னாது, வினை நயந்து நீங்கல் ஒல்லுமோ!

(வி - ரை.) பசந்து, சாஅய் என்பன சினை வினை யாகலின் உழக்கும் என்பதனோடு முடியும். இயங்குநர்ச் செகுக்கும் நனந்தலை எனவும்,

எய்படு நன்றதலை எனவும் தனித்தனி கூட்டுக. புதல் இவர் பொதியில் கடவுள் போகிய கருந்தாட் கந்தம் என்றது, ஊர் பாழாயினமையைப் புலப்படுத்தும். மலை முதல் ஆறு, இவள் உழக்கும் என்னுது நீங்கல் ஒல்லுமோ என்றதனால், நின்னைப் பிரிதலாலும் நீ இத்தகைய ஏதம் மிக்க கொடிய நெறியிற் செல்லுவை என்றதனாலும் தலைவி வருந்துவள் எனக் கூறித் தோழி செலவு விலக்கினாள் என்க.

---

308. குறிஞ்சி

[இரவு வருவானைப் பகல் வருகென்றது.]

உழுவையோ டுழந்த உயங்குநடை யொருத்தல்
நெடுவகிர் விழுப்புண் கழாஅக் கங்குல்
ஆலி யழிதுளி பொழிந்த வைகறை
வால்வெள் ளருவிப் புனன்மலிந் தொழுகலின்
இலங்குமலை புதைய வெண்மழை கவைஇக்
கலஞ்சுடு புகையிற் றோன்றும் நாட
இரவின் வருதல் எவனோ பகல்வரின்
தொலையா வேலின் வண்மகி ழெந்தை
களிறணந் தெய்தாக் கன்முகை இதணத்துச்
சிறுதினைப் படுகிளி யெம்மோ டோப்பி
மல்லல் அறைய மலிர்சுனைக் குவளைத்
தேம்பா யொண்பூ நறும்பல அடைச்சிய
கூந்தல் மெல்லணைத் துஞ்சிப் பொழுதுபடக்
காவலர்க் கரந்து கடிபுனந் துழைஇய
பெருங்களிற் றொருத்தலிற் [1]பெயர்குவை
கருங்கோற் குறிஞ்சிநம் உறைவி னூர்க்கே.

—பிசிராந்தையார்.

(சொ - ள்.) ௫—௬. இலங்கும் மலை புதைய வெண்மழை கவைஇ - விளங்கும் மலை மறையுமாறு வெள்ளிய மேகம் சூழ்ந்து, கலம் சுடு புகையில் தோன்றும் நாட - மட்கலம் சுடும் சூளையிற் புகைபோலத் தோன்றும் நாடனே!

௧—௪. உழுவையொடு உழந்த உயங்கு நடை ஒருத்தல் - புலியொடு பொருது உழந்த வருந்திய நடையினையுடைய களிற்றியானையின்.

(பாடம்) 1. போகுவை.

நெடுவகிர் விழுப்புண் கழாஅ - நீண்ட பிளப்பாகிய மத்தகப் புண்ணைக் கழுவி, கங்குல் ஆலி அழி துளி பொழிந்த - இரவில் முகில்கள் ஆலங் கட்டியுடன் கூடிய மிக்க பெயலைப் பொழிந்தமையால், வைகறை - விடியற் காலத்தே, வால் வெள் அருவிப் புனல் மலிந்து ஒழுகலின் - மிக்க வெண்மையையுடைய அருவியின் நீர் மிக்குப் பெருகி வருதலின், இரவில் வருதல் எவனோ - இத்தகைய இரவில் நீ வருதல் என்னையோ;

எ—கக. பகல் வரின் - பகற் கண்ணே வரின், தொலையா வேலின் வண்மகிழ் எந்தை - தொலைதல் இல்லாத வேலினையுடைய வளவிய மகிழ்ச்சியையுடைய எம் தந்தை அமைத்த, களிறு அணந்து எய்தா - ஆண்யானை மேல் நிமிர்ந்து பற்றலாகாத, கல் முகை இதணத்து - மலைக் குகையின் மேலதாகிய பரணில், சிறுதினைப் படுகிளி எம்மொடு ஓப்பி - சிறிய தினையிற் படியும் கிளியினை எம்முடனிருந்து ஓட்டியும், மல்லல் அறைய மலிர் சுனைக்குவளை - வளமுடைய பாறையின் இடத்த வாய பெருகிய நீரினையுடைய சுனையிலுள்ள குவளையின், தேம்பாய் ஒண்பூ நறும் பல அடைச்சிய - தேன் பாயும் ஒள்ளிய நறிய பல பூக்களைச் சூடிய, கூந்தல் மெல்அணை துஞ்சி - கூந்தலாய மெல்லிய அணையில் துயின்றும், பொழுதுபட - இவ்வாறு பகற்பொழுது இனிது கழிய,

கச—கசு. கருங்கோல் குறிஞ்சி நும் உறைவு இன் ஊர்க்கு - கரிய கிளைகளையுடைய குறிஞ்சி மரங்களையுடைய இருத்தற்கு இனிமை யுடைய நும் ஊர்க்கு, காவலர் கரந்து கடி புனம் துழைஇய - காவலா ளர்க்கு மறைந்து காவல் கொண்ட புனத்தை வளைத்துண்ட, பெரு களிற்று ஒருத்தலின் - பெரிய களிற்றுயானையைப் போல, பெயர் குவை - செல்வாய்.

(முடிபு) நாட! அருவி புனல் மலிந்து ஒழுகலின் இரவில் வருதல் எவனோ; பகல் வரின், கிளி, எம்மொடு ஓப்பி, கூந்தல் மெல்லணைத் துஞ்சி, பொழுதுபட, நும் உறைவு இன் ஊர்க்குக் களிற்று ஒருத்தலிற் பெயர்குவை.

(வி - ரை.) வெண் மழை என்றது, பெய்துவிட்ட மழை யென்ற படி. அணந்து - அண்ணாந்து: நிமிர்ந்து. இரவில் புனத்தினை மேய வரும் களிறு பரணின் மீதிருந்து கவண் முதலியவற்றால் தன்னை ஓட்டு வாரைக் கோறற்கு முயறல் உண்டாகலின், அதற்கு எட்டாத சேய்மை யில் பரண் இடப்பெற்றிருக்கும் என்பது, களிறு அணந் தெய்தாக் கன் முகை இதணத்து என்பதனாற் பெறப்படும்.

---

309. பாலை

[பிரிவிடை வேறுபட்ட தலைமகளது வேறுபாடு கண்டு வேறுபட்ட தோழிக்குத் தலைமகள் சொல்லியது.]

வயவாள் எறிந்து வில்லின் நீக்கிப்
பயநிரை தழீஇய கடுங்கண் [1]மழவர்
அம்புசேண் படுத்து வன்புலத் துய்த்தெனத்
தெய்வஞ் சேர்ந்த பராரை வேம்பிற்
கொழுப்பா எறிந்து குருதி தூஉய்ப்
புலவுப் புழுக்குண்ட வான்கண் அகலறைக்
களிறுபுறம் உரிஞ்சிய கருங்கால் இலவத்து
அரலை வெண்காழ் ஆலியில் தாஅம்
காடுமிக நெடிய என்னார் கோடியர்
[2]பெரும்படைக் குதிரை நற்போர் வானவன்
திருந்துகழற் சேவடி நசைஇப் படர்ந்தாங்கு
நாஞ்செலின் எவனோ தோழி காம்பின்
[3]வனைகழை யுடைந்த கவண்விசைக் கடியிடிக்
கனைசுடர் அமையத்து வழங்கல் செல்லாது
இரவுப்புனம் மேய்ந்த உரவுச்சின வேழம்
தண்பெரும் படாஅர் வெரூஉம்
குன்றுவிலங் கியவினவர் சென்ற நாட்டே.

—[4]கருவூர் கந்தப்பிள்ளைச் சாத்தனார்.

(சொ - ள்.) க—கக. பயம் நிரை தழீஇய கடுகண் மழவர் - பாலினையுடைய பசுவினத்தைப் பற்றிக்கொண்ட அஞ்சாமையுடைய வெட்சி வீரர், வய வாள் எறிந்து அம்பு வில்லின் நீக்கி - (தம்மொடு பொருத கரந்தையாரை) வெற்றி பொருந்திய வாளால் வீசியும் அம்பினை வில்லினின்று விடுத்தும், சேண் படுத்து - நெடுந்தூரம் போக்கிவிட்டு, வன்புலத்து உய்த்தென - வலிய காட்டுநிலத்தே செலுத்தினார்களாக, தெய்வம் சேர்ந்த பரு அரை வேம்பின் - தெய்வம் தங்கிய பரிய அரையினையுடைய வேப்ப மரத்தடியில், கொழுப்பு ஆ எறிந்து - கொழுப்பினையுடைய பசுவினைத் தடிந்து, குருதி தூஉய் - உதிரத்தைத் தூவிப் பலியிட்டு, புலவுப் புழுக்கு உண்ட - அதன் புலாலைப் புழுக்கி உண்ட இடமாய, வான் கண் அகல் அறை - உயரிய இடம் அகன்ற பாறையில், களிறு புறம் உரிஞ்சிய கருங்கால்

(பாடம்) 1. மறவர். 2. பசும்படை. 3. விளை கழை.
4. கருவூர் கதப்பிள்ளைச் சாத்தனார்.

இலவத்து - களிறு தன் புறத்தினை உரசிக்கொண்ட கரிய அடியினை யுடைய இலவ மரத்தின், அரலை வெண்காழ் - விதையாய வெள்ளிய கொட்டை, ஆலியில் தாஅம் காடு - ஆலங்கட்டி போலப் பரவிக் கிடக்கும் காடுகள், மிக நெடிய என்னூர் - மிகச் சேய என் றெண்ணூராய், கோடியர் - கூத்தர், பெரும்படை குதிரை - பெரிய குதிரைப் படையினையுடைய, நல்போர் வானவன் - நல்ல போர்த்திறன் வாய்ந்த சேரனது, திருந்து கழல் சேவடி - திருந்திய வீரக்கழலை யணிந்த சிவந்த அடியினை, நசைஇ படர்ந்தாங்கு - விரும்பிச் சென்றாற் போல,

கஉ—எ. தோழி—, காம்பின் வனை கழை உடைந்த - மூங்கிலின் அழகிய தண்டு உடைதற்கு ஏதுவாய, கவண் விசை கடி இடி - கவண் கல்லின் வேகந் தங்கிய கடிய தாக்குதலை உடைய, கனை சுடர் அமையத்து வழங்கல் செல்லாது - வெப்பமிக்க கதிர்களையுடைய பகற் பொழுதில் இயங்குதல் இன்றி, இரவு புனம் மேய்ந்த உரவு சின வேழம் - இரவின்கண் தினைப் புனத்தை மேய்ந்த வலிய சினம்கொண்ட யானை, தண் பெரும் படாஅர் வெரூஉம் - குளிர்ந்த பெரிய தூற்றினை அஞ்சும், குன்று விலங்கு இயவின் அவர் சென்ற நாட்டு - குன்றுகள் குறுக்கிடும் நெறிகளையுடைய நம் தலைவர் சென்ற நாட்டின்கண், நாம் செலின் எவனோ - நாம் சென்றால் என்னையோ?

(முடிபு) தோழி! கோடியர், வானவன் திருந்துகழற் சேவடி நசைஇக் காடு மிக நெடிய என்னூர் படர்ந்தாங்கு, நாம் குன்று விலங்கு இயவின் அவர் சென்ற நாட்டுச் செலின் எவனோ?

(வி - ரை.) அம்பு வில்லின் நீக்கி எனக் கொண்டு கூட்டுக. பயம் - பால்; பய நிரை - கறவை இனம் என்றபடி. வான் கண் - கண்: அசை. மழவர் கொழுப்பா எறிந்து புழுக்குண்ட அகல் அறையில் இலவத்து வெண்காழ் ஆலியில் தாஅம் காடு என்க. பெரும் படை; படை - குதிரைக் கலணையுமாம். படாஅர் - தூறு: பார்தளின் இயல்பினதாகிய தூறு ஒன்ற உண்டாகலின் அதனைக் கண்டு வேழம் அஞ்சும் என்க. 'அகல்வாய்ப் பார்தட் படாஅர்' (கஅ) என முன் வந்திருப்பதுங் காண்க. கோடியர் காடு மிக நெடிய என்னூர் வானவன் சேவடி நசைஇப் படர்ந்தாங்கு என்ற உவமையால் செல்லும் நெறி நெடிய என்னாது நாமும் தலைவரை நச்சி அவர் நாட்டுச் செல்லின் எவனோ என்று தலைவி உரைத்தாளாகக் கொள்க. இனி, காடு மிக நெடிய என்னூர் குன்று விலங்கு இயவின் அவர் சென்ற நாட்டு என இயைத்து உரைத்தலுமாம்.

310. நெய்தல்

[தலைமகற்குக் குறைநேர்ந்த தோழி சொல்லியது]

கடுந்தே ரிளையரோடு நீக்கி நின்ற
நெடுந்தகை நீர்மையை யன்றி நீயும்
தொழுதகு மெய்யை அழிவுமுந் துறுத்துப்
பன்னாள் வந்து பணிமொழி பயிற்றலின்
குவளை யுண்கண் கலுழ நின்மாட்டு
இவளும் பெரும்பே துற்றன ளோருந்
[1] தாயுடை நெடுநகர்த் தமர்பா ராட்டக்
காதலின் வளர்ந்த மாத ராகலின்
பெருமட [2] முடையரோ சிறிதே யதனாற்
குன்றிற் றோன்றுங் குவவுமணற் சேர்ப்ப
இன்றிவண் விரும்பா தீமோ [3] சென்றப்
பூவிரி புன்னை மீதுதோன்று பெண்ணைக்
கூஉங்க ணஃதே தெய்ய ஆங்கண்
உப்போய் உமணர் ஒழுகையோடு வந்த
இளைப்படு பேடை யிரியக் குரைத்தெழுந்து
உருமிசைப் புணரி யுடைதரும்
பெருநீர் வேலியெஞ் சிறுநல் லூரே. —நக்கீரனார்.

(சொ - ள்.) க0. குன்றில் தோன்றும் குவவு மணல் சேர்ப்ப - குன்று போலத் தோன்றும் திரண்ட மணலையுடைய கடற்கரைத் தலைவனே!

க—ச. கடுந்தேர் இளையரொடு நீக்கி நின்ற - விரைந்து செல்லும் தேரினை ஏவலாளருடன் சேய்மைக்கண் நிறுத்தி இங்கு வந்து நிற்கும், நெடுந்தகை நீர்மையை - பெருந்தன்மையாகிய இனிய குணத்தினை யுடைமையை ஆகின்றாய், அன்றி - அதுவே யன்றி, தொழுதகு மெய்யை - பிறர் வணங்கத் தக்க தோற்றத்தினையுடையை, நீயும் - இத்தகைய நீயும், அழிவு முந்துறுத்து-மனச் சிதைவை மேற்கொண்டு, பல் நாள் வந்து - பல நாளும் வந்து, பணிமொழி பயிற்றலின் - பணிந்த மொழிகளைப் பலகாற் கூறலின்,

ரு—சு. இவளும்—, குவளை உண்கண் கலுழ - கருங்குவளை மலர் போன்ற மையுண்ட கண் கலங்க, நின்மாட்டு பெரும் பேது உற்றனள்- நின்னிடத்துப் பெரிய மயக்கத்தினை எய்தியுள்ளாள்;

(பாடம்) 1. தாயுறை வியனகர். 2. உடையள் சிறிதே.
3. சென்றிப்.

௪—௬. தாய் உடை நெடு நகர் தமர் பாராட்ட - தாய்மார் உள்ள பெரிய மனையில் சுற்றத்தார் பாராட்ட, காதலின் வளர்ந்த மாதர் ஆகலின் - காதலொடு வளர்ந்த பெண்டிர் ஆதலான் (இவளைப் போல்வார்) சிறிது பெருமடம் உடையர் - சில காலத்திற்கு மிக்க நாணினையுடையர் ஆவர், அதனால் - ஆகையால்,

௧௧—௭. இன்று இவண் விரும்பாதீ - இன்று இவ்விடத்திருத்தலை விரும்பற்க; உப்பு ஒய் உமணர் ஒழுகையொடு ஆங்கண் வந்த - உப்பினைச் செலுத்தி வரும் உப்பு வாணிகரது வண்டியுடன் அவ்விடத்தே வந்த, இளைபடு பேடை இரிய - பாதுகாவல் எய்திய பேடை அஞ்சியோட, உரும் இசைப் புணரி - இடிபோலும் ஒலியினையுடைய அலை, குரைத்து எழுந்து உடைதரும் - ஒலித்து எழுந்து சிதறி விழும், பெருநீர் வேலி எம் சிறு நல் ஊர் - கடலை எல்லையாகவுடைய எமது சிறிய நல்ல ஊர், சென்று - சிறிது சென்ற வழி, அ பூ விரி புன்னை மீது தோன்றும் - அந்தப் பூக்கள் விரிந்த புன்னையின் மேலே தோன்றுகின்ற, பெண்ணை - பனை மரத்தினின்றும், கூவும் கண்ணஃதே - கூப்பிடு தூரத்தே யுள்ளதேயாம்.

(முடிபு) சேர்ப்ப! நெடுந்தகை நீர்மையை; அன்றித் தொழுதகு மெய்யை; நீயும் அழிவு முந்துறுத்துப் பன்னாள் வந்து பணிமொழி பயிற்றலின், இவளும் நின்மாட்டுப் பெரும்பேது உற்றனள்; காதலின் வளர்ந்த மாதராகலின், சிறிது பெருமடம் உடையர்; அதனால் இன்று இவண் விரும்பாதீமோ; எம் சிறு நல்லூர் பெண்ணைக் கூவுங் கண்ணது. (அவண் வருக.)

(வி - ரை.) புரவலன் போலும் தோற்றமுடைய நீ இரவலன்போல் வந்து பலகால் பணிமொழி கூறினை என்பாள் "கடுந்தேரிளையரொடு நீக்கி நின்ற, நெடுந்தகை நீர்மையை யன்றி நீயும், தொழுதகு மெய்யை ......பன்னாள் வந்து பணிமொழி பயிற்றலின்" என்றாள். நின்மாட்டு இவளும் பெரும்பேது உற்றனள் என்றது, நீ எய்திய துன்பத்திற்குத் தானும் வருந்தி நின்னையே நினைந்து அறிவுநிலை கலங்குவாளாயினள் என்றபடி. ஒரும், ஓ, தெய்ய: அசைநிலை. மோ: முன்னிலையசை. கூஉங் கண்ணஃது: ஆய்தம் விரித்தல்; பெண்ணைக்கு ஊங்கண்ணஃது எனப் பிரித்து, பெண்ணைக்கு அப்பாலாய இடத்தது என உரைத்தலுமாம்.

---

311. பாலை

[பிரிவின்கண் வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.]

இரும்பிடிப் பரிசிலர் போலக் கடைநின்று
அருங்கடிக் காப்பின் அகனகர் ஒருசிறை
எழுதி யன்ன திண்ணிலைக் கதவம்
[1] கழுதுவழங் கரைநாள் காவலர் மடிந்தெனத்

(பாடம்) 1. கழுதயங் கரைநாள் காவலர் மடிந்தென.

திறந்துநப் புணர்ந்து நம்மிற் சிறந்தோர்
இம்மை யுலகத் தில்லெனப் பன்னாள்
பொம்மல் ஓதி நீவிய காதலொடு
[1]பயந்தலை பெயர்ந்து மாதிரம் வெம்ப
வருவழி வம்பலர் பேணிக் கோவலர்
மழவிடைப் பூட்டிய குழாஅய்த் தீம்புளி
செவியடை தீரத் தேக்கிலைப் பகுக்கும்
புல்லி நன்னாட் டும்பர்ச் செல்லருஞ்
சுரமிறந் தேகினும் நீடலர்
அருண்மொழித் தேற்றிநம் அகன்றிசி னோரே.

—மாமூலனார்.

(சொ - ள்.) ௧—௭. இரு பிடி பரிசிலர் போல - பெரிய பெண் யானையினைப் பரிசில் பெறும் பாணர் போல, கடை நின்று - நமது மனையின் கடையில் நின்று (பின்), அரு கடி காப்பின் அகல் நகர் - அரிய காவலையுடைய மதில் சூழ்ந்த அகன்ற மனையின், ஒரு சிறை - ஒரு பாலுள்ள, எழுதி அன்ன திண் நிலைக் கதவம் - எழுதினாற் போன்ற செறிந்த நிலையினையுடைய கதவினை, கழுது வழங்கு அரை நாள் - பேய் வழங்கும் பாதியிரவில், காவலர் மடிய - காவலர்கள் சோர்ந்திருக்கும் செவ்வி பார்த்து, திறந்து - திறந்து வந்து, நம் புணர்ந்து - நம்மைக் கூடி, நம்மிற் சிறந்தோர் இம்மை உலகத்து இல் என - நம்மைப் போன்று அன்பிற் சிறந்தோர் இவ்வுலகத்தே யாரும் இல்லை என்று கூறி, பல் நாள் - பல காலம், பொம்மல் ஓதி நீவிய காதலொடு - பொலிவு பெற்ற கூந்தலைத் தடவி அளிசெய்த காதலொடு,

௧௪. அருள் மொழித் தேற்றி நம் அகன்றிசினோர் - இரக்கம் தோன்றும் மொழியால் நம்மைத் தெளிவித்து அகன்று சென்றோர்,

௮—௧௩. பயம் தலை பெயர்ந்து மாதிரம் வெம்ப - நீர் அற்று ஒழியத் திசையெல்லாம் கொதிக்க, வம்பலர் வருவழி பேணி - புதிய வழிப்போக்கர் வருங்கால் அவர்களைப் போற்றி, கோவலர் - ஆயர்கள், மழ விடைப் பூட்டிய குழாஅய்த் தீம்புளி - இளைய எருதுகளின் கழுத்திற் கட்டியுள்ள மூங்கிற் குழாயிலுள்ள இனிய புளிச் சோற்றை, செவி அடை தீர - அப் புதியரின் காதடைப்பு நீங்க, தேக்கு இலை பகுக்கும் - தேக்கின் இலையில் பகிர்ந்து அளிக்கும், புல்லி நல் நாட்டு உம்பர் - புல்லி என்பானது வேங்கட நன்னாட்டிற்கு அப்பாலுள்ள, செல் அரும் சுரம் இறந்து ஏகினும் - கடத்தற் கரிய சுரநெறியைக் கடந்து சென்றிருப்பினும், நீடலர் - தாழ்க்காது விரைவில் வருவர்.

(பாடம்) 1. மழைதலை.

(முடிபு) தோழி! நப்புணர்ந்து காதலோடு அருண்மொழித் தேற்றி நம் அகன்றீசினோர், புல்லி நன்னாட்டும்பர்ச் செல்லரும் சுரம் இறந்தேகினும் நீடலர்.

(வி - ரை.) பெண் யானையைப் பரிசில் பெறும் அகவலர் முதலாயினோர், மனை வாயிலில் ஒதுங்கி நிற்பராகலின், இரும்பிடிப் பரிசிலர் போலக் கடைநின்று என்றான். பரிசிலர் வாயிலில் நிற்றல் [1]"பரிசில் கடைஇய கடைக்கூட்டு நிலை" எனப்படும். மடிய - மடிந்திருக்கும் பொழுது என்க. செவியடை - பசியாற் காது கேளாத நிலைமை அடைதல்.

— —

312. குறிஞ்சி

[தலைமகன் சிறைப்புறமாகத் தோழி சொல்லியது. தலைமகன் சொல்லியதுமாம்.]

நெஞ்சுடம் படுதலின் ஒன்றுபுரிந் தடங்கி
இரவின் வரூஉம் [2]இடும்பை நீங்க
வரையக் கருதும் ஆயின் பெரிதுவந்து
ஓங்குவரை யிழிதரும் வீங்குபெயல் நீத்தம்
காந்தளஞ் சிறுகுடிக் கௌவை பேணாது
அரிமதர் மழைக்கண் [3]சிவப்ப நாளைப்
பெருமலை நாடன் மார்புபுணை யாக
ஆடுகம் வம்மோ காதலந் தோழி
வேய்பயில் அடுக்கம் புதையக் கால்வீழ்த்து
இன்னிசை முரசின் இரங்கி ஒன்னார்
ஓடுபுறங் கண்ட தாடோய் தடக்கை
வெல்போர் வழுதி செல்சமத் துயர்த்த
அடுபுகழ் எஃகம் போலக்
கொடிபட மின்னிப் பாயின்றால் மழையே.

—மதுரை மருதன் இளநாகனார்.

(சொ - ள்.) ௮. காதல் அம் தோழி - காதல் மிக்க தோழியே,

௭. பெருமலை நாடன்-பெரிய மலை நாட்டினனாகிய நம் தலைவன்,

௧—௨. நெஞ்சு உடம்படுதலின் - இருவர் நெஞ்சும் ஒன்று படுதலின், ஒன்று புரிந்து அடங்கி-வரைந்து கோடலாய அதனையே விரும்பியமைந்து, இரவின் வரூஉம் இடும்பை நீங்க - இரவில் வருதலாய துன்பம் அகல, வரையக் கருதும் ஆயின் - வரைந்து கொள்ளலை எண்ணும் ஆகலின்,

---

1. தொல். புறத்: ௩௬. (பாடம்) 2. இடும்பைதீர. 3. சேப்ப.

க—அ. காந்தள் சிறுகுடிக் கௌவை பேணாது - காந்தட் பூக்களையுடைய இச்சிற்றூரின் அலரினைப் போற்றாது, ஓங்குவரை இழிதரும் வீங்கு பெயல் நீத்தம் - உயர்ந்த மலையினின்றும் வீழும் மிக்க மழையாலாய அருவி நீரின், மார்பு புணையாக - (நம் தலைவன்) மார்பு தெப்பம் ஆக, அரி மதர் மழைகண் சிவப்ப - செவ்வரி பரந்த மதர்த்த குளிர்ந்த கண்கள் சிவந்திட, நாளை பெரிது உவந்து ஆடுகம் - நாம் நாளை மிகவும் மகிழ்ந்து விளையாடுவேம், வம்மோ - வருவாயாக;

கூ—கச. வேய் பயில் அடுக்கம் புதைய - மூங்கில் நெருங்கிய பக்கமலை மறைய, கால் வீழ்த்து-கால் இறங்கி, இன் இசை முரசின் இரங்கி - இனிய இசை பொருந்திய முரசம் போல ஒலித்து, ஒன்னார் ஓடு புறம் கண்ட - பகைவர் ஓடும் புறக்கொடையினைக் கண்ட, தாள் தோய் தடகை - முழந்தாளினைப் பொருந்தும் பெரிய கையினையுடைய, வெல் போர் வழுதி - போர் வெல்லும் பாண்டியன், செல் சமத்து உயர்த்த - வென்று செல்லும் போரில் தூக்கிய, அடு புகழ் எஃகம் போல - கொல்லும் புகழ்வாய்ந்த வேல் போல, கொடி பட மின்னி - ஒழுங்கு பட மின்னி, மழை பாயின்று - மழை பரவியுள்ளது; (காண்பாயாக.)

(முடிபு) காதலம் தோழி! பெருமலை நாடன் வரையக் கருதும் ஆயின் வீங்கு பெயல் நீத்தம் மார்பு புணையாக ஆடுகம் வம்மோ; மழை பாயின்றால்.

(வி - ரை.) கருதும் ஆயின் - கருதும் ஆதலின். நீத்தம் கண் சிவப்ப மார்பு புணையாக ஆடுகம் எனவும், கௌவை பேணாது மார்பு புணையாக ஆடுகம் எனவும் தனித்தனி கூட்டுக. பேணாது - ஒரு பொருளாகக் கொள்ளாமல். முரசின் இரங்கி எஃகம் போல மின்னி என்புழிப் பொருள் உவமையாயின; [1]'பொருளே யுவமம் செய்தனர் மொழியினும் மருளறு சிறப்பினஃ துவமை யாகும்' என்பது விதியாகலான்.

---

313. பாலை

[பிரிவிடை வேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறுத்தியது.]

இனிப்பிறி துண்டோ அஞ்சல் ஓம்பென
அணிக்கவின் வளர முயங்கி நெஞ்சம்
பிணித்தோர் சென்ற ஆறுநினைந் தல்கலுங்
குளித்துப்பொரு கயலிற் கண்பனி மல்க
ஐய வாக வெய்ய வுயிரா
இரவும் எல்லையும் படரட வருந்தி
அரவுநுங்கு மதியின் நுதலொளி கரப்பத்

---

1. தொல். உவம: க.

தம்மல தில்லா நம்மிவண் ஒழியப்
பொருள்புரிந் தகன்றன ராயினும் அருள்புரிந்து
வருவர் வாழி தோழி பெரிய
நிதியஞ் சொரிந்த நீவி போலப்
பாம்பூன் தேம்பும் வறங்கூர் கடத்திடை
நீங்கா வம்பலர் கணையிடத் தொலைந்தோர்
வசிபடு புண்ணின் குருதி மாந்தி
ஒற்றுச்செல் மாக்களின் ஒடுங்கிய குரல
இல்வழிப் படூஉங் காக்கைக்
கல்லுயர் பிறங்கல் மலையிறந் தோரே.

—பாலைபாடிய பெருங்கடுங்கோ.

(சொ - ள்.) ௧௦. தோழி—, வாழி—,

௧—௩. இனி பிறிது உண்டோ-இனி நீ வருந்தற் குரிய தொன்று உண்டோ, அஞ்சல் ஓம்பு என - அஞ்சுதலை ஒழிவாயாக என்று கூறி, அணிகவின் வளர முயங்கி - அழகிய ஒளி பெருகத் தழுவி, நெஞ்சம் பிணித்தோர் - நம் உள்ளத்தைக் கவர்ந்தோராகிய நம் தலைவர்,

௪—௯. சென்ற ஆறு நினைந்து - தாம் சென்ற சுர நெறியை நாம் நினைந்து, அல்கலும் - நாடோறும், குளித்துப் பொரு கயலில் கண் பனி மல்க - நீரில் மூழ்கிப் பொரும் கயல்களைப் போலக் கண்களில் நீர் பெருக, ஐய ஆக வெய்ய உயிரா - மென்மையாக வெவ்விய உயிர்ப்பினை உயிர்த்து, இரவும் எல்லையும் படர் அட வருந்தி - இரவும் பகலும் துன்பம் நலிய வருந்தி, அரவு நுங்கு மதியின் நுதல் ஒளி கரப்ப - அரா விழுங்கிய திங்களென நெற்றி ஒளியினை இழந்திட, தம் அலது இல்லா நம் இவண் ஒழிய - தம்மை யல்லாது வேறு களைகண் இல்லா நாம் இங்கே தங்கியிருக்க, பொருள் புரிந்து அகன்றனர் ஆயினும்-பொருளை விரும்பிச் சென்றன ராயினும்,

௧௦—௭. பெரிய நிதியம் சொரிந்த நீவி போல - மிக்க நிதியினைச் சொரிந்துவிட்ட உள்ளீடில்லாத துணிப்பை போல, பாம்பு ஊன் தேம்பும் வறம் கூர் கடத்திடை - பாம்பு உடல் வாடிக் கிடக்கும் வறட்சி மிக்க காட்டிடத்தே, கணை இட - ஆறலைப்போர் அம்பினை எய்தலால், தொலைந்தோர் - இறந்து பட்டோராய, நீங்கா வம்பலர் - ஒழியாத புதியோரது, வசிபடு புண்ணின் குருதி மாந்தி - பிளந்த புண்ணினின் றிழியும் செந்நீரைக் குடித்து, காக்கை - காகங்கள், ஒற்றுச் செல் மாக்களின் ஒடுங்கிய குரல - ஒற்றராகச் செல்லும் மக்களைப்போல உள்ளடங்கிய குரலினவாய், இல்வழிப் படூஉம் - மனையிடத்தே வந்து தங்கும் இடமாய, கல் உயர் பிறங்கல் மலை இறந்தோர்-கற்கள் உயர்ந்த பக்கமலைகளையுடைய மலையைக் கடந்து சென்றோராய அவர்,

௯—௧௦. அருள் புரிந்து வருவர் - நம்பால் அருள் செய்து வருவர்.

(முடிபு) தோழி! வாழி! நெஞ்சம் பிணித்தோர், தம்மலதில்லா நம் இவண் ஒழியப் பொருள் புரிந்து அகன்றன ராயினும், மலையிறந்தோராய அவர், அருள் புரிந்து வருவர்.

(வி - ரை.) இனிப் பிறிது உண்டோ என்றது, இனி நமக்குப் பிரிவென்பது இல்லையெனக் குறிப்பித்தபடி; இனிப் பிரியுமாறு இல்லை யெனத் தன் நெஞ்சம் ஒருப்படத் தெருட்டிய தலைவர், பிரிந்து சென்றா ராகலின், தலைவி கண் பனிமல்க வெய்ய உயிரா வருந்தி யிருந்தனள் என்க. பொருகயல் - ஒன்றோ டொன்று எதிர்த்துப் பொரும் கயல் எனக் கண்ணின் வடிவு புலப்படக் கூறியவாறும். நம் இவண் ஒழிய - நாம் இவண் ஒழிய என்க. அருள் புரிந்து - அருளை விரும்புதலுடையர் ஆகலால் என ஏதுப் பொருண்மை குறிப்பினாற் கொள்ளப்படும். நீவி - மடிச்சிலை; மடியிற் சுற்றிக் கட்டிக் கொள்ளும் நீண்ட வடிவுடைய பணப்பை. பாம்பு ஊன் தேம்பும் கடம் என்றது காட்டின் வெம்மை மிகுதி கூறியபடி. நீங்கா வம்பலர் - இடையறாது சென்றுகொண்டிருக் கும் புதியர். கணையிட - ஆறலைப்போர் கணையிடலால் என வருவித் துரைக்க.

(மே - வ்.) [1]"அவைதாம், அன்ன ஏய்ப்ப" என்னும் சூத்திரத்து 'குளித்துப் பொரு கயலிற் கண்பனி மல்க' என்பது உவம உருபின்றி இன்னுருபு தன் பொருட் கண்ணும் வந்தது என்றனர், நச்.

---

314. முல்லை

[வினைமுற்றிப் புகுந்த தலைமகற்குத் தோழி சொல்லியது.]

நீலத் தன்ன நீர்போதி கருவின்
[2]மாவிசும் பதிர முழங்கி ஆலியின்
நிலந்தண் ணென்று கானங் குழைப்ப
இனந்தேர் உழவர் இன்குர லியம்ப
மறியுடை மடப்பிணை தழீஇப் புறவில்
திரிமருப் பிரலை பைம்பயிர் உகள
[3]ஆர்பெயல் உதவிய கார்செய் காலை
நூனெறி நுணங்கிய கானவில் புரவிக்
கல்லெனக் கறங்குமணி யியம்ப வல்லோன்
வாய்ச்செல வணக்கிய தாப்பரி நெடுந்தேர்
ஈர்ம்புற இயங்குவழி யறுப்பத் தீந்தோடைப்

---

1. தொல். உவம: ௧௧. (பாடம்) 2. அமர் விசும்பு. 3. கார்ப் பெயல்.

பையுள் நல்யாழ் செவ்வழி [1]பிறப்ப
இந்நிலை வாரா ராயின் தந்நிலை
எவன்கொல் பாண உரைத்திசிற் சிறிதெனக்
கடவுட் கற்பின் மடவோள் கூறச்
செய்வினை யழிந்த மையல் நெஞ்சில்
துனிகொள் பருவரல் தீர வந்தோய்
இனிதுசெய் தனையால் வாழ்கநின் கண்ணி
வேலி சுற்றிய வால்வீ முல்லை
[2]பெருந்தார் கமழும் விருந்தோலி கதுப்பின்
இன்னகை யிளையோள் கவவ
மன்னுக பெருமநின் மலர்ந்த மார்பே.

—மதுரை அளக்கர் ஞாழார் மகனார் அம்மள்ளனார்.

(சொ - ள்.) க—எ. நீலத்து அன்ன நீர் பொதி கருவின் - நீல மணியை யொத்த நீர் பொதிந்த சூலினைக்கொண்டு, மா விசும்பு அதிர முழங்கி - கரிய வானினிடத்தே அதிர இடித்து, ஆலியின் - பெய்த நீரால், நிலம் தண்ணென்று - நிலம் தட்பமுற்று, கானம் குழைப்ப-காடு தழைத்திட, இனம் தேர் உழவர் - இனத்தை ஆராயும் உழவர், இன் குரல் இயம்ப - இனிய குரல் ஒலிக்க, மறியுடை மடப்பிணை தழீஇ - குட்டியினையுடைய இளைய பெண்மானைத் தழுவிக்கொண்டு, புறவில் - காட்டில், திரிமருப்பு இரலை - முறுக்கிய கோட்டினையுடைய கலைமான், பை பயிர் உகள - பசிய பயிரிலே துள்ளித் திரிய, ஆர் பெயல் உதவிய கார் செய் காலை - மேகம் மிக்க பெயலைத் தந்த கார்ப்பருவத்தைச் செய்யும் காலத்தே,

அ—கரு. பாண - பாணனே, நூல் நெறி நுணங்கிய - புரவி நூல் கூறும் முறைப்படி நுண்ணிதின் அமைந்த, கால் நவில் புரவி - வேகத்தால் காற்றெனக் கூறத் தகும் குதிரை, கல் எனக் கறங்கும் மணி இயம்ப-கல்லென்று ஒலிக்கும் மணி (இடையறாது) ஒலிக்க, வாய்ச் செல-வாவிச் செல்ல, வல்லோன் வணக்கிய தா பரி நெடுந்தேர் - வன்மையுடைய பாகனால் அடக்கி விடப்படும் தாவும் செலவினையுடைய நீண்ட தேர், ஈர்புற இயங்கு வழி அறுப்ப - ஈரம் பொருந்திய இடங்களில் தான் செல்லும் வழியினை அறுத்துச் செல்ல, தீம்தொடை பையுள் நல் யாழ் செவ்வழி பிறப்ப - இனிய நரம்புத்தொடையினையுடைய நல்ல யாழில் வருத்தத்தைத் தரும் செவ்வழிப்பண் தோன்ற, இ நிலை வாரார் ஆயின் - இத்தகைய மாலைப்போழ்தில் வந்து சேராராயின், தம் நிலை எவன் கொல் - அவர்தம் நிலை யாதாகுமோ, உரைத்திசிற் சிறிது என - சிறிது உரைப்பாயாக என்று, கடவுள் கற்பின் மடவோள் கூற - தெய்வக் கற்பினையுடைய மடப்பம் வாய்ந்தவளாகிய எம் தலைவி கூற,

(பாடம்) 1. மறப்ப. 2. பொருந்திதழ் கமழும்.

கஉ-உஉ. பெரும—, செய்வினை அழிந்த மையல் நெஞ்சில்-செய்யப்படும் வினைகள் அழிதற் கேதுவாய மயக்கம் பொருந்திய நெஞ்சில், துனிகொள் பருவரல் தீர-வெறுப்புத் தரும் துன்பம் அகல, வந்தோய்-நீ வந்துற்றனை அதனால், இனிது செய்தனை - எம் தலைவிக்கு இனிய தொன்றினைச் செய்தாய் ஆவாய்; வாழ்க நின் கண்ணி - நின் கண்ணி வாழ்வதாக; நின் மலர்ந்த மார்பு - நினது அகன்ற மார்பு, வேலி சுற்றிய வால் வீ முல்லை - மனையின் வேலியாகச் சூழ்ந்த வெள்ளிய முல்லை மலர்களாகிய, பெருதார் கமழும்-பெரிய மாலை கமழும், விருந்து ஒலி கதுப்பின் - புதுமையுறத் தழைத்த கூந்தலையுடைய, இன் நகை இளையோள் கவவ - இனிய நகையையுடைய இளையோளாகிய இவள் தழுவிக்கொள்ள, மன்னுக - நிலைபெறுவதாக.

(முடிபு) கார் செய் காலை, புரவி வாய்ச் செல வல்லோன் வணக்கிய தாப்பரி நெடுந்தேர் இயங்கு வழி யறுப்ப, யாழ் செவ்வழி பிறப்ப, தலைவர் இந்நிலை வாரா ராயின், தம் நிலை எவன்கொல், பாண, சிறிது உரைத்தீசின் என மடவோள் கூற, அவளது மையல் நெஞ்சிற் பருவரல் தீர வந்தோய்; பெரும! இனிது செய்தனை; நின் கண்ணி வாழ்க; இளையோள் கவவ நின் மலர்ந்த மார்பு மன்னுக.

கானங் குழைப்ப உழவர் இன்குரல் இயம்ப, இரலை உகளப் பெயல் உதவிய கார்செய் காலை என்க.

(வி - ரை.) ஆலி - ஈண்டு நீரினைக் குறித்தது. இனம் தேர்தல் தமது உழுதொழிற்கு இனமாவாரைத் தேர்தலும், எருது முதலிய இனத்தினைத் தேர்தலும் ஆம். குரல் - உழுதல் வித்துதல் முதலியன செய்வுழி எழும் குரல்: பாடப்படும் குரலுமாம். மகிழ்ச்சியுடன் கூடிய தாகலின் இன்குரல் ஆயிற்று. கார் ஆர் பெயல் உதவிய கார்செய் காலை எனக் கார் என்பதனை முன்னும் கூட்டியுரைக்க. நுணங்கிய புரவி, கால் நவில் புரவி எனத் தனித்தனியே கூட்டுக. வாய் - வாவி. வாச் செல என்னும் பாடத்திற்கு வாவுதலாகச் செல்ல என்க. புரவி செல்ல, வல்லோன் வணக்கிய நெடுந்தேர் இயங்கு வழியறுப்ப வாராராயின் எனக் கூட்டுக. பையுள் நல்யாழ் செவ்வழி பிறப்ப, இந்நிலை வாரா ராயின் என்றது பிரிந்தார்க்கு வருத்தத்தைச் செய்யும் செவ்வழிப் பண் தோன்றும் இத்தகைய மாலைப்பொழுதில் வாராராயின் என்றபடி. தம் நிலை, அவருடைய வாய்மை. கூற - கூறிய காலை என்க. செய்வினை - உண்டியும் ஒப்பனையும் முதலாயின. இளையோள் கவவ மார்பு மன்னுக என்றது, மார்பு தலைவியின் ஆகத்திடு இடையீடில்லையாகப் பொருந்துக என்றபடி.

(மே - ள்.) [1]'பெறற்கரும் பெரும்பொருள் முடிந்தபின் வந்த' என்னுஞ் சூத்திரத்து இச்செய்யுள், தோழி முன்பு தலைவிக்கு நிகழ்ந்த ஆற்றுமையும் அது கண்டு தான் கலங்கியவாறும் தலைவற்குக் கூறியது என்றனர், நச்.

---

1. தொல். கற்பு: கூ.

315. பாலை

[மகட்போக்கிய தாய் சொல்லியது.]

கூழையுங் குறுநெறிக் கொண்டன முலையும்
சூழி மென்முகஞ் செப்புடன் எதிரின
பெண்துணை சான்றனள் இவளெனப் பன்மாண்
கண்துணை யாக நோக்கி நெருநையும்
அயிர்த்தன்று மன்னே நெஞ்சம் பெயர்த்தும்
அறியா மையிற் செறியேன் யானே
பெரும்பெயர் வழுதி கூடல் அன்னதன்
அருங்கடி வியனகர்ச் சிலம்புங் கழியாள்
சேணுறச் சென்று வறுஞ்சுனைக் கொல்கிப்
புறவுக்குயின் றுண்ட புன்காய் நெல்லிக்
கோடை யுதிர்த்த குவிகட் பசுங்காய்
அறுநூற் பளிங்கின் துளைக்காசு கடுப்ப
[1]வறுநிலத் துதிரும் அத்தம் கதுமெனக்
கூர்வேல் விடலை பொய்ப்பப் போகிச்
சேக்குவள் கொல்லோ தானே தேக்கின்
அகலிலை [2]குவித்த புதல்போல் குரம்பை
ஊன்புழுக் கயரும் முன்றிற்
கான்கெழு வாழ்நர் சிறுகுடி யானே.

—குடவாயிற் கீரத்தனார்.

(சொ - ள்.) க—சு. *கூழையும் குறுநெறி கொண்டன* - தலைமயிரும் குறுகிய நெறிப்பினைக் கொண்டன, *முலையும் சூழி மெல்முகம் செப்புடன் எதிரின* - முலைகளும் உச்சியிலுள்ள மெல்லிய முகத்தால் சிமிழினுடன் மாறுபட்டன, *இவள் பெண்துணை சான்றனள்* - இவள் பெண் எனும் இயல்பினை அமைந்தனள், *என* - என்று, *கண் துணை ஆகப் பல் மாண் நோக்கி* - என் கண்களே துணையாகப் பலமுறை பார்த்து, *நெருநையும் அயிர்த்தன்று மன்னே நெஞ்சம்* - எனது நெஞ்சமானது நேற்றும் மிகவும் ஐயுற்றது, *பெயர்த்தும் அறியாமையின் செறியேன் யானே* - அதன்பின்னும் எனது அறியாமையால் யான் என் மகளை இற்செறியா தொழிந்தேன்;

எ—கஉ. *பெரும் பெயர் வழுதி கூடல் அன்ன* - பெரிய புகழினையுடைய பாண்டியனது மதுரையை யொத்த, *தன் அருங்கடி வியன் நகர் சிலம்பும் கழியாள்* - தனது அரிய காவல் பொருந்திய பெரிய மனையில் சிலம்புகழி நோன்பும் செய்யப் பெறுளாய், *சேண் உறச்சென்று* - நெடுந் தூரம் சென்று, *வறு சுனைக்கு ஒல்கி* - நீரற்ற சுனைக்கண் நீர்பெறாது

(பாடம்) 1. வறனிலத்து. 2. கவித்த.

தளர்ந்து, புறவு குயின்று உண்ட - புறு துளைத்து உண்டமையின், புல் காய் நெல்லி - புல்லிய காய்களையுடைய நெல்லியின்கண், கோடை உதிர்த்த குவிகண் பசுகாய் - மேல்காற்று உதிர்த்திட்ட குவிந்த கண்ணினையுடைய பசிய காய்கள், அறுநூல் பளிங்கின் துளை காசு கடுப்ப - நூல் அற்று உதிர்ந்த துளையினையுடைய பளிங்குக் காசுகளை யொப்ப - வறுநிலத்து உதிரும் அத்தம் - வறிய நிலத்தில் உதிர்ந்து கிடக்கும் காட்டு நெறியில், கூர்வேல் விடலை பொய்ப்ப கதுமெனப் போகி - கூரிய வேலினையுடைய தன் தலைவன் பொய்கூறி அழைத்துச் செல்ல விரைந்துசென்று,

கஙு—அ. புதல்போல் குரம்பை முன்றில் - புதர்போலும் குடிசையின் முன்றிலில், தேக்கின் அகல் இலை குவித்த - தேக்கமரத்தின் அகன்ற இலையில் குவிக்கப்பெற்ற, ஊன் புழுக்கு அயரும் - புழுக்கிய ஊனினை உண்ணும், கான்கெழு வாழ்நர் - காட்டில் பொருந்திய வாழ்க்கையினை யுடையாரது, சிறுகுடியான் - சீறூரின்கண், தான் சேக்குவள் கொல் - அவள் தங்கியிருப்பளோ.

(முடிபு) பெண்துணை சான்றனள் இவள் என நோக்கி நெருநையும் நெஞ்சம் அயிர்த்தன்று; பெயர்த்தும் அறியாமையின் யான் செறியேன்; தான், தன் வியன் நகர் சிலம்பும் கழியாள் அத்தம் விடலை பொய்ப்பப் போகி, சிறுகுடியான் சேக்குவள் கொல்.

(வி - ரை.) சூழி மென்முகம் - படாம் அணிந்த மெல்லிய முகம் என்றுமாம். பெண்துணை சான்றனள் - [1]'பெண்மை யடுத்த மகனென் கிளவி' என்பதனால் புறத்துப்போய் விளையாடும் சிறுமி பெண்மகன் எனப்படுதலுண்டாகலின், அங்ஙனம் அல்லாத பருவமுற்றனள் என்பது போதரப் பெண்துணை சான்றனள் என்றாள். பன்மாண், கண் துணையாக நோக்கி நெருநையும் அயிர்த்தன்று மன்னே நெஞ்சம் என்றது, அங்ஙனமாகவும் இற்செறியாமையாகிய தவறுசெய்துவிட்டேனே எனக் கழிவிரக்கம் தோன்றக் கூறியபடியாம். தன் வியனகர் சிலம்பும் கழியாள் என்றது, தன் மனையின்கண் சிலம்பு கழித்தலாகிய நோன்பும் செய்யப் பெறாளாய் என்றபடி. சிலம்பு கழித்தல், கல்யாணத்திற்கு முன்பு செய்யப்படுவதொரு நோன்பு என்பது, [2]'நும்மனைச் சிலம்பு கழீஇ அயரினும், எம்மனை வதுவை நன்மணம் கழிகெனச், சொல்லின், எவனோ' என்பதனானும், 'உடன் கொண்டுபோன தலைமகன் மீண்டு தலைவியைத் தன் இல்லத்துக்கொண்டு புக்குழி, அவன் தாய் அவட்குச் சிலம்புகழி நோன்பு செய்கின்றாள் எனக் கேட்ட நற்றாய் ஆண்டு நின்றும் வந்தார்க்குச் சொல்லியது' என்னும் அதன் பழைய உரைக் கருத்தாலும் அறியப்படும். மற்றும், [3]'சிறுவன் கண்ணி சிலம்புகழீஇ, அறியாத் தேஎத்தள் ஆகுதல் கொடிதே' [4]'சிலம்பு கழீஇய செல்வம், பிறருணக் கழிந்த வென் ஆயிழை யடியே' என்பனவும் அதனைக் குறித்தல் காண்க. சுனைக்கு : வேற்றுமை மயக்கம்.

---

1. தொல். சொல் : ககஅ.
2. ஐங்குறு : ௩கக.
3. அகம் : ௩அ௫.
4. நற் : உஎக.

316. மருதம்

[தலைமகற்கு வாயில் நேர்ந்த தோழி தலைமகளை நெருங்கிச் சொல்லியது.]

துறைமீன் வழங்கும் பெருநீர்ப் பொய்கை
அரிமலர் ஆம்பல் மேய்ந்த நெறிமருப்பு
ஈர்ந்தண் எருமைச் சுவல்படு முதுபோத்துத்
தூங்குசேற் றள்ளல் துஞ்சிப் பொழுதுபடப்
பைங்கிணை வரால்அல் குறையப் [1]பெயர்தந்து
[2]குரூஉக்கொடிப் பகன்றை சூடி மூதூர்ப்
[3]போர்ச்செறி மள்ளரிற் புகுதரு மூரன்
தேர்தர வந்த தெரியிழை [4]நெகிழ்தோள்
ஊர்கொள் கல்லா மகளிர் தரத்தரப்
பரத்தைமை தாங்கலோ விலனென வறிதுநீ
புலத்தல் ஒல்லுமோ மனைகெழு மடந்தை
அதுபுலந் துறைதல் வல்லி யோரே
செய்யோள் நீங்கச் சில்பதங் கொழித்துத்
தாமட் டுண்டு தமிய ராகித்
தேமொழிப் புதல்வர் திரங்குமுலை சுவைப்ப
வைகுந ராகுதல் அறிந்தும்
அறியா ரம்மவஃ துடலு மோரே. — ஓரம்போகியார்.

(சொ - ள்.) க—எ. துறைமீன் வழங்கும் பெருநீர் பொய்கை - துறையின்கண் மீன்கள் இயங்கும் பெரிய நீர் நிறைந்த பொய்கைக்கண், அரிமலர் ஆம்பல் மேய்ந்த - விளங்கும் ஆம்பல் மலரை மேய்ந்த, நெறி மருப்பு ஈர் தண் சுவல்படு முது எருமைப் போத்து - நெறித்த கோட்டினையும் மிக்க குளிர்ச்சியுற்ற முதுகினையுமுடைய முதிய எருமைக் கடா, தூங்கு சேற்று அள்ளல் துஞ்சி - மிக்க சேற்றின் குழம்பிலே கிடந்து இரவெல்லாம் துயின்று, பொழுதுபட - ஞாயிறு தோன்றிய காலையில், பை கிணை வரால் குறையப் பெயர்தந்து - பசிய கிணத்தினையுடைய வரால் மீன்கள் மிதிபட்டு அழிய வெளிப்பட்டு, குரூஉ கொடி பகன்றை சூடி - வெள்ளிய பூக்களையுடைய பகன்றைக் கொடியினைச் சூடிக்கொண்டு, மூதூர் - பழைமையான ஊரின்கண், போர்ச்செறி மள்ளரில் புகுதரும் ஊரன் - போரில் வென்றி எய்திய வீரர் வருமாறு போலப் புகும் ஊரினையுடைய நம் தலைவன்,

(பாடம்) 1. போதந்து. 2. பருஉக்கொடி.
3. போர் செறி. 4. நெகிழ்த்தோள்.

அ—௧௧. தேர்தர வந்த - தனது தேரிற் கொணர்தலால் வந்த, தெரி இழை நெகிழ்தோள் - விளங்கும் அணி நெகிழ்ந்த தோள்களை யுடைய, ஊர்கொள்கல்லா மகளிர் - ஊர் தாங்காத பரத்தையர், பரத்தமை தரத்தர - பரத்தமையை மேன்மேலும் தன்பால் எய்துவிக்க, தாங்கலோ இலன் என - அதனைத் தாங்கலாற்றாதவனாக வுள்ளான் என்று, மனை கெழு மடந்தை - மனை வாழ்க்கை மேவிய கற்புடைய மடந்தையாகிய நீ, வறிது புலத்தல் ஒல்லுமே - பயனின்றி அவன்பால் ஊடுதல் பொருந்துமோ?

௧௨—௭. அது புலந்து உறைதல் வல்லியோரே - தலைவன் பரத்தமையைப் புலந்து பிரிந்துறையும் வன்மையுடையோர், செய்யோள் நீங்க - தம்மிடத்து நின்றும் திருமகள் நீங்க, சில்பதம் கொழித்து - சிறிய அரிசியைப் புடைத்து, தாம் அட்டு உண்டு தமியர் ஆகி - தாமே சமைத்துண்டு தனித்தோர் ஆகி, தேம்மொழிப் புதல்வர் திரங்கு முலை சுவைப்ப - தேன் போலும் இனிய மொழியினையுடைய மக்கள் பால் இன்றிச் சுருங்கிய முலையினைச் சுவைத்துப் பார்க்க, வைகுநர் ஆதல் அறிந்தும் - எளிமையுடன் தங்குவார் ஆதலை அறிந்துவைத்தும், அஃது உடலுமோர் - தலைவன் பரத்தமை குறித்து மாறுபாடுறுவோர், அறியார் - அறிவிலாராவர்.

(முடிபு.) ஊரன் தேர்தர வந்த மகளிர் தரத்தரப் பரத்தமை தாங்கலோ இலன் என, மனைகெழு மடந்தை நீ புலத்தல் ஒல்லுமோ? அது புலந்துறைதல் வல்லியோர், செய்யோள் நீங்கச் சில்பதம் அட்டு உண்டு தமியராகி, புதல்வர் திரங்கு முலை சுவைப்ப, வைகுநர் ஆதல் அறிந்தும், அது உடலுமோர் அறியார்.

(வி-ரை.) பொழுது படுதல் - ஞாயிறு தோன்றுதல். குறைய - அஞ்சி இரிய என்றுமாம். போர்ச்செறி மள்ளர் - போருக்குச் சென்று வெற்றிபெற்ற வீரர். பகன்றைக் கொடியை அறுத்துக் கொம்பிலே ஏற்றுக் கொண்டமை, அதனைச் சூடினமை போன்றிருத்தலால், பகன்றைசூடி எனப்பட்டது. கண்ணி சூடுதலானும் ஊருக்குப் பெருமிதத்துடன் சேறலானும் மள்ளர் உவமையாயிற்று. எருமை மூதுபோத்து புகுதரும் ஊரன் என இயையும். புகுதரும் என்னும் பெயரெச்சம் இடப்பெயர் கொண்டது. தலைவன் பரத்தையரைத் தேரேற்றி வருபவனாதலின், தேர்தர வந்தான் என்றாள். தெரியிழை நெகிழ்தோள் என்றது, புணர்ச்சிக்குமுன் நிகழ்வதொரு மெய்ப்பாடு: இதனை, [1]'கூழை விரித்தல்' என்னுஞ் சூத்திரத்து, 'ஊழணி தைவரல்' என்பதனாலும், அதற்குக் காட்டிய 'நிழலணி மணிப்பூண் நெஞ்சொடு கழல' என்ற மேற்கோளாலும் அறிக. ஊர் கொள்கல்லா என்றது, ஊர் இடமில்லையாம்படி நிறைந்த என்றபடி: அன்றி, ஊரையெல்லாம் இடமாகக்கொண்ட கல்வியில்லாத மகளிர் என்றுமாம். தேர்தர வந்த மகளிர் மேன்மேலும் தருதலால் பரத்தமை தாங்கலாற்றாயினன்

1. தொல். மெய்ப்: ௧௪.

என, மனைகெழு மடந்தையாகிய நீ புலத்தல் கூடுமோ எனவும்; புலந் துறைதல் வல்லியோர் புதல்வர் திரங்குமுலை சுவைப்ப வறியராய் வைகுநராதல் அறிந்தும், அஃது உடலுமோர் அறியாதாராகுவ எனவும் தோழி தலைவியைச் சினந்து கூறினாள் என்க.

(உ - றை.) பொய்கை ஆம்பல் மேய்ந்த எருமைப்போத்து அள்ளல் துஞ்சிப் பொழுதுபட வரால் குறையப் பகன்றை சூடி மூதூர் மள்ளரிற் புகுதரும் ஊரன் என்றது, தலைவன் பரத்தையர் சேரிக்கண்ணே அப் பரத்தையரை நுகர்ந்து இரவெல்லாம் அவ் விழிந்த இன்பத்திலே மயங்கிக் கிடந்து, காலையில், தன் பெருமை குறையவும் அலர் மிகவும் நாணின்றிப் போந்தான் என்றபடி.

(மே - ள்.) [1]'பெறற்கரும் பெரும்பொருள் முடிந்தபின்' என்னுஞ் சூத்திரத்து, 'உணர்ப்புவயின் வாரா ஊடலுற்றோள்வயின், உணர்த்தல் வேண்டிய கிழவோன் பானின்று, தான்வெகுண் டாக்கிய தகுதிக் கண்ணும்' என்னும் பகுதிக்கண், இச்செய்யுளைக் காட்டி, இது, தோழி தலைவியை வெகுண்டு ஆக்கியவாறு காண்க என்றும், [2]'வருத்த மிகுதி சுட்டுங் காலை' என்னுஞ் சூத்திரத்து, இச்செய்யுளுள், 'அது புலந் துறைதல் வல்லியோரே' எனப் புலவியால் நின் இல்வாழ்க்கை குறை படுமெனத் தோழி கூறியவாறு காண்க என்றும் கூறினர், நச்.

---

317. பாலை

[தலைமகன் வரவுணர்ந்த தோழி தலைமகட்குச் சொல்லியது.]

மாக விசும்பின் மழைதொழில் உலந்தெனப்
பாஅய் அன்ன பகலிருள் பரப்பிப்
புகைநிற உருவின் அற்சிரம் நீங்கக்
குவிமுகை முருக்கின் கூர்நுனை வையெயிற்று
நகைமுக மகளிர் ஊட்டுகிர் கடுக்கும்
முதிராப் பல்லிதழ் உதிரப் பாய்ந்துடன்
மலருண் வேட்கையின் சிதர்சிதர்ந் துகுப்பப்
பொன்செய் கன்னம் பொலிய வெள்ளி
நுண்கோல் அறைகுறைந் துதிர்வன போல
அரவ வண்டினம் ஊதுதோறுங் குரவத்து
ஓங்குசினை நறுவீ கோங்கலர் உறைப்பத்
துவைத்தெழு தும்பித் தவிரிசை விளரி
உதைத்துவிடு நரம்பின் இம்மென இமிரும்

---

1. தொல். கற்: க.   2. தொல். பொருளியல்: கஉ.

[1]மானே முற்ற காமர் வேனில்
வெயிலவிர் புரையும் வீததை மராஅத்துக்
குயிலிடு பூசல் எம்மோடு கேட்ப
வருவே மென்ற பருவம் ஆண்டை
இல்லை கொல்லென மெல்ல நோக்கி
நினைந்தன மிருந்தன மாகநயந் தாங்கு
உள்ளிய மருங்கின் உள்ளம் போல
வந்துநின் றனரே காதலர் [2]நந்துறந்து
என்னுழி யதுகொல் தானே பன்னாள்
அன்னையும் அழிவுற அணங்கி
நன்னுதற் பாஅய பசலை நோயே.

—வடமோதங்கிழார்.

(சொ - ள்.) க—கச. மாக விசும்பின் மழை தொழில் உலந்தென - வானின் கண்ணே மழை பெய்து முடிந்ததாக, பாஅய் அன்ன இருள் பகல் பரப்பி-பரப்பி வைத்தாற்போன்ற இருளினைப் பகலினும் விரித்து, புகைநிற உருவின் அற்சிரம் நீங்க - புகையின் நிறம் போலும் உருவினையுடைய பனிக்காலம் நீங்க, வை எயிற்று நகை முக மகளிர் - கூரிய பற்களையும் ஒள்ளிய முகத்தினையுமுடைய பெண்டிரது, ஊட்டு உகிர் கடுக்கும்-பஞ்சி ஊட்டிய நகத்தினை யொக்கும், குவிமுகை முருக்கின் - குவிந்த அரும்புகளையுடைய முருக்க மரத்தினது, கூர் நுனை முதிராப் பல் இதழ் - கூரிய முனையினையுடைய முற்றாத பல பூ விதழ்கள், உதிர - உதிருமாறு, மலர் உண் வேட்கையின் சிதர் உடன் பாய்ந்து சிதர்ந்து உகுப்ப - மலர்த் தேனை உண்ணும் விருப்பினால் வண்டுகள் ஒருங்குகூடிப் பாய்ந்து கிண்டி உதிர்த்திடவும், பொன் செய் கன்னம் பொலிய-பொன்னானியன்ற கன்னத்தட்டு பொலிந்திட, வெள்ளி நுண் கோல் அறை குறைந்து உதிர்வனபோல - வெள்ளியின் மெல்லிய கம்பி அறுத்தலால் குறைந்து உதிர்வனவற்றைப்போல, அரவ வண்டு இனம் ஊது தொறும் - ஒலியினையுடைய வண்டின் கூட்டம் ஊதுந்தோறும், கோங்கு அலர்-கோங்கின் பூவகத்தே, குரவத்து ஓங்குசினை நறுவீ-குரவ மரத்தின் உயர்ந்தசினையிலுள்ள நறியமலர்கள், உறைப்ப-குறைந்துஉதிரவும், துவைத்து எழு தும்பித் தவிர் இசை - ஒலித்து எழுகின்ற வண்டின் விட்டிசைக்கும் ஒலி, உகைத்துவிடு - தெறித்துவிடும், விளரி நரம்பின்-விளரிநரம்பின் ஒலிபோல, இம்என இமிரும்-இம்மென ஒலிக்கும், மான் ஏமுற்ற காமர்வேனில்-மானினங்கள் இன்பமுற்ற அழகிய வேனிலில்,

கடு—க. வெயில் அவிர் புரையும் வீ ததை மராஅத்து-வெயிலின் விளக்கத்தையொக்கும் மலர்கள் செறிந்த மராமரத்திலிருந்து, குயில்

(பாடம்) 1. மரனேமுற்ற. 2. நத்துறந்து.

இடு பூசல் எம்மொடு கேட்ப - குயில் செய்யும் ஆரவாரத்தினை நம்முட னிருந்து கேட்க, வருவேம் என்ற பருவம் - யாம் வருதும் என்று நம் தலைவர் குறித்த இவ்விளவேனிற் பருவம், ஆண்டை இல்லை கொல் என - அவரிருக்குமிடத்தில் இல்லையோ என, மெல்ல நோக்கி நினைந்தனம் இருந்தனமாக - மெல்லெலன ஆராய்ந்து சிந்தித்து இருந்தேமாக;

௧௯—௨௧. நயந்து உள்ளிய மருங்கின் உள்ளம்போல - (திண்மை யுடையோர்) ஒன்றை விரும்பி நினைத்தவிடத்து உள்ளத்தில் நினைந் தவை வந்து சேர்வதுபோல, காதலர் வந்து நின்றனர் - நம் காதலர் வந்து நின்றார்;

௨௧—௪. பல்நாள் அன்னையும் அறிவுற அணங்கி-பலநாளாக நம் அன்னையும் அறிந்திட நம்மை வருத்தி, நல் நுதல் பாய பசலை நோய் - நம் நல்லநெற்றியில் பரவிய பசலைநோய், நம் துறந்து - நம்மைப் பிரிந்து, என் உழியது கொல் - எவ்விடத்துச் சென்றதோ.

(முடிபு) காமர்வேனில் மராஅத்துங் குயிலிடு பூசல் எம்மொடு கேட்ப, (தலைவர் தாம்) வருவேம் என்ற பருவம் ஆண்டை இல்லை கொல்லென மெல்ல நோக்கி நினைந்தனம் இருந்தனமாக, காதலர் வந்து நின்றனர்; நன்னுதற் பாயபசலை நோய் நம் துறந்து எவ்வுழியதுகொல்.

(வி - ரை.) மாக விசும்பு - மாகமாகிய விசும்பு என இருபெய ரொட்டு. மழை தொழில் உலந்தென என்றது கூதிர்க்காலத்தின் கழிவையும், அற்சிரம் நீங்க என்றது பனிக்காலத்தின் கழிவையும், மான் எழுற்ற காமர் வேனில் என்றது, இளவேனிற் பருவத்தின் வருகை யையும் குறிப்பன என்க. முருக்கின் கூர் நுனை இதழெனவும் உகிர் நடுக் கும் இதழ் எனவும் கூட்டுக. சிதர் - வண்டு. சிதர்ந்து - கிண்டி. சிதர் உருத்தலால் இதழ் உதிர என்றுரைத்தலுமாம். கன்னம் - பொற்கொல்ல ரது சிறிய தராசுத்தட்டு. கோங்கலர்க்குக் கன்னமும், குராவின் மலர் அற்று உதிர்வதற்கு வெள்ளிக் கம்பி அற்று உதிர்வனவும் உவமையாம். உகுப்ப, உறைப்ப, இமிரும் வேனில் என இயையும். பருவம் ஆண்டை இல்லைகொல் என என்றது, இருப்பின் நம்மை நோக்கி வாராதிரார் என் னும் கருத்தாலாம் என்க. நோக்கி நினைந்தனம் இருந்தனமாக என்ப தற்குத் தலைவன் உருவை அகத்தே நோக்கி அவரது வருகையை நினைந்து இருந்தேமாக என்றுரைத்தலுமாம். நயந்தாங்கு - ஆங்கு; அசை. உள்ளம்போல - உள்ளத்து உள்ளிய பொருள் வருதல்போல; பசலை ஒழியும் என்னும் துணிவால், என்னுழியதுகொல் என்றாள்.

———

318. குறிஞ்சி

[இரவுக்குறி வந்த தலைமகனை வரவு விலக்கி வரைவு கடாயது]

கான மானதர் யானையும் வழங்கும்
வான மீமிசை உருமுநனி உரறும்
அரவும் புலியும் அஞ்சுதக வுடைய
[1]இரவுச் சிறுநெறி தமியை வருதி
வரையிழி யருவிப் பாட்டோடு பிரசம்
[2]முழவுச்சேர் நரம்பின் இம்மென இமிரும்
பழவிறல் நனந்தலைப் பயமலை நாட
மன்றல் வேண்டினும் பெறுகுவை ஒன்றோ
இன்றுதலை யாக வாரல் வரினே
[3]ஏமுறு துயரம் யாமிவண் ஒழிய
எற்கண்டு பெயருங் காலை யாழநின்
கற்கெழு சிறுகுடி எய்திய பின்றை
ஊதல் வேண்டுமாற் சிறிதே வேட்டொடு
வேய்பயி லழுவத்துப் பிரிந்தநின்
நாய்பயிர் குறிநிலை கொண்ட கோடே.

—கபிலர்.

(சொ - ள்.) இ—ள. வரை இழி அருவிப் பாட்டொடு பிரசம் - மலையினின்றும் வீழும் அருவியொலியுடன் வண்டின் ஒலி கூடி, முழவுச் சேர் நரம்பின் இம் என இமிரும்-தண்ணுமையொலியுடன் கூடிய யாழ் நரம்பின் ஒலிபோல இம்மென்று ஒலிக்கும், பழ விறல் நனந்தலை பயம் மலை நாட - பழைமையான வெற்றியினையும் அகன்ற இடத்தினையும் உடைய பயன் பொருந்திய மலையையுடைய நாட்டிற்குத் தலைவனே!,

க—௪. கானம் மான் அதர் யானையும் வழங்கும் - காட்டிலுள்ள விலங்குகள் செல்லும் நெறியில் யானைகளும் இயங்கும், வானம் மீமிசை உருமும் நனி உரறும்-வானத்தில் மிக உயர்ந்த இடத்தே இடியும் மிகவும் முழங்கும், அரவும் புலியும் அஞ்சு தகவு உடைய-மேலும் அந்நெறிகள் பாம்பினையும் புலியினையும் யாவரும் அஞ்சுமாறு உடையன, சிறு நெறி-இத்தகைய ஒடுங்கிய நெறியில், இரவு - இரவிலே, தமியை வருதி - நீ துணையின்றி வருகின்றனை ;

௮. மன்றல் வேண்டினும் பெறுகுவை - நீ வரைந்து கோடலை விரும்பினும் பெறுவாய், (ஆகவே)

(பாடம்) 1. இரவழங்கு சிறுநெறி. 2. முழவு சேர்.
3. எம்முறு துயரமொடியாமிவ ணொழிய.

அ—கடு. ஒன்று—, இன்று தலையாக வாரல்-இன்றும்தலாக அங்ஙனம் வாராதே (அன்றி), வரினே-நீ வருதியேல், ஏம்உறு துயரம் யாம் இவண் ஒழிய-யாங்கள் இவ்விடத்தில் மயக்கமுறும் துயரத்தின் நீங்குமாறு, என் கண்டு பெயரும் காலை - என்னைக்கண்டு நீங்கும் காலத்து, நின் கல்கெழு சிறுகுடி எய்திய பின்றை - நினது மலைகள் பொருந்திய சிற்றூரை அடைந்த பின்னர், வேய் பயில் அழுவத்து பிரிந்த நின் வேட்டொடு நாய் - வேட்டமாடுங்கால் மூங்கில் மிக்க காட்டில் பிரிந்த நின் வேட்டுவர்களோடு நாய்களை, பயிர் குறி நிலை கொண்ட கோடு-அழைக்கும் குறிப்பினைக் கொண்டுள்ள ஊதுகொம்பினை, சிறிது ஊதல் வேண்டும் - சிறிது ஊதுதல்வேண்டும்.

(முடிபு) பயமலை நாட! யானையும் வழங்கும் உருமும் உரறும்; புலியும் அஞ்சுதகவுடைய; சிறு நெறி இரவில் தமியை வருதி; மன்றல் வேண்டினும் பெறுகுவை; இன்று தலையாக வாரல், வரினே, ஏமுறு துயரம் யாம் இவண் ஒழிய, என் கண்டு பெயருங்காலை நின் சிறுகுடி எய்திய பின்றை அழுவத்துப் பிரிந்த வேட்டொடு நாய் பயிர் கோடு சிறிது ஊதல் வேண்டும்.

(வி - ரை) யானை முதலியன இரவில் வழங்கும் சிறுநெறி எனவும், நீ இரவில் தமியை வருதி எனவும் இரவினை ஈரிடத்தும் கூட்டிப்பொருள் கொள்க. அருவிப்பாடு: பாடு-ஓசை. பிரசம்-வண்டின் இசை. அருவியோசையோடு கூடிய வண்டின் இசை முழவொலியோடு கூடிய நரம்பின் ஒலிபோல ஒலிக்கும் என்க; அருவிக்கு முழவும் பிரசத்திற்கு நரம்பும் உவமம். நீ இரவில் வரும் நெறி ஏதம் மிக்கதாகலானும், நீ மன்றலை விரும்பின் எமர் வரைவெதிர்கொள்வர் ஆகலானும், இன்று முதலாக இரவுக் குறிக்கண் வாரற்க என்றாள். பின்னும் அவன் வரின் தாம் எய்தும் கலக்கத்தை அறிவுறுப்பாளாய், ஏமுறு துயரம் யாமிவண் ஒழிய நின் கோட்டினைச் சிறுகுடி எய்திய பின்றை ஊதல் வேண்டும் என்றாள் என்க. ஒன்று: உறழ்ச்சிப் பொருளில் வந்துளது; அது வாரற்க, ஊதல் வேண்டும் என்பவற்றோடு தனித்தனி சென்றியையும்.

(மே - ள்.) [1]'நாற்றமும் தோற்றமும்' என்னுஞ் சூத்திரத்து, ஆற்றது தீமை அறிவுறு கலக்கமும் என்னும் பகுதிக்கண், கலக்கம் எனப் பொதுப்படக்கூறிய அதனால், ஆற்றிடை ஏதமின்றிச் சென்றமை தோன்ற ஆண்டு ஒரு குறி செய் எனக் கூறுவனவுங் கொள்க என்றுரைத்து, இச் செய்யுளைக் காட்டி, இதனுள், 'வரினே ஏமுறு துயரம் யாமிவண் ஒழிய நின் நாய் பயிர் குறிநிலை கொண்ட கோட்டை ஊதல் வேண்டுமாற் சிறிது' என்றவாறு காண்க என்றார், நச்.

---

1. தொல். களவு. உக.

319. பாலை

[செலவுணர்த்திய தலைமகற்குத் தோழி செலவழுங்கச் சொல்லியது.]

மணிவாய்க் காக்கை [1]மாநிறப் பெருங்கிளை
பிணிவீழ் ஆலத் தலங்குசினை யேறிக்
கோடுவில் எயினர் குறும்பிற் கூக்குங்
கடுவினை மறவர் வில்லிடத் தொலைந்தோர்
படுபிணங் கவரும் பாழ்படு நனந்தலை
அணங்கென உருத்த நோக்கின் ஐயென
நுணங்கிய நுசுப்பின் நுண்கேழ் மாமைப்
பொன்வீ வேங்கைப் புதுமலர் [2]புரைய
நன்னிறத் தெழுந்த சுணங்கணி வனமுலைச்
சுரும்பார் கூந்தற் பெருந்தோள் இவள்வயிற்
பிரிந்தனிர் அகறல் சூழின் அரும்பொருள்
எய்துக மாதோ நுமக்கே கொய்குழைத்
[3]தளிரேர் அன்ன தாங்கரும் மதுகையள்
மெல்லியள் இளையள் நனிபேர் அன்பினள்
செல்வேம் என்னும் நும்மெதிர்
[4]ஒழிவேம் என்னும் ஒண்மையோ இலளே.

—எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார்.

(சொ - ள்.) க—ரு. மணி வாய் காக்கை - கருமணி போன்ற வாயினையுடைய காக்கையின், மா நிற பெருகிளை - கரிய நிறத்தினையுடைய பெரிய சுற்றம், பிணி வீழ் - பிணிப்புற்ற விழுதுகளையுடைய, ஆலத்து அலங்கு சினை ஏறி - ஆலமரத்தின் அசையும் கிளைகளில் ஏறியிருந்து, கொடுவில் எயினர் - வளைந்த வில்லையுடைய எயினராகிய, குறும்பிற்கு ஊக்கும்-குறும்பினின்றும் ஊக்கி எழும், கடுவினை மறவர்-கொடுந்தொழிலையுடைய மறவர், வில்லிடத் தொலைந்தோர் - வில்லால் எய்தலால் இறந்துபட்டோருடைய, படுபிணம் கவரும் - விழுந்து கிடக்கும் பிணங்களைக் கவர்ந்து உண்ணும், பாழ்படு நனந்தலை - பாழ்பட்ட அகன்ற பாலையிடத்தே,

௬—கக. அணங்கு என உருத்த நோக்கின் - தெய்வம் என்னுமாறு வடிவுகொண்ட கண்களையும், ஐ என நுணங்கிய நுசுப்பின்-அழகிதாக மெலிந்த இடையினையும், நுண் கேழ் மாமை - நுண்ணிய மாமை நிறத்தினையும், பொன் வீ வேங்கைப் புதுமலர் புரைய-பொன்போலும் பூக்களையுடைய வேங்கையின் புதிய மலரை யொப்ப, சுணங்கு அணி -

---

(பாடம்) 1 மானிறப். 2 புரையுந். 3. கொய்தழை. 4. ஒழிவோம்.

தேமலையணிந்த, நல் ஆகத்து எழுந்த வனமுலை - நல்ல மார்பின்கண் எழுந்த அழகிய முலையினையும், சுரும்பு ஆர் கூந்தல்-வண்டுமொய்க்கும் கூந்தலையும், பெருந்தோள்-பெரிய தோளினையுமுடைய, இவள் வயின் பிரிந்தனிர் அகறல் சூழின் - இவளிடத்தினின்றும் பிரிந்து அகன்று போதலை எண்ணுதிராயின்,

கக—௪. நுமக்கு அரும்பொருள் எய்துக - உமக்கு அரியபொருள் வந்துறுவதாக, கொய் குழைத் தளிர்ஏர் அன்ன-கொய்யப்பட்ட குழையாகிய அழகிய தளிரினை யொத்த, தாங்கரும் மதுகையள் - பிரிதற்றுன்பினைத் தாங்குதற்கரிய வலியினளும், மெல்லியள் இளையள்-மென்மைத் தன்மையினளும் இளையளும், நனிபேர் அன்பினள் - நும்பால் மிகப் பெரிய அன்பினளுமாகிய இவள், செல்வேம் என்னும் நும் எதிர் - யாம் பிரிந்து செல்வேம் எனும் நுமது எதிரில் நின்று, ஒழிவேம் என்னும் ஒண்மை-பிரிந்து ஆற்றியிருப்பேம் என்று கூறும அறிவுடைமை, இலள் - இல்லாதவள் ஆவள்; (என் செய்வேன்.)

(முடிபு.) பாழ்படு நனந்தலை, இவள் வயிற் பிரிந்தனிர் அகறல் சூழின் நுமக்கு அரும்பொருள் எய்துக, தாங்கரும் மதுகையள், மெல்லியள், இளையள், நனிபேரன்பினள், ஆகிய இவள் செல்வேம் என்னும் நும் எதிர், ஒழிவேம் என்னும் ஒண்மை இலள் (என் செய்வேன்.)

(வி - ரை.) கிளை - கூட்டம். காக்கை இனத்துடன் கூடி உண்ணும் இயல்பினதாகலின் காக்கை பெருங்கிளை கவரும் எனப்பட்டது. ஆலத்து - அத்து: சாரியை. எயினரது குறும்பினைக் கொள்ளுதற்கு ஊக்கி எழும் மறவர் என்றலுமாம். குறும்பு-சிற்றரண். அரும்பொருள் எய்துக என்றது, அதற்கு இடையூறு உண்டாதலும் கூடும் எனக் குறிப்பித்தவாறு. தாங்கரும் மதுகையள் என்பது, தாங்கும் மதுகையில்லாதவள் என்றபடி. இனி இவள் என்னும் பெயருடன் தாங்கரும் மதுகையள், இளையள், அன்பினள், ஒண்மையிலள் என்பனவற்றைத் தனித்தனி பயனிலையாக்கி முடித்தலுமாம்.

---

320. நெய்தல்

[பகற்குறிக்கண் வந்த தலைமகனைத் தோழி வரைவுகடாயது.]

ஓங்குதிரைப் பரப்பின் வாங்குவிசைக் கொளீஇத்
திமிலோன் தந்த கடுங்கண் வயமீன்
தழையணி யல்குற் செல்வத் தங்கையர்
விழவயர் மறுகின் விலையெனப் பகருங்
கானலஞ் சிறுகுடிப் பெருநீர்ச் சேர்ப்ப
மலரேர் உண்கணெந் தோழி எவ்வம்

அலர்வாய் நீங்கநீ அருளாய் பொய்ப்பினும்
நெடுங்கழி துழைஇய குறுங்கால் அன்னம்
அடும்பமர் எக்கர் அஞ்சிறை உளரும்
தடவுநிலைப் புன்னைத் தாதணி பெருந்துறை
நடுங்கயிர் போழ்ந்த கொடிஞ்சி நெடுந்தேர்
வண்டற் பாவை சிதைய வந்துநீ
தோள்புதி துண்ட ஞான்றைச்
சூளும் பொய்யோ கடலறி கரியே.

—மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்.

(சொ - ள்.) ௧—௩. ஓங்கு திரைப் பரப்பின் - உயர்ந்த அலைகளையுடைய கடலில், வாங்கு விசை கொளீஇ - வலையினை விசைத்து இழுத்தலாற் பற்றி, திமிலோன் தந்த - மீன் பிடிக்கும் படகினன் ஆய தமையன் கொண்டுவந்த, கடு கண் வயமீன் - தறுகண்மையுடைய வலிய மீன்களை, தழை அணி அல்குல் செல்வத் தங்கையர் - தழை அணியினை அணிந்த அல்குலையுடைய செல்வமிக்க தங்கைமார், விழவு அயர் மறுகின் - விழாச் செய்யும் தெருக்களில், விலை என பகரும் - இன்ன விலையின என்று கூறி விற்கும், கானல் அம் சிறு குடி - கடற்கரைச் சோலை சூழ்ந்த சிறூர்களையுடைய, பெருநீர்ச் சேர்ப்ப - கடற்கரையையுடைய தலைவனே!,

௬—௭. மலர் ஏர் உண் கண் எம் தோழி எவ்வம் - மலரினை ஒத்த மையுண்ட கண்ணினையுடைய எம் தோழியின் துன்பமும், அலர்வாய் - ஊரார் வாயின் அலரும், நீங்க - நீங்கும்படி, நீ அருளாய் பொய்ப்பினும் - நீ அருள் செய்யாது பொய்த்தாலும்,

அ—௧௪. நெடு கழி துழைஇய குறு கால் அன்னம் - நீண்ட உப்பங்கழியைத் துழவி மீன் பிடித்துண்ணும் குறிய காலினையுடைய அன்னம், அடும்பு அமர் எக்கர் அம் சிறை உளரும் - அடும்பங் கொடி பொருந்திய மணல் மேட்டிலிருந்து தனது அழகிய சிறகினைக் கோதி உலர்த்தும், தடவுநிலை புன்னை தாது அணி பெருதுறை - வளைந்த நிலையினையுடைய புன்னை மரத்தின் பூங்கொடி அழகு செயும் பெரிய துறைக்கண், நடுங்கு அயிர் போழ்ந்த கொடிஞ்சி நெடுதேர் - நெகிழும் நுண்மணலைப் பிளந்து கொண்டு வந்த கொடிஞ்சியையுடைய நீண்ட தேரினை, வண்டல் பாவை சிதைய வந்து - யாங்கள் புனைந்து விளையாடிய வண்டற்பாவை அழிந்திடச் செலுத்திவந்து, நீ தோள் புதிது உண்ட ஞான்றை - நீ இவள் தோளின் நலத்தினைப் புதுவதாக நுகர்ந்த நாளில், கடல் அறி கரி - கடலானது அறியும் சான்றாக, சூளும் பொய்யோ - நீ கூறிய சூளும் பொய்யோ.

(முடிபு) சேர்ப்ப! எம் தோழி எவ்வம் அலர் வாய் நீங்க நீ அருளாய் பொய்ப்பினும், நெடுந்தேர் வண்டற்பாவை சிதைய வந்து நீ இவள் தோள் புதிதுண்ட ஞான்றைக் கூறிய சூளும் பொய்யோ.

(வி-ரை.) வலையினை விசைத்து இழுத்தலால் என ஒரு சொல் வருவித்து உரைக்க. செல்வத் தங்கையர் என்றமையான், திமிலோன் தமையன் ஆயிற்று. விலை எனப் பகரும்-இதற்கு இது விலை எனக்கூறி விற்கும் என்று விரித்து உரைத்துக் கொள்க. எவ்வமும் அலரும் எனும் எண்ணும்மை தொக்கன. நீ அருளாய் பொய்ப்பினும் என்றது, நீ வரைந்துகொண்டு இவளைப் பிரியாதிருக்கின்றிலை என்றபடியாயிற்று. சூளாவது இயற்கைப் புணர்ச்சிக் காலத்து யான் நின்னை வரைந்து கொண்டு இல்லறம் நிகழ்த்துவேன் எனக் கடற்றெய்வம் சான்றாகக் கூறிய சொல். சூள் பிழைத்தல் தகுதியன்றாகலின் அது பிழையாது இவளை வரைந்து கொள்க எனத் தோழி வரைவு கடாயினா ளாயிற்று.

---

321. பாலை

[மகட் போக்கிய செவிலி சொல்லியது.]

பசித்த யானைப் பழங்கண் அன்ன
வறுஞ்சுனை முகந்த கோடைத் தெள்விளி
விசித்துவாங்கு பறையின் விடரகத் தியம்பக்
கதிர்க்கால் அம்பிணை உணீஇய புகலேறு
குதிர்க்கால் இருப்பை வெண்பூ உண்ணாது
ஆண்குரல் விளிக்கும் சேண்பால் [1]வியன்சுரைப்
படுமணி இனநிரை உணீஇய கோவலர்
விடுநிலம் உடைத்த கலுழ்[2]கட் கூவல்
கன்றுடை மடப்பிடி களிறோடு தடவரும்
புன்றலை மன்றத் தங்குடிச் சீறூர்த்
துணையோடு துச்சில் இருக்குங் கொல்லோ
கணையோர் அஞ்சாக் கடுங்கட் காளையொடு
எல்லி முன்னுறச் செல்லுங் கொல்லோ
எவ்வினை செயுங்கொல் நோகோ யானே
அரிபெய்து பொதிந்த தெரிசிலம்பு கழீஇ
[3]யாயறி வுறுதல் அஞ்சி
வேயுயர் பிறங்கல் மலையிறந் தோளே.

—கயமனார்.

(சொ-ள்.) கசு—எ. அரி பெய்து பொதிந்த தெரிசிலம்பு கழீஇ-பரலினையிட்டு மூடிய ஆராய்ந்து கொண்ட சிலம்பினை நீக்கி, யாய் அறி

(பாடம்) 1. வியன் சுவல். 2. கற்கூவல்.
3. யாயறிந் துணர்தல் அஞ்சி.

வுறுதல் அஞ்சி - தன் தாய் அறிதலை அஞ்சி, வேய் உயர் பிறங்கல் மலை இறந்தோள் - மூங்கில் உயர்ந்த பக்கமலையையுடைய மலையைத் தன் தலைவனுடன் கடந்து சென்ற என் மகள்,

௧—௬. பசித்த யானைப் பழங்கண் அன்ன-பசியுற்ற யானையின் பொலிவற்ற கண்போன்ற, வறு சுனை முகந்த கோடைத் தெள்விளி - நீரற்ற சுனையுட் புகுந்துவரும் மேல்காற்றின் தெளிந்த ஒலி, விசித்து வாங்கு பறையின் விடர் அகத்து இயம்ப-தோலினை இழுத்துக் கட்டிய பறையொலிபோல மலைப்பிளப்பில் ஒலிக்க, கதிர்கால் அம்பிணை உணீஇய-மெலிந்து நீண்ட காலினையுடைய அழகிய பெண்மான் உண்ணுதற்கு, புகல் ஏறு - அதன்பால் விருப்பம் மிக்க கலைமான், குதிர்கால் இருப்பை வெண் பூ உண்ணாது - குதிர்போன்ற அடிமரத்தினையுடைய இருப்பை மரத்தின் வெள்ளிய பூவினைத் தான் உண்ணாது, ஆண்குரல் விளிக்கும்-தனது ஆண்குரல் தோன்ற அதனை அழைக்கும், சேண்பால்-சேய்மைக்கண்ணுள்ள,

௬—௧௦. வியன் சுரை படுமணி இனம் நிரை உணீஇய - பெரிய மடியினையும் ஒலிக்கும் மணியினையுமுடைய கூட்டமாய ஆனிரைகள் பருக, கோவலர் - ஆயர், விடுகிலம் உடைத்த கலுழ்கண் கூவல் - தரிசு நிலத்தே கற்களை உடைத்து இயற்றிய பில்கும் ஊற்றுக் கண்ணினையுடைய கிணற்றினை, கன்று உடை மடப்பிடி களிறொடு தடவரும் - கன்றினையுடைய இளையபிடி தன் களிற்றுடன் கூடித்தடவிப்பார்க்கும், புன்தலை மன்றத்து அம் குடி சீறூர் - பொலிவற்ற இடத்தினையுடைய மன்றினையும் அழகிய குடியிருப்பினையும் உடைய சீறூரின் கண்ணே,

௧௧—௪. எல்லி துணையொடு துச்சில் இருக்குங்கொல் - இரவில் தன் துணைவனுடன் ஓர் ஒதுக்கிடத்தே தங்கியிருப்பாளோ (அன்றி அவ் விரவில்), கணையோர் அஞ்சாக் கடுங்கண் காளையொடு-அம்பினை எய்யும் ஆறலைப்போரை அஞ்சாத தறுகண்மையையுடைய காளையாய தன் தலைவனுடன், முன் உறச் செல்லும்கொல்-அவன் முன்னே நடந்து செல்லுவாளோ, எ வினை செயும் கொல் - என்ன காரியத்தினைச் செய்வளோ?, யான் நோகு - யான் நோவேனாகின்றேன்.

(முடிபு) யாய் அறிவுறுதலஞ்சி சிலம்பு கழீஇ மலையிறந்தோள், சேண் பால் சீறூர் எல்லி துணையொடு துச்சில் இருக்குங்கொல், காளையொடு முன்னுறச் செல்லுங் கொல், எவ்வினை செயுங்கொல்? யான் நோகு.

(வி-ரை.) பசியால் வாடிய யானையின் கண் குழிந்து பசையின்றி யிருத்தலின் அதனை வறுஞ்சுனைக்கு உவமை கூறினார். விசித்து வாங்கு பறை-கடிப்பினை இழுத்து ஒலிப்பிக்கும் இழுகு பறை என்றுமாம். இருப்பையின் பூ, பிணையும் தானும் உண்பதற்குப் போதியதன்றாகலின், பிணையை மாத்திரம் உண்பிக்க வேண்டிய கலைமான், தான் அதனை உண்ணாமலே பிணையை விளிக்கும் என்றார். ஆண்குரல் விளிக்கும் என்றது, பிணை ஏதமின்றெனத் துணிந்து வருதற்குத்தனது ஆண்மைத்

தன்மையுடைய குரலால் விளிக்கும் என்றபடி. சேண்பாலுள்ள சீறூர் எனக் கூட்டுக. வியன் சுவல் என்பது பாடமாயின் பெரிய கழுத்தின் கண் (பொருந்திய மணி) என்றுரைக்க. விடுநிலம் - பயிர் செய்யாது விடப்பட்ட நிலம். கன்றுடை மடப்பிடிகளொடு தடவரும் என்றதனால் அவற்றுள் ஒன்றேனும் உண்பதற்கு நீரில்லாமை பெற்றும். துச்சில் - பிறர் மனையில் உள்ள ஒதுக்கிடம். இத்தகைய காட்டின் கண்ணுள்ள சீறூரில் இராப்பொழுது துணைவனொடு துச்சில் இருத்தல் அன்றி அவனுடன் நடந்து செல்லுதல் ஆய இரண்டும் துன்பம் விளைப்பனவே என்பாள் எவ்வினை செயுங்கொல் நோகோ யானே என்றாள்.

---

322. குறிஞ்சி

[அல்லகுறிப்பட்டுப் போகின்ற தலைமகன் தன் னெஞ்சிற்குச் சொல்லியது.]

வயங்குவெயில் ஞெமியப் பாஅய் மின்னுவசிபு
மயங்குதுளி பொழிந்த பானாட் கங்குல்
ஆராக் காமம் அடூஉநின் றலைப்ப
இறுவரை வீழ்நரின் நடுங்கித் தெறுவரப்
பாம்பெறி கோலிற் றமியை வைகித்
தேம்புதி கொல்லோ நெஞ்சே உருமிசைக்
களிறுகண் கூடிய வாண்மயங்கு ஞாட்பின்
ஒளிறுவேற் றானைக் கடுந்தேர்த் திதியன்
வருபுனல் இழிதரு மரம்பயில் இறும்பிற்
பிறையுறழ் மருப்பிற் கடுங்கட் [1]பன்றிக்
குறையார் கோடுவரி குழமுஞ் சாரல்
அறையுறு தீந்தேன் குறவர் அறுப்ப
முயலுநர் முற்றா ஏற்றரு நெடுஞ்சிமைப்
புகலரும் பொதியில் [2]போலப்
பெறலருங் குரையணம் அணங்கி யோளே.

—பரணர்.

(சொ - ர்.) கூ. நெஞ்சே!

(கரு.) நம் அணங்கியோள் - நம்மை இங்ஙனம் வருத்திய நம் காதலி.

சு—கரு. உரும் இசை களிறு கண்கூடியவாள் மயங்கு ஞாட்பின் - இடிபோன்ற முழக்கினையுடைய ஆண்யானைகள் திரண்ட வாட்கள்

(பாடம்) 1. பன்றி குறையாக் கொடுவரி. 2. போலும்.

பின்னிய போர்க்கண்ணே, ஒளிறுவேல்தானை கடுந்தேர் திதியன் - விளங்கும் வேலினையுடைய சேனையினையும் கடிய தேரினையும் உடைய திதியன் என்பானது, வருபுனல் இழிதரு மரம் பயில் இறும்பில் - மலையினின்று வரும் அருவி விழும் மரங்கள் நெருங்கிய காட்டில், பிறை உறழ் மருப்பின் கடுங்கண் பன்றி - பிறைமதியினை யொத்த கோட்டினையும் அஞ்சாமையினையுமுடைய பன்றியினது, குறை ஆர் கொடுவரி குழுமும் சாரல் - இறைச்சித் துண்டினைத் தின்ற புலிகள் கூடி முழங்கும் பக்கமலையினையும், அறை உறு தீம் தேன் அறுப்ப முயலுநர் குறவர் - உச்சிப்பாறையில் உள்ள இனிய தேனை அறுத்தெடுக்க முயலும் குறவர்களும், முற்று - எய்தியறியாத, ஏற்று அருநெடு சிமை - ஏறுதல் அரிய நீண்ட உச்சிமலையினையுமுடைய, புகல் அரும் பொதியில் போல் - புகுதற் கரிய பொதியில் மலையினைப்போல, பெறல் அருங்குரையள் - பெறுதற்கு அருமையாயவள் அன்றே! (அதனை உணராது,)

க—க. வயங்கு வெயில் ஞெமிய பாஅய் - விளங்கும் வெயில் மறையவே (மேகம்) பரந்து, மின்னு வசிபு - மின்னல் பிளந்திட, மயங்கு துளி பொழிந்த - மிக்க மழையைச் சொரிந்த, பானாட் கங்குல் - நடு இரவில், ஆராக் காமம் அடூஉ நின்று அலைப்ப - அமையாத காமம் வருத்தா நின்று அலைத்திட, இறு வரை வீழ்நரின் - மலை முகட்டினின்று வீழ்ந்திறப்பார் போல, தெறு வர நடுங்கி - அச்சம் உண்டாக நடுங்கி, பாம்பு எறி கோலின் - கோலால் அடிக்கப்பட்ட பாம்புபோல், தமியை வைகி - வேறு துணையின்றியிருந்து, தேம்புதி கொல்லோ - வாடுவையோ,

(முடிபு) நெஞ்சே! நம் அணங்கியோள், பொதியில் போலப் பெறலருங்குரையள்; (அதனை உணராது) பானாட் கங்குல் ஆராக் காமம் அடூஉ நின்றலைப்ப, நடுங்கி, கோலெறி பாம்பின் தேம்புதி கொல்லோ.

(வி - ரை.) மேகம் பாஅய் என வருவித்துரைக்க. வசிபு - வசிய எனத் திரிக்க. காமம் அடூஉ நின்று அலைப்ப என்பதனை இரட்டுற மொழிதலாக்கொண்டு, அலைத்தலால் வீழ்நர்போல எனவும் அலைத்தலால் நடுங்கி எனவும் கொள்க. இறுவரை - மலையின் இறுவாய். பாம்பெறி கோலின் என்பதனைக் கோல் எறி பாம்பின் என மாறுக. அடியுண்ட பாம்பு செயலற்றுக் கிடப்பதுபோல, நீயும் செயலற்றுக் கிடத்தியோ என்பான் பாம்பு எறி கோலின் தேம்புதி கொல்லோ என்றான். களிறு கண் கூடிய : கண், அசை. திதியனது பொதியில் எனவும், சாரலினையும் சிமையினையுமுடைய பொதியில் எனவும் கூட்டுக. பன்றிக்குறை - பன்றியின் தசை, ஆர்தல் - உண்டல். பன்றி குறையாக் கொடுவரி என்பது பாடமாயின் பன்றியைக் கொன்று புலி (முழங்கும்) என்க. தீந்தேன் அறுப்ப முயலுநர் குறவர் முற்று எனக் கொண்டு கூட்டுக. குறவரும் முற்று எனச் சிறப்பும்மை தொக்கதாகக் கொள்க.

323. பாலை

[பிரிவின்கண் வேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறுத்தியது]

இம்மென் பேரலர் இவ்வூர் நம்வயிற்
செய்வோர் ஏச்சொல் வாடக் காதலர்
வருவர் என்பது [1]வாய்வ தாகல்
ஐய செய்ய மதனில சிறியநின்
அடிநிலன் உறுதல் அஞ்சிப் பையத்
தடவரல் ஒதுக்கந் தகைகொள இயலிக்
காணிய வம்மோ கற்புமேம் படுவி
பலவுப்பல தடைஇய வேய்பயி லடுக்கத்து
யானைச் செல்லினம் கடுப்ப வானத்து
வயங்குகதிர் மழுங்கப் பாஅய்ப் பாம்பின்
பைபட இடிக்குங் கடுங்குரல் ஏற்றோடு
ஆலி யழிதுளி தலைஇக்
கால்வீழ்த் தன்றுநின் கதுப்புறழ் புயலே.

—புறநாட்டுப் பெருங் கொற்றனார்.

(சொ - ள்.) ௭. கற்பு மேம்படுவி-கற்பினால் மேம்பட்ட தலைவியே,

௮—௧௩. பலவு பல தடைஇய-பலாமரங்கள் பல திரண்டுள்ள, வேய் பயில் அடுக்கத்து-மூங்கில் நெருங்கிய பக்க மலையில், யானை செல் இனம் கடுப்ப-செல்லுகின்ற யானைக் கூட்டத்தினைப் போல, வானத்து-வானின் கண், வயங்கு கதிர் மழுங்க பாஅய்-விளங்கும் ஞாயிறு மழுங்குமாறு பரவி, பாம்பின் பைபட இடிக்கும் கடு குரல் ஏற்றோடு-பாம்பினது படம் அழிய இடிக்கும் கடிய குரலினையுடைய இடியேற்றுடன், ஆலி அழி துளி தலைஇ-நீர்க்கட்டியுடன் கூடிய மிக்க துளிகளைப் பெய்து, நின் கதுப்பு உறழ் புயல் - நின் கூந்தலை யொத்த மேகம், கால் வீழ்த்தன்று - கால் இறக்கியது;

௧—௩. இம் என் பேர் அலர்-இம்மென்று எழும் பெரிய அலரினை, இ ஊர்-இவ்வூரின்கண், நம்வயின் செய்வோர் - நம்பாற் செய்வோரது, ஏ சொல் வாட-செருக்குற்ற சொல் அழிய, காதலர் வருவர் என்பது - நம் காதலர் வந்து விடுவர் என்பது, வாய்வது ஆகல்-உண்மை யாதலை,

௪—௭. நின் - நினது, ஐய செய்ய மதன் இல சிறிய அடி-அழகிய சிவந்த வலியற்ற சிறிய அடிகள், நிலன் உறுதல் அஞ்சி - நிலத்திற் பொருந்துதலை அஞ்சி, பைய - மெல்லென, தடவரல் ஒதுக்கம் தகை கொள இயலி - உடல் வளைந்து நடக்கும் நடை அழகு பெற நடந்து, காணிய வம்மோ - காணுதற்கு வருவாயாக.

(பாடம்) 1. வாயவதாக, வைய.

(முடிபு) கற்பு மேம்படுவி, புயல்கால் வீழ்த்தன்று; பேர் அலர் நம் வயிற் செய்வோர், ஏச்சொல் வாடக் காதலர் வருவரென்பது வாய்வதாகல், தகைகொள இயலி, காணிய வம்மோ.

(வி - ரை.) இம்மென் பேரலர்-இடைவிடாத பெரிய அலர் என்க. ஏச்சொல்-ஏக்கழுத்தமுடைய சொல், தருக்குடைய சொல். வாடுதல்-ஒழிதல். வாய்வதாகல் காணிய வம்மோ எனவும் தகை கொள இயலி வம்மோ எனவும் கூட்டுக. தடவரல் - வளைவு. ஒதுக்கம் - நடை. வானத்து வயங்கு கதிர் எனவும், வானத்துப் பாஅய் எனவும் வானம் என்பது ஈரிடத்தும் சென்று இயையும். புயல் கால் வீழ்த்தன்று ஆகலால், இனி, கார்காலத் தொடக்கத்தே காதலர் வருதல் உண்மை என வேனிலின் இறுதிக்கண் தோழி தலைவியை வற்புறுத்தினள் என்க.

---

324. முல்லை

[வினைமுற்றிய தலைமகன் கருத்துணர்ந்து உழையர் சொல்லியது.]

விருந்தும் பெறுகுநள் போலுந் திருந்திழைத்
தடமென் பணைத்தோள் மடமொழி யரிவை
தளிரியற் கிள்ளை இனிதின் எடுத்த
[1]வளராப் பிள்ளைத் தூவி யன்ன
[2]வார்பெயல் வளர்த்த பைம்பயிர்ப் புறவிற்
பறைக்கண் அன்ன நிறைச்சுனை தோறுந்
துளிபடு மொக்குள் துள்ளுவன சாலத்
தொளிபொரு பொகுட்டுத் தோன்றுவன மாய
வளிசினை யுதிர்த்தலின் வெறிகொள்பு தாஅய்ச்
சிரற்சிற கேய்ப்ப அறற்கண் வரித்த
வண்டுண் நறுவீ துமித்த நேமி
தண்ணில மருங்கிற் போழ்ந்த வழியுள்
நிரைசெல் பாம்பின் விரைபுநீர் முடுகச்
செல்லும் நெடுந்தகை தேரே
முல்லை மாலை நகர்புகல் ஆய்ந்தே.

—ஒக்கூர் மாசாத்தியார்.

(சொ - ள்.) ௩—௧௯. தளிர் இயல் கிள்ளை - தளிரின் இயல் வாய்ந்த கிளி, இனிதின் எடுத்த-இனிது வளர்த்த, வளராப்பிள்ளை தூவி அன்ன-இளைய பார்ப்பின் சிறகினை யொத்த, வார் பெயல் வளர்த்த பை

(பாடம்) 1. வளரிளம் பிள்ளை. 2. உளர் பெயல்.

பயிர் புறவில்-பெய்யும் மழை வளர்த்த பசிய பயிரினையுடைய காட்டில்,
பறை கண் அன்ன நிறைச்சுனை தோறும் - பறையின் கண் போன்ற
நிறைதலையுடைய சுனைகள் தோறும், துளிபடு மொக்குள் துள்ளுவன
சால - மழை பெய்தலால் உண்டாகிய குமிழிகள் குதிப்பனவற்றை
யொப்ப, தொளிபொரு பொகுட்டு தோன்றுவன மாய - சேற்றின்
கண்ணே பொருதலால் எழும் குமிழிகள் தோன்றி மறைய, வளிசினை
உதிர்த்தலின் வெறி கொள்பு தாஅய் - சினையினின்றும் காற்று உதிர்த்
தலால் மணம் கொண்டு பரந்து, சிரல் சிறகு ஏய்ப்ப அறல்கண் வரித்த-
சிச்சிலிப்பறவையின் சிறகினை யொப்ப அறலினிடத்துக் கோலம் செய்த,
வண்டு உண் நறுவீ துமித்த நேமி - வண்டுகள் தேன் உண்ணும் நறிய
பூக்களை அறுத்து ஏகிய தேருருள், தண் நில மருங்கில் போழ்ந்த வழி
யுள் - குளிர்ந்த நிலத்திடத்தே பிளந்து சென்ற சுவட்டில், நிரை செல்
பாம்பின் விரைவு நீர் முடுக - ஒன்றன்பின் ஒன்ருக வரிசை யுற்றுச்
செல்லும் பாம்பு போல விரைந்து நீர் முடுகிச் செல்ல, முல்லை மாலை நகர்
புகல் ஆய்ந்து - முல்லை மலரும் மாலைக் காலத்தே நகரின்கண் புகுதலை
ஆய்ந்துணர்ந்து, நெடுந்தகை தேர் செல்லும்-பெருந்தகையாய தலைவன்
தேர் செல்லாநிற்கும்;

க—உ. திருந்து இழை தடமென் பணைதோள் மடமொழி அரிவை-
திருந்திய அணியினையும் பெரிய மென்மை வாய்ந்த மூங்கில் போலும்
தோளினையும் மடப்பம் வாய்ந்த மொழியினையு முடைய தலைவி, விருந்
தும் பெறுகுநள் போலும்-இன்று விருந்தயர்தலும் பெறுவாள் போலும்.

(முடிபு) நெடுந்தகை தேர், புறவில், தொளி பொரு பொகுட்டுத் தோன்றுவன
மாய, நேமி போழ்ந்த வழியுள் நிரை செல் பாம்பின் விரைபு நீர் முடுக, மாலை,
நகர் புகல் ஆய்ந்து செல்லும்; அரிவை விருந்தும் பெறுகுநள் போலும்.

(வி - ரை.) அரிவை விருந்தும் பெறுகுநள் போலும் என்க.
விருந்தும் : உம்மை சிறப்பு. வளர் இளம்பிள்ளை என்னும் பாடத்திற்கு
வளர்தற்குரிய இளம் பிள்ளை என்க. சால - ஒப்ப என்னும் பொருட்டு.
தொளி-சேறு. பொருட்டு-கலங்கல் நீரில் எழும் குமிழி. தலைவன் தேர்
ஏறிச் செல்வன் என்றதனை, தலைவனது தேர் செல்லும் என்ருர். செல்
லும் ஆகலின் விருந்தும் பெறுகுநள் போலும் என இயைத்துரைக்க.

(மே - ள்.) [1]'ஆற்றது பண்பும்' என்னுஞ் சூத்திரத்து, தலைவன்
மீளுங்கால் விருந்து பெறுகுவள் கொல்லென இளையோர் தலைவி நிலை
யுரைத்தலுக்கு இச்செய்யுளைக் காட்டினர், நச்.

---

1. தொல். கற் : உக.

325. பாலை

[¹கொண்டு நீங்கக் கருதி யொழிந்த தலைமகன் பிரிவின்கண் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.]

அம்ம வாழி தோழி காதலர்
வெண்மணல் நிவந்த பொலங்கடை நெடுநகர்
நளியிருங் கங்குற் புணர்குறி வாய்த்த
களவுங் கைம்மிக ²வளர்ந்தன் றன்னையும்
உட்கொண் டோவாள் காக்கும் பிற்பெரிது
இவணுறை வெவனே அளியளென் றருளி
ஆடுநடைப் பொலிந்த புகற்சியின் ³நாடுகோள்
அள்ளனைப் பணித்த அதியன் பின்றை
வள்ளுயிர் மாக்கிணை ⁴கண்ணவிந் தாங்கு
மலைகவின் அழிந்த கனைகடற் றருஞ்சுரம்
வெய்ய மன்றநின் வையெயி றுணீஇய
தண்மழை யொருநாள் தலைஇய ஒண்ணுதல்
ஒல்கியல் அரிவை நின்னொடு செல்கஞ்
சின்னாள் ஆன்றனை யாகெனப் பன்னாள்
உலைவில் உள்ளமொடு வினைவலி ⁵யுறீஇ
எல்லாம் பெரும்பிறி தாக வடாஅது
⁶நல்வேற் பாணன் நன்னாட் டுள்ளதை
வாட்கண் வானத் தென்றூழ் நீளிடை
ஆட்கொல் யானை அதர்பார்த் தல்கும்
சோலை அத்தம் மாலைப் போகி
ஒழியச் சென்றோர் மன்ற
பழியெவன் ஆங்கொல் நோய்தரு பாலே.

—மாமூலனார்.

(சொ - ள்.) க—சு. தோழி—, வாழி—, அம்ம - யான் கூறுவதனைக் கேட்பாயாக, காதலர் - நம் காதலர், வெண்மணல் நிவந்த - வெள்ளிய மணல் உயர்ந்த, பொலன் கடை நெடு நகர் - பொலிவு பெற்ற வாயிலையுடைய பெரிய மனையின்கண், நளி இரு கங்குல் - இருள்செறிந்த நீண்ட இரவில், புணர் குறி வாய்த்த - புணரும் குறி அமைந்த, களவும் - களவொழுக்கமும், கைமிக வளர்ந்தன்று - வரம்பிகந்து நீண்டது,

(பாடம்) 1. தலைமகன் குறிப்பறிந்த தோழி, தலைமகட்குச் சொல்லியது.
2. வலந்தன்று. 3. நாடு, கொள்ளைப் பணித்த.
4. கண்ணவிந்தன. 5. உறீஇய. 6. பல்வேற் பாணன்.

அன்னையும்—, உட்கொண்டு - இக் களவினை உள்ளத்திற்கொண்டு, ஓவாள் காக்கும் - நீங்காதவளாகிக் காவல் செய்திருக்கும், பின் பெரிது இவண் உறைவு எவன் - பின்னர் மிகவும் இங்குத் தங்கியிருத்தல் எங்ஙனம் இயல்வதாகும், அளியள் - இரங்கத்தக்காள், என்று அருளி - என்று இரக்கமுற்று,

எ—கச. ஆடு நடைப் பொலிந்த புகற்சியின்-வென்றி யொழுக்கத்தால் மேம்பட்ட விருப்பத்தினால், அள்ளனை நாடுகோள் பணித்த - அள்ளன் என்பானை நாட்டினைக் கொள்ளுமாறு பணித்த, அதியன் பின்றை - அதியன் என்பான் துஞ்சிய பின்பு, வள் உயிர் மா கிணை கண் அவிந்தாங்கு-சிறந்த ஒலியினையுடைய பெரிய கிணையானது ஒலி அடங்கினாற்போல, மலை கவின் அழிந்த கனை கடற்று அருசுரம் - மலையின் அழகு ஒழிந்த செறிந்த காடாகிய அரிய பாலைவழிகள், வெய்ய மன்ற - ஒரு தலையாகக் கொடியன, நின் வை எயிறு உணீஇய - நின் கூரிய பற்கள் நீர் பருகுமாறு; தண் மழை ஒருநாள் தலை இய - குளிர்ந்த மழை ஒருநாள் பெய்வதாக, ஒள் நுதல் ஒல்கு இயல் அரிவை-ஒளிபொருந்திய நெற்றியினையும் தளரும் இயலினையுமுடைய அரிவையே, நின்னொடு செல்கம் - பின் நின்னுடன் செல்வேம், சிலநாள் ஆன்றனை ஆக என - சில நாள் அமைந்திருப்பாயாக என்று,

கச—கூ. பல் நாள் உலைவு இல் உள்ளமொடு-பலகாலம் தளர்தலில்லாத ஊக்கத்துடன், வினை வலி யுறீஇ - கொண்டுதலைக் கழிதலாகிய வினையை வற்புறுத்துரைத்து, எல்லாம் பெரும் பிறிதாக-அவையெல்லாம் அழிந்துபோக,

கக—உக. வடா அது-வடக்கின்கண், நல் வேல் பாணன் நல்நாட்டுள்ளதை-நல்ல வேலையுடைய பாணனது சிறந்த நாட்டின்கண் உள்ளதாய, வாள் கண் வானத்து என்றூழ் நீள் இடை - ஒளிபொருந்திய வானின் கண்ணாகிய ஞாயிற்றின் வெம்மைமிக்க நீண்ட சுரத்திலே, ஆள் கொல்யானை - நெறிச்செல்வோர்களைக் கொன்றிடும் யானை, அதர் பார்த்து அல்கும்-வழியினைப் பார்த்துத் தங்கியிருக்கும், சோலை அத்தம் மாலைபோகி - சோலைகளையுடைய காட்டு நெறியில் மாலைக்காலத்தே போய், ஒழிய சென்றோர்-நாம் இவண் ஒழிந்திருக்கச்சென்றோர் ஆதலின்,

உக—உ. நோய் தரு பால் - நோயினைச் செய்யும் பகுதியால், மன்ற - ஒரு தலையாக, பழி எவன் ஆம் கொல் - யாது பழி உண்டாகுமோ.

(முடிபு) தோழி! வாழி! காதலர், களவும் கைமிக வளர்ந்தன்று. அன்னையும் உட்கொண்டு ஓவாள் காக்கும்; பின்பெரிது இவண் உறைவு எவனோ; அளியள்; என்றருளி, அருஞ்சுரம் வெய்ய நின்எயிறு உணீஇய மழை ஒருநாள் தலைஇய; அரிவை! நின்னொடு செல்கம்; சின்னாள் ஆன்றனையாகென வினைவலி யுறீஇ, எல்லாம் பெரும்பிறிதாக, என்றூழ் நீளிடை அத்தம்மாலைப்போகி, ஒழியச் சென்றோர்; நோய்தருபால் மன்ற பழி எவன் ஆங்கொல்.

(வி - ரை.) கங்குற் புணர் குறி வாய்த்த என்றது, இரவுக் குறிக்கண் புணர்தல் அமைந்த என்றபடி. 'ஆடுநடை......அதியன்' என்பதி லிருந்து, அள்ளன் என்பான் தனக்கு வெற்றியை அளித்தான் என்ற மகிழ்ச்சியால், அதியன் என்பவன் அவனுக்குப் பரிசிலாக நாடு நல்கினன்போலும் எனக் கருதப்படுகின்றது. அதியன் துஞ்சியபின்பு என்பது கிணை கண்ணவிர் தாங்கு என்பதனாற் பெற்றாம். கண்-கிணையின் அடிக்கப்படும் இடம். கண் அவிதல் - அடிபடாதொழிதல். கிணை கண்ணவிந்தாங்கு மலை கவினழிந்த என்க. எயிறு : வாய்க்கு ஆகு பெயர். பெரும் பிறிதாக - அழிந்தொழிய. வாட்கண் வானத்து, ஒளி பொருந்திய வானின்கண் என்க. வான்கண் - ஞாயிறு; [1]'வான்கண் விழியா வைகறை யாமத்து' என்பது காண்க. நமக்கு நோயைச் செய்யும் பகுதியால் அவருக்கு யாது பழியுண்டாகுமோ என்று தலைவி தோழிக்குக் கூறினாள் என்க. நமக்கு வரும்பழி என்னை என்றாளும் ஆம்.

---

326. மருதம்

[தோழி தலைமகனை வாயில் மறுத்தது]

[2]ஊரல் அவ்வாய் உருத்த தித்திப்
பேரமர் மழைக்கட் பெருந்தோட் சிறுநுதல்
நல்லள் அம்ம குறுமகள் செல்வர்
கடுந்தேர் குழித்த ஞெள்ளல் ஆங்கண்
நெடுங்கொடி நுடங்கும் அட்ட வாயில்
இருங்கதிர்க் கழனிப் பெருங்கவின் அன்ன
நலம்பா ராட்டி நடையெழிற் பொலிந்து
விழவிற் செலீஇயர் வேண்டும் வென்வேல்
இழையணி யானைச் சோழன் மறவன்
கழையளந் தறியாக் காவிரிப் படப்பைப்
[3]புனன்மலி புதவிற் போஒர் கிழவோன்
பழையன் ஓக்கிய வேல்போற்
பிழையல கண்ணவள் நோக்கியோர் திறத்தே.

—பரணர்.

(சொ - ள்.) க—ங. ஊரல் அ வாய் உருத்த தித்தி - ஊரலாகிய அழகுவாய்ந்த உருப்பெற்ற தேமலையும், பேர் அமர் மழை கண்-பெரிய அமர் செய்யும் குளிர்ந்த கண்களையும், பெரு தோள் சிறு நுதல்-பெரிய தோளினையும் சிறிய நெற்றியினையும் உடைய, குறுமகள் - நின் இளைய பரத்தை, நல்லள் அம்ம-அழகிற் சிறந்தாளாவள்; (ஆகலின் தலைவ!)

---

1. சிலப். ௧௦: ௧. (பாடம்) 2. ஊறலவ்வாய். 3. புனன்மலி புறவிற்.

௪—௬௬. வென் வேல் இழை அணி யானை சோழன் மறவன் - வெற்றி பொருந்திய வேலையும் அணிகலன் அணிந்த யானையையு முடைய சோழனின் படைத்தலைவனும், கழை அளந்து அறியா காவிரி படப்பை - ஓடக் கோலால் ஆழம் அளந்தறியப்படாத காவிரியின் கரையினைச் சார்ந்த தோட்டங்களையும், புனல்மலி புதவின் - நீர் நிறைந்து ஓடும் மதகுகளையும் உடைய, போஓர் கிழவோன் - போர் என்னும் ஊருக்குத் தலைவனுமாகிய, பழையன் - பழையன் என்பான், ஒக்கிய வேல் போல - பகைவர் மீது செலுத்திய வேல் போல, அவள் நோக்கியோர் திறத்து - அவளாற் பார்க்கப் பெற்றார் பக்கல், கண் பிழையல - அவள் கண்கள் தைத்தல் தப்பா;

௩—௮. செல்வர் கடுந்தேர் குழித்த ஞெள்ளல் ஆங்கண் - செல்வர்களது விரைந்து செல்லும் தேர் குழித்த தெருக்களிடத்தே, நெடுகொடி நுடங்கும் அட்டவாயில் - நீண்ட கொடிகள் அசையும் அட்டவாயில் என்னும் ஊரிடத்தேயுள்ள, இரு கதிர் கழனி பெருகவின் அன்ன - நீண்ட கதிர்களுடைய வயல்களின் பெரிய அழகினை யொத்த, நலம் பாராட்டி, அவளது அழகினைப் பாராட்டி, நடை எழில் பொலிந்து - அழகிய நடையால் விளக்கமுற்று, விழவில் செலீஇயர் வேண்டும் - அவளுடன் புனல் விழாவின்கண் செல்லுதல் நினக்குத் தகுவதாகும்.

(முடிபு) தலைவ! குறுமகள் நல்லள் அம்ம; போஓர் கிழவோன் பழையன் ஒக்கிய வேற்போல, அவள் நோக்கியோர் திறத்துக் கண் பிழையல; அவள் நலம் பாராட்டி, நடை எழிற் பொலிந்து, விழவிற் செலீஇயர் வேண்டும்.

(வி - ரை) ஊரல் - தேமல் வகை. ஊரலாகிய தித்தி என்க. அம்ம: அசை. குறுமகள் நல்லள் என்றமையால், யாம் முதுமையும் அழகின்மையும் உடையேம் எனப் புலந்து கூறியவாறு. நுடங்கும் மட்டவாயில் எனப் பிரித்தற்கும் இடம் உண்டு. நடை எழிற்பொலிந்து என்றது, பெருமிதத்துடன் இருவரும் ஒருங்கு நடக்கும் நடையில் விளக்கமுற்று என்றபடி. செலீஇயர்: தொழிற்பெயர். பழையன் பகைவரிடத்து ஒக்கிய வேல் பிழையாமை [1]'போஓர் கிழவோன், பழையன் வேல்வாய்த் தன்னநின், பிழையா நன்மொழி' எனப் பிறண்டும் வருதல் காண்க. பிழையல கண் என்றது, நீ அவளை விட்டு நீங்குதல் அரிது என்றபடி.

---

327. பாலை

[பொருள் கடைக் கூட்டிய [2]நெஞ்சினைக் கழறியது.]

இன்பமும் இடும்பையும் புணர்வும் பிரிவும்
நன்பகல் அமையமும் இரவும் போல
வேறுவே றியல ஆகிமா றெதிர்ந்து
உளவென உணர்ந்தனை யாயின் ஒரூஉம்

---

1. நற். ௧௦. (பாடம்) 2. நெஞ்சிற்குத் தலைமகன் சொல்லியது

இன்னா வெஞ்சுரம் நன்னசை துரப்பத்
துன்னலுந் தகுமோ துணிவில் நெஞ்சே
நீசெல வலித்தனை யாயின் யாவதும்
[1]நினைதலுஞ் செய்தியோ எம்மே கனைகதிர்
ஆவி அவ்வரி நீரென [2]நசைஇ
மாதவப் பரிக்கும் மரல்திரங்கு நனந்தலைக்
களர்கால் யாத்த கண்ணகன் பரப்பிற்
செவ்வரைக் கொழிநீர் கடுப்ப அரவின்
அவ்வரி யுரிவை அணவரு மருங்கிற்
புற்றரை யாத்த புலர்சினை மரத்த
மைந்நிற உருவின் மணிக்கட் காக்கை
பைந்நிணங் கவரும் படுபிணக் கவலைச்
சென்றோர் செல்புறத் திரங்கார் கொன்றோர்
கோல்கழிபு இரங்கும் அதர
வேல்பயில் அழுவம் இறந்த பின்னே.

—மருங்கூர்ப்பாகைச் சாத்தன் பூதனார்.

(சொ-ள்.) சு. துணிவு இல்நெஞ்சே - உறுதி யற்ற நெஞ்சமே!

க—சு. இன்பமும் இடும்பையும்-இன்பமும் துன்பமும், புணர்வும் பிரிவும் - புணர்தலும் பிரிதலும், நன் பகல் அமையமும் இரவும் போல - நல்ல பகற்பொழுதும் இராப்பொழுதும் போல, வேறு வேறு இயல ஆகி - வேறு வேறு தன்மையினவாகி, மாறு எதிர்ந்து உள என-மாறாக எதிர்ப்பட்டு நிற்பன என, உணர்ந்தனை ஆயின்-நீ உணர்ந்துளாயாயின், ஒருடம் இன்னா வெம் சுரம் - இவளை நீங்கிச் செல்லும் இன்னாமையை யுடைய கொடிய சுரநெறியில், நல் நசை துரப்ப- நல்ல பொருள் வேட்கை செலுத்த, துன்னலும் தகுமோ - நீ சென்று சேர்தலும் தகுவதாமா?

எ. நீ செல வலித்தனை யாயின் - நீ செல்லுதற்கே துணிந்து விட்டாயாயின்,

அ—கக. கனை கதிர் ஆவி அவ் வரி - ஞாயிற்றினது மிக்க கதிரால் தோன்றும் ஆவியாய அவற்றின் அலைகளை, நீர் என நசைஇ - நீர் என்று எண்ணி விரும்பி, மா தவ பரிக்கும் - விலங்குகள் மிக ஓடி அலையும், மரல் திரங்கு நனந்தலை - மரற்செடி வாடும் அகன்ற இடத்தினையும், களர் கால் யாத்த கண் அகன் பரப்பின் - களர் பரந்த இடமகன்ற பரப்பினையும், செவ்வரைக் கொழி நீர் கடுப்ப - செங்குத்தாய மலையினின்றும் கொழித்து வரும் அருவிநீர் போல, அரவின் அ வரி உரிவை அணவரும் மருங்கின் - பாம்பினது அழகிய வரிகளை

(பாடம்) 1. நினைதலுந் நினைதியோ. 2. நசைஇய.

யுடைய உரிக்கப் பெற்ற தோல்கள் பொருந்தும் பாறை இடங்களையும் உடைய, புற்று அரை யாத்த - புற்றுக்கள் அடிமரத்தில் கட்டப்பெற்றுள, புலர் சினை மரத்த - காய்ந்த கிளைகளையுடைய மரத்திடத்தவாய, மை நிற உருவின் மணிக் கண் காக்கை - பெய்யும் மேகத்தின் நிறம் போலும் உருவினையும் நீலமணி போலும் கண்ணினையுமுடைய காக்கைகள், பைங்ணம் கவரும் படு பிண கவலை - பசிய கொழுப்பினைக் கவர்ந்துண்ணும் இடமாய மிக்க பிணங்கள் கிடக்கும் கவர்த்த நெறிகளாகிய, சென்றோர் செல் புறத்து இரங்கார் கொன்றோர் - வழிச் செல்லும் வணிகர்கள் போகும் இடங்களின் பின்னே யிருந்து இரக்கமுறாது அவர்களைக் கொன்ற ஆறலைப்போர், கோல் கழிபு இரங்கும் அதர - தங்கள் அம்புகள் கழிந்ததன் பொருட்டே இரங்கும் நெறிகளையுடைய, வேய்பயில் அழுவம் இறந்த பின் - மூங்கில் செருங்கிய காட்டினைக் கடந்த பின்,

௭—௮. எம்மே யாவதும் நினைதலும் செய்தியோ - எங்களைச் சிறிதேனும் நினைத்தலும் செய்வாயோ.

(முடிபு) துணிவில் நெஞ்சே! இன்பமும் துன்பமும் புணர்வும் பிரிவும் வேறு வேறியலவாகி மாறெதிர்ந்து உள என உணர்ந்தனையாயின் வெஞ்சுரம் துன்னலும் தகுமோ; நீ செலவலித்தனையாயின் வேய் பயில் அழுவம் இறந்தபின்னே எம்மை யாவதும் நினைதலும் செய்தியோ.

நனந்தலையினையும் பரப்பினையும் மருங்கினையும் உடைய அழுவம் எனவும் கவலையாகிய அதர்களையுடைய அழுவம் எனவும் தனித்தனி கூட்டுக.

(வி - ரை.) இன்பமும் இடும்பையும் மாறு எதிர்ந்துள, புணர்வும் பிரிவும் மாறு எதிர்ந்துள என்க. இதனைப் புணர்வும் அதனாலாய இன்பமும், பிரிவும், அதனாலாய இடும்பையும் என உரைத்தலுமாம். இன்பமும் இடும்பையும் பகலும் இரவும் போல என நிரனிறையாகக் கொள்க. தலைவியைப் புணர்ந்து இன்பம் துய்க்கும் நீ, பிரியின் துன்பமேயுள என்றதனை அறிந்தாயாயின் பொருள் நசையால் தலைவியைப் பிரிந்து வெஞ்சுரம் துன்னுதல் தகாது என்றான். துணிவு - தெளிவுமாம். நீ செல வலித்தனையாயின் - துன்பமாதலை அறிந்து வைத்தும் நீ செல்லுதலைத் துணிந்தாயாயின் என்க. அழுவம் இறந்த பின் எம்மை நினைதலும் செய்திபோ என்றது, யாம் நின்னுடன் வருவேம் அல்லேம் எனக்கூறிச் செலவழுங்குவித்த படியாம். கால்யாத்தல் - பரத்தல்: ஒரு சொல். பாம்பின் உரி அருவி நீர் போல்வதாதல், [1]"பாம்பின், தூங்கு தோல் கடுக்குந் தூவெள் ளருவி" என்பதனாலும் பெறப்படும்.

---

1. குறுந். ௨௩௫.

328. குறிஞ்சி

[இரவுக்குறிச் சிறைப்புறமாகத் தோழி சொல்லெடுப்பத் [1] தலைமகள் சொல்லியது.]

வழையமல் அடுக்கத்து வலனேர்பு வயிரியர்
முழவதிர்ந் தன்ன முழக்கத்து ஏறேடு
உரவுப்பெயல் பொழிந்த நள்ளென் யாமத்து
அரவின் பைந்தலை இடறிப் பானாள்
இரவின் வந்தெம் [2] இடைமுலை பொருந்தித்
துனிகண் அகல வளைஇக் கங்குலின்
இனிதின் இயைந்த நண்பவர் [3] முனிதல்
தேற்றா குதனற் கறிந்தன மாயின்
இலங்குவளை நெகிழப் பரந்துபடர் அலைப்பயாம்
முயங்குதோறும் முயங்குதோறும் உயங்கமுகந்துகொண்டு
அடக்குவம் மன்னோ தோழி மடப்பிடி
மழைதவழ் சிலம்பிற் கடுஞ்சூல் ஈன்று
கழைதின் யாக்கை விழைகளிறு தைவர
வாழையஞ் சிலம்பிற் றுஞ்சுஞ்
சாரல் நாடன் சாயன் மார்பே.

—மதுரைப் பண்டவாணிகன் [4] இளந்தேவனார்.

(சொ - ள்.) கக. தோழி—,

க—க. வழை அமல் அடுக்கத்து - சுரபுன்னை மரங்கள் நிறைந்த மலைச்சாரலில், வலன் ஏர்பு - (மேகமானது) வலமாக எழுந்து, வயிரியர் முழவு அதிர்ந்தன்ன முழக்கத்து ஏறேடு - கூத்தரது முழவம் அதிர்ந்தாற் போன்ற முழக்கத்தினையுடைய இடியேறுகளுடன் கூடி, உரவு பெயல் பொழிந்த நள் என் யாமத்து - மிக்க பெயலைச் சொரிந்த நள்ளென்னும் ஒலியினையுடைய நடு இரவில், அரவின் பைதலை இடறி - பாம்பினது பசிய தலையை இடறிக் கொண்டு, பால் நாள் இரவின் வந்து - அந்தப் பாதி இரவில் வந்து, எம்இடை முலை பொருந்தி - எம் முலையிடையே பொருந்தி, துனி கண் அகல் - தமது வருத்தம் தம்மிடத்து நின்றும் நீங்க, வளைஇ - ஆகத்தைத் தழுவி, கங்குலின் - இரவெலாம், இனிதின் இயைந்த நண்பு - இங்ஙனம் இனிமையாகப் பொருந்திய நண்பினை, இலங்கு வளை நெகிழ - விளங்கும் வளை நெகிழவும், படர்பரந்து அலைப்ப - நமது துன்பம் பரவி வருத்தவும், அவர் முனிதல் தெற்று ஆகுதல் நற்கு அறிந்தனம் ஆயின் - அவர் பின் வெறுத்தல் தெளிவாதலை நாம் நன்கு உணர்வோமாயின்.

(பாடம்) 1. தோழிக்குத் தலைமகள் சொல்லியது. 2. இடைமுலை முயங்கி. 3. முனிதோ, றிற்று. 4. ஈழன்றேவனார்.

௧௧—௩. மழை தவழ் சிலம்பில் - மேகம் தவழும் பக்கமலையில், மடப்பிடி - இளைய பெண் யானை, கடுஞ் சூல் ஈன்று - தனது முதற் சூலினை ஈன்று, கழை தின் யாக்கை - மூங்கிலைத் தின்னும் தன் யாக்கையினை, விழை களிறு தைவர - தன்பால் விருப்ப மிக்க தனது ஆண் யானை தடவிக்கொண்டிருக்க, வாழை அம் சிலம்பில் துஞ்சும் - வாழைகளையுடைய அழகிய அப் பக்க மலையில் துயிலும், சாரல் நாடன் - சாரலையுடைய மலைநாடனாய அத் தலைவனது, சாயல் மார்பு - மென்மையை யுடைய மார்பினை,

௩—௧௧. யாம் - நாம், முயங்குதொறும் முயங்குதொறும் - அவர் முயங்குந்தோறும் முயங்குந்தோறும், உயங்க முகந்துகொண்டு அடக்குவம் - வருந்த முகந்துகொண்டு நம் மார்பின்கண்ணே அடக்கியிருப்பேம். மன் - அது கழிந்ததே,

(முடிபு) தோழி! பாஉன் இரவின் வந்து கங்குலின் இயைந்த நண்பு உளே நெகிழப் படர் அலைப்ப அவர் முனிதல் தெற்றுகுதல் நற்கு அறிந்தனமாயின், சாரல் நாடன் மார்பு, முயங்குதொறும் உயங்க முகந்துகொண்டு அடக்குவம் மன்.

(வி - ரை.) மேகம் என வருவித்து, மேகம் ஏர்பு பொழிந்த யாமம் என முடிக்க, அரவின் பைந்தலை இடறி என்பது இருளின் செறிவை உணர்த்தியபடி. எனவே இரவுக் குறியின் ஏதம் அஞ்சாது வந்து என்பதாயிற்று. பைந்தலை, பைத்தலை என்பதன் விகாரம் எனக்கொண்டு படத்தினையுடைய தலை என்றலுமாம். அகல அளைஇ எனப் பிரித்துரைத்தலுமாம். நண்பினை முனிதலாவது நாம் வருந்த நம்மைப் பிரிந்திருத்தல். உயங்க முகந்து கொண்டு - வருந்தும்படி இறுகப் பற்றிக்கொண்டு என்றவாறு. முயங்குதொறும் முயங்க எனப்பிரித்து, மேலும் இடைவிடாது முயங்க என்றுரைத்தலுமாம். தோழி சொல்லெடுப்பத் தலைமகள் சொல்லியது என்னும் துறைக்கேற்ப, நற்கு அறிந்தனமாயின் என்று தொடங்கித் தோழி கூறி முடிக்குமுன், நாடன் மார்பினை அவன் முயங்குதோறும் முகந்துகொண்டு அடக்குவம் எனத் தலைவி கூறினாள் என்று கொள்க.

(உ - றை.) மடப்பிடி மழை தவழ் சிலம்பில் சூல் ஈன்று யாக்கை களிறு தைவர சிலம்பில் துஞ்சும் என்றது, தலைவி, தலைவனுடைய செல்வமிக்க மனையில் மகப்பெற்று, தலைவன் அன்பு பாராட்ட இல்லறம் நடத்துதலை விரும்புவள் என்றபடி.

(மே - ள்.) [1] 'ஒருதலையுரிமை வேண்டியும்' என்னுஞ் சூத்திரத்து 'வழையமல் அடுக்கத்து' என்பதனுள் முகந்துகொண்டடக்குவம் என இடைவிடாது இன்பம் நுகர விரும்பியவாறும், உள்ளுறையான் இல்லறம் நிகழ்த்த விரும்பியவாறும் காண்க என்றார், நச்.

———

1. தொல். பொருளியல், ௧௧.

329. பாலை

[பிரிவிடை வேறுபட்ட தலைமகள் தோழிக்குச் சொல்லியது. பிரிவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் சொல்லியதூஉமாம்.]

பூங்கணும் நுதலும் பசப்ப நோய்கூர்ந்து
ஈங்கியான் வருந்தவும் நீங்குதல் துணிந்து
வாழ்தல் வல்லுந ராயிற் [1]காதலர்
குவிந்த குரம்பை அங்குடிச் சீறூர்ப்
படுமணி யியம்பப் பகலியைந்து உமணர்
கொடுநுகம் பிணித்த செங்கயிற் றொழுகைப்
பகடயாக் கொள்ளும் வெம்முனைத் துகடொகுத்து
எறிவளி சுழற்றும் அத்தஞ் சிறிதசைந்து
ஏகுவர் கொல்லோ தாமே பாய்கொள்பு
[2]உறுவெரிந் ஒடிக்குஞ் சிறுவரிக் குருளை
நெடுநல் யானை நீர்நசைக் கிட்ட
கைகறித் துரறும் மைதூங்கு இறும்பில்
புலிபுக்கு ஈனும் வறுஞ்சுனைப்
பனிபடு சிமையப் பன்மலை யிறந்தே.

—உறையூர் [3]முதுகூத்தனார்.

(சொ - ள்.) தோழி !—,

௧—௩. காதலர் - நம் காதலர், பூ கணும் நுதலும் பசப்ப - எனது அழகிய கண்ணும் நெற்றியும் பசலையுற, நோய் கூர்ந்து ஈங்கு யான் வருந்தவும் - துன்பம் மிக்கு இங்கே யான் வருந்தாநிற்கவும், நீங்குதல் துணிந்து - நம்மைப் பிரிதலைத் துணிந்து, வாழ்தல் வல்லுநர் ஆயின் - தனித்து வாழ வன்மை யுடையராயின்,

௪—௮. குவிந்த குரம்பை அம் குடிச் சிறூர் - தலை கூம்பிய குடிசைகளாகிய அழகிய குடியிருப்புக்களை யுடைய சிற்றூரின்கண், படு மணி இயம்ப - பொருந்திய மணி ஒலிக்க, பகல் இயைந்து - பகுத்தல் பொருந்தி, உமணர் கொடு நுகம் பிணித்த செங் கயிற்று ஒழுகைப் பகடு - உப்பு வாணிகர் வளைந்த நுகத்திலே செவ்விய கயிற்றினால் பிணிக்கப் பெற்ற வண்டியிழுக்கும் பகடுகள், அயாக்கொள்ளும் - வருந்தி யிழுக்கும், வெம் முனை - கொடிய இடங்களில் எழும், துகள் தொகுத்து - புழுதியைத் திரட்டி, எறிவளி சுழற்றும் அத்தம் - வீசும் காற்றுச் சுழற்றும் சுர நெறியில், சிறிது அசைந்து - சிறிது தங்கி யிருந்து (பின்பு),

(பாடம்) 1. ரேழி. 2. புறவெரி. 3. கூற்றனர்.

கூ—கச. பாய் கொள்பு உறு வெரிந் ஒடிக்கும் சிறு வரிக்குருளை - பாய்தல் கொண்டு நேர்மை பொருந்திய முதுகினை நெளிக்கும் குறுகிய வரிகளையுடைய புலிக்குட்டி, நெடு நல் யானை நீர் நசைக்கு இட்டகை கறித்து உரறும்-நீண்டுயர்ந்த நல்ல யானை நீர் வேட்கையால் சுனையின்பால் இட்ட கையினைக் கடித்து முழங்கும் இடமாய, மை தூங்கு இறும்பில்-மேகம் தங்கும் காட்டில், புலிபுக்கு ஈனும் வறு சுனை-புலி (நீரின்மையின்) புகுந்து குட்டியை ஈனும் வறிய சுனையினையுடைய, பனி படு சிமையப் பல் மலை இறந்து - பனி உறைந்த உச்சியினையுடைய பல மலைகளையும் கடந்து, தாம் ஏகுவர் கொல்லோ - அவர் போவரோ.

(முடிபு) தோழி! காதலர் ஈங்கு யான் வருந்தவும் நீங்குதல் துணிந்து வாழ்தல் வல்லுநராயின் வெம்முனைத் துகள் தொகுத்து எறிவளி சுழற்றும் அத்தம் சிறிது அசைந்து பன்மலை யிறந்து ஏகுவர் கொல்லோ.

(வி - ரை.) பூங்கண் - பூப்போலும் கண்ணும் ஆம். பகல் இயைந்து பிணித்த பகடு எனவும், மணி இயம்பப் பகடு அயாக் கொள்ளும் எனவும் கூட்டுக. பகல் இயைதலாவது நுகத்தின் இரு புறத்தும் தம்மின் ஒத்தனவாய பகடுகளைத் தேர்ந்து கொள்ளல். பகற்பொழுதெனக் கொண்டு பகலிலே பொருந்தி அயாக்கொள்ளும் என்றலுமாம். எறி வளி-சூறுவளி. சிறிது அசைந்து-அக் காற்று நீர்குமளவும் தங்கியிருந்து. பாய் கொள்பு-உடலை நெடிதாக்கல். நசைக்கு-நசையால்: வேற்றுமை மயக்கம்.

———

330. நெய்தல்

[தலைமகற்குக் குறைநேர்ந்த தோழி தலைமகட்குக் குறைநயப்பக் கூறியது.]

கழிப்பூக் குற்றுங் கானல் அல்கியும்
வண்டற் பாவை வரிமணல் அயர்ந்தும்
இன்புறப் புணர்ந்தும் இளிவரப் பணிந்தும்
தன்றுயர் [1]வெளிப்படத் தவறில் நந்துயர்
அறியா மையின் அயர்ந்த நெஞ்சமொடு
செல்லும் அன்னே மெல்லம் புலம்பன்
செல்வோன் [2] பெயர்புறத் திரங்கி முன்னின்று
தகைஇய சென்றவென் நிறையில் நெஞ்சம்
எய்தின்று கொல்லோ தானே எய்தியும்
காமஞ் செப்ப நாணின்று கொல்லோ
உதுவ காணவர் ஊர்ந்த தேரே
குப்பை வெண்மணற் குவவுமிசை யானும்

(பாடம்) 1. வெளிப்படல் உறீஇ, தவறிநந்துயர் 2. பெயர்புறத் தியங்கி

எக்கர்த் தாழை மடல்வயி னானும்
ஆய்கொடிப் பாசடும்பு அரிய ஊர்பிழிபு
கரு. சிறுகுடிப் பரதவர் பெருங்கடன் மடுத்த
கடுஞ்சேலற் கோடுந்திமில் போல
நிவந்துபடு தோற்றமோ டிகந்துமா யும்மே.

—உலோச்சனார்.

(சொ - ள்.) தோழி! க. மெல்அம் புலம்பன் - மென்னிலமாகிய நெய்தலையுடைய நம் தலைவன்.

க—ரு. கழி பூ குற்றும்-கழியிலுள்ள பூக்களைப் பறித்தும், கானல் அல்கியும் - கடற்கரைச் சோலையில் தங்கியிருந்தும், வண்டல் பாவை வரிமணல் அயர்ந்தும் - வரிப்பட்ட மணலில் வண்டற் பாவை செய்து விளையாடியும், இன்புஉற புணர்ந்தும் - இன்பம் உறப் பலகால் வந்து கூடியும், இளிவர பணிந்தும்-சிறுமை தோன்றப் பணிதலைச் செய்தும், தவறுஇல் நம் துயர் அறியாமையின் அயர்ந்த நெஞ்சமொடு - குற்றமில்லாத நமது துயரை அறியாமல் சோர்ந்த நெஞ்சுடன், தன் துயர் வெளிப்படச் செல்லும் - தனது துயரம் வெளிப்பட்டுத் தோன்றச் செல்லா நிற்பன், அன்னோ - அந்தோ!,

எ—க0. செல்வோன் பெயர் புறத்து - அங்ஙனம் செல்கின்றவன் போகிய திசையில், இரங்கி - இரக்கமுற்று. முன்னின்று தகைஇய- முன்னே நின்று செல்லற்க எனத் தடைசெய, சென்ற என் நிறைஇல் நெஞ்சம் - சென்றதாய எனது உறுதியற்ற நெஞ்சமானது, எய்தின்று கொல்லோ - அத் தலைவனைச் சென்று சார்ந்ததின்றோ, எய்தியும் - சார்ந்தும், காமம் செப்ப நாணின்று கொல்லோ-நம் காமத்தினைக் கூற நாணியதோ;

கக—எ. அவர் ஊர்ந்த தேர் உதுவ காண் - அவர் ஏறிச்சென்ற தேர் உங்கே தோன்றலைக் காண்பாயாக, குப்பை வெண் மணல் குவவு மிசையானும்-வெள்ளிய மணல் திரண்ட குவியல்களின் மேலும், எக்கர் தாழை மடல்வயினானும் - மணல் மேட்டிடத்துள்ள தாழை மடல்களினிடத்தும், ஆய் கொடி பசு அடும்பு அரிய ஊர்பு இழிவு - அழகிய அடும்பின் பசிய கொடிகள் அரிபட ஏறியும் இறங்கியும், சிறுகுடிப் பரதவர் பெருகடல் மடுத்த - சிறியகுடி வாழ்க்கையையுடைய நெய்தல் மாக்கள் பெரிய கடலிற் செலுத்திய, கடு செலல் கொடு திமில் போல - விரைந்து செல்லுதலையுடைய வளைந்த மீன் படகுபோல, நிவந்துபடு தோற்றமொடு - உயர்ந்து தோன்றும் தோற்றத்துடன், இகந்து மாயும்- சென்று அப்பால் மறையாநிற்கின்றது.

(முடிபு) தோழி! புலம்பன் அல்கியும் அயர்ந்தும் புணர்ந்தும் பணிந்தும் தவறுஇல் நம்துயர் அறியாமையின் அயர்ந்த நெஞ்சமொடு செல்லும்; செல்வோன் புறத்து இரங்கித் தகைஇய சென்ற என் நெஞ்சம் எய்தின்று கொல்லோ; எய்தியும்

காமம் செப்ப நாளின்று கொல்லோ; அவர் ஊர்ந்த தேர் பரதவர் கடல் மடுத்த திமில்போல நிவந்துபடு தோற்றமொடு இகந்து மாயும்; உதுவ காண்.

(வி - ரை.) தன் துயர் வெளிப்படச் செல்லும் எனவும், அயர்ந்த நெஞ்சமொடு செல்லும் எனவும் தனித்தனி கூட்டுக. மன் ஓ எனப் பிரித்து அசைநிலை என்றலுமாம். புலம்பன் - நெய்தற் றலைவன். நெய்தல் மென்னிலமாகலின் நெய்தல்நிலத் தலைவனை மெல்லம் புலம்பன் என்பது வழக்காறு. எய்தின்று: எதிர்மறைச் சொல். [1]"புக்கில் அமைந் தின்று கொல்லோ" என்புழிப்போல. தலைவன் ஏறிய தேர் அண்மையில் சிவந்த தோற்றமுடையதாயிருந்து சேய்மையிற் செல்லுந்தோறும் மறைதலுக்கு அவ்வாறு சென்று மறையும் திமில் உவமையாயிற்று. இப் பாட்டினைத் தலைவி கூற்றாகக்கொண்டு, தலைவி தன்வயின் உரிமையும் அவன்வயிற் பரத்தைமையும் வெளிப்படக் கூறியதென்பர் நச்சினார்க்கினியர். களவுக் காலத்தில், தலைவன்பால் பரத்தைமையின்றாகவும் காதல் மிகுதியால் உளதாகக்கொண்டு தலைவி ஊடுதல் உண்டு என்பதும் அது புலவிப் போலியா மென்பதும் அவர் கருத்தாகும்.

(மே - ள்.) [2]"மறைந்தவற் காண்டல்" என்னுஞ் சூத்திரத்து, இச் செய்யுளைக் காட்டி, இதனுள், "'அறியாமையின் அயர்ந்த நெஞ்சமொடு' என்பது தன்வயின் உரிமை, இகந்து மாயும் என்பது அவன்வயிற் பரத்தைமை" என்று கூறினர், நச்.

---

331. பாலை

[தலைமகன் பிரிவின்கண் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.]

நீடுநிலை அரைய செங்குழை இருப்பைக்
கோடுகடைந் தன்ன கொள்ளை வான்பூ
ஆடுபரந் தன்ன ஈனல் எண்கின்
[3]சேடுசினை யுரீஇ உண்ட மிச்சில்
பைங்குழைத் தழையர் பழையர் மகளிர்
கண்டிரள் நீளமைக் கடிப்பிற் றொகுத்துக்
குன்றகச் சிறுகுடி மறுகுதோறும் மறுகுமஞ்
சீறூர் நாடு பலபிறக் கொழியச்
சென்றோர் அன்பிலர் தோழி என்றும்
அருந்துறை முற்றிய கருங்கோட்டுச் சீறியாழ்ப்
பாணர் ஆர்ப்பப் பலகலம் உதவி

---

1. குறள். ௩௪௦. 2. தொல். கள. ௨௦.
(பாடம்) 3. தோடு சினையுரைஇ.

நாளவை யிருந்த நனைமகிழ் திதியன்
வேளிரோடு [1]பொரீஇய கழித்த
வாள்வாய் அன்ன [2]வறுஞ்சுரம் இறந்தே.

—மாமூலனார்.

(சொ - ர்.) க. தோழி—,

க—அ. நீடு நிலை அரைய செங்குழை இருப்பை-நீண்ட நிலையாகிய அடிமரத்தினையுடைய சிவந்த தளிர்களையுடைய இருப்பை மரங்களின், கோடு கடைந்தன்ன கொள்ளை வான் பூ - தந்தத்தினைக் கடைந்தாற் போன்ற மிகுதியான வெள்ளிய பூக்களில், ஆடுபரந்தஅன்ன - ஆடுகள் பரந்தால் ஒத்த, ஈனல் எண்கின் சேடு - ஈன்ற பெண் கரடிகளின் திரட்சி, சினை உரீஇ உண்ட மிச்சில்-கிளைகளில் பரந்து சென்று உண்ட மிச்சிலாயவற்றை, பை குழைதழையர் பழையர் மகளிர் - பசிய தளிர்களாலாய தழையுடையராகிய எயினர் மகளிர், கண் திரள் நீள் அமைக் கடிப்பில் தொகுத்து - கணுக்கள் திரண்டு நீண்ட மூங்கிற் குழாயில் திரட்டி, குன்றகம் சிறு குடி மறுகுதொறும் மறுகும்-குன்றின் கண்ணவாகிய சீறூரின் தெருக்கடோறும் சுழன்று விற்றுத் திரியும், அம்சீறூர் நாடு பல பிறக்கு ஒழிய - அழகிய சிறிய ஊர்களையுடைய பல நாடுகள் பின்னே கழிய,

கூ—கச. என்றும் - எஞ்ஞான்றும், அரு துறை முற்றிய கரு கோட்டுசிறு யாழ்ப் பாணர் ஆர்ப்ப - அரிய இசைத் துறைகளை முற்ற உணர்ந்த கரிய தண்டினையுடைய சிறிய யாழினையுடைய பாணர்கள் ஆரவாரம் செய்ய, பல கலம் உதவி - பல அணிகலன்களை அளித்து, நாளவை இருந்த நனைமகிழ் திதியன் - நாளோலக்கம் கொண்டிருந்த கள்ளின் மகிழ்வினை யுடைய திதியன் என்பான், வேளிரொடு பொரீஇய கழித்த-வேளிரொடு போர்செயற்கு உருவிய, வாள் வாய் அன்ன வறும் சுரம் இறந்து - வாளின் வாயினை யொத்த கொடுமையையுடைய வறண்ட சுரத்தினைக் கடந்து,

க. சென்றோர் அன்பு இலர் - சென்றவராய நம் தலைவர் நம்பால் அன்பிலாதார் ஆவர் (என் செய்வாம்).

(முடிபு) தோழி! சீறூர் நாடு பல பிறக்கு ஒழிய, வறுஞ்சுரம் இறந்து சென்றோர் அன்பிலர், என் செய்வாம்.

(வி - ரை.) இருப்பை வான் பூ என்க. ஆடு பரந்தன்ன என்றது எண்கின் மிகுதியை உணர்த்தியபடி. சேடு-திரட்சி, கூட்டம் என்றபடி. உரீஇ-உருவி என்றுமாம். உண்ட மிச்சிலாகிய பூக்களை என்க. பழையர்-கள் விற்போர், எயினர். கடிப்பு-மூங்கிற் குழாயை உணர்த்திற்று. மறுகும்-திரியும்; விற்றுத்திரியும் என்றபடி. அன்பிலாராய்ச் சென்றார் என்றுமாம். அருந்துறை - பண்ணும் திறமும் ஆகிய இசையின் கூறுபாடுகள். ஆர்ப்ப-மகிழ்ச்சியால் ஆரவாரிக்க. வாள் வாய் அன்ன கொடுமையுடைய என விரித்துரைக்க.

———

(பாடம்) 1. பொரீஇக் கழித்த. 2. அருஞ்சுரம்.

332. குறிஞ்சி

[இரவுக்குறிக்கண் சிறைப்புறமாகத் தோழிக்குத்[1] தலைமகள் இயற்பட மொழிந்தது.]

[2]முளைவளர் முதல மூங்கில் முருக்கிக்
கிளையொடு மேய்ந்த கேழ்கிளர் யானை
நீர்நசை மருங்கின் [3]நிறம்பார்த் தொடுங்கிய
பொருமுரண் உழுவை தொலைச்சிக் கூர்நுனைக்
குருதிச் [4]செங்கோட் டழிதுளி கழாஅக்
[5]கன்முகை அடுக்கத்து மென்மெல இயலிச்
செறுபகை [6]வாட்டிய செம்மலோ டறுகால்
யாழிசைப் பறவை இமிரப் பிடிபுணர்ந்து
வாழையஞ் சிலம்பிற் றுஞ்சும் நாடன்
நின்புரைத் தக்க சாயலன் எனநீ
அன்புரைத் தடங்கக் கூறிய இன்சொல்
வாய்ந்தன வாழி தோழி வேட்டோர்க்கு
அமிழ்தத் தன்ன கமழ்தார் மார்பின்
வண்டிடைப் படாஅ முயக்கமும்
தண்டாக் காதலும் தலை[7] நாள் போன்மே.

—கபிலர்.

(சொ - ள்.) ௧௨. தோழி—, வாழி—,

௧—௯. முளை வளர் முதல மூங்கில் முருக்கி - முளைகள் வளரும் தூறுகளிலுள்ள மூங்கில்களை ஒடித்து, கிளையொடு மேய்ந்த கேழ் கிளர் யானை-தன் இனத்துடன் தின்ற நிறம் விளங்கிய களிறு, நீர் நசை மருங்கின் நிறம் பார்த்து ஒடுங்கிய-நீர்வேட்டுச் செல்லும் துறையருகே தன் உருவினைப் பார்த்துத் தாக்கற்குப் பதுங்கிய, பொரு முரண் உழுவை தொலைச்சி-போர் செயும் மாறுபாட்டினைக் கொண்ட புலியைப் பொருது கொன்று, கூர் நுனை குருதிச் செங்கோட்டு அழி துளி கழாஅ - கூரிய முனையில் குருதி தோய்ந்த சிவந்த கொம்பினை மிக்க மழையால் கழுவிக் கொண்டு, கல்முகை அடுக்கத்து மெல்மெல இயலி-கல்முழைகளையுடைய பக்க மலையில் மெல்ல மெல்லச் சென்று, செறு பகை வாட்டிய செம்மலொடு - செற்றங் கொண்ட தன் பகையைத் தொலைத்த செருக்குடன், அறு கால் யாழ் இசை பறவை இமிர-யாழ் போன்ற இசையினையுடைய ஆறுகால்களையுடைய வண்டுகள் ஒலிக்கும்படி சென்று, பிடி புணர்ந்து-

(பாடம்) 1. தலைமகள் சொல்லியது. 2. முழை வளர். 3. நிரம்பா தொடுங்கிய. 4. செங்கோடழி. 5. கண முகை. 6. ஓட்டிய செம்மல். 7. நாட்போன்.

தன் பிடியினைக் கூடி, வாழை அம் சிலம்பில் துஞ்சும் நாடன் - வாழை மரங்களையுடைய மலையில் துயிலும் நாட்டை யுடைய தலைவன்.

௧௦—௬. நின் புரை தக்க சாயலன் என - நினது உயர்வுக்கு ஏற்ற மென்மைத் தன்மையன் என, நீ—, அன்பு உரைத்து அடங்கக் கூறிய இன்சொல் - அன்பால் உரைத்து என் மனம் அமைதியுறக் கூறிய இன் சொற்களெல்லாம், வாய்த்தன-வாய்மையாய்முடிந்தன,வேட்டோர்க்கு- தன்னை விரும்பியவர்க்கு, அமிழ்தத்து அன்ன கமழ்தார் மார்பின் - அமிழ்தம்போன்ற இனிய நறிய தாரினையுடைய தன் மார்பின்கண்ணே, வண்டு இடைப்படாஅ முயக்கமும்-வண்டு இடையிற் பொருந்தலாகாத செறிந்த முயக்கமும், தண்டாக் காதலும்-நீங்காத காதலும், தலை நாள் போன்ம் - முதலிற் கண்ணுற்ற ஞான்றே போலச் சிறவாநின்றன.

(முடிபு) தோழி! வாழி! நாடன் நின்புரைத் தக்க சாயலன் என நீ அன்புரைத்து அடங்கக் கூறிய இன்சொல் வாய்த்தன; அவன் மார்பின் முயக்கமும் காதலும் தலைநாள் போன்ம்.

யானை உழுவை தொலைச்சிச் செங்கோடு கழாஅ இயலிப் பிடி புணர்ந்து சிலம்பில் துஞ்சும் நாடன் என்க.

(வி - ரை.) நிறம்—வடிவு; மார்புமாம். செம்மலொடு பிடி புணர்ந்து என்க. புரை - உயர்ச்சி; புரைத்தக்க - உயர்ச்சிக்குத்தக்க. வாய்த்தன - வாய் ஆயின, அமிழ்தத் தன்ன மார்பு என்க. கமழ்தார் மார்பாகலின் வண்டு உளதாதல் பெறப்படும். இடைப்படா முயக்கம் என்றது அவ் வண்டு நீங்குமாறு செறிந்த முயக்கம் என்றவாறு.

(உ - றை.) யானை உழுவை தொலைச்சிக் குருதிச் செங்கோடு அழிதுளி கழாஅச் செறு பகை வாட்டிய செம்மலொடு யாழிசைப் பறவை இமிரப்பிடி புணர்ந்து வாழையஞ் சிலம்பில் துஞ்சும் என்றது, தலைவன் அலர் கூறுவார் வாயை அடக்கி, களவினலாகும் மாசுதீரத் தலைவியை மணந்து சுற்றத்தாரும் பாணர் முதலாயினரும் கொண்டாட வளம் மிக்க மனையில் இன்பம் துய்த்திருப்பன் என்றவாறு.

---

333. பாலை

[பிரிவிடை வற்புறுத்துந் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.]

யாஅ ஒண்டளிர் அரக்குவிதிர்த் தன்னநின்
ஆக மேனி அம்பசப் பூர
அழிவுபெரி துடையை யாகி அவர்வயின்
பழிதலைத் தருதல் வேண்டுதி மொழிகொண்டு
௫. தாங்கல் ஒல்லுமோ மற்றே ஆங்குநின்

எவ்வம் பெருமை உரைப்பின் செய்பொருள்
வயங்கா தாயினும் பயங்கெடத் தூக்கி
நீடலர் வாழி தோழி கோடையிற்
குருத்திறுபு உக்க வருத்தம் சொலாது
தூம்புடைத் துய்த்தலைக் கூம்புபு திரங்கிய
வேனில் வெளிற்றுப்பனை போலக் கையெடுத்து
யானைப் பெருநிரை வானம் பயிரும்
மலைச்சேண் இகந்தனர் ஆயினும் நிலைபெயர்ந்து
நாளிடைப் படாது வருவர் நமரெனப்
பயந்தரு கொள்கையின் நயந்தலை [1]திரியாது
நின்வாய் இன்மொழி நன்வா யாக
வருவர் ஆயினோ நன்றே வாராது
அவணவர் காதலர் ஆயினும் இவணம்
பசலை மாய்தல் எளிதுமற் றில்ல
சென்ற தேஎத்துச் செய்வினை முற்றி
மறுதரல் உள்ளத்தர் எனினும்
குறுகுபெரு நசையொடு தூதுவரப் பெறினே.

கல்லாடனார்.

(சொ - ள்.) *அ. தோழீ—, வாழீ—,*

க—அ. யாஅ ஒள் தளிர் அரக்கு விதிர்த்தன்ன-யாமரத்தின் ஒள்ளிய தளிரில் அரக்குப் பொடியினைச் சிதறினாற்போன்ற, *நின் ஆகம் மேனி அம் பசப்பு ஊர*-நின் உடம்பினது மேனியின்கண் அழகிய பசலை பரக்க, *அழிவு பெரிது உடையை ஆகி* - வருத்தம் மிகுதியும் உடையையாகி, *அவர்வயின் பழி தலைத் தருதல் வேண்டுதி* - அவரிடத்தே பழியைச் சேர்த்தலை விரும்புகின்றனை, *ஆங்கு நின் எவ்வம் பெருமை உரைப்பின்*-அங்கே நினது துன்ப மிகுதியை யாரேனும் சென்று உரைப்பின், *மொழிகொண்டு தாங்கல் ஒல்லுமோ* - அம் மொழிகளைக் கேட்டு அவரால் துன்பம் தாங்கியிருத்தல் இயலுமோ, *செய் பொருள் வயங்காதாயினும்* - செய்யப்படும் பொருள் முற்றாதாயினும், *பயம் கெடத் தூக்கி* - இன்பப் பயன் கெடுமாறு அதனையே பெரிதாக ஆய்ந்து, *நீடலர்*-அங்கே தாழ்த்துவிடார்;

அ—கச. வேனில் - வேனிற் காலத்தில், *கோடையில் குருத்து இறுபு உக்க*-மேல்காற்றால் குருத்து இற்று உதிர்ந்த, *வருத்தம் சொலாது*- வருத்தம் நீங்காது, *தூம்பு உடை தூய்தலை கூம்புபு திரங்கிய* - துளையுடைய துய்யையுடைய உச்சி கூம்பி வற்றிய, *வெளிற்றுப் பனை போல்* - இளம்பனை போல, *கை எடுத்து யானை பெரு நிரை வானம்*

(பாடம்) 1. திரியா.

பயிரும் - கையை உயர்த்தி யானையின் பெருங் கூட்டம் மேகத்தை நோக்கிக் கதறும், மலைசேண் இகந்தனர் ஆயினும் - மலையைக் கடந்து சேய்மைக்கண் சென்றனராயினும், நிலைபெயர்ந்து நாள் இடைப் படாது நமர் வருவர் - தாம் கூறிய கால எல்லை பெயர்ந்திட நாட்கள் இடைப்படாமல் நம் தலைவர் வருவர்;

கச—எ. என - என்றிங்ஙனம், பயம் தரு கொள்கையின் நயம் தலை திரியாது - பயனை உண்டாக்கும் கொள்கையோடு இனிமை நீங்காது கூறும், நின் வாய் இன் மொழி நன் வாயாக - நின் வாயின் இனிய மொழிகள் நல்ல உண்மையாக, வருவர் ஆயின் நன்றே - வந்திடு வராயின் அது மிகவும் நல்லதே, (அன்றி,)

கஎ—உஉ. வாராது அவணர் காதலர் ஆயினும் - அங்ஙனம் வாராமல் நம் காதலர் அவ்விடத்தில் தங்குவாராயினும், சென்ற தேஎத்து - தாம் சென்றுள தேயத்தே, செய்வினை முற்றி - தாம் செய்யும் தொழிலை முடித்துக்கொண்டு, மறுதரல் உள்ளத்தர் எனினும் - மீளும் எண்ணமுடையவராயினும், குறுகு பெரு நசையொடு - அங்ஙனம் மீண்டுவரும் பெரு விருப்புடன் விடுக்கும், தூது வரப் பெறின் - தூது வரப்பெறுவேமாயின், இவண் நம் பசலை மாய்தல் எளிது - இவ்விடத்து நமது பசலை மறைதல் எளிதாகும்.

(முடிபு) தோழி! வாழி! நின்மேனி பசப்பூர அழிவு பெரிதுடையையாகி, அவர்வயின் பழிதலைத்தருதல் வேண்டுதி; நின் எவ்வம் பெருமை உரைப்பின் மொழி கொண்டு தாங்கல் ஒல்லுமோ, செய்பொருள் வயங்காதாயினும் நீடலர்; மலைச்சேண் இகந்தனர் ஆயினும் நாளிடைப் படாது நமர்வருவர் எனக்கூறும் நின் வாய் இன்மொழி நல்வாயாக வருவர் ஆயின் நன்றே; காதலர் வாராது அவணர் ஆயினும், செய்வினை முற்றி மறுதரல் உள்ளத்தர் எனினும் தூது வரப்பெறினே இவண் நம் பசலை மாய்தல் எளிது.

(வி - ரை.) தளிர் அரக்கு விதிர்த்தன்ன என்பது உரு உவமம். ஆகமேனி: இருபெயரொட்டு. தலைத் தருதல்: ஒரு சொல். மற்று: வினைமாற்று. எவ்வம் - பெருமை: மெலித்தல் விகாரம். சொலாது - நீங்காது. சருச்சரையுடையதாய்க் கரிதாய் நீண்டிருத்தலின் யானைக் கைக்குப் பனை உவமையாகும். ஈண்டு யானையின் துளைக்கை வெம்மையால் திரண்டு மேல் நிவந்திருத்தலின் அதற்குக் குருத்து இற்று வாடிய தலையுடைய வெளிற்றுப் பனை உவமையாயிற்று. நிலை பெயர்ந்து - அவ்விடத்தினின்றும் பெயர்ந்து என்றலுமாம். மன், தில்ல: அசைகள். மறுதரல் - மீட்சி.

334. முல்லை

[வினைமுற்றிய தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது]

ஓடா நல்லேற் றுரிவை தைஇய
ஆடுகோண் முரசம் இழுமென முழங்க
நாடுதிறை கொண்டன மாயின் பாக
பாடிமிழ் கடலின் எழுந்த சும்மையொடு
பெருங்களிற்றுத் தடக்கை புரையக் கால்வீழ்த்து
இரும்பிடித் தொழுதியின் ஈண்டுவன குழீஇ
வணங்கிறை மகளிர் [1]அயர்ந்தனர் ஆடும்
கழங்குறழ் ஆலியொடு கதழுறை சிதறிப்
பெயலேடங் கின்றால் வானம் வானின்
வயங்குசிறை அன்னத்து நிரைபறை கடுப்ப
நால்குடன் பூண்ட கானவில் புரவிக்
கொடிஞ்சி நெடுந்தேர் கடும்பரி தவிராது
இனமயில் அகவுங் கார்கோள் வியன்புனத்து
நோன்சூட் டாழி ஈர்நிலம் துமிப்ப
ஈண்டே காணக் கடவுமதி பூங்கேழ்ப்
பொலிவன அமர்த்த உண்கண்
ஒலிபல் கூந்தல் ஆய்சிறு நுதலே.

—[2]மதுரைக்கூத்தனார்.

(சொ - ள்.) ௩—௯. பாக-பாகனே, வானம்-மேகமானது, பாடு இமிழ் கடலின் - ஒலி முழங்கும் கடலின்கண், எழுந்த சும்மையொடு-நீரை முகந்தெழுந்ததாலாய முழக்கினொடு, இரு பிடி தொழுதியின் ஈண்டுவன குழீஇ - கரிய பிடிகளின் கூட்டம் போன்று சேர்ந்து திரண்டு, பெருகளிற்று தடகை புரைய கால் வீழ்த்து - பெரிய களிற்றின் பருத்த கைபோலக் கால் இறக்கி, வணங்கு இறை மகளிர் அயர்ந்தனர் ஆடும் கழங்கு உறழ் ஆலியொடு - வளைந்த முன் கையினையுடைய மகளிர் விரும்பி விளையாடும் கழங்கினை யொத்த பனிக்கட்டியுடன், கதழ் உறை சிதறி - விரையும் துளிகளைச் சிதறி, பெயல் தொடங்கின்று - பெய்தலைத் தொடங்கிவிட்டது; (மேலும்),

௧—௩. ஓடா நல் ஏற்று உரிவை தைஇய - பிறக்கிடாது வெல்லும் நல்ல வீரம் மிக்க ஏற்றினது தோலாற் போர்த்த, ஆடு

(பாடம்) 1. அமர்ந்தனர். 2. மதுரைக் கடாரத்தனார்; மதுரைக்கந்தரத்தனார்; மதுரைக்கோடாரத்தனார்.

இழும் என் முழங்க - வெற்றி கொண்ட முரசமானது இழுமென ஒலிக்க, நாடு திறை கொண்டனம் ஆயின் - பகைவர் நாட்டினைத் திறையாகக் கொண்டோம் ஆகலின்,

கக—எ. பூ கேழ் பொலிவன அமர்த்த உண்கண் - அழகிய நிறத்தினற் பொலிவனவாய் மாறுபட்ட மையுண்ட கண்களையும், ஒலி பல் கூந்தல் - தழைத்த பலவாய கூந்தலையும், ஆய் சிறு நுதல் - அழகிய சிறிய நெற்றியினையுமுடைய நம் தலைவியை, ஈண்டே காண - இப்பொழுதே காண்டற்கு,

கஅ—கஞ. வானின் வயங்கு சிறை அன்னத்து நிரை பறை கடுப்ப - வானத்தின்கண் விளங்கும் சிறகினையுடைய அன்னத்தின் கூட்டம் பறந்து செல்லலை யொப்ப (விரைந்து செல்லும்), நால்கு உடன்பூண்ட கால் நவில் புரவி - வேகத்தாற் காற்றெனக் கூறப்பெறும் குதிரைகள் நான்கு ஒருசேரப் பூட்டப்பெற்ற, கொடிஞ்சி நெடுந்தேர் கடும்பரி தவிராது - கொடிஞ்சியையுடைய நீண்ட தேரின் மிக்க வேகம் தளராது, இனம் மயில் அகவும் கார்கொள் வியன் புனத்து - கூட்டமாய மயில்கள் ஆடும் கார் காலத்தின் தன்மையுடைய பெரிய முல்லை நிலத்தே, நோன் சூட்டு ஆழி ஈர் நிலம் துமிப்ப - வலிய வட்டையினையுடைய உருள்கள் ஈரமாய நிலத்தினைக் கிழித்துச் செல்ல, கடவுமதி - செலுத்துவாயாக.

(முடிபு) பாக! வானம் பெயல் தொடங்கின்று, முரசம் முழங்க நாடு திறை கொண்டனம் ஆயின், ஆய் சிறு நுதலை ஈண்டே காண, புரவி நால்குடன் பூண்ட நெடுந்தேர் கடும்பரி தவிராது வியன் புனத்து ஆழி நிலம் துமிப்பக் கடவுமதி.

(வி-ரை.) ஓடா நல்லேற்று உரிவை - புலியொடு பொருது வென்ற கொல்லேற்றின் தோல் என்பதும், அதனால் வீரமுரசம் போர்க்கப்படுதலும், [1]'புனை மருப் பழுந்தக் குத்திப் புலியொடு பொருது வென்ற, கனை குரலுருமச் சீற்றக் கதழ்விடை-யுரிவை போர்த்த, துனைகுரல் முரசம்' என்பதனாலும், 'கொல்லேற்றுப் பசுந்தோல் சீவாது போர்த்த மாக்கண் முரசம்' என்பதனாலும் அறிக. நாடு திறைகொண்டனமாயின் என்றதனால் தலைவன் அரசர் மரபினனாதல் பெற்றாம். அன்னத்து நிரைபறை கடுப்ப என்றமையால் புரவிகள் வெண்ணிறமுடையவாதல் பெற்றாம். நால்கு-நான்கு. இதனைப் பெயர்த்திரிசொல் என்பர் நச்சினார்க்கினியர். வெண்ணிறமுடைய குதிரைகள் சிறந்தனவாதலும், அவை நான்கு பூட்டப் பெறுதலும் [2]'நிரைபறை அன்னத்தன்ன விரைபரிப் புல்லுளைக் கலிமா' [3]'பால்புரை புரவி நால்குடன் பூட்டி' என்பவற்றானும் அறியப்படும். ஈண்டு - பொழுதினை உணர்த்திற்று. சிறு நுதல்-சிறிய நுதலையுடையாட்கு ஆயிற்று.

---

1. சிந். உஅசுகூ. 2. அகம். உகூச. 3. பொருந. கசூ.

335. பாலை

[தலைமகன் பொருள்கடைக் கூட்டிய நெஞ்சினைக் கழறிச் செல வழுங்கியது]

இருள்படு நெஞ்சத் திடும்பை தீர்க்கும்
அருணன் குடைய ராயினு மீதல்
பொருளில் லோர்க்கஃ தியையா தாகுதல்
யானு மறிவென் மன்னே யானைதன்
[1]கோன்மருப் பொடியக் குத்திச் சினஞ்சிறந்து
இன்னா வேனில் இன்றுணை யார
முளிசினை [2]யாஅத்துப் பொளிபிளந் தூட்டப்
புலம்புவீற் றிருந்த நிலம்பகு வெஞ்சுரம்
அரிய [3]வல்லமன் னமக்கே விரிதார்
ஆடுகொள் முரசின் அடுபோர்ச் செழியன்
மாட மூதூர் மதிற்புறந் தழீஇ
நீடுவெயில் உழந்த குறியிறைக் கணைக்கால்
[4]தொடையமை பல்மலர்த் தோடுபொதிந் தியாத்த
குடையோ ரன்ன கோளமை யெருத்திற்
பாளை பற்றிழிந் தொழியப் புறஞ்சேர்பு
வாள்வடித் தன்ன வயிறுடைப் பொதிய
நாளுறத் தோன்றிய நயவரு வனப்பின்
ஆரத் தன்ன அணிகிளர் புதுப்பூ
வாருறு கவரியின் வண்டுண விரிய
முத்தின் அன்ன வெள்வீ தாஅய்
அலகின் அன்ன அரிநிறத் தாலி
நகைநனி வளர்க்குஞ் சிறப்பிற் றகைமிகப்
பூவொடு வளர்ந்த மூவாப் பசுங்காய்
நீரினு மினிய வாகிக் கூரெயிற்று
அமிழ்தம் ஊறுஞ் செவ்வாய்
ஒண்டொடிக் குறுமகட் கொண்டனம் செலினே.

—மதுரைத் தத்தங் கண்ணனார்

(சொ - ள்.) நெஞ்சே—,

(பாடம்) 1. கோண்மருப். 2. மராஅத்து. 3. வல்ல நமக்கே. 4. தொடையமை பல மலர் கொடு.

க—ச. இருள் படு நெஞ்சத்து இடும்பை தீர்க்கும் - வறுமையால் மயக்கம் கொண்ட நெஞ்சின் வருத்தத்தைப் போக்குகின்ற, அருள் நன்கு உடையர் ஆயினும்-அருளினை மிக உடையராயினும், பொருள் இல்லோர்க்கு - கைப்பொருள் இல்லார்க்கு, ஈதல் அஃது இயையாது ஆதல் - ஈதலாகிய அச் சிறப்பு இயலாததாதலை, யானும் அறிவென் - யானும் அறிவேன், மன் - அதனாற் பெற்றதென்?

ரு—உ௪. விரி தார் ஆடு கொள் முரசின் அடு போர்ச் செழியன் - விரிந்த மலர்த் தாரினையும் வெற்றி பொருந்திய முரசினையும் வெல்லும் போரினையுமுடைய பாண்டியனது, மாடம் மூதூர் மதில் புறம் தழீஇ - மாடங்களையுடைய முதிய ஊராய மதுரையின் மதிற்புறத்தினைத் தழுவி, நீடு வெயில் உழந்த - நீண்ட வெப்பத்தால் வருந்திய, குறி இறைக் கணை கால் - குறிய இறைகளையுடைய திரண்ட அடியினையுடைய கமுக மரத்தின், தொடை அமை பல்மலர் தோடு பொதிந்து யாத்த குடை ஓரன்ன - தொடுத்தல் அமைந்த பல மலர்களின் தொகுதியை மூடிக் கட்டிய குடையினை யொத்த, கோள் அமை எருத்தில் - காய்த்தல் பொருந்திய எருத்தினிடத்துள்ள, பாளை பற்று இழிந்து ஒழிய - பாளை பற்று நீங்கி ஒழிய, புறம் சேர்பு - புறத்தை அடைந்து, வாள் வடித்தன்ன வயிறு உடைப் பொதிய - வாளை வடித்துவைத்தாற் போன்ற வயிற்றினையுடைய பொதியின் கண்ணவாய, நாள் உற தோன்றிய நயவரு வனப்பின் - பருவம் உற்றவிடத்து வெளிப்பட்ட இனிமை பொருந்திய அழகினையுடைய, ஆரத்து அன்ன அணி கிளர் புதுப்பூ - ஆரம் போலும் அழகு விளங்கும் புதிய பூக்கள், வார் உறு கவரியின் வண்டு உண விரிய - நீட்சி பொருந்திய கவரியின் கண்ணே வண்டு தேன் உண்ணுமாறு விரிய, முத்தின் அன்ன வெள் வீ தாஅய் - முத்துக்களைப் போன்ற வெள்ளிய பூக்கள் பரந்து, அலகின் அன்ன அரி நிறத்து ஆலி - பலகறையை ஒத்த ஒள்ளிய நிறத்தையுடைய ஆலங்கட்டி போல, நகை நனி வளர்க்கும் சிறப்பின் - மகிழ்ச்சியை மிகுதியும் உண்டாக்கும் சிறப்புடன், தகைமிக - அழகுமிக, பூவொடு வளர்ந்த மூவாப் பசு காய் - பூவொடு வளர்தலுற்ற முற்றாத இளங்காயினது, நீரினும் இனிய ஆகி - நீரைக் காட்டினும் இனிமையுடையவாகி, கூர் எயிற்று அமிழ்தம் ஊறும் செவ்வாய் - கூரிய பற்களிடத்தே அமிழ்தம் ஊறும் சிவந்த வாயினையும், ஒள் தொடி - ஒளி பொருந்திய வளையினையும் உடைய, குறுமகள் கொண்டனம் செலினே - இளையளாய தலைவியை நாம் உடன் கொண்டு செல்லின்,

ச—கூ. யானை - களிற்றியானை, தன் கொல் மருப்பு ஒடியக் குத்தி - தனது கொல்லும் கோடு ஒடிந்திடப் பாய்ந்து, சினம் சிறந்து - சினம் மிக்கு, இன்னா வேனில் இன் துணை ஆர - கொடிய வேனிலில் தனது இனிய துணையாய பிடி உண்ணும்படி, முளி சினை யாஅத்து பொளி பிளந்து ஊட்ட - பட்ட கிளைகளையுடைய யா மரத்தின் பட்டையைக் கிழித்து ஊட்ட, புலம்பு வீற்றிருந்த - வருத்தம் குடிகொண்டுள்ள, நிலம்

பகு வெம் சுரம் - நிலம் பிளந்த வெவ்விய சுரங்களும், நமக்கு அரிய அல்ல - நமக்குச் செல்லற்கு அரியன வல்ல.

(முடிபு) நெஞ்சே! ஈதல் பொருளில்லோர்க்கு இயையாதாகுதல் யானும் அறிவேன், மன்; மூவாப் பசுங்காய் நீரினும் இனியவாகிக் கூர் எயிற்று அமிழ்தம் ஊறும் செவ்வாய் ஒண்டொடிக் குறுமகள் கொண்டனம் செலினே, வெஞ்சுரம் அரிய அல்ல மன் நமக்கே.

(வி - ரை.) இருள் - மயக்கம். புலம்பு வீற்றிருந்த என்பது வேறிடத்திலில்லாதவாறு துன்பம் மிக்கிருந்த என்றவாறு. கணைக்கால் - திரண்ட காலையுடைய கமுக மரம்: ஆகுபெயர். கமுகின் கோளமை எருத்து எனவும், குடை ஓரன்னபாளை எனவும் கூட்டுக. தோடு-மிகுதி; தாழை-மடலுமாம். கமுகம் பாளை அகத்தே தொடுத்த மாலைபோலும் பூக்களையுடைமையின் தொடையமை பன்மலர்த் தோடுபொதிந் தியாத்த குடையோரன்ன பாளை என உவமை கூறப்பட்டது. பாளை, பற்றுவிடு தொழிய என்றது கமுகம்பாளையின் புற மடல் பற்று நீங்கி ஒழிய என்றபடி. பொதி - பீள், கரு; அது புறமடலின் உள்ளே வாள் போலும் வடிவினை யுடையதாயிருத்தலின் வாள் வடித்தன்ன வயிறுடைப் பொதி எனப்பட்டது. பொதிய புதுப்பூ எனவும், வனப்பின் புதுப்பூ எனவும், அணி கிளர் புதுப்பூ எனவும் தனித்தனி கூட்டுக. பூவின் கொத்து கவரி போல்வதாகலின் கவரி எனப்பட்டது. புதுப்பூ விரிய என்க. தாஅய் - பரக்க எனத் திரிக்க. பசுங்காய்-தட்ப மிகுதியால் ஆலிபோல் மகிழ்ச்சி விளைக்கும் என்க. கமுகின் முற்றாத பசுங்காயின் நீர் இனிமை மிக்குடையது என்பது,

[1]"அங்கருங் காலி சேவி யூறவைத் தமைக்கப் பட்ட
செங்களி விராய காயுஞ் செம்பழுக் காயும் தீந்தேன்
எங்கணுங் குளிர்ந்த இன்னீர் இளம்பசுங் காயும் மூன்றும்
தங்களி செய்யக் கூட்டித் தையலார் கைசெய் தாரே"

என்பதனால் அறிக. இச் செய்யுளிற் கூறிய பாக்கின் மூன்று நிலையும் மூவேறு பொழுதிற்கு உரியனவாம் என்பது,

[2]"பைங்கருங் காலிச் செங்களி அளைஇ
நன்பகற் கமைந்த அந்துவர்க் காயும்
இருங்கண் மாலைக்குப் பெரும்பழுக் காயும்
வைகறைக் கமையக் கைபுனைந் தியற்றிய
இன்றேன் அளைஇய இளம்பசுங் காயும்"

என்னும் பெருங்கதைப் பகுதியாற் பெறப்படும். குறுமகளைக் கொண்டனம் செலின் வெஞ்சுரம் நமக்கு அரிய அல்லமன் என்றமையால் பொருளீட்டுதற் பொருட்டுத் தலைவியைப் பிரிந்து செல்வது என்னால் இயலாதொன்று; நீ எங்ஙனம் செல்லுதியோ? எனத் தலைமகன் நெஞ்சினைக் கழறிக் கூறினன் என்க.

---

1. சீவக. இலக்கணை. உசஎகூ. 2. பெருங். மகத. கச. அக-அடு.

336. மருதம்

[நயப்புப்பரத்தை இற்பரத்தைக்குப் பாங்காயினர் கேட்பச் சொல்லியது.]

குழற்காற் சேம்பின் கொழுமடல் அகலிலைப்
பாசிப் பரப்பிற் பறழொடு வதிந்த
உண்ணாப் பிணவின் உயக்கஞ் சொலிய
நாளிரை தரீஇய எழுந்த நீர்நாய்
வாளையோ டுழப்பத் துறைகலுழ்ந் தமையின்
தெண்கட் டேறல் மாந்தி மகளிர்
நுண்செயல் அங்குடம் இரீஇப் பண்பின்
மகிழ்நன் பரத்தைமை பாடி யவிழிணர்க்
காஞ்சி நீழற் குரவை யயருந்
தீம்பெரும் பொய்கைத் துறைகேழ் ஊரன்
தேர்தர வந்த நேரிழை மகளிர்
ஏசுப என்பவென் நலனே அதுவே
பாகன் நெடிதுயிர் வாழ்தல் காய்சினக்
கொல்களிற் றியானை நல்கல் மாறே
தாமும் பிறரும் உளர்போற் சேறல்
முழவிமிழ் துணங்கை தூங்கும் விழவின்
யானவண் வாரா மாறே [1]வரினே
சுடரொடு திரிதரு நெருஞ்சி போல
என்னொடு திரியேன் ஆயின் வென்வேல்
மாரி யம்பின் மழைத்தோற் சோழர்
வில்லீண்டு குறும்பின் [2]வல்லத்துப் புறமிளை
ஆரியர் படையின் உடைகவென்
நேரிறை முன்கை வீங்கிய வளையே.

—பாவைக் கொட்டிலார்.

(சொ-ள்.) ௧—௧௨. குழல் கால் சேம்பின் கொழு மடல் அகல் இலை - துளை பொருந்திய தண்டினையுடைய சேம்பினது கொழுவிய மடலிலுள்ள அகன்ற இலையுடன் கூடிய, பாசிப் பரப்பில் - பாசியினையுடைய நீர்ப் பரப்பில், பறழொடு வதிந்த உண்ணாப் பிணவின் உயக்கம் சொலிய - குட்டியுடன் கூடியிருக்கும் உண்ணாமையால் வருந்திய பெண்நாயின் வருத்தத்தை நீக்குதற்கு, நாள் இரை தரீஇய எழுந்த நீர்

(பாடம்) 1. வரினே, வானிடைச். 2. வல்லத்துக் குறுமிளை.

நாய்-காலைப் பொழுதிலே இரையினைக் கொணர்தற்கு எழுந்த நீர் நாய், வாளையொடு உழப்ப - வாளையைப் பற்றிப் போர் செய்தலின், துறை கலுழ்ந்தமையின் - நீர்த்துறை கலங்கினமையால், தெண் கள் தேறல் மாந்தி-தெளிந்த கள்ளினைக் குடித்து, மகளிர்-பெண்கள், நுண் செயல் அம் குடம் இரீஇ-நுண்ணிய தொழில்நலம் வாய்ந்த அழகிய குடத்தினை வைத்துவிட்டு, மகிழ்நன் பண்பு இல் பரத்தைமை பாடி-தம் கணவரது நற்பண் பில்லாத பரத்தைமைகளைப் பாடி, அவிழ் இணர் காஞ்சி நீழல் குரவை அயரும் - விரிந்த பூங்கொத்துக்களையுடைய காஞ்சி மரத்தின் நீழலில் குரவை ஆடுதலைச் செய்யும், தீம் பெரும் பொய்கைத் துறை கேழ் ஊரன்-இனிய பெரிய பொய்கையின் துறை பொருந்திய ஊரை யுடைய தலைவனுடைய, தேர் தர வந்த நேர் இழை மகளிர்-தேர் கொண்டுவர வந்த பரத்தையராய நேரிய அணிகளை யணிந்த மகளிர், என் நலன் ஏசுப என்ப - என் அழகினை ஏசுகின்றனர் என்பர்;

கஉ—ச. அது-அச்செயல், பாகன் நெடிது உயிர் வாழ்தல்-பாகன் நெடுங்காலம் உயிருடன் வாழ்தல், காய் சினக் கொல் களிற்று யானை நல் கல்மாறே-மிக்க சினத்தினையுடைய கொல்லும் களிற்றியானை அவனைக் கொல்லாது அருள் செய்தலால் ஆவது போலும்;

கரு—எ. தாமும் பிறரும் உளர் போல் சேறல் - அப் பெண்டிரும் பிறரும் சிறப்புளார் போலச் செல்லுதல், முழவு இமிழ் துணங்கை தூங்கும் விழவில் - முழவு ஒலிக்கும் துணங்கைக் கூத்து ஆடும் விழாக் காலத்தே, யான் அவண் வாரா மாறே - யான் அவ்விடத்து வாராமையால் ஆயதே.

கஎ—உக. வரின்-யான் அவ்விடத்து வரின், சுடரொடு திரிதரும் நெருஞ்சிபோல-ஞாயிற்றின் செல்கையை நோக்கிச் சுழலும் நெருஞ்சிப் பூப் போல, என்னொடு திரியேன் ஆயின்-அவர்களை யான் செல்லுமிட மெல்லாம் என்னொடு திரியச் செய்வேன், அங்ஙனம் செய்யேன் ஆயின், வென் வேல் மாரி அம்பின் மழைத்தோல் சோழர்-வெற்றி பொருந்திய வேலினையும் மழை போன்ற அம்பினையும் மேகம் போன்ற தோற்கிடு கினையுமுடைய சோழரது, வில் ஈண்டு குறும்பின் வல்லத்துப் புறமிளை-விற்படை நெருங்கிய அரணையுடைய வல்லத்துப் புறத்தேயுள்ள காவற் காட்டின்கண் வந்தடைந்த, ஆரியர் படையின் - ஆரியரது படை போல, என் நேர் இறை முன்கை வீங்கிய வளை-எனது நேரிய சந்தினை யுடைய முன் கையில் திரண்ட வளைகள், உடைக - சிதைந்தொழிவனவாக.

(முடிபு) ஊரன் தேர்தரவந்த மகளிர், என் நலன் ஏசுப என்ப; அதுவே பாகன் நெடிதுயிர் வாழ்தல், களிற்றியானை நல்கல்மாறே, தாமும் பிறரும் உளர்போற் சேறல், விழவின் யான் அவண் வாராமாறே; வரினே சுடரொடு திரிதரு நெருஞ்சி போல என்னொடு (திரியச் செய்வேன்) திரியேனாயின் என் முன்கை வீங்கிய வளை சோழர் வல்லத்துப் புறமிளை ஆரியர் படையின் உடைக.

(பி-ரை.) கட்டேறல் - கள்ளாகிய தேறல் என்க. பண்பின் - பண்பினாலே, முறையாலே என்றுரைத்தலுமாம். [1]'அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும்' இயல்பினதாகிய யானை, அவனைக் கொல்லாது விட்டிருத்தலே அவன் நெடிது உயிர் வாழ்தற்குக் காரணமாதல்போல, விழவில் யான் அவன் வாராமையே தாமும் பிறரும் உளர்போற்சேறற்குக் காரணமாயிற்று என்றாள். வரின் திரியச் செய்வேன், அங்ஙனம் திரியச் செய்யேனாயின் என விரித்துரைக்க. இற்பரத்தை முதலாயினாரை என்னொடு திரியச் செய்வேன் என்றாளென்க. சோழர் வல்லத்துப் புற மிளை என்க. வல்லத்துப் புற மிளை ஆரியர் படையின் உடைக என்றதனால், சோணாட்டின் கண்ணதாகிய வல்லத்தின் புறத்தே ஒருகால் ஆரியர் படையெடுத்து வந்து தோற்றோடினர் என்னும் வரலாறு பெறப்படுகின்றது. வளை உடைக என்றாளேனும் வளையை உடைப்பேன் என்றாளாகக் கொள்க.

(மே-ள்.) [2]'புல்லுதல் மயக்கும் புலவிக் கண்ணும்' என்னுஞ் சூத்திரத்து, மனையோள் ஒத்தலில் தன்னோரன்னோர், மிகைபடக் குறித்த கொள்கைக் கண்ணும் என்னும் பகுதிக்கு இச்செய்யுளைக்காட்டி இதனுள் யானவன் வாரா மாறே எனத் தான் மனையோளைப்போல் இல்லுறைதல் கூறி, ஆண்டுச் செல்லிற் சுடரோடு திரியும் நெருஞ்சி போல ஏனை மகளிரை யான்செல்வுழிச் செல்லும் சேடியர்போலத் திரியும்படி பண்ணிக்கொள்வல் எனக் கூறியவாறு காண்க என்பர், நச்.

[3]'உயர்ந்ததன் மேற்றே யுள்ளுங் காலை' என்னுஞ் சூத்திரத்து உவமம் உயர்ந்ததாக வேண்டும் என்றற்கு, இதனுள் மாரியம்பின் மழைத்தோற் சோழர் என்பதனையும் காட்டி, உவமையுயர்ச்சியானே உவமிக்கப்படும் பொருட்குச் சிறப்பு எய்துவித்தவாறு கண்டுகொள்க என்றார் பேரா.

---

337. பாலை

[முன்னொரு காலத்துப் பொருள்வயிற் பிரிந்துவந்த தலைமகன் பின்னும் பொருள் கடைக் கூட்டிய நெஞ்சிற்குச் சொல்லியது.]

சாரல் யாஅத்து உயர்சினை குழைத்த
மாரி ஈர்ந்தளி ரன்ன மேனிப்
பேரமர் மழைக்கண் புலம்புகொண் டொழிய
ஈங்குப்பிரிந் துறைதல் இனிதன் றுகலின்
அவணதாக பொருளேன் றுமணர்
கணநிரை யன்ன பல்காற் குறும்பொறைத்

---

1. நாலடி. உஉ - க. 2. தொல். கற். ௧௦.
3. தொல். உவம. க.

தூதோய் பார்ப்பான் மடிவெள் ளோலை
படையுடைக் [1]கையர் வருதிற நோக்கி
உண்ணா மருங்குல் இன்னோன் கையது
பொன்னா குதலும் உண்டெனக் கொன்னே
தடிந்துடன் வீழ்த்த கடுங்கண் மழவர்
திறனில் சிதாஅர் வறுமை நோக்கிச்
செங்கோல் அம்பினர் கைந்நொடியாப் பெயரக்
கோடிவிடு குருதித் தூங்குகுடர் [2]கறீஇ
வரிமரல் இயவின் ஒருநரி யேற்றை
வெண்பரல் இமைக்கும் கண்பறி கவலைக்
கள்ளி நீழற் கதறுபு வதிய
மழைக்கண் மாறிய வெங்காட் டாரிடை
எமியங் கழிதந் தோயே பனியிருட்
பெருங்கலி வானந் தலைஇய
இருங்குளிர் வாடையொடு வருந்துவள் எனவே.

—பாலை பாடிய பெருங்கடுங்கோ.

(சொ - ள்.) க—டு. நெஞ்சே!, சாரல் யாஅத்து உயர்சினை மாரி குழைத்த - பக்கமலையின்கண் யா மரத்தின் உயர்ந்த கிளையில் மாரிக் காலத்தே தளிர்த்த, ஈர் தளிர் அன்ன மேனி-குளிர்ந்த தளிரையொத்த மேனியினையும், பேர் அமர் மழை கண்-பெரிய அமரிய குளிர்ந்த கண்களையும் உடைய தலைவி, புலம்பு கொண்டு ஒழிய-தனிமையுற்றுப் பிரிந்திருக்க, ஈங்குப் பிரிந்து உறைதல் - இவ்விடத்துப் பிரிந்து தங்கியிருத்தல், இனிது அன்று ஆகலின்-இனியதன்று ஆகலான், அவணது ஆக பொருள்-அவளுள்ள விடத்து இருப்பதே பொருள் ஆவதாக என்றும்,

கக—உக. பனி இருள் பெரு கலி வானம் தலைஇய-நடுக்கத்தைத் தரும் இருளில் பெரிய ஆரவாரமுடைய மழை பெய்தமையால், இரு குளிர் வாடையொடு வருந்துவள் எனவே - பெரிய குளிர்கொண்ட வாடையால் அவள் வருந்துவள் என்றும் கூறி,

டு—கக. உமணர் கணம் நிரை யன்ன குறும்பொறை-உப்பு வாணிகரது கூட்டமாகச் செல்லும் கழுதை நிரைபோன்ற பாறைகளின் வழியே, பல்கால் தூது ஒய் பார்ப்பான்-பல்காலும் தூது செல்லும் பார்ப்பான், மடி வெள் ஓலை - வெள்ளிய ஓலைச் சுருளுடன், வருதிறம் நோக்கி-வருகின்ற இயல்பினை நோக்கி, உண்ணா மருங்குல் இன்னோன் கையது-உண்ணாமையால் வாடிய விலாவினையுடைய இவன் கையில் உள்ளது, பொன் ஆகுதலும் உண்டு என-பொன்னாதலும் கூடும் எனக்

(பாடம்) 1. கைடர் தோ வருதொடர். 2. கதிஇ.

கருதி, கொன்னே தடிந்து உடன்வீழ்த்த படையுடைக்கையர் கடுங்கண் மழவர்-பயனின்றி அப்போதே கொன்று வீழ்த்திய கையிற் படையினை யுடைய கொடுமையையுடைய மறவர், திறன் இல் சிதாஅர் வறுமை நோக்கி-உடுக்கும் கூறுபாடு இல்லாத கந்தையை உடுத்திருக்கும் வறுமையைப் பார்த்து, செங்கோல் அம்பினர் கை நொடியா பெயர-குருதியாற் சிவந்த கோலாகிய அம்பினையுடைய அவர்கள் கையை நொடித்துப் புறம்போக, கொடி விடு குருதி தூங்கு குடர் கறீஇ-நீள ஒழுகிய குருதியுடன் தொங்கிக் கிடந்த குடலைக் கடித்து, வரி மரல் இயவின் ஒரு நரி ஏற்றை-வரிகளையுடைய மரலுள்ள நெறியில் ஓர் ஆண்நரி, வெண் பரல் இமைக்கும் கண் பறி கவலை-வெள்ளிய பரற்கற்கள் மின்னுங் கண் ஒளியைக் கவரும் கவர்த்த நெறியின்கண், கள்ளி நீழல் கதறுபு வதிய-கள்ளி நீழற்கண்ணே கூக்குரலிட்டுத் தங்கியிருக்க, மழை கண் மாறிய வெம்காட்டு ஆர் இடை-மழை பெய்யாதொழிந்த வெப்ப மிக்க காட்டுநெறியாய அரிய இடத்தே, எமியம் கழிதந்தோயே - (முன்பு ஒருகால்) யாம் தமியேமாக நீ மீண்டுவந்தாயன்றே.

(முடிபு) நெஞ்சே! மழைக்கண் புலம்புகொண் டொழிய ஈங்குப் பிரிந்துறைதல் இனிதன்றாகலின், அவணதாக பொருளெனவும் இருங்குளிர் வாடையொடு வருந்துவள் எனவுங் கூறி, மழை கண் மாறிய வெங்காட்டு ஆர் இடை முன்பு ஒருகால் எமியம் கழிதந்தோய்.

(வி - ரை.) தலைவியைப் பிரியாது உறைதலே பொருளாகும் என்னும் கருத்து. [1]'வடமீன்போற் றொழுதேத்த வயங்கிய கற்பினாள், தடமென்றோள் பிரியாமை பொருளாயி னல்லதை' என்பதனால் அறியப்படும். அவணதாக பொருள் என்றும், வாடையொடு வருந்துவள் என்றும் கூறிக் கழிதந்தோய் எனக் கூட்டுக. பல்கால் குறும்பொறை-பல கால்கள் போலும் கற்களையுடைய பாறை என்றுமாம். பார்ப்பான் ஓலையுடன் வருதிறம் நோக்கி எனவும், படையுடைக் கையராகிய கடுங்கண் மழவர் எனவும் கூட்டுக. உண்ணா மருங்குல் என்றது பார்ப்பானது இயல்பு கூறியபடி. தம் செய்கையின் பயனின்மையைக் கருதிக் கையை நொடித்துப் பெயர்ந்தனர் என்க. நெஞ்சே! முன்பு அங்ஙனம் வந்தாயாகலின், இப்போது மீட்டும் நின் சொல்லைத் தெளிந்து நின்னுடன் போதருமாறு எங்ஙனம் எனத் தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறினான் என்க.

---

1. கலித். பாலை ௬.

338. குறிஞ்சி

[அல்ல குறிப்பட்ட தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.]

குன்றோங்கு வைப்பின் நாடுமீக் கூறும்
மறங்கெழு தானை அரச ருள்ளும்
அறங்கடைப் பிடித்த செங்கோ லுடனமர்
மறஞ்சாய்த் தெழுந்த வலனுயர் திணிதோட்
பலர்புகழ் திருவிற் பசும்பூட் பாண்டியன்
அணங்குடை உயர்நிலைப் பொருப்பிற் கவாஅன்
சினையோண் காந்தள் நாறும் நறுநுதல்
துணையீர் ஓதி மாஅ யோள்வயின்
நண்கோல் அவிர்தொடி [1]வண்புறஞ் சுற்ற
முயங்கல் இயையா தாயினும் என்றும்
வயவுறு நெஞ்சத் துயவுத் துணையாக
ஒன்னார் தேஎம் பாழ்பட நூறும்
துன்னரும் துப்பின் வென்வேற் பொறையன்
அகலிருங் கானத்துக் கொல்லி போலத்
தவாஅ லியரோ நட்பே அவள்வயின்
அறாஅ லியரோ தூதே பொறாஅர்
[2]விண்பொரக் கழித்த திண்பிடி யொள்வாட்
புனிற்றான் தரவின் இளையர் பெருமகன்
தொகுபோர்ச் சோழன் பொருண்மலி பாக்கத்து
வழங்க லானாப் பெருந்துறை
முழங்கிரு முந்நீர்த் திரையினும் பலவே.

—மதுரைக் கணக்காயனார்.

(நச் - ள்.) க—௧௦. நெஞ்சே! குன்று ஓங்கு வைப்பின் மீக் கூறும் நாடு-மலைகள் உயர்ந்த இவ்வுலகில் சிறப்பித்துக் கூறும்நாட்டினை யுடைய, மறம்கெழு தானை அரசருள்ளும்-வீரம் மிக்க படைகளையுடைய பேரரசர்களுள்ளும், அறம் கடைப்பிடித்த செங்கோலுடன் - அறத் தினைக் கைக்கொண்ட செங்கோ லாட்சியுடன், அமர் மறம் சாய்த்து எழுந்த - பகைவரது போர்செய்யும் தறுகண்மையைக் கெடுத்து வளர்ந்த, வலன் உயர் திணி தோள்-வெற்றி மிக்க திண்ணிய தோளை யும், பலர் புகழ் திருவின் - பலராலும் புகழப்படும் திருவினையு முடை யோனாகிய, பசும்பூட் பாண்டியன் - பசும்பூட் பாண்டியனுடைய,

---

(பாடம்) 1. வன்பிற்சுற்ற, அன்பிற்சுற்ற. 2. கணம்பொரக் கழித்த.

அணங்கு உடை உயர்நிலைப் பொருப்பின் கவாஅன் - தெய்வத்தை யுடைய உயர்ந்த நிலையினைப் பொருந்திய பொதியிலின் பக்க மலையி லுள்ள, சினை ஒள் காந்தள் நாறும் - கிளைத்த ஒளி பொருந்திய காந்தட் பூப்போல மணக்கும், நறு நுதல் துணை ஈர் ஓதி மாஅயோள்வயின் - நல்ல நெற்றியினையும் அளவொத்த நீண்ட கூந்தலையுமுடைய மாமை நிறத்தினளாய தலைவியிடத்து, நுண் கோல் அவிர்தொடி வண்புறம் சுற்ற முயங்கல் - அவளது நுண்ணிய திரண்ட விளங்கும் வளை நமது வளமை பொருந்திய முதுகினைச் சுற்றிக்கொள்ள முயங்குதல், இயை யாது ஆயினும் - நமக்குக் கிட்டாதாயினும்,

கஉ—அ. ஒன்னார் தேஎம் பாழ்பட நூறும் - பகைவரது தேயம் பாழ்பட அழிக்கும், துன் அரும் துப்பின் வென்வேல் பொறையன் - பகைவரால் கிட்டுதற்கு அரிய வலியினையுடைய வென்றி பொருந்திய வேலினையுடைய சேரனது, அகல் இரு கானத்துக் கொல்லி போல - அகன்ற கரிய காட்டினையுடைய கொல்லி மலைபோல,

௧0—க. என்றும் வயவு உறு நெஞ்சத்து உயவு துணையாக - எஞ் ஞான்றும் வேட்கையுற்ற நெஞ்சத்திற்கு ஓர் உசாத் துணையாக,

கடு. நட்பு தவாஅலியர் - நட்புக் கெடாது நிலைபெறுவதாக;

கக—உக. பொருஅர் விண் பெற கழித்த திண்பிடி ஒள்வாள - பகைவர் விண்ணுலகை எய்துமாறு உருவிய திண்ணிய பிடியினையுடைய ஒளி பொருந்திய வாளையுடைய, புனிற்று ஆன் தரவின் இளையர் பெரு மகன்-ஈன்ற அணிமையுடைய பசுக்களைக் கவர்ந்து வரும் வெட்சி வீரர் களுக்குத் தலைவனான, தொகுபோர்ச் சோழன்-திரண்ட போரினை மேற்கொண்டு வெல்லும் சோழனது, பொருள்மலி பாக்கத்து வழங்கல் ஆன-பண்டங்கள் நிறைந்த பாக்கத்தின்கண் சென்று மீளல் அமையாத, முழங்கு இரு முந்நீர் பெருந்துறை திரையினும் பல-முழங்கும் பெரிய கடலின் பெரிய துறையிடத்துள்ளே அலைகளினும் பலவாக,

கடு—௯. அவள் வயின் தூது அருஅலியர் - அவளிடத்து விடும் தூது ஒழியாது செல்வதாக.

(முடிபு) நெஞ்சே! மாயோள்வயின் முயங்கல் இயையா தாயினும் கொல்லிபோல நட்புத் தவாலியரோ; முந்நீர்ப் பெருந்துறைத் திரையினும் பல தூது அறுஅலியர்.

(வி - ரை.) எழுந்த தோள் என்க. செங்கோலுடன் திணிதோளை யும் திருவினையுமுடைய பாண்டியன் எனக் கூட்டுக. பசும்பூட் பாண்டி யன், பெயர். பூணினையும் உடைய பாண்டியன் என்றுமாம். பொருப்பு என்றது பொதியிலை. முயங்கல் இயையாதாயினும் என்றமையால், தலை வன் அல்ல குறிப்பட்டானென்பது பெற்றாம். நட்பு, நமக்கு அவளோடு உளதாய நட்பு என்க. நெஞ்சத்து உயவுத் துணையாக என்றமையால், அந் நட்பினை நெஞ்சில் நினைதல் மாத்திரையேனும் இன்புறுவேம் என்

றும், தூது அருஅவியர் என்றமையால், பலகாலும் தூது செல்லின் ஒரோவழி அவளை முயங்குதலும் இயைவதாம் என்றும் தலைவன் நெஞ்சிற்குக் கூறினான் என்க.

மதுரைக் கணக்காயனார் பாடிய இப் பாட்டில் மூவேந்தரும் கூறப் படுவதுபோலவே, இவர் மகனாராகிய நக்கீரனார் பாடிய 'கேள்கே டூன்றவும்' (௯௩) என்னும் அகப்பாட்டில் மூவேந்தரும் கூறப்பட்டிருத்தல் அறிந்து இன்புறற்குரியது.

---

339. பாலை

[போகாநின்ற தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது]

வீங்குவிசைப் பிணித்த விரைபரி நெடுந்தேர்
நோன்கதிர் சுமந்த ஆழியாழ் மருங்கிற்
பாம்பென முடுகுநீர் ஓடக் கூம்பிப்
பற்றுவிடு விரலிற் பயறுகாய் ஊழ்ப்ப
அற்சிரம் நின்றன்றாற் பொழுதே முற்பட
ஆள்வினைக் கெழுந்த அசைவில் உள்ளத்து
ஆண்மை வாங்கக் காமந் தட்பக்
கவைபடு நெஞ்சங் கட்கண் அகைய
இருதலைக் கொள்ளி யிடைநின்று வருந்தி
ஒருதலைப் படாஅ உறவி போன்றனம்
நோங்கோல் அளியள் தானே யாக்கைக்கு
[1]உயிரியைந் தன்ன நட்பின் அவ்வுயிர்
வாழ்தல் அன்ன காதல்
சாதல் அன்ன பிரிவரி யோளே.

—[2]நரைமுடி நெட்டையர்.

(சொ - ள்.) ௧—௪. விரைபரி பிணித்த வீங்கு விசை நெடு தேர் - விரைந்த குதிரைகள் பூட்டப்பெற்ற மிக்க விசையையுடைய நெடிய தேரின், நோன் கதிர் சுமந்த ஆழி ஆழ் மருங்கில் - வலிய ஆரினைக் கொண்ட உருளை ஆழ்ந்து செல்லும் சுவட்டில், பாம்பு என முடுகு நீர் ஓட - பாம்பு போல வேகமாகச் செல்லும் நீர் ஓடவும், கூம்பி பற்று விடு விரலில் பயறு காய் ஊழ்ப்ப - குவிந்து பற்று நீங்கின விரல்கள் போல்

(பாடம்) 1. உயிரிடத்தன்ன. 2. நிறைமுடி நெட்டையார்.

பயற்றுச் செடியில் காய்கள் முற்றவும், பொழுது அற்சிரம் நின்றன்று-பொழுது பனிப்பருவமாகப் பொருந்தியது ;

இ—கO. ஆள்வினைக்கு எழுந்த அசைவில் உள்ளத்து ஆண்மை முற்படவாங்க - தாளாண்மை பற்றி எழுந்த தளர்தலில்லாத நெஞ்சின் கண்ணுள்ள ஆண்மை முன்னே இழுக்கவும், காமம் தட்ப-காமமானது பின்னே நின்று தடுக்கவும், கவைபடு நெஞ்சம் - அவற்றால் இருபாற்பட்ட நெஞ்சமே நாம், கண் கண் அகைய - கணுக்களில் தீப்பற்றி எரிதலின், இருதலைக் கொள்ளி இடை நின்று வருந்தி-இருதலையும் கொள்ளியினையுடைய ஒரு புழற்றட்டையின் உள்ளே நின்று வருந்தி, ஒருதலைப் படாஅ உறவி போன்றனம் - ஒருபக்கத்தும் செல்ல இயலாது தடுமாறும் எறும்பினை ஒத்துளேம்;

கக—ச. யாக்கைக்கு உயிர் இயைந்தன்ன நட்பின் - உடலொடு உயிர் ஒன்றினெலொத்த நட்பினையும், அ உயிர் வாழ்தல் அன்ன காதல்-அவ்வுயிர் இன்புற்று வாழ்தல் போலும் காதலையும் உடைய, சாதல் அன்ன பிரிவு அரியோள் - அதற்குச் சாதல்போலும் துன்பினைத் தரும் பிரிதல் அருமையை உடைய நம் தலைவி, நோம் கொல் - வருந்தியிருப்பாளோ, அளியள் - மிகவும் இரங்கத்தக்காள்.

(முடிபு) பொழுது அற்சிரம் நின்றன்று; ஆள்வினைக்கு எழுந்த உள்ளத்து ஆண்மை வாங்க, காமம் தட்ப, கவைபடு நெஞ்சமே! இருதலைக் கொள்ளி யிடை நின்று வருந்தி ஒருதலைப்படாஅ உறவி போன்றனம்; நட்பினையும் காதலையும் பிரிதற்கு அருமையையும் உடைய நம் தலைவி நோங்கொல்? அளியள்.

(வி - ரை.) தேர் உருள் கிழித்துச் சென்ற சுவட்டில் பாம்பு போல் நீர் ஓடும் என்ற இக்கருத்து, 'நேமி, தண்ணில மருங்கிற் போழ்ந்த வழியுள், நிரைசெல் பாம்பின் விரைபுநீர் முடுக' (கஉச) என முன்னரும் வந்துள்ளமை காண்க. நீர்ஓடப், பயறுகாய் ஊழ்ப்பப் பொழுது அற்சிரம் நின்றன்று என்க. ஆண்மை முற்பட வாங்க என்றமையின் காமம் பின்னின்று தட்ப என்க. செல்லுதல் தவிர்தல் என்ற இரண்டில் ஒன்றிற் படாமையின், கவைபடு நெஞ்சமாயிற்று. நெஞ்சம்: விளி. உறவி - எறும்பு. யாக்கைக்கு உயிர் இயைந்தன்ன நட்பு என்றது, ஒருவரையொருவர் இன்றியமையாத நட்பு என்றபடி. [1]'சாதலின் இன்னாத தில்லை' என்பவாகலின் சாதல் அன்ன பிரிவு என்றது சாதல் போலும் இன்னாமையுடைய பிரிவு என்பதாயிற்று. எனவே, அவ் வுயிர் வாழ்தல் அன்ன காதல் என்பதற்கு, அவ்வுயிர் இன்புற்று வாழ்தல் போலும் இன்பத்தை நல்கும் காதல் எனப் பொருள் கொள்க.

---

1. குறள் : உகூO,

340. நெய்தல்

[பகற் குறிக்கண் தோழி தலைமகற்குச் சொல்லியது.]

பன்னாள் எவ்வந் தீரப் பகல்வந்து
புன்னையம் பொதும்பின் இன்னிழற் கழிப்பி
மாலை மால்கொள நோக்கிப் பண்ணாய்ந்து
வலவன் வண்டேர் இயக்க நீயும்
செலவுவிருப் புறுதல் ஒழிகதில் அம்ம
செல்லா நல்லிசைப் பொலம்பூட் டிரையன்
பல்பூங் கானற் பவத்திரி அனவிவள்
[1]நல்லெழில் இளநலம் தொலைய ஒல்லெனக்
கழியே ஓதம் மல்கின்று வழியே
வள்ளெயிற் றரவோடு வயமீன் கொட்கும்
சென்றோர் மன்ற மான்றின்று பொழுதென
நின்றோர்த் தவலம் வீட இன்றிவண்
சேப்பின் எவனோ பூக்கேழ் புலம்ப
பசுமீன் நொடுத்த [2]வெண்ணெல்மாத் தயிர்மிதி
[3]மிதவை மாவார் குநவே நினக்கே
வடவர் தந்த வான்கேழ் வட்டம்
குடபுல உறுப்பிற் கூட்டுபு நிகழ்த்திய
வண்டிமிர் [4]நறுஞ்சாந் தணிகுவம் திண்டிமில்
எல்லுத்தொழின் மடுத்த வல்வினைப் பரதவர்
கூர்வளிக் [5]கடுவிசை மண்டலிற் பாய்ந்துடன்
கோட்சுறாக் கிழித்த கொடுமுடி நெடுவலை
தண்கடல் அசைவளி எறிதொறும் வினைவிட்டு
முன்றிற் றாழைத் தூங்கும்
தெண்கடற் பரப்பினெம் உறைவின் ஊர்க்கே.

—நக்கீரர்.

(சொ - ர்.) ௧௩. பூ கேழ் புலம்ப - பூக்கள் பொருந்திய கடற்கரையையுடைய தலைவனே,

---

(பாடம்) 1. நல்லெழிலின்னலம். 2. வெண்ணெல் மாஅத், தயிர்மிதி மிதவை ஆர்த்துவம் நினக்கே. 3. தயிர்மிதி மாஅ ஆர்குவ நினக்கே. 4. நறுஞ்சாந் தயர்நவம். 5. கடுவிசை மாட்டலின் பாய்புடன்.

க—கஉ. செல்லா நல்இசை பொலம் பூண் திரையன் - என்றும் கெடாத நல்ல சீர்த்தியினையும் பொற்பூணினையுமுடைய திரையன் என்பானது, பல் பூ கானல் பவத்திரி அனஇவள் - பல பூக்களையுடைய சோலையினையுடைய பவத்திரி எனும் ஊர் போன்ற இவள், இளநலம் எழில் நலம் தொலைய - தனது நல்ல அழகு வாய்ந்த இளமைச் செல்வி தொலையுமாறு, வழி - வழியானது, கழி ஒல் என ஓதம் மல்கின்று-கழி ஒல்லெனும் ஒலியுடன் நீர் பெருகப் பெற்றுளது, வன் எயிற்று அரவொடு வயமீன் கொட்கும்-மேலும் கூரிய பற்களையுடைய பாம்பினெடு சுறுமீன் திரியப்பெறும், பொழுது மன்ற மான்றின்று-பொழுது ஒரு தலையாக மயங்கியது, சென்றோர்-இங்ஙனமாகவும் நம் தலைவர் சென்று விட்டனரே, என - என்று கூறி, வின்திறத்து அவலம் வீட-நின்னிடத்துக் கொள்ளும் துன்பம் ஒழிய,

கஅ—உச. திண் திமில் எல்லு தொழில் மடுத்த வல்வினை பரதவர் - திண்ணிய படகுடன் சென்று பகலிலே மீன் பிடிக்கும் தொழிலை மேற்கொண்ட வலிய செயலையுடைய மீன் பிடிப்போர், கூர் வளி கடு விசை மண்டலின்-கடிய காற்றின் மிக்க விசையுடன் செல்லுதற்கண், கோள் சுறு பாய்ந்து உடன் கிழித்த கொடு முடி நெடுவலை - கொலைத்தொழிலையுடைய சுறுமீன்கள் ஒருங்கே பாய்ந்து கிழித்த வளைந்த முடிகளைக் கொண்ட நீண்ட வலைகள், வினைவிட்டு - தொழில் ஒழிந்து, தண் கடல் அசைவளி எறிதொறும் - குளிர்ந்த கடலினின்று அசைந்துவரும் காற்று வீசுந்தோறும், முன்றில் தாழை தூங்கும்-மனைமுற்றங்களிலுள்ள தாழை மரத்தின்மீது கிடந்து அசையாநிற்கும், தெள்கடல் பரப்பின் எம் உறைவு இன் ஊர்க்கு - தெளிந்த கடற் பரப்பினையுடைய எமது உறைதற்கினிய ஊரின்கண்,

கஉ—க. இன்று இவண் சேப்பின் எவனோ - நீ இன்று எம்மிடத்தே தங்கிச் செல்லின் வரும் குறை யாது?

கச—அ. பசு மீன் நொடுத்த வெண் நெல் மா தயிர் மிதி மிதவை-பசிய மீனை விற்று மாற்றிய வெண்ணெல்லின் மாவைத் தயிரிட்டுப் பிசைந்த கூழினை, மா ஆர்குந-குதிரைகள் உண்பனவாகும், நினக்கு—, வடவர் தந்த வான் கேழ் வட்டம் - வடநாட்டிலுள்ளார் கொணர்ந்த வெள்ளிய நிறத்தையுடைய வட்டக் கல்லில், குட புல உறுப்பில் கூட்டுபு நிகழ்த்திய-குடமலையாய பொதியிற் சந்தனக் கட்டையால் பிற மணப் பொருள்களையும் கூட்டி யுண்டாக்கிய, வண்டு இமிர் நறு சாந்து அணிகுவம் - வண்டுகள் ஒலிக்கும் நறிய சாந்தினை அணிவிப்பேம்;

க—௩. பல் நாள் எவ்வம் தீர பகல் வந்து - பல நாளும் நினது வருத்தம் நீங்கப் பகற் பொழுதிலே வந்து, புன்னை அம் பொதும்பின் இன் நிழல் கழிப்பி-புன்னை மரங்களையுடைய அழகிய சோலையின் இனிய நிழலில் பொழுதைக் கழித்து, மாலைமா கொள நோக்கி-மாலைப் பொழுது

வர அதனை மயக்கம் தோன்றப் பார்த்து, வலவன் பண் ஆய்ந்து வண் தேர் இயக்க-நின் பாகன் தேரினைப் பூட்டுதலை ஆராய்ந்து அழகிய அத் தேரினைச் செலுத்த, நீயும் செலவு விருப்புறுதல் ஒழிக - நீயும் செல்லுதற்கு விரும்புதலை ஒழிவாயாக.

(முடிபு) புலம்ப! இவள், தன் நலம் தொலைய, வழியே கழி ஓதம் மல்கின்று; அரவோடு வயமீன் கொட்கும்; பொழுது மன்ற மாலின்று; சென்றோர்; என நின் திறத்துக் கொள்ளும் அவலம் விட, எம் உறைவு இன் ஊர்க்கண் இவண் இன்று சேப்பின் எவனோ? மாமிதவை ஆர்குந; நினக்கு நறுஞ் சாந்து அணிகுவம்; ஆதலால் நீயும் செலவு விருப்புறுதல் ஒழிகதில்.

(வி - ரை.) ஒழிகதில்: தில் விழைவின்கண் வந்தது. அம்ம: அசை. இவள் இளநலம் தொலைய நின் திறத்துக் கொள்ளும் அவலம் எனவிரித்துரைக்க. பசு மீன் நொடுத்த வெண்ணெல்-மீனைக்கொடுத்து அதற்கு மாறாகப் பெற்ற நெல் என்க. வடவர் தந்த வட்டம் - வடவர் வடமலையினின்றும் கொண்டுவந்த வட்டக்கல் என்க. வடமலையில் உண்டாகிய கல்லும் தென் மலையில் உண்டாகிய சந்தனக் கட்டையும் சிறந்தனவாகப் பண்டையோர் கொண்டிருந்தனர் என்பது, [1]'வடவர் தந்த வான்கேழ் வட்டம், தென்புல மருங்கிற் சாந்தொடு துறப்ப' [2]'வடமலைப் பிறந்த வான்கேழ் வட்டத்தைத், தென்மலைப் பிறந்த சந்தனம் மறுக' என்பனவற்றான் அறியப்படும். பொதியின் மலை குட மலை எனவும் படுமாதலின் அதனைக் குடபுலம் எனக்கொண்டு அதனி லுண்டாகிய கட்டையை உறுப்பு என்றார். அன்றி, குடபுல உறுப்பு என்பதற்கு யவன தேயத்திலுண்டாகிய விரைக்கு உறுப்பாம் பொருள்கள் என்றலுமாம்; [3]'குடதிசை மருங்கின் வெள்ளயிர்' என வருவது காண்க.

(மே - ள்.) [4]'நாற்றமும் தோற்றமும்' என்னும் சூத்திரத்து வேளாண் பெருநெறி வேண்டியவிடத்து என்னும் பகுதிக்கு, இச் செய்யுளைக் காட்டி இதனுள் தனக்கும் புரவிக்கும் கொடுப்பன கூறித் தடுத்தவாறு காண்க என்பர், நச்.

---

1. நெடுநல். ௫௧ - ௨. 2. சிலப். ௭: ௬௭ - ௮.
3. சிலப். ௭ - ௬௫. 4. தொல். கள. ௨௩.

341. பாலை

[பிரிவின்கட் டோழிக்குத் தலைமகள் சொல்லியது.]

உய்தகை யின்றால் தோழி பைபயக்
கோங்கும் கொய்குழை யுற்றன குயிலும்
தேம்பாய் மாஅத் தோங்குசினை விளிக்கும்
நாடார் காவிரிக் கோடுதோய் மலிர்நிறைக்
௫. கழையழி நீத்தம் சாஅய வழிநாள்
மழைகழிந் தன்ன மாக்கால் மயங்கறல்
பதவுமேயல் அருந்து துளங்கிமில் நல்லேறும்
மதவுநடை நாக்கோ டசைவீடப் பருகிக்
குறுங்காற் காஞ்சிக் கோதை மெல்லிணர்ப்
௧௦. பொற்றகை நுண்டாது உறைப்பத் தொக்குடன்
குப்பை வார்மணல் எக்கர்த் துஞ்சும்
யாணர் வேனில் மன்னிது
மாணலம் நுகருந் துணையுடை யோர்க்கே.

—ஆலூர் மூலங்கிழார்.

(சொ - ள்.) ௧—௩. தோழி—, கோங்கும் பை பய கொய் குழை உற்றன - கோங்கும் மெல்ல மெல்லக் கொய்யப்படும் தளிர்களை எய்தின, குயிலும் தேம் பாய் மாஅத்து ஓங்கு சினை விளிக்கும் - குயிலும் தேன் பெருகும் மாமரத்தில் உயர்ந்த கிளையிலிருந்து கூவும்;

௪—௧௧. நாடு ஆர் காவிரி கோடு தோய் மலிர் நிறை - நாடுகள் நிறைதற் கேதுவாய காவிரியின் கரையைப் பொருந்திய மிக்க பெருக்காகிய, கழை அழி நீத்தம்-ஓடக்கோல் மறையும் வெள்ளம், சாஅய வழி நாள்-வற்றிய பின்னளில், மழை கழிந்தன்ன மா கால் மயங்கு அறல் - மழைபெய்து கழிந்தா லொத்த பெரிய வாய்க்கால்களிற் றங்கிய நீரினை, பதவு மேயல் அருந்து துளங்கு இமில் நல் ஏறும் - அறுகம் புல்லாய உணவினைத் தின்ற அசையும் கொண்டையினையுடையநல்ல ஏறுகளும், மதவு உடைநா கொடு அசை வீட பருகி - வலிமையுடைய நாவினுல் தளர்ச்சி நீங்கக் குடித்து, குறுகால் காஞ்சி கோதை மெல் இணர்பொன் தகை நுண் தாது உறைப்ப - குறிய அடியினையுடைய காஞ்சிமரத்தின் மாலை போன்ற மெல்லிய பூங்கொத்துக்களினின்று உதிரும் பொன்னின் அழகுடைய நுண்ணிய பொடிகள் மேலே உதிர்ந்திட, தொக்கு உடன் குப்பை வார்மணல் எக்கர் துஞ்சும் - ஒருங்கு கூடி நெடிய மணலின் குப்பையாகிய மேட்டிலே துயிலும்,

௧௨—௩. இது - இங்ஙனமாய இக்காலம், மாண் நலம் நுகரும் துணையுடையோர்க்கு-சிறந்தஇன்பத்தை நுகரும் துணையினைப்பக்கலிற்

அ.—6

உடையார்க்கு, யாணர் வேனில் - அழகிய வேனிற் பருவமாகும், மன் - அதனாற் பெற்றதென் ?

௧. உய்தகை இன்று - துணையைப் பிரிந்துள்ள நாம் உய்யுமாறு இல்லையே.

(முடிபு) தோழி! கோங்கும் கொய் குழை யுற்றன; குயிலும் விளிக்கும்; நல்லேறும் அறல் பருகி நுண்தாது உறைப்ப எக்கர்த் துஞ்சும்; இது துணையுடையோர்க்கு யாணர் வேனில் மன்; நாம் உய்தகை இன்று.

(வி - ரை.) அறல் பருகி எனக் கூட்டுக. நா கொடு - நாவினைக் கொண்டு; நாவினால். துஞ்சும் என்பதனைப் பெயரெச்சமாகக்கொண்டு துஞ்சும் இது என்றுரைத்தலுமாம். யாணர் வேனில் - இன்பத்தைத் தரும் வேனில் என்க.

342. குறிஞ்சி

[அல்ல குறிப்பட்ட தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது].

ஒறுப்ப ஓவலை நிறுப்ப நில்லலை
புணர்ந்தோர் போலப் போற்றுமதி நினக்கியான்
கிளைஞன் அல்லனோ நெஞ்சே தெனாஅது
வெல்போர்க் கவுரியர் நன்னாட் டுள்ளதை
மண்கோள் புற்றத் தருப்புழை திறப்பின்
ஆகோள் மூதூர்க் கள்வர் பெருமகன்
ஏவல் இளையர் தலைவன் மேவார்
அருங்குறும் பெறிந்த ஆற்றலொடு பருந்துபடப்
பல்செருக் கடந்த செல்லுறழ் தடக்கை
கேடாஅ நல்லிசைத் தென்னன் தொடாஅ
நீரிழி மருங்கிற் கல்லளைக் கரந்தவவ்
வரையர மகளிரின் அரியள்
அவ்வரி அல்குல் அணையாக் காலே.

—மதுரைக் கணக்காயனார்.

(சொ - ள்.) ௧—௪. நெஞ்சே—, தெனாஅது-தெற்கின் கண்ணே யுள்ளதாகிய, வெல்போர் கவுரியர் நல் நாட்டு உள்ளது-போர் வெல்லும் பாண்டியரது நல்ல நாட்டிலுள்ளதாய,

௫—௧௩. மண் கொள் புற்றத்து-மண்ணாலாய புற்றினையுடைய. அருப்பு உழை திறப்பின் - காட்டரணின் இடத்தைத் திறத்தலோடு, ஆகொள் மூதூர் கள்வர் பெருமகன்-பகைவர் ஆக்களைக் கவர்ந்துகொள்

ளும் பழைய ஊரினராய கள்வர்கட்கு முதல்வனும், ஏவல் இளையர் தலைவன் - ஏவுதலைச் செய்யும் வீரர்கட்குத் தலைவனும், மேவார் அரு குறும்பு எறிந்த ஆற்றலொடு - பகைவரது அரிய அரண்களை அழித்த வலிமையுடன், பருந்துபட பல் செரு கடந்த - பருந்துகள் வந்துகூடப் பகைவரது பலபோரையும் வென்ற, செல் உறழ் தடக்கை - இடியுடன் மாறுபடும் பெரிய கையினையும், கெடாஅ நல் இசை - என்றும் கெடாத நல்ல சீர்த்தியினையுமுடையானும் ஆகிய, தென்னன் - பாண்டியனது, தொடாஅ நீர் இழி மருங்கில் - தோண்டப்படாத அருவி வீழும் பொய்கையினையுடைய, கல் அளை - மலையின் குகையில், கரந்த - மறைந்த, வரையர மகளிரின் - வரையர மகளிர்போல், அரியள் - அரியளாய, அ வரி அல்குல் - அழகிய வரிகளையுடைய அல்குலையுடையவளாய தலைவி, அணையாக்கால் - நம்மை அணையப் பெறாத விடத்து,

க—கூ. ஒறுப்ப ஓவலை - உன்னை வன்சொற் கூறி ஒறுக்கவும் ஒழிவாய் அல்லை, நிறுப்ப நில்லலை - இன்சொற் கூறி நிறுத்தவும் நிற்பாய் அல்லை, நினக்கு யான் கிளைஞன் அல்லனோ - உனக்கு யான் உறவினன் அல்லனோ, புணர்ந்தோர்போல போற்றுமதி - உள்ளம் ஒன்றிய நண்பரைப்போல யான் கூறுவதனைப் போற்றுவாயாக.

(முடிபு) நெஞ்சே! வரையர மகளிரின் அரியள் அவ்வரி அல்குல் அணையாக்கால், ஒறுப்ப ஓவலை; நிறுப்ப நில்லலை; நினக்கு யான் கிளைஞன் அல்லனோ புணர்ந்தோர்போலப் போற்றுமதி.

கள்வர் பெருமகனும் இளையர் தலைவனும் தடக்கையும் நல்லிசையும் உடையோனுமாகிய தென்னன் என்க.

(வி - ரை.) ஒறுத்தல் - வன்சொற் கூறிக் கழறுதல். மேல் ஒறுப்ப என்றமையால் நிறுப்ப என்பதற்கு இன்சொல் கூறி நிறுத்தவும் என்க. இவ்விருதிறத்தானும் அறிவுறுத்தல் கிளைஞர் செயலாதலின், நினக்கு யான் கிளைஞன் அல்லனோ என்றான். அல்ல குறிப்பட்ட தலைமகன் தலைவி பெறுதற்கரியள் ஆகலின், ஆண்டுச் செல்லுதல் ஒழிக ஈங்கே நில் என்று உரைத்தும் நெஞ்சுகேளாது செல்லுதலின் அதனை நோக்கி இங்ஙனம் கூறினான் என்க.

தெனாஅது: குறிப்பு முற்று எச்சமாகியது. உள்ளதை - ஐ: சாரியை. நன்னாட்டு உள்ளதாகிய கல் அளை என்றும் கூட்டுக. அருப்பம் - அருப்பு என்றாயது. அருப்பம் - காட்டரண். மேவார் - வேளிரும் வேந்தருமாகிய பகைவர்: வேளிரது குறும்பு எறிந்த என்றும், வேந்தரது பல் செருக்கடந்த என்றும் கொள்க. வேளிர் - குறுநில மன்னர். தொடா மருங்கு - தோண்டப்படாத இடம்; இயற்கையாய நீர்நிலை; இது பொய்கை எனப்படும்.

343 பாலை

[தலைமகன் இடைச்சுரத்து மீளக் கருதிய நெஞ்சினைக் கழறிப் போயது.]

வாங்கமை புரையும் வீங்கிறைப் பணைத்தோள்
சில்சுணங் கணிந்த பல்பூண் மென்முலை
நல்லெழில் ஆகம் புல்லுதல் நயந்து
[1]மரங்கோள் உமண்மகன் பெயரும் பருதிப்
புன்றலை சிதைத்த வன்றலை நடுகற்
கண்ணி வாடிய மண்ணு மருங்குற்
கூருளி குயின்ற கோடுமாய் எழுத்தவ்
வாறுசெல் வம்பலர் வேறுபயம் படுக்கும்
கண்பொரி கவலைய கானத் தாங்கண்
நனந்தலை யாஅத் தந்தளிர்ப் பெருஞ்சினை
இல்போல் நீழற் செல்வெயில் ஒழிமார்
நெடுஞ்செவிக் கழுதைக் குறுங்கால் ஏற்றைப்
புறநிறை பண்டத்துப் பொறையசாஅக் [2]கனைந்த
பெயர்படை கொள்ளார்க் குயவுத்துணை யாகி
உயர்ந்த ஆள்வினை புரிந்தோய் பெயர்ந்துநின்று
உள்ளினை வாழியென் நெஞ்சே கள்ளின்
மகிழின் மகிழ்ந்த அரிமதர் மழைக்கண்
சின்மொழிப் பொலிந்த [3]துவர்வாய்ப்
பன்மாண் பேதையிற் [4]பிரிந்த நீயே.

—மதுரை மருத னிளநாகனார்.

(சொ - ள்.) கசு—க. என் நெஞ்சே வாழி—, கள்ளின் மகிழின் மகிழ்ந்த - கள்ளால் ஆகிய மகிழ்வுபோல மகிழ்தற்கு ஏதுவாகி அரிய, மதர் மழைகண்-செவ்வரி படர்ந்த மதர்த்த குளிர்ந்த கண்களையும், சில் மொழிப் பொலிந்த துவர் வாய்-சிலவாய மொழிகளாற் பொலிவுற்ற பவளம்போன்ற வாயினையும், பல் மாண் - பலவாய மாண்புகளையும் உடைய, பேதையின் பிரிந்த நீ - நம் தலைவியைப் பிரிந்துவந்த நீ,

ச—கரு. மரம் கோள் உமண் மகன் பெயரும் பருதி-வண்டியினைக் கொண்ட உப்பு வாணிகனது பெயர்ந்து செல்லும் உருளின், புன் தலை-பொலிவில்லாத பூண், சிதைத்த வன்தலை நடுகல்-சிதையச் செய்த வலிய பாறையிலுள்ள நடு கல்லின், கண்ணி வாடிய மண்ணு மருங்குல்-இடப் பெற்ற கண்ணி வாடப்பெற்றதும் நீராட்டப்பெறாததுமாகிய இடத்தில்,

---

(பாடம்) 1. மரங்கொல். 2. கனைந்த, படைகொளாளர்.
3. செவ்வாய். 4. பெயர்ந்த நீயே.

கூர் உளி குயின்ற கோடுமாய் எழுத்து-கூரிய உளியால் இயற்றப்பெற்ற கீற்றுக்கள் மறைந்த எழுத்துக்கள், அ ஆறு செல் வம்பலர் வேறு பயம் படுக்கும் - அவ்வழியிலே செல்லும் புதியர்க்கு வேறு பொருளினவாகப் பிறழ்ந்து காணப்படும், கண் பொரி கவலைய கானத்து ஆங்கண்-இடங் கள் பொரிந்த கவர்த்த நெறிகளையுடைய காடாகிய அங்குள்ள, நனந் தலை யாஅத்து அம் தளிர் பெரு சினை-அகன்ற இடத்தின்கண்ணே யா மரத்தின் அழகிய தளிர்களையுடைய பெரிய கிளைகளின், இல்போல் நீழல் செல் வெயில் ஒழிமார் - இல்லின்கண் இருப்பதுபோன்ற நீழலில் தாம் வந்த வெயிலின் வெப்பம் ஒழிதற்கு, நெடு செவி கழுதை குறுகால் ஏற்றை - நீண்ட செவியினையும் குறிய காலினையுமுடைய ஆண்கழுதை யின், புறம் நிறை பண்டத்துப் பொறை அசாஅக் களைந்த - புறத்தே நிறைந்துள்ள பண்டங்களின் பாரத்தாலாய தளர்வினைப் போக்கியவ ராகி, பெயர்படை கொள்ளார்க்கு - மீண்டும் புறப்பாடு செய்யாதிருந் தார்க்கு, உயவு துணையாகி - உசாவியிருக்கும் வழித்துணையாகி, உயர்ந்த ஆள்வினை புரிந்தோய் - மிக்க முயற்சியினை விரும்பி னின்றனை, (ஆயினும் இப்போது),

௧—௬. வாங்கு அமை புரையும் வீங்கு இறை பணை தோள் - வளைந்த மூங்கிலையொக்கும் மிக்க இறையினையுடைய பெருத்த தோளினை யும், சில் சுணங்கு அணிந்த பல் பூண் மென்முலை - சிலவாய தேமலை அணிந்த பல பூண்களையுடைய மெத்தென்ற முலையினையுமுடைய தலைவியின், நல் எழில் ஆகம் புல்லுதல் நயந்து - நல்ல அழகிய ஆகத் தினைத் தழுவுதலை விரும்பி,

௧௭—௮. பெயர்ந்து நின்று உள்ளினை-மீண்டு நின்று இம் முயற்சி யினைக் கைவிட நினைத்துளாய்; இது தகுமா?

(முடிபு) என் நெஞ்சே! வாழி! பேதையிற் பிரிந்த நீ கானத்து ஆங்கண் உயர்ந்த ஆள்வினைபுரிந்தோய் ஆயினும், இப்போது, மென்முலை ஆகம்புல்லுதல் பெயர்ந்து நின்று உள்ளினை; இது தகுமா?

(வி - ரை.) மரம் கோள்: மரம் என்பது அதனாலாய வண்டியைக் குறித்தது; மரக்கலத்தைக் குறித்தல்போல. அது மரக் கலத்தைக் குறித்தல், [1]'பெருங்கடல் நீந்திய மரம் வலியுறுக்கும்,' [2]'மரத்தாரிம்மா ணுக்குடிப் பிறந்தார்,' [3]'இல்லை மரம்போக்கிக் கூலி கொண்டார்,' என் பவற்றான் அறியப்படும். பருதி-வண்டியின் உருள். பயம்-பொருள். பெயர்படை - பெயர்பு அடை; பெயர்தலைப் பொருந்தல். தலைவி உசாத் துணையின்றி வருந்த அவளைப் பிரிந்து சுரத்திலே செல்லும் பண்ட வாணிகர்க்கு உசாத்துணையாகப் பெரிய முயற்சியை மேற் கொண்ட நீ இப்பொழுது இடைச்சுரத்தே மீண்டு நின்று தலைவியை நினைப்பது என்னை? எனத் தலைவன் நெஞ்சினைக் கழறினான் என்க.

---

1. பதிற்று. எ௬. 2. நாலடி. ௧௩௫, 3. பழமொழி. ௪.

344. முல்லை

[வினை முற்றிய தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.]

வளமழை பொழிந்த வானிறக் களரி
உளர்தரு தண்வளி உறுதோறும் நிலவெனத்
தோகுமுகை விரிந்த முடக்காற் பிடவின்
வையேர் வாலெயிற் றொண்ணுதல் மகளிர்
கைமாண் தோளி கடுப்பப் பையென
மயிலினம் பயிலும் மரம்பயில் கானம்
எல்லிடை யுறாஅ வளவை வல்லே
[1]கழலொலி நாவில் தெண்மணி கறங்க
[2]நிழலொலிப் பன்ன நிமிர்பரிப் புரவி
வயக்குறு கொடிஞ்சி பொலிய வள்பாய்ந்து
இயக்குமதி வாழியோ கையுடை வலவ
பசப்புறு படரட வருந்திய
நயப்பின் காதலி நகைமுகம் பெறவே.

—மதுரை அளக்கர் ஞாழார் மகனார் [3]மள்ளனார்.

(சொ - ள்.) கக—கூ. கை உடை வலவ - தேர் ஊர்தலில் கை தேர்ந்த பாகனே!, வாழி!—, பசப்பு உறு படர் அட வருந்திய - பசலை உற்ற துன்பம் வருத்த வருந்திய, நயப்பு இன் காதலி - அன்பு மிக்க இனிய காதலியின், நகை முகம்பெற - நகையுடன் கூடிய முகத்தினை அடைய,

க—கூ. வள மழை பொழிந்த - வளந்தரும் மழை சொரிந்த, வால் நிற களரி-வெள்ளிய நிறத்தினையுடைய களர் நிலமாகிய காட்டில், உளர் தரு தண் வளி உறுதொறும் - வீசும் குளிர்ந்த காற்று மிகுந்தொறும், நிலவு என தொகுமுகைவிரிந்த முடம்கால் பிடவின்-நிலவொளி என்னுமாறு தொக்க அரும்புகள் விரிந்த வளைந்தஅடியினையுடைய பிடாமரத்தின்கண்ணே, வைஏர் வால் எயிற்று ஒள் நுதல் மகளிர் கை மாண் தோளி கடுப்ப-கூரிய அழகிய வெள்ளிய பற்களையும் ஒளி தங்கிய நெற்றியினையுமுடைய மகளிரது ஒழுங்கு மாட்சிமைப்பட்ட தோளி என்னும் விளையாட்டை யொப்ப, பை என மயில் இனம் பயிலும் மரம் பயில்கானம் - மெல்லென மயிற் கூட்டங்கள் இயலும் மரங்கள் அடர்ந்த காட்டு நெறியில்,

எ. எல் இடை உறு அளவை - இருள் இடைப்படா முன்னரே,

எ—கக. வல்லே - விரைந்து, கழல் ஒலி நாவின் தெண் மணி கறங்க - கழலாகிய ஒலிக்கும் நாவினையுடைய தெளிந்த மணிஒலிக்க,

(பாடம்) 1. கழலொலி. 2. நிழலொளிப், நிழலொழிப், 3. அம்மள்ளனார்.

நிழல் ஒலிப்பு அன்ன நிமிர் பரிப் புரவி-ஒளியின் தழைத்தலை யொத்த நிமிர்ந்த செலவினையுடைய குதிரைகளை, வள்பு ஆய்ந்து - கடிவாளத்தினை ஆய்ந்து செலுத்தி, வயக்கு உறு கொடிஞ்சி பொலிய - விளக்கமுறும் கொடிஞ்சி பொலிவுற்றுக் காண, (இவர்ந்து) இயக்குமதி - தேரினைச் செலுத்துவாயாக.

(முடிபு.) வலவ! வாழி! காதலி நகைமுகம் பெற, கானம் எல் இடை உரு அளவை, புரவி வள்பு ஆய்ந்து கொடிஞ்சி பொலிய (இவர்ந்து தேரினை) இயக்குமதி.

(வி - ரை.) களரி-களர் நிலம், பிடவின்கண் மயிலினம் பயிலும் கானம் என்க. தோளி - மகளிர் விளையாட்டுள் ஒன்று. இது பல்வரிக் கூத்துள் ஒன்றாதலைச் சிலப்பதிகார அரங்கேற்று காதை உரையான் அறிக. தோளை வீசி ஆடுதலின் தோளி எனப்பட்டது. கை மாண் - கைவீசுதல் மாட்சியுற்ற என்றுமாம். திருவாசகத்திற் கூறப்பட்ட தோணோக்கம் என்பதும் இதுவேபோலும். கார்காலத்தில் பிடவின் மீது மயில்கள் உவகையுடன் உலாவுதலுக்கு ஒண்ணுதல் மகளிரது தோள்வீச்சு உவமம் ஆயிற்று.

---

345. பாலை

[தோழிக்குத் தலைமகள் சொல்லியது.]

விசும்புதளி பொழிந்து வெம்மை [1]நீங்கித்
தண்பதம் படுதல் செல்கெனப் பன்மாண்
நாஞ்சில விழைந்தன மாக ஓங்குபுகழ்க்
கானமர் செல்வி அருளலின் வெண்காற்
பல்படைப் புரவி எய்திய தொல்லிசை
நுணங்குநுண் பனுவற் புலவன் பாடிய
இனமழை தவழும் ஏழிற் குன்றத்துக்
கருங்கால் வேங்கைச் செம்பூம் பிணையல்
ஐதேந் தல்குல் யாமணிந் துவக்குஞ்
சின்னாள் கழிக என்று முன்னாள்
நம்மொடு பொய்த்தனர் ஆயினுந் தம்மொடு
திருந்துவேல் இளையர் சுரும்புண மலைமார்
மாமுறி ஈன்று மரக்கோம் பகைப்ப
உறைகழிந் துலந்த பின்றைப் பொறைய
சிறுவெள் ளருவித் துவலையின் மலர்ந்த
கருங்கால் நுணவின் பெருஞ்சினை வான்பூச்
செம்மணற் சிறுநெறி கம்மென வரிப்பக்

(பாடம்) 1. நீங்க.

காடுகவின் பெறுக தோழி ஆடுவளிக்கு
ஒல்குநிலை இற்றி ஒருதனி நெடுவீழ்
கல்கண் சீக்கும் அத்தம்
அல்குவெயில் நீழல் அசைந்தனர் செலவே.

—குடவாயிற் கீரத்தனார்.

(சொ - ள்.) ௧௮. தோழி—,

௧—௫. விசும்பு தளி பொழிந்து - வானம் துளியைச் சொரிந்து, வெம்மை நீங்கி-வெப்பம் கழிந்து, தண் பதம் படுதல்-குளிர்ந்த நிலைமை எய்துதலின், செல்க என - எம்மையும் உடன்கொண்டு செல்வாயாக என்று கூறி, நாம் பல் மாண் செலவிழைத்தனம் ஆக-நாம் பலமுறையும் உடன் செல்ல விரும்பி வேண்டினேமாக,

௫—௧௧. ஓங்கு புகழ் கான் அமர் செல்வி - மிக்க புகழ் வாய்ந்த கொற்றவை, அருளலின் - அருள் கூர்ந்து அளித்தலின், வெண்கால் பல் படை புரவி எய்திய-வெள்ளிய காலினையும் பல படையினையும் உடைய குதிரைகளை அடைந்த, தொல் இசை நுணங்கு நுண்பனுவல் புலவன் பாடிய - பழைமையான புகழினையுடைய மிக நுண்ணிய செய்யுட்களை இயற்றிய புலவனாற் பாடப்பெற்ற, இனம்மழை தவழும் ஏழில் குன்றத்து-கூட்டமாய் மேகங்கள் தவழும் ஏழில் எனும் குன்றத்தின்கண் ஊள்ள, கருகால் வேங்கை செம் பூ பிணையல்-கரிய அடியினையுடைய வேங்கை மரத்தின் சிவந்த பூக்களாலாய மாலையை, ஐது ஏந்து அல்குல் யாம் அணிந்து உவக்கும்-அழகிதாய உயர்ந்த அல்குலில் யாம் அணிந்து மகிழும் பருவமாய, சில் நாள் கழிக என்று-சில நாள் கழிவதாக என்று, முன் நம்மொடு பொய்த்தனர் ஆயினும் - முற்காலத்தே நம்பால் பொய் கூறிச் சென்றுவிட்டாராயினும்,

௧௮—௨௧. ஆடு வளிக்கு ஒல்கு நிலை இற்றி ஒரு தனி நெடுவீழ் - அசையும் காற்றினால் தளரும் நிலை வாய்ந்த இற்றிமரத்தின் ஒன்றாகித் தனித்த நீண்ட விழுது; கல் கண் சீக்கும் அத்தம் - மலையின் இடத்தினைத் துடைக்கும் சுரநெறியில், அல்கு வெயில் நீழல் அசைந்தனர் செல-பொருந்திய வெயிற்காக நிழலின்கண் தங்கினராகிச் செலற்கு,

௧௧—௮. தம்மொடு திருந்து வேல் இளையர் - தம்முடனே திருந்திய வேலினையுடைய ஏவலாளரும், சுரும்பு உண மலைமார் - வண்டுகள் உண்ணும்படி தரித்துக்கோடற்கு, மாமுறி ஈன்று மரக்கொம்பு அகைப்ப - சிறந்த தளிர்களை ஈன்று மரத்தின் கொம்புகள் தளிர்க்குமாறு, உறை கழிந்து உலந்த பின்றை - மழை பெய்து நீங்கிய பின்பு, பொறைய சிறுவெள் அருவித் துவலையின் மலர்ந்த - குன்றுகளினிடத்தவாய சிறிய வெள்ளிய அருவிகளின் நீர்த்துளியால் மலர்ந்த, கரு கால் நுணவின் பெரு சினைவான் பூ - கரிய அடியினையுடைய நுணா மரத்தின் பெரிய கிளைகளிற் பூத்த வெள்ளிய பூக்கள், செம்மணல் சிறுநெறி கம்

என 'வரிப்ப-சிவந்த மணலையுடைய சிறிய வழிகளிலே கம்மென்று மணக்குமாறு உதிர்ந்து அழகு செய, காடுகவின் பெறுக - காடு அழகு பெறுவதாக.

(முடிபு) தோழீ! பன் மாண் நாம் செல விழைந்தனமாக, வேங்கைப் பூம்பிணையல் யாம் அணிந்து உவக்கும் சின்னாள் கழிக என்று முன்னாள் பொய்த்தன ராயினும், அத்தம் நீழல் அசைந்தனர் செல, மாமுறி ஈன்று மரக் கொம்பு அகைப்ப, நுணவின் வான்பூ சிறுநெறி கம்மென வரிப்பக், காடுகவின் பெறுக.

(வி - ரை.) படுதலின் உடன் கொண்டு செல்கென விரித் துரைக்க. 'கானமர் செல்வி அருளலின்......புரவி எய்திய...புலவன் பாடிய எழிற் குன்றம்' என்பதனால், எழிற் குன்றத்தைப் பாடிய சிறந்த புலவன் ஒருவனுக்குக் கானமர் செல்வி குதிரை அளித்ததொரு வரலாறு பெறப்படுகின்றது. படை - குதிரைக்கலணை, எழிற் குன்றம் நன்னன் என்பானது; மேல்கடற் பக்கத்தது. தம்மோடு இளையர் மலைமார் - தாமும் இளையரும் மலைதற்கு என்க. தலைவர் இப்பொழுது நம்மைப் பொய்த்து அகன்றனராயினும் பன்னாளும் நமக்கு இன்பம் விளைத்தவராகலின், அவர் செல்லும் நெறி நீழலில் இளைப்பாறிச் செல்லுதற்குக் காடு கவின் பெறுவதாக எனத் தோழியை நோக்கித் தலைவி கூறினாள் என்க.

---

346. மருதம்

[தோழி தலைமகற்கு வாயின் மறுத்தது.]

நகைநன் றம்ம தானே இறைமிசை
மாரிச் சுதையின் ஈர்ம்புறத் தன்ன
கூரற் கொக்கின் குறும்பறைச் சேவல்
வெள்ளி வெண்டோ டன்ன கயல்குறித்துக்
கள்ளார் உவகைக் கலிமகிழ் உழவர்
காஞ்சியங் குறுந்தறி குத்தித் தீஞ்சுவை
மென்கழைக் கரும்பின் நன்பல மிடைந்து
பெருஞ்செய் நெல்லின் பாசவல் பொத்தி
வருந்திக் கொண்ட வல்வாய்க் கொடுஞ்சிறை
மீதழி கடுநீர் நோக்கிப் பைப்பயப்
பார்வல் இருக்கும் பயங்கெழ் ஊர
யாமது பேணின்றோ இலமே நீநின்
பண்ணமை நல்யாழ்ப் பாணனொடு விசிபிணி
மண்ணார் முழவின் கண்ணதிர்ந் தியம்ப
மகிழ்துணைச் சுற்றமொடு மட்டு மாந்தி
எம்மனை வாரா யாகி முன்னாள்

நும்மனைச் சேர்ந்த ஞான்றை யம்மனைக்
குறுந்தொடி மடந்தை உவந்தனள் நெடுந்தேர்
இழையணி யானைப் பழையன் மாறன்
மாடமலி மறுகிற் கூடல் ஆங்கண்
வெள்ளத் தானையோடு [1]வேறுபுலத் திறுத்த
கிள்ளி வளவன் நல்லமர் சாஅய்க்
கடும்பரிப் புரவியோடு களிறுபல வவ்வி
ஏதின் மன்னர் ஊர்கொளக்
கோதை மார்பன் உவகையிற் பெரிதே.

—நக்கீரர்.

(சொ - ள்.) க—கக. மாரி சுதையின் இறைமிசை ஈர் புறத்து அன்ன - மாரிக்காலத்தே இறப்பின் மேலுள்ள சுதை பூசிய குளிர்ந்த மேலிடத்தை யொத்த, கூரல் குறும் பறை கொக்கின் சேவல்-இறகினை யுடைய குறுகக் குறுகப் பறக்கும் கொக்கின் சேவலானது, வெள்ளி வெண் தோடு அன்ன கயல் குறித்து-வெள்ளியாலாய வெள்ளிய இதழ் போன்ற கயல் மீனைப் பெறல் கருதி, கள் ஆர் உவகை கலி மகிழ் உழவர்-கள்ளினை யுண்ட மகிழ்வாலாய மிக்க செருக்கினைக்கொண்ட உழவர், காஞ்சி குறு தறி குத்தி - காஞ்சி மரத்தின் குறிய துண்டுகளை நட்டு, தீம் சுவை மெல் கழை கரும்பின் நல் பல மிடைந்து - இனிய சுவை யுடைய மெல்லிய தண்டினையுடைய கரும்பின் சிறந்த பல கழிகளைக் கட்டிக் குறுக்கே வைத்து அடைத்து, பெரு செய்நெல்லின் பசு அவல் பொத்தி - பெரிய நெற்பயிரையுடைய செய்யாகிய பசிய பள்ளங்களில் நீரைத் தேக்கி, வருந்திக் கொண்ட வல் வாய்க் கொடு சிறை - வருத்த முற்று இயற்றிய வலிய இடத்தினையுடைய வளைந்த அணையின், மீது அழி கடு நீர் நோக்கி-மேலே தேங்கி வழியும் கடிய நீரினைப் பார்த்து, பை பய பார்வல் இருக்கும் பயன் கெழு ஊர-மெல்ல மெல்லச் சென்று நோக்கியிருக்கும் பயன் பொருந்திய ஊரினையுடையவனே,

கஉ—எ. நீ நின் பண் அமை நல்யாழ் பாணனொடு - நீ நினது பண்ணின் திறம் அமைந்த நல்ல யாழினையுடைய பாணனுடன், விசிபிணி மண் ஆர் முழவின் கண் அதிர்ந்து இயம்ப - இறுகிய கட்டினையுடைய மார்ச்சனை அமைந்த முழவின் கண்கள் முழங்கி ஒலிக்க; மகிழ் துணைச் சுற்றமொடு மட்டு மாந்தி-மகிழ்ச்சியுற்ற நினக்குத் துணையாகிய சுற்றத்துடன் கள்ளுண்டு; எம் மனை வாராய் ஆகி-எமது மனையின்கண் வாராதொழிந்து, முன் நாள்-முன்னை நாளில், நும் மனை சேர்ந்த ஞான்றை-நுமது மனையாய அப் பரத்தை இல்லின்கண் சேர்ந்திருந்த பொழுது,

---

(பாடம்) 1. வேண்டுபுலத் திறுத்த.

கஎ—உ௦. அம் மனை குறு தொடி மடந்தை - அம்மனையிலுள்ள சிறிய தொடியினையணிந்த ஙின் பரத்தை, நெடுதேர் இழை அணியானை பழையன் மாறன் - நீண்ட தேரினையும் இழையை அணிந்த யானையினையுமுடைய பழையன் மாறன் என்பானை, மாடம் மலி மறுகின் கூடல் ஆங்கண் - மாடங்கள் மிக்க தெருக்களையுடைய கூடலாகிய அங்கே, வெள்ளம் தானையொடு வேறுபுலத்து இறுத்த - மிக்க சேனையுடன் வேற்றுப் புலத்தே போர் செய வந்து தங்கியிருந்த, கிள்ளி வளவன் நல் அமர் சாஅய் - கிள்ளி வளவன் நல்ல போரின்கண் சாய்த்து, கடும் பரிப் புரவியொடு களிறு பல வவ்வி - கடிய செலவினையுடைய குதிரைகளுடன் பல யானைகளையும் பற்றிக்கொண்டு, ஏதில் மன்னர் ஊர் கொள - பகை மன்னரது ஊரினைப் பற்றிக்கொள்ள, கோதை மார்பன் உவகையின் பெரிது - கோதை மார்பன் என்னும் சேரன் எய்திய மகிழ்வினும் பெரிதாக, உவந்தனள் - மகிழ்ந்தனள் அன்றோ,

உக. யாம் அது பேணின்றோ இலம் - யாங்கள் அதனைக் கருதியது இலம்;

௧. நகை நன்று அம்ம - அங்ஙனமாகவும் நீ மறுப்பது மிக்க நகையை உண்டாக்குவதாகும்.

(முடிபு) பயம் கேழ் ஊர! நீ நின் பாணனொடு முழவின்கண் இயம்ப மகிழ்துணைச் சுற்றமொடு மட்டு மாந்தி எம் மனை வாராயாகி நும் மனைச் சேர்ந்த ஞான்றை, அம் மனைக் குறுந்தொடி மடந்தை, கோதைமார்பன் உவகையிற் பெரிது உவந்தன ளன்றே! யாம் அதனைப் பேணின்றே இலம், நகை நன்று அம்ம.

(வி - ரை.) கூரல் - சிறகு. சேவல் கயல் குறித்துக்கொடுஞ்சிறை மீதழி கடுநீர்நோக்கிப் பார்வலிருக்கும் என்க. பார்வல் இருத்தல் - பதுங்கிப் பார்த்திருத்தல். கரும்பினை மிடைந்து என்றது மருதநிலத்தின் வளமிகுதி கூறியவாறு. நெல்லின் செய்யாகிய அவல் என்க. சிறை மீது வழியும் நீரில் கயல்மீன்கள் ஏறி வருமாகலின், கொக்கின் சேவல் அதனை நோக்கியிருக்கும் என்க. பழையன் படைத்தலைவன் கிள்ளி வளவன் பழையன் மாறனைக்கூடற்கண்ணே அமரில்சாய்த்துப் புரவியொடு களிறு பல வவ்வி ஊர்கொள என்க. இப் பழையன்மாறனைக் கூடலையாண்ட பேரரசனாகக் கருதுவாரும் உளர். ('இராகவையங்கார் தமிழ் வரலாறு' பக்கம் ௫௧. காண்க.) குறுந்தொடி மடந்தை உவந்தனள், யாம் அது பேணின்று இலம்; அங்ஙனமாகவும், யாம் வேறு யாரையும் அறியேம் என நீ கூறுதல் பெரிதும் நகை விளைவிக்கின்றது எனத் தோழி தலைவனை மிகக் கழறித் தலைவியின் ஊடல் நீங்குமாறு கூறினாளென்க.

(மே - ள்.) [1]'பெறற்கரும் பெரும் பொருள் முடிந்தபின் வந்த' என்னுஞ் சூத்திரத்து, 'பிழைத்துவந்திருந்த கிழவனை நோக்கி, இழைத் தாங் காக்கிக் கொடுத்தற் கண்ணும்' என்னும் பகுதிக்கண், 'பரத்தையர்

1. தொல். கற்பு. ௯.

மனைக்கண் தங்கிவந்து அகனகர் புகுதாது புறத்திருந்த தலைவனை மிகக் கழறிச் சில மொழிகளைக் கூறி, இதனானே தலைவி மனத்தின்கண் ஊடல் நீங்கும் தன்மை உளதாக்கிக் கூட்டும்' என்றுரைத்து அதற்கு இச் செய்யுளைக் காட்டினர், நச்.

(உ - ரை.) கொக்கின் சேவல் கயல் குறித்துப் பார்வல் இருக்கும் என்றது தலைவன் பரத்தையரை நோக்கியிருப்பன் என்றபடி.

---

347. பாலை

[தலைமகன் பிரிவின்கண் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.]

தோளுந் தொல்கவின் தொலைய நாளும்
நலங்கவர் பசலை நல்கின்று நலியச்
சால்பெருந் தானைச் சேர லாதன்
மால்கடல் ஓட்டிக் கடம்பறுத் தியற்றிய
பண்ணமை முரசின் கண்ணதிர்ந் தன்ன
கவ்வை தூற்றும் வெவ்வாய்ச் சேரி
அம்பல் மூதூர் அலர்நமக் கொழியச்
சென்றன ராயினுஞ் செய்வினை அவர்க்கே
வாய்க்கதில் வாழி தோழி வாயாது
மழைகரந் தொளித்த கழைதிரங் கடுக்கத்து
ஒண்கேழ் வயப்புலி பாய்ந்தெனக் குவவடி
வெண்கோட் டியானை முழக்கிசை வெரீஇக்
கன்றேழித் தோடிய புன்றலை மடப்பிடி
கைதலை வைத்த மையல் விதுப்போடு
கெடுமகப் பெண்டிரிற் றேரும்
கெடுமர மருங்கின் மலையிறந் தோரே.

—மாமூலனார்.

(சொ - ள்.) க—கசு. தோழி—, வாழி—, வாயாது மழை கரந்து ஒளித்த கழை திரங்கு அடுக்கத்து - மழை பெய்யாது மறைந்து ஒளித்தமையால் மூங்கில்கள் வாடிய பக்க மலையில், ஒண் கேழ் வய புலி பாய்ந்தென-ஒள்ளிய நிறமுடைய வலிய புலி பாய்ந்ததாக, குவவு அடி வெண் கோட்டு யானை முழக்கு இசை வெரீஇ-திரண்ட அடியினையும் வெள்ளிய கொம்பினையும் உடைய களிறு முழக்கிய ஒலியினைக் கேட்டு அஞ்சி, கன்று ஒழித்து ஓடிய புல் தலை மட பிடி-தன் கன்றினைவிட்டு ஓடிய புல்லென்ற தலையினையுடைய இளைய பிடியானை, கை தலை வைத்த

மையல் விதுப்பொடு - கையைத் தலைமீது வைத்துக்கொண்ட மயக்கம் தங்கிய விரைவுடன், கெடு மக பெண்டிரின் தேரும்-தம் மகவினைக் காணுதொழிந்த பெண்டிர்போல அக் கன்றினைத் தேடித் திரியும், நெடுமர மருங்கின் மலை இறந்தோர் - நீண்ட மரங்களையுடைய பக்கத்தினையுடைய மலையைக் கடந்து சென்றவராய நம் தலைவர்,

க—உ. தோளும் தொல் கவின் தொலைய - தோள்கள் பழைய அழகு கெடவும், நாளும் நலம் கவர் பசலை நல்கு இன்று நலிய - ஒவ்வொரு நாளும் அழகினைக் கவர்ந்து கொள்ளும் பசலையானது அருளுதவின்றி வருத்தவும்,

௩—அ. சால் பெருதானைச் சேரலாதன்-நிறைந்த பெரிய சேனையினையுடைய நெடுஞ்சேரலாதன் என்பான், மால் கடல் ஓட்டிக் கடம்பு அறுத்து இயற்றிய-பெரிய கடலின்கண் பகைவர்களை ஓட்டி அவர்தம் காவன் மரமாய கடம்பினை அறுத்துச் செய்த, பண் அமை முரசின் கண் அதிர்ந்தன்ன - பண்ணுதல் அமைந்த முரசினது கண் முழங்கினாற் போன்ற, மூதூர் கௌவை தூற்றும் செவ்வாய்ச் சேரி அம்பல் அலர் - மூதூரின்கண் பழியினைத் தூற்றும் கொடிய வாயினையுடைய சேரிப் பெண்டிருடைய அம்பலும் அலரும், நமக்கு ஒழிய - நம்மிடத்தே தங்கியிருக்கவும், சென்றனர் ஆயினும்-நம்மைப் பிரிந்து சென்றார் ஆயினும்,

அ—௯. அவர்க்குச் செய்வினை வாய்க்க - அவர்க்குச் செய்யும் வினை கைகூடுவதாக.

(முடிபு) தோழி! நெடு மர மருங்கின் மலையிறந்தோர், தோள் கவின்தொலைய, பசலை நலிய, அம்பல் அலர் நமக்கு ஒழியச் சென்றனராயினும், அவர்க்குச் செய்வினை வாய்க்க தில்.

(வி - ரை.) தோளும் என்பதிலுள்ள உம்மையைத் தொலையவும் என மாறியும், நலிய, ஒழிய என்புழி உம்மை விரித்தும் உரைக்க. சேரலாதன் - இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என்னும் அரசன். அவன் மேல் கடற்கண்ணே பகைவரை ஓட்டி அவரது கடம்பினைத் தடிந்து முரசியற்றினான் என்பது பதிற்றுப்பத்தின் இரண்டாம் பத்தால்அறியப்படும். இந்நூலுள்ளே, [1]'வலம்படு முரசிற்சேரலாதன், முந்நீரோட்டிக் கடம்பறுத்து' என முன் வந்திருத்தலும் காண்க. கவ்வை தூற்றுதலே இயல்பாக வுடைய வெவ்வாய் என்க. அம்பலும் அலரும் என்க. அம்பலாகிய அலர் என்றுமாம். வாய்க்கதில்: தில், விழைவின்கண் வந்தது.

———

1. அகம். ௧௨௭.

348. குறிஞ்சி

[தலைமகன் [1] சிறைப்புறத்தானாகத் தோழி சொல்லெடுப்பத் தலைமகள் சொல்லியது.]

என்னு வதுகொல் தானே முன்றில்
தேன்தேர் சுவைய திரளரை மாஅத்துக்
கோடைக் கூழ்த்த கமழ்நறுந் தீங்கனி
பயிர்ப்புறு பலவின் எதிர்ச்சுளை யளைஇ
இருலொடு கலந்த வண்டுமூ சரியல்
நெடுங்கண் ஆடமைப் பழுநிக் கடுந்திறற்
பாப்புக்கடுப் பன்ன தோப்பி வான்கோட்டுக்
கடவுள் ஓங்குவரைக் கோக்கிக் குறவர்
முழித்தழை மகளிர் மடுப்ப மாந்தி
அடுக்கல் ஏனல் இரும்புனம் மறந்துழி
யானை வவ்வின [2] தினையென நோனது
இளையரும் முதியருங் கிளையுடன் குழீஇச்
சிலையாய்ந்து திரிதரும் நாடன்
நிலையா நன்மொழி தேறிய நெஞ்சே.

—மதுரை இளம்பாலாசிரியன் சேந்தன் கூத்தனார்.

(சொ - ர்.) க—க0. முன்றில் - முன்றிலின்கண்ணுள்ள, தேன் தேர் சுவைய-தேன் எனத்தகும் சுவையினவாகிய, திரள் அரை மாத்துக் கோடைக்கு ஊழ்த்த கமழ் நறு தீம் கனி - திரண்ட அடியினையுடைய மாமரத்தின் கோடைக்காலத்தே முதிர்ந்த நன்மணங் கமழும் இனிய கனிகளுடன், பயிர்ப்பு உறு பலவின் எதிர் சுளை அளைஇ-பிசினையுற்ற பலவினது ஒளி பொருந்திய சுளைகளையிட்டு, இருலொடு கலந்த-தேனுடன் கூட்டியாக்கிய, வண்டு மூசு அரியல் - வண்டு மொய்க்கும் அரியலாகிய, நெடு கண் ஆடு அமை பழுநி-அசையும் மூங்கிலின் நீண்ட கணுவிடையுள்ள குழாயில் நெடிதிருந்து முதிர்தலின், கடுதிறல் பாப்பு கடுப்பு அன்ன தோப்பி-கடிய வேகம் கொண்ட பாம்பினது வெகுட்சியை யொத்த கள்ளினை, வான் கோட்டுக் கடவுள் ஓங்கு வரைக்கு ஓக்கி-உயர்ந்த சிமையத்தையுடைய தெய்வம் உறையும் உயர்ந்த மலைக்குப் படைத்துப் பின், முழித்தழை மகளிர் மடுப்ப-தளிராலாய தழையுடை யணிந்த மகளிர் உண்பிக்க, குறவர் மாந்தி - புனங் காக்கும் குறவர் அதனை உண்டு, அடுக்கல் ஏனல் இரும்புனம் மறந்துழி - பக்க மலையிலுள்ள பெரிய தினைப்புனங்காவலை மறந்தவிடத்து,

---

(பாடம்) 1. சிறைப்புறத்தானாகத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.
2. தினையென னோனாது.

௧௧—௪. யானை தினை வவ்வின என-யானைகள் தினைப்புனத்தைக் கவர்ந்துண்டனவாக, நோனாது - அதனைப் பொறாது, இளையரும் முதியரும் கிளை உடன் குழீஇ - இளையரும், முதியருமாய சுற்றமெலாம் ஒருங்கே கூடி. சிலை ஆய்ந்து திரிதரும் நாடன் - வில்லை ஆராய்ந்து கொண்டு திரியும் நாட்டையுடையோனாகிய நம் தலைவனது, நிலையா நல்மொழி தேறிய நெஞ்சே - உறுதியல்லாத இனிய சொல்லை மெய் யெனத் தெளிந்த நெஞ்சமே,

௧. என் ஆவது கொல் - இனி நமக்கு என்ன தீங்கு உறுமோ.

(முடிபு) நாடன் நிலையா நன்மொழி தேறிய நெஞ்சே! என் ஆவது கொல், தோப்பி மகளிர் மடுப்பக் குறவர் மாந்திப் புனம் மறந்துழி, தினையானை வவ்வின என கிளையுடன் குழீஇச் சிலை ஆய்ந்து திரிதரும் நாடு என்க.

(வி - ரை.) தேன் தேர் சுவை - தேனோ என ஆராயும் சுவை. எதிர்ச்சுவை-சுவைமிக்க சுவை என்றுமாம். மதுவின் களிப்பு மிகுதிக்குப் பாம்பின் வெகுளியையும், பாம்பு தேள் என்பவற்றின் நஞ்சின் வேகத்தையும் உவமை கூறுவர். [1]'பாம்புவெகுண் டன்ன தேறல்' [2]'தேட் கடுப் பன்ன நாட்படு தேறல்' என்பன காண்க. அரியலாகிய தோப்பி என்க. மாந்தி அம் மயக்கத்தால் மறந்துழி என விரித்துரைக்க.

---

349. பாலை

[தலைமகன் பிரிவின்கண் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.]

அரம்போழ் அவ்வளை செறிந்த முன்கை
வரைந்துதாம் பிணித்த தொல்கவின் தொலைய
எவனாய்ந் தனர்கொல் தோழி ஞெமன்ன்
தெரிகோல் அன்ன செயிர்தீர் செம்மொழி
உலைந்த ஒக்கல் பாடுநர் செலினே
உரன்மலி உள்ளமொடு முனைபாழ் ஆக
அருங்குறும் பெறிந்த பெருங்கல வெறுக்கை
சூழாது சுரக்கும் நன்னன் நன்னாட்டு
ஏழிற் குன்றத்துக் கவாஅற் [3]கேழ்கொளத்
திருந்தரை நிவந்த கருங்கால் வேங்கை
எரிமருள் கவளம் மாந்திக் களிறுதன்
வரிநுதல் வைத்த வலிதேம்பு தடக்கை
கல்லூர் பாம்பிற் றோன்றுஞ்
சொல்பெயர் தேஎத்த சுரனிறந்தோரே. —மாமூலனார்.

---

1. சிறுபாண். ௨௩௭ 2. புறம். ௧௧௨.
(பாடம்) 3. கேழ்கிளரத்.

(சொ - ள்.) க—சு. தோழீ—, ஞெமன் தெரிகோல் அன்ன-பொருளின் அளவை அறியும் கருவியாய துலாக்கோலையொத்த, செயிர் தீர் செம்மொழி-குற்றமற்ற மெய்ம்மொழியினை யுடையனாகிய, உலைந்த ஒக்கல் பாடுநர் செலினே - வறுமையால் அழிந்த சுற்றத்துடன் பாணர் முதலியோர் செல்லின், உரன் மலி உள்ளமொடு-ஊக்கம் மிக்க நெஞ்சத்துடன், முனைபாழ் ஆக-மாற்றார் போர்முனை பாழ்பட, அரு குறும்பு எறிந்த - அவரது அரிய அரணைத் தொலைத்துக்கொண்ட, பெரு கல வெறுக்கை - விலை மிக்க அணிகலன் முதலாய செல்வங்களை, சூழாது சுரக்கும்-அப் பாடுநர் தகுதி முதலிய ஆராயாது மிக அளிக்கும், நன்னன் நல்நாட்டு - நன்னன் என்பானது நல்ல நாட்டின்கண்ணுள்ள, ஏழில் குன்றத்துக் கவாஅன் - ஏழில் என்னும் மலைச்சாரலில், கேழ்கொள - நன்னிறம் பொருந்த, திருந்து அரை நிவந்த - செவ்விதாய அடிமரம் உயர்ந்த, கருங்கால் வேங்கை-கரிய அடியினையுடைய வேங்கை மரத்தின், எரி மருள் கவளம் மாந்தி - தீயை யொத்த பூக்களாய உணவினை உண்டு, களிறு-ஆண்யானை, தன் வரி நுதல் வைத்த வலி தேம்பு தடகை-தனது வரிகள் தங்கிய நெற்றியில் வைத்த வலிமைகுன்றிய பெரிய கை, கல் ஊர் பாம்பின் தோன்றும்-குன்றத்தே ஏறும் பாம்பு போலத் தோன்றும், சொல் பெயர் தேஎத்த சுரன் இறந்தோர் - மொழி வேறுபட்ட தேயத் திடத்தவாகிய சுரநெறியைக் கடந்து சென்றோர்,

க—கூ. அரம் போழ் அவ்வளை செறிந்த முன்கை-அரத்தாற் பிளக்கப்பெற்ற அழகிய வளைகள் செறிந்த முன் கையினை, தாம் வரைந்து பிணித்த - தாம் வரைந்துகொண்டு பற்றியதாலாய, தொல் கவின் தொலைய - பழைய அழகுகெட, எவன் ஆய்ந்தனர் - என்ன பொருளைக் கருதினரோ?

(முடிபு) தோழீ! சுரன் இறந்தோர், தொல் கவின் தொலைய எவன்ஆய்ந்தனர்?

(வி - ரை.) பிணித்த-பற்றிய. முன்கையைப்பற்றி வரைந்த என மாறுக. வரைந்த தொல்கவின் - மணந்தமையால் அஞ்ஞான்று எய்திய அழகு. கைப்பற்றி வரையும் வழக்கினை, [1]'நேரிறை முன்கை பற்றி நுமர்தர, நாடறி நன்மணம் அயர்கம்' என்பதனால் அறிக. ஞெமன் கோல் எனக் கூட்டுக. தெரிதல் - பொருள்களை ஆராய்ந்து அறிதல். செம்மொழியையுடைய நன்னன் எனவும் சூழாது சுரக்கும் நன்னன் எனவும் தனித்தனி இயையும். களிறு சுரத்தில், வேறு தக்க கவளம் கிடைக்கப் பெறாமையால், வேங்கைப்பூவை உண்டுபசி தணியாது வலி குன்றியிருக்கும் என்க.

---

1. குறிஞ்சிப் பாட்டு: உகக - உஉ.

350. நெய்தல்

[பகற்குறி வந்து நீங்குந் தலைமகற்குத் தோழி சொல்லியது.]

கழியே, சிறுகுர னெய்தலோடு காவி கூம்ப
எறிதிரை யோதந் தரலா னாதே
துறையே, மருங்கிற் போகிய மாக்கவை மருப்பின்
இருஞ்சேற் றீரளை அலவன் நிவப்ப
வழங்குநர் இன்மையிற் பாடான் றன்றே
கோடுநுகம் நுழைந்த கணைக்கால் அத்திரி
வடிமணி நெடுந்தேர் பூண ஏவாது
ஏந்தெழின் மழைக்கண் இவள்குறை யாகச்
சேர்ந்தனை சென்மோ பெருநீர்ச் சேர்ப்ப
இலங்கிரும் பரப்பின் எறிசுறா நீக்கி
வலம்புரி மூழ்கிய வான்றிமிற் பரதவர்
ஒலிதலைப் பணிலம் ஆர்ப்பக் கல்லெனக்
கலிகெழு கொற்கை எதிர்கொள இழிதரும்
குவவுமணல் நெடுங்கோட் டாங்கண்
உவக்காண் தோன்றுமெஞ் சிறுநல் லூரே.

—சேந்தன் கண்ணனார்.

(சொ-ள்.) கூ. பெரு நீர்ச் சேர்ப்ப-பெரிய கடற்கரையை யுடைய தலைவனே!

க—ரு. கழியே சிறு குரல் நெய்தலொடு காவி கூம்ப-கழியிடத்தே சிறிய பூங்கொத்துக்களையுடைய நெய்தற் பூவும் கருங்குவளைப் பூவும் குவிய, ஓதம் எறி திரை தரல் ஆனாது-கடல் வீசும் திரையைத் தருதல் அமையாது, துறையே - துறை, மருங்கில் போகிய மா கவை மருப்பின்-பக்கத்தே நீண்ட பெரிய கவர்த்த கோட்டினையுடைய, இரு சேற்று ஈர்அளை அலவன் - கரிய சேற்றின்கண்ணுள்ள ஈரமுடைய, வளையி லிருக்கும் ஞெண்டு, நிவப்ப-மேலே வெளிப்பட, வழங்குநர் இன்மையின் பாடு ஆன்றன்று-செல்வோர் இல்லாமையால் ஒலி அடங்கியது,

க0—கரு. இலங்கு இரு பரப்பின்-விளங்கும் பெரிய கடற்பரப்பில், எறி சுறா நீக்கி-எறியும் சுறா மீனை ஒதுக்கி, வலம்புரி மூழ்கிய-வலம்புரியின் முத்தினை மூழ்கியெடுத்த, வான் திமில் பரதவர்-பெரிய படகினையுடைய பரதவர், ஒலி தலைப் பணிலம் கல் என ஆர்ப்ப-ஒலியைத் தன்னிடத்தேயுடைய சங்குகள் கல்லென ஆர்க்கும்படி, கலிகெழு கொற்கை எதிர்கொள - ஆரவார மிக்க கொற்கையோர் எதிர்கொள்ளுமாறு, இழிதரும்-படகினின்று இறங்கும், குவவு மணல் நெடு கோட்டு ஆங்கண்;

திரண்ட மணலையுடைய நீண்ட கரையாய அவ்விடத்தே, எம் சிறு நல் ஊர் உவக்காண் தோன்றும்-எமது சிறிய நல்ல ஊர் உங்கே தோன்றா நிற்கும், காண்பாயாக;

௯-௧. கொடு நுகம் நுழைந்த கணை கால் அத்திரி-வளைந்த நுகத்திற் பூட்டப் புக்க திரண்ட காலினையுடைய கோவேறு கழுதையை, வடி மணி நெடு தேர் பூண ஏவாது-வடித்த மணியினையுடைய நீண்ட தேரினிற் பூணும்படி நின் பாகற்கு ஆணை செய்யாது, ஏந்து எழில் மழைக் கண் இவள் குறையாக - மிக்க அழகு பொருந்திய குளிர்ந்த கண்ணினையுடைய இவள் காரியமாக, சேர்ந்தனை சென்மோ-இன்றிரவு இவ்வூரில் தங்கிச் செல்வாயாக.

(முடிபு) சேர்ப்ப! கழியே திரை ஓதம் தரல் ஆனாது, துறையே வழங்குநர் இன்மையின் பாடான்றன்று, எம் சிறு நல் ஊர் உவக்காண் தோன்றும், அத்திரி நெடுந் தேர் பூண ஏவாது இவள் குறையாகச் சேர்ந்தனை சென்மோ.

(வி-ரை,) கழியிலே திரை ஓதம் தரல் ஆனாது, துறை பாடான்றன்று என்பன, பகற்பொழுது கழிந்தமையை உணர்த்துவ ஆயின. நெய்தல் நிலத்துப் போதரும் தலைவன் அத்திரி ஊர்ந்து வருதல் உண்டென்பது, [1]"கழிச்சுறு எறிந்த புட்டாள் அத்திரி, நெடுநீர் இருங்கழிப் பரிமெலிந் தசைஇ" என்பதனாற் பெறப்படும். ஈண்டு, அத்திரி பூண்ட தேர் ஊர்தல் கூறப்பட்டது. அத்திரி தேர் பூணப் பாகனை ஏவாது என விரித்துரைக்க. குறை - முடிக்கப்படும் காரியம். வலம்புரி மூழ்கிய-வலம்புரிச் சங்கினை மூழ்கி எடுத்த என்றுமாம். பரதவர் ஆர்ப்ப இழிதரும் நெடுங்கோட் டாங்கண் ஊர் தோன்றும் என்க.

---

351. பாலை

[பொருண்முற்றி மறுத்தராநின்ற தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.]

வேற்றுநாட் டுறையுள் விருப்புறப் பேணிப்
பெறலருங் கேளிர் பின்வந்து விடுப்பப்
பொருளகப் படுத்த புகன்மலி நெஞ்சமொடு
குறைவினை முடித்த நிறைவின் இயக்கம்
அறிவுறூஉங் கொல்லோ தானே கதிர்தெறக்
கழலிலை புகுத்த கால்பொரு தாழ்சினை
அழலகைந் தன்ன அங்குழைப் பொதும்பிற்
புழல்வீ யிருப்பைப் புன்காட் டத்தம்
மறுதர லுள்ளமொடு குறுகத் தோற்றிய

1. அகம்; ௧௨௦,

செய்குறி ஆழி வைகலுற் றெண்ணி
எழுதுசுவர் [1]நனைந்த அழுதுவார் மழைக்கண்
விலங்கிவீழ் அரிப்பனி பொலங்குழைத் தெறிப்பத்
திருந்திழை முன்கை அணலசைத் தூன்றி
இருந்தணை மீது [2]பொருந்துழிக் கிடக்கை
வருந்துதோட் பூசல் களையு மருந்தென
உள்ளுதொறு படூஉம் பல்லி
புள்ளுத்தொழு துறைவி செவிமுத லானே.

—பொருந்தில் இளங்கீரனார்.

(சொ - ள்.) க—ச. நெஞ்சே!, வேற்றுநாட்டு உறையுள் விருப்பு உற பேணி-வேறு நாட்டிற் சென்று தங்குதலை விருப்பம் மிகக் குறிக்கொண்டு, பெறல் அரும்கேளிர் பின்வந்து விடுப்ப-பெறுதற்கரிய சுற்றத்தார் பின் வந்து விடைதரப் போந்து, பொருள் அகப்படுத்த புலம் மலி நெஞ்சமொடு-பொருளை ஈட்டிய விருப்புமிக்க நெஞ்சினுடன், குறைவினை முடித்த நிறைவு இன் இயக்கம்-முடிக்கப்படும் வினையைச் செய்ய முடித்தமையால் ஆகிய நிறைவுடன் கூடிய இனிய செலவினை,

இ—க. கதிர் தெற- ஞாயிற்றின் கதிர் வெதுப்ப, கழல்இலை உகுத்த கால்பொரு தாழ்சினை-கழன்ற இலைகளை உதிர்த்த காற்று அலைக்கும் தாழ்ந்த கிளைகளில், அழல் அகைந்தன்ன அம் குழை பொதும்பில்-தீ கப்பு விட்டாலொத்த அழகிய தளிர்களையுடைய மரச் செறிவில்,புழல் வீ இருப்பை புல்காட்டு அத்தம்-உட்டுளை பொருந்திய பூக்களையுடைய பொலிவற்ற இருப்பை மரங்களையுடைய காட்டு நெறியில், மறுதரல் உள்ளமொடு குறுக-யான் மீளும் எண்ணமுடையேனாகி வந்துகொண்டிருக்கவும்,

க—கள. தோற்றிய செய்குறி ஆழி-சுழித்த செய்குறியாய வட்டத்தை, வைகல்தோறும் எண்ணி-நாள்தோறும் எண்ணி,எழுது சுவர் - அவை எழுதப்பட்ட சுவர், நனைந்த-நனைதற்கு ஏதுவாய, அழுது வார் மழைக்கண் விலங்கி வீழ் அரிப் பனி-அழுதலால் நீண்ட குளிர்ந்த கண்களிலிருந்து விலகி விழும் ஐதாகிய நீரானது, பொலம் குழை தெறிப்ப-காதிலணிந்த பொற் குழையிற் றெறித்துவிழ, திருந்து இழை முன்கை அணல் அசைத்து ஊன்றி-திருந்திய அணிகளையுடைய முன்கையைக் கவுளில் பொருந்தவைத்து, அணைமீது இருந்து-அணையின்மீது இருந்து, கிடக்கைபொருந்துழி-பின் படுக்கையிற்கிடத்தல் பொருந்தியவிடத்து, வருந்துதோள் பூசல் களையும் மருந்து என-வருந்தும் தோளின் வருத்தத்தைப் போக்கும் மருந்து இது என, உள்ளுதொறு படூஉம் பல்லி-நினைக்குந்தோறும் ஒலிக்கும் பல்லியானது, புள்ளுத் தொழுது உறைவி-நிமித்தத்தைப் பரவியிருக்கும் தலைவியின், செவிமுதலான்-காதின் அகத்தே,

(பாடம்) 1. நினைந்த. 2. பொருந்துவிக் கிடக்கை.

௭. அறிவுறாஉம் கொல்லோ - அறிவுறுத்துமோ.

(முடிபு) நெஞ்சே! குறைவினை முடித்த நிறைவு இன் இயக்கத்தினை, புள்ளூத் தொழுது உறைவி செவிமுதலானே, பல்லி, பூசல்களையும் மருந்தென அறிவுறூஉங்கொல்லோ.

(வி - ரை.) கேளிர்-தோழி முதலாயினர்- அகப்படுத்த, முடித்த என்னும் பெயரெச்சங்கள் காரணப் பொருளன. குறை-முடிக்கப்படும் பொருள். இதனைப் [1]'பயக்குறை யில்லைத் தாம்வாழும் நாளே' என்பதன் உரையால் அறிக. நிறைவு-உள்ள நிறைவு. அறிவுறாஉங்கொல்-அறிவுறுத்துங்கொல், பிறவினை. மறுதரல் உள்ளமொடு குறுகத் தோற்றிய-மீளும் உள்ளத்துடன் குறுகுதலைத் தெரிவித்தற்கு என்றுமாம்; இதற்குத் தோற்றிய என்பது செய்பிய என்னும் வினையெச்சமாகும். அணைமீது இருந்து கிடக்கை பொருந்துழி என மாறுக. உள்ளுதொறு படூஉம் பல்லி என்றது, பல்லியின் இயற்கை கூறியபடி. புள்ளூத் தொழுது உறைவி, சுட்டு; அவள் என்றபடி.

---

352. குறிஞ்சி

[வரைந்து எய்திய பின்றை மணமனைக்கட் சென்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது. வரைவு மலிந்து சொல்லிய தோழிக்குத் தலைமகள் சொல்லியதூஉமாம்.]

[2]முடவுமுதிர் பலவின் குடமருள் பெரும்பழம்
பல்கிளைத் தலைவன் கல்லாக் கடுவன்
பாடிமிழ் அருவிப் பாறை மருங்கின்
ஆடுமயில் முன்ன தாகக் கோடியர்
௫. விழவுகோள் மூதூர் விறலி பின்றை
முழவன் போல அகப்படத் தழீஇ
இன்றுணைப் பயிருங் குன்ற நாடன்
குடிநன்கு உடையன் கூடுநர்ப் பிரியலன்
கெடுநா மொழியலன் அன்பினன் எனநீ
௧௦. வல்ல கூறி வாய்வதிற் புணர்த்தோய்
நல்லை காணில் காதலந் [3]தோழி
கடும்பரிப் புரவி நெடுந்தேர் அஞ்சி
நல்லிசை நிறுத்த நயவரு பனுவல்
தொல்லிசை நிறீஇய உரைசால் பாண்மகன்
௧௫. எண்ணுமுறை நிறுத்த பண்ணி னுள்ளும்

---

1. புறம்: ௧௮௮. (பாடம்) 2. முடவுமுதற் பலவின்.
3. தோழீஇ.

புதுவது புனைந்த திறத்தினும்
வதுவை நாளினும் இனியனால் எமக்கே.

—[1]அஞ்சியத்தை மகள் நாகையார்.

(சொ - ள்.) ௧௧. காதல் அம் தோழி - காதல் மிக்க அழகிய தோழியே. காணில் நல்லை - ஆராயுமிடத்து நீ மிகவும் நன்மையை யுடையை;

௧ - ௭. முடவு முதிர் பலவின் குடம் மருள் பெரு பழம்-வளைதல் மிக்க பலாமரத்தின் குடம்போன்ற பெரிய பழத்தினை, பல்கிளைத் தலைவன் கல்லாக் கடுவன் - பல சுற்றத்திற்குத் தலைவனாகிய கல்லாத ஆண் குரங்கு, பாடு இமிழ் அருவி பாறை மருங்கின்-மிக ஒலிக்கும் அருவியையுடைய கற்பாறையிடத்தே, ஆடும் மயில் முன்னது ஆக-ஆடுகின்ற மயில் ஒன்று தனக்கு முன்னே நிற்க, கோடியர் விழவுகொள் மூதூர் விறலி பின்றை - கூத்தர் விழாவினைக் கொண்டாடும் முதிய ஊரில் விறலியின் பின்பு நிற்கும், முழவன்போல் அகப்படத் தழீஇ - முழவு இயம்புவோன் போலத் தன்னகத்தே பொருந்தத் தழுவிக் கொண்டு, இன் துணை பயிரும் குன்ற நாடன்-இனிய துணையாய பெண் குரங்கினை அழைக்கும் மலைநாட்டையுடைய நம் தலைவன்,

௮ - ௧௦. குடி நன்கு உடையன்-உயர் குடிப்பிறப்பு உடையவன், கூடுநர் பிரியலன்-தன்னுடன் கூடுகின்றவர்களைப் பிரியான், நா கெடு மொழியலன்-நாவால் கெடுமொழிகளைக் கூறுவானல்லன், அன்பினன்-அன்பு உடையவன், எனநீ வல்ல கூறி வாய்வதிற் புணர்த்தோய் - என்று நீ அவன் சிறப்புக்களைக் கூறிப் பொருத்தமுறக் கூட்டிவைத்தனை, அங்ஙனமே,

௧௨ - ௭. கடும் பரி புரவி நெடு தேர் அஞ்சி - கடிய வேகத்தினை யுடைய குதிரைகள் பூண்ட நீண்ட தேரினையுடைய அதியமானஞ்சி யின், தொல் இசை நிறீஇய உரைசால் பாண்மகன்-பழைய புகழை நிலை பெறச்செய்த புகழ்சான்ற பாண் மகனானவன், நல் இசை நிறுத்த நயவரு பனுவல்-நல்ல இசைகளை வரையறை செய்த இனிமை மிக்க நூலின், எண்ணுமுறை நிறுத்த-எண்ணின் முறைப்படி இயற்றிய, பண்ணினுள்ளும்-பண்ணைக் காட்டினும், புதுவது புனைந்த திறத்தினும் - அவன் புதுமையாக இயற்றிய திறத்தைக் காட்டினும், வதுவை நாளினும் - வதுவை செய்த நாளினும், எமக்கு இனியன் - நமக்கு இனியனாகவுள்ளான்.

(முடிபு) காதல்அம் தோழி! குன்றநாடன் குடிநன்கு உடையன், கூடுநர்ப் பிரியலன், கெடுநா மொழியலன், அன்பினன், என நீ வல்ல கூறிப் புணர்த்தோய், ஆகலின், நல்லை, அஞ்சியின் பாண்மகன் பண்ணினுள்ளும் திறத்தினும் வதுவை நாளினும் எமக்கு இனியன்.

(வி - ரை.) கடுவன் பலவின் பெரும் பழத்தை முழவன் போலத் தழுவிக்கொண்டு துணையை அழைக்கும் குன்றம் என்க. ஆடுகின்ற

(பாடம்) 1. அஞ்சிலாந்தை மகள் நாகையார்; அஞ்சிலாந்தை மகனார்.

மயிலின் பின்னே கடுவன் பலாப் பழத்தைத் தழுவி நிற்பது, ஆடுகின்ற விறலியின் பின்பு முழவினையுடையவன் நிற்பது போலும் என உவமை கொள்க. விறலி-விறல்பட ஆடுபவள். குடிப்பிறந்தார் இயல்பிலே பல நலங்களும் உடையவராவர் ஆகலின், குடிநன்குடையன் என அதனை முற்கூறினுள். கெடுமொழி-பொய்ம்மொழி. அஞ்சியைப் பாடி அவனது தொல் இசையை நிறுத்திய பாண்மகன் என்க. நயவரு பனுவல் என்றது இசைத் தமிழ் நூலை. எண்ணுமுறை நிறுத்த-அலகு முறைப் படி அமைத்த. அலகு-சுருதி. பண்களுள்ளே எழு நரம்பான் இயன்றது பண் எனவும்; ஆறு, ஐந்து, நான்கு எனக் குறைந்த நரம்புகளால் இயன்றது திறம் எனவும் படும் என்பது. "நிறைநரம் பிற்றே பண்ணென லாகும்," "குறைநரம் பிற்றே திறமெனப் படுமே" என்னும் நூற்பாக்களான் அறியப்படும். இனி, புதுவது புனைந்த திறத்தினும் என்றதற்கு, நின் புதுமையுறக் கைசெய்த வகையினும் என்றுரைத்தலும் ஆம்.

(உ-றை.) பல்கிளைத் தலைவனாகிய கடுவன் பலாப்பழத்தைத் தழுவித் துணையை அழைக்கும் குன்றநாடன் என்றது, தலைவன் பல சுற்றத்தையும் பேணித், தலைவிபால் மிக்க அன்புடையனாக இருப்பன் என்பது உணர்த்தியவாறு.

(மே-ள்.) [1] 'அவனறி வாற்ற வறியு மாகலின்' என்னும் தலைவி கூற்றில், நிறுத்தற்கண்ணும் என்னும் பகுதியில், தலைவனது பண்பினைத் தோழி கூறியவற்றுள், தான் நிறுத்திக் கூறுதற்கண்ணும் என்றுரைத்து, இச்செய்யுளைக் காட்டினர், இளம்.

---

353. பாலை

[முன்னொரு காலத்துப் பொருள்வயிற் பிரிந்த தலைமகன் பொருண்முற்றி வந்திருந்த காலத்து மீண்டும் பொருள் கடாவின நெஞ்சிற்குச் சொல்லியது.]

ஆள்வினைப் பிரிதலும் உண்டோ பிரியினும்
கேளினி வாழிய நெஞ்சே நாளும்
கனவுக்கழிந் தனைய வாகி நனவின்
நாளது செலவும் மூப்பினது வரவும்
அரிதுபெறு சிறப்பிற் காமத் தியற்கையும்
இந்நிலை அறியா யாயினுஞ் செந்நிலை
அமையா டங்கழை தீண்டிக் கல்லென
ஞெமையிலை உதிர்த்த எரிவாய்க் கோடை
நெடுவேண் களரி நீறுமுகந்து சுழலக்

---

1. தொல். கற்பு: ௬.

கடுவெயில் திருகிய வேனில் வெங்காட்டு
உயங்குநடை மடப்பிணை தழீஇய வயங்குபொறி
அறுகோட் டெழிற்கலை அறுகயம் நோக்கித்
தெண்ணீர் வேட்ட சிறுமையிற் றழைமறந்து
உண்ணீர் இன்மையின் ஒல்குவன தளர
மரநிழல் அற்ற இயவிற் சுரனிறந்து
உள்ளுவை யல்லையோ மற்றே உள்ளிய
விருந்தொழி வழியாப் பெருந்தண் பந்தர்
வருந்தி வருநர் ஓம்பித் தண்ணெனத்
தாதுதுகள் உதிர்த்த தாழையங் கூந்தல்
வீழிதழ் அலரி மெல்லகஞ் சேர்த்தி
மகிழணி முறுவல் மாண்ட சேக்கை
நம்மொடு நன்மொழி நவிலும்
பொம்மல் ஓதிப் புனையிழை குணனே.

—மதுரை அளக்கர் ஞாழலார் மகனார் [1]மள்ளனார்.

(சொ - ள்.) ௧ - ௨. நெஞ்சே-, வாழிய-, ஆள்வினைப் பிரிதலும் உண்டோ - பொருளீட்டும் முயற்சியால் நாம் இனிப் பிரிதலும் கூடுமோ, பிரியினும் இனி கேள் - அன்றிப் பிரிவதாயினும் இப்பொழுது யான் கூறுவதனைக் கேள்;

௨ - ௪. நாளும் கனவு கழிந்தனைய வாகி - நாடோறும் கனவிலே பொருள்கள் தோன்றி மறைந்த அத் தன்மையவாகி, நனவின் - நனவின் கண்ணே, நாளது செலவும் - நாளின் கழிதலும், மூப்பினது வரவும் - மூப்பின் வருகையும், அரிது பெறு சிறப்பின் காமத்து இயற்கையும் - அரிதாகப் பெறும் சிறப்பினையுடைய காமத்தின் தன்மையும் ஆய இவற்றை, இ நிலை அறியாய் ஆயினும் - இப்பொழுது அறிந்திலாயாயினும்,

௪ - ௧௦. செந்நிலை அமை ஆடு அம் கழை நீண்டி - செவ்விய நிலையினையுடைய மூங்கிலின் அசையும் தண்டினைத் தாக்கி, கல் என ஞெமை இலை உதிர்த்த எரிவாய்க்கோடை - கல்லெனும் ஒலியுண்டாக ஞெமை மரத்தின் இலைகளை உதிர்த்த வெப்பம் பொருந்திய கோடைக் காற்று, நெடுவெண் களரி நீறு முகந்து சுழல - நீண்ட வெள்ளிய களர் நிலத்துள்ள புழுதியை முகந்துகொண்டு சுழன்றிட, கடுவெயில் திருகிய வேனில் வெம் காட்டு - கொடிய வெய்யில் முறுகிய வேனிற்காலத்து வெவ்விய காட்டில், உயங்கு நடை மட பிணை தழீஇய - வருந்திய நடையினையுடைய இளைய பிணையை உடன்கொண்ட, வயங்கு பொறி அறுகோட்டு எழில் கலை - விளங்கும் புள்ளிகளையும் அறல்பட்ட

(பாடம்) 1. அம்மள்ளனார்.

கொம்பினையும் உடைய கலைமான், தெள் நீர் வேட்ட சிறுமையின் - தெளிந்த நீர் வேட்ட துன்பத்தால், தழை மறந்து - தழை உண்டலைக் கைவிட்டு, அறு கயம் நோக்கி - நீர் அற்ற குளத்தினை நோக்கிச் சென்று, உண் நீர் இன்மையின் ஒல்குவன தளர - ஆங்கு உண்ணும் நீர் இன்மையின் மெலிந்து தளர, மரம் நிழல் அற்ற இயவின் சுரன் இறந்து - மரங்கள் நிழல் அற்றனவாயுள நெறியினையுடைய பாலையைக் கடந்து,

கக - உக. உள்ளிய விருந்து ஒழிவு அறியா பெரு தண் பந்தர் - விரும்பி வரும் விருந்தினர் ஒழிதல் அறியாத பெரிய குளிர்ந்த பந்தரின் கண், வருந்தி வருநர் ஓம்பி - வறுமையால் வருந்தி வருவோரைப் பாதுகாத்து, தண் என - குளிர்ச்சியாக, தாழை - தாழையின், நாது துகள் உதிர்த்த - தாதாகிய பொடியை அப்பிய, கூந்தல் - கூந்தலின், மெல் அகம் - மெல்லிய பின்னலில், வீழ் இதழ் அலரி சேர்த்தி - விரும்பப்படும் பூவின் இதழை வைத்துப் பின்னி, மகிழ் அணி முறுவல் - மகிழ்ச்சியினை அணிபெறக் கொண்ட புன்னகையுடன், மாண்ட சேக்கை - மாண்புற்ற பள்ளியின்கண் ணிருந்து, நம்மொடு நன்மொழி நவிலும் - நம்முடன் நல்ல மொழிகளைக் கூறும், பொம்மல் ஓதி புனை இழைகுணன் - பொலிவு பெற்ற கூந்தலையும் அழகிய அணிகளையும் உடைய நம் தலைவியின் குணங்களை,

கக. உள்ளுவை அல்லையோ - நினைத்து மயங்குவாய் அல்லையோ.

(முடிபு) நெஞ்சே! வாழிய! பிரிதலும் உண்டோ! நாளது செலவும் மூப்பினது வரவும் காமத்தியற்கையும் இந்நிலை அறியாயாயினும், சுரன் இறந்து புனையிழை குணன் உள்ளுவை அல்லையோ.

(வி - ரை.) கனவிலே பொருள்கள் தோன்றிக் கழிதலாவது தோற்றம் மாத்திரையானே மறைதல். அதுபோல் நாட்கள் விரைந்து செல்வன என்றான். நாளது செலவும் மூப்பினது வரவும் காமத்து இயற்கையும் அறியாய் என்றது, [1]'நாளது சின்மையும் இளமைய தருமையும்,... அன்பின தகலமும்' ஒன்றுமை கூறிப் பொருள் வயிற் செல்லுதலை விலக்கியவாறு. [2]'இளமையும் காமமும் நின்பாணி நில்லா' எனவும், [3]''இளமையும் காமமும் ஓராங்குப் பெற்றார், வளமை விழைதக்க துண்டோ' எனவும் போந்தன ஈண்டு ஒப்பு நோக்கற்பாலன. கோடை சுழல, கலை ஒல்குவன தளர, மர நிழலற்ற இயவிற் சுரன் என்க. விருந்தோம்புதலும் வறியார்க்கு ஈதலும் முதலாய இல்லறம் புரிதலாகிய தலைவியின் செய்கையும், கூந்தல் அலரி சேர்த்து முறுவல் மாண்ட அவளது மேனி வனப்பும் சேக்கையில் நம்மொடு நன்மொழி நவிலுதலாகிய மொழியின் இனிமையும் பேரின்பம் விளைப்பனவாகலின், துன்பம் தரும் கொடிய காட்டிடைச் செல்வுழி, அவ்வின்பத்தை நினைத்து மீள்வை என்பான், 'சுரன் இறந்து உள்ளுவை அல்லையோ... புனையிழை குணனே' என்றான் என்க.

---

1. தொல். அகத். சுக. 2. கலி. பாலை. கக. 3. கலி. பாலை. கஎ.

354. முல்லை

[வினைமுற்றிய தலைமகற்கு உழையர் சொல்லியது.]

மதவலி யானை மறலிய பாசறை
[1]இடியுமிழ் முரசம் பொருகளத் தியம்ப
வென்றுகொடி யெடுத்தனன் வேந்தனுங் கன்றொடு
[2]கறவைப் பல்லினம் புறவுதொ றுகளக்
குழல்வாய் வைத்தனர் கோவலர் வல்விரைந்து
இளையர் ஏகுவனர் பரிய விரியுளைக்
கடுநடைப் புரவி வழிவாய் ஓட
வலவன் வள்புவலி யுறுப்பப் புலவர்
புகழ்குறி கொண்ட பொலந்தார் அகலத்துத்
தண்கமழ் சாந்தம் நுண்டுகள் அணிய
வென்றிகொ ளுவகையொடு புகுதல் வேண்டின்
யாண்டுறை வதுகொல் தானே மாண்ட
போதுறழ் கொண்ட உண்கண்
தீதி லாட்டி திருநுதற் பசப்பே.

—மதுரைத் தமிழ்க்கூத்தன் கடுவன் மள்ளனார்.

(சொ - ள்.) க - ௪. தலைவ, மதவலி யானை மறலிய பாசறை-மிக்க வலியுடைய யானை போர் வேட்டு மாறுபடும் பாசறைக்கண்ணே, இடி உமிழ் முரசம் பொருகளத்து இயம்ப - இடியென ஒலிக்கும் வென்றி முரசம் போர்க்களத்தே ஒலிக்க, வேந்தனும் வென்று கொடி எடுத்தனன்-அரசனும் போர் வென்று கொடியை உயர்த்தினன், பல் கறவை இனம் கன்றொடு புறவு தொறு உகள - பலவாகிய கறக்கும் ஆனினங்கள் கன்றொடு காடுதொறும் தாவி வர, கோவலர் வாய் குழல் வைத்தனர் - ஆயர்கள் தம் வாயிற் குழல் வைத்து ஊதுவாராயினர்;

௫ - கக. இளையர் வல் விரைந்து ஏகுவனர் பரிய-நின் ஏவலர் மிக விரைந்து ஏகுவாராய் முன் செல்ல, விரி உளை கடு நடை புரவி வழிவாய் ஓட - விரிந்த பிடரி மயிரினையும் கடிய நடையினையும் உடைய குதிரை நெறியின் கண்ணே ஓடுமாறு, வலவன் வள்பு வலி உறுப்ப-பாகன் கடிவாளத்தினை வலிந்து பிடித்துச் செலுத்த, புலவர் புகழ் குறி கொண்ட-புலவர் புகழும் படையின் குறியாய விழுப்புண்கொண்ட, பொலம் தார் அகலத்து - அழகிய மாலையினைத் தரித்த மார்பில், தண் கமழ் சாந்தம் நுண் துகள் அணிய - தண்ணிய கமழும் சாந்தினொடு நுண்ணிய பொடிகளை அணிய, வென்றிகொள் உவகையொடு புகுதல் வேண்டின்-வெற்றிகொண்ட உவகையுடன் நின் மனையிற் புகுதலை நீ விரும்பினமையான்,

(பாடம்) 1. இடிஇமிழ். 2. கறவைப் புல்லினம்.

௧௨ - ௪. மாண்ட போது உறழ் கொண்ட உண்கண்-மாண்புற்ற நீல மலரொடு மாறுபட்ட மையுண்ட கண்ணினையுடைய, திதிலாட்டி - திதற்றவளாய தலைவியின், திரு நுதல் பசப்பு - அழகிய நெற்றியிற் படர்ந்த பசலை, யாண்டு உறைவதுகொல் - இனி எங்குத் தங்கும்?

(முடிபு) தலைவ! வேந்தனும் வென்று கொடி எடுத்தனன்! கோவலர் குழல் வாய்வைத்தனர்; வென்றிகொள் உவகையோடு புகுதல் வேண்டின், திதிலாட்டி திருநுதற் பசப்பு யாண்டு உறைவதுகொல்!

(வி - ரை.) மத: வலியெனப் பொருள்படும் உரிச்சொல். மதவலி: ஒருபொருளிருசொல், மிக்க வலியுடைய என்றபடி. முரசம் இயம்ப வென்று, பாசறைக்கண் கொடி எடுத்தனன் என்க. வேந்தனும் எடுத்தனன் என்றமையால், தலைமகன் வேந்தற்கு உற்றுழிப் பிரிந்தானாயிற்று. குழல்வாய் வைத்தனர் கோவலர் என்றது மீண்டு ஏகற்குரிய மாலைப் பொழுது வந்தமையைக் குறித்தபடி. புரவி ஓடுமாறு வள்பு வலியுறுப்ப எனவும், இளையர் ஏதுவனர் பரியவும் வலவன் வள்பு வலியுறுப்பவும் சாந்தம் நுண்துகள் அணியவும் புகுதல் வேண்டின் எனவும் கூட்டி முடிக்க. புலவர் புகழ் குறி என்றது மார்பிற்பட்ட விழுப்புண். சாந்தம் நுண் துகள் அணிப என்றது எதிர்வு பற்றியது. வேண்டின் - வேண்டினை யாகலின்.

---

355. பாலை

[பிரிவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் சொல்லியது.]

மாவும் வண்டளிர் ஈன்றன குயிலும்
இன்றீம் பல்குரற் கொம்பர் நவலும்
மூதிலை யொழித்த போதவிழ் பெருஞ்சினை
வல்லோன் தைவரும் வள்ளுயிர்ப் பாலை
நரம்பார்த் தன்ன வண்டினம் முரலுந்
துணிகயந் துன்னிய தூமணல் எக்கர்த்
தாதுகு தண்பொழில் அல்கிக் காதலர்
செழுமனை மறக்குஞ் செவ்வி வேனில்
தானே வந்தன்று ஆயின் ஆனது
இலங்குவளை [1]நெகிழ்ந்த எவ்வங் காட்டிப்
புலந்தன வருகம் [2]சென்மோ தோழி
யாமே எமியம் ஆக நீயே

(பாடம்) 1. நெகிழ்த்த. 2. சென்மா.

பொன்னயந் தருளிலை யாகி
இன்னை யாகுதல் ஒத்தன்றால் எனவே.

—[1] தங்காற் பொற்கொல்லனார்

(சொ - ள்.) கக. தோழி -,

க - கூ. மாவும் வண் தளிர் ஈன்றன-மாமரங்களும் அழகிய தளிர் களை ஈன்றன, குயிலும் கொம்பர் இன் தீம் பல்குரல் நுவலும்-குயிலும் அவற்றின் கொம்புகளிலிருந்து மிக இனிய குரலால் பலகாலும் கூவா நிற்கும், முது இலை ஒழித்தபோது அவிழ் பெரு சினை - முதிர்ந்த இலை களை உதிர்த்த மலர்கள் விரிந்த பெரிய கிளைகளில், வல்லோன் தை வரும் நரம்பு வள் உயிர் பாலை ஆர்த்தன்ன - யாழ் வல்லோன் தடவும் நரம்பு இனிய இசைகொண்ட பாலைப்பண்ணை ஒலித்தாலொத்த இசை யுடன், வண்டு இனம் முரலும்-வண்டின் கூட்டங்கள் ஒலிக்கும், துணி கயம் துன்னிய-தெளிந்த நீர் நிலையை அடுத்த, தாது உகு தண் பொழில்-பூந்துகள் உதிரும் குளிர்ந்த சோலையில் உள்ள, தூ மணல் எக்கர்-தூய மணல் மேட்டில், அல்கி - தங்கி, காதலர் செழு மனை மறக்கும்-காதலராயினார் தமது வளவிய மனையினை மறந்திருக்கும், செவ்வி வேனில் வந்தன்று - இளவேனிற் காலம் வந்துளது, ஆயின் - ஆதலான், (நாம் தலைவன் பாற் சென்று),

கூ - கச. இலங்கு வளை ஆனாது நெகிழ்ந்த எவ்வம் காட்டி-விளங் கும் வளை பலகாலும் நெகிழ்ந்து வீழும் துன்பினை நம் தலைவற்குக் காட்டி, யாமே எமியம் ஆக - யாம் தமியேம் ஆக, நீயே பொன் நயந்து அருள் இலையாகி - நீ பொருளை விரும்பி அருள் இல்லாய் ஆகி, இன்னை ஆகுதல் ஒத்தன்று - இத் தன்மையயுடையை ஆதல் நின் தகுதிக்கு ஒத்தது அன்று, என - என்று கூறி, புலந்தனம் வருகம் - அவனை வெறுத்து வருதற்கு, சென்மோ - நாம் செல்லக்கடவேம்.

(முடிபு) தோழி! காதலர் தண் பொழில் அல்கிச் செழுமனை மறக்கும் இளவேனில் வந்தன்று, ஆதலான், நாம் தலைவன்பாற் சென்று நம் வளை நெகிழ்ந்த எவ்வம் காட்டி, யாம் எமியம் ஆக நீ பொன் நயந்து அருளிலையாகி, இன்னையாகுதல் ஒத்தன்று எனப் புலந்தனம் தருகம் சென்மோ.

(வி - ரை.) பெருஞ்சினை வண்டினம் முரலும் தண்பொழில் எனவும், துணிகயம் துன்னிய தண்பொழில் எனவும் கூட்டுக. துணி கயம்: வினைத்தொகை; நீர் தெளிந்த கயம் என்க. மறக்கம்-மறத்தற்கு ஏதுவாகிய. ஆயின் - ஆதலால் என்க. நெகிழ்ந்த எவ்வம் - நெகிழ் தற்கு ஏதுவாகிய எவ்வம். நெகிழ்த்த எவ்வம் என்னும் பாடத்திற்கு, நெகிழச் செய்த எவ்வம் என்றுரைக்க. சென்மோ என்பது விகாரம்.

(பாடம்.) 1. தங்கால் முடக் கொற்றனார்; தங்கால் முடக் கோவனார்.

356 மருதம்

[பின்னின்ற தலைமகற்குக் குறைநேர்ந்த தோழி தலைமகளைக் குறை நயப்பக் கூறியது.]

மேற்றுறைக் கொளீஇய கழாலிற் கீழ்த்துறை
உகுவார் அருந்தப் பகுவாய் யாமை
கம்புள் இயவன் ஆக விசிபிணித்
தெண்கட் கிணையிற் பிறழும் ஊரன்
இடைநெடுந் தெருவிற் கதுமெனக் கண்டேன்
பொற்றொடி முன்கை பற்றினன் ஆக
அன்னாய் என்றனேன் அவன்கைவிட் டனனே
தொன்னசை [1]காவாமை நன்னன் பறம்பிற்
சிறுகா ரோடன் பயினொடு சேர்த்திய
கற்போல் நாவினேன் ஆகி மற்றது
செப்பலென் மன்னால் யாய்க்கே நற்றேர்க்
கடும்பகட் டியானைச் சோழர் மருகன்
நெடுங்கதிர் நெல்லின் வல்லம் கிழவோன்
[2]நல்லடி யுள்ளா னாகவும் [3]ஒன்னார்
[4]கதுவ முயறலும் முயல்ப அதாஅன்று
ஒலிபல் கூந்தல் நம்வயின் அருளாது
கொன்றனன் ஆயினுங் கொலைபழு தன்றே
அருவி யாம்பல் கலித்த முன்றுறை
நன்னன் [5]ஆய்பறம் பன்ன
மின்னீர் ஓதி என்னைநின் குறிப்பே.

—பரணர்.

(சொ - ள்.) கஅ - உ0. அருவி ஆம்பல் கலித்த முன் துறை - அருவி நீர் பெருகுமிடத்து ஆம்பல் தழைத்துள்ள முன் துறையினை யுடைய, நன்னன் ஆய் பறம்பு அன்ன - நன்னனது அழகிய பறம்பு போன்ற, மின் ஈர் ஓதி - மின்னுகின்ற குளிர்ந்த கூந்தலையுடையாளே !,

க - ச. மேல் துறை கொளீஇய கழாலின் - மேலைத் துறையில் கள்ளினைக் கொண்ட கலங்களைக் கழுவுதலின், கீழ் துறை உகுவார் அருந்த - கீழ்த் துறையின் ஒழுகும் கள்ளின் கலங்கல் நீரை அருந்திட, பகு வாய் யாமை - பிளந்த வாயினையுடைய யாமையானது, கம்புள்

(பாடம்) 1. சாலாமை. 2. நல்லளி. 3. ஒல்லார். 4. கதவம்.
5. ஆய்பிரம்பன்ன.

இயவன் ஆக - சம்பங் கோழி வாச்சியக்காரன் ஆக, விசி பிணி தெள் கண் கிணையின் பிறழும் ஊரன் - இறுகப் பிணித்த தெளிந்த கண்ணினை யுடைய கிணைப்பறை போலப் பிறழும் ஊரையுடையோன்,

கூ - அ. இடை நெடு தெருவில் கதுமெனக் கண்டு - நீண்ட தெருவின் நடுவே விரைந்து என்னைக் கண்டு, என் பொன்தொடி முன் கை பற்றினன் ஆக - எனது பொன் வளையினை யணிந்த முன் கையைப் பிடித்தானாக, அன்னாய் என்றனென் - அன்னாய் என்று கூவினேன்; தொல் நசை காவாமை - நீண்ட நாளாக வரும் விருப்பினை நீக்காமலே, அவன் கைவிட்டனன் - அவன் என் கையை விட்டுவிட்டான்;

அ - கக. நன்னன் பறம்பில் - நன்னனது பறம்பு மலையில், சிறு காரோடன் - சிறிய பணி செய்வோன், பயினொடு சேர்த்திய கல்போல் - அரக்கொடு சேர்த்து இயற்றிய சாணைக் கல்லினைப் போலும், நாவினென் ஆகி - வன்மை அமைந்த நாவினேன் ஆகி; அது யாய்க்குச் செப்பலென் - அந்நிகழ்ச்சியை நம் தாய்க்குக் கூறினேன் அல்லேன் (என்னையெனின்),

கக - எ. நல் தேர் கடு பகட்டு யானை சோழர் மருகன் - நல்ல தேரினையும் கடிய களிற்றியானைகளையு முடைய சோழரது வழிவந்தோனாகிய, நெடு கதிர் நெல்லின் வல்லம் கிழவோன் - நீண்ட நெற்கதிர்களையுடைய வல்லத்தின் தலைவன், நல் அடி உள்ளானாகவும் - நன்மையுள்ளவனாகவும், ஒன்னார் கதுவ முயறலும் முயல்வ - அவன் பகைவர் அவனைப் பற்ற முயல்வதும் செய்வரன்றே, அதாஅன்று - அதுகிடக்க, ஒலி பல் கூந்தல் - தழைத்த பலவாய கூந்தலையுடையாய், நம் வயின் அருளாது - நம்பால் அருள் செய்யாது, கொன்றனன் ஆயினும் - துன்புறுத்தினன் ஆயினும், கொலைபழுது அன்று - அது குற்றமுடைத்து ஆகாது; ஆகலின்,

உo. - என்னை நின் குறிப்பே - நின் கருத்து யாதோ கூறுவாயாக.

(முடிபு) மின் ஈர் ஓதி! ஊரன், இடைநெடுந் தெருவில் என் முன்கை பற்றினனாக, அன்னாய் என்றனன்; நசை காவாமை அவன் கைவிட்டனன்; மற்று அது கற்போல் நாவினேன் ஆகி யாய்க்குச் செப்பலென்; அவன் நம் வயின் அருளாது கொன்றனன் ஆயினும், கொலை பழுது அன்று, நின் குறிப்பு என்னை?

(வி - ரை.) கொளீஇய - கொண்ட கலங்கள்: வினையாலணையும் பெயர். உகு வார் - சிந்துகின்ற கலங்கல்நீரின் ஒழுக்கு. யாமை இங்ஙனங் கள்ளின் கலங்கலை உண்டல், [1]'வள்ளுகிர் யாமை......அகன் றுறைப், பகுவாய் நிறைய நுங்கிற் கள்ளின், உகுவார் அருந்தும்......' என முன்னரும் போந்துள்ளமை காண்க. அருந்த என்னும் எச்சம் பகு என்பது கொண்டு முடிந்தது. யாமை கிணையிற் பிறழும் ஊர் என்க. யாமையும் கிணையின் கண்ணும் வடிவான் ஒத்திருத்தலின் கிணையின் என்பது மெய்யுவமத்தின்கண் வந்தது. [2]'கயத்துவாழ் யாமை காழ் கோத் தன்ன, நுண்கோற் றகைத்த தெண்கண் மாக்கிணை' [3]'ஆமை...

1. அகம்: உகூ. 2. புறம்: எo. 3. பு-வெ: கஅசு.

யகடுபோல் அங்கட்டடாரி'என்பன ஈண்டு அறியற்பாலன. காவாமை. வருதலைக் காவாமல்,நீக்காமல் என்றபடி.தொன்னசை சாலாமை என்று பாடங்கொள்ளினும் இதுவே பொருளா மென்க. 'சிறுகா ரோடன் பயினொடு சேர்த்திய கற்போல்' என்னும் இத் தொடர் இந் நாலின் முதற் செய்யுளிலும் வந்துள்ளமை காண்க. சோழர் மருகனாகிய வல்லங்கிழவோன் என்க. நல்லடி - நன்மை, அது பிறர்க்குத் தீங்கு இயற்றாமை. அதாஅன்று என்பது அது போல்வது இது என எடுத்துக் காட்டுதற்கண் வந்தது. முன்பு கைவிட்ட அவன் நம்மை அருளாது துன்புறுத்தினனாயினும், பழங்கண்ணோட்டமுடைய நாம் அதனைத் தீங்காகக்கொள்ளமாட்டோம் என்பாள் கொன்றனனாயினும் கொலை பழுதன்றே என்றாள். என்னை நின் குறிப்பு என்றது அவன் குறையினை விரும்பி ஏற்றுக்கொள்ளலே தக்கது என்று உணர்த்தியபடியாம்.

---

357. பாலை

[பிரிவிடை வேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறீஇயது.]

கோடுமுள் ஈங்கைச் சூரலோடு மிடைந்த
வான்முகை இறும்பின் வயவோடு வதிந்த
உண்ணாப் பிணவின் உயக்கம் தீரிய
தடமருப் பியானை வலம்படத் தொலைச்சி
௫. வியலறை சிவப்ப வாங்கி முணங்குநிமிர்ந்து
புலவுப்புலி புரண்ட புல்சாய் சிறுநெறி
பயிலிருங் கானத்து வழங்கல் செல்லாது
பெருங்களிற் றினநிரை [1]கைதொடூஉப் பெயரும்
தீஞ்சுளைப் பலவின் றொழுதி உம்பற்
௧௦. பெருங்கா டிறந்தன ராயினும் யாழநின்
திருந்திழைப் பணைத்தோள் வருந்த நீடி
உள்ளா தமைதலோ இலரே [2]நல்குவர
மிகுபெயல் நிலைஇய தீநீர்ப் பொய்கை
அடையிறந் தவிழ்ந்த தண்கமழ் நீலம்
௧௫. காலொடு துயல்வந் தன்னநின்
ஆயிதழ் மழைக்கண் அமர்ந்த நோக்கே.

—எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார்.

(சொ - ள்.) ௧ - ௧௦. (தோழி ! நம் தலைவர்) கொடுமுள் ஈங்கை சூரலொடு மிடைந்த-வளைந்த முள்ளினையுடைய இண்டஞ்செடி பிரம்

(பாடம்) 1. கைகொடூஉப் பெயரும். 2. நல்குவர்.

புடன் செறிந்துள்ள, வால்முகை இறுப்பின் - வெள்ளிய அரும்புகளை யுடைய குறுங்காட்டின்கண், வயவொடு வதிந்த-சூல் வேட்கையுடன் கிடந்த, உண்ணாப் பிணவின் உயக்கம் திரிய-உண்ணாத பெண் புலியின் வருத்தத்தை நீக்கி, தட மருப்பு யானை வலம் பட தொலைச்சி - பெரிய கோட்டினையுடைய யானையை வலப்பக்கத்தே விழக்கொன்று, வியல் அறை சிவப்ப வாங்கி-அகன்ற பாறைகள் குருதியாற் சிவக்கும்படி இழுத்திழுத்துவந்து, முணங்கு நிமிர்ந்து - மூரி நிமிர்ந்து, புலவு புலி புரண்ட - புலால்நாறும் புலி கிடந்து புரண்டதால், புல்சாய் சிறு நெறி பயில் இருகானத்து - புற்கள் சாய்ந்து கிடக்கும் சிறிய நெறிகள் மிக்க பெரிய காட்டிலே, வழங்கல் செல்லாது - இயங்குதல் பொருந்தாது, பெரு களிற்று இன நிரை-பெரிய களிற்றின் கூட்டமாய நிரை, கை தொடூஉப் பெயரும்-தம் கைகளாற் றோண்டித் தின்று போகும், தீம் சுளைப் பலவின் தொழுதி - இனிய சுளைகளையுடைய பலா மரத்தின் கூட்டத்தையுடைய, உம்பல் பெரு காடு இறந்தனர் ஆயினும் - பெரிய உம்பற் காட்டைக் கடந்து சென்றுளாராயினும்,

க0 - க. நின் திருந்து இழை பணை தோள் வருந்த நீடி - நினது திருந்திய அணிகளை யணிந்த மூங்கில் போன்ற பெருத்த தோட்கள் வருந்தி யிளைக்குமாறு தாழ்த்து,

கஉ - க. மிகு பெயல் நிலைஇய தீ நீர் பொய்கை-மிக்க மழை நிலை பெற்றமையால் பெருகிய இனிய நீரினையுடைய பொய்கையின்கண், அடை இறந்து அவிழ்ந்த தண் கமழ் நீலம்-இலைகளை விட்டு மேலெழுந்து விரிந்த தண்ணிய கமழ்கின்ற நீலப்பூ, காலொடு துயல் வந்தன்ன-காற்றினால் அசைந்தாலொத்த, நின் ஆய் இதழ் மழைக் கண் அமர்த்த நோக்கு-நினது அழகிய இதழ் பொருந்திய குளிர்ந்த கண்களின் அமரிய பார்வையினை, நல்கு வர - அருளுண்டாக, உள்ளாது அமைதல் இலர்-நினையாதிருத்தல் இலராவர்.

(முடிபு) தோழி! நம் தலைவர், உம்பற் பெருங்காடு இறந்தனராயினும் நின் பணைத் தோள் வருந்த நீடி, மழைக்கண் அமர்த்த நோக்கு, நல்கு வர உள்ளாது அமைதல் இலர்.

(வி - ரை.) திரிய: செய்யிய என்னும் எச்சம்; திரிய தொலைச்சி என்க. பெயரும் காடும் எனவும் பலவின் தொழுதியையுடைய காடு எனவும் கூட்டுக. பெயரும் காடு - பெயர்தற்கு இடனாயிருந்த காடு. சேரனாட்டகத்து உம்பற்காடு எனப் பெரிய இடம் ஒன்று உண்டு என்பது. 'உம்பற்காட்டு ஐந்நூறூர்' (இரண்டாம் பத்து) 'உம்பற் காட்டைத் தன்கோ னிறீஇ' (மூன்றும் பத்து) 'உம்பற்காட்டு வாரியை யும்' (ஐந்தாம் பத்து) எனப் பதிற்றுப்பத்தின் பதிகங்களில் வருதலான் அறியப்படும். உம்பற்காடென்பது யானையை மிகுதியாக உடைமையாற் பெற்ற பெயர் போலும். நல்குவர - அருள் உண்டாதல் பொருந்த. நல்குவர் என்பது பாடமாயின், அருள்வர் என முற்றுக்குக.

358. குறிஞ்சி

[பகலே சிறைப்புறமாகத் தோழி தலைமகட்குச் சொல்லியது.]

நீலத் தன்ன நிறங்கிளர் எருத்திற்
காமர் பீலி ஆய்மயிற் றோகை
இன்றீங் குரல துவன்றி மென்சீர்
ஆடுதகை எழினலங் கடுப்பக் கூடிக்
கண்ணேர் இதழ தண்ணறுங் குவளைக்
குறுந்தொடர் அடைச்சிய நறும்பல் கூழை
நீடுநீர் நெடுஞ்சுனை ஆயமோ டாடாய்
உயங்கிய மனத்தை யாகிப் புலம்புகொண்டு
இன்னை யாகிய நின்னிறம் நோக்கி
அன்னை [1]வினவினை ளாயின் அன்னோ
என்னென உரைக்கோ யானே [2]துன்னிய
பெருவரை இழிதரும் நெடுவெள் ளருவி
ஓடை யானை உயர்மிசை யெடுத்த
ஆடுகொடி கடுப்பத் தோன்றும்
கோடுயர் வெற்பின் உறீஇய நோயே.

—[3]மதுரை மருதனிள நாகனார்.

(சொ - ள்.) தோழி!, க - ௧0. நீலத்து அன்ன நிறம் கிளர் எருத்தின்-நீல மணியை யொத்த நிறம் விளங்கும் கழுத்தினையும், காமர் பீலி-அழகிய பீலியாகிய, ஆய் மயில் தோகை-சிறந்த தோகையுடைய மயில்கள், இன் தீம் குரல துவன்றி-மிக்க இனிய குரலினையுடையவாய் நெருங்கி, மெல் சீர் ஆடுதகை எழில் நலம் கடுப்ப-மெல்லிய தாளம் அறிந்துகொண்டு ஆடும் தகுதியாய அழகின் சிறப்பினை ஒப்ப, கண் நேர் இதழ தண் நறு குவளை - கண்ணை யொத்த இதழ்களையுடைய குளிர்ந்த நறிய குவளை மலரின், குறு தொடர் அடைச்சிய நறு பல் கூழை-குறிய மாலையினைச் செருகிய நறிய பலவாய கூந்தல் பரக்க, நீடு நீர் நெடு சுனை ஆயமொடு கூடி ஆடாய் - ஆழ்ந்த நீரினையுடைய நீண்ட சுனையின்கண் நின் ஆயத்துடன் கூடி ஆடாதே, உயங்கிய மனத்தை ஆகி - வருந்திய மனத்தினையுடையையாகி, புலம்பு கொண்டு-தனிமை கொண்டு, இன்னை ஆகிய நின் நிறம் நோக்கி - இத் தன்மையாகிய நினது மேனி வேறுபாட்டைப் பார்த்து, அன்னை வினவினள் ஆயின் - நம் அன்னை (அதன் காரணத்தைக்) கேட்டனளாயின்,

---

(பாடம்) 1. வினவுவளாயின். 2. துன்னிப்.
3. மதுரை மருதங்கண்ணனார்.

கக—ரு. தன்னிய பெரு வரை இழிதரும் நெடு வெள் அருவி - பொருந்திய பெரிய மலையினின்றும் ஒழுகும் நீண்ட வெள்ளிய அருவியானது, ஓடை யானை உயர்மிசை எடுத்த ஆடு கொடி கடுப்ப தோன்றும்-நெற்றிப் பட்டத்தினையுடைய யானையின் மீது தூக்கிய அசையும் வெண் துகிற் கொடியினை யொப்பத் தோன்றும், கோடு உயர் வெற்பன் உறீஇய நோய்-சிகரம் உயர்ந்த மலையையுடைய தலைவன் நம்மை அடைவித்த இந் நோயினை, அன்னோ - அந்தோ, யான் என் என உரைக்கு - யான் யாதினுன் நிகழ்ந்ததென்று சொல்லுவேன்?

(முடிபு) **தோழி! அன்னை, உயங்கிய மனத்தையாகிப் புலம்புகொண்டு இன்னையாகிய நின்னிறம் நோக்கி, வினவினளாயின், வெற்பன் உறீஇய நோய் அன்னோ! யான் என்னென உரைக்கு.**

(வி - ரை.) பீலி ஆகிய தோகையையுடைய மயில் எனக் கூட்டுக. இன் தீம்: ஒரு பொருட் பன்மொழி. மயில் பல கூடி இனிய குரலையுடையவாய்த் தோகையை விரித்து ஆடுதல்போல நீயும் ஆயத்துடன் கூடிக் கூந்தல் பரக்கச் சுனையில் ஆடுதல் செய்யாய் என உவமையும் பொருளும் ஒத்து நின்று மகிழ்ச்சி விளைத்தல் காண்க. உவமையில் இன்தீங்குரல என்பதற்கேற்பப் பொருளிலும் இனிய குரலுடன் பாடிக்கொண்டு ஆடாய் என விரித்துரைக்க.

---

359. பாலை

[பிரிவிடை வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது]

பனிவார் உண்கணும் பசந்த தோளும்
நனிபிறர் அறியச் சாஅய நாளுங்
கரந்தனம் உறையும் நம்பண் பறியார்
நீடினர் மன்னோ காதலர் எனநீ
எவன்கை யற்றனை இகுளை அவரே
வான வரம்பன் வெளியத் தன்னநம்
மாணலந் தம்மொடு கொண்டனர் முனைஅது
அருஞ்சுரக் கவலை யசைஇய கோடியர்
பெருங்கல் மீமிசை இயமெழுந் தாங்கு
வீழ்பிடி கெடுத்த நெடுந்தாள் யானை
சூர்புகல் அடுக்கத்து மழைமாறு முழங்கும்
பொய்யா நல்லிசை மாவண் புல்லி
கவைக்கதிர் வரகின் யாணர்ப் பைந்தாள்
முதைச்சுவல் மூழ்கிய கான்சுடு குரூஉப்புகை
அருவித் துவலையோடு மயங்கும்
பெருவரை அத்தம் இயங்கி யோரே.

—மாமூலனார்.

(சொ - ள்.) க—ரு. இகுளை - தோழி, பனி வார் உண்கணும் - நீர் ஒழுகும் மையுண் கண்களும், பசந்த தோளும் - பசலையுற்ற தோள்களும், நனி பிறர் அறியச் சாஅய - பிறர் மிகவும் அறியும்படி வாடுதலுற, நாளும் கரந்தனம் உறையும் நம் பண்பு அறியார் - நாடோறும் அவற்றை மறைத்து வதியும் நம் இயல்பினை அறியாராய், காதலர் நீடினர் என - நம் காதலர் வாராது மிகத் தாழ்த்தனர் என்று, நீ எவன் கையற்றனை - நீ செயலற்றது என்னையோ?,

எ—கச. முனாஅது - முன்பு உள்ளதாகிய, அரு சுர கவலை அசைஇய கோடியர் இயம் - அரிய சுரத்தின் கவர்த்த நெறிகளிற் றங்கிய கூத்தரது வாச்சிய ஒலி, பெருங்கல் மீ மிசை எழுந்தாங்கு - பெரிய மலையின் மேலிடத்தே தோன்றினாற்போல, வீழ் பிடி கெடுத்த நெடு தாள் யானை - விரும்பப்படும் பிடியினை இழந்த நீண்ட காலையுடைய களிற்றியானை, சூர் புகல் அடுக்கத்து மழை மாறு முழங்கும் - தெய்வம் விரும்பியுறையும் மலைப்பக்கத்தே இடியொடு மாறுபட முழங்கும் இடமான, பொய்யா நல் இசை மாவண் புல்லி - பரிசிலர்க்குப் பொய்யாத நல்ல புகழினையும் சிறந்த வண்மையையுமுடைய புல்லி என்பானது, கவை கதிர் வரகின் யாணர் பைந்தாள் - கிளைத்த கதிரினையுடைய வரகினது அழகிய பசிய தட்டைகளையுடைய, முதைச் சுவல் மூழ்கிய - பழங் கொல்லையாகிய மேட்டுநிலத்தைச் சுற்றியுள்ள, கான் சுடு குருஉப் புகை - காட்டைச் சுடுவதாலெழும் விளங்கும் புகை, அருவித் துவலையொடு மயங்கும் - அருவியின் நுண்ணிய துளிகளுடன் விரவித் தோன்றும், பெரு வரை அத்தம் இயங்கியோர் - பெரிய மலை பொருந்திய காட்டிலே சென்றோர் ஆகிய,

ரு—எ. அவர் - நம் தலைவர், வான வரம்பன் வெளியத்து அன்ன - வான வரம்பனது வெளியம் என்னுமிடத்தையொத்த, நம் மாண் நலம் தம்மொடு கொண்டனர் - நமது சிறந்த அழகினைத் தம்முடன் கொண்டு சென்றனர்.

(முடிபு) இகுளை! காதலர் நம் பண்பு அறியார் நீடினர் மன்னே என நீ எவன் கையற்றனை? மாவண் புல்லி பெருவரை அத்தம் இயங்கியோர் (ஆகிய) அவர், வான வரம்பன் வெளியத்து அன்ன நம் மாண்நலம் தம்மொடு கொண்டனர்.

(வி - ரை.) நாளும் சாஅய என்றுரைத்தலுமாம். இயங்கியோர் அவர் எனவும் கோடியர் இயம் பெருங்கல் மீமிசை எழுந்தாங்கு எனவும் கொண்டுகூட்டுக. முனாஅது - பழையதாகிய என்றுமாம்; பழையதாகிய நமது மாணலம் எனக் கூட்டியுரைத்தலுமாம். இயம் கல் மிசை எழுதல் என்றது, மலையில் எதிரொலி யுண்டாதல். புல்லியின் பெருவரை என்க. மூழ்கிய கான் - சூழ்ந்த காடு. அவர் நம் மாணலம் தம்மொடு கொண்டனர் என்றது, அவர் மீண்டு வருங்கால், நமது நலமும் வந்துவிடும் எனக்கூறி ஆற்றுவித்தவாறும்.

360. நெய்தல்

[பகற்குறி வந்த தலைமகற்குத் தோழி பகற்குறி மறுத்து இரவுக் குறி நேர்ந்தது.]

பல்பூந் தண்பொழிற் பகலுடன் கழிப்பி
ஒருகால் ஊர்திப் பருதியஞ் செல்வன்
குடவயின் மாமலை மறையக் கொடுங்கழித்
தண்சேற் றடைஇய கணைக்கால் நெய்தல்
நுண்டா துண்டு வண்டினம் துறப்ப
வெருவரு கடுந்திறல் இருபெருந் தெய்வத்து
உருவுடன் இயைந்த தோற்றம் போல
அந்தி வானமொடு கடலணி கொளாஅ
வந்த மாலை பெயரின் மற்றிவள்
பெரும்புலம் பினளே தெய்ய அதனால்
பாணி பிழையா மாண்வினைக் கலிமா
துஞ்சூர் யாமத்துத் தெவிட்டல் ஓம்பி
நெடுந்தேர் அகல நீக்கிப் பையெனக்
குன்றிழி களிற்றிற் குவவுமணல் நீந்தி
இரவின் வம்மோ உரவுநீர்ச் சேர்ப்ப
இனமீன் அருந்தும் நாரையொடு பனைமிசை
அன்றில் சேக்கும் முன்றிற் பொன்னென
நன்மலர் நறுவீ தாஅம்
புன்னை நறும்பொழிற் செய்தநங் குறியே.

—மதுரைக் கண்ணத்தனார்.

(சொ - ள்) கரு. உரவு நீர் சேர்ப்ப-வலிய கடற்கரையையுடைய தலைவனே!

க—க0. பல் பூ தண் பொழில் பகல் உடன் கழிப்பி-பல பூக்களை யுடைய குளிர்ந்த பொழிலில் பகல் முழுவதும் போக்கி, ஒரு கால் ஊர்தி பருதி அம் செல்வன்-ஒற்றை உருள்பூண்ட தேரினையுடைய ஞாயிறாகிய அழகிய செல்வன், குடவயின் மா மலை மறைய-மேற்கில் உள்ளதாகிய பெரிய மலையில் மறைய, கொடு கழி தண் சேற்று அடைஇய கணை கால் நெய்தல்-வளைந்த கழியிலுள்ள குளிர்ந்த சேற்றில் பொருந்திய திரண்ட காலினையுடைய நெய்தற் பூவின், நுண் தாது உண்டு வண்டு இனம் துறப்ப-நுண்ணிய பொடியை உண்டு வண்டின் கூட்டம் அதனை விட்டேக, வெருவரு கடு திறல் இரு பெரு தெய்வத்து-அஞ்சத்தகும் மிக்க வலியுடைய இரு பெருந் தெய்வங்களாய சிவனுந்

திருமாலும் ஆய இவர்களது, உரு உடன் இயைந்த தோற்றம்போல-செந்நிறமும் கருநிறமும் ஒருங்கு பொருந்திய தோற்றத்தைப் போல, அந்தி வானமொடு கடல் அணி கொளாஅ-அந்தி வானத்தின் அழகுடன் கடலின் அழகையும் கொண்டு, வந்த மாலை-வந்த மாலைக் காலத்தே, பெயரின்-நீ நீங்கின், இவள் பெரும் புலம்பினள்-இவள் மிக்க தனிமை யுற்றனளாகி வருந்துவள்,

௧௦—௪. அதனால்—, பாணி பிழையா மாண்வினைக் கலிமா-தாளத்தை ஒத்து நடத்தல் தப்பாத மாண்புற்ற வினை வல்ல செருக்குறப் குதிரை, துஞ்சு ஊர் யாமத்து தெவ்ட்டல் ஓம்பி-ஊர் துயிலும் யாமத்தில் ஒலித்தலைப் பாதுகாத்து, நெடுதேர் அகல நீக்கி-நீண்ட தேரினைச் சேய்மையில் நீக்கி நிறுத்தி, பை என குன்று இழி களிற்றில் குவவு மணல் நீந்தி-மெல்லெனக் குன்றின் இழிந்து செல்லும் களிறு போலத் திரண்ட மணல் மேட்டினைக் கடந்து,

௧௫—௬. இனம் மீன் அருந்தும் நாரையொடு-மீன் இனங்களை உண்ணும் நாரைகளுடன், பனைமிசை-பனைமரத்தின்மீது, அன்றில் சேக்கும் முன்றில்-அன்றில் தங்கியிருக்கும் முற்றத்தே, பொன் என நன்மலர் நறுவீ தாஅம்-பொன் போல நல்ல மலராகிய நறிய பூக்கள் உதிர்ந்து பரவும், புன்னை நறு பொழில் செய்த-புன்னை மரங்களுள்ள நறிய சோலையிற் செய்த, நம் குறி-நமது குறியிடத்திற்கு,

௧௯. இரவின் வம்மோ-இரவின்கண் வருவாயாக.

(முடிபு) உரவு நீர்ச் சேர்ப்ப! நீ தண்பொழில் பகல் உடன் கழிப்பி, மாலை பெயரின் மற்று இவள் பெரும் புலம்பினள்; அதனால் நெடுந்தேர் அகல நீக்கி, குவவுமணல் நீந்தி, புன்னை நறும் பொழிற்கண் செய்த நம்குறி இரவின் வம்மோ.

(வி - ரை.) பகல் உடன் கழிப்பி, மாலை பெயரின் என இயையும். பருதி அம் செல்வன் மறைய, நெய்தல் உண்டு வண்டினம் துறப்ப, அந்தி வானமொடு கடலணி கொண்டு வந்த மாலை என்க. அந்தி வானம்-அந்திக் காலத்துச் செவ்வானம். தெய்ய : அசைச் சொல். ஊர் துஞ்சு யாமம் என மாறுக. இரவுக் குறிக்கு இடையீடு நேராத படி வருதல் வேண்டும் என்பாள், குதிரை தெவிட்டல் ஓம்பி, தேர் அகல நீக்கி, பையென மணல் நீந்தி வருக என்றாள். அன்றில் சேக்கும் நறும் பொழில் எனவும் முன்றில் நறுவீ தாஅம் நறும்பொழில் எனவும் கூட்டுக.

―――

361. பாலை

[பொருள்வயிற் பிரிந்து போகாநின்ற தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.]

தூமலர்த் தாமரைப் பூவின் அங்கண்
மாயிதழ்க் குவளை மலர்பிணைத் தன்ன
திருமுகத் தலமரும் பெருமதர் மழைக்கண்
[1]அணிவளை முன்கை ஆயிதழ் மடந்தை
வார்முலை முற்றத்து நூலிடை விலங்கினும்
கவவுப்புலந் துறையுங் கழிபெருங் காமத்து
இன்புறு நுகர்ச்சியிற் சிறந்ததொன் றில்லென
அன்பால் மொழிந்த என்மொழி கொள்ளாய்
பொருள்புரி வுண்ட மருளி நெஞ்சே
கரியாப் பூவிற் பெரியோர் ஆர
அழலெழு தித்தியம் மடுத்த யாமை
நிழலுடை நெடுங்கயம் புகல்வேட் டாஅங்கு
[2]உள்ளுதல் ஓம்புமதி இனிநீ முள்ளெயிற்றுச்
சின்மொழி அரிவை தோளே பன்மலை
வெவ்வறை மருங்கின் வியன்சுரம்
எவ்வங் கூர இறந்தனம் யாமே.

—எயினந்தை மகனார் இளங்கீரனார்.

(சொ - ள்.) ௧ - ௯. தூ மலர் தாமரைப் பூவின் அங்கண்-தூயமலராய தாமரைப் பூவிடத்தே, மா இதழ் குவளை மலர் பிணைத்தன்ன-கரிய இதழ்களையுடைய குவளைமலர் இரண்டினைப் பிணைத்து வைத்தாற் போன்ற, திருமுகத்து அலமரும் பெருமதர் மழை கண்-அழகிய முகத்திடத்தே சுழலும் பெரிய மதர்த்த குளிர்ந்த கண்களையும், அணிவளை முன்கை-அழகிய வளைகளையுடைய முன்கையினையும், ஆய் இதழ் மடந்தை-அழகிய வாய் இதழினையுமுடைய நம் தலைவியின், வார் முலை முற்றத்து கவவு - வார் அணிந்த முலைப் பரப்பின் முயக்கத்தினை, நூல் இடை விலங்கினும் - ஒரு நூல் இடையே தடுப்பினும், புலந்து உறையும்-அதனை வெறுத்து உறையும், கழி பெருங் காமத்து இன்பு உறு நுகர்ச்சியில் - மிகப் பெரிய காதலோடு இன்பம் துய்க்கும் நுகர்ச்சியைக் காட்டினும், சிறந்தது ஒன்று இல் என - மேம்பட்டதோர் இன்பம் இல்லை என, அன்பால் மொழிந்த என்மொழி கொள்ளாய்-அன்புடன் கூறிய என் மொழியினை ஏற்றுக்கொள்ளாயாகி, பொருள் புரிவுண்ட

(பாடம்) 1. அரி மயிர் முன் கை. 2. உள்ளுதல் ஒழிமதி நீயே.

மருளி நெஞ்சே-பொருளை விரும்பி வந்த மயக்கத்தினையுடைய நெஞ்சமே,

௧௪—௮. பல் மலை வெவ் அறை மருங்கின் வியன் சுரம் - பலமலைகளையும் வெவ்விய பாறைகளையுமுடைய நீண்ட சுரத்தையும், எவ்வங் கூர இறந்தனம் யாம்-துன்பம் மிக யாம் கடந்து வந்துளேமாகலின்,

௧௦—௨. கரியா பூவில் பெரியோர் ஆர-வாடாத பூவினையுடைய தேவர் உண்டற் பொருட்டு, அழல் எழு தித்தியம் மடுத்த யாமை - அழல் ஓங்கிய வேள்விக் குண்டத்தின்கண் இடப்பெற்ற யாமை, நிழல் உடை நெடு கயம் புகல் வேட்டாங்கு-தான் முன்பிருந்த நிழல் பொருந்திய பெரிய பொய்கையின்கண் போதலை விரும்புவதுபோல,

௧௧—௪. முள் எயிற்று சில்மொழி அரிவை தோள்-முள் போன்ற பற்களையும் சிலவாய மொழிகளையுமுடைய நம் தலைவியின் தோளினை, இனி நீ உள்ளுதல் ஓம்புமதி-இப்போது நீ நினைத்தலை ஒழிவாயாக.

(முடிபு) கழி பெருங் காமத்து இன்புறு நுகர்ச்சியிற் சிறந்ததொன்றில்லென மொழிந்த என் மொழி கொள்ளாய் ஆகிப் பொருள் புரிவுண்ட மருளி நெஞ்சே! யாம் பன்மலை வியன் சுரம் எவ்வம் கூர இறந்தனம் (ஆகலின்) தித்தியம் மடுத்த யாமை நெடுங்கயம் புகல் வேட்டாங்கு, அரிவை தோள் இனி நீ உள்ளுதல் ஓம்புமதி.

(வி-ரை.) முகமும் கண்களும் முறையே தாமரைப்பூவும் குவளை மலரும் போல் விளங்கும் என்னும் இவ்வுவமை [1]'தாமரைப்போதிற் பூத்த தண்ணறுங் குவளைப் பூப்போற், காமரு முகத்திற் பூத்த கருமழைத் தடங்கண்' எனத் திருத்தக்கதேவராலும் கூறப்பட்டுளது. நூல் இடை விலங்கினும் என்றது-நூல் இடையே ஊடறுத்து முயக்கத்தை நெகிழ்விப்பதாயினும் என்றபடி. புலந்து உறைதல்-அவ்விடைவீட்டை வெறுத்து உறைதல். நெகிழா முயக்கினை விரும்புவார் தலைவன் தலைவி இருவரும் ஆகலின், புலந்துறைதலும் இருவர்க்கும் கொள்க. [2]'வீழும் இருவர்க் கினிதே வளியிடை, போழப் படாஅ முயக்கு' என்பது காண்க. சிறந்தது-சிறந்த இன்பம்; பொருள் முதலியனவுமாம். அடுத்த யாமை எனப் பிரித்து வேள்விக் குண்டத்தைச் சார வைக்கப்பெற்றுள்ள யாமை என்றலுமாம். இக் கருத்து [3]'நெடுமணி யூபத் திட்ட தவழ்நடை யாமை நீணீர்த், தொடுமணிக் குவளைப் பட்டம் துணையொடு நினைப்பதே போல்' எனத் தேவராலும் ஆளப்பெற்றுளது. தித்தியம் மடுத்த யாமை கயம்புகல் வேட்டாங்கு என்ற உவமை. அரிவை தோள் இப்பொழுது கூடுதற்கு அரிது என்பதனை விளக்கியவாறும். பல மலைகளின் வெவ்வறை மருங்கின் என்றுரைத்தலுமாம்.

1. சீவக. ௨௧௧௧. 2. குறள். ௧௧௦௮. 3. சீவக. ௨௮௭௮.

362. குறிஞ்சி

[இரவுக்குறிச் சிறைப்புறமாகத் தோழி சொல்லியது.]

பாம்புடை விடர பனிநீர் இட்டுத்துறைத்
தேங்கலந் தொழுக யாறுநிறைந் தனவே
வெண்கோட் டியானை பொருத புண்கூர்ந்து
பைங்கண் வல்லியம் கல்லளைச் செறிய
முருக்கரும் பன்ன [1]வள்ளுகிர் வயப்பிணவு
கடிகொள வழங்கார் ஆறே ஆயிடை
எல்லிற் றென்னான் வென்வேல் ஏந்தி
நசைதர வந்த நன்ன ராளன்
நெஞ்சுபழு தாக வறுவியன் பெயரின்
இன்றிப் பொழுதும் யான்வா ழலனே
எவன்கொல் வாழி தோழிநம் இடைமுலைச்
சுணங்கணி முற்றத் தாரம் போலவுஞ்
சிலம்புநீடு சோலைச் சிதர்தூங்கு நளிர்ப்பின்
இலங்குவெள் ளருவி போலவும்
நிலங்கொண் டனவால் திங்களங் கதிரே.

—வெள்ளி வீதியார்.

(சொ - ள்.) ௧௧. தோழீ—, வாழி—,

௧—௨. பாம்பு உடை விடர - பாம்புகளையுடைய மலை விடர்களினின்று வரும் பனிநீர்-குளிர்ந்த நீர், இட்டுத் துறை - ஒடுங்கிய துறைகளின் வழியாக, தேம் கலந்து ஒழுக - தேனுடன் கூடி ஒழுகலின், யாறு நிறைந்தனவே - யாறுகள் நிறைவுற்றன ;

௩—௬. வெண் கோட்டு யானை பொருத புண்கூர்ந்து-வெள்ளிய கொம்பினையுடைய யானை பாய்ந்து குத்திய புண் மிகுந்து, பை கண் வல்லியம் கல் அளை செறிய-பசிய கண்ணினையுடைய ஆண்புலி கற்குகையினுள்ளே ஒடுங்கியிருக்க, முருக்கு அரும்பு அன்ன வள் உகிர் வய பிணவு கடி கொள-செம்முருக்கின் அரும்பினை யொத்த கூரிய நகத்தினையுடைய வலிய பெண்புலி அதனைக் காவல் செய்திருத்தலின், ஆறு வழங்கார் - (யாவரும்) அந்நெறியில் இயங்கார் ;

௬—௧௦. ஆயிடை எல்லிற்று என்னான்-அந் நிலையில் இருள் வந்து விட்டது என்று எண்ணாதவனாகி, வென் வேல் ஏந்தி-வெற்றியைத் தரும் வேலினைக் கையிற்கொண்டு, நசை தர வந்த நன்னராளன்-நம்பா

(பாடம்) 1. வல்லுகிர்.

லுள்ள காதல்கொண்டு வருதலால் வந்த நன்மையாளனாகிய நம் தலைவன், நெஞ்சு பழுதாக வறுவியன் பெயரின் - தன் எண்ணம் பய னிலதாக நம்மைக் கூடாது மீளின், இன்று இப்பொழுதும் யான் வாழ லன் - இன்று இவ்விரவும் யான் உயிர் தரித்திரேன்,

௧௧—௫. நம் இடை முலை சுணங்கு அணிமுற்றத்து ஆரம்போல வும் - நமது மூலையிடமாய சுணங்கு அணிந்த பரப்பில் கிடக்கும் முத்து மாலை போலவும், சிலம்பு நீடு சோலை சிதர் தூங்கு நளிர்ப்பின் இலங்கு வெள் அருவிபோலவும் - மலையினிடத்து நீண்ட சோலையில் துளிகள் சிதறும் குளிர்ச்சியினையுடைய விளங்கும் வெள்ளிய அருவி போலவும், திங்கள் அம் கதிர் நிலம் கொண்டன - திங்களின் அழகிய கதிர்கள் மலை யிடத்தே பரவின ;

௧௧. எவன் கொல் - நாம் செய்வது என்னையோ.

(முடிபு) தோழி, வாழி! யாறு நிறைந்தன. வயப் பிணவு கடி கொள ஆறு வழங்கார், ஆயிடை வெள் வேல் ஏந்தி நசைதர வந்த நன்னராளன் வறுவியன் பெயரின், இப்பொழுதும் யான் வாழலன், திங்கள் அம் கதிர் நிலம் கொண்டன. எவன்கொல்?

(வி - ரை.) பாம்புடை விடர பனிநீர் என்றது நீரினது தீமையை யும், இட்டுத்துறை என்றது, துறையினது தீமையையும் யாறு நிறைந் தன என்றது யாற்றினது தீமையையும் உணர்த்தியவாறும். கடிகொள என்றதனை, கடி கொளாநின்றன என விரித்து, யாறு நிறைந்தன, வயப் பிணவு கடி கொளா நின்றன; ஆகலின் ஆறு வழங்கார் என உரைக்க. திங்களங் கதிர் நிலங்கொண்டன என்றமையான், நிலவு வெளிப்பாடு இரவுக் குறிக் கூட்டத்திற்கு இடையீடாதல் பெற்றாம். வறுவியன் பெயரின் என்பதற்கு ஏதுக் கூறுவாள் திங்களங் கதிர்நிலங் கொண்டன என்றாள். எல்லா வகையானும் நன்மை யுடையனாகிய தலைவன், நம்மேலுள்ள அன்பின் மிகுதியால் வழியருமை நோக்காது இரவுக்குறிக்கண் வந்தானாகலின், அவன் கூட்டம் பெறாது பெயரின் யான் உயிர் வாழ்வதற்கு ஒருப்படேன். ஆயின், நிலவு வெளிப்பாட்டி னால் கூட்டமும் இயைவதன்று. இதற்கு நான் என்னசெய்வேன் என்பாள் போன்று, தலைவன் விரைவில் வரைந்து கொள்ளவேண்டு மெனத் தோழி சிறைப்புறமாக உணர்த்தினாளென்க. வாழலன், அன் விகுதி தன்மைக்கண் வந்தது.

363. பாலை

[பிரிவிடை வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.]

நிரைசெலல் இவுளி விரைவுடன் கடைஇ
அகலிரு விசும்பிற் பகல்செலச் சென்று
மழுகுசுடர் மண்டிலம் மாமலை மறைய
பொழுதுகழி மலரிற் புனையிழை சாஅய்
அணையணைந் தினையை யாகல் கணையரைப்
புல்லிலை நெல்லிப் புகரில் பசுங்காய்
கல்லதர் மருங்கிற் கடுவளி யுதிர்ப்பப்
பொலஞ்செய் காசிற் பொற்பத் தாஅம்
அத்தம் நண்ணி அதர்பார்த் திருந்த
கொலைவெங் கொள்கைக் கொடுந்தொழில் மறவர்
ஆறுசெல் மாக்கள் அருநிறத் தெறிந்த
எஃகுறு விழுப்புண் கூர்ந்தோர் [1]எய்திய
வளைவாய்ப் பருந்தின் வள்ளுகிர்ச் சேவல்
கிளைதரு [2]தெள்விளி கெழுமுடைப் பயிரும்
இன்னா வெஞ்சுரம் இறந்தோர் முன்னிய
செய்வினை வலத்த ராகி இவணயந்து
எய்தவந் தனரே தோழி மையெழில்
துணையோர் எதிர்மலர் உண்கண்
பிணையோர் நோக்கம் பெருங்கவின் கொளவே.

—மதுரைப் பொன்செய் கொல்லன் வெண்ணாகனார்.

(சொ - ள்.) கஎ. தோழி—,

௫—கடு. கணை அரை புல் இலை நெல்லி புகர் இல் பசு காய் - திரண்ட அரையினையும் சிறிய இலையினையும் உடைய நெல்லியின் வடு வற்ற பசிய காய்கள், கல் அதர் மருங்கின் கடு வளி உதிர்ப்ப - கற்களை யுடைய நெறிகளிடத்தே கடிய காற்று உதிர்த்தலின், பொலன் செய் காசில் பொற்பத் தாஅம் - பொன்னாற் செய்த காசுபோல் அழகுபெறப் பரவிக்கிடக்கும், அத்தம் நண்ணி அதர்பார்த்திருந்த - காட்டினை அடைந்து அங்கு வழிவருவாரைப் பார்த்துக்கொண்டிருந்த, கொலை வெம் கொள்கை கொடுதொழில் மறவர் - கொலையை விரும்பும் கோட்பாட்டினையும் கொடிய தொழிலையுமுடைய மறவர், ஆறு செல் மாக்கள் அருநிறத்து எறிந்த-வழிச்செல்லும் மக்களது அரிய மார்பிலே எறிந்த, எஃகு உறு விழு புண் கூர்ந்தோர் எய்திய-வேலாலுற்ற சிறந்த புண்ணை

(பாடம்) 1. எய்தி. 2. வெள்விளி கெடுமுடை.

மிகக் கொண்டுபட்டோரை அடைந்த, வளை வாய் வள் உகிர் பருந்தின் சேவல் - வளைந்த வாயினையும் கூரிய நகத்தினையும் உடைய பருந்தின் சேவல், கெழு முடை - ஆண்டுப் பொருந்திய ஊன் உண்ணற்கு, கிளை தரு தெள் விளி பயிரும் - தன் கிளையினைத் தருகிற்கும் தெளிந்த குரலால் அழைக்கும், இன்னா வெம் சுரம் இறந்தோர் - இன்னாமையைத் தரும் கொடிய சுரத்தைக் கடந்து சென்ற நம் தலைவர்,

கழ—க. முன்னிய செய்வினை வலத்தர் ஆகி-தாம் கருதிச்சென்ற பொருளீட்டும் தொழிலில் வெற்றியுடையர் ஆகி, மை எழில் துணை ஏர் எதிர் மலர் உண்கண் பிணை ஏர் நோக்கம்-கரிய அழகிய இணையொத்த எதிர் எதிர் பொருந்திய மலர்களைப்போன்ற மையுண்ட கண்களின் பெண்மானை யொத்த நின் பார்வை, பெரு கவின் கொள-மிக்க அழகினை யுற, இவண் நயந்து எய்த வந்தனர் - நம்மை விரும்பி இங்கே வந்து சேர்ந்தனர்; ஆதலின்,

க—கூ. நிறை செலல் இவுளி விரைவுடன் கடைஇ-வரிசையாகச் செல்லும் குதிரைகளை விரைவாகச் செலுத்தி, அகல் இரு விசும்பில் பகல் செல சென்று - அகன்ற பெரிய வானில் பகற்பொழுது கழியச் சென்று; மழுகு சுடர் மண்டிலம் மா மலை மறைய-மழுங்கிய ஒளியினை யுடைய ஞாயிறு பெரிய மலையில் மறைந்திட;

ச—டு. புனை இழை - அழகிய அணியுடையாளே, பொழுது கழி மலரில் சாஅய் - பகற்பொழுது கழியவே குவியும் மலர் போல வாடி, அணை அணைந்து - பள்ளியை அடைந்து, இனையை ஆகல்-இத் தன்மை யுடையை ஆகாதேகொள்.

(முடிபு) தோழி! இன்னா வெஞ்சுரம் இறந்தோர் முன்னிய செய்வினை வலத்தராகி, நின் பிணையேர் நோக்கம் கவின் கொள இவண் எய்த வந்தனர். மண்டிலம் மாமலை மறைய, மலரிற்சாஅய் அணைஅணைந்து இனையை ஆகல்.

(வி - ரை.) பருதியின் தேரிற் பூட்டிய குதிரைகள் ஏழு என்ப ஆகலின், நிரை செலல் இவுளி என்றார், மண்டிலம் கடைஇ விசும்பிற் சென்று மலை மறைய என்க. இனையை ஆகல் - இங்ஙனம் வருந்தாதே என்றபடி. விழுப்புண் கூர்ந்தோர் - விழுப்புண் பட்டு இறந்தோரை என்க. எய்த வந்தனர் - அணுக வந்தனர் என்றுமாம்.

———

364. முல்லை

[பருவங் கண்டழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.]

மாதிரம் புதையப் பாஅய்க் கால்வீழ்த்து
ஏறுடைப் பெருமழை பொழிந்தென அவலூறு
ஆடுகளப் பறையின் வரிநுணல் கறங்க
ஆய்பொன் அவிரிழை தூக்கி யன்ன
நீடிணர்க் கொன்றை [1]கவின்பெறக் காடுடன்
சுடர்புரை தோன்றிப் புதலலைக் கொளாஅ
முல்லை இல்லமொடு மலரக் கல்ல
பகுவாய்ப் பைஞ்சுனை மாவுண மலிரக்
கார்தொடங் கின்றே காலை காதலர்
வெஞ்சின வேந்தன் வியன்பெரும் பாசறை
வென்றி வேட்கையொடு நம்மும் உள்ளார்
[2]யாதுசெய் வாங்கொல் தோழி நோதகக்
கொலைகுறித் தன்ன மாலை
துனைதரு போழ்தின் நீந்தலோ அரிதே.

—மதுரை மருதங்கிழார் மகனார் பெருங்கண்ணனார்.

(சொ - ள்.) கஉ. தோழி!,

க—கூ. மாதிரம் புதைய பாஅய் கால்வீழ்த்து - திசை யெல்லாம் மறையப் பரவிக் கால் இறங்கி, ஏறு உடை பெரு மழை பொழிந்தென- இடியேற்றினையுடைய பெரிய மழை சொரிந்ததாக, அவல் தோறு ஆடு கள பறையின் வரி நுணல் கறங்க - பள்ளங்கடோறும் ஆடும் களத்தே ஒலிக்கும் பறை போல வரிகளையுடைய தேரை ஒலிக்க, ஆய் பொன் அவிர் இழை தூக்கி அன்ன - சிறந்த பொன்னாலாய விளங்கும் அணிகளைத் தொங்கவிட்டாற்போன்ற, நீடு இணர் கொன்றை கவின் பெற - நீண்ட பூங்கொத்துக்களையுடைய கொன்றை அழகு பெற, காடு உடன்-காடு முழுவதும், சுடர் புரை தோன்றி புதல் தலை கொளாஅ- தோன்றிச் செடி விளக்குப்போன்ற பூக்களைத் தன்னிடத்தே கொள்ள, முல்லை இல்லமொடு மலர-முல்லைப் பூக்களும் தேற்றாவின் பூக்களும் மலரவும், கல்ல பகுவாய் பை சுனை மா உண மலிர-மலையிடத்தனவாகிய அகன்ற வாயினையுடைய அழகிய சுனைகள் விலங்குகள் நீர் உண்ணுமாறு நீர் நிறைய, காலை கார் தொடங்கின்று - (இங்ஙனம்), இக்காலம் கார்ப்பருவத்தைத் தொடங்கியது.

கூ—கச. காதலர் வெம் சின வேந்தன் வியன்பெரும் பாசறை- நம் காதலரோ கொடிய சினத்தினையுடைய அரசனது மிகப் பெரிய

(பாடம்) 1. கவின் பெறக் காட்ட. 2. யாது செய்வர் கொல்.

பாசறைக்கண்ணே, வென்றி வேட்கையொடு நம்மும் உள்ளார் - பகைவரை வென்றி கொள்ளும் விருப்பத்தால் நம்மை நினைத்தலும் செய்திலர், நோதக கொலைகுறித் தன்ன மாலை-நாம் வருந்த நம்மைக்கொல்லுதல் கருதி வருவதுபோன்ற மாலை, துனைதரு போழ்தின் நீந்தலோ அரிது - விரைந்து நம்பால் வருங்கால் அதனைக் கடந்து செல்லல் அரிதாகு மன்றோ, யாது செய்வாம் - யாம் என் செய்வாம்.

(முடிபு) தோழி! காலை கார் தொடங்கின்று, காதலர் வேந்தன் பாசறை வென்றி வேட்கையொடு நம்மும் உள்ளார், மாலை துனைதரு போழ்தின், நீந்தலோ அரிது யாது செய்வாம்.

(வி - ரை.) தேரை யொலிக்கு வாச்சிய ஒலி ஒப்பாதல், [1]'நெடுநீரவல பகுவாய்த் தேரை, சிறுபல் லியத்தின் நெடுநெறிக் கறங்க,' [2]'தேரை யொலியின் மானச் சீர் அமைத்துச், சில்லரி கறங்கும் சிறுபல் லியத்தொடு' என முன்னரும் கூறப்பெற்றுள்ளன. காடுடன் என்பதனை இடைநிலை விளக்காகக் கொண்டு, கவின் பெற, தலைக்கொள்ள, மலர என்பவற்றோடுங் கூட்டுக. சுடர் புரை பூ என விரித்துத் தலைக்கொளாஅ என்பதனைத் தலைக்கொள்ள எனத் திரிக்க. காலை என்பது காலம் என்னும் பொருட்டாதலை, [3]'கழகத்துக் காலை புகின்' என்பதனாலும், காதலரைப் பிரிந்தார்க்கு மாலை கொல்வதுபோல் வரும் என்பதனை, [4]'காதலர் இல்வழி மாலை கொலைக்களத்து, ஏதிலர் போல வரும்' என்பதனாலும் அறிக.

---

365. பாலை

[தலைமகன் இடைச்சுரத்து நின்று சொல்லியது.]

அகல்வாய் வானம் ஆலிருள் பரப்பப்
பகலாற்றுப் படுத்த பையென் தோற்றமொடு
சினவல் போகிய புன்கண் மாலை
அத்தம் நடுகல் ஆளென உதைத்த
கான யானைக் கதுவாய் வள்ளுகிர்
இரும்பனை இதக்கையின் ஒடியும் ஆங்கண்
கடுங்கண் ஆடவர் [5]ஏமுயல் கிடக்கை
வருநர் இன்மையிற் களையுநர்க் காணு
என்றூழ் வெஞ்சுரம் தந்த நீயே
துயர்செய் தாற்று யாகிப் பெயர்பாங்கு
உள்ளினை [6]வாழிய நெஞ்சே வேன்வேல்
மாவண் கழுவுள் [7]காமூர் ஆங்கண்

---

1. அகம் கடுச. 2. அகம் கூoக. 3 குறள் கூ௬எ. 4. குறள் கஉஉச. (பாடம்) 5. ஏவியல் கிடக்கை. 6. வாழிபெ னெஞ்சே. 7. காமூர்

* பூதந் தந்த பொரியரை வேங்கைத்
தண்கமழ் புதுமலர் நாறும்
அஞ்சில் ஓதி ஆய்மடத் தகையே.

—மதுரை மருதனிளநாகனார்.

(சொ - ள்.) கக. நெஞ்சே—, வாழிய—,

க—௩. அகல் வாய் வானம் ஆல் இருள் பரப்ப - அகற்சி வாய்ந்த வானத்தின்கண் மிக்க இருள் பரக்க, பகல் ஆற்றுப்படுத்த - ஞாயிற்றைப் போக்கிய, பை என் தோற்றமொடு - பசிய தோற்றத்துடன், சினவல் போகிய - சினத்தல் மிக்க, புன்கண் மாலை - துன்பத்தைச் செய்யும் மாலைக் காலத்தே,

௪—௯. அத்தம் நடு கல் ஆள் என உதைத்த - காட்டு நெறியிலுள்ள நடுகல்லை ஆள் என நினைத்து உதைத்த, கான யானை - காட்டு யானையின், கதுவாய் வள் உகிர் - சிதைவுற்ற வளவிய நகம், இருபனை இதக்கையின் ஒடியும் ஆங்கண் - பெரிய பனை நுங்கின் தோடுபோல ஒடிந்திடும் அவ்விடத்தே, கடுங்கண் ஆடவர் ஏ முயல் கிடக்கை - வன்கண்மையுடைய ஆறலைப்போர் அம்பு எய்யும் முயற்சியொடு பதுங்கியிருத்தற்கண், வருநர் இன்மையின் களையுநர் காணா - வழிவருவார் இல்லாமையால் தம் வறுமை களைவோரைக் காணலாகாத இடமாய, என்றூழ் வெம் சுரம் தந்த நீ - வெப்பம் மிக்க கொடிய சுர நெறியில் என்னை அழைத்து வந்த நீ,

க0—௫. துயர் செய்து ஆற்றாய் ஆகி - எனக்குத் துயரினைச் செய்து நீயும் ஆற்றாயாகி, பெயர்பு - மீண்டு, வென்வேல் மா வண் கழுவுள் - வென்றி வேலினையும் சிறந்த வண்மையினையுமுடைய கழுவுள் என்பானது, காமூர் ஆங்கண் - காமூராகிய அவ்விடத்து, பூதம் தந்த பொரி அரை வேங்கை - பூதத்தால் தரப்பட்ட பொரிந்த அடிமரத்தினையுடைய வேங்கையின், தண் கமழ் புது மலர் நாறும் - தண்ணிதாகி மணக்கும் புது மலர் போல நாறும், அம் சில் ஓதி - அழகிய சிலவாகிய கூந்தலையுடைய நம் தலைவியின், ஆய் மடத் தகை - அழகிய மடப்பமாகிய குணத்தினை, உள்ளினை - நினைப்பாய் ஆயினை.

(முடிபு) நெஞ்சே! புன்கண்மாலை வெஞ்சுரம் தந்த நீ, துயர்செய்து ஆற்றாயாகி, பெயர்பு அஞ்சில் ஓதியின் ஆய்மடத்தகையினை உள்ளினை.

(வி - ரை.) ஆல் இருள் - நிறைந்த இருள், ஆலுதல் - நிறைதல், மால் எனப் பிரித்தலுமாம். பை என் தோற்றம் - பசந்த தோற்றம், போகிய - மிக்க. மாலையில் வெஞ் சுரம் தந்த என்க. இனி, மாலையில் நடுகல் ஆள் என உதைத்த எனவும், மாலையில் துயர் செய்து ஆற்றாயாகி என்றும் முடித்தலுமாம். கதுவாய் - சிதைவு, உதைத்தலால் சிதைவுற்ற உகிர் என்க. இதக்கை - பனை நுங்கின் தோடு. வருநர் இன்மையின் என்றது, காட்டின் கொடுமையால் வருவார் இல்லாமை

யால் என்க. சுரத்தின் கொடுமை கருதாது என்னை அழைத்து வந்த நீயே, இடைச்சுரத்தில், மீண்டு நின்று, தலைவியின் நலத்தினை உள்ளி மீளுகின்றனை; நின் அறிவு இருந்தவாறு என்னையோ எனத் தலைவன் நெஞ்சினை நோக்கிக் கழறினான் என்க.

---

366. மருதம்

[பரத்தையிற் பிரிந்துவந்த தலைமகன் வாயில் வேண்டியவிடத்துத் தோழி சொல்லியது.]

தாழ்சினை மருதம் தகைபெறக் கவினிய
நீர்சூழ் வியன்களம் பொலியப் போர்பழித்துக்
கள்ளார் களமர் பகடு[1] தளை மாற்றிக்
கடுங்காற் றெறியப் போகிய துரும்புடன்
காயற் சிறுதடி கண்கெடப் பாய்தலின்
[2]இருநீர்ப் பரப்பிற் பனித்துறைப் பரதவர்
தீம்பொழி வெள்ளுப்புச் சிதைதலிற் சினைஇக்
கழனி உழவரொடு மாறெதிர்ந்து மயங்கி
இருஞ்சேற் றள்ளல் எறிசெருக் கண்டு
நரைமூ தாளர் கைபிணி விடுத்து
நனைமுதிர் தேறல் நனையர்க் கீயும்
பொலம்பூண் எவ்வி நீழல் அன்ன
நலம்பெறு பணைத்தோள் நன்னுதல் அரிவையொடு
மணங்கமழ் தண்பொழில் அல்கி நெருநை
நீதற் பிழைத்தமை அறிந்து
கலுழ்ந்த கண்ணளெம் அணங்கன் னாளே.

—குடவாயிற் கீரத்தனார்.

(சொ - ள்.) தலைவ!, க—௫. தாழ் சினை மருதம் தகைபெறக் கவினிய-தாழ்ந்த கிளைகளையுடைய மருதமரம் சிறக்க அழகு பெற்றிருக்கும், நீர் சூழ் வியன் களம் பொலிய போர்பு அழித்து - நீர் சூழ்ந்த அகன்ற களம் பொலிவுறப் போரினைப் பிரித்துக் கடாவிட்டு, கள் ஆர் களமர் - பின் கள்ளுண்டு வந்த உழவர், பகடு தளை மாற்றி-அக் கடாக் களைக் கட்டவிழ்த்து விடுத்து, கடு காற்று எறிய-கடிய காற்றில் நெல் லினைத் தூற்ற, போகிய துரும்பு உடன்-பறந்துபோன துரும்புகள் முழுவதும், காயல் சிறு தடி கண் கெட பாய்தலின்-உப்பளத்திலுள்ள சிறிய பாத்திகளில் இடமில்லாது எங்கும் வீழ்ந்து பரத்தலின்.

(பாடம்) 1. தலை மாற்றி. 2. நீணீர்ப் பரப்பிற்,

௬—௯. இரு நீர் பரப்பின் பனி துறை பரதவர் - பெரிய கடற் பரப்பில் குளிர்ந்த துறைக்கண் உள்ள நுளையர்கள், தீம்பொழி வெள்உப்பு சிதைதலின் - இனிமை மிக்க வெள்ளுப்பு கெட்டமையின், சினைஇ - சினந்து, கழனி உழவரொடு மாறு எதிர்ந்து - வயல் உழவரொடு மாறுபட்டு எதிர்த்து, மயங்கிரு சேற்று அள்ளல் எறிசெரு கண்டு - கை கலந்து மிக்க சேற்றுக் குழம்பினை எறிந்து செய்யும் போரினைக் கண்டு,

௧௦—௧. நரை மூதாளர் கை பிணி விடுத்து - நரைத்த முதியோராகிய மருதநில மக்கள் போர் செய்யும் கைப் பிணிப்பினை விடுத்து விலக்கி, நனை முதிர் தேறல் - முற்றிய தேனாகிய கள்ளின் தெளிவை, நுளையர்க்கு ஈயும் - பரதவருக்கு அளிக்கும் இடமாகிய,

௧௨—௬. பொலம் பூண் எவ்வி நீழல் அன்ன - பொற்பூண் அணிந்த எவ்வி என்பானது நீழல் என்னும் ஊர்போன்ற, நலம்பெறு பணைத்தோள் நல்நுதல் அரிவையொடு - அழகு பெற்ற மூங்கில்போலும் தோளும் நல்ல நெற்றியும் உடைய பரத்தையொடு, மணம் கமழ் தண்பொழில் அல்கி - மணம் நாறும் குளிர்ந்த சோலையிலே தங்கி, நெருநை - நேற்று, நீ தன் பிழைத்தமை அறிந்து - நீ தனக்குத் தீங்கு செய்தமையை யுணர்ந்து, எம் அணங்கு அன்னோள் - எம் தெய்வம் போன்றவளாய தலைவி, கலுழ்ந்த கண்ணள் - அழுத கண்ணினை யுடையள் ஆயினாள்.

(முடிபு) தலைவ! நீ எவ்வி நீழல் அன்ன அரிவையொடு நெருநை தண் பொழில் அல்கி, தற்பிழைத்தமை அறிந்து, எம் அணங்கு அன்னோள் கலுழ்ந்த கண்ணள் ஆயினள்; என் செய்தனை.

பரதவர், உழவரொடு மாறெதிர்ந்து மயங்கி, அள்ளல் எறி செருக்கண்டு, நரை முதாளர், கை பிணி விடுத்து, தேறல் நுளையர்க்கு ஈயும் நீழல் என்க.

(வி-ரை.) போர்பு - நெற்கதிரின் போர். அள்ளல் எறி செரு அள்ளலினின்று தாக்கும் செரு என்றுமாம். நுளையர் பக்கல் தீங்கு இன்மையின், நரை மூதாளர், அவர்க்குத் தேறல் நல்கி அமைதி செய்வாராயினர் என்க. ஈயும் என்னும் பெயரெச்சம் நீழல் என்னும் இடப் பெயர் கொண்டது. பனித்துறைப் பரதவரும் கழனி உழவரும், இங்ஙனம் செருச்செய்தற் கிடமாகிய நீழல் என்றமையால், அவ்வூர் நெய்தலும் மருதமும் மயங்கியதாதல் பெற்றாம். [1]'யாழிசை மறுகின் நீரூர் கிழவோன், வாய் வாள் எவ்வி', என முற் போந்தமையின், நீழல் என்பது நீடல் என்பதன் திரிபாதலுங் கூடும். கண்ணள் - கண்ணள் ஆயினள் என ஆக்கச்சொல் விரித்து உரைக்க.

---

1. அகம்: ௨௧௧.

367. பாலை

[பிரிவிடை வேறுபட்ட தலைமகள் வற்புறுக்கும் தோழிக்குச் சொல்லியது.]

இலங்குசுடர் மண்டிலம் புலந்தலை பெயர்ந்து
பல்கதிர் மழுகிய கல்சேர் அமையத்து
அலந்தலை முதேறு ஆண்குரல் விளிப்ப
மனைவளர் நொச்சி மாசேர்பு வதிய
[1]முனையுழை யிருந்த அங்குடிச் சீறூர்க்
கருங்கால் வேங்கைச் செஞ்சுவல் வரகின்
மிகுபதம் நிறைந்த தொகுகூட் டொருசிறைக்
குவியடி வெருகின் பைங்கண் ஏற்றை
ஊனசைப் [2]பிணவின் உயங்குபசி களைஇயர்
தளிர்புரை கொடிற்றிற் செறிமயிர் எருத்திற்
கதிர்த்த சென்னிக் கவிர்ப்பூ அன்ன
நெற்றிச் சேவல் அற்றம் பார்க்கும்
புல்லென் மாலையும் இனிதுமன் றம்ம
நல்லக வனமுலை அடையப் புல்லுதொறு
உயிர்குழைப் பன்ன சாயற்
செயிர்தீர் இன்றுணைப் புணர்ந்திசி னோர்க்கே.

—பரணர்.

(சொ - ள்.) தோழி, கச—கசு. நல் அகம் வன முலை அடைய புல்லுதொறு-நல்ல மார்பகத்தேயுள்ள அழகிய முலையினைப் பொருந்தப் புல்லுந்தொறும், உயிர் குழைப்பு அன்ன - உயிர் குழைவதுபோலும், சாயல்-மென்மை வாய்ந்த, செயிர்தீர் இன் துணை - குற்றமற்ற இனிய துணைவரை, புணர்ந்திசினோர்க்கு - கூடியிருப்பவர்கட்கு,

க—கங. இலங்கு சுடர் மண்டிலம் - விளங்கும் ஒளி வாய்ந்த ஞாயிறு, புலம் தலை பெயர்ந்து - வானிடத்தினின்றும் நீங்கி, பல்கதிர் மழுகிய கல்சேர் அமையத்து - தனது பலவாகிய கதிர்களும் வெம்மை குறையப் பெற்ற மேற்கு மலையினை அடையும் போழ்தில், அலந்தலை முது ஏறு - கலக்கமுற்ற முதிய ஏறு, ஆண்குரல் விளிப்ப - தன் ஆண் குரல் தோன்ற அழைத்திட, மனை வளர் நொச்சி மாசேர்பு வதிய - மனையைச் சூழ்ந்து வளரும் நொச்சியின்கண் மான்கள் சேர்ந்து தங்கியிருக்க, முனை உழை இருந்த அம்குடி சிறு ஊர் - காட்டரண்களின் பக்கத்தேயிருந்த அழகிய குடியிருப்புக்களையுடைய சிற்றூரின் கண்ணே, கரு கால் வேங்கை செஞ்சுவல் வரகின் - கரிய அடியினை

(பாடம்) 1. முழையுழை. 2. பிணவி னுணங்குபசி.

புடைய வேங்கைமரம் சூழ்ந்த சிவந்த மேட்டு நிலத்தே விளைந்த வரகாகிய, மிகு பதம் நிறைந்த நொசி கூட்டு ஒரு சிறை-மிக்க தானியம் நிறைந்த தொகுதியாகவுள்ள கூட்டின் ஒரு பக்கத்தே, குவி அடி பைங்கண் வெருகின் ஏற்றை-குவிந்த அடியினையும் பசிய கண்ணினையுமுடைய காட்டுப்பூனையின் ஆண், ஊன், நசை பிணவின் உயங்கு பசி களைஇயர்-ஊனை விரும்பியுள்ள பெண்பூனையின் வருத்தும் பசியினை நீக்குமாறு, தளிர்புரை கொடிற்றின்-தளிரை யொத்த கன்னத்தினையும், செறி மயிர் எருத்தின்-நெருங்கிய மயிரினையுடைய கழுத்தினையும், கதிர்த்த சென்னி-நிமிர்த்த தலையின்கண், கவிர் பூ அன்ன நெற்றி-முருக்கம் பூவினையொத்த சூட்டினையுமுடைய, சேவல் அற்றம் பார்க்கும்-கோழிச்சேவலைப் பற்றும் அமையத்தினைப் பார்த்திருக்கும், புல் என் மாலையும்-பொலிவற்ற இம் மாலைப் போதும், மன்ற இனிது-உறுதியாக இனிதாகும்.

(முடிபு) **தோழி! நின் துணைப் புணர்ந்திசினோர்க்குப் புல்லென் மாலையும் மன்ற இனிது.**

(வி-ரை.) மண்டிலம் பெயர்ந்து கல்சேர் அமையம் எனவும், பல்கதிர் மழுகிய அமையம் எனவும் தனித்தனி கூட்டுக. அலந்தலை-கலக்கம்: முதுமையாலாயது; வேட்டுவராற் பெண்மானுக்குத் தீங்குண்டாகுமோ என்ற கலக்கமுமாம்; அலந்ததலை என்பதன் விகாரமுமாம். ஏறு விளித்தலால் மா சேர்பு வதிய என்க. விளிப்ப என்னும் எச்சம் காரணப்பொருட்டாயது. நொச்சி மா சேர்பு வதிய, வெருகின் ஏற்றை சேவல் அற்றம் பார்க்கும் புல்லென் மாலை என்க. வெருகு மாலைப் பொழுதில் கோழியைப் பற்றி புண்ணும் இயல்பினது என்பது, [1]'கோழிக் குறுங்காற் பேடை, வேலி வெருகினம் மாலை யுற்றென, புகுமிட னறியாது தொகுபுடன் குழீஇப், பைதற் பிள்ளைக் கிளைபயிர்ந்தாஅங்கு' என்றதனானும் அறியப்படும். மாலையும், என்ற உம்மை இழிவு சிறப்பு. மன்ற என்பதன் ஈறு தொக்கது. புணர்ந்திசினோர்க்கு மாலையும் இனிது என்றதனால், தலைவனைப் பிரிந்துள்ள யான், இத்தகைய மாலைப்பொழுதில் எங்ஙனம் ஆற்றியிருப்பேன் என, வற்புறுக்கும் தோழிக்குத் தலைமகள் எதிரழிந்து கூறினள் என்க.

---

1. குறுந்: ௧௨௧.

368. குறிஞ்சி

[பகலே சிறைப்புறமாகத் தலைமகட்குச் சொல்லுவாளாய்த் தோழி சொல்லியது.]

தொடுதோற் கானவன் சூடுறு வியன்புனம்
கரிபுறங் கழீஇய பெரும்பாட் டீரத்துத்
தோடுவளர் பைந்தினை நீடுகுரல் காக்கும்
ஒண்டொடி மகளிர்க்கு ஊசல் ஆக
ஆடுசினை யொழித்த [1]கோடிணர் கஞலிய
குறும்பொறை அயலது நெடுந்தாள் வேங்கை
மடமயிற் குடுமியிற் றோன்றும் நாடன்
உயர்வரை மருங்கிற் காந்தளஞ் சோலைக்
குரங்கறி வாரா மரம்பயில் இறும்பிற்
கடிசுனைத் தெளிந்த மணிமருள் தீநீர்
பிடிபுணர் களிற்றின் எம்மோ டாடிப்
[2]பன்னாள் உம்பர்ப் பெயர்ந்து [3]சின்னாள்
கழியா மையே வழிவழிப் பெருகி
அம்பணை விளைந்த தேக்கட் டேறல்
வண்டுபடு கண்ணியர் மகிழும் சீறூர்
எவன்கொல் வாழி தோழி கொங்கர்
மணியரை யாத்து மறுகின் ஆடும்
உள்ளி விழவின் அன்ன
அலரா கின்றது பலர்வாய்ப் பட்டே.

—மதுரை மருதனிளநாகனார்.

(சொ - ள்.) ௧௬. தோழி—, வாழி—,

௧—௭. தொடு தோல் கானவன் சூடு உறு வியன் புனம்-காலிலே செருப்பினை அணிந்த வேடன் சுட்டெரித்த அகன்ற கொல்லையில், கரி புறம் கழீஇய பெரும்பாட்டு ஈரத்து-கரிந்த இடங்களைக் கழுவிச் சென்ற மிக்க பெயலாய மழை ஈரத்தில், தோடு வளர் பைந் தினை நீடு குரல் காக்கும்-இதழ்கள் வளர்ந்த பசிய தினையின் நீண்ட கதிர்களைக் காத்திருக்கும், ஒள்தொடி மகளிர்க்கு ஊசல் ஆக ஆடு சினை ஒழித்த - ஒளி பொருந்திய வளையலை அணிந்த மகளிர் தமக்கு ஊசல் ஆகக் கொண்டு ஆடும் கிளைகளைப் போக்கிய, கோடு இணர் கஞலிய - கொம்பிலே பூங்கொத்துக்கள் நெருங்கிய, குறும் பொறை அயலது - குன்றின் பக்கத்திலுள்ளதாகிய, நெடு தாள் வேங்கை-நீண்ட அடியினை

(பாடம்) 1. கோடிணர் கஞலிக். 2. பலநாள். 3. சிலநாள்.

புடைய வேங்கை மரம், மடமயில் குடுமியில் தோன்றும் நாடன் - இளைய மயிலின் உச்சியிலுள்ள குடுமி போலத் தோன்றும் மலைகாட்டையுடைய நம் தலைவன்,

அ—கக. உயர் வரை மருங்கில் காந்தள் அம் சோலை-உயர்ந்த மலைப்பக்கத்தே யுள்ள காந்தளையுடைய அழகிய சோலையாகிய, குரங்கு அறி வாரா மரம் பயில் இறும்பில்-குரங்குகளும் ஏறி அறிதல் இல்லாத நீண்ட மரங்கள் செறிந்த காட்டில், கடி சுனை தெளிந்த மணி மருள் தீம் நீர்-விளக்கம் பொருந்திய சுனையில் உள்ள தெளிந்த பளிங்கினை யொத்த இனிய நீரில், பிடி புணர் களிற்றின் எம்மொடு பல்நாள் ஆடி-பிடியுடன் கூடிய களிறுபோல நம்முடன் பலநாளும் ஆடி, உம்பர் பெயர்ந்து - நம்மைப் பிரிந்து வேறிடம் சென்று, சின்னாள் கழியாமைய - சிலநாள் கழிதற்கு முன்பே, வழிவழி பெருகி - அந் நிகழ்ச்சி முறை முறையாகப் பெருகி,

கச—கூ. அம் பணை விளைந்த தேன் கள் தேறல்-அழகிய மூங்கிற் குழாயில் முற்றிய தேனாகிய கள்ளின் தெளிவை, வண்டு படு கண்ணியர் மகிழும் சீறூர்-வண்டு மொய்க்கும் கண்ணியையுடையாராய் உண்டு மகிழும் சிற்றூரின்கண்ணே,

கக—கூ. பலர் வாய் பட்டு-பலர் வாயிலும் பேசப்பட்டு, கொங்கர் மணி அரை யாத்து மறுகின் ஆடும்-கொங்க நாட்டினர் மணியினை இடையிற் கட்டிக்கொண்டு தெருவில் ஆடும், உள்ளி விழவின் அன்ன-உள்ளி விழவின் ஆரவாரம் போன்ற, அலர் ஆகின்றது - அலராகாகின்றது; எவன் கொல் - இஃதென்னையோ!

(முடிபு) தோழி, வாழி! வேங்கை மடமயிற் குடுமியிற் றோன்றும் நாடன், சுனைத் தீ நீர் பன்னாள் எம்மொடாடி, பெயர்ந்து சின்னாள் கழியாமை, அந்நிகழ்ச்சி, வழிவழிப் பெருகிப் பலர் வாய்ப்பட்டு, உள்ளிவிழவின் அன்ன அலராகின்றது எவன்கொல்.

(வி - ரை.) ஆடு சினை, பக்கங்களிற் படிந்த கிளையென்றும்; கோடு, மேலே நிவந்த கொம்பென்றுங் கொள்க. பைந்தினை காக்கும் மகளிர்க்கு ஊசலாக ஆடு சினை பொழித்த என்றது, இனித் தாம் தினைப்புனம் காக்குமாறு இல்லை என்றதனைக் குறிப்பினால் உணர்த்திய படியாம். இணர் கஞலிய வேங்கை எனவும் குறும்பொறை அயலதாகிய வேங்கை எனவும் தனித்தனி கூட்டுக. சோலையாகிய இறும்பு என்க. அன்றி, சோலைக்கண்ணதாகிய இறும்பு என்றலுமாம். குரங்கும் என்னும் உம்மை தொக்கது. அறிவாரா - அறியலாகாது. அந்நிகழ்ச்சி வழிவழிப் பெருகியென வருவித்துரைக்க. கொங்கர்-கொங்கு நாட்டினர். தலைவன் கேட்டு வரைந்து கொள்ள வேண்டுமென்னும் கருத்தால் அலராகின்றது எவன்கொல் எனத் தோழி தலைமகட்குச் சொல்லுவாள்போற் கூறினாள் என்க.

369. பாலை

[மகட் போக்கிய செவிலி சொல்லியது.]

கண்டிசின் [1]மகளே கெழீஇ இயைவெனை
ஒண்டொடி செறித்த முன்கை ஊழ்கோள்பு
மங்கையர் பலடா ராட்டச் செந்தார்க்
கிள்ளையுந் தீம்பால் உண்ணு மயிலியற்
சேயிழை மகளிர் ஆயமும் அயரா
தாழியும் மலர்பல அணியா சேழ்கொள
[2]காழ்புனைந் தியற்றிய வனப்பமை நோன்சுவர்ப்
பாவையும் பலியெனப் பெறாஅ நோய்பொர
இவைகண் டினைவதன் தலையும் நினைவிலேன்
கொடியோள் முன்னிய துணரேன் தொடியோய்
இன்றுநின் ஒலிகுரல் மண்ணல் என்றதற்கு
எற்புலந் தழிந்தன ளாகித் தற்றகக்
கடலந் தானைக் கைவண் சோழர்
கெடலரு நல்லிசை உறந்தை யன்ன
நிதியுடை நன்னகர்ப் புதுவது புனைந்து
தமர்மணன் அயரவும் ஒல்லாள் கவர்முதல்
ஓமை நீடிய உலவை நீளிடை
மணியணி பலகை மாக்காழ் நெடுவேல்
துணிவுடை உள்ளமொடு துணைந்த முன்பின்
அறியாத் தேஎத்து அருஞ்சுரம் மடுத்த
சிறியோற் கொத்தவென் பெருமடத் தகுவி
சிறப்புஞ் சீரும் இன்றிச் சீறூர்
நல்கூர் பெண்டின் புல்வேய் குரம்பை
[3]ஓரா யாத்த ஒருதூண் முன்றில்
ஏதில் வறுமனைச் சிலம்புடன் கழீஇ
மேயினள் கொல்லென நோவல் யானே.

—நக்கீரர்.

(சொ - ள்.) க. மகளே—, கெழீஇ இயைவெனை - அவளுடன் பொருந்தி இயைந்திருந்தேனுடைய நிலையினை, கண்டிசின் - காண் பாயாக;

(பாடம்) 1. மகளை கெழியவேனை. 2. காழ் புணர்ந்தியற்றிய. 3. ஓரா வார்த்த.

உ—அ. ஒள் தொடி செறித்த முன் கை ஊழ் கொள்பு - ஒளி பொருந்திய வளையலைச் செறித்த முன் கையில் முறையானே கொண்டு, மங்கையர் பல பாராட்ட-சூழ நின்ற மங்கையர் பலவாறாகப் பாராட்ட, செந்தார்க்கிள்ளையும்-சிவந்த இரேகையினையுடைய கிளிகளும், தீம்பால் உண்ணு-இனிய பாலை உண்கின்றில, மயில் இயல் சேய் இழை மகளிர் ஆயமும் - மயில் போலும் சாயலையுடைய சிவந்த அணிகளைப்பணிந்த தோழியர் கூட்டங்களும், அயரா-விளையாடுகின்றில, தாழியும் மலர் பல அணியா-பூஞ்செடியுடைய தாழிகளும் பல மலர்களைக் கொண்டில, கேழ்கொள காழ் புனைந்து இயற்றி வனப்பு அமை நோன்சுவர் பாவையும் பலி என பெரு அ - அழகிய நிறம் பொருந்த மூத்துவடம் முதலிய புனைந்து செய்த அழகு அமைந்த வலிய சுவரின்கண்ணுள்ள பாவைகளும் பலி என எதனையும் கொண்டில;

அ—கூ. இவை கண்டு நோய் பொர இனைவதன் தலையும்-இவைகளைக் கண்டு நோய் வருத்த வருந்துவதன் மேலும்,

கூ—கஉ. நினைவிலேன்-சூழ்ச்சியில்லேனாகிய யான், தொடிபோள் முன்னியது உணரேன் - தொடியளாகிய அவள் எண்ணியதை உணரேனாகி, தொடியோய் - தொடியணிந்த மகளே, இன்று நின் ஒலி குரல் மண்ணல் என்றதற்கு-இன்று நினது தழைத்த கூந்தலைப் புனைக என்றதற்கு, என் புலந்து அழிந்தனள் ஆகி-என்னை வெறுத்து மனம் உடைந்தவளாகி,

கஉ—கசு. தன் தக-அவள் தன் செல்வநிலைக்கேற்ற பரிசு, கடல் தானை கை வண் சோழர்-கடல்போன்ற சேனையினையும் கைவண்மையையும் உடைய சோழரது, கெடல் அரும் நல் இசை உறந்தை அன்ன-நீங்குதல் இல்லாத நல்ல புகழினையுடைய உறையூர்போன்ற, நிதி உடை நல்நகர் புதுவது புனைந்து-செல்வமுடைய நல்ல மனையில் புதுவதாக ஒப்பனை செய்து, தமர் மணன் அயரவும் ஒல்லாள் - தன் தமராவார் மணம் செய்விக்கவும் மனம் பொருந்தாதவளாகி,

கசு—உக. கவர் முதல் ஓமை நீடிய உலவை நீள் இடை - கவர்த்த அடியினையுடைய ஓமை மரங்கள் உயர்ந்துள்ள காடாகிய நீண்ட இடத்தில், மணி அணி பலகை-மணிகள் பதித்த பரிசையினையும், மா காழ் நெடுவேல்-சிறந்த காம்பினையுடைய நீண்ட வேலினையும், துணிவு உடை உள்ளமொடு-துணிவு தங்கிய நெஞ்சமுடன், துதைந்த மூன்பின் மிக்க மெய் வலியினையும் உடைய, அறியா தேஎத்து அருசுரம் மடுத்த-அறியப் படாத தேயத்தின்கண் அரியசுர நெறியில் கொண்டுபோய, சிறியோற்கு ஒத்த என் பெருமடத் தகுவி-இளையானுக்குப் பொருந்திய பெரிய மடப்பமும் தகுதியுமுடைய என் மகள்,

உஉ—சு. சிறப்பும் சீரும் இன்றி-நன்கு மதிப்பும் உயர்வும் இல்லாது, சீறூர் நல்கூர் பெண்டின்-சிறிய ஊரில் வறுமையுற்ற பெண்டினது, புல் வேய் குரம்பை-புல் வேய்ந்த குடிலாய, ஓர் ஆபாத்த-ஒரு

பசு கட்டியுள்ள, ஒரு தூண் முன்றில்-ஒற்றைத் தூண் கொண்ட முகப் பினையுடைய, ஏது இல் வறு மனை-இயைபில்லாத வறிய மனையில், சிலம்பு உடன் கழீஇ மேயினள் கொல் என-சிலம்பு கழித்து அவனுடன் மணம் பொருந்தினளோ என்று, யான் நோவல்-யான் வருந்துவேன்.

(முடிபு) மகளே! கெழீஇ இயைவெனைக் கண்டிசின்; கிள்ளையும் நீம்பாஅ உன்ன ஆயமும் அயரா; தாழியும் மலர் பல அணியா; பாவையும் பலியெனப் பெருஅ; இவைகண்டு இனைவதன் றலையும் நினைவிலேன் உணரேன்; ஒலிகுரல் மண்ணல் என்றதற்கு அழிந்தனளாகி, தமர் மணன் அயரவும் ஒல்லாள், அருஞ் சுரம் மடுத்த சிறியோற்கு ஒத்த என் பெருமடத் தகுவி, சீறூர் ஏதில் வறுமனைச் சிலம்புடன் கழீஇ மேயினள் கொல் லென யான் நோவல்.

(வி-ரை.) மகளே என்றது தோழியை. கெழீஇ இயைவெனை-தலைவியுடன் கெழுதகைமை பூண்டு பொருந்தியிருந்த எனது நிலையினை என்க. பாராட்ட-பாராட்டவும், கிள்ளை பால் உண்ணுமை முதலியன தலைவியின் பிரிவால் நிகழ்ந்த நிகழ்ச்சிகள். ஓரறிவு உயிராகிய தாழிப் பூஞ்செடி முதல் தெய்வம் ஈருகிய அனைத்துயிரும் தலைவியின் பிரிவால் வருந்தினமை உணர்த்தியவாறு காண்க. இவைகண்டு இனைவதன் றலையும், மேயினள் கொல்லென நோவல் எனக் கூட்டுக. தொடியோய் என்றது தலைமகளைச் செவிலி விளித்தது. மண்ணல்-மண்ணுக என வியங்கோள். தற்றகத் தமர் மணம் அயரவும் என்க. நகர்ப் புதவது புனைந்து-மனையைப் புதுவதாக ஒப்பனை செய்து என்றுமாம். பலகை யினையும் வேலினையும் உள்ளமொடு முன்பினையும் உடைய சிறியோன் எனவும், ஒல்லாள் சிறியோற்கு ஒத்த எனவும் கூட்டுக. சிறப்பு-நன்கு மதிப்பு; சீர்-உயர்வு. [1]'சீர்மை சிறப்பொடு நீங்கும்' என்புழிப் பரிமேலழகர் உரைத்தவாறு காண்க. சிலம்புடன் கழீஇ என்பதற்குக் [2]'கூட லன்னதன், அருங்கடி வியனகர்ச் சிலம்புங் கழியாள்' என்புழி உரைத்த விளக்கவுரை காண்க.

---

1. குறள்: கசகூ. 2. அகம்: கூசு.

370. நெய்தல்

[பகலே சிறைப்புறமாகத் தலைமகட்குச் சொல்லுவாளாய்த் தோழி சொல்லியது.]

வளைவாய்க் கோதையர் வண்டல் தைஇ
இளையோர் செல்ப எல்லும் எல்லின்று
அகலிலைப் புன்னைப் புகரில் நீழற்
பகலே எம்மோ டாடி இரவே
காயல் வேய்ந்த தேயா நல்லில்
நோயொடு வைகுதி யாயின் நுந்தை
அருங்கடிப் படுவலும் என்றி மற்றுநீ
செல்லல் என்றலும் ஆற்றாய் செலினே
வாழலென் என்றி யாயின் ஞாழல்
வண்டுபடத் ததைந்த கண்ணி நெய்தல்
தண்ணரும் பைந்தார் துயல்வர அந்திக்
கடல்கெழு செல்வி கரைநின் றாங்கு
நீயே கானல் ஒழிய யானே
வெறிகோள் பாவையிற் பொலிந்தவென் அணிதுறந்து
ஆடுமகள் போலப் பெயர்தல்
ஆற்றேன் தெய்ய அலர்கவிவ் வூரே.

—அம்மூவனார்.

(சொ - ள்.) தோழி!, க—உ. வளை வாய் கோதையர் இளையோர்-வளைவு கொண்ட மாலையையுடைய இளமகளிர், வண்டல் தைஇ செல்ப-வண்டல் விளையாட்டினைச் செய்து மீண்டு செல்லாநிற்பர், எல்லும் எல்லின்று - பகலும் ஒளி குறைந்தது;

ஙு—எ. பகலே - பகற்பொழுதில், அகல் இலை புன்னை புகர் இல் நீழல் - அகன்ற இலைகளையுடைய புன்னையின் புள்ளியில்லாத நிழலில், எம்மொடு ஆடி - எங்களுடன் விளையாடி, இரவே - இராப்பொழுதில் காயல் வேய்ந்த தேயா நல் இல்-காய்ந்த புல்லால் வேயப் பெற்ற வளங் குன்றாத நல்ல நமது இல்லின்கண், நோயொடு வைகுதி யாயின் - வருத்தத்துடன் பொருந்தி யிருப்பாயாயின், நுந்தை அருங்கடி படுவல் என்றி - உன் தந்தையின் அரிய காவற்படுவேன் என்கின்றனை,

எ—கூ. மற்று நீ செல்லல் என்றலும் ஆற்றாய் - அன்றி நீ இல்லிற்குச் செல்க என்று நான் கூறுதலையும் பொறாயாகி, செலினே வாழலென் என்றி - செல்லின் உயிர் வாழேன் என்கின்றனை, ஆயின் - அங்ஙனமாயின்,

க—கசு. ஞாழல் வண்டு பட ததைந்த கண்ணி - புலிநகக் கொன்றையது வண்டு மொய்க்க மலர்ந்த மலர்க் கண்ணியுடன், நெய்தல் தண் அரும் பைந்தார் துயல்வர - நெய்தலின் தண்ணிய அரிய பசிய மலர்மாலை அசைய, அந்தி - அந்திக்காலத்தே கடல் கெழு செல்வி கரை நின்றாங்கு - கடற்றெய்வம் கரையின்கண் நிற்பதுபோல், நீ கானல் ஒழிய - நீ இக் கடற்கரைச் சோலையில் தனித்து நிற்க, யான் - வெறி கொள் பாவையில் பொலிந்த என் அணி துறந்து - வெறியாட்டம் மேவிய மகள் போன்று பொலிவுற்ற எனது அழகினைத் துறந்து, ஆடு மகள் போலப் பெயர்தல் ஆற்றேன் - அவள் பின் வறிதே பெயர்தல் போல நீங்குதல் இயலாதவளாகின்றேன், இ ஊர் அலர்க - இவ்வூர் அலர் கூறினும் கூறுக.

(முடிபு) தோழி! புன்னை நீழல் பகல் எம்மோடாடி, இரவு நல் இல் நோயொடு வைகுதியாயின், நுந்தை அருங்கடிப் படுவல் என்றி, மற்று, செலின் வாழலென் என்றி, ஆயின் கடல்கெழு செல்வி கரை நின்றாங்கு நீ கானல் ஒழிய யான் என் அணி துறந்து ஆடுமகள் போலப் பெயர்தல் ஆற்றேன், இவ்வூர் அலர்க.

(வி - ரை.) கோதையர் ஆய இளையோர் என்க. இளையோர் என்றது ஏனை ஆயத்தாரை. இளையோர் செல்ப, எல்லும், எல்லின்று என்றது நாமும் செல்லவேண்டும் என்பதற்கு ஏதுக் கூறியபடி. காயல் - காய்ந்த புல்; அல்: பெயர் விகுதி. செல்ப; எல்லின்று; ஆகலின் பகல் எம்மொடு ஆடிய நீ இரவு நல்லில் செல்லுதல் வேண்டும் என்று கூறிய தோழிக்கு இரவு இல்லிற் சென்று நோயொடு தங்குவேன் ஆயின், என் தந்தையின் காவலிற் படுவேன் என்று தலைவி கூறினாள் என்க. வைகுவேனாயின் எந்தை அருங்கடிப் படுவல் என்ற தலைவிகூற்றைத் தோழி கொண்டு கூறுகின்றாளாகலின், அதற்கேற்ப வைகுதியாயின் எனவும், நுந்தை எனவும் கூறினாளென்க. படுவலும் - உம்மை: அசை நிலை. செல்லல் என்றலும் ஆற்றாய் என்றது, செலின் வாழலென் என்பதற்கு அடையாய் வந்தது. தலைவனைத் தலைப்பெய்யாது செல்லின் உயிர் வாழேன் என்றாளாகக் கொள்க. நீயே, யானே என்பவற்று ஏகாரங்கள் கட்டுரைச் சுவைபட நின்றன; பிரிநிலையுமாம். வெறி கோள் பாவை - வெறியாடும் மகள். ஆடு மகள்: பெயர் மாத்திரையாய் நின்றது. தெய்ய: அசைச்சொல்.

371. பாலை

[பொருள்வயிற் பிரிந்து போகாநின்ற தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.]

அவ்விளிம் புரீஇய விசையமை நோன்சிலைச்
செவ்வாய்ப் பகழிச் செயிர்நோக் காடவர்
கணையிடக் கழிந்ததன் வீழ்துணை உள்ளிக்
குறுநெடுந் துணைய மறிபுடை யாடப்
புன்கண் கொண்ட திரிமருப் பிரலை
மேய்பதம் மறுத்த சிறுமையொடு நோய்கூர்ந்து
நெய்தலம் படுவிற் சின்னீர் உண்ணாது
எஃகுறு மாந்தரின் இனைந்துகண் படுக்கும்
பைதற வெம்பிய பாழ்சேர் அத்தம்
[1]எமியம் நீந்தும் எம்மினும் பனிவார்ந்து
என்ன ஆங்கொல் தாமே தெண்ணீர்
ஆய்சுனை நிகர்மலர் போன்மென நசைஇ
வீதேர் பறவை விழையும்
போதார் கூந்தல்நங் காதலி கண்ணே.

—எயினந்தை மகன் இளங்கீரனார்.

(சொ - ள்.) நெஞ்சே—, கக—ச. தெள் நீர் ஆய் சுனை நிகர் மலர் போன்மென - தெளிந்த நீரினை யுடைய அழகிய சுனையிலுள்ள ஒளி பொருந்திய மலரைப் போலும் என, நசைஇ வீ தேர் பறவை விழையும்-தேனை விரும்பிப் பூக்களை ஆராயும் வண்டுகள் விருப்புறும், போது ஆர் கூந்தல் நம் காதலி கண்-மலர் நிறைந்த கூந்தலையுடைய நம் காதலியின் கண்கள்,

க—ரு. அ விளிம்பு உரீஇய விசை அமை நோன் சிலை - அழகிய விளிம்பினை உருவி நாண் ஏற்றிய விசை அமைந்த வலிய வில்லினையும், செவ் வாய் பகழி - குருதியாற் சிவந்த வாயினையுடைய அம்பினையும் உடைய, செயிர் நோக்கு ஆடவர் - சினம் தங்கிய பார்வையினையும் உடைய மறவர், கணை இட கழிந்த-அம்பினை எய்திடலான் இறந்த, தன் வீழ் துணை உள்ளி-தனது காதல்மிக்க பிணையினை நினைத்து, குறுநெடு துணைய மறிபுடை ஆட-குறுமையும் நெடுமையும் ஆகிய அளவினையுடைய தன்குட்டிகள் (ஏதம் உணராமையின்) தன் பக்கலில் விளையாட, புன்கண்கொண்ட திரி மருப்பு இரலை-துன்பினை யடைந்த முறுக்குண்ட கோட்டினையுடைய ஆண்மான், மேய்பதம் மறுத்த சிறுமையொடு நோய் கூர்ந்து - மேயும் உணவினை வெறுத்த துன்பத்

(பாடம்) 1. தமியம் நீந்தும்.

துடன்வருத்தம் மிக்கு, நெய்தல் படுவில் - களர் நிலத்திலுள்ள சிறிய குழியில் தங்கிய, சில் நீர் உண்ணாது-சிறிய நீரும் பருகாது, எஃகு உறும் மாந்தரின் இனைந்துகண் படுக்கும் - அம்பு தைக்கப்பெற்ற மக்களைப் போல வருந்திக் கண்ணயர்ந்து கிடக்கும், பைது அற வெம்பிய பாழ் சேர் அத்தம் - பசுமையறக் கொதித்த பாழ்பட்ட சுர நெறியினை,

௧௦—௧௧. எமியம் நீந்தும் எம்மினும் - தமியேமாய்க் கடந்து செல்லும் நம்மைக் காட்டினும், பனி வார்ந்து - நீர் ஒழுகப் பெற்று, என்ன ஆம்கொல் - எத்தன்மையான துன்பத்தினை எய்தாநிற்குமோ.

(முடிபு) நெஞ்சே! நம் காதலி கண்கள் பாழ்சேர் அத்தம் எமியம் நீந்தும் எம்மினும், பனிவார்ந்து என்ன ஆம் கொல்.

(வி - ரை.) மறி புடை ஆட - குட்டிகள் இறந்த பெண்மானின் பக்கத்தே விளையாட என்றுமாம். உள்ளிப் புன்கண் கொண்ட இரலை நோய் கூர்ந்து சின்னீர் உண்ணாது இனைந்து கண்படுக்கும் அத்தம் என்க. தலைவியைப் பிரிந்து கொடிய காட்டினைத் தமியமாய்க் கடந்து செல்லுதலால் நாம் எய்தும் துன்பத்தைக் காட்டிலும் நம்மைப் பிரிந்துறையும் காதலியின் கண்கள் என்ன துன்பத்தினை எய்துமோ எனத் தலைவியைப் பிரிந்து ஏகுதலின் இன்னாமை புலப்படத் தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறினான் என்க.

---

372. குறிஞ்சி

[அல்ல குறிப்பட்டுப் போகாநின்ற தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.]

[1] அருந்தெறன் மரபிற் கடவுள் காப்பப்
பெருந்தேன் தூங்கும் நாடுகாண் நனந்தலை
அணங்குடை வரைப்பிற் பாழி ஆங்கண்
வேண்முது மாக்கள் வியனகர்க் கரந்த
அருங்கல வெறுக்கையின் அரியோள் பண்புநினைந்து
வருந்தினம் மாதோ எனினுமஃ தோல்லாய்
இரும்பனைத் தொடுத்த பலரா டூசல்
ஊர்ந்திழி கயிற்றிற் செலவர வருந்தி
நெடுநெறிக் குதிரைக் கூர்வேல் அஞ்சி
கடுமுனை [2] யலைந்த கொடுவி லாடவர்
[3] ஆகோள் பூசலிற் பாடுசிறந் தெறியும்

(பாடம்) 1. அருந்திறல். 2. மலைந்த தொடுவில். 3. ஆடுகொள்.

பெருந்துடி வள்பின் வீங்குபு நெகிழா
மேய்மணி யிழந்த பாம்பின் நீநனி
தேம்பினை வாழியென் நெஞ்சே வேந்தர்
கரு. [1]கோண்டணி எயிலிற் காப்புச் சிறந்து
ஈண்டருங் குரையணம் அணங்கி யோளே.

—பரணர்.

(சொ - ள்.) கச. வாழி என் நெஞ்சே - என் நெஞ்சே வாழி!, க—க. அரு தெறல் மரபின் கடவுள் காப்ப-பிறரால் தெறுதற்கு அரிய முறைமையினையுடைய கடவுள் காத்தலின், பெருதேன் தூங்கும் நாடு காண் நனந்தலை - பெரிய தேன் கூடுகள் தொங்குவதும் நாட்டின் எல்லையினைக் காண்டற்குரிய உயர்ச்சியினையும் அகன்ற இடத்தினையும் உடையதுமாகிய; அணங்கு உடை வரைப்பின் - அச்சம் பொருந்திய பக்கமலையினையுடைய, பாழி ஆங்கண்-பாழிமலையிடத்தே, வேள் முது மாக்கள் வியன் நகர்க்கரந்த - பழைய வேள்குடி மக்கள் தமது அகன்ற ஊரின்கண் மறைத்து வைத்த. அருங்கல வெறுக்கையின் அரியோள் பண்பு நினைந்து - அரிய அணிகலமாகிய செல்வத்தைப்போலப் பெறுதற்கு அருமையுடையோளது இன்பத்தை நினைந்து, வருந்தினம் எனினும் - நாம் வாளாதே வருந்தியுள்ளோம் என்று யான் கூறவும், அஃது ஒல்லாய் - அதனை நீ கைவிடுதற்குப் பொருந்தாயாய்,

எ—கச. இரு பனை தொடுத்த பலர் ஆடு ஊசல்-பெரிய கிளையில் கட்டப் பெற்ற பலரும் ஆடும் ஊசலினது, ஊர்ந்து இழி கயிற்றில் செலவர வருந்தி - ஏறியும் இறங்கியும் ஆடும் கயிற்றினைப் போன்று செல்கையானும் வருகையானும் வருந்தி, நெடு நெறி குதிரை கூர்வேல் அஞ்சி-நீண்ட வழியினையுடைய குதிரை மலைக்குத் தலைவனாகிய கூரிய வேலையுடைய அஞ்சி என்பானது, கடு முனை அலைத்த கொடு வில் ஆடவர்-கடிய பகைப்புலத்தினை வருத்திய வளைந்த வில்லையுடைய வீரர், ஆகொள் பூசலில் பாடு சிறந்து எறியும்-தம் பகைவர் நிரைகளைக் கவரும் போரில் ஒலி மிக அடிக்கும், பெரு துடி வள்பின் வீங்குபு நெகிழா-பெரிய உடுக்கையின் வாரைப் போலச் செறிந்தும் நெகிழ்ந்தும், மேய் மணி இழந்த பாம்பின்-மேய்தற்பொருட்டு உமிழ்ந்து வைத்த மணியினை இழந்த பாம்பைப் போல, நீ நனி தேம்பினை - நீ மிகவும் வாடுதலுற்றனை,

கச—க. நம் அணங்கியோள்-நம்மை வருத்திய காதலி, வேந்தர் கோண் தணி எயிலில் - பகை வேந்தரது மாறுபாடு தணிதற்கு ஏதுவாகிய மதில்போல, காப்பு சிறந்து - காவல்மிக்கு, ஈண்டு அருங்குரையள்- எய்துதற்கு அருமையை யுடையவள் அன்றோ.

---

1. கொண்டணி பெய்விலீந்.

(முடிபு) என் நெஞ்சே வாழி! அரியோள் பண்பு நினைந்து வருந்தினம் எனினும், அஃது ஒல்லாய், செலவர வருந்தி, வீங்குபு நெகிழா, மணிபிறந்த பாம்பின் நீ நனி தேம்பினை, நம் அணங்கியோள் காப்புச் சிறந்து ஈண்டு அருங்குரையள்.

(வி - ரை.) அருந்திறல் என்பது பாடமாயின், அரிய ஆற்றலை யுடைய என்க. கடவுள் காத்தலாற் பிறராற் கவரப்படாது தேனிறால் தூங்கும் என்க. நாடு காண் நனந்தலை-'தன்மேல் ஏறி நாட்டைக் கண்டு இன்புறுதற்கு ஏதுவாகிய ஓக்க'மும் அகற்சியுமுடைய இடம் என்க. [1]'கோடு பல விரிந்த நாடுகாண் நெடுவரை' என்பதன் பழைய உரை காண்க. பாழிமலையிடத்ததாய நகரிலே வேள் முது மாக்கள் கரந்து வைத்த வெறுக்கை என்க. அஃது ஒல்லாய்-அதனைக் கைவிடு தற்குப் பொருந்தாயாய் என விரித்துரைக்க. நெடு நெறிக் குதிரை-உயர்ந்து செல்லும் நெறியையுடைய குதிரை; ஆவது குதிரைமலை; இது வெளிப்படை. கடுமுனை அலைத்த-முன் பல போர்களிற் பகைவரை வருத்திய என்க. அஞ்சியின் ஆடவர் மாற்றார் ஆவினைக் கவர்ந்து வரும் பூசலில் எறியும் துடி என்க பாம்பு மேயுங்கால் மணியினை உமிழும் என்னும் கருத்து, [2]'நாம நல்லராக் கதிர்பட உமிழ்ந்த, மேய்மணி விளக்கில்' என முன்வரும் போந்துளது காண்க.

---

373. பாலை

[பிரிந்து போகாநின்ற தலைமகன் இடைச்சுரத்துத் தன் நெஞ்சிற் குச் சொல்லியது.

முனைகவர்ந்து கொண்டெனக் கலங்கிப் பீரெழுந்து
மனைபாழ் பட்ட மரைசேர் மன்றத்துப்
[3]பனைத்தாள் யானை பரூஉப்புற [4]முரிஞ்சச்
சேதுகாழ் சாய்ந்த முதுகாற் போதியில்
அருஞ்சுரம் நீந்திய வருத்தமொடு கையற்றுப்
பெரும்புன் மாலை புலம்புவந் துறுதர
மீளி உள்ளஞ் செலவுவலி யுறுப்பத்
தாள்கை பூட்டிய தனிநிலை யிருக்கையொடு
தன்னிலை யுள்ளும் நந்நிலை யுணராள்
இரும்பல் கூந்தற் சேயிழை மடந்தை
கனையிருள் நடுநாள் அணையொடு பொருந்தி
வெய்துற்றுப் புலக்கும் நெஞ்சமொ டைதுயிரா
ஆயிதழ் மழைக்கண் மல்க நோய்கூர்ந்து

---

1. பதிற்று : அக. 2. அகம் : ௭௨.
(பாடம்) 3. பனைத்தாள். 4. முறிஞ்சி.

பெருந்தோள் நனைக்குங் கலுழ்ந்துவார் அரிப்பனி
மெல்விரல் உகிரிற் றெறியினள் வென்வேல்
அண்ணல் யானை அடுபோர் வேந்தர்
ஒருங்ககப் படுத்த முரவுவாய் ஞாயில்
ஓரெயின் மன்னன் போலத்
துயிலறந் தனள்கொல் அளியள் தானே.

—பாண்டியன் ஏனாதி நெடுங்கண்ணனார்.

(சொ - ள்.) நெஞ்சே!, க—௯. முனை கவர்ந்து கொண்டென - போர்முனை அகப்படுத்திக்கொண்டதாக, கலங்கி - கலக்கமுற்று, பீர் எழுந்து - பீர்க்குப் படர்ந்து, மனை பாழ்பட்ட மரை சேர் மன்றத்து - மனைகள் பாழ்பட்டுப் போன மரைமா வந்தடையும் மன்றத்தின் கண்ணுள்ள, பணை தாள் யானை பரூஉப் புறம் உரிஞ்ச - பருத்த காலினையுடைய யானையின் பரிய முதுகு உரிஞ்சுதலால், செதுகாழ் சாய்ந்த முது கால் பொதியில் - சோர்ந்த விட்டம் வீழ்ந்த முதிய தூண்களையுடைய அம்பலத்தே, அரு சுரம் நீந்திய வருத்தமொடு கையற்று - அரிய சுரத்தைக் கடந்து வந்த வருத்தத்தால் செயலற்று; பெரு புன் மாலை புலம்பு வந்து உறுதர - பெரிய புற்கென்ற மாலைக்காலத்தே தனிமை வந்தடைய, மீளி உள்ளம் செலவு வலியுறுப்ப - திண்மையையுடைய நம் உள்ளம் மீண்டு செல்லுதலை வற்புறுத்த, தாள் கை பூட்டிய தனி நிலை இருக்கையொடு - முழந்தாள்களைக் கையாற் பூட்டிய தனித்த நிலையினதாகிய இருப்புடன், தன் நிலை உள்ளும் - தனது நிலையினையே எண்ணியிருக்கும், நம் நிலை உணராள் - நமது இயல்பினை அறியாளாகி,

௧௦—௧. இரு பல் கூந்தல் சே இழை மடந்தை - நீண்ட பலவாய கூந்தலையும் சிவந்த அணியினையுமுடைய நம் தலைவி, கனை இருள் நடு நாள் - செறிந்த இருளையுடைய நடு இரவில், அணையொடு பொருந்தி - அணையின்கண் கிடந்து, வெய்து உற்று புலக்கும் நெஞ்சமொடு - கொதிப்புற்று வெறுக்கும் உள்ளத்துடன், ஐது உயிரா - மெத்தென உயிர்த்து, ஆய் இதழ் மழை கண் - அழகிய பூவிதழ்போன்ற குளிர்ந்த கண்கள், மல்க நோய் கூர்ந்து - நீர் பெருக வருத்த மிக்கு, பெரு தோள் நனைக்கும் கலுழ்ந்து வார் அரி பனி - பெரிய தோளினை நனையச் செய்யுமாறு அழுதலின் ஒழுகும் நீர்த் துளிகளை, மெல் விரல் உகிரின் தெறியினள் - மெல்லிய விரல் நகத்தால் தெறித்து, வென் வேல் அண்ணல் யானை அடுபோர் வேந்தர் - வென்றி வேலினையும் தலைமை கொண்ட யானையினையும் அடும்போரினையும் உடைய அரசர் பலர், ஒருங்கு அகப்படுத்த - ஒருங்கு கூடிச் சூழ்ந்துகொண்டதால், முரவு வாய் ஞாயில் ஓர் எயில் மன்னன் போல - முறிதல் பொருந்திய சூட்டினையுடைய ஒருமதிலின்கண் அகப்பட்ட அரசனைப்போல, துயில் துறந்தனள் கொல் - துயில் ஒழிந்தனளோ, அளியள் - இரங்கத்தக்காள்.

(முடிபு) நெஞ்சே! நாம் அருஞ் சுரம் நீந்திய வருத்தமொடு கையற்று, பொதியிலின்கண் மாலை புலம்பு வந்துறுதர, உள்ளம் செலவு வலியுறுப்ப, தனிநிலை இருக்கையொடு தன்னிலை யுள்ளும் நம்நிலை உணரான், மடந்தை, நடுநாள் அணையொடு பொருந்தி உயிரா, நோய் கூர்ந்து, துயில் துறந்தனள் கொல் அளியள்.

(வி - ரை.) முனை கவர்ந்து கொண்டென - பகைவர் ஒருவரோ டொருவர் போர்செய்தலால் என்றபடி. கலங்குதல்-முன்னிலை மாறுதல். பீர் எழுந்து-பீர்க்கு முளைத்துப் படர. பாழ்பட்ட மன்றம், மரை சேர் மன்றம் என்க. மன்றத்துப் பொதியில் இருக்கையொடு எனக் கூட்டுக. காழ் என்றது ஈண்டு விட்டத்தை; [1]"யானை, வெரிந் ஓங்கு சிறுபுறம் உரிஞவொல்கி, இட்டிகை நெடுஞ்சுவர் விட்டம் வீழ்ந்தென" என முன்னர்ப் போந்தமை காண்க. பெரும் புன் மாலை-பெரிய வருத்தத்தைச் செய்யும் மாலை என்றலுமாம். புலம்பு வந்து உறுதர - தலைவியைப் பிரிந்த தனிமை தோன்றி வருந்துதலால் என்க. தாள் கை பூட்டிய - தாள்களை மடக்கி நிமிர்த்து இரு கையானும் கோத்த என்க. ஆழ்ந்த சிந்தனையிலிருப்பார் அங்ஙனம் தாள்களைக் கையாற் கோத்திருத்தல் மரபு. மடந்தையாகிய அளியள் எனக் கூட்டி யுரைத்தலுமாம். நம் நிலை உணரான் புலக்கும் நெஞ்சமொடு என்க. ஓர் எயில் மன்னன் என்றது, குறுநில மன்னனை.

---

374. முல்லை

[பாசறை முற்றிய தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.]

மாக்கடல் முகந்து மாதிரத் திருளி
மலர்தலை யுலகம் புதைய வலனேர்பு
பழங்கண் கொண்ட கொழும்பல் கொண்மூப்
போழ்ந்த போலப் பலவுடன் மின்னித்
தாழ்ந்த போல [2]நணிநணி வந்து
சோர்ந்த போலச் சொரிவன பயிற்றி
இடியும் முழக்கும் இன்றிப் பாணர்
வடியுறு நல்யாழ் நரம்பிசைத் தன்ன
இன்குரல் அழிதுளி தலைஇ நன்பல
பெயல்பெய்து கழிந்த பூநாறு வைகறைச்
செறிமணல் நிவந்த களர்தோன்று இயவில்
குறுமோட்டு மூதாய் குறுகுறு ஓடி
மணிமண்டு பவழம் போலக் காயா

---

1. அகம்: கஎ. (பாடம்.) 2. நணி அணி வந்து.

அணிமிகு செம்மல் ஒளிப்பன மறையக்
கரு. கார்கலின் கொண்ட [1] காமர் காலைச்
செல்க தேரே நல்வலம் பெறுந
பெருந்தோள் நுணுகிய நுசுப்பில்
திருந்திழை அரிவை விருந்தெதிர் கொளவே.

—இடைக்காடனார்.

(சொ-ள்.) கக. நல் வலம் பெறுந - நல்ல திறன் வாய்ந்த பாகனே!,

க—கo. மா கடல் முகந்து-பெரிய கடல்நீரை முகந்து, மாதிரத்து இருளி-திசைகளிற் சென்று இருண்டு, மலர்தலை உலகம் புதைய வலன் ஏர்பு - அகன்ற இடத்தினையுடைய உலகம் மறைய வலமாக எழுந்து சென்று, பழங்கண் கொண்ட கொழும்பல் கொண்மூ - பொறையால் வருந்துதலைக் கொண்ட வளவிய பல மேகங்கள், போழ்ந்த போல பல உடன் மின்னி-வானைப் பிளந்தன போலப் பலவும் ஒருங்கே தோன்ற மின்னுதலைச் செய்து, தாழ்ந்த போல நணி நணி வந்து - இறங்குவன போல நெருங்க நெருங்க வந்து, சோர்ந்த போல சொரிவன பயிற்றி - கவிழ்ந்தனபோல மிக்குப் பொழிந்து, இடியும் முழக்கும்இன்றி-இடித்தலும் குமுறுதலும் இன்றி, பாணர் வடி உறு நல்யாழ் நரம்பு இசைத்தன்ன-பாணரது வடித்தல் உற்ற நல்லயாழ் நரம்பு ஒலிப்பது போன்ற, இன்குரல் அழிதுளி தலைஇ - இனிய குரலுடன் மிக்க துளியைப் பொருந்தி, நன்பல பெயல் பெய்து கழிந்த-நன்றாகிய பல மழைகளைப் பெய்து கழிந்த, பூ நாறு வைகறை-பூக்கள் நாறும் விடியற்காலத்தே,

கக—டு. செறி மணல் சிவந்த களர் தோன்று இயவில் - செறிந்த மணல் மேடு பட்டதும் களர்மண் தோன்றுவதுமாகிய நெறியில், குறு மோட்டு மூதாய்-சிறு வயிற்றினையுடைய தம்பலப் பூச்சி, குறுகுறு ஓடி-குறுகக்குறுகச் சென்று, மணிமண்டு பவழம்போல-நீலமணியுடன் கூடிய பவழம்போல, காயா அணிமிகு செம்மல் ஒளிப்பன மறைய - காயாவின் அழகு மிக்க வாடற்பூவில் ஒளிந்து மறைய, கார் கவின் கொண்டகாமர் காலை - கார்ப்பருவமானது அழகுபெற்ற விருப்பம் பொருந்தியகாலத்தே,

கக—அ. பெருதோள் நுணுகிய நுசுப்பில்-பெரிய தோளினையும் நுண்ணிய இடையினையும், திருந்து இழை - திருந்திய அணிகளையும் உடைய, அரிவை விருந்து எதிர்கொள - நம் தலைவி விருந்தாக நம்மை ஏற்றுக்கொள்ள, தேர் செல்க-நம் தேர் (விரைந்து) செல்வதாக.

(முடிபு) நல் வலம் பெறுந! கார் கவின்கொண்ட காமர் காலை, அரிவை விருந்து எதிர்கொள, தேர் செல்க.

---

1. காமர் மாலை.

(வி - ரை.) பழங்கண் - துன்பம்; பொறை ஆற்றாத துன்பம். போழ்ந்த போல, தாழ்ந்தபோல, சோர்ந்தபோல என்பன தற்குறிப் பின் பாற்படுவன. குறு குறு-குறுகக் குறுக, [1]'குறு குறு நடந்து' என்பதன் உரை காண்க. முகந்து, இருளி, ஏர்பு கொண்ட கொண்மூ எனவும்; கொண்மூ மின்னி, வந்து சொரிவன பயிற்றி, அழி துளி தலைஇ, பெய்து கழிந்த வைகறை எனவும்; வைகறை இயவில், மூதாய் ஓடி, மறைய, கார்கவின் கொண்ட காலை எனவும் கூட்டுக.

(மே - ள்.) [2]'கரணத்தின் அமைந்து' என்னுஞ் சூத்திரத்து 'பேரிசை ஊர்திப் பாகர் பாங்கினும்' என்னும் பகுதிக்கண், தலைவன் தான் பெற்ற இன்பத்தைப் பாகற்குக் கூறியது என்பதற்கு, 'செல்க தேரே நல்வலம் பெறுந' என்பதனை எடுத்துக் காட்டினர், நச்.

---

375. பாலை

[பிரிவிடை வேறுபட்ட தலைமகள் தோழிக்குச் சொல்லியது.]

சென்று நீடுநர் அல்லர் அவர்வயின்
இனைதல் ஆனாய் என்றிசின் இகுளை
அம்புதொடை யமைதி காண்மார் வம்பலர்
கலனிலர் ஆயினுங் கொன்றுபுள் ளூட்டுங்
கல்லா இளையர் கலித்த கவலைக்
கணநரி இனனொடு குழீஇ நிணனருந்தும்
நெய்த்தோர் ஆடிய மல்லல் மோசிவிரல்
அத்த எருவைச் சேவல் சேர்ந்த
அரைசேர் யாத்த வெண்டிரள் [3]வினைவிறல்
எழாஅத் திணிதோட் சோழர் பெருமகன்
விளங்குபுகழ் நிறுத்த இடம்பெருஞ் சென்னி
குடிக்கடன் ஆகலிற் குறைவினை முடிமார்
செம்புறழ் புரிசைப் பாழி நூறி
வம்ப வடுகர் பைந்தலை சவட்டிக்
கொன்ற யானைக் கோட்டிற் றோன்றும்
அஞ்சுவரு மரபின் வெஞ்சுரம் இறந்தோர்
நோயிலர் பெயர்தல் அறியின்
ஆழல மன்னோ தோழி யென் கண்ணே.

—[4]இடையன் சேந்தங் கொற்றனார்

---

1. புறம்: கஅஅ. 2. தொல், கற்பு: ரு. (பாடம்) 3. வினை விறல் எழூஉத் திணிதோள். 4. இடையன் செங்கொற்றனார்.

(சொ - ள்.) க—உ. இகுளை - தோழியே!, சென்று நீடுநர் அல்லர்-நம் தலைவர் பொருள் ஈட்டுதற்குச் சென்று நீட்டிப்பார் அல்லர், அவர் வயின் இனைதல் ஆனாய்-அவர் திறத்து வருந்துதல் அமைவாயாக, என்றிசின் - என்கின்றாய்,

௩—௬. அம்பு தொடை அமைதி காண்மார் - தாம் அம்பு விடுத்தலின் சிறப்பினைக் காணும்பொருட்டு, வம்பலர் கலன் இலர் ஆயினும் - புதியராய் வருவோர் அணிகலன் இல்லாதவராயினும், கொன்று புள் ஊட்டும் - அவர்களைக் கொன்று பறவைகட்கு உண்பிக்கும், கல்லா இளையர்-ஆறலைத்தலையன்றிப் பிறதொழிலை அறியாத இளையர், கலித்த கவலை - செருக்கித் திரியும் கவர்த்த நெறிகளில், கணநரி இனனொடு குழீஇ - கூட்டமாய நரிகள் இனத்தொடு கூடி, நிணன் அருந்தும் - நிணத்தினை உண்ணும்.

எ—கஉ. நெய்த்தோர் ஆடிய மல்லல் மொசி விரல்-குருதிபடிந்த வளமுடைய நெருங்கிய விரல்களையுடைய, அத்த எருவைச் சேவல் சேர்ந்த - காட்டிலுள்ள ஆண்பருந்து தங்கியிருக்கும், அரைசேர்யாத்த வெண் திரள் - அடி திரண்ட யாமரத்தின் வெள்ளிய திரண்ட கொம்பானது, வினை விறல் எழாஅ திணிதோள் - போரின் வெற்றி நீங்காத திண்ணிய தோளினையுடைய, சோழர் பெருமகன் - சோழர் பெருமானாகிய, விளங்கு புகழ்நிறுத்த இடம்பெரும் சென்னி-என்றும் விளங்கும் புகழினை நிலைநாட்டிய இளம்பெருஞ் சென்னி என்பான், குடிக்கடன் ஆகலின் குறை வினைமுடிமார் - தனது குடிக்கு ஆற்றும் கடனாகலின் முடிக்கப்படும் பொருளாய போர் வினையை முடித்தற்கு, செம்பு உறழ் புரிசைபாழி நூறி - செம்பினை ஒத்த மதிலையுடைய பாழி என்னும் அரணை அழித்து, வம்ப வடுகர் பைந்தலைசவட்டி-புதிய வடுகரது பசிய தலையைத் தறித்து, கொன்றயானை கோட்டில் தோன்றும் - கொன்ற யானைகளின் கோடுபோலத் தோன்றும்,

கச—அ. அஞ்சுவரு மரபின்வெம் சுரம் இறந்தோர்-அச்சம்வரும் இயல்பினையுடைய கொடிய சுரநெறியைக் கடந்து சென்ற நம் தலைவர், நோய் இலர் பெயர்தல் அறியின்-தீங்கிலராய் மீண்டு வருதலை அறிவேனாயின், தோழி - தோழியே, என் கண் ஆழல - என் கண்கள் அழமாட்டா. (மன் - அறிந்திலேனே.)

(முடிபு) இகுளை! (நம் தலைவர்) நீடுநர் அல்லர், அவர்வயின் இனைதல் ஆனாய், என்றிசின், வெஞ்சுரம் இறந்தோர் (ஆகிய அவர்) நோயிலர் பெயர்தல் அறியின் என் கண்(கள்) ஆழல.

(வி - ரை.) கண நரி இனனொடு குழீஇ நிணன் அருந்தும் எருவைச் சேவல் சேர்ந்த யா மரம் என்க. அன்றி நரி இனனொடு குழீஇ நிணன் அருந்தும் அரைசேர் யா, எருவைச் சேவல் சேர்ந்த யா, எனத் தனித்தனி கூட்டி முடித்தலுமாம். யாத்த - யாமரத்தினுடைய. திரள் - திரண்ட கொம்பு: ஆகுபெயர். வினை விறல் எழூஉத் திணிதோள் என்பது பாடமாயின், வெற்றியுண்டாகும் எழூஉப் போலும் திண்ணிய தோள் என்க. எழூஉ - எழு, கணையமரம். சவட்டி [1]'கடிசொல்லில்லைக் காலத்துப் படினே' என்பதனாற் போந்தது.

---

1. தொல். எச்சவியல்: ௫௬.

376. மருதம்

[காதற் பரத்தை புலந்து சொல்லியது.]

செல்லல் மகிழ்நநிற் செய்கடன் உடையேன்மன்
கல்லா யானை கடிபுனல் கற்றென
மலிபுனல் பொருத மருதோங்கு படப்பை
ஒலிகதிர்க் கழனிக் கழாஅர் முன்றுறைக்
கலிகொள் சுற்றமொடு கரிகால் காணத்
தண்பதங் கொண்டு தவிர்ந்த இன்னிசை
ஒண்பொறிப் புனைகழல் சேவடிப் புரளக்
கருங்கச்சு யாத்த காண்பின் அவ்வயிற்று
[1]இரும்பொலம் பாண்டில் மணியொடு தெளிர்ப்பப்
புனனயந் தாடும் அத்தி அணிநயந்து
காவிரி கொண்டொளித் தாங்கு மன்னே
நும்வயிற் புலத்தல் செல்லேம் எம்வயின்
பசந்தன்று காண்டிசின் நுதலே அசும்பின்
அந்தூம்பு வள்ளை அழற்கொடி மயக்கி
வண்டோட்டு நெல்லின் வாங்குபீள் விரியத்
துய்த்தலை முடங்கிறாத் தெறிக்கும் பொற்புடைக்
குரங்குளைப் புரவிக் குட்டுவன்
[2]மரந்தை அன்னவென் நலந்தந்து சென்மே.

—பரணர்.

(சொ - ள்.) க. மகிழ்ந - தலைவனே !, செல்லல் - செல்லாதே,

உ—கூ. கல்லா யானை கடி புனல் கற்றென - பாகனாற் பயிற்றப் படாத யானை காவலையுடைய நீரில் விளையாடலைக் கற்றதாக, மலிபுனல் பொருத மருது ஓங்கு படப்பை - அதனால் மிக்கெழும் நீர்மோதிய மருத மரங்கள் உயர்ந்த தோட்டத்தினையும், ஒலி கதிர் கழனி-தழைத்த கதிர்களையுடைய வயல்களையுமுடைய, கழாஅர் முன் துறை - கழாஅர் என்னும் பதியின்முன்பு, கலிகொள் சுற்றமொடு கரிகால் காண - ஆரவாரம் பொருந்திய சுற்றத்தினருடன் கரிகால்வளவன் கண்ணுற்று மகிழ,

சு—கக. தண் பதம் கொண்டு-புனல் விழாக்கொண்டு, தவிர்ந்த இன் இசை - இனிய இசை தங்கிய, ஒள் பொறி புனை கழல் சே அடி புரள-ஒள்ளிய பொறிகளை உடைய அழகிய வீரக்கழல் சிவந்த அடியில் புரள, கரு கச்சு யாத்த காண்பு இன் அ வயிற்று மணியொடு - கரிய

(பாடம்) 1. அரும்பொலம். 2. மாந்தை.

தச்சினைக் கட்டிய காட்சி இனிதாகிய அழகிய வயிற்றில் கட்டப் பெற்ற மணியுடன், இரும் பொலம் பாண்டில் தெளிர்ப்ப - பெரிய பொன்னாலாகிய கஞ்ச தாளம் ஒலிக்க, புனல் நயந்து ஆடும் அத்தி அணி நயந்து - புனலின்கண் விரும்பி ஆடிய அத்தி என்பானது அழகினை விரும்பி, காவிரி கொண்டு ஒளித்தாங்கு - காவிரி அவனை வெளவிக்கொண்டு கடலில் ஒளித்தாற்போலச் சேரிப் பரத்தை நின்னைக் கவர்ந்துசென்றாளாக, நும் வயின் புலத்தல் செல்லேம் - நும்பால் யாம் வெறுத்தல் இல்லேம், எம் வயின் பசந்தன்று காண்டிசின் நுதல் - அங்ஙனமாகவும் எம்மிடத்து நுதல் பசலை யுற்றது காண்பாயாக.

கஉ—அ. அசும்பின் - சேற்றிலுள்ள, அம் தூம்பு வள்ளை அழல் கொடி மயக்கி - அழகிய துளையுடைய வள்ளையாய ஒள்ளிய கொடியைப் பின்னுவித்து, வள் தோட்டு நெல்லின் வாங்கு பீள் விரிய - வளம் பொருந்திய இதழினையுடைய நெல்லினது வளைந்த கதிர் விரிந்திட, துய் தலை முடங்கு இறா தெறிக்கும் - துய்யினைத் தலையில் உடைய வளைந்த இறா மீன் பாயும் இடமாய, பொற்பு உடை குரங்கு உளை புரவி குட்டுவன் மரந்தை அன்ன - அழகு பொருந்திய வளைந்த பிடரி மயிரினையுடைய குதிரையையுடைய குட்டுவனது மரந்தை என்னும் ஊர் போன்ற, என் நலம் தந்து சென்மே - என் அழகினைத் தந்து செல்க.

க. நிற் செய் கடன் உடையென் மன் - நின்பாற் செய்யும் கடமை களை மிகவும் உடையேன்.

(முடிபு) மகிழ்ந! செல்லல், கழாஅர் முன்றுறை, கரிகால் காண, புனல் நயந்தாடும் அத்தி அணி நயந்து காவிரி கொண்டொளித்தாங்கு (சேரிப் பரத்தை நின்னைக் கவர்ந்து சென்றாளாக). நும் வயிற் புலத்தல் செல்லேம். எம்வயின் நுதல் பசந்தன்று, காண்டிசின் குட்டுவன் மரந்தை அன்ன என் நலம் தந்து சென்மே, நிற் செய்கடன் உடையேன் மன்.

(வி - ரை.) யானை கடி புனல் கற்றெனப் புனல் நயந் தாடும் அத்தி எனக் கூட்டி யுரைத்தலுமாம். இப் பொருட்கு யானைக்கும் மணி தெளிர்த்தல் கொள்க. கலி கொள் சுற்றம் - விழவின் ஆரவாரத் தைக் கொண்ட சுற்றம். தவிர்தல் - தங்குதல். தண் பதம் கொண்டு தவிர்ந்த அத்தி புனல் நயந்தாடும் அத்தி எனக் கூட்டி யுரைத்தலு மாம். இதற்கு, புனலாடும் அத்தி சுற்றத்துடன் ஏகாது, தங்கிவிட்டா னாக, அவனது அணி நயந்து காவிரி கொண் டொளித்தாற்போல, என்றுரைத்துக் கொள்க. காவிரி கொண் டொளித்தாங்கு, சேரிப் பரத்தை நின்னைக் கவர்ந்து சென்றாளாக என விரித்துரைத்துக் கொள்க. மன் : ஒழியிசைப் பொருட்டுமாம்.

377. பாலை

[பொருள் கடைக்கூட்டிய நெஞ்சிற்குத் தலைமகன் சொல்லியது.]

கோடை நீடலின் [1]வாடுபுலத் துக்க
சிறுபுல் லுணவு நெறிபட மறுகி
நுண்பல் [2]எறும்பு கொண்டளைச் செறித்த
வித்தா வல்சி வீங்குசிலை மறவர்
[3]பல்லூழ் புக்குப் பயனிரை கவரக்
கொழுங்குடி போகிய பெரும்பாழ் மன்றத்து
நரைமூ தாளர் அதிர்தலை யிறக்கிக்
கவைமனத் திருத்தும் வல்லுவனப் பழிய
வரிநிறச் சிதலை அரித்தலிற் புல்லென்று
பெருநலஞ் சிதைந்த பேஎமுதிர் பொதியில்
இன்னா ஒருசிறைத் தங்கி இன்னகைச்
சிறுமென் சாயல் பெருநலம் [4]உள்ளி
வம்பலா ராகியுங் கழிப மன்ற
நகைதர வந்தோர் இரந்தவை
இசைபடப் பெய்தல் ஆற்று வோரே.

—[5]மாறோக்கத்துக் காமக்கணி நப்பாலத்தனார்.

(சொ - ள்.) நெஞ்சே!, கச—ரு. நகை தர வந்தோர் - பொருள் வேட்கையானது கொண்டு வருதலால் வந்துற்ற இரவலர், இரந்தவை- இரந்த பொருள்களை, இசை படப் பெய்தல் ஆற்றுவோர் - புகழ் உண்டாக அளித்தலைச் செய்ய வேண்டுவோர்,

க—ச. கோடை நீடலின் - கோடையின் வெம்மை மிக்கமையால், வாடு புலத்து உக்க - வறண்ட நிலத்தே உதிர்ந்த, சிறு புல் உணவு - சிறிய புல்லரிசியை, நுண் பல் எறும்பு - சிறிய பலவாய எறும்புகள், நெறிபட மறுகி - ஒழுங்கு பெறச் சென்று, கொண்டு அளைச் செறித்த- கொண்டு வந்து தம் வளையில் தொகுத்து வைத்தனவாகிய, வித்தா வல்சி - (தாம்) விதைத்து விளைக்காத அவ் வுணவினைக் கொள்ளும், வீங்கு சிலை மறவர் - பெருத்த வில்லையுடைய மறவர்கள், பல் ஊழ் புக்கு பயன் நிரை கவர - பலமுறை புகுந்து பாற்பசுக் கூட்டங்களைக் கவர்ந்தமையின், கொழுகுடி போகிய பெரு பாழ் மன்றத்து - வளமுற்றிருந்த ஊரின் குடிகள் போய்விட்ட இடமாகிய பெரிய பாழ்பட்ட மன்றத்தின்கண்ணே,

(பாடம்) 1. நாடுபுலர்ந் துக்க. 2. எறும்பினம். 3. பல்லூர். 4. உன்னி. 5. மாறோகம்.

ஏ—கக. நரை மூதாளர் - நரையினையுடைய முதியோர், அதிர் தலை இறக்கி - நடுங்கும் தமது தலையைக் கவிழ்த்து, கவை மனத்து இருத்தும் - தமது கவர்த்த மனத்திலே இருத்தி வல்லுப் போர் புரியும், வல்லு வனப்பு அழிய - வல்லுத் தரையின் அழகு கெட, வரி நிறச் சிதலை அரித்தலின் - வரிகள் பொருந்திய நிறமுடைய கறையான் அரித்தமையான், புல் என்று - பொலிவற்று, பெரு நலம் சிதைந்த பேஎம் முதிர் பொதியில் - பெரிய அழகு கெட்ட அச்சம் மிக்க பொதியிலின், இன்று ஒரு சிறை தங்கி - இன்றுமையுடைய ஒரு புறத்தே தங்கியிருந்து, இன்நகைசிறு மென் சாயல் பெருநலம் உள்ளி - இனிய நகையையும் சிறிய மென்மையாகிய சாயலினையும் உடையாளது பேரழகை நினைத்து, வம்பலர் ஆகியும் - ஏதிலர் ஆகியும், கழிப மன்ற - ஒருதலையாக மேலும் செல்லாநிற்பர். (நீ அங்ஙனம் செல்லுதற்கு வல்லையோ.)

(முடிபு) நரைதர வந்தோர் இரந்தவை இசைபடப் பெய்தல் ஆற்றுவோர், பெரும்பாழ் மன்றத்துப் பெருநலம் சிதைந்த பேஎம் முதிர் பொதியில் இன்று ஒரு சிறைத் தங்கி, இன்னகைச் சிறுமென் சாயல் பெருநலம் உள்ளி, வம்பலராகியும் கழிப மன்ற. (நீ அங்ஙனம் செல்லுதற்கு வல்லையோ.)

(வி - ரை.) எறும்புகொண்டு அளைச் செறித்த வல்சி, வித்தா வல்சி எனத் தனித்தனி கூட்டுக. இதனால் மறவர்கள் தம் உணவினை விதைத்து விளைவித்தலின்றிச் சிற்றெறும்புகள் அரிதின் முயன்று அளையிற் செறித்து வைத்தவற்றை அகழ்ந்து எடுத்து உண்ணும் இயல்பினராதல் பெற்றாம். மனத்து இருத்தும் வல்லு-மனத்திலே சூழ்ந்து விளையாடும் வல்லு என்க. வல்லு-சூது கருவி; ஈண்டுச் சூதாடும் இடத்திற்காயிற்று. நரை மூதாளர் பொதியிலின்கண் சூதாடுவார் என்பது, "பலி கண் மாறிய பாழ்படு பொதியில், நரைமூ தாளர் நாயிடக் குழிந்த, வல்லின் நல்லகம்' என்பதனாலும் அறியப்படும். ஆற்றுவோர் கழிப என்றது, நீ இடைச்சுரத்தில் தலைவியின் நலத்தினை உள்ளி மீள்வாயெனக் குறிப்பித்தவாறு ஆயிற்று.

---

1. புறம்; ௬௪.

378. குறிஞ்சி

[இரவுக்குறிச் சிறைப்புறமாகத் தோழி சொல்லெடுப்பத் தலைமகள் சொல்லியது.]

நிதியந் துஞ்சும் நிவந்தோங்கு வரைப்பின்
வதுவை மகளிர் கூந்தல் கமழ்கொள
வங்கூழ் ஆட்டிய அங்குழை வேங்கை
நன்பொன் அன்ன நறுந்தாது உதிரக்
காமர் பீலி ஆய்மயிற் றோகை
வேறுவே றினத்த வரைவாழ் வருடைக்
கோடுமுற் றிளந்தகர் பாடுவிறந் தியல
ஆடுகள வயிரின் இனிய ஆலிப்
பசும்புற மென்சீர் ஒசிய விசும்புகந்து
இருங்கண் ஆடமைத் தயங்க இருக்கும்
பெருங்கல் நாடன் பிரிந்த புலம்பும்
உடன்ற அன்னை அமரா நோக்கமும்
வடந்தை தூக்கும் வருபனி அற்சிரம்
சுடர்கெழு மண்டிலம் மழுங்க ஞாயிறு
குடகடல் சேரும் படர்கூர் மாலையும்
அனைத்தும் அடூஉநின்று [1]நலிய நீமற்று
யாங்ஙனம் வாழ்தி என்றி தோழி
நீங்கா வஞ்சினஞ் செய்துநத் துறந்தோர்
உள்ளார் ஆயினும் உளனே அவர்நாட்டு
அள்ளிலைப் பலவின் கனிகவர் கைய
கல்லா மந்தி கடுவனோ டுகளுங்
கடுந்திறல் அணங்கின் நெடும்பெருங் குன்றத்துப்
பாடின் அருவி சூடி
வான்றோய் சிமையம் தோன்ற லானே.

—காவட்டனார்.

(சொ - ள்.) கஎ. தோழி—,

க—கக. நிதியம் துஞ்சும் நிவந்து ஓங்கு வரைப்பின் - மிக்க பொருள் தங்கும் உயர்ந்தோங்கும் மனையகத்தே, வதுவை மகளிர் கூந்தல் கமழ் கொள - கலியாணம் செய்த மகளிர்தம் கூந்தல்போல மணம்பொருந்து

(பாடம்) 1. நலிய உஞற்றி.

மாறு, வங்கூழ் ஆட்டிய அம் குழைவேங்கை நன்பொன் அன்ன நறு தாது உதிர-காற்று அசைத்தலால் அழகிய தளிர்களையுடைய வேங்கை மரத்தின் பொன் போன்ற நறிய தாது உதிர்தலால், காமர் பீலி ஆய் மயில் தோகை-விருப்பந் தரும் பீலி பொருந்திய சிறந்த தோகையை யுடைய மயில், வேறு வேறு இனத்த வரை வாழ் வருடை-வேறு வேறு வகையினவாகிய மலையில் வாழும் வருடைகளின், கோடு முற்று இள தகர் பாடுவிறந்து இயல - கொம்புகள் பொருந்திய இளைய கடாக்கள் ஒலியைக் கேட்டு அஞ்சி இரிய, ஆடு களவயிரின் இனிய ஆலி - ஆடும் களத்தே யொலிக்கும் கொம்புபோல இனியனவாக ஒலித்து, விசும்பு உகந்து-வானிற் பறந்து சென்று, இரு கண் ஆடு அமை-நீண்ட கணுக்களையுடைய அசையும் மூங்கிலின் கண், பசுபுற மென்சீர் ஒசிய - பசிய புறத்தினையுடைய மெல்லிய அழகிய இடம் வளைய, தயங்க இருக்கும் பெருகல் நாடன் - விளங்கத் தங்கியிருக்கும் பெரிய மலை பொருந்திய நாட்டை யுடையவனாகிய தலைவன், பிரிந்த புலம்பும் - பிரிந்தமையால் ஆகிய தனிமையும்,

கஉ. உடன்ற அன்னை அமரா நோக்கமும் - மாறுபட்ட அன்னையின் பொருந்தாத பார்வையும்,

கங—௬. வடந்தை தூக்கும் வரு பனி அற்சிரம் - வாடையால் அசைக்கப் பெறும் பெய்யும் பனிக்காலத்தே, சுடர் கெழு மண்டிலம் மழுங்க - ஒளி பொருந்திய தனது மண்டிலம் மழுங்கிட, ஞாயிறு குட கடல் சேரும் படர் கூர் மாலையும் - ஞாயிறு மேலைக் கடலில் மறையும் துன்பம் மிக்க மாலைப்பொழுதும் ஆய,

கசு—எ. அனைத்தும் அடூஉ நின்று நலிய - யாவும் கூடி நின்று வருத்தவும், நீ யாங்ஙனம் வாழ்தி என்றி - நீ எங்ஙனம் உயிர் வாழ்கின்றாய் என்று வினவுகின்றனை,

கஅ—கூ. நீங்கா வஞ்சினம் செய்து நம் துறந்தோர் - நீங்காமைக்குரிய சூளுறவு செய்து பின் நம்மைத் துறந்தோராய அவர், உள்ளார் ஆயினும் - நம்மை நினையாராயினும்,

கக—உச. அவர் நாட்டு அள் இலை பலவின் - அவர் நாட்டில் நெருங்கிய இலைகளையுடைய பலாவின், கனி கவர் கைய - பழத்தினைக் கவர்ந் தெடுத்த கைகளையுடைய, கல்லா மந்தி கடுவனொடு உகளும் - அறியாத பெண் குரங்கு ஆண் குரங்கினோடு துள்ளித் திரியும், கடு திறல் அணங்கின் நெடுபெரு குன்றத்து - மிக்க வலியமைந்த தெய்வத்தை யுடைய நீண்ட பெரிய மலையகத்து, பாடு இன் அருவி சூடி - ஓசை இனிதாகிய அருவியைக்கொண்டு, வான்தோய் சிமையம் தோன்றலான் - வானை அளாவிய உச்சிமலை காணப்பெறுதலின், உளன் - உள்ளேன் ஆகாநின்றேன்.

(முடிபு) தோழி! பெருங்கல் நாடன் பிரிந்த புலம்பும், அன்னை அமரா நோக்கமும் படர்கூர் மாலையும் நலிய, நீ யாங்ஙனம் வாழ்தி என்றி, வஞ்சினம் செய்து துறந்தோர் உள்ளார் ஆயினும், அவர் நாட்டு நெடும் பெருங் குன்றத்து வான்தோய் சிமையம் தோன்றலானே உளன்.

(வி-ரை.) கூந்தல் கமழ் கொள-கூந்தல்போல மணத்தல் செய்ய. கமழ் கொள உதிர என்க. காமர் என்பதற்கு அழகு பொருந்திய என விரித்து, உதிர என்னும் எச்சத்திற்கு முடிபு ஆக்குக. வருடை-மலையில் வாழும் ஒருவகை விலங்கு. இது முதுகில் காலுடையதும் எட்டுக் கால் உடையதும் எனப் பல திறப்படுதலால், வேறு வேறு இனத்த வருடை எனப்பட்டது. [1]'மாவும் மாக்களும்' என்னுஞ் சூத்திரத்து, பேராசிரியர் 'கிளை யென்பன எண்கால் வருடையும் குரங்கும் போல்வன. எண்கால வாயினும், மா வெனப் படுதலின், வருடை, கிளை ஆயிற்று' என்றுரைத்ததும் [2]'மீமிசைக் கொண்ட கவர்பரிக் கொடுந்தாள், வரைவாழ்வருடை' என்னுமிடத்து, 'முதுகிடத்தே கொண்ட, நிலத்தைக் கைக்கொள்ளும் செலவினையுடைய வளைந்த காலையுடைய வரையிடத்தே வாழும் எண் கால் வருடை' என நச்சினார்க்கினியர் உரைத்ததும் காண்க. விறந்து - அஞ்சி. ஆலி - ஆலித்து, ஒலித்து. புலம்பும் நோக்கமும் மாலையும் நலிய என்க. உளைந்து என்பது பாடமாயின், அவற்றைப் பொறுத்தலைச் செய்து என்றுரைக்க. நம்மைத் துறந்து சென்ற தலைவர் நம்மை நினைந்து மீண்டிலராயினும் அவரது மலையின் உச்சி தோன்றுதலால் அதனைப் பார்த்து யான் ஆற்றியுளேன் எனத் தலைவி தோழிக்குக் கூறினாள் என்க. தலைவனைப் பிரிந்த தலைவி அவனது மலையைப் பார்த்து ஆற்றி யிருத்தல், [3]'அவர்நாட்டுக், குன்றம் நோக்கினென் றோழி, பண்டை யற்றோ கண்டிசின் நுதலே' என்பதனானும் அறிக. உளனே-அன் விகுதி தன்மைக்கண் வந்தது.

---

379. பாலை

[முன்னொரு காலத்துப் பொருண்முற்றி வந்த தலைமகன் பின்னும் பொருள் கடைக்கூட்டிய நெஞ்சிற்குச் சொல்லியது.]

நந்நயந் துறைவி தொன்னலம் அழியத்
தெருளா மையின் தீதொடு கெழீஇ
அருளற நிமிர்ந்த முன்போடு பொருள்புரிந்து
ஆள்வினைக் கெதிரிய மீளி நெஞ்சே
நினையினை யாயின் எனவ கேண்மதி
விரிதிரை முந்நீர் மண்டிணி கிடக்கைப்
பரிதியஞ் செல்வம் பொதுமை யின்றி
நனவின் இயன்ற தாயினும் கங்குற்
கனவி னற்றதன் கழிவே அதனான்
விரவுறு பன்மலர் வண்டுசூழ்பு அடைச்சிச்

---

1. தொல், மரபு: கூஉ. 2. . மலைபடு: ௫0உ-௩.
3. குறுந்: உசக.

சுவன்மிசை அசைஇய நிலைதயங் குறுமுடி
ஈண்டுபெண் ணாற்றம் வேண்டுவயின் உவப்பச்
செய்வுறு விளங்கிழைப் பொலிந்த தோள்சேர்பு
எய்திய கனைதுயில் ஏற்றொறுந் திருகி
மெய்புகு வன்ன கைகவர் முயக்கின்
மிகுதிகண் டன்றோ விலனே நீநின்
பல்பொருள் வேட்கையிற் சொல்வரை நீவிச்
செலவுவலி யுறுத்தனை யாயிற் காலொடு
[1] கனையெறி நிகழ்ந்த இலையில் அங்காட்டு
உழைப்புறத் தன்ன புள்ளி நீழல்
அசைஇய பொழுதிற் பசைஇ வந்திவண்
மறப்பரும் பல்குணம் நிறத்துவந் துறுதர
ஒருதிறம் நினைத்தல் செல்லாய் திரிபுநின்று
உறுபுலி யுழந்த வடுமருப் பொருத்தற்குப்
பிடியிடு பூசலின் அடிபடக் குழிந்த
நிரம்பா நீளிடைத் தூங்கி
இரங்குவை யல்லையோ உரங்கெட மெலிந்தே.

—பாலை பாடிய பெருங்கடுங்கோ.

(சொ - ள்.) க—இ. நம் நயந்து உறைவி-நம்மை விரும்பி இருப்பவளாய நம் தலைவியின், தொல் நலம் அழிய - பழைய அழகு கெட, தெருளாமையின் தீதொடு கெழீஇ - அறிவு தெளியப் பெறாமையின் தீமையுடன் பொருந்தி, அருள் அற - இரக்கம் நீங்க, நிமிர்ந்த முன்பொடு பொருள் புரிந்து - மிக்க வன்மையுடன் பொருளை விரும்பி, ஆள் வினைக்கு எதிரிய மீளி நெஞ்சே - அதுபற்றி முயலுதற்கு முற்பட்ட வலிய நெஞ்சமே!, நினையினையாயின் எனவ கேண்மதி - சிந்திப்பாயாயின் யான் கூறுவனவற்றைக் கேட்பாயாக;

க—க. விரி திரை முந்நீர்-விரிந்த அலைகளையுடைய கடல்சூழ்ந்த, மண் திணி கிடக்கை-மண் திணிந்த இவ்வுலக முழுவதும், பொதுமை இன்றி-பிறர்க்குப் பொது இல்லையாக, பரிதி அம்செல்வம்-திகிரி யுருட்டும் செல்வமானது, நனவின் இயன்றது ஆயினும் - உண்மையாகவே கைகூடியதாயினும், அதன் கழிவு கங்குல் கனவின் அற்று - அதன் போக்கு இரவில் கனவிற்றோன்றி மறையும் அத்தன்மையது;

க—கக. அதனால் - அதனால், விரவு உறு பல் மலர் - கலப்புற்ற பல மலர்களை, வண்டுசூழ்பு அடைச்சி - வண்டு மொய்க்கும்படி சூடி,

(பாடம்) 1. கனையெரி திகழ்ந்த.

சுவல் மிசை அசைஇய நிலை தயங்கு உறு முடி - பிடரின் மீது தங்கிய நிலையினின்றும் அசைந்த பெரிய கூந்தலின், ஈண்டு பல நாற்றம் - செறிந்த பலவாயநாற்றம், வேண்டுவயின் உவப்ப - வேண்டுமிடத்துப் பெற்றுமகிழ, செய்வு உறு விளங்கு இழை பொலிந்த தோள் சேர்பு - செய்யப்பெற்ற விளங்கும் அணிகளாற் பொலிவுற்றதோளை அணைந்து, எய்திய கனை துயில் ஏற்றொறும் - பொருந்திய மிக்க துயிலை ஏற்கும் தோறும், திருகி மெய் புகுவு அன்ன கைகவர் முயக்கின் மிகுதி - மாறுபட்டு மெய்யினுள் மெய் புகுதலொத்த கைகளால் விரும்பிக் கொள்ளும் முயக்கத்தினும் மேம்பட்ட பொருளை, கண்டன்றோ இலன் - யான் கண்டதில்லேன்;

கக—அ. நீ நின் பல் பொருள் வேட்கையின் - நீ நின் பலவாய பொருள் விருப்பால், சொல் வரை நீவி - என் சொல்லின் அளவைக் கடந்து, செலவு வலியுறுத்தனையாயின் - செல்லுதலை வற்புறுத்துவை யாயின்,

கஅ—உஎ. காலொடு கனை எரி நிகழ்ந்த இலை இல் காட்டு - காற்றினால் மிக்கெழும் தீ மேவியதாய இலையற்ற காட்டில், உழை புறத்து அன்ன புள்ளி நீழல் - மானின் புறத்துள்ள புள்ளிபோன்ற புள்ளிகளை யுடைய மர நிழலில், அசைஇய பொழுதில் - தங்கி யிருக்குங்கால், இவள் மறப்பு அரு பல் குணம் நிறத்து வந்து உறுதர - இவளது மறத்தற்கரிய பல குணங்களும் நின் நெஞ்சத்து வந்துபுக, பசைஇ - விரும்பி, ஒரு திறம் நினைத்தல் செல்லாய் - ஒரு கூற்றினை நினைத்தல் மாட்டாயாய், திரிபு நின்று - வேறுபட்டு நின்று, உரம்கெட மெலிந்து - திட்பம் அற மெலிந்து, உறு புலி உழந்த வடு மருப்பு ஒருத்தற்கு - பெரிய புலியுடன் போர் செய்து வருந்திய வடுப்பொருந்திய கொம்பினையுடைய களிற்றின் பொருட்டு, பிடி பூசலின் இடு அடிபட குழிந்த - பெண் யானை ஆரவாரத்துடன் இட்டேகும் அடிகள் பதிதலால் பள்ளமாய, நிரம்பா நீள் இடை - சென்று தொலையாத நீண்ட சுரத்தின் இடையே, தூங்கி - தங்கி, இரங்குவை அல்லையோ - வருந்துவாய் அல்லையோ.

(முடிபு) பொருள் புரிந்து ஆள்வினைக்கு எதிரிய நெஞ்சே! கேண்மதி, பரிதியஞ் செல்வம் நனவின் இயன்றதாயினும், அதன் கறிவு கனவின் அற்று, அதனுள் (தலைவியின்) தோள் சேர்பு, கைகவர் முயக்கின் மிகுதி கண்டன்றோ இலன். நீ பொருள் வேட்கையின் செலவு வலியுறுத்தனையாயின், இவள் பல் குணம் நிறத்து வந்துறுதர, ஒரு திறம் நினைத்தல் செல்லாய் நிரம்பா நீளிடைத் தூங்கி இரங்குவை அல்லையோ.

(வி - ரை.) பரிதி அஞ் செல்வம் - திகிரி யுருட்டும் செல்வம்; என்றது புவி முழுதாளும் செல்வம். நனவின் இயன்றதாயினும் என்றது அதன் அருமையை விளக்கிற்று. கனவின் அற்று என்றது கனவினைப் போல் விரைவிலே தோன்றி மறையும் இயல்பிற்று என்றபடி. குழ்பு-குழ என்த் திரிக்க. தயங்குதல் - அசைதல். முடி - கூந்தல். தோளைச் சேர்ந்து துயில் ஏற்குந்தொறும் முயங்கும் முயக்கத்தினும்

மேம்பட்ட பொருளைக் கண்டன்றே இலன் எனத் தலைவன் கூறினன் என்க. [1]'தாம் வீழ்வார் மென்றோட்டுயிலின் இனிதுகொல், தாமரைக் கண்ணான் உலகு' என்பது காண்க. ஒருதிறம் நினைத்தல் செல்லாய்-செல்லுதல், மீளுதல் என்னும் இரு கூற்றினில் ஒன்றினைத் துணிய மாட்டாயாய். அடுமருப்பு என்று பிரித்துரைத்தலுமாம், பிடி பூசலின் இடு அடி என மாறுக.

380. நெய்தல்

[பின்னின்ற தலைமகற்குக் குறைநேர்ந்த தோழி தலைமகட்குக் குறைநயப்பக் கூறியது.]

தேர்சேண் நீக்கித் தமியன் வந்துநும்
ஊர்யா தென்ன நணிநணி ஒதுங்கி
முன்னாட் போகிய துறைவன் நெருநை
அகலிலை நாவல் உண்டுறை உதிர்த்த
ரு. கனிகவின் சிதைய வாங்கிக் கொண்டுதன்
தாழை வேரளை வீழ்துணைக் கிடூஉம்
அலவற் காட்டி நற்பாற் றிதுவென
நினைந்த நெஞ்சமொடு நெடிதுபெயர்ந் தோனே
[2]உதுக்காண் தோன்றும் தேரே இன்றும்
க0. நாமெதிர் கொள்ளா மாயின் தானது
துணிகுவன் போலாம் நாணுமிக வுடையன்
வெண்மணல் நெடுங்கோட்டு மறைகோ
[3]அம்ம தோழி கூறுமதி நீயே.

—மதுரை மருதனிளநாகனார்.

(சொ - ள்.) கக. தோழி—, அம்ம - நான் கூறுவதனைக் கேட்பாயாக ;

க—ங. தேர் சேண் நீக்கி-தனது தேரினைச் சேய்மையில் நிறுத்தி, தமியன் வந்து - தனியனாய் வந்து, நும் ஊர் யாது என்ன-நுமது ஊர் யாதென்று வினவி, நணி நணி ஒதுங்கி - குறுகக் குறுக நடந்து, முன் நாள் போகிய துறைவன் - முன்னாளில் சென்ற துறைவன்,

ங—அ. நெருநை - நேற்று, அகல் இலை நாவல் உண் துறை உதிர்த்த - அகன்ற இலையினையுடைய நாவல் மரம் நீர் உண்ணும் துறைக்கண்ணே சொரிந்த, கனி கவின் சிதைய வாங்கிக்கொண்டு - கனியினை அதன் அழகு கெட இழுத்துக்கொண்டு சென்று, தாழை

1. குறள். ககO௩. (பாடம்) 2. உவக்காண். 3. அம்மா அரிவை, அம்ம வாழி.

வேர் அளை தன் வீழ் துணைக்கு இடூஉம் அலவன் காட்டி - தாழையின் வேர்ப்பக்கலுள்ள வளையிலுள்ள தனது அன்பு பொருந்திய பெண் ஞெண்டிற்குத்தரும் ஓர் ஆண் ஞெண்டினைக் காட்டி, நல் பாற்று இது என-இது நல்ல பான்மையுடையது என்று கூறி, நெடிது நினைந்த நெஞ்சமொடு பெயர்ந்தோன் - நெடிது சிந்தித்த நெஞ்சுடன் மீண்டு சென்றான்;

கூ—கக. இன்றும் உது காண் தேர் தோன்றும் - இன்றும் உதோபார் அவனது தேர் தோன்றாநிற்கும், நாம் எதிர் கொள்ளாம் ஆயின் - நாம் அவனை எதிர்கொண்டு ஏற்காமாயின், நாணு மிக உடையன்-மிக்க நாணமுடையவன் ஆகலான், தான் அது துணிகுவன் போலாம்-அவன் அதனை மெய்யெனத் துணிவான் போலும்;

கஉ—கூ. வெண் மணல் நெடுகோட்டு மறைகோ-நான் வெள்ளிய நெடிய மணற் கரையில் மறைந்து கொள்வேனோ, நீ கூறுமதி-நீ உன் கருத்தினைக் கூறுவாயாக.

(முடிபு) தோழி! தேர் சேணை நீக்கி வந்து முன்றுட்போகிய துறைவன், நெருநை, அலவற் காட்டி நெடிது நினைந்த நெஞ்சமொடு பெயர்ந்தோன், இன்றும் தேர் உதுக்காண்தோன்றும், நாம் எதிர்கொள்ளாம் ஆயின், தான் அது துணிகுவன் போலாம், நெடுங்கோட்டு மறைகோ, நீ கூறுமதி.

(வி - ரை.) யாது என்ன - யாது என்று வினவி. நணி நணி ஒதுங்கி - மெல்ல மெல்ல நடந்து என்க. நற்பாற்று - நல்ல பான்மை யுடையது; பான்மை - ஊழ். இது போன்று என் காதலியை உண் பித்து இன்புறும் பேற்றினைப் பெற்றிலேனே என்று நெடிது நினைந்த நெஞ்சம் என்க. இன்றும் என்பதனை இடைநிலை விளக்காகக்கொண்டு இன்றும் எதிர்கொள்ளாமாயின் எனவும் கூட்டி யுரைக்க, அது துணிகுவன் போலாம் என்றது, நாம் எதிர் கொள்ளாமையின் அவன் பால் அன்பிலேம் என்று துணிந்து ஒழிகுவன்போலும் என்றபடி. நாணம் மிகவுடையன் என்றது, நான் அழியப் பின்னும் பல்கால் வருவான் அல்லன் என்று கூறியபடியாம். இனி, அது துணிகுவன் போலாம் என்றது, மடலேறுதல் முதலியவற்றுள் ஒன்றைத் துணிகு வன் போலும் என்றுரைத்தலுமாம். மறைகோ என்றது, நீ அவனது குறையினை முடிப்பாய் எனக் குறிப்பிற் கூறியது.

[1]"நீகண் டனையெனின் வாழலை நேரிழை அம்பலத்தான்
சேய்கண் டனையன்சென் றாங்கோ ரலவன்றன் சேர்ப்பெடையின்
வாய்வண் டனையதோர் நாவற் கனிநனி நல்கக்கண்டு
பேய்கண் டனையதொன் றாகிநின் றானப் பெருந்தகையே."

என்னும் செய்யுளில் இதன் கருத்து அமைந்திருத்தல் அறிந்து மகிழ்தற் குரியது.

---

1. திருக்கோ : ௪௪.

381. பாலை

[தலைமகன் இடைச் சுரத்துத் தன்னெஞ்சிற்குச் சொல்லியது.]

ஆளி நன்மான் அணங்குடை யொருத்தல்
மீளி வேழத்து நெடுந்தகை புலம்ப
ஏந்தல் வெண்கோடு வாங்கிக் [1]குருத்தருந்தும்
[2]அஞ்சுவரத் தகுந ஆங்கண் மஞ்சுதப
அழல்கான்று திரிதரும் அலங்குகதிர் மண்டிலம்
நிழல்சூன் றுண்ட நிரம்பா நீளிடைக்
கற்றுரிக் குடம்பைக் கதநாய் வடுகர்
விற்சினந் தணிந்த வெருவரு கவலைக்
குருதி யாடிய புலவு[3]நா றிருஞ்சிறை
எருவைச் சேவல் ஈண்டுகிளைத் தொழுதி
பச்சூன் கொள்ளை சாற்றிப் பறைநிவந்து
சேக்கர் வானின் விசும்பணி கொள்ளும்
[4]அருஞ்சுரம் நீந்திய நம்மினும் பொருந்தார்
முனையரண் கடந்த வினைவல் தானைத்
தேனிமிர் நறுந்தார் வானவ னுடற்றிய
ஒன்னாத் தேவ்வர் மன்னெயில் போலப்
பெரும்பாழ் கொண்ட மேனியள் நெடிதுயிர்த்து
வருந்துங்கொ லளியள் தானே சுரும்புண
நெடுநீர் பயந்த நிரையிதழ்க் குவளை
எதிர்மல ரிணைப்போ தன்னதன்
அரிமதர் மழைக்கண் தெண்பனி கொளவே.

—மதுரை இளங்கௌசிகனார்.

(சொ - ள்.) நெஞ்சே! க—கங. ஆளி நல்மான் அணங்கு உடை ஒருத்தல் - ஆளியாகிய நல்ல விலங்கினது வருத்து தலையுடைய ஏறு, மீளி வேழத்து நெடுந்தகை புலம்ப - வலியுடைய யானையின் தலைவனான களிறு வருந்த, ஏந்தல் வெண்கோடு வாங்கி - அதன் நிமிர்ந்த வெள்ளிய கோட்டினைப் பறித்து, குருத்து அருந்தும் - குருத்தினைத் தின்னும், அஞ்சு வரத் தகுந ஆங்கண் - அச்சம் உண்டாகத் தக்க சுரத்திடத்தே, மஞ்சு தப - மேகம் பெய்யாதொழிய, அழல் கான்று திரிதரும் அலங்கு கதிர் மண்டிலம் - எரியினைக் கக்கிச் செல்லும் அசையும் கதிர்களையுடைய ஞாயிறு, நிழல் சூன்று உண்ட நிரம்பா நீள் இடை - நிழலினை அகழ்ந்து உண்ட

(பாடம்) 1. குருச்சருந்து. 2. அஞ்சுவரு தகைய.
3. நாறஞ்சிறை. 4. அருஞ்சுர முன்னிய.

செல்லத் தொலையாத நீண்ட இடத்திலுள்ள, கற்று உரிக் குடம்பைக் கதநாய் வடுகர் - கன்றின் தோலாலாய கூட்டினையும் சினம் பொருந்திய நாயினையுமுடைய வடுகர், வில் சினம் தணிந்த வெருவரு கவலை - தமது வில்லாற் பொரும் வெகுளி நீங்கிய அச்சம் வரும் கவர்த்த நெறிகளில், குருதி ஆடிய புலவு நாறு இருசிறை எருவைச் சேவல் - குருதி படிந்த புலால் நாறும் பெரிய சிறகினையுடைய ஆண் பருந்தினது, ஈண்டுகிளைத் தொழுதி-கிளையுடன் கூடிய கூட்டம், பசு ஊன் கொள்ளை சாற்றி பறை திவந்து - பசிய ஊனின் மிகுதியைத் தெரிவித்துப் பறந்தெழுந்து- செக்கர் வானின் விசும்பு அணி கொள்ளும் - செவ்வானம்போல விசும்பினை அழகு செய்யும், அரும்சுரம் நீந்திய நம்மினும்-அரிய சுரத்தினைக் கடந்து வந்த நம்மைக் காட்டிலும், (நம் தலைவி.)

கஅ—உக. பொருந்தார் முனை அரண் கடந்த வினை வல் தானை- பகைவரது போர் செய்யும் அரணை வென்ற போர்த்தொழில் வல்ல சேனையினையும், தேன் இமிர் நறு தார்-வண்டுகள் ஒலிக்கும் நறிய மாலையினையுடைய, வானவன் - சேரன், உடற்றி - போர் புரிந்து அழித்த, ஒன்னாத் தெவ்வர் மன் எயில் போல - மாறுபட்ட பகைவரது பொருந்திய மதில்போல, பெரும் பாழ் கொண்ட மேனியள்- மிக்க பாழ் பட்ட மேனியளாகி, சுரும்பு உண நெடுநீர் பயந்த நிரை இதழ் குவளை- வண்டு தேனைப் பருக ஆழமான நீரினால் தரப்பட்ட நிரையாகவுள்ள இதழ்களையுடைய குவளையது, எதிர் மலர் இணை போது அன்ன-புதிய மலராய இரண்டு பூக்களைப் போன்ற, தன் அரிமதர் மழை கண்-தனது செவ்வரி பரந்த மதர்த்த குளிர்ந்த கண்கள், தெண் பனி கொள- தெளிந்தநீரைக் கொள்ள, நெடிது உயிர்த்து-பெருமூச்செறிந்து, வருந் தும் கொல் - வருந்தியிருப்பளோ, அளியள் - இரங்கத்தக்காள்.

(முடிபு) நெஞ்சே! அருஞ்சுரம் நீந்திய நம்மினும் (நம் தலைவி) பெரும் பாழ் கொண்ட மேனியள் (ஆகி) நெடிது உயிர்த்து தன் கண் தெண் பனி கொள வருந்துங்கொல், அளியள்.

(வி—ரை.) ஆளியானது யானைக் கொம்பைப் பறித்து உண்ணும் என்பது, 'மூரித்தாள் ஆளியானைத், தலைநிலம் புரளவெண் கோடுண் டதே போன்று' என்பதனாலும் அறியப்படும். குருகு என்னும் பாடத் திற்கும் கருத்து என்பதே பொருளாகும். கான்று குன்று என்பன இலக் கணை வழக்கு. வம்பலர் மடிந்து ஒழிந்தமையின் வடுகர்சினந் தணிந்தார் ஆயிற்று. விற்சினம் - விற்கொண்டு பொரும் சினம். கிளையையுடைய சேவலினது தொழுதி என்க. பசுஞ் ஊன் கொள்ளை சாற்றுதலாவது தாம் பறத்தலால் ஊன் மிகுதியாயிருத்தலை ஏனோர் அறியச் செய்தல். குருதி படிந்த சிறகுடன் விசும்பிலே வட்டமிடுதலால், எருவைச் சேவ லின் தொழுதி செவ்வானம் போல்வதாயிற்று. நீளிடையில் உள்ள கவலையில் குருதியாடிய எருவைச் சேவல் விசும்பு அணி கொள்ளும் அருஞ்சுரம் என்க எதிர் மலர்- அப்பொழுது அலர்ந்த மலர்.

1. வேக : உடுடு௪.

382. குறிஞ்சி

[இரவுக்குறிச் சிறைப்புறமாகத் தோழி தலைமகட்குச் சொல்லியது.]

பிறருறு விழுமம் பிறரும் நோப
தம்முறு விழுமம் தமக்கோ தஞ்சம்
கடம்புகொடி யாத்துக் கண்ணி சூட்டி
வேறுபல் குரல ஒருதூக் கின்னியம்
காடுகெழு நெடுவேட் [1]பாடுகோளைக் கேற்ப
[2]அணங்கயர் வியன்களம் பொலியப் பையத்
தூங்குதல் புரிந்தனர் நமரென ஆங்கவற்கு
அறியக் கூறல் வேண்டும் தோழி
அருவி பாய்ந்த கருவிரல் மந்தி
செழுங்கோட் பலவின் பழம்புணை யாகச்
சாரற் பேரூர் முன்றுறை இழிதரும்
வறனுறல் அறியாச் சோலை
விறன்மலை நாடன் சொன்னயந் தோயே.

—கபிலர்.

(சொ - ள்.) அ—கங. தோழி—, அருவி பாய்ந்த கருவிரல் மந்தி-அருவியின்கட் பாய்ந்த கரிய விரலையுடைய பெண் குரங்கு, செழு கோள் பலவின் பழம் - வளமுறக் காய்த்தலைக் கொள்ளும் பலாவின் பழத்தினை, புணையாக-தெப்பமாகக் கொண்டு, சாரல் பேர் ஊர் முன் துறை இழிதரும்-பக்க மலையிலுள்ள பெரிய ஊரின்கண் துறை முன்பு வந்திறங்கும், வறன் உறல் அறியாச் சோலை விறல் மலை நாடன்-வறட்சி யுறுதலை அறியாத சோலையையுடைய வெற்றி பொருந்திய மலைநாட்டின் தலைவனது, சொல் நயந்தோய்- சொல்லை விரும்பி ஏற்றனை;

க—உ. பிறர் உறு விழுமம் பிறரும் நோப-பிறர்க்கு உறும் துன்பம் காணின் நல்லோர் தாம் பிறரே யாயினும் நோவாநின்று விலக்க முயல்வர், (அன்றி), தம் உறு விழுமம் தமக்கோ தஞ்சம்-தமக்கு உற்ற துன்பினைத் தமக்குப் பெரிதாகக் கொள்ளாது எளிதாகக் கொள்வர்; (இது சான்றோர் இயற்கை.)

ங—அ. நமர்-நம்மவர், கடம்பு கொடி யாத்து-கடம்பின்கட் கொடியினைக் கட்டி, கண்ணி சூட்டி-மாலை சூட்டி, வேறு பல் குரல ஒரு தூக்கு இன் இயம் - பல்வேறு குரலை உடையனவாகிய தாளத்தின் வழிப்படும் ஒரு தூக்கினையுடைய இனிய வாச்சியங்களைக்கொண்டு, காடு கெழு நெடு வேள் பாடு கோளைக்கு ஏற்ப-காட்டிற் பொருந்திய

(பாடம்) 1. பாடுகொளைக் கொப்ப. 2. அணங்கமர்.

நெடிய முருகனைப் பாடும் பாட்டிற்குப் பொருந்த, அணங்கு அயர் வியன்களம் பொலிய - வெறியாட்டுச் செய்யும் பெரிய களம் சிறப்புற, பைய தூங்குதல் புரிந்தனர் - மெல்ல ஆடுதலை விரும்பினர், என - என்று, ஆங்கு அவற்கு அறியக்கூறல் வேண்டும் - தலைவனைக் கானுமிடத்து அவனுக்கு நீ உணரக் கூறுதல் தக்கது.

(முடிபு) தோழி! மலை நாடன் சொல் நயந்தோய், பிறருறு விழுமம் பிறரும் நோப, தம்முறு விழுமம் தமக்கோ தஞ்சம், நமர், நெடுவேட் பாடு கொளைக் கேற்பக் களம் பொலியத் தூங்குதல் புரிந்தனர் என அவற்கு அறியக் கூறல் வேண்டும்.

(வி - ரை.) பிறருற்ற துன்பத்திற்கு வருந்துதலும் தம்மையுற்ற துன்பத்தை பொறுத்தலும் சான்றோர் இயல்பாகலால், நம் தலைவர் நாம் உற்ற துன்பத்தை அறியின் விரைந்து அதனைப் போக்குதற்கு முற்படுவர் எனத் தோழி தலைவிக்குக் கூறினாள் என்க. ஒரு தூக்கு இன்னியம் - தாளங்களின் வழி வரும் செந்தூக்கு முதலாகிய எழுவகைத் தூக்கினுள் ஒன்றினைப் பொருந்திய இன்னியம் என்க. காடு என்றது ஈண்டுக் குறிஞ்சியை. தோழி என்றது தலைவியை.

---

383. பாலை

[மகட் போக்கிய தாய் சொல்லியது.]

[1] தற்புரந் தெடுத்த எற்றுறந் துள்ளாள்
ஊருஞ் சேரியும் ஓராங் கலரெழக்
[2] காடுங் காவும் அவனொடு துணிந்து
நாடுந் தேயமும் நனிபல இறந்த
சிறுவன் கண்ணிக் கேர்தே றவரென
வாடினை வாழியோ வயலை நாடோறும்
[3] பல்கிளைக் கொடிக்கோம் பலமர மலர்ந்த
அல்குல் [4] தழைக்கூட்டு அங்குழை உதவிய
வினையமை வரனீர் விழுத்தொடி தத்தக்
கமஞ்சூற் பெருநிறை தயங்க முகந்துகொண்டு
ஆய்மடக் கண்ணள் தாய்முகம் நோக்கிப்
பெய்சிலம் பொலிப்பப் பெயர்வனள் வைகலும்
ஆரநீர் ஊட்டிப் புரப்போர்
யார்மற் றுப் பெறுகுவை அளியை நீயே.

—கயமனார்.

(பாடம்) 1. தற்பயந் தெடுத்த, எற்றுறந் தருளாள். 2. காடும் கானமும். 3. பல்கிளைக் கொடிக்கொம் பலர்ந்த அல்குல், தழையணிக் கூட்டும் குழை பல உதவிய. 4. தலைக் கூட்டு.

(சொ.- ள்.) க—க. வயலே-வயலைக் கொடியே, வாழியோ - நீ வாழி, தன் புரந்து எடுத்த- தன்னை வளர்த்தெடுத்த, என் துறந்து உள்ளான்- என்னையும் வினையாளாய்த் துறந்து, ஊரும் சேரியும் ஓராங்கு அலர்எழ- ஊரிலும்|சேரியிலும் ஒருபெற்றியே அலர்மிக, காடும்காவும் அவனொடு துணிந்து- காடும் சோலையும் அத் தலைவனொடு போகத்துணிந்து, நாடும் தேயமும் நனிபல இறந்த - மிகப் பலவாய நாடுகளையும் தேயங்களையும் கடந்த, சிறு வன்கண்ணிக்கு-- இளைய வன்கண்மை யுடையாட்கு,[1] ஏர் தேறுவர், என- அழகு செய்விப்பார் போல, வாடினை-வாடியுள்ளாய்,

க—கச. நாள் தொறும்- ஒவ்வொரு நாளும், பல் கிளை கொடி கொம்பு- பல கிளையாய ஒழுகிய கொம்புகள், அலமர - பாரம் தாங்காது சுழல, மலர்ந்த - விரிந்த, அல்குல் தழைக் கூட்டு அம் குழை உதவிய - அல்குலில் தழை யுடைக்குக் கூட்டும் அழகிய தளிர்களை நீ தருமாறு, ஆய் மட கண்ணள்-அழகிய மடப்பம் தோன்றும் கண்களையுடைய என் மகள், விழு தொடி தத்த-சிறந்த வளையல் அசையவும், பெய் சிலம்பு ஒலிப்ப-காலிற் பெய்தசிலம்புஒலிக்கவும், வினை அமைவரல் நீர்-தொழிற் பட்ட மூங்கிற் குழாயின் வழியாக வந்து விழும் நீரினை, கமம் சூல்பெரு நிறை தயங்க முகந்து கொண்டு- நிறைந்த நீரினைக் கொள்ளும் பெரிய காலில் அசைய முகந்து எடுத்துக்கொண்டு வந்து ஊற்றி, தாய் முகம் நோக்கி - தாயைப் போல நின் முகத்தினைப் பார்த்து, வைகலும் - நாடோறும், பெயர்வனள் - பெயர்வாளாவள் அன்றே, (அவள்போல) ஆர நீர் ஊட்டி-நிறையநீரினை உண்பித்து, புரப்போர் மற்று யார் பெறு குவை-புரப்பார் யாரை இனிநீ பெறுவாய்; அளியை-இரங்கத் தக்காய்.

(முடிபு) வயலை வாழி! காடும் காவும் அவனொடு துணிந்து நாடும் தேயமும் இறந்த சிறுவன்கண்ணிக்கு ஏர் தேறுவரென வாடினை, நாடொறும் அம் குழை உதவிய, ஆய்மடக் கண்ணள் அமை வரல் நீர் பெரு நிறை தயங்க முகந்து கொண்டுவந்து ஊற்றித் தாய்முகம் நோக்கிப் பெயர்வனள் அன்றே (அவள்போல) இனி நீருட்டிப் புரப்போர் யார் பெறுகுவை நீ; அளியை

(வி • ரை.) சேரி - ஊரின் ஒரு பகுதி. [1]"ஊருஞ் சேரியும் உட னியைந் தலரெழ" என்பதன் உரை காண்க. காடும் கானமும் என்பது பாடமாயின் காடும் சுரமும் என்று பொருள் கொள்க. தேயம்-நாடு. பல சேர்ந்தது. தேறுவர்-தெளிபவர்; தெளிந்து செய்விப்பவர் என்றும் பொருட்டு. மலர்ந்த குழை உதவிய எனவும், அமைவரல் நீர் நிறை தயங்க முகந்து கொண்டு எனவும் கூட்டுக. உதவிய - உதவுமாறு. செய்யிய என்றும் வினையெச்சம். அமை - மூங்கிற் குழாய். நிறை- எனப்பட்டது; தயங்கல்-அசைதல். தாய் முகம் நோக்கி-தாய்போல முகம் நோக்கி என விரித்துரைக்க. ஆர-நிறைய, உண்ண என்றுமாம். மற்று - வினைமாற்றின்கண் வந்தது.

---

1. அகம்: உஉ0.

384. முல்லை

[வினைமுற்றிய தலைமகன் வரவுகண்டு உழையர் சொல்லியது.]

இருந்த வேந்தன் அருந்தொழில் முடித்தெனப்
புரிந்த காதலொடு பெருந்தேர் யானும்
ஏறிய தறிந்தன் றல்லது வந்தவாறு
நனியறிந் தன்றோ இலனே தாஅய்
முயற்பறழ் உகளும் முல்லையம் புறவிற்
கவைக்கதிர் வரகின் சீறூர் ஆங்கண்
மெல்லியல் அரிவை இல்வயின் நிறீஇ
இழிமின் என்றநின் மொழிமருண் டிசினே
வான்வழங் கியற்கை வளிபூட் டினையோ
மானுரு வாகநின் மனம்பூட் டினையோ
உரைமதி வாழியோ வலவ எனத்தன்
வரைமருள் மார்பின் அளிப்பனன் முயங்கி
மனைக்கொண்டு புக்கனன் நெடுந்தகை
விருந்தேர் பெற்றனள் திருந்திழை யோளே.

—[1] ஒக்கூர் மாசாத்தியார்.

(சொ - ள்.) கக. வலவ - பாகனே, வாழி - வாழ்வாயாக.

க—கக. இருந்த வேந்தன் - பாசறைக்கண்ணிருந்த நம் அரசன், அரும் தொழில் முடித்தென - அரிய போரினை வென்றி கொண்டுமுடித் தானாக, புரிந்த காதலொடு - விரும்பிய காதலொடு, யானும், —பெரும் தேர் ஏறியது அறிந்தன்று அல்லது - பெரியதேரின்கண் ஏறியமர்ந்ததை அறிந்ததேயன்றி, வந்தவாறு - இங்கு வந்துற்ற பரிசினை, நனி அறிந் தன்றோ இலன் - நன்கு அறிந்திலேன், முயல்பறழ் தாஅய் உகளும்முல்லை அம்புறவில் - முயற்குட்டிகள் தாவிக்குதிக்கும் முல்லையாய அழகிய காட் டில், கவை கதிர் வரகின் சிறு ஊர் ஆங்கண் - கவர்த்த கதிரினைக் கொண்ட வரகினையுடைய சிறிய ஊரிடத்தே, மெல் இயல் அரிவைஇல் வயின் நிறீஇ - மென்மைத் தன்மை வாய்ந்த தலைவியின் இல்லின்கண் தேரினை நிறுத்தி, இழிமின் என்றநின் மொழி மருண்டிசின் - இறங்குக என்ற நின் சொற்கேட்டு மருட்சியுற்றேன், வான் வழங்கு இயற்கை வளி - வானில் இயங்கும் இயல்பினையுடைய காற்றினை, மான் உருவாக, குதிரையின் வடிவாக, பூட்டினையோ - பூட்டி வந்தனையோ, (அன்றி) நின் மனம் பூட்டினையோ - நினது மனத்தினை (அங்ஙனம்) பூட்டி வந்தனையோ, உரை மதி - கூறுவாயாக, என - என்று கூறி,

(பாடம்) 1. குடவாயிற் கீரத்தனார்.

கடு. நெடுந்தகை - பெருந்தகைமையுடைய தலைவன்,

கக—கடு. தன்வரை மருள் மார்பின் களிப்பனன் முயங்கி-தனது மலையையொத்த மார்பினகத்தே (அவளைச்) செறிப்போனுய்த் தழுவி, மனைகொண்டு புக்கனன்-தன் மனைக்கண் உடன் கொண்டு புகுந்தனன்;

கசு. திருந்து இழையோள் - திருந்திய அணிகலையுடைய அவன் தலைவி, விருந்து ஏர் பெற்றனள் - விருந்தோம்பும் சிறப்பினைப் பெற்றாள்.

(முடிபு) வலவ! வாழி! யானும் பெருந்தேர் ஏறியது அறிந்தனனல்லது வந்த வாறு அறிந்தனனோ இலன், சீரார் ஆய்கல் இயல்பின் நீரில் ஓதிரிப் என்ற நின்மொழி மருண்டிசின், நீ வான் வளியினை மானுருவாகப் பூட்டினையோ, அன்றி, நின் மனத்தினை அவ்வாறாம் பூட்டினையோ, உரைமதி என நெடுந்தகை தன் மார்பின் முயங்கி மனைக் கொண்டு புக்கனன்; திருந்திழை விருந்து ஏர் பெற்றனள்.

(வி - ரை.) வேந்தன் அருந்தொழில் முடித்து என - வேந்தனுடைய அரிய தொழிலை யான் முடித்தேனாக என்றுரைத்தலும் ஆம். நனி அறிதல் - நன்கு அறிதல். மொழி மருண்டிசின் - மொழியைக் கேட்டு மருண்டேன். வான் வழங்கியற்கை வளி பூட்டினையோ, மானுருவாக நின் மனம் பூட்டினையோ உரைமதி என்றது பிறபொருட்கண் தோன்றிய ஆக்கம் பற்றிய வியப்பு. களிப்பனன்-செறிப்போனாகி, களி என்னும் உரியடியாகப் பிறந்த வினை. விருந்தோ பெற்றனள் என்று பாடம் கொள்ளுதலுமாம். இதற்கு ஓகாரம் சிறப்பு.

(மே - ள்.) [1]'புதுமை பெருமை' என்னுஞ் சூத்திரத்து '.........பெருந்தேர் யானும்..........மருண்டிசினே' என்பதனை மருட்கை என்னும் மெய்ப்பாட்டிற்கு எடுத்துக்காட்டினர், இளம்.

[2]'கரணத்தின் அமைந்து முடிந்த காலை' என்னுஞ் சூத்திரத்து, 'பேரிசை ஊர்திப் பாகர் பாங்கினும்' என்னும் பகுதிக்கண் இச் செய்யுளைக் காட்டி, இதனாற் பாகன் சிறப்புக் கூறியவாறு காண்க என்றும், [3]'வினைவயிற் பிரிந்தோன்' என்னுஞ் சூத்திரத்து, இதனுள், 'புரிந்த காதலொடு......மானுருவாக நின் மனம் பூட்டினையோ, உரைமதி வாழியோ வலவ' என, 'உள்ளம் போல உற்றுழி உதவிற்று' எனத் தலைவன் கூறியவாறு காண்க என்றும் கூறினர், நச்.

---

1. தொல், மெய்ப்பாடு: எ. 2. தொல், கற்பு: ௫.
3. தொல், கற்பு: ௫௨.

385. பாலை

[மகட் போக்கிய செவிலித்தாய் சொல்லியது.]

தன்னோ ரன்ன ஆயமும்! மயிலியல்
என்னோ ரன்ன தாயருங் காணக்
கைவல் யானைக் கடுந்தேர்ச் சோழர்
காவிரிப் படப்பை உறந்தை யன்ன
பொன்னுடை நெடுநகர்ப் புரையோர் அயர
நன்மாண் விழவில் தகரம் மண்ணி
[1]ஆம்பல புணர்ப்பச் செல்லாள் காம்போடு
நெல்லி நீடிய கல்லறைக் கவாஅன்
அத்த ஆலத்து அலந்தலை நெடுவீழ்
தித்திக் குறங்கில் திருந்த உரிஞ
வளையுடை முன்கை அளைஇக் கிளைய
பயிலிரும் பிணையற் பசுங்காழ்க் கோவை
அகலமை யல்குல் பற்றிக் கூந்தல்
ஆடுமயிற் பீலியிற் பொங்க நன்றும்
தானமர் துணைவன் ஊக்க ஊங்கி
உள்ளாது கழிந்த முள்ளெயிற்றுத் துவர்வாய்ச்
சிறுவன் கண்ணி சிலம்புகழீஇ
அறியாத் தேஎத்தள் ஆகுதல் கொடிதே.

—குடவாயிற் கீரத்தனார்.

(சொ-ள்.) ௧—௭. மயில் இயல்-மயில்போலும் சாயலையுடைய என்மகள், தன் ஓரன்ன ஆயமும்-தன்னை யொத்த தோழி மாரும், என் ஓரன்ன தாயரும் காண-என்னை யொத்த தாய்மாரும் கண்டு மகிழ, கைவல் யானை கடு தேர் சோழர்-வலிய கையினையுடைய யானையையும் கடிய தேரினையுமுடைய சோழரது, காவிரிப் படப்பை உறந்தை அன்ன-காவிரியின் பக்கத்ததாகிய உறையூரை யொத்த, பொன் உடை நெடு நகர்-செல்வம் மிக்க பெரிய மனையில், புரையோர் அயர-மேலோர் வதுவை செய்விக்க (நிகழும்), நல்மாண் விழவில்-நல்ல சிறப்புற்ற மணவிழாவில், தகரம் மண்ணி-அவட்கு மயிர்ச் சாந்தினைப் பூசி, ஆம் பல புணர்ப்ப செல்லாள்-மற்றும் பொருந்திய பல சிறப்புக்களையும் செய்விக்க மணந்து செல்லாளாய்,

௭—௧௮. காம்பொடு நெல்லி நீடிய கல் அறை கவாஅன்-மூங்கிலுடன் நெல்லிமரம் உயர்ந்த கற்பாறைகளையுடைய பக்கமலையிலே,

---

(பாடம்) 1. யாம்பால்.........சொல்லாள்!

அத்தம் ஆலத்து அலங்தலை நெடுவீழ்-நெறியிலுள்ள ஆலமரத்தின் வாடியசைகின்ற நெடிய விழுது, நித்தி குறங்கில் திருந்த உரிஞ- தனது தேமல் பொருந்திய துடையில் நன்கு உராய்ந்திட, கூந்தல் ஆடு மயிற் பீலியில் பொங்க - கூந்தலானது ஆடும் மயிலின் தோகை போலப் பொங்கிப் பரக்க, தான் அமர் துணைவன் - தன்னால் விரும்பப்பெற்ற துணைவன், வளையுடை முன்கை அளை இ-தனது வளை பொருந்திய முன் கையினைப் பற்றியும், கிளைய பயில் இரும் பிணையல் பசு காழ் கோவை-பலகிளையினவாய் நெருங்கிய பெரிய மாலையாய அழகிய வடங்களைக் கொண்ட மேகலை யணிந்த, அகல் அமை அல்குல் பற்றி - அகற்சியமைந்த அல்குலை அணைத்தும், நன்றும் ஊக்க ஊங்கி - பெரிதும் ஊக்கமுறுத்த ஊக்கங் கொண்டு, உள்ளாது கழிந்த - வழிவருத்தம் எண்ணாது கழிந்த, முள் எயிற்று துவர்வாய் சிறுவன்கண்ணி - முட் போன்ற கூரிய பற்களையும் பவளம் போன்ற வாயினையுமுடைய அஞ்சாமையுடையளாய இளையள், சிலம்பு கழீஇ அறியாத் தேஎத்தள் ஆகுதல் - அறியப் படாத தேயத்திலே சிலம்பு கழித்து வதுவை செய்திருத்தல், கொடிது - இன்னாமை யுடையது.

(முடிபு) மயிலியல், ஆயமும் தாயரும் காண, உறந்தை யன்ன நெடு நகரிலே புரையோர் அயர, விழவில், நகரம் மன்னி, ஆம் பல புணர்ப்பச் செல்லாளாய், கல் அறை கவான், தானமர் துணைவன் ஊக்க ஊங்கிக் கழிந்த சிறுவன்கண்ணி, சிலம்பு கழீஇ, அறியாத் தேஎத்தள் ஆகுதல் கொடிது.

(வி - ரை) காவிரிப் படப்பை உறந்தை-காவிரியின் தோட்டக் கூறு சூழ்ந்த உறையூர் என்றுமாம். ஆம் பால் புணர்ப்ப என்பது பாடமாயின், ஆகும் ஊழ் புணர்க்க என்று உரைக்க. அலங்தலை- அலந்ததலை என்றதன் விகாரமுமாம். முன் கை கிளைத்தலால் கூந்தல் மயிற் பீலி போலத் தாழ்ந்து அல்குல் பற்றிப் பொங்க என்றுரைத்தலுமாம். ஊக்க ஊங்கி - செலுத்தச் சென்று என்றுமாம். அறியாத் தேஎத்தளாய்ச் சிலம்பு கழீஇ இருத்தல் என மாறுக.

---

386. மருதம்

[தோழி வாயின் மறுத்தது. தலைமகள் தகுதி சொல்லியதூஉமாம்.]

பொய்கை நீர்நாய்ப் புலவுநாறு இரும்போத்து
வாளை நாளிரை தேரும் ஊர
நாணினேன் பெரும யானே பாணன்
மல்லடு மார்பின் வலியுற வருந்தி
எதிர்தலைக் கொண்ட ஆரியப் பொருநன்
[1]நிறைத்திரண் முழவுத்தோள் கையகத் தொழிந்த
திறன்வேறு கிடக்கை நோக்கி நற்போர்க்

(பாடம்) 1. கிறைத்தாண் முழவுத்தோள்.

கணையன் நாணி யாங்கு மறையினள்
மெல்ல வந்து நல்ல கூறி
மையீர் ஓதி மடவோய் யானுநின்
சேரி யேனே அயலி லாட்டியேன்
நுங்கை யாகுவென் நினக்கெனத் தன்கைத்
தொடுமணி மெல்விரல் தண்ணெனத் தைவர
நுதலும் கூந்தலும் நீவிப்
பகல்வந்து பெயர்ந்த வாணுதற் கண்டே.

—பரணர்.

(சொ - ள்.) க—உ. பொய்கை புலவு நாறு நீர் நாய் இரும் போத்து - பொய்கைக்கண்ணுள்ள புலால் நாறும் பெரிய நீர்நாயின் ஆண், நாள் இரை வாளை தேரும் ஊர - நாட்காலத்தே வாளையாய இரையினை ஆராயும் ஊரையுடைய தலைவ!

கூ. பெரும - பெருமானே !,

அ—கஙி. மறையினள் மெல்ல வந்து-மறைந்து மெல்லென வந்து, நல்ல கூறி-முகமனுரைகள் கூறி, மை ஈர் ஓதி மடவோய்-கரிய பெரிய கூந்தலையுடைய மடவோளே, யானும் நின் சேரியேனே - யானும் நின் சேரியில் உள்ளவளே, அயல் இல்லாட்டியேன் - அயன்மனைக்கு உரியேன், நினக்கு நுங்கை ஆகுவென் - உனக்குத் தங்கையாவேன், என என்று கூறி, தன் கை தொடுமணி மெல் விரல் தண் என தைவர நுதலும் கூந்தலும் நீவி-தன்கையின் மோதிரம் அணிந்த மெல்லிய விரலால் தண்ணென்று பொருந்த நெற்றியினையும் கூந்தலையும் தடவி, பகல் வந்து பெயர்ந்த வாள் நுதல் கண்டு - பகற் போதில் வந்து மீண்ட ஒள்ளிய நெற்றியினையுடைய நின் பரத்தையைக் கண்டு.

உ—அ. பாணன் மல் அடு மார்பின் வலி உற வருந்தி - பாணன் என்பானது மற்போர் செய்தலில் வல்ல மார்பினது வலிமை மிகலான் வருந்தி, எதிர் தலைக் கொண்ட - அவனோடு எதிர் நின்று பொருதலை மேற்கொண்ட, ஆரியப் பொருநன் - ஆரியப் பொருநன் என்பானது, நிறை திரண் முழவு தோள் - வலிநிறைதலைக்கொண்ட திரண்ட முழவு போன்ற தோள்கள், கை அகத்து ஒழிந்த திறன் வேறு கிடக்கை நோக்கி-அப் பாணன் கையகப்பட்டு ஒழியக் கிடந்த வேறு வகையாகிய கிடக்கையைப் பார்த்து, நல்போர் கணையன் நாணியாங்கு-நல்ல போர் வல்ல கணையன் என்பான் நாணியது போல,

கூ. யான் நாணினென் - யான் நாணமுற்றேன்.

(முடிபு) ஊர! பெரும மறையினள் வந்து நல்ல கூறி நுதலும் கூந்தலும் நீவி, பகல் வந்து பெயர்ந்த வாணுதற் கண்டு, பாணனொடு பொருத ஆரியப் பொருநன் முழவுத் தோள்கள் அவன் கையகப்பட்டு ஒழியக் கிடந்த கிடக்கையை நோக்கிக் கணையன் நாணியாங்கு யான், நாணினென்.

(வி-ம்.) 'பாணன்.....கணையன் நாணி யாங்கு' என்னும் பகுதியிற் கூறிய வரலாறு; மற்போரில் வல்ல பாணன் என்பானும் ஆரியப் பொருநன் ஒருவனும் மற்போர் பொருத காலையில், பொருநன் தோள்கள் பாணன் கையகத்து அகப்பட்டு அற்றுஒழிய அவன் இறந்து கிடந்ததனை நோக்கிக் கணையன் என்பான் நாணினன் என்பது. இங்குக் கூறப்பெற்ற கணையன் என்பான் ஆரியப் பொருநனுக்கு நண்பனாக வேனும் அவனே வெல்வான் எனச் சூளுரைத்தவனாகவேனும் இருத்தல் வேண்டும். திறன் வேறு கிடக்கை என்றது, உயிர் நீங்கிக் கிடக்கும் கிடக்கையை. ஒழிந்த கிடக்கை-தோள் ஒழிய உடல் கிடந்த கிடக்கை என்க. தோட்கை யகத்து என்பதொரு பாடம் இருப்பின் பாணனவன் ஆரியப் பொருநனுடைய கையில் அகப்பட்டு ஒழிந்தான் என்று பொருள் கொள்ளல் தகும். அங்ஙனமாயின் கணையன் பாணனுக்கு நட்பாளன் ஆதல் வேண்டும். மடவோய் என்றது பரத்தை தலைவியை விளித்தது. நுங்கை யாகுவென் என்றதற்கு நினக்குத் தோழி யாவேன் என நச்சினார்க்கினியர் பொருள்கொள்வர். மணி - மணி பதித்த மோதிரம். தொடுதல் - அணிதல். பகல் வந்து பெயர்ந்த என்றதனால் பரத்தை பலருங் காணக் கூசாது வந்தாள் என்பதும், நுதலும் கூந்தலும் நீவி என்றதனால் அவள் தலைவியைப் பேணாது ஒழுகினாள் என்பதும் கூறி, அதற்குத் தலைவி நாணினாள் என்பாள் நாணினென் யானே என, அதனைத் தன் மேல் ஏறட்டுத் தோழி கூறினாள் என்க.

(உ - றை.) நீர்நாயின் புலவு நாறும் போத்து நாட் காலத்தே வாளை இரை தேரும் ஊர என்றது, தலைவன் தன் புறத்தொழுக்கத்தால் ஊரெல்லாம் அலரெழச் செய்து, விடியலில் தலைவியை நாடி வருகின்றான் என்றபடி.

(மே - ள்.) [1]'பெறற்கரும் பெரும்பொருண் முடிந்தபின் வந்த' என்னுஞ் சூத்திரத்து, பேணா ஒழுக்கம் நாணிய பொருளினும் என்னும் பகுதிக்கண், இச் செய்யுளைக் காட்டி, இதனுள் யான் நினக்குத் தோழி யாவேன் எனப் பரத்தை நீவிய பேணா ஒழுக்கத்திற்குத் தலைவி நாணியது கண்டு, தான் நாணினேனென்று தலைவற்குத் தோழி கூறியவாறு காண்க என்றார், நச்.

---

1. தொல், கற்பு : 9.

387. பாலை

[தலைமகளது குறிப்பறிந்த தோழி தலைமகனைச் செலவழுங்கச் சொல்லியது.]

திருந்திழை நெகிழ்ந்து பெருந்தோள் சாஅய்
அரிமதர் மழைக்கண் கலுழச் செல்வீர்
வருவீர் ஆகுதல் உரைமின் மன்னோ
[1]உவருணப் பறைந்த ஊன்றலைச் சிறாஅரோடு
அவ்வரிக் கொன்ற கறைசேர் வள்ளுகிர்ப்
பசைவிரற் புலைத்தி நெடிதுபிசைந் தூட்டிய
பூந்துகில் இமைக்கும் பொலன்காழ் அல்குல்
அவ்வரி சிதைய நோக்கி வெவ்வினைப்
[2]பயிலரிற் கிடந்த வேட்டுவிளி வெரீஇ
வரிப்புற இதலின் மணிக்கட் பேடை
நுண்பொறி அணிந்த எருத்திற் கூர்முட்
செங்காற் சேவற் பயிரும் ஆங்கண்
வில்லீண் டருஞ்சமந் ததைய நூறி
நல்லிசை நிறுத்த நாணுடை மறவர்
நிரைநிலை நடுகற் பொருந்தி இமையாது
இரைநசைஇக் கிடந்த முதுவாய்ப் பல்லி
சிறிய [3]தெற்றுவ தாயிற் பெரிய
ஓடை யானை உயர்ந்தோ ராயினும்
நின்றாங்குப் பெயருங் கானஞ்
சென்றோர் மன்னென இருக்கிற் போர்க்கே.

—மதுரை மருதனிளநாகனார்.

(சொ - ள்.) ௧—௨. திருந்து இழை நெகிழ்ந்து-இவள் திருந்திய அணி நெகிழவும், பெரு தோள் சாஅய்-பெரிய தோள் மெலியவும், அரி மதர் மழை கண் கலுழ-அரி பரந்த மதர்த்த கண்களில் நீரொழுகவும், செல்வீர்-செல்லும் தலைவரே,

௪—௮. உவர் உண பறைந்த ஊன் தலைச் சிறாஅரோடு-உவர்மண் அரித்தலால் மயிர் கழிந்த ஊன் பொருந்திய தலையினையுடைய சிறுவருடன், அ வரி கொன்ற கறை சேர் வள் உகிர்-ஆடையின் மறுக்களைச் சிதைத்த கறை பொருந்திய கூரிய நகத்தினையும், பசை விரல்

(பாடம்) 1. புகருணப் பறைந்த புன்றலை.
2. பயிலரிற் கலப்பை. 3. தெற்றுவதாயிற்.

புலைத்தி-கஞ்சிப் பசை கொண்ட விரலையுமுடைய வண்ணாத்தி, நெடிது பிசைந்து ஊட்டிய பூ துகில் இமைக்கும் - நெடும்பொழுது பிசைந்து கஞ்சி ஊட்டிய அழகிய ஆடை ஒளிரும், பொலன்காழ் அல்குல்-பொன் வடம் அணிந்த அல்குலின்கண், அ வரி சிதைய நோக்கி - அழகிய திதலை அழிய அதனைப் பார்த்து,

அ—கஉ. வெவ்வினை பயில் அரில் கிடந்த - கொடுந்தொழிலை யுடையரும் பிணக்கம் பொருந்திய காடுகளில் தங்கிக்கிடப்பாருமாகிய, வேட்டு விளி வெரீஇ-வேட்டுவரது கூப்பீட்டைக் கேட்டு அஞ்சி, வரி புற இதலின் மணி கண் பேடை-புறத்தே வரிகளையுடைய காடையின் நீலமணி போன்ற கண்ணையுடைய பேடை, நுண்பொறி அணிந்த எருத்தின் - நுண்ணிய புள்ளிகளை அணிந்த கழுத்தினையும், கூர்முள் செங்கால் - கூரிய முட்போன்ற விரலைக்கொண்ட சிவந்த காலையுமுடைய, சேவல் பயிரும் ஆங்கண் - தன் சேவலை அழைக்கும் சுரத்தே,

கங—உ0. வில் ஈண்டு அரு சமம் ததைய நூறி-விற்படை நெருங்கிய அரிய போரினை அழியக்கொன்று, நல் இசை நிறுத்த நாண் உடை மறவர்-நல்ல புகழை நிலைநாட்டிப் பட்ட மானம் மிக்க வீரரது, நிரை நிலை நடுகல் பொருந்தி - வரிசையாக நிற்றலையுடைய நடுகல்லைப் பொருந்தியிருந்து, இமையாது இரை நசைஇக் கிடந்த முதுவாய்ப் பல்லி - கண்ணிமையாது உணவை வேட்டுக் கிடந்த முதுமை வாய்ந்த பல்லி, சிறிய தெற்றுவது ஆயின் - சிற்றளவில் தடைப்படுத்துவதாயின், பெரிய ஓடை யானை உயர்ந்தோர் ஆயினும் - பெரிய நெற்றிப்பட்டம் அணிந்த யானையிற் செல்லும் அரசராயினும், ஆங்கு நின்று - அவ்விடத்தினின்று மேற்செல்லாது, பெயரும் கானம் சென்றோர் மன் என-மீளும் கானத்தின்கண் நம் தலைவர் சென்றோர் என்று கூறி,

உ0. இருக்கிற்போர்க்கு - ஆற்றியிருக்க வல்லார்க்கு.

க. வருவீர் ஆகுவல் உரைமின்-நீர் விரைவில் வந்துவிடுவீராதலைக் கூறுமின்

(முடிபு) இறை நெகிழ்ந்து நோன் சாஅய் கண் கலுழச் செல்வீர்! இதலின் பேடை வேட்டுவிளி வெரீஇச் சேவற் பயிரும் ஆங்கண், பல்லி நடுகற்பொருந்தி சிறிய தெற்றுவதாயின் உயர்ந்தோராயினும் பெயரும் கானம் சென்றோர்மன் எனக்கூறி, பூந்துகில் இமைக்கும் அல்குல் அவ்வரி சிதைய நோக்கி இருக்கிற்போர்க்கு, வருவீராகுதல் உரைமின்.

(வி - ரை.) வரி - ஆடையின் மறு. கொன்ற கறைசேர் - போக்குதலால் கறை பொருந்திய. பசை-கஞ்சிப் பசை. [1]'பசைகொல் மெல் விரற் பெருந்தோட் புலைத்தி' என முன்வந்தமை காண்க. வில்-வில்லையுடைய தானைக்கு ஆகுபெயர். மறவர் - கரந்தை மறவர். தெற்றுவது - கொட்டுவது என்றலுமாம். விரைந்து வருவேனென்று கூறிப் பிரிய

1. அகம்: கூஉ

லுற்ற தலைமகற்கு, காவலஞ் சென்றோர் எனக் கூறி அவ்வரி சிதைய நோக்கி, ஆற்றியிருப்போர்க்கு, 'நீர் மீண்டு வருவீராதலை உரைமின்' எனத் தோழி கூறிச் செலவழுங்குவித்தாள் என்க. ஆற்றியிரேன் என்பது குறிப்பு. தலைவிக்கும் தனக்கும் வேறுபாடு இன்மையின் இங்ஙனம் கூறினள். [1]"செல்லாமை யுண்டேல் எனக்குரை மற்றுநின், வல்வரவு வாழ்வார்க் குரை" என்பதும் அதற்குப் பரிமேலழகர் உரைத்த உரையும் காண்க.

---

388. குறிஞ்சி

[இரவுக்குறிச் சிறைப்புறமாகத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது. தோழி தலைமகட்குச் சொல்லியது மாம்.]

அம்ம வாழி தோழி நம்மலை
அமையறுத் தியற்றிய வெவ்வாய்த் தட்டையின்
நறுவிரை ஆரம் அறவெறிந் துழுத
[2]உளைக்குரற் சிறுதினை கவர்தலிற் கிளையமல்
பெருவரை யடுக்கத்துக் குரீஇ ஓப்பி
ஓங்கிருஞ் சிலம்பின் ஒள்ளிணர் நறுவீ
வேங்கையங் கவட்டிடை நிவந்த இதணத்துப்
பொன்மருள் நறுந்தா தூதும் தும்பி
இன்னிசை ஓரா இருந்தனம் ஆக
மையீர் ஓதி மட நல்லீரே
நோவ்வியர் பகழி பாய்ந்தெனப் புண்கூர்ந்து
[3]எவ்வமொடு வந்த உயர்மருப் பொருத்தல்நும்
புனத்துழிப் போக வுறுமோ மற்றெனச்
சினவுகோள் ஏமலி செயிர்த்துப்புடை யாடச்
சொல்லிக் கழிந்த வல்விற் காளை
சாந்தார் அகலமும் தகையும் மிகநயந்து
ஈங்குநாம் உழக்கும் எவ்வம் உணராள்
நன்னர் நெஞ்சமொடு மயங்கி வெறியென
அன்னை தந்த முதுவாய் வேலன்
எம்மிறை அணங்கலின் வந்தன்று இந்நோய்
தணிமருந் தறிவல் என்னு மாயின்
வினவின் எவனோ மற்றே கனல்சின

---

1. குறள் : ௧௧௫௧. 2. விளைகுரற் சிறுதினை.
3. எவ்வமொடு போந்த.

மையல் வேழம் மெய்யுளம் போக
ஊட்டி யன்ன ஊன்புரள் அம்போடு
உ0: காட்டுமான் அடிவழி [1]ஒற்றி
வேட்டஞ் செல்லுமோ நம்மிறை எனவே.

—ஊட்டியார்.

(சொ - ள்.) க. தோழி—, வாழி—, அம்ம - யான் கூறுவதனைக் கேட்பாயாக.

க—க. நம் மலை அமை அறுத்து இயற்றிய வெவ்வாய் தட்டையின் - நமது மலையின் மூங்கிலை அறுத்துச் செய்த வெவ்விய ஓசை பொருந்திய தட்டையால், நறு விரை ஆரம் அற எறிந்து உழுத உளை குரல் சிறு தினை கவர்தலின் - நறிய மணம் கொண்ட சந்தனமரத்தை முழுவதும் வெட்டி உழுது விதைத்த தினையின் துய்யையுடைய சிறு கதிர்களைக் கவர்தலால், கிளை அமல் பெருவரை அடுக்கத்து குரீஇ ஓப்பி - மூங்கில்கள் நெருங்கிய பெரிய மலைச்சாரலின் கண்ணே கிளிகளை ஓட்டி, ஓங்கு இரு சிலம்பின் ஒள் இணர் நறு வீ வேங்கை அம் கவட்டு இடை நிவந்த இதணத்து - ஓங்கிய பெரிய மலையில் ஒளி பொருந்திய கொத்துக்களில் நறிய மலர்களைக்கொண்ட வேங்கை மரத்தின் அழகிய கவையிடத்தே உயரக் கட்டிய பரணில், பொன் மருள் நறுதாது ஊதும் தும்பி-பொன்னையொத்த நறிய பூம்பொடியினை ஊதும் வண்டின், இன் இசை ஓரா இருந்தனமாக - இனிய இசையைச் செவியுற்று இருந்தேமாக,

௰—௬. மை ஈர் ஓதி மடநல்லீரே - கரிய நீண்ட கூந்தலையுடைய மடப்பம் வாய்ந்த மங்கையரே, நொவ்வு இயல் பகழி பாய்ந்தென - விரையும் இயலுடைய அம்பு பாய்ந்ததாக, புண் கூர்ந்து - புண்மிக்கு, எவ்வமொடு வந்த உயர் மருப்பு ஒருத்தல் - துன்பத்துடன் வந்த உயர்ந்த கோட்டினையுடைய களிறு, நும் புனத்துழிப் போகல் உறுமோ - உங்கள் புனத்தின்கண் போதலுற்றதோ, என - என்று, சினவு கொள் ஏமவில் செயிர்த்துப் புடையாட - கோபித்தலைக்கொண்ட நாய் கறுவித் தன் பக்கலிலே தொடர, சொல்லி கழிந்த வல்வில் காளை - வினவிச் சென்ற வலிய வில்லையுடைய காளையாய தலைவனது,

கக—எ. சாந்து ஆர் அகலமும் தகையும் மிக நயந்து - சாந்தம் பொருந்திய மார்பினையும் அழகினையும் மிக விரும்பி, ஈங்கு நாம் உழக்கும் எவ்வம் உணராள் - இங்கே நாம் வருந்தும் துன்பினை உணராளாய்,

கஅ—கூ. அன்னை நன்னர் நெஞ்சமொடு மயங்கி - நம் அன்னை நன்றாகிய தன் நெஞ்சத்தில் பிறழ உணர்ந்து, வெறி என தந்த முதுவாய் வேலன் - வெறியாடல் வேண்டுமென அழைத்து வந்த முறைமை வாய்ந்த வேலன்,

(பாடம்) 1. ஒற்ற.

௨௦—௧. எம் இறை அணங்கலின் இ் நோய் வந்தன்று - எம் இறைவனான முருகவேள் வருத்தலின் இந்த நோய் வந்துளது, தணி மருந்து அறிவல் என்னும் ஆயின் - இதனைத் தணிவிக்கும் மருந்தினை யான் அறிவேன் என்று கூறுவானாயின்,

௨௨—௪. நும் இறை - நும் இறைவனாகிய முருகவேள், கனல் சின மையல் வேழம் மெய் உளம் போக - கொதிக்கும் சினமும் மத மயக்கமுமுடைய களிற்றின் உடலினுள் உருவிச் செல்ல, ஊட்டி அன்ன ஊன் புரள் அம்பொடு - செந்நிறம் பூசினாற்போன்ற ஊன் பொருந்திய அம்பினுடன், காட்டு மான் அடி வழி ஒற்றி - காட்டின் விலங்குகள் சென்ற அடிச் சுவட்டினைத் தொடர்ந்து, வேட்டம் செல்லுமோ எனவே - வேட்டையாடற்குச் செல்லுதலும் உண்டோ என்று, வினவின் எவனோ - நாம் வினவின் என்னையோ?

(முடிபு) தோழி! வாழி! அம்ம! நம் மலை, சிறுதினை கவர்தலின் பெருவரை படுக்கத்து குரீஇ ஓப்பி, இதணத்துத் தும்பி இன்னிசை ஓரா இருந்தனமாக, மட நல்லீரே! எவ்வமோடு வந்த உயர் மருப்பு ஒருத்தல் நும் புனத்து வழிப் போகலுமோ எனச் சொல்லிக் கழிந்த காளை அகலமும் நகையும் நயந்து ஈங்கு நாம் உழக்கும் எவ்வம் உணராள், அன்னை மயங்கி வெறியெனத் தந்த வேலன் 'எம்மிறை அணங்கலின் வந்தன்று இந்நோய், தணி மருந்தறிவல்' என்னுமாயின், நும் இறை வேழம் மெய்யுளம் போக அம்பொடு காட்டுமான் அடி வழி ஒற்றி வேட்டம் செல்லுமோ எனவே வினவின் எவனோ.

(வி - ரை.) தட்டையின் ஓப்பி என்று இயையும். உழுதல் குரலாகிய காரியத்திற்கு வழி வழிக் காரணம். உழுத குரல் - [1]'பகடு நடந்த கூழ்' என்பதுபோல நின்றது. நயந்து உழக்கும் எவ்வம் - நயத்தலால் வருந்தும் துன்பத்தை. நன்னர் நெஞ்சம் - அன்புடைய நெஞ்சம். இந்நோய் வந்தன்று எனவும் இந்நோய் தணி மருந்து எனவும் ஈரிடத்தும் கூட்டுக. மெய் உளம் - மெய்யின் உள்ளிடம். ஊட்டி அன்ன என்பதற்கு, [2]'ஊட்டியன்ன ஒண்டளிர்ச் செயலை' என்புழி உரைத்ததனை நோக்குக. அன்னை நம் எவ்வத்தின் காரணத்தை உணராளாய் வேலனை அழைக்க, அவன் இது தெய்வத்தால் வந்தது, தணி மருந்து அறிவேன் என்பனாயின் என்ற தன் கருத்து, இனி அன்னையால் இற்செறிக்கப்படுவேம் ஆகலின், இனித் தலைவனைக் களவிற் கூடுதல் இயலாதென்பதனைத் தலைவனுக்கு உணர்த்துதலாகும். தலைவன் உணர்ந்து விரைந்து வரைந்து கொள்வானாவது இதன் பயன்.

---

1. நாலடி, ௩ : ௨. 2. அகம் : ௪௮.

389. பாலை

[பிரிவிடை வேறுபட்ட தலைமகள் வற்புறுக்குந் தோழிக்குச் சொல்லியது.]

அறியாய் வாழி தோழி நெறிகுரல்
சாந்தார் கூந்தல் உளரிப் போதணிந்து
தேங்கமழ் திருநுதல் திலகம் தைஇயும்
பல்லிதழ் எதிர்மலர் கிள்ளி வேறுபட
நல்லிள வனமுலை அல்லியொ டப்பியும்
பெருந்தோள் தொய்யில் வரித்தும் சிறுபரட்டு
அஞ்செஞ் சீறடிப் பஞ்சி ஊட்டியும்
எற்புறந் தந்து நிற்பா ராட்டிப்
பல்பூஞ் சேக்கையிற் பகலும் நீங்கார்
மனைவயின் இருப்பவர் மன்னே துனைதந்து
இரப்போர் ஏந்துகை நிறையப் புரப்போர்
புலம்பில் உள்ளமொடு புதுவதந் தவக்கும்
அரும்பொருள் வேட்டம் எண்ணிக் கறுத்தோர்
சிறுபுன் கிளவிச் செல்லல் பாழ்பட
நல்லிசை தம்வயின் நிறுமார் வல்வேல்
வான வரம்பன் நன்னாட் டும்பர்
வேனில் நீடிய வேங்கடற் றடைமுதல்
ஆறுசெல் வம்பலர் வேறுபிரிந் தலறக்
கோலைவெம் மையின் நிலைபெயர்ந் துறையும்
பெருங்களிறு தொலைச்சிய இருங்கேழ் ஏற்றை
செம்புல மருங்கிற் றன்கால் வாங்கி
வலம்படு வென்றியொடு சிலம்பகஞ் சிலம்பப்
படுமழை உருமின் முழங்கும்
நெடுமர மருங்கின் மலையிறந் தோரே.

—நக்கீரனார்.

(சொ - ள்.) ௧. தோழி—, வாழி—, அறியாய் = நீ அறியாது கூறுகின்றனை,

௧.—௰. நெறி குரல் சாந்து ஆர் கூந்தல் உளரி - நெறிந்த கொத்தாகவுள்ள மயிர்ச்சாந்தணிந்த கூந்தலை ஆற்றி, போது அணிந்து - மலரை அணிந்தும், தேம் கமழ் திரு நுதல் திலகம் தைஇயும் - இனிமையுற மணக்கின்ற அழகிய நெற்றியில் பொட்டு அணிந்தும்;

பல் இதழ் எதிர்மலர் கிள்ளி வேறுபட அல்லியோடு நல் இள வனமுலை அப்பியும் - பல இதழ்களையுடைய புதிய மலர்களைக் கிள்ளி அவ்விதழ்களுடன் நிறம் வேறுபட அவ்வவற்றின் பொடிகளையும் நல்ல இளைய அழகிய முலைகளில் அப்பியும், பெரு தோள் தொய்யில் வரித்தும் - பெரிய தோளில் தொய்யில் எழுதியும், சிறு பரட்டு அம்செம் சிறு அடி பஞ்சி ஊட்டியும் - சிறிய பரட்டினையுடைய அழகிய சிவந்த சிறிய அடியில் செம்பஞ்சிக் குழம்பினைத் தடவியும், என் புறந்தந்து - இவ்வாறெல்லாம் என்னைப் பாதுகாத்தும், நின் பாராட்டி - நின்னைப் பாராட்டிப் பேசியும், பல் பூ சேக்கையில் பகலும் நீங்கார் - பலவாய மலர்களைப் பரப்பிய பள்ளியில் பகற்போதும் நீங்காராகி, மனைவயின் இருப்பவர் - நம் மனைக்கண்ணே தங்கியிருப்பவராய நம் தலைவர்,

௧௦—௪. இரப்போர் ஏந்து கை நிறைய - இரப்பவர்களது ஏந்தும் கை நிறைந்திட, புரப்போர் - அவரைப் புரக்கின்ற ஈகையாளர்கள், புலம்பு இல் உள்ளமொடு - வருத்தம் இல்லாத உள்ளத்துடன், துனைதந்து - விரைந்து வந்து, புதுவ தந்து உவக்கும் - புதிய பொருள்களைத் தந்து மகிழுவதற்குரிய, அரும் பொருள் வேட்டம் எண்ணி - அரிய பொருளை ஈட்டிவரலை விரும்பி, கறுத்தோர் - பகைவரது, சிறு புன் கிளவி செல்லல் - சிறிய புல்லிய இழிசொல்லாகிய துன்பம், பாழ்பட - அழியவும், தம் வயின் நல்இசை நிறுமார் - தம்பால் நல்ல புகழினை நிறுத்தவும்,

௧௫—௨௪. வல் வேல் வான வரம்பன் நல் நாட்டு உம்பர் - வலிய வேலினையுடைய வானவரம்பனது நல்ல நாட்டின் அப்பாலுள்ள, வேனில் நீடிய வெம் கடற்று அடை முதல் - வெப்பம் மிக்க கொடிய காட்டினை அடைந்த இடத்தே, ஆறு செல் வம்பலர் வேறு பிரிந்து அலற - வழிச் செல்வோராய புதியர் வேறு வேறாகப் பிரிந்து போய் அலற, கொலை வெம்மையின் நிலைபெயர்ந்து உறையும் - கொல்லும் கொடுமை நோக்கித் தன் நிலையை விட்டு வேறிடத்துத் தங்கிய, பெரு களிறு தொலைச்சிய - பெரிய களிற்றினைக் கொன்ற, இரு கேழ் ஏற்றை - பெரிய நிறம் பொருந்திய ஆண் புலி, செம்புல மருங்கில் - குருதியாற் சிவந்த நிலத்திடத்தே, தன் கால்வாங்கி - தன் காலை வளைத்துத் தாவி, வலம்படு வென்றியொடு - வலத்தே வீழ்த்திய வெற்றியால், சிலம்பு அகம் சிலம்ப - வெற்பினிடம் எதிர் ஒலி செய்ய, படு மழை உருமின் முழங்கும் - பொருந்திய மேகத்தினிடத்தே இடி போல முழங்கும், நெடுமர மருங்கின் மலை இறந்தோரே - நெடிய மரங்களையுடைய மலைவழிகளைக் கடந்து சென்றனரே.

(முடிபு) தோழி! வாழி! அறியாய், எற் புறந்தந்து நிற் பாராட்டி பகலும் நீங்கார் மனைவயின் இருப்பவர், கறுத்தோர் கிளவிச் செல்லல் பாழ்பட, தம்வயின் நல்லிசை நிறுமார், இரப்போர் ஏந்துகை நிறையத் தந்துவக்கும் பொருள் வேட்டம் எண்ணி, வானவரம்பன் நன்னாட்டு உம்பர், வெங்கடற்று அடை முதல் களிறு தொலைச்சிய இருங்கேழ் ஏற்றை சிலம்பகம் சிலம்ப உருமின் முழங்கும் மலை இறந்தோர்.

(வி - ரை.) அணிந்து, அணிந்தும் என உம்மை விரிக்க. 'எற் புறந்தந்த' என்று பாடமிருப்பின், இவ்வாறெல்லாம் என்னை ஒப்பித்துப் பாதுகாத்த நின்னை என்றுரைக்க. நின் என்றது தோழியை. புதுவ - தாம் தேடிய புதிய பொருள்கள். புரப்போர் துணைதந்து உவக்கும்எனக் கூட்டுக. தந்து உவக்கும் - பொருளை ஈந்து அதனைப் பெற்றவர் உவப்பது கண்டு உவக்கும் என்க. உவக்கும் அரும் பொருள் - உவத்தற்கு ஏதுவாகிய அரும்பொருள். பகைவர் பொருளின்மைபற்றி இகழ்ந்துரைக்கும் சொல்லைத் தலைமக்கள் பொறார் என்பதை, [1]'கறுத்தோர், எள்ளல் நெஞ்சத்து ஏஎச் சொல் நாணி' என முன்னரும் போந்துளது. வான வரம்பன் - சேரனுக்கு உரியதொரு பெயர்: வானுலகுகாறும் தன் ஆணைசெல நின்றவன் என்னும் பொருளதாகும். [2]'வானவரம்பனை நீயோ பெரும,' [3]'வான வரம்ப னெனப் பேரினிது விளக்கி' என்பன காண்க. இவ்வாறெல்லாம் என்னைப் புறந்தந்தும் நின்னைப் பாராட்டியும் பகலினும் சேக்கையில் அகலாதிருந்த தலைவர், இப்பொழுது நாம் தனித்திருக்க நம்மைப் பிரிந்து ஏதமிக்க கொடிய காட்டு நெறியிற் சென்றுளராதலின் யான் ஆற்றியிருப்பது எங்ஙனம் எனத் தன்னை ஆற்றியிருக்குமாறு வற்புறுத்திய தோழிக்குத் தலைவி கூறினாளென்க.

---

390. நெய்தல்

[தலைமகன் பாங்கற்குச் சொல்லியது; நெஞ்சிற்குச் சொல்லியதூஉமாம்.]

உவர்விளை உப்பின் கொள்ளை சாற்றி
[4]அதர்படு பூழிய சேட்புலம் படரும்
ததர்கோல் உமணர் போகும் நெடுநெறிக்
கணநிரை [5]வாழ்க்கைதான் நன்று கொல்லோ
வணர்சுரி முச்சி முழுதுமற் புரள
ஐதகல் அல்குல் கவின்பெறப் புனைந்த
பல்குழைத் தொடலை ஒல்குவயின் ஒல்கி
நெல்லும் உப்பும் நேரே ஊரீர்
கொள்ளீ ரோவெனச் [6]சேரிதோறும் நுவலும்
அவ்வாங் குந்தி அமைத்தோ ளாய்நின்
மெய்வாழ் உப்பின் விலையெய் யாமெனச்

---

1. அகம்: ௧௧௧. 2. புறம்: ௨. 3. பதிற்றுப். ௧-ஆம் பத்து: பதிகம் (பாடம்.) 4. அதர்படு வழிய. 5. வாழ்க்கைக் கானன்று.
6. சேரி தொறியலும்.

சிறிய விலங்கின மாகப் பெரியதன்
அரிவேய் உண்கண் அமர்த்தனள் நோக்கி
யாரீ ரோவெம் விலங்கி யீஇரென
மூரல் முறுவலள் பேர்வனள் நின்ற
சின்னிரை வால்வளைப் பொலிந்த
[1]பன்மாண் பேதைக் கொழிந்ததென் னெஞ்சே.

—அம்மூவனார்.

(சொ - ள்.) பாங்க!, ௧—௪. உவர் விளை உப்பின் கொள்ளை சாற்றி - உவர் நிலத்தே விளைந்த உப்பினது விலையைக் கூறி, அதர்படு பூழிய - நெறிகளிற்படும் புழுதியையுடைய, சேண் புலம் படரும் - நெடிய சேய்மைக்கண் செல்லும், ததர் கோல் உமணர் போகும் - செறிந்த கோல்களைக் கொண்டு செல்லும் உப்பு வாணிகர் போவதாகிய, நெடு நெறி - நீண்ட நெறிகளில், கண நிரை வாழ்க்கை - அக் கூட்டத்துடன் சேர்ந்து வாழும் வாழ்க்கை, நன்று கொல் - சிறந்ததுபோலும்,

௫—௧௨. வணர் சுரி முச்சி முழுதும் மன் புரள - வளைந்து சுரிந்த கூந்தலின் முடி முழுவதும் பெரிதும் அலையக்கொண்டு, ஐது அகல் அல்குல் கவின்பெற புனைந்த பல் குழை தொடலை—மெல்லிய அகன்ற அல்குல் அழகுபெறத் தரித்த பல தளிருடன் கூடிய தழையுடை, ஒல்கு வயின் ஒல்கி - அசையுமிடத்து அசைந்து நடந்து, ஊரீர் - ஊரவரே, நெல்லும் உப்பும் நேரே - நெல்லும் உப்பும் விலை ஒப்பாகும், கொள்ளீரோ என - கொள்வீராக என்று, சேரிதொறும் நுவலும் - சேரிதோறும் கூறி விற்கும், அவ் வாங்கு உந்தி அமை தோளாய் - அழகிய வளைந்த உந்தியினையும் மூங்கில் போன்ற தோளினையுமுடையாய்!, நின் மெய் வாழ் உப்பின் விலை எய்யாம் என - நினது உடலின்கண் உளதாம் இன்பத்திற்கு விலையினை அறிந்திலமே என்று யாம் கூறி, சிறிய விலங்கினம் ஆக - சிறிது தடைப்படுத்தினேமாக;

௧௨—௭. தன் பெரிய அரிவேய் உண் கண் அமர்த்தனள் நோக்கி - தனது பெரிய அரிபடர்ந்த மையுண்ட கண்ணினால் மாறுபட்டனள் போல நோக்கி, எம் விலங்கியீர் ஆரீரோ என - எம்மைத் தடுப்பீர் நீவிர் யாவிரோ என்று கூறி, மூரல் முறுவலள் பேர்வனள் நின்ற - இளநகையுடையாளாய்ச் சிறிது பெயர்ந்து நின்ற, சில்நிரை வால்வளை பொலிந்த - சிலவாய நிரைந்த வெள்ளிய வளைகளாற் பொலிவுற்ற, பல் மாண் பேதைக்கு - பல மாண்புடைய பேதையின் பொருட்டு, என் நெஞ்சு ஒழிந்தது - என் நெஞ்சம் தன் வலியினை இழந்துவிட்டது.

(பாடம்.) 1. பன்மாண் கோதை.

(முடிபு) பாங்க! உப்பின் கொள்ளை சாற்றிச் சேட்புலம் படரும் உமணர் போகும் நெடு நெறி, கண நிரை வாழ்க்கைதான் நன்றுகொல்! நெல்லும் உப்பும் நேரே, ஊரீர்; கொள்ளீரோ என நுவலும் அமைத்தோளாய் நின் மெய் வாழ் உப்பின் விலை எய்யாம் எனச் சிறிய விலங்கினமாக, யாரீரோ எம் விலங்கியீரென முறுவலகப் பேர்வனன் நின்ற பேதைக்கு என் நெஞ்சு ஒழிந்தது.

(வி-ரை.) உவர் - களர் நிலம். உப்பின் கொள்ளை சாற்றிச் சேட்புலம் படரும் உமணர் என்க. அன்றி, உமணர் போகும் நெடு நெறிக்கண் உப்பின் கொள்ளை சாற்றிச் சேட்புலம் படரும் கணநிரை வாழ்க்கை என்று இயைத்துரைத்தலுமாம். முச்சி புரள, தொடலை ஒல்குவயின் ஒல்கி எனக் கூட்டுக. ஒல்கி - அசைந்து நடந்து. நேர் - சமம், கொள்ளீரோ என - நெல்லைத் தந்து உப்பைக் கொள்வீர் என்று, மெய் வாழ் உப்பு - உடம்பிற் பொருந்தும் இன்பம்; [1]'ஊடிப் பெறுகுவங்கொல்லோ நுதல்வெயர்ப்பக், கூடலிற்றோன்றிய உப்பு,' என்புழி, உப்பு இப் பொருட்டாதல் காண்க. இச் செய்யுள் தலைமகன் பாங்கற்கு உற்றது உரைத்தலாகும்; தலைமகன் நெஞ்சிற்குச் சொல்லியது எனக் கொள்ளின், நெஞ்சே பேதைக்கு ஒழிந்தது என்? எனக் கூட்டி யுரைக்க.

---

391. பாலை

[பிரிவிடை வற்புறுத்துந் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.]

பார்வல் வெருகின் கூரெயிற் றன்ன
வரிமென் முகைய நுண்கொடி யதிரல்
[2]மல்ககல் வட்டியர் கொள்விடம் பெறாஅர்
விலைஞ ரொழித்த தலைவேய் கான்மலர்
தேம்பாய் முல்லையோடு ஞாங்கர்ப் போக்கித்
தண்ணறுங் கதுப்பிற் புணர்ந்தோர் புனைதவென்
[3]போதிமாண் முச்சி காண்டொறும் பண்டைப்
பழவணி யுள்ளப் படுமால் தோழி
இன்றொடு சின்னாள் வரினுஞ் சென்றுநனி
படாஅ வாகுமெங் கண்ணே கடாஅ
வான்மருப் பசைத்தல் செல்லாது யானைதன்
வாய்நிறை கொண்ட வலிதேம்பு தடக்கை
குன்றுபுகு பாம்பிற் றோன்றும்
என்றூழ் வைப்பிற் சுரனிறந் தோரே.

—[4]காவன் முல்லைப் பூதனார்.

---

1. குறள்: க௩உஅ. (பாடம்) 2. பல்கல, பல்லகல். 3. பொதிமான் பன்முடி. 4. பூதத்தனார்.

(சொ - ள்.) அ. தோழி—,

௧—௪. பார்வல் வெருகின் கூர் எயிற்று அன்ன-தன் இரையினைப் பார்த்திருக்கும் காட்டுப் பூனையின் கூரிய பற்களை யொத்த, வரிமெல் முகைய நுண் கொடி அதிரல்-மெல்லிய வரிகளையுடைய அம்புகளுடன் கூடிய நுண்ணிய கொடியாகிய காட்டுமல்லிகையின் பூக்கள், மல்கு அகல் வட்டியர் விலைஞர்-நிறைந்த அகன்ற வட்டியை யுடையோராகிய பூ விற்போர், கொள்வு இடம் பெறாஅர் ஒழித்த-கொள்ளும் இடம் பெறாராய் விஞ்சியவற்றை ஒழித்துக் கொணர்ந்த, தலை வேய் கான் மலர்-தலையிற் சூடிய மணமுடைய மலர்களை, தேம்பாய் முல்லையொடு-தேன்பாயும் முல்லைப் பூக்களொடு, ஞாங்கர் போக்கி-புறத்தே அகற்றி, தண் நறு கதுப்பில் புணர்ந்தோர்-எனது தண்ணிய நறிய கூந்தலிடத்தே துயின்ற தலைவர்,

௧௧—௪. கடாஅ யானை-மதக் களிறானது, வான் மருப்பு அசைத்தல் செல்லாது-மண்ணில் ஊன்றிய வெள்ளிய கொம்பினை அசைத்துப் பெயர்க்க இயலாது, தன் வாய்நிறை கொண்ட வலி தேம்பு தடகை-தன் வாயில் நிறையுமாறு புகுத்திய வலி குன்றிய பெரிய கை, குன்று புகு பாம்பில் தோன்றும்-மலை முழைஞ்சினுள் நுழையும்பாம்புபோலத் தோன்றும், என்றூழ் வைப்பின் சுரன் இறந்தோர்-வெப்பம் மிக்க இடங்களையுடைய காட்டைக் கடந்து சென்றார்,

௬—௮. புனைந்த என் பொதி மாண் முச்சி காண்தொறும்-அவர் (பண்டு) புனைந்த எனது நிறைந்த மாண்புள்ள கூந்தல் முடியைக் காணுந்தோறும், பண்டைப் பழ அணி உள்ளப்படும் - முன்புள்ள எனது பழைய அழகு நினைக்கப்படுகின்றது,

௯—௧௦. சென்று இன்றொடு சின்னாள் வரினும்-அவர் சென்றபின் இன்றொடு சில நாட்களே வந்தன ஆயினும், எம் கண் நனி படாஅ ஆகும்-எம் கண்கள் மிகவும் துயிலாதனவாகும்.

(முடிபு) தோழி! தலை வேய் கான் மலர் முல்லையொடு போக்கி கதுப்பிற் புணர்ந்தோர் சுரன் இறந்தோர்; அவர் புனைந்த என் முச்சி காண்டொறும் பண்டைப் பழ அணி உள்ளப்படும்; சென்று சின்னாள் வரினும் எம் கண்படாஅ ஆகும்.

(வி - ரை.) வட்டி-மலர் பெய்யும் செப்பு. வட்டியர் ஒழிந்த கான் மலர்-வட்டியராய் மிகுந்தவற்றை ஒழித்துக் கொணர்ந்த கான்மலர் என்க. எனவே வட்டியிலுள்ள கான்மலர் என்பது பெற்றாம். தலை வேய் என்பதனை முல்லையொடுங் கூட்டித் தலையிற் சூடிய அதிரப் பூவையும் முல்லைப்பூவையும் அகற்றி எனக் கொள்க. புனைந்த என்பது புணர்ச்சியின் பின்னர்ப் புதிது புனைந்த என்க. சின்னாள் வரினும்-சில நாளே ஆயினும் என்றபடி. கடாஅ யானை எனக் கூட்டுக. மருப்பு அசைத்தல் செல்லாது என்பது, சுரத்தின் வெம்மை மிகுதியால் வலி தேம்பிக் கோடுநிலத்திற் பதியுமாறு கவிழ்ந்த யானை தன் கொம்பினை அசைக்கலாற்றாது என்க. குன்று - மலையின்குகை. ஆற்றியிருக்க

வேண்டுமென வற்புறுத்திய தோழிக்கு, தலைவர் சுரன் இறந்தார் ஆகலின், அவர் புணர்ந்த முச்சி காண்டொறும் பழ அணி உள்ளப்படும், எம் கண் படாஅ ஆகும், யான் எங்ஙனம் ஆற்றுவேன் எனத் தலைவி கூறினாள் என்க.

---

392. குறிஞ்சி

[பின்னின்ற தலைமகற்குக் குறைநேர்ந்த தோழி தலைமகட்குக் குறைநயப்பக் கூறியது.]

தாழ்பெருந் தடக்கை[1] தலைஇய கானத்து
வீழ்பிடி கெடுத்த வெண்கோட்டு யானை
உண்குளகு மறுத்த உயக்கத் தன்ன
பண்புடை யாக்கைச் சிதைவுநன்கு அறீஇப்
பின்னிலை முனியான் ஆகி நன்றுந்
தாதுசெய் பாவை அன்ன தையல்
மாதர் மெல்லியல் மடநல் லோள்வயின்
தீதின் றாக நீபுணை புகுகென
என்னுந் தண்டு மாயின் மற்றவன்
அழிதகப் பெயர்தல் நனியின் னாதே
ஒல்லினி வாழி தோழி கல்லெனக்
கணமழை பொழிந்த கான்மடி யிரவில்
தினைமேய் யானை இனனிரிந் தோடக்
கல்லுயர் கழுதிற் சேணோன் எறிந்த
வல்வாய்க் கவணின் கடுவெடி ஒல்லென
மறப்புலி உரற வாரணம் கதற
நனவுறு கட்சியின் நன்மயில் ஆல
மலையுடன் வெரூஉம் மாக்கல் வெற்பன்
பிரியுநன் ஆகலோ அரிதே அதாஅன்று
உரிதல் பண்பிற் பிரியுநன் ஆயின்
வினைதவப் பெயர்ந்த வென்வேல் வேந்தன்
முனைகோல் தானையொடு முன்வந் திறுப்பத்
தன்வரம் பாகிய மன்னெயில் இருக்கை
[2]ஆற்றா மையிற் பிடித்த வேல்வலித்

(பாடம்) 1. தலைஇக் கானம். 2. ஆற்றருமையிற் பிடித்த வேல்.

உ௫. தோற்றம் பிழையாத் தொல்புகழ் பெற்ற
விழைதக ஓங்கிய கழுதுஞ்சு மருங்கிற்
கானமர் நன்னன் போல
யானு குவல்நின் நலன்தரு வேனே.

—மோசிகீரனார்.

(சொ - ள்.) கக. தோழி—, வாழி—, ஒல் இனி - இப்பொழுது யான் கூறுவதனை மனம் பொருந்திக் கேட்பாயாக.

கக—அ. கல் என கணம் மழை பொழிந்த கான் மடி இரவில்-கல்லென்னும் ஒலியுடன் கூட்டமாகிய மேகங்கள் மழையைச் சொரிந்த கானமெல்லாம் அடங்கிய இரவில், தினை மேய் யானை இனன் இரிந்து ஓட - தினையை மேய்ந்த யானையின் கூட்டம் நிலைகெட்டு ஓட, கல் உயர் கழுதல் சேணோன் எறிந்த - மலையிடத்தே உயர்ந்த பரணிலிருந்து குறவன் வீசியெறிந்த, வல் வாய் கவணின் கடு வெடி ஒல் என - வலிய விசை வாய்ந்த கவண் கல்லின் கடிய ஓசை ஒல்லென் றொலிக்க, மறப் புலி உரற-(அதுகேட்டுத்) தறுகண்மையுடைய புலி முழங்க, வாரணம் கதற-யானை கதற, நளவு உறு கட்சியின் நல் மயில் ஆல-அகற்சியுற்ற காட்டிலுள்ள அழகிய மயில் (இடியோசை யென) ஆட, மலை உடன் வெருஉம் மாகல் வெற்பன் - மலை முழுவதும் அஞ்சும் பெரிய கற்களை யுடைய மலை பொருந்திய நாட்டையுடைய தலைவன்,

க—௫. கானத்து - காட்டில், வீழ் பிடி கெடுத்த - விரும்பப்படும் பெண்யானையை இழந்த, தாழ் பெரு தடகை தலைஇய - தொங்குகின்ற நீண்ட பெரிய கை பொருந்திய, வெண் கோட்டு யானை - வெள்ளிய கொம்பினையுடைய களிறு, உண் குளகு மறுத்த உயக்கத்து அன்ன - உண்ணும் தழையினை உண்ணாது நீக்கிய வாட்டத்தை ஒத்த, பண்பு உடை யாக்கைச் சிதைவு நன்கு அறீஇ - அழகுடைய தனது யாக்கையின் மெலிவினை நன்கு அறிந்துவைத்தும், பின்னிலை முனியான் ஆகி - நம்பால் இரந்து பின்னிற்றலை வெறுநாகி,

௫—க௦. நன்றும் தாது செய் பாவை அன்ன தையல் - மிகவும் பொன்னாற் செய்த பாவை போன்ற கட்டழகினையும், மாதர் மெல் லியல் - விரும்பப்படும் மென்மைத் தன்மையினையும் உடைய, மட நல்லோள்வயின் - மடப்பம் வாய்ந்த தலைவியின்பால், தீது இன்று ஆக நீ புணைபுகுக என - தீங்கு இல்லையாம்படி நீ புணையாகப் புகுவாயாக என்று கூறி, என்னும் தண்டுமாயின் - சிறிதேனும் நீங்குவானாயின், அவன் அழிதகப் பெயர்தல் நனி இன்னாதே - அவன் நாம் வருந்தும்படி பெயர்ந்து செல்லுதல் நமக்கு மிகவும் துன்பமாவதே யாகும்,

கக. பிரியுநன் ஆகலோ அரிது-(ஆனால்) அவன் நம்மைப் பிரிந்து செல்வானாதல் இல்லை;

கக—உ0. அதாஅன்று - அஃதன்றியும், உரிது அல் பண்பில் பிரியுநன் ஆயின் - தனக்கு உரித்தல்லாத பண்பினால் ஒரோ வழிப் பிரிவான் ஆயின்,

உக—அ. வினை தவப் பெயர்ந்த வென்வேல் வேந்தன் - போர் ஒழிய நீங்கிய வென்றி வேலினையுடைய பகை யரசன், முனை கொல் தானையொடு முன்வந்து இறுப்ப - போரின்கண் கொல்லுதலையுடைய சேனையுடன் மீளவும் மதிற் புறத்தே வந்து தங்க, தன் வரம்பு ஆகிய மன் எயில் இருக்கை - தன்னைப் பற்றுக்கோடாகவுடைய நிலைபெற்ற மதிலையுடைய அரண், ஆற்றாமையான் - அப் பகை வேந்தனை எதிர்த்து நிற்றல் ஆற்றாமையான், விழைதக ஓங்கிய கழை துஞ்சு மருங்கின் - கண்டார் விரும்புமாறு உயர்ந்த மூங்கில்கள் செறிந்த மலைப் பக்கத்ததாகிய, கான் அமர் - காட்டில் வதிந்திருந்த, பிடித்த வேல் வலித் தோற்றம் பிழையாத் தொல் புகழ் பெற்ற - கைக் கொண்ட வேலினையுடைய வலியமைந்த தனது தோற்றமானது பிழையாதவாறு (அவ் வேந்தனுடன் பொருது) தன் பழைய புகழை நிலை நிறுத்தியவனாகிய, நன்னன்போல-நன்னனைப்போல, யான் நின் நலம் தருவேன் ஆதவல் - (அவனைச்சேர்த்து) யான் நினது நலத்தினை மீண்டும் கூட்டிவைப்பேன் ஆவேன்.

(முடிபு) தோழி! வாழி! மாக்கல் வெற்பன், யாக்கைச் சிதைவு நன்கு அறிந்தே, பின்னின்று முனியான் ஆகி, 'நல்லோள்வயின் தீதின்றாக நீ புணர்க' என என்றும் தண்டான் ஆயின், மற்று அவன் அறிதகப் பெயர்தல் நனி இன்றது, இனி, ஒல் (அவன்) பிரியுநன் ஆகலோ அரிதே. அதா அன்று பிரியுநன் ஆயின், நின் நலம் தருவேன் யான் ஆகுவல்.

யானை உயங்கத்தன்ன யாக்கை எனவும், நன்னன் போல நலந்தருவேன் எனவும் கூட்டுக.

(வி - ரை.) பிடியைக் கெடுத்தமையால், கோட்டிலே கையை வைத்த யானை என்க. மறுத்த உயக்கம்: பெயரெச்சம், காரணப் பொருட்டு. பண்பு-ஈண்டு அழகின் மேற்று; இலக்கணத்தால் திருந்துதல் என்றுமாம். அறீஇ - அறிந்து வைத்தும் என்க. தாது - பொன். தீது இன்றாக-யான் பிரிதலாகிய தீங்கு நிகழாமைக்கு. புகுகெனக் கூறி என விரித்துரைக்க. என்னும்-சிறிதும். தண்டுதல்-நீங்குதல். ஒல்லுதல் - பொருந்துதல். சேணோன் - உயர்ந்த இடத்தில் இருப்பவன்: குறவன். வெடி - ஓசை. யானை இரிந்து ஓட எறியும் கவண் கல்லின் ஓசையாலும், புலியின் முழக்கத்தாலும், யானையின் கதறுதலாலும் மலை முழுதும் அஞ்சும் என்க. அவற்றை மேகத்தின் முழக்க மெனக் கொண்டு மயில் ஆலுமென்க. வெற்பன் புகுகெனக் கூறி நீங்குமாயின் அங்ஙனம் நீங்குதல் நனி இன்னாது, ஆயின் அவன் அவ்வாறு பிரிதல் அரிது. அஃதன்றி ஒரோ வழிப் பிரியுநன் ஆயின், யான் அவனை நின்பாற் சேர்த்து நினது நலத்தை மீட்டுத்தருவேன் என்று தோழி தலைமகட்குக் குறைநயப்பக் கூறினாளென்க. வினைதவப் பெயர்ந்த

என்றது, முன் போர் செய்து ஆற்றாது ஓடிய என்றபடி. பிழை நக ஓங்கிய கழை துஞ்சு மருங்கிற் கானமர் நன்னன் என்றதனால், காட்சி விருப்பத்தால், நன்னன் ஒரு காட்டில் வதிந்தானாதல் வேண்டும், தொல் புகழ் பெற்ற நன்னன் எனவும் கானமர் நன்னன் எனவும் கூட்டுக. நன்னன் என்பானுக்கு உரிய அரணினை மாற்று வேந்தன் ஒருவன் முற்றிப் பொருது தோற்று ஓடியவன், பின் பெரிய தானையுடன் மீட்டும் வந்து தங்க, அரணிலுள்ளார் அவனுடன் பொருதற்கு ஆற்றாதிருக்க, காட்டிலிருந்த நன்னன் மீளவந்து தனது பழைய புகழ் நிலை பெறும்படி அப் பகைவனை வென்று அரணில் உள்ளாரைப் பாது காத்தனன் ஆதலின் அந் நன்னன்போல நின் நலம் தருவேன் என்றான் என்க.

---

393. பாலை

பிரிவிடை வேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறுத்தியது.]

கோடுயர் பிறங்கற் குன்றுபல நீந்தி
வேறுபுலம் படர்ந்த வினைதரல் உள்ளத்து
ஆறுசெல் வம்பலர் [1]காய்பசி தீரிய
[2]இரைச்சுவற் கலித்த ஈரிலை நெடுந்தோட்டுக்
கவைக்கதிர் வரகின் கால்தொகு பொங்கழி
கவட்டடிப் பொருத [3]பல்சினை உதிர்வை
அகன்கட் [4]பாறைச் செவ்வயிற் றெறீஇ
வரியணி பணைத்தோள் [5]வார்செவித் தன்னையர்
பண்ணை வெண்பழத் தரிசி ஏய்ப்பச்
சுழல்மரஞ் சொலித்த சுளகலை வெண்காழ்
தொடிமாண் உலக்கை ஊழிற் போக்கி
உரல்முகங் காட்டிய சுரைநிறை கொள்ளை
ஆங்கண் இருஞ்சுனை நீரொடு முகவாக்
களிபடு குழிசிக் கல்லடுப் பேற்றி
இணர்ததை கடுக்கை ஈண்டிய தாதிற்
குடவர் புழுக்கிய பொங்கவிழ்ப் புன்கம்
மதர்வை நல்லான் பாலொடு பகுக்கும்
நிரைபல குழீஇய நெடுமொழிப் புல்லி
தேன்றூங்கு உயர்வரை நன்னாட் டும்பர்
வேங்கடம் இறந்தன ராயினும் ஆண்டவர்

(பாடம்) 1. காய் பசி தீர. 2. முதை. 3. பல்சினை. யதிர்பவை. 4. பாறை வெவ்வயிற்றெறீஇ. 5. வண்செவி

நீடலர் வாழி தோழி தோடுகோள்
உருகெழு மஞ்ஞை ஒலிசீர் ஏய்ப்பத்
தகரம் மண்ணிய தண்ணறு முச்சிப்
புகரில் குவளைப் போதோடு [1]தெரியிதழ்
உ0. வேனில் அதிரல் வேய்ந்தநின்
ஏமுறு புணர்ச்சி இன்துயில் மறந்தே.

—மாமூலனார்.

(சொ - ள்.) உக. தோழி—, வாழி—, (நம் தலைவர்),

க—உ. கோடு உயர் பிறங்கல் குன்று பல நீந்தி - சிகரம் உயர்ந்த பாறைகளையுடைய மலைகள் பலவற்றைக் கடந்து, வேறுபுலம் படர்ந்த வினைதரல் உள்ளத்து-வேற்று நாட்டை அடைந்த பொருள் தேடும் முயற்சியையுடைய உள்ளத்தால்,

ந—உ0. ஆறு செல் வம்பலர்-வழிச் செல்லும் புதியர், காய் பசி தீரிய - மிக்க பசி ஒழிய, இதை சுவல் கலித்த - புதுக்கொல்லையில் தழைத்த, ஈர் இலை நெடு தோட்டு கவை கதிர்வரகின் கால் தொகு பொங்கழி - ஈரிய இலையின் நீண்ட இதழையுடைய வரகின் கவர்த்த கதிருடன் கூடிய தட்டைகளைத் தொகுத்த பொலியில், கவட்டு அடி பொருத பல்சினை உதிர்வை-மாடுகளின் கவர்த்த குளம்பால் துவைக்கப் பட்ட பல கிளைகளினின்று உதிர்ந்த வரகினை, அகன் கண் பாறை செவ்வயின் தெறீஇ - இடம் அகன்ற பாறையில் செவ்விய இடத்தில் குவித்து, வரி அணி பணை தோள் வார் செவி தன்னையர் - வரிகள் பொருந்திய பருத்த தோள்களையும் நீண்ட செவிகளையுமுடைய தாயர், பண்ணை வெண் பழத்து அரிசி ஏய்ப்ப-பண்ணைக்கீரையின் வெள்ளிய பழத்தின் அரிசியை ஒப்ப, சுழல்மரம் சொலித்த சுளகு அலைவெண் காழ்-திரிமரம் தேய்த்த சுளகினால் கொழிக்கப்பெற்ற வெள்ளிய அரிசியை, தொடிமாண் உலக்கை ஊழில் போக்கி-பூண் மாட்சிமைப் பட்ட உலக்கையால் முறையாகச் செலுத்தி, உரல் முகம் காட்டிய-உரலிற் பெய்து தீட்டிய, சுரை நிறை கொள்ளை-உரலின் குழி நிறைந்த அவ்வரிசையை, ஆங்கண் இரு சுனை நீரொடு முகவா-அங்குள்ள பெரிய சுனையின் நீரொடு முகந்து, களிபடு குழிசி கல் அடுப்பு ஏற்றி-மண்ணாற் செய்த பானையில் கற்களை அடுக்கி யமைத்த அடுப்பில் ஏற்றி, இணர் ததை கடுக்கை ஈண்டிய தாதில்-கொத்துக்கள் நிறைந்த கொன்றையின் நிறைந்த பூந்தாது போல, குடவர் புழுக்கிய பொங்கு அவிழ் புன்கம்-இடையர் ஆக்கிய விளங்குகின்ற அவிழாகிய சோற்றை, மதர்வை நல் ஆன் பாலொடு பகுக்கும் - மதர்த்த நல்ல பசுவின் பாலுடன் கூட்டி அளிக்கும் இடமாகிய, நிரை பல குழீஇய-பசு நிரைகளை மிகப்பெற்ற, நெடுமொழி புல்லி-மிக்க புகழுடைய புல்லி என்பானது, தேன் தூங்கு

(பாடம்) 1. தகரிதழ்.

உயர் வரை நல்நாட்டு உம்பர்-தேனிறால் தொங்கும் உயர்ந்த மலைகளை யுடைய நல்ல நாடுகட்கு அப்பாற்பட்ட, வேங்கடம் இறந்தனர் ஆயினும் - வேங்கடமலையைக் கடந்து சென்றுள்ளாராயினும்,

உக—ச. தோடுகொள் உருகெழு மஞ்ஞை ஒலிசீர் ஏய்ப்ப-அழகு பொருந்திய மயிலின் தொகுதிகொண்ட தழைத்த தோகையினை ஒப்ப, தகரம் மண்ணிய தண் நறுமுச்சி - மயிர்ச்சாந்து பூசப்பெற்ற தண்ணிய நறிய கூந்தலில், புகர் இல் குவளைப் போதொடு தெரி இதழ் வேனில் அதிரல் வேய்ந்த-குற்றமில்லாத குவளைப்பூவுடன் விளங்கும் இதழ்களை யுடைய வேனிலிற் பூக்கும் காட்டு மல்லிகைப் பூவினையும் சூடிய, நின் ஏம் உறு புணர்ச்சி இன் துயில் மறந்து-நினது இன்பம் வாய்ந்த கூட்ட மாகிய இனிய துயிலினை மறந்து,

உ௦—க. ஆண்டு அவர் நீடலர்-ஆங்கண் அவர் தாழ்த்திருப்பார் அல்லர்.

(முடிபு) தோழி! வாழி! நம் தலைவர், குன்று பல நீந்தி, வினை தரல் உள்ளத்தால், வேங்கடம் இறந்தனராயினும், நின்ஏமுறு புணர்ச்சி இன்துயில் மறந்து ஆண்டு அவர் நீடலர்.

(வி - ரை.) படர்ந்த வினைதரல் உள்ளம் - படர்ந்து பொருள் தருதலையுடைய ஆள்வினையுடைய உள்ளம் என்க. உள்ளத்தால் வேங்கடம் இறந்தனராயினும் எனக் கூட்டுக. உள்ளத்தையுடைய ஆறு செல் வம்பலர் என்றலுமாம். இதைச்சுவல்-காடு திருத்திய மேட்டு நிலமாகிய புதுக்கொல்லை. வரகின் கதிர்களைத் தட்டைகளோடு கொய்து குவித்து வைப்பராகலின், கவைக் கதிர் வரகின் கால் தொகு பொங்கழி எனப்பட்டது. கால் - தட்டை. பொங்கழி - தூற்றாப் பொலி. கவட்டு அடி - மாடுகளின் கால்களிலுள்ள கவர்த்த குளம்புகள். உதிர்வை - உதிர்ந்த தானிய மணி. தெறீஇ - குவித்து வைத்துக் கொண்டு. பண்ணை - ஒரு வகைக் கீரை; அதன் பழம் வெள்ளொளி பொருந்திய கதிராக இருக்கும்; அதன் அரிசியை யொப்பச் சொலித்த வெண்காழ் என்க. திரிகை சொலித்த வெண்காழ் என்க. சுழல் மரம்-திரிமரம், திரிகை. சொலித்தல் - தேய்த்தல். உலக்கை ஊழிற் போகி உரல்முகம் காட்டிய என்றது, உரலிற்பெய்து சிறிது நீட்டிய என்ற படி. சுரை - உரலின் குழி; குழிசியின் உள்ளிடம் என்றலுமாம். குடவர் - ஆயர். வம்பலர் பசி தீரிய தன்னையர் புன்கம் பாலொடு பகுக்கும் என்க. பாலொடு பகுக்கும் நன்னாடு எனவும், விரை பல குழீஇய நன்னாடு எனவும், புல்லியின் நன்னாடு எனவும் கூட்டுக. நெடுமொழி - வஞ்சினமுமாம். நன்னாட்டும்பர் புல்லியின் வேங்கடம் எனக் கூட்டுதலுமாம். ஒலி சீர் ஏய்ப்ப - தழைத்த தோகையின் அழகினை யொப்ப என்க.

394. முல்லை

[இரவுக்குறித் தலைமகளை இடத்துய்த்து வந்து தோழி தலைமகனை வரைவு கடாஅயது.]

களவும் புளித்தன விளவும் பழுநின
சிறுதலைத் துருவின் பழுப்புறு விளைதயிர்
இதைப்புன வரகின் அவைப்புமாண் அரிசியொடு
கார்வாய்த் தொழிந்த ஈர்வாய்ப் புற்றத்து
ஈயல்பெய் தட்ட இன்புளி வெஞ்சோறு
சேதான் வெண்ணெய் வெம்புறத் துருக
இளையர் அருந்தப் பின்றை நீயும்
இடுமுள் வேலி முடக்காற் பந்தர்ப்
புதுக்கலத் தன்ன செவ்வாய்ச் சிற்றில்
புனையிருங் கதுப்பினின் மனையோ ளயரப்
பாலுடை அடிசில் தொடீஇய ஒருநாள்
மாவண் தோன்றல் வந்தனை சென்மோ
காடுறை இடையன் யாடுதலைப் பெயர்க்கும்
மடிவிடு வீளை வெரீஇக் குறுமுயல்
மன்ற இரும்புதல் ஒளிக்கும்
புன்புல வைப்பினெஞ் சிறுநல் லூரே.

—நன்பலூர்ச் சிறுமேதாவியார்.

(சொ - ள்.) கஉ. மாவண் தோன்றல் - மிக்க வண்மையுடைய தலைவனே!,

கங—கரு. காடு உறை இடையன் - காட்டில் தங்கும் இடையன், யாடுதலை பெயர்க்கும்-தன் யாட்டினங்களை ஒருவழிக் கூட்டும், மடி விடு வீளை-வாயை மடித்து எழுப்பும் சீழ்க்கை யொலியை, வெரீஇ - கேட்டு அஞ்சி, குறுமுயல் - குறுமுயலானது, மன்ற இரும்புதல் ஒளிக்கும் - மன்றத்தின்கண்ணுள்ள பெரிய புதரில் மறைந்துகொள்ளும், புன்புல வைப்பின் - முல்லை நிலத்து ஊராகிய, எம் சிறு நல் ஊர்-எமது சிறிய நல்ல ஊரின்கண்,

க. களவும் புளித்தன - களாவும் பழுத்துப் புளிப்புச் சுவையை எய்தின, விளவும் பழுநின-விளாவும் முதிர்ந்து பழுத்தன,

உ—கக. சிறு தலை துருவின் பழுப்பு உறு விளைதயிர் - சிறிய தலையினையுடைய செம்மறியாட்டினது பழுப்பு நிறம்வாய்ந்த முற்றிய தயிராகிய உலையில், இதை புன வரகின் அவைப்பு மாண் அரிசியொடு-

புதுக்கொல்லையில் விளைந்த வரகினது குத்துதல் மாட்சிமைப்பட்ட அரிசியுடன், கார் வாய்த்து ஈர் வாய்ப் புற்றத்து ஒழிந்த - கார்மழை மிக்கமையால் நனைந்த வாயினையுடைய புற்றிலிருந்து வெளிப்பட்டொழிந்த, ஈயல் பெய்து அட்ட - ஈயலையும் இட்டுச் சமைத்த, இன்புளி வெஞ்சோறு - இனிய புளிப்பு வாய்ந்த விருப்பம் தரும் சோற்றினை, சேதான் வெண்ணெய் வெம் புறத்து உருக - சிவந்த பசுவின் வெண்ணெய் வெப்பம் பொருந்திய அச்சோற்றின் மேலே கிடந்து உருக அதன்மேற் பெய்து, இளையர் அருந்த - நின் ஏவலர் முன்பு உண்ண, பின்றை - அதன் பின்பு, நீயும்—, இடுமுள் வேலி முடக் கால் பந்தர் - முள்ளிட்டுக் கட்டிய வேலியினகத்தே வளைந்த கால்களையுடைய பந்தரையுடையதும், புதுக்கலத்து அன்ன செவ்வாய்ச் சிற்றில் - புதுக் கலம் போன்ற செம்மண் பூசியதுமாகிய சிறிய இல்லில், புனை இரும் கதுப்பின் நின் மனையோள் அயர - புனைந்த கரிய கூந்தலையுடைய நின் மனைவி விருந்தயர, பால் உடை அடிசில் தொடீஇய - பால் பெய்த உணவினை உண்ணுதற்கு, ஒரு நாள்—,

௧௨. வந்தனை சென்மோ - வந்து செல்வாயாக.

(முடிபு) மாவண் தோன்றல்! எம் சிறு நல்லூர், களாவும் புளித்தன விளவும் பழுநின, இன்புளி வெஞ்சோறு வெண்ணெய் புறத்துருக இளையர் அருந்த, பின்பு நீயும் செவ்வாய்ச் சிற்றில், மனையோள் அயர பாலுடை அடிசில் தொடீஇய ஒரு நாள் வந்தனை சென்மோ.

(வி - ரை.) புளித்தன - புளிச்சுவை எய்தப் பழுத்தன என்றபடி. களாப் பழங்கள் பழுத்தன, விளாம் பழங்கள் முதிர்ந்தன என்றதன் கருத்து. விருந்தயர்தற்கு வேண்டுவன யாவும் உள்ளன என்பதாகும். வெண்ணெய் உருகப் பெய்து என ஒரு சொல் வருவிக்க. செவ்வாய்ச் சிற்றில் என்றதனாலும், புனையிருங் கதுப்பின் நின் மனையோள் அயரப் பாலுடை அடிசில் என்றதனாலும் தலைவியை நீ வரைந்துகொண்டு விருந்துண்டற்கு வருக எனக் குறித்தவாறாயிற்று.

---

395. பாலை

[பிரிவிடைத் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.]

தண்கயம் பயந்த வண்காற் குவளை
மாரி மாமலர் பெயற்கேற் றன்ன
நீரொடு நிறைந்த பேரமர் மழைக்கண்
பனிவார் எவ்வம் தீர இனிவரின்
௫. நன்றுமன் வாழி தோழி தெறுகதிர்
ஈரம் நைத்த நீரறு நனந்தலை
அழன்மேய்ந் துண்ட நிழன்மாய் இயவின்

வறன்மரத் தன்ன கவைமருப் பெழிற்கலை
அறலவிர்ந் தன்ன தேர்நசை யோடிப்
புலம்புவழிப் பட்ட உலமரல் [1]உள்ளமோடு
மேய்பிணைப் பயிரும் மெலிந்தழி படர்குரல்
அருஞ்சுரஞ் செல்லுநர் ஆட்செத் தோர்க்குந்
திருந்தரை ஞெமைய பெரும்புனக் குன்றத்து
ஆடுகழை இருவெதிர் நரலுங்
கோடுகாய் கடற்ற காடிறந் தோரே.

—எயினந்தை மகனார் இளங்கீரனார்.

(சொ - ள்.) இ. தோழி—, வாழி—,

இ—கஉ. தெறு கதிர் ஈரம் நைத்த நீர் அறு நனந்தலை - ஒறுக்கும் ஞாயிற்றின் கதிர் ஈரத்தினைத் தொலைத்தமையான் நீர் அற்ற அகன்ற இடத்திலுள்ள, அழல் மேய்ந்து உண்ட நிழல் மாய் இயவின் - தீ கவர்ந்து உண்டமையால் மரங்களின் நிழல் ஒழிந்த நெறியில், வறல் மரத்தன்ன கவை மருப்பு எழில் கலை - வற்றிய மரக் கொம்பினை யொத்த கவர்த்த கொம்பினையுடைய அழகிய கலைமான், அறல் அவிர்ந் தன்ன தேர் நசை ஓடி - அறல் விளங்கினா லொத்த பேய்த்தேரினை நீரென விரும்பி யோடி, புலம்பு வழிப்பட்ட உலமரல் உள்ளமொடு - தனிமையுற்றமையாலான கலங்கிய உள்ளத்துடன், மேய் பிணை பயிரும் - மேயும் தன் பெண்மானை அழைக்கும், மெலிந்து அழி படர் குரல் - மெலிவுற்று ஒழியும் துன்பினைத் தரும் குரலை, அரும் சுரம் செல்லுநர் ஆள் செத்து ஓர்க்கும் - அரிய காட்டினிற் செல்லுவோர் ஆளின் குரலென்று கருதி ஆராயும் இடமாகிய, திருந்து அரை ஞெமைய பெரும் புனக் குன்றத்து - செவ்விய அடி பொருந்திய ஞெமை மரங்களையுடைய பெரிய கொல்லைகளையுடைய குன்றில், ஆடு கழை இரு வெதிர் நரலும் - அசையும் தண்டினையுடைய பெரிய மூங்கில்கள் ஒலிக்கும், கோடு காய் கடற்ற காடு இறந்தோர் - சிமையம் வெம்பிய மலைப்பக்கத்திலுள்ளவாகிய காடுகளைக்கடந்து சென்ற நம் தலைவர்,

க—இ. தண் கயம் பயந்த வண் கால் குவளை - குளிர்ந்த குளத்திற் றோன்றிய வளவிய காம்பினையுடைய குவளையின், மாரி மா மலர் - மழைக்காலத்தே மலர்ந்த கரிய மலர், பெயற்கு ஏற்றன்ன - மழைக்கு எதிர்ப்பட்டாலொத்த, நீரொடு நிறைந்த பேர் அமர் மழைக்கண் - நீரால் நிறைந்த பெரிய அமர்த்த குளிர்ந்த கண்களினின்று, பனி வார் எவ்வம் தீர - நீர் ஒழுகும் துன்பம் ஒழிய, இனிவரின் நன்று - இப்பொழுது வருவாராயின் நன்றாகும், மன் - வந்திலரே, என் செய்வாம்.

(முடிபு) தோழி! வாழி! காடிறந்தோர், மழைக்கண் எவ்வம் தீர இனிவரின் நன்று; மன்.

(பாடம்) 1. உள்ளமொடு ஓய் பிணை.

(வி - ரை.) நைத்த - அழித்த. [1]'வேலே......நாடு நைத்தலின்' என்புழி நைத்தல் இப் பொருட்டாதல் காண்க. அழல் மேய்ந்து உண்ட - [2]'உண்டற் குரிய வல்லாப் பொருளை, உண்டன போலக் கூறலு மரபே' என்பதன்கண் அடங்கும். அறல் - அறல்பட ஒழுகும் சிறிய நீர். நீரறு நனந்தலை இயவின் கலை ஓடி உள்ளமொடு பிணைபயிர் குரல் என்க. குரலைச் சுரம் செல்லுநர் ஓர்க்கும் காடு எனவும், குன்றத்து வெதிர் நரலும் கடற்ற காடு எனவும் கூட்டுக.

---

396. மருதம்

[காதற்பரத்தை தலைமகற்குச் சொல்லியது.]

தொடுத்தேன் மகிழ்ந செல்லல் கொடித்தேர்ப்
பொலம்பூண் நன்னன் [3]புன்னாடு கடிந்தென
யாழிசை மறுகிற் பாழி ஆங்கண்
அஞ்சல் என்ற ஆஅய் எயினன்
இகலடு கற்பின் மிஞிலியொடு தாக்கித்
தன்னுயிர் [4]கொடுத்தனன் சொல்லிய தமையாது
தெறலருங் கடவுள் முன்னர்த் [5]தேற்றி
மெல்லிறை முன்கை பற்றிய சொல்லிறந்து
ஆர்வ நெஞ்சந் தலைத்தலை சிறப்பநின்
மார்புதரு கல்லாய் பிறனா யினையே
இனியான் விடுக்குவென் அல்லென் மந்தி
பனிவார் கண்ணள் பலபுலந் துறையக்
கடுந்திறல் அத்தி ஆடணி நசைஇ
நெடுநீர்க் காவிரி கொண்டொளித் தாங்குநின்
மனையோள் வவ்வலும் அஞ்சுவள் சினைஇ
ஆரியர் அலறத் தாக்கிப் பேரிசைத்
தொன்றுமுதிர் வடவரை வணங்குவிற் பொறித்து
வெஞ்சின வேந்தரைப் [6]பிணித்தோன்
வஞ்சி அன்னவென் நலந்தந்து சென்மே.

—பரணர்.

(சொ - ள்.) க. மகிழ்ந - தலைவனே!, தொடுத்தேன் - நின்னை யான் பற்றிக்கொண்டேன், செல்லல் - செல்லாதே;

(பாடம்)
1. புறம்: கஎ.
2. தொல், பொருள்; கக.
3. புள்ளுநாடு.
4. கொடுத்தனனே.
5. தோற்றி.
6. பணித்தோன்.

க—௬. கொடி தேர் பொலம் பூண் நன்னன் - கொடியணிந்த தேரினையும் பொன்னாலாய பூண்களையுமுடைய நன்னன் என்பான், புன்னாடு கடிந்தென - புன்னாட்டென்னும் நாட்டிலுள்ளாரை வெகுண்டெழுந்தானாக, யாழ் இசை மறுகின் பாழி ஆங்கண் - யாழின் இசை பொருந்திய தெருக்களையுடைய பாழி என்னும் நகரிடத்தே நின்று, அஞ்சல் என்ற - அஞ்சாதிர் என்று கூறிய, ஆஅய் எயினன் - ஆஅய் எயினன் என்பான், சொல்லியது அமையாது-தான் சொல்லிய சொற் பிழையாது, இகல் அடு கற்பின் மிஞிலியொடு தாக்கி-போர் வெல்லும் பயிற்சியையுடைய மிஞிலி என்பானோடு பொருது, தன் உயிர் கொடுத்தனன் - தன் உயிரையும் தந்தான்; (நீயோ),

எ—கக. தெறல் அரு கடவுள் முன்னர்த் தேற்றி-தெறுதற்கு அரிய தெய்வத்தின் முன் தெளிவித்து, மெல் இறை முன் கை பற்றிய சொல் இறந்து-மெல்லிய சந்தினையுடைய என் முன் கையினைப் பற்றிச் சொல்லிய சொல்லினைக் கடந்து, ஆர்வ நெஞ்சம் தலை தலை சிறப்ப-அன்புமிக்க உள்ளம் மேன்மேலும் மகிழ்ந்து சிறக்க, நின் மார்பு தருகல்லாய்- நின் மார்பினைத் தாராயாய், பிறன் ஆயினையே - ஏதிலன் ஆயினையே, இனி யான் விடுக்குவென் அல்லேன் - இனி யான் நின்னை விடுப்பேன் அல்லேன்;

கக—ரு. மந்தி பனிவார் கண்ணள் பலபுலந்து உறைய-ஆதிமந்தி என்பாள், நீர் ஒழுகும் கண்ணினையுடையாளாய்ப் பலவற்றையும் வெறுத்திருக்க, கடு திறல் அத்தி ஆடு அணி நசைஇ - கடிய திறல் பொருந்திய ஆட்டன் அத்தியென்னும் அவன் காதலன் ஆடும் அழகினை விரும்பி, நெடு நீர்க் காவிரி கொண்டொளித்தாங்கு - நீர்ப் பெருக்கினையுடைய காவிரியாறு கொண்டு மறைத்தாற்போல, நின் மனையோள் வவ்வலும் அஞ்சுவல்-நின் மனையாள் நின்னைப் பற்றிக் கோடலும் அஞ்சாநிற்பேன்;

கரு—க. சினைஇ-வெகுண்டெழுந்து, ஆரியர் அலறத் தாக்கி-ஆரிய மன்னர்கள் அலறுமாறு அவர்களைத் தாக்கி, பேர் இசை தொன்று முதிர் வடவரை வணங்குவில் பொறித்து - பெரிய புகழையுடைய பழையதாகிய முதிர்ந்த இமயமலையின்மீது வளைந்த விற்பொறியைப் பதித்து, வெம்சின வேந்தரைப் பிணித்தோன் - கொடிய சினம் பொருந்திய பகை வேந்தரைப் பிணித்து வந்தோனாகிய சேரனது, வஞ்சி யன்ன - வஞ்சிநகரை யொத்த, என் நலம் தந்து சென்மே - என் அழகினைத் தந்து செல்வாயாக.

(முடிபு) மகிழ்ந! தொடுத்தென்; செல்லல். ஆஅய் எயினன் சொல்லியது அமையாது, தன் உயிர் கொடுத்தனன்; (நீயோ) கடவுள் முன்னர்த்தேற்றி முன்கை பற்றிய சொல் இறந்து மார்பு தருகல்லாய் பிறன் ஆயினை, இனி யான் விடுக்குவென் அல்லென், மந்தி பல புலந்து உறைய, அத்தி ஆடணி நசைஇ, காவிரி கொண்டொளித்தாங்கு, நின் மனையோள் வவ்வலும் அஞ்சுவல்; வஞ்சியன்ன என் நலம் தந்து சென்மே.

(வி - ரை.) தொடுத்தேன் - வளைத்தேன், பற்றினேன். புன்னாடு-குடகடற் பக்கத்ததொரு நாடு, புன்னுநாடு என்பதும் பாடமாகக் காணப்படுதலின், புன்னாடென்பது புன்னுடெனச் சிதைந்தது எனலுமாம். யாழிசை மறுகு என்றமையால், பாழியின் கண் பரிசில் பெறும் பாணர் முதலாயினோர் இடையறாது வருவர் என்பது பெற்றாம். நன்னன் என்பானுக்கு ஆஅய் எயினன் பகைவனும், மிஞிலி நட்பாளனும் ஆவர் என்பதும், ஆஅய் எயினன் பாழியின்கண் மிஞிலியொடு பொருது உயிர் துறந்தனன் என்பதும், முன்னர் [1]'யாம இரவின்' என்னும் செய்யுளுட் போந்தமை காண்க. சொல்லியது அமையாது-தான் சொல்லிய சொற் பிழையாது என்னும் பொருட்டு. தேற்றி-தெளிவித்து. தேற்றி முன் கை பற்றிய சொல் என்றதனை, முன் கை பற்றித் தேற்றிய சொல் என மாறுக. கடவுள் முன்னர்ச் சூளுரைத்துத் தேற்றுவது, 'முன்றேற்று' எனப்படும் என்பது, [2]'கடியென் கிளவி' என்னுஞ் சூத்திரத்து முன் றேற்று என வருவதனாலும், அதற்கு உரையாசிரியர் பலரும் [3]'கடுஞ்சூள் தருகுவென் நினக்கே' என்பதனை எடுத்துக்காட்டி யிருத்தலாலும் பெறப்படும். எனவே அகநானூற்றுப் பதிப்புக்களிற் காணப்படும் தோற்றி என்னும் பாடத்தினும் [4]'தேற்றி' யென்பதே சிறப்புடைத்தாதல் காண்க. ஆஅய் எயினன், ஒருகால் சொல்லிய சொற் பிழையாது, ஏதிலார் பொருட்டுத் தன் உயிரையும் கொடுத்தனன்; நீயோ நினக்கு இனியளாகக் கொண்டு எனது நலத்தையும் நுகர்ந்து, பின் கடவுள் முன்னர்ச் சூளுடன் கூறிய உரையையும் தப்பி என்னைக் கைவிடுத்துப் பிறன் ஆயினை எனத் தலைவன் கொடுமையை அவன் உணருமாறு காதற் பரத்தை எடுத்துரைத்து, அத்தகைய நின்னை விடுக்குவென் அல்லேன் என்றாள் என்க. மந்தி-ஆதிமந்தி, அத்தி-ஆட்டனத்தி. ஆரியர் அலறத் தாக்கி வட வரையில் விற் பொறித்தவன், இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன் என்னும் சேர மன்னன்; இதனை, 'இமயம் விற் பொறித்து' எனவும், 'பேரிசை மரபின் ஆரியர் வணக்கி' எனவும் பதிற்றுப்பத்தின் இரண்டாம் பத்துப் பதிகத்தில் நெடுஞ்சேரலாதன் கூறப்படுதலான் அறிக. இந்நிகழ்ச்சிகள் அவன் மைந்தனாகிய செங்குட்டுவனாலும் நிகழ்ந்தமை சிலப்பதிகாரத்தால் அறியப்படுதலின், பிணித்தோன் என்றது செங்குட்டுவன் எனலும் பொருந்தும்.

(மே - ள்.) [5]'புல்லுதல் மயக்கும் புலவிக் கண்ணும்' என்னுஞ் சூத்திரத்து, இச் செய்யுளைக் காட்டி, இது காமக்கிழத்தி என் நலம் தா என்றது என்றனர்; நச்.

---

1. அகம்: உ0அ. 2. தொல், சொல். உரி: அஎ. 3. அகம்: கக0.
4. சி. வை. தாமோதரம் பிள்ளை பதிப்பில்-தொல், பொருள், கசெஆம் சூத்திரத்தில் தேற்றிய என்று பாடம் உண்மையும் ஓர்க.
5. தொல், கற்பு: க0.

397. பாலை

[மகட் போக்கிய செவிலித்தாய் சொல்லியது.]

என்மகள் பெருமடம் யான்பா ராட்டத்
தாய்தன் செம்மல் கண்டுகடன் இறுப்ப
முழவுமுகம் புலரா விழவுடை வியனகர்
மணனிடை யாகக் கொள்ளான் கல்பகக்
கணமழை துறந்த கான்மயங் கழுவம்
எளிய வாக ஏந்துகோடி பரந்த
பொறிவரி அல்குல் மாஅ யோட்கெனத்
தணிந்த பருவஞ் செல்லான் படர்தரத்
துணிந்தோன் மன்ற துனைவெங் காளை
கடும்பகட் டொருத்தல் நடுங்கக் குத்திப்
போழ்புண் படுத்த பொரியரை ஓமைப்
பெரும்பொளிச் சேயரை நோக்கி ஊன்செத்துக்
கருங்கால் யாத்தப் பருந்துவந் திறுக்கும்
சேணுயர்ந் தோங்கிய வானுயர் நெடுங்கோட்டுக்
கோடை வெவ்வளிக் குலமரும்
புல்லிலை வெதிர நெல்விளை காடே.

—கயமனார்.

(சொ - ள்.) க. துனை வெம் காளை-விரைதலையுடைய வெவ்விய காளை போன்றவன்,

க—ச. முழவு முகம் புலரா விழவு உடை வியன் நகர் - முழவின் ஒலி மாறாத விழாவுடைய அகன்ற மனையில், என் மகள் பெரு மடம் யான் பாராட்ட-என் மகளது பெரிய மடப்பத்தினை யான் பாராட்டவும், தாய் நற்றாய், தன் செம்மல் கண்டு கடன் இறுப்ப-தனது தலைமையை அறிந்து தன் கடமைகளைச் செலுத்தவும், மணன் இடையாகக் கொள்ளான்-மணத்தின் வாயிலாகக் கொள்ளாமலும்,

ச—அ. கல் பக கண மழை துறந்த-பாறைகள் பிளவுபடக் கூட்டமாகிய மேகம் பெய்யா தொழிந்த, ஏந்து கோடி பரந்த கான் மயங்கு அழுவம் - உயர்ந்த கோடி பரந்த காடடர்ந்த பரப்புக்கள், பொறி வரி அல்குல் மாயோட்கு - புள்ளிகளும் வரிகளும் பொருந்திய அல்குலையுடைய மாமை நிறத்தினையுடையாட்கு, எளியவாக என - நடத்தற்கு எளிமையுடையனவாக வென்று, தணிந்த பருவம் செல்லான்-வெப்பம் தணிந்த பருவத்தே செல்லாமலும்,

௬௦—௪. கடும் பகட்டு ஒருத்தல்-கடிய பெருமையையுடைய ஆண் யானை, நடுங்கக் குத்தி-மரம் அசையும்படி குத்தி. போழ் புண் படுத்த-பிளத்தலால் புண் உண்டாக்கிய, பொரி அரை ஓமை-பொரிகள் பொருந்திய அடியினையுடைய ஓமை மரத்தின், பெரும் பொளி நோக்கி-பெரிய பட்டையுரிந்த சிவந்த அடி மரத்தினை நோக்கி, ஊன் செத்து - அதனை ஊன் எனக் கருதி, சேண் உயர்ந்து ஓங்கிய-நெடிது உயர்ந்த, கருங் கால் யாத்து-கரிய அடியினையுடைய யா மரத்திலுள்ள பருந்து வந்து இறுக்கும் - பருந்து வந்து தங்கும், வான் உயர் நெடுங் கோட்டு - வானின்கண் உயர்ந்த நெடிய சிமையங்களிலுள்ள, கோடை வெவ்வளிக்கு உலமரும்-வெவ்விய மேல் காற்றினால் அலையும், புல்இலை வெதிர நெல்விளை காடு - புல்லிய இலைகளையுடைய மூங்கிலின் நெல் விளையும் காட்டின்கண்,

அ—௯. படர்தரத் துணிந்தோன் மன்ற - உடன்கொண்டு செல்ல ஒரு தலையாகத் துணிந்தான்.

(முடிபு) துனை வெங் காளை, யான் பாராட்ட தாய் கடன் இறப்ப வியனகர் மணன் இடையாகக் கொள்ளான், கால்மயங்கு அழுவம் மாயோட்கு எளியவாக எனத் தணிந்த பருவம் செல்லான், நெல் விளை காடு படர்தரத் துணிந்தோன்மன்ற.

(வி - ரை.) தன் செம்மல் - தலைவனது மாண்பு. முழவு முகம் புலராமையாவது இடையறாது ஒலித்தல், மணன் இடையாகக் கொள்ளான் - வரைந்து கொள்ளானாய் என்றபடி. ஏந்து கொடி பரந்த என்ற தனை அல்குலுக்கு அடையாக்கி, உயர்ந்த கொடிபோற் பரந்த வரிகளையுடைய என்றலுமாம். மாயோட்கு எளியவாக என மாறிக் கூட்டுக. துனைதல்-விரைதல், பொறுமையில்லாமை என்றபடி. யானை உண்டற் பொருட்டுக் குத்திப் புண்படுத்த ஓமையின் அரை என்க. யானை ஓமையை உரித்துத் தின்னுமென்பது [1]'கயந்தலை மடப்பிடி யுயங்கு பசி களைஇயர், பெருங்களிறு தொலைத்த முடத்தா ளோமை' [2]'கான யானை தோலயந் துண்ட, பொரிதா ளோமை' என்பனவற்றாலும் அறிக. ஓங்கிய யாத்து என்க. இறுக்கும் காடு எனவும், நெடுங்கோட்டு வெதிர காடு எனவும் கூட்டுக.

———

1. நற்: கஙஎ. 2. குறுந்: எ௯.

398. குறிஞ்சி

[காமமிக்க கழிபடர் கிளவியால் (வரைவிடத்துக்கண்) தலைமகன் தலைமகன் வரையினின்றும் போந்த ஆற்றொடு புலந்து சொல்லியது.]

[1]இழைநிலை நெகிழ்ந்த எவ்வங் கூரப்
படர்மலி வருத்தமொடு பலபுலந் தசைஇ
மென்றோள் நெகிழச் சாஅய்க் கொன்றை
ஊழுறு மலரிற் பாழ்பட முற்றிய
பசலை மேனி நோக்கி நுதல்பசந்து
இன்னே மாகிய எம்மிவண் அருளான்
நம்மோன் செய்த கொடுமைக்கு இம்மென்று
அலமரல் மழைக்கண் தெண்பனி மல்க
நன்று[2]புற மாறி அகறல் யாழநின்
குன்றுகெழு நாடற் கென்னெனப் படுமோ
கரைபொரு நீத்தம் உரையெனக் கழறி
நின்னொடு புலத்தல் அஞ்சி அவர்மலைப்
பன்மலர் போர்த்து நாணுமிக ஒடுங்கி
மறைந்தனை கழியும் நிற்றந்து செலுத்தி
நயனறத் துறத்தல் வல்லி யோரே
நொதும லாளர் அதுக ணொடாது
அழற்சினை வேங்கை நிழற்றவிர்ந் தசைஇ
மாரி புறந்தர நந்தி ஆரியர்
பொன்படு நெடுவரை புரையும் எந்தை
பல்பூங் கானத் தல்கி இன்றிவண்
சேர்ந்தனை செலினே சிதைகுவ துண்டோ
குயவரி இரும்போத்துப் பொருத புண்கூர்ந்து
உயங்குபிடி தழீஇய மதனழி யானை
வாங்கமைக் கழையின் நரலுமவர்
ஓங்குமலை நாட்டின் வருஉ வோயே.

—இம்மென்கீரனார்.

(சொ-ள்.) கக. கரை பொரு நீத்தம் - கரையைப் பொருது வரும் வெள்ளம் பொருந்திய யாறே!,

உஉ.—கு. குயவரி இருபோத்து பொருத புண் கூர்ந்து - பெரிய ஆண்புலி தாக்கியதாலாகிய புண் மிகுந்து, உயங்கு பிடி தழீஇய மதன்

(பாடம்) 1. இழைநிலை நெகிழ. 2. புறமாறி.

அழி யானை - வருந்தும் பெண் யானையால் தழுவப்படும் வலி குன்றிய களிற்றியானை, வாங்கு அமை கழையின் நரலும் - வளைந்த மூங்கிலாற் செய்த தூம்புபோல ஒலிக்கும், அவர் ஓங்கு மலை நாட்டின் வருஉவோய்-எம் தலைவரது உயர்ந்த மலை நாட்டினின்றும் வருவோய்!,

௬—௧௧. இழை நிலை நெகிழ்ந்த எவ்வம் கூர - அணிகள் நிலையினின்றும் நெகிழ்தற்கு ஏதுவாகிய துன்பம் மிக, படர்மலி வருத்தமொடு-நினைவு மிக்க வருத்தத்துடன், பல புலந்து அசைஇ - பலவற்றையும் வெறுத்துக்கூறித் தங்கி, மெல்தோள் நெகிழ-மெல்லிய தோள் மெலிய, சாஅய்-வருந்தி, கொன்றை ஊழ் உறு மலரின் - கொன்றையினது நன்கு மலர்ந்த பூக்களைப்போல, பாழ்பட முற்றிய பசலைமேனி நோக்கி-பாழ்பட நிறைந்த பசலையுற்ற மேனியைப்பார்த்து, நுதல் பசந்து-நெற்றி பசலையுறப்பெற்று, இன்னேம் ஆகிய எம் இவண் அருளான் - இன்ன நிலையினேம் ஆகிய எம்மை இங்கு அருளுதல் செய்யானாய், நும்மோன் செய்த கொடுமைக்கு-நும் தலைவன் செய்த வன்கண்மைக்கு, இம்மென்று அலமரல் மழைக் கண் தெண் பனி மல்க - கலங்கும் குளிர்ந்த கண்களினின்றும் விரைந்துதெளிந்த நீர் பெருகவும், நன்று புறம் மாறி அகறல்-அறத்தினைக் கைவிட்டு நீங்குதல், நின் குன்று கெழு நாடற்கு என் எனப்படுமோ - குன்று பொருந்திய நாட்டினையுடைய நின் தலைவனுக்கு யாதெனப்படுமோ, உரை எனக் கழறி-உரைப்பாயாக என்று கூறி, நின்னொடு புலத்தல் அஞ்சி-நின்னொடு யாம் வெறுத்தலை அஞ்சி, அவர் மலை பல மலர் போர்த்து-அவர் மலையிலுள்ள பல மலர்களையும் போர்த்துக் கொண்டு, நாணு மிக ஒடுங்கி-நாணத்தால் மிகவும் ஒடுங்கி, மறைந்தனை கழியும்-மறைந்து நீங்கும், நின் தந்து செலுத்தி-நின்னைக் கொணர்ந்து போக்கி, நொதுமலாளர்-ஏதிலாளராகிய அவர், நயன் அறத் துறத்தல் வல்லியோர்-நீதியின்றிக் கைவிடுதற்கு வன்மையுடையோர் ஆவர், அது கண் ஓடாது - அதனை நோக்காது,

௧௭—௨௧. அழல் சினை வேங்கை நிழல் தவிர்ந்து அசைஇ-தீயினை யொக்கும் பூக்கள் நிறைந்த கிளையையுடைய வேங்கையின் நிழலின் நின் செலவினைத் தவிர்ந்து தங்கி, மாரி புறந்தர நந்தி-பெய்யும் மழை புரத்தலால் பெருக்கமுற்று, ஆரியர் பொன்படு நெடுவரை புரையும்-ஆரியரது பொன் பொருந்திய நீண்ட இமயமலையை யொக்கும், எந்தை பல்பூங் கானத்து அல்கி-எம் தந்தையது பலபூக்களையுடைய காட்டில் அமர்ந்து, இன்று இவண் சேர்ந்தனை செலினே-இற்றைப்பொழுது இவ்விடத்தே சேர்ந்திருந்து செல்லின், சிதைகுவது உண்டோ-நின் காரியம் ஏதேனும் கெடுவது உண்டோ.

(முடிபு) கரை பொரு நீத்தம்! அவர் ஓங்கு மலை நாட்டின் வருஉவோய்! எவ்வம் கூர, வருத்தமொடு அசைஇ தோள் நெகிழச் சாஅய், பசலை மேனி நோக்கி நுதல் பசந்து இன்னேமாகிய எம் இவண் அருளான் நும்மோன் செய்த கொடுமைக்கு, கண் பனி மல்க, நன்று புறமாறி அகறல், நின் குன்று கெழுநாடற்கு என்னெனப்படுமோ

உரை எனக் கழறிப் புலத்தல் அஞ்சி மலர்போர்த்து ஒடுங்கி மறைந்தனை கழியு நிற்றந்து செலுத்தி நோதுமலாளர் துறத்தல் வல்லியோர், அது கண் ஓடாது வேங்கை நிழல் தவிர்ந்து அசைஇ நந்தி, கானத்து அல்கி, இவண் சேர்ந்தனை செலினே சிதைகுவது உண்டோ.

(வி - ரை.) நெகிழ்ந்த-நெகிழ்தற்கு ஏதுவாகிய. பாழ்பட-வறிதே. நும்மோன் - நுமன், நும் தலைவன். நன்று - அறம். புறம் மாறல்-கைவிடுதல். குன்று கெழு நாடற்கு: சுட்டு. என் எனப்படுமோ-யாதாகுமோ என்றபடி. நும்மோன் எனவும் நின் குன்று கெழுநாடன் எனவும் கூறினமையால், கழறுதலும் புலத்தலும் யாற்றின் மேல ஆயின. மறைந்து கழிதலாவது மலர் போர்த்துக் கழிதல். நின்னொடு புலத்தல் அஞ்சி நீ மலர் போர்த்து ஒடுங்கி மறைந்து கழியாநின்றனை அங்ஙனமாகவும் நொதுமலாளர் நின்னைத் தந்து செலுத்தித் துறத்தல் வல்லியோர் ஆவர் என விரித்து உரைத்துக்கொள்க. கண் ஓடாது - நோக்காது என்னும் பொருட்டு. நந்துதல் - பெருகுதல். இன்று இவண் சேர்ந்தனை செலினே சிதைகுவது உண்டோ என்றது, அதனால் நினக்கு வரக்கடவதொரு தீங்கு இல்லாமையொடு அவரது மலைநாட்டி னின்றும் வருகின்றுயாகலின் நின்னுடன் ஒரு நாள் தங்கி யாமும் ஆற்றியிருத்தலுமாகும் என்று கழிபடர் தோன்றக் கூறியவாறு. குயவரி - குயம்போலும் வரிகளையுடைய புலி. குயம் - அரிவாள். வலியழிந்த யானை தாம்புபோல் உயிர்க்கும் என்பது, [1]'ஒய் களிறெடுத்த நோயுடை நெடுங்கை, தொகுசொற் கோடியர் தூம்பின் உயிர்க்கும்' என முற்போந்ததனாலும் அறிக. கழை என்றது ஈண்டுத் தூம்பு என்னும் பொருட்டு.

---

399. பாலை

[தலைமகன் பிரிவின்கண் தலைமகளைத் தோழி வற்புறுத்தியது.]

சிமையக் குரல சாந்தருந்தி இருளி
இமையக் கானம் நாறுங் கூந்தல்
நன்னுதல் அரிவை இன்னுறல் ஆகம்
பருகு வன்ன காதல் உள்ளமொடு
திருகுபு முயங்கல் இன்றியவண் நீடார்
கடற்றடை மருங்கின் கணிச்சியிற் குழித்த
உடைக்கண் நீடமை ஊறல் உண்ட
பாடின் தெண்மணிப் பயங்கெழு பெருநிரை
வாடுபுலம் புக்கெனக் கோடுதுவைத் தகற்றி
ஒல்குநிலைக் கடுக்கை அல்குநிழல் அசைஇப்

---

1. அகம்: கக்க.

பல்லான் கோவலர் கல்லாது ஊதும்
சிறுவெதிர்ந் தீங்குழற் புலம்புகொள் தெள்விளி
மையில் பளிங்கின் அன்ன தோற்றப்
பல்கோள் நெல்லிப் பைங்காய் அருந்தி
மெல்கிடு மடமரை ஓர்க்கும் அத்தம்
காய்கதிர் கடுகிய கவினழி பிறங்கல்
வேய்கண் உடைந்த சிமைய
வாய்படு மருங்கின் மலையிறந் தோரே.

—எயினந்தை மகனார் இளங்கீரனார்.

(சொ - ள்.) க—உ. சிமைய குரல சாந்து அருந்தி இருளி-உச்சியிலுள்ள பூங்கொத்துக்களை யுடையனவாய் மயிர்ச் சாந்தினைக்கொண்டு இருண்டு, இமைய கானம் நாறும் - இமையமலையிலுள்ள கானம் போல நாறும், கூந்தல் - கூந்தலையும், நல்நுதல் - நல்ல நெற்றியினையுமுடைய, அரிவை - தலைவியே!,

ங—கஅ. கடறு அடை மருங்கின் - கற் காட்டினைச் சார்ந்த பக்கத்தில், கணிச்சியில் குழித்த - குந்தாலியால் தோண்டின, உடைக் கண் - குழியிடத்தே, நீடு அமை ஊறல் உண்ட-தாழ்த்தல் பொருந்திய ஊற்று நீரை யுண்ட, பாடு இன் தெள் மணி - இனிய தெளிந்த ஓசையையுடைய மணிகளைப்பூண்ட, பயம் கெழுபெரு நிரை - பயன் மிக்க பெரிய ஆனிரை, வாடுபுலம் புக்கென - வறண்ட பாலையிற் புகுந்ததாக, கோடு துவைத்து அகற்றி - ஊது கொம்பினால் ஒலியை உண்டாக்கி அவற்றை அங்கு நின்றும் விலக்கி, ஒல்கு நிலை கடுக்கை அம் குநிழல் அசைஇ - தளர்ந்த நிலையினையுடைய கொன்றையின் குறைந்த நிழலில் தங்குவித்து, பல் ஆன் கோவலர் - பல ஆனினங்களை யுடைய ஆயர், கல்லாது ஊதும் - இசையைக் கல்லாமல் ஊதும், சிறு வெதிர் தீம் குழல் - சிறிய மூங்கிலாற் செய்த இனிய குழலினின்றெழும், புலம்பு கொள் தெள் விளி - தனிமை கொண்ட தெளிந்த ஓசையினை, மைஇல் பளிங்கின் அன்ன தோற்றப் பல்கோள் நெல்லிப் பைங்காய் அருந்தி - குற்றமற்ற பளிங்கினைப்போன்ற தோற்றத்தை யுடைய பலவாகக் காய்த்த நெல்லியின் பசிய காய்களை உண்டு, மெல்கிடு மட மரை - அசையிடுகின்ற இளைய மரைமான், ஓர்க்கும் - கூர்ந்து கேட்கும், அத்தம்-காட்டிலே, காய் கதிர் கடுகிய கவின் அழி பிறங்கல் - காயும் ஞாயிறு முடுகிய அழகு ஒழிந்த பாறைகளையும், வேய் கண் உடைந்த சிமையம் - மூங்கில் கணுக்கள் உடைந்த சிகரங்களையும், வாய்படு மருங்கின் - இடமகன்ற பக்க மலையினையுமுடைய, மலை இறந்தோர் - மலையினைக் கடந்து சென்ற நம் தலைவர்,

க—ஒ. இன் உறல் ஆகம்-இனது இனிமை பொருந்துதலையுடைய மார்பினை, பருகு அன்ன காதல் உள்ளமொடு-பருகுதல் போலும் காதல்

மிக்க உள்ளத்துடன், திருகுபு முயங்கல் இன்றி - பின்னித் தழுவுதல் இன்றி, அவண் நீடார் - அங்குத் தாழ்த்திரார்.

(முடிபு) நன்னுதல் அரிவை! மலையிறந்தோர், நின் இன் உறல் ஆகம் காதல் உள்ளமொடு முயங்கல் இன்றி, அவண் நீடார்.

(வி - ரை.) சிமையம் - மரம், புதர்களின் உச்சி. குரல் - பூங் கொத்து, குரலவாய் நாறுங் கூந்தல் என்க. திருகுதல் - ஒருவர் மெய்யுடன் ஒருவர் மெய் பின்னுதல். உடை - உடைத்தெடுத்த கிணற்றினைக் குறிப்பதாயிற்று. பயம் - பயன், பால். 'கல்லாது ஊதும் - ஆசிரியனிடத்துக் கற்காமலே இயல்பாக ஊதும் என்க. கோவலர் ஊதும் தீங்குழலின் தெள்விளியை மரை ஓர்க்கும் அத்தத்திலே பிறங்கலும் சிமையமும் மருங்கும் பொருந்திய மலை யிறந்து சென்றோர் என்க.

---

400. நெய்தல்

[தலைமகன் வரைந் தெய்திய பின்றைத் தோழி தலைமகட்குச் சொல்லியது.]

நகைநன் றம்ம தானே அவனொடு
மனையிறந் தல்கினும் அலரேன நயந்து
கானல் அல்கிய நங்கள வகலப்
பல்புரிந் தியறல் உற்ற நல்வினை
[1]நூலமை பிறப்பின் நீல உத்திக்
கோய்ம்மயிர் எருத்தம் பிணர்படப் பெருகி
நெய்ம்மிதி முனைஇய கொழுஞ்சோற் றார்கை
நிரலியைந் தோன்றிய சேலவிற் செந்தினைக்
குரல்வார்ந் தன்ன [2]குலவுத்தலை நன்னான்கு
வீங்குசுவல் மோசியத் தாங்கு [3]நுகம் தழீஇப்
பூம்போறிப் பல்படை ஒலிப்பப் பூட்டி
மதியுடை வலவன் ஏவலின் இகுதுறைப்
புனல்பாய்ந் தன்ன வாமான் திண்டேர்க்
கணைகழித் தன்ன நோன்கால் வண்பரி
பால்கண் டன்ன ஊதை வெண்மணல்
கால்கண் டன்ன வழிபடப் போகி
அயிர்ச்சேற் றள்ளல் அழுவத் தாங்கண்
இருணீர் இட்டுச்சுரம் நீந்தித் துறைகெழு

(பாடம்) 1. நூலமை மரபின், உந்தி. 2. குவவுத்தலை நன்ன. 3. நுகம் தளரா.

மெல்லம் புலம்பன் வந்த ஞான்றைப்
பூமலி இருங்கழித் துயல்வரும் அடையோடு
நேமி தந்த நெடுநீர் நெய்தல்
விளையா இளங்கள் நாறப் பலவுடன்
[1]போதியவிழ் தண்மலர் கண்டு நன்றும்
புதுவ தாகின் றம்ம பழவிறற்
பாடெழுந் திரங்கும் முந்நீர்
நீடிரும் பெண்ணைநம் அழுங்கல் ஊரே.

—உலோச்சனார்.

(சொ - ள்.) க—ச. (தோழி,) மனை இறந்து அல்கினும் - மனையைக் கடந்து தங்கினும், அலர் என - அலராகும் என்று கூறப்படவும், அவனொடு நயந்து கானல் அல்கிய நம் களவு அகல - நம் தலைவனுடன் விரும்பிச் சோலையிலே சென்று தங்கிய நம் களவொழுக்கம் நீங்கும்படி, பல் புரிந்து இயறல் உற்ற நல்வினை - முற் பிறப்பில் பல நன்மைகளும் செய்து பொருந்துதலுற்ற நல்வினையால்,

இ—கக. நூல் அமை பிறப்பின்-புரவி நூல் கூறும் இலக்கணம் அமைந்த பிறப்பினையும், நீல உத்தி-நீலமணியாலாகிய நெற்றிச்சுட்டியினையும், கொய் மயிர் எருத்தம் பிணர்படப் பெருகி - சருச்சரையுண்டாக அடர்ந்து கொய்யப்பெற்ற மயிர் பொருந்திய பிடரியினையும் உடைய, நெய்ம்மிதி முனைஇய கொழுஞ் சோற்று ஆர்கை - நெய் பெய்து மிதித்தியற்றிய கவளத்தை வெறுத்த கொழுவிய சோற்றை உண்ணுதலுடைய, நிரல் இயைந்து ஒன்றிய செலவில் - வரிசையாகப் பொருந்தி ஒரு பெற்றியே செல்லும் செலவினையும், செந்தினை குரல் வார்ந்தன்ன குலவு தலை - செவ்விய தினையின் கதிர் நீண்டு வளைந்தாற்போன்ற வளைந்த தலையினையும் உடைய, நல் நான்கு - நன்றாகிய நான்கு குதிரைகளை, தாங்கு நுகம் தழீஇ - தாங்கும் நுகத்தினைப் பொருந்தி, வீங்கு சுவல் மொசிய - பருத்த கழுத்தில் நெருங்க (அணிந்த), பூம்பொறி பல்படை ஒலிப்ப பூட்டி - அழகிய புள்ளிகளையுடைய பல வடங்கள் ஒலிக்கும்படி பூட்டி, மதியுடை வலவன் ஏவலின் - அறிவுடைய பாகன் செலுத்தலின், இகு துறை புனல் பாய்ந்தன்ன - தாழ்ந்த துறையில் நீர் பாய்ந்தாலொத்த, வாம் மான் திண்தேர் - தாவிச்செல்லும் குதிரை பூட்டிய திண்ணிய தேரின், கணை கழிந்தன்ன நோன் கால் வண் பரி - அம்பு பாய்ந்தாற்போன்ற வலிய காலின் விரைந்த செலவு, பால் கண்டன்ன ஊதை வெண் மணல் - பாலைக் கண்டாற்போன்ற காற்றால் திரட்டப்பெற்ற வெள்ளிய மணலிடத்தே, கால் கண்டன்ன வழிபட போகி - வாய்க்காலைக் கண்டாற்போன்ற சுவடு உண்டாகப்போக, அயிர் சேற்று அள்ளல் அழுவத்து ஆங்கண் - நுண்ணிய குழம்பாகிய சேற்றின் பரப்பினையுடைய அவ்விடத்தே,

1. போதியவிழ்ந்த தலரக் கண்டு.

இருள் நீர் இட்டு சுரம் நீந்தி - இருண்ட நீரினையுடைய குறுகிய கழியைக் கடந்து, துறைகெழு மெல் அம் புலம்பன்-துறை பொருந்திய கடற்கரையையுடைய நம் தலைவன், வந்த ஞான்றை - வந்த அன்று,

௨௦—௬. பூ மலி இரு கழி துயல்வரும் அடையொடு - பூக்கள் நிறைந்த கரிய கழியிடத்தே இலைகளோடு அசையும், நேமி தந்த நெடுநீர் நெய்தல் - ஆழமான நீரையுடைய கடல் தந்த நெய்தலின், விளையா இளங்கள் நாற - முதிராத இளைய கள் நாறும்படி, போது அவிழ் தண் மலர் - கட்டு அவிழ்ந்த தண்ணிய மலர்களை, பலவுடன் கண்டு - ஏனைப்பூக்கள் பலவற்றுடன் (சூடி வருதலைக்) கண்டு,

௨௬—௯. பழவிறல் பாடு எழுந்து இரங்கும் - பழைய பெருமையுடைய ஆரவாரம் மிக்கு முழங்கும், முந்நீர்-கடற்கரைக்கண்ணுள்ள, நீடு இரு பெண்ணை-நீண்ட பெரிய பனைமரத்தையுடைய, நம் அழுங்கல் ஊர்-அலர் ஆரவார மிக்க நமது ஊர், நன்றும் புதுவது ஆகின்று-(அந்த அலரினை விடுத்து) மிகவும் புதிய தன்மையினை உடையது ஆகின்றது,

௯. நகை நன்று - அது பெரிதும் நகையினை விளைப்பதாகும்.

(முடிபு) தோழி! கானல் அல்கிய நம் களவு அகல, நல்வினையால் மெல்லம் புலம்பன் இருள் நீர் இட்டுச் சுரம் நீந்தி வந்த ஞான்றை, அவன் மலர் சூடி வருதலைக் கண்டு நம் அழுங்கலூர் நன்றும் புதுவதாகின்று, அம்ம! அது நகை நன்று அம்ம!

(வி—ரை.) கானல் அல்கிய - மனையின் அளவிலன்றிக் காட்டினும் சென்று தங்கிய என்க. களவு அகல வந்த ஞான்றை எனவும், நல்வினையால் வந்த ஞான்றை எனவும் கூட்டுக. நெய்ம்மிதி-கொள்ளுடன் நெய் பெய்து அமைத்த கவளம். நான்கு-நான்காகிய குதிரைகள்: ஆகுபெயர். பிறப்பினையும் உத்தியினையும் எருத்தத்தினையும் உடைய நான்கு எனவும், ஆர்கையுடைய நான்கு எனவும், செலவினையும் தலையினையும் உடைய நான்கு எனவும், தனித்தனி கூட்டுக. மொசிய அணிந்த பல் படை என்று விரித்துரைக்க. படை என்றது கழுத்து அணிகளை. போகி-போக எனத்திரிக்க. திண் தேர் நோன் கால் வெண்மணல் வழிபடப் போக என்க. வந்த ஞான்றை - வந்து வரைந்த ஞான்றை. அடையொடு துயல்வரும் எனவும் நெடுநீர் நேமி எனவும் மாறிக் கூட்டுக. நெய்தலின் தண்மலரைப் பலவுடன் சூடி வருதல் கண்டு என்க. நாற என்னும் வினையெச்சம் அவிழ் என்னும் வினைகொண்டு முடிந்தது. தலைவன் வரைந்தெய்துதல் கண்டு, ஊர் அலர் கூறுதல் அடங்கிவிட்டதென்பாள், அழுங்கல் ஊர் புதுவதாகின்று என்றாள். அம்ம இரண்டும் உரையசை இடைச்சொல்.

எட்டுத்தொகையுள் ஒன்றாகிய நெடுந்தொகை யெனப் படும் அகநானூற்றுக்கு நாவலர் பண்டித, ந. மு. வேங்கடசாமி நாட்டாரும், கரந்தைக் கவியரசு, ஆர். வேங்கடாசலம் பிள்ளையும் இயற்றிய வேங்கட விளக்கு என்னும் உரை முற்றிற்று.

பாயிரம்

நின்ற நீதி வென்ற நேமிப்
பழுதில் கொள்கை வழுதிய ரவைக்கண்
அறிவுவீற் றிருந்த செறிவுடை மனத்து
வான்றோய் நல்லிசைச் சான்றோர் குழீஇ
அருந்தமிழ் மூன்றுந் தெரிந்த காலை
ஆய்ந்த கொள்கைத் தீந்தமிழ்ப் பாட்டுள்
நெடிய வாகி யடிநிமிர்ந் தொழுகிய
இன்பப் பகுதி யின்பொருட் பாடல்
நானூ றெடுத்து நூனவில் புலவர்
களித்த மும்மதக் களிற்றியா னைநிரை
மணியொடு மிடைந்த அணிகிளர் பவளம்
மேவிய நித்திலக் கோவை யென்றாங்கு
அத்தகு பண்பின் முத்திற மாக
முன்னினர் தொகுத்த நன்னெடுந் தொகைக்குக்
கருத்தெனப் பண்பினோ டுரைத்தவை நாடின்
அவ்வகைக் கவைதாம் செவ்விய வன்றி
அரியவை யாகிய பொருண்மை நோக்கிக்
கோட்ட மின்றிப் பாட்டொடு பொருந்தத்
தகவொடு சிறந்த அகவல் நடையாற்
கருத்தினி தியற்றி யோனே பரித்தேர்
வளவர் காக்கும் வளநாட் டுள்ளும்
நாடெனச் சிறந்த பீடுகெழு சிறப்பிற்
கெடலருஞ் சிறப்பின் இடையள நாட்டுத்
தீதில் கொள்கை மூதூ ருள்ளும்
ஊரெனச் சிறந்த சீர்கெழு மணக்குடிச்
செம்மை சான்ற தேவன்
தொன்மை சான்ற நன்மை யோனே.

"இத்தொகைக்குக் கருத்து அகவலாற் பாடினான், இடையள நாட்டு மணக்குடியான் பால்வண்ண தேவனான வில்லவ தரையன். நெடுந்தொகை நானூறும் கருத்தினோடு முடிந்தன. இவை பாடின கவிகள் நூற்று நாற்பத்தைவர்.

இத் தொகைப் பாட்டிற் கடியளவு சிறுமை பதின்மூன்று; பெருமை முப்பத்தொன்று. தொகுப்பித்தான் பாண்டியன் உக்கிரப் பெருவழுதி. தொகுத்தான் மதுரை உப்பூரி குடிகிழார் மகனாவான் உருத்திரசன்மன் என்பான்."

'வண்டுபடத் ததைந்த கண்ணி' என்பது முதலாக, 'நெடுவேண் மார்பின்' என்பது ஈருகக் கிடந்த பாட்டு நூற்றிருபதும் களிற்றியானை நிரை யெனப்படும். இப்பெயர் காரணத்தாற் பெற்றது; இது பொருட்காரணமாகக் கொள்க. 'நாநகை யுடைய நெஞ்சே' என்பது முதலாக, 'நாள்வலை முகந்த' என்பது ஈருகக் கிடந்த பாட்டு நூற்றெண்பதும் மணிமிடை பவளம் எனப்படும். இதவுங் காரணப் பெயர்; என்னை, செய்யுளும் பொருளும் ஒவ்வாமையால். 'வறனுறு செய்தி' என்பது முதலாக, 'நகை நன் றம்ம' என்பது ஈருகக் கிடந்த பாட்டு நூறும் நித்திலக் கோவை யெனப்படும். செய்யுளும் பொருளும் ஒக்குமாகலான்.

அகநானூற்றின் தொகுப்பு முறை

வியமெல்லாம் வெண்டே ரியக்கம்; கயமலர்ந்த
தாமரையா றுகத் தகைபெறீஇக் காமர்
நறுமுல்லை நான்காக நாட்டி வெறிமாண்ட
எட்டும் இரண்டும் குறிஞ்சியாக் குட்டத்து
இவர்திரை பத்தா இயற்பட யாத்தான்
தொகையி னெடியதனைத் தோலாச் செவியான்
வகையி னெடியதனை வைப்பு. க

ஒன்றுமூன் றைந்தேழொன் பான்பாலை; ஓதாது
நின்றவற்றின் நான்கு நெறிமுல்லை;—அன்றியே
ஆறும் மருதம்; அணிநெய்தல் ஐயிரண்டு;
கூறு தவைகுறிஞ்சிக் கூற்று. உ

பாலை வியமெல்லாம்; பத்தாம் பனிநெய்தல்;
நாலு நளிமுல்லை நாடுங்கால்;—மேலையோர்
தேறும் இரண்டெட் டிவைகுறிஞ்சி; செந்தமிழின்
ஆறு மருதம் அகம். ௩

வியம் - ஒற்றையெண்கள். வெண்டே ரியக்கம் - பாலை. தாமரை- மருதம். குட்டத்து இவர் திரை - நெய்தல். தோலாச் செவியான் - கேள்வியுணர்வு மிக்கவன்.

பாட்டு முதற்குறிப்பு அகரவரிசை

[பாட்டு : பக்க எண்]

அகல்வாய் வானம்	௧௨௪
அம்மவாழி ..காதலர்	௪௭
அம்மவாழி நம்மலே	௧௭௦
அரம்போழ் அவ்வளை	௯௫
அருந்தெறன் மரபிற்	௧௩௮
அவ்விளிம்புரீஇய	௧௯௭
அறியாய் வாழி	௧௭௯
ஆள்வினைப் பிரிதலும்	௧௦௨
ஆளிநன்மான்	௧௫௭
இடைபிறரறிதல்	௫
இம்மென்பேரலர்	௪௪
இருந்த வேந்தன்	௧௬௨
இரும்பிடிப் பரிசிலர்	௨௦
இருவிசும்பிவர்ந்த	௭
இருள்படு நெஞ்சத்	௬௬
இலங்குசுடர் மண்டிலம்	௧௨௮
இழைநிலைநெகிழ்ந்த	௧௯௩
இன்பமும் இடும்பையும்	௫௦
இனிப்பிறிதுண்டோ	௨௩
உய்த்தகையின்றால்	௮௧
உவர்விளை உப்பின்	௧௭௫
உழுவையொடுழந்த	௧௫
ஊரல் அவ்வாய்	௪௯
என்மகன்	௧௯௧
என்னுவதுகொல்	௯௪
ஒறுப்பஓவலே	௮௩
ஓங்குதிரைப் பரப்பின்	௩௮
ஓடாநல்லேற்று	௬௪
கடுந்தேரியளையரொடு	௧௯
கண்டிசின் மகளே	௧௩௨
கழிப்பூக்குற்றம்	௫௪
கழியே, சிறுகுரல்	௬௭
களவும் புளித்தன	௧௮௫
கானமானதர்	௩௫
குழற்காற்சேம்பின்	௬௯
குன்றேங்குவைப்பின்	௭௪
கூழையுங்குறுநெறி	௨௮
கொடுமுள் ஈங்கை	௧௧௦
கோடியர் பிறங்கற்	௧௮௨
கோடை நீடலின்	௧௪௮
சாரல் யாஅத்து	௭௧
சிமையக்குரல்	௧௯௫
சிலம்பிற்போகிய	௪
சிறுநுதல் பசந்து	௧௩
செல்லல் மகிழ்நநின்	௧௪௯
சென்றுநீடுநர்	௧௪௪
தண்சயம் பயந்த	௧௮௬
தற்புரந்தெடுத்த	௧௭௦
தன்னோரன்ன	௧௬௪
தாழ்சினை மருதம்	௧௨௬
தாழ்பெருந் தடக்கை	௧௨௯
திருந்திழை நெகிழ்ந்து	௧௩௮
துறைமீன் வழங்கும்	௩௦
தூமலர்த்தாமரை	௧௧௭
தேர்சேண் நீக்கி	௧௫௫
தொடுத்தென்	௧௮௮
தொடுதோற்கானவன்	௧௩௦
தோளுந்தொல்கவின்	௯௨
நகைநன்றம்ம...அவனொடு	௧௯௭
நகைநன்றம்ம...இறைமிசை	௮௯
நாரைந்துறைவி	௧௫௨
நிதியந்துஞ்சும்	௧௫௦
நிரைசெலல்இவுளி	௧௨௧
நீடுநிலை அரைய	௫௮
நீலத்தன்ன நிறங்	௧௧௨
நீலத்தன்ன நீர்	௨௫
நெஞ்சுடம்படுதலின்	௨௨
பகலினும் அகலா	௧௦
பசித்த யானை	௪௦
பல்பூந்தண்பொழிற்	௧௧௫
பன்னாள் எவ்வம்	௭௮
பனிவார் உண்கணும்	௧௧௩
பாம்புடை விடர	௧௧௯
பார்வெல் வெருகின்	௧௭௭
பிறருறு விழுமம்	௧௫௯
பூங்கணும் நுதலும்	௫௫
பெரும்பெயர் மகிழ்ந	௧௨
பொய்கை நீர்நாய்	௧௬௫
மணிவாய்க் காக்கை	௩௭
மதவலி யானை	௧௦௫

மாக்கடன் முகந்து ௧௪௨
மாகவிசும்பின் ௯.௨
மாதிரம் புதைய ௧௨௯
மாவும் வண்டளிர் ௧௦௬
முடவுமுதிர் பலவின் ௧௦௦
முளைவளர்முதல ௯௦
முனைகவர்ந்துகொண்டென ௧௪௦
மேற்றுறைக்கொளீஇய ௧௦௮
யாஅ ஒண்டளிர் ௬௬
வயங்குவெயில் ௪௨
வயவாள் எறிந்து ௧௭
வழையமல் அடுக்கத்து ௫௩
வளமழைபொழிந்த ௮௬
வளைவாய்க்கோதையர் ௧௩௫
வறனுறு செய்யின் ௧
வாங்கமை புரையும் ௮௪
விசும்புதளி பொழிந்து ௮௭
விருந்தும் பெறுகுநள் ௪௫
வீங்குவிசைப்பிணித்த ௭௬
வேற்றுநாட்டுறையுள் ௯௮

ஆசிரியர் பெயர் அகரவரிசை

[எண் - செய்யுளெண்]

அஞ்சியத்தை மகள் நாகையார் 352
அதியன் விண்ணத்தனார் 301
அம்மூவனார் 370, 390
ஆலூர் மூலங்கிழார் 341
இடைக்காடனார் 304, 374
இடையன் சேந்தங்கொற்றனார் 373
இம்மென்கீரனார் 398
உலோச்சனார் 330, 400
உறையூர் முதுகூத்தனார் 329
ஊட்டியார் 388
எயினந்தை மகனார் இளங்கீரனார் 361, 371, 395, 399
எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார் 319, 357
ஒக்கூர் மாசாத்தியார் 324, 384
ஓரம்போகியார் 316
ஔவையார் 303
கபிலர் 318, 332, 382
கயமனார் 321, 333, 397
கருவூர்க் கந்தப்பிள்ளைச் சாத்தனார் 309
கல்லாடனார் 333
காவட்டனார் 378
காவன் முல்லைப்பூதனார் 391
குடவாயிற் கீரத்தனார் 315, 345, 366, 385
சேந்தன் கண்ணனார் 350
தங்கால் பொற்கொல்லனார் 355
நக்கீரனார் 310, 340, 346, 369, 389
நரைமுடி நெட்டிமையார் 339
நன்பலூர்ச் சிறுமேதாவியார் 394
பரணர் 322, 326, 356, 367, 372, 376, 386, 396
பாண்டியன் ஏனாதி நெடுங்கண்ணனார் 373
பாலைபாடிய பெருங்கடுங்கோ 313, 337, 379
பாவைக்கொட்டிலார் 336
பிசிராந்தையார் 308
புறநாட்டுப் பெருங்கொற்றனார் 328
பொருந்தில் இளங்கீரனார் 351
மதுரை அளக்கர் ஞாழார் மகனார் அம்மள்ளனார் 314
மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார் 344, 353
மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார் 302
மதுரை இளங்கௌசிகனார் 381
மதுரை இளம்பாலாசிரியன் சேந்தன்கூத்தனார் 348
மதுரை ஈழத்துப்பூதன் தேவனார் 307
மதுரைக் கண்ணத்தனார் 360
மதுரைக் கணக்காயனார் 338, 342
மதுரைக் கூத்தனார் 334
மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் 306, 320
மதுரைத் தத்தங்கண்ணனார் 335
மதுரைத் தமிழ்க் கூத்தன் கடுவன் மள்ளனார் 354
மதுரைப் பண்டவாணிகன் இளந்தேவனார் 328
மதுரைப் பொன்செய் கொல்லன்வெண்ணாகனார் 363
மதுரை மருதங்கிழார் மகனார் பெருங்கண்ணனார் 364
மதுரை மருதன் இளநாகனார் 312, 343, 358, 365, 368, 380, 387
மருங்கூர்ப்பாகைச் சாத்தன் பூதனார் 327
மாமூலனார் 311, 325, 331, 347, 349, 359, 393
மாறோக்கத்து காமக்கணி நப்பாலத்தனார் 377
மோசி கீரனார் 392
வடமவண்ணக்கன் பேரி சாத்தனார் 305
வடமோதங்கிழார் 312
வெள்ளி வீதியார் 367

அருஞ்சொற் பொருள் அகரவரிசை

[எண் – செய்யுளெண்]

அகலம் - மார்பு 56
அகலுள் - அகன்ற ஊர் 226
அகவல் - பாடுதல், அழைத்தல் 97
அகவுநர் - பாணர், கூத்தர் 97
அகழ்தல் - தோண்டல் 282
அகைத்தல் - தழைத்தல், கிளைத்தல் 43
அகைதல் - கிளைத்து எரிதல் 106
அங்காடி - கடைவீதி 93
அங்கை - அகங்கை 16
அச்சு - அச்சம் 281
அசா - வருத்தம், தளர்ச்சி 47, 49
அசும்பு - நீர் அறுக்குழி 8
அசைஇ - தளர்ந்து; தங்கி பிணித்து, கிடத்தி 17, 20, 54, 165
அசைவரல் - அசைந்து வரல் 96
அஞ்ஞை - அன்னை 15
அஞர் உறல் - துன்பமுறல் 32
அடர் - தகடு 9
அடர்தல் - செறிதல் 72
அடி அமை பகழி - குதை அமைந்த அம்பு 161
அடுக்கம் - மலைப்பக்கம் 8
அடுதல் - பெய்தல் 195
அடுபோர் - வெல்லும் போர் 96
அடும்பு - ஒரு கொடி 160
அடை - இலை 36
அடைச்சுதல் - தரித்தல் 188
அண்டர் - ஆயர் 59
அணங்கு - பேய், தெய்வம், வீற்றுத் தெய்வம், அழகு 20, 22, 161, 181
அணங்குதல் - வருத்தல் 177
அணர்ந்து - அண்ணாந்து (மேல் கிளர்ந்து) 308
அணல் - தாடி, கவுள் 125, 351
அத்தம் - அருஞ்சுரம், காடு 7, 17
அத்திரி - கோவேறு கழுதை 120
அதர் - நெறி 39
அதள் - தோல் 104
அதன்றலை - அதன்மேலும் 68
அதிரல் - புனலி 99
அந்தரம் - வானிடம் 68
அந்தி - செக்கர், அந்திப் பூ 71
அந்தில் - அசை, ஆங்கு 76, 240
அப்பு - குப்பி 9
அம் - அழகு 295
அம்பல் - சிலர் அறிந்த அலர் 70
அம்பி - ஓடம், தோணி 29, 187
அம்புளி - இனிய புளிப்பு 69
அம்ம - உரையசை, கேட்பித்தற் பொருட்டு 99
அமர்த்த - மாறுபட்ட 3
அமலுதல் - செறிதல், நிறைதல் 4
அமலை - (சோற்றுத்) திரள் 86
அமரிய - மாறுபட்ட 5
அமை - மூங்கில் 18
அயம் - சுனை, பள்ளநீர், பள்ளம் 62 68
அயர்தல் - விரும்புதல், செய்தல் 64, 66
அயா உயிர்த்தல் - பெருமூச்செறிதல் 103
அயிர் - நுண்மணல் 30
அயில் - கூர்மை, வேல் 167
அயிலை - ஒருவகை மீன் 60
அயினி - உணவு 141
அயினிய - உணவு மிக்க 141
அர - பாம்பு 274
அரங்கம் - விழாக்களம் 137
அரணம் - பாதுகாப்பான இடம் 158
அரம்பு - குறும்பர்கள், குறும்பு 179, 287
அரலை - விதை 309
அரவாய் - அரத்தின் வாய் 96
அரற்றல் - ஒலித்தல் 231
அரி - சிலம்பினுட் பரல், ஐது, ஒண்மை, செவ்வரி 6, 45, 114
அரிகால் - அரிதாள் 41
அரிகோல் - அரித்தெழும் ஓசையையுடைய கோல் 249
அரிசில்நீர் - அரித்தோடும் சின்னீர் 113
அரிஞிமிறு - அழகிய வண்டு 102
அரிநிழல் - அறல்பட்ட நிழல் 199
அரிப்பன ஒலிப்ப - விட்டுவிட்டு ஒலித்திட 45

அரிமணல் - அறல்பட்ட மணல் 74
அரிமலர் - விளக்கும் மலர்கள் 176
அரில் - தூறு, பிணக்கம் 6, 36
அரியல் - கள் 157
அருங்குறைய - அரிய 33
அருந்து - ஆர்ந்து 191
அருந்துபு - ஆர்ந்து 8
அருப்பு-அருப்பம்; காட்டரண் 342
அரும்புண் - விழுப்புண் 57
அரும்பெறல் உலகம் - பெறுதற்கரிய உலகம் - வீரர் எய்தும் துறக்கம் 55
அல்கல் - தங்கல், இரவு 20, 26
அல்கலும் - நாளும், என்றும் 11
அல்கு - இராப்பொழுது 257
அல்குதல் - தங்குதல், மிகுதல், சுருங்கல் 20, 113, 249
அல்குல் - இடை, மருங்குல் 157
அல்லாந்து - வருந்தி 32
அல்லி - அகஇதழ், தாது 16
அலகு - பலகறை 335
அலங்கல் - அசைதல், (அசைகின்ற), செற்கதிர் 1, 13
அலந்த - வாடிய 222
அலந்தலை - காய்ந்த தலை, காய்ந்த உச்சி 111, 187
அலமரல் - சுழற்சி 7
அலரி - மலர் 154
அலவன் - ஞெண்டு 260
அவ்வளை - அழகிய வளை 6
அவல் - பள்ளம் 4
அவலம் - துயரம் 95
அவிர்தல் - விட்டு விளங்குதல், விளங்கல் (கடவுள்) 162
அவைத்தல் - குத்துதல் 394
அழற்கொடி - ஒள்ளியகொடி 376
அழிதக-வருந்த அழிந்திட 40, 110
அழிதுளி - மிக்க துளி 214
அழிபடர் - மிக்க துயர் 255
அழிபூங்கானல் - மிக்க பூக்களையுடைய சோலை 290
அழுங்கல் - ஆரவாரம், கெடல், வருந்தல், தாழ்தல் 29 70
அழுவம் - பரப்பு; காடு, போர்க்களம், பாலை 20, 79, 81, 183
அளறு - சேறு 116
அள்ளல் - சேறு 140
அளவுறல் - கலத்தல் 89
அளி - அருள் 40
அளை வளை, குகை 20, 52
அளைஇ - கலந்து 102
அளைதல் - கலத்தல் 207
அளைமாய் கற்போல் - குகையில் ஒளி இன்றி மறையும் மணிகள் போல் 258
அற்கம் - தங்குதல் 235
அறல் - அறல் நீர், அற்றிருக்கும் மணல், கருமணல் 19, 25, 191
அறன்கடை - பாவநெறி 155
அறுஅலியர்-ஒழியாதிருப்பதாக 40
அறுகு ஒட்டு யானை - சிங்கத்தை வென்ற யானை 1
அறு கோட்டு யானை - அறுத்துத் திருத்திய கோட்டை யுடைய யானை 1
அறுமீன்-கார்த்திகை, உரோகணி 141
அறுவை - ஆடை 195
அறை - பாறை, குன்று 1, 209
அறை போதல் - வஞ்சித்துச் செல்லல் 26
அறைவாய் - மலைநெறி 251
அனந்தர் - மயக்கம் 37
ஆகம் - மார்பு 5
ஆசினி -ஈரப்பலா 91
ஆடு - அடுதல், வெற்றி 100, 116
ஆதி - குதிரையின் நேர் ஓட்டம் 104
ஆம் - ஈரம், நீர் 1
ஆம்பல் - ஒரு பேரெண், புல்லாங்குழல் 127, 214
ஆய் - அழகு 242
ஆய்கரும்பு - சிறந்த கரும்பு, மெல்லிய கரும்பு 116
ஆய்கொடி - மெல்லிய கொடி 6
ஆர் - ஆர்க்கு, ஆத்தி 9, 269
ஆர் உறல் - ஆர்த்தலுறல் 1
ஆர்கலி - மிக்க ஒலி, ஆரவாரம் 54
ஆர்கை - தின்னுதல் 15
ஆர்த்த - கட்டிய 4
ஆரல் - ஒரு மீன் 246
ஆரை-பாய், தொத்துளிப்பாய் 801
ஆலம் - நீர் 282
ஆலி - பனிக்கட்டி, ஆலங்கட்டி, நீர்த்திரள் 9, 282
ஆலுதல், ஒலித்தல் 145

ஆவணம் - கடைத்தெரு 122
ஆவணமாக்கள் - குடவோலை தேரும் மாக்கள் 77
ஆவித்தல் - அங்காத்தல் 301
ஆழல் - அழுந்தாதே, ஆழாதே 61
ஆழி - உருளை 234
ஆள்வினை - முயற்சி 76
ஆளி - ஒரு விலங்கு 78
ஆற்றுப்படுத்தல் - போக்குதல். வரவழைத்தல் 71
ஆறு - நெறி 288
ஆன்ற - இல்லையான, நிறைந்த 28, 198
ஆன்றல் - அமைதல், ஒழிதல் 168
ஆன்றிசின் - அமைக, ஒழிவாயாக 69, 267
ஆன்று - மிக்கு 183
ஆன்றோர் - தேவர் 213
ஆனாது - அமையாது 12
இகணை - ஒரு மரம் 131
இகத்தல் - நீங்குதல் 15
இகுகரை - கரைந்துமெலிந்த கரை 137
இகுத்த - தாழ்ந்த 39
இகுத்தல் - இழுத்தல், தாழ்தல் 77, 86
இகுதல் - சொரிதல், தாழ்தல் 164, 299
இகுளை - தோழி 8
இசை - புகழ் 152
இஞ்சி - மதில், புறச்சுவர் 35, 195
இட்டிகை - செங்கல், பலி பீடம் 167, 287
இட்டரும் சிலம்பு - குறுகிய செல்லற்கரிய பக்கமலை 128
இடத்தல் - பெயர்த்தல் 81
இடும்பை - துன்பம் 148
இணர் - பூங்கொத்து, மதுகை 2, 217
இதக்கை - தோடு 365
இதணம் - பரண் 308
இதல் - சிவல், கௌதாரி 23
இதை - புதுப்புனம் 183
இப்பி - சிப்பி (முத்துக்கு ஆகு பெயர்), 296
இமிர்தல் - ஒலித்தல் 250
இமில் - திமில். முசுப்பு 248
இமிழ் - ஆரவாரம் 266
இமைத்தல் - மின்னுதல் 214
இயக்கு - அலைவு, அலைதல் 100
இயம் - மத்தளம் 172
இயல்பு - செயல், ஒழுக்கம் 49, 225
இயவு - வழி 9
இயவுள் - வழி, தலைமை 29
இரா - இரவமரம் 125
இரங்கல் - ஒலித்தல் 43
இரட்டல் - மாறிமாறி ஒலித்தல் 9
இரலை - ஆண்மான் 4
இரவல் - இரத்தல் 32
இரிக்கும் - ஓட்டும் 287
இரும்புள் - மகன்றில் 220
இருமை . பெருமை, கருமை 57
இருவி - கதிரொழிந்த தட்டை 28
இருள் - மயக்கம் 335
இல்லம் - தேற்று 4
இல - ஏடி (விளிப்பெயர்) 12
இலங்கல் - விளங்கல் 162
இலஞ்சி - நீர்நிலை, மடு 186
இலமலர் - இலவ மலர் 133
இவர்தல் - பரத்தல், ஏறுதல் 130, 269
இவுளி - குதிரை 224
இழிபுனல் - வடிந்த நீர் 213
இழுது - நெய் 9
இழை - அணி 218
இளங்கள் - புதிய கள் 113
இளி - ஒருவகைச் சுரம் 33
இளை - காவல் 2
இளையர் - வீரர் 152
இற்றி - இற்றி மரம் 57
இறங்கு பொறை - வளைந்த கதிர் 192
இறத்தல்-கடத்தல், மிகுதல் 1,209
இறவு - இறாமீன் 152
இறீஇயர் - கெடுவதாக 165
இறுத்தல் - தங்கல், முறித்தல், செலுத்தல் 8, 38, 109
இறும்பு - காடு, சிறு காடு 92
இறும்பூது - வியப்பு 152
இறை - இறப்பு, சந்து, முன்கை, தங்குதல் 32, 103, 235
இறைஞ்ச - கவிழ 299
இன்னகை முறுவல் - இனியநகையுடன் கூடிய பற்கள் 195
இன்னு இன்னுரை - இன்னுமையும் இனிமையுமுடைய உரை 55

இன்னல் - துன்பம் 212
இன்னியம் - வாச்சியம் 138
இன்றுதலையாக - இன்று முதலாக 318
இன்னே - இத்தன்மை 355
இனி - இப்பொழுது 21
இனைதல் - வருந்தல் 5
இனையல் - வருந்தற்க 197
ஈங்கை - ஒரு மரம், இண்டம் செடி 125, 357
ஈண்டல் - கூடுதல் 1, 9
ஈயல்மூதாய் - தம்பலப்பூச்சி, இந்திர கோபம் 14
ஈர் அணி -பெரிய ஒப்பனை, நீராட்டிற்குரிய அணி 59, 166
ஈர்ஓதி - நெடிய கூந்தல் 230
ஈருயிர்ப்பிணவு - கருவுற்றிருக்கும் பெண்புலி 72
ஈருன் - ஈரல் 294
ஈனறு நாள் உலந்த - ஈன்றணிமை கழிந்த 85
ஈனல் எண்கு - ஈன்ற கரடி 95
ஈனுத்தாயர் - செவிலித்தாயர் 105
உகல் - உதிர்தல் 282
உகளல் - தாவல், துள்ளுதல் 14
உகா - பாலைநிலத்துக்கண் உள்ளதோர் மரம் 293
உகிர் - நகம் 99
உகுதல் - சொரிதல் 1
உகுத்தல் - உதிர்த்தல் 229
உட்கு - அச்சம் 202
உடம்பு அடுவி - உடம்பாக அடுத்தவன் 136
உடலல் - மாறுபடல் 208
உடு - இறகு, நாணிற் பொருந்தும் அம்பின் அடி 292
உடைதல் - தோற்றல் 181
உடைமதி - உடையையாகுதி 123
உண்கு - உண்பேன் 32
உணங்கல் - வற்றல், காய்ந்த தசை 20, 107
உணர்தல் - ஊடல் நீங்குதல் 178
உத்தி - படப்பொறி 202
உதுக்காண் - உதோ 204
உப்பு - இன்பம் 390
உப்பு ஒய் உமணர் - உப்பினைச் செலுத்தும் வாணிகர் 30
உம்பர் - அப்பாலுள்ள 213
உமண்சாத்து - உப்பு வாணிகர் கூட்டம் 119
உமணர் - உப்புவணிகர் 17
உய்கம் - தப்புவோம் 65
உய்த்தல் .- கொண்டுபோதல் செலுத்தல் 131
உயக்கம் - வருத்தம், வாட்டம் 85, 392
உயங்கல் - வருந்தல் 60
உயவல் - வருந்தல் 81
உயவுத்துணை - உசாத்துணை 103
உயா - வருத்தம் 19
உயிர் - உயிர்ப்பு. பெருமூச்சு 7, 189
உயிர்த்தல் -பெருமூச்செறிதல் 202
உயிர்த்துப்பு- உயிர்ப்பொருளாகிய உணவு 108
உயிர்ப்ப - இளைப்பாற 295
உயிர்ப்பின் - உயிர்த்தலால் 202
உரம் - வலி; ஊக்கம் 9, 119
உரல்முகம் காட்டிய - உரலிற் பெய்து தீட்டிய 393
உரவு - வலிமை 222
உரறல் - முழங்கல் 172
உரன் - வலி 92
உராஅ - வலியுற்று 18
உரிஞுதல் . உரிஞ்சுதல் 21
உரீஇ - உருவி 371
உரிவை - தோல் (கடவுள்)
உரீஇப , உரசிய 175
உரு - அச்சம், அழகு 1
உருத்தல் - வெப்பமுறச் செய்தல் 47
உரித்து - உருப்பெற்று, வெகுண்டு 15, 89
உருப்பு - வெப்பம் 11
உரும் - இடி 61
உருவு - அழகு 142
உருள்துடி - கடிப்பு, உருள்கின்ற இழுகு பறை 19
உரை - புகழ் 36
உரைஇ - பரந்து 139
உரைத்து - உரைத்தேன் 299
உலகு - உயர்ந்தோர் 263
உலந்தமை - அழிந்தமை 22
உலம்பல் - முழங்கல் 239
உலமந்து - உலாவி 106
உலமரல் -சுழற்சி, வருத்தம் 18, 39

உலறல் - வற்றல் 1
உலைதல் - கெடுத்தல் 153
உவக்காண் - உங்கே, உவ்விடத்தே 4
உவர் - வெறுப்பு 136
உவர்ப்படு - உவரையுடைய கிணறு 79
உவல் - தழைகள் 67
உவலை - தழை, தழைக்கண்ணி 21, 291
உவவு - மதிநாள் 201
உவறி - ஊற்றி 3
உழக்கும் - கலக்கும் 36
உழத்தல் - வருந்தல் 51
உழறல் - சுழலல் 208
உழிஞ்சில் - வாகை 45
உழிதரல் - திரிதல் 125
உழுவை - புலி 45
உழை - அண்மை, கலைமான், ஆண் மான் 5, 219, 249
உள்ளல் - எண்ணி யிரங்கல் 128
உள்ளாங்கு - உள்ளபடி 111
உளம்பல் - அலைத்து ஒட்டல் 94
உளர்தல் - பரப்புதல், பூசல் 98, 117
உளரல் - கோதல் 39
உளியம் - கரடி 81
உளை - தலையாட்டம், குடுமி, பிடரி மயிர், ஆர்க்கு 4, 107, 194, 223
உளைக்குரல் - துய்யையுடைய சிறு கதிர் 338
உளைமான் - சிங்கம் 102
உறந்தை - உறையூர் 4
உறவி - எறும்பு 339
உறழ்கொளல் - மாறுபடல் 32
உறழல் - ஒத்தல் 223
உறல் - உறுதல் 55
உறுகண் - துன்பம் 121
உறுத்தல் - உண்பித்தல் 216
உறுதல் - பொருந்தல், மிகுதல் 292, 314
உறுவிய - உறுவித்த 98
உறை - நீர், மழை 139, 194
உறைஇ - (உறவி) பரவி 76
உறைத்தல் - சொரிதல், உதிர்தல் 80, 114
உறைவி - உறைகின்ற தலைவி 164
உன்னம் - கருத்து 65
ஊக்கு - ஊக்கம் 29
ஊசி - ஊசிபோன்ற அல்லி 48
ஊதை - வாடை 60
ஊர்கொண்டன்று - நிரம்புதலுற்றது 2
ஊர்தி - தேர் 44
ஊர்பு இழிதல் - ஏறி இறங்கல் 197
ஊழ் - முதிர்ச்சி, முறைமை 2
ஊழ்மலர் - முற்றிய மலர் 199
ஊன்புழுக்கு - ஊனுடன் கூடிய சோறு 172
ஊன்றல் - தாங்கல் 93
எஃகு - கூர்மை, வேல், கத்தி 29, 72, 123
எஃகுடை எழில் - நுண்ணிய அழகு 126
எஃகுறுபஞ்சி - கடையப்பெற்ற பஞ்சு 217
எக்கர் - மணல்மேடு 10
எகினம் - அன்னம் 31
எண்கு - கரடி 15
எதிர்ச்சுளை - சுவைமிக்க சுளை 348
எதிர்மலர் - புதிய மலர் 135
எந்தை - எம் தலைவன் 104
எமியம் - தமியேம் 33
எய் - முள்ளம்பன்றி 307
எய்யாய் - அறியாய் 28
எயில் - அரண், ஊர் 84
எயினர் - மறவர் 79
எரி - வெம்மை 51
எரிசினம் - எரியுந்தீ 75
எருக்கிய - கொன்ற 57
எருத்தம் - தோள் 182
எருத்து - தோள், கழுத்து 171
எருவை - கழுகு, ஒருவகைப்பருந்து 3, 97
எல் - ஒளி, இரவு பகல் 68, 200, 264
எல்லா - முன்னிலைப்பெயர், கெழுதகைப் பொதுச்செயல் 114
எல்லி - இரவு 50
எல்லின்று - இருண்டுவிட்டது 300
எல்லினை - அழகுடைய 150
எல்லை - பகல் 20
எல்வளி - பெருங்காற்று 77
எவ்வம் துன்பம் 98
எழால் - புல்லூறு 103
எழில் - எழுச்சி 190

எழில் நலம் - அழகின் நலம், எழுச்சியும் நலனும் 116
எழிலி - மேகம் 23
எழு - கணையமரம் 209
எழுதெழில் - எழுதற்கேதுவாகிய எழில் 176
எள்ளல் - இகழல் 6
எறும் - வலிமை 24
என்பாடு - என்பகுதி 219
என்பு - என்று கூறுதல் 31
என்றூழ் - வெப்பம் 21
என்னதும் - சிறிதும் 68
எனையதும் - சிறிதும் 69
ஏ - உயர்வு, பெருக்கம் 52
ஏக்கறல் - ஏங்கியிருத்தல் 57
ஏஎச்சொல்-அம்புபோலும் சொல், செருக்குற்றசொல் 111, 323
ஏசறல் - வருந்தல் 32
ஏந்து - நிமிர்ந்த 222
ஏம் - இன்பம், பாதுகாவல் 34, 78
ஏமம் - பாதுகாவல் 187
ஏர் - எழுச்சி 264
ஏர்பு - எழுந்து 43
ஏர்மலர் - அழகிய மலர் 193
ஏற்றி - தணிந்து 5
ஏற்றை - ஏறு (ஆண் கரடி) 8
ஏறட்ட - கோத்த 289
ஏறு - எறிதல் 285
ஏன்றல் - ஏற்றுக்கோடல் 168
ஏன்றன்று - பொருந்தியது 164
ஏனல் தினை 12
ஐ - அழகு, வியப்பு 33, 71
ஐது - அழகிது 64
ஐம்பால் - கூந்தல் 8
ஐயன் தமையன் 259
ஐயெண - மெல்லென 114
ஒக்கல் - சுற்றல் 301
ஒசித்தல் - ஒடித்தல், முறித்தல் 58
ஒடிவை - இடையறவு 301
ஒதுக்கம் - நடை 7
ஒய்தல் - செலுத்தல் 143
ஒய்ய - கவர்ந்து வருதற்கு 253
ஒய்யும் - இழுத்துச் செல்லும் 68
ஒய்யென - விரைவுக் குறிப்பு 86
ஒராஅ - நீங்காத 265
ஒருசிறை - ஓரிடம் 9
ஒருத்தல் - களிறு 65
ஒல்கல்-அசைதல், நடுங்கல், தளர்தல் 132, 158, 281
ஒல்லுதல் - பொருந்துதல் 307
ஒலித்தல் - தழைத்தல் 7
ஒழுகை - வண்டிகள் 159
ஒள்வாள் அமலை - ஒருவகை வென்றிக்கூத்து 142
ஒளிறுதல் - விளங்குதல் 62
ஒற்றல் - மோதல், ஆராய்தல் 199 227
ஒன்றுதல் - பொருந்துதல் 213
ஓ - ஒழிதல் 11
ஓச்சி - படைத்து 348
ஓச்சுதும் - செலுத்துவோம் 282
ஓங்கல் - மலை 295
ஓடை - நெற்றிப்பட்டம் 100
ஓதி - கூந்தல், ஓந்தி 9, 125
ஓதை - ஓசை 41
ஓப்புதும் - ஓட்டுவோம் 80
ஓம் (ஓவும்) ஒழியீராக 26
ஓம்பல் - காத்தல் 257
ஓம்புதல் - நீக்குதல், பாதுகாத்தல் 19, 301
ஓமை - ஓமை மரம் 5
ஓய்தல் - இளைத்தல் 111
ஓர்த்தல் - ஆராய்தல் 144
ஓர்தல் - உணர்தல் 83
ஓரன்ன - ஒத்த 335
ஓராங்கு - ஒருங்கு, ஒருபெற்றியே 65
ஓரை - மகளிர் விளையாட்டு 49
ஓவம் - ஓவியம் 5
ஓவலை - ஒழிவாயல்லை 342
கங்குல் - இரவு 8
கஞலல் - நெருங்கல், மிசல் 18, 25
கட்டூர் - பாசறை 44
கடம் - கன்னிலம் 53
கடலமிழ்து - உப்பு 169
கடவுட்கற்பு - அறக்கற்பு 184
கடவுதல் - செலுத்துதல் 54
கடவுள் ஆக்கிய பாவை . தெய்வத் தச்சன் இயற்றிய பாவை 209
கடி - காவல், மணம் 2, 136
கடிக்காப்பு - மிக்க காவல் 114
கடிகை - காம்பு 35, 119
கடிப்பு - குறுந்தடி 251
கடிதல் - ஓட்டுதல் 32

கடுங்கட் கறவை - விரைந்து கன்றைக் காணும் பசு 49
கடுங்கண் - அஞ்சாமை 63
கடுங்கதிர்-ஞாயிற்றின் கதிர்கள் 17
கடுஞ்சூள் - தெய்வம் முதலியவற்றின் முன்னின்று தெளிவிக்கும் உறுதியுரை 110
கடுத்தல்ஒத்தல், ஐயுறல், குறித்தல் 24, 166, 215
கடும்பகல்-விளக்கமான பகல் 182
கடுமீன் - சுறா முதலிய மீன்கள் 50
கடுவளி - சூறாவளி 47
கடுவன் - ஆண் குரங்கு 2
கடை - வாயில், இடம் 7, 31
கடைஇ - செலுத்தி 80
கடைக்குறை - நீலுண்பச்சை 217
கண் - கணு 18, 152
கண்டல் - தாழை 260
கண்டிரும் - கண்டேம் 102
கண்ணி - சென்னிமாலை (கட)
கண்ணுதல் - கருதுதல் 232
கணக்கலை - கூட்டமான கலைமான் 82
கணநிரை - மிக்க கூட்டம் 69
கணவிரம் - செவ்வலரி 31
கணி - சோதிடம் 151
கணிச்சி - குந்தாலி (கட)
கணைக்கால் - திரண்ட கால் 70
கதம் - சினம் 86
கதழ்தல் - விரைதல் 19
கதிர் - செற்கதிர், சூரியன், ஒளி, ஆரம் 13, 51, 57, 234
கதிர்த்த சென்னி - பெரிய தலை, ஒளிவிடும் தலை 103
கதுப்பு - கூந்தல் 35
கதுவல்-பற்றல் 8
கதுவாய்க் குரம்பை - சிதைவுற்ற குடில் 129
கந்து - கட்டுத்தறி, பற்றுக்கோடு 164, 303.
கந்து-பொதியிலின்கண் தெய்வம் உறையும் தறி 287
கம் - நறுமணக் குறிப்பு, விரைவுக் குறிப்பு 11, 23
கம்பலை - ஒலி. ஆரவாரம் 86
கம்புள் - சம்பங்கோழி 356
கமம் - நிறைவு 43
கயம் - குளம், மடு 6, 25
கயந்தலை - மெல்லிய தலை 121
கயவாய் - பெரிய வாய் 125
கயன் - (கயம்) குளம் 291
கரத்தல் - மறைதல் 18
கராம் - முதலை 18
கரி - கரிந்து 75
கருங்கை - வலிய கை 79
கருநனை - பெரிய அரும்பு 41
கருந்தோல்-விளங்கும் தோல் 285
கருவி-தொகுதி 4
கருவிளை - காக்கணம் 294
கல்லுறத்தல் - கல்லுதல் 79
கலப்பை - கலங்கள், வாச்சியங்கள் அடங்கிய பை 301
கலம் - மரக்கலம், அணி, மட்கலம் 149, 213, 303
கலவம் - தோகை 194
கலவு - மூட்டுவாய் 3
கலி ஆரவாரம், செருக்கு 11, 20
கலித்தல் - தழைத்தல், செருக்கல் 16, 50
கலிழ்தல் - கலங்கி அழுதல் 47
கலுழ்தல்-கலங்குதல், ஒழுகுதல் 38
கலுழி - வண்டல் 157
கலை - முசுக்கலை 182
கவ்வை - அலர், சின்வீட்டின் ஆரவாரம் 50, 89
கவடு - பெருங்கிளை 31
கவர்த்தல் - கப்பு விடுதல் 151
கவர்தல் - விரும்பல் 11
கவலை - கவர்த்த நெறி 17
கவவல் - அணைத்தல் 13
கவான் - சாரல், பக்கமலை 3
கவிர் - முருக்கு 3
கவின் - அழகு 291
கவுள் - கன்னம், தாள்வாய் 34, 59
கழல்தொடி - கழலும் வீரவளையும், கழலும் தொடி 162, 209
கழறுதல் - இடித்துரைத்தல் 130
கழி - கடற்குட்டம், நீரோடை 50, 170
கழிப்பிணிக் கறைத்தோல் - கழியாற் பிணிக்கப்பட்ட பரிசை 67
கழிபடர் - துன்பம் 234
கழுது - பரண், பேய் 83, 260
கள் - வண்டு, தேன் 39, 150
கள்வன் - நண்டு, கரி கூறுவோன் 235, 246

களம்வேட்டல் - களவேள்வி செய்தல் 36
களரி களர்மண், காடு 89, 293
களன் - வெறியாடுக்களம் 98
களிமிதவை - குழைதலையுடைய கும்மாயம் 86
களிறொருத்தல் - ஆண் யானைகளின் தலைவன் 78
களிறு - ஆண்பன்றி 72
கற்பு - கலவி 106.
கறங்கல் - ஒலித்தல் 66
கறங்கு இசை - அநுகரண ஒலி 37
கறி-மிளகுக்கொடி, மிளகு 2, 182
கறிக்கும் - கடிக்கும் 104
கறுத்தல் - வெகுளுதல் 81
கறை-உரல், இரத்தக்கறை 83, 142
கறைத் தோல் - கரிய தோலாகிய பரிசை 67
கன்முகை - மலைக்குகை 172
கன்னல் - நாழிகைவட்டில் 172
கன்முடுக்கர் - கன்முடங்கு 97
கன்னம் - பொற்கொல்லர் சிறிய தராசுத் தட்டு 317
கனலி - ஞாயிறு 55
கனவ - வாய்வெருவ 55
கனை - மிகுதி செறிவு 55, 113
கனைஇ - செறிந்து 128
காட்சி - அழகு, அறிவு 66, 245
காட்டுளவி-காட்டுமல்லிகை 182
காண்கம் - காண்பேம் 261
காண்தக - அழகு பொருந்த 188
காண்வர - அழகுபொருந்த, காட்சிபுற 37, 84
காம்பு - மூங்கில் 172
காமம் - விருப்பம் 15
காமர் - அழகு 40
காய்கடமருங்கு - காய்ந்த கற்காட்டின் பக்கம் 179
காய்நெல் - விளைந்த நெல் 204
காயல் - உப்பளம் 366
கார் - மேகம் 212
காரான் - எருமை 46
காரோடன் - சாணைக்கல் செய்வோன் 1
கால் - காற்று, காம்பு, துறை 9, 26, 107
கால்யாத்தல் - பரத்தல் 109
காலை - காலம் 124
காழ் - வித்து, தண்டு, சரம், இருப்புச்சலாகை, கொட்டை 7, 119 167, 169, 309
காழியர் - வண்ணார் 89
கானம் (இல்)- கடற்கரைச்சோலை 30, 260
கானமர் செல்வி - கொற்றவை 345
கிண்கிணி - சதங்கை 254
கிணை - ஒரு பறை 346
கிளர்தல் - புடைபெயர்தல் 45
கிளர்ப்ப - விளங்க 282
கிழமை - உரிமை 32
குஞ்சரக்குரல குருகு - யானையங்குருகு எனும் புள் 145
குஞ்சரம் - யானை 92
குட்டம்-ஆழம் 280
குடக்கு - மேற்கு 183
குடச்சூல் - சிலம்பு, ஒருவகைச் சிலம்பு 198
குடந்தை - குடவாயில் 60
குடம்பை - கூடு 40
குடாஅது - மேற்கின் கண்ணுள்ளது 1-9
குடிஞை-ஆந்தை, பேராந்தை 9, 89
குடுமி - ஆக்கு, தலை 5
குடுமிக்கட்டி - தலைகுவிந்த கட்டிகள் 41
குடுமிச்சேவல் - செஞ்சூட்டுச் சேவல் 87
குண்டு - ஆழம் 20
குண்டைக்கோடு - குறிய கிளைகள் 184
குணக்கு - கிழக்கு 278
குணில் - குறுந்தடி 186
குப்பை-தொகுதி, நெற்குவியல் 87, 152
குயம் - முலை 48
குயில் எழுத்து-குயிற்றிய எழுத்து 297
குயிலுதல் - இயற்றல், துளைத்தல் 82, 167
குயிறல் - பொறித்தல் 297
குரங்கல் - வளைதல் 4
குரம்பை - குடிசை 12
குரல் -மயிர்த்தொகுதி, கொத்து, கதிர், பூங்கொத்து 8, 34, 88, 120
குரவு - குராமரம் 237

குரவை தூங்கல் - குரவைக்கூத்தாடுதல் 232
குராஅல் - கோட்டான் 265
குரு - நிறம் 133
குருகு - பறவை, நாரை, துருத்தி 55, 202
குரும்பி - புற்றாஞ்சோறு 72
குருளை - குட்டி 147
குரூஉ - விளக்கம் 10
குலவு - வளைவு 33
குலாஅ - வளைந்த 265
குலைஇய - வளைந்த 84
குவவு - திரண்டு சிறுகுதல், திரட்சி 39, 180
குவவுத்திரை - வளைந்த அலைகள் 183
குவை - திரட்சி 40
குவைஇ - குவித்து 110
குழவி - யானைக்கன்று 229
குழிசி - குடம் 77
குழுமல் - முழங்கல் 92
குழை - தளிர் 225
குழைச்செயலை - அசோகம் தளிர் 7
குளகு - தழை, தழை உணவு 218, 292
குளவி - காட்டுமல்லிகை 182
குளிர் - கிளிகடி கருவி 32
குற்ற - பறித்த 216
குறங்கு - தொடை 96
குறுநெடுந்துணைய - சிறியவும்பெரியவுமாய அளவினையுடைய 99
குறும்படை மழவர் - கோட்டை வீரர் 35
குறும்பறை பயிற்றி - குறுகக் குறுகப் பறத்தலைச் செய்து 254
குறும்பு - கானவர் சீறூர் 81
குறும்பொறை - சிறியமலை, பாறை 133, 245
குறை - இன்றியமையாக் காரியம், (மீன்) துண்டம், தசை 32, 196, 322
குறைத்த அறை - வெட்டி (நெறியாக்கிய) குன்றம் 69
குறையோர் - வறியோர் 142
குன்றி - குன்றிமணி 133
கூஉங்கண்ணது - கூப்பிடு தூரத்திலுள்ளது 38

கூடு - நெற்கூடு 96
கூடுதவிபூ - இதழ்குவித்த பூக்கள் 135
கூதளம் - கூதாளி 255
கூர் மிகுதி, கூர்மை 47, 71
கூர்மதன் - மிக்கவலி 212
கூரல் - மயிர் 234
கூவல் - கிணறு 21
கூழ் - உணவு, நெல் 113, 145
கூழை - கூந்தல் 207
கூழை நொச்சி - தலைப்பணியின் பொருட்டுக் கொய்து குறைத்த நொச்சி 275
கூளி - பேய் 233
கெடாத்தீ - வேள்வித்தீ 220
கெண்டல் - தோண்டல், அறுத்துத் தின்னுதல் 20, 97
கெழு - விளங்கும் 220
கேழ் - நிறம், நன்னிறம் 26, 174
கேழல் - பன்றி 223
கேள் - உறவு, உறவினர் 93
கேளல்கேளிர் - நொதுமலாளர் 93
கேளிர் - சுற்றத்தார் 279
கைசெய் - அழகுறச்செய்யப்பெற்ற 181
கைதை - தாழை 100
கைம்மிகல் - அளவு கடந்து மிகல் 258
கையறல் - செயலறல் 40
கொங்கு - தேன் 142
கொட்கும் - அலையும் 220
கொடி - ஒழுங்கு, வரிசை 11
கொடிச்சியர் - குறத்தியர் 58
கொடிஞ்சி - கைக்கு உதவியாகத் தாமரைப்பூ வடிவில் தேர்த்தட்டின் முன் நடுவது 110
கொடிவிடு கூரெரி - கொழுந்துவிட்டெரியும் மிக்க தீ 47
கொடுங்குரல் - வளைந்த கதிர் 242
கொடுமை - வளைவு 3
கொடுமரம் - வில் 215
கொடுவாயிரும்பு - தூண்டில்முள் 36
கொண்டல் - கீழ்காற்று, மேகம் 10, 100
கொண்டி - கொள்ளை 10
கொண்மூ - மேகம் 68

கொம்மை - திரட்சி; பெருமை 15, 29
கொல் - கொல்லன் 72
கொல்புனம் - வெட்டித் திருத்திய கொல்லை 133
கொழுதல் - தின்றல், கோதல், கிண்டுதல் 15, 226, 229
கொழுதி - தின்று 15
கொழுமீன்-கொழுமையாகியமீன், ஒருவகைமீனுமாம் 20
கொள்ளை - விலை மிகுதி 30, 183
கொளாஅல் - கொளுவுதல் 47
கோஒய் - கள்முகக்கும் கலம் 166
கோட்பால்- தீங்கின் பகுதி, ஆறலைக்கும் பகுதி 109
கோட்டுமீன் சுறுமீன் 10
கோட்டுவட்டு-யானைக்கொம்பினாற் செய்த வட்டு 160
கோடல் - காந்தள் 23
கோடிக்கலிங்கம் - புதுப்புடைவை 86
கோடியர் கூத்தர் 111
கோடை - மேல்காற்று 27
கோண்மா - கொல்லும் தொழிலையுடைய விலங்கு, ஒருவகை விலங்குமாம் 108
கோதை - மாலை 143
கோது - சக்கை 257
கோபம் - இந்திரகோபம் 54
கோல் - அம்பு, திரட்சி 101, 140
கோள் - காய், கிரகம், கூற்றம் 2, 36, 86
கோள்கால்-கோள்களின்தொடர்பு 36
கோள்சுரம் - ஊறு (பொருந்திய) சுரம் 271
கோள் இரை - கொள்ளப்பட்ட இரை, கூற்றமாய இரை 36
கோற்றொடி - அழகிய வளையல், திரண்ட வளையல் 162
கௌவை - அலர் 65
சகடம் - உரோகணி 136
சமம் - போர் 46
சாத்து - வணிகர் திரள், வணிகச் சாத்தர் 89
சாந்தம் - சந்தனமரம் 2
சாம்புதல் - வாடுதல் 160
சாய் - கோரை, செறும்பு 236, 306
சாய்இறை - வளைந்த முன்கை 213
சாய்தல் - வணங்கல், 'மெலிதல் நுணுகல் 6, 41, 95
சாயல் . மென்மைத் தன்மை 198
சாரல் - பக்கமலை 52
சால் - படைச்சால் 194
சால்அவிழ் - மிடாச்சோறு 152
சான்ற உயர்ந்த, நிறைந்த 198
சிதர் - வண்டு 25
சிதரல் - சிதறுதல், ஊரல் 24, 64
சிதலை - கறையான் 81
சிதாஅர் - கந்தை 337
சிதைவு - குற்றம் 7
சிமையம் - உச்சிமலை 3
சிரல் - சிச்சிலிப்பறவை 106
சிரறல் - ஒலித்தல் 191
சில்கி - சிலவாகி 17
சில்பதம் - சிறிய உணவு 301
சிலம்பல் - ஒலித்தல் 172
சிலம்பு - பக்கமலை, மலை 47, 172
சிலை - முழக்கம், ஒருமரம் 7, 69
சிலை எழில் ஏறு - முழக்கம் செய்யும் எழுச்சியுள்ள எருது 265
சிலைத்தல் - ஆரவாரித்தல், ஒலித்தல் 61
சிவணல் - பொருந்தல் 64
சிவத்தல் - கோபித்தல் 11
சிவப்பு - சினம் 235
சிள்வீடு - ஒருவகை வண்டு 89
சிறபுறம் . பிடரி 8
சிறுமுதுக்குறைவி - இளமையிலே அறிவு முதிர்ந்தவள் 17
சிறை - கரை, பக்கம், அணை 76, 200, 208
சின் - அசை 7
சீற்றம் - சினம் 158
சுட்டுதல் - கருதுதல் 72
சுணங்கு - தேமல் 6
சுதை - சுண்ணாம்பு 211
சும்மை - ஒலி 86
சுரம் - பாலை 53
சுரியல்-சுருண்ட தலைமயிர், சுருள் 21, 236
சுருணை - பூண் 113
சுரும்பு - வண்டு 161
சுரை-மடி, மூங்கிற் குழாய், சுரைக் கொடி 54, 113, 287.
சுவல்-மேடு, பிடரிமயிர், பிடரி 21, 154, 214

சூடு-செற்கட்டு, குழையிற் பதித்த மணி 84, 253
சூர் - தெய்வம், அச்சம் 72, 91,
சூர்ப்பு - வளைவு 142
சூர்மருங்கு - சூரபன்மாவும் அவன் சுற்றமும் 59
சூரல் - சூறவளி, பிரப்பங்காடு 1, 228
சூல் - கரு 177
சூழ்ச்சி - ஆராய்ச்சி 52
சூழ்தல்-கருதல் 19
சூழி - முகபடாம் 15
செக்கர் - சிவப்பு 20
செங்குணக்கு - நேர்கிழக்கு 76
செங்கோல் - சிவந்த காம்பு 121
செச்சை - வெட்சி 48
செஞ்சூட்டுக்குழை - சிவந்த மணிகள் பதித்த குழை 86
செண் - கொண்டை 59
செத்தல் - கருதல் 12
செதுக்கை நிழல் - குறைந்த நிழல் 151
செதும்பல் - சேற்று நிலம் 155
செப்பு - சிமிழ் 25
செம்பூழ் - சிவந்த குறும்பூழ் 63
செம்மல் - வாடற்பூ, தலைமை, செருக்கு 14, 15, 66, 231
செயலை - அசோகு 7
செயிர் - குற்றம் 66
செருத்தல் - மடி 14
செல் - இடி 342
செல்சமம் - எதிர்ந்துவரும் போர் 24
செல்லல் - துன்பம் 98
செல்வம் - வீறு, மேம்பாடு 155
செவ்வழி - ஒருபண், முல்லைப்பண் 14
செவி (செவ்வி)-ஏற்றசமயம் 285
செற்றும் - செறியப் பெறுவோம் 251
செறித்து நிறுத்தல் - தேக்கி வைத்தல் 304
செறு - வயல் 13
செறுநர் - பகைவர் 46, 66
செறுவோர் - பகைவர் 231
சென்றீக - செல்லுக 124
சே - ஏறு 36
சேக்கும் - தங்கும் 40
சேக்கை - படுக்கை 13
சேட்புலம் - தூரதேசம் 61
சேண்முயலல் - நெடிது முயலல் 149
சேணோன் - பரண்மேலுள்ளோன் 73
சேஎய் - முருகன் 266
சேற்றள்ளல் - குழம்பாகியசேறு
சொலிய - நீங்க, பெயர 8 [290
ஞமலி - நாய் 140
ஞாங்கர் - இடம் (பக்கம்) 280
ஞாட்பு - போர் 57
ஞாழல் - புலிநகக்கொன்றை 20
ஞாளி - நாய் 122
ஞிமிறு - வண்டு 78
ஞெகிழ்தல் - நெகிழ்தல் 32
ஞெகிழி - கொள்ளி, விறகு 108, 172
ஞெமல் - சருகு 39
ஞெமன்கோல்-துலாக்கோல் 349
ஞெமிய - மறைய 322
ஞெமிரி - பரப்பி 36
ஞெமுங்கல் - அழுந்தல் 58
ஞெமை - ஒருமரம் 171
ஞெரேரென - விரைவுக் குறிப்பு, ஒலிக்குறிப்புமாம் 39, 86
ஞெலி - தீக்கடைகோல், மூங்கில், தீக்கொள்ளி 39
தகடு - புறவிதழ் 261
தகர் - செம்மறியாடு 101
தகரம் - மயிர்ச்சாந்து, வாசனைச் சாந்து 117
தகுவி - தகுதியுடையை 259
தகைக்குநர் - விலக்குவார் 46
தட்டை - கிளிகடி கருவி 32, 188
தட்ப - தடுக்க 339
தட - பெருமை 10
தடவு - வளைவு 238
தடவுநிலை - பெரிய நிலை, வளர்ந்த நிலை 10, 165
தடி - பாத்தி 366
தடைஇய - வளைந்த 181
தண்டலை - சோலை 204
தண்டா - குறையாத 29
தண்டுதல் - நீங்குதல் 392
தண்ணடை மருதநிலம் 84
தண்ணுமை - பறை, கிணை 63, 204

தண்பெயல் எழிலி - தண்ணிய மழையைச் சொரியும் மேகம் 175
தணத்தல் - நீங்குதல் 50
தத்த - அசைய 343
ததர் - நெருக்கம் 234
ததர்கோல் - செறிந்த கோல் 390
ததரல் - சுள்ளிகள் 257
ததும்பல் - ஒலித்தல் 40
ததைதல் - மிகல், செறிதல், சிதைதல், சிதறுதல், மலர்தல் 1, 22, 46, 303
ததைய - அழிய 220
தப்பல் - தவறு 109
தப - கெட 18
தபுத்தல் - கெடுத்தல் 130
தமியோன் - தனியோன் 16
தயங்கல் - வெளிப்பட்டுத் தோன்றல், விளங்கல், அசைதல் 27, 86, 121
தலைஇ-பொருந்தி பெய்து 58 274
தலைப்பிரிதல் - நீங்குதல் 173
தவ - மிக 6
தவல்-கெடுதல் நீங்குதல் 178, 305
தவாவியர் - கெடாதொழிக 338
தவிர்தல்-தங்குதல் (கட) நீங்குதல், தீர்தல், தளர்தல் 237, 334
தழங்குதல் - ஒலித்தல் 24
தழலை (தட்டை) - கிளிகடி கருவிகள் 183
தளவு - செம்முல்லை 23
தளி - மழை, துளிகள், மேகம் 43 264, 305
தறி - தூண்டு 346
தறுகண் - அஞ்சாமை 77
தன்னையர் - தமையன்மார் 126
தா - வலிமை 37
தா அம் - தாகம் 241
தாஅய் - பரந்து 14
தாஇல்தாள் - அழிவில்லாத திருவடி (கட)
தாக்கணங்கு-தாக்கிவருத்தும் தெய்வம் 7
தாங்கல் - தாழ்த்தல், மிறுத்தல் 66
தாங்காது - தரமதியாது 66
தாது - தேன் 4
தார் - மார்புமாலை (கட)
தாரம்-பண்டம், உணவு, (உணவுப் பொருள்) 171
தாழி - சாடி 275
தாள் - முயற்சி 29
திகிரி - ஞாயிறு, ஆழி 53, 281
தித்தி - திதலை, தேமற்புள்ளி 41
தித்தியம்-வேள்விக் குண்டம் 361
திதலை - தேமல் 26, 176
திமில் - படகு 10
திமிலோன் - மீன் பிடிப்போன் 10
திரங்கல் - வாடல் 199
திரிமருப்பு - திரித்துவிட்டாற் போன்ற கொம்பு 14
திரிமரம் - திரிகை 224
திருநகர் - செல்வமுள்ள மனை 17
திளைத்தல் - விளையாடி (மகிழ்தல்) 34
திற்றி - உணவு (தசை) 97
திறம் - பக்கம், காரணம் 14, 48
திறல் - வலி 158
திறன் - கூறுபாடு 188
தீம் - இனிமை 196
தீம்புளி - இனிப்புடன் கூடிய புளிப்பு 196
தீரிய ஒழிய 357
துகள் - (தூளி) புழுதி, குற்றம் 265
துகிர் - பவளம் 243
துகில் - ஆடை 293
துச்சில் - தங்குமிடம், ஒதுக்கிடம் 203, 321
துஞ்சல் - மடிதல் 75
துஞ்சாமை - மடிதலில்லாமை 9
துஞ்சதல் - உறங்குதல், துயிலுதல் 158
துடக்கல் - சுற்றல், பிணித்தல், இழுத்தல் 96, 176, 248
துடி - இழுகுபறை 19
துண்ணென - நடுக்குற 87
துணி - தெளிவு 56
துணை ஈர்ஒதி - கடையொத்த குளிர்ந்த கூந்தல் 107
துணைப்ப - துணையாக 79
துதி - உறை 8
துதை - நெருங்கிய 82
துதைவு - செறிவு 82
தும்பி - வண்டு 291
துமித்த - அறத்தெறித்த 24
துமிய - துணிபட 68
துய் - ஆர்க்கு, பஞ்சு 7, 9

துய்த்தல் - தின்றல் 15
துயல்வரல் - அலைதல், பிறழ்தல், அசைதல் 13, 27, 146
துரத்தல் - செலுத்தல், முடுக்கல் 9
துருஉ - செம்மறியாடு, செம்மறிக் குட்டி 35
துவர் - பவளம், சிவப்பு 162, 179
துவர - முற்ற 141
துவரா - பிளவுபடாத 241
துவரா நட்பு - உவர்த்தலில்லாத நட்பு 12
துவன்றல் - நெருங்கல் 30
துவன்றி - நெருங்கி 30, 88
துழத்தல் - கலக்கல் 270
துழைஇ - துழவி, தேடி 80, 222
துளங்குதல் - துள்ளுதல், கலங்குதல் 3, 56
துளர் - களை 184
துற்றல் - மேற்கொளல், விழுங்கல் 10, 36
துறுகல் - உருண்டைக்கல், பாறை, பொற்றைக்கல் 57, 147, 272
துறுகாழ் வல்சியர் - செறிவுமிக்க உணவினர் 253
துன்னல் - நெருங்கல் 258
துனி - வெறுப்பு 98
துனை - விரைவு 9
துனைதரல் - வருந்திவரல் 85
தூக்கல் - அசைத்தல், ஆராய்தல் 96, 125
தூங்கல் - தொங்குதல், அசைதல், மெத்தென நடந்துவரல் கூத்தாடுதல் 8, 40, 54, 76
தூங்கு இருள் - செறிந்த இருள் 158
தூணி - அம்புக் கூடு 9
தூம்பு - உட்டுளை 6
தூமழை நனந்தலை - மழையற்ற அகன்ற இடம் 287
தூர - மறைய 181
தூவி - சிறகு 57
தெம்முனை - பகைமுனை 251
தெரியல் - மாலை 212
தெவ் - பகைவர் 251
தெவ்வர் - பகைவர் 113
தெவிட்டல் - விலாழிநீர் 224
தெவிட்டும் - ஒலிக்கும் 283
தெழித்தல் - உரப்பி ஓட்டல் 17
தென் அறல் - தெளிந்த நீர் 184
தெளிர்தல் - ஒலித்தல் 51
தெளிரப்ப - ஒலிப்ப 261
தெற்றி - மேடை 259
தெறல் - காய்தல் 121
தெறிமறி - துள்ளிவிளையாடும் குட்டி 274
தெறுத்தல் - குவித்தல் 54
தெறுதல் - அழித்தல் 89
தெறுப்ப - வருத்த 291
தெறுவரல் - அச்சமுறல் 73
தேய்கு - தேய்வேனாக 38
தேர் - பேய்த்தேர் 29
தேற்றல் - தெளிவித்தல் 166
தேறல் - தேன் 2
தைஇ - உடுத்து, கைசெய்து, சூடி, தழுவி, கட, உக 105, 9
தையின - கட்டப்பெற்றன 289
தைவரல் - இயக்கல் 212
தொகல்கொள - தொகுதியாக 97
தொகுநிலை - கூட்டம் 199
தொடலை - மாலை 6
தொடரி - நாற்றி 86
தொடுகலம் - நீண்டேம் 196
தொடுகழல் - கட்டப்பெற்ற கழல் 75
தொடுதல் - தோண்டுதல் 215
தொடுதோல் - செருப்பு 84
தொடை - அம்பு, மாலை 35, 223
தொண்டையர் - தொண்டைநாட்டிலுள்ள பழங்குடி மக்கள் 213
தொய்யா - கெடாத 233
தொய்யாமை - குறையாமை 246
தொய்யில் - எழுதுங் கோலம் 239
தொல்பசி - பன்னாள் உணவின்மையால் எய்திய பசி 193
தொலைவு - தோற்றம் 7
தொழுதி - கூட்டம் 40
தொழுனை - யமுனை 59
தொள்ளை - துளை 275
தொளி - சேறு 324
தோகைஞாளி - வாலினையுடைய நாய் 122
தோட்டி - அங்குசம் 286
தோடு - தொகுதி 49
தோணி 50
தோப்பிக்கள் - நெல்லாலாக்கிய கள் 35

தோளாமுத்த - துளையிடா முத்து 137
தோன்றல்-தோற்றம் உடையவாகி 173
தோன்றி - செங்காந்தள் 164
நக - மகிழ, மலர 21, 54
நகர் - இல், மனை, கோயில் 15, 22, 205
நகும் - நகுவேம் 32
நகுவர - விளங்குதல் உற 206
நகை - ஒளி 244
நசை - வேட்கை 199
நடுக்கும் - நெகிழும் 320
நண்ணார் - பகைவர் 124
நணித்து - அணித்து 254
நத்துறந்து (நம் துறந்து) நம்மைத் துறந்து 183
நப்புலந்து - (நம்புலந்து) நம்மை வெறுத்து 174
நம்பி - விரும்பி 146
நயந்து - விரும்பி 198
நயவர - அன்பு தோன்ற 11
நயவரு சீறியாழ்-இனிமை பொருந்திய சிறிய யாழ் 279
நயவன் - யாழ்வல்லோன் 212
நயன் - நன்றியறிவு, நடுநிலை 71
நரந்தம் - நாரத்தை, ஒரு புல் 141, 266
நரலல் - ஒலித்தல் 47
நரறல் - ஒலித்தல் 72
நரை - நரைமயிர் 254
நல்கல் - அருளல் 113
நல்குநர் - கொடையாளர் 30
நல்கூர்தல் - வறுமைப்படல் 87
நல்நிலை - நல்ல வெற்றிநிலை 179
நல்லரா - நல்லபாம்பு 72
நல்வாங்கு - நன்மை பொருந்திய [198
நலிதல் - வருத்துதல் 66
நவ்வி - இளைய மான் 7
நவிரல் - குலைதல் 1
நவிலா - திருந்தாத 229
நவின்று - பயின்று 218
நவை - குற்றம் 145
நவைத்தல் - துன்புறுத்தல் 262
நள்ளென் கங்குல் - நள்ளென்னும் ஒலியினையுடைய நடுஇரவு 128
நள்ளென்-யாமம் - இருள் செறிந்த நடுஇரவு 170
நளி - பெருமை, செறிவு 132, 2
நளித்தல் - செறிதல் 188
நளிப்பு - மரச்செறிவு 18
நளிபெயல் - மிக்கபெயல் 72
நளிர் - குளிர்ச்சி 242
நறவு - நறவம்பூ, கள் 19, 196
நறை - தேன்கூடு. நறைக்கொடி 242, 282
நன்று - பெரிது 99
நன்னராட்டி - நன்மையையுடையாள் 165
நன - அகன்ற 19
நனவு - ஆடுகளம், விழிப்பு 82, 158
நனி - மிக்க 235
நனை - கள், அரும்பு, தாது 23, 25, 189
நனைத்த - அரும்பிய 150
நாகம் - யானை 73
நாஞ்சில் - கலப்பை 42
நாண் மகிழ்-நாளோலக்கச் சிறப்பு 61
நாமம் - அச்சம் 235
நார் - பன்னாடை 36
நால்கு - நான்கு 104
நால்செவி - தொங்கும் காது 156
நாலுதல் - தொங்குதல் 248
நாவாய் - (மரக்)கலம் 110
நாளங்காடி - காலைக்கடை 93
நாள் உலந்த - நாள் முடிந்த 85
நாள்பூ - நாளைக்காட்டும் பூ 205
நாளிருக்கை - நாளோலக்கம் 227
நாற்றி - தொங்கவிட்டு 195
நாறுதல் - முளைத்தல் 194
நாறுதல் - தோன்றுதல் 7
நிகர் - ஒளி 11
நிணம் - கொழுப்பு 9
நிதிக்கிழவன் - குபேரன் 66
நியமம் - அங்காடித்தெரு 83
நிரம்பா - அளவிடங்காத 206
நிரம்பா நீளிடை - செல்லத்தொலையாத நீண்ட இடம், செல்லத் தொலையாத நெடியவழி 147,287
நிவத்தல் - ஓங்கல் 45
நிவந்த பள்ளி - ஓங்கிய கட்டில் 98
நிழத்த - ஓய்ந்த 147
நிற்றந்தோன் - நின்றோன் 48
நிறம் - மார்பு 71
நீகான் - மீகாமன் 255

நீத்தம் - நீர்ப்பெருக்கு, வெள்ளம் 6
நீப்பு - பிரிவு 283
நீவல் - கடந்து செல்லல், பூசுதல் 17, 48
நீவி - துடைத்து, தடவி 39, 245
நீள்மொழி - நெடுமொழி (வஞ்சினம்) 107
நீறு - புழுதி 227
நீறுக - அழிவதாக 275
நுகும்பு - குருத்து 283
நுங்குதல் - விழுங்கல் 114
நுசுப்பு - மருங்கு 195
நுண்பூண் - நுண்ணிய தொழிலுடைய பூண் 61
நுணல் - தேரை 364
நுரை - வெண்ணெய் 101
நுழை - கூர்மை 35
நுனை - முனை 203
நூறல் - அழித்தல், கொல்லல் 46
நூறி - கெடுத்து 46
நெகிழ்தல் - மெலிதல், கழலுதல், சுருங்கல் 46, 96
நெஞ்சுவாய் அழிதல் - உள்ளக் கருத்தை வாய்விட்டு மொழிதல் 129
நெடுந்தகை - பெருந்தகை (தலைவன், 49
நெடுநகர் - கோயில் 296
நெடுமொழி - புகழ், வஞ்சினம் 17
நெடுவரைக்கவான்-நீண்டமூங்கிலையுடைய பக்கமலை 173
நெடுவேள் - முருகன் 22
நெய்த்தோர் - குருதி 9
நெருநல் - நேற்று 6
நெருநை - நேற்று 116
நெறிஇரும் கதுப்பு-நெளிந்த கரிய கூந்தல் 35
நெறித்த - சுழன்ற 265
நெறிப்பு - கூந்தலின் நெறிப்பு 158
நேமி - உருளை 14
நேர் - மெல்லிய 92
நேர்கதிர் நிரைத்த - நிரம்பிய கதிர்களின் ஒழுங்கினைக் கொண்ட 175
நொச்சி - மதில் 122
நொசிவரல்-நுண்ணிதாகவரல் 229
நொடி - ஒலி 47
நொடுத்து - விற்று 196
நொடை - விற்றல், விலை 60, 296
நொண்டு - முகர்ந்து 230
நொதுமல் - புறம்பானது 39
நொதுமலாளன் - ஏதிலாளன் 17
நொவ்வல் - துன்பம் 98
நொவ்வு - விரைவு 281
நொள்கல் - குறைவுறல் 31
நொள்ளை - சிறுநத்தை 53
நோகு - நோகின்றேன் 153
நோதகம் - வருந்தல் 71
நோவல் - நோகின்றேன் 219
நோவேன் - வருந்துவேனல்லேன் 219
நோன்சிலை - வலிய வில் 119
நோன்தாள் - வலிய முயற்சி 29
நோன்மை - வலிமை 61
நோன்றல் - பொறுத்திருத்தல் 108
நோனல் - பொறுத்தல் 44
நோனாது - பொறாது 44
பகடு - எருது, எருமை, கடா, விளக்கம் 30, 41, 140, 288
பகர்நர் - விற்பார் 25
பகல் - பிளத்தல் 55
பகழி - அம்பு 159
பகன்றை - ஒரு கொடி, சிவதை 156, 176
பகாஅர் - பகர்வார், விற்பார் 181
பகை - பகுப்பு 226
பங்குனி முயக்கம் - பங்குனிவிழா 137
பச்சை - தோல் 217
பசுங்காழ் - பசிய சரத்தால் ஆகிய (மேகலை) 167
பசுநனை - புதிய தேன் 107
பசுமை - அழகு, குளிர்ச்சி 57, 229
பசை - கஞ்சிப்பசை 34
பஞ்சி - பஞ்சு 133
பட்டம் - ஓடை 107
படப்பை - தோட்டம் 204
படர் - துன்பம், நினைவு 40, 86
படர்தல் - நினைதல் 15
படலை - தழைப்பரப்பு, இலை 87
படாஅர் - செடி, சிறுதூறு 68, 178
படிமம் - பாவை 149
படியோர் - (படியார்) வணங்கார் 22
படிவம் - விரதம் 123
படுசினை - தாழ்ந்த கிளை 170

படுசுடர் அமையம் - ஞாயிறு மறையும்பொழுது, ஒளி மழுங்கும் நேரம் 48, 213
படுஞெமல் - மிக்க சருகுகள் 39
படுதல் - ஒலித்தல், துயிலல் 9, 195
படை - கலனை 124
பண்ணை - ஒருவகைக் கீரை 393
பணையான் - சாணைபிடிக்கிறவன் 1, 356
பத்தல் - நீர்முகக்குங் கருவி 155
பதம் - உணவு 249
பதவு - அறுகம்புல், அறுகங்கிழங்கு 14, 23
பதன் - செவ்வி 2
பதுக்கை - கற்குவியல் 215
பம்பல் - செறிதல் 94
பயம் - வளம், பால், நீர், பீடு 11, 54, 164, 297
பயம்பு - பள்ளம், யானைபிடிக்கும் குழி, 136, 165
பயிர்தல் - அழைத்தல், அகவல் 14, 194
பயிர்ந்து அகவும் - அழைத்துக் கூப்பிடும் 85
பயிரும் - ஒலிக்கும் 307
பயிர்தல் - அழைத்தல் 14
பயிற்றல் - பலகாலுங் கூறல், சோற்றுவித்தல் 6, 175
பயின் - அரக்கு 1
பயின்று வருதல் - அடுத்தடுத்து வருதல் 50
பரத்தன் - பரத்தமைத் தொழிலுடையவன் 146
பரல்-பரற்கல், வித்து, பாறைக்கல் 4, 21, 107
பரவை - பரப்பு 44
பரி - செலவு, வேகம், யாற்றில் அணை கோலுவார் நிறுத்தும் குதிரைமரம் 14, 154, 278
பரித்தல்-பரத்தல், சூழ்தல், செலுத்தல், ஒடித்தல் 9, 31, 112, 115, 215
பரிதல் - வருந்துதல் 249
பருஅரை - பராரை 309
பருதி - ஞாயிறு, உருள் 37, 343
பருவரல் - வருந்தல், துன்பம் 150, 260
பரைஇ - வணங்கி, பரவி 95
பல்லியம் - பலவாகிய வாச்சியம் 154
பலவுக்காய் - பலாக்காய் 255
பவர் - கொடி 262
பழிச்சுதல் - வணங்குதல் 115
பழுநி - முதிர்ந்து 348
பழுப்பயன்-பழமாய பயன், பழுத்த பழம் 12
பழையர்-நெய்தல் நில மாக்கள் 201
பறந்தலை - பாழ் இடம் 29
பறழ் - குட்டி 248
பறி - குடலை 94
பறித்தல் - சூழ்தல் 112
பறித்து இடல் - ஒடித்துப் போடல் 115
பறை - முழவு, பறித்தல், சிறகு 23, 38
பறைஇய - பறத்தற்கு 170
பறைக்கண் - பறித்த இடம் 167
பறைந்து - மோதி 76
பறைதல் - தேய்தல், நழுவல் 101
பறைய - தேய, கழல 101
பனி - நடுக்கம், நீர் 19, 34, 52
பனிக்கும் - வருத்தும், நடுங்கச் செய்யும் 29, 72
பனிச்சை - அளகம் 9
பனிநீங்கும் வழிநாள்-பனிக்காலம் கழிந்த பின்னுளாகிய இளவேனிற்காலம் 259
பாஅடி - பரந்த அடி 125
பாஅய் - பரந்து 43
பாக்கம் - பரதவர்சேரி, கடற்கரையூர் 10, 70
பாகல் - பாகற்கொடி 255
பாசடை - பசிய இலை 106
பாசறை - படை வீடு 24
பாசிழை - பசிய அணி 90
பாட்டி - பாண்மகளிர் 196
பாடு - கூறு. பெருமை, ஒலி, ஓசை 30, 124, 183, 226
பாண்டில் - கண்ணாடி, கஞ்சதாளம் 217, 376
பாணி - ஒலி. தாளம், தாளச்சீர், இசை 9, 105, 139, 225
பாணிநிற்றல் - தாழ்ந்து நிற்றல் 50
பாத்தல் - பகுத்தல் 5
பாந்தள் - பாம்பு 68
பாஅய - விருப்பம் 266

பாயல் - சயனம் 39
பாயின்று - பரவி நின்றது 85
பார் - வன்னிலம் 79
பார்ப்பு - பறவைகளின் குஞ்சு 31
பார்வல் ஒதுக்கு - ஒதுங்கிய பார்வை 22
பால்நாய் - ஈன்றணிமையுடைய நாய், பாலினையுடைய நாய் 167
பாலொடு தடைஇ - பாலால் சரிந்து 26
பாவை - பாவைபோலும் கிழங்கு 136
பாறு - பருந்து 175
பாறுதல் - சிதறுதல் 9
பாறு மயிர் - சிதறிய கூந்தல் 300
பிசிர் - திவலை, நீர்த்துளி, பிதிர் 210, 250, 2-3
பிசைதல் - உரசிக்கொள்ளல் 65
பிடவு - பிடா (ஒரு மலர்) 34, 154
பிண்டம் - குவியல், நெற்பொலி 6, 46
பிண - பெண் விலங்கு, பிணா (பெண்) 112, 238
பிணக்கு அரில் - பின்னிய சிறுகாடு 78
பிணர் - சருச்சரை 57
பிணவல் - பெண் பன்றி 21
பிணி - அரும்பு, கட்டு 4
பிணை - விருப்பம் 86
பிணையல் - மாலை 5
பித்திகம் - பிச்சி 42
பித்தை - தலைமயிர் 101
பிதிர்தல் - திரிதல் 275
பிரசம் - தேன், வண்டின் ஒலி 172, 318
பிரப்பு - அரிசி, தினை முதலிய பொருள் 99
பிலிற்றல் - சொரிதல் 14
பிழி - கள் 102
பிளிற்றல் - ஒலித்தல் 40
பிறங்கல் - குன்று, விளக்கம், பக்க மலை, உயர்ந்த தோற்றம் 8, 111, 185, 249
பிறங்கிய - விளங்கிய 205
பிறிந்து - பிரிந்து 55
பின் - பின்னுதல் 73
பின்னிலை ஈயாது - பின்னிற்றல் செய்யாது 44
பீடு - சிறப்பு, பெருமை 125
பீரம் - பீர்க்கு 45
பீலி - தோகை, மயிற்றோகை 15
பீள் - கரு, சூல் 243
புகர் - புள்ளி 12
புகல் - விருப்பு, செருக்கு 89, 159
புகவு - உணவு 132
புகற்சி - விருப்பம் 252
புகாஅர் - துறைமுகம் 190
புகார் - காவிரிப்பூம்பட்டினம், கழிமுகம் 110, 181
புட்டாளத்திரி - புண்ணுற்றதாளினையுடைய கோவேறு கழுதை 120
புடையல் - ஒலித்தல் 295
புணரி - கடல் அலை, அலை 65, 190
புணர்பு பிரிந்து இசைத்தல் - இணைந்தும் தனித்தும் கூறல் (அலர்) 62
புணை - தெப்பம் 6
புதவு - வாய்த்தலை, வாயில் 83, 237
புய்க்கும் - பறிக்கும் 252
புரத்தல் - காத்தல் 97
புரவலன் - அரசன் 32
புரிசை - மதில் 114
புரிதல் - விரும்புதல் 154
புரிபு - விருப்பம் 205
புருவைப் பன்றி - இளமைப் பன்றி 88
புரை - உயர்ச்சி 265
புரைதல் - ஒத்தல், பொருந்துதல், உயர்தல் 15, 95
புரையோர் - உயர்ந்தோர் 136
புல் - ஊகம்புல், பனையோலை, மூங்கில் 39
புல்வாய் - மான் 284
புலத்தல் - வெறுத்தல் 85
புலம்பன் - நெய்தற்றலைவன் 270
புலம்பு - வருத்தம், தனிமை, கடற்கரை 4, 7, 10
புலர்குரல் - முற்றின ஏனல் 82
புலர - காய, புலால் நாற 72, 172
புலத்தி - ஆடை ஒலிப்பவள் 34
புழல் - துளை 9
புழகு - அம்பின் தலைக்குப்பி 9
புள் - பறவை, புட்கள், நிமித்தம் 20, 176, 207
புறக்கு - புறம் 139
புறந்தரல் - பாதுகாத்தல் 85

புறந்தை - புறையாறு 100
புறம் - இடம், உடம்பு, முதுகு 84, 86
புறவு - முல்லைநிலம், காடு 33, 84
புறனிலை-தாழ்ந்து பின்னிற்றல் 32
புன்கண் - துன்பம் 47
புன்மைதலை - பெரிய துன்பம் 126
புன்கம் - சோறு 237
புனவன் - குறவன் 140
புனிறு - ஈன்ற அண்மை 21
பூ - அழகு, பொலிவு 197, 268
பூக்கண் - கூரிய கண் 136
பூங்கண் - அழகிய இடம் 182
பூசல் - ஓசை, ஆரவாரம் 8, 48
பூசாவாயர்-கழுவாத வாயினையுடையர் 265
பூட்கை-மேற்கோள், வலிமை 100
பூண்டி - பூண்டனை 7
பூந்தொடை விழவு - படைக்கலம் பயின்ற இளைய வீரரை அரங்கேற்றுவிக்கும் விழா 187
பூவல் - செம்மண் நிலம், சிவப்பு 194
பூங் கொடி - பூக்கள் ஒழியப்பெற்ற கொடி 19
பூழி - புழுதி 63
பூளை - ஒருவகைப் பூ 199
பெட்கும் - விரும்பிப்பெறும் 86
பெட்பு - விருப்பம் 200
பெண் - பெண்தன்மை 275
பெண்ணை - பனைமரம் 40
பெயர் - புகழ், வடிவு 246, 269
பெயர்தந்து - பெயர்த்து 75
பெயர்ப்பின் - போக்குதலான் 175
பெயல்ஊன்ற - பெயல் நீங்கி 158
பெருநீர் - கடல் 158
பெருஞ்செய் - பேராண்மைச் செய்கை 188
பெரும்பிறிது - இறப்பு 253
பெரும்பெயர் - பெரும்புகழ் 98
பெரும்பொளி வெண்நார் - பெரிதாக உரித்த வெள்ளிய நார் 83
பேஎம் - அச்சம் 297
பேணி - விரும்பி 43
பேது - மயக்கம் 4
பேதுற்றிசின் - மயக்கியுளேன் 135
பேர்தந்து - பேர்ந்து 18
பைங்காய் - செவ்விக்காய் 54
பைது - பசுமை 1
பைந்தாது - செவ்வித்தாது 80
பையாத்தல் - துன்புறல் 57
பையுள் - துன்பம், நோய் 14, 214
பொங்கடி - யானை 44
பொங்கர் - சோலை, கிளை 2, 4, 5
பொங்கல் வெண்காழ் - பஞ்சினையுடைய வெள்ளிய கொட்டை 129
பொங்கழி - தூற்றுப்பொலி 37
பொத்து - பொருந்து 277
பொத்தி - (நீரைத்) தேக்குதல் 346
பொதியவிழ்தல்-மொட்டு மலர்தல் 285
பொதியில் - மன்றம், அம்பலம் 251, 287
பொதினி - பழனி 61
பொதும்பு - புதர், சோலை, செறிவு 18, 190, 251
பொதுளிய - நெருங்கிய 217
பொம்மல் - பொலிவு 65
பொய்தல் - மகளிர் விளையாட்டு 26
பொய்யொடு - பொய்யொடு கூடிய 286
பொருட்பிணி - பொருட்பற்று 27
பொருநன் - கூத்தன், வீரன் 76, 137
பொருவர் - பகைவர் 231
பொருளல் காட்சி - உண்மையற்ற அறிவு 75
பொலம் - பொன் 114
பொலங்கலம் - பொன்னணி 1
பொலர்தார் - பொன்னரிமாலை 45
பொலம்படை - பொன்னாலாய சேணம் 114
பொலன் - பொன் 254
பொளி - பட்டை 335
பொளித்து - உரித்து 257
பொற்பு - அழகு 62
பொரூஅர் - பகைவர் 338
பொறி - இலச்சினை 77
பொறை - பாரம், குன்று 38, 265
பொறைமரம் - காவுமரம் 282
பொறையன் - சேரன் 62
பொன் - பொற்கம்பி 219
போகில் - பறவை 129
போது - மலர் 291

போர் அடுக்கும் அகலம் - பகைவர் போர் ஒழிதற்குக் காரணமாய மார்பு 175
போர்பு - போர்வை 188
போர்மடிஇறை - கூரைமடிந்த இறப்பு 167
போழ்தல் - பிளத்தல் 6
போழ்வாய் - பிளந்த வாய் 147
போற்றல் - கருதல் 26
பௌவம் - கடல் 212
மகடூ - மகள் 141
மகரம் - மகரக்கொடி 181
மகிழ் - கள் 245
மகிழ்நன் - தலைவன் 306
மகளிர் மாங்காடு - ஓர் ஊர் 288
மகுளி - ஓசை 19
மங்குல் - இரவு 37, 235
மங்குல்வான் - இருண்ட மேகம் 37
மஞ்சு - மேகம் 72
மஞ்ஞை - மயில் 85
மட்டு - தேன் 212
மடத்தகை - மடப்பத்தையுடைய அழகு 219
மடநாகு - இளைய பசு 64
மடம் மடப்பம் 146
மடி - அறவை 13
மடிதல் - தங்கல் 46, 122
மடிவை - தழை, உடை 226
மடு - குளம் 139
மடுத்தல் - உண்பித்தல் 105
மடுத்த - கொண்டுபோய 369
மடுத்தல் - ஊட்டல் 105
மடை - மூட்டுவாய் 40
மடைதல் - சொரிதல் 275
மண் - மார்ச்சனை 76
மண்டை - கள்ளுண்கலம், மொந்தை 96
மண்ணா - தூய்மை செய்யப்பெறாத 80
மண்ணுதல் - கழுவுதல் 247
மண்ணுதல் - ஒப்பனை செய்தல் 73
மண்ணை - மொட்டை 24
மணத்தல் - கூடுதல் 50
மணி - கண்மணி, விழி 215
மணியேர் மாணலம் - நீலமணி போலும் சிறந்த அழகு 172
மணிசெய் மண்டை - மணிகள் இழைத்த பொற்கலம் 105
மணிவாய்க் காக்கை - கருமணி போன்ற வாயினையுடைய காக்கை 319
மத்தம் - தயிர்கடை கருவி 87
மதம் - வலி 14
மதரெழில் - கதிர்த்த அழகு 99
மதவுநடை - வலியநடை, மெல்லிய நடை 14, 26
மதன் - வலிமை, செருக்கு 8, 212
மதில்முகம் - மதிற்கதவு 164
மதுகை - வலிமை 71
மந்தி - குரங்கு, குரியன் 92
மம்மர் - மயக்கம் 56
மயங்குதல் - செறிதல் 17
மயர் - மறவி 258
மரல் - மரற்செடி 49
மராஅம் - மராமரம் 3
மரா - வெண்கடம்பு 99
மராயானை - பழகாத யானை 13
மருங்குல் - பக்கம் 297
மருப்பு - கோடு, தந்தம் 26, 267
மருளல் - ஒத்தல் 228
மருள் - வியப்பு, மயக்கம் 82, 235
மலைதல் - கூடுதல் (கட)
மரைஆ - ஒருவகை மான் 8
மல்குதல் - நிறைதல் 30
மல்லல் - வளம், வலிமை 50, 215
மலிபு - மகிழ்ந்து 11
மழு - பரசு 220
மழுகல் - மங்கல், குறையல் 169, 260
மழுகுதல் - தேய்தல் 5
மழுவாள்நெடியோன் - பரசுராமன் 220
மழை - மேகம் 308
மள்ளர் - வீரர் 21
மறம் - வீரம் 209
மறவி - பகைத்து 212
மறலுதல் - மாறுபடுதல் 212
மறன் - தறுகண்மை 276
மறி - குட்டி 94
மறு - குற்றம் 268
மறுகல் - பலகாலும் திரிதல், சுழலல் வருந்தல் 146, 300
மறுகு - தெரு 122
மறுவரல் - கலக்கம் 22
மறை - இரகசியம் 70
மன்ற - தேற்றம் 27

மன்றல் - வதுவை 112
மன்று - மாட்டுத்தொழு 64
மனை - இல்லம், தலைவி 21
மா - கருமை, வண்டு, புலி, மாமை நிறம் 10, 21, 48, 154
மாக்கட்டு - மக்களையுடையது 15
மாடஒள்ளெரி - கலங்கள் துறையறிந்து வருதற்பொருட்டு உயரிய மாடத்தின்மீது அமைக்கப்படும் ஒள்ளியவிளக்கு (கலங்கரை விளக்கம்-Light house)
மாதர் - அழகு, காதல் 130
மாதிரம் - திசை 84
மார்தல் - நிறையத் தின்றல் 56
மாய்த்த - தீட்டப்பெற்றன 5
மாய்மாலை-மறைந்த மாலைக்காலம் 199
மாயம் - வஞ்சனை 226
மால் - பெருமை 65
மாலை - வரிசை 40
மாழ்கல் - மயங்கல் 104
மாழை-மாவடு, இளமை, அழகு 116
மான் - குதிரை, விலங்கு 168, 384
மான்று - மயங்கிய 3
மான்றமை - பின்னுதல் அமைந்த 238
மிஞிறு - வண்டு 78
மிடல் - வலிமை 266
மிடறு - கழுத்து (கட)
மிடை - பரண் 158
மிதவை - பொங்கல், கும்மாயம் 86
மிலைதல் - சூடல் 182
மிழற்றல் - மென்சொற் கூறல் 126
மிழற்றி - சொல்லி 54
மிளிர - ஒளிர 41
மிளை - காவற்காடு 44
மீளி - கூற்று 93
முகவை - முகக்கப்பட்ட நீர் 207
முகிழ் - அரும்பு 54
முகை - அரும்பு, முழைஞ்சு, குகை 11, 228, 238
முச்சி - கொண்டை, கூந்தலின் முடி 73, 391
முடங்கர் - முடக்கிடம் 147
முடவு - முடம், வளைவு 10, 352
முண்டகம் - நீர்முள்ளி 80
முணங்குநிமிர்தல்-மூரிநிமிர்தல் 357
முதல் - அடி 297
முதுமை - அறிவு 22
முதுநீர் - கடல் 57
முதுபாழ் - மிக்க பாழிடம் 77
முதை - பழைமை 262
முதைச்சுவல் - கொல்லையாகிய மேட்டுநிலம் 88
முதைப்புனம் - முற்றிய தினைப் புனம் 94
முரண் - வலிமை, மாறுபாடு 21, 298
முரம்பு - மேட்டுநிலம், கற்குவியல், வன்னிலம் 5, 67, 133
முரலல் - ஒலித்தல் 291
முரவு - முரிவு 72
முரவு வாய் முதுபுள் - முழங்கும் வாயினையுடைய பேராந்தை 260
முருக்கு - செம்முருக்கு 277
முருங்காக் கலிங்கம் - கசங்காத புதுஉடை 136
முருந்து - குருத்து, மயிலிறகின் அடி 62, 179
முழம் - முழங்கால் 119
முழுநெறிப்பூ - இதழ் ஒடியாத பூ 156
முள் - தாற்றுக்கோல் 160
முள்கல் - பதிதல் 234
முள்ளி - நீர்முள்ளி 236
முளரி - தாமரை 163
முளரித்தீ - காட்டுத்தீ 301
முளவுமா - முள்ளம்பன்றி 182
முளிந்த - காய்ந்த 5
முளிபுல் - மூங்கில் 39
முற்றுதல் - சூழ்தல் 278
முறி - தளிர் 33
முன்பு - வலிமை 75
முன்துறை - துறைமுகம் 57
முன்னம் - குறிப்பு 5
முனை - பகைப்புலம் 14
முனைதல் - வெறுத்தல் 40
மூதாய் - தம்பலப்பூச்சி 74
மூரல் - சோறு 60
மூரி - வளமை 83
மூவா - முதிராத (இளைய) 54
மூழ்கல் - சூழ்தல் 237
மேதை - அறிவு 7
மேவர - விருப்பமுண்டாக 136
மேவலர் - விரும்பினவர் 95
மேவார் - பகைவர் 266

மை - எருமை, இருள், மேகம் 41, 87, 187
மைந்து - வலி 75
மொசித்தல் - மொய்த்தல் 257
மொய் - வலி 152
மொய்ம்பு - தோள் 222
மொழிபெயர்தேஎம் - வேற்று மொழி வழங்கும் தேயம் 67
மோட்டிரு வரால் - பெரிய அகட்டினையுடைய வரால் மீன் 196
மோயினள் - மோந்து 5
மோவாய் - தாடி 133
மோழமை - நயமொழி, தாழ்ந்த மொழி 207
மௌவல் - முல்லை 21
யாணர் - புதுவருவாய், அழகு 44, 228
யாணர் வேனில் - இன்பத்தைத் தரும் வேனில் 341
யாத்த - கட்டின 84
யாமம் - இரவு 114
வங்கம் - கப்பல் 255
வங்கூழ் - காற்று 255
வசிபடல் - பிளவுபடல் 119
வஞ்சினம் - சூளுறவு 267
வட்டி - மலர்பெய்யும் செப்பு 391
வட்டித்தல்-சூழ்ந்துகொள்ளல் 218
வட்டில் - வட்டு 108
வட்டு - சூதாடு கருவி 5
வடி - மாவடு 29
வடித்தல் - கிள்ளியெடுத்தல் 37
வடித்தன்ன - வார்த்துச் செய்தாற் போன்ற 172
வடித்தநனை - வடிக்கப்பெற்ற கள் 166
வடியாப்பித்தை - கோதப் பெறாத மயிர் 161
வடு - வடுக்கள் 88
வண்ணம் - அழகு 69
வண்மகிழ் - வண்மையினாகிய களிப்பு 125
வணங்கிறை - வளைந்த முன்கை 33
வணர்மருப்பு-வளைந்தகொம்பு 115
வதுவை - மணம் 36
வம்பு - கச்சு, புதுமை 11, 15
வயங்கல் - விளங்கல் 202
வயம் - வலி, வெற்றி 15, 55
வயமான் - சிங்கம், வலியபுலி (கடா)
வயவு - சூல், வேட்கை 72, 188
வயிர் - ஊதுகொம்பு 40
வயிரியர் - கூத்தர் 45
வரி - திதலை 69
வரித்தல்-அழகுசெய்தல், பரத்தல் 70, 74
வருட - தடவ 306
வருடை - மான் 378
வரை - பக்கமலை, மூங்கில் 189, 248
வரைப்பு - எல்லை, குன்று 34, 266
வல்சி - உணவு, இரை 8, 193
வல்லி - வண்மையுடைய 191
வல்லு - சூதாடு கருவி (ஈண்டுச் சூதாடுமிடம்) 377
வலத்தல் - கட்டுதல், சுற்றுதல், பின்னுதல் 30, 52, 111
வலம் - வெற்றி 74
வலவன் - பாகன் 20
வலித்தல் - துணிதல் 74
வலியாய் - துணிவாயாக 259
வழங்கல் - இயங்கல், திரிதல், 51, 118
வழிநாள்-பிற்றை ஞான்று, பிற்றை நாள் 127, 200
வழிமொழி - பணிமொழி 124
வழை - சுரபுன்னை 8
வள் - கடிவாளம் 4
வள்உயிர் - வளம்பொருந்திய ஒலி 115
வள்ளெயிறு - கூரிய பற்கள் 6
வள்ளி - கொடி 52
வள்ளை - கொடி 46
வளி - காற்று 1
வளை - சங்கு, பொந்து 24, 122
வற்றல் - ஒருவகை மரம் 145
வறன் - வறுமை 42
வறிது - சிறிது 5
வறுவியன் - கூடாதவனாய் 363
வன்கண் - கலங்காமை 263
வன்புறை - வற்புறுத்தல் 74
வன்மை - திண்மை 263
வனம் - அழகு 87
வனைதல் - பண்ணுதல் 58
வாங்குதல்-இழுத்தல், பெயர்த்தல் 4, 42
வாட்சுறா - வாள்போன்ற கொம்பினையுடைய சுறா 150
வாடாப்பூ - பொற்பூ 253

வாய் - இடம், மெய்ம்மை 5, 127
வாய்ப்பகை - வாயினின்றெழும் இருமலாகிய பகை 101
வார் - ஒழுங்கு, நீட்சி 41, 46
வாரணம் - கானக்கோழி, யானை 64, 172
வாரல் - வாரற்க 195
வால்நிறம் - வெண்ணிறம் 193
வாவுப்பறை - தாவிப் பறத்தல் 57
வாள் - ஒளி 278
வாள்வரி - வாளைபோலும் வரி, புலி, 99
வாளி அம்பு - பற்களையுடைய அம்பு 67
வான்கண் - வெள்ளிய கண் 79
வான் - மேகம் 271
வான் வாய் - பெரிய வாய் 179
வானம் - மேகம் 214
வானம் வாழ்த்தி - வானம்பாடிப் புள் 67
விசித்தல் - இழுத்துக் கட்டுதல் 63
விசும்பிடை - விசும்பிடம் 181
விசும்பு - வான் 125
விசை வாங்குதல் - விசைத்து இழுத்துவிடும் தருத்தி 96
விடர் - மலைமுழை, பிளப்பு 8, 47
விடியல் - வைகறை 196
விடுவாய் - பிளப்பு 164
விண்டு - மலை 285
விதிர்த்தல் - தெளித்தல், அடித்தல் 103, 186
விதுப்பு - விரைவு, வேட்கை 136, 163
வியல் - அகற்சி 107
விருந்து - புதுமை 54
விலக்கு - பக்கம் 47
விலங்கு எயிறு - வளைந்த எயிறு (4௨)
விலங்கு கண் - ஒருக்கணித்து நோக்கும் கண் 54
விலங்குசினம் - பொங்கி எழும் சினம் 212
விலங்குதல் - குறுக்கிடுதல் 205
விலங்குவளி - சூறவளி 71
விழு - இடும்பை 131
விழுத்தொடை - தப்பாத தொடை 131
விழுப்புண் - மத்தகப்புண் 308
விழுமம் துன்பம் 18
விளர் - வெளுப்பு 265
விளரூன் - கொழுப்பினையுடைய ஊன் 89
விளித்தல் - அழைத்தல் 5
விளிதல் - இறந்துபடல் 126
விளிவிடம் - முடிவிடம், தங்குமிடம் 58, 162
விளியா - நீங்கா 212
விறந்த - செறிந்த 286
விறந்து - அஞ்சி 378
விறல் - பெருமை, மேன்மை வெற்றி, சிறப்பு 3, 174
வினை - தொழிற்பாடு 197
வினைஇ - வினவி 300
வீ - மலர் 2
வீங்கு - செறிந்த 251
வீழ் - ஆலாவீழ் 70
வீழ்துணை - அன்புள்ள பெடை 47
வீளை - ஒருவகை ஒலி, சீட்கை 33, 131
வீறு - சிறப்பு 256

டாக்டர் இ. சுந்தரமூர்த்தி
எம்.ஏ., பிஎச்.டி., டிப்.மானிடவியல்.,
தமிழ்த்துறை
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை 600005

டாக்டர் இ. சுந்தரமூர்த்தி
எம்.ஏ., பிஎச்.டி., டிப்.மானிடவியல்.
தமிழ்த்துறை
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை 600005

சங்க இலக்கியம்


சங்க
இலக்கியம்